அயல் நாடுகளில் தமிழர்

முனைவர். எஸ். நாகராஜன்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

அயல் நாடுகளில் தமிழர்

முனைவர். எஸ். நாகராஜன்.

பேராசிரியர், தலைவர்,

அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறை,

தமிழ்ப் பல்கலைக் கழகம்.

தமிழ்ப் பல்கலைக்கழகம் , தஞ்சாவூர் - 613 005

அயல் நாடுகளில் தமிழர்

முனைவர். எஸ். நாகராஜன்.

பேராசிரியர், தலைவர்,

அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறை,

தமிழ்ப் பல்கலைக் கழகம்.

தமிழ்ப் பல்கலைக்கழகம் , தஞ்சாவூர் - 613 005

ISBN 81-7090-135-9

தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு எண்:- 115

திருவள்ளுவர் ஆண்டு 2019 - ஆடித்திங்கள் - ஜூலை 1989

ஆசிரியர் : முனைவர். எஸ். நாகராஜன்

பதிப்பு : முதற்பதிப்பு

விலை : உரு. 74

அச்சு : சர்மாஸ் ஸானடோரியம் அச்சகம்

(கணிப்பொறிப் பிரிவு)

புதுக்கோட்டை.

உள்ளுறை

1.	அறிமுகம்	1
2.	இலங்கை	18
3.	மலேசியா	81
4.	சிங்கப்பூர்	115
5.	இந்தோனேசியா	137
6.	பர்மா	175
7.	தாய்லாந்து	199
8.	கம்பூசியா, லாவோஸ், வியட்நாம், (இந்தோசீனா)	221
9.	ஜப்பான், கொரியா	235
10.	சீனா	244
11.	பீஜித்தீவு	250
12.	பிரிட்டன்	278
13.	அமெரிக்க நாடுகள் கனடா, ஆஸ்திரேலியா	292
14.	கரீபியன் தமிழர்கள்	298
15.	தென் ஆப்பிரிக்கா	324
16.	சீசெல்சு	340
17.	மொரீசியஸ்	346
18.	ரீயூனியன்	361
19.	பிற பிரெஞ்சுத் தமிழர்கள்	367
20.	மேற்கு செருமனி	374
21.	பிறநாடுகளில் தமிழும், தமிழர்களும்	382
22.	உலகத் தமிழர் நிறுவனங்கள்	398
23.	அயல்நாட்டார் தமிழுக்குச் செய்த தொண்டு	410
24.	தமிழர்களுக்கும், அயல்நாட்டினருக்கும் உள்ள சில ஒற்றுமைகள்	415
25.	ஏனைய இந்தியத் தமிழர்கள்	424
26.	உதவிய நூல்கள்	437

முன்னுரை

அயல்நாட்டுத் தமிழர்களைப் பற்றி ஒரு சில நூல்களே வெளிவந்திருக்கின்றன. ஆனால் அந்நூல்களின் நோக்கமும் இந்நூலின் நோக்கமும் ஓரளவு வேறுபட்டிருக்கின்றன.

முதன் முதலாக அயல்நாட்டுத் தமிழர்களைப் பற்றி ஒரு நூலை எழுதிய பெருமை எஸ்.தனிநாயக அடிகளார் அவர்களுக்கு உண்டு என்று கூறலாம். அவர் 'ஒன்றே உலகம்' (1974) எனும் தமிழ் நூலையும், *Tamil Studies Abroad* (1968) என்னும் ஆங்கில நூலையும் வெளியிட்டார். இந்நூல்களில் அயல்நாட்டுப் பல்கலைக் கழகங்களில் இருக்கும் தமிழ்க் கல்வியின் நிலை பற்றிய குறிப்புகளும், அயல்நாட்டுத் தமிழர்களைப் பற்றிய சில குறிப்புகளும் உள்ளன. ஆனால், அயல்நாட்டுத் தமிழர்களைப் பற்றிய எல்லாச் செய்திகளையும் அளிக்கும் நோக்கம் இந்நூல்களுக்குக் கிடையாது.

பிறகு உலகில் தமிழும், தமிழரும் (1976) எனும் நூலை டாக்டர் பொன். கோதண்டராமன் வெளியிட்டார். இந்நூலை மூன்று பிரிவாகப் பிரித்திருக்கிறார் (அ) இன்றைய உலகம் (ஆ) உலக நாடுகளில் தமிழும் தமிழரும் (இ) என்னென்ன செய்ய வேண்டும்? இந்நூலிலும் குறிப்பாக அயல்நாடுகளில் உள்ள தமிழ் மொழி நிலையைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. ஆனால், அயல்நாட்டுத் தமிழர்களைப் பற்றிய எல்லாச் செய்திகளையும் தொகுத்து விரிவாக அளிக்கும் நோக்கம் இந்நூலுக்கும் கிடையாது.

1982 ஆம் ஆண்டு டாக்டர் ந.கடிகாசலம் தமிழும், தமிழரும் எனும் நூலை வெளியிட்டார். இந்நூலில் அயல்நாடுகளில் தமிழ்க் கல்வி நிலைக்கு மட்டுமே சிறப்பிடம் அளிக்கப்பட்டிருக்கின்றது. ஆகையால், அயல்நாட்டுத் தமிழர்களைப் பற்றிய எல்லாச் செய்திகளையும் தொகுத்து அளிக்கும் நோக்கம் இந்நூலுக்கும் கிடையாது.

1985 நவம்பர்த் திங்களில் உலகத் தமிழர் எனும் ஒரு சிறப்பான நூலை இர.நவீரப்பன் வெளியிட்டார். தமிழுக்கு மட்டும் சிறப்பிடம் அளிக்காமல் அயல்நாட்டுத் தமிழர்களுக்கும் ஓரளவு முக்கியத்துவம் கொடுத்த பெருமை இந்நூலுக்கு உண்டு. ஆனால், அயல்நாட்டுத் தமிழர்களின் வரலாறு, பண்பாட்டுக் கொடை, பொருளாதார நிலை, தமிழ்க்கல்வி நிலை பற்றியும் மேலும் பல செய்திகளைப் பற்றியும் இந்நூல் விரிவாக விமரிசனம் செய்யவில்லை எனக் கூறலாம். ஆராய்ச்சி அணுகு முறையோடு இந்நூலின் ஆசிரியர் இந்நூலை எழுத முயலவில்லை எனத் தோன்றுகிறது. இவர் இந்நூலை ஒரு பயண நூல் போல் நன்றாகவே எழுதியிருக்கின்றார்.

ஆனாலும், மேலே குறிப்பிடப்பட்ட நூல்கள் எல்லாம் புதுவழி கண்டு பிடித்த முதன் முயற்சிகள், முன்னோடிகள், குறிப்பாக இந்நூலின் வழிகாட்டிகள். அந்நூல்களில் உதவியில்லாமல் இந்நூலில் பல சிறப்பான செய்திகளை அளித்திருக்க முடியாது. ஆனால் இச்செய்திகளை இந்நூலின் அமைப்பு முறைக்கு ஏற்றவாறு முடிந்த வரை ஆராய்ச்சி அணுகுமுறையோடு பயன்படுத்த முயற்சி எடுத்திருக்கின்றேன். அதாவது சிதறிக்

எழுதும்பொழுது இம்முறையைப் பின்பற்ற முடியவில்லை. உதாரணம், தாய்லாந்து. இன்று ஒரு சில தமிழர்களே தாய்லாந்தில் இருக்கின்றனர். ஆகையால், தமிழ்ப் பண்பாட்டின் தாக்கத்தைப் பற்றி மட்டும்தான் இந்நாட்டைப் பற்றி எழுதும்பொழுது எழுத முடிகிறது. அதேபோல, குவாடிலோப், மார்த்தனீக், ரீயூனியன் முதலான பகுதிகளில் வாழும் தமிழர்களைப் பற்றிய செய்திகள் கிடைப்பது அரிதாக இருப்பதால் இந்நாடுகளில் வாழும் தமிழர்களைப் பற்றி விரிவாக எழுத முடியவில்லை. பொதுவாக, தமிழர்களின் பொருளாதார நிலையைப் பற்றியும் மிகுதியான செய்திகள் கிடைக்காததால் அதைப்பற்றி அதிகமாக எழுத முடியவில்லை. ஆகையால், கிடைக்கும் செய்திகளுக்கு ஏற்றவாறு அத்தியாயங்கள் எழுதப்பட்டிருக்கின்றன.

அயல்நாட்டுத் தமிழர்களைப் பற்றிய செய்திகளைத் திரட்டும் போது உள்ள ஒருமுக்கிய சிக்கலைப்பற்றிகூற விரும்புகின்றேன். பொதுவாக பண்டையக்காலத்திலிருந்து அயல் நாடுகளுக்கு தமிழர்கள் மட்டும் சென்று குடியேறவில்லை. பிற இந்தியர்களும் சென்று குடியேறினர். மேலும் பிற இந்தியப் பண்பாட்டிற்கும் தமிழ்ப்பண்பாட்டிற்கும் பல ஒற்றுமைகள் உள்ளன. ஆகையால் அயல் நாடுகளுக்குச் சென்ற இந்தியப் பண்பாடுகளைத் தெளிவாக திராவிட, ஆரியப் பண்பாடுகள் என பிரித்து விளக்கம் அளிப்பது பல இடங்களில் கடினமாக இருக்கின்றது. மேலும் அயல்நாடுகளில் தமிழர்களும், பிற இந்தியர்களும் இந்தியர்கள் என்றுதான் பொதுவாக அழைக்கப்படுகின்றார்கள். இச்சிக்கல் உள்ள சூழ்நிலை இருப்பினும் முடிந்த வரை பெரும்பான்மையான இடங்களில் தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகளின் தாக்கத்தைப் பற்றி மட்டும் அயல்நாட்டுத் தமிழர்களைப் பற்றிமட்டும் எழுத முயற்சியெடுத்திருக்கின்றேன். அதுவே இந்நூலின் குறிக்கோளாக கொள்ளலாம்.

பயன்படுத்தியிருக்கின்ற புள்ளிவிவரங்களைப்பற்றி, சில கருத்துகள் அளிக்க விரும்புகிறேன். *Europa Year Book, Statesman Year Book, U.N.Publications, Statistical Handbook of Tamilnadu,* போன்ற உசாத்துணை நூல்களை நம்பினாலும், பொதுவாக இந்நூல்களில் அயல்நாடுகளில் வாழும் தமிழர்களின் புள்ளி விவரங்களைக் காண்பது அரிது. ஸ்ரீலங்கா, மலேசியா, சிங்கப்பூர், மொரீசியஸ் முதலிய நாடுகளிலுள்ள தமிழர்கள் மொத்தத் தொகையைப் பற்றிய அடிப்படை விவரங்கள் கிடைக்கின்றன. ஆனால் பர்மா, இந்தோனேசியா, பிஜி, தென் ஆப்பிரிக்கா, ரீயூனியன், சீசெல்சு, மார்த்தனீக், குவாடிலோப், கயானா, பிரிட்டன், அமெரிக்கக் குடியரசு முதலிய நாடுகளிலுள்ள தமிழர்களின் மொத்த மக்கள் தொகை புள்ளி விவரங்கள் முழுவதும் நம்பக்கூடிய அளவில் கிடைக்கவில்லை. ஏனென்றால், இந்நாடுகளில் வாழும் தமிழர்களைப் பற்றிய மக்கள் கணக்கெடுப்பு எடுக்கப்படவில்லை. ஆகையால், இந்நாடுகளுக்குச் சென்று ஆய்வு செய்தவர்களின் வாய்மொழி மூலம் கிடைக்கும் புள்ளி விவரங்களைத் தயக்கத்துடன் பயன்படுத்தியிருக்கிறேன். அவர்கள் தோராயமாக மதிப்பிட்டுப் புள்ளிவிவரங்களை அளித்திருக்கின்றார்கள். அவ்வாறு தோராயமாக மதிப்பிடும் போது, குறிப்பாக இந்தோனேசியா மேடானில் வாழும் தமிழர்களின் மொத்தத் தொகையைப் பற்றிய செய்திகள், முரண்பாடாக உள்ளன. முடிந்தவரை புள்ளிவிவரங்களைத் திரட்டி அளிப்பதே இந்நூலின் நோக்கமாகும். மேலே குறிப்பிட்ட நாடுகளில் தமிழர்கள் தொடர்பான மக்கள்

கணக்கெடுப்பு எடுக்கப்படவில்லை என்பதாலும், எந்தப்புள்ளி விவரத்தை நம்புவது, எதைப் புறக்கணிப்பது எனும் தீர்மானம் எடுக்க முடியாத சூழ்நிலையில் சிக்கிக் கொண்டதாலும், முரண்பாடான புள்ளிவிவரங்கள் இருக்கும் சந்தர்ப்பத்தில் கூட, இவ்வாசிரியர் எல்லோருடைய, முரண்பாடான புள்ளிவிவரங்கள் இருந்தாலும் கூட, திரட்டி அளித்திருக்கின்றார். மேலும், ஆய்வு செய்ய வாய்ப்பு கிடைத்தால்தான் இப்புள்ளி விவரங்களை உறுதிப்படுத்தவோ, திருத்தவோ முடியும் எனக்..றிக்கொள்ள விரும்புகிறேன். ஆனால், தமிழ்ப் பல்கலைக் கழகம் இப்புள்ளிவிவரங்களை வெளியிட்டிருக்கின்றது. ஆகையால், எல்லாப் புள்ளிவிவரங்களையும் முடிவாக ஏற்றுக்கொண்டிருக்கிறது எனத் தவறாக நினைக்க வேண்டாம். தற்சமயம் இருக்கும் சூழ்நிலையில் அயல்நாட்டுத் தமிழர்களைப் பற்றிய மக்கள் தொகைப் புள்ளிவிவரங்கள் தோராயமாகவாவது நாம் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம் எனும் குறிக்கோளுடன்தான் இப்புள்ளிவிவரங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

அயல்நாடுகளில் உள்ள தமிழர்களைப் பற்றி வெளிவந்த நூல்கள் மிகக்குறைவு. ஆனாலும், அயல்நாட்டுத் தமிழர்கள் தொடர்பான சுமார் 130 நூல்களையும் துணை நூல்களையும், கட்டுரைகளையும் படித்துத் திரட்டிய செய்திகளையும் மேலும் கடிதத் தொடர்பு மூலமும், நேரடித்தொடர்புமூலமும் கிடைத்த செய்திகளையும், கருத்துகளையும் திரட்டி இந்நூலை எழுதியிருக்கின்றேன். இந்நூலின் ஆசிரியர், 1970-71, 1975-76ஆம் ஆண்டுகளில் இந்தோனேசியாவில் வாழும் வாய்ப்பிருந்தது. அச்சமயத்தில் சிங்கப்பூருக்கும் சென்றுவர முடிந்தது. மேலும் அமெரிக்கக் குடியரசு, ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று வந்த என் பயண அனுபவங்களும் சிறிதளவு பயனுள்ளதாக இருந்தது எனக் கூறலாம்.

இச்சந்தர்ப்பத்தில், கட்டுரைகள் மூலமாகவும், கடிதம் மூலமாகவும், நேரில் பார்த்து உரையாடிய போது அளித்த செய்திகள் மூலமாகவும் இந்நூலை எழுதுவதற்கு உதவிய பின்வரும் அயல்நாட்டுத் தமிழர்கள், அயல்நாடுகளுக்குச் சென்று திரும்பிய தமிழர்கள், பிற இந்தியர்கள், அயல்நாட்டினர்களுக்கு எனது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மாதிரி உதவிய சிலரை நான் நேரில் சந்தித்தது கூட இல்லை. ஆனால் அவர்கள் அளித்த பேருதவிக்கு நன்றி என மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

1988 ஜனவரித் திங்கள் பிரான்சு நாட்டிற்குச் சென்று வந்து தமிழர்களைப் பற்றிய செய்திகள் அளித்த மாண்புமிகு தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் ச. அகத்தியலிங்கம் அவர்கள்.

திரு. இராம. வீரசிங்கம், லண்டன் தமிழ்ச்சங்கத் தமிழ்ப் பள்ளி, லண்டன்.

டாக்டர் ஆர். நித்தியானந்தன் தலைமையாசிரியர், மேற்கு இலண்டன் தமிழ்ப் பள்ளி.

அரங்க முருகையன் (இலண்டன்).

தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் சிறப்பு ஆய்வாளராகப் பணிபுரிந்த ஹார்ட் சிவாயா(மேற்கு செர்மனி),

சமீபத்தில் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் ஆய்வு செய்து சீனா திரும்பிய திரு. சாங்சாவின், சீனா தென், தென்கிழக்காசியக் கல்வி நிறுவனம், சீனச்சமுக அறிவியல் கழகம், பீகிங், சீனா.

சுகமோஒனோ (ஜப்பான்)

டாக்டர் நா.கடிகாசலம், பீகிங் வானொலி நிலையம், சீனா, ரீயூனியனைத் தாயகமாகக் கொண்டுள்ள பேராசிரியர் வி.குமாரசாமி, பேராசியர் திரு வி.தேவகும்மார் (ரீயூனியன்), திருமதி அன்னை கஸ்தூரி சின்னப்பன், மொரீசியஸ், திரு. திருமலைச்செட்டி, மகாத்மாகாந்தி நிறுவனம், மொரீசியஸ், திரு. ஆர். விசுவநாதன், முதலாம் செயலாளர், இந்திய ஹைகமிஷன் மொரீசியஸ்,

பேரா. சுரேந்திரபானா அவர்களும், தில்லை வேல்நாயுடு (டர்பன்-வெஸ்ட் வில்லி பல்கலைக் கழகம், தென் ஆப்பிரிக்கா).

இலிபியாவில் உள்ளதொழிற்சாலையில் மேனிலை மின்பொறியியல் வல்லுநராகப் பணியாற்றும் திரு. இரா. வேங்கடகிருட்டிணன்; சீசெல்சு நாட்டில் பணியாற்றிய கா.சச்சிதானந்தன், ஈ.ச.விசுவநாதன், கயானா பல்கலைக் கழகம், கயானா; டென்னிஸ், என்.எம்.உ.பாஜியர் (Bassiaer) கயானாப் பல்கலைக்கழகம், கயானா, திரு. நூல்குமார் மஹாபீர் டிரினிடாட், திரு. பாலகணபதி, தமிழ் ஆலோசகர், பிஜித் தீவு, டாக்டர் கா.பொ.இரத்தினம் (கொழும்பு), இலங்கை; எம்.ஏ.நுஃமான், யாழ்ப்பாணப்பல்கலைக் கழகம், இலங்கை, திரு.கோ.கிருஷ்ணபகவான், பாடத்திட்டமேம்பாட்டுக் கழகம் கல்விஅமைச்சு, மலேசியா, அ. கந்தன்(மலேசியா), டாக்டர். அ.வீரமணி, சிங்கப்பூர்,

அயல்நாடுகளுக்குச் சென்று தமிழர்களைப் பற்றிய செய்திகளை அளித்த டாக்டர் பொற்கோ, சென்னைப் பல்கலைக் கழகம், டாக்டர் கி. கருணாகரன், பாரதியார் பல்கலைக் கழகம், டாக்டர் தி.முருகரத்தினம், மதுரை காமராசர் பல்கலைக் கழகம், டாக்டர் சு.இராசாராம், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், காலஞ்சென்ற பேராசிரியர் கு.நம்பிஆருரன், தெ.பொ.மீ., டாக்டர் எம்.இ.மாணிக்கவாசகம் (தாய்லாந்து சென்று திரும்பியவர்) அ. இராகவன் டாக்டர் இராம. சுந்தரம், தமிழ்ப்பல்கலைக் கழகம் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். செனகால் நாட்டில் பணியாற்றி, தற்சமயம் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றும் டாக்டர் க.ப.அறவாணன் அவர்களின் தமிழரின் தாயகம் எனும் நூல், 'தமிழர்களுக்கும், அயல்நாட்டினர்க்கும் உள்ள சில ஒற்றுமைகள் எனும் அத்தியாயம் எழுதுவதற்கு மிகவும் உதவியாக இருந்தது. அவருக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் இந்நூலை எழுத உதவிய பிற அறிஞர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மாதிரியாகப் பல்வேறு அறிஞர்களின் கருத்துக்களை இவ்வாசிரியர் திரட்டி அளிப்பதை அவர்கள் தவறாகப் புரிந்துக்கொள்ள வேண்டாம் எனத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் இந்நூலின் ஒரே குறிக்கோள் அயல்நாட்டுத் தமிழர்களைப் பற்றிய செய்திகளையெல்லாம் திரட்டி ஒரே நூலில் அளிக்கவேண்டும் என்பதே. இந்நூல் ஓரளவு ஆய்வு அடிப்படையில் எழுதப்பட்டது என்றாலும் இந்நூலைப்பல்வேறு அறிஞர்கள், ஆய்வாளர்கள் அளிக்கும் செய்திகளைத்

திரட்டி அளிக்கும் ஒரு பொது நூல், (a kind of - text book) என்றே கருதவேண்டும். குறிப்பாகப்பொது மக்களுக்கும் அயல்நாட்டுத் தமிழர்களைப் பற்றிய அறிமுகம் அளிக்கும் நூலாக இருக்க வேண்டும் என்பதே இந்நூலின் முக்கிய நோக்கமாகும். ஆகையால் சிறப்பான ஆய்வாளர்களின் நோக்கத்தை நிறைவேற்றும் குறிக்கோளோடு எழுதப்பட்ட நூல் அல்ல எனக்கூறிக்கொள்ள விரும்புகிறேன். சமயம் வரும்போது பல அயல் நாடுகளுக்குச் சென்றுவரத் தமிழ்ப் பல்கலைக் கழகம் வாய்ப்பளிக்கும்பொழுது இந்நூலை மேலும் செப்பனிடும் வாய்ப்பு இந்நூலாசிரியருக்குக் கிடைக்கும்.

திரு.ஜெ.நீதிவாணன், மொழியியல் துறை மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை அவர்கள் செய்த நுண்ணாய்வுக்கு என் நன்றி உரித்தாகுக. இந்நூலை அடிப்படையாகக் கொண்டு மேலும் பல முதற்சான்றுகளைப் பயன்படுத்தி எழுதினால் அதிக பயனுள்ளதாக இருக்கும் என அவர் கருதுகிறார். சந்தர்ப்பம் வரும்போது தமிழ்ப் பல்கலைக் கழகத்திலுள்ள அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறை அவர் கூறிய ஆலோசனைகளைச் செயற்படுத்த முயலும் என உறுதிமொழி அளிக்கின்றேன்.

தமிழ்ப் பல்கலைக் கழக முதல் துணைவேந்தர் டாக்டர் வ.அய்.சுப்பிரமணியம் எனக்கு அன்புகூர்ந்து வாய்ப்பினை அளித்ததால்தான் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் பணியில் சேர்ந்து இந்நூலை எழுத முடிந்தது. ஆனால் இந்நூலை நான் எழுதுவதற்கு அனுமதி அளித்தவர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் முனைவர் ச.அகத்தியலிங்கம்; அனுமதி அளித்து ஊக்கம் அளித்து, உறுதுணையாக நின்ற துணைவேந்தர் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும், இந்நூலை இவ்வடிவில் எழுதுவதற்கு ஊக்கம் அளித்த அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறைப் பேராசிரியர் இராசாராம் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்ப் பல்கலைக்கழகப்பதிவாளர் அவர்களுக்கும் நூலக இயக்குநர் அவர்களுக்கும் பணியாளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்ப் பல்கலைக் கழகப் பதிப்புத்துறையில் துணை இயக்குநராகப் பணியாற்றிய திரு.இளஞ்சேரன் அவர்களுக்கும், இந்நூல் நன்றாக வெளிவர பெரும் முயற்சி எடுத்துக்கொண்ட பதிப்புத் துறை உதவி இயக்குநர் திரு.செ. இரெ. செயச்சந்திரன் அவர்களுக்கும், இந்நூலைப் படித்து இறுதிவடிவம் கொடுத்த புலவர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூலைத் தட்டச்சு செய்த தட்டச்சருக்கும் இந்நூலினை நல்லமுறையில் அச்சிட்ட புதுக்கோட்டை சர்மா சானடோரியம் அச்சகத்தார்க்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முடிவாக மீண்டும் கூறுகிறேன் இந்நூலின் ஒரே நோக்கம் அயல்நாட்டுத் தமிழர்களைப் பற்றிய எல்லா செய்திகளும் அடங்கிய ஓர் நூல் (Facts about Overseas Tamil) எழுதவேண்டும் என்பதே ஆகும். எவ்வளவு முயன்றாலும் உலகநாடுகளில் வாழ்கின்ற தமிழர்கள் பற்றிய செய்திகளை - அதிகமான பல விவரக் குறிப்புகளை நேரடியாகச் சென்று உறுதிப்படுத்தாமல், பலர் அளிக்கும் குறிப்புகளையே அடிப்படையாகக் கொண்டு

எழுதவேண்டிய கட்டாயத்தில் காணப்படுகின்ற குறைகளை வாசகர்கள் பொறுத்துக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

முனைவர். எஸ். நாகராஜன்
பேராசிரியர்-தலைவர்,
அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்

அறிமுகம்

தமிழகத்தில் வாழும் தமிழர் 1981 இல் 4.8 கோடியாக இருந்தனர். இந்திய மக்கள் தொகையில் இந்தியாவில் எல்லாப் பகுதிகளிலும் வாழும் தமிழர் எண்ணிக்கை ஆறுகோடி அயல்நாடுகளில், இந்தியாவுக்கு வெளியே 1 கோடிக்கு மேல் தமிழர்கள் வாழ்கின்றனர் ஆனால் இவர்களில் தாய் மொழித் தமிழை மறவாமல் இருப்பவர்களின் எண்ணிக்கை 1 கோடியை விடக் குறைவு. ஆகையால் இந்தியாவில் 86 விழுக்காடும் மற்ற அயல்நாடுகளில் 14 விழுக்காடும் தமிழர்கள் இருக்கின்றனர் எனக் கூறலாம்.

அயல்நாடுகளில் வாழும் தமிழர்களின் எண்ணிக்கை

நாடுகள்	அயல்நாட்டுத் தமிழர்களின் மொத்த எண்ணிக்கை	தமிழர்கள் மிகுதியாக வாழும் பகுதிகள்	மற்ற அயல்நாட்டு இந்தியர்களுடன் ஒப்பிட்டால் (100%)
1. இலங்கை	1981 புள்ளி விவரம் இலங்கைத் தமிழர் 18,71,535 இந்தியத் தமிழர் 8,25,233 இசுலாமியத் தமிழர் 10,56.972 மொத்தம் 37,53,740	வடக்கு, கிழக்கு மாநிலங்கள் இந்தியத் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதி நுவாராலியா (இலங்கையின் நடுப்பகுதி)	சுமார் 95% மேல் தமிழர்கள்
1. மலேசியா	1970 புள்ளி விவரம் இந்தியத்	பினாங், கோலாலம்பூர், ஐபோ, கிலாங்,	சுமார் 80 விழுக்காடு தமிழர்கள்

	தமிழர்கள் 7,46,558 இலங்கைத் தமிழர்கள் 25,288	செலங்கர், பேரக், ஜோஹூர், கேதா, நெகிரி செம்பிலன், மலாக்கா, பாஹாங்	
3. சிங்கப்பூர்	1979 புள்ளி விவரம்..... 98,425	----	65 விழுக்காடு தமிழர்கள் (இலங்கைத் தமிழர்கள் 3 விழுக்காடு)
4. இந்தோ-னேசியா	35,000 (மற்றொரு புள்ளி விவரம் 15,000)	மேடான் நகரமும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளும் சக்கர்த்தா	பெரும்பான்மையினர் தமிழர்கள்
5. தென் - ஆப்பிரிக்கா	1980 புள்ளி விவரம்..... 2,96,000	நேட்டால்	37 விழுக்காடு தமிழர்கள்
6. மொரீ-சியஸ்	1,00,000	போர்ட் லூயி, வடக்கு, தென்கிழக்கு, மாவட்டங்கள்	25 விழுக்காடு தமிழர்கள்
7. பிஜித் தீவு	70,000	சுவா	கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கு தென் இந்தியர்கள், தமிழர்கள் மட்டும் 20 விழுக்காடு இருக்கலாம்.
8. பர்மா	2,50,000	மத்திய ரங்கூன், கிழக்குப்பகுதிகள் இலாமுடா, தட்டாகவே, கம்மா கச்சி, தட்டோன், கம்பை, கலாபஸ்தி, இஞ்சின், மணிக்கோன், தென் அவுக்கலப்பா	60 விழுக்காடு தமிழர்கள்

		தரம்புவே, தல்லா, கிழந்தன், கம்மாயூட், திங்காஞ்குன், சிரியம், டாம்பிண். குயின்	
9. ரீயூனியன்	1,50,000	———	———
10. மார்தினீக்	14,000	ஃபோர்ட்டி பிராண்க	———
11. குவாடிலோப்	60,000	பஸ்ஸெதெரே, கேப்தாநகர்,	——
12. கயானா	80,000 தோராயமான மதிப்பீடு	ஏறக்குறைய அறுபது ஊர்களில் இருக்கின்றனர். கொரன்டின், ஆல்பியன் ஹாம்வியர், வில்லியம்பர்க், ரோஸ்ஹால், விம், போர்ட் மொராண்ட், பெல்விடிர், லெனோரா, என்மூர்.	—
13. சீசெல்சு	சுமார் 3,000, சுமார் 17,000 பேர்கள் தமிழர் பெயர் களுடன் இருக்கின்றனர்.		
14. பிரிட்டன்	சுமார் 2,50,000	விம்பிள்டன், கிராய்டன், சவுத்தாள், கிளாஸ்கோ, மேஞ்செஸ்டர், பர்மிகாம்,	சுமார் 40 விழுக்காடு தென் இந்தியர்கள்

		(இலண்டனில் மட்டும் 35,000 தமிழர்கள் இருக்கின்றனர்.)	
15. அமெரிக்க ஐக்கிய நாடுகள்	கிட்டத்தட்ட 3,00,000 தென் இந்தியர்கள்	—	சுமார் 40 விழுக்காட்டினர் தென் இந்தியர்கள்
16. ஆஸ்திரேலியா	சுமார் 5000	மேற்குப்பகுதி பெர்த்நகரம், சிட்னி.	

குறிப்பு: இந்தோனேசியா, பிஜித்தீவு, பர்மா, ரீயூனியன், மார்தினீக், குவாடிலோப், கயானா, சிசெல்சு, பிரிட்டன், அமெரிக்கா ஐக்கிய நாடுகள் முதலிய நாடுகளில் தமிழர்களின் புள்ளி விவரங்கள் அங்குள்ளவர்களுடன் தொடர்புகொண்டு தோராயமாகத்தான் குறிப்பிடப்பட்டு அளிக்கப்பட்டுள்ளன.

மேலே குறிப்பிட்ட 15 நாடுகளைத் தவிர, தமிழர்கள் குறைந்த அளவில் வாழும் மற்ற நாடுகள் கனடா, பிரான்ஸ், மேற்குச் செருமனி,(குறிப்பாக இலங்கைத் தமிழர்கள் இங்கு மிகுதியாக இருக்கிறனர்) சாம்பியா, கென்யா, சோமாலியா, உகந்தா, மடகாஸ்கர் போன்ற ஆப்பிரிக்க நாடுகள், ஈராக், ஈரான், குவைத், பஹ்ரைன், அபுதாபி, சவுதி அரேபியா, துருக்கி போன்ற, மேற்கு ஆசிய நாடுகள், கம்பூசியா, வியட்நாம், பிலிப்பைன்ஸ், தாய்லாந்து முதலிய தென்கிழக்காசிய நாடுகள், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், ஜமெய்க்கா, சூரிநாம், அய்த்தி முதலிய நாடுகளாகும். தவிர, உலகில் பிற எல்லா நாடுகளிலும் தமிழர்களைப் பார்த்தால் ஆச்சரியமில்லை. இன்று உலகில் 167 இறைமையுள்ள சுதந்திர நாடுகள் இருக்கின்றன எனக் கூறலாம்.

தமிழர்கள் தமிழகத்தில் மட்டும் வாழவில்லை; அயல்நாடுகளில் மட்டும் குடியிருக்கவில்லை; இந்தியாவின் மற்ற மாநிலங்களிலும் குடியேறி வாழ்கின்றனர். பிற இந்தியத் தமிழர்களை இன்றைய அரசியல் சூழ்நிலையில் அயல்நாட்டுத் தமிழர்கள் என்று அழைக்க முடியாது. ஏனென்றால், இன்று இந்தியாவின் ஒரு பகுதி தமிழ்நாடு. முன்னாளில் பன்னெடுங்காலமாக அரசியல் அடிப்படையில் தமிழ்நாடு இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்ததில்லை. முகம்மது துக்ளக் ஆட்சியின் போது தான் பத்து அல்லது பன்னிரெண்டு ஆண்டுகள் முழு இந்தியாவின் ஒரு பகுதியாக, தமிழ்நாடு இருந்திருக்கிறது. பல்லவ, சோழ, சேர, பாண்டிய, விசய நகர, நாயக்கர் அரசர்கள் தமிழ் நாட்டை ஆட்சி புரிந்திருக்கிறார்கள். முதன் முதலாக, பிரிட்டிஷ் ஆட்சியின் போதுதான் தமிழ் நாடு பிரிட்டிஷ் இந்தியாவின் ஒரு பகுதியாக முழுமையாக மாறியது. அப்போதுகூட புதுச்சேரி பிரெஞ்சு ஆட்சியின் கீழ் இருந்தது. ஆகையால் பொதுவாக, பத்தொன்பதாம் நூற்றாண்டிற்கு முன்பு பிற இந்தியப் பகுதிகளில் குடியேறியிருந்த தமிழர்களை அயல்நாட்டுத் தமிழர்கள் என்று வரலாற்று அடிப்படையில் கூறலாம். ஆனால், பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து அரசியல்

அடிப்படையில் ஏனைய இந்தியப் பகுதிகளில் (பிரெஞ்சுத் தமிழகத்தைத் தவிர) வாழ்ந்த தமிழர்களை இந்தியத் தமிழர்கள் என்றுதான் அழைக்க வேண்டும். பண்பாடு, மொழி, இன அடிப்படையில் இன்றுகூடப் பிற இந்தியத் தமிழர்களை அயல்நாட்டுத் தமிழர்கள் எனக் கூறலாம். ஆனால், அரசியல் அடிப்படையில் பிற இந்தியத் தமிழர்களை இந்தியத் தமிழர்கள் என்று தான் அழைக்க வேண்டுமே தவிர, அயல்நாட்டுத் தமிழர்கள் என அழைக்க முடியாது. பிற இந்தியப் பகுதிகளில் 1 1/4 கோடிக்கு மேல் தமிழர்கள் வாழ்கின்றனர். அவர்களில் தமிழ் மொழியையே மறந்த சிலரும் இருக்கின்றனர். குறிப்பாக, இந்தியத் தமிழர்கள் மிகுதியாக வாழும் பிற இடங்கள் கர்நாடகம், ஆந்திரப் பிரதேசம், கேரளம், உத்திரப் பிரதேசம், தில்லி, மேற்கு வங்காளம் (கல்கத்தா), மகாராஷ்டிரா (பம்பாய்), சண்டிகார், அந்தமான், நிக்கோபார் தீவுகள் முதலிய பகுதிகளாகும்.

அயல்நாடுகளில் தமிழர்கள் வாழும் இடங்களில் எல்லாம் தமிழ்ப் பண்பாடு பரவியிருக்கின்றது. மலேசியா, சிங்கப்பூர், பர்மா, இந்தோனேசியா, தாய்லாந்து, இலங்கை, தென் ஆப்பிரிக்கா, மொரீசியஸ், அமெரிக்க ஐக்கிய நாடுகள் போன்ற பல நாடுகளில் தமிழர்கள் தாங்கள் வழிபடும் சிவன், முருகன், மாரியம்மன் போன்ற தெய்வங்களுக்குக் கோவில்களைக் கட்டியிருக்கின்றார்கள். இன்னும் பல அயல்நாடுகளில் பொங்கல், தைப்பூசம் முதலிய தமிழர் திருவிழாக்கள் ஆர்வத்துடனும், பக்தியுடனும் மிகச்சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. குறிப்பாகத் தமிழ் அர்ச்சகர்களும், பூசாரிகளும், தென், தென்கிழக்கு ஆசிய நாடுகளில் இருக்கின்றனர். ஆனால், மொரீசியஸ் போன்ற தீவுகளில் பூசாரிகள் தமிழ் மொழியில் கடவுளுக்கு அர்ச்சனை செய்வதை மறந்து விட்டார்கள்.

தமிழர்கள் ஏன் அயல்நாடுகளுக்குச் சென்றார்கள்? தமிழ்நாட்டின் நிலஇயல் அமைப்பு இதற்கு ஒரு சிறப்பான காரணமாக இருக்கின்றது. இந்தியத் தீபகற்பத்தின் தென்முனையில் தமிழ்நாடு இருக்கின்றது; மேலும் இதன் நீண்ட கடற்கரை, வங்காளவிரிகுடாவைப் பார்த்துக் கொண்டு இருக்கின்றது. மேலும், தமிழ்நாட்டின் தெற்குப் பகுதியின் வறண்ட சூழ்நிலையும் தமிழர்களின் குடிபெயர்வுக்குக் காரணமாக இருந்தது. முத்து, இரத்தினம், தங்கம், நறுமணப்பொருட்கள், நீரில் கரையாத பற்றாற்றல்மிக்க மரப்பிசின் வகை (Resin)-முதலிய பொருட்களைத் தேடி பண்டைய காலத்திலும் இடைக் காலத்திலும் தமிழர்கள் அயல்நாட்டிற்குச் சென்றனர். பின்னால் கூலிப் படைவீரர் (Mercenaries), கைவினைஞர்(artisans), பூசாரி, அர்ச்சகர் முதலிய பணிகள் கிடைத்ததால் அயல்நாடுகளுக்குச் சென்றனர். தவிர இராமநாதபுரம், திருநெல்வேலி முதலிய மாவட்டங்களில் மக்கள் தொகை அதிகரித்தவுடன் வேளாண்மை உற்பத்தி பாதிக்கப்பட்டதாலும் அயல்நாடுகளுக்குச் சென்றனர். பஞ்சத்தால் பிழைக்கச் சென்றவர்கள் பலர். கட்டாயத்தின் பேரில் அழைத்துச் செல்லப்பட்டவர்கள் குறைவானவர்கள் என்றே கூறவேண்டும். குறிப்பாகச் சைவ, வைணவ வழிபாடு புத்தெழுச்சி பெற்ற சூழ்நிலையில் புத்த சமயத்தினர் சிலர் தமிழ்நாட்டை விட்டு வெளியேறினர். வாணிபம் செய்வதற்காகவும், தோட்டங்களில் கூலி வேலை செய்வதற்காகவும், ஊதிய உயர்வு கிடைத்ததாலும் பல தமிழர்கள் அயல்நாடுகளுக்குச் சென்றனர். சமுதாயத்தில் ஒடுக்கப்படல், நிலப்பிரபு மற்றும் வட்டிக் கடைக்காரர்களின் பொருளாதாரச் சுரண்டல், வாணிபம் மற்றும் தொழில்களின் வீழ்ச்சி, மொரீசியஸ் அடிமை முறை ஒழிப்பு

முதலியனவும் தமிழர்கள் அயல்நாடுகளுக்குச் செல்வதற்குக் காரணமாக இருந்தன. உயர்கல்விக்காகவும் மேலை நாடுகளுக்கும் சென்று குடியேறினர்.

இக்காரணங்களால்தான் உலக வரலாறு இயற்றிய எஸ்.ஜி.வேல்ஸ் என்ற அறிஞர் பெருமகனார் ' உலகெங்கும் தமிழனத்துடன் ஒரு பழமையான தொடர்பு உள்ள வரலாறு காணப்படுகிறது' என்று பெருமையாகக் கூறியுள்ளார். பல நூற்றாண்டுகட்கு முன்பே தமிழர்கள் கடல் கடந்து சென்றுளமையை 'முந்நீர் வழக்கம் மகடூஉவோ டில்லை' என்ற தொல்காப்பிய சூத்திரத்தாலும், 'கடாரம் வென்ற சோழன்' என்ற தொடராலும் அறிகிறோம். முப்புறமும் கடல் சூழ்ந்த நிலத்தில் நெடுங்காலமாக வாழ்வதன் விளைவாகத் தமிழ் மக்கள் கலம் செலுத்தி கடல் கடந்து செல்வதில், திரவியம் தேடுவதில் இயல்பான ஆர்வமும் ஊக்கமும் காட்டி வந்தனர். கடலோடும் கலையில் தமிழர்கள் மிகவும் தேர்ச்சி பெற்றிருந்தனர். ஆழி, ஆர்கலி, முந்நீர், வாரிதி, வாரணம், பவ்வம், பரவை, புணரி, கடல் என்று கடலைக் குறிப்பதற்குப் பல சொற்களும், கப்பல், கலம், கட்டுமரம், நாவாய், படகு, பரிசில், புணை, தோணி, திமில், அம்பி, வங்கம், மிதவை, என்று நீரில் செல்லும் ஊர்திகளைப் பற்றி பல சொற்களும் தமிழில் உள்ளன என்பதை அறியலாம். தமிழ் மக்களின் முத்தும், பவளமும் எத்தனையோ நாடுகளின் மூலை முடக்குகளில் எல்லாம் சென்றதைக் காண்கிறோம். தமிழ் நாட்டின் தேக்கு மரங்கள், மத்திய கிழக்கு ஆசியாவில் வீடுகளைத் தாங்கும் தூண்களாகவும், கதவுகளாகவும் பயன்பட்டன என்பதை அறியும்போது பிறருக்கு வீடு அளித்த பெருமை நமக்கு உண்டு என்ற எண்ணம் நம்மிடையே வளரத் தலைப்பட்டது.

பழந்தமிழர் எகிப்து, பாபிலோனியா, கேல்டியா, புரதான் முதலான நகரங்களோடு வாணிபம் நடத்தியுள்ளனர். பண்டைய மன்னர்கள் எகிப்தோடு தொடர்பு கொண்ட வரலாற்றுச் சிறப்பினை 'பிளைனி', 'தாலமி' ஆகிய அயல்நாட்டு ஆசிரியர்கள் எழுதியுள்ளவற்றின் மூலம் பார்க்கின்றபோது "பெரியன்னஸ்", பாரிஸ் "எரித்ரோத்" ஆகிய துறைமுகங்களின் பெயர்கள் சங்ககாலப் பெயர்களோடு ஒன்றாக இணைந்துள்ளன என்பது புலனாகிறது.

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே தமிழ்ச் சொல்லான தோகை என்பது தாக்கியம் எனத்திரிந்து யூதர்கள் மொழியான ஹீப்று (Hebrew) மொழியில் காணப்படுகிறது. யவன மொழியில் தமிழ்ச் சொல்லான அரிசி (ரிஷி) இஞ்சி (ஜிஞ்சி) போன்ற தமிழ்ச் சொற்கள் உள்ளதைப் பார்க்கும்போது தமிழர்கள் உலகம் சுற்றிய வரலாறு தெரிகிறது. பாண்டிய நாட்டு மன்னன் உரோம் நாட்டுக்கு ஏலக்காய் அனுப்பியிருக்கிறான். உரோமப் பேரரசைச் சார்ந்த பழைமை வாய்ந்த இனமான தவிட்டு நிற இனத்தைச் சார்ந்த ஒரு பகுதியினரைத் திராவிடரே என எஸ்.ஜி. வேல்ஸ் கூறியுள்ளார். மேற்கு நடுக்கடலில் பரவியுள்ள திரையர் என்ற வகுப்பினர் பண்டைய திராவிடர்களே. நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே உரோமாபுரிக்கு அகஸ்திய சீசர் காலத்தில் பாண்டிய மன்னன் நல்லெண்ணத் தூதுக்குழு ஒன்று அனுப்பிய வரலாறு உள்ளது. கிள்ளிவளவன் என்ற மன்னன் நாககன்னி பீலிவளையை மணந்தான்.

கிரேக்கர்கள், பெண்களே வீரர்களாகவும் ஆட்சியாளர்களாகவும் விளங்கிய நாடு கன்னிநாடு என்று தமிழகத்தைக் கூறியுள்ளனர். யவனரும் உரோமரும் அராபியரும் பூம்புகார் கடைத்தெருவில் உலாவிய நிகழ்ச்சியை வரலாறு கூறுகிறது.

சுமத்ரா நகரத்தின் பழைய பெயர் மலையூர். சாவார் பொரணியார் செலிபீஸ் தீவுகளில் தமிழ் வரலாறு இன்றைக்கும் காணப்படுகிறது. இராசராசன் 1200 தீவுகளைத் கடந்து சென்று போரில் வென்றான். நிக்கபான சாவக சுமித்திரா மறையூர் பண்ணை என்ற ஊர் பள்ளி என்று கல்வெட்டில் காணப்படுகிறது. இராசராச சோழன் பல்வேறு நாடுகளுக்குச் சென்ற சிறப்பினை மனத்தில் கொண்டு மாமன்னன் இராசராச சோழனுடைய சிறப்பினை இன்றைக்கும் தெரிந்து கொள்கிற அளவுக்கு மலேசியத் தலைநகரமான கோலாலம்பூரில் புகழ்மிக்க மையப் பகுதியில் இராசராச சோழன் தெரு என்று காணப்படுகிறது. இராசேந்திரன் கடாரம் வென்றான் என்றுபெயர் பெற்றான். இதுவே தக்கோலம் என்று மலேசியாவில் விளங்கிறது.

முள்ளிக்குளம் ஈசாமல்லானா அளிக்கும் கருத்து வருமாறு:-

“தமிழன் தன் மொழியுடன் ஒரு காலத்தில் உலகம் முழுவதும் வலம் வந்தான் என்பதைச் சங்க ஆவணங்கள் மூலம் உணர்கிறோம். அப்பொழுது எல்லாம் அவன் வேற்று மொழிகளைத் துணைக்கு அழைக்கவில்லை. இன்றைக்கும் தமிழன் வலம் வரத்தான் செய்கிறான். ஆனால், ஒரு சிறு வேறுபாடு. அன்று சென்றவர்கள் நெஞ்சுயர்த்தி ஆளுவோராகவும் வங்கம் செலுத்தி வணிகம் செய்கின்ற வணிகர்களாகவும் சென்றனர். இன்று அப்படி விரல்விட்டு எண்ணத்தக்கவாறு ஒரு சில தமிழர் இருக்காலம். ஆனால் மிகப்பெரும்பான்மைத் தமிழர்கள் ஒப்பந்தக் கூலிகளாகச் சென்று உருக்குலைந்து அழிகின்றனர். அன்று பொருள்வயிற் சென்ற தன்காதலனைப்பற்றித்தலைவி தோழிக்குக் கூறுகிறாள்,

'தோழி, மானுடன் தேடக்கூடிய தேட்டைகளிலே மிகவும் அரிதாவது இறைவனிடம் அருளைத்தேடல்'

அருளைத் தேடுகின்றவர்களும் இருக்கின்ற காரணத்தால் வானிலிருந்து மழை பொழிகிறது. பகலவனும் முறைப்படி வந்து போகிறான். நில மகளும் கரு எத்தனமின்றி போதுமான அளவு தந்து உதவுகிறாள். இத்தனை வாழ்வுக்குக் காரணமாகின்ற அந்த அருளாளருக்குப் பொருள் வழங்குவது நாட்டுத் தலைவராகிய நம் காதலருக்குக் கடமையாகிறது. நமது மக்களிடத்தில் எவரேனும் தவறான எண்ணம் கொள்வாரானால் அவரை மடக்கி அடக்குவதும் தலைவரின் கடமை. அது மட்டுமல்ல இல்லறவாழ்வு இனிப்பதற்கும் - சேர்த்துப் பொருள்தேவை. அதன் பொருட்டினாலன்றோ நம்மவர் வெளிநாடு சென்றிருக்கிறார்' என்கிறார்.

"அரிதாய அறன் எய்தி அருளியோருக்கு அளித்தலும்
பெரிதாய் பகை வென்று பேணாரைத் தெறுதலும்
புரிவமர் காதலிற் புணர்ச்சியும் தரும எனப்
பிரிவு எண்ணிப் பொருள்வயிற் சென்ற நம் காதலர்"

அயல்நாடுகளுக்குச் சென்ற தமிழர்களை இருவகையாகப் பிரிக்கலாம். பத்தொன்பதாம் அல்லது பதினெட்டாம் நூற்றாண்டிற்கு முன், குறிப்பாகப் பண்டைய காலத்திலிருந்தே அயல் நாடுகளுக்குச் சென்ற தமிழர்கள், முதல் வகையினர்,

பத்தொன்பதாம் நூற்றாண்டு அல்லது பதினெட்டாம் நூற்றாண்டிற்குப் பின் அயல் நாடுகளுக்குச் சென்ற தமிழர்கள் இரண்டாம் வகையினர். பதினெட்டாம் நூற்றாண்டிற்கு முன்சென்ற தமிழர்கள் பொதுவாக வாணிபம் செய்வதற்காக அயல்நாடுகளுக்குச் சென்றார்கள். அவ்வாறு சென்ற போது சிலர் அயல்நாடுகளிலே தங்கிக் குடியேறினர். அவ்வாறு பண்டைக் காலத்தில் தமிழர்கள் மிகுதியாகக் குடியேறிய நாடு இலங்கை. இப்பகுதியில் வாழும் தமிழர்கள் தமிழ்ப் பண்பாட்டை விடாமல் பின்பற்றி வருகின்றனர். மலேசியா, தாய்லாந்து, கம்பூசியா, லாவோஸ், வியட்நாம், இந்தோனேசியா, பர்மா போன்ற பகுதிகளுக்கும் பண்டைக் காலத்திலிருந்தே தமிழர்கள் வாணிபம் செய்யச் சென்றனர். இவர்களில் பத்தொன்பதாம் நூற்றாண்டிற்கு முன் சென்றவர்கள். இந்நாடுகளிலேயே குடியேறித் தங்கித் தங்களுடைய தனித்துவத்தை இழந்து நின்றனர்.

இன்றும் தாய்லாந்தில் திருவெம்பாவை, திருப்பாவை ஓதப்படுகின்றன. ஆனால், தாய்லாந்தில் தற்காலத் தமிழர்கள் குடியேறவில்லை. தாய்லாந்தில் தாய் மொழி (Thai Language) தழுவிய ஒரு தமிழ் மொழி இருக்கின்றது. தமிழர்கள் இல்லை. அதேபோல, சில தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகளைச் சீனா, ஜப்பான், கொரியா நாடுகளில் பார்க்கலாம். ஆனால், இந்நாடுகளில் நிலையாகக் குடியேறி வாழும் தமிழ் இனம் கிடையாது. ஆகையால், தமிழ்ப் பண்பாடு இருக்கும் இடங்களில் எல்லாம் தமிழர்கள் இன்று இருக்கின்றார்கள் எனக் கூறமுடியாது. இந்த அடிப்படையில் தமிழ்ப் பண்பாடு பரவி இருக்கும் அயல்நாடுகளை இரு பிரிவாகப் பிரிக்கலாம்.

1. இன்று அந்நாடுகளில் தமிழர்கள் வாழாத பகுதி. 2. இன்று கூட அந்நாடுகளில் தமிழர்கள் வாழும் பகுதி. தமிழர்கள் வாழாத பகுதியை விட, தமிழர்கள் வாழும் பகுதிகள்தான் அதிகம் என்று கூறலாம்.

இன்று கூட அயல் நாடுகளில் தமிழர்கள் வாழும் நாடுகள் தொடக்கத்தில் குறிப்பிட்ட 15 நாடுகள் அல்லது அதற்கு மேலுள்ள நாடுகள் தாம். இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், பர்மா, இந்தோனேசியா, தென் ஆப்பிரிக்கா, பிஜித்தீவு, மொரீசியஸ், ரீயூனியன், சீசெல்ஸ், குவாடிலோப், மார்தினிக், அமெரிக்கக் குடியரசு, பிரிட்டன், ஆஸ்திரேலியா முதலிய நாடுகள் ஆகும். குறிப்பாக இப்பகுதிகளுக்கு (அமெரிக்கா, பிரிட்டன், ஆஸ்திரேலியாவைத் தவிர) பதினெட்டாம் நூற்றாண்டிலும், பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் தோட்டங்களில் கூலி வேலை செய்யவும், வாணிபம் செய்யவும் தமிழர்கள் சென்றனர். ரீயூனியன், மொரீசியஸ் போன்ற நாடுகளுக்குப் பதினெட்டாம் நூற்றாண்டிலேயே தமிழர்கள் சென்றனர். மலேசியா, பர்மா, இந்தோனேசியா போன்ற நாடுகளுக்குப் பத்தொன்பதாம், இருபதாம் நூற்றாண்டுகளில் சென்றனர்.

அவ்வாறு அயல் நாடுகளில் குடியேறியிருக்கும் தமிழர்களின் பண்பாட்டு நிலையை இரு வகையாகப் பிரிக்கலாம்.

(1) தமிழ்ப் பண்பாட்டை மறந்து கொண்டு வருபவர்கள். அதாவது தாங்கள் குடியேறிய நாட்டின் பண்பாட்டைத் தழுவிக்கொண்டு வாழ முயலுபவர்கள்.

உதாரணம்:- மொரீசியஸ், ரீயூனியன், இந்தோனேசியா, பிஜித்தீவு, மார்தினிக் குவாடிலோப், சீசெல்சு, டிரினிடாட் போன்ற நாடுகளில் வாழும் தமிழர்கள்.

(2) தமிழ்ப் பண்பாட்டைத் தொடர்ந்து பாதுகாத்துப் பேணுபவர்கள்.

உதாரணம், இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், பர்மா, முதலான நாடுகளில் வாழும் தமிழர்கள். தமிழ்ப் பண்பாட்டை ஓரளவு மறந்து, வட இந்திய இந்தி மொழிப் பண்பாட்டை விரும்பும் அயல்நாட்டுத் தமிழர்கள் பிஜித் தீவு, தென் ஆப்பரிக்கா, மொரீசியஸ், ரீயூனியன் முதலிய பகுதிகளில் குடியேறியிருக்கும் தமிழர்கள் என்று கூறலாம். மொரீசியஸ், ரீயூனியன் தமிழர்களை முற்றிலும் வட இந்தியப் பண்பாட்டினைத் தழுவியவர்கள் எனக் கூற முடியாது. அவர்கள் இந்தி மொழியை விட, கிரியோல் மொழியையே அதிகமாக விரும்புபவர்கள் எனக் கூறலாம். தென் ஆப்பரிக்கத் தமிழர்கள் பிஜித் தமிழர்களைப் போல இந்திச் சார்புடையவர்கள் எனக் கூறமுடியாது. ஆனாலும், இந்தி மொழி பேசுவர்களோடு ஓரளவு விட்டுக் கொடுத்து அனுசரித்துப் போகின்றவர்கள் எனக் கூறலாம்.

தமிழ்ப் பண்பாட்டைப் பேணிப் பாதுகாத்து வரும் அயல்நாட்டுத் தமிழர்களுக்கும், தமிழ் நாட்டுத் தமிழர்களுக்கும் வேற்றுமை கிடையாது எனக் கூற முடியாது. இலங்கையில் பேசும் தமிழ் மொழிக்கும், சிங்கப்பூர், மலேசியாவில் பேசும் தமிழ் மொழிக்கும், தமிழ் நாட்டில் பேசும் தமிழ் மொழிக்கும் சில வேறுபாடுகள் உள்ளன. இவ்வேறுபாடுகளைப் பற்றி தொடர்ந்து ஆராய்ச்சி செய்தால் நமக்குப் பல பயனுள்ள, தமிழ்ப் பண்பாட்டினைப் பாதுகாத்து வளர்க்கும் செய்திகள் கிடைக்கலாம். தமிழ் நாட்டிலேயே மதுரைத் தமிழ், நாகர்கோவில் தமிழ், சோழ நாட்டு தமிழ், மதறாஸ் தமிழ், கர்நாடாக, ஆந்திர எல்லைப் புறங்களில் பேசும் தமிழ், பாலக்காடு தமிழ் - இவற்றிடையே ஒரு சில வேறுபாடுகள் உள்ளன. அதே போலத் தமிழ்நாட்டுத் தமிழுக்கும், யாழ்ப்பாணத் தமிழுக்கும் சில வேறுபாடுகள் உண்டு என்பதை நாம் உணர வேண்டும். இவ்வேறுபாடுகள் அந்தந்த இடத்துச் சூழ்நிலைகளால் உருவாக்கப்பட்டவையாகும். இவ்வேறுபாடுகளைப் பற்றி மிகைப்படுத்திக் கூறமுடியாது. இந்நாடுகளில் தமிழ்க் கல்வி மூன்று அடிப்படை முறையில் கற்பிக்கப்படுகின்றது, கற்பிக்கப்பட வேண்டும் (1) தமிழ் மொழியை மறந்து இருக்கும், மறந்து கொண்டு வரும் அயல் நாட்டுத் தமிழர்களுக்குக் கற்பித்தல் (2) தமிழ் மொழியில் பயிற்சி, ஆர்வம் உள்ள அயல்நாட்டுத் தமிழர்களுக்கு உயர்நிலைப் படிப்புக்குரிய வசதிகளைச் செய்து கொடுத்தல் (3) தமிழ் கற்றுக் கொள்ள ஆர்வம் இருக்கும் அயல்நாட்டினர்களுக்குத் தமிழ் கற்றுத் தர வசதி அளித்தல். குறிப்பாக மூன்றாவது அடிப்படையில் தான் சோவியத் யூனியன் போன்ற கம்யூனிச நாடுகளிலும், மேற்குச் செருமனி போன்ற ஐரோப்பிய நாடுகளிலும் தமிழ் கற்பிக்கப்படுகின்றது. மலேசியா, சிங்கப்பூர், போன்ற நாடுகளில் இரண்டாவது அடிப்படையில் தமிழ்க் கல்வி வாய்ப்பு அளிக்க முயற்சி செய்கின்றோம். மொரீசியஸ், பிஜித்தீவு போன்ற நாடுகளில் அதாவது தமிழ் மொழியை மறந்து வரும் நாடுகளில், முதல் அடிப்படையில் தமிழைக் கற்பிக்க வாய்ப்பளிக்க முயலுகிறோம். ஆனாலும் இந்நாட்டினர் தமிழ்நாடு, இந்தியா செய்யும் உதவி போதவில்லை எனக் கூறுகின்றனர்.

மேலும் தமிழ் மொழிக்கும் மற்ற அயல் நாட்டு மொழிகளுக்கும் உள்ள தொடர்பைப்பற்றியும் ஆராய்ச்சி செய்து வருகின்றனர். உதாரணமாக, தமிழ் மொழி-ஜப்பான்மொழித்தொடர்பு,தமிழ் மொழி-கொரியா மொழி, தமிழ் மொழி-தகலாக் மொழி, தமிழ் மொழி-மலாய் மொழி, ஆஸ்திரேலிய பக்லோவியர் மொழி-தமிழ் மொழி, பலுசிஸ்தான் பிராஹீயி (Brahui) தமிழ் மொழி தொடர்பினைப் பற்றியெல்லாம் தொடர்ந்து ஆராய்ச்சி செய்யப்படுகின்றது. தமிழ் மொழியின் தாக்கத்தைப் பற்றி அறிவதே இவ்வாராய்ச்சிகளின் நோக்கமாகும். ஆகையால், அயல்நாட்டுத் தமிழர்கள் வாழ்வில் தமிழ் மொழி ஒரு சிறப்பான இடத்தைப் பெறுகின்றது.

தமிழ் மொழி இருக்கும் இடத்தில் எல்லாம் தமிழர்கள் இருக்கின்றார்கள் என நினைக்கக்கூடாது. உதாரணமாக, போலந்து, சோவியத் யூனியன், செனகால் போன்ற நாடுகளில் தமிழ் மொழி கற்பிக்கப்படுகின்றது. ஆனால், அந்நாடுகளில் தமிழர்கள் இல்லை. அதே போல, தமிழர்கள் இருக்கும் இடத்தில் எல்லாம் தமிழ் இருக்கின்றது எனக் கூற முடியாது. உதாரணமாக, மார்தினிக், குவாடிலோப், போன்ற இடங்களில் தமிழர்கள் தமிழை மறந்து விட்டனர். இந்தோனேசியா, பீஜித்தீவு போன்ற இடங்களில் தமிழ் பேசும் தமிழர்கள் குறைவு. இவர்களில் பலர் தமிழை மறந்து விட்டனர்.

அயல்நாடுகளில் வாழும் தமிழர்தம் நிலைகுறித்து அறிந்து கொள்ளுவதற்குப் பெரியார் திறந்த பல்கலைக்கழகத்தால் அயல்நாட்டுத் தமிழர்க்கென வெளியிடப்பட்ட பேராசிரியர் டாக்டர் ம. நன்னன் அவர்கள் எழுதிய "எல்லார்க்குந் தமிழ்" எனும் நூலின் பதிப்புரையில் திரு. கி வீரமணி அவர்கள் தெரிவிக்கும் பின்வரும் கருத்து துணை நிற்கும்.

"வெளிநாடுகளில் வாழும் தமிழர்களும் இணைந்ததுதான் "தமிழ் கூறும் நல்லுலகம். . . . அவர்களது தணியாத தமிழ் ஆர்வம், இனப்பற்று தாய்த் தமிழகத்து மக்களைவிடப் பல்லாற்றானும் சிறப்பாக விளங்குகின்றன என்பதைக் காண நேர்ந்தது.

ஆனால், அதே நேரத்தில் அவர்களது சுற்றுச் சார்பிலும் சூழலிலும் அவர்தம் குழந்தைகட்குத் தரப்படும் கல்வியிலும் தமிழ் கற்பிக்கப்படும் வாய்ப்பு மிகவும்அருகி ஏன் பல நாடுகளில் இல்லை என்றே கூற வேண்டும்) உள்ள நிலையில் வெளிநாட்டுத் தமிழர் குடும்பங்களில் உள்ள இளைய தலைமுறையினர் தமிழில் பேச இயலாதவர்களாக இருக்கின்றனர்.

வெளிநாட்டுத் தமிழர்களின் இல்லங்களில் அவர்கள் தமிழில் உரையாடினால்தான் அவர்களது பிள்ளைகள் ஓரளவாவது தமிழை மற்றவர்கள் பேசும்போது புரிந்து கொள்ளும் நிலையாவது ஏற்படும். இன்று பன்னாட்டுத் தமிழர் குடும்பங்களில் அதுவும் இல்லை."

மாண்புமிகு டத்தோ ச.சாமி வேலு, பொதுப்பணித்துறை அமைச்சர் மலேசியா, கூறுகிறார். "மாபெரும் சமுத்திரங்களுக்கு நடுவில் தமிழ்ப் பண்பாடு தமிழ்வாழ்க்கை ஆகியவற்றின் அடையாளங்கள், அவற்றுக்கு ஊடே தடுமாறுகின்றன. அவற்றைக் கரை சேர்க்கும் வகையில் கன்னித் தமிழைப் பேணி வளர்க்கத் தமிழர்கள் பாடுபடவேண்டும்."

அதே சமயத்தில் தமிழ் உணர்வு பெற்றவர்கள் தரணியிலேயே எந்த மொழியைத் தாய்மொழியாகக் கொண்டார்களானாலும் தயங்காமல் அத்துணைப் பேர்களையும் தமிழர்கள் என்று அழைப்பதிலே உண்மைத் தமிழர்கள் பெருமிதம் கொள்கின்றனர்.

தமிழை ஒரு சிலர் மறந்தபோதிலும், உலக முழுவதிலுமுள்ள தமிழர்களைத் தமிழ்மொழி ஒன்றிணைக்கிறது என்பதை மறுக்க முடியாது

"தமிழுக்கும் அமுதென்று பேர்–அந்தத்
தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"

என்று புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் மட்டும் சுவைத்து அனுபவித்துக் கூறவில்லை.

பிற உலகத் தமிழர்களும் சுவைத்துக் கூறுகின்றனர். "தேமதுரத் தமிழோசை உலகனைத்தும் பரவும் வகை செய்தல் வேண்டும்" என்று பாரதியார் கூறியதை அயல்நாடுகளில் உள்ள தமிழர்கள் தம்மால் இயன்றவரை செயல்படுத்துகின்றனர். அயல்நாடுகளில் வாழும் தமிழர்கள் பல இனத்தவர்களிடையே வாழ்ந்துகொண்டு தம் தாய் மொழியைப் பெருமையுடன் பேணிச்சிறப்போடு காப்பாற்றி, தமிழ்மொழி அழிந்துவிடாமலிருக்கத் தம்மால் இயன்றவரை பாடுபட்டு வருகிறார்கள்.

குறிப்பாக, இலங்கைத் தமிழர்களின் சேவை மிகவும் பாராட்டுக்குரியது. பின்வரும் பாடல் இலங்கைத் தமிழரின் மொழிப்பற்றை எடுத்துக் காட்டுகிறது.

ஈழம் என்றொரு இடமுண்டு
"வாழிய தமிழ்" என்னும் இனமுண்டு
யாழிலும் இனிய கனிவுடனே
யாழ்நகர், போற்றும் மொழி உண்டு
"தமிழ், தமிழ்" என்று உழைத்திடுவார்
மகிழ்வுடன் மொழிதனைக் காத்திடுவார்
நிகரேது? தமிழ்த்தாய்க்கு நிகரேது?
'அமுதே தமிழ்' எனப் போற்றிடுவார்

இவ்வாறு பெருமையுடன் வாழும் தமிழர் இனம் வசிக்கும் ஈழ நாட்டைச் "செய்நாடு" என்றும் கூறுவார்கள். அங்குப் பேசப்படும் தமிழ் கலப்பற்று, தூய செந்தமிழாகி வெளிவருகின்றது. மேலும் பெருமைப்படத்தக்க முறையில் அங்குள்ள நாணயம், பணச்சீட்டு மற்றும் அஞ்சல்தலை முதலியவற்றில் தமிழ் எழுத்துக் காணப்படும்.

ஆகையால் இலங்கை, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளில் தாய்மொழியாக, கல்வி மொழியாக, துணை ஆட்சிமொழியாக, செய்தி பரவல் தொடர்பு மொழியாக, இலக்கிய மொழியாக தமிழ் மொழி பயன்பட்டு வருகிறது. சிங்கப்பூரில் வானொலி, தொலைக்காட்சி முதலியவற்றில் தமிழுக்கென்று சம இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

'உலகமெல்லாம் தமிழர்கள் இருக்கிறார்கள். ஆனால் மலேசியாவில் தான் வாழ்கிறார்கள்' என்று அறிஞர் அண்ணா மலேசியா மெர்டேகா விளையாட்டரங்கில் பெருமையோடு கூறிக்கொண்டார். தமிழ்மொழி வளமாக விளங்குவதும் மலேசியாவில் தான். பல்கலைக் கழகத்தில் தமிழுக் கென்று தனிப்பகுதியை அமைத்து தமிழ் வளர வழிவகுத்த பெருமை இந்நாட்டுத் தமிழர்களுக்குண்டு

மாண்புமிகு டத்தோ ச.சாமிவேலு, பொதுப்பணித்துறை அமைச்சர், மலேசியா, இக்கருத்து தொடர்பாக. "தூரக்கிழக்கில் தமிழ்மொழியின் பெருமைகள் அவற்றுக்குக் கிடைத்துள்ள அங்கீகாரங்கள் அரசாங்க நிலையில் அரவணைப்புகள் ஆகியவற்றைக் கண்ணோட்டமிட்டு. அவற்றை அடித்தளமாகவும் ஆதாரமாகவும் கொண்டு 'மெல்லத்தமிழ் இனிச்சாகும்' என்ற பாரதியார் அச்சத்தைப் பொய்ப்பிக்க ஆறாவது உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுக்குப் பின்னர் செயல்படப் புறப்படும் அறிஞர் கூட்டம், தீவிரமாக முனையும் என்று புதிய தலைமுறை எதிர்பார்க்கிறது." என்று அவர் கூறுகிறார்.

"பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும். இறவாத புகழுடைய புதுநூல்கள் தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும். திறமான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்" என்று பாரதியார் பல பத்து ஆண்டுகளுக்கு முன்னர் கூறினார். பல வெளிநாட்டார் தமிழ்மொழியைப் புகழ்ந்து பேசியிருக்கின்றனர். "அழகு மிகுந்தது, வலிமை வாய்ந்தது, மிகவும் பண்பட்டு விளங்குவது தமிழ்" என்று மேலை நாட்டவர் இத்தமிழ் மொழியை அறிமுகம் செய்துள்ளனர். இத்தாலிய நாட்டவரான தத்துவப் போதகர் இராபர்ட்டுதே நோபிலி அடிகளார் "தனித்தியங்கும் தன்மையும் வன்மையும் வாய்ந்தது தமிழ்" என்று திராவிட மொழிகளில் ஒப்பிலக்கணம் என்னும் நூல் வாயிலாகத் தெளிவுறுத்தியவர். அயர்லாந்து நாட்டவரான ஆயர் இராபர்ட்டு கால்டுவெல்" தமிழ் மக்களிடையே அறிவார்ந்த முறையிலும் பயனுள்ள முறையிலும் பணிபுரிய விரும்புவோர் தமிழில் சிந்திப்பதோடு தமிழின் உயர்வுக்குப் பாடுபட வேண்டுமெனவும் தூண்டியவர் ஆங்கிலேய சர்ச்சுயுக்ளோ போப்பையர். 'உலகின் உயர்தனிச் செம்மொழி தமிழே" என்று நிறுவிக் காட்டிய பெருமை எழுபது மொழிகள் கற்று, ஈழநாட்டில் வாழ்ந்த நல்லூர் ஞானப் பிரகாசரைச் சாரும். உலகில் அறுபத்துநான்கு நாடுகளில் தமிழ் வழங்கி வருகிறது. "தெள்ளுற்ற தமிழ் அமுதின் சுவைகண்டார் இங்கமரர் சிறப்புக்கண்டார்" என்னும் பாரதிமொழி வழியே ஏறத்தாழ நாற்பது நாட்டு மக்கள் தமிழ்மொழியை ஆராயவும் ஆர்வத்துடன் பயிலவும் காண்கிறோம். அமெரிக்கா, இங்கிலாந்து,சோவியத்யூனியன், பிரான்சு, செருமனி, போலந்து, செக்கோஸ்லோவாக்கியா போன்ற நாடுகளின் பல்கலைக்கழகங்களில் பல அறிஞர்கள் விரும்பிப் பயிலும் மொழியாகத தமிழ்மொழி அமைந்துள்ளது. தமிழ் இந்திய நாட்டில் மட்டும் வாழ்கின்ற மொழி அன்று; பல்வேறு நாடுகளில் பேசப்படுகிற நிலையில் உள்ள உலகமொழிகளில் ஒன்றாகத் தமிழ்மொழி திகழ்கின்றது எனச் செக் நாட்டு மொழியியல் பேரறிஞர் கமில் சுவலபில் *(Kamil zvelibil)* கூறுவது இங்குக் குறிப்பிடத்தக்கது. கலையின் பெயராலும், கலாச்சாரத்தின் பெயராலும், நாகரிகத்தின் பெயராலும் இது உலக மொழியாக உள்ள நிலை இங்குக் குறிப்பிட்டாக வேண்டும். இதனால்தான் யுனெஸ்கோ நிறுவனம் வெளியிடும் 'கூரியர்' என்ற இதழ் தமிழ் மொழியிலும் வெளிவருவது குறிப்பிடத்தக்கது. ஆகையால் "திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்பதற்கேற்பத் தமிழர்கள் உலகின் பல்வேறு முனைகளுக்குச்

சென்று வாழத் தலைப்பட்ட நிலையில்தான் தமிழ்மொழி இன்று பல்வேறு நாடுகளில் பேசப்படுகின்ற மொழியாகப் பரந்து நிற்கிறது.

1966 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16 ஆம் தேதி கோலாலம்பூரில் கெடா என்ற கடாரமாநிலத்தின் இளவரசர், மலேசியாவின் முதலாவது பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான், மலேசியாவில் நடந்த முதலாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டைத் தொடங்கி வைத்தபோது கூறினார்: "மலேசியாவில் வழக்கில் இருந்து வருகிற மொழிகளில் ஒன்று தமிழ். பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் வெற்றி மீது பவனி வந்த தமிழ் வணிகர்களும் சமயத்தூதுவர்களும் இந்தியாவிலிருந்துப் புறப்பட்டுத் தென் கிழக்காசியா எங்கும் பரவினார்கள். அவர்களின் பழம்பெரும் கருத்துக்களை, வரலாற்றுக் குறிப்புக்கள், சிலைகள், மரபுகள் ஆகியவற்றிலும் காணமுடியும் எங்களது வட மாநிலங்கள் சிலவற்றில் அரசு சடங்குகளில் இந்தியப் பண்பாடுகள் இழையோடும் சில ஒருமைப்பாடுகளையும் காணலாம். எங்களது சொந்த மொழியான மலாய் இந்த வட்டாரத்து மக்களுக்கும் தமிழ் பேசும் மக்களுக்கும் இடையே சமூக உறவுகளைக் கொண்டுள்ளது என்பதற்குச் சான்றுகள் இருக்கின்றன."

"பார்தொழுதேத்தும் பத்தினி" என்ற சொற்களால் இளங்கோவடிகள் உலகமே வணங்கிப் பாராட்டும் பத்தினி கண்ணகியாவாள் என்பதனை வலியுறுத்துகின்றார். சமயம், இனம், மொழி, நாடு இவை அனைத்தையும் கடந்து நின்று, உலக சமுதாயம் அனைத்திற்கும் பொதுவாக திகழ்வது சேரன் செங்குட்டுவன் அமைத்த பத்தினிக் கோட்டமாகும். இதனாலேயே அவன் விழா எடுத்தபொழுது அக்கால உலகம் என்று கருதப்பட்ட எல்லா நாட்டினரும் அங்கு குழுமி இருந்து வணங்கி அத்தெய்வம் தங்கள் நாட்டிலும் எழுந்தருளல் வேண்டும் என்று வேண்டி வரமும் பெற்றனர். இச்செய்தியை இளங்கோவடிகள்:

உலக மன்னவ னின்றோன் முன்னர்
அருஞ்சிறை நீங்கிய ஆரிய மன்னரும்
பெருஞ்சிறைக் கோட்டம் பிரிந்த மன்னரும்
குடகக்கொங்கரும் மாளுவவேந்தனும்
கடல்சூழிலங்கைக் கயவாகு வேந்தனும்
எந்நாட்டாங்கண் இமய வரம்பனின்
நன்னாட் செய்த நாளணி வேள்வியில்
வந்தீகென்றே வணங்கினர் வேண்டத்
தந்தேன் வரமென்றெழுந்த தொருகுரல்

(சிலப். வரந். 156-164)

எனும் அடிகளால் விளக்கியுள்ளார். ஆகையால் பண்டைய காலத்திலிருந்தே தமிழ் மொழி மட்டும் தமிழர்கள் மூலம் அயல்நாடுகளுக்குப் பரவவில்லை. மற்ற தமிழ்ப் பண்பாட்டுக்கூறுகளும் பரவின. சிறப்பாகக் கட்டடக் கலை அமைப்பிலும் சமய அமைப்பிலும் தமிழ் நாட்டின் செல்வாக்கை அயல்நாடுகளில் குறிப்பாகத் தென், தென்கிழக்காசிய நாடுகளில் காணலாம். தென்கிழக்காசியாவில், குறிப்பாக இந்தோனேசியா, மலேசியா, தாய்லாந்து, கம்பூசியா போன்ற நாடுகளில் பல்லவ, சோழர்கால முறையில் சிற்பங்களும், கோவில்களும் கட்டட அமைப்புகளும்

அமைக்கப்பட்டன. ஆகையால் தமிழர்கள் மட்டும் அயல் நாடுகளுக்குச் செல்லவில்லை. தமிழ்ப் பண்பாடும் சென்று பரவியது. தமிழ் நாட்டுச் சைவ சித்தாந்தமும், வைணவமும், புத்த சமயமும் தென்கிழக்காசிய நாடுகளில் பரவித் தழைத்தோங்கின. தாய்லாந்து நாட்டு மன்னர் முடிசூட்டு விழாவின்போது தேவாரம், திருவாசகம் பாடப்பட்டு மன்னர்களின் பரம்பரை ஆட்சி தொடங்கப்படும். ஆனால் தமிழ்ப் பண்பாடு மட்டுமே இந்நாடுகளுக்குச் சென்று பரவியது என அறுதியிட்டுக் கூற முடியாது. பொதுவாக, இந்தியப் பண்பாடும் பரவியது என்று தான் கூற முடியும். ஆகையால் தான் இப்பகுதிகளை 'மிகப் பெரிய இந்தியா' (Greater India) என்றும் 'மிகத் தொலைவிலுள்ள இந்தியா (Farther India) என்றும் அழைத்தனர். இன்று வெளி நாடுகளில் வாழும் இந்தியர்களின் எண்ணிக்கை (அடைப்புக் குறிக்குள் உள்ளது.) குடியுரிமை உள்ளவர்கள் தொகை மலேசியா 12.08.500 (10.09,500) பிரிட்டன் 5 இலட்சம் (பாதிப்பேர்), மொரீசியஸ் 6,23,500 (6,12,527) வட அமெரிக்கா 3 இலட்சம் கனடா 1.75 இலட்சம்(95,000) பிஜி 3,47,445 (3,00,650) ஜமெய்க்கா 50,310(50.000). டிரினிடாட் டொபாகோ 6.2 இலட்சம் (6.2 இலட்சம்). சூரிநாம் 1,42,000 (1,42,000) சிங்கப்பூர் 1,62,000 (சுமார் 85%) இந்தோனேசியா 50 ஆயிரம்(34 ஆயிரம்) பர்மா 3 இலட்சம், தென் ஆப்பிரிக்கா 8,50,000 ரீயூனியன் 2 இலட்சம், குவாடிலோப் 80,000 (60,000) மார்தினிக் 20 ஆயிரம் (14 ஆயிரம்). இந்தியக் கடல் அலையோடு பல அலைகளாகச் சென்ற காவிரிப்பண்பாடே தமிழ்ப் பண்பாடு ஆகும். இத்தமிழ்ப் பண்பாட்டின் தாக்கத்தைத் தனியாகப் பிரித்துக் கூறுவது கடினமாக இருக்கிறது. ஆனால் தமிழ்ப் பண்பாட்டின் சிறப்புப் பங்கையும் நன்றாகத் தெளிவாக இந்நாடுகளின் சிற்பங்கள், கோவில் கட்டட அமைப்புகள், சமய மரபுகள், மொழி மரபுகள் விளக்கிக்காட்டுகின்றன. ஆகையால் 'மிகப் பெரிய தமிழ் நாடு' மிகப் பெரிய இந்தியாவின் சிறப்பான உட்பகுதியாகும் எனத் தயக்கம் இல்லாமல் நாம் கூறலாம்.

அவ்வாறு கடல் கடந்து அயல்நாடுகளுக்குப் பரவிய தமிழ்ப் பண்பாடு பொதுவாக அமைதியான முறைகள் மூலம்தான் பரவின. இராசேந்திர சோழனின் கடாரப் படையெடுப்பு ஒன்றுதான் போர் மூலம் தென் கிழக்காசிய நாடுகளில் நுழைய எடுத்த ஒரே இயல்பு மீறிய முயற்சியாகும். இராசேந்திர சோழனின் கடாரம் படையெடுப்பைப் பற்றியும், ஸ்ரீவிசய பேரரசை சோழர்கள் தோற்கடித்ததைப் பற்றியும் குறைவான ஆதாரங்கள் தான் இருக்கின்றன. தஞ்சைப் பெரிய கோயிலில் உள்ளே நடுவில் அமைந்த கோவிலின் மேற்குச்-சுவரில் எழுதப்பட்டிருக்கும் தஞ்சாவூர்க் கல்வெட்டில் அளிக்கப்பட்டிருக்கும் 13 ஊர்ப் பெயர்கள்தான் இராசேந்திர சோழனின் வெற்றிக்கு முக்கிய சான்றாக இருக்கின்றன. இக்கல்வெட்டில் பின்வரும் குறிப்புகளையும் காணலாம்:

"புரண்டோடும் கடலில் பல கப்பல்களை அனுப்பி கடாரம்
அரசனைச் சங்கிரம விசயோதுங்க வர்மனைக் கைப்பற்றி, மேலும்
அவனுடைய படையைச் சேர்ந்த யானைகளையும் குவிந்திருந்த
செல்வங்களையும் கைப்பற்றினோம். ஸ்ரீவிசயாவின் பரந்ததலை
நகரில் மிக அழகாக நகைகளால் அலங்கரிக்கப்பட்ட
போர்-கதவு அருகில் இருந்த வித்யாதரோ தோரனா என்னும்
அலங்கார வளைவு, தண்ணீர் நிறைந்த குளியல் இடங்கள் உள்ள
பன்னை மலை, காப்பரண்களுடைய மலையூர், ஆழ் கடல் அரணால்
சூழப்பட்ட மயூருடின்ங்கம், தீவிர போர்களின் பொழுதும் கூட

அசைக்க முடியாத இலங்க சோகா, மிகுந்த ஆழ் நீர் அரண்
உடைய மாப்பபாளம், அழகான சுவர்களின் பாதுகாப்புடைய
மெவிலிம்பங்கம், விளைப்பந்தூருடைய வளைப்பந்தூரு, அறிவியல் துறையில்
தேர்ச்சிபெற்ற பெரியோர்களால் புகழப்படும் தலைதக்கோலம்,
பயங்கர போர்களின்பொழுது மிகவும் உதவும் மாடமலிங்கம்,
போர்க்காலத்தில் மிகு வலிமைகொள்ளும் இலமுரிதேசம்,தேன்
நிறைந்த பரந்த தோட்டங்களுடைய பெருமைகொண்ட நக்கவாரம்,மேலும்
ஆழ்கடலால் பாதுகாக்கப்பட்டிருக்கும் பயங்கர வலிமை வாய்ந்த
கடாரம் முதலியவற்றை ஆரவாரத்துடன் கைப்பற்றினோம்".

இக்கல்வெட்டில் கூறப்பட்டிருக்கும் 13 ஊர்ப் பெயர்களில் 11 ஊர்கள் எங்கு இருக்கின்றன என்று கூறலாம்; மலேயா தீபகற்பத்தில் ஆறு ஊர்கள் இருக்கின்றன (மாப்பாபாளம் தென்னாசரிமில் உள்ளது); ஸ்ரீவிசயாவைச் சேர்த்துக் கொண்டால் நான்கு ஊர்கள் சுமத்திராவில் இருக்கின்றன. மேலும் நக்கவரம் என்பது நிக்கோபர்தீவுகளின் பெயராகும்; ஆனால், இரண்டு ஊர்கள் எங்கு இருக்கின்றன என அறுதியிட்டுக்கூற முடியவில்லை. அறிஞர்கள் இவ்விரண்டு ஊர்களைப் பற்றிப் பலவித ஊகக்கருத்துக்கள் அளித்திருக்கின்றார்கள் என ஜார்ஜ் டபுள்யு ஸ்பென்ஸர் என்பார் கூறுகின்றார். கடாரம் அரசனின் தலைநகரம் ஸ்ரீவிசயா என இக்கல்வெட்டில் கூறப்பட்டிருக்கின்றது. கருநாடகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட, 1022-23 ஆம் ஆண்டில் அல்லது இராசேந்திரனின் 11-ஆம் ஆண்டு ஆட்சியின்போது வெளியிடப்பட்ட கல்வெட்டில் பூர்வதேசம் (தெற்குக்கோசலராச்சியம்), கங்கை, கடாரம் (Purvadesamum Gangaiyum Kadaraman Konda) முதலிய பகுதிகளை இராசேந்திரன் கைப்பற்றியதாகக் கூறப்படுகிறது. ஆகையால், கடாரம் படையெடுப்பும் 1023-1025 இடையே நடந்திருக்கவேண்டும் என ஊகிக்கப்படுகிறது.

ஆர்.ஸி. மசூம்தார் ஸ்ரீவிசய பேரரசை ஒருமுறைக்கு மேல் சோழர்கள் தாக்கினார்கள் என்றும் லெய்டன் பட்டயத்தில் அளிக்கப்பட்டுள்ள சமஸ்கிருத முன்னுரையை விளக்கிக் கூறினால் சோழர்கள் இரண்டுமுறை ஸ்ரீவிசய பேரரசைத் தாக்கினார்கள் எனச் சான்று கிடைக்கின்றது என்றும் இராசேந்திரனின் ஆறாவது ஆண்டு ஆட்சியின்போதே 1017-18இல் இப்பேரரசு முதல் முறையாக சோழர்களால் தாக்கப்பட்டது என கூறுகின்றார். கே.ஜி.கிருஷ்ணன் இவ்விளக்கத்தை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றார். ஆனால் வீரராசேந்திரன் ஆட்சியின்போது 1068-69 ஆம் ஆண்டில் மீண்டும் ஸ்ரீவிசய பேரரசின் மீது சோழர்கள் படையெடுத்தார்கள் எனக் கூறுகின்றார். கடாரத்தை மன்னர் கைப்பற்றி பின்னர் அவருடைய கால்களில் விழுந்து வணங்கிய அந்நாட்டு அரசருக்கு மகிழ்ச்சியோடு அந்நாட்டை மன்னர் மீண்டும் கொடுத்தார் என வீரராசேந்திரனின் (1063-69) கல்வெட்டு ஒன்றில் கூறப்பட்டிருக்கிறது. கடாரத்தைப் பரந்த கடலில் அழித்த முதலாம் குலோத்துங்கன் எனக் கலிங்கத்துப்பரணியில் கூறப்பட்டிருக்கிறது. ஆனால், இவ்விளக்கத்தை கே.ஏ.நீலகண்டசாஸ்திரி ஏற்க மறுக்கின்றார். ஸ்ரீவிசய பேரரசின் மீது சோழர்கள் படையெடுத்துத் தாக்கினார்கள், ஆனால் அப்பகுதிகளைக் கைப்பற்றி ஆட்சி புரியவில்லை என்பதை மட்டும் நீலகண்ட சாஸ்திரி கூறுகின்றார்.

இராசேந்திரனின் கடாரப் படையெடுப்பிற்கு முன்பு இராசேந்திரனின் ஆட்சியின் தொடக்கத்தில் ஸ்ரீவிசய பேரரசின் பிரதிநிதி ஒருவர் 1014-15 இல் நாகப்பட்டினம் துறைமுகத்திலுள்ள இந்துக் கோவிலுக்கு நகைகளை அன்பளிப்பாக அளித்தார். பிராமணர்களுக்கு ஒரு குடியிருப்புப் பகுதியைக் கட்டியபோது இவ்விழா தொடர்பாக 1020-இல் கரந்தைச் செம்புப்பட்டயத்தை இராசேந்திரன் வெளியிட்டார். கம்போஜியாவின் அரசர் சோழர்களின் உதவியைப் பெற்றுத் தன்னுடைய அரசைப் பாதுகாப்பதற்காக ஒரு தேரைச் சோழ அரசருக்கு அனுப்பினார் என இப்பட்டயத்தின் தொடக்கத்தில் கூறப்பட்டிருக்கின்றது. சோழர் உதவியை நாடிய அரசர் கம்போடியா (கம்பூஜா)வின் அரசராதலால் இராசேந்திரனின் புகழ் தென்கிழக்காசியா முழுவதும் கடாரம் படையெடுப்பிற்கு முன்பே பரவியிருந்தது எனத் தெரிகின்றது.

பர்மா பேகன் அரசரான கியான்சித்தா (Kyanzittha-1077-1112) வெளியிட்ட கல்வெட்டில் பின்வரும் செய்தி கிடைக்கின்றது. புத்த சமயப் பரப்பாளர்கள் சோழ இளவரசைச் சந்தித்து உரையாடிய பிறகு சோழ அரசர் தவறான கோட்பாடுகளை விட்டு, புத்த சமயத்தைத் தழுவினார். இச்செய்தியிலிருந்து முதலாம் குலோத்துங்கன் பர்மிய புத்த சமயப் பரப்பாளர்களை அன்புடன் வரவழைத்து உபசரித்தான் எனத்தெரிகின்றது. இச்செயல் சோழர்களின் அரசியல் திறனை எடுத்துக்காட்டுகின்றது, அச்செயலை மதமாற்றமாகப் பர்மியர்கள் கற்பனை செய்து கொண்டு விட்டார்கள் எனக் கென்னத் ஹால் கூறுகின்றார்.

ஆகையால், சோழர்களின் புகழ் தென்கிழக்காசியா முழுவதும் பரவியிருந்தது. அப்புகழ் கடாரம் படையெடுப்பிற்கு முன்பே இருந்தது; மேலும், அப்படையெடுப்பிற்குப் பிறகும் தழைத்தோங்கியிருந்தது என ஊகிக்கலாம்.

பொதுவாக, தமிழர்கள் தங்களுடைய உயர்ந்த பண்புகளை அமைதிகாண் வழி மூலம்தான் பரப்பினர். சிலகால இலங்கை-தமிழ்நாடு வரலாறு இதற்கு ஓரளவு விதிவிலக்கு எனலாம். இராசராச சோழன் கி.பி. 1015 இல் ஒரு தூதுக்குழுவினைச் சீனாவுக்கு அனுப்பியதைச் சீன நூல் பெருமையோடு கூறியுள்ளது. மூன்று ஆண்டுகளுக்கு மேல் 1150 நாள்கள் பயணம் செய்தபிறகு இத்தூதுக்குழு சீனா சென்றடைந்தது. கி.பி. 1034-இல் இராசேந்திர மன்னனும், கி.பி. 1077-இல் குலோத்துங்கனும் சீனாவுக்குத் தூதுக்குழுக்களை அனுப்பி இருக்கிற குறிப்பினை உரோம்நாட்டு வரலாறு கூறுகிறது. இதேபோல் கி.பி. 1286-இல் பாண்டிய மன்னன் மங்கோலிய மன்னன் தூது அனுப்பியுள்ளான். ஆகையால் வாணிபம், அமைதி வழி மூலம் சமயப்பிரசாரம், அமைதி தூதுக்குழு போன்ற அஹிம்சா முறை மூலம் தமிழர்கள் அயல்நாடுகளில் தமிழ்ப் பண்பாட்டைப் பரப்பினார்கள் என்று கூறலாம்.

ஆனால், சிலகால இலங்கைத் தமிழ்நாடு வரலாறு, கடாரம் படையெடுப்புப்போல் இவ்வஹிம்சா முறைக்கு ஓரளவு விதிவிலக்கு எனக் கூறலாம். உதாரணமாக, திருமாவளவன் பன்னிரெண்டாயிரம் சிங்களரைச் சிறைப்பிடித்ததைப் பழங்கதை கூறுகிறது. இராசராச சோழன் அனுராதபுரத்தை அழித்துத் தமிழ்க்கொடியை நாட்டினான். சிவாலயம் கட்டினான் அது சிவ தேவாலயம் என்று இன்றும் வழங்குகிறது. பாராந்தக சோழன்

இலங்கையை வென்றான். சோழ மன்னர்கள் பல்வேறு நாடுகளுக்குச் சென்று வந்த வரலாற்றுச் சான்றாக இலங்கைத் தலைநகரில் அவர்கள் எழுப்பிய புலநருவா இன்றைக்கும் காணப்படுகிறது. தமிழ் மன்னர்கள் அயல்நாடுகளுக்கும் சென்று தமிழின் பெருமையும் வீரத்தையும், கலையையும் பரப்பி வந்த வரலாறு இன்றைய தமிழ்ச் சமுதாயத்திற்குப் பெருமையை அளிக்கிறது.

மறைத்திரு தனிநாயகம் அடிகளார் பின்வருமாறு கூறுகின்றார்:

"தமிழ் நாட்டிலும் ஈழத்திலும் இருந்த அரசுகள் வெவ்வேறு அரசுகளால் இயங்கித் தமக்குள் சில வேளைகளில் போரில் ஈடுபட்டிருந்த போதிலும் தாம் அனைவரும் ஓரினத்தைச் சார்ந்தவரென்றும் தங்களைத் தமிழ் மொழி இணைப்பதாகவும் கருதி வந்தனர்.

பெருநில மன்னரும் குறுநில மன்னரும் தம் எல்லைகட்குள் அரசு செலுத்தி வந்தாலும் தம்மனைவரின் நாட்டையும் தமிழகமென்றும், பொதுமை சுட்டிய மூவருலகமென்றும் அழைத்தனர். தமிழ் மொழியே அன்னாருடைய ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் வழி வகுத்தது. தமிழ் நாட்டின் எல்லைக் கப்பால் இருந்த நாடுகளை 'மொழி பெயர்தேயம்' என்று அழைத்தனர், புறநானூறும், சிலப்பதிகாரமும் இவ்வாற்றலைப் புலப்படுத்தும் இடங்கள் பல. கனகவிசயர் தமிழர் வீரத்தை ஏளனம் செய்த காலை "தென் தமிழாற்றல் அறிந்திலராங்கு என்று கூறிச் சேரர் வடநாட்டின் மீது படையெடுத்தனர். தமிழ் மக்களுக்குத் தம் சொந்த அரசின் பற்றோடு தமிழ் நாடு பற்று என்னும் எல்லாத் தமிழ் அரசுகளையும் அடங்கிய பற்று இயல்பாக அமைந்திருந்தது."

ஆகையால், தமிழ் நாட்டின் தமிழ்ப் பண்பாட்டின் சிறப்பு அணிகலனாக இருப்பது குறிப்பாக அயல்நாடுகளில் அமைதி முறையில் பரவி நிலைத்து நிற்கும் தமிழ்க் கலாச்சாரம் ஆகும் என்று கூறலாம். அதேபோல் கடல்கடந்து சென்று தமிழ் நாட்டின் செல்வாக்கை, மரபினை ஓங்கச் செய்பவர்கள் அயல்நாட்டுத் தமிழர்கள் என்று கூறலாம். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற சங்கப்புலவரின் கருத்துகளுக்கு ஏற்பவும், யாதானும் நாடாமால் ஊராமால் என்ற வள்ளுவரின் கல்வி பற்றிக்கூறும் பொது நோக்கிற்காகவும், தமிழ் மக்கள் உலக நாடுகளில் எங்கிலும் உலாவி வருகின்றனர். முதலாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டைத் தொடங்கிவைத்தபோது மலேசியாவின் முதலாவது பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் அந்த மாநாட்டின் கருப்பொருளை, 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற வாக்கியத்தை, அவர் தமிழிலே கூறினார்.

இலங்கை (ஸ்ரீலங்கா)

பண்டைக்காலம் முதல் தமிழர்களால் ஈழம் என்னும் பெயரில் வழங்கப்படும் நாடே இலங்கையாகும். இன்று இலங்கையை ஸ்ரீலங்கா என அழைக்கின்றார்கள். தமிழகத்தின் தென்கிழக்கே கோடிக்கரையிலிருந்து 22 கல் தொலைவிலுள்ள நாடு ஸ்ரீலங்காவாகும். மொத்தம் 25,332 சதுரமைல் பரப்போடு உள்ள ஸ்ரீலங்கா தமிழகத்தின் பரப்பளவில் பாதியளவே இருக்கின்றது. ஸ்ரீலங்காவின் தலைநகரம் கொழும்பு ஆகும். தமிழகத்தில் நடைபெறும் திரைப்படத்தைப் பார்ப்பதற்காக ஸ்ரீலங்காவிலிருந்து கள்ளத்தோணியில் இரண்டுமணி நேரத்தில் வந்துவிட்டு திரும்பவிடுகின்ற வழக்கம் கூட இருக்கிறது எனக்கொழும்பில் வெளிவரும் தமிழ் நாளேடான தினகரனின் ஆசிரியர் திரு. சிவகுருநாதன் கூறுகின்றார்.

ஸ்ரீலங்கா-தமிழ்நாடு உறவு:

பண்டைக்கால வரலாறு:- இலங்கைக்கும் தமிழ் நாட்டிற்கும் பண்டைக் காலத்திலிருந்தே நெருங்கிய தொடர்பு இருந்தது. தமிழர்களே இலங்கையின் ஆதிக் குடிகளாயிருந்தனர் என்பதை இலக்கிய பூமி என்னும் நூலில் ஜே.டி.சேவியர் நிறுவியுள்ளார். சிந்து வெளியிலிருந்து இத்தமிழர்கள் புறப்பட்டு இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் இலங்கையிலும் பரவியிருந்தனர் என்றும், இந்தோ ஐரோப்பிய மொழியினர் இவர்கட்குப் பின்னரே போந்தனர் என்றும் கூறியுள்ளார். தென் இந்தியாவிற்கும் வட இலங்கைக்கும் உள்ள தொடர்பு கி.மு. மூன்றாம் நூற்றாண்டிற்கு முந்தியது எனக் க.நவரத்தினம் 'இலங்கையின் கலை வளர்ச்சி' எனும் நூலில் குறிப்பிடுகின்றார். ஆனால், இதைவிட முக்கியத் தொன்மைத் தொடர்புச் சான்று ஹீராசு (Father Heras) இராசநாயகம், உருசிய வரலாற்று ஆசிரியர்கள், கிரேக்க வரலாற்று ஆசிரியர்கள் தொல் பழங்காலத்தில் தமிழரின் தாயகமாக விளங்கிய நிலப்பரப்பின் ஒரு பகுதியே இலங்கை என முடிவுக்கு வருகின்றனர். இராமநாதபுரம் மாவட்டங்களின் தொடர்ச்சியாக இலங்கை விளங்கியது. மறைந்துபோன குமரிக்கண்டத்தின் ஒரு பகுதியாக 'ஏழ்பனைநாடு' இருந்தது. இந்த ஏழ்பனைநாடு ஒரு தீவாக மாறியது. இத் தீவையே 'ஈழம்' என அழைத்தார்கள் என இவ்வாசிரியர்கள் கூறுகின்றனர். அதாவது 'ஏழ்பனைநாடு' என்னும் பெயர் 'ஈழம்' எனத் திரிந்தது. அதன் வட பகுதியில் யாழிசையில் வல்ல பாணர்கள் வாழ்ந்து வந்தமையால் அப்பகுதி 'யாழ்ப்பாணம்' என்று பெயர் பெற்றதாகவும் கூறுவர். சில கிரேக்க, ரோம வரலாற்று ஆசிரியர்கள் இலங்கையைத் 'தாமிரபரணி நாடு' என்று அழைத்தார்கள். இன்று

தமிழ்நாட்டில் உள்ள திருநெல்வேலியில் ஓடும் தாமிரபரணி ஆறு ஒரு காலத்தில் (கடல் பொங்குவதற்கு முன்பு) இலங்கை வழியாக ஓடிக் கடலில் கலந்தது. எனவே தான் இலங்கைக்குத் தாமிரபரணி நாடு என்ற பெயரும் உண்டு.

கடல் கொள்ளப்பட்ட தென்னாட்டைப் பற்றிய குறிப்புகள் இலங்கைச் செய்திக் கோவையான மகாவமிசத்திலும் காணப்படுகின்றன. உதாரணமாக மகாவமிசத்தில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது "இலங்கையில் தோன்றிய மூன்று கடல்கோள்களுள் முதற் கடல்கோள் கி.மு. 2387இல் இலங்கையை இந்தியாவினின்றும் பிரித்தது; இரண்டாம் கடல்கோள் கி.மு.504 இல் நிகழ்ந்தது. ஆயினும் குறிப்பிடத்தக்க பேரிழப்பு இல்லை. மூன்றாம் கடல்கோள் அசோகன் வாழ்ந்த தேவனாம்பிரிய திசன் காலத்தில் கி.மு.306இல் உண்டானது. அதனால் இலட்சம் ஊர்களும், மீன் பிடிப்பவர் வாழ்ந்த 910 சிற்றூர்களும், முத்தெடுப்பவர் வாழ்ந்த 400 சிற்றூர்களும் அழிந்தன."

மகாவமிசத்தில் கூறியிருப்பதைப் பற்றி க.த.திருநாவுக்கரசு பின்வரும் முடிவுக்கு வருகின்றார். "இங்குக் குறிப்பிடப்படும் முதற் கடல்கோள் குமரிக் கண்டத்தின் கடைசிக்காலக் கட்டத்தில் உண்டானதாகலாம். இரண்டாம் கடல்கோள் தலைச் சங்கம் இருந்த தென் மதுரை அழிவதற்குக் காரணமானதாக இருந்திருக்கலாம். இக் கடல்கோள் கி.மு.504இல் நிகழ்ந்தது என்பதனால் விசயன் இலங்கையில் குடியேறிய பிறகு இப்பேரழிவு தமிழகத்திற்கு உண்டாகியிருக்க வேண்டும். இதற்குப் பின்னர் பாண்டிய மன்னர் கபாடபுரத்தைத் தலைநகராக்கிக் கொண்டு ஆட்சி செய்தனர். இக்கபாடபுரத்தை வான்மீகி இராமயணமும் அர்த்தசாஸ்திரமும் சுட்டுகின்றன. இங்குதான் இடைச்சங்கம் நிலவியதாக தெரிகிறது. இப்பெரும் நிலப்பரப்பும் கி.மு.306இல் உண்டான மற்றொரு கடல் கொந்தளிப்பினால் நீரில் மூழ்கியது என்பதை அறிகிறோம். இதன் பின்னரே இன்றைய மதுரையைத் தலைநகரமாகக் கொண்டு பாண்டியர் ஆட்சி புரியலாயினர் என்பதும் புலனாகிறது."

பரணவிதானா (Paranavitana) எனும் சிங்கள வரலாற்று அறிஞர் 'கடல்கொள்ளப்பட்ட முதற்சங்கம் இருந்த தென் மதுரையில் இருந்தே விசயனும் அவனுடைய தோழர்களும் தங்களுடைய மனைவியாரைப் பெற்றதாக மகாவமிசத்தின்மூலம் அறியப்படுகிறது.' என மொழிந்துள்ளார். யார் இந்த விசயன்? விசயன் என்பவன் வடஇந்திய ஆரியன். இவனே முதன்முதலாக இலங்கைக்கு வந்து குடியேறிய முதல் சிங்களவன், இலங்கையை ஆண்ட முதல் சிங்கள அரசனாவான். விசயன் கூட்டத்தார்கள் கி.மு.ஐந்தாம் அல்லது ஆறாவது நூற்றாண்டில் வட இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்து குடியேறினார்கள். பாண்டியர்கள் உதவியுடன் இவர்கள் இலங்கையில் ஒரு தனி அரசை நிறுவினார்கள். சிம்மவாகு வம்சத்தைச் சேர்ந்த விசயன் அந்த அரசுக்கு "சிம்மநாடு" என்று பெயரிட்டான். அது 'சிம்மளம்' என்று வடமொழியில் சொல்லப்பட்டது. அதுவே சிங்களநாடு ஆயிற்று. அதன் வமிசத்தார் சிங்களர் என்று அழைக்கப்பட்டனர்.

எம்.ஏ.நுஃமான் கூறுகின்றார்: "திராவிடருக்குரிய சங்ககாலப் பெருங்கல் பண்பாட்டுச் (Megalithic Culture) சின்னங்கள் பல இலங்கையில் பரவலாகவும் குறிப்பாக இன்று இலங்கையில் தமிழர்கள் செறிந்து வாழும் வடகிழக்குப் பகுதிகளிலும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணக் குடா நாட்டில் மட்டும் இதுவரை கந்தரோடை,

காரை நகர், ஆனைக்கோட்டை ஆகிய இடங்களில் இப்பண்பாடு நிலவியமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கிழக்கு மாகாணத்தில் கதிரைவெளி, உகந்தை ஆகிய இடங்களிலும் இப்பண்பாடு காணப்பட்டுள்ளது. புத்தளம் மாவட்டத்திலுள்ள பொன்பரிப்பிலும் வட மத்திய மாகாணத்தில் அனுராதபுரம் உட்பட வேறுசில இடங்களிலும் இப்பண்பாடு காணப்பட்டுள்ளது. தமிழகத்தில் சங்ககாலப் பண்பாடு நிலவிய அதே காலப் பகுதியில் அப்பண்பாட்டுக்குரிய மக்கள் தொகுதியினர் இலங்கையிலும் பரவலாக வாழ்ந்தமையை இவை காட்டுகின்றன. இவர்கள் வரலாற்றுத் தொடக்கத்திலேயே தென் இந்தியாவில் இருந்து வந்து குடியேறியவர்களாக அல்லது தென் இந்தியப் பண்பாட்டைத் தழுவிக்கொண்ட சுதேச பழங்குடியினராகக் கருதப்படலாம்." பெருங்கல புதைவுக் காலத் தடயங்கள் புத்தளம், மாதோட்டம் ஆகிய பகுதிகளிலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

ஆகையால், தமிழகத்தில் மன்னர் ஆட்சி நடந்த காலத்துக்கும் முன்பே இலங்கைத் தீவின் பூர்வீகக் குடிமக்களாகத் தமிழர்கள் அங்கு வசித்து வருகிறார்கள். இலங்கையில் புத்தளம் எனும் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட முதுமக்கள் தாழி தமிழ் நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஆதிச்ச நல்லூரில் உள்ள முதுமக்கள் தாழி போல் இருப்பதால் விசயன் இலங்கைக்கு வருவதற்கு முன்பே தமிழர்கள் இலங்கையில் வாழ்ந்தார்கள் எனக் கூறலாம். மேலும், இலங்கையில் இருக்கும் பிரம்மி கல்வெட்டுகள் சில தென்னிந்திய பிரம்மி எழுத்து வடிவம், குறிப்பாகக் கி.மு.மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த எழுத்து வடிவம்போல் இருக்கின்றன. (ஞானசூர்யன், சேகை பண்டார நாயக்கா-1985.) ஆகையால், இலங்கையில் வட இந்தியச் சிங்களவர்கள் நுழைந்து குடியேறுவதற்கு முன்பே தமிழர்கள் இலங்கையில் குறிப்பாக மட்டக்களப்பு, அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் வாழ்ந்து வந்தார்கள். மேலும், இலங்கையும் குமரிக்கண்டத்தின் தமிழ்ப் பகுதியாகத் தொன்று தொட்டு இருந்தது என்பதையும் கண்டோம்.

முதற் சங்க காலம் கி.மு.4 ஆம் நூற்றாண்டு முதல் 2 ஆம் நூற்றாண்டு வரை நிலவியதென்றும், அக்காலத்தில் குமரிமுனைக்குத் தெற்கில் நெடுந்தொலைவு வரை தமிழக எல்லை பரந்திருந்ததென்றும், அப்படிப் பரந்திருந்த நிலப்பகுதி நாற்பத்தொன்பது நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்த தென்றும் கூறப்படுகின்றது. குறும்பநாடு என வழங்கிய இத்தென்னிலப் பரப்பிற் பெரும்பாகம் கடல் கோள்களினால் அழிவுற்றதெனச் சங்க இலக்கியங்கள் வாயிலாக அறிகின்றோம். இவ்விவரங்களைக் கருத்திற் கொள்ளும்போது, முற்காலத்தில், தமிழகத்தின் ஒரு பகுதியாக இலங்கை விளங்கியிருக்கக்கூடும் எனக் கருதலாம்.

புவியியற் சார்பில் நோக்குமிடத்து, தென்னிந்தியாவிலிருந்து குடிப்பெயர்வு நிகழ்வதற்குச் சாதகமான பௌதிக அமைப்புகள் இலங்கையின் வட பாகத்தில் அமைந்துள்ளமை புலனாகின்றது. இலங்கையின் வடமேற்குப் பகுதியும் குடாநாடும் தென்னிந்தியாவுக்கு மிக அண்மையில் இருப்பதோடு, பிரிக்கும் கடலும் ஆழங்குறைந்ததாயும் ஆங்காங்கே தீவுத் தொடர்களைக் கொண்டதாகவும் விளங்குகின்றது. தென் மேற்குப் பருவக்காற்று, வடகிழக்குப் பருவக் காற்று ஆகியன வீசும் திசையின் வாய்ப்புக் காரணமாக, இரு நாடுகளுக்குமிடையே கடற் பயணஞ் செய்வது எளிதாகவும், அத்துடன், வடபகுதியில் குடாக்கள் நிறைந்த பரவைக்கடல் காணப்படுவதும்,

வடமேற்குப் பகுதியில் - குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டுப் பகுதியில் - காணப்படும் தரைக்கீழ் நீர் வளமும், மீன்பிடி , விவசாயக் குடியிருப்புகள் அங்கு ஏற்படுவதற்குச் சாதகமான பௌதிகக் காரணிகளாக விளங்குகின்றன. இச் சாதகமான அம்சங்கள், மிகப்பழைய காலத்திலிருந்தே தென்னிந்தியத் தமிழ் மக்கள் இங்கு வந்து குடியேறுவதற்கு வழியமைத்திருக்கு மென்பதில் ஐயமில்லை.

முதல் சிங்களன் விசயன் வருவதற்கு முன்பே அங்கு ஏற்கனவே நாகர், இயக்கர் என்ற வகுப்பினர் வாழ்ந்ததாக சிங்களர்களின் கர்ணபரம்பரைக் கதையான 'மகாவம்சம்' கூறுகிறது. நாகம் தொடர்பான இடப்பெயர்கள். மக்கட்பெயர்கள்தென்இந்தியாவிலும் இலங்கையிலும் காணப்படுகின்றன. யாழ்ப்பாணம் நாகதீவு என்றும் முன்பு வழங்கிற்று. பிற்காலத்திலும்கூட பூர்வகுடிகளான தமிழர்களும், குடியேறிகளான சிங்களர்களும் தனித்தனி அரசுகளுடன் வரையறுக்கப்பட்ட எல்லைகளுக்குட்பட்ட நிலப்பரப்புகளில் வாழ்ந்து வந்தனர் என்பதைச் சிங்களர்களின் புனித நூல்களான 'மகாவம்சம்', 'சூலவம்சம்' போன்றவை கூறுகின்றன. கிறித்துவுக்கு முந்திய முதல் நூற்றாண்டுகளில் இலங்கையில் மூன்று முறை சுமார் எண்பது ஆண்டுகள் தமிழராட்சி நிலவியதாக மகாவம்சம் கூறுகின்றது.

கிறித்துவ நூற்றாண்டின் தொடக்கத்திற்கு முன்பே தமிழகத் தலைவர்கள் பலமுறை இலங்கையைக் கைப்பற்றி ஆண்டார்கள். உதாரணமாக, கி.மு. 206இல் சேனன், குத்தகன் எனும் இரு தமிழ்நாட்டு வீரர்கள் இலங்கையின் மீது படையெடுத்துப் பல ஆண்டுகள் கூட்டாட்சி நடத்தினர். இவர்களுக்குச் சில ஆண்டுகளுக்குப்பின் சோழ அரசனின் படைத்தலைவனான ஏலேல சிங்கன் (எல்லாளன்) இலங்கை சிங்கள அரசனைத் தோற்கடித்துவிட்டு நாற்பத்து நான்கு ஆண்டுகள் சிறப்புடன் ஆட்சிபுரிந்தான். கி.மு.89-87இல் ஏழுதமிழ்த் தலைவர்கள் இலங்கையின் மீது படையெடுத்துப் பதினான்கு ஆண்டுகள் ஆட்சிபுரிந்தனர்.

கி.பி.இரண்டாம் நூற்றாண்டில் சோழப் பேரரசன் கரிகாலன் இலங்கையின் மீது படையெடுத்துப் பெருவெற்றி பெற்றான். அவன் அடைந்த வெற்றியின் அடையாளமாக இலங்கையிலிருந்து ஏறக்குறைய 12,000 கைதிகளைத் தமிழகம் கொண்டுவந்ததாக இலங்கை நூலாகிய 'இராஜாவளி' கூறுகின்றது. கரிகாலன் அவர்களைப் பணித்தே காவிரிக்குக்கரை எடுத்தான். கரிகாலன் காலத்தில் இலங்கையிலிருந்து உணவுப் பொருட்கள் காவிரிப் பூம்பட்டினத்திற்கு வந்து குவிந்ததை,

"கங்கை வாரியும் காவிரிப்பயனும்
ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்"

(பட்டினப்பாலை-190-191) எனப் பழந்தமிழ் இலக்கியம் குறிப்பிடுகிறது.

தன் வடநாட்டுப் படையெடுப்பில் வெற்றிவாகை சூடி, தன் நாடு திரும்பிய சேரன் செங்குட்டுவன், தான் அடைந்த வெற்றியைக் கொண்டாட பத்தினித் தேவிக்கு விழா எடுத்தான். கொடுங்கோளூரில் எடுக்கப்பட்ட இவ்விழாவில் இலங்கை மன்னன் முதலாம்

கயவாகு (Kayavachu I) சேர மன்னனுடமர்ந்து இவ்விழாவைச் சிறப்பித்தான் என்று தமிழரின் முதுநூலாகிய சிலப்பதிகாரம் கூறுகிறது.

பல்லவ-சோழர் படையெடுப்புகள்:

கி.பிஆறாம் நூற்றாண்டு முதல் பதினோரம் நூற்றாண்டுவரை இலங்கையின் வரலாறு தென்னிந்திய அரசுகளோடு போரிட்டுக் குருதியைக் கொட்டிய தொடர்கதையாகவே காணப்படுகிறது. இப்போராட்டங்களில் பெரும்பாலும் சிங்களவர்கள் தோல்வியுற்றனர். பல்லவ நரசிம்மவர்மன் (கி.பி.630-660) இலங்கையில் பெற்ற வெற்றி 'இராமன் இலங்கையில் பெற்ற வெற்றியைப் போன்றது' என்று பல்லவர் வழங்கிய காசாக்குடி செப்பேடு செப்புகிறது. சிங்கள மானவர்மன் பல்லவர் உதவியை நாடியபோது இரண்டாவது நரசிம்மப் பல்லவன் ஒரு பெரும் படையைத் துணையாக அனுப்பி, சிங்கள மானவரமனது ஆட்சியை இலங்கையில் மீண்டும் நிலை நாட்டுமாறு செய்தான்.

கி.பி. எட்டாம் நூற்றாண்டில் கலிங்க நாட்டைச் சேர்ந்த யாழ்ப்பாண அரசன் உக்கிரசிங்கன் மாருதப் புரவீகவல்லி என்னும் சோழ இளவரசியை மணந்தான். கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டில் பாண்டிய அரசன் சீமாறன் சிவல்லவனின் இலங்கை வெற்றிகளைப் பற்றி மகாவம்சம் கூறுகிறது. இலங்கையில் சுமார் 1500 ஆண்டுகளுக்கு முன் வெளியிடப்பட்டுள்ள பழம் பாண்டியர்களின் நீண்ட சதுரக்காசுகள் ஏராளமாகக்கிடைத்துள்ளன.

சோழ அரசன் பராந்தகன் கி.பி. 915இல் இலங்கையில் வெள்ளூரில் பெற்ற வெற்றியின் விளைவாக, சோழர் ஆதிக்கம் இலங்கையில் மீண்டும் தொடங்கியது. இப்பராந்தகனே "மதுரையும் ஈழமும் கொண்ட கோப்பரகேசரி" என்று கல்வெட்டுகளில் சிறப்பிக்கப்படுகிறான்.

பிற்காலச் சோழப் பேரரசர்களுள் தன்னிகரற்று விளங்கிய இராசராசனும், அவன் மகன் இராசேந்திரனும் இலங்கையின் பெரும்பகுதியினைக் கைப்பற்றி, தங்கள் ஆட்சியின் கீழ்க் கொண்டுவந்தனர். கி.பி.993இல் வடபகுதியை இராசராசனும், கி.பி.1017இல் தென்பகுதியை இராசேந்திரனும் கைப்பற்றினார்கள். இராசராசனின் இலங்கைப் படையெடுப்பைப் பற்றி சிறப்பாகச் செப்புகின்றது. திருவாலங் காட்டுச் செப்பேடு "வானரப் படையின் உதவியைக் கொண்டு அயோத்தி அரசன் இராமன் கடலில் பாலம் அமைத்தான். பிறகு அரும்பாடுபட்டு இலங்கை வேந்தனை தன் கூரிய அம்பினால் கொன்றான். அந்த இராமனைவிட இராசராசன் பேராற்றலும் பெருந்திறனும் உடையவன். அவனுடைய ஆற்றல்மிகு படை அலை கடலை மரக்கலங்களைக் கொண்டு கடந்தது; இலங்கை மண்ணைத் தீயிட்டுக் கொளுத்தியது." (செ.80) பொலனறுவா என்ற நகரம், சனநாத மங்கலம், எனப் பெயரிடப்பட்டுச் சோழர்க்குரிய இலங்கைத் தலைநகரமாகச் சிறப்புற்றது.

சிங்கள மன்னன் ஐந்தாம் மகிந்தன் சோழரின் மேலாட்சியை எதிர்த்தான். அதனால் முதலாம் இராசேந்திரன் மீண்டும் இலங்கையின் மீது படையெடுத்தான். இப்படையெடுப்பின் பயனாக இலங்கை முழுவதும் சோழரின் ஆதிக்கத்தின் கீழ்வந்தது.

சற்றேறக்குறைய பத்து ஆண்டுகள் இராசேந்திரனின் மேலாட்சியின் கீழ் இலங்கை இருந்தது. மீண்டும் இரண்டாம் இராசேந்திரனின் (கி.பி.1051-1061) காலத்தில் இலங்கை மன்னனை அடக்குவதற்காகச் சோழர்கள் படையெடுத்து வெற்றி பெற்றனர். ஆனால் முதலாம் குலோத்துங்கச் சோழன் ஆட்சியில் ஈழ மண்டலத்தைச் (இலங்கையை) சோழர்கள் இழந்தார்கள். குறிப்பாக கி.பி.1070-இல் சோழர் மேலாட்சி இலங்கையில் மறைந்தது.

வட இலங்கையும் தென் பகுதியும் சோழப் பேரரசின் நேரடி ஆட்சியின் கீழ் 80 ஆண்டுகள் இருந்தன எனச் சிங்கள மொழி நூல்கள் கூறுகின்றன. சோழர்கள் இலங்கைத் தீவைத் தமது ஆட்சிக்குடபடுத்தியபோது சிலாபம் முதல் பூநகரி வரையில் மேற்குக் கரையோரப்பகுதியில் தமிழர்களின் முன்னோர்கள் நெருங்கி வாழ்ந்தனர். யாழ்ப்பாணம் தொடக்கம் பாணமை வரையுள்ள கிழக்குக் கரையோரப் பகுதிகளிலும் பொலனறுவைக்கு வடக்கேயுள்ள நிலப் பகுதிகளிலும் வாழ்ந்தனர். சோழப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னரும் ஈழத்தில் தமிழரின் வாழ்விடங்களில் மாற்றம் இருக்கவில்லை.

சோழ மன்னன் இரண்டாம் இராசராசன் காலத்தில் 'சோழ-பாண்டிய மண்டலத்தில்' அரசியல் குழப்பம் ஏற்பட்டது. இதில் சோழ மன்னர் சிலர் பாண்டியர் பதவிக்கு வருவதற்கு உதவினர். அதுபோல் இலங்கை உதவியுடனும் சில பாண்டியர் பதவி உயர்வு பெற்றனர். இந்த இருளடைந்த சோழ-பாண்டியராட்சியின் போது இலங்காபுரித் தண்டநாயகனின் செல்வாக்குத் தமிழகத்தில் தழைத்தோங்கிற்று. ஆனால், இறுதியில் தண்டநாயகனின் படை தமிழகத்திலிருந்து விரட்டியடிக்கப்பட்டது; தண்டநாயகனின் தலை துண்டிக்கப்பட்டது. இரண்டாம் பாண்டியப் பேரரசை நிறுவிய முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் கலிங்கத்துடன் இலங்கையையும் கைப்பற்றியதாக இராமநாதபுரம், திருநெல்வேலிப் பகுதிகளில் கிடைத்த கல்வெட்டுகள் கூறுகின்றன. மேலும் சடையவர்ம சுந்தர பாண்டியனும், மாறவர்ம குலசேகர பாண்டியனும் இலங்கையின் மீது படையெடுத்து வெற்றிவாகை சூடினர். (இர.ந.வீரப்பன் பின்வருமாறு கூறுகின்றார்: இலங்கையின் பெரும் பகுதியில் விசயப் பேரரசின் கலிங்க மன்னன் ஆட்சி இருந்தது. கி.பி.1215-1255 காலக்கட்டத்தில் இவ்வாட்சி மாறி சாவகமன்னர் சந்திரபானு என்பவர் ஆட்சிக்கு 1255-இல் வந்துவிட்டது. இவன் 7 ஆண்டுகள் ஆண்டான். சாவக மன்னனுடனும், பிறகு தனித்தும் மதுரை ஆண்ட சடையவர்மனும் (சுந்தரபாண்டியன்) இவனுக்குப் பிறகு இவன் மகன் வீரபாண்டியனும் இலங்கை நாட்டைப் பிடித்துக் கொண்டு (பெரும்பாலும் வடபகுதி) கி.பி. 1281 வரை ஆண்டார்கள்.)

யாழ்பாணத் தமிழரசு, கண்டியரசு

சோழரின் மேலாதிக்கம் இலங்கையில் முறியடிக்கப்பட்ட பிறகு இலங்கையின் வடபகுதியில் தனியரசு ஒன்று தோன்றியது. அதனை 'யாழ்ப்பாணத்தின் தமிழரசு' (Kingdom of Jaffna) எனச் சுட்டுவது மரபு. இவ்வரசின் தோற்றம் பற்றிய செய்திகள் இருள் சூழ்ந்தவையாகவே உள்ளன. இவ்வரசு கி.பி.1250 அளவில் தோன்றியிருக்கலாம் என நம்பப்படுகிறது. இது பன்னிரெண்டாம் நூற்றாண்டு இடைப்பகுதியில் தனியரசாக விளங்கிற்று. கி.பி. 1618 ஆம் ஆண்டில் போர்ச்சுகீசியர்கள் இவ்வரசை அழித்தகாலம் வரை இவ்வரசு தனி சுதந்திர அரசாகச் செயல்பட்டு வந்தது.

இரா. சிவசந்திரன் பின்வருமாறு கூறுகிறார்: ஈழ வரலாற்றில் குறிப்பிடத்தக்கதொரு மாற்றம் கி.பி.13ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஏற்பட்டது. கலிங்க மன்னனின் படையெடுப்பின் விளைவாக (கி.பி. 1215-1236) பொலனறுவையைத் தலைநகராக்கிக் கொண்டு ஈழமனைத்தையும் உள்ளடக்கியிருந்த அரசு அழிவுற்றது. இக்குழப்ப நிலையின் பின்னர் வடக்கே யாழ்ப்பாண அரசும், தெற்கே தம்பதெனிய அரசும், ஏனைய வறண்ட காடடர்ந்த பகுதிகளில் வன்னிக் குறுநில அரசுகளும் தோன்றி நிலைபெற்றன. வடஇலங்கையில் யாழ்ப்பாணத்தைத் தலைநகராக் கொண்டு தோற்றம் பெற்ற தமிழ் அரசானது சபுமல் குமாரன் எனும் கேரள இளவரசனின் இடையீடு ஏற்பட்ட பதினேழு ஆண்டுகளைத் தவிர (கி.பி.1450-1467). போர்த்துக்கேயர் கி.பி.1618 இல் யாழ்ப்பாண அரசின் கடைசி மன்னனான சங்கிலியனிடமிருந்து அரசைக் கைப்பற்றும் வரை நிலைத்திருந்து. யாழ்ப்பாணப் பட்டினமென வழங்கிய தமிழரசிலே யாழ்ப்பாணக் குடாநாட்டுப் பகுதி மட்டுமன்றி, பிரதான நிலப்பகுதியின் வடக்கு, வடகிழக்கு, வடமேற்குப் பகுதிகளும் அடங்கியிருந்தன. காடடர்ந்து காணப்பட்ட இவ் வறண்ட பகுதிகள் 'வன்னி' என அழைக்கப்பட்டன. தமிழிலக்கியங்கள் 'வன்ய' என்ற வடமொழிப் பதத்தைக் காடடர்ந்த நிலங்களில் வாழ்ந்த முல்லை நிலத்து மக்களைக் குறிக்கப் பயன்படுத்தியுள்ளன. தெற்கே சிங்கள அரசிலும் வன்னி எனப்பட்ட குறுநிலவரசுகள் ஆங்காங்குக் காணப்பட்டனவெனினும், இலங்கையில் தமிழர் வாழ்ந்த வடக்கு, கிழக்குப் பகுதிகளிலேயே இவை சாலவும் பரந்திருந்தன. இவை யாழ்ப்பாண வன்னிமை, மட்டக்களப்பு வன்னிமை, புத்தள வன்னிமை, திருக்கோணமலை வன்னிமை என வழங்கப்பட்டன. வன்னிப் பகுதி காடடர்ந்ததாக இருந்தமை ஆட்சிக்கு அரணாக அமைந்தது . இதனால் வன்னிக் குறுநில அரசர்கள் பொதுவாகத் திறை செலுத்திய ஆட்சித் தலைவர்களாக விளங்கிய போதிலும், சில சமயங்களில் சுதந்திரமான அரசையும் நிலைநாட்ட முடிந்தது.

யாழ்ப்பாண அரசு தமிழகத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது. இவ்வரசு குடும்பத்தினர் தமிழகத்துப் பாண்டிய, சோழ அரசக் குடிகளின் பெண்களை மணந்து முழுத்தமிழர்களாக மாறினர். இவர்கள் பரராசசேகரன், செகராச சேகரன் எனும் பட்டங்களை அடுத்தடுத்து சூட்டிக்கொண்டனர். தமிழ்நாட்டு அரசர்களுக்கும் இவர்களுக்கும் நட்புறவு நிலவியது. அதாவது பண்பாட்டுக் கலாசாரத்திருமண உறவுகள் உட்பட இருந்தன என பால்போரிஸ் எனும் வரலாற்று ஆசிரியர் குறிப்பிடுகின்றார். நல்லூரைத் தலைநகராகக் கொண்ட இவர்கள் ஆட்சியில் சிலாபம் தொட்டு பாண்மை வரையில் உள்ள வட மேற்குக் கிழக்கு கரையோரப்பகுதிகள் தமிழரின் வாழ்விடங்களாக இருந்தன.

பொதுவாக, பாண்டிய அரசு, விசய நகர பேரரசு, தஞ்சாவூர், மதுரை, மைசூர் நாயக்க மன்னர்கள், கள்ளிக்கோட்டை (Calicut) ஜாமரின் முதலியவர்களுடன் யாழ்ப்பாண அரசுக்கு நெருங்கிய உறவு இருந்தது எனக் கூறலாம். சில காலங்களில், இவ்வரசர்கள் ஏதாவது உதவி செய்த காரணத்தினால் அவர்களுக்குக் கப்பமும் கட்டினார்கள். 1689-இல் நாயக்க அரச குடும்பப் பெண்கள் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டு மணம் முடிக்கப்பட்டனர். தவிர யாழ்ப்பாண அரசு தெற்கு இலங்கையில் இருந்த அரசுகளான கோட்டே (Kotte) கம்போலா (Gompola) கண்டி (Kandy) முதலிய அரசுகளுடனும் தொடர்புவைத்துக் கொண்டிருந்தது. பல சமயங்களில், தெற்குப் பகுதிகளின் மேல் படையெடுத்துச் சென்று சிங்களப் பகுதிகளை யாழ்ப்பாண அரசு கைப்பற்றிய செய்திகளும்

உண்டு. சில சமயங்களில் தெற்குப் பகுதி அரசுகள் குறிப்பாகக் கோட்டே வடக்கு இலங்கையின் மீது படையெடுத்த கதையும் உண்டு. குறிப்பாக ஆறாம் பராக்கிரம பாஹு (Parakrama Bahu VI) சிறப்பாக வெற்றியடைந்தான். ஆனால், அவன் இறந்த பிறகு யாழ்ப்பாண அரசு மீண்டும் சுதந்திரம் அடைந்தது. கி.பி.1540- இன் போர்த்துக்கீசியப் பதிவேடுகளில் இலங்கைக் கோட்டையரசர் அனுப்பிய கடிதங்களில் "தமிழில் இந்தக் கட்டு நான் எழுதுவித்து . . . . என உண்மையாகக் கூறுகிறேன்" என்பது போன்ற எழுத்துக்கள் காணப்படுகின்றன.

இலங்கையின் உட்பகுதியில் கண்டி அரசு தொடர்ந்து நீடித்தது. கோட்டே அரசு, யாழ்ப்பாண அரசு அழிந்து பிறகும் இவ்வரசு சுதந்திரமாகச் செயல்பட்டு வந்தது. போர்ச்சுகீசியர்களும், டச்சுக்காரர்களும் கரையோரப் பகுதிகளைக் கைப்பற்றிய பிறகு இலங்கையில் சுதந்திரமாக ஆட்சி செய்துவந்த ஒரே அரசு கண்டி அரசாகும். ஆகையால் கொழும்பு, காலி (Galle) போன்ற பகுதிகள் கூடத் தங்கள் மேலாண்மையின் கீழ் இருப்பதாக இவ்வரசு பறைசாற்றியிருக்கின்றது. ஆனால் உண்மையில் கொழும்பு, காலி ஐரோப்பியர்களின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தன. இது பற்றி இர.ந.வீரப்பன் பின்வருமாறு கூறுகின்றார். "18 ஆம் நூற்றாண்டு முதல் 18.02.1833 வரையிலும் கண்டிப் பகுதி, வவுனியா மற்றும் கிழக்குப் பகுதிகளிலும் பல சிற்றரசர்களான தமிழர்களும், சிங்களவர்களும் ஆண்டு வந்தனர். வன்னிப் பகுதியான வவுனியாவை 1803 வரை பண்டார வன்னியன் ஆண்டதாக முகுந்தன் கூறுகிறார்."

யாழ்ப்பாண அரசு போர்ச்சுகீசியர் வசம் வந்தது. அவர்களுக்குப் பிறகு டச்சுக்காரர்கள் ஆட்சியும், பிறகு ஆங்கிலேயர் ஆட்சியும் இப்பகுதியில் அமைக்கப்பட்டன. இது பற்றி விடுதலைப் புலி முகுந்தன் பின்வருமாறு கூறுகிறார்: "இலங்கையின் பழங்குடிகள் அநேகமாகத் தமிழர்களே. இராமநாதபுரம், இராமேசுவரம் போன்ற தமிழகப் பகுதிகளில் இருந்து இலங்கைக்கு வந்தவர்கள்அநேகம் பேர். பன்னெடுங்காலமாகத் தமிழர்கள் இலங்கையில் வாழ்கிறார்கள். ஆங்கிலேயர் இலங்கைக்கு வரும் முன்னரே தமிழர்கள் பகுதி என்றும் சிங்களர்கள் பகுதி என்றும் தனித்தனியாக இருந்தன. தமிழர்களும் சிங்களர்களும் சரிசமமான அளவில் வாழும் பகுதிகளும் இருந்தன. அங்கே தமிழ் மன்னர்களின் ஆட்சியே நடைபெற்றது. கண்டி-இரு மக்களும் சரிசமமான அளவில் வாழ்ந்த பகுதியாகும். இந்நிலைக்குக் காரணம் என்னவென்றால் சிங்கள மன்னன் ஆட்சியில் மன்னனை அவன் மகனே ஆதிக்க வெறியும் பதவி வெறியும் கொண்டு கொடூரமான முறையில் கொலை செய்தான். கண்டி அரசாட்சி எல்லாளன் என்ற தமிழ் மன்னனால் நடத்தப்பட்டது. துட்டமன் என்ற சிங்களன் சிங்களப் பகுதியை ஆண்டான். துட்டமன் படையில் சிங்களர்கள் படைவீரர்களாக இருந்தனர். எல்லாளன் படையில் தமிழ் வீரர்களும், சிங்களவர்களும் சரிசமமாய் இருந்தனர். துட்டமன் பலமுறை எல்லாளன் அரசாட்சியைப் பிடிக்கப் போர் செய்தும் கடைசியில் அவன் தோல்வியே அடைந்தான். இதற்குக் காரணம் தமிழ் மன்னர்களின் நீதி தவறாத ஆட்சியே ஆகும்." 18 ஆம் நூற்றாண்டில் கண்டியில் மலபார்த் தெரு என்ற பெயரில் தமிழர் தெரு இருந்திருக்கிறது. முனைவர் அபயசிங்கா என்பார் பின்வருமாறு கூறுகின்றார்: 1739இல் கண்டியில் நாயக்கர் அரசாண்டு கொண்டிருந்தனர். 1850 இல் கண்டியை ஆண்ட கடைசிஅரசன் நாயக்க அரசனே.

இராஜ ரத்னம் கூறுவது: "ஐரோப்பியர் நுழைவின் போது இலங்கையில் மூன்று அரசுகள் இருந்திருக்கின்றன. ஒன்று யாழ்ப்பாண அரசு; மற்றவை கண்டி அரசு - கோட்டே

அரசு. யாழ்ப்பாண அரசைக் கடைசியாக ஆண்டவன் சங்கிலி மன்னன். யாழ்ப்பாணத்தில் சங்கிலி மன்னன் சிலை இருக்கிறது. இவன் சிங்களவரை எதிர்த்துப் போராடியபோது தஞ்சை நாயக்கர் உதவியை நாடுகிறான். உதவிவர ஒரு நாள் தாமதித்ததால் சங்கிலி மன்னன் தோல்வி அடைகிறான். கண்டியை ஆண்ட ஸ்ரீ விக்ரமராஜ சிங்கன் (சிம்மன்) எனும் கன்னுசாமி ஆங்கிலேயரிடம் தோல்வி அடைந்து தன் நாட்டை ஒப்படைத்த போது தமிழில் கையெழுத்து இட்டுக் கொடுத்த சான்று இன்றும் இங்கிலாந்தில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளது." விக்கிரமராஜசிங்கன் உண்மையில் தமிழ் நாட்டைச் சேர்ந்தவன். புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள நச்சாண்டிப் பட்டியைச் சேர்ந்தவன். ஆங்கிலேயரிடம் தோல்வி அடைந்த பிறகு இக்கண்டி மன்னன் தமிழ் நாட்டில் உள்ள வேலூருக்கு, அனுப்பப்பட்டு அங்கு மரணமடைந்தான். அவன் பரம்பரையினர் இன்றும் தமிழ் நாட்டில்தான் வசிக்கிறார்கள்.

இர.ந. வீரப்பன் பின்வருமாறு கூறுகின்றார்: 19 ஆம நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ் ஈழ நிலப் பகுதி 13 ஆயிரம் சதுர மைல்கள். இலங்கை முழுவதும் ஆங்கிலேயரின் ஆட்சிப் பகுதியாகச் சேர்க்கும்போது அப்பகுதி 11 ஆயிரம் சதுரமைல் ஆக இருந்தது. இன்று தமிழ் நிலப் பகுதி 8000 சதுர மைல்களே. 5000 சதுர மைல்களில் சிங்களவர் குடியேற்றப்பட்டனர்."

1815ஆம் ஆண்டிலேயே ஆங்கிலேயர் இலங்கை முழுவதையும் கைப்பற்றிக் கொண்டாலும் தமிழர் பகுதியும் சிங்களர் பகுதியும் தனித்தனி நிருவாகத்தில் இருந்தன. 1833இல்தான் இரு பகுதிகளையும் இணைத்து "இலங்கை அரசு" என்று ஒரே அரசாக அமைத்தார்கள்.

தமிழ்க் குடிப் பெயர் குழுக்களின் வரலாறு:

தமிழகத்திலிருந்த சில தலைவர்கள் வணிகர்களால் வரவழைக்கப்பட்டு இலங்கையில் குடியேற்றப்பட்ட செய்திகளை யாழ்ப்பாண வைபவ மாலையும் கயிலாய மாலையும் தெரிவிக்கின்றன. உதாரணமாக, தமிழகத்திலிருந்து சிங்கை ஆரியன் வரவழைக்கப்பட்டு அரசுப் பதவியை ஏற்றான்; பாண்டிய மழவன் எனும் வெள்ளாளன் பொன் பற்றியூரிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்து குடியேறினான்.

சோழ, பாண்டிய அரசர்கள் இலங்கையில் மேலாட்சி அமைத்த காலத்தில் யாழ்ப்பாணம், மற்றும் பல பகுதிகளில் பல சிவன் கோயில்கள் கட்டியபோது பல தமிழ்நாட்டுச் சிற்பிகளும், கைவினைஞர்களும், கோயில் கட்டுவதற்காக வரவழைக்கப்பட்டனர். கோயில் வழிபாடு தொடங்கிய பிறகு பிராமண பூசாரிகளும், சைவ வேளாளக்குருமார்களும், ஓதுவார்களும், இசைவாணர்களும், நாட்டிய நங்கையரும், இசைக் கருவிகளை இயக்குவோரும், வேறுபிற கோயில் ஊழியம் செய்வோரும், எடுபிடிகளும் போன்ற பல்வகைப்பணி மக்கள், தமிழகத்திலிருந்து குடியேற்றப்பட்டு மானியங்களும் வழங்கப்பட்டு உள்ளனர். மேலும், சிங்கள அரசர்களிடம் புரோகிதர்களாகவும், சோதிடர்களாகவும் தமிழ்நாட்டுப் பிராமணரே பணிபுரிந்தனர்.

தமிழ் மூக்குவர் (மூழ்குவார்) எனப்படும் பரதரும், வன்னியரும், உடையார்களும் இடைக்காலத்தின் பிற்பகுதியில் இலங்கைக்குச் சென்று குடியேறினார்கள். நெடுங்காலமாக இலங்கையில் நெசவுத் தொழிலை வளமுறச் செய்தவர்கள் பட்டுநூல் நெசவாளரான தமிழ்நாட்டுச் சாலியர்கள் ஆவார்கள். குணபூஷண சிங்கை அரயன் காலத்தில் காஞ்சிபுரத்து நெசவாளர்கள் இலங்கைக்குச் சென்று குடியேறினர்.

பதினான்காம் நூற்றாண்டில் முசுலீம்கள் தாக்குதலினால் பாண்டியநாடு அல்லற்பட்டபோது தமிழ் மக்கள் பேரளவிற்கு இலங்கைக்குச் சென்று குடியேறினர். விசய நகர, நாயக்க மன்னர்களின் காலத்தில் பாளையப் பட்டுகளின் தொல்லைக்கு அஞ்சிய வேளாளர் பலர், அவர்களுடைய வயல்களில் வேலைசெய்த பள்ளர்கள் முதலியவர்கள் தங்கள் உடைமைகளையெல்லாம் விட்டுவிட்டு யாழ்ப்பாணத்திற்குச் சென்று குடியேற்றங்கள் அமைத்தனர் என "யாழ்ப்பாண வைபவமாலை", 'கயிலாய மாலை' முதலிய நூல்கள் தெரிவிக்கின்றன.

இவர்கள் அல்லாமல் கடல் மறவர்கள், கப்பலோட்டிகள், வாணிகர்கள் படைவீரர்கள், தொழில் வினைஞர்கள் பண்டைய காலத்திலிருந்தே இலங்கைக்குச் சென்று குடியேறினர். சிங்கள யாழ்ப்பாண அரசர்களின் படைகளில் பெரும்பாலோர் தமிழகத்து வீரர்களாகவே இருந்தனர். இச்செய்தியை இடைக்காலக் கல்வெட்டுகளும் உறுதிப்படுத்துகின்றன. "இலங்கை வாழ் மக்கள் போரியல்பு பண்பு அற்றவர்களாக இருந்தமையால் தமிழகத்திலிருந்து படைவீரர்கள் கொண்டு வரப்பட்டனர் என வெனிஸ் நாட்டைச் சேர்ந்த மார்க்கோபோலோ கூறுகின்றார். உதாரணமாக, தமிழ்ப்படை வீரர்களைப் பயன்படுத்திய பெருமை சிங்கள அரசன் அபயநாகன் (கி.பி. 291-99), முதலாம் தாதோபதிசன் (கி.பி. 643-50) மானவர்மன் (கி.பி. 682-718), நான்காம் காசிபன் (கி.பி. 898-914) ஐந்தாம் மகிந்தன் (கி.பி. 981-1029), முதலாம் பராக்கிரம பாகு (கி.பி. 1153-86). முதலியவர்களுக்கு உண்டு தமிழ்ப் படைத்தலைவர்கள் புத்தக்குத்தன் (ஏழாம் நூற்றாண்டு,) உதூர் பாண்டிராசன் (பத்தாம் நூற்றாண்டு). "தமிழாதிரி ராக்கன்" (பன்னிரெண்டாம் நூற்றாண்டு) முதலானவர்கள் சிங்கள வரலாற்றில் முதன்மை இடம் பெற்றுள்ளனர். சோழ அரசரின் மெய்க்காப்பாளராகப் பணியேற்க உருவாக்கப்பட்ட புதுப்படையான வேளைக்காரப் படையினர் இலங்கையிலும் செல்வாக்குப் பெற்றனர். பிற்காலத்தில் இலங்கையில் நிலைப் படையாக மாறினர். சோழர் மேலாதிக்கம் இலங்கையில் முடிந்த பிறகு தமிழ்த் தாயகத்திற்குத் திரும்பாமல் இலங்கையில் தங்கி சிங்கள அரசர்களிடமும் யாழ்ப்பாணத் தமிழ் அரசர்களிடமும் பணிபுரிந்தார்கள். 'தங்களை நம்பவில்லை' என்பது போன்ற சில அரசியல் சூழ்நிலைக்காரணங்களால் சில சமயங்களில் சிங்கள அரசர்களுக்கு எதிராகக் கலகம் கூடச் செய்தனர். இவர்கள் பெருந்தொல்லை கொடுத்த சிங்கள அரசர்கள் முதலாம் விசயவாகு, இரண்டாம் கயவாகு, மாண்புமிகு வராக்கிரமவாகு முதலியவர்கள் ஆவார்கள். இவர்களைப் பற்றிய விவரங்கள் சில கல்வெட்டுகள் மூலமாகவும் அறியமுடிகின்றது. பன்னிரெண்டாம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் வேளைக்காரப் படையினர் சிங்கள நாட்டினரோடு இரண்டறக் கலக்கலாயினர். மேலும் இரண்டாம் விக்ரமபாகுவின் ஆட்சிக்குப் பிறகு இவர்களைப் பற்றி ஒரு செய்தியும் கிடைக்கவில்லை.

மலையகத் தமிழர்கள்

இலங்கையின் நடுப்பகுதியில்வேலைசெய்யும் தமிழ்த் தொழிலாளிகளை மலையகத் தமிழ் மக்கள் என்று அழைக்கின்றார்கள். இப்பகுதியில் வாழும் பெரும்பான்மையான மக்கள் தமிழ் நாட்டைச் சேர்ந்த ஆதிதிராவிடர்கள், அம்பலக்காரர்கள், உடையார்கள், கள்ளர்கள், அகம்படியார்கள், அருந்ததியார்கள் முதலியவர்கள் ஆவார்கள். ஆங்கிலேயர்கள் இலங்கையில் ஆட்சி செய்தபோது இவர்கள் இலங்கைக்குச் சென்றார்கள். இவர்கள் பெரும்பாலும் தமிழ நாட்டின் தஞ்சாவூர், திருச்சி, ஆர்க்காடு, மதுரை, புதுக்கோட்டை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களிலிருந்து குடியேறியவர்களாவர்.

ஆங்கிலேயர்கள் ஆட்சி இலங்கையில் நுழைந்த பிறகு இலங்கையில் கிடைத்த வருமானம் அவர்களுடைய நவீன நிருவாக அமைப்பிற்குப் போதுமானதாக இல்லை. ஏனென்றால் இலங்கையின் பொருளாதார அமைப்பு வேளாண்மையையே நம்பியிருந்தது. மேலும், வருமானம் திரட்டும் நோக்கத்துடன் தாராளப் பொருளாதாரக் கொள்கையை ஆங்கிலேயர்கள் செயல்படுத்தி இலங்கையிலிருந்த காப்பி, தேயிலை, இரப்பர், தென்னைத் தோட்டங்களில் 1837 ஆம் ஆண்டளவில் ஐரோப்பியர்கள் மூலதனம் போடத் தொடங்கினார்கள். பிற்பாடு இத்தோட்டங்களில் இந்திய மூலதனமும் போடப்பட்டது. கண்டியன் மாநிலத்தில் (**KANDYAN PROVINCE**) உள்ள உயர் மலைச்சரிவுகளில் கடினமாக வேலை செய்வதற்குச் சிங்களத் தொழிலாளிகளுக்கு விருப்பமில்லை. ஆகையால் இத்தோட்டங்களில் வேலை செய்வதற்காக ஆங்கிலேய அரசு தமிழ்த் தொழிலாளிகளை இலங்கைக்கு ஏற்றுமதி செய்தது. இதன் விளைவாக 1836 இலிருந்து 1940 ஆம் ஆண்டு வரை பல இலட்சம் தமிழ்த் தொழிலாளிகள் இலங்கைக்குச் சென்றார்கள். 1827 ஆம் ஆண்டு 10,000 தமிழர்கள் இலங்கைக்குச் சென்றார்கள். 1911 இல் தமிழர்களின் எண்ணிக்கை 9 1/2 இலட்சம் பேர்கள். 1963 இல் இவர்களின் எண்ணிக்கை இலங்கையின் மொத்த மக்கள் தொகையில் 11.6 விழுக்காடு ஆகும். இத்தொழிலாளிகள் இலங்கையின் மத்தியப் பகுதியில் உள்ள இரப்பர், தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்கின்றனர். இவர்களைத்தான் மலையகத் தமிழர்கள் அல்லது இந்தியத் தமிழர்கள் என அழைக்கின்றோம். இவர்கள் எல்லோருக்கும் இலங்கை அரசு குடியுரிமை அளிக்க மறுப்பதால்தான் கடந்த 35 ஆண்டுகளாக இந்தியாவிற்கும் இலங்கை அரசுக்கும் இலங்கைக்குடி உரிமை குடிமகன் சம்மந்தமான பேரப்பேச்சு நடந்து கொண்டு வருகின்றது. இவர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகள் கொழும்பு காலுதாரா (*Kalutara*) கண்டி, (*Kandy*) மத்தாளே (*Matale*) நூவாரா எலியா (*Nuwara Eliya*) பாதுல்லா (*Badulla*) ரத்னபுரா (*Ratnapura*) கெகல்லி (*Kegalle*) முதலிய பகுதிகள் ஆகும். குடியுரிமை இழந்தவர்களான இவர்கள் வாழ்க்கைத் தரத்தில் கீழ் நிலையில் உள்ளனர். இவர்களில் ஒரு சிலர் கல்வி வாய்ப்புப்பெற்று தோட்டத்துக்கு உள்ளும், வெளியிலும் அரச அலுவலகங்களிலும் வேறு சில தனியார் வர்த்தகத், தொழில் நிறுவனங்களிலும் பணிபுரிகின்றனர். தோட்டத்துறை சாராத ஒரு சிறு தொகை இந்தியத்தமிழர்களும் குடியேறி வாழ்கின்றனர். வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள நாட்டுக் கோட்டைச் செட்டிமார் இவர்களுள் பொன்வளம் மிக்கவர்களாவர். இவர்களுள் பெரும்பாலோர் தமிழ் நாட்டின் திருநெல்வேலி மாவட்டத்தில் இருந்து

குடியேறியவர்களாவர். இலங்கையின் மேற்குக் கரையில் குடியமர்ந்துள்ள பரவர் அல்லது பரதவர் எனப்படும் மீனவச் சமூகத்தினரும் நகரசுத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ள அருந்ததியார் சமூகத்தினரும் இந்திய வம்சாவழியினர் என்ற பிரிவில் அடங்கும் சிறு சமூகப் பிரிவினராவர்.

1948 ஆம் ஆண்டு இலங்கை குடிமகன் சட்டம் இயற்றப்பட்டவுடன் 84 விழுக்காடு மலையகத் தமிழர்களுக்கு இலங்கைக் குடிமகன் உரிமை அளிக்கப்படவில்லை. இவ்விந்தியத் தமிழர்களின் குடியுரிமை சம்பந்தமாக 1954 ஆம் ஆண்டில் நேரு - கொத்தலவாலா ஒப்பந்தமும், 1964 அக்டோபர் 30 இல் சாஸ்திரி ஸ்ரீமாவோ ஒப்பந்தமும் இந்தியா-ஸ்ரீலங்கா இடையே செய்து கொள்ளப்பட்டன. சாஸ்திரி ஸ்ரீமாவோ உடன்படிக்கையின் படி ஐந்து இலட்சத் தமிழர்கள் தமிழகத்திற்கு வரவேண்டிய நிலை ஏற்பட்டது.

மொத்தத்தில் 5,00,000 இலங்கை இந்தியர்களுக்குக் குடியுரிமை அளிப்பதாக இந்தியா ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தது. ஸ்ரீலங்கா அரசு அளிக்கும் புள்ளி விவரப்படி ஜனவரி 16, 1986 வரை 4,21,209 பேர்களுக்கு இந்திய அரசு இந்தியக் குடியுரிமை அளித்திருக்கின்றது. மேலும் ஏறக்குறைய 85,000 மலையகத் தமிழர்களுக்கு இந்தியா, உடன்படிக்கை அடிப்படையில், இந்தியா குடியுரிமை அளிக்க வேண்டும் என ஸ்ரீலங்கா அரசு கூறுகின்றது.

மக்கள் தொகை

இலங்கையிலுள்ள தமிழர்களை இலங்கை அரசு இலங்கைத் தமிழர்கள், இந்தியத் தமிழர்கள் எனப் பிரிக்கின்றது. பண்டைய காலத்திலிருந்தே இலங்கையில் வாழ்ந்துவரும் தமிழர்களையும், இடைக்காலத்தில் இலங்கைக்குச் சென்று குடியேறிய தமிழர்களையும், குறிப்பாகக் கிழக்கு வடக்கு மாநிலங்களில் குடியேறியிருக்கும் தமிழர்களை இலங்கைத் தமிழர்கள் என இலங்கை அரசு அழைக்கின்றது. இப்பகுதிகள் நில அமைப்பில் பெரும்பாலும் தஞ்சை மாவட்டம் இராமநாதபுரம் மாவட்டம் போன்றவை. நீண்டகாலமாகத் தமிழகத்துடன் நெருக்கமான உறவு இல்லாத காரணத்தால் இவர்கள் பேசும் மொழி, தமிழகத்துத் தமிழ்ப்பொது மொழியின் ஒரு கிளை மொழியாகி விளங்குகின்றது. யாழ்ப்பாணம் என்பது இலங்கையின் வட கோடித் தீபகற்பம் ஆகும். மட்டக் களப்பு கிழக்கு இலங்கையில் அமைந்துள்ளது. மட்டக் களப்பு மொழி சிறிது வேறுபட்டதாகும்.

ஆனால் ஆங்கிலேயர் ஆட்சியின்போது வந்து இலங்கையின் நடுப்பகுதியில் குடியேறிய தமிழர்களை, அதாவது கண்டியன் மாநிலத்தில் வந்து குடியேறிய தமிழர்களை இந்தியத் தமிழர்கள் அல்லது மலையகத் தமிழர்கள் என அழைக்கின்றது. இந்தியத் தமிழர்களைப் பொதுவாக இருபிரிவாகப் பிரிக்கலாம்.

(1)இலங்கையின் நடுப் பகுதியில் வேலை செய்யும் தமிழ்த் தொழிலாளிகள்;
(2)இந்தியத் தமிழ் வாணிபர்கள், அரசு தனியார் நிறுவனங்களில், குறிப்பாகக் கொழும்பு நகரில் பணிபுரியும் அலுவலர்கள், இவர்களைக் கொழும்புத் தமிழர்கள் என அழைக்கலாம். 1983 ஆம் ஆண்டளவில் கொழும்புவின் மொத்த மக்கள் தொகையில் ஒரு பகுதி தமிழர்கள்.

தமிழீழப் பகுதியிலிருந்தும் பல தமிழர்கள் கொழும்புவிற்கு வந்து வசிக்கின்றார்கள். பொதுவாகத் தற்காலிக நாகரீக வாழ்வில் ஊறியிருப்பவர்கள் கொழும்புத் தமிழர்கள்.

மேலும், இலங்கை அரசு இசுலாமியத் தமிழர் (சோனகர்) எனும் மூன்றாவது பிரிவையும் அளிக்கின்றது.

எம்.ஏ.நுஃமான் அளிக்கும் கருத்துக்கள்

"தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட முசுலீம்கள் இலங்கையின் இரண்டாவது சிறுபான்மையினராவர். இலங்கை முசுலீம்களில் சுமார் மூன்றில் ஒரு பகுதியினர் தமிழ் பேசும் கிழக்கு, வடக்கு மாகாணங்களில் செறிவாகவும், ஏனையோர் சிங்களம் பேசும் இலங்கையின் பிற ஏழு மாகாணங்களிலும் பரவலாகவும் வாழ்கின்றனர். இலங்கை முசுலீம்கள் தங்களை அரேபியரின் வழித்தோன்றல்கள் எனக் கருதுகின்றனர்.

கிறிஸ்துவுக்கு முந்திய நூற்றாண்டுகளில் இருந்தே இந்தியாவுடனும் இலங்கையுடனும் அராபியர் வர்த்தகத் தொடர்பு கொண்டிருந்தனர். இலங்கையின் துறைமுகப் பகுதிகளில் அராபியர் குடியேற்றங்கள் இருந்தமைக்குச் சான்றுகள் உண்டு. அரேபியாவில் இஸ்லாம் பரவி நிலைகொண்ட பிறகு இலங்கையில் இருந்த அராபியர்களும் இஸ்லாத்தைத் தழுவினர். தமிழர்களுடன் இவர்கள் மண உறவு கொண்டு வாழ்ந்ததன் விளைவாகவே தமிழ் பேசும் முசுலீம்கள் தோற்றம் பெற்றனர் என்று கருத இடம் உண்டு. இஸ்லாம் மதத்தைத் தழுவிக்கொண்ட தமிழர்களும் தமிழ்பேசும் முசுலீம்களின்மூதாதையர் ஆகலாம். கி.பி.9ஆம், 10 ஆம் நூற்றாண்டுகளில் மலபாரில் இருந்தும், தமிழ் நாட்டில் இருந்தும் முசுலீம்கள் இலங்கையில் வந்து குடியமர்ந்தமைக்கு இலக்கிய., கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன. 13 ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் இலங்கையில் துறைமுக நகரங்களும் நகரக் குடியிருப்புகளும் வளர்ச்சியடைவதில் வர்த்தகர்களான முசுலீம்கள் முக்கியப் பாத்திரம் வகித்துள்ளனர். 16ஆம், 17ஆம் நூற்றாண்டுகளில் இலங்கையின் கரையோரப் பகுதிகளை ஆட்சிபுரிந்த போத்துக்கேயர் வர்த்தகப் போட்டி காரணமாக இலங்கை முசுலீம்களுக்கு எதிராகச் செயற்பட்டபோது சிங்கள மன்னர்களால் ஆளப்பட்ட கண்டி ராச்சியத்தின் கீழ் இருந்த மட்டக்களப்புப் பகுதியிலும் பிற சிங்களப் பகுதிகளிலும் முசுலீம்கள் பெரும்மளவில் குடியமர்த்தப்பட்டனர். 19 ஆம் நூற்றாண்டிலும், 20 ஆம் நூற்றாண்டின் தசாப் பதங்களிலும் பிரித்தானியர் ஆட்சியின் கீழ் இலங்கையில் நிலவிய சமூக, அரசியல் வரலாற்றுக் காரணங்கள், இலங்கை முசுலீம்கள் ஒரு தனி இனக்குழுவாக உருவாகுவதில் பெரும்பங்கு வகித்துள்ளன. பன்னெடுங்காலமாக இலங்கை முசுலீம்கள் சில சிறப்புக் கூறுகளுடன் தமிழைத் தங்கள் தாய்மொழியாகப் பேணி வருகின்றனர்".

"இலங்கையின் கிழக்கு வடக்குப் பகுதிகளில் வாழும் முசுலீம்களில் மிகப் பெரும்பாலோர் தமிழ் மட்டும் அறிந்த ஒருமொழியாளராவர். இலங்கையின் ஏனைய சிங்களப் பிரதேசங்களில் வாழும் முசுலீம்களில் பெரும்பாலோர் தமிழும் சிங்களமும் பேசும் இருமொழியாளர்களாவர். சிங்களப் பகுதிகளில் வாழும் முசுலீம்களில் ஒரு குறிப்பிடத்தக்க தொகையினர் சிங்களத்தைத் தங்களது கல்வி மொழியாகவும் தேர்ந்துள்ளனர். மதச்சடங்குகளில் அரபு மொழியும் மதபோதனைக்கும் பிராசாரத்துக்கும் தமிழ்மொழியுமே பயன்படுத்தப்படுகிறது." இசுலாமியத் தமிழர்களைப் பற்றி பின்வரும்

கருத்துகளை முனைவர் இ. முருகரத்னம்அளிக்கின்றார். "இலங்கையில் இசுலாமியர் மூன்று பிரிவினராக அமைந்துள்ளனர். அவர்கள் தொகை 11, 34,556 ஆகும். அவர்களுள் ஒருசாரார் பெரும்பாலும் அரேபியாவிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் 7 ஆம் நூற்றாண்டு முதல் 15 ஆம் நூற்றாண்டு வரை வணிகத்தின் பொருட்டு இலங்கையில் குடியேறிய இசுலாமிய மக்களின் வழியினராவர். அரேபிய இசுலாமிய மக்கள் வணிகத்தின் பொருட்டு இலங்கை வந்தபோது இங்கேயே பெண் மக்களைக் கண்டு திருமணம் செய்துகொண்டு தங்கி இருத்தல் வேண்டும். இவ்வழியினரைச் சோனகர் (Moor) என்ற இனப் பெயரால் இன்று வழங்குகின்றனர். இவர்கள் தெகை 10,56,972. இலங்கையில் மற்றொரு பிரிவினர் அண்மையில் சாவாவிலிருந்து குடியேற்றப்பட்ட மலாய் மக்கள் வழியினர் ஆவர். இவர்கள் தொகை 43,378 ஆகும். மூன்றாம் வகை இந்திய இசுலாமியர் ஆவர். இவர்களும், மிகப்பெரும்பாலான சோனகரும் தமிழ் பேசு வோராவர். இலங்கையில் தமிழர் வாழும் வட பகுதியினை ஒட்டியும் கிழக்குப்பகுதியினையொட்டியும் இவ்விசுலாமியத் தமிழர் வாழ்கின்றார்கள்(இந்திய இசுலாமிய வணிகராவர்). அவர்கள் ஓரளவு வேளாண்மையிலும் ஓரளவு வணிகத்திலும் ஈடுபட்டு வாழ்க்கை நடத்துபவர்கள். சிங்களவரைப் போலல்லாமலும் பிற தமிழரைப் போலல்லாமலும் இவர்கள் இலங்கை முழுவதும் சிறுசிறு குடியினராகப் பரவி வாழ்ந்து வருகின்றனர். இதன் காரணமாக வாக்குப் பெட்டியினை நம்பிவாழும் அரசியலில், இச்சிறுப்பான்மையினருக்கு ஓர் சிறப்புத் தோன்றியுள்ளது. இலங்கை இசுலாமியரும் இலங்கைத் தமிழரும் மொழியில் ஒன்றுபட்டு இனத்தாலும், மதத்தாலும் வேறுபட்டிருக்கின்றனர். சிங்களவரிடமிருந்தும் இசுலாமியர் மொழியாலும் மதத்தாலும், இனத்தாலும் வேறுபட்டிருக்கின்றனர். ஆதலால் அவர்களுக்கென ஒருத்தனித் தன்மை உண்டு. இலங்கையில் இனத்தாலும் மொழியாலும் பிணக்கு வருகின்ற போது இசுலாமியர் நிலை சிக்கலுடையதாகிறது. அவர்கள் சிலபோது தமிழரையும், சிலபோது சிங்களவரையும் ஆதரிக்கும் நிலை இருந்திருப்பதாகச் சுட்டிகாட்டப்படுகிறது. இசுலாமியர் பலர், சிங்களம் கற்றுக்கொள்ள விரும்புகின்றனர். சிங்கள இனத்தோடு பல வகையில் ஒத்துப்போக அவர்கள் மனங்கொண்டு இருப்பதாகவும் தெரிகிறது. இசுலாமியர் பலருக்குச் சிங்களமும் தெரியும். வணிகத்திலும் பிற வழிகளிலும் இசுலாமிய மக்கள் கவனம் செலுத்தியதால் உயர் கல்வியில் அவர்கள் அவ்வளவாக ஈடுபாடு கொள்ளவில்லை எனச் சொல்லப்படுகிறது".

1971 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி இலங்கையின் மொத்த மக்கள் தொகை 1,26,89,897 இதில் -

இலங்கைத் தமிழர்	14,23,981	11.2%
இந்தியத் தமிழர்	11,74,606	9.3%
இலங்கைச் சோனகர்	8,28,304	6.5%
இந்தியன் சோனகர்	27,420	0.2%
	34,54,311	27.2%

மூலம்: டாக்டர் ந. கடிகாசலம் - தமிழும், தமிழரும், பக். 68

மொத்த உலகத் தமிழர்களில் 7.4 விழுக்காடு தமிழர்கள் இலங்கையில் இருக்கிறார்கள். (ஞானசூரியன்)

1981 ஆம் ஆண்டு கணக்கின்படி இலங்கையின் மக்கள் தொகை

மொத்த மக்கள் 1,48,50,001. சிங்களவர் (பெரும்பாலும் பௌத்தர்) 1,09,85,666. தமிழ் பேசுவோர்- 37,53,740. பிறர் 1,10,595. 74% விழுக்காடு சிங்களத்தையும், 25.3% விழுக்காடு தமிழையும் தாய்மொழியாகப் பேசுகின்றனர்.

இலங்கையில் 1981 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் பெறப்பட்ட குடித்தொகைக் கணிப்பின்படி இலங்கையின் மொத்தக் குடித் தொகை 148.8 நூறாயிரமாகும். இதில் சிங்களம் பேசும் மக்களின் எண்ணிக்கை 109.8 நூறாயிரமாகும். இது மொத்தக் குடித்தொகையில் 74 விழுக்காடு. தமிழ் பேசும் மக்களின் எண்ணிக்கை 37.5 நூறாயிரமாகும். இது மொத்தக் குடித்தொகையில் 25.3 விழுக்காடாக அமைகின்றது. தமிழ் பேசும் மக்களில் இலங்கைத் தமிழர் 18,71,535 பேராகவும், இந்தியத் தமிழர் 8,25,233 பேராகவும், இலங்கைச் சோனகர் 10,56,972 பேராகவும் காணப்பட்டனர், இவர்களது விழுக்காடு முறையே 12.6, 5.6,7.1, ஆகவுள்ளது.

1911-ஆம் ஆண்டுக் குடித்தொகைக் கணிப்பின்படி இலங்கையின் மொத்தக் குடித்தொகையில் சிங்கள மக்களின் பங்கு 66 விழுக்காடாகக் காணப்பட, தமிழ் மக்களின் பங்கு 32.2. விழுக்காடாக அமைந்திருந்தது. (இலங்கைத் தமிழர் 12.9 விழுக்காடு, இலங்கைச் சோனகர் 5.7 விழுக்காடு) 1971 ஆம் ஆண்டுக் குடித்தொகைக் கணிப்பின்படி இலங்கையின் மொத்தக் குடித்தொகையில் சிங்கள மக்களின் பங்கு 72 விழுக்காடாகவும், தமிழ் மக்களின் பங்கு 27.2 விழுக்காடாகவும் காணப்பட்டன. (இலங்கைத் தமிழர் 11.2 விழுக்காடு, இந்தியத்தமிழர் 9.3 விழுக்காடு, இந்தியச் சோனகர் 0.4 விழுக்காடு) 1911-ஆம் ஆண்டிலும், 1971-ஆம் ஆண்டிலும் பெறப்பட்ட குடித்தொகைத் தரவுகளை 1981 ஆம் ஆண்டுத் தரவுடன் ஒப்பிட்டு நோக்கும்போது, விழுக்காடு அடிப்படையில் தமிழ் மக்களின் எண்ணிக்கை குறைவடைந்து செல்லும் போக்கு புலனாகின்றது. இதற்குச் சில காரணங்கள் உள. மலைநாட்டுப் பகுதிகளில் வாழ்ந்த தமிழ் மக்கள் பல தலைமுறையாக இந்நாட்டில் வாழ்ந்துவந்த போதிலும், இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்தையடுத்துஇயற்றப்பட்ட குடியுரிமைச் சட்டங்கள் இம் மக்களை நாடற்றோராக மாற்றின. சில ஆண்டுகளுக்கு முன்புதான் சில ஒப்பந்தங்களின் வாயிலாக, நாடற்றோர் பிரச்சினைகள் ஓரளவுக்குத் தீர்த்துவைக்கப்பட்டன. 1964-ஆம் ஆண்டு ஸ்ரீமாவோ-சாஸ்திரி உடன்படிக்கையின்படி, இந்திய மக்களில் 5,25,000 பேர் இந்தியா செல்லவும் 3,00, 000 பேர் இலங்கைக் குடியுரிமை பெறவும் முடிந்தது. பின்னர் 1974 ஆம் ஆண்டு ஸ்ரீமாவோ-இந்திரா உடன்படிக்கையின்படி மேலும் 75,000 பேர் இந்தியா செல்லவும், 75,000 பேர் இலங்கைக் குடியுரிமை பெறவும் வழியேற்பட்டது. இவ்வாறான ஒப்பந்தங்களின் விளைவாக இந்தியத் தமிழர் வெளியேறி வருவதால், இலங்கையின் மொத்தக் குடித்தொகையில் தமிழர் விழுக்காடு குறைவடைந்து செல்கிறது. இலங்கைத் தமிழரில் 35 விழுக்காட்டினர் நகரங்களில் வாழ்வதால் இவர்களிடையே குடும்பக்கட்டுபாடு மிகுதியாகக் கடைப்பிடிக்கப்படுவதும், பெண்கள் திருமணம் புரிவதற்குப் பெரும் தொகையாகச் சீதனம் கொடுக்கும் வழக்கம் இவர்களிடையே நிலவுவதால் பெண்களின் சராசரித் திருமண வயது பின் போடப்படுவதும்,

அண்மைக்காலங்களில் தமிழ் இளைஞர் வேலைவாய்ப்பு நாடி வெளிநாடுகளுக்குச் செல்வதும், தமிழர் குடித்தொகையை எண்ணிக்கை அளவில் குறைக்கும் ஏனைய காரணிகளாக அமைகின்றன.

தமிழர் குடிப்பரம்பல்

தமிழ் பேசும் மக்களில் 55.6 விழுக்காட்டினர் வடக்கு கிழக்கு மாகாணங்களிலும், 23.83 விழுக்காட்டினர் மலைநாட்டுப் பகுதியாகிய மத்திய, ஊவாமாகாணங்களிலும 11.5 விழுக்காட்டினர் தலைநகர் அமைந்திருக்கும் மேல் மாகாணத்திலும், மிகுதி 9.1 விழுக்காட்டினரே ஏனைய நான்கு மாகாணங்களிலும் பரந்து வாழ்வதைக் காணலாம். தென் இலங்கைப் பகுதிகளில் பரம்பல் தமிழர் பெரும்பாலும் நகர்ப்புறம் சார்ந்தே காணப்படுகின்றது. ஈழத்தின் வடக்கு கிழக்குப் பகுதிகளிலும் மலைநாட்டுப் பெருந்தோட்டப் பகுதிகளிலுமே தமிழ் மக்கள் செறிவாகவும் பெரும்பான்மையாகவும் வாழ்கின்றனர். இந்தியத் தமிழருள் 63.1 விழுக்காட்டினர் மலைநாட்டுப் பகுதியாகிய மத்திய, ஊவா மாகாணத்தில வாழ்வது போன்று, இலங்கைத் தமிழரில் 72.6 விழுக்காட்டினர் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்றனர். வடக்கு கிழக்குப் பகுதிகளில் வாழ்ந்துவரும் தமிழ் மக்கள் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே அப்பகுதிகளில் வாழ்ந்து வருவதால் அப்பகுதி பாரம்பரியத் தமிழ்ப்புலமென வழங்கப்படுகின்றது. பாரம்பரியத் தமிழ்புலம் வடக்கு, கிழக்கு மாகாணத்தை விடப் பரந்ததென்றும், இது மேற்கே மாஓயா (வாய்க்கால் ஆறு) தொடக்கம் தென்கிழக்கே கும்புக்கன் ஆறு வரை பரந்துள்ள கரையோர நிலப்பகுதியென்றும் பல குறிப்புகளிலிருந்து தெரிய வருகின்றது. எனினும், இவ்வாய்வு வடக்கு கிழக்கு மாகாணங்களே தமிழரின் பாரம்பரியப் பிரதேசமெனக் கொள்கின்றது.

பாரம்பரியத் தமிழ்ப் புலமாகிய வடக்கு, கிழக்கு மாகாணங்கள் 7068 சதுர மைல் பரப்பை அடக்கியுள்ளன. இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் இது 28.3 விழுக்காடு. இம்மாகாணங்கள் ஏழு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம், மன்னார் வவுனியா, முல்லைத்தீவு, என்பன வட மாகாணத்தினுள்ளும், மட்டக்களப்பு, திருக்கோணமலை, அம்பாறை என்பன கிழக்கு மாகாணத்தினுள்ளும் அமைகின்றன. (அட்டவணை-1, பின்னிணைப்பு)

பாரம்பரியத் தமிழ்புலத்தின் மொத்தக் குடித்தொகை 1981 ஆம் ஆண்டுக் குடித்தொகைக் கணிப்பின்படி 20,87,943 பேராகும். இலங்கையில் மொத்தக் குடித்தொகையில் இது 14.1 விழுக்காடு அமைகின்றது. வடக்கு கிழக்குப் பகுதியின் மொத்தக் குடித்தொகையில் வடமாகாணத்தில் 53.2 விழுக்காடும் பரந்துள்ளதைக் காணலாம். கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மூன்று மாவட்டங்களிலும் ஓரளவு ஒப்புரவாகக் குடித்தொகை அளவு அமைய, வட மாகாணத்திலே யாழ்ப்பாண மாவட்டமே கூடிய குடித்தொகையைக் கொண்டுள்ள வடமாகாணத்தின் மொத்தக் குடித்தொகையில் 74.8 விழுக்காட்டினர் யாழ்ப்பாண மாவட்டத்திற் காணப்படுகின்றனர். யாழ்ப்பாணக் குடாநாடே அடர்த்தியான குடித்தொகை கொண்ட பகுதியாகும். பாரம்பரியத் தமிழ்ப்

புலத்தின் மொத்த நிலப்பரப்பில் யாழ்ப்பாணக் குடாநாடு 6.1 விழுக்காட்டையே கொண்டிருந்த போதிலும் மொத்தக் குடித்தொகையில் 36 விழுக்காட்டினர் குடாநாட்டினுள்ளேயே வாழ்தல் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

பாரம்பரியத் தமிழ்ப்புலத்தில், 1981 ஆம் ஆண்டுக்குரிய சராசரிக் குடியடர்த்தி சதுர மைலுக்கு 295 பேராகும். இலங்கையில் சதுர மைலுக்குரிய குடியடர்த்தியான 595 பேருடன் ஒப்பிடின் இது குறைவேயாகும். கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மூன்று மாவட்டங்களிலும் அதிகம் ஏற்றத்தாழ்வற்ற குடியடர்த்தி காணப்பட (சதுர மைலுக்கு 222-348), வட மாகாணத்தில் வவுனியா மாவட்டத்தில் சதுர மைலுக்குரிய குடியடர்த்தி 94 பேரிலிருந்து யாழ்ப்பாண மாவட்டத்தில் 1039 பேராக வேறுபட்டுக் காணப்படுகிறது. யாழ்ப்பாண மாவட்டத்திலேயும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் சதுர மைலுககு 1745 பேர் வாழ்தலைக் காணலாம். இதனால் அண்மைக் காலத்தில், குடிநெருக்கப் பகுதியிலிருந்து நெருக்கமற்ற பகுதிகளுக்கு மக்கள் நகருவதற்கான ஊக்கம் அளிக்கப்பட்டு வருகின்றது.

இப்புலத்திலே 1981 ஆம் ஆண்டுக்குரிய நகரக் குடித்தொகை 5,27,213 பேராகும். இதன்படி, இங்கு வாழ்வோரில் 25.3 விழுக்காட்டினர் நகரவாசிகளாவர். இலங்கையின் நகரக் குடித்தொகை வீதமான 21.5. உடன் ஒப்பிடும்போது, நகராக்கப். பண்பு ஓரளவு இங்கு மிகுதியாக உள்ளமை புலனாகின்றது. மொத்த நகராக்கக் குடித்தொகையில் 51.3 விழுக்காட்டினர் யாழ்ப்பாண மாவட்டத்திலயே காணப்படுகின்றனர். இங்குக் காணப்படும் 26 நகரங்களில் 13 நகரங்கள் யாழ்ப்பாண மாவட்டத்திலேயே அமைந்துள்ளன. மொத்த நகரங்களுள் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு என்பன மாநகரத் தகுதியையும் சாவகச்சேரி பருத்தித்துறை, வல்வேட்டித்துறை, வவுனியா, அம்பாறை, திருக்கோணமலை என்பன நகர சபைத் தகுதியையும் பெற்ற நகரங்களாக உள.

பொதுவாக யாழ்ப்பாண மாவட்டம் தவிர ஏனைய பகுதிகளில் ஆண்-பெண் விழுக்காட்டில் ஆண்களின் விழுக்காடே கூடுதலாக உள்ளது.

இப்புலத்தில் தமிழ்மொழி பேசும் மக்கள் மொத்தக் குடித்தொகையில் 86.3 விழுக்காடாகவும், சிங்கள மொழி பேசுவோர் 13.2 விழுக்காடாகவும் காணப்படுகின்றனர். மாவட்டத்திற்கும் மாவட்டம் இதில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, மட்டக்களப்பு மாவட்டங்களின் மொத்தக் குடித்தொகையில் 90 முதல் 99 விழுக்காட்டினர் தமிழ் பேசும் மக்களாவர். வவுனியா மாவட்டத்தில் 83 விழுக்காட்டினர் தமிழ் பேசும் மக்களாக உள்ளனர். வடக்கே வவுனியா மாவட்டமும், கிழக்கே திருக்கோணமலை, அம்பாறை மாவட்டங்களும் சிங்கள மக்கள் குறிப்பிடும்படியாக அதிகமாக வாழும் பகுதிகளாக உள. அம்பாறை, திருக்கோணமலை மாவட்டங்களில் மொத்தக் குடித்தொகையில் 34 முதல் 38 விழுக்காட்டினர் சிங்கள மக்களாக உள்ளனர். (அட்டவணை 2)

இப்பகுதிகளில் அண்மைக் காலங்களில் ஏற்படுத்தப்பட்டு வரும் குடியேற்றத் திட்டங்களில் சிங்கள மக்கள் பெருமளவு குடியேற்றப்பட்டிருப்பதே இம் மாவட்டங்களில் சிங்கள மக்களின் வீதம் பெருகியமைக்குக் காரணமாகும். வவுனியா மாவட்டத்தில் மாமடுவம், மடுக்கற்தை, ஈரப்பெரியகுளம், உலுக்குளம் ஆகிய கிராம சேவகர்

பிரிவுகளிலும், திருக்கோணமலை மாவட்டத்தில் அக்கோபுரம், சோமபுரம், கந்தளாய், பறண, மதவாச்சி, கோமரன்கடவெலை ஆகிய கிராம சேவகர் பிரிவுகளிலும் சிங்களமக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றனர். மேலும், அம்பாறை மாவட்டத்தில் வேவகம்பற்று வடக்கு, வேவகம்பற்று தெற்கு, லாகுகல, மகாஓயா, படியதலாவை ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் சிங்களப் பகுதிகளாகவே உள்ளன. பாரம்பரியத் தமிழ்ப்புலத்திலே தமிழர் சிறுபான்மையோராக மாற்றப்படக்கூடிய ஆபத்து தோன்றியிருப்பதாகத் தமிழ் அரசியல் வாதிகள் குரல் கொடுப்பதற்கு இதுவே காரணமாக அமைகின்றது.

இப்புலத்திலே தமிழ் பேசும் மக்களில் 65 விழுக்காட்டினர் இலங்கைத் தமிழராவர். அம்பாறை, திருக்கோணமலை மாவட்டங்களைத் தவிர, ஏனைய மாவட்டங்களில் இலங்கைத் தமிழரே பெரும்பான்மையோராக உள்ளனர். யாழ்ப்பாண மாவட்டத்தில் மொத்தக் குடித்தொகையின் 95 விழுக்காட்டினர் இலங்கைத் தமிழராகக் காணப்பட, வவுனியா, முல்லைத்தீவு, மட்டக்களப்பு மாவட்டங்களில் இவை முறையே 57,76,71 விழுக்காடுகளாக அமைந்துள்ளன. மன்னார் மாவட்டத்தில் 51 விழுக்காட்டினரே இலங்கைத் தமிழராவர். பாரம்பரியத் தமிழ்ப் புலத்தின் மொத்தக் குடித்தொகையில் இந்தியத் தமிழர் 3,6 விழுக்காட்டினரேயாவர். வவுனியா முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் இந்தியத் தமிழர் முறையே 19,14,13 விழுக்காட்டினராகக் காணப்படுகின்றனர். அண்மைக் காலங்களில் பெருந்தோட்டப்பகுதிகளில் நிலவும் வேலையில்லாப் பிரச்சினையும் இனப்பாதுகாப்பின்மையும் போன்ற காரணங்களால், இவர்கள் இப்பகுதிகளுக்குக் குடிபெயர்ந்து வந்து விவசாயக் கூலித் தொழிலாளர்களாக வாழ்கின்றனர். இப்போக்கு அண்மைக் காலத்தில் மேலும் அதிகரித்து வருகின்றது. இலங்கை இந்திய சோனகர் இப்புலத்தின் மொத்தக் குடித்தொகையில் 18 விழுக்காட்டினராக உள்ளபோதும், அம்பாறை மாவட்டத்தில் இவர்களே தனித்த பெரும் பான்மையினராகக் காணப்படுகின்றனர். (42 விழுக்காடு). இதனை அடுத்து, திருக்கோணமலை (29 விழுக்காடு); மன்னார் (27 விழுக்காடு), மட்டக்களப்பு (24 விழுக்காடு) ஆகிய மாவட்டங்களில் குறிப்பிடத்தக்க அளவுக்குச் செறிவாக வாழ்கின்றனர்.

கல்வியறிவு

பாரம்பரியத் தமிழ்ப்புலத்தில் 10 வயதிற்கு மேற்பட்ட குடித்தொகையில் கல்வியறிவு பெற்றோர் 100 பேருக்கு 71 பேராகக் காணப்படுகின்றனர். ஆண்களில் இது 78 பேராகவும், பெண்களில் இது 62 பேராகவும் உள்ளது. இப்புலத்தில் யாழ்ப்பாண மாவட்டம் கல்வியறிவில் கூடிய தொகையினராகக் கொண்டதாக அமைந்துள்ளது. இங்கு 100 பேருக்கு 83 பேர் கல்வியறிவு படைத்தவராக உள்ளனர். கல்வியறிவில் குறைந்த குடித்தொகையைக் கொண்ட மாவட்டமாக மட்டக்களப்பு மாவட்டம் அமைந்துள்ளது. இங்கு 100 பேரில் 51 பேர்கல்வியறிவு உடையவராகக் காணப்படுகின்றனர். மன்னார், வவுனியா மாவட்டங்களில் 100 பேருக்கு 75 பேர் கல்வியறிவு உடையோராக காணப்படுகின்றனர். அம்பாறை, திருக்கோணமலை மாவட்டங்களில் 100 பேருக்கு 65 பேர் கல்வியறிவு கொண்டிருந்தனர்.

அட்டவணை 1

பாரம்பரியத் தமிழ்ப் புலத்தின் மாவட்டவாரியான பரப்பளவும், மொத்தக் குடித்தொகையும் சதுர மைல் அடர்த்தியும்

மாகாணமும் மாவட்டமும்	பரப்பளவு (சதுரமைல்) (உள்நாட்டுப் பெருநீர் நிலைகள் நீங்கலாக)	குடித்தொகை 1981	சதுரமைலுக்குரிய அடர்த்தி
வடமாகாணம்	3,353.5	11,11,468	331
யாழ்ப்பாண மாவட்டம்	800.1	8,31,112	1039
மன்னார் மாவட்டம்	773	1,06,940	138
வவுனியா மாவட்டம்	1,021.5	95,904	94
முல்லைத்தீவு மாவட்டம்	758.0	77,512	102
கீழ் மாகாணம்	3,714.4	9,76,475	263
மட்டக்களப்பு மாவட்டம்	951.6	3,30,899	348
திருக்கோணமலை மாவட்டம்	1,010,8	2,56,790	254
அம்பாறை மாவட்டம்	1,752,6	3,88,786	222
பாரம்பரியத் தமிழ்ப்புலம்	7,067.9	20,87,943	295

அட்டவணை 2

இன அடிப்படையில் பாரம்பரியத் தமிழ்ப் புலத்துக் குடித்தொகையும் மொத்தக் குடித்தொகையில் இன அடிப்படையிலான விழுக்காடும் - (மாவட்டம் வாரியாக)

மாவட்டம்	விவரம்	இலங்கைத் தமிழர்	இந்தியத் தமிழர்	இலங்கை/ இந்தியச் சோனகர்	சிங்களவர்	ஏனையோர்	மொத்தம்
யாழ்ப்பாணம்	தொகை	7,92,246	20,001	13,757	4,615	493	8,31,112
	வீதம்	95.3	2.4	1.7	0.5	0.1	100
மன்னார்	தொகை	54,106	14,072	28,464	8,710	1,588	1,06,940
	வீதம்	50.6	13.2	26.6	8.1	1.5	100
வவுனியா	தொகை	54,541	18,592	6640	15,876	255	95904
	வீதம்	56.9	19.4	6.9	16.5	0.3	100
முல்லைத்தீவு	தொகை	58,904	10,766	3,777	3,948	117	77512
	வீதம்	76.0	13.9	4.8	5.1	0.2	100

மட்டக்களப்பு	தொகை	2,34,348	3,868	79,317	10,646	2720	3,30,899
	வீதம்	70.8	1.2	24.0	3.2	0.8	100
அம்பாறை	தொகை	78,315	1,410	161,481	1,46,371	1209	3,88,786
	வீதம்	20.1	0.4	41.5	37.7	0.3	100
திருகோணமலை	தொகை	86,743	6,767	74,403	86,341	2536	2,56,790
	வீதம்	33.8	2.6	29.0	33.6	1.0	100
பாரம்பரியத்	தொகை	13,59,203	75,476	3,67,839	2,76,507	8918	20 ,87,943
தமிழ்ப்புலம்	வீதம்	65.1	3.6	17.6	13.2	0.5	100

அட்டவணைகளுக்கான ஆதாரம்

Department of Census and Statistics-Ministry of Plan Implementation. Census of population and Housing-SriLanka-1981, Preliminary Release No. Colombo.1981.p.3.

Statistical Abstract of the Democratic Socialist Republic of Sri Lanka. 1977. Government Publication Bureau, Colombo, 1979, pp.8-9.

சிங்கள நிலப்பகுதியில் வாழும் ஈழத்தமிழர் விவரம்

கொழும்பு மாவட்டம்	*1,05,952*
நுவரலியா மாவட்டம்	*70,471*
கண்டி மாவட்டம்	*55,675*
கம்பகா மாவட்டம்	*45,807*
பதுளை மாவட்டம்	*36,585*
புத்தளம் மாவட்டம்	*33,218*
மாத்தளை மாவட்டம்	*20,936*
இரத்தினபுரி மாவட்டம்	*17,979*
கேகாலை மாவட்டம்	*14,095*
குருநாகல் மாவட்டம்	*13,438*
களுந்துறை மாவட்டம்	*8,601*
அனுராதபுரம் மாவட்டம்	*7,113*
காலி மாவட்டம்	*6,093*
பொலனறுவை மாவட்டம்	*5,875*
மொனருகலை மாவட்டம்	*5,023*
மாத்தறை மாவட்டம்	*3,918*
அம்பாந்தோட்டை மாவட்டம்	*1,553*
பிறபகுதி மாவட்டம்	*61,500*
மொத்தம	*5,13,832*

(இர.ந.வீரப்பன், உலகத் தமிழர் பக். 356-357).(விழுக்காட்டில்)

	1946	1953	1963	1971	1981
சிங்களர்கள்	69.41	69.36	70.99	71.96	73.95
இலங்கைத் தமிழர்கள்	11.01	10.96	11.00	11.22	12.70
இந்தியத் தமிழர்கள்	11.73	12.03	10.61	9.26	5.52

மொத்தம் 6,00,000 தமிழர்கள் பெரும்பான்மையான சிங்களவர்கள் வசிக்கும் இலங்கையில் வாழ்கின்றார்கள்.

(Sonrce: Statistical Pocket Book of the Democratic Socialist Republic of SriLanka *1985, Department of Census and Statistics).*

இந்தியத் தமிழர்களுக்கு மட்டும்தான் குடியுரிமை அளிக்க இலங்கை அரசு அஞ்சுகிறது. தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள் (மலையகத் தமிழர்கள்) இலங்கைத் தமிழர்களோடு இணைந்துவிட்டால் அரசியலிலும் சிங்களர்களுக்கு வாய்ப்புக் குறைந்துவிடும் அல்லது தீங்கு ஏற்பட்டுவிடும் என அஞ்சினார்கள். பொதுவாக, வட இலங்கையிலும் மலைநாட்டுத் தோட்டங்களிலும் வாழும் தமிழர்கள் இந்தியத் தமிழருடன் இணைந்து சிங்களவருடைய மொழி, பண்பாடு சமயம் ஆகியவற்றிற்கு ஒரு தீங்காக அமைந்துவிடுவர் என்ற அச்சம் சிங்களவர் உள்ளத்தில் ஊன்றிவிட்டது.

(மொத்தத்தில் இலங்கையில் இருக்கும் 24 மாவட்டங்களில் 8 மாவட்டங்களில் சிங்களவர்கள் சிறுபான்மையினர் ஆக இருக்கின்றார்கள். அவ் 5 மாவட்டங்களில் இலங்கைத் தமிழர்களுக்கு அறுதிப் பெரும்பான்மை இருக்கின்றது. மேலும் இந்தியத் தமிழர்கள் பெரும்பான்மையாக இருக்கும் நுவாரா அலியா (NUWARA ALIYA) மாவட்டத்தைத் தவிர, மற்ற ஏழு மாவட்டங்களும் ஒன்றையொன்று ஒட்டி அடுத்து அடுத்திருக்கின்றன. இப்பகுதிகள்தான் பன்னெடுங்காலமாகத் தமிழர்கள் வாழும் வடக்கு, கிழக்கு மாநிலங்கள் ஆகும். சிங்களர்கள் சிங்கள மொழியைப் பேசுகின்றனர். அவர்களில் 93 விழுக்காட்டினர் புத்த மதத்தைப் பின்பற்றுகின்றனர்.)

இலங்கைத்தமிழ்

எம்.ஏ. நுஃமான் கூறுகிறார்: "இலங்கைப் பேச்சுத்தமிழை(1)யாழ்ப்பாணத் தமிழ் (2) மட்டக்களப்புத் தமிழ் (3) மலையகத் தமிழ் (4) முஸ்லிம்' தமிழ் என நான்கு முக்கிய துணைக்கிளை மொழிகளாகப் பாகுபடுத்தலாம்.

யாழ்ப்பாணத் தமிழ் என்பது யாழ்ப்பாண மாவட்டத்தில் வழங்கும் தமிழையே சிறப்பாகக் குறிக்கும். எனினும் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளி நொச்சி ஆகிய மாவட்டங்களில் வழங்கும் தமிழையும் அதில் உள்ளடக்கலாம்.

கிழக்கிலங்கையின் மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் பேசப்படும் தமிழ் பொதுவாக மட்டக்களப்புத் தமிழ் எனப்படுகிறது. கிழக்கிலங்கையின் திருக்கோண

மலை மாவட்டத்தில் பேசப்படும் தமிழ் மட்டக்களப்புத் தமிழில் இருந்து சில அம்சங்களில் வேறுபடினும் ஒரு பரந்த அடிப்படையில் அதனையும் மட்டக்களப்புத் தமிழில் அடக்கலாம்.

இலங்கையின் மத்திய மலை நாட்டில் தேயிலை இரப்பர் தோட்டங்களில் வாழும் இந்திய வம்சாவழித் தமிழர்களால் பேசப்படும் தமிழ் மலையகத் தமிழ் எனப்படுகின்றது. இந்தியத் தமிழின் செல்வாக்கினை இதில் பெருமளவு காணலாம்.

இலங்கை முசுலிம்களின் பேச்சு வழக்கே முசுலிம் தமிழ் எனப்படுகிறது. இது இலங்கைத் தமிழின் ஒரு பிரதான சமூகக்கிளை மொழியாகும். அரபு சொற்கள் அதிகம் பயின்று வருவது இக்கிளை மொழியின் ஒரு தனிப்பண்பாகும். இலங்கையின் கிழக்கு, வடக்கு மாகாணங்களில் வாழும் முசுலிம்களின் பேச்சு வழக்குக்கும் இடையே காணப்படும் பிரதேச ரீதியிலான வேறுபாடுகளின் அடிப்படையில் இக்கிளை மொழியை (1) கிழக்கு வடக்கு வகை (2) தென்மேல் மத்திய வகை என இரண்டு துணைக்கிளை மொழிகளாக வகைப்படுத்தலாம். தென்மேல் மத்திய வகையில் சிங்கள மொழியின் செல்வாக்கு அதிகம் காணப்படுகின்றது."

இலங்கைப் பண்பாடும்: தமிழ்நாட்டின் பங்கும்

பண்டைய காலத்திலிருந்தே தமிழர்கள் இலங்கையில் வாழ்ந்து வருவதால் இலங்கைப் பண்பாடு தோன்றி, வளர்ச்சியடைவதற்குத் தமிழர்கள் சிறப்பான பணி செய்திருக்கிறார்கள். இப்பணிகளில் சிறப்பான சில மட்டும் கீழே கூறப்பட்டுள்ளன.

சிங்களவர்களும் இலங்கையின் பழங்குடிகள் அல்லர், தமிழர்களும் அல்லர்; வெத்தாக்கள்தான் (veddahs) இலங்கையின் மிகப் பழமையான குடிகளாவார்கள். வெத்தாக்களின் எண்ணிக்கை இன்று மிகக் குறைவு. வெத்தாக்கள் கூடத் தமிழ்ப் பண்பாட்டைத்தான் ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் வழிபடும் 'கண்டேசியாவும்' தமிழ்நாட்டு முருகன் கடவுளும் ஒருவரே. முருகனின் மனைவி வள்ளி; வள்ளியின் பெயரை வெத்தா பெண்கள் பலர் வைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

மேலும் இலங்கையில் தொன்றுதொட்டு வாழும் நாகர்களும் இலங்கையில் வாழ்ந்த தமிழர்களுடன் தொடர்பு கொண்டு தமிழ் மொழி மற்றும் பிற தமிழர் பண்பாட்டுக் கூறுகளை உறிஞ்சி ஏற்றுக் கொண்டவர்கள். தொடக்கக் காலத்தில் நாகர் 'எழு' என்னும் மொழியைப் பேசினர். நாளடைவில் அம்மொழி தமிழோடு இணைந்து தமிழாகவே மாறிப் போய்விட்டது. மதுரைத் தமிழ்ச்சங்கத்தைச் சார்ந்த புத்தன் தேவனார் ஒர் நாகராவர். ஈழத்துப் பூதத் தேவனார் பாடல்கள் சிறந்த சங்க இலக்கியத்தில் உள்ளன. (அகம் 3 பாடல், குறுந்தொகை 3, நற்றிணை 1 ஆக 7 பாடல்கள்). முதற்சங்கப் புலவர்களான முடிநாகராயர் இளநாகர், நீலகண்டனார் என்பவர்கள் ஈழநாட்டைச் சேர்ந்த சங்கப் புலவர்கள் எனக் கருதப்படுகின்றனர்.

சேரன் செங்குட்டுவன் கொடுங்கோளூரில் பத்தினித்தேவிக்கு எடுத்த விழாவில் இலங்கைமன்னன் முதலாம் கயவாகு சேர மன்னனுடன் அமர்ந்து இவ்விழாவைச் சிறப்பித்தான். மேலும் விழா முடிந்து தம் நாடு திரும்பியபின் இலங்கை மன்னனும் தம் நாட்டில் பத்தினித் தேவிக்குச் சிலை எடுத்து விழா நடத்தினான். இப்பத்தினித் தெய்வத்தைப் பத்தினித் தெய்யோ (தெய்வம்) என்று சிங்களவர் போற்றி பத்தாம்

நூற்றாண்டு வரை வழிபட்டு வரலாயினர். அதற்குப் பிறகு இவ்வழிபாடு பௌத்த சமயத்தைச் சேர்ந்த "தாரையின்" வழிபாடாக மாறியது.

சங்ககாலத்தில் தமிழ் நாகரீகமே வேங்கடம் முதல் இலங்கையின் மையப்பகுதி வரை பெருவாழ்வு பெற்றிருந்தது. அக்காலம் தொட்டு இன்றுவரை சமுதாயப், பொருளாதாரத் துறைகளிலும், சிந்தனைப் போக்கிலும் இலக்கிய வளர்ச்சியிலும் இவ்விரு நாடுகளும் ஒத்த இயல்புடையனவாக உள்ளன. (க. த. திருநாவுக்கரசு).

சிங்களவர்கள் வருணனை வழிபடுகின்றனர். தமிழரிடம் இருந்தே இந்த வருண வழிபாட்டைச் சிங்களவர்கள் கற்றிருக்கலாம் என்று மயிலை சீனி வேங்கடசாமி கூறுகின்றார். சங்க காலத்திற்குப்பின் வருண வழிபாடு தமிழ் நாட்டில் மறைந்தது. எனவே சங்ககாலத்திலேயே இவ்வழிபாட்டு நெறி இலங்கைக்குச் சென்று பரவியிருத்தல் கூடும்.

சோழ நாட்டைச் சேர்ந்த சங்க மித்திரதேரர் மகாசேனன் காலத்திலும், புத்ததத்த மகாதேரர் கி.பி.ஐந்தாம் நூற்றாண்டிலும், சோழ நாட்டினரான தருமபாலர், காஞ்சிமாநகரத்தைச் சேர்ந்த ஆனந்ததேரர், பௌத்தர்களால் போற்றிப் படிக்கப்பட்டு வரும் "அபிதம்மார்த்த சங்கிரதம்' எனும் நூலை இயற்றிய அநிருத்த தேரர், மற்றும் பல பௌத்த சமயத்துறவிகளும், அறிஞர்களும் தமிழகத்திலிருந்து இலங்கைக்குச் சென்று வந்துள்ளனர். இவர்களில் தமிழ்நாட்டுப் புத்ததத்த மகாதேரரைப் புத்த சமயத்தை இலங்கையில் நாட்டிய இரண்டாவது பெருந்தலைவராகச் சிங்களவர்கள் போற்றுகின்றனர். பாண்டிய நாட்டைச் சேர்ந்ததம்மகீர்த்தி (தரும கீர்த்தி) இரண்டாம் பராக்கிரம பாகுவால் இலங்கைக்கு அழைக்கப் பட்டார். அம்மன்னரின் குருவாகவும் விளங்கினார். இவர்தான் மகாவமிசத்தின் இரண்டாம் பகுதியாகிய சூலவமிசத்தின் ஆசிரியர். நான்காம் பராக்கிரம பாகுவின் குலகுருவாக இருந்தவர் சோழ நாட்டைச் சேர்ந்த மகாதேரர். "பிரீவினாக்கள்" எனும் பெயர் பெற்ற உயர் கல்வி நிலையங்களில் பௌத்த பிக்குகளுக்குக் கற்றுத்தரும் மொழிகளில் ஒன்றாக இருந்தது, தமிழ், கி.பி. 9ம் நூற்றாண்டிற்குப் பிந்திய தமிழ்க் கல்வெட்டுகள் ஏராளமாகக் கிடைத்துள்ளன. 17,18 ஆம் நூற்றாண்டுகளில் தமிழில் இருந்த புத்தசாதகக் கதைகள் சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன.

✓ சோழர் ஆட்சி பண்டைய இலங்கைத் தமிழ்ப் பண்பாட்டிற்கு அணிகலனாக இருந்தது. சோழப் பேரரசு தமிழகத்தில் எத்தகைய ஆட்சி அமைப்பு முறையை நிறுவியதோ அதே வகையான ஆட்சியமைப்பு முறையை இலங்கையிலும் நிறுவ முயன்றது. சோழப்பேரரசு மண்டலங்களுக்குள் ஒன்றாக இலங்கை சேர்த்துக் கொள்ளப்பட்டது. இராசராசனின் சிறப்புப் பெயர்களுள் மும்முடிச் சோழன் என்பது ஒன்றாகும். அப்பெயரை அடிப்படையாகக் கொண்டு மும்முடிச் சோழ மண்டலம் என இலங்கைக்கு வழங்கப்பட்டது. இந்த மண்டலப் பகுதி இராசராச வளநாடு, விக்கிரமசோழ வளநாடு போன்று பல வளநாடுகளாகப் பிரிக்கப்பட்டது. தமிழகத்தில் இருந்த வரிவிதிப்பு, தண்டுதல் முறையை இலங்கையிலும் பின்பற்றியது. சோழர் காலத்தில் சிறப்புற்று விளங்கிய 'காசு' எனும் பணம் இலங்கையில் புழக்கத்தில் இருந்தது. இலங்கையிலிருந்த முக்கியமான நகரங்களில் சோழப்படைகள் நிறுத்தப்பட்டிருந்தன. கொழும்பு மாநகர் அரும்பொருள் காட்சியகத்தில் உள்ள தமிழ்க் கல்வெட்டில் பின்வரும் செய்தியைக் காணலாம். "சோழ மண்டலத்து க்ஷத்திரிய சிகாமணி, வளநாட்டு, வெளா(விளா) நாட்டுச் சிறுகூற்ற நல்லூர்கிழவன்

தாழிகுமரன் ஈழமான மும்முடிச் சோழ மண்டலத்து மாதோட்டமான இராசராசபுரத்து எடுப்பித்த ராசராச ஈசுவரத்து மகாதேவர்க்குச் சந்திரா தித்தவல் நிற்க". "இக்கல்வெட்டால் சோழநாட்டுத் தலைவன் ஒருவன் ஈழமண்டலத்து மாதோட்ட நகரத்தில் தன் நாட்டு வேந்தன் பெயரால் "இராச ராசேச்சும்' எனும் சிவன் கோயிலை எடுப்பித்தான் என்பதும், அதற்கு அர்த்தசாம வழிபாட்டிற்கும், வைகாசித் திருவிழாவிற்கும் நிவந்தமாக இறையிலி நிலட அளித்தான் என்பதும் அறியப்படுகின்றன. அன்றியும், ஈழ மண்டலம் இராசராசன் சிறப்புப்பெயரால், மும்முடிச் சோழ மண்டலம் என அந்நாளில் வழங்கப்பட்டு வந்தது என்பதும் மாந்தோட்ட நகரம், இராசராசபுரம் என்னும் மற்றொரு பெயரும் பெற்றிருந்தது என்பதும் இக்கல்வெட்டால் தெரிய வருகின்றன" (க.த. திருநாவுக்கரசு).

ஆகையால், சோழராட்சியில் இலங்கையில் தமிழகப் பண்பாட்டுக் கலாச்சாரப் பூங்கா பூத்துக்குலுங்கியது. சோழப் பாணியைக் கொண்ட பல கோயில்கள் இலங்கையில் நிமிர்ந்து நின்றன. உயர்ந்த கோபுரங்களும், பரந்த சுற்றுக்களும் கொண்ட இவ்விலங்கைக் கோயில்கள் தமிழர்களின் நன்கொடை என எடுத்தியம்புகின்றன. இலங்கைக் கோயில்களில் திருவிழாக்கள், கோயிலாட்சி முறை, நடன-நாட்டிய-இசை முறைகள் தமிழகத்தைத் தழுவியனவாகவே இருந்தன. சோழர் காலத்தில் தமிழகக் கோயில்களில் தேவதாசி முறை சிறப்புற்று விளங்கியது போல் இலங்கைக் கோவில்களிலும் இம்முறை சிறப்புற்று விளங்கியது. தமிழகத்தில் வளர்ந்த கருநாடக இசை இலங்கையிலும் சிறப்புற்று விளங்கிற்று. இவை பற்றிய ஆதாரங்கள் இலங்கை நூல்களில் அதிகம் கிடைக்கின்றன. உதாரணமாக, பொலனறுவாவில் பல சிவன் கோவில்கள் கட்டப்பட்டன. அதில் ஒரு கோயிலை "வானவன் மாதேவிச்சுரம்" என அக்கோயில் கல்வெட்டு ஒன்று குறிப்பிடுகிறது. வானவன் மாதேவி இராசராசனின் மனைவி. இராசேந்திரனின் தாயார். மாதோட்டத்தில் உள்ள கி.பி. ஏழாம் நூற்றாண்டில் கட்டிய திருக்கேதீச்சுரத்தை இராசராசன் சிறந்த முறையில் கட்டி "இராசராசேச்சுரம்" எனப் போற்றினான். பதினோராம் நூற்றாண்டில் சிங்கள அரசன் முதலாம் பராக்கிரம பாகு பொலனறுவாவில் கட்டிய பௌத்தக்கோயில்கள், தகோபாக்கள், சிற்ப வடிவங்கள் சோழர் காலத்துக்கலை, கட்டிட முறையைத் தழுவியதாக இருக்கின்றன. உதாரணமாக, தூபராம கோயில் சோழர் சிற்பக்கலைப் பாணியைப் பின்பற்றியதாக இருக்கின்றது எனப் பெர்சிபிரவுன் கூறுகின்றார்.

யாழ்ப்பாணத்தில் தமிழ்ச் சங்கத்தை நிறுவிய செகராசசேகரனே ஒரு புலவனாக விளங்கினான். ஆகையால் 13ஆம் நூற்றாண்டளவில் தமிழ் இலக்கியம் வளர யாழ்ப்பாண மன்னர்கள் உதவினர். யாழ்ப்பாண அரசர்கள் சைவ சமயத்தைத் தழுவியவர்களாவர். அவர்களுடைய காசுகளில் ஒருபுறம் படுத்திருக்கும் நந்தியும் மற்றொருபுறம் சேதுவைக் குறிக்கும் சின்னமும் பொறிக்கப்பட்டிருந்தன. அவர்கள் பலர் சிவன் கோயில்களைக் கட்டியுள்ளனர். இவர்கள் தங்கள் தாயகத்துக்கு மட்டுமில்லாமல் இராமேசுவரம் போன்ற தமிழகத்துத் திருக்கோயில் திருப்பணிகளையும் செய்துள்ளனர்.

தற்கால இலங்கை வளர்ச்சியடைவதற்கும் தமிழர்கள் சிறப்பாகப் பணி செய்திருக்கின்றார்கள். இலங்கையின் மத்தியப் பகுதியில் இரப்பர், தேயிலை தோட்டங்களில் பணிபுரியும் இந்தியத் தொழிலாளிகள் பாலைவனத்தைச் சோலைவனமாக்கினார்கள். இலங்கையைக் கீழைநாடுகளின் சொர்க்கமாகவும் (*Paradise of*

the East) புன்னகை பூக்கும் தேயிலைத் தோட்டங்களாகவும் *(Smiling tea garden)*. இவர்கள் மாற்றினார்கள் எனக் கூறப்படுவதும் உண்டு. இலங்கை முழுவதிலும் சாலைகள் போடல், இரயில் பாதைகள் அமைத்தல், தந்தி இணைப்புகள் கொடுத்தல், மின் வசதி செய்தல், சுகாதார வசதிகள் செய்தல் முதலிய அனைத்துப் பெரிய தொழிலமைப்புகளிலும் தொழிலாளிகளாகப் பணியாற்றினார்கள். ஆகையால், ஓரளவு தற்கால இலங்கைப் பொருளாதாரத்தை உருவாக்கி உயர்த்தியவர்கள் இவர்களே எனவும் கூறலாம்.

இலங்கைத் தமிழர்கள் எல்லோரும் இன்றுகூட தமிழ்ப் பெயர்களைத்தான் வைத்துக் கொள்கிறார்கள். இலங்கையில் உள்ள சில ஊர்களுக்குகூட தமிழ் நாட்டு ஊர்ப்பெயர்களையே வைத்திருக்கிறார்கள். உதாரணமாக, நெய்வேலி, இராமநாதபுரம், நாகர்கோயில், வல்லிபுரம் போன்ற பெயர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள சில முக்கிய ஊர்களுக்கு வழங்கும் பெயர்களாகும். அக்காள் மகளை, அத்தை மகளை, தாய் மாமன் மகளைத் திருமணம் செய்து கொள்ளும் தமிழ்ப்பண்பாடும் இவர்களிடையே இன்றும் இருக்கின்றது.

சமூக அமைப்பு

இலங்கைத் தமிழரின் திருமணங்களில் வாழ்க்கையின் புனிதத் தன்மைகளையும் ஒழுக்கத்தினையும் விடாது கடைப்பிடித்து வருவதைக் காணமுடிகிறது. ஒரு சில திருமணங்களைத்தவிர, பொதுவாகச் சாதி அடிப்படையில் அமைந்து சமுதாயம் பிரிந்துள்ளதால் புறச்சாதி மணத்தடையை இறுக்கமாகப் பேணிப்பாதுகாத்து வருகின்றனர். ஒரு பெண் பல ஆண்களைக் கணவனாக மணந்துகொள்ளுதலையோ அல்லது புணர்தலில் ஈடுபடுதலையோ சமூகம், சட்டம், மதம் போன்றவற்றின் இசைவாணையைப் பெற்றுவிடவில்லை. எனினும் மிக மிக அருமையாகவே ஆண்களாயினும் சரி, பெண்களாயினும் சரி உச்சமனநிறைவு கிடைக்கிறது என்ற காரணத்திற்காகச் சட்டத்துக்குட்படாத ஆனால் சமுதாயத்துக்குத் தெரிந்தோ தெரியாமலோ மதச் சடங்குகளைப் புறக்கணித்து ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியரை அல்லது கணவன்மாரைக் கொண்டிருத்தலும் உண்டு. கணவனை இழந்த பெண்கள் மறு மணம் செய்யும் வழக்கம் தமிழ்ப் பெண்களிடையே கட்டுப்படுத்தப்படினும் அண்மைக் காலங்களில் விதவையின் வயதினைப் பொருத்து இதன் நிலை மாறுபடுவதைக் காணலாம்.

பொதுவாக இலங்கை வாழ் தமிழரிடையே திருமணத்தைப் பொறுத்தவரை கணவனாக வருபவரின் தொழில் குறித்து மணமகள் அல்லது பெற்றோர், மற்றும் உறவினர் மிகுந்த அக்கறை செலுத்தி வருவதைக் காணலாம். காதல் திருமணத்தைப் பொறுத்தவரை அக்காதலர்களின் தீர்மானமே முக்கியத்துவம் பெற்றுவிடுகிறது. இலங்கைவாழ் தமிழ்ப் பெண்கள், குறிப்பாக இலங்கைத் தமிழரைச்சார்ந்தவர்கள் திருமணமானபின்னர் பெரும்பாலும் தமக்குப் பெற்றோரால் சீதனமாக வழங்கப்பட்ட வீட்டில் வாழும் பண்பு உண்டு. சீதனமாக வீடு இல்லாவிடின் பெண்களின் பெற்றோரின் ஆலோசனைப்படியோ அன்றிக் கணவனும்-மனைவியும் தாங்களாகவோ தொழிலிடத்தைச் சார்ந்த பகுதிகளில் நிரந்தரமாக அல்லது தற்காலிகமாக தம் பொருளாதார நிலைக்கேற்ப வாழ்வு மேற்கொண்டு வருவதைக் குறிப்பிட்ட இவ்வாய்வின் மூலம் அறிய முடிகின்றது. இந்நிலை இந்தியாவில் தமிழ்ப்பெண்களைப் பொறுத்தவரை எதிர்மாறானதாக அமைந்து விடுகிறது.

இந்தியாவிலுள்ளது போல திருமணத்தின் பின்னர் கணவர் வீட்டில் குடியிருக்கும் நிலை மிகக்குறைவே. கணவரின் வயதான பெற்றோருக்கு உதவியாகச் சென்றிருத்தல் என்ற பண்பு மிகச் சிலருக்கே கிடைக்கப்பெற்றது.

இலங்கையில் தமிழ்ப் பெண்களிடையே திருமண வயதைப் பொறுத்தவரை கடந்த 30 ஆண்டுகளில் படிப்படியாகப் பின்தள்ளப்பட்டு வருவதைக் காணலாம். இலங்கைத் தமிழ்ப்பெண்களின் சராசரி திருமண வயது 23.8 ஆகவும் இந்திய தமிழ்ப்பெண்களிடையே 19.6 ஆகவும் உள்ளது. இலங்கைத் தமிழ்ப் பெண்களிடையே திருமண வயது பின் தள்ளப்பட்டதற்குப் பல்வேறு காரணங்கள் உண்டு. கட்டாயக் கல்வி, கல்விக்கான கால நீடிப்பு, சீதன வழக்கு முறை, தமது கல்வி, பொருளாதார நிலைக்கேற்ப தாங்கள் சார்ந்த சமூகத்தில் கணவனைத் தேர்ந்தெடுக்க வேண்டிய நிலை-போன்றவை முக்கியக் காரணிகளாக அமைந்து விடுகின்றன.

பொதுவாக இலங்கை, இந்தியத் தமிழரிடையே ஒழுங்குபடுத்தப்பட்ட திருமணமுறையே பின்பற்றப்பட்டு வருகின்றது. இவர்களில் கிறித்தவ மதத்தைத் தழுவியவர்களைவிட, ஏனையோர் திருமணம் சம்பந்தமான பேச்சுகளுக்கு முன்னரே சாதகப் பொருத்தம் அறிவது முக்கியமான நடைமுறை யாகக் கொள்கின்றனர். காதல் திருமணத்தில் சாதகப் பொருத்தம் அநேகமாகப் பார்ப்பதில்லை. இலங்கையில் தமிழர் சமுதாயம் சாதி அடிப்படையில் பிரிக்கப்பட்டிருக்கின்றது. அண்மைக் காலங்களில் சாதிப்பாகுபாடு காட்டல் பலமிழந்து வரினும் திருமணநிலையில் இன்றும் இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. புறச்சாதித் திருமணம் மிகக் குறைவே.

இலங்கையில் தமிழர் சமுதாயத்தில் ஒழுங்குபடுத்தப்பட்ட திருமணமே முக்கியத்துவம் பெறுகிறது. அதாவது இலங்கைத் தமிழ்ப் பெண்களில் 79.1 விழுக்காட்டினரும், இந்தியத் தமிழ்ப் பெண்களில் 75.0 விழுக்காட்டினரும் ஒழுங்குபடுத்தப்பட்ட திருமணத்தின் மூலமே வாழ்வினை ஏற்படுத்தியவர்களாவர். காதல் வயப்பட்டு, ஆனால் பெற்றோரின் சம்மதத்துடன் நடந்த திருமணங்கள் முறையே 12.3, 15.4 விழுக்காடாகவுள்ளது. இரு பகுதிப்பெற்றோரும் வெறுத்த நிலையில் திருமணம் செய்தோர் முறையே 8.6, 9.6 விழுக்காடாக இருப்பதைக் காணலாம்.

இந்தியத் தமிழர்களைப் பொறுத்தவரை, கூட்டுக்குடும்பமுறையே பெருமளவுக்கு கைக்கொள்ளப்பட்டுள்ளது. சூழல், வாழ்க்கை முறை, பொருளாதார நிலை, போன்றன கூட்டுக்குடும்ப முறையை வலிந்து புகுத்தி உள்ளது. தோட்டத்தொழிலாளரின் குடும்பத்தில் 12 வயதுக்கு மேற்பட்டோர் தொழில் செய்யக்கூடிய வாய்ப்பு ஏற்படுவதால் கூட்டுகுடும்ப அமைப்பினால் வருமானம் அதிகரிக்க வழியுண்டாகிறது. இவை தவிர, பெற்றோர் தொழிலுக்குச் செல்லும்போது குழந்தைகள், சமையல் வேலைகளைக் கண்காணிக்கக் கூட்டுக் குடும்பமுறை பெரிதும் உதவுகின்றது.

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி 42.9 விழுக்காட்டுக் குடும்பங்கள் கூட்டுக் குடும்பமாக இயங்கி வருவதைக் காணமுடிகிறது. தனிக்குடித்தனம் செய்பவர்கள் பொதுவாக 40 வயதைத் தாண்டியவர்களாக இருப்பதைக் காணலாம். தனிக்குடித்தனம் செய்யும் இளம் குடும்பத்தினர் எண்ணிக்கையில் மிகக் குறைவே.

இலங்கையில் தமிழ்ப் பெண்களைப் பொறுத்தவரை தொழிலில் ஈடுபட்டவர்கள் மிகக்குறைவே. இலங்கையில் சகல இனங்களிலும் தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்களின் பங்கு 1971 இல் 22.5 விழுக்காடாகும்.

குடும்ப வாழ்க்கை நம்பிக்கையின் அடிப்படையில் அமைந்தது. இதனை மதம் பல்வேறு வழிகளில் பிணைத்துள்ளது. பெண்கள் ஆலயங்களுக்குச் செல்வது, விரதமிருப்பது, வீடுகளில் பூசை செய்வது போன்றவை மதத்தின் பால் ஈர்க்கப் பட்டதன் விளைவுகளேயாம்.

சமயம்

இன்று இலங்கையிற் பௌத்தம், இந்து சமயம், இசுலாம், கிறித்துவம் என்னும் நால்வகைச் சமயங்கள் மக்களிடையே வழக்கிலுள்ளன. இவற்றில் பௌத்தம் குடித்தொகையிற் பெரும்பான்மையினரான சிங்கள மக்களின் முதன்மையான சமயமாகத் திகழ்கின்றது. இலங்கையில் வாழும் சிறுபான்மை யினரில் தமிழரின் தலையாய சமயமாய் விளங்குவது இந்து சமயம்.

1971 ஆம் ஆண்டின் குடித்தொகைக் கணக்கின்படி இலங்கை மக்களில் 17.6 நூற்று வீதத்தினர் அதாவது முழுக்குடித் தொகையான 1,27,11,143 பேரில் 22,39,319 பேர் இந்துக்கள். இந்நாட்டில் வாழும் தமிழ் மக்களில் இலங்கைத் தமிழர் என்னும் பிரிவினரில் 80.59 நூற்று வீதத்தினரும் இந்தியத் தமிழர் என்னும் பிரிவினரில் 89.33 நூற்று வீதத்தினரும் இந்துக்கள்.

இலங்கையின் வடமாகாணத்தில் யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு என்னும் இடங்களிலும், கிழ்மாகாணத்தில் திருக்கோணமலை, மட்டக்களப்பு என்னும் இடங்களிலும், மத்திய மாகாணத்தில் நுவரேலியாவிலும் இந்துக்கள் பெருந்திரளாக வசிக்கின்றனர். ஏனைய இடங்களில் அவர்கள் சிதறலாகக் காணப்படுகின்றனர்.

பாரம்பரியத் தமிழ்ப்புலத்திலே தமிழர்களது முதன்மைச் சமயமான இந்து சமயத்தைச் சேர்ந்தவர்கள், மொத்தக் குடித்தொகையில் 59.3 விழுக்காட்டினராகக் காணப்படுகின்றனர். மேலும், இசுலாம் மதத்தைச் சேர்ந்தோர் 17.6 விழுக்காட்டினராகவும், பௌத்த மதத்தினர் 12.5 விழுக்காட்டினராகவும், அமைகின்றனர். யாழ்ப்பாணம், வவுனியா முல்லைத்தீவு, மட்டக்களப்பு, ஆகிய மாவட்டங்கள் இந்துக்கள் பெரும்பான்மையினராக வாழும் (66 விழுக்காட்டிற்கு மேல்) மாவட்டங்களாக உள்ளன. அம்பாறை மாவட்டத்தில் முசுலிம்களும் (41.6 விழுக்காடு) மன்னார் மாவட்டத்தில் உரோமன் கத்தோலிக்கரும் (41.6 விழுக்காடு) பெரும்பான்மையினராகக் காணப்படுகின்றனர். திருக்கோணமலை மாவட்டத்தில் இந்துக்களும், முசுலிம்களும் ஏறத்தாழ சமமாக (33 விழுக்காடு) உள்ளனர். பௌத்த மதத்தைச் சேர்ந்தோர் அம்பாறை (37 விழுக்காடு), வவுனியா (16 விழுக்காடு) ஆகிய மாவட்டங்களில் குறிப்பிடத்தக்க அளவிற் காணப்படுகின்றனர்.

இலங்கைத் தமிழர் சிவன், முருகன் முதலிய தெய்வங்களை அதிமாக வழிபடுகின்றனர் உதாரணமாக, பஞ்ச பூதங்களான நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் முதலியவை சம்பந்தப்பட்ட ஐந்து சிவன் கோவில்கள் இவர்கள் வசிக்கும் இடங்களில்

பரவலாக இருக்கின்றன. மன்னாருக்கு அருகே உள்ள திருக்கேதிசுவரம், திருக்கோணமலையிலுள்ள கோணேசுவரம், யாழ்பாணத்தில் உள்ள நகுலேசுவரம், வைத்திசுவரம், கொழும்புக்கு 50 மைல்கள் தொலைவிலுள்ள முனிசுவரம் முதலியவை இந்த ஐந்து சிவன் கோவில்களாகும். தேவராம் பாடிய மூவர் திருக்கேதிச்சுரம் கோயில், திருக்கோணேசர் ஆலயங்களில் கோயில் கொண்டுள்ள இறைவனைப் போற்றிப்பாடிய தேவாரப் பதிகங்கள் கிடைத்துள்ளமையால் இக்கோயில்கள் கி.பி. ஏழாம் நூற்றாண்டிற்கு முன்பே சிறப்புற்றிருந்தமை தெரிய வருகிறது. பண்டைத்தமிழ் மக்கள் முருகனைக் குறிஞ்சி நிலத்துக்குரிய தெய்வமாகப் போற்றி வழிபட்டனர். இம்முறையில் இலங்கையில் கதிரை மலையிலும் முருக வழிபாடு சிறப்புற்று விளங்குவது குறிப்பிடத்தக்கது. திருமால் வழிபாடும் இலங்கையில் ஓரளவு உண்டு. சித்திரை முதல் நாள், விநாயக சதுர்த்தி, ஆயுதபூஜை தீபாவளி, கார்த்திகை தீபம், திருவாதிரை, பொங்கல், தைப்பூசம், மாசிமகம், பங்குனி உத்திரம் முதலிய பண்டிகைகளை இலங்கையில் வசிக்கும் எல்லாத் தமிழர்களும் கொண்டாடுகிறார்கள். பொங்கல்,மகாசிவராத்திரி, தமிழ்புத்தாண்டு,தீபாவளி முதலியவை பொது விடுமுறை நாட்களாகும். கண்ணகி வழிபாடு சார்ந்த விழாக்களும் கொண்டாடப்படுகின்றன. குறிப்பாக பட்டிக்கோலாத் தமிழ் இந்துக்களிடம் கண்ணகி வழிபாடு சிறப்பிடம் பெற்றிருக்கிறது. இவர்களிடையே வழங்கும் கண்ணகி வழக்குரை காதை, சிலப்பதிகாரத்திலிருந்தும் தமிழ் நாட்டில் வழங்கும் கோவலன் கதை, யாழ்ப்பாணத்துக் கோவலன் கதை ஆகியவற்றில் இருந்தும் பல்வகையில் வேறுபட்டது.

கோயிற்காணி என்றபெயரில் யாழ்ப்பாணத்தில் நிலங்கள் நிறைய உண்டு. அவை தமிழகத்துச் சிதம்பரம் கோவிலுக்கு உரியனவாகும். சிதம்பரம் கோவிலில் பூசை வழிபாடு ஆகியவற்றிற்காக, யாழ்ப்பாணத்துத் தமிழர்கள் கொடுத்த கொடையாக அவை இருக்கலாம். அவை இப்போது அரசின் ஆதரவோடு பொது உடைமைப்பொருளாக ஏழை மக்கள் உடைமையாக இருக்கின்றனவாம். பண்டாரநாயகாவின் அமைச்சரவையிலிருந்த பொதுவுடைமை அமைச்சர் ஒருவர் (குடி அமைத்தல் அரசு) இதற்கு உடந்தையாக இருந்து அம்மாற்றங்களுக்கு இசைவு தந்தாராம். “சிதம்பரம் கோயிலுக்கா இனி இவை சேரப்போகின்றன ” என்று கேட்கும் சூழ்நிலை: இன்று உருவாகிவிட்டது.

1. திருக்கேதீசுவரம்

திருக்கேதிசுவரம் தலைமன்னாருக்கு அருகில் இருக்கிறது. தலைமன்னாருக்குச் சமீபத்தில் மன்னார் என்னும் ஊர் இருக்கிறது. அதற்கு அருகில் 6 மைல் மேற்கே மாதோட்டம் என்னும் சிற்றூரில் திருக்கேதிசுவரம் என்னும் சோலை சூழ்ந்த கோயில் இருக்கிறது. திருகேது ஈச்சரம் என இவ்வூரின் பெயர் பிரிக்கப்பெறும். நவக்கிரகங்களில் ஒன்றான கேது வழிபட்டு முக்தி அடைந்த தலம். ஆகையால் இதற்குத் திருக்கேதிச்சுரம் என்னும் பெயர் ஏற்பட்டது. இஃது இலங்கைத்தீவின் மேற்குக்கரையில் அமைந்துள்ளது.

இக்கோவில் பாலாவி என்னும்ஆற்றங்கரையில்அமைந்துள்ளது. இந்த மா தோட்ட நகர் முற்காலத்தில் மாந்தை என்று வழங்கப்பெற்றது. இத் திருத்தலத்தில் கேது, பிருகு துவட்டா முதலிய முனிவர்களும்,மாலியவான் என்னும் அசுரனும் வழிபட்டு வீடுபேறு அடைந்தனர். இங்குள்ள இறைவனுக்குக் கேதிசுவரர் என்றும், இறைவிக்குக் கவுரிஅம்மை என்றும் பெயர். இங்குள்ள தீர்த்தம் கவுரிதீர்த்தம் எனப்படும். இத்தலத்தினை சம்பந்தர், சுந்தரர் ஆகிய இருவரும் பாடிப் பரவியுள்ளனர். ஈழநாட்டுத் தலங்களுக்கு இவர்கள் நேரில்

வந்து பாடியதாகவும், இராமேசுவரக் கரையில் இருந்தே பாடியதாகவும் செவிவழிச்செய்திகள் கூறுகின்றன. சம்பந்தரின் பதிகம் ஒன்றும், சுந்தரரின் பதிகம் ஒன்றும் இத்தலத்தைப் பற்றி அமைந்துள்ளன. அவற்றில் சம்பந்தர் பாடல்கள் சில வருமாறு:-

விருது குன்றமா மேருவில் நாணரவா
அனல் எரியம்பாப்
பொருது மூவெயில் சென்றவன் பற்றிநின்று
உறைபதி எந்நாளும்
கருது கின்றவூர் கனைகடல் கடிகமழ்
பொழிலணி மாதோட்டம்
கருத நின்றகே தீச்சரம் கைதொழக்
கடுவினை அடையாவே! (1)

பொடிகொள் மேனியர் புலியதன் அரையினர்
விரிதரு கரத்தேந்தும்
வடிகொள் மூவிலை வேலினர் நூலினர்
மறிகடல் மாதோட்டத்து
அடிகள் ஆதரித்து இருந்தகே தீச்சரம்
பரிந்த சிந்தையராகி
முடிகள் சாய்த்தடி பேணவல் லார்தம்மேல்
மொய்த்தெழும் வினைபோமே! (2)

புத்த ராய்ச்சில புனைதுகில் உடையவர்
புறனுரைச் சமணாதர்
எத்த ராகிநின்று உண்பவர் இயம்பிய
ஏழைமை கேளேன்மின்
மத்த யானையை மறுகிட உரிசெய்து
போர்த்தவர் மாதோட்டத்து
அத்தர் மன்னுபா லாவியின் கரையிற்கே
தீச்சரம் அடைமின்னே. (3)

சுந்தரர் பாடியுள்ள பாடல்களில் சில வருமாறு:-

நத்தார்படை ஞானன்பசு வேறிந்நனை கவிழ்வாய்
மத்தம்மத யானைஉரி போர்த்தமண வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாஎலும் பணிவான் திருக் கேதீச்சரத்தானே (1)

அங்கம்மொழி அன்னாரவர் அமரர்தொழு தேத்த
வங்கம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரில்
பங்கம்செய்த பிறைசூடினன் பாலாவியின் கரைமேல்
செங்கஅரவு அசைத்தான்திருக் கேதீச்சரத்தானே! (2)

அட்டஅழ காகஅரை தன்மேஅரவு ஆர்த்து
மட்டுண்டுவண் டாலும்பொழில் மாதோட்டநன் னகரில்
பட்டவரி நுதலாளொடு பாலாவியின் கரைமேல்
சிட்டன்நமை ஆள்வான்திருக் கேதீர்சரத்தானே! (3)

மூவரென இருவரெனமுக்கண்ணுடை மூர்த்தி
மாவின்கனி தூங்கும்பொழில் மாதோட்ட நன்னகரில்
பாவம்வினை அறுப்பார்பயில் பாலாவியின் கரைமேல்
தேவளனை ஆள்வான்திருக் கேதீச்சரத் தானே! (4)

இயற்கை எழில்சூழ்ந்த இடத்தில் சிவன் இங்கு கோயில் கொண்டுள்ளான் முற்காலத்தில் சோலைகளில்தான் இறைவன் கோயில் கொண்டான் என்ற கூற்றுக்கு இந்தத் தலம் நல்ல உதாரணம் ஆகும். மாதோட்டம் என்ற இத்தலமும், தமிழகத்துத் திருவானைக்கா என்ற தலமும் மேற்கூறிய கொள்கையை நிறுவுகின்றன.

(அரு. சோமசுந்தரன், இலங்கை, பொன்முடி பதிப்பகம், காரைக்குடி, 1979 மே. பக். 41-44)

2.திருக்கோணமலை

இலங்கைச் சிவத்தலங்கள் இரண்டிலும் முதன்மை பெற்றது திருக்கோணமலையே ஆகும். இலங்கைத்தீவின் கிழக்குக் கரையில் யாழ்ப்பாணத்துக்குத் தென்கிழக்கே இது அமைந்துள்ளது. முப்புறமும் கடல் சூழ்ந்திருக்க, மலைப்பாறையான பகுதியின் உச்சியில் திருக்கோணேசுவரர் கோயில் கொண்டுள்ளார். முற்காலத்தில் வாயு தேவனும் ஆதிசேடனும் தம்முள் பலசாலியாவரென்றறியப் போட்டியிட்டுப் போராடியபோது ஆதிசேடன் மேருமலையை வளைத்துப் பிடித்தான். உடனே வாயு தேவன் தன் திறமையினால் மேருமலையின் மூன்று சிகரங்களைப் பறித்து எறிந்தான். அவற்றுள் ஒரு சிகரமே திரிகோணமலை என்று செவ்வந்திப்புராணம் கூறுகிறது. திரிகோணமலையே திருக்கோணமலையென்று பிற்காலத்தே மருவி வழங்கலானது, அதனால் இத்தலத்திற்குத் தென்கயிலாயம் என்ற பெயரும் உண்டு.

பழங்காலத்தில் இக்கோயிலை வரராமதேவன் என்ற சோழனும், அவன் மகன் குளக்கோட்டன் என்பவனும் கட்டித் திருவிழா செய்ததாகப் புராணங்கள் புகழ்கின்றன பின்னர் இலங்கைக் கயவாகு மன்னன் தன் ஆட்சி காலத்தில் (கி.பி.113-125, இக்கோயிலுக்குப் பல அறக்கட்டளைகள் அளித்துச் சிறப்பித்ததாகக் கல்வெட்டுகள் செப்புகின்றன.

கி.பி. 1623-ல் போர்த்துக்கீசியர் இப்பகுதியை வென்று மாபெரும் கோட்டை கொத்தளங்களைக் கட்டினர். கோயிலையும் அவர்கள் கைப்பற்றினர். நித்திய பூசைகள் நடைபெறாமல் தடுத்தனர். எனவே கோயில் அதிகாரிகள் கோயிலில் இருந்த பல விக்ரகங்களைப் போர்த்துக்கீசியர் அறியாவாறு மண்ணுக்குள் புதைத்து வைத்தனர் போர்த்துகீசியர் ஆட்சிகாலம் முழுவதும் கோயிலில் பூசைகள் நடைபெறவில்லை. பிறகு 1639இல் டச்சுக்காரர்கள் அக்கோட்டையையும் கோயிலையும் கைப்பற்றிப் போர்த்துக்கீசியரை விரட்டினர். டச்சுக்காரர்கள் ஆட்சியிலும் பூசைகள் நடத்த

அனுமதிக்கவில்லை. பல்லாண்டுகட்குப் பிறகு ஆங்கிலேயர் தம் ஆட்சிக் காலத்தில்தான் கோயிலில் பூசைகள் செய்ய அனுமதித்தனர். ஆனால் கோயில் பெரிதும் அழிந்துவிட்டது. முப்பது மைலுக்கு அப்பால் இருந்த கடலும் கோயிலின் அடிவாரம்வரை வந்துவிட்டது. முற்காலக்கோயில் கடலுள் மூழ்கிக்கிடக்கிறது. அதன் மண்டபச் சிகரங்களை இன்றும் கோயில் அருகில் அலைவீசும் கடலில் காணலாம். ஆனால் பழையகோயில் நோக்கி இன்றும் அர்ச்சகர் தீப ஆராதனைகள் செய்கிறார். இப்பழக்கம் ஆங்கிலேயர் ஆட்சிகாலத்தில் ஏற்பட்டதாகும். கோயில் முன் கடலோரம் உள்ள கல்லால மரத்துக்கும் பூசை செய்யப்படுகிறது. போர்த்துக்கீசியர்கள் பழைய கோயிலை இடித்துக் கடலில் எறிந்து அப்பகுதியில் கோட்டையை விரிவுபடுத்திக் கட்டியதாகவும் கூறப்படுகிறது. பழைய கோயில் இருந்த கடற்கரைப் பாறைக்குச் 'சுவாமி பாறை' என்று பெயர்.

கடற்கரையில் கோணமாக அமைந்த நிலப்பகுதியில் மலையாக அமைந்திருப்பதால் இத்தலத்திற்கு கோணமலை என்று பெயர் வந்தது. தேவாரப் பாடல் பெற்றத்தலம் ஆதலால் திரு என்பது அடைமொழியாகச்சேர்ந்தது. அதனால் திருக்கோணமலை என்று பெயர் ஏற்பட்டது. கடற்கரைப் பகுதியில் முதலில் சிறிது தூரம் சமவெளி. அதன் வழியே சென்றால் ஒரு மேட்டுப் பகுதி. அதன் தொடக்கத்தில் தான் போர்த்துக்கீசியர் கட்டிய கோட்டை உள்ளது. அம்மேட்டில் ஏறினால் சுமார் 2 பர்லாங் தொலைவில் பாறையின் உச்சியை அடையலாம். வழி எங்கும் மரங்களும் அவற்றின் ஊடே ஏராளமான மான்களும் நிறைந்துள்ளன. மலைப்பாறையின் உச்சியில் ஒரு சிறிய கோவில் உள்ளது. அது சமீப காலத்தில் 1963ஆம் ஆண்டில் பக்தர்களால் கட்டப்பட்டதாகும். அங்குள்ள சிவலிங்கம் 1957 ஏப்ரல் 4ஆம் தேதி நர்மதை நதியில் எடுக்கப்பெற்று 13-4-57இல் ரிஷிகேஷ் சுவாமி சிவானந்தரால் ஆசி கூறப் பெற்று 3.4.63ல் திருக்கோணமலைக் கோயிலில் பிரதிட்டை செய்யப்பெற்றுக் குடமுழுக்குச் செய்யப்பெற்றது. இக்கோயிலுக்கு அகத்தியர் வந்ததாக புராணம் சொல்லுகிறது. தேவேந்திரனும் இத்தலத்தை வணங்கி அருள் பெற்றுள்ளான். இங்குள்ள இறைவனுக்குக் கோணேசுவரர், லோகசங்கரர், சந்திரசேகரர் என்னும் பெயர்கள் வழங்குகின்றன. இறைவிக்கு மாதுமையாள், ராஜராஜேச்வரி என்னும் பெயர்கள் வழங்குகின்றன. இங்குள்ள தீர்த்தம் பாவநாச தீர்த்தம் ஆகும். மாவலிகங்கை என்னும் நதி இத்தலத்திற்கு அருகில் கடலில் கலக்கிறது. பழைய விக்கிரகம் இன்னும் கடல் அலைவீசும் கோயிலுக்குள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. பழங்கோயில் வாசல் கடலுள் மூழ்கியிருக்கிறது. அதற்குள் செல்லச் சில மீனவர்கள் கடலுள் மூழ்கி முயன்றதாகவும், ஆனால் முடியவில்லை என்னும் கூறுகிறார்கள். பழைய விக்கிரகம் நவரத்தினங்களால் ஆனதாம். பழையகோயிலின் ஒரு பகுதியை மலையில் உள்ள பாதாளப் படிகளின் வழியாக இறங்கிச் சென்றால் காணலாம். ஆனால் இது மிக ஆபத்தான முயற்சியாகும்.

திருக்கோணமலையில் சிவலிங்கம் எடுப்பித்து இராவணன் வழிபட்டிருக்கிறான். இவனது தாயார் இந்த இறைவனை வணங்க விரும்பியிருக்கிறாள். தாயார் மீது அளவற்ற பற்று உடைய இராவணன் அவள் வணங்குவதற்குத் திருக்கோணமலையையே கோயிலோடு பெயர்த்தெடுத்துச் சென்று தன் தாயார் முன்வைக்க முயன்றான். அம்முயற்சியால் அவன் திருக்கோணமலைச் சிகரத்தை நிலத்திலிருந்து ஒரு பகுதியை வெட்டியிருக்கிறான். அதற்கு மேல் அவனால் மலையை வெட்டவோ அசைக்கவோ தூக்கவோ முடியவில்லை. ஆனால் அவன் வெட்டிய ஒரு பகுதி கோயிலுக்கு அருகில் ஒரு பெரும்பிளவாக நிற்கிறது. சுமார் 150 அடி ஆழம் உள்ள அப்பிளவில் கடல் அலைமோதிச் சுழன்கிறது. "ஓம்" என்னும் ஒலி

கேட்டுக்கொண்டே இருக்கிறது. அந்தப்பிளவிற்கு "இராவணன் வெட்டு" என்று இன்றும் பெயர் வழங்குகிறது.

இங்கு இருபது ஆண்டுகட்கு முன்பு தரையில் குழாய் பதிப்பதற்காகத் தோண்டியிருக்கிறார்கள். அப்பொழுது 300 ஆண்டுகட்கு முன்பு போர்த்துக்கீசியருக்குப் பயந்து அர்ச்சகர்கள் புதைத்த சிலைகள் சில அகப்பட்டன. அவையாவன: சுவாமியும் அம்மனும் உள்ள சிலை, சந்திரபீடம், தனி அம்மன் சிலை, கணேசர் சிலை, அன்னம், பெரியசூலம், ஆகியன. மேலும் கடலில் இருந்து திருமால், இலட்சுமி ஆகியோரின் சிலைகளும் அகப்பட்டன. இவையெல்லாம் இப்பொழுது புதுப்பிக்கப்பட்டுள்ள கோயிலில் வைக்கப்பட்டுள்ளன. இன்றும் கடலில் நாலாவது மைலில் உற்சவ ஐம்பொன் விக்கிரகம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. பழைய கோயில் தேவத்தச்சனால் கட்டப்பட்டதாகும். இப்பொழுதும் இங்கு கோயிலில் பங்குனி உத்திரத்தில் கொடியேற்றப்பெற்றுப் பதினெட்டாம் நாளில் திருவிழாக் கொண்டாடப் பெறுகிறது. இத்தலம் நினைத்ததைக் கொடுக்கும் தலமாகும். இங்கு முன்பு கற்பகத்தரு இருந்ததாகச் சொல்லப்படுகிறது. மேலும் இங்கு தேவசபை, சூடாமணி சபை, சிந்தாமணி சபை முதலிய எல்லாச்சபைகளும் இருந்ததாகப் புராணங்கள் புகல்கின்றன. இக்கோவிலைப் பற்றிச் சம்பந்தரும், அருணகிரியாரும் பாடியுள்ளனர்.

சம்பந்தரின் தேவாரப் பாடல்கள் சில வருமாறு:-

நிரைகழல் அரவம் சிலம்பொலி அலம்பு
நிமலர் நீறணி திருமேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்தும் காரகிற் பிளவும்
அளப்பரும் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலம் கொழிக்கும்
கோணமாமலை அமர்ந்தாரே! (1)

பனித்திளம் திங்கட் பைந்தலை நாகம்
படர்சடை முடியிடை வைத்தார்
கனித்திளம் துவர்வாய்க் காரிகை பாக
மாகமுன் கலந்தவர் மதில்மேல்
தனித்தபேர் உருவ விழித்தழல் நாகம்
தாங்கிய மேருவெஞ் சிலையாக்
குனித்ததோர் வில்லார் குரைகடல் சூழ்ந்த
கோணமாமலை அமர்ந்தாரே! (2)

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்து மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்

நோயிலும் பிணியும் தொழிலர்பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோண மாமலை அமர்ந்தாரே! (3)

நின்றுணும் சமணும் இருந்துணும் தேரும்
நெறியலாதன புறம் கூற
வென்றுநஞ் சுண்ணும் பரிசினர் ஒருபால்
மெல்லிய லோடுமுட னாகித்
துன்றுஒண் பெளவம் மவ்வலும் சூழ்ந்து
தாழ்ந்துறு திரைபல மோதிக்
குன்றுமொண் கானல் வாசம்வந் துலவும்
கோண மாமலை அமர்ந்தாரே! (4)

இத்தலத்தைப் பற்றி அருணகிரிநாதரின் திருப்புகழ் வருமாறு:

விலைக்கு மேனியில் அணிக்கோவை மேகலை
தரித்த ஆடையும் மணிப்பூணும் ஆகவே
மினுக்கு மாதர்கள் இடைக்காமம் மூழ்கியே மயலூறி
மிகுந்த காமியன் எனப்பாருளோர் எதிர்
நகைக்கவே உடலெடுத்தே வியாகுல
வெறுப்ப தாகியே உழைத்தே விடாய்படு கொடியேனைக்
கலக்க மாகவே மலக்கூடிலே மிகு
பிணிக்கு ளாகியே தவிக்காமலே - உளைக்
கவிக்கு ளாய்சொலிக் கடைத்தேறவே செயும் ஒரு வாழ்வே
கதிக்கு நாயக உனைத்தேடியே புகழ்
உரைக்கு நாயேனை அருட்பாவை யாகவே
சுழற்கு ளாகவே சிறப்பானதாய் - அருள்தரவேணும்
மலைக்கு நாயக சிவகாமி நாயகர்
திருக்கு மாரனே! முகத்தாறு தேசிக!
வடிப்ப மாதொரு குறப்பாவை யாள்மகிழ் தருவேளே!
வசிட்ட காசிபர் தவத்தான யோகியர்
அகத்திய மாமுனி இடைகாடர் கீரனும்
வகுத்த பாவுறு பொருட்கோலமாய் வரு-முருகோனே!
நிலைக்கு நான்மறை மகத்தான பூசுரர்
திருக்கொ ணாமலைத் தலத்தாரு கோபுர
நிலைக்குள் வாயினில் கிளிப்பாடு பூதியில் வருவோனே!
நிகழ்ந்தும் ஏழ்பவ கடல் சூறையாகவே
எடுத்த வேல்கொடு பொடித்தூள தாஎறி
நினைத்த காரியம் அனுகூலமே புரிபெருமாளே!,(Ibid,பக் 44-52)

3. முனீஸ்வரம்

மற்றோர் சிவன் கோவில் முனீஸ்வரம். 1516ஆம் ஆண்டு இக்கோவிலை போர்த்துக்கீசியர்கள் இடித்தார்கள். கீர்த்தி இராசசிம்மா எனும் அரசர் தென்னிந்திய கைவினைஞர்களை அழைத்து வந்து இக்கோயிலை மீண்டும் எழுப்பினர்.

4. கதிர்காமம்-முருகன்

இலங்கையில் உள்ள புகழ்பெற்ற முருக ஸ்தலம் கதிர்காமம் ஆகும். இது கொழும்பிலிருந்து சுமார் 200 மைல் தொலைவில் உள்ளது. கோவிலுக்கு அருகில் மாணிக்க கங்கை என்னும் ஆறு ஓடுகிறது. அதிலிருந்து எப்பொழுதும் "ஓம்" என்ற ஒலி கேட்கிறது. அதில் தண்ணீர் எப்பொழுதும் வற்றுவதே இல்லை. குறைந்த பட்சம் முழங்கால் அளவு தண்ணீர் எப்பொழுதும் ஓடும். கோயிலில் மூன்று கலசங்கள் உள்ளன. கோயிலின் வாசற் சுவரில் மயிலுருவமும், யானை உருவமும் ஏராளமாக அமைத்துள்ளார்கள். உள்ளே சென்றதும் முருகன் சந்நிதி தோன்றுகிறது. சந்நிதியின் முற்றத்தில் பச்சைக் கொடிகள் வளர்ந்து நிழல் பரப்புகின்றன. முற்றத்தைத் தாண்டியதும் ஒரு நீண்ட மண்டபம் இருக்கிறது. அது செப்புத்தகட்டை ஓடு போல் அமைத்து உள்ள கூரையினைக் கொண்ட மண்டபம் ஆகும். அந்த மண்டபத்தில் தான் பக்தர்கள் நிற்க வேண்டும். அங்கு சாதாரணமாக 75 பேர் நிற்க வசதி இருக்கிறது. அம்மண்டபத்தில் 8 தூண்கள் உள்ளன. அவற்றின் உச்சியில் தந்தத்துடன்கூடிய யானை முகங்கள் காட்சி அளிக்கின்றன. மண்டபத்தை அடுத்து ஒரு பெரிய மேடை உள்ளது. அதில் அழகிய திரைச்சீலை தொங்குகிறது.

அத்திரையில் முருகன் வள்ளி, தெய்வானை ஆகியோரின் உருவங்கள் வரையப்பட்டுள்ளன. முன்பு அக்கோயிலில் தமிழர்கள் அர்ச்சகர்களாக இருந்து பூசை செய்தனர். இப்பொழுது சிங்களர்கள் பூசை செய்து வருகின்றனர். முதலில் அர்ச்சகர் திரையில் உள்ள தெய்வங்களைத் தொட்டு வழிபாடு செய்து வணங்குகிறார். அவர் தன் வாய், மூக்கு, காது முதலியவற்றை ஒரு துணியால் கட்டிக்கொண்டிருக்கிறார். திரையை வழிபட்டதும் அவர் கர்ப்பக்கிரகத்துக்குள் செல்கிறார். கர்ப்பகிரகத்துக்குள் மொத்தம் 7 திரைச்சீலைகள் ஒன்றன்பின் ஒன்றாகத் தொங்குகின்றன. நமக்கு முதல் திரைச்சீலைதான் தெரியும். அதனைத்தான் அர்ச்சகர் தொட்டு வணங்குகிறார். நாமும் அதனைத்தான் அருகில் இருந்து வணங்குகிறோம். கர்ப்பக்கிரகத்துள் அர்ச்சகர் மட்டும்தான் செல்லலாம். உள்ளே ஒரு எந்திரம் எழுதிய தகடுள்ள பெட்டி இருக்கிறதாம். அது முத்துலிங்க ஸ்வாமி நிறுவிய யந்திரம். அது தங்கத்தில் இலை வடிவமாக இருக்கிறது என்று சொல்வார்கள். திருவிழாவின்போது அதை ஒரு பெட்டியில் வைத்து யானைமேல் ஊர்வலம் கொண்டு வருவார்கள். அதற்கு அர்ச்சகர்கள் தீபாராதனை செய்து வணங்கிவிட்டு, வெளியே வந்து முதல் திரைச்சீலையில் ஓவியமாக உள்ள முருகனுக்கு தீப ஆராதனை நிகழ்த்துகிறார். நாமும் வணங்குகிறோம். பிறகு பக்தர்களுக்குத் திருநீறு தீர்த்தம், பிரசாதம் முதலியன வழங்கப்படுகின்றன்.

பிரதம அர்ச்சகர் பூஜை செய்வதுடன் சரி; மற்ற, படி தனித்தனியாக அர்ச்சனை இல்லை. இங்கு முதலில் விநாயகர் சந்நிதியில் தீப ஆராதனை காட்டப்படுகிறது. பிறகு

முருகன் சந்நிதியிலும், அதற்கடுத்துப் பழநி ஆண்டவர் தெய்வயானை, பைரவர், பெருமாள் சந்நிதியிலும் தீப ஆராதனைகள் நடத்தப்பெறுகின்றன. ஒரே பிரகாரத்தில் அடுத்தடுத்து இச்சந்நிதிகள் அமைந்துள்ளன. பெருமாள் சந்நிதியில் புத்தர் சிலையும் உள்ளது. எல்லாச் சந்நிதிகளிலும் திரைச்சீலைகளில் தான் ஓவியக் கடவுளைக் காண்கிறோம். எங்குமே சிலைகள் இல்லை. திரைச்சீலைக்குத் தான் வழிபாடு நடைபெறுகிறது. சுற்றுப்பிரகாரத்தில் கண்ணகி சந்நிதியும் உளளது. ஒற்றைச் சிலம்பேந்திய கண்ணகி சிலையும் திரையும் அங்குள்ளன. பழைய கயவாகு மன்னன் கண்ணகி கோயிலை இலங்கையில் அமைக்க முன் வந்ததாகச் சிலப்பதிகாரத்திலிருந்து அறிகிறோம். அந்த நாளில் இருந்தே கண்ணகி வழிபாடு இலங்கையில் பரவி இருக்க வேண்டும்.

வெளிப்பிரகாரத்தில் குருபாபா சமாதி இருக்கிறது. இக்குரு கதிர்காம முருகனுககு நெடுங்காலத்துக்கு முன்பு பூசைகள் செய்து அக்கோயில் வளர்ச்சிக்கு வித்தூன்றியவர். சித்திகள் பெற்றவர். அவரது சமாதியை இன்றும் அங்கு காணலாம். முருகன் சந்நிதிக்குப் பின்னால் மாபெரும் அரசமரம் ஒன்று நிழல் பரப்புகிறது. அம்மரக்கிளைகளில் சிங்களவர்கள் நேர்த்திக்கடன் செலுத்தும் பொருட்டுக் கட்டியுள்ள சிறுசிறு துணிகள் தொங்குகின்றன.

முருகன் சந்நதியில் அன்னத்தீபங்கள் இரு வரிசைகளாக உள்ளன. ஏராளமான மணிகள் தொங்குகின்றன. தீப ஆராதனை நடைபெறும் பொழுது பக்தர்கள் மணி முழங்குகின்றனர். பக்தர்கள் அர்ச்சனை செய்யும் பொருட்டு ஒரு பெரிய தட்டில் பலவகைப் பழங்கள், தேங்காய், அல்லிப்பூ முதலிய பூக்கள், காகிதப்பூ, ஊதுபத்தி, சூடம் முதலியன வைத்துக் கொண்டு வந்து அர்ச்சகரிடம் கொடுக்கின்றனர். கட்டணம் ரூபாய் ஒன்று பெற்றுக்கொண்டு அர்ச்சகர் பூசை செய்து நமக்குப் பிரசாதம் தருகிறார். நாம் வழங்கும் தேங்காயை எடுத்துக் கொண்டு, அவர்கள் உடைத்து வைத்துள்ள தேங்காய் மூடியும், பழங்களும் நமக்குத் தருகின்றனர். சில பக்தர்கள் ஒரு மண் சட்டியில் கதிர்காமத் திருநீற்றை நிரப்பி அதில் சூடத்தைக் கொளுத்தி, முருகன் சந்நிதியின் முன்பு நின்று வணங்கி, பிறகு ஒவ்வொரு சந்நிதியின் முன்பும் நின்று வணங்கிச் செல்கின்றனர். கடைசி வரை சூடம் எரிந்துகொண்டே இருக்கிறது. அதற்குத் தகுந்த அளவு சூடம் கையில் வைத்துக்கொண்டு பிரார்த்தனை செய்கின்றனர்.

காலையில் 5 மணிக்கும், பிறகு 9 1/2 மணிக்கும், மாலையில் 6 1/2 மணிக்கும் முருகன் கோயிலில் தீப ஆராதனைகள் நடைபெறுகின்றன. அதற்கு அரை மணி முன்பு கோயில் நடை திறக்கப்படுகிறது. தீப ஆராதனை முடிந்து அரைமணி நேரத்தில் நடை அடைக்கப்படுகிறது. அதன் பின்வரும் பக்தர்கள் வெளியிலேயே காத்திருக்க வேண்டியதுதான்.

இக்கோயிலுக்கு இந்துக்கள், முசுலிம்கள், கிறிஸ்த்தவர்கள், பௌத்தர்கள், ஆங்கிலேயர்கள், சிங்களவர்கள், வெளிநாட்டவர்கள் ஆகிய எல்லோரும் சாதி, மத, இன, மொழி, நாடு வேறுபாடின்றி வந்து காணிக்கைச் செலுத்தி வணங்குகின்றனர். முடிக் காணிக்கையும், காவடிக்காணிக்கையும் செலுத்துவோர்கள் ஏராளம். இத்தலத்தில் மூன்றுமைல் பரப்பளவில் காலடி பட்டால் முக்தி என்று கூறுகின்றனர். இங்கு ஆடித் திருவோணபௌர்ணமி அன்று ஆடிவேல் உற்சவம் மிகச்சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. அத்திருவிழாக் காலத்தில் இக்கோயிலில் ஏற்றப்படும் கற்பூரத்தின்

புகையானது அரைமைல் சுற்றளவுக்கு மணமூட்டுமாம். சிதம்பர ரகசியம் போலக் கதிர்காம இறைவனும் ஒரு ரகசியமே. சிங்களவர்கள் கதிர்காம முருகனை 'கட்டர் காமதேவா' என்று அழைக்கின்றனர். ஆடிவேலின் போது சுமார் இலட்சம் மக்கள் உள் நாட்டிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் வந்து கூடுகின்றனர். அன்று அர்ச்சகர் முருகன் கோயிலில் கர்ப்பக்கிரகத்தில் உள்ள எந்திரப் பேழையை எடுத்து யானை மீது வைத்துப் பவனி வருவார். வள்ளியம்மை கோயிலுக்கு எடுத்துச் செல்வார்கள். அங்கே வைத்திருந்து திரும்பக் கொண்டு வந்து விடுவார்கள். பத்துநாட்கள் இரவுதோறும் இப்படி நடக்கும். பத்தாவது நாள் பௌர்ணமி இரவு அன்று அங்கேயே வள்ளியம்மை கோயிலில் இருக்கும். அதைத் திருக்கல்யாண இரவு என்று சொல்வார்கள். இறைவனும், தேவியும் சேரும் அந்த இரவு, புதுமண மக்களுக்கு விசேஷமாக ஒரு ஆராதனையாகக் கொண்டாடப்படுகிறது. மாணிக்க கங்கையில் தீர்த்தம் கொடுப்பார். மூன்றுநாள் விழா நடைபெறும். நாடோறும் தேவாரம், திருப்புகழ் ஓதப்படும். இலங்கைப் பிரதமர் முதல் எல்லா அமைச்சர்களும், அதிகாரிகளும் இவ்விழாவில் கலந்துகொள்வர். இவ்விழாக்காலத்தில் உயர்வு தாழ்வு இல்லை. இங்கு பிரதமருக்குக்கூடப் பாதுகாப்புக் கிடையாது. யார் வேண்டுமானாலும் அவருடன் அங்கே பேசலாம். அவ்விழாக்காலத்தில் யாரும் அங்கே தவறுகள் செய்வதில்லை. சிங்களவர்கள், ஆங்கிலேயர்கள் எல்லாம் கூடக்காவடி எடுத்து, பூக்குழி இறங்குவது கண்கொள்ளாக் காட்சியாகும். பூக்குழி இறங்குவதுடன் ஆடிவேல்விழா முடிவடையும். இவ்விழா 10 நாள் கொண்டாடப் பெறுகிறது. இத்தலத்திற்கு வந்தால் நினைத்தது நடக்கும் என்கின்றனர்.

சிறப்பாக ஜூலை - ஆகஸ்டு மாதம் திருவிழாவின்போது காவடி தூக்குவார்கள். இத்திருவிழாவின் முடிவில் தீ மிதித்தல் திருவிழா நடக்கும். தீ மிதித்தல் திருவிழா இக்கோவிலில் மட்டும் அல்ல. கிழக்கு மாநிலத்தில் பண்டரிப்பூரிலுள்ள (Pandarippu) திரௌபதி அம்மன் கோவிலிலும் சிலாவு (Chilau) அருகில் உள்ள உடாப்பு (Udappu) இந்து கரவர்கள் கோவில்களிலும் நடக்கின்றது. கதிர்காமத்தில் 15 அடி நீளம் 4 அடி உயரமுள்ள இடத்தில் எரியும் விறகுகளை அடுக்கப்பட்டிருக்கும். காலையில் மெனிக்கங்காவுக்குச் சென்று குளிக்கின்றார்கள். குளித்தவுடன் ஓர் தலைவர் பின் நடந்து வந்து எல்லோரும் பக்தியுடன் தீ மேல் நடக்கின்றார்கள்.

கதிர்காமம் ஒரு சிறிய ஊர். இங்கு முருகன் சந்நிதிக்கு முன்னால் பல சத்திரங்கள் முற்காலத்தில் இருந்தன. அவற்றுள் நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் சத்திரமும் ஒன்றாகும். ஆனால் அவை எல்லாம் இப்பொழுது அரசாங்கத்தால் எடுத்துக்கொள்ளப்பட்டு இடிக்கப்பட்டு விட்டன. அவ்விடத்தில் வேறு புதிய கட்டடங்கள் கட்டப்பெறுகின்றன. கோவிலுக்கு எதிரில் பல சிறு கடைகள் உள்ளன. கோவிலுக்கு அருகில் இராமகிருஷ்ணா மடம் எழிலுடன் அமைக்கப்பட்டு உள்ளது. அங்கு பக்தர்கள் தங்க எல்லா வசதிகளும் உள்ளன. பக்தர்களுக்கு உணவு, உறையுள் இலவசமாக வழங்கப்படுகிறது. மூன்று வேளையும் சாப்பாடு போடுகிறார்கள். பக்தர்கள் விரும்பினால் ஏதாவது நன்கொடை அளிக்கலாம். கட்டாயம் இல்லை. ஆடிவேல் திருவிழாக்காலத்தில் பல்லாயிரம் பேர்களுக்கு இம்மடத்தில் உணவு அளிக்கப்பெறுகிறது. இது இம்மடத்தின் மாபெரும் சாதனை ஆகும். இங்கு புத்தக விற்பனையும் நடைபெறுகிறது. இம்மடத்தில் உள்ள பெரிய அடுப்பில் முழு மரங்கள் எரிவதைக் காணலாம்.

உலகத்திலேயே கதிர்காம முருகனுக்கு மட்டும்தான் உண்டியலில் அவன் பேருக்கு (செக்) காசோலை எழுதிப் போடும் பழக்கம் உள்ளது. கதிர்காம முருகன் பேருக்கு செக் எழுதி உண்டியலில் போட்டால் அது செல்லுபடியாகும்.

இராமகிருஷ்ணா மடத்திற்கு அருகில் சடையம்மா மடம் இருக்கிறது. அதிலும் பக்தர்கள் தங்குகின்றனர். அதற்கு அருகில் வள்ளி கோயில், சிவன் கோயில், முத்துலிங்கர் கோயில், புத்தர் கோயில் முதலியன உள்ளன. முருகன் சந்நிதிக்கு அருகில் உள்ள விநாயகர் சந்நிதியில் தான் முதலில் தீப ஆராதனை நடைபெறுகிறது. திரைக்கு ஆராதனை முடிந்ததும் அர்ச்சகர் வெளியே முற்றத்திற்கு வந்து அங்கு நின்றவாறே தொலைவில் தெரியும் கதிர்மலையை நோக்கி தீப ஆராதனை காட்டுகிறார். அந்தக் கதிர்மலையின் உச்சியில் தான் முருகனின் வேல் இருக்கிறது. அதற்குக் கதிர்வேல் என்று பெயர். அதிலிருந்துதான் கதிர்வேல், கதிரேசன் என்ற பெயர்கள் மக்களுக்கு வைக்கப்பட்டுள்ளன. முருகன் சூரபதுமனை வதம் செய்த வேலை அங்கே ஊன்றி இருப்பதாக ஐதிகம். ஈரத்துணியுடன் மலை ஏறிவிட்டுத் திரும்புவதாகப் பிரார்த்தனை. ஒற்றையடிப் பாதை மூலம் மலைமீது ஏறிப்போகவேண்டும்.

கதிர்மலையில் கிடைக்கின்ற விபூதிதான் கதிர்காமத்தின் பிரசாதமாக அளிக்கப்படுகிறது. அது மலையிலேயே விளைகிறது. மலையிலிருந்து வெட்டி எடுத்து, நீறாக்கி வழங்குகிறார்கள். அது வழவழ என்று இருக்கிறது. நல்ல வெண்மையாகத் திகழ்கிறது. விபூதி கிடைக்கும் மலைக்கு விபூதிமலை என்று பெயர் வழங்கப்படுகிறது.

2 மைல் தொலைவில் செல்லக் கதிர்காமம் என்று ஒரு மேட்டுப் பகுதி இருக்கிறது. அதற்கு அருகிலும் மாணிக்கக் கங்கை ஓடுகிறது. மேட்டுக்குக் கீழே விநாயகர் கோயில் உள்ளது. முதலில் விநாயகரை வணங்கி, மேட்டில் ஏறினால் அங்கே மதுரைவீரன், முருகன், காளி கோயில்கள் அனைத்தும் உள்ளன. எல்லாக் கோயில்களிலும் திரைச்சீலை தான் தொங்குகிறது. அதில் உள்ள ஓவியத்திற்குத்தான் வழிபாடெல்லாம் நடைபெறுகிறது. இந்த செல்லக் கதிர்காமத்தில் தான் முருகன் கிழவனாக வந்து வள்ளியைக் கவர்ந்த நிகழ்ச்சி நடைபெற்றதாகச்சொல்லப்படுகிறது. முருகனுக்கு உதவி செய்ய வள்ளியை அவனுடன் சேர்க்கும் பொருட்டு அவன் விருப்பப்படி அவனுடைய தமையனார் விநாயகர் யானை வடிவில் அங்கு தோன்றி வள்ளியை அச்சுறுத்தினார். வள்ளி முருகனை அடைக்கலம் அடைந்து மணந்துகொண்டாள். இது பழங்கதை! இவ்வாறு முருகனுக்கு விநாயகர் உதவி செய்ததால் செல்லக்கதிர்காமத்தில் விநாயகருக்குத்தான் முதல் மரியாதை.

தெய்வயானைக்கு இந்தச் சங்கதி தெரிந்தது. முருகனை எப்படியாவது மீட்டுக்கொண்டு செல்வது என்று பல வழிகளிலும் முயன்றாள். கடைசியில் தேவியே இங்கு வந்து தங்கித் தவமும் செய்தாள். முருகன் மனமிரங்கி குன்றத்திலிருந்து இறங்கி வந்து, இங்கே இரு தேவியருடனும் வாழ்க்கை நடத்தினான். அதனால் இந்த இடம் 'கார்த்திகேய கிராமம்' என்றழைக்கப்பட்டது. அந்த சொல்லே நாளடைவில் மருவி 'கதிர்காமம்' என்று ஆயிற்று.

கதிர்காம காட்டில், காட்டுப்பசு, காட்டெருமை முதலியன உலாவுகின்றன. ஆனால் அவற்றை யாரும் வேட்டையாடுவதில்லை. கார்த்திகேயனான முருகன் தான் வாழும்

கிராமமாக அதனை கொண்டதால் அது கார்த்திகேய கிராமம் என்று பெயர் பெற்றுப் பிறகு கதிர்காமம் என்றாயிற்று என்பர்.

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு துட்டகெமுனு என்னும் அரசன் தன் மூதாதையர் இழந்த பகுதியை எல்லாளனிடமிருந்து திரும்பக் கைபற்றுவதற்காகக் கதிர்காம முருகனை வணங்கி இருக்கிறான். முருகன் அவன் முன் தோன்றி அவனுக்கு ஆயுதங்கள் வழங்கி, ஆசி கூறிப்போருக்கு அனுப்பி இருக்கிறான். அப்போரில் துட்டகெமுனு வென்றதால், கதிர்காம முருகனுக்கு நல்லவிதமாக கோயில் அமைத்து அறப்பணிகள் செய்ததாக 'கௌடஉபதா' (கௌடனின் பிறப்பு) எனப்படும் சிங்களக் கவிதையில் கூறப்படுகிறது.

இடைக்காலத்தில் கதிர்காம முருகன்கோயில் வழிபாடற்றுக் கிடந்தது. அதற்குக் காரணம் போக்குவரத்தில்லாத காட்டுப்பகுதியில் அக்கோயில் இருந்ததே ஆகும். இந்நிலையில் 300 ஆண்டுகட்கு முன்பு இந்தியாவில் இருந்து சுவாமி கல்யாணகிரி என்னும் சித்தர் கதிர்காம முருகனை வணங்கும் பொருட்டு இலங்கைக்குச் சென்றார். கதிர்காமத்திற்கு அருகில் உள்ள காட்டில் 12 ஆண்டுகள் தவம் செய்தார். அப்பொழுது அவருக்கு ஒரு வேடச்சிறுவனும் சிறுமியும் காய்கனி கிழங்குகள் கொடுத்துப் பலவித உதவிகள் செய்தனர். ஒருநாள் அவர் அயர்ந்து தூங்கும்பொழுது வேடச் சிறுவன் அவரை எழுப்பிவிட்டான். தூக்கம் கலைந்த கோபத்தில் அவர் அச்சிறுவனை அடிக்க முற்பட்டார். உடனே சிறுவன் ஓடத் தொடங்கினான். முன்னால் ஓடிய சிறுவன் கதிர்காமத்திற்கு வந்து கோயில் உள்ள இடத்தில் மறைந்தான். அதற்குப் பதில் முருகன் காட்சி அளித்தான். முனிவரோ இது முருகன் திருவிளையாடல் என்று அறிந்து முருகனை வணங்கி மகிழ்ந்து தன் தவறுக்கு மன்னிப்புக் கேட்டார். பிறகு முருகனை இந்தியாவிற்கு அழைத்திருக்கிறார். ஆனால் முருகன் வள்ளிநாயகியின் விருப்பப்படி கதிர் காமத்திலேயே தங்க முடிவு செய்து, முனிவரை அங்கேயே தங்கும்படி ஆணையிட்டான். அதன்பின் முனிவர் அங்கேயே தங்கி, முருகனின் பழையக் கோவிலைப் புதுப்பித்து, உலகிற்குக் கதிர்காமத்தைக் கண்டுபிடித்துக் கொடுத்தார். பாழடைந்து கிடந்த கதிர்காமம் அன்று முதல் மீண்டும் புத்துயிர் பெற்றது. முனிவர் ஓர் எந்திரத் தகட்டை உருவாக்கி முருகன் கோயிலில் வைத்து பூஜைகள் செய்தார். அது மிகவும் சக்தி வாய்ந்தது. அந்தத் தகடு தான் இன்றும் எந்திரப் பேழையில் வைத்து பூசிக்கப்படுகிறது. பிறகு முனிவர் காலமாகியதும் அவரை சமாதியில் வைத்தனர். அச்சமாதியில் சிலநாளில் ஒரு முத்துநிற லிங்கம் தோன்றியது. எனவே அம்முனிவருக்கு முத்துலிங்க சுவாமிகள் என்ற பெயர் ஏற்பட்டது. இன்று முருகன் கோவிலின் அருகில் முத்துலிங்க சுவாமிகளின் கோவிலைக் காணலாம். தமிழகத்தில் ஓர் அருணகிரிநாதர் தோன்றி தொண்டாற்றியது போல இலங்கையில் . ஒரு முத்துலிங்க சுவாமிகள் தொண்டாற்றியது குறிப்பிடத்தக்கதாகும்.

கேசவபுரி அல்லது பால்குடிபாவா எனப்படும் பெரியார் ஒருவர் வட இந்தியாவில் உள்ள அலகாபாத்தில் துறவுபூண்டு கதிர்காமத்திற்கு வந்து தவம் பூண்டு, முருகனுக்குப் பணிவிடை செய்திருக்கிறார். அவரது சமாதியும் கோயிலுக்கு அருகில் உள்ளது.

இவருக்கு முன் வடஇந்திய மன்னன் ஒருவன் மகப்பேறில்லாமல் கதிர்காம முருகனை வணங்கி வரம் கேட்டு உள்ளான். குழந்தை பிறந்தால் அதனைக் கதிர்காமக்

கோயிலுக்கு அர்ப்பணிப்பதாக வாக்குக் கொடுத்திருக்கிறான். பிறகு அவனுக்கு ஒரு பெண்மகவு பிறந்ததாம். அதற்குப் பாலசுந்தரி என்று பெயர். அப்பெண்மணியை முருகன் கோயிலுக்கு அர்ப்பணிக்க அவன் மறந்த போது முருகன் அவன் கனவில் தோன்றி நினைவூட்டியிருக்கிறான். உடனே மன்னன் தன் பெண்ணைக் கதிர்காமக் கோயிலுக்கு அனுப்பிவிட்டான். அவள் நல்ல பேரழகி. அவளைக் கண்ட கண்டி மன்னன் அவளை மணந்து கொள்ள விழைந்து சூழ்ச்சிகள் பல செய்துள்ளான். ஆனால் அவள் முருகன் அருளால் தப்பித்துவிட்டாள். சில காலத்தில் அம்மன்னன் ஆங்கிலேயர்களால் சிறைப்படுத்தப்பட்டான். அப்பெண் கதிர்காம முருகனுக்கு பணிவிடை செய்து ஸ்ரீ மங்களபுரி சுவாமிகளைத் தன் குரு பீடத்தில் அமர்த்தி மறைந்தாள். அச்சுவாமிகளுக்குப்பின் குருபீடம் ஏறியவர் பால்குடிபாவா ஆவார்.

இக்கோயிலை வணங்கித் தீராத நோய்களைத் தீர்த்துக் கொண்டவர்களும், நிறைவேறாத குறைகளைப்போக்கிக் கொண்டவர்களும், எண்ணற்றவர்களாவர். அதனை விரிக்கிற் பெருகும், சுருங்கச் சொன்னால் வாழ்வில் ஒருமுறையாவது கதிர்காம முருகனை வணங்கவேண்டும். கதிர் காமத்தைப் பற்றி எண்ணற்ற புலவர் பெருமக்கள் பாடியுள்ளனர். அவற்றுள் அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ் சிலவற்றைக் கீழே காணலாம்.

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே!
குறமாதைப் புணர்வோனே! குகனே! சொற் குமரேசா!
கறையானைக் கிளையோனே! கதிர்காமப் பெருமாளே! (1)

எதிரிலாத பக்தி தனை மேவி
இனிய தாள் நினைப்பை இருபோதுப்
இதய வாரிதிக்குள் உற வாகி
எனதுளே சிறக்க அருள் வாயே!
கதிர் காம வெற்பில் உறைவோனே!
கனக மேரு ஒத்த புயவீரா!
மதுர வாணி உற்ற கழலோனே!
வழுதி கூன் நிமிர்த்த பெருமாளே!

அகர மாகி அதிபனு மாகி
அதிகமு மாகி அகமாகி
அயனென வாகி அரியென வாகி
அரனென வாகி அவர் மேலாய்
இகரமு மாகி எவைகளு மாகி
இனிமையு மாகி வரு வோனே:
இருநில மீதில் எளியனும் வாழ
எனதுமுன் ஓடி வரவேணும். (2)

மகபதி ஆகி மருவும் வலாரி
மகிழ்களி கூரும் வடிவோனே!

வனமுறை வேடஅருளிய பூசை
மகிழ்கதிர் காமம் உடையோனே!
செககண சேகு தகுதிமி தோதி
திமியென ஆடும் மயிலோனே!
திருமலி வான பழமுதிர் சோலை
மலைமிசை மேவு பெருமாளே! (3)

இன்னொரு திருப்புகழின் கடைசி வரி வருமாறு:-

கரிய யூகத்திரள் பலவின் மீதிற்சுளைக்
கனிகள் பீறிட் புசித்து அமராடிக்
கதலிசூழ் தென்திசை பயிலும் ஈழத்தினில்
கதிர்கா மக்கிரிப் பெருமாளே! (4)

(பக். 59-77)

5. யாழ்ப்பாணம் கந்தசுவாமி கோவில்

இலங்கைத் தீவில் உள்ள புகழ்பெற்ற கோயில்களில் இதுவும் ஒன்றாகும். ஒவ்வொரு மாதமும் இங்கு சிறப்பாகத் திருவிழா கொண்டாடப்பெறுகிறது. இங்கு வேல், முருகன், வள்ளி, தெய்வானை, ஆறுமுகம், விநாயகர், நாககன்னிகை முதலிய விக்கிரகங்கள் உள்ளன. கோயில் மிகத்தூய்மை ஆக இருக்கிறது. இங்கு ஒவ்வொரு நாளும் ஆறுகாலப் பூசை மிகச்சிறப்பாக நடைபெறுகிறது. இங்குள்ள மூல விக்கிரகம் வேலாகும். இக்கோயில் கி.பி.15ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாண மன்னர் செண்பகப் பெருமாள் என்பவரால் கட்டப்பெற்று கதிர்காம முருகனுக்காக அர்ப்பணிக்கப் பெற்றதாகும்.

சிங்கள மன்னன் பராக்கிரமவாகுவின் தத்து புத்திரனான செண்பகப்பெருமாள் 1450ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தை வெற்றியுடன் ஸ்ரீசங்கபோதி புவனேகவாகு எனும் சிங்கள நாமத்தோடு (இவன் தந்தை மலையாள தேசத்திலிருந்து வந்த பணிக்கன்) பதினேழு ஆண்டுகள் யாழ்ப்பாணத்தில் ஆட்சி செய்தான். இந்த புவனேகவாகுதான் பின்னர் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலைக் கட்டினான். இதைக் கைலாய மலையில் வந்துள்ள பின்வரும் தனிச்செய்யுளால் அறியலாம்.

“இலகிய சகாத்தம் எண்ணூற்று
எழுபதாம் ஆண்டது எல்லை
அலர்பொலி மாலை மார்பனாம்
புவனேகவாகு
நலமிகும் யாழ்ப்பாணத்து நகரில்
கட்டுவித்து நல்லைக்
குலவிய கந்த வேட்குக் கோயிலும்
புரிவித்தானே”.

புவனேகவாகு மன்னன் திரிசங்க போதி எனவும் அழைக்கப்பட்டான் என்பது திரு ஆ.முத்துத்தம்பி பிள்ளையவர்கள் எழுதிய "யாழ்ப்பாணச் சரித்திரத்தில்" விசுவநாத சாஸ்திரியார் சம்பவக்குறிப்பு எனும் கையெழுத்துப் பிரதியிலிருந்து எடுத்துக்காட்டிய செய்யுளால் புலப்படுகின்றது.

"இலகிய சகாத்தம் எண்ணூற்று
எழுபத்து நான்கின்
அலர்திரி சங்க போதி யாம்
புவனேகவாகு
நலமுறும் யாழ்ப்பாணத்து நகரில்
கட்டுவித்துக்
குலவிய கந்தனார்க்குக் கோயில் ஒன்று
அமைப்பித்தானே"

இவனே தான் 'நல்லூர்க் கந்தசுவாமி கோயிற் கட்டியதில்' இன்றும்,

ஸ்ரீமான் மஹா ராஜாதி ராஜ
அகண்டபூமண்டல
ப்ரதியதிகந்தா விச்றாந்த கீர்த்தி
ஸ்ரீகளுவல்லி மகாவல்லிசமேத
சுப்ரமண்ய
பாதாரவிந்த ஜநாதிருட சோடச
மகாதான சூர்யகுல வம்சோதிபவ
ஸ்ரீசங்கபோதி புவனேகவாகு....

என்று போற்றப்படுகிறான்.

யாழ்ப்பாணம் போர்த்துக்கிசரால் 1560 ஆம் ஆண்டு தாக்கப் பட்டது. 1621ஆம் ஆண்டு நல்லூரிலே வந்து அமர்ந்துவிட்ட ஒலிவேறா என்கிற போர்த்துக்கிசிய தளபதி இப்பேர்பட்ட நல்லூர்க்கோயிலை இடித்து தரைமட்டமாக்கி விட்டான். யாழ்ப்பாணம் 1658ஆம் ஆண்டில் டச்சுக்காரர் வசமாயிற்று. நல்லூர்க் கந்தசுவாமி கோவில் இருந்த இடத்தில் அவர்கள் ஒரு கிறிஸ்தவ தேவாயலத்தை எழுப்பினார்கள். அதை இப்போதும் கந்தசுவாமி கோவிலின் கிழக்கே சிறிது தூரத்தில் காணலாம்.

டச்சுக்காரர் காலத்தில் சிறாப்பராக அவர்களிடம் பணிபுரிந்த தொன்ஜீவான் மாப்பாண முதலியார் என்பவர் தம் பதவி காரணமாகத் தமக்கிருந்த செல்வாக்கைப் பயன்படுத்தி 1734ஆம் ஆண்டு நல்லூர்க் கந்தசுவாமி கோயிலை மீண்டும் கட்டுவதற்கு உத்தரவு பெற்றார். அப்போது எழுந்தது தான் இப்போதுள்ள கந்தசுவாமி கோயில். கிருஷ்ணையா சுப்பையர் என்பவர் அக்கோவிலின் முதற் பூசகராக இருந்தார். இந்த மாப்பண முதலியார் தம் பதவியை வகிப்பதற்காகப் பெயரளவில் மட்டுமே கிறிஸ்தவராக நடித்து வந்தார். இதனால் இவர் தொன்ஜீவான் இரகுநாத மாப்பாண முதலியார் என்று

அழைக்கப்பட்டார். இன்றும் இவர் பரம்பரையினரே இக்கோயிலைப் பரிபாலித்து வருகின்றார்கள். இன்று குமாரதாஸ் மாப்பாண முதலியார் அறங்காவலராகி பரிபாலித்து வருகிறார்.

யாழ்ப்பாணத்தில் நல்லூர் முருகன் பல்லூர்க்கின்றவன் என்கிறார்கள். மஞ்சு தவழ் மாடக் கோபுரங்கள், அசையா மணியமைந்த மணிக்கோபுரங்கள், மதில்கள் - மகரதோரணவாயில்கள் தெப்பக்குளம் - தேரோடும் வீதிகள் முதலிய சகல லட்சணங்களுடன் அமைந்திருக்கும் அழகியகோவில் நல்லூர்க் கந்தசுவாமி கோயில்.

கர்ப்பக்கிரகத்தில் வேல்வடிவில் தான் மூலவர் வள்ளிதேவசேனா சமேதராகக் காட்சியளிக்கிறார். ஆனால் மகாமண்டபத்தில் சண்முகர் வள்ளிதேவ சேனாபதியாக மயில் மீதமர்ந்து காட்சி தருகிறார். நிருத்த மண்டபத்தில் அழகிய முத்துக்குமாரசுவாமி குறவள்ளி காந்தனாய்த் தேவ குஞ்சரி மணாளனாய் வீற்றிருந்தருள் புரிகிறார்.

தென்மேற்குப் புறத்திலிருந்து வடமேற்குப்புறம் வரையிலுள்ள மேல வீதியில் விநாயகர் சந்நிதி - பள்ளியறை - சந்தான கோபாலர் சந்நிதி - அம்பிகை சந்நிதியென வரிசையாக அமைந்திருக்கின்றன.

வடக்குவீதியில் குயில்பாட மயில் ஆடும் பூஞ்சோலை, ஈசானத்தில் பைரவர் சந்நிதி, கிழக்கு கோபுரத்தின் உட்புற வடபால் சண்டேஸ்வரர் சந்நிதி என அழகுபட அமைந்திருக்கின்றன கோவில் அமைப்பு. தெற்கே தெப்பக்குளம், தண்டாயுத பாணி சந்நிதியும் அமைந்திருக்கின்றன.

கிழக்குக்கோபுரம் அழகிய சிற்பக்கதை வேலைப்பாடுகள் நிரம்பியது. அதன் மேற்பகுதியில் ஒரு பெரிய கடிகாரம் பொருத்தப்பட்டுள்ளது. கோபுரத்தின் இருமருங்கும் அசையா மணிக்கோபுரங்கள். கோபுரத்திற்கு முன்னே பேரழகு சொட்டும் மணிமண்டபம். வீதியெல்லாம் மணற்பரப்பு நிறைந்துள்ளன.

பரமானந்த புலவர் என்பார் பாடியுள்ள பாட்டு

விண்ணளவு ஓங்கும் சித்திரம்
விளங்கு கோபுரங்கள் பாரீர்!
கண்ணகல் ஞாலம் போற்றும்
கடிமதில் அழகைப் பாரீர்!
பண்ணமர் வண்டு பாடும்
பன்மலர்ச் சோலை பாரீர்!
எண்ணரும் நல்லை வேலன்
இருக்கும் கோயிலைப் பாரீரே!

ஆறுமுகன் கோயில் கொண்ட சந்நிதிக்கு எதிரில் ஒரு அழகிய கோபுரம். இது தெற்குக்கோபுரம். பலசரித்திரக் கதைகளைக் கூறும் சிற்ப சித்திரக்கூடமாக அது திகழ்கின்றது. இதன் எதிரில் தான் தீர்த்தக்குளமும், தண்டாயுதபாணி சந்நிதியும் அமைந்திருக்கின்றன. தேரோடிய மறுநாள் நடைபெறும் தீர்த்தத் திருவிழா இந்தத் திருக்குளத்தில் தான் நடைபெறுகிறது.

கீழைக் கோபுர வாயிலுக்கு நேரே சிறிது தூரத்தில் தேர்முட்டி என்கிற அழகிய தேர் மண்டபத்தைக் காண்கிறோம். இந்த தேரடி மண்டபம் பல வருடங்களாகப் புனிதமான இடமாக யாழ்மக்களால் கொண்டாடப் பெறுகிறது. காரணம் பலமகான்கள் தவம் செய்து பேறுபெற்றது இங்கு தான்.

பழம்பாக்கு வெற்றிலை
பச்சரிசி தேங்காய்
இளநீர்தேன் ஏந்தி -
எழிலார் - அளவிலா
மங்கையரும் ஆடவரும் மல்கு
நல்லூர்த் தேரடியில்
எம் குருவைக் கண்டேன் இனிது

என்று தேரடியைப் பாடி சிறப்பித்திருக்கிறார் யோகர் சுவாமிகள்.

நல்லூர்க்கோயிலில் ஆறுகாலப் பூசைகள் காலந்தவறாது நடை பெறுகின்றன. விடியற்காலையில் 4.30 மணிக்கு ஆலயத்தின் மணி அடிக்கப்படுகிறது. திருப்பள்ளியெழுச்சி பாடப்படுகிறது. மூர்த்தி பள்ளியறையிலிருந்து மூலஸ்தானத்துக்கு எழுந்தருளுகிறான். உடனே விசுவரூப தரிசனம் நடைபெறுகிறது. பின்னர் உஷகாலபூஜை. இந்த உஷகால பூஜையும் அர்த்தஜாமப் பூஜையும் மிகுந்த சிறப்புடையதாகக் கருதப்படுகிறது.

அதேபோல சுவாமியைத் தினசரி பள்ளியறைக்கு அழைத்துச்செல்லுங் காட்சியும் காண அற்புதமாயிருக்கும்...சந்நிதியிலிருந்து சுவாமியை மத்தளம், சின்னம் முழங்க கொண்டுவந்து அதற்கென்று உருவாக்கப்பட்ட விமானத்தில் அமர்த்துவார்கள்.

முன்னால் இரு குதிரைகளை பிரும்மா செலுத்திவருவதுபோலவும் இருபுறமும் கந்தர்வப்பெண்கள் நாட்டியத்துடன் சாமரைவீசி வருவதுபோலவும் செய்யப்பட்ட அந்த விமானத்தில் முருகன் சிருஷ்டி மூர்த்தியாக (அதாவது ஒருகையில் கமண்டலமும்; ஒரு கையில் ருத்திராட்சமும் மற்ற இரு கரமும் அபயவரதமாகவும் உள்ள மூர்த்தம்) வந்து அமரப் பஞ்சாராத்தி ஆகும். மண்டபத்திலிருந்து முத்துக்குமாரசுவாமி சந்நிதிவரை மத்தளம் சின்னம் முழங்க வந்து அதிலிருந்து பள்ளியறை வரை திருமுறை திருப்புகழ் இன்னிசைப் பாடப்பட வலம்வந்து, பள்ளியறையில் ஊஞ்சலில் அமர்த்தப்படுவார். பிறகு பூஜை நடைபெறும்.

நல்லூர் கந்தசுவாமி கோவில் பிரம்மோற்சவம் ஆடிமாதத்தில் நடைபெறுகிறது. ஆடி அமாவாசையிலிருந்து ஆறாம் நாள் கொடியேற்றுகிறார்கள். 22 ஆம் நாள் திருவிழா தண்டாயுதபாணி உற்சவமாகக் கொண்டாடப்படுகிறது. அன்று மாலை மாம்பழத்திருவிழா. - தண்டயுதபாணி தங்கமயில் வாகனத்திலும், விநாயகர் வெள்ளி ரிஷப வாகனத்திலும், திருக்குள மண்டபத்திலிருந்து வெளிவீதியில் வலம் வருவார்கள். கோபுர வாசலையடைந்தவுடன் விநாயகருக்கு மாங்கனி கொடுக்கப்படுகிறது. அதை வாங்கிக் கொண்டு விநாயகர் உள்ளே சென்று விடுவார். தருமத்துக்கு விரோதமான இந்த செய்கையால் முருகன் கோபித்துக் கொண்டு தண்டாயுத பாணியாகப் பழநிமலையில் வீற்றிருக்கும் பாவனை நடத்திக் காட்டப்படுகிறது.

தேர்த்திருவிழா 24ஆம் நாள் திருவிழா. ஆறுமுகப் பெருமான் வள்ளி தெய்வயானை சமேதரராய் வெள்ளி சிங்காசனத்தில் ஏறி காலை எட்டு மணிக்குக் கோபுரவாயிலை அடைவார். எட்டரை மணிக்குத் தேரிலேறி வீதி வலம் வருவார். தேரடியிலிருந்து புறப்பட்டு கிழக்கோபுர வாயிலுக்கு எதிராக தேர் வந்தவுடன் அடியார்கள் அர்ச்சனை செய்துகொள்ள அரை மணிநேரம் அவகாசம் கொடுக்கப்படும். வீதியில் மண்டகப்படி அமைத்துள்ளவர்கள் மாத்திரம் அர்ச்சனை செய்யலாம். இங்கு பொது மக்கள் அர்ச்சனை செய்யமுடியாது. தேரடிக்கு வந்த பின் அவர்கள் நாலரைமணி வரை அர்ச்சனை செய்யலாம். பிற்பகல் ஒருமணி முதல் நாலு மணிவரை நாயனக்கச்சேரி அமர்க்களப்படும். அன்று பல்லாயிரக்கணக்கான மக்கள் பக்தி சிரத்தையுடன் ஆறுமுகனை தேரில் தரிசித்து தேர்வடம் பற்றி இழுப்பதைப் பெரும்பேறாகக் கருதுகிறார்கள். தீர்த்தத்திருவிழா 25ஆம் நாள் திருவிழா பிற்பகல் நாலரை மணிக்கு தீர்த்தோற்சவம் ஆரம்பமாகும். விநாயகர் வெள்ளி எலி வாகனத்திலும் தெய்வயானை வெள்ளி மயில் வாகனத்திலும் வள்ளியம்மன் வெள்ளி அன்னவாகனத்திலும் தீர்த்த மண்டபத்துக்கு எழுந்தருளுவார்கள். அஸ்திரதேவர் தீர்த்த மாடி-அறங்காவலர் தீர்த்தமாடிய பின் அடியார்கள் தீர்த்தமாடுவார்கள். இரவில் கொடியிறங்கிவிடும்.

பூங்காவனத்திருவிழா 26ஆம் நாள் திருவிழா. இது கிட்டத்தட்ட வள்ளித்திருமணத்தை நினைவூட்டுவதே ஆகும்.வள்ளி தினைப்புனம் காக்கும் பாவனையில் பூங்காவனத்தில் காட்சி அமைப்பார்கள். மாலையில் விநாயகரும் முருகனும் பூங்காவனத்துக்கு எழுந்தருளுவார்கள். பூங்காவனத்திலிருந்து விநாயகர் முருகன் வள்ளி மூவரும் வெளியே வந்ததும் தெய்வயானை கதவை மூடிக்கொண்டு உள்ளே இருப்பார். கோபமாக இருக்கிறாராம். அப்பொழுது 'எட்டுக்குடி ஏசல்' படிக்கப்படும். பின்னர் கதவு திறக்கப்பட்டு எல்லோரும் உள்ளே செல்வார்கள். திருக்கல்யாணம் நடைபெறும். முத்துக்குமாரசாமி வள்ளியம்மன், தெய்வயானை அம்மன் மூவரும் மூன்று தண்டிகையில் வெளிவீதியில் வலம் வருவார்கள். இப்படி சுமார் ஒரு மாத காலம் விழாக்கோலம் பூண்டு நல்லூர் பூலோக கைலாசம் போலவே காட்சியளிக்கும். திருவிழாக்காலங்களிலே நல்லூர் தினசரி பத்திரிகைகள் - வார - மாத இதழ்கள், வானொலி தொலைக்காட்சி எல்லாம் நல்லூர் முருகன் பெருமையை வர்ணித்துக் கட்டுரைகள் கவிதைகள் வெளியிடுகின்றன. இது தவிர தனிப்பட்டவர்களும் கந்தனைப் பற்றிய நூல்களை வெளியிடுவது உண்டு. அப்போது தண்ணீர் பந்தல்களில் தொடர் பிரசங்கங்கள் நடப்பது தமிழகத்தில் இல்லாத புதுமை. பஜனை கோஷ்டிகள் வீதிவலமாக வந்து, கந்தன் புகழ் பாடுகின்றார்கள்.

ஆரம்ப தினமான கொடியேற்றம் முதல் நிறைவு நாளான திருக்கல்யாணம் வரையுள்ள இருபத்தைந்து நாட்களிலும் இலங்கை வானொலி நல்லூர்க் கந்தன் பாமாலை என்றும், கோபுரதரிசனம் என்றும், இசைச்சித்திரம் என்றும் பல சிறப்பு நிகழ்ச்சிகளை ஒலி பரப்புகிறது. அத்துடன் தேர், தீர்த்தம் இரண்டு தினங்களிலும் 'நல்லூர் அஞ்சல்' என்று நேரடியாக விழாவை வர்ணனை செய்கிறது. இலங்கை தொலைக்காட்சி ரூபவாகினியும் நிகழ்ச்சிகளை ஒலிபரப்புச் செய்கிறது.

(நல்லூரான், 'நல்லூர் கந்தன்' -ஓம்சக்தி, 1988 செப்டம்பர், பக். 13-16 H).

7. கண்டி செல்வ விநாயகர் கோவில்

கண்டியிலுள்ள செல்வ விநாயகர் கோயில் சுமார் 150 ஆண்டுகட்கு முன்பு தேவகோட்டையைச் சேர்ந்த நகரத்தார் ஒருவரால் சிறப்பாகக் கட்டப்பட்டதாகும். இங்கு சோமசுந்தரர், மீனாட்சி, தண்டாயுதபாணி, மகாலட்சுமி, ஆறுமுகன், நடராசர், தட்சணாமூர்த்தி விக்கிரகங்கள் உள்ளன. வார வழிபாடு தொடர்ந்து நடைபெறுகிறது.

8.கொழும்பு இந்துக்கோயில்கள்:

செட்டியார் தெருவில் பழங்கால முத்துவிநாயகர் கோவில், பழைய கதிரேசன் கோயில், புதிய கதிரேசன் (முருகன்) கோவில் இம்மூன்றும் அமைந்துள்ளன. இவை நூற்றைம்பது ஆண்டுக்காலப் பழைமை உடையன. இவை நாட்டுக்கோட்டை நகரத்தார்களால் கட்டப்பெற்று அவர்கள் ஆதரவில் இன்றும் இருந்து வருகின்றன. கதிர்காமத்தில் ஆடிவேல் விழா நடைபெறும் சமயம் இங்குள்ள கதிரேசன் கோவில்களில் இருந்து காலை 7 மணிக்கு வேல் வெள்ளி ரதத்தில் புறப்பட்டு 7 மைல் தொலைவில் உள்ள வெள்ளவெத்தை என்ற ஊரில் அமைந்துள்ள கதிர்வேலாயுதசாமி கோவிலுக்கு வருவது மரபாக இருந்து வருகிறது. இரவு 8 மணிக்கு வேல் இங்கு வந்து சேரும். அதன்பின் அபிடேக ஆராதனைகள் நடைபெறும். இவ்விழாவில் எல்லா மதத்தினரும் பங்கு பெறுகின்றனர். 3 நாள் இங்கு அனைவருக்கும் சாப்பாடு போடப்படுகிறது. இங்குள்ள கோவில்களில் அர்ச்சனை செய்ய விரும்பினால் தேங்காய் பழம் வாங்கிச் செல்ல வேண்டியதில்லை. கோயிலிலேயே தேங்காய் உடைத்துத் தயாராக வைத்துள்ளனர். நாம் ஒரு ரூபாய் கொடுத்தால் போதும். அத்தேங்காய் மூடியினை இறைவன் முன்வைத்து மந்திரம் கூறி தூபதீபம் காட்டி நமக்கு பிரசாதம் வழங்குகின்றனர். கொழும்பில் இன்னும் சில முருகன் கோவில்களும், சிவன் கோவில்களும் உள்ளன.

9.நுவரெலியா அசோகவனம்

நுவரெலியாவில் மிகச்சிறிய ஹாக்ளா தோட்டத்துக்கு அருகில் மிகச்சிறிய சீதா கோவில் இருக்கிறது. இங்கு சீதா, இராமர், இலட்சுமணர், அநுமார் சிலைகள் உள்ளன. கோவிலின் படிக்கட்டு அருகே சீதாகங்கை எனும் சிற்றாறு ஓடுகிறது. அதற்கு அக்கரையில் மலைமீது அசோகவனம் காட்சியளிக்கிறது. ஏராளமான அசோக மரங்கள் அங்கு உள்ளன. இலங்கையில் இங்கு மட்டும் தான் அசோக மரம் உள்ளது. இந்த அசோக வனத்தில் தான் சீதை சிறை இருந்ததாகச் சொல்லப்படுகிறது. கோடைவாசஸ்தலமான இப்பகுதியில் இராவணன் சீதையை சிறை வைத்திருக்கக்கூடும்.

நுவரெலியாவிலுள்ள ஆதம் மலைமுகடை (Adam's Peak) சிவனுடைய புனித கால்கள் என இந்துக்கள் வழிபடுகின்றார்கள். இதை 'சிவநந்திபாதம்' என மரியாதையுடன் அழைக்கின்றார்கள். புத்த சமயத்தினரும் இங்கு யாத்திரை செய்ய வருகின்றார்கள்.

கோவில் கட்டிட அமைப்பு இந்திய கோவில் கட்டிட அமைப்பு போல் உள்ளன. விபூதி, கற்பூரம் போன்ற வழிபாட்டுப் பொருள்களை பயன்படுத்துகின்றார்கள். பிராமண குருக்கள் சமஸ்கிருத காப்பியங்களிலிருந்து கதைகள் எடுத்து கூறுகின்றனர். எல்லா தமிழ்

தோட்ட தொழிலாளர்களுக்கும் ராமாயணம், மகாபாரதம், கந்தபுராணக் கதைகள் தெரியும். பெரும்பாலும் புத்த விகாரங்களில் இந்துக் கடவுள்களும் இருக்கின்றன.

இந்தியாவிலுள்ளதுபோலவே இலங்கையிலும் இந்து சமயத்தில் சைவம், வைணவம், சாக்தம் என்னும் பெரும்பிரிவுகளும் சிறு தெய்வ வழிபாடுகளும் இடம்பெற்றுள்ளன. இவற்றில் சைவம், வைணவம், சாக்தம் என்னும் பிரிவுகள் சிறு தெய்வ வழிபாடுகளுடன் ஒருங்கிணைந்து விட்டன. ஆயினும் வைணவம் தன் சிறப்பு இயல்புகளை முற்றாய் இழக்காது. ஒரு தனி வழிபாடாக இன்றும் இலங்கையில் சிறிய அளவில் உயிர் பிழைத்து வாழுகின்றது.

யாழ்ப்பாணத்தில் வண்ணார்பண்ணையில் வேங்கடேசவரதராசப் பெருமாள் கோயிற் சூழலில் வசிக்கும் சுமார் நூறு வைணவக் குடும்பங்கள் திருமால் வழிபாட்டைப் பேணிக் காத்து வருகின்றன. இப்பெருமாள் கோயிலைச் சார்ந்துள்ள அடியார்க்கு நல்லான் வரம்பு என்னும் நிலப்பகுதி, யாழ்ப்பாணத்தை ஆண்ட ஆரியச் சக்கரவர்த்தியின் அமைச்சர் பெயரை, இடப்பெயராகக் கொண்டு விளங்குகிறது. இரு வேறு காலப்பிரிவுகளில் குடியேறிய தமிழக வைணவத் தொழிலாளர்களின் வழித்தோன்றல்களே இவ் வைணவக் குடும்பங்களில் உள்ளனர்.

கி.பி.1347 இல் செகராசசேகரன் என்னும் குணபூஷண சிங்கையாரியன் ஆந்திரத்திலிருந்தும் காஞ்சியிலிருந்தும் அழைத்துக் குடியேற்றிய பண்டாரவாளச் செட்டிகள் என்னும் பத்மசாலிகளின் வழித்தோன்றல்கள் இக்குடும்பங்களில் உள்ளனர். அவ்வாறே கி.பி.1665 இல் காஞ்சி, காரைக்கால், திருமலைராயன்பட்டினம், ஆடுதுறை, கோவிந்தபுரம், வலங்கைமான், திருச்சேறை, மன்னார்கோவில் என்னும் இடங்களிலிருந்து அழைத்துக் குடியேற்றிய நெசவாளர்களின் வழித்தோன்றல்களும் இக் குடும்பங்களிற் காணப்படுகின்றனர். இவர்களிலே தெலுங்கு பேசுவோரும் தமிழ் பேசுவோரும் இருந்தனர்; வடகலை வைணவரும் தென்கலை வைணவரும் இடம் பெற்றனர். ஆயின் இன்று இவ்வேறுபாடுகள் மங்கிய நிலையில் இவர்கள் ஏனைய தமிழ் மக்களோடு ஒன்றி வைணவத்தைப் பேணி வருகின்றனர்.

கி.பி.7 ஆம் நூற்றாண்டில் நான்காம் அக்போ என்னும் மன்னன் இலங்கையின் தென்முனையிலுள்ள தெவிநுவா-தேவநகர் என்னும் இடத்தில் கட்டிய திருமால் கோயில் போர்த்துக்கேயர் கி.பி.1588 இல் இடித்து அழிக்கும் வரையில் புகழ்பெற்று விளங்கியது.

தெவிநுவா என்னும் இடத்திலுள்ளது போலவே பொலனறுவை, அனுத்நுவர, ஜயவர்த்தன கோட்டே, எட்டகட, தம்பலகொல்லேவ பாண்டு வஸ்நுவர, யாப்பஹுவ, குருநாகல, பொன்பரிப்பு என்னும் இடங்களிலுள்ள பழைய திருமால் கோயில்களில் இடிபாடுகள் காணப்படுகின்றன. இவை எல்லாம் சிங்களமக்கள் வாழும் இடங்களில் வைணவம் முற்காலத்திற் பெற்றிருந்த உன்னத நிலையை இன்றும் நினைவூட்டுகின்றன.

தமிழ் மக்கள் பெரும்பான்மையினராக வாழும் பகுதிகளில் இன்று வைணவம் சைவர்களின் ஆதரவிலேதான் வாழ்ந்து வருகின்றது. திருமால் கோயில் திருப்பணிகளையும் திருவிழாக்களையும் கண்ணன் ஜயந்தி, ஏகாதசி போன்ற வைணவத் தினங்களையும்

பெரும்பான்மையினராக சைவத்தமிழரும் மிகச்சிலரான வைணவத் தமிழரும் சமயவுணர்வுடன் இணைந்து சிறப்பாக நடத்தி வருகின்றனர். சைவக்குடும்பங்களிற் பிறந்த சிலர் திருமாலை இட்டதெய்வமாக வழிபடுவதும். வைணவ நூலாம் பகவத்கீதையை ஓதுவதும், ஏகாதசி விரதம் நோற்பதும் இன்றும் நடைமுறையிலுள்ளன.

இராமகிருஷ்ண இயக்கம், ஹரேகிருஷ்ண இயக்கம், சின்மயானந்த இயக்கம் ஆகிய நவீன சமய இயக்கங்களின் செல்வாக்குக் காரணமாகக் கடந்த பத்தாண்டுகளில் கீதைப்பேருரைகள், கூட்டுவழிபாடுகள், இசை நிகழ்ச்சிகள், நடனநிகழ்ச்சிகள் ஆகியவற்றின் மூலம் வைணவச் சிந்தனைகள் கொழும்பில் வாழும் இந்துக்களில் ஆங்கில அறிவுள்ள ஒருசாராரிடம் வளர்ந்து வருகின்றன.

பொருளாதார அமைப்பு:

இலங்கைத் தமிழர் பெரும்பாலும் வேளாண்மையே செய்து வாழ்ந்தனர். வெள்ளையர்கள் வந்தபோது அவ்வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொண்டு பலர் ஆங்கிலக் கல்வி கற்றுக் கொழும்பு போன்ற தென்னிலங்கை நகர்களில் குடியேறி அரசினர் அலுவலகங்கள், தொழில் வணிக நிறுவனங்கள் ஆகியவற்றில் பணியில் அமர்ந்தனர்.

பாரம்பரியத் தமிழப் புலத்தின் (வடக்கு, கிழக்கு மாநிலங்கள்) குடித்தொகையில் வேலைவாய்ப்புப் பெற்றோரில் 60 விழுக்காட்டினர் வேளாண்மை, மீன் பிடித்தல் ஆகிய துறைகளில் ஈடுபட்டுள்ளனர். கைத்தொழிலும் அதனோடு தொடர்பான துறைகளிலும் 8 விழுக்காட்டினரும், வணிகம், போக்குவரத்து, சமூக சேவைகள் போன்ற துறைகளில் 32 விழுக்காட்டினரும் வேலைவாய்ப்பினைப் பெற்றுள்ளனர். வேலை வாய்ப்புப் பெற்றவர்களில் ஆண்களின் பங்கு 93 விழுக்காடாகவும், பெண்களின் பங்கு 7 விழுக்காடாகவும் உள்ளன. மொத்தக் குடித்தொகையில் 48 விழுக்காடாகக் காணப்படும் பெண்களின் உழைப்பு, முறையாகப் பயன்படுத்தப்படாமையை இத்தரவுகள் உணர்த்துகின்றன. இதன் காரணமாக இந்நூற்றாண்டில் பல துறைகளில் செல்வாக்குப் பெற்றவர்களாகவும் இத்தமிழர் விளங்கினர். அவர்கள் அல்லாமல் வணிகத்தின் பொருட்டு இலங்கையின் தலைநகரான கொழும்பிலும் பிற நகரங்களிலும் அண்மையில் குடியேறிவாழும் தமிழர்கள் பலர் உள்ளனர். அவர்கள் தம் தாய்த் தமிழகத்தை எப்போதும் நினைத்துக்கொண்டு இருப்பவர்கள். தனியார்த்துறை நிறுவனங்களில் எழுத்து வினைஞராகவும், மருத்துவம், பொறியியல் சட்டம் ஆகிய துறைகளில் வல்லுநர்களாகவும் பணிபுரிகின்றனர். பொதுவாக விவசாயம், வாணிகம் ஆகியவற்றில் தமிழர் ஈடுபட்டுள்ளனர்.

கல்வித்துறை

ஆங்கிலமொழி கற்றறிந்த உயர் குலத்தினரின் பொதுமொழியாக இருப்பதோடு பள்ளிகளில் இரண்டாம் மொழியாகவும் கற்பிக்கப்படுகின்றது. 1953ஆம் ஆண்டின் குடிசன மதிப்பீட்டின் படி சிங்களம் அல்லது தமிழோடு ஆங்கிலம் பேசுவோர் தொகை 9.4 விழுக்காடாக இருந்தது. இவ்வகையில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்றுமே இலங்கையில் வழங்கும் முதன்மை மொழிகளாகும்.

முனைவர் ந. கடிகாசலம் பின்வருமாறு கூறுகின்றார் (1982) :

ஸ்ரீலங்காவில் தமிழ் மொழிக்குத் தேசிய அந்தஸ்து அளிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் வட மாநிலத்திலும், கிழக்கு மாநிலத்திலும், ஆட்சி மொழியாகிய தமிழை அரசியல் சட்டப்படி இடம் பெறச் செய்திருக்கிறார்கள். தமிழ் மக்கள் பெருமபான்மையாக வாழும் மாநிலங்களில் நீதிமன்ற மொழியாகவும் தமிழ் ஆக்கப்பட்டுள்ளது. சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் அரசாங்கத்துடன் தொடர்புகொள்ளத் தமிழ் மொழியைப் பயன்படுத்த முடியும். அரசாஙகத்திடமிருந்து தமிழ் மொழியிலே பதிலையும் அவர்கள் பெற முடியும். இதற்கு அரசியல் சட்டத்தில் உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தைப் போன்றே ஈழத்திலும் குருகுலப் பாரம்பரியத்துடனேயே தமிழ்க்கல்வி ஆரம்பமாகிறது. குருகுலப் பாரம்பரியம் மறைந்த பின்பு, தமிழறிந்த ஆசான்கள் தம்முடைய வீட்டுத் திண்ணையில் நடத்திய திண்ணைப் பள்ளிக் கூடத்தில் தமிழ்க் கல்வி இடம் பெற்று வந்துள்ளது. ஆறுமுக நாவலர், சுவாமி விபுலானந்தர் முதலியோரும் ஆரம்பக் காலத்தில் திண்ணைப் பள்ளிக்கூடத்திலேயே தமிழ் கற்றார்கள். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தமிழ்க்கல்வி புறக்கணிக்கப்பட்டது. ஆறுமுகநாவலர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட தமிழ்ப் பள்ளிகளில் தமிழும் சைவமும் போதிக்கப்பட்டன. ஆறுமுக நாவலரைத் தொடர்ந்து வந்த ஒரு பண்டித பரம்பரை ஈழத்தில் தமிழ்க் கல்வியை வளர்த்துவந்துள்ளது. யாழ்ப்பாணக் குடா நாட்டில் ஆறுமுகநாவலர் ஆரம்பித்த பள்ளிகளின் மூலம் தமிழ்க் கல்வி அங்கே பெருகிற்று. அதன்மூலம் நவநீதகிருஷ்ண பாரதியார், கணேசையர் , சபாபதி நாவலர், பண்டிதமணி கணபதிப்பிள்ளை, புலவர் மணி, பெரிய தம்பிப் பிள்ளை, கந்த முருகேசனார் முதலிய தமிழறிஞர்கள் தோற்றம் பெற்றார்கள்.

கிழக்கிலங்கையைப் பொறுத்த வரையில் கிறித்துவ மிஷினரிமார்களின் ஆரம்ப பள்ளிக்கூடங்களே இயங்கி வந்தன. 1930க்குப் பின்பு இராமகிருஷ்ண மிஷன் அப்பகுதியில் தமிழ்ப் பள்ளிக் கூடங்களை நிறுவும்வரை பொதுவாகக் கல்வி நிலை மோசமாகவே இருந்தது. தமிழ்க் கல்வியையும் சைவத்தையும் அங்கு வளர்த்த பெருமை இராமகிருஷ்ண மடத்தையே சாரும். அதன் முழுப் பொறுப்பையும் ஏற்று அரும்பணிபுரிந்தவர் சுவாமி விபுலானந்தரே ஆவார்.

தாய்மொழிமூலம் கல்வி போதித்தல் என்னும் கொள்கை அரசாங்கத்தினரால் செயற்படுத்தப்பட்ட பின்பு, ஆரம்ப வகுப்பு முதல் பல்கலைக் கழகம் வரை கலை, விஞ்ஞானம் ஆகிய எல்லாத்துறைகளும் தமிழ் மூலம் போதிக்கப்படலாயின. இப்பாட நெறிகளுக்குரிய ஆங்கில நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்து அரசாங்க மொழித் திணைக்களம் தமிழ் மொழி மூலக்கல்விக்கு உதவிபுரிகிறது. இப்போது தமிழில் பல்வேறு துறைப் பாட நூல்களும் எழுதப்பட்டு வருகின்றன.

இலங்கைப் பல்கலைக் கழகத்தின் தொடக்கக் காலத்தில் (1940) தமிழ் பயின்ற மாணவரின் எண்ணிக்கை இரண்டு அல்லது மூன்றாக இருந்தது. அவர்கள் தமிழை ஆங்கில மொழி வழியே கற்கவேண்டியிருந்தது. 1944 இல் இலவசக் கல்வியும் அதனைத் தொடர்ந்து தாய்மொழிக் கல்வியும் நடைமுறைக்கு வந்தபின்பு பல்கலைக் கழகத்தில் தமிழ் கற்கும் மாணவர் எண்ணிக்கை அதிகரித்தது. பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறை நிறுவப்பட்டு

முதல் தமிழ்ப் பேராசிரியராக சுவாமி விபுலானந்தர் பதவி ஏற்றார். பொது, சிறப்புக் கலைமாணி, முதுமாணிப்பட்டங்களும், கலாநிதிப்பட்டமும், தமிழ்க் கல்வியில வழங்கப்பட்டன. இதுவரை(1982)பதினைந்துக்கு மேற்பட்டோர் முதுமாணிப்பட்டமும், மூவர் கலா நிதிப் பட்டமும் பெற்றனர். இப்போது (1982) கொழும்பு யாழ்ப்பாணம், பேராதனை, நுகேகதா, கெலானியா ஆகிய இடங்களிலுள்ள பல்கலைக் கழகத் தமிழ்த் துறைகளில் ஐந்து பேராசிரியர்களும், பதினைந்து விரிவுரையாளர்களும் தமிழ் கற்பித்து வருகிறார்கள். ஈழத் தமிழரின் மொழி இலக்கியம், பண்பாடு ஆகிய துறைகளில் ஆய்வு மாணவர்கள் ஆய்வு செய்கிறார்கள். (மூலம்;தமிழும், தமிழரும், பக் 69-71)

முனைவர் தி.முருகரத்தினம், 1982இல் இலங்கைக்குச் சென்ற பிறகு எழுதிய கருத்துக்கள் பின்வருபவன ஆகும்:-

இலங்கையில் ஆட்சி மொழியாகவும் பல்கலைக் கழகங்கள் உட்பட்ட நிறுவனங்களில் பயிற்சி மொழியாகவும் தமிழ் பெரிதும் இடம் பெற்றுள்ளது எனவும். அதற்கு ஏற்ற வகையில் தமிழ் அங்கு வளர்க்கப்பட்டுள்ளது எனவும் பொதுவாகத் தமிழகத்தில் ஒரு கருத்து பரவி இருக்கிறது.கை இலங்கையின் தேசிய மொழிகள் சிங்களமும் தமிழும் எனவும், ஆட்சிமொழி சிங்களம் ஒன்றே எனவும் கொள்ளப்பட்டிருக்கிறது. இலங்கையில் 'எங்கும் சிங்களம்' என்னும் தேசியக் கொள்கையால் தமிழ், தமிழரது பகுதிக்கு ஒதுக்கப்படுகிறது. பல்கலைக்கழகங்களில் சிங்களம் செங்கோல் ஒச்சவேண்டும் என முடிவெடுத்தபோது தமிழர் ஆங்கிலத்தைப் பற்றிக்கொண்டிருக்க முடியவில்லை. தமிழும் அரியணை ஏறியது.

பள்ளிக் கல்வி, தாய்மொழியிலே நடைபெறுகிறது. சிங்களவர் சிங்களத்திலும், தமிழர் தமிழிலும் பள்ளிக் கல்வியினைக் கற்கின்றார்கள். இலங்கைப் பள்ளிக் கல்வி முழுவதும் கட்டணம் இன்றியே அரசினர் செலவில் நடத்தப்படுகிறது. ஆங்கிலத்தின் வாயிலகக் கற்பிக்கப்படும் பள்ளிகள் அரசால் ஒழிக்கப்பட்டுவிட்டன. பள்ளிக் கல்வி 10 ஆண்டுகளாகவும், மேல் நிலைப்பள்ளிக் கல்வி இரண்டாண்டுகளாகவும் அமைந்துள்ளன. எல்லா நிலையிலும் எல்லாப் பாடங்களையும் தமிழர் பகுதிப் பள்ளிகள் தமிழிலேயே கற்பிக்கின்றன. பள்ளிகளில் ஆங்கிலம் விருப்பப் பாடமாக்கப்பட்டுப் புறக்கணிக்கப்பட்ட சூழலும் வந்தது. இந்நிலையில் மாணவர்கள் பல்கலைக் கழகம் செல்லுகின்ற போது தாய் மொழிவழிப் படிக்க வேண்டியது இன்றியமையாததாகி விடுகிறது. பல்கலைக் கழகங்களில் தாய்மொழியிலேயே எல்லாத் துறைக் கல்வியும் கற்பிக்கப்படவேண்டும் என்பது அரசின் கொள்கை. இக்கொள்கைக்கேற்பப் பல்கலைக் கழகங்களில் கலையியல், அறிவியல், தொழிலியல் கல்விகள் தமிழிலேயே கற்பிக்கப்படுகின்றன.

எம்.ஏ.நுஃமான் கூறுகிறார்

"சமூக விஞ்ஞானத் துறையிலும் இயற்கை விஞ்ஞானத் துறையிலும் ஏராளமான பாடநூல்கள் தமிழில் சுயமாக எழுதப்படுவதற்கும் மொழிபெயர்க்கப் படுவதற்கும் இக்கல்வி மொழிக் கொள்கை வழிகோலியது. கலைச் சொல்லாக்க வளர்ச்சிக்கும் இது வழி வகுத்தது. சமூக விஞ்ஞான, இயற்கை விஞ்ஞானத் துறைகள் சார்ந்த அநேகக் கலைச் சொல் அகராதிகள் தமிழில் வெளிவந்துள்ளதையும் இங்குச் சுட்டிக்காட்டலாம்."

இன்றைய நிலையில் முதல் பட்ட வகுப்பு வரையில் கலையியல் பாடங்கள் தமிழில் நடைபெறுகின்றன. ஆனால் மருத்துவம், அறிவியல், தொழில்நுட்பவியல் பாடங்கள் முதல்

ஆண்டு தமிழிலும் இரண்டாவது ஆண்டு தமிழிலும் ஆங்கிலத்திலும், அதற்குமேல் ஆங்கிலத்தில் மட்டும் நடைபெறும் சூழல் இருப்பதாகத் தெரிகிறது. அறிவியல், மருத்துவம், தொழில்நுட்பவியல கல்வியைப் பொறுத்தவரையில் பட்டப்படிப்பு முடிவுவரையில் தமிழிலேயே கற்பிக்கும் நிலை இலங்கையில் இன்னும் உருவாகவில்லை.

பொதுவாக, தமிழ்மொழி வழிக்கல்வி பல்கலைக் கழகங்களில் அவ்வளவு வெற்றிபெறவில்லை என்றே கூறலாம். இந்நிலையில் தாய்மொழிக் கல்வி என்ற அரசின் கொள்கை பற்றியும், அதன் வரலாறுபற்றியும் ஓரளவு இங்கு ஆராய்தல் வேண்டும்.

15 ஆண்டுகளுக்கு முன்னர் ஆட்சி மாற்றம் ஏற்பட்டபோது தென்னிலங்கையில் 'அனைத்தும் சிங்களம்' என்ற ஒரு தேசியக் கொள்கை முழக்கம் பரவியது. ஆட்சியிலும், கல்வி நிறுவனங்களிலும், செய்தி இதழ்களிலும் சிங்களமே செங்கோலோச்ச வேண்டும் என்ற கொள்கை சில அரசியல் கட்சிகளால் வற்புறுத்தப்பட்டு வந்தது. இந்தக் கொள்கையின் காரணமாக இலங்கையின் தமிழர்களும் தம் தாய்மொழி வாயிலாக அனைத்து நிலைகளிலும் கல்வி கற்க வேண்டிய கட்டாயச் சூழல் ஏற்பட்டது. 15 ஆண்டுகளாகத் தொடக்கப்பள்ளி முதற்கொண்டு பல்கலைக் கழகக்கல்வி வரை அனைத்துப் பாடங்களிலும் தாய்மொழியிலேயே கற்பிக்கவேண்டும் என்ற ஆணையினைச் சிங்கள அரசு பிறப்பித்தது. இந்த ஆணையினைத் தொடக்கக் கல்வியில் தொடங்கி மேல் நிலைப்பள்ளிக் கல்வி வரையில் சிங்கள அரசு பெருமுயற்சியுடன் செயல்படுத்தி வந்தது. தாய்மொழிவாயிலாகக் கற்பிப்பது கட்டாயமாக்கப்பட்டது. ஆங்கிலம் விருப்பப் பாடம் ஆக்கப்பட்டது. மேல் நிலைக் கல்வி முடிந்து வருகின்ற நிலையில் மாணவர்கள் பல்கலைக் கழகத்தில் நுழைகின்றனர். அவர்களுக்குத் தாய்மொழி வழியாகப் பாடம் கற்பிக்கும் நிலை ஏற்பட்டது. இந்நிலையில் சிங்களத் தேசிய கொள்கையுடைய அரசு மாறியது. அண்மையில் வந்த அரசு இந்தக் கொள்கையினை அவ்வளவாக வற்புறுத்துவதாகத் தெரியவில்லை. இதன் காரணமாக அண்மையில் பல்கலைக் கழகங்களில் தாய்மொழி வழிக்கல்வி கற்பிக்க வேண்டும் என்ற கொள்கை தளர்ச்சியுற்றது. இருக்கும் பிறவாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொண்டு அறிவியல் துறைகளிலும் பொருளாதாரம், மருத்துவம் முதலிய தொழிலியல் துறைகளிலும் ஆங்கிலத்திலேயே இன்று கல்வி கற்பிக்கப்படுகின்றது. ஆனால், மேல் நிலைப் பள்ளியில் ஓரளவு ஆங்கில அறிவோடு பயின்று வரும் மாணவர்கள் இத்துறைகளில் ஆங்கில வாயிலாகக் கல்வி கற்றலில் துன்பம் அடைகின்றனர். அதன்பொருட்டுப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு முதல் ஆண்டில் ஆங்கில ஆழ்படிப்பு கற்பிக்கப்படுகிறது. முதல் ஆண்டு தாய்மொழி வாயிலாகப் பாடங்கள் நடக்கின்றன. இரண்டாவது ஆண்டு தாய்மொழியிலும் ஆங்கிலத்து மூலமாகப் பாடங்கள் நடத்தப் படுகின்றன. மூன்றாவது ஆண்டும் அதற்குமேலும் ஆங்கிலத்திலேயே பாடங்கள் நடைபெறுகின்றன.

இலங்கையில் மேல் நிலைப் பள்ளிக் கல்வி இறுதியில் ஏறக்குறைய 1,00,000 மாணவர்கள் கற்கின்றனர். பல்கலைக் கழகம் நுழைவுக்கென 40,000 மாணவர்கள் தேர்வு எழுதுகின்றார்கள். அவர்களுள் 5,000 மாணவர்களுக்கு மட்டுமே பல்கலைக் கழகக்கல்விக்கென தேர்வு கிடைக்கின்றது. ஆதலால் பெரும்பாலான மாணவர்கள் ஏமாற்றம் அடைகின்றனர். இந்தியாவில் இருப்பதுபோன்று இணைந்த கல்லூரிகள் (Affiliated Colleges) இலங்கையில் இல்லை. உயர்கல்வி என்றால் அனைத்து மாணவர்களும் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து படிக்கும் கல்வியே ஆகும்.

இலங்கையில் சிங்களர்க்கெனப் பல்கலைக் கழகமும், தமிழர்க்கெனப் பல்கலைக் கழகமும், அறிவியலுக்கெனப் பல்கலைக் கழகமும், பௌத்த சமயத்திற்கெனப் பல்கலைக் கழகமும். பொதுப் பல்கலைக் கழகமும், எனப்பல்கலைக் கழகங்கள் இயங்கி வருகின்றன. அவை பெரும்பாலும் பட்டப் படிப்புக் கல்வியே (Under Graduate Courses) கற்பிக்கின்றன. பட்டப் படிப்பிற்கு மேலான பட்ட மேற்படிப்புக்கல்வி, ஆராய்ச்சிப்படிப்பு ஆகியவை இப்பல்கலைக் கழகங்களில் மிகமிக அரியனவாகவே உள்ளன; இல்லை என்றுகூட கூறிவிடலாம். முதுநிலைக் கல்வி (Master Degeree Courses) கற்பித்தல் வழியாகவும், ஆராய்ச்சி வழியாகவும் பெறுதல் என இரண்டு வழிகளில் அமைந்து உள்ளது. இப்போதுதான் பலர் முதுநிலைக் கல்வி கற்க முன்வருவதாகத் தெரிகிறது. ஆனால் பட்டமேற்படிப்பிற்கும், ஆராய்ச்சிக்கும் இலங்கைப் பல்கலைக் கழகங்கள் இதுநாள்வரை இங்கிலாந்துப் பல்கலைக் கழகங்களையே சார்ந்து இருந்திருக்கின்றன. ஆனால், இன்றைய நிலை மாறிவிட்டது. வெளிநாட்டுப் போக்குவரத்து கடினமாகிவிட்டது இங்கிலாந்தில் வரவேற்பும் குறைந்துவிட்டது. அரசாங்கம் அயல் நாட்டுக் கல்வியின் பொருட்டுப் பொருள் உதவி செய்வதும் குறைந்துவிட்டது. கொழும்புப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் குறிப்பிட்டது போன்று இப்போது இலங்கைப் பல்கலைக் கழக ஆசிரியர்கள் ஆஸ்திரேலியா நோக்கி நிற்கின்றனர். முன் இங்கிலாந்து உதவியதைப் போன்று இப்போது ஆஸ்திரேலியா உதவுவதாகத் தெரிகிறது.

தோட்டங்களில் தொடக்கப் பள்ளிகளில் எளிய முறையில் தமிழ்க்கல்வி கற்பிக்கப்படுகிறது. கல்வியின் தரம் பிற்பட்டதாக உள்ளது. வசதியுமில்லாது தரமில்லாக் கல்வி கற்பதால் மலையகத் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் உயர் கல்வி கற்கச் செல்வது பாதிக்கப்படுகிறது.

(மூலம் : தமிழர் வாழும் அண்டை நாடுகளில் தமிழ்க் கல்வி)

இலங்கையில் தமிழ் மொழிப் பாடநூல்கள் தொடர்பாக எம்.க. நுஃமான் பின்வரும் செய்திகளை அளிக்கின்றார்.

இலங்கையில் ஐரோப்பியரின் வருகையின் பின்னரே பாடநூல் பற்றிய கருத்து தோன்றியது. மரபு வழிபட்ட குருகுல அல்லது திண்ணைப் பள்ளிக்கூட முறையில் கல்வி கற்பிக்கப்பட்ட காலத்தில் மொழி கற்பிப்பதற்கு விசேடமாகத் தயாரிக்கப்பட்ட பாடநூல்கள் எவையும் பயன்படுத்தப்படவில்லை. பண்டைய இலக்கண நூல்களையும், நிகண்டுகளையும் மனனம் செய்வதும், காவியங்கள் புராணங்கள் என்பனவற்றைப் படிப்பதுமே மொழிக்கல்வி எனக்கருதப்பட்டது. ஐரோப்பியரின் வருகையைத் தொடர்ந்தே இங்குப் புதுமுறையான பாடசாலைகள் தோற்றுவிக்கப்பட்டன.

ஒல்லாந்தரே இலங்கையில் முதல் முதல் அச்சியந்திரத்தை அறிமுகப் படுத்தினார். கி.பி.1737 ஆம் ஆண்டு கொழும்பில் அச்சகம் நிறுவப்படும் வரை சிறுவர்களுக்குப் பாடப்புத்தகங்கள் அநேகமாக இல்லை என்றே கூறலாம். ஆசிரியர் வினாவிடைப் புத்தகம் வழிபாட்டுப் புத்தகம் என்பவற்றில் ஒரே ஒரு படியை வைத்திருப்பார். அந்த நூலின் உதவியுடன் அவர் மாணவர்களுக்குக் கற்பிக்க, சிறுவர்கள் பெரும்பாலும் மணலில் எழுதிக் கல்வி பயின்றார்கள். 1737க்குப் பிறகு பெருந்தொகையான சிங்களப் பாடப் புத்தகங்கள்

வெளியிடப்பட்டதாகத் தெரிகிறது. பாடசாலையில் பயன்படுத்தப்பட்ட இப்புத்தகங்கள் எல்லாம் மதம் சம்பந்தப்பட்டவையாகவே இருந்தன.

உண்மையில் ஆங்கிலேயரின் வருகையின் பின்னரே இலங்கையில் பாடநூல் பற்றிய கருத்து விரிவடைந்தது. ஆயினும் 19-ஆம் நூற்றாண்டில் நடுப்பகுதி வரை தமிழ் மொழிப் பாடநூல்கள் இங்கு அதிகமாக உற்பத்தி செய்யப்படவில்லை. இலங்கையில் பாடப்புத்தகங்கள் பற்றி ஆராய்ந்த கே.டி.ஆரியதாசா, ஈ.எஸ்.டபுள்யூ. பெரேரா ஆகியோர் 1878ஆம் ஆண்டு வரை பாட சாலைகளில் தமிழ்ப் புத்தகங்கள் பற்றிய நிலைமை அவ்வளவு தெளிவாக இல்லை என்கின்றனர். எனினும் 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஆறுமுக நாவலர், சித்திலெவவை ஆகியோர் சிறுவர்களுக்குத் தமிழ் கற்பிப்பதற்கான பாடநூல்கள் தயாரிப்பதிலும் ஆர்வம் காட்டியுள்ளனர். ஆறுமுக நாவலர் மூன்று பால பாடங்களை எழுதி வெளியிட்டார். முதல் இரண்டு பால பாடங்கள் 1850 ஆம் ஆண்டும், மூன்றாம் பால பாடம் 1864 ஆம் ஆண்டும் வெளியிடப்பட்டன. ஆறுமுக நாவலரின் சம காலத்தவரான அறிஞர் சித்திலெவவை, தமிழ் முதற் புத்தகம் ஒன்றை எழுதி வெளியிட்டார்.

நாவலர், சித்திலெவவை ஆகியோரின் பாடநூல் முயற்சிகள் தனியார் முயற்சிகளாகும். இலங்கையில் 1879 ஆம் ஆண்டு அரசாங்கமும் முதன் முதலாகப் பாடநூல் வெளியீட்டுத் துறையில் இறங்கியது. இது இலங்கைப் பாடநூல் வரலாற்றில் ஒரு முக்கிய ஆண்டாகும். எனினும் கல்வித் திணைக்களம் சிங்கள மொழியிலேயே அதிக புத்தகங்களை வெளியிட்டன. 1938 லிருந்து பெருந்தொகையான தமிழ் மொழி நூல்கள் இலங்கைப் பாடசாலைகளில் புழக்கத்துக்கு வந்தன. 1930-40 ஆம் ஆண்டுகளில் ஏராளமான தமிழ் மொழிப் பாடப்புத்தகங்கள் தென் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டன. பாரததேச வாசகம், மாணிக்கவாசகம், கத்தோலிக்க வாசகம், தேசிய தமிழ் வாசகம், தமிழ் மலர் மாலை, செந்தமிழ்ச் சிலம்பு தமிழ் இலக்கணம், தூதன் முறைத்தமிழ் அப்பியாசங்கள் முதலிய தமிழ் மொழிப்பாடநூல்களும், இலக்கணப் பயிற்சிப் புத்தகங்களும் இதற்குச் சில உதாரணங்கள் ஆகும்.

1930க்குப் பின்னர் இலங்கையிலும் அநேகத் தமிழ் மொழிப்பாடநூல்கள் எழுதப்பட்டன. இறக்குமதி செய்யப்பட்ட நூல்களோடு உள்ளூர் உற்பத்திகளான இவையும் பாடசாலைகளில் பயன்படுத்தப்பட்டன. பாலபாடம் 5ஆம், 6ஆம் புத்தகங்கள், புதிய இலகு போத பாலபாடம், ஈழவாசகம், சித்திரக் கதா வாசகம், தமிழ் வாசகம், பாலபோதினி, மணிவாசகம், உமாவாசகம், முஸ்லீம் பாலர் வாசகம், மொழிப் பயிற்சி, செந்தமிழ்ப் பயிற்சி மாலை போன்ற சில பாடநூல்களை இதற்கு உதாரணமாகத் தரலாம். இந்நூல்களெல்லாம் மாணவர்களின் வயதையும் அனுபவத்தையும் ஒட்டி படிமுறையாக மொழி கற்பிக்கும் நோக்கத்துடனேயே எழுதப்பட்டன.

1940-ஆம் ஆண்டுக்குப் பிறகு இங்கு ஏராளமான பாடநூல்கள் வெளிவரத்தொடங்கின. கீழ்வகுப்புக்களின் மொழியே முதன்மைப் பாடம் ஆகையால் மொழிப் பாடநூல்கள் இவற்றுள் பெருந்தொகையாக அமைந்தன.

இக்காலப் பகுதியில் தமிழ் மொழிப் பாடநூல்கள் அனைத்தும் தனியார் முயற்சியாகவே வெளிவந்தன. வெவ்வேறு பதிப்பகத்தார் ஆசிரியர்களையும்,

எழுத்தாளர்களையும் கொண்டு பல்வேறு பெயர்களில் மொழிப்பாடநூல்களை வெளியிட்டனர்.

1965 ஆம் ஆண்டு முதல் சகல பாடநூல்களையும் அச்சிட்டு வெளியிடும் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. நாடு முழுவதிலும் உள்ள பாடசாலைகளில் ஒரே வகையான பாடநூல்களைப் பயன்படுத்தும் முறை இதன்மூலம் ஏற்பட்டது. அரசாங்கமே ஆசிரியர்களை அமர்த்தி பாடநூல்களைத் தயாரிக்கத் தொடங்கியது. பாடவிதான அபிவிருத்திச்சபை (curriculum Development Centre) தயாரித்துக் கொடுக்கும் பாடவிதானத்தின் (Curriculum) அடிப்படையில் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் (Educational Publication Department) பாடநூல்களைத் தயாரித்து வெளியிடத் தொடங்கியது. இதன் அடிப்படையில் 'தமிழ் மலர்' என்ற பெயரில் தமிழ் மொழிப் பாடநூல் வரிசை வெளிவந்தது. 'தமிழ் மலர்' முதற் புத்தகம் 1965 ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்தது. அதை அடுத்த ஆண்டுகளில் 2ஆம், 3ஆம், 4ஆம், 5ஆம், புத்தகங்கள் வெளிவந்தன. இவ்வாறே 6ஆம் வகுப்பில் இருந்து 10ஆம் வகுப்பு வரையும் தமிழ் மலர்கள் வெளிவந்தன. 1972ஆம் ஆண்டுவரை இந்நூல்களே இலங்கைப் பாடசாலைகள் அனைத்திலும் தமிழ் கற்பித்தலுக்கான பாடநூல்களாகப் பயன்படுத்தப்பட்டு வந்தன.

1972 ஆம் ஆண்டு இலங்கையில் புதிய கல்வித்திட்டம் நடைமுறைப் படுத்தப்படத் தொடங்கியதும் சகல பாடப் புத்தகங்களிலும் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன. இவ்வகையில் தமிழ் மொழிப்பாடநூல்களும் மாற்றியமைக்கப்பட்டன. இதுவரை பயன்படுத்தப்பட்டு வந்த 'தமிழ்' மலர்களுக்குப் பதிலாக 'தமிழ்' என்ற பெயரில் புதிய மொழிப் பாடநூல்களைக் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் வெளியிடத் தொடங்கியது. இவை 1973 சனவரி தொடக்கத்தில் இலங்கைப் பாடசாலைகளில் பயன்பாட்டுக்கு வந்தன. அடுத்தடுத்த ஆண்டுகளில் ஏனைய நூல்கள் பயன்பாட்டுக்கு வந்தன.

1978 இல் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய கல்வித் திட்டத்தின் சோசலிசக் கருத்தோட்டங்களைப் பிரதிபலிக்கும் வகையில் புதிய தமிழ் நூல்களில் பாட விஷயங்கள் சேர்க்கப்பட்டன. ஒரு குறிப்பிட்ட அளவுக்கு நவீன மொழி நடை புதிய பாடநூல்களில் கையாளப்பட்டுள்ளது. இவை தவிர மொழியமைப்பு, தரப்படுத்தல் ஆகியவற்றில் இவற்றுக்கிடையே அதிகவேறுபாடு இல்லை.

தற்போதைய அரசு இலங்கையின் கல்வியமைப்பில் புதிய மாற்றங்களை ஏற்படுத்த வேண்டி 1981இல் கல்வி வெள்ளை அறிக்கை ஒன்றை வெளியிட்டது. இவ்வறிக்கை 1985இல் அமுலாக்கப்படத் தொடங்கியபோது அதற்கேற்ப பாடநூல்களும் புதிதாக எழுதப்பட்டன. ஆண்டு 1 முதல் ஆண்டு 8 வரை உள்ள புதிய 'தமிழ்' நூல்களின் முதல் பதிப்பு 1985 இல் வெளிவந்தது. 9ஆம், 10ஆம் ஆண்டுத் தமிழ் நூல்கள் மேலும் 11ஆம் ஆண்டுத் தமிழ்நூல் 1987இல் வெளிவந்தது. புதிய தமிழ் நூல்களும் பழைய தமிழ் நூல்களை அடியொற்றியே பெரும்பாலும் அமைந்துள்ளன. பழைய தமிழ் நூல்களில் இடம் பெற சில பாடங்கள் நீக்கப்பட்டும் சில புதிதாகச் சேர்க்கப் பட்டும் இந்நூல்கள் புதுப்பிக்கப்பட்டன. 9ஆம், 10ஆம், 11ஆம் ஆண்டுக்கான நூல்கள் முற்றிலும் புதிதாக எழுதப்பட்டுள்ளன. தற்போது இலங்கைப் பாடசாலைகள் அனைத்திலும் இப்புதிய தமிழ் நூல்களே பயன்படுத்தப்படுகின்றன. (எம். க நுஃமான்)

செய்திப் பரவல் தொடர்புச் சாதனங்கள்

திரைப்படம்

இலங்கையில் ஏழு திரைப்படங்கள் 1973 வரை இலங்கைத் தமிழில் வெளிவந்துள்ளன. அவற்றில் முதலாவது படம் 30 ஆண்டுகள் முன்பு வெளிவந்த தோட்டக்காரி யாகும். ஏழவாது படம் குத்துவிளக்கு என்பது ஆகும். அதனைத் தயாரித்து வெளியிட்டவர் கலைஞர் துரைராஜா என்னும் தமிழ் அன்பர் ஆவார். அவரே படத்தின் கதையினை எழுதியுள்ளார். பாடல்களை அமைத்தவர் ஈழத்து ரத்தினம் ஆவார். இசை அமைப்பாளர் ஆர். முத்துசாமி ஆவார். இதில் தலைவனாக ஆனந்தன் என்பவரும் தலைவியாக லீலா நாராயணன் என்பவரும், நகைச்சுவை நடிகராக இராமதாஸ் என்பவரும் நடித்துள்ளனர். நூறு நாட்கள் ஓடிய இப்படம் இலங்கை மண்ணின் பகழ்பாடும் காவியமாகும். இப்படத்தில் வரும் முதற்பாடல் வருமாறு:-

"ஈழத் திருநாடே என்னருமைத் தாயகமே
இருகரம் கூப்புகின்றேன். வணக்கம் அம்மா
வாழும் இனங்களிங்கு பேசும் மொழியிரண்டு
வழங்கிய உனக்கு நாங்கள் பிள்ளைகளம்மா (1)

கங்கை மகாவலியும் களனியும் எங்களுக்கு
மங்கைநீ ஊட்டிவரும் அமுதம் அம்மா
சிங்களமும் செந்தமிழும் செல்வியுன் இருவிழியாம்
சேர்ந்திங்கு வாழ்வதுந்தன் கருணையம்மா (2)

ஈழத்துக் கலைகள்தன்னை உலகுக்கு எடுத்தளித்த
கலாயோகி ஆனந்த குமாரசுவாமி
தவழ்ந்தது உந்தன் மடியல்லவா
யாழுக்கு நூல்வடித்துப் பாருக்குக் காட்டியது
விபுலானந்த அடிகள் அல்லவா?

பாட்டுக்குப் பொருள் சொன்னநாவலர் பிறந்தது
யாழ்ப்பாண நாட்டுக்குப் புகழல்லவா - உந்தன்
வீட்டில் பிறந்தவர்கள் நாட்டுக்காக வாழ்ந்தவர்கள்
வீரர்கள் என்பது பெருமையல்லவா? (4)

புத்தமும் சைவமும் புனித இசுலாமும்
கிறிஸ்தவமும் இந்நாட்டின் உயிரம்மா
இத்தனையும் என்றென்றும் இங்கிருக்க வேண்டுமென்று
இதயத்தால் வேண்டுகிறேன் உன்னையம்மா (5)

எழுத்தாளர்கள்

இலங்கைத் தமிழர்களுக்கெல்லாம் தெரிந்த தமிழ் எழுத்தாளர்கள் புலவர்கள் மேலும் அவர்கள் எழுதிய நூல்கள்:- ஈழுத்துப் பூதன் தேவனார். ஏலேல சிங்கனின் திருவள்ளுவர் உறவு, தேவார ஆசிரியர்கள் பாடிய கோணேசுவரம், திருக்கேதிசுவரம், சைமன் காசிச் செட்டியின் தமிழ் புளுடார்ச் (Tamil Plutarch), ஆறுமுக நாவலர், சி. வை. தாமோதரம் பிள்ளை, பலர் மேற்கொண்ட இலக்கண, இலக்கிய, புராண நூற்பதிப்புகள், கதிரைவேற்பிள்ளையின் தமிழ் மொழி அகராதி, சைவ சமய நூல்களின் மொழிப்பெயர்ப்புகள், அதன் மருத்துவ அறிஞர் கிரீனும் பிறரும் தமிழில் மொழிபெயர்த்த அறிவியல் குறிப்பாக மருத்துவ நூல்கள், சபாபதி நாவலரின் திராவிடப் பிரகாசிகை, கூத்தப்பிரான் தத்துவக் கலையை உலகுக்கு விளக்கிய ஆனந்த குமாரசாமி, தமிழிலக்கிய சமய நூல்களின் மொழிபெயர்ப்புக்கள், கனகசபைப் பிள்ளையின் 1,800 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர், கணேசஐயர் தொல்காப்பியப் பதிப்புகள், திருத்தந்தைஞானப்பிரகாசர், விபுலானந்த அடிகளார், டாக்டர் எம்.வேலுப்பிள்ளை, வித்துவ சிரோமணி பொன்னம்பலம் பிள்ளை, குமராசாமிப் புலவர், பண்டிதமணி கணபதிப் பிள்ளை - இலங்கைத் தமிழ் வரலாற்றில் இவர்களுக்கு எல்லாம் ஒரு சிறப்பான இடம் உண்டு. ஈழத்துப் பூதத்தேவனார் பாடல்கள் சிறந்த சங்க இலக்கியத்தில் வரலாறாக உள்ளன. (அகம் 3 பாடல், குறுந்தொகை 3, நற்றினை ஆக ஏழு பாடல்கள்.)

நூலகங்கள்

இலங்கையில் ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் நூலகம் உள்ளது. பல்கலைக்கழகக்கல்வியின் ஒரு முக்கியமான கூறாக இந்நூலகங்கள் கருதப்படுகின்றன. புதிதாகத் தொடங்கிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், மட்டக்களப்புப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் நூலகங்கள் இப்போதுதான் உருவம் பெற்று வருகின்றன. இலங்கைத் தமிழர் சமயம் பண்பாடு பற்றிய ஆராய்ச்சிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தையே நாம் நம்ப வேண்டியுள்ளது. இலங்கைப் பல்கலைக்கழகத்து நூலகங்களுள் பேராதனைப் பல்கலைக்கழகத்து நூலகம் சிற தனிடம் பெறுகிறது. 3,80,000 நூல்கள் இந்நூலகத்தில் (1982 ஆம் ஆண்டளவிலே) இடம் பெற்றுள்ளன. மேலும் இலங்கையில் பழைய நூல் காப்பகம் ஒன்றும் (Archives) பழம் பொருட்காட்சியகம் ஒன்றும் (Museum) அரசின் துறைகளாக இயங்கி வருகின்றன.

தினசரிகள், இதழ்கள்

தினகரன், வீரகேசரி, தினபதி, ஈழ நாடு ,ஈழமுரசு (Ed. S. M. Gopalakrishnan), முரசொலி (Ed. Thiruselvam) உதயன் (Managing Ed. Saravanabhavan) ஆகிய தினசரி இதழ்களும், தினகரன், வீரகேசரி, சிந்தாமணி, ஈழநாடு, சுதந்திரன் ஆகிய வார இதழ்களும்; மல்லிகை, சுடர், சிரித்திரன் என்னும் மாத இதழ்களும் ஸ்ரீலங்கையில் வெளியாகும் தமிழ் இதழ்களாகும். இவ்விதழ்களில் சில முக்கியமானவை பற்றிய செய்திகள், விலாசம், உட்பட கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன.

தினகரன், காலை-தமிழ்த் தினசரிPOB 248, Lake House, D.R.Wijewardene Mawatha, Colombo 10, tel (1) 21181; founded 1932 publ.by Associated Newspaper of Ceylon Ltd. Ed. R.Sivagurunathan, cir. daily 14.000.

வீரகேசரி காலை- தமிழ்த் தினசரி 185, Grand Pass Road, POB 160 Colombo 14. tel (1) 20527 founded 1930 publ. by Express Newspapers (Ceylon) Ed. A. Sivanesaselvan. cir 35,000.

தினபதி, காலை-தமிழ்த் தினசரி POB 226, 5, Gunasena Mawatha. Colombo 12, tel (1) 23884. telex 21306. founded 1966. Publ. by Independent Newspapers Ltd. Ed. T.S.T Sivanayagem, CIr. 46,000.

ஈழநாடு காலை தமிழ்த் தினசரி POB 49, 165 Sivankoil West Road, Jaffna, Tel, (21, 22389, founded 1959. Managing Director, R.Rajalingam. Ed. N.Sabaratnam. Chair, K.C Thangarajah. Cir. 15,000

மித்ரன் காலை தமிழ்த் தினசரி 185, Grand Pass Road, Colombo 14, tel (1) 20881, founded 1966. Publ. Express News Papers (Ceylon) Ltd. Ed. K. Sivapiragasam, Cir. 18,000.

ஞாயிறு இதழ்கள் (Sunday NewsPapers)

சிந்தாமணி founded 1966,5 Gunasena Mawatha, Colombo 12, Tel(1) 23884. Publ. By Independent Newspapers Ltd., Ed. S. V. Sivanayagam Cir. 59,400.

மித்ரன் வாரமலர் founded 1969. 1851, Grand Pass Road, Colombo. tel (1) 20881. Publ by, Express Newspapers (Ceylon) Ltd, Ed. K. Sivapragasam. Cir. 25,000

தினகரன் வார மஞ்சரி founded 1948 POB 248 Lake House D. R. Wijewardene Mawatha, Colombo 10., tel (1) 21181, Publ. by. Associated Newspapers of Ceylon Ltd. Ed. S. Sivagurunathan. Cir. 21,000.

வீரகேசரி வார வெளியீடு founded 1931, 1851, Grand Pass Road, Colombo 14, tel (1) 20881, Publ.by . Express Newspapers (Ceylon) Ltd. Ed. K.Sivapragasam. Cir. 45,000.

வானொலி

ஸ்ரீலங்கா வானொலி தரமான தமிழ் நிகழ்ச்சிகளைத் தமிழருக்கு அளித்து வருகிறது. ரூபவாஹினியும் நல்ல தமிழில் செய்தி அறிக்கையை (செய்தி மஞ்சரி) அளித்து வருவது குறிப்பிடத்தக்கது. தமிழ் ஈழ விடுதலைப் போராட்டம் தொடங்கிய காலத்திலிருந்து தமிழ் நிகழ்ச்சிகள் ஓரளவு பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆனாலும், தொடர்ந்து தமிழ் நிகழ்ச்சிகள் ஓரளவு ஒலி பரப்பப்படுகின்றன.

சங்கங்கள்

1898 லேயே யாழ்ப்பாணத்தில் தமிழ் வளர்ச்சிக்காக, மதுரைத் தமிழ்ச் சங்கம் தொடங்கப்படுவதற்கு முன், தொடங்கப்பட்டது. 1922 இல் திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டது

கொழும்புத் தமிழ்ச் சங்கம்

1942 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. தமிழ்க் கலை, கலாச்சாரம், கல்வி ஆகியவற்றை வளர்த்தல்; தமிழ் வளர்ச்சிக்கு உகந்த நூல்களை வெளியிடுதல் ஆகியவை இச்சங்கத்தின் தலையாய நோக்கங்களாகும்.

தமிழ்க் கலைஞர் வட்டம்

1974 இல் தோற்றுவிக்கப்பட்டது. தமிழ் இலக்கிய ஆக்கங்களை மதிப்பீடு செய்து பரிசுகளை வழங்கி வருகிறது.

கல்வி, கலை, கலாச்சாரக் காப்புக் கழகம்

இவ்வமைப்பின் நோக்கம் தமிழ்க் கலை, கலாச்சாரம் கல்வி முதலியவற்றைக் காப்பாற்றி வளர்த்து வருவதே ஆகும். வள்ளுவர், இளங்கோ, பாரதி பெயரால் அமைந்த மன்றங்களும் தமிழ்ப் பணிபுரிகின்றன.

ஸ்ரீலங்காவில் பின்வரும் மாநாடுகள் நடத்தப்பட்டன. நான்காம் உலகத் தமிழ் மாநாடு, தமிழ்ப் புதினத்தின் நூற்றாண்டு நினைவு மாநாடு, நான்காம் உலக இசுலாமிய இலக்கிய மாநாடு, அகில உலக இந்து மாநாடு. மேலும் இலங்கை அரசு பல ஆண்டுகளாக அஞ்சல் தலையில் தமிழ் எழுத்துக்களைப் பொறித்து வெளியிடுகின்றது என்பதும் கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

அரசியலும், தமிழ் ஈழப் பிரச்சனையும்

சமீப காலத்தில் இலங்கைத் தமிழர்கள் தனித் தமிழ் ஈழம் வேண்டும் எனப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். ஏன் தமிழ் ஈழம் கேட்கின்றார்கள்? இலங்கைத் தமிழர்கள் கூறும் காரணங்கள் பின்வருவனவாகும்.

1. இலங்கை அரசு பெரும்பான்மையினரின் ஆட்சியைச் சிறுபான்மையினரது மீது திணித்து வந்திருக்கிறது. சிங்கள மொழி ஆட்சி மொழியாக்கப்பட்டது. 1978இல் உருவாக்கப்பட்ட புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தில் முதல் முதலாகத் தமிழுக்குத் தேசிய மொழி என்ற அந்தஸ்து வழங்கப்பட்டபோதிலும் இது தமிழ் மொழிக்கு நடைமுறை ரீதியிலான புதிய அந்தஸ்து எதையும் எற்படுத்தவில்லை.

2. கல்வித் திட்டங்களில் இனவெறிக் கொள்கை பின்பற்றப்பட்டது.

3. வேலை வாய்ப்புத் திட்டங்களில் சிங்கள இனவெறிக் கொள்கை பின்பற்றப்பட்டது. ஸ்ரீலங்கா தமிழர்களுக்குச் சமத்துவம், சம உரிமை அளிக்கப்படவில்லை

4. 1956, 1958, 1961, 1974, 1975, 1976, 1977, 1981 ஆண்டுகளில் தமிழர்களைத் தாக்கும் வன்முறைச் செயல்களில் சிங்களவர்கள் ஈடுபட்டனர். குறிப்பாக, 1983ஆம் ஆண்டிலும், அதற்குப் பிறகும் அச்சுறுத்தும் கொடிய வன்முறைச் செயல்களில் சிங்களவர்கள் ஈடுபட்டார்கள்.

5. தமிழர் பகுதிகளில் தமிழர்களின் பெரும்பான்மையைக் குறைப்பதற்காக சிங்களவர்களை அப்பகுதியிலே குடியேறி நிலையாக வாழ ஸ்ரீலங்கா அரசு ஊக்கம் அளிக்கின்றது.

6. தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையில் அவர்களுக்குச் சுய நிருணய உரிமை உண்டு. இந்த நிலைப்பாட்டினால் அவர்களது அந்தஸ்தை நிருணயிக்கும் உரிமை அவர்களுக்கு உண்டு.

7. 1976ஆம் ஆண்டு வட்டு கோடை *(Vaddu Koddai)* தமிழீழ தனியரசுத் தீர்மானமும், 1977இல் தமிழர்களுக்குக் கிடைத்த தேர்தல் வெற்றியும் தமிழ் ஈழத்திற்கு ஆதரவு தருகின்றன.

8. பண்டைய காலத்திலிருந்தே தொடர்ந்து இடைவிடாமல் ஒரு வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பில் குறிப்பாகத் தீவின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேல் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றார்கள். மேலும், தனிப் பண்பாடு, தனிமொழி, தனிமதம் தனி அரசியல் உரிமையுடன் தமிழ் ஈழ அரசு ஐரோப்பியர்கள் வருவதற்கு முன்பு வாழ்ந்து வந்ததால் மீண்டும் தனியரசு அமைக்கும் உரிமை உண்டு.

ஆனால், இலங்கைத் தமிழீழ தமிழர்களிடையே தமிழீழக் கோட்பாடு தொடர்பாக ஒரே மாதிரியான கருத்து கிடையாது. அகிம்சா போராட்ட முறையின் மூலம் தமிழ் ஈழத் தனியரசை உருவாக்க வேண்டும் அல்லது இந்தியாவில் இருப்பது போல ஒரு கூட்டரசு (சமஷ்டி) அரசை இலங்கையில் அமைப்பதற்கு ஒத்துழைக்க முன் வர வேண்டும் என்பதே தமிழ் ஐக்கிய விடுதலை முன்னணியின் *(TULF)* குறிக்கோளாகும். ஆனால், தமிழ் ஈழ ஆயுதப் போராட்ட வீரர்கள் ஆயுதப் போராட்டம் மூலம் தமிழ் ஈழத் தனியரசை அமைக்க வேண்டும் என விரும்புகிறார்கள். ஆயுதப் போராட்ட வீரர்களிடையேயும் ஒற்றுமை மனப்பான்மை கிடையாது. இடது சாரி, வலது சாரிக் கோட்பாடுகளும், தனிப்பட்ட வேறுபாடுகளும் இவர்கள் ஒற்றுமையைப் பாதிக்கின்றன. இந்த ஆயுதப் போராட்ட வீரர்களின் முக்கியப் போராட்ட அமைப்புகள். 1. தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம் *(LTTE)*, 2. தமிழ் ஈழ விடுதலை இயக்கம் *(TELO)*, 3. தமிழ் ஈழ மக்கள் விடுதலை இயக்கம் *(PLOTE)*, 4. ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி *(EPRLF)*, 5. ஈழத் தேசிய விடுதலை முன்னணி *(ENLF)*.

இந்திய அரசு சமாதான முறைகளைப் பின்பற்றுகின்றது. இந்தியாவின் இடைவிடா முயற்சியினால் சமரசப் பேச்சு வார்த்தை தொடங்கியது. இப்பேச்சு வார்த்தைகளில் இலங்கை அரசும், ஆயுதப் போராட்ட வீரர்களின் அமைப்புகளும், *TULF* உம் கலந்து

கொண்டன. பேச்சு வார்த்தைகள் விட்டு விட்டுத் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தன. தவிர சிங்கள இராணுவப் போராட்ட, மிருகத்தனமான தாக்குதல்கள் மூலம் ஆயிரக் கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் கொன்று குவிக்கப்பட்டனர்.

இந்திய அரசின் இடைவிடா முயற்சியினால் 1987ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29ஆம் நாள் கொழும்பு நகரில் இலங்கையில் அமைதி மற்றும் சமூக நிலையை ஏற்படுத்தும் இந்திய இலங்கை ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. இவ்வொப்பந்தப்படி இலங்கையின் ஒற்றுமை, இறையாண்மை, பிரதேச ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பராமரிப்பதில் இந்தியாவுக்கு ஆர்வம் உண்டு. ஆகையால், தனித்தமிழ் ஈழக்கோட்பாட்டை இந்திய அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால், இலங்கைத் தமிழர்களின் சரித்திர பூர்வமான வசிப்பிடமாக வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இருந்து வந்திருக்கின்றன. இங்கு மற்ற இனத்தவருடன் தமிழர்கள் வாழ்கிறார்கள் என இவ்வுடன்படிக்கையில் இலங்கை அரசும், இந்திய அரசும் ஒப்புக்கொண்டன. மேலும், இவ்வொப்பந்தத்தின்படி வடக்கு-கிழக்கு மாகாணங்கள் ஒரே நிருவாகப் பகுதியாக இணையவும், அவற்றைப் பொதுமக்கள் வாக்கெடுப்பு மூலம் தனியாகப்பிரியவும் அனுமதிக்க இலங்கை அரசு ஒப்பந்தம் அளித்தது. இந்த ஒரே நிருவாகப் பகுதி தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாண மன்றத்துடன் இயங்கும் இந்த ஒரே நிருவாகப் பகுதிக்கு ஓர் ஆளுநர். ஒரு முதல்வர் ஓர் அமைச்சரவையும் இருக்கும். 1988ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் தேதியோ அதற்கு முன்னரோ பொதுமக்கள் வாக்கெடுப்பு ஒன்று நடைபெறும். இலங்கைக் குடியரசுத் தலைவர் அத்தகைய பொதுமக்கள் வாக்கெடுப்பைத் தமது விருப்பப்படி ஒத்தி வைக்கவும் உரிமை உண்டு. இந்த ஒப்பந்தம் கையெழுத்தான 48 மணிநேரத்திற்குள் போர் நிறுத்தம் அமுலுக்கு வரும். எல்லா அரசியல் கைதிகளுக்கும், பயங்கரவாதச்சட்டம் மற்ற அவசர நிலைச் சட்டங்களில் கீழ்ச் சிறையில் உள்ள, வழக்கு விசாரணையில் உள்ள அனைவருக்கும் பொது மன்னிப்பு வழங்கப்படும்.

இவ்வொப்பந்தப்படி:-

அ. இலங்கையின் ஒற்றுமை, ஒருமைப் பாட்டுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு இந்தியப் பகுதி பயன்படாமல் பார்த்துக்கொள்ள இந்தியா தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

ஆ. இலங்கைக் கடற்படையுடன், தமிழ்ப் போராளிகளின் நடவடிக்கைகளைத் தடுக்க இந்தியக் கடற்படை, கடலோரக் காவல் படை ஒத்துழைப்பு தரும்.

இ. இந்தத் திட்டங்களை அமல் செய்ய இராணுவ உதவி வழங்கும்படி இலங்கை அரசு கோரினால், கோரிய உதவியைக் கோரிய சமயத்தில் இந்தியா வழங்கும்.

ஈ. இலங்கையில் உள்ள இந்தியக் குடிமக்களை இந்தியாவுக்கு அழைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை இந்திய அரசு துரிதப்படுத்தும். உடன் விளைவாக, தமிழ் நாட்டில் இருந்து தமிழ் அகதிகள் இலங்கைத் திரும்பும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். (ஏறக்குறைய 1,35,000 அகதிகள் இந்தியாவில் இருந்தனர்)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் அனைத்து இனத்தவரின் உயிருக்கும் உடலுக்கும் ஊறு ஏற்படாமல் பாதுகாப்பை உறுதி செய்ய இந்திய இலங்கை அரசுகள் ஒத்துழைக்கும்.

இந்த ஒப்பந்த அமலாக்கத்தை உறுதிப்படுத்த இலங்கை அரசு இந்திய அரசிடம் இராணுவ உதவி கேட்பதற்கு (இந்த ஒப்பந்தம்) வகை செய்கிறது. ஜூலை 31ஆம் தேதி இந்தியப் பிரதமர் நாடாளுமன்றத்தில் அறிவித்த வண்ணம், ஜூலை 29இல் ஒப்பந்தம் கையெழுத்தானவுடனேயே, இத்தகைய உதவியை இலங்கை அரசு முறையாகக் கேட்டது. ஒப்பந்த உதவியை நிறைவேற்றும் வகையில், அமைதி பாதுகாப்புப் பணிகளை ஏற்றுக் கொள்ளவும், ஒப்பந்த அமலாக்கத்திற்கு உதவவும் ஜூலை 30ஆம் தேதியன்று இந்தியப் படைகள் யாழ்ப்பாணத்தில் இறங்கின.

இந்தியப் படைகள் இறங்கியதும் போராளிகளுக்கும் (குறிப்பாகத் தமிழ் ஈழ விடுதலைப்புலி இயக்கத்தினர்) இலங்கை அரசுப் படையினருக்கும் இடையே போர் நிறுத்தம் ஏற்பட்டது. அடுத்த, இன்னும் சொல்லப்போனால் மிக முக்கியமான நடவடிக்கையாக அமைந்தது போராளிக் குழுக்களை, குறிப்பாக மிகப் பெரியதும் அதிகம் செயலாற்றும் குழுவான தமிழ் ஈழ விடுதலைப் புலிகளை அமைதி ஒப்பந்தத்தை ஏற்கச் செயது படைக்கலன்களை ஒப்படைக்கச் செய்வதாகும். ஆகஸ்டு 3ஆம் தேதி பிற்பகலுடன் 72 மணி கெடுமுடிவடைவதற்கு முன் படைக்கலன்களைத் தாங்கள் ஒப்படைக்கப் போவதாகவும் அதுபற்றி ஆகஸ்டு 4ஆம் தேதியன்று யாழ்ப்பாணம் பொதுக் கூட்டமொன்றில் முறைப்படி அறிவிப்பதாகவும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அமைப்பு இந்திய அரசிடம் தெரிவித்தது. ஒப்பந்த விதிப்படி இலங்கை அதிபரால் நியமிக்கப்படும் அதிகாரி ஒருவரிடம் படைக்கலன்கள் ஒப்படைக்கப்பட்டாக வேண்டும். ஆகஸ்டு 5ஆம் தேதியன்று இலங்கைப் பாதுகாப்புச் செயலர் ஜெனரல் அட்டிகலேயையும் இந்தியப் படைத் தளபதிஜெனரல் ஹர்கிரத் சிங்கையும் போராளிகள் ஒப்படைக்கும் படைக்கலன்களைப் பெறுவதற்கான அதிகாரிகளாக அதிபர் ஜெயவர்த்தனா நியமித்தார். அன்று பிற்பகலிலேயே படைக்கலன்களை ஒப்படைக்கும் நிகழ்ச்சி முறைப்படி நடைபெற்றது. படைக்கலன்களைத் தொடர்ந்து ஒப்படைப்பதற்காகப் பல்வேறு சேகரிப்பு மையங்கள் அமைக்கப்பட்டன. படைக்கலன்களை ஒப்படைக்கும் போராளிகளுக்குப் பொது மன்னிப்பை வழங்குவதாகவும், சிறை வைக்கப்பட்டோருக்கும் இலங்கை அரசின் குறிப்பிட்ட சட்டத்தின்படி போராளி நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப் பட்டோருக்கும் பொது மன்னிப்பை வழங்குவதாக அதிபர் ஜெயவர்த்தனா அறிவித்தார்.

ஆகையால், இந்தியா இலங்கையில் சமாதான சூழ்நிலை உருவாக வேண்டும் என விரும்பியது. இந்திய தேசிய நல்லெண்ணப்பாதுகாப்புக்காகவே இந்தியா இவ்வாறு தலையீடு செய்தது. இலங்கைக் கலவரச் சூழ்நிலை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த இசுரேலும், பாக்கிஸ்தானும், பிரிட்டனும் முயன்றன. இம்மாதிரியான சூழ்நிலை தொடர்ந்து நீடித்தால் இந்தியாவின் பாதுகாப்பிற்கு ஊறுவிளையும் என இந்தியா அஞ்சியது. மேலும், தமிழ் ஈழப் போராட்ட வீரர்கள் தமிழ்நாட்டில் தங்கி, தங்கள் படைபலத்தைப் பெருக்கிக் கொண்டதையும் இந்தியா புறக்கணிக்க விரும்பவில்லை. அடுத்த படியாக 1,35,000 இலங்கை அகதிகள் தமிழ்நாட்டில் தங்கி, பிரச்சனைகளை அதிகரிப்பதையும் இந்தியா விரும்பவில்லை. ஆனால், இலங்கையில் அமைதிச் சூழ்நிலை

மீண்டும் தோன்றிய பிறகுதான் இந்த அகதிகளை இலங்கைக்குத் திரும்ப அனுப்ப வேண்டும் என இந்தியா விரும்பியது. இக்காரணங்களால்தான் இந்தியா இலங்கையுடன் அமைதி உடன்படிக்கை செய்து கொள்ள விரும்பியது.

ஆனால், தொடக்கத்திலிருந்தே தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அமைப்பு இந்த ஒப்பந்தத்தை எதிர்த்தது. அவர்கள் வரையறுக்கப்பட்ட தன்னாட்சி உரிமையை விரும்பவில்லை. தனித்தமிழ் ஈழம்தான் வேண்டும் என நினைக்கின்றார்கள். ஆனால், இலங்கை இந்தியா நட்பு முறிந்து விடுவதையும், இலங்கை இரு நாடாகப் பிரிக்கப்படுவதையும் இந்தியா ஏற்றுக்கொள்ள மறுக்கின்றது. இக்காரணத்தால்தான் இந்தியாவிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே தொடர்ந்து போராட்டம் நடக்கின்றது.

இக்காரணத்தால்தான் படைக்கலன்கள் ஒப்படைக்கப்பட்ட பிறகு பேரப்பேச்சுகளில் விடுதலைப்புலிகள் கலந்து கொண்டபோதிலும் உண்மையில் அவர்கள் இப்பேச்சுகள் மூலம் தீர்வுகாண இசையவில்லை. 1.படைக்கலன்களை ஒப்படைத்தபோதிலும், எல்லாப் படைக்கலன்களையும் அவர்கள் ஒப்படைக்கத் தயங்கினர், மறுத்தனர். 2. வடக்கு, கிழக்கு மாநிலங்களில் ஓர் இடைக்கால அரசு அமைக்க வேண்டும் என்று பேரப் பேச்சு நடந்தபோது, அதுவும் விடுதலைப்புலிகளுக்குப் பெரும்பான்மை இந்நிர்வாகக் குழுவில் அளிக்கின்றோம் என்று செப்டம்பர் 29,1987இல் வாக்கு அளித்த பிறகும் கூட, இறுதியில் தாங்கள் விரும்பிய நபர் ஒருவரைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று விடுதலைப் புலிகள் வாதாடியதால் இப்பேரப்பேச்சு முறிவடைந்தது. 3. மேலும், யாழ்ப்பாணத்தில் கடையடைப்பு செய்தார்கள் (Hartal) வேலை நிறுத்தம் செய்தனர். 4. சிங்களவர்கள் ஒப்பந்தம் செய்த பிறகும், தமிழ் ஈழப்பகுதிகளில் குடியேறுவதால் மக்களை அரசுக்கு வரிசெலுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொண்டனர். 5. உண்ணாவிரதம் இருந்தனர்; செப்டம்பர் 16ஆம் நாள் திலீபன் உண்ணாநோன்பு இருந்து உயிர் நீத்தார்.

இவ்வாறு விடுதலைப் புலிகள் நடந்து கொண்டதற்குக் காரணமாக இருந்தவர்கள் இலங்கைப் பிரதமர் பிரேமதாசாவும், தேசிய பாதுகாப்பு அமைச்சர் அதுலத்முதலியும் ஆவார்கள். அவர்கள் தொடர்ந்து, ஒப்பந்தத்திற்குப் பிறகும் தமிழ் ஈழப்பகுதிகளில் சிங்களவர்களைக் குடியேற்றினார்கள். மேலும், சிங்களவர்களைப் பயன்படுத்தி இனக் கலவரங்களும் தோன்றும் சூழ்நிலையை உருவாக்கினர். தவிர உடன்படிக்கையை மீறி இந்திய அரசின் ஆலோசனையை ஏற்க மறுத்து 17 விடுதலைப் புலி வீரர்களை அக்டோபர் 3ஆம் நாள் கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர்களில் 12 பேர் உடனடியாகத் தற்கொலை செய்து கொண்டனர். கோபம் கொண்ட விடுதலைப் புலிகள் உடனடியாக 13 இலங்கைப் படைவீரர்களைக் கொலை செய்தார்கள். மேலும் 150 சிங்களவர்களைக் கொலைச் செய்தார்கள். இந்திய அமைதிப் படை வீரர்களையும் (IPKF) 1987 அக்டோபர் 10ஆம் நாள் விடுதலைப்புலிகள் தாக்கினர்.

இம்மாதிரியான புதிய சூழ்நிலை உருவாகியதால் இந்திய அமைதிப்படை வீரர்களுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே யாழ்ப்பாணத்தில் அக்டோபர் மாதம் 2ஆம் வாரத்தில் போர் மூண்டது. கடுமையான போர் 10 நாள்களுக்கு மேல் நீடித்தது (அக்டோபர் 10-25 தேதி வரை) இறுதியில் விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தை விட்டு விரட்டியடிக்கப் பட்டனர்.

ஒப்பந்தம் ஏற்பட்டபொழுது 5,000-6,000 விடுதலைப் புலிகள் இருந்தனர். யாழ்ப்பாணப் போருக்குப்பின் மார்ச்சு 1988இல் 3,500 பேர்கள்தான் இருக்கின்றனர் என இந்திய அமைதிப்படைத் தலைவர் திபிந்தர் சிங் கூறினார். மாநிலத் தேர்தல்கள் 1988 மார்ச்சுத் திங்கள் நடப்பதாக இருந்தது. ஆனால் வடக்கு, கிழக்கு, மேற்கு, மத்திய, தெற்கு மாநிலங்களில் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது. விடுதலைப்புலிகள் தொடர்ந்து குறிப்பாகக் கிழக்கு மாநிலத்தில் அம்பாறை, திருக்கோணமலை, பட்டிகோலா பகுதிகளில் போராடுகின்றனர். பொதுமக்களுடன் இவர்கள் கலந்து போராடுவதால் அமைதிப் படை வீரர்கள் இவர்களை முற்றிலும் தோறகடிக்க முடியவில்லை. ஏனென்றால், 'பொதுமக்கள் பாதுகாப்பிற்கு அமைதிப் படையினர் இடையூறாக இருக்கக் கூடாது எனும் கொள்கையை இந்தியா பின்பற்றுகின்றது. 1988 மார்ச்சு திங்களில் விடுதலைப் புலிகள் திருக்கோணமலையிலுள்ள முசுலிம்களையும், சிங்களவர்களையும் தாக்கியதாகவும் செய்தி வெளியிடப்பட்டது. 25,000 சிங்களவர்கள் திருக்கோணமலைப் பகுதியிலிருந்து வெளியேறினர்.

இடையிடையே. இந்தியப் படை வீரர்களும் விடுதலைப் புலிகளும் ஒருவரோடு ஒருவர் போராடிக்கொண்டிருக்கின்றனர். இலங்கையில் உடன்படிக்கை ஏற்பட்ட பின்பும் அமைதிச் சூழ்நிலை உருவாகவில்லை. போர் நிறுத்தம் தோன்றவேண்டுமென்றால் விடுதலைப்புலிகள் இந்தியா இலங்கை உடன்படிக்கையை ஏற்றுக் கொள்ள வேண்டும், எல்லாப் படைக்கலன்களையும் தவறாமல் ஒப்பந்தத்தை மீறாமல் ஒப்படைக்க வேண்டும், என இந்திய அரசு கூறுகின்றது. இந்த நிபந்தனைகளை ஒப்புக் கொண்டால்தான் விடுதலைப்புலிகளுடன் போர் நிறுத்தம் செய்யும் பேரப் பேச்சு நடத்த இந்திய அரசு முன் வரும் என இந்திய அரசு தெரிவிக்கின்றது. நிபந்தனைகள் எதுவும் இல்லாமல் இருக்கவேண்டும் அவ்வாறான சூழ்நிலை இருந்தால் பேரப்பேச்சு நடத்தத் தயாராக இருப்பதாக விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் கூறுகிறார். ஆகையால், இம்மாதிரியான குழப்பமான சிக்கல் நிறைந்த சூழ்நிலை அதுவும் இந்தியர்களே, இலங்கை இந்திய வமிசாவளியினரைத் தாக்கிக் கொண்டிருக்கின்ற சூழ்நிலை இலங்கையில் தோன்றியிருக்கின்றது. 1988ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் 50, 332 இந்திய படைவீரர்கள் இலங்கையில் இருப்பதாக இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் கே.சி.பந்த் கூறினார்.

எல். டி. டி. ஈ. இந்திய ராணுவம் எடுக்கும் நடவடிக்கைகளை எதிர்ப்பதால் 700 வீரர்களுக்கு மேல் பலிகொடுத்த பின்பும் முழு நற்பெயர் இந்திய ராணுவத்திற்குக் கிடைக்கவில்லை. அத்துடன் இலங்கை அரசியல் தலைவர்கள் இந்திய ராணுவத்தை திருப்பி அனுப்புவதை தேர்தல் உறுதிமொழி ஆக்கும் அளவுக்கு இந்திய ராணுவம் மீது வெறுப்பும் கிளரப்பட்டுள்ளது.

மேலும் ஒப்பந்தப்படி தமிழ் ஈழத்தில் தேர்தல் நடந்தது. தமிழ் ஈழ வடக்குப்பகுதியில் தேர்தலே நடக்கவில்லை. ஏனென்றால் இத்தேர்தலை விடுதலைப்புலிகள் எதிர்த்தனர். கிழக்குப்பகுதியில் இந்திய ராணுவப் படை உதவியுடன் தேர்தல் நடந்தது. கிட்டத்தட்ட 65 விழுக்காடு மக்கள் வாக்களித்திருக்கின்றார்கள். ஈ. பி. ஆர். எல். எப். கட்சிக்கு 36 இடங்களில் வெற்றிகிடைத்தது. திரு. வரதராஜப்பெருமாள் வடக்கிழக்கு மாநிலத்தின்முதல்வராகத்தேர்ந்தெடுக்கப்பட்டார். ஈ. பி. ஆர். எல். எப். க்கே தனி பெரும்பான்மை இருந்தும் கூட மற்றவர்களுக்கும் கூட அமைச்சரவையில் இடம்

கொடுத்திருக்கிறார்கள். இன்னமும் விடுதலைப்புலிகளுக்கும் கூட அழைப்பு விட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

ஆகையால் கிழக்குப்பகுதியில் லட்சக்கணக்கில் மக்கள் வாக்களித்திருப்பதால் இந்திய இலங்கை ஒப்பந்தத்தை முழு மனதாக அவர்கள் எதிர்க்கவில்லை எனத் தோன்றுகிறது. அதேசமயத்தில் விடுதலைப்புலிகளுக்கு அவர்கள் ஆதரவு தரவில்லை எனக்கூறமுடியாது. ஏனென்றால் ஈழத்தமிழர்கள் அமைதியை பெரிதும் விரும்புகின்றார்கள். விடுதலைப்புலிகள் நாட்டுரிமை உணர்ச்சியுடன், தங்கள் உயிரையே தியாகம் செய்துகொண்டு, தன்மானத்துடன் போராடும சுதந்திர வீரர்கள். ஆகையால் அவர்களுக்கும் தமிழ் ஈழத்தில் சிறப்பான ஆதரவு இருக்கின்றது. புலிகளும்-இந்திய அமைதிப்படையும் மோதிக்கொண்டது ஒரு வருந்தத்தக்க நிகழ்ச்சியாகும். இருவரும் சமாதானம் ஆகவேண்டும் என்றே தமிழ் மக்கள் விரும்புகின்றனர். அதே போல விடுதலைப்புலிகளுக்கும் பிற இலங்கை தமிழ் கட்சியினருக்கும் ஒற்றுமையும், சமாதானமும் ஏற்படவேண்டும் எனவும் தமிழ் மக்கள் விரும்புகின்றனர்.

மலேசியா

தமிழ் நாட்டிற்குக் கிழக்கே 1200 மைல் தொலைவில் வங்கக் கடலால் பிரிக்கப்பட்ட பகுதியில் மலேசியா இருக்கின்றது. பண்டைய காலத்திலிருந்தே தமிழ் நாட்டுக்கும் மலேசியாவுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது எனக் கூறலாம். 1,29,000 சதுரமைல்கள் பரப்புள்ள மலேசியாவில் 13 மாநிலங்கள் (States) உள்ளன. இம்மாநிலங்களில் 11 மலேயா தீபகற்பத்திலும், இரண்டு அதாவது சபா, சரவாக் மாநிலங்கள் இந்தோனேசியாவின் எல்லையிலுள்ள வடபோர்னியாவிலும் இருக்கின்றன. சரவாக்கின் மற்றொரு எல்லைப் புற நாடு வடக்கிழக்கில் உள்ள புருனை.நாடாகும். மலேசியாவின் தலை நகரம் கோலாலம்பூர்; இந்நாட்டிலுள்ள மற்ற முக்கிய நகரங்கள் ஐபோ, பினாங், போர்ட் கிளாங், மலாக்கா, குச்சிங், புருனை. வெப்பமான, ஈரக் கசிவான சீதோஷ்ண நிலை உள்ளது இந்நாடு. பொதுவாக வேளாண்மைத் துறையைச் சார்ந்த இந்நாடு அரிசி, தேயிலை, தென்னை-பனை தொடர்புள்ள பொருட்கள், தேங்காய், இரப்பர், மரம், வெள்ளீயம், பெட்ரோலியம், இரும்பு, தங்கம், கரி, அலுமினியம் அகப்படும் இடத்தில் உள்ள மண்வகை (bauxite) முதலிய பொருட்களை வாணிபம் செய்கின்றது.

மலேசியா-தமிழ்நாடு உறவு-வரலாற்றுச் சான்றுகள்

ஏசு பிறப்பதற்கு முன்பே பண்டைய காலத்தில் தமிழ் நாட்டிற்கும், மலேசியாவுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்ததாக வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். கடல் மூலம் செய்த வாணிபமே இத்தொடர்பின் முக்கியச் சான்றாக இருக்கின்றது. சங்க காலம் முடியும் காலத்தில் இவ்விரு அண்டை நாடுகளுக்கும் முறைப்பட்ட நிலையான வாணிபத் தொடர்பு இருந்தது எனக் கூறலாம். தமிழக வேளாண்மைத் துறைப் பொருட்களும், கை வேலைப்பாடு பொருட்களும் மலேசியாவின் நறுமணச் சரக்கு வகைகளும் பண்டம் பரிமாற்றம் செய்து கொள்ளப்பட்டன. வடகிழக்குப் பருவக் காற்றைத் தமக்குச் சாதகமாகப்பயன்படுத்திக் கொண்டு இக்கப்பல்கள் தமிழ் நாட்டிலிருந்து அக்டோபர் திங்கள் கிளம்பி நிக்கோபர் தீவுகள் வழியாக, சுமத்திராவிற்குத் தெற்கே செல்லும். மலேயா தீபகற்பத்தின் மேற்குக் கரையோரப் பகுதிகளுக்கு இறுதியாக இத்தமிழகக் கப்பல்கள் வந்தடைந்தன. இக்கப்பல்கள் வந்து போவதால் பிரபலமான பகுதி மலேசியாவில் உள்ள கேதா பகுதியாகும்.

மலேசியாவில் மலைகள் நிறைந்திருந்தமையால் அக்காலத் தமிழர்கள் "மலை நாடு" எனப் பெயரிட்டனர். கால ஓட்டத்தில் மலைநாடு என்னும் பதம் திரிந்து மலாயா என வழங்கலாயிற்று என்று சரித்திரம் சான்று கூறுகின்றது. இதனின்றே மலேசியா மலர்ந்துள்ளது. (தமிழ்த் தொண்டன்; அ. கந்தன்: மலேசியாவில் தமிழ்ப் பள்ளிகளும் தமிழ்க் கல்வியும் பக். 10)

மலேசியாவில் கிடைத்த கலைத் தொழில் வேலைப் பாடமைந்த பொருட்கள் சான்றுகள் மூலம் விளங்குவது என்னவென்றால் கி.பி.ஆறாம் நூற்றாண்டிலிருந்து சுங்கை புயாங் (Sungai Bujong), சுங்கை மெர்போக் (Sungai Merbok), குவாலா மூதா ((Kuala Muda) முதலிய கேதா கடற்கரையோரத் துறைமுகங்களுக்கு இந்திய வாணிபர்கள் அடிக்கடி வந்து சென்றார்கள்.

பண்டைய மலேசியாவில் திராவிடப் பண்பாட்டின் செல்வாக்கு மேலோங்கியிருந்தது என ரோலண்டு பிராடல் (Roland Bradell), ஆர். ஓ. வின்ஸ்டெட் (R. O. Winstedt), ஆர். ஜே. வில்கின்சன் (R. J. Wilkinson), பி. தேவஹூதி (P.Devahuti) ஜேம்ஸ் லோவ் (James Low) ஐ. எச். என். ஈவான்ஸ் (I. H. N. Evans), டாக்டர் வான்ஸ்டைன் காலென்பெல்ஸ் (Dr. Vanstein Callenfels), குவாரிட்ச் வேல்ஸ் (Quaritchwales), கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி முதலியவர்கள் செய்து, கண்டு பிடித்த ஆராய்ச்சிகளின் மூலம் தெளிவாகின்றது. அவர்கள் கண்டுபிடிப்பின் அடிப்படையில் மலேசியாவின் வரலாற்றை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம். இராமாயணம், மகாபாரதம் தொடங்கிய காலத்திலிருந்து வளர்ந்து வரும் இந்துக் காலம் (Hindu Period), இந்துக்களுக்குப் பிற்பட்ட காலம் (Post Hindu Period), பிரிட்டிஷ் ஆட்சிக்காலம் - என்று பிரிக்கலாம்.

பண்டைய, இடைக்காலத் தமிழ் நாடு மலேசியாவின் இந்துக்கால வளர்ச்சியில் ஒரு சிறப்பான பங்கு பெற்று வாழ்ந்தது எனக் கூறலாம். பொதுவாகத் தமிழர்கள் கலாச்சாரத் தூதுவர்களாகவும் அரசியல் தூதுவர்களாகவும் அரிய பொருட்களை விற்கும் வணிகர்களாகவும் பணிபுரிந்தனர். கேதா, கேதா வணிகர்களைப் பற்றி பட்டினப்பாலை, மணிமேகலை - முதலிய நூல்களில் கூறப்பட்டிருக்கின்றது. தமிழர்களின், குறிப்பாகப் பல்லவர்களின், செல்வாக்கு மலேசியாவில் ஓங்கியிருந்தது எனும் கருத்தை டாக்டர். டி. சீவெகிங் (Dr. de. G. Sieveking), டாக்டர் எம். சலிவான் (Dr. M. Sullivan), எச். ஏ. லாம்பு (H. A. Lamb) முதலியவர்களின்அகழ்வாராய்ச்சிச்சான்றுகள் உறுதிப்படுத்துகின்றவை.

இந்திய நாட்டைச்சேர்ந்த குமிழ்மணிகள் (beads) கரடுமுரடான கண்ணாடிக் கருவிகலப்பொருள்களின் தொகுதி மலேயாவின் புதிய கற்காலத்தில் இருந்ததாக அகழ்வாராய்ச்சிச் சான்றுகள் கிடைத்திருக்கின்றன. மேலும், மலேய தீபகற்பத்தின் மேற்குக் கரையிலுள்ள பேராக் நாட்டிலுள்ள கோலாசெலிசிங் (kuala Selising) என்னுமிடத்தில் கி.பி.5ஆம் நூற்றாண்டைச்சார்ந்த தென்னிந்திய கிரந்த மொழியில் எழுதப்பட்ட ஓர் மங்கிய சிவப்பு நிறமுள்ள நேர்த்தியாகச் செதுக்கப்பட்ட மணிக்கல் வகை (Cornelian seal) அகழ்வாராய்ச்சியின்பொழுது கிடைத்தது. ஸ்ரீவிஷ்ணு வார்மமாஸ்யா (Sri Visnuvarmamasya) என்று தவறாக சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டிருப்பதை இச்செதுக்கப்பட்ட மணிக்கல்லில் காணலாம். இச்சொல் ஸ்ரீவிஷ்ணுவர்மன் எனும் அரசனையோ, இளவரசனையோ வணிகரையோ குறிப்பதாக விளக்கம் அளிக்கப்பட்டிருக்கின்றது.

கி.பி.இரண்டாம் நூற்றாண்டில் லாங்-யா-சியு (Long-Ya-Hsiu) அல்லது லங்கசுகா (Langasuka) எனும் மலேய் அரசு ஸ்தாபிக்கப் பட்டதாக ஏழாம் நூற்றாண்டைச்சேர்ந்த சீன லியாங் சு (Liang-Shu) கூறுகின்றது. இவ்வரசும் 11ஆம் நூற்றாண்டில் சோழர் கல்வெட்டில் கூறப்பட்டிருக்கும் இலங்கசுகமும் (Ilankacokam) ஒன்றுதான் என கூறுகின்றனர்.

இலங்கசுகம் அரசு மலேயதீபகற்பத்தின் வடபகுதியின் ஓர் பாதியாக கிழக்கிலும், மேற்கிலும் கடலை ஒட்டி இருந்தது. இதற்கு வடக்கே இன்று இருக்கும் நாகோன் சிதம்மாரட் (Nakhon Si Thammarat) லிகோர் (Ligor) பகுதியில் தாம்பரலிங்கா (Tambara Lingga) இருந்தது. பாலி மஹாநித்தேசத்தில் (கி. பி. 2ம் நூற்றாண்டு) இதைத் தம்பலிங்கா என்றும், தமிழ்க் கல்வெட்டு ஒன்றில் தாமரலிங்கம் என்றும் அழைத்தனர். பண்டைய தக்கோலா (Takkola) துறைமுகம் இன்று தாய்லாந்தின் மேற்குக் கடற்கரையிலுள்ள தகுவாபா (Takuapa); இந்திய முருண்டா அரசருக்குக் கி. பி. 3ஆம் நூற்றாண்டில் இத்துறைமுகத்திலிருந்துதான் ஓர் தூதுவர்குழு பூனான் அரசரால் அனுப்பப்பட்டது. தகுவாபாவில் கண்டுபிடிக்கப்பட்ட தமிழ்க் கல்வெட்டின் மூலம் தமிழ் வாணிபர்கள் இத்துறைமுகத்திலும் அதைச்சுற்றியுள்ள பகுதிகளிலும் வாணிபம் செய்வதற்காகவும் சமயம் பரப்புவதற்காகவும் கி. பி. 9ஆம் நூற்றாண்டில் வந்ததாக நீலகண்டசாஸ்திரி கூறுகின்றார்.

தமிழகத்துடன் பல்லவர்கள் காலத்தில் மலேயாவுக்கு நெருங்கிய தொடர்பு இருந்ததாக நம்பலாம். பல்லவருடைய கப்பல்கள் தென்கிழக்காசிய நாடுகளுக்கு கடல் மல்லையில் இருந்து சென்று வந்தன என்று வால்டர் எலியட் குறிப்பிட்டுள்ளார். அக்கப்பல்கள் கேதாவைச் சுற்றி வந்ததாகவும் குறிப்பிடப்படுகிறது. மலேயாவில் பேராநதிச் சங்கமத்தில் இருந்து 10 கி. மீ. தொலைவில் உள்ள டிண்டிங்குக்கு அடுத்துள்ள கங்காநகரினைத் தலை நகராகக் கொண்டு கங்க பல்லவன் ஆட்சிபுரிந்தான் எனும் செய்தியை வின்ஸ்டெட் எனும் அறிஞர் தெரிவித்துள்ளார். [H. Winstedt, A Cultural History of Malaysia, P.P. 48-50]. கி. பி. பதினோராம் நூற்றாண்டில் இராசேந்திர சோழனுடைய படையெடுப்பின்போது இந்த கங்காநகரம் தாக்கப்பட்டது; மண்மேடாக்கப்பட்டது. இந்தப் பல்லவர் ஆட்சி கேதாவுக்கும், லிகோவுக்கும் இடைப்பட்டப் பகுதியில் நிலவியது. அதனைச் சோழரின் படை அடியோடு அழித்துவிட்டது. மலாயப் பெண்களை, மலேசியாவில் ஆட்சிபுரிந்த கங்கப் பல்லவர்கள் திருமணம் செய்து கொண்டு வாழ்ந்ததாகத் தெரிகிறது. இந்த அரசமரபில் வந்த பிற்கால அரசர்கள் இசுலாமிய சமயத்தைத் தழுவினர். எனினும் பழைய இந்து சமயப் பழக்க வழக்கங்களை அவர்கள் போற்றிக்காத்தனர்.

கி. பி. ஏழாம் நூற்றாண்டு இறுதியில் மலேய் தீபகற்பத்திலுள்ள சியா-சா (Chieh-Cha) அதாவது கேதாவிற்கும் தென் இந்திய கிழக்குக் கடற்கரையிலுள்ள நாகப்பட்டினத்திற்கும் இடையே நிலையான ஒழுங்கான கப்பல் போக்குவரத்து இருந்ததாக, சீன புத்த சமயப் பரப்பாளர் இ-சிங் (I-Ching) கூறுகின்றார். சோழ அரசர் இராசராசன் (கி.பி.985 - 1014) காலத்திலிருந்து முதலாம் குலோத்துங்க சோழன் காலம் வரை (1070-1112) தென் இந்திய சோழர் கல்வெட்டுகளில் சுமத்திராவிலிருந்து ஆட்சி புரிந்த ஸ்ரீவிசய பேரரசைக் கடாரம் என்று அழைத்தனர். கடாரத்தைச் சமஸ்கிருத மொழியில் கடாஹா (Kataha) என்றும், மலாய் மொழியில் கேதா என்றும் அழைத்தனர் கடாரத்தில் ஆட்சி புரிந்துவந்த ஸ்ரீவிசய பேரரசர் சூலாமணி வர்தேவா கேட்டுக்கொண்டபடி கி.பி.1005இல் நாகப்பட்டினத்தில் சூலாமணி விஹாரம் என்ற பெயரிடப்பட்ட ஓர் புத்த சமயத் துறவி மடம் கட்டப்பட்டது. இந்த மடத்தைப் பராமரிப்பதற்காகவும், ஸ்ரீவிசய பேரரசிலிருந்து வரும் பயணிகளின் தேவைகளை நிறைவேற்றுவதற்காகவும் ஓர் கிராமத்தின் வருமானத்தை முதலாம் இராசராசன் இம்மடத்திற்கு நன்கொடையாக அளித்தான். முதலாம் இராசேந்திரனும் கி. பி. 1014-1044

பதவிக்கு வந்தபிறகு இந் நன்கொடையைத் தொடர்ந்து அளிப்பதாக வாக்குறுதி அளித்தான். பிறகு சில ஆண்டுகள் கழித்து கி. பி. 1025இல் ஸ்ரீவிசய பேரரசின் மேல் படையெடுத்துச் சென்றான். கி. பி. 1068ஆம் ஆண்டில் கடாரத்தை தவறானவழியில் பறித்து ஆட்சி செய்துகொண்டிருந்த அரசரைத் தோற்கடித்து முறைப்படி சட்டப்படி அந்நாட்டை ஆட்சி செய்ய வேண்டிய அரசரிடம் அந்நாட்டை ஒப்படைத்ததாக சோழ அரசர் வீரராசேந்திரர் (கி.பி. 1063-1069) கூறுகின்றார். முதலாம் குலோத்துங்கன் ஆட்சியின்போது (கி. பி. 1070-1122) நாகப்பட்டின மடம் விவகாரங்களைச் சரி செய்வதற்காக மலேய் கேதா அரசர் தூதுவர்களைச் சோழ நாட்டிற்கு அனுப்பினார்.

மேலும் சுமத்திராவை பாரூஸ் (Barus) அருகில் உள்ள லுபுக்துவாவில் (Lubuk Tua or Loboe Toewa) கி. பி. 1088இல் கிடைத்த தமிழ்க் கல்வெட்டில் தமிழ் வணிகர் மூலம் சமய, வாணிப உறவு மலேய தீவுகளுடன் ஏற்பட்டது எனக் கூறப்பட்டிருக்கின்றது. மலேசியாவில் கி. பி. 9ஆம் நூற்றாண்டிலிருந்தே தமிழ் வாணிபக் குழுக்கள் அமைக்கப் பட்டன. உதாரணமாக, மணிக்கிராமம், நானாதேசி, வீரவளஞ்சியர், திசையாயிரயட்டு, ஐநூறுவா முதலிய வாணிபக் குழுக்களின் பெயர்களை மலேயா, சாவா, பர்மா, சுமத்திரா, முதலிய இடங்களில் கண்டுபிடித்த கல்வெட்டுகளில் காணலாம். படை வகுப்பணி, கோயில், குளம் முதலியவற்றையும், பொதுவாக, தன் முழுமையுடைய குழுக்களாக இவ்வாணிபக் குழுக்கள் இருந்தன என மூன்றாம் நந்திவர்மன் (கி. பி. 844-866) கல்வெட்டிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

பொதுவாக இராசராசன் கடாரத்தை ஆண்டதாகவும், காஞ்சி சர்க்கனன் கங்கையை ஆட்சி புரிந்ததாகவும், பரமேசுவரன் மலாக்கா என பெயரிட்டதாகவும், ஆண்டதாகவும், நீல உத்தமன் சிங்கப்பூரைக் கண்டதாகவும் இப்படிப்பல அரிய பெரிய நிகழ்ச்சிகளைத் தென் கிழக்கு ஆசியாவின் வரலாற்றில் காணமுடிகிறது.

கி. பி. 15ஆம் நூற்றாண்டின் போதும் மலாக்கா அரசோடு தமிழக வணிகர்களுக்குத் தொடர்ந்து தொடர்பு இருந்தது. மலாக்காவில் தமிழக வணிகர்கள் குடியேற்றங்கள் இருந்தன. அக்குடியேற்றங்களைக் காம்போங் கெலிங் அல்லது (கலிங்கா) [Kampong Keling (Kaling)] என்று மலேயர்கள் அழைத்து வந்தனர். இவ்வாறு குடியேறிய தமிழர்கள் உள்ளூர் மலேயர்களுடன் நெருங்கிப் பழகி, திருமண உறவு கொண்டனர். ஆகையால், இவர்கள் மலேய் நாட்டு உள்ளூர் பழக்கவழக்கங்களைத் தழுவினர்; ஆனாலும், அவர்கள் முற்றிலும் தமது இந்து சமயப் பண்பாடுகளை இழக்கவில்லை. ஓரளவு மாற்றம் அடைந்த இந்து சமய முறைகளைப் பின்பற்றினர். பொதுவாக, மலேய் பண்பாட்டுடன் நெருங்கிய தொடர்பு கொண்டதால் இத்தமிழர்களுடைய குருதித்தொடர்புடைய உறவு, பண்புத் தொடர்பு, சடங்கு முறைகள், நிருவாக முறைகள், மொழி, இலக்கியம், கலை, நம்பிக்கைகள் முதலியவற்றில் சிறப்பான மாற்றங்கள் ஏற்பட்டன; உள்ளூர் மலேய மரபு வழிமுறைகள் இந்து சமய பண்பாட்டுடன் கலந்தன.

காலத்தால் முந்திய தமிழ் எழுத்துக் கடிதம் ஒன்றின் புகைப்படப் படியொன்று உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் பொருட்காட்சியில் வைக்கப்பட்டிருந்தது. 1527ஆம் ஆண்டு எழுதப் பெற்ற இந்தக்கடிதம் மலாக்காவில் கண்டெடுக்கப்பட்டது. இதைக்கொண்டே நாம் ஆராய்வோமானால், வெகு காலத்திற்கு முன்பே மலேசிய மண்ணில்

தமிழ்மொழி நடைமுறையில் இருந்துள்ளதை ஓரளவு உணர முடியும். (தமிழ்த் தொண்டன். op. cit. பக். 10-11)

இந்துக்களுக்குப் பிற்பட்ட காலத்தில் - அதாவது இரண்டாவது காலக் கட்டம் தொடங்கிய பிறகு - பதினான்காம் நூற்றாண்டில் மலாக்கா சுல்தானின் செல்வாக்கு தழைத்தோங்கியிருந்தது. மலேசியாவில் இசுலாம் சமயம் பரவத் தொடங்கியவுடன் தமிழ் முசுலிம்களும் அதில் முக்கியப் பங்கு கொண்டனர். சமயப் பரப்பாளர்களாக மட்டும் தமிழ் முசுலிம்கள் பணிபுரியவில்லை. நிருவாக அமைப்பிலும் அவர்கள் பணிபுரியத் தொடங்கினர். சுல்தான் குடும்பத்துடனும், உயர்குடிமகன்கள் குடும்பத்துடனும் மண உறவு வைத்துக் கொள்ளத் தொடங்கினர். ஆகையால், தமிழ் முசுலிம்களுக்குப் பன்தஹாரா அல்லது அரசியல் அரங்கச் செயல்துறைக் கட்டுப்பாட்டாளர், ஷாபன் தஹாரா அல்லது துறைமுக ஆட்சிப் பொறுப்பாளர்கள் பதவிகள் கிடைத்தன. மலேசியாவில் இச்சமயம் செல்வாக்குடன் வாழ்ந்த தமிழ் முசுலிம்களை சூலியா முசுலிம்கள் என அழைத்தனர். இக்காலக் கட்டத்தில் இந்துச் செட்டியார்களின் செல்வாக்கும் ஓங்கத் தொடங்கியது. பொதுவாக இந்து முசுலிம் தமிழ்க் குடியிருப்புகளைக் காம்புங்கிளிங் (*Kampong kling*) என அழைத்தனர். பல தமிழர்கள் தமிழ் நாடு, இந்தியாவுடன் உள்ள தொடர்பை இழந்தனர். தாய்த் தமிழைக் கூட மறந்தனர், மலேயர்களுடன் திருமணத் தொடர்பு கொண்டனர், மலேய் மொழியில் புலமை கூட அடைந்தனர். அவர்கள் பதினேழாம்; பதினெட்டாம் நூற்றாண்டில் ஜோஹர், பேராக், வெல்லஸ்லி மாகாணம், கேதா முதலிய பகுதிகளுக்குச் சென்று குடியேறி வாழத் தொடங்கினர். மலேசியாவிலே நிலையாகக் குடியேறி வாழத் தொடங்கிய முதல் தமிழர்கள், தமிழ் முசுலிம்களும், மலாக்கா செட்டியார்களும் ஆவார்கள் எனக் கூறலாம்.

பொதுவாகக் கடற்கரையோரப் பகுதிகளில் வாணிபம் செய்தல், சுற்றித் திரிந்து விற்பனை செய்தல், வேளாண்மை செய்தல், துறைமுகங்களில் தொழிலாளர்களாகப் பணி புரிதல் முதலிய பணிகளை இவர்கள் செய்தார்கள். பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் குடியேறிய மலாக்காச் செட்டியார்கள் மலாய் மொழியை மேற்கொண்டனர். ஆனால், அவர்கள் பழக்க வழக்கங்கள் இந்தியச் சமுதாயத்திற்கு உரியன. அவர்கள் எண்ணிக்கையோ, 150 தான். 18ஆம் நூற்றாண்டின் இறுதியில் 9,000 தென் இந்தியர்கள் இருந்தனர்.

மலேசியாவில் பிரிட்டிஷ் அரசு ஆட்சி செய்து கொண்டிருந்த போது பினாங், மலாக்காவை அழகுபடுத்துவதற்காக இந்தியக் கைதிகள் இந்நகரங்களுக்குக் கொண்டுவரப்பட்டனர். தோட்டங்களின், பண்ணைகளின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியவுடன் தொழிலாளர்களின் தேவை அதிகரித்தது. இதன் விளைவாகப் பல தமிழர்கள் தொழிற் கட்டுப்பாடு ஒப்பந்தம் செய்து கொண்டு மலேசியாவிற்குச் சென்றார்கள். தென் இந்தியர்களுக்குள்ளேயே மிகுதியாக இருந்தவர்கள் தமிழர்கள். மொத்த இந்தியர்களில் தென் இந்தியர்கள் கிட்டதட்ட 96 விழுக்காடு இருந்தனர்.

1938இல் பொதுவாக இந்தியர்களுக்கு 87,795 ஏக்கர் இரப்பர் தோட்டங்கள் சொந்தம். ஆனால் 1946க்குப் பிறகு இன்றுவரை பல ஏமாற்றி-கைமாறி போய்விட்டன.

1970களில் 40 இலட்சம் இரப்பர் தோட்டங்களில் 60 விழுக்காடு பயிர்களும் மறுநடவும் செம்பனையும் இருந்தன. இதில் 37 விழுக்காடு மலாயர்களுக்குச் சொந்தம்; 42 விழுக்காடு வெளிநாட்டாருக்குச் சொந்தம். 21 விழுக்காடு சீனருக்கும் இந்தியருக்கும் சொந்தம். 2000 ஏக்கருக்கும் அதிகமான பல பெருந் தோட்டங்கள் வெளி நாட்டவர்களுக்குரிமையாக இருந்தன. ஆனால், மற்ற உள் நாட்டவருக்கு 2000 ஏக்கருக்கும் குறைவான நிலத் தோட்டங்களே உரிமையாக இருந்திருக்கின்றன.

மலேசியாவின் தற்கால வரலாறு:

பிரிட்டிஷ் பாதுகாப்பின் கீழ் மலேசியாவிலிருந்த 11 நாடுகளும் 1946 ஏப்ரலில் மலேயா ஒன்றியமாக (Malayan Union) மாறியது. பிறகு 1948 பிப்ரவரியில் மலேயா கூட்டரசாக மாறியது. (Federation of Malaya). 1957 ஆகஸ்டு 31ம் நாள் மலேயாவிற்குச் சுதந்திரம் கிடைத்தது; பொது நல அரசின் உறுப்பினராகச் (Commonwealth) சேர்ந்தது.

1963 செப்டம்பர் 16ஆம் நாள் மலேசியா அமைக்கப்பட்டது. இக்கூட்டரசின் உறுப்பினர்களாக மலேசியா கூட்டரசு, சிங்கப்பூர், சரவாக், சபா (வடபோர்னியா) முதலிய நாடுகள் சேர்ந்தன. 1965 ஆகஸ்டு மாதம் சிங்கப்பூர் இக்கூட்டரசை விட்டு வெளியேறியது. ஆகையால் மலேசியா கூட்டரசின் பகுதிகள் 14-இலிருந்து 13 ஆகக் குறைந்தது. மலேசியா கூட்டரசில் இருந்த மலேய நாடுகளை 1966இல் மேற்கு மலேசியா என்றும் பிறகு மலேயா தீபகற்பம் என்றும் அழைத்தனர்.

1. மக்கள் தொகை: தமிழ் மக்கள் தொகை:-

மலேசியாவில் வாழும் இந்தியர்களில் பெரும்பான்மையோர் தமிழர்கள்; இவர்கள் 80 விழுக்காடு இருப்பார்கள். ஞானசூரியன் என்பார் கூறுகின்றார், உலகத் தமிழ் மக்கள் தொகையில் மலேசிய தமிழர்கள் 7.4 விழுக்காடு இருக்கின்றார்கள். (An Introduction to Tamil Culture, P. 76) மலையாளிகள் 7 விழுக்காடும் தெலுங்கர்கள் 4 விழுக்காடும், தமிழர்கள் 80 விழுக்காடும் இருப்பதால், மொத்த இந்திய மக்கள் தொகையில் தென் இந்தியர்களே 91 விழுக்காடு இருக்கின்றார்கள். மொத்த மக்கள் தொகையில் இந்தியர்கள் 10.2 விழுக்காடு இருக்கின்றனர்.

2. இனவாரியான இந்தியர்கள் (மலேயா, சிங்கப்பூர் உட்பட) 1921 - 1957:- ஆண்டு

		1947	1957
1.	தமிழர்	4,60,985	6,34,681
2.	தெலுங்கர்	24,093	27,670
3.	மலையாளி	44,339	72,971
4.	பிற தென்னவர்	15,968	–
5.	வடவர்	54,231	84,934
	மொத்தம்	5,99,616	8,20,256

மூலம்: இரா. ந. வீரப்பன், உலகத் தமிழர்: பக். 348)

3. 1970ஆம் ஆண்டு புள்ளி விவரம் : தமிழர்களும், பிற இந்தியர்களும்

	மலேசியாவின் மொத்த மக்கள் தொகை (1970)	87,14,430	
1.	மலேயர்கள் (முசுலிம்கள்)	46,63,284	
2.	சீனர்கள்	31,17,896	
3.	இந்தியர்கள்	9,33,250	
	அ. இந்தியத் தமிழர்கள்	7,46,558	(80%)
	ஆ. இலங்கைத் தமிழர்கள்	25,288	(2.7%)
	இ. தெலுங்கர்கள்	31,332	(3.4%)
	ஈ. மலையாளிகள்	44,199	(4.7%)
	உ. பிற இந்தியர்கள்	72,138	(7.7%)
	ஊ. பாகித்தானியர்கள்	10,185	(1.1%)
	எ. பிற இலங்கையர்	3,550	(0.4%)

மூலம் :(திரு. முருகரத்தனம், தமிழர் வாழும் அண்டை நாடுகளில் தமிழ்க் கல்வி–தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர். பக்.(113-114)

4) (31 டிசம்பர் 1979இல் எடுத்த புள்ளி விவரம்)

இனங்கள்	மலேசியா தீபகற்பம்	சபா	சரவாக்
சீனர்கள்	38,76,532	1,78,467	3,83,804
மலேயர்கள்	60,50,361	49,936	2,44,990
இந்தியர்களும் பாகிஸ்தானியர்களும்	11,58,680	–	–
மற்றவர்கள்	83,004	1,89,925	12,058

(SOURCE: EUROPA YEAR BOOK 1985)

1981ஆம் ஆண்டு புள்ளி விவரம்

சீனர்கள்	39,98,000
மலேயர்கள்	61,68,000
இந்தியர்கள்	11,83,000
மற்றவர்கள்	79,000
மொத்த மக்கள் தொகை	1,14,28,000

(SOURCE: STATESMAN YEAR BOOK)

6) 1984ஆம் ஆண்டளவில் மலேசியாவின் மொத்த மக்கள் தொகை 1,50,00,000. இவர்களில் இந்தியர்களின் மொத்தத் தொகை 12,08,500 (மலேசியக் குடிமகன்களாக இருக்கும் இந்தியர்களின் எண்ணிக்கை 10,09,500).

பெரும்பான்மையான இந்தியர்கள் மலேயா தீபகற்பத்தில், குறிப்பாக மேற்கு மலேய்த் தீபகற்பத்தில், வாழ்கின்றார்கள். பெரும்பான்மையான இந்தியர்கள் வாழும் பகுதி கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றது.

இடம் பெயர்	பரப்பளவு	மக்கள் தொகை	தலை நகரம்	மலேசியாவில் வாழும் மொத்த இந்தியர்களில் ஒவ்வொரு பகுதியிலும் வாழும் இந்தியர்களின் விழுக்காடு
செலங்கர்	7,956	15,15,536	ஷா ஆலம்	25%
பேரக்	21,005	18,05,198	ஐபோ	21%
பீனாங் வெல்லஸ்லி மாகாணம்	1,033	9,54,638	ஜார்ஜ் டவுன்	8%
ஜோஹீர்	18,988	16,38,229	ஜோஹீர் பாரு	8%
கேதா	9,425	11,16,140	அலூர் ஸ்டார்	8%
நெகிரி செம்பிலன்	6,643	5,78,578	செரம்போன்	6%
மலாக்கா	1,650	4,64,754	மலாக்கா நகராண்மை மாகாணம்	3%
பாஹாங்	35,965	7,98,782	குவான்தான்	3%

இந்தியர்கள் பெரும்பான்மையாக வாழும் நகரங்கள் பீனாங், கோலாலம்பூர் முதலிய நகரங்கள் ஆகும். பெரும்பான்மையான தமிழர்களும் தென் இந்திய முசுலிம்களும் பீனாங்கில் வாழ்கின்றார்கள். பெரும்பான்மையான செட்டியார்கள் கோலாலம்பூரில் வாழ்கின்றார்கள். தவிர ஐபோ, கிளாங் போன்ற நகரங்களிலும் இந்தியர்கள் வாழ்கின்றார்கள். மலேசியாவில் வாழும் மூன்றில் இரண்டு பங்கு இந்தியர்கள் மலேசியாவில் பிறந்தவர்கள் ஆவார்கள்.

மற்றப் புள்ளி விவரங்கள்:

மலாயாவில் மட்டும் இந்திய மக்கள் தொகை:-1911-1940

	ஆண்டு	1911	1921.	1931	1940
1.	பேராக்	–	–	–	–
2.	செலங்கர்	12,863	61,819	1,11,328	1,31,007
3.	நெகிரிசெம்பிலான்	–	–	–	–
4.	பாஹாங்	–	–	–	–
5.	கேதா	6,074	33,004	50,824	61,161
6.	ஜோஹூர்	5,659	24,180	51,038	58,622

7.	கிளாந்தான்	731	3,575	6,752	7,680
8.	பெர்லிஸ்	114	811	966	1,126
9.	புருணை	44	38	377	1,061
10.	திரங்காணு	61	311	1,371	1,421
	மொத்தம் (பிற பகுதிகளிலும் சேர்த்து)	45,546	1,23,638	2,22,656	2,62,142

1970ல் மேற்கு மலேசியா – பல இனங்கள்

1.	மலாயர்	46,85,838	53.2%
2.	சீனர்	31,22,850	35.4%
3.	இந்தியர்	9,32,629	10.6%
4.	பிறர்	69,531	0.8%
	மொத்தம்	88,10,848	100%

1980ல் மலேசியப் பல இனங்கள்

(மேற்கு மலேசியா)

1.	மலாயர்	63,84,000	53.9%
2.	சீனர்	41,36,000	34.9%
3.	இந்தியர்	12,39,000	10.5%
4.	பிறர்	90,000	0.7%
	மொத்தம்	1,18,49,000	100%

1982இல் மேற்கு மலேசியா மக்கள்

1.	மலாயர்	67,10,000	55.73%
2.	சீனர்	40,00,000	33.58%
3.	இந்தியர்	13,30,000	10.69%
	மொத்தம்	1,20,40,000	100%

(மூலம்: இரா. ந. வீரப்பன். உலகத்தமிழர். பக். 348-349)

தமிழ் நாட்டுப் பண்பாட்டுத் துணையுதவி

பேசும், எழுதும் தமிழ் மூலமாகவும், சமஸ்கிருத மொழிக் கல்வி மூலமாகவும், இந்து சமயப்பரப்பாளர்கள் கற்பித்த கோட்பாடுகள் மூலமாகவும், புத்த சமயப் பரப்பாளர்கள் போதித்த மெய்ம்மைத் தத்துவங்கள் மூலமாகவும், தமிழ் முசுலிம் சமயப்பரப்பாளர்களின்

நடவடிக்கைகளின் மூலமாகவும், இந்துக்கலை, கோயில் கட்டட அமைப்புகள் கலை, சிற்பங்கள் பற்றிய கட்டுரைகள் மூலமாகவும் தமிழ்ப் பண்பாடு மலேசியாவிற்குப் பரவியது. எழுத்துரு தொடர்பான உதவி தமிழர்களின் சிறப்பான உதவியாகக் கருதப்படுகின்றது. தென் இந்திய எழுத்துக்கலைகளே மலேய்மொழிக் கையெழுத்து முறையின், பொதுவாகத் தென்கிழக்கு ஆசியா எழுத்து முறையின் அடிப்படையாக அமைந்தது எனக் கூறலாம். முதன்முதலாக மலேயத் தீபகற்பத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள சில கல்வெட்டுகள், உதாரணமாக, கேதாவில் உள்ள புகித்மெரியாம் கல்வெட்டு, பல்லவகிரந்த எழுத்து முறையில் எழுதப் பட்டிருக்கின்றன. குறிப்பாக, கோயில் கட்டட, சிற்ப அமைப்புகளில் பல்லவர்களின் செல்வாக்கைத் தெளிவாகக் காணலாம். உதாரணமாக, இதுசம்பந்தமாக அகழ்வாராய்ச்சிச் சான்றுகள் கேதாவில் கிடைக்கின்றன். குறிப்பாக, மாமல்லபுரம் ஒற்றைக் கல்லால் ஆன கோயில்களின் தாக்கத்தை இங்கு பார்க்கலாம். புகித்சோராஸ் (*Bukit Choras*), புகித்மெர்தாஜம் (*Bukit Mertajam*), புகித்மெரியம் (*Bukit Meriam*), கேதா மலைமுகடு முதலிய இடங்களில் உள்ள சிவன், திருமால் கோவில்களிலும், சிற்பங்களிலும் தென் இந்தியப் பல்லவர்களின் செயற்பாணியை நாகரிகப் பாங்கினைக் காணலாம். பொதுவாக, மலேசிய குழைமக்கலைகளில் அதாவது உருவாக்கஞ்சார்ந்த சிற்பம்-மட்பாண்டத் தொழில் முதலிய கலைகளில் (*plastic art*) தெளிவான தமிழ்ப் பண்பாட்டின் தாக்கத்தைப் பார்க்க முடியும். தமிழ் நாட்டுக்கும் மலேசியாவுக்கும் நெருங்கிய தொடர்பு தோன்றியதால் பல தமிழ்ச் சொற்கள் மலேசிய மொழியுடன் கலந்து விட்டன. உதாரணமாக வாணிகம் (*Berniaga*), கடை (*kedai*), கப்பல் (*Kepal*) முதல் (*Model*), கிடங்கு (*Gedung*) ஜீவா, முத்து, பஹாசா, வீரா, வனிதா, ராஜா, ராணி, குரு, மாளிகை, வார்த்தா, ஆசிரமா, அம்மா, அப்பா, ஐயா, தோழன், கட்டில், மாம்பழம், மீசை, கழுதை போன்ற தமிழ்ச் சொற்களை மலேய் மொழியிலும் காணலாம். இன்றைய மலாய் மொழி என்பது அரபி, சமஸ்கிருதம், தமிழ் ஆகியவற்றின் கூட்டுச் சேர்க்கையெனத் தமிழ் முரசின் ஆசிரியர் மொகைதீன் கூறுகின்றார். இன்று மலேசிய தீபகற்பத்திலே மண்டிசாபர் (*Mandi Safar*) என்னும் திருவிழா கொண்டாடப்படுகிறது. இத்திருவிழாவின்போது ஆடல் பாடல், ஒருவருக்கு மற்றொருவர் மேல் தண்ணிர்வீசுதல் கடல், ஆறுகளுக்கு செல்லுதல் போன்ற கொண்டாட்டங்கள் உண்டு. தமிழ் பரிபாடலில் இம்மாதிரியான திருவிழாவைப்பற்றி குறிப்புகள் இருக்கின்றன. ஆகையால் மண்டிசாபர் திருவிழா தமிழர் மலேயர்கள் பண்பாட்டு கூட்டினைவு சின்னம் என மலேசியாவில் பணிபுரியும் பேராசிரியர் எஸ் சிங்காரவேலு கூறுகின்றார். ஆகையால் கடல் கடந்து சென்ற தமிழர்கள் தங்கள் பண்பாடுகளையும் எடுத்துச் சென்றார்கள். சமய உணர்வோடு தங்கள் பண்பாடுகளைப் பேணிக் காத்தனர். குடியேற்றங்கள் செய்த மலேசியத் தமிழர்கள். இந்து அரசு முறைக் கோட்பாடு, இந்து நிர்வாக அமைப்புக் கோட்பாடு, இந்து சமயச்சடங்கு முறைகள் மலேயா அரசவையில் ஓர் உட்பகுதியாக மாறியதால், இசுலாம் சமயச் செல்வாக்கு மலேசியாவில் ஓங்கிய பிறகு கூட இவை ஓரளவு இன்றுவரை நடைமுறையிலுள்ளன. மலேசியாவில் சோழர்களின் புலிக்கொடியை சமீபகாலம் வரை பயன்படுத்திவந்துள்ளனர்.

டாக்டர் க.த. திருநாவுக்கரசு, கீழ்க்காணும் செய்திகளை அளிக்கின்றார்: பல்லவரின் கிரந்த எழுத்து வடிவில் இருந்து சாவகக் கவி எழுத்துமுறை வளர்ந்ததாகும். அது வடக்கு மலேயாவிலும் தெற்குத் தாய்லாந்திலும் கி.பி. நான்காம் நூற்றாண்டிலிருந்து ஒன்பதாம் நூற்றாண்டுவரை வளர்ந்து ஓங்கின.

பதினான்காம் நூற்றாண்டில் மலாய்-அராபிய எழுத்துமுறை மலேசிய மக்களால் பின்பற்றப்பட்டது. இதனை தெலிகய்கா கல்வெட்டால் அறிகிறோம். முதல் மலாய் மொழிக்கவிதை சிதைந்த சொற்களால்–தமிழ்ச் சொல்லின் சிதைவுகளையும் சமஸ்கிருதச் சொற்களின் சிதைவுகளையும் கொண்டு இயற்றப்பட்டு இருக்கிறது. இதில் (கட்டில்) எனும் தமிழ்ச் சொல் இடம்பெற்று இருக்கிறது.

பேராசிரியர் ந. சஞ்சீவி அவர்கள் மலாய் மொழியில் வழுங்கும் நானூற்றுக்கு மேற்பட்ட இலக்கிய வழக்குச் சொற்களையும்; பேச்சு வழக்குச் சொற்களையும் சிறந்த முறையில் பட்டியலிட்டுக் காட்டியுள்ளார். ('மலாய் மொழியில் தமிழ் வழக்குச் சொற்கள், ஆராய்ச்சிக் கட்டுரைகள், பக். 85-111) அவற்றுள் முதன்மையான சொற்கள்

தமிழ்	மலாய்
1) அக்காள்	அகா
2) அன்னம்	அங்கா
3) அடிகா	அதிகாரம்
4) திராஜா	ராஜா
5) அப்பா	(அ) பா
6) அரண்மனை	ஆண்டானா
7) உண்டியல்	உண்டி
8) கஞ்சி	கஞ்சி
9) கட்டில்	கட்டில்
10) கந்தை	கந்தா
11) கருடன்	கருடர்
12) திரி	திரி
13) கும்பல்	கும்பல்
14) கொண்டை	கொண்டய்
15) சத்தியவான்	சட்டியவான்
16) சாட்சி	சாக்ஸி
17) சூலம்	சூலம்
18) செட்டி	செட்டி
19) தருமம்	தெர்மா
20) பூசை	பூஜா

(க.த. திருநாவுக்கரசு, *op. cit* pp 340-342)

சமய வாழ்க்கை முறை:-

மலேய அரசின் சமயம் இசுலாம் ஆகும். ஆனாலும் எல்லோரும் அவரவர் சமயப் பழக்கங்களைப் பின்பற்றி வாழ உரிமை உண்டு. எல்லா மலாய் மக்களும் முசுலீம்கள் என்றே கூறலாம். இவர்கள் 1983ஆம் ஆண்டின் மொத்த மக்கள் தொகையில் 53 விழுக்காடு இருந்தனர். மலேயா தீபகற்பத்தில் 19 விழுக்காடு மக்கள் புத்த சமயத்தைப் பின்பற்றுகின்றார்கள் (19 விழுக்காடு சரவாக்கிலும், 8 விழுக்காடு சபாவிலும் இருக்கின்றார்கள்); 7 விழுக்காடு கிறித்துவ சமயத்தைப் பின்பற்றுகின்றார்கள், (29 விழுக்காடு சரவாக்கிலும் 23 விழுக்காடு சபாவிலும் இருக்கின்றார்கள்). பெரும்பான்மையான சீனர்கள் புத்த சமயத்தை அல்லது தாவுசம் (Daoism) அல்லது கன்பூசியனிசம் சமயத்தைப் பின்பற்றுகிறார்கள். ஒரு சிறுபான்மைச் சீனர்களே கிறித்துவ சமயத்தைப் பின்பற்றுகின்றனர். மலேசியாவில் இருக்கும் இந்தியர்களில் 70 விழுக்காடு இந்துக்கள், 20 விழுக்காடு முசுலீம்கள், 5 விழுக்காடு கிறித்துவர்கள், 2 விழுக்காடு சீக்கியர்கள். சபா, சரவாக்கில் பெரும்பான்மையோர் ஆன்மவாத, ஆவியுலகக் கோட்பாட்டைப் (animism) பின்பற்றுகின்றனர்.

மலேயாவில் உள்ள இந்துக்கள் ஓரளவு சாதி அமைப்பு முறையை அனுசரித்து வாழ்கின்றார்கள். ஒவ்வொரு சாதியினருக்கும் அவரவர் தனிச்சாதி சங்கங்கள் இருக்கின்றன. உதாரணமாக வெள்ளாளர்கள் அகமுடியர்கள், கள்ளர்கள் முதலியவர்கள் சாதி மன்றங்களை அமைத்திருக்கின்றார்கள். மலேசியாவிலும், சிங்கப்பூரிலும் 200க்கு மேல் இந்துக் கோவில்கள் இருக்கின்றன.ஆனால்,மலேசியாவில் 17,500 ஆலயங்கள் உள்ளன என்றும், அவற்றிலே 2 ஆயிரம் பேரும் புகழும் பெற்றவை என மலேசியர் திரு கோடிவேல் கூறுகின்றார். காளி, மாரியம்மன், ஐயனார், முனீசுவரன், வைரவர், முதலிய தெய்வங்களுக்குத் தோட்டங்களிலும், பண்ணைகளிலும் கோயில்கள் இருக்கின்றன. பெரிய, சிறிய நகரங்களில் சிவ, விநாயகர், சுப்ரமணியர், விஷ்ணு முதலிய கடவுள்களுக்குக் கோயில்கள் இருப்பதைக் காணலாம். மிகுதியான மக்கள் வழிபடும் கடவுள்கள் சிவன், முருகன், மாரியம்மன், முதலிய கடவுள்கள் ஆகும். கோயில்களிலே பெருமை பெற்றது கோலாலம்பூரில் அமைந்துள்ள மகாமாரியம்மன் கோயில் ஆகும். இதற்குப் பெருஞ்சொத்து உண்டு. மலேசியாவிலுள்ள தமிழர் கோயில்களில் 6 கோடி வெள்ளி (25 கோடி ரூவா, மொத்தச் சொத்து உள்ளது எனவும், 60 இலட்சம் வெள்ளி தொகையாகவே உள்ளதெனவும் ஒரு சிலர் கூறுகின்றனர்) ஆண்டுதோறும் எடுக்கப்படும் விழாக்களில் ஏழை எளிய தமிழர்கள் கோயில்களில் ஏராளமான காணிக்கை கொடுக்கின்றனர். கோவிலுக்கு எழுதி வைக்கப்பட்ட நிலங்கள் இப்போது பெருமதிப்புடைய சொத்துக்களாக மாறி உள்ளன. கோலாலம்பூருக்கு அருகில் உள்ள பத்துமலையில் முருகன் கோயிலும் கலைக்கூடமும் அமைந்துள்ளன. அங்கு ஆண்டுதோறும் 60 ஆயிரம் பேர் அதனை வந்து கண்டு செல்கின்றனர்.

மகாமாரியம்மன் கோயில் தேவத்தானம் சில சமய,சமூகப்பணிகளைச் செய்து வருகின்றது. சமய இலக்கியங்கள் வெளியிடப்படுகின்றன. திருமறைகள் போட்டி நடத்தப்படுகின்றது. நாதசுவர வித்துவான்கள் தமிழகத்திற்கு வந்து, பயிற்சி பெற்று வர

ஏற்பாடு செய்யப்பட்டது. தமிழகத்திற்குச் சென்று கலைகள் கற்றுவர இதன் உதவியால் மாணவர்கள் அனுப்பப்படுகின்றனர்.

மலேசிய தமிழ் இந்துக்கோவில்களில் தினம் பூசைகள் செய்யப்படுகின்றன. இறக்குமதி செய்யப்பட்ட பிராமண அர்ச்சகர்களையும் இங்குப் பார்க்கலாம். தைப்பூசம், சித்திரைப் பருவம், விநாயக சதுர்த்தி, நவராத்திரி, கார்த்திகைத் தீபம், பங்குனி உத்திரம், மாசி மகம், மாரியம்மன் திருவிழா போன்ற திருவிழாக்கள் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. காவடி தூக்கிக் கொண்டு போகும் சடங்கு, அலகு குத்துதல், தீ மிதித்தல், தெய்வத்திற்கு உயிர்ப் பலியிடுதல், தேர்த் திருவிழா போன்ற சடங்குகளைத் தேவையான சமயத்தில் திருவிழாவின் போது பின்பற்றுகின்றனர். உதாரணமாக கோலாலம்பூர் பத்துமலை முருகனுக்கு ஆண்டுதோறும் தைப்பூசத்தில் விழா எடுக்கப்படுகின்றது. இலட்சக்கணக்கான தமிழர்கள் கூடுகின்றனர். காவடிகள் எடுக்கப்படுகின்றன. தேர் இழுக்கப்படுகிறது. ஏராளமான காணிக்கை குவிக்கப்படுகின்றது. வேசாக் நாள் (*Vesak Day*), தீபாவளி முதலிய பண்டிகைகள், சரவாக், சபாவைத் தவிர, மற்ற எல்லாப் பகுதிகளிலும் விமரிசையாகக் கொண்டாடப்படுகின்றன. இவ்விரண்டு நாள்களும் அரசாங்க விடுமுறை நாள்களாகும். தவிர தமிழர்கள் கிறித்துவக் கோவில்களையும் மசூதிகளையும் மலேசியாவில் எழுப்பியிருக்கிறார்கள்.

மலேசியாவில் உள்ள மாரியம்மன் கோயில்களில் தீமிதி விழா கொண்டாடப்படுகின்றது. பொதுவாக எல்லாக் கோயில்களின் (உதாரணமாக பினாங்கில் மின்டன் எனும் ஊரில் உள்ள மாரியம்மன் -கோவில்) தீமிதி விழாவின் போதும் ஒரு தீக்குழி வெட்டப்படுகின்றது. இத்தீக்குழி 6அடி ஆழமும் 6 அடி அகலமும் 20அடி நீளமும் உள்ளது. இவ்விழாவின் போது பக்தர்கள் மயில் தோகையால் அலங்கரிக்கப்பட்ட காவடிகளைத் தூக்கிச் செல்வார்கள். இவர்கள் தீக்குழிக்கு நடந்துச் செல்லும் சாலைகள் மாவிலை, வேப்பிலை, தென்னை, பனை ஓலை முதலியவற்றால் செய்யப்பட்ட தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். இவர்கள் இச்சாலைகளின் வழியாக நடந்து வந்து தீக்குழியின் அருகில் வருவார்கள். தீக்குழியின் மேல் நடந்துச் செல்ல இருக்கும் பக்தர்கள் பலவித கட்டுப்பாடுகளுடன் சில நாட்கள் வாழ்வார்கள். உணவு கட்டுப்பாடு (உண்ணாநோன்பு உட்பட), தூய எண்ணம், தூயசெயல்கள் போன்ற பலவித விரதங்களை பின்பற்றுவார்கள்.

தீக்குழிமேல் பக்தர்கள் நடக்கும் முன் நேர்த்திக்கடன் செய்யப்படும். இவ்விழாவிற்காக சிறப்பு விருந்தினராக வேறு இடத்திலிருந்து அழைக்கப்பட்ட ஓர் பூசாரி தான் முதன்முதலில் தீக்குழியின் மேல் நடப்பார். பிற பக்தர்கள் அவரைப் பின்தொடர்ந்து செலவார்கள். தீக்குழியின் மேல் நடந்து செல்லும் சில பக்தர்கள் சில நொடிகள் தீ மேல் நடனமாடுவார்கள், ஆனந்தம் உள்ளவர்களாக காண்பார்கள். அவர்கள் தீக்குழியில் நடந்து செல்லும்போது அவர்கள் தவறிவிழாமல் இருப்பதற்காகவும், விரைவாக தீக்குழியின் மேல் நடந்து செல்வதற்காகவும் உதவ சில உதவியாளர்கள் தீக்குழியின் அருகில் நிற்பார்கள். இவ்வாறு பக்தர்கள் தீக்குழியின் மேல் நடந்து சென்ற பிறகு உடனடியாக அருகில் உள்ள தூயபால் நிறைந்துள்ள குழிகளில் தங்கள் கால்களைவிட்டு கழுவிக் கொள்வார்கள்.

இவ்வாறு கால்களைக் கழுவியவுடன் காவடிகளைத் தாங்கிக் கொண்டுச் செல்லும் இப்பக்தர்கள் அருகில் உள்ள கோயிலைச் சுற்றி நடனமாடிக் கொண்டே செல்லுவார்கள். பிறகு கோயிலுக்கு உள்ளே சென்று வேண்டுதலை நிறைவேற்றிய மனநிறைவுடன் தாங்கள் தூக்கிச் சென்ற பாரப்பொருட்களைச் (காவடி உட்பட) கழற்றி கீழே வைத்து விடுவார்கள். இவ்விழாவின் போது கோயில் அதிகாரிகள் எல்லோருக்கும் சைவ உணவு அளிப்பார்கள்.

மேற்கு மலேசியாவிலுள்ள புதுத்துகுச்சி (Pudthu kuchi) என்னும் ஊரில் 1974 ஆம் ஆண்டு நடந்த தீமிதி விழாவை நேரில் கண்டு ரசித்த ஓர் அறிஞர் பின்வருமாறு கூறுகின்றார். பொதுவாக ஈராண்டுக்கு ஒருமுறை தீமிதி விழா புதுத்து குச்சியில் கொண்டாடப்படுகின்றது. 1974ஆம் ஆண்டு புதுத்துகுச்சியில் முதலில் அமைக்கப்பட்ட மாரியம்மன் கோயிலிருந்து புறப்பட்டு 12 பக்தர்கள் காவடிகளைத் தூக்கிக்கொண்டு மக்கள் நடுவில் உள்ள மாரியம்மன் கோயிலுக்குச் சென்றார்கள். இம் மாரியம்மன் கோயில் அருகில் தான் ஓர் தீக்குழி வெட்டப்பட்டிருந்தது. ஓர் வண்டியில் மிகப்பெரிய சுப்பிரமணியர் உருவச்சிலை வைத்து ஒரு டிராக்டர் அவ்வண்டியை இழுத்துச் சென்றது. வண்டியின் முன் வெள்ளை ஆடை அணிந்திருந்த இளைஞர் இசைக்குழுவினர் பாடிக்கொண்டே சென்றார்கள். பிறகு நேர்த்திக் கடன் செய்யப்பட்டது. அதற்குப் பிறகு இவ்விழாவிற்காக அழைக்கப்பட்டிருந்த ஓர் இளம் பூசாரி தீக்குழியின் மேல் நடந்து சென்றார். அவரைப் பின்தொடர்ந்து பிற பக்தர்கள் தீக்குழியின் மேல் நடந்து சென்றார்கள். சில பெண்பார்வையாளர்களும், சில ஆண் இளைஞர்களும் ஆவேசத்துடன் இந்நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்த போது மூர்ச்சை அடைந்தார்கள். அவர்களை அவர்களுடைய நண்பர்கள் உடனடியாக அங்கிருந்து தூக்கிச் சென்றனர். பொதுவாக ஆண் பக்தர்கள் எல்லோரும் தீக்குழியின் மேல் குறுக்கே சென்றார்கள். ஒரு சில பெண்களும் குறுக்கே நடந்துச் சென்றார்கள். ஆனால் பொதுவாக, பெண்கள் பலமுறை தீக்குழியைச் சுற்றி வலம் வந்தார்கள். பக்தர்கள் தீக்குழியின் மேல் நடந்து சென்ற பின் அவர்களும், அவர்களுடைய நண்பர்களும், உறவினர்களும் கோயிலைச் சுற்றி மூன்று முறை வலம் வந்தார்கள். பிறகு அவர்கள் தாங்கள் தூக்கிச் சென்ற காவடி போன்ற பாரப்பொருட்களைக் கழற்றி கீழே வைத்தார்கள்.

அன்றுமாலை விருந்தினராக வந்திருந்த பூசாரியும், மற்றும் சில இளைஞர்களும் நடனமாடினார்கள். கோயிலுக்கு அருகில் உள்ள மறைதட்டியின் கீழ் நின்றுகொண்டு மக்கள் இதை ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். பிறகு அன்று மாலையும், மறுநாளும் கோயிலுக்கு அருகில் தமிழ்த் திரைப்படங்கள் காண்பிக்கப்பட்டன. தீமிதி விழா அன்று மதிய உணவு சுமார் 1000 பேர்களுக்குக் கோயிலில் அளிக்கப்பட்டது.

சுமார் 30 அல்லது 40 மலேயமக்களும் (எல்லோரும் ஆண் இளைஞர்கள்) சில சீனர்களும் இத்தீமிதி விழாவில் கலந்துகொண்டு பார்த்தனர். பிற பார்வையாளர்கள் இந்தியர்கள் ஆவார்கள். சுமார் 2000 இந்தியர்கள் இவ்விழாவின் போது கலந்து கொண்டார்கள் எனக் கூறலாம்.”

கோலாலம்பூரில் செந்நூல் என்னும் பகுதியில் தண்டாயுதபாணி கோயில் இருக்கிறது. நூற்றிருபது ஆண்டுகளுக்கு முன்னர் நகரத்துச் செட்டிமார்கள் கட்டியதாகும். வெள்ளிக்கிழமை தோறும்இக்கோயிலில்சிறப்புவழிபாடுநடைபெறுகிறது. இக்கோயிலுக்கு வெள்ளித்தேர் ஒன்றைப் பக்தர்கள் கொடையாக அளித்துள்ளனர். மேலும் அழகிய வெள்ளியிலான மயில் வாகனமும் கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

கோலாலம்பூரின் எல்லையில் 9 கி.மீ. தொலைவில் 'பத்துமலை' (பெரியமலை) எனும் இடம் உள்ளது. இம்மலை சுண்ணாம்பு கற்களினால் அமைந்தது ஆகும். இதனைப் 'பூமாலை' எனவும் குறிப்பிடுவர். மலை அடிவாரத்தில் இருந்து மலை உச்சியில் உள்ள மாபெரும் குகைக்குச் செல்ல இருவரிசைப் படிக்கட்டுகள் உள்ளன. 272 படிகள் ஏறி மேலே சென்றால் தலைமைக்குகை இருக்கின்றது. மின்னூர்தியும் (winch) இருக்கின்றது. தலைமைக்குகையின் நுழைவாயிலில் மயிலின் வடிவம் பொறிக்கப்பட்டுள்ளது. மலைப்பகுதியில் எங்கும் மயில்கள் ஆடி அசைவதைக் காணலாம். இங்குள்ள கோயில்களுள் பெரும்புகழ் வாய்ந்தது முருகனின் திருக்கோயிலும், திருவள்ளுவரின் கோட்டமுமாகும். "பத்துமலை முருகன் விக்கிரகம் சிறியதாக இருந்தாலும் அருள்பொழியும் முருகன் நம்மை மெய்மறக்க செய்து விடுகிறது". இக்கோயிலில் தைப்பூசத்திருவிழா மாபெரும் சிறப்புடன் கொண்டாடப்படுகிறது. மலேசியாவில் உள்ள தமிழ் மக்கள் இவ்விழாவிற்கு இலட்சக்கணக்கில் திரண்டு வருகின்றனர். பத்துமலை முருகனுக்கு ஆயிரக்கணக்கான காவடிகள் தைப்பூச நாளன்றுச் செலுத்தப்படுகின்றன. இவ்விழாவை மலேசியாவின் தேசியத் திருவிழாவாகப் போற்றுகின்றனர்.

மலாக்காவிலும் சில கோயில்கள் உள்ளன. விநாயகர் கோயில் ஒன்று இங்கு இருக்கிறது. அதற்குப் பொய்யாத விநாயகர் கோயில் என்பது பெயர். அதில் கணேசர், சுப்பிரமணியர், மாரியம்மன், இராமர் முதலிய தெய்வங்கள் உள்ளன. மீனாட்சி சுந்தரேசுவரரும் இருக்கின்றனர். மூன்று பெருந்தேர்கள் உள்ள இக்கோயிலில் கந்தர் சஷ்டி, நவராத்திரி விழாக்கள் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

முருகன் லிங்கவடிவில் வழிப்படப்படும் 'கோயில்' சந்நாசிமலைக் கோயில், மலாக்காவில் இருந்து 7 கி.மீ. தொலைவில் உள்ளது. தைப்பூசம், மாசிமகம், சிறப்பாக இக்கோயிலில் கொண்டாடப்படுகின்றன. பக்தர்கள் நூற்றுக்கணக்கான காவடிகளைக் காணிக்கையாகச் செலுத்துகின்றனர். மேலும் மலாக்காவில் கயிலாயநாதர் கோயில், ஐயனார் கோயில், திரௌபதி அம்மன் கோயில்' என்னும் மூன்று கோயில்கள் இருக்கின்றன. பயபக்தியோடு தீமிதி விழா திரௌபதி அம்மன் கோயிலில் கொண்டாடப்படுகின்றது.

தமிழர்களின் பொருளாதார நிலை:-

பொதுவாக மலேசியாவில் மூன்றுவிதத் தமிழர்களைப் (இந்தியர்களை) பார்க்கலாம். 1. பணக்கார வணிகர்கள், 2. நடுத்தர வகுப்பினர்: இவர்களில் பெரும்பான்மையோர் பேராசிரியர்களாகவும், வழக்குரைஞர்களாகவும், பொறியியல்

வல்லுநர்களாகவும், டாக்டர்களாகவும், எழுத்தாளர்களாகவும் இருக்கின்றனர். மலேசிய இந்திய மக்கள் தொகையுடன் ஒப்பீட்டு பார்த்தால் இந்தியர்கள் ஓரளவு மிகுதியாக அரசாங்கப் பொதுப்பணித்துறையில் (Pubiic Services) பணிபுரிகின்றனர். 3.ஏழைத்தொழிலாளிகள். மொத்தத் தமிழர்களில் 60 விழுக்காடு இவர்களே. 1970ஆம் ஆண்டு புள்ளி விவரப்படி ஏழ்மைக் கோட்டின் கீழ் இருக்கும் இந்தியக் குடும்பங்களின் எண்ணிக்கை 39 விழுக்காடு; மலேசியாவின் தேசிய சராசரி 49 விழுக்காடு. பெரும்பான்மையான ஏழை இந்தியர்களால் பணம் சேமிப்பு செய்ய முடிவதில்லை. கடந்த இருபது ஆண்டுகளில் தான் படிப்படியாக தமிழர் பொருளியல் எழுச்சிவளரத்தலைப்பட்டது.

தமிழர்களும் மலேசிய அரசியலும்.

மலேசிய நாட்டின் தலைவர் (Head of State) ஐந்து ஆண்டுக்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசராவார். தலைவரும், துணைத் தலைவரும் மரபு முறை வந்த ஒன்பது அரசர்களில் ஒருவராக இருக்க வேண்டும், அவர்களே இவர்களைத் தேர்ந்தெடுக்கின்றார்கள். நாடாளுமன்றம் கேபினட் ஆலோசனையின்படி அரசர் நடக்க வேண்டும். திவான் நகரா (செனட்) திவான் ரய்யத் (பிரதிநிதிகள் அவை) எனும் இரு அவைகள் அடங்கியது. நாடாளுமன்றம் திவான் நகரா உறுப்பினர்கள் 58 பேர் இருக்கின்றனர்; இவர்களில் 32 பேர் நாட்டுத் தலைவரால் நியமனம் செய்யப்படுவர், 26 பேர் மாநிலச் சட்டசபைமுன் (ஒரு சட்டசபைக்கு 2 பேர் வீதம்) தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். திவான் ரய்யத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 154 பேர் ஆவர். இவர்கள் மக்களால் 5 ஆண்டுக்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப்படுகின்றார்கள். இவர்களில் 114 பேர் மலேயா தீபகற்பத்திலிருந்தும், 24 பேர் சரவாக்கிலிருந்தும், 16 பேர் சபாவிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அடுத்த பொதுத்தேர்தலின் போது இவ்வுறுப்பினர்களின் எண்ணிக்கை 176 ஆக உயர்த்தப்படும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. பிரதம மந்திரியை நாட்டுத் தலைவர் நியமனம் செய்கின்றார்கள். பிரதம மந்திரியின் பரிந்துரைப்படி மற்ற அமைச்சர்கள் நியமனம் செய்யப்படுகின்றார்கள். கேபினட் நாடாளுமன்றத்திற்குப் பதில் சொல்லக் கடமைபட்டிருக்கிறது.

பாரிசான் தேசிய முன்னணி (BARISAN NASIONAL FRONT) உட்பட 16 அரசியல் கட்சிகள் உள்ளன. பாரிசன் தேசிய முன்னணியின் முகவரி Dewan Rakyat, Kuala Lumpur tel (03)984895: இக்கட்சி 1973இல் அமைக்கப்பட்டது. மலேசியன் இந்தியக் காரங்கிரஸ் (MIC) மலேசியன் சீனர் மன்றம் (MCA) உட்பட மொத்தம் 11 கட்சிகள் இணைந்து இக்கட்சியை அமைத்திருக்கின்றன.

மலேசியன் இந்தியக் காங்கிரஸ் கட்சியின் முகவரி 7th Floor, 1 Jalan Rahmat, pejebat pos Medan Tuanku, Kuala Lumpur 02-10. இக்கட்சி 1946இல் முதன்முதலாக அமைக்கப்பட்டது. மலேசியா நாட்டுரிமை பெற்றவுடன் இக்கட்சியைச் சேர்ந்த சிலர் அமைச்சர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். உதாரணமாக வி.டி.சம்பந்தன், சாமிவேல், பத்மநாபன், சுப்ரமணியன், போன்றவர்கள் அமைச்சர்களாகப் பணிபுரிந்தனர். 1959 ஆண்டளவில் மலேசியாவின் மொத்த மக்கள் தொகையில் 7.4 விழுக்காடு இந்தியர்கள் மலேசியா நாட்டின் குடிமகன்களாக இருந்தனர். வாக்குரிமை பெற்ற மொத்த மலேசியர்களில் இந்தியர்களின் எண்ணிக்கை 8 விழுக்காடு ஆகும்.

1983ஆம் ஆண்டில் மலேசிய இந்தியன் காங்கிரசில் 2,05,353 உறுப்பினர்கள் இருந்தார்கள். இக்கட்சியின் பொதுச் செயலாளராக செகரட்டரி-ஜெனரலாகப் பொறுப்பேற்றிருப்பவர் எம். மகாலிங்கம்; தலைவராக (President: தலைவர்) இருப்பவர் டத்தோ எஸ். சாமிவேலு, தொடர்ந்து 1986ஆம் ஆண்டிலும் இவரே இப்பதவியில் இருக்கின்றார். தற்சமயம் இவர் Minister of Works ஆகப்பணிபுரிகின்றார். இன்று இக்கட்சியில் தமிழர்களுக்குத்தான் மிகுதியான செல்வாக்கு இருக்கின்றது. ஆகையால் மலேசியத் தமிழ் அரசியல் உணர்வோடு நெருங்கிய தொடர்புடையது மலேசியன் இந்தியக் காங்கிரஸ் கட்சியாகும்.

மற்றொரு இந்திய அரசியல் கட்சி காங்கிரஸ் இந்தியன் முசுலீம் மலேசியா (KIMM). இதன் முகவரி 47 Lorong tuanku Abdul Rahmon kuala Lumpur. இக்கட்சி 1977 இல் அமைக்கப்பட்டது. மலேசிய இந்திய முசுலீம்களையெல்லாம் அரசியல் அடிப்படையில் ஒன்றுபடுத்த வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும். இக்கட்சியின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 20,000. 1984இல் இதன் பிரஸிடெண்ட் ஆக (President) பணியாற்றிவருபவர் டத்தோ ஏ. எஸ். தாவுத், செகரட்டரி-ஜெனராலாக இருந்தவர் லெப்பை கானிபின் நைனா பிள்ளை நரிகார்.

இவ்விரண்டு கட்சிகளைத்தவிர மற்ற கட்சிகளின் உறுப்பினர்களாகவும் சில தமிழர்கள் இருக்கின்றார்கள். ஆகையால் மலேசிய அரசியலில் தமிழர்கள் சிறப்பாகப் பங்கேற்று வாழ்கின்றனர் எனத் தயக்கமில்லாமல் கூறலாம்.

ஆட்சிமொழி (Official Language)

பாஷா மலேசியா (Bahasa Malaysia) ஆங்கிலமும் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றது.

தமிழ்க் கல்வியின் நிலை:

டாக்டர் முத்தராஜாக் கண்ணனார். டாக்டர் தனிநாயகம் போன்றவர்கள் மலேசியாவில் தமிழுக்குப் புத்துணர்வை உண்டாக்கினர் எனக் கூறலாம்.

160 ஆண்டுகளுக்கு முன் தமிழர்கள் பெரும்பான்மையினராய் குடிபெயரப் பெயரத் தமிழ்க் கல்வியும் மலேசியாவில் வேர்கொள்ளத் தொடங்கியது. மலேசியாவில் ஏற்படுத்தப்பட்ட முதற் தமிழ் பள்ளி 1816இல் தொடங்கப்பட்ட பினாங்கு இலவசப்பள்ளி (Penang Free School) எனக்கூறுகிறார்கள். சில ஆண்டுகளுக்குப் பிறகு ஆதரவின்மையால் இப்பள்ளி தொடர்ந்து நடக்கவில்லை. பிறகு சிங்கப்பூர் இலவச பள்ளி(Singapore Free School) 1834இல் தொடங்கப்பட்டு 5 ஆண்டுகளுக்குப் பிறகு 1839இல் மூடப்பட்டது. தமிழ் வகுப்பை நடத்த சிங்கப்பூர் ஹை ஸ்ட்ரீட்டில் இருந்த சிங்கப்பூர் கல்வி நிறுவனம் 1836இல் முயற்சி செய்து கைவிட்டது. தேவையான மாணவர்கள் கிடைக்காததால் இப்பள்ளிகள் மூடப்பட்டன.

பிறகு 1859 ஆம் ஆண்டில் அங்கிருந்த ஆங்கிலப் பள்ளிகளில் குறிப்பாக சிங்கப்பூரில் இருந்து அர்ச் பிரான்ஸிஸ் சேவியர் மலபார் பள்ளியிலும் (St. Francis Xavier Malabar School) மலாக்காவில் இருந்த ஒரு பள்ளியிலும் தமிழ் வகுப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டன. ஆனால்

இம்முயற்சிலும் தமிழர்கள் தோல்வியே கண்டனர். பிறகு ஒரு சிலகாலம் மட்டுமே 1862இல் அரசாங்கப்பொருள் உதவியுடன் தொடங்கிய மாதர் விவிலிய சமய ஆய்வுச் சங்கத்தின் தமிழ்ப் பள்ளி நடந்தது.

அதே சமயத்தில் பினாங்குத் தீவிலும், சிங்கப்பூரிலும் கிறிஸ்துவ சமய நிறுவனங்கள் ஆங்கிலோ தமிழ்ப் பள்ளிகளைத் தொடங்கின. பொதுவாக இக்காலக் கட்டத்தில் கிறித்துவ சமயப் பரப்பாளர்கள் பள்ளிகளை நடத்த முன்வந்தனர். உதாரணமாக, வெல்லஸ்லி மாநிலத்தில் ஐந்து பள்ளிகளை எஸ்.பி.ஜி. என்னும் கிறித்துவ சமய நிறுவனம் நடத்தியது. மேலும் ஓர் ஆங்கிலோ-தமிழ்ப் பள்ளி கோலாலம்பூரில் 1895-1896இல் தவத்திரு ஆப்ரகாம் என்பாரால் தொடங்கப்பட்டது. பின்னர் இப்பள்ளியின் பெயர் மெதடிஸ்ட் ஆண்கள் பள்ளி என மாற்றப்பட்டது.

அதே சமயத்தில் சில சிறு தமிழ்ப் பள்ளிகள் இரப்பர், காப்பி, கரும்புத் தோட்டங்களில் குறிப்பாக ஜோஹூர், மலாக்கா, வெல்லஸ்லி மாநிலங்களில் தொடங்கப்பட்டன. முதன்முதலாக இவ்வாறு அழைக்கப்பட்ட பள்ளிகள் நிவோங்திபால் எனும் இடத்தில் தோன்றிய தோட்டப்பள்ளி (1872), வெல்லஸ்லி மாநிலத்தில் அமைக்கப்பட்ட தோட்டப்பள்ளி (1875-1876) முதலிய பள்ளிகள் ஆகும். இப்பள்ளிகள் தோன்றிய பிறகு படிப்படியாகத் தமிழ்ப் பள்ளிகள் பெருகி வளர்ச்சியடையத் தொடங்கின.

ஆங்கில அரசு மலேசிய தமிழ்க் கல்வியில் அவ்வளவு அக்கறை காட்டவில்லை. தமிழ்-சீனக் குழந்தைகளுக்குத் தாய்மொழிக் கல்வி அளிப்பது அரசின் கடமையல்ல என்று 1872இல் அரசாங்கம் அறிவித்தது. மேலும் ஆங்கிலப்பள்ளிகளில் தமிழ் கற்றுத் தருவதற்கும் தமிழ் மாணவர்களிடமிருந்தே ஆசிரியர் கட்டணம் பெற்றுக் கொள்ள வேண்டும் எனக் கட்டளையிட்டது. ஆனால், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அரசின் மனப்பான்மை கொஞ்சம் மாறத் தொடங்கியது. அரசே தமிழ்ப் பள்ளிகள் நடத்த அக்கறை காட்டத் தொடங்கியது. அச்சமயத்தில் அரசப் பிரதிநிதியாக இருந்த ஸ்வெட்டன்ஹாம் தமிழ்க் கல்விக்கு ஆதரவு அளித்ததுடன் அரசாங்கமும் அதற்கு ஆக்கம் அளித்தது. முதலாவது அரசினர் தமிழ்ப் பள்ளி 1900 ஆம் ஆண்டில் பேராக் மாநிலக் கிரியான் மாவட்டத்தில் பாகன்செராயில் கட்டப்பட்டது. இக்காலக் கட்டத்தில் சில அரசினர் தமிழ்ப் பள்ளிகள் நெகிரிசெம்பிலான் மாவட்டத்திலும் அமைக்கப்பட்டன. இவற்றில் முதலாவது 1900இல் சிரம்பானில் தோன்றிய அரசினர் தமிழ்ப் பள்ளியே ஆகும். ஸ்ரீ ராமகிருஷ்ணா மடம் சிங்கப்பூரில் அமைத்த சாரதாமணி பெண்கள் பள்ளி, பினாங்கு கான்வெண்டு நடத்திய ஒரு பெண்பள்ளி-போன்ற ஓரிரு தமிழ்ப் பள்ளிகள் பெண்களுக்காகத் தொடங்கப்பட்டன.

கூட்டரசு மலாய் மாநிலங்களில் ஓர் தொழிலாளர் சட்டம் 1912 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. இச்சட்டப்படி நெகிரிசெம்பிலான், செலங்கர், பேராக், பாஹாங் முதலிய மலேய்க் கூட்டரசு மாநிலங்களில் ஏழு வயதிற்கும் பதினாறு வயதிற்கும் உட்பட்ட பத்துப்பிள்ளைகள் ஒரு தோட்டத்தில் இருந்தால் அங்கு ஒரு பள்ளி திறக்கப்பட்டு ஆசிரியரும் அமர்த்தப்பட வேண்டும். தொழிலாளர் அதிகாரியின் பொறுப்பின் கீழ் பள்ளியின் நிருவாகம் ஒப்படைக்கப்பட்டது. 1933ஆம் ஆண்டு வரை இந்நிலை நீடித்தது. எனவே மலாயாவில் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் முதன் முதலில் தோட்டப்புறங்களில்தான்

வளர்ச்சி அடையத் தொடங்கின. தொடக்கத்தில் நான்காம் வகுப்பு வரையில்தான் கல்வி கற்பிக்கப்பட்டு வந்தது. அக்காலத் தமிழ்ப் பள்ளிக் கூடங்களில் போதிய திறமையற்ற ஆசிரியர்கள் இருந்ததாலும், அவர்களுடைய ஊதியம் குறைவாக இருந்ததாலும் அப்பள்ளிக்கூடங்கள் மனநிறைவு அளிக்கும் வகையில் நடைபெறவில்லை. தொழிலாளர் சட்டத்தின் கீழ் அமலுக்கு வந்த பள்ளிகளில் ஓரளவு தமிழ் கற்றவர்களே ஆசிரியர்களாக அமர்த்தப்பட்டனர். இவர்களில் தோட்டத்துப் பூசாரிகளும் கங்காணிகளும் உண்டு. 1922ஆம் ஆண்டு வாக்கில் முன்னால் தொடுவாய்ப் பகுதி (எப்.எம்.எஸ்.என்ற பெயரில்) 122 தமிழ்ப் பள்ளிகளும் நடத்தப் பெற்று வந்தன.

கூட்டரசு மலாய் மாநிலங்களில் 8,153 பிள்ளைகளோடு 235 ஆக 1925இல் இருந்த தமிழ்ப் பள்ளிகளின் எண்ணிக்கை 1930இல் 333 பள்ளிகளோடு 12,640 பிள்ளைகள் அளவிற்கு உயர்ந்ததை ஓர் எடுத்துக்காட்டாய்க் கூறலாம். 1937இல் கூட்டரசு மலேய் மாநிலங்களிலும் தொடுவாயப்பகுதி மாநிலங்களிலும் இருந்த 800 தமிழ் ஆசிரியர்களின் கால் பகுதிக்கும் குறைவானவரே பயிற்சிச் சான்றிதழ் பெற்றிருந்தனர் என்பது இங்குக் கருதத்தக்கது.

தோட்டப்புறங்களில் தமிழ்ப் பள்ளிகளின் எண்ணிக்கை அதிகரித்தபோதிலும், நகரப் புறங்களில் குறைவாகவே தமிழ்ப்பள்ளிகள் இருந்தன. குறிப்பிடத்தக்க சில நகர்ப் புறப்பள்ளிகள் பின் வருவன ஆகும். 1. தம்புசாமிப் பிள்ளைத் தமிழ்ப் பாடசாலை, கோலாலம்பூர் (1906), 2. விவேகானந்தா தமிழ்ப்பள்ளி (1920) கோலாலம்பூர், 3. அப்பர் தமிழ்ப்பள்ளி (1937) கோலாலம்பூர், 4.இரு இராமகிருஷ்ணா மிஷன் பள்ளிகள், கோலாலம்பூர், சிங்கப்பூர்.

தமிழ் அல்லாமல் ஆங்கிலம் கற்றோர் சிறந்த வேலைகளைப் பெறும் வாய்ப்பிருந்ததால் நகர்ப்புறப் பிள்ளைகள் ஆங்கிலப் பள்ளிகளையே நாடினர். மாறாகத் தோட்டப்புறப் பிள்ளைகளுக்கு ஆங்கிலமோ மலாயோ ஒரு சிறிதும் கற்றுத் தரப்படவில்லை. இந்நிலையில் தமிழ் மட்டும் அறிந்த பிள்ளைகள் ஒரு புறமும், தமிழையே அறியாத பிள்ளைகள் மற்றொரு புறமுமாகத் தமிழ்ப்பிள்ளைகள் இரு வேறு உலகங்களில் இயங்கி வந்தனர்.

தொடக்கப்பள்ளியில் பயின்ற மாணவர்கள் ஆறு ஆண்டுகள் கல்வி கற்றனர். ஓராண்டு தொடக்கக் கல்வியும் பின் ஐந்து வகுப்புகளும் என இவ்வாண்டுக் கல்வி பிரிக்கப்பட்டிருந்தது. ஏட்டளவில் ஐந்து வகுப்புக்கள் இருப்பினும் பெரும்பாலான பள்ளிகள் மூன்றாம் வகுப்போடு முடித்துக் கொண்டன. சில தமிழ்ப்பள்ளிகளில் மட்டும் நான்காம், ஐந்தாம் வகுப்புகள் இருந்தன. கூட்டரசு மலாய் மாநிலங்களில் 1937இல்-நான்காம் வகுப்பில் 650 பிள்ளைகளும்,ஐந்தாம் வகுப்பில் 200க்குக் குறைந்த பிள்ளைகளுமே இருந்தனர் என்ற புள்ளிவிவரம் அன்றைய தமிழ்ப்பள்ளிகளின் உண்மை நிலையை ஓரளவு உணர்த்தும். தோட்டப்புறப் பள்ளிகளின் பல ஓராசிரியர் பள்ளிகளாக இருந்ததும் இதற்கொரு காரணம் எனலாம்.

இதனையடுத்து மலேசியாவில் ஜப்பானியர் ஆட்சி வந்தபோது (1942-1945) ஜப்பானிய மொழிப்பள்ளிகளாக எல்லாப் பள்ளிகளும் மாற்றப்பட்டன. இதனால் மூன்று ஆண்டுகள் தமிழ்க் கல்வியின் முன்னேற்றமும் பாதிக்கப்பட்டது.

மீண்டும் ஆங்கிலேய ஆட்சி அமைக்கப்பட்டவுடன் தொடக்கப்பள்ளிகளில் தாய்மொழிக்கல்வி இலவசமாகக் கற்றுத்தரப்பட்டது. ஆங்கிலம் எல்லாப் பள்ளிகளிலும் கட்டாயப் பாடமானது. முதன் முதலாக 1946ஆம் ஆண்டு ஏழாம் வகுப்பு தொடங்கப் பெற்றது. இப்பயிற்சி பெற்றவர்களுக்குத் தமிழ் ஆசிரியர்கள் வேலை கிடைக்கவும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது. இக்காரணத்தால் மாணவர்களின் எண்ணிக்கை 1946 இல் 29,800இலிருந்து 1949இல் 38,700ஆக, தமிழ்ப்பள்ளிகளில் உயர்ந்தது.

இதன் பின்னர் நாட்டின் கல்விக் கொள்கையை வகுக்கவும் அதன் அடிப்படையில் ஆலோசனை கூறவும் அவ்வப்போது அரசாங்கத்தால் பல உயர்மட்டக் குழுக்கள் அமைக்கப்பட்டன. இக்குழுக்களின் அறிக்கைகள் தமிழ்ப்பள்ளிகளின் நிலையை அவ்வப்போது ஓரளவு மாற்றிக் கொண்டு இருந்தன. இவற்றில் முதலாவதாவது குறிக்கத்தக்கது பார்ன்ஸ் அறிக்கை (Barnes Report). 1949இல் நியமிக்கப்பட்ட இக்குழு 1951இல் தனது அறிக்கையை அளித்தது. ஒரு மொழி, ஒரு நாடு என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்ட இவ்வறிக்கை மலாய் மொழியைத் தேசிய மொழியாகப் பரிந்துரைத்தது. அடுத்த பத்தாண்டுகளில் ஆங்கிலத்தின் இடத்தை மலாய் பெறவேண்டும் எனக் கூறும் அவ்வறிக்கை, மலாயோ அல்லது ஆங்கிலமோ போதிக்கப்படாத தமிழ், சீனப்பள்ளிகளுக்கு அரசாங்கம் தன்னுடைய பொருளுதவியை நிறுத்தி விட வேண்டும் என்றும் வற்புறுத்தியது. இன அடிப்படையில் இல்லாமல், எல்லா மொழி, சமயம், பண்பாட்டைச் சேர்ந்தவர்களும் சேர்ந்து பயிலும் வகையில் தேசியப்பள்ளிகளை உருவாக்கவும் இக்குழு பரிந்துரைத்தது. இக்குழுவின் பரிந்துரைகளுக்குப் பிறகு அரசாங்கம் சீனக்கல்வியைப் பற்றிய கருத்துக்களை அறிய பென் குழுவை (Fenn-WW) அமைத்தது. எனினும் அப்போதைய காலனித்துவ அரசாங்கம் தமிழ்க்கல்வியைப்பற்றி ஆராய இத்தகைய ஓர் உயர் மட்டக்குழுவை அமைக்க ஒப்புக் கொள்ளவில்லை. இச்சூழ்நிலையில் சைவப்பெரியார் இராமநாதன் செட்டியார், ஆதிநாகப்பன், சுவாமி சத்யானந்தா, கே.எல். தேவாசர், ஜி. வியோ முதலியவர்களைக் கொண்டு இந்திய சமூகத் தலைவர்கள் ஒரு கல்விக்குழுவை அமைத்தனர். சீன, தமிழ்க் கல்விக்குழுக்கள் இரண்டுமே மலாயைத் தேசிய மொழியாக ஒப்புக்கொண்டன. தமிழ்க் கல்விக் குழு அத்துடன் ஒரு மும்மொழிக் கொள்கையைப் பரிந்துரைத்தது. அதன்படி தொடக்கப்பள்ளியின் ஆறாண்டுகளில் தாய்மொழியிலே கல்வி அமைய வேண்டும் என்றும், ஆங்கிலமும், மலாயும் தொடக்கப்பள்ளியின் மூன்றாவது ஆண்டிலிருந்து படிப்படியாகக் கற்றுத் தரவேண்டும் என்றும் கருத்துரைத்தது.

மீண்டும் 1955இல் டத்தோ அப்துல் ரஸாக் தலைமையில் கல்விக் கொள்கையை மறுபரிசலனை செய்ய அமைக்கப்பட்ட குழு 1956இல் தன் அறிக்கையை வெளியிட்டது. இக்குழு மலேயா முழுவதும் ஒரு தேசியக் கல்வி தேவை என எடுத்துரைத்தது. அப்போதிருந்த பள்ளிகளை இக்குழு நான்காகப் பிரித்தது. மலாயைப் பயிற்சி மொழியாகவும் ஆங்கிலத்தை ஒரு பாடமாகவும் கொண்ட தொடக்கப்பள்ளிகள் தேசியப்பள்ளிகளாகவும் (Standard Primary Schools) ஆங்கிலத்தையோ, தமிழையோ, சீனத்தையோ பயிற்சி மொழியாகக் கொண்ட பள்ளிகள் தேசிய மாதிரிப் பள்ளிகளாகவும் (Standard type Primary Schools) ஆங்கிலத்தையும், மலாயையும் பாடங்களாகப் போதிக்கும் பள்ளிகள் தமிழ்ப் பள்ளிகளாகவும், சீனப்பள்ளிகளாகவும் இப்பிரிவுகள் அமைந்தன. மேலும் குறைந்தது பதினைந்து பிள்ளைகளின் பெற்றோர்கள் கேட்டுக் கொண்டால் எல்லாத்

தொடக்கப்பள்ளிகளிலும் தமிழையோ, சீனத்தையோ போதிக்கலாம் என இவ்வறிக்கை பரிந்துரைத்தது. இந்த ரஸாக் அறிக்கையே தொடர்ந்து பின்பற்ற வேண்டும் என 1960இல் (அமைச்சர்) ரஹ்மான்தாலிப் குழு பரிந்துரைத்தது. இதன் அடிப்படையில் எல்லாப் பள்ளிகளும் இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டன. அ. தேசிய பள்ளிகள்: எல்லா மலாய்ப் பள்ளிகளும் தேசிய பள்ளிகள். ஆ. தேசிய மாதிரிப்பள்ளிகள்: சீனத்தமிழ்ப் பள்ளிகளின் இன்றும் இம்முறையே பின்பற்றப்படுகின்றன.

1946இல் 724 தமிழ்ப் பள்ளிகளும் 33,466 மாணவர்களும் இருந்தனர். இதுவே 1960இல் 832 பள்ளிகளாகவும், 61,221 மாணவர்களாகவும் உயர்ந்தது. ஆனால் 1970இல் தமிழ்ப்பள்ளிகளின் எண்ணிக்கை 661ஆக குறைந்தது. ஆனால் மாணவர்களின் எண்ணிக்கை 79,499ஆக உயர்ந்தது. 1980இல் தமிழ்ப் பள்ளிகளின் எண்ணிக்கை 583 ஆகவும், மாணவர்களின் எண்ணிக்கை 73,955 ஆகவும் வீழ்ச்சியடைந்தது. பல தமிழ்ப் பிள்ளைகள் தேசிய தொடக்கப்பள்ளிகளில் பயில்வதும் இதற்கொரு காரணம் எனலாம். 1978இல் மலாய், ஆங்கில, சீனப் பள்ளிகளில் படித்த இந்திய குழந்தைகளின் எண்ணிக்கை 77,903 என்பதும் இதனை உறுதிப் படுத்துகின்றது.

ஆசிரியர் பயிற்சிக்கான வாய்ப்பின்மையே மலாய்த் தமிழ்க் கல்வியின் வளர்ச்சியை ஓரளவு பாதித்தது எனலாம். முதன் முதலாகத் தமிழ் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்க போதனா முறை வகுப்புகள் 1938இல் தான் தொடங்கப்பட்டன. அப்போது தோட்டப்புறப் பள்ளிகளில் கங்காணிகளாகவும், பூசாரிகளாகவும், தொழிலாளர்களாகவும் இருந்து கொண்டே ஆசிரியர்களாகப் பணிபுரிந்தவர்களுக்கும் இவ்வாசிரியர் பயிற்சி அளிக்கப்பட்டது. ஜப்பானிய ஆதிக்கத்தின் போது இந்நிலையில் பாதிப்பு ஏற்பட்டது. ஆனால், ஆங்கிலேயர் ஆட்சி மீண்டும் அமைக்கப்பட்டவுடன் இவ்வாறு அரைகுறையாகப் பயிற்சியைக் கைவிட்ட ஆசிரியர்களுக்கு எவ்விதத் தேர்வும் நடத்தாமல் தேர்ச்சிச் சான்றிதழ் அளித்து நிரந்தரமாக்கி விட்டனர். இவர்களை இன்றும் 'குண்டு பாஸ் ஆசிரியர்கள்' என வேடிக்கையாக அழைக்கின்றனர். 1949இல் மொத்தம் 1341தமிழ் ஆசிரியர்களில் 369 ஆசிரியர்களே பயிற்சி பெற்றவர்கள். மற்றவர்களில் 617 பேர் பயிற்சியில் ஈடுபட்டிருந்தனர். சனி, ஞாயிற்று கிழமைகளில் இப்பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன.

1947ஆம் ஆண்டு கல்வித் துறையில் அரசாங்கம் முழுக்கவனம் செலுத்தியதால் தமிழ்ப் பள்ளிகளைத் திருத்திக் கட்டவும், நவீன சாதனங்களைப் பெருக்கவும், சிறந்த ஆசிரியர்களை அமர்த்தவும் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. மலாய் போதனா முறையில் தேர்ச்சி பெற்ற மலாய் ஆசிரியர்களுக்குச் சமமாக, தமிழ் ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்பட்டது. அரசாங்கம் பொறுப்பு ஏற்றுக் கொண்ட பின்னரே முறையான பயிற்சியும், கண்காணிப்பும் ஏற்படலாயின. இச்சமயத்தில்தான் தமிழ் ஆசிரியர்களைச் சிறப்பாகப் பயிற்றுவிக்க ஏழாம் வகுப்பும் தொடங்கப் பெற்றது.

1946ஆம் ஆண்டிலேயே முதன் முதலாக ஏழாம் வகுப்பு தொடங்கப் பெற்றது. ஏழாம் வகுப்பு ஆரம்பக் காலத்தில் தேர்ச்சி பெற்ற தமிழ்ப் பள்ளி அமைப்பாளர்களாலும், ஆங்கிலப் பள்ளி ஆசிரியர்களாலும் நடத்தப்பட்டது. அதன் பின் 1950ஆம் ஆண்டில் தமிழ் போதனா முறையில் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களால் மலாயாவில் பல இடங்களில் நடத்தப்

பெற்றது. ஈராண்டுக்கு ஒரு முறை தேர்வு நடத்தப்பட்டது. இந்த ஏழாம் வகுப்பில் தேறியவர்களுக்குத் தமிழாசிரியர் வேலை கிடைப்பதற்கு வகையும் செய்யப் பட்டிருந்தது. அதன் பின் போதனா முறை வகுப்புகளில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். இந்த ஏழாம் வகுப்பு தமிழகத்தில் நடைபெறும் எஸ்.எஸ்.எல்.சிக்கு இணையாகக் கருதப்பட்டது.

1957ஆம் ஆண்டில் மலேசியா சுதந்திரம் பெற்றதால் தமிழ் மொழியில் சில திருப்பங்கள் ஏற்பட்டன. அதன் விளைவாக ஏழாம் வகுப்பு தடைசெய்யப்பட்டது. ஆனால் சில தமிழ் மொழிப் பற்றுடைய மேல் அதிகாரிகளின் தீவிர நடவடிக்கையால் தடைசெய்யப்பட்ட வகுப்பிற்கு "ஆசிரியர் ஆயத்தப் பரிட்சை" என மாற்றுப் பெயரிட்டு சில மாற்றங்களுடன் மீண்டும் நடைபெற்று வந்தது. இந்த ஆசிரியர் ஆயத்தப் பரிட்சையும் 1959ஆம் ஆண்டில் மூடப்பட்டுவிட்டது. போதனா முறை (Normal Training) 1962இல் நிறுத்தப்பட்டது. மேலும் கோலாலம்பூரில் தினப்பயிற்சி நிலையத்திலிருந்த தமிழ்ப் பிரிவும் கைவிடப்பட்டது. ஆனால் 1967இல் தஞ்சோங்மாலிமில் விடுமுறைக்காலத் தற்காலிகத் தமிழாசிரியர் பயிற்சி வகுப்பு ஒன்று சுல்தான் இட்ரிக் பயிற்சிக் கல்லூரியில் தொடங்கியது. இப்போது கோலாலம்பூரில் ஸ்ரீகோத்தா பயிற்சிக் கல்லூரியிலும், லெம்பா பந்தையிலுள்ள (Lembah Pantai) பயிற்சிக் கல்லூரியிலும் தமிழ் ஆசிரியர்கள் பயிற்சி பெறுகின்றனர். 1962இல் 758ஆக இருந்த பள்ளிகளின் மொத்த எண்ணிக்கை 1967இல் 668ஆகக் குறைந்து விட்டது. அதாவது 90 பள்ளிகள் இல்லாமற் போய்விட்டன. அதற்கு மாறாக 66,856 ஆக இருந்த மாணவர்களின் எண்ணிக்கை 14,227 பேர் அதிகரித்து 81,072 ஆகியது. (இது வரையிலான இக்கல்விக் கட்டுரைப் பகுதியின் மூலம் தமிழ்த் தொண்டன் op. cit., and டாக்டர் ந. கடிகாசலம், தமிழும், தமிழரும்).

இன்று மலேசியா நாட்டில் தொடக்க கல்வி 6 ஆண்டுகள். அதிலே ஆங்கிலமும் தாய்மொழியும் கட்டாயம் படிக்க வேண்டும். கல்வி, தாய்மொழி வாயிலாகவே கற்பிக்கப்படுகிறது. மலேசியாவில் பெரும்பாலானவர்கள் தோட்டத் தொழிலாளர்களே. தோட்டங்களுள் தொடக்கப்பள்ளிகள் உண்டு. ஆனால் கல்வி தரமானதாகத் தெரியவில்லை. தமிழ் அப்பள்ளியில் சிறப்பாகக் கற்பிக்கப்படுகிறது. மலேசிய இந்தியர்களில் 35 விழுக்காடு தோட்டங்களில் வேலை பார்ப்பவர்கள். 85 விழுக்காடு தமிழ்ப் பள்ளிகள் தோட்டப்புறங்களிலேயே உள்ளன. தமிழ்ப் பள்ளியில் பயிலும் மாணவர்களில் 90 விழுக்காட்டினர் உயர் இடைநிலைக் கல்விக்குச் செல்வதே இல்லை.

பிறகு உயர்நிலை மேல்நிலைப் பள்ளிகளில் 6 ஆண்டுகள் இங்கு மலாய்மொழி கட்டாயமாக்கப்பட்டு, அனைத்துக் கல்வியும் அம்மொழி வாயிலாகவே கற்பிக்கப்படுகிறது. தமிழ் படிக்கவோ சீனம் படிக்கவோ விரும்பும் மாணவர் 15 எண்ணிக்கைக்கு மேல் இருந்தால் பள்ளி நேரம் அல்லாத பிற நேரங்களில் இம்மொழியில் கற்பிக்கலாம். 6ஆவது வகுப்பு வரை தமிழில் படித்து வரும் மாணவர்கள் உயர்நிலைப் பள்ளியில் 7ஆவது வகுப்பு வரும்போது அனைத்தையும் மலாய் மொழியில் படிக்க வேண்டும். இடையில் ஓர் ஆண்டு மலாய் மொழி மட்டுமே கற்பதற்கு ஒதுக்கப்பட்ட பள்ளிகளில் அவர்கள் படிக்க வேண்டியுள்ளது. இதனால் ஓர் ஆண்டு வீணாகிறது. ஆதலால் மலேசிய நாட்டின் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் தமிழே இல்லை என்று சொல்லிவிடலாம். தமிழ் மாணவர்கள் மலாயும், சீனமும் படிக்க இப்போது சென்று கொண்டிருக்கின்றனர்.

பல்கலைக்கழகத்தில் முதல் பட்டப் படிப்பு 3 ஆண்டுகள். இலங்கையில் போன்றும், சிங்கப்பூரில் போன்றும் இணைப்புக் கல்லூரிகள் இங்கு இல்லை. அனைவரும் பல்கலைக் கழகத்திலே வந்து அதற்குரிய கல்வியினைக் கற்க வேண்டும். மலேசியாவில் கோலாலம்பூர் பல்கலைக் கழகம் ஒன்று பெரிதாக இயங்கி வருகிறது. இதில் அனைத்துப் பாடங்களும் அனைவருக்கும் உரியனவாக நடத்தப்படுகின்றன. கோலாலம்பூர் பல்கலைக் கழகத்தில் இந்தியத்துறை என ஒன்று நடைபெற்று வருகிறது. பேர் இந்தியத் துறை என்றாலும் அங்கு பெரும்பாலும் தமிழ்க் கல்வியே கற்பிக்கப்படுகிறது. அங்கே தமிழில் முதல் பட்டப்படிப்பும், முதுகலைப் பட்டப்படிப்பும் நடைபெறுகின்றன. இந்தியக் கல்விக்கு என ஏறத்தாழ 30 ஆண்டுகளுககு முன்னால் இத்துறை தோற்றுவிக்கப்பட்டது. 1984ஆம் ஆண்டுவரை இத்துறையில் ஏறத்தாழ 200 மாணவர்கள் தமிழ்ப் பட்டம் பெற்றுச் சென்றிருக்கின்றனர். இதுதுறையில் தமிழ்ப் பட்டக் கல்வி படிக்க மாணவர்கள் மிகமிகக் குறைவாகவே வருகின்றனர். உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் தமிழ் இல்லாதது இதற்கு ஒரு காரணம். கோலாலம்பூர் பல்கலைக் கழகத்தில் பாடத் திட்டங்கள் பல்வேறு துறைகளுக்குரிய பாடங்களை இணைத்து அமைக்கப்பட்டுள்ள காரணத்தால் பிற துறையில் படிக்கும் மாணவர்கள் பல தமிழ்த் துறைக்குரிய பாடங்களைப் படிக்க முன் வருகின்றனர்.

முதன் பட்டத்திற்கு மேற்பட்ட முதுகலைப் பட்டம் கற்பதற்கு 2 ஆண்டுகள் முதுகலைக் கல்வி கற்க மாணவர்கள் அரிதாகவே வருகின்றனர். உயர்நிலைப் பட்டம் பெற்றவுடன் வேலை கிடைக்கும் சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால் முதுநிலைக் கல்வியினைப் பலர் நாடுவதில்லை. முதுநிலைக் கல்வி போல் ஆராய்ச்சியும் வளர்ச்சி பெறவில்லை. பல்கலைக் கழகங்களிலும் அனைத்தும் மலாய் மொழியிலே கற்பிக்கப்படுகின்றன.

பினாங்கில் ஒரு பல்கலைக் கழகம் இருக்கின்றது. அது அறிவியலுக்காக மட்டும் நடைபெற்று வருகிறது. ஆனாலும் வரலாறு, கல்வி முதலியக் கலைத் துறைகளும் அங்கு நடைபெறுகின்றன. இப்பல்வேறு துறைகளிலும் தமிழர்கள் பலர் பணியாற்றி வருகின்றனர். அங்கு வரலாற்றுத் துறையும் உண்டு. இந்தியாவில் வளர்ச்சி எழுச்சி பற்றியும் பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன.

மாரா தொழில் நுட்பக் கல்லூரி (Mara Institite of Technology) என ஒன்று கோலாலம்பூரில் இயங்குகின்றது. இது மலாய் மக்களுக்கு மட்டுமே நடைபெறுகிறது. அனைத்துமே மலாய் மொழியில் நடத்தப் படுகின்றன. இங்குப் படிப்போர் ஏதாவது பிறிதொரு மொழியைப் படிக்கும் திட்டம் உள்ளது. 8000 மாணவர்கள் படிக்கும் அந்நிறுவனத்தில் 100/150 மலாய் மாணவர்கள் தமிழ் படிக்க முன் வருகின்றனர். அந்நிறுவனத்தில் மலாய் மக்களுக்கு பாடம் கற்பிக்கப் பாடநூல்கள் போதிய அளவில் இல்லை.

(மூலம்: தி. முருகரத்தனம், தமிழர் வாழும் அண்டை நாடுகளில் தமிழ்க் கல்வி, பக். 123, 131-132, 142-147; கி. கருணாகரன், மலேசியாவில் தமிழ், தமிழ்க்கலை தமிழ் 5, கலை 3,4)

மலேசிய தமிழ்த் தொண்டன் பின்வருமாறு 1979இல் எழுதுகிறார். (Op. cit) "தமிழ் தெரியாது. ஆங்கிலமும் மலாயும் அரை குறை. இந்த நிலையில் நான் பெரும்பாலான

இளைஞர்களை என்னால் காண முடிந்தது. .... தமிழ் மொழி தெரியாத (தமிழ்) பெண்களைக் கூட நிறைய காண முடிந்தது .... எனக்குத் தெரிந்தவரை இந்நாட்டில் (மலேசியா) தமிழ் மொழி வாழ்கிறது, வளர்கிறது பீடு நடை போடுகிறது என்பதெல்லாம் கற்பனையே....தமிழ்ப் பள்ளியின் கட்டடங்கள் படுமோசமான நிலையில் உள்ளன. மேசை, நாற்காலி பற்றாக்குறையும் இடப் பற்றாக்குறையும் இன்றும் நிலவுகின்றன. .... தமிழ்ப் பள்ளிகளில் இந்து சமயப் பாடங்களை நடத்த வேண்டும் .... தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் உயர்கல்விக்கூடம் வரையில் எட்டிப் பார்க்க முடியாமல் இடையிலேயே பள்ளி வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு 'தமிழ்' என்பது பொய் வாதமாகும். வறுமைதான் மூல காரணம். மூராட் அறிக்கையும் இதையே விளக்குகின்றது.... 24 சதவிகிதம் பெற்றோர்கள் சம்பளம் கட்ட இடர்ப்படுவதாகவும், 50 சதவிகிதம் பெற்றோர்களுக்குப் பிள்ளைகளின் கல்விச் சாதனையில் அக்கறையில்லை என்றும் தலைமை ஆசிரியர்கள் தமிழ்ப் பள்ளிப் பெற்றோர்களைப் பற்றிக் கருத்துரைத்திருப்பது கவனிக்கத் தக்கது. ஆசிரியர்களின் பொறுப்பு, தகுதி, அனுபவம் ஆகியவை குறித்தும் மூராட் அறிக்கை விரிவாகப் பேசுகிறது. தமிழ்ப் பள்ளி ஆசிரியர்களில் 27 சதவிகிதம் 'பி' கிளாஸ் தகுதி உள்ளவர்கள். ஆங்கிலப் பள்ளிகளில் இந்த 'பி' தகுதி உள்ள ஆசிரியர்கள் 1 சதவிகிதமே இருக்கின்றனர். மலாயப் பள்ளிகளில் 8 சதவிகிதம் ஆசிரியர்கள் 'பி' தகுதியுள்ளவர்கள். போதனை அனுபவத்தை பொறுத்தவரையில் தமிழ்ப் பள்ளி ஆசிரியர்கள் 58 சதவிகிதம் பேர் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவம் உள்ளவர்கள். தமிழ்ப் பள்ளி ஆசிரியர்களின் சராசரி வயது 35 என்றும் ஆண் ஆசிரியரிகளின் எண்ணிக்கை 76 சதவிகிதம் என்றும் முராட் அறிக்கை குறிப்பிடுகிறது. பள்ளிக்குச் செல்லாமல் மட்டம் போடுபவர்கள் முராட் அறிக்கையின்படி 6% மலாய் மாணவர்களும் 3% சீனப்பள்ளி மாணவர்களும் 1% ஆங்கிலப் பள்ளி மாணவர்களும் 10% தமிழ்ப்பள்ளி மாணவர்களும் ஆவார்கள்.

மாணவர்களின் அன்றாட வருகை ஒழுங்கிலும் 75 முதல் 100 சதவிகிதம் ஆஜர் உள்ள தமிழ்ப் பள்ளிகள் 17 சதவிகிதம் ஆகும். ஆங்கிலப் பள்ளிகளில் 70 சதவிகிதமும் சீனப்பள்ளிகளில் 87 சதவிகிதமும் இத்தகைய மேம்பட்ட ஆஜர் நிலை இருந்து வருகிறது. பாதிக்கு மேற்பட்ட மாணவர்கள் அடிக்கடி பள்ளிக்கு வராமல் களவடிக்கின்ற நிலையும் தமிழ்ப் பள்ளிகளில் இந்த நிலை இருப்பது ஆசிரியர்கள் சிந்திக்க வேண்டிய நிலைமையாகும். 1972இல் நடைபெற்ற 5ஆவது வகுப்பு மதிப்பீட்டுத் தேறிய மாணவர்களின் சதவிகிதம் தமிழ்ப் பள்ளிகளில் 22 சதவிகிதமும், ஆங்கிலப் பள்ளிகளில் 39 சதவிகிதம் இதிலும் தமிழ்ப் பள்ளிகள் கடைசி மட்டத்தில்தான் நிற்கின்றன.... ஆசிரியர்கள் மிக அதிகமான அளவில் வேறு பள்ளிகளுக்கு மாறிச் செல்கின்ற நிலை தமிழ்ப் பள்ளிகளிலும், மலாய்ப் பள்ளிகளிலும் இருப்பதாகவும், ஆங்கில, சீனப் பள்ளிகளில் இந்நிலை இல்லை என்றும் மூராட் அறிக்கை குறிப்பிடுகிறது. 1974ஆம் ஆண்டில் தமிழ்ப் பள்ளிகளில் 83 விழுக்காட்டினர் தேசிய மொழியில் தோல்வி கண்டனர். 55 விழுக்காட்டினர் ஆங்கில மொழியிலும், கணிதத்தில் 54 விழுக்காட்டினரும், 47 விழுக்காட்டினர் அறிவியலிலும், 54 விழுக்காட்டினர் பூகோளத்திலும் சரித்திரத்திலும் தோல்வியடைந்தனர். தமிழ்மொழிப் பாடத்தில் கூட 37 விழுக்காடு மாணவர்கள் தோல்வி கண்டுள்ளனர். மேற்படி புள்ளி விவரங்கள் உணர்த்துவது யாது? தமிழ்ப் பள்ளிகளில் கற்பிக்கப்படும் எல்லாப் பாடங்களிலுமே மாணவர்கள் அதிகமான எண்ணிக்கையில் தோல்வி கண்டுள்ளனர் என்பது தெளிவு. இந்நிலையானது தமிழ்ப் பள்ளிகளின் சீர் கேடான தன்மையை மிகத்தெளிவாகப் புலப்படுத்துகின்றது....

இந்நாட்டிலுள்ள மொத்தத் தமிழ்ப் பள்ளிகளில் 85 விழுக்காடு தமிழ்ப் பள்ளிகள் தோட்டப்புறங்களில் அமைந்துள்ளன. அப்படியென்றால் தோட்டப்புறங்களில் உள்ள குழந்தைகளே தரம் குறைந்த இநதத் தமிழ்ப் பள்ளிகளில் கல்வி கற்கின்றனர் என்றுதான் பொருள். வசதி குறைந்த தோட்டப் பாட்டாளிகள் தங்கள் குழந்தைகளைத் தமிழ்ப் பள்ளிகளுக்கு அனுப்பும்போது வசதிமிக்க நகர்ப்புறவாசிகள் தங்கள் குழந்தைகளைப் பிற மொழிப் பள்ளிகளுக்கு அனுப்பி, மேம்பட்ட கல்வி வாய்ப்பினைத் தங்கள் குழந்தைகளுக்கு வழங்குகின்றனர்.... மலேசியாவில் தமிழைத் தமிழாசிரியர்கள் வளர்ப்பதாக கூறிக் கொள்கின்றனர். அது உண்மையல்ல. தமிழ்ப் புத்தகங்களை வாங்கிப் படிக்கும் மொழி தமிழாசிரியர்கள் மிகக் குறைந்துவிட்டனர். அப்படியிருக்க இவர்கள் எப்படித் தமிழை வளர்க்க முடியும். இந்நாட்டு அரசாங்கம் தமிழை வளர்க்கிறது என்றால் அது மிகைப்படக் கூறுவதாகாது. தமிழாசிரியர்கள் உட்பட மற்றவர்கள் தமிழுக்குத் தடைக்கல்லாக இருக்காமல் இருந்தால் அதுவே பெரிய புண்ணியமாகும் ... தமிழ்ப் பள்ளிகளின் தனித்தன்மையினால் விளையும் நன்மைகள் ஏராளம். குறிப்பாக நீதிமுறைகளைத் தமிழில்தான் பிள்ளைகள் நிறைய தெரிந்து கொள்ள முடியும். ஆங்கிலத்திலே அல்லது பிறமொழிகளிலே நமது பண்பாடுகளை நிச்சயமாகத் தெரிந்து கொள்ள முடியாது. பண்பாட்டு, சமய மேம்பாட்டுக்கும் சிறப்புக்கும் கூடத் தாய்மொழிக் கல்வியே சிறந்த சாதனமாகும்...தமிழ் மக்களின் அரசியல் சக்தி, தமிழ்க் கல்விக்கு வேண்டிய மாற்றங்களைக் கொண்டு வருவதில் தீவிரமான ஈடுபாடு கொள்ளவில்லை". .

கோ.கிருஷ்ணபகவான் பாடத்திட்ட மேம்பாட்டுக்கழகம், கல்வி அமைச்சு, மலேசியா, பின் வருமாறு கருத்தை அளிக்கின்றார்.

தமிழ்மொழிக் கற்றல் கற்பித்தல் இந்நாட்டில் ஆரம்பித்த பொழுது முதல் நான்கு வகுப்புகள் என்றும், பின்னர்1920ஆம் ஆண்டுகளில்ஐந்தாம் வகுப்புவரை சென்று,1930ஆம் ஆண்டுகளில் ஆறாம் வகுப்பு வரை தொடர்ந்து, 1940ஆம் ஆண்டுகளில் ஏழாம் வகுப்பு வரை நீட்டிக்கப்பட்டது. நாடு சுதந்திரம் பெற்றதைத் தொடர்ந்து இந்நாட்டின் 800க்கும் அதிகமான தமிழ்ப்பள்ளிகளைத் தேசியக் கல்வித்திட்டத்தின் கீழ்க்கொண்டு வந்ததன் காரணத்தால் தமிழ்ப்பள்ளிகளில் தமிழ்மொழிக்கல்வி மீண்டும் ஆறாம் வகுப்புடன் முடிவடையும் சூழல்' ஏற்பட்டது. 1961ஆம் ஆண்டு கல்விச் சட்டத்தின் கீழ் அன்றைய ஆங்கில ஆரம்பப்பள்ளிகளிலும், இடைநிலைப்பள்ளிகளிலும் தமிழ்மொழி 'தாய்மொழிப் போதனை' என்ற நிலையில் போதிக்கப்பட ஆரம்பித்தது. இவ்வகை ஆரம்பப் பள்ளிகளில் மூன்றாம் வகுப்பு முதல் ஆறாம் வகுப்பு வரை வாரத்திற்கு 120 நிமிடமும், இடைநிலைப்பள்ளிகளில் புகுமுக வகுப்பு முதல் ஐந்தாம் படிவம் வரை வாரத்திற்கு 120 நிமிடமும் போதிக்கப்பட்டன.

ஆரம்பக் காலங்களில் தமிழ்மொழிக் கற்றல் கற்பித்தலின் குறிக்கோளும் நோக்கமும் மாணவர்களுக்குத் தமிழ் மொழியின் அடிப்படைத் திறன்களான வாசித்தல், எழுதுதல் ஆகிய இரு திறன்களில் ஓரளவு திறனைக் கொடுப்பதேயாகும். அக்காலங்களில் தமிழ் நாட்டிலிருந்து வருகின்ற கடிதங்களை வாசிப்பது, கடிதங்களுப் பதில் எழுதுவது, தாங்கள் செய்யும் பணித் தொடர்பான குறிப்பிட்ட செயல்களுக்குத் தேவையான மொழி அறிவைப் பெறுவது ஆகிய நோக்கங்களுக்காகவே தமிழ்மொழி போதிக்கப்பட்டது.

மலேசியா (மலாயா) சுதந்திரம் அடைவதற்கு முன்னர், குறிப்பாகப் போருக்கு முன்னர்த் தமிழ்நாடு, இலங்கை போன்ற நாடுகளிலிருந்து தருவிக்கப் பட்ட ஆசிரியர்களும் இந்நாட்டிலேயே ஓரளவு பயிற்சி பெற்ற ஆசிரியர்களும் தங்கள் கற்பித்தலை முறையாகச் செய்வதற்கு, அன்றைய பிரிட்டிஷ், இராணுவ நிருவாகத்தின் கீழ் பணியாற்றிய இந்தியப் பள்ளிகளின் கண்காணிப்பாளர் ஒரு பாடத்திட்டத்தை உருவாக்கித் தந்தார். இப்பாடத் திட்டம் தமிழ்நாட்டுப் பாடத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தாலும், தமிழ்க் கல்வி தமிழாசிரியர்களை உருவாக்குவதைக் குறிக்கோளாகக் கொண்டிருந்ததாலும் இப்பாடத்திட்டத்தில் இல்க்கண, இலக்கிய அறிவுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுத் தயாரிக்கப்பட்டது.

இப்பாடத்திட்டத்தின் வழி தமிழ்ப்பள்ளிகளில் தமிழ்மொழிப் போதனைக்கு ஒதுக்கப்பட்ட அதிகமான நேரமும் பிற பாடங்களுக்குத் தயாரிக்கப்பட்ட பாடத்திட்டத்தின் குறைவான பாடஅளவும் நேரமும் தமிழ்ப்பள்ளி வாயிலாக ஏழாம் வகுப்பு வரை தமிழ்க்கல்வி பெற்ற மாணவர்களின் தமிழ்மொழியறிவு உண்மையில் சிறப்பாகவே இருந்தது. ஆனால், இவர்கள் பெற்ற தமிழ்க்கல்வியின் பயன்பாடு தமிழாசிரியர் பணியைத் தவிர வேறு எந்தப் பணிகளுக்கும் பயன்படாத காரணத்தினால் நடுத்தரத் தமிழ்க் குடும்பங்கள் தங்கள் குழந்தைகளின் முன்னேற்றத்தைக் கருதி ஆங்கிலக் கல்வியிலே நாட்டம் செலுத்தினர். எனவே, தமிழ் மொழிக் கல்வி தோட்டத் தொழிலாளர் குழந்தைகளுக்கும் நகர்ப்புறத் தொழிலாளர் குழந்தைகளுக்கும் உரிய கல்வியாக விளங்கியது.

ரசாக் கல்வித்திட்டம்(1956) என்ற தேசியக் கல்வித்திட்டத்தில் நாட்டில் உள்ள எல்லா ஆரம்பப் பள்ளிகளுக்கும் ஒரே பாடத்திட்டம் அமலாக்கம் காணப்பட்டது. இப்பாடத் திட்டமே கடந்த 1982ஆம் ஆண்டு வரை இந்நாட்டில் அமலில் இருந்த பாடத்திட்டமாகும். இப்பாடத்திட்டம் ஆரம்பப் பள்ளிகளில் முதல் வகுப்பிலிருந்து ஆறாம் வகுப்பு வரை, வாசிப்பு வாய்மொழித்தமிழ், கையெழுத்தும் எழுதுதலும், செய்யுள், இலக்கணம் என்ற ஐந்து தலைப்புகளில் ஒவ்வொரு வகுப்பிற்கான பாடத்திட்ட வரையுடன் தயாரிக்கப்பட்டிருந்தது. இக் காலங்களில் தமிழ்ப்பள்ளி மாணவர்கள் தமிழ்மொழிப் பயிற்சியைத் தமிழ்மொழிப் பாடத்தில் மட்டுமல்லாது அங்குப் போதிக்கும் பிற பாடங்கள் வழியாகவும் பெற்று வருகின்றனர். இக்காலக் கட்டத்தில் தேசியப் பள்ளிகளிலும், தேசிய ஆரம்பப் பள்ளிகளிலும் (முன்னால் ஆங்கில மொழிப் பள்ளிகள்) தமிழ் மொழி மூன்றாம் வகுப்பிலிருந்து ஆறாம் வகுப்பு வரை வாரம் 120 நிமிடம் போதிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட போதிலும் இதற்கான தனியான பாடத்திட்டம் ஒன்றும் திட்டமிடப்படவில்லை.

இந்நாட்டின் கற்றல் கற்பித்தலைச் சீரமைப்புச் செய்யும் நோக்கத்தில் 1982 (1983) முதல் ஆரம்பப் பள்ளிகளுக்கான புதிய பாடத் திட்டம் அமலாக்கம் செய்யப்பட்டது. இப்புதிய பாடத்திட்ட அமலாக்கத்தில் மாணவர்களின் அடிப்படைத் திறன்களாகிய வாசித்தல், எழுதுதல், கணக்கிடுதல் ஆகிய முத்திறன்களிலும் நல்ல பயிற்சியைப் பெறுவதில் முக்கியக் கவனம் செலுத்தப்படுகிறது.

இப்பாடத் திட்டத்தின் வழி தமிழ்மொழியில் ஓர் ஆரம்பப்பணியில் பயிலும் மாணவன் கீழ்க்கண்ட இறுதிக் குறியிலக்குகளை அடைகிறான்.

1. அன்றாட வாழ்வில் பள்ளியிலோ, வெளியிலோ பேச்சையும் ஒலிப்பரப்பையும் செவிமடுத்தலும் புரிந்து கொள்ளுதலும்.

2. நண்பர்கள். ஆசிரியர்கள், பெற்றோர்கள், மற்றவர்கள் ஆகியோருடன் பேசும் பொழுதும், விவாதம், சொற்போர் போன்றவற்றில் பங்குபெறும் போதும் பொருத்தமான முறையில் தங்கள் கருத்துக்களை வெளியிடுதல்.

3. மாணவர்கள் தங்கள் பக்குவ நிலைக்கு ஏற்பப் பொருத்தமான நூல்களை உரக்கவும், மௌனமாகவும் வாசித்துக் கிரகிக்கும் ஆற்றலை வளர்க்கச் செய்தல், மேலும் அறிவு வளர்ச்சிக்கும் மனவளர்ச்சிக்கும் துணை புரியும் வண்ணம் வாசிப்புப் பழக்கத்தை வளர்த்தல்.

4. தலைப்புக்கேற்றவாறு கட்டுரை, கடிதம் எழுதுதல், தேவையான பாரங்களைப் பூர்த்தி செய்யத் தெரிந்திருத்தல்.

5. பலவித சூழ்நிலைகளின் பொருத்தமான மொழியைப் பயன்படுத்தத் தெரிந்திருப்பதோடு, மனிதன் அவன் சார்ந்திருக்கும் சுற்றுப்புறச் சூழலைப்பற்றியும் அறிந்திருத்தல்.

6. அறிவையும் அனுபவத்தையும் வளர்த்துக் கொள்ள மொழியை ஒரு சாதனமாகப் பயன்படுத்துதல்

7. உரைநடைப் பகுதி, கட்டுரை, கவிதை போன்றவற்றினை சுவைக்கும் தன்மையை வளர்த்தல்.

ஆரம்பப் பள்ளியில் போதனாமொழி நிலையைப் பெற்றிருந்த தாய்மொழி இடைநிலைப்பள்ளிகளில் ஒரு பாடமாக வாரத்திற்கு 3 பாட வேளைகள் வீதம் பயிற்றுவிக்கப் படவிருக்கிறது.

இப்பாடத்திட்டம் மாணவர்கள் ஆரம்பப் பள்ளியில் பெற்ற தமிழ்மொழி அறிவை வளர்ப்பதோடு தமிழ் இலக்கியங்களை அறிந்து சுவைக்கவும் வழி செய்கின்றது. மேலும் நற்பண்புக் கூறுகளைப் பெறுவதோடு நாட்டின் பால் விசுவாசத்தை வளர்த்துக் கொள்ளவும் துணை செய்கிறது. இடைநிலைப் பள்ளி இறுதியில் கீழ்க்கண்ட நோக்குகளை அடைவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

1. அன்றாட வாழ்வில் இடம் பெறும் பல்வகைப் பேச்சு மற்றும் ஒலி, ஒளி பரப்புகள் முதலியவற்றைக் கேட்டுப் புரிந்து கொள்ளுதல்.

2. பல்வகைச் சூழலில் சரளமாகப் பேசுவதோடு கருத்துக்களைத் தர்க்க ரீதியாகவும் பகுத்தாராய்ந்தும் கூறுதல்.

3. மாணவர்களின் முதிர்ச்சிக்கேற்ப பல்வேறு வாசிப்புப் பகுதிகளை உரக்கவும், மௌனமாகவும், விரைவாகவும், திறமையாகவும் வாசித்துப் புரிந்து கொள்வர்.

4. அறிவு வளர்ச்சிக்கும் மனமகிழ்வுக்கும் வாசிக்கும் பழக்கத்தை உருவாக்குதல்.

5. பல்வகை எழுத்துப் படிவங்களைப் படைத்தல்.

6. உரைநடை, கவிதை வடிவிலான பல்வகை இலக்கியங்களைப் புரிந்து அவற்றில் காணும் மொழிநயத்தையும், மனித சமுதாயப் பண்பாட்டுக் கூறுகளையும் அறிதல்.

இந்நாட்டில் ஆரம்பக் காலங்களில் தமிழ்மொழி கற்றல் கற்பித்தலுக்காகப் பயன்படுத்தப் பட்ட பாடநூல்கள் யாவும் தமிழ்நாடு அல்லது இலங்கையிலிருந்து தருவிக்கப் பட்டவையாகும். இரண்டாவது போருக்குப் பின்னரே இந்நாட்டுப் பின்னணியில் பாடநூல்கள் எழுதப்பட்டன. இந்நூல்கள் இங்கு எழுதப்பட்டாலும் தமிழ்நாட்டில் தாக்கம் முழுமையாகத் தவிர்க்கப் பட்டதாகக் கொள்ள முடியாது. பாடநூல்களின் அமைப்பு முறை அவற்றின் உள்ளடக்கம் பெரும்பாலும் தமிழ்நாட்டு நூல்களைப் போன்றே இருந்தன. பெரும்பாலான நூல்கள் வாசிப்புத்திறனை மையமாகக் கொண்டு தயாரிக்கப் பட்ட நூல்களாகவே இருந்தன. கருத்துணர் பயிற்சிகளும் சில இலக்கணப் பயிற்சிகளும் மட்டுமே இந்நூல்களில் இடம் பெற்றிருந்தன. மற்ற மொழித் திறன்களுக்குப் பயிற்சியும் அனுபவமும் கொடுக்கக் கூடிய கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளோ பயிற்சிகளோ இந்நூல்களில் இடம் பெறவில்லை. பிறமொழிப் பாடநூல்களில் ஏற்பட்ட வளர்ச்சியும் புதுமைகளும் இப் பாட நூல்களில் பார்ப்பது அரிதாகவே இருந்தன. இதனால் பாடநூல்கள் மாணவர்களின் ஆக்க கரமான கற்றலுக்கும் ஆசிரியரின் கவர்ச்சியான கற்பித்தலுக்கும் துணை செய்தன எனக் கூறமுடியாது.

ஆரம்பப் பள்ளிகளுக்கான புதிய பாடத்திட்டத்தின் அறிமுகத்தோடு இந்த நாட்டுத் தமிழ்மொழிக்கான பாடநூல்களில் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டன. இப்பாடநூல்களைக் கல்வி அமைச்சின் வழிகாட்டலோடு உள்ளூர்ப் புத்தக வெளியீட்டாளர்கள் கற்றல் கற்பித்தலில் உள்ள நவீன முறைகளையும் உத்திகளையும் பயன்படுத்தி, மாணவர்கள் விரும்பி பயன்படுத்தும் வகையில் பல்வகைக்கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளையும் பயிற்சிகளையும் பாடத்திட்டத்தில் கொடுக்கப்பட்ட எல்லாவகைத் திறன்களுக்கும் பொருத்தமானவைகளாக வெளியிட்டுள்ளனர்.

இந்நாட்டின் தமிழ்க்கல்வி வரலாற்றில் தமிழாசிரியர்களுக்கான ஆசிரியர்ப் பயிற்சியானது இரண்டாவது உலகப் போருக்குச் சற்று முன்னர் ஆரம்பிக்கப்பட்டு, போர்க்காரணத்தால் சிறிது இடைவெளி விட்டு மீண்டும் போருக்குப் பின் ஆரம்பிக்கப் பட்டது. 1950ஆம் ஆண்டுகளில் கேதா, பினாங்கு, பேராக், செலங்கர், நெகிரி செம்பிலான், ஜோஹூர் போன்ற மாநிலங்களில் தமிழ்ப்பள்ளிகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்த காரணத்தினால் தமிழாசிரியர்களுக்கான போதனாமுறைப் பயிற்சி கொடுக்கப்பட்டது. 1960க்குப் பின்னர் தமிழ்ப் பள்ளிகளின் எண்ணிக்கையும் தமிழ்ப்பள்ளி மாணவர்களின் எண்ணிக்கையும் குறைந்த காரணத்தினால் தமிழாசிரியர்களுக்கான ஆசிரியர்ப் பயிற்சி மையம் ஒன்றாக குறைந்தது. ஆனால் 1980ஆம் ஆண்டிற்குப் பின்னர் தமிழ் மக்களிடையே ஏற்பட்ட ஒரு வகை உந்துதல் தமிழ்ப் பள்ளிகளின் மாணவர் எண்ணிக்கை உயர்ந்து அதன் வழி மூன்று ஆசிரியர்ப் பயிற்சிக் கல்லூரிகளில் இன்று தமிழாசியர்களுக்கான பயிற்சி நடைபெற்று வருகிறது. இவ்வாண்டு முதல் (1987)இடைநிலைப் பள்ளிகளுக்கான

தமிழாசிரியர்ப் பயிற்சியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (கோ. கிருஷ்ணபகவான், பாடத்திட்ட மேம்பாட்டுக் கழகம், கல்வி அமைச்சு, மலேசியா)

செய்திப் பரவல் தொடர்புச் சாதனங்கள்

மலேசியாவில் தமிழ்ப் பத்திரிக்கைகளின் வரலாறு ஒரு நூற்றாண்டு காலத்திற்கும் மேற்பட்டதாகும். பினாங்கிலிருந்து 1978ஆம் ஆண்டு தங்கைநேசன் என்னும் மாதமிரு முறை இதழ் வெளிவந்துள்ளது. தமிழன் (1933), தேசநேசன் (1933), தேசாபிமானி (1937), ஜெயமணி (1941) சுதந்திர இந்தியா (1942), ஜனநாயகம் (1946), தேசபக்தன் (1954), மலைநாடு (1958), தேசதூதன் (1962), ஆகிய நாளிதழ்களும், இந்திய மித்திரன் (1929), மலாய் நாடு (1930), முன்னேற்றம் (1931), ஜனவர்த்தமானி (1934) பாரத மித்திரன் (1934), சுதந்திரோதயம் (1942), சிறம்பான் செய்தி (1942), யுவபாரதம் (1942), புது உலகம் (1943), சேவிகா (1945), மலாயா வர்த்தமானி (1946), ஜனோபகாரி (1948), மலைமகள் (1956) முதலிய வார இதழ்களும், சீர்திருத்தம் (1935), தமிழ்க்கொடி (1939), நவயுகம் (1946), தமிழ்ச்சுடர் (1948), சோலை (1951), நாகரீகம் (1952), சிந்தனை (1955), தமிழ்க்குயில் (1956), திருமுகம் (1955), மாதவி (1959), நவரசம் (1958), பொன்னி (1966), முதலிய திங்கள் இதழ்களும் மலேசிய கண்டத்தில் குறிப்பிடத்தக்கவை. சமீப காலத்தில் மக்களிடையே மிகுதியான ஆதரவு பெற்ற இதழ் தமிழ்முரசு ஆகும். தொடர்ந்து வரும் நாளேடுகளின் விவரங்கள்:

1. தமிழ்நேசன், 37 jalan Ampang, POB 299, Kuala Lumpur 01-017, tel 283577, f.1924, morning, edition, V. Vivekananthan, Cir 28, 000 (daily) 50,000(Sunday)

2. தமிழ் ஓசை, 19 Jalan Murai Dua, Batu complex, 3rd Mile Jalan Ipoh Kuala Lumur, tel. 671644; Editor -in -chief Athi Kumanan; Cir 16,000 (daily), 30,000 (sunday).

3. தமிழ்தினமணி, 9 Jalan Murai Dua, Batu Complex, Jalan Ipoh, Kuala Lumpur. tel. 66719, Editor S. Nachiappan, cir 18,000 (daily) 45,000 (sunday), இவற்றுடன் சங்கமணி, வானம்பாடி ஆகிய வார ஏடுகளும், உதயம், புதிய சமுதாயம் என்னும் திங்கள் இதழ்களும் வெளிவந்து கொண்டுள்ளன.

60 ஆண்டுகளுக்கு மேல் தமிழ்ப் பத்திரிக்கைகள் மலேசியாவில் வெளிவந்துக்கொண்டிருக்கின்றன. மலேசியா இந்தியர்களின் சமூக அரசியல் முன்னேற்றத்திற்காக சிறப்பான சேவையும் செய்திருக்கின்றன. ஆனால் நகர மயமாக்கப்படும் சூழ்நிலை உருவாகியபிறகு இப்பத்திரிக்கைகளை விரும்பப்படிப்பவர்கள எண்ணிக்கையில் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. இந்திய நடுத்தர வகுப்பினர் அன்றாட தினசரி வாழ்க்கையில் தமிழ் மொழியை குறைவாகவே பயன்படுத்துகின்றனர், பதிலாக வீட்டிலும், வெளியிலும் ஆங்கில மொழியையே மிகுதியாகப் பயன்படுத்துகின்றனர்.

மலேசியா நாட்டைச் சேர்ந்த ஆர் கார்த்திகேசு, வி. சந்திரசேகர் இக்காரணங்களால் பின்வரும் சூழ்நிலை உருவாகியிருக்கிறது என ஊகிக்கலாம் எனக் கூறுகின்றார்கள். அவர்கள் பினாங்கு, கேதா முதலிய இடங்களில் ஆய்வு செய்து பின்வரும் முடிவுக்கு வருகின்றார்கள்.

1. இந்திய நடுத்தர வகுப்பினர்கள் தமிழ்ப் பத்திரிகைகளைப் பொருட்படுத்தாமல் புறக்கணிக்கிறார்கள். அவர்களுடைய சமூக-அரசியல் நோக்கங்களுக்கு இப்பத்திரிக்கைகள் முக்கியத்துவம் அளிப்பதில்லை.

2. மேல்நோக்கி உயர்நிலையில் செல்லச்செல்ல, தமிழ்ப் பத்திரிக்கைகளைப் பயன்படுத்துவோர் எண்ணிக்கை குறைகிறது.

3. தாழ்படியிலுள்ளவர்கள், குறைவான ஊதியம், குறைவான படிப்பு உள்ளவர்கள்,மலேசிய குடிமகன்களாகத் தற்காலிகமாக வாழும் இந்தியர்கள் — முதலியவர்கள்தான் தமிழ்ப்பத்திரிக்கைகளை மிகுதியாக வாங்கிப்படிக்கிறார்கள்.

மலாய்ப் படைப்பிலக்கியங்களில் தமிழ்ப் பாத்திரப்படைப்புகள்.

முதலாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே மலாய் இலக்கிய உலகம் இந்திய இலக்கியத்தின் தாக்கத்தினைப் பெற்றிருந்தது. பின்னர் சோழப் பேரரசு பதினோராம் நூற்றாண்டில் இப்பகுதியினைத் தனது ஆட்சிக்குட்படுத்தியபோது மலாய் இலக்கியங்களில் சமஸ்கிருதத்தின் செல்வாக்கு குறைந்து தமிழின் செல்வாக்கு மேலாங்கியது. இந்நிலை மலாக்கா சுல்தான்களின் ஆட்சி வரை தொடர்ந்தது. இக்காலக்கட்டத்தில்த் தோன்றிய இருமலாய்க் காவியங்களான 'செஜாரா மலாயு' (மலாய்க்காரர்களின் வரலாறு) மற்றும் 'ஹிக்காயாட் ஹங்துவா', (ஹங்துவாவின் சரிதை) ஆகியவை தமிழ்ப் பாத்திரங்களைக் கொண்டிருக்கின்றன. இவ்விரு காவியங்களில் இடம் பெற்றிருக்கும் பாத்திரங்கள் முறையே 'கித்தூல்' மற்றும் 'பாத்தே கெர்மாவிஜயா' என்பதாகும், இவ்விரு கதை மாந்தர்கள் நயவஞ்சகத்துடன் மலாய்க்காரர்களுக்கு எதிராகச் செய்ல் படுவதாகச் சித்தரிக்கப்பட்டுள்ளனர்.

நவீன மலாய் இலக்கியம், முன்ஷி அப்துல்லா என்ற தமிழரின் படைப்புக்களிலிருந்தே நிர்ணயிக்கப்படுகின்றது. மேலும் 1876 இல் தோன்றிய முதல் மலாய்ப் பத்திரிகையான'ஜாவி பெரானாக்கானை'த் தொடங்கியதும்முன்ஷிமுகம்மட் சயிட் பின் பாபா மொயிடின் என்ற தமிழர்தான். ஆனால் 1930இல் பிற்பகுதியிலும், 1940களிலும் வெளிவந்த நாவல் மற்றும் சிறுகதைகளில் படைக்கப்பட்ட தமிழ்ப்பாத்திரங்கள் மலாய்க்காரர்களுக்கு எதிராகச் செயல்பட்டு அவர்களது உரிமைகளைப் பறிப்பவர்களாகச் சித்தரிக்கப்பட்டனர். அப்துல் ரஹிம் காஜாய், இஷாக் ஹஜி முகமட் போன்ற மலாய் இலக்கியவாதிகள் தமிழ் முசுலிம்களை 'டாராகெத்துருனாதன் கெல்லிங்-டிகேகே' (தமிழ் இரத்தத்தின் பரம்பரைகள்) என்ற வார்த்தைகளைப் பயன்படுத்திக் குறிப்பிட்டனர்.

இந்நிலை, ஐம்பதுகளில் மாற்றம் கண்டதும் 'அசாஸ்லிமா புளோ' (இயக்கம் ஐம்பது) என்ற இயக்கம் 'கலை சமுதாயத்திற்காக' என்ற கொள்கையுடன் இக்காலக் கட்டத்தில் தோன்றி, சாதாரண மக்களைப் பாத்திரமாக கொண்டு இலக்கியம் படைக்க ஊக்கமளித்தது. இதனால் சாதாரண வர்க்கத்தைச் சேர்ந்த தமிழர்களும் சிறுகதைகளில் கதை மாந்தர்களாகப் படைக்கப்பட்டனர். மேலும் ஆங்கிலேய ஆதிக்கத்தை எதிர்க்கும் மலாய்ப் பாத்திரங்களுடன் இணைந்து செயல்படும் தமிழ்ப் பாத்திரங்களையும் படைத்தனர். பின்னர் அறுபதுகள், எழுபதுகள், எண்பதுகளில் மருத்துவர்கள்,

வழக்கறிஞர்கள், தொழிலதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் சாதாரண உடல் உழைப்புத் தொழிலாளர்கள் என்று பல்வேறு பாத்திரங்களைச் சிறுசிறு பாத்திரங்களாகப் படைத்திருப்பதைக் காண முடிகின்றது.

எனினும், தமிழ்ப் படைப்பிலக்கியங்களில் முழுமையாக மலாய். சீன பாத்திரங்கள் படைக்கப்பட்டிருப்பது போல. மலாய்ப் படைப்பிலக்கியங்களில் தமிழ்ப் பாத்திரம் முழுமையாகப் படைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எம் கிருஷ்ணன், மலேசியா)

விடுதலைக்கு முந்திய மலேசியத் தமிழ் நாவல்கள்

மலேசிய நாட்டில் இலக்கிய வளர்ச்சி 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் தொடங்குகிறது. 1876 இல் சிங்கைவர்த்தமானி என்ற இதழும் 1887 இல் சி.ந சதாசிவப்பண்டிதரின் வண்ணை அந்தாதியும் முறையே பத்திரிக்கை கவிதைத் துறைகளைத் தொடங்கி வைத்துள்ளன. சதாசிவப்பண்டிதர் இயற்றிய பிறநூல்கள் வண்ணையந்தாதி, வண்ணை நருஞ்சல், சிங்கை நகரந்தாதி, சித்திர கவிகள் ஆகியவை இங்கு வெளியான முதல் நூல்களாக காணக்கிடக்கின்றன. 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில்தான் நாவல், சிறுகதை, நாடகத்துறைகள் மலேசிய இலக்கியப் பூங்காவில் மலரத்தொடங்கின. வெங்கடரத்தினம், சி. வே. சின்னையா, ஆர். இராமநாதன் ஆகியோர் முறையே மலேசியாவின் நாவல், சிறுகதை, நாடகத்துறைகளின் முன்னோடிகளாக விளங்குகின்றனர்.

மலேசிய விடுதலைக்கு நாற்பதாண்டுகளுக்கு முன்னரே மலேசியத் தமிழ் நாவல்துறை வளர்ச்சி பெறத் தொடங்கியுள்ளது. 1917 ஆம் ஆண்டில் வெங்கடரத்தினம் என்பார் எழுதிய கருணாகரன் அல்லது காதலின் மாட்சி என்னும் நாவலே மலேசியாவின் முதன்முதலாக வெளிவந்த தமிழ்நாவல்.

1917-1957 என்ற இந்த நாற்பதாண்டுக் காலத்தில் மலேசியத் தமிழ் நாவல் வரலாற்றில் இருபெரும் கால இடைவெளிகள் நிகழ்ந்துள்ளன. 1918 முதல் 193. வரையுள்ள காலம் முதலாம் இடைவெளி, 1938 முதல் 1957 வரையுள்ள காலம் இரண்டாம் இடைவெளி. இந்த இரு இடைவெளிகளுக்கும் உரிய அடிப்படைக் காரணம் முதலாம் இரண்டாம் உலகப் போர்களின் தாக்கம் எனலாம். வேறு சில காரணங்களும் உள.

இந்த இடைவெளிகளையொட்டி விடுதலைக்கு முந்திய மலேசியத் தமிழ் நாவலின் காலகட்டத்தை 1917 முதல் 1918 வரையுள்ள காலம், 1931 முதல் 1938 வரையுள்ள காலம் என இரு பகுதிகளாகப் பிரிக்கலாம். முதலாவது காலப் பகுதியில் இரண்டு நாவல்களும் இரண்டாம் காலப் பகுதியில் எட்டு நாவல்களும் இங்கு தோன்றியுள்ளன. இந்நாவல்களில் ஐந்து இன்று கிடைக்கப் பெறாதவை. எஞ்சிய ஐந்தில் இரண்டு துப்பறியும் நாவல்கள் மூன்று சமூக நாவல்கள் உள.

இந்நாவல்களின் பெயர்கள் பெரும்பாலும் இரட்டைப் பெயரமைப் பெற்றுள்ளன. தமிழகச் சூழலையொட்டிய தாக்கத்தின் காரணமாகத் துப்பறியு

நாவல்களே தொடக்கத்தில் செல்வாக்கு பெற்றுள்ளன. இந்நூல்களை எழுதிய ஆசிரியர்கள் பெரும்பாலும் இலங்கையையும் தமிழகத்தையும் சேர்ந்தவர்கள். எனவே, நாவல்களில் களம், கருப்பொருள் ஆகியவற்றில் இலங்கை மற்றும் தமிழ் நாட்டின் மணமே விடுதலைக்கு முந்திய மலேசியத் தமிழ் நாவல்களில் நிறைந்துள்ளது

தொடக்க கால மலேசிய நாவலாசிரியர்கள் நீதி கூறுதல் என்ற நோக்கத்திற்காகவே தம் நாவல்களை எழுதியுள்ளனர். சமுதாய சீர்திருத்தம் சில நாவல்களில் ஊடுருவியுள்ளது. உழைப்பின் மேன்மை, சாதிக் கொடுமை, வரதட்சணைப் பழக்கம், பெண் கல்வி முதலியனவும் இந்நாவல்களில் விளக்கப்பட்டுள்ளன. மலேசிய நாட்டின் வரலாற்றுச் செய்திகள் சிலவும் சில நாவல்களில் அறியப்படுகின்றன.

இம்முறையில் விடுதலைக்கு முந்திய மலேசியத் தமிழ் நாவல்கள், குறிப்பிட்ட காலக்கட்டத்தில் மலேசியச் சமுதாய வாழ்வியல் துறைகளை விளக்கும் காலக் கண்ணாடிகளாக விளங்குகின்றன. , (ந. வி. செயராமன், மலேசியா)

மலேசியத் தமிழ்க் கவிதைகளில் தோட்டப்புறச் சமுதாயம்

சிங்கை மலேசியத் தமிழ்க் கவிதைகளின் தொடக்கமாக 1887ஆம் ஆண்டில் சிங்கையில் வெளிவந்த வண்ணையந்தாதி, வண்ணை நகரூஞ்சல், சிங்கை நகரந்தாதி, சித்திரக்கவிகள் ஆகிய நூல்களைக் கருதலாம். சமயத்தைக் கருப் பொருளாகக்கொண்டு இந்நூல்கள் எழுந்தன. பின்னாளில் மலேசியாவில் நடந்த கொள்ளை, வெள்ளம் போன்ற தனி நிகழ்ச்சிகளும் கவிதையேறின. தொடர்ந்து மொழி, தத்துவம், சமூகச் சீர்திருத்தம் பற்றியும் பாடப்பட்டன.

பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கம் முதல் மலேசியாவில் வந்தேறிய தமிழர்கள் பிழைப்பு நாடி வந்தவர்களே, கரும்பு, காப்பி, இரப்பர்த் தோட்டங்களில் பொருள் தேடும் நோக்கோடு வந்து பொருள் தேடாது சீர்குலைந்த வாழ்க்கையே தோட்டப்புறத் தமிழர்களின் வாழ்க்கையாகும். தோட்டப்புறம் பாட்டுக்குள் வந்தது நாட்டின் விடுதலைக்குப் பின்னே தெளிவாகத் தெரிகின்றது.

எவ்வளவு கடுமையாக உழைத்தாலும் ஏழ்மை தீராத நிலை ஏக்கத்தின் பிரதிபலிப்பு, அதையொட்டிய வாழ்க்கைப் பிரச்சனைகள் கவிதைகளில் தோற்றம் காட்டுகிறன.

உழைப்பிற்கேற்ற ஊதியமும் வாழ்க்கை வசதிகளும் தரப்படவில்லை. உழைப்பின் பயன் வலியோரால் சுரண்டப்படுகின்றது. ஏழ்மை, ஏமாற்றம், இவற்றிலிருந்து விடுபடக் குடிப்பழக்கம் கூடவே எழுகின்றது. குடிப்பழக்கத்தால் சீரழியும் குடும்பங்களின் கதைகள் கவிதைகளாகின்றன. ஏழ்மை ஒரு பக்கம் இருந்தாலும் ஈட்டிய பொருளை வீணழிக்கும் தொழிலாளர் போக்கும் கவிதைக் கண்ணாடியில் பதிந்துள்ளதைக் காணலாம்.

நாட்டின் விடுதலைக்குப் பின் வெளிநாட்டு ஐரோப்பிய முதலாளிகளிடமிருந்து பெருந்தோட்டங்கள் உள்நாட்டுச் சிறு முதலாளிகளின் கைகளுக்கு மாறும்படியான அரசியல் சூழ்நிலைகள் ஏற்பட்டபோது தோட்டங்கள் துண்டாடப்பட்டன. பெருந்

தோட்டங்கள் துண்டானபோது அங்கு வாழ்ந்து கொண்டிருந்த பெருங்கூட்டமும் துண்டாகிச் சிதறியோடியது.

தோட்டப் பாட்டாளிகளின் துயர் துடைக்க விலைபோகும் தோட்டங்கள் வாங்கப்பட வேண்டும். 'மாதமொரு பத்து வெள்ளி' என்னும் சிறு முதலீட்டால் தேசிய நிலநிதிக் கூட்டுறவுச் சங்கம் தோன்றி தோட்டங்களை வாங்கியது. இச்செய்திகள் கவிஞர்களுக்குக் கருப்பொருளாயின. கூட்டுறவுக் கவியரங்குகள் மாநிலங்கள் தோறும் கூட்டப்பட்டு மாநில, தேசிய நிலைகளில் கவிஞர்களுக்குப் பரிசும் தரப்பட்டது. (நாகப்பன் ஆறுமுகம், மலேசியா)

மலேசியாவில் தமிழ் மேடை நாடகங்கள் ஒரு கண்ணோட்டம்

தோற்றம்

சென்ற 19-ஆம் நூற்றாண்டில் தமிழ் நாட்டில் இருந்து மலாயா வந்த தமிழர்கள் இங்கேயே தங்கினர். வந்தவர்கள் தங்களுக்கான அடிப்படை வசதிகளை அமைத்துக் கொண்டதும் அவர்கள் தங்களது கலைகளையும் வளர்த்துக் கொள்ளத் தொடங்கினர். இக்கலைகள் வளர்வதற்குக் கோயில்களும், அவற்றை ஒட்டிய திருவிழாக்களும் உறுதுணையாகின்றன. கதாகாலட்சேபத்தில் தொடங்கி, தெருக்கூத்தாக உருமாறி, பாவைக்கூத்தாக (பொம்மலாட்டம்) வடிவம் பெற்று, பின்னர் தாம் நாடகங்கள வந்தன. தோட்டப்புறங்களில் 1870-ஆம் ஆண்டுகளில் எல்லாம் நாடகங்கள் வந்துவிட்டன. அவை பொதுவாகப் புராண நாடகங்களாகவே இருந்துவிட்டன. தோட்டப்புறங்களில் நாடகங்கள் நல்ல வரவேற்பைப் பெற்ற போதிலும்கூட,அவை தரமானவை என்று சொல்வதற்கில்லை. தரமான, முழுமையான நாடக வடிவம் நகர்ப்புறங்களில்தான் இருந்துள்ளன. நகர்ப்புறங்களில் நாடகங்கள் என்றால், அவை தமிழ் நாட்டின் இறக்குமதியாகவே இருந்தன. 1910-ஆம் ஆண்டு தொடங்கி, தமிழ் நாட்டில் இருந்து நாடகக் குழுக்கள் இங்கு வந்தன. அந்தக் கலைஞர்களில் பலர் திரும்பினாலும், சிலர் இங்கேயே தங்கி நாடகங்களை வளர்த்தனர். தமிழ் நாட்டில் இருந்து வந்த நாடகக் குழுக்களின் தாக்கமாக 1927-ஆம் ஆண்டு தொடங்கி நகர்ப்புறங்களில் மலேசியத் தமிழர்களின் சொந்த முயற்சிகளும் முளைத்தன.

தொடக்ககால நாடகங்கள்

1920-ஆம் ஆண்டுகளில் நாடக அரங்குகளைச் சீனர்களிடமிருந்து தமிழர்கள் வாடகை எடுத்தனர். நுழைவுச்சீட்டுகள் மிகவும் குறைந்த விலையில் இருந்தன. தீப்பந்தங்களைக் கொண்டு ஒளி வழங்கப்பட்டது. மின்சார வசதி இல்லாததால் உரக்கப்பேசி, நடிக்கும் நிலை இருந்தது. புராணக் கதைகளே பெரும்பாலும் நாடகங்களாகப் இருந்தன. தோட்ட மக்கள் தங்கள் வேலைகளையும் விட்டுவிட்டு ஒரே நாடகத்தைப் பல நாள்கள் பட்டினி கிடந்து பார்க்கும் அளவுக்கு ஆதரவு இருந்தது. நாடகங்களும் விடியவிடிய நடந்ததால் ஒரே பாத்திரத்தில் இருவர் நடித்தனர். காந்தியின் கொள்கைகளை நாடகத்தில் புகட்டக்கூடாது என்று கட்டுப்பாடு இருந்தது. நாடக வசனங்கள் உரை நடையும், செய்யுளும் சரிபாதி கலந்து இருந்தது. (அ. மணிசேகரன், மலேசியா)

1960 வரை வெளியான இலக்கியப் படைப்புகளையும் பத்திரிக்கை களையும் பற்றிய குறிப்புகளைத் தொகுத்து தமிழ் மலேசியானா என்னும் பெயரில் டாக்டர் இராம். சுப்பையா ஒரு நூலாக வெளியிட்டுள்ளார். தற்போது இலக்கியப் படைப்புக்களே அன்றி, திறனாய்வு முயற்சிகளும் பெருகத் தொடங்கியுள்ளன. இன்று மலேசியாவில் 300க்கு மேல் தமிழ் எழுத்தாளர்கள் இருக்கின்றார்கள். மலாய் மொழியில் திருக்குறள் மொழி பெயர்க்கப்பட்டு வெளிவந்துள்ளது. 1967இல் சீனமொழியில் திருக்குறள் மொழி பெயர்க்கப்பட்டு மலேயாப் பல்கலைக்கழக இந்தியத்துறையால் நாட்டுக் கோட்டைச் செட்டிமார் பொருள் உதவியுடன் வெளியிடப்பட்டுள்ளது..

மலேயா பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரவை ஆண்டுதோறும் தமிழ் ஒளி எனும் இதழை வெளியிடுகின்றது. 1972-73 தமிழ் ஒளி இதழை மலேசியத் தமிழ் இலக்கிய மலராகத் தமிழ்ப் பேரவை கொண்டுவந்துள்ளது.

முதல் உலகத் தமிழ் மாநாட்டைக் கூட்டி சிறப்பாக நடத்திய பெருமையும் மலேசியாவிற்கு உண்டு. 1987 நவம்பர் திங்களில் ஆறாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை நடத்திய பெருமையும் இதற்கு உண்டு.

மலேசியாவில் ஏறத்தாழ 600 தமிழர் சங்கங்கள் உள்ளன என ஒரு மலேசிய தமிழர் கூறுகின்றார். அவற்றிலே சாதிச் சங்கங்களும், ஊர்ச் சங்கங்களும், சமயச் சங்கங்களும், இலக்கியச் சங்கங்களும் உள்ளன.

வானொலி

1946-இல் கோலாலம்பூரில் அமைக்கப்பட்ட மலேசியா வானொலி தரமான தமிழ் நிகழ்ச்சிகளைத் தமிழருக்கு அளித்து வருகிறது. தினம் தமிழ் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பபடுகின்றன. மலேசியத் தொலைக் காட்சி வியாழக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை ஆகிய நாட்களில் தமிழ் இந்திப் படங்களைத் திரையிட்டு வந்தது. மலேசியத் தமிழ் தொலைக்காட்சியை இந்தோனேசியாவில் உள்ள மேடான் தமிழர்கள் ஆவலோடு பார்க்கின்றனர்.

சிங்கப்பூர்

'இந்தியாவின் சிட்னி' என்ற அழைக்கப்படும் சிங்கப்பூரைப் பற்றிக் கேள்வி படாத தமிழர்களே இலர் என்று கூறலாம். தமிழகத்தின் தென்கிழக்கே 1500 மைல் தொலைவில் உள்ள சிங்கப்பூருக்கும் தமிழ்நாட்டுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பது இதற்கு ஓர் சிறப்புக்காரணம் ஆகும். தென்கிழக்காசியாவில் உள்ள சிங்கப்பூர் ஒரு சிறிய தீவு, குறுக்கும் நெடுக்கும் 22.5, 41.8 கி. மீ. தொலைவே உடையது. 54 அண்டைத் தீவுத் திட்டுக்கள் அடங்கிய சிங்கப்பூர் 618.1 சதுரக் கிலோ மீட்டர் பரப்பளவை உடையதாகும். வெப்பமுள்ள, ஈரக்கசிவுள்ள இவ்வழகான சிறிய தீவில் பல தோட்டங்களும், பண்ணைகளும், தகரம் உருக்கி பிரித்தெடுத்தல், ரப்பர் (துடைப்பான்) பதனஞ்செய்தல், பழவகைகளைத் தகர அடைப்புகளில் அடைக்கும் தொழிலில் ஈடுபடுதல், அரைப்பு இயந்திரத் தொழிலில் ஈடுபடுதல் போன்ற பல்வேறு தொழிற்சாலைகளும் இருக்கின்றன. இந்நகரம் ஓர் துறைமுக நகரமாகும். இரப்பர், தகரம், கொப்பரைத்தேங்காய் முதலிய பண்டங்கள் இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இத்தீவின் தலைநகரம் சிங்கப்பூர் நகரம் (Singapore city) ஆகும்.

சிங்கப்பூர்-தமிழ்நாடு வரலாறு

மலேசியா வரலாறுடன் நெருங்கி இணைந்து வருவது பண்டைய கால சிங்கப்பூர் வரலாறு ஆகும். பண்டைய கால சிங்கப்பூர் வரலாற்றைப் பற்றி அரிய நமக்குப் போதிய வரலாற்று மூலங்கள் கிடையாது. கி.பி. 213ஆம் ஆண்டளவிலே தீபகற்பத்தின் முடிவிலே பு-லூ-சுங் (Fu-luo-Chang) என்ற தீவு இருப்பதாக சீனர்கள் கூறினர். இத்தீவு சிங்கப்பூரைக் குறிக்கிறது என நம்பப்படுகிறது. பதிமூன்றாம் நூற்றாண்டளவிலே தெமாசக் (Temasok) எனும் கடல் மாவட்டக் குடியிருப்புகளைப் பற்றி சாவணியர்கள் குறிப்பிடுகின்றனர். இப்பகுதி இந்தோனேசிய ஸ்ரீவிசய பேரரசின் ஓர் பகுதியாக இருந்தது. பாலிம்பாங்கை ஆண்டு வந்த மன்னர், தெமாசக் மாவட்டத்தைச் சிங்கப்பூர் என்று பதிமூன்றாம் நூற்றாண்டுகளின் இறுதியில் அழைக்கத் தொடங்கினார். இத்தீவின் மன்னர் மஜபாகிட் (Majapahit) அரசரால் 1376 இல் தோற்கடிக்கப்பட்டவுடன் இத்தீவின் முக்கியத்துவம் நலியத் தொடங்கியது.

சிங்கப்பூரைச் ஆட்சி செய்த முதல் அரசர் ஸ்ரீதிரிபுவனா, இராசேந்திர சோழன் தமது குடும்பத்தைச் சேர்ந்த முன்னோர் என கூறுகின்றார். மலேசியாவின் வரலாறு அல்லது செய்யாரா மெலாயூ என்னும் சுவடியில் இச்செய்தி காணப்பட்டிருக்கின்றது. இச்சுவடி ராப்பில்ஸ் சுவடி எண் 18 (Raffles MS No. 18) என்று பிரபலமடைந்துள்ளது. இச்சுவடியில் பின்வரும் செய்தி அளிக்கப்பட்டிருக்கின்றது. இச்சுவடி ஸ்ரீவிசய அரசர்களை லெங்குயி (Lenggui) அல்லது கிளாங்குயி(Glong Gui) என்று கூறுகின்றது என ஓ.டபுள்யூ. வால்டேர்ஸ் கூறுகின்றார்.

கிளாங்குயி அரசு குடும்பம் இந்திய வெற்றிவீரர் ராசா சூலனுடன் (Raja Shuian) திருமணத் தொடர்பு கொண்டார்கள். முதலாம் இராசேந்திர சோழனைத்தான் இராசாசூலன் என்று கூறுகின்றார்கள் போல இருக்கின்றது) கிளாங்குயியை சூலன் (Shulan) தோற்கடித்தான். ஆகையால் , அம்மன்னன் சூலின் (Chulin) கொலை செய்யப்பட்டான். அவன் நகரம் கைப்பற்றப்பட்டது. அவனுடைய மகளும், இளவரசியுமான ஓநாங்கியூவை (Onangkiu) சூலன் (Raja Shulan) மணந்தான். சூலனுக்கும் ஓநாங்கியூவிற்கும் பிறந்த மகன் உலகத்தை வென்ற ராசா இஸ்காண்டர் (அலெக்ஸாண்டர்) குடும்பத்தைச் சேர்ந்த ராசாசூரான் பாதுஷாவை மணந்தாள். அவர்களுடைய மகன் ராசாசூலன் (Raja Shulan) தன்னுடைய தாத்தா இறந்த பிறகு இந்தியாவிலிருந்த அவருடைய சோழ ராஜ்யத்தின் அரசனாகப் பதவியேறினான், அவனுடைய தாத்தா ஏற்படுத்திய தலைநகரமான பிச நகராவில் (விசயநகரமாக கங்கைகொண்ட சோழபுரமாக இருக்கலாம்) ஆட்சி செய்யத் தொடங்கினான். ராசா சூலன் கடல் அடிப்பகுதிக்குச் சென்று கடல் அரசனின் மகளைத் திருமணம் செய்து கொண்டான். அவர்களுக்கு மூன்று மகன்கள் பிறந்தார்கள். அவர்களின் மூன்றாவது மகனான ஸ்ரீதிரிபுவனா (Sri Tri Buana) என்பவன் சிங்கப்பூரின் முதல் அரசனாக பதவியேற்று சிங்கப்பூரில் தங்கள் பரம்பரையின் ஆட்சியைத் தொடங்கினான்.

இந்தியாவில் சூலனுக்குப் பிறகு இஸ்காந்தர் வம்சத்தைச் சேர்ந்த அவனுடைய மற்றொரு இந்திய மனைவிக்குப் பிறந்த மகன் ஆட்சிக்கு வந்தான். இரண்டு தலைமுறைக்குப் பிறகு, இவ்விந்திய வமிசத்தைச் சேர்ந்த ஓர் இளவரசி சிங்கப்பூர்-தெமாசக்கில் ஆட்சி செய்து வந்த சிங்கப்பூரின் மூன்றாவது அரசரான ராசா முதாவைத் (Raja Muda) திருமணம் செய்துகொண்டாள். அவளைத் திருமணம் செய்து கொள்ள விருப்பம் தெரிவித்த மற்றவர்களை அந்தஸ்து அற்றவர்கள் என்று அவர் தந்தை ஏற்றுக்கொள்ளவில்லை. சிங்கப்பூரிலிருந்து தூதுவர்கள் வந்து ராசா முதா அவளை திருமணம் செய்து கொள்ள விரும்புகிறான் எனக் கூறியவுடன் மகிழ்ச்சியுடன் அவள் தந்தை அதற்குச் சம்மதித்தான்.

இச்சுவடியில் கூறப்பட்டிருக்கும் செய்திகளின் உண்மையைப் பற்றி நாம் ஒன்றும் அறுதியிட்டுக் கூற முடியாது. ஆனால் மலேசியாவிலும் சிங்கப்பூரிலும், இந்தோனேசியாவிலும் சோழர்களின் புகழ் ஓங்கியிருந்தது. சோழர்களுடன் திருமணத் தொடர்பு இருந்ததாகக் கூறுவதில் மகிழ்ச்சியும் திருப்தியும் அடைந்தார்கள் என நன்கு விளங்குகின்றது.

தற்கால சிங்கப்பூரை 1819 ஆம் ஆண்டில் அமைத்தவர் சர் ஸ்டாபோர்டு ராஃபில்ஸ் (Sri Stamford Raffles) என்ற ஆங்கிலேயர் ஆவார். இவர் ஆங்கிலக் கிழக்கிந்திய வணிக நிறுவனத்திற்காகத் தேடிச் சென்று 1819 இல் சிங்கப்பூர் தீவைக் களமாக அமைத்தார் அப்பகுதியை ஆண்டுகொண்டிருந்த சுல்தான்களிடமிருந்து உரிமைபெற்றார். ஆகையால் உண்மையில் சிங்கப்பூரின் வரலாறு ஏறக்குறைய 170 ஆண்டுகள் மட்டுமே பழமையுடையது. ராஃபில்ஸ் சிங்கப்பூருக்கு வந்தபோது மலேயர்கள், சீனர்கள், இந்தியர்கள் (தமிழர்கள் உட்பட) முதலிய எல்லா இனப்பிரிவினர்களையும் சிங்கப்பூரில் சந்தித்தார் 1819ஆம் ஆண்டளவிலே சிங்கப்பூர் மீன் பிடிப்பவர்களின் ஒரு சிறு கிராமமாக விளங்கியது அச்சமயத்தில் அக்கிராமத்தில் பெரும்பான்மையாக இருந்தவர்கள் மலேயர்களும். சீனர்களும் ஆவார்கள். 1821 இல் சிங்கப்பூரில் வசித்த 4,727 பேரில் 132 பேர் தான் இந்தியர்கள் என்று கூறப்படுகிறது. 1824 ஜனவரியில் இத்தீவின் மொத்த மக்கள் தொகை 10, 683. இம்மொத்த மக்கள்தொகையில் மலேயர்கள் 60 விழுக்காடும் (6, 431), சீனர்கள் 31 விழுக்காடும் (3,317), இந்தியர்கள் 7 விழுக்காடும் (756) இருந்தனர் என்றும் கூறுப்படுகிறது. தீபகற்பக் குடியேற்றப் பகுதிகளில் கரும்புத் தோட்டங்களிலும் மிளகு, தென்னந்தோப்புகளிலும் வேலை செய்வதற்காக வங்கவிரி குடாவைக் கடந்து 1800இலிருந்தே தென்னிந்தியர்கள் வரத்தொடங்கினர். தமிழர்களும் பிறரும் தாமாகவே இங்குக் குடியேற வந்தமை 1857 வரை நீடித்தது. ராஃபில்ஸ் எடுத்த முயற்சியால் சிங்கப்பூர் ஓர் அழகான, பிரபலமான சுங்கமற்ற துறைமுகமாகவும், தென்கிழக்காசியாவின் சிறப்பான வாணிபத்தலமாகவும் மாறியது. வாணிபம் செய்வதற்குச் சிறப்பான வாய்ப்பைச் சிங்கப்பூர் அளித்ததால் அண்டை நாட்டினர்களான மலேயர்கள், இந்தியர்கள், சீனர்கள் இத்தீவுக்கு மிகுதியாக வரத் தொடங்கினர்.

1819இல் சிங்கப்பூரை ராஃபில்ஸ் அமைத்த காலத்திலிருந்தே இந்தியாவிற்கும் சிங்கப்பூருக்கும் நெருங்கிய தொடர்பு உருவாகத் தொடங்கியது. 120 இந்திய சிப்பாய்களும், பல உதவியாளர்களும், பினாங்கிலிருந்து வந்து நாராயண பிள்ளை எனும் இந்திய வணிகரும் ராஃபில்சுடன் சிங்கப்பூருக்கு முதன்முதலில் வந்தனர். ஆங்கிலேயர்களின் ஆட்சி மலேயா தீபகற்பம், சிங்கப்பூர் முதலிய நாடுகளில் முழுமையாக அமைக்கப்பட்டவுடன் சிங்கப்பூரில் குடியேறியிருந்த தமிழர்களில் பெரும்பான்மையோர் சிங்கப்பூருக்கு வந்தனர். சாலைகள் அமைப்பதற்கும், இரயில் போக்குவரத்து அமைப்பதற்கும், துறைமுகத்தை நவீனமாக்கும் பணிகளுக்கும் குறைவான ஊதியத்தில் பணிபுரிவதற்குத் தமிழர்கள் கிடைத்தனர். தவிர இரப்பர் தோட்டங்களிலும் தமிழர்கள் பணிபுரிந்தனர். மேலும் இந்தியாவிற்குத் தேவையான நறுமணப் பொருள்களை இறக்குமதி செய்வதற்குத் தமிழ் வணிகர்கள் வந்தனர். மேலும் 1825ஆம் ஆண்டளவில் தமிழ்நாட்டிலிருந்து கைதிகள் கொண்டு வரப்பட்டனர். சிங்கப்பூர் வளர்ச்சியில் இவர்களுடைய கடின உழைப்பின் பங்கும் உண்டு. இந்தோனேசியச் சுமத்ராவில் இப்போதுள்ள பெங்கூளு எனுமிடத்தில் தான் முதன் முதலில் இவர்கள் வைக்கப்பட்டிருந்தனர். 1825 இல் இது டச்சுக்காரர்களுக்கு உரிமையானதால், இங்கிருந்த குற்றவாளிகள் பினாங்கிற்கும் அங்கிருந்து சிங்கப்பூர் மலாக்காப் பகுதிகட்கும் மாற்றப்பட்டனர். இவ்வாறு சிங்கப்பூருக்குக் கொணரப்பட்ட இந்தியர்கள் தமது அரிய உழைப்பால் சிங்கப்பூரை உருவாக்கினர். அதன் நெடுஞ்சாலைகளை அமைத்துத் தந்ததோடு துப்புரவுப் பணிகளையும் மேற்கொண்டனர். சதுப்பு நிலங்களைத் தூர்த்துப் பாலங்களைக் கட்டி வியர்வை சிந்தி உழைத்தனர். சிங்கப்பூரில் உள்ள பழமையான தமிழ்

இந்து ஆலயமான மாரியம்மன் கோயிலை இக்குற்றவாளிக் குடியேற்ற வாசிகளே 1828இல் அமைத்தனர். சீன நாட்டுப் பாட்டாளிகளைவிட இவர்கள் குறைந்த ஊதியத்திற்கு வேலை செய்தனர். 1867 இல் நீபகற்பக் குடியேற்றங்கள் காலனி கட்டுப் பாட்டிற்கு மாற்றப்பட்டமையால், குற்றவாளிகளைக் குடியேற்றி அவர்கள் உழைப்பைச் சுரண்டும் போக்கு மறையலாயிற்று. 1800 ஆம் ஆண்டிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாகச் சிங்கப்பூருக்கு வந்து குடியேறிய தமிழர் தொகை 1890ஆம் ஆண்டளவில் ஓர் அளவு பெருகியிருந்தது. தவிர மலேசியாவிலிருந்தும் தமிழர்கள் சிங்கப்பூருக்கு வந்தனர். 1913ஆம் ஆண்டளவில் தமிழர்களின் மொத்த மக்கள் தொகை மும்மடங்காகப் பெருகியது. குறிப்பாகச் சிங்கப்பூரில் பணிபுரிவர்களுக்குச் சில உரிமைகளும், சலுகைகளும் அளிக்கப்பட்டதால் தமிழர்கள் மிகுதியாகச் சிங்கப்பூருக்கு வந்து குடியேறினர்.

சிங்கப்பூர்தீவு சிங்கப்பூர்த் துறைமுகமாக நன்றாக வளர்ச்சியடைந்தவுடன் சிந்திகள், மார்வாடிகள், குஜராத்திகள், பார்சிக்கள் முதலிய வடஇந்தியர்கள் சிங்கப்பூருக்கு வரத் தொடங்கினர். முதல் உலகப்போர் தோன்றும் சமயத்தில் இவர்கள் ஓர்செல்வாக்குள்ள வாணிப சமூகமாக மாறிவிட்டிருந்தனர்.

ஆனால், சிங்கப்பூரில் இருக்கும் இந்தியர்களில் பெரும்பான்மையோர் தமிழர்களும், மலையாளிகளும் ஆவார்கள். இத்துறைமுகப் பணியிலும், போக்குவரத்துத் துறையிலும், பாதுகாத்தல் பணியிலும் தமிழர்கள் மிகுதியாகப் பணிபுரிந்தனர். பொதுவாக வடஇந்தியர்கள் வாணிப நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். தவிர மேலும் மேலைநாட்டுக் கல்வி முறையில் பயின்ற தமிழர்களும், இந்திய நடுத்தர வகுப்பினரும் இருந்தனர்.

குடியேற்றங்கள் மிகுதியானதால் இரண்டாம் உலகப்போருக்கு முன் சிங்கப்பூரின் மக்கள் தொகை அதிகமானது. மற்ற இனத்தினரோடு ஒப்பிட்டுப் பார்த்தால் சிங்கப்பூரின் மலேய் இனப்பிரிவினரின் மொத்த மக்கள் தொகை குறைவே. ஆகையால் சீனர்களும், இந்தியர்களும் குறிப்பாகத் தமிழர்களும் சிங்கப்பூரின் சமூக, பொருளாதார அமைப்பை உருவாக்குவதில் பெரும்பங்கேற்றனர் என்றால் மிகையாகாது.

ஆகையால் தமிழ்நாடு-சிங்கப்பூர் தொடர்பு வரலாற்றை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம்.

1) ஆங்கிலேயர்கள் சிங்கப்பூரில் குடியேறுவதற்கு முன்பு தோன்றிய வரலாறு. இக்காலக்கட்டத்தில் மலேசியா, இந்தோனேசியா வரலாறுடன் இணைந்த வரலாறே சிங்கப்பூர் வரலாறு ஆகும்
2) ஆங்கிலேயரின் ஆட்சிக் காலம்
3) சுதந்திர சிங்கப்பூர்.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலம்: ஆங்கிலேயர்களின் ஆட்சியின் போது சிங்கப்பூர் நேர்தாயக ஆட்சிக்குட்பட்ட குடியேற்ற நாடாக (Crown Colony) இருந்தது. இக்காலக் கட்டத்தில் சிங்கப்பூர் பினாங், மலாக்கா முதலிய பகுதிகளுடன் இணைக்கப்பட்டு, நீரிணைக் குடியேற்றங்கள் (Straits Settlements) என அழைக்கப்பட்டது. நிர்வாக அமைப்பில் மலேய்

சுல்தான்கள் கிடையாது. மலேயர்களை விட மலேயர்கள் அல்லாதவர்கள் மிகுதியாக இருந்ததால் மலேயர்களுக்கு முன்னுரிமைச் சலுகைகள் ஒன்றும் அளிக்கப்படவில்லை. தொழிற் கட்டுப்பாட்டு ஒப்பந்தங்கள் செய்து கொண்ட தமிழ்ப் பணியாட்களை ஆங்கிலேயர்கள் சிங்கப்பூருக்குச் செல்ல அனுமதித்தனர். ஆனால் 1872 ஆம் ஆண்டளவில் தான் இவ்வாறு செய்து கொண்ட ஒப்பந்தங்களுக்குச் சட்ட பாதுகாப்பு அளிக்கப்பட்டது. ஆனால் பொதுமக்கள் இவ்வாறு ஒப்பந்தங்கள் மூலம் பணியாட்கள் சுரண்டப்படுவதை எதிர்த்தனர். இதன் விளைவாக 1910 ஆம் ஆண்டளவில் தொழிற் கட்டுபாடு ஒப்பந்தங்கள் செய்து கொணடு செல்வது தடை செய்யப்பட்டது. ஆனால் இந்தியர்கள், தமிழர்கள் உட்பட தொடர்ந்து சிங்கப்பூர் சென்று குடியேறிக் கொண்டிருந்தனர். ஒப்பந்தக்கெடு முடிந்த பின்னரும் தமிழ்கூலிகள் நீடித்துத் தங்க முற்பட்டனர். அவர்கள் வமிசத்தினரும் அங்கேய வளரத் தொடங்கினர். 1950 ஆம் ஆண்டுகளில் இவர்கள் இவ்வாறு சென்று குடியேறுவதை மிகக் கண்டிப்புடன் தடை செய்ததால். இக்குடியேற்றங்களின் எண்ணிக்கை குறையத் தொடங்கியது.

பொதுவாக 1) குற்றவாளிகளின் குடியேற்றம். 2) கட்டுப்படுத்தப் பெற்ற குடியேற்றம். 3) தாமாக வந்த குடியேற்றம் என்ற மூன்று பிரிவில் தமிழ் மக்களின் குடியேற்ற வரவு அமையும். குடியேற்றங்கள் ஒன்றன் பின் ஒன்றாகவோ, மூன்றுமோ ஒரு காலக்கட்டத்திலோ நிகழ்ந்துள்ளன. தமிழர்களும், பிறரும் தாமாக இங்குக் குடியேற வந்தமை 1857 வரை நீடித்தது. அதன்பிறகு சில கட்டுத்திட்டங்களை அப்போதைய இந்திய அரசு கொணர்ந்தது. 1890 ஆம் ஆண்டளவில் ஒப்பந்தப் பிணைப்புக்கு உட்படாத உழைப்பாளராகிய தமிழர்கள் கணிசமான அளவுக்கு அங்குக் குடியேறிவிட்டனர்.

1931ஆம் ஆண்டளவில் நீரிணைக் குடியேற்றங்களின் மொத்த மக்கள் தொகையில் சீனர்கள் 59.6 விழுக்காடும், மலேயர்கள் 25.6 விழுக்காடும், இந்தியர்கள் 11.9 விழுக்காடும் இருந்தனர். நீரிணைக் குடியேற்றங்களில் பிறந்த எல்லா இனத்தினரும், மலேயர்களும், சீனர்களும், இந்தியர்களும், யூரேசியர்களும், மற்றவர்களும் பிரிட்டிஷ் குடிமக்களாகக் கருதப்பட்டனர்; எல்லோருக்கும் சட்டப்படி சமமான உரிமைகள், சலுகைகள் அளிக்கப்பட்டன. சிவில் நிர்வாக அமைப்பின் முக்கியப் பதவிகள் ஆங்கிலேயர்வசம் இருந்தன; ஆனால், மற்ற எல்லாப் பதவிகளிலும் சேர்ந்து பணிபுரிய எல்லா இனத்தினருக்கும் சம வாய்ப்பு அளிக்கப்பட்டது. நடைமுறையில் பெரும்பான்மையான மேசைத் தொழிலாளிகளாக (White Collar Jobs) யூரேசியர்கள், சீனர்கள் இந்தியர்கள் (தமிழர்கள் உட்பட) இருந்தார்கள். ஒருசில மலேயர்களுக்கு இப்பணிகளுக்குத் தேவையான சிறப்புத் தகுதிப் பண்பு (required Qualifications) இருந்தது. ஆகையால் ஆங்கிலேயர்கள் ஆட்சியின் போது நீரிணைக் குடியேற்றப்பகுதியில் மலேயர்கள் அல்லாதவர்களின் செல்வாக்கு ஓங்கியிருந்தது, தமிழர்களின் செல்வாக்கும் ஓரளவு ஓங்கியிருந்தது எனக் கூறலாம். அலுவலக எழுத்தாளர்கள், மேற்பார்வையாளர்கள், வழக்கறிஞர்கள். பொறியியலாளர்கள் என்றெல்லாம் பல்வேறு அலுவலர்களாகத் தமிழர்கள் இருந்தனர். கல்விப் பணியிலும் காவல் (போலீசு) துறையிலும் அவர்களே நிறையத் தொடங்கினர் காவலர்களாக சீக்கியர்களும் தமிழர்களுமே பெரும்பாலும் இடம் பெற்றனர். சிங்கப்பூரில் ஒரு காலத்தில் காவலர்களாய் இருந்த அனைவரும் தமிழர்களேயாவர். தொடக்க காலத்தில் கிறித்துவத் தொண்டமைப்புகளும் (மிஷினரிகளும்) அரசாங்கமும் நடத்திய பள்ளிகளில் இந்தியர்களே ஆசிரியர்களாக அமர்த்தப்பட்டனர்.

இரண்டாம் உலகப்போரின்போது சிங்கப்பூர் ஜப்பானின் மேலாட்சியின் கீழ் மூன்று ஆண்டுகள் இருந்தது. போருக்குப்பின் மற்ற நீரிணைக் குடியேற்றங்களிலிருந்து சிங்கப்பூர் ஆங்கிலேயர்களால் பிரிக்கப்பட்டது. இதன் விளைவாக, சிங்கப்பூர் தனி உரிமையுள்ள நேர்தாயக ஆட்சிக்குட்பட்ட குடியேற்ற நாடாக மாறியது. 1959 ஜூன் திங்கள் முழு உள்நாட்டுத் தன்னாட்சி உரிமை அளிக்கப்பட்டது. 1963 செப்டம்பர் திங்களில் மலேசியா அமைக்கப்பட்டவுடன் சிங்கப்பூரும் அதன் ஒரு பகுதியாக இணைக்கப்பட்டது.

சுதந்திர சிங்கப்பூர்: ஆனால் 1965 ஆகஸ்டு 7ஆம் நாள் சிங்கப்பூர் மலேசியாவை விட்டு வெளியேறி ஒரு தனி முழு உரிமையுள்ள சுதந்திர நாடாக மாறியது. இன்றும் சுதந்திர சிங்கப்பூரின் வளர்ச்சியில் தமிழர்களுக்குச் சிறப்பான பங்கு உண்டு எனஅறுதியிட்டுக் கூறலாம்.

சிங்கப்பூரில் உள்ள தமிழ் மக்கள் தொகை :-

சிங்கப்பூரில் உள்ள மொத்தமக்கள் தொகையில் இந்தியர்கள் 7 விழுக்காடு தான் இருக்கின்றார்கள். இந்தியர்களுக்குள் மிகுதியாக இருப்பவர்கள் தமிழர்கள், மலையாளிகள், தெலுங்கர்கள், பஞ்சாபிகள், வங்காளிகள், இந்திமொழி பேசும் வடநாட்டு இந்தியர்கள். மொத்த இந்தியர்களில் தமிழர்கள் 65 விழுக்காடும், மலையாளிகள் 15 விழுக்காடும், இந்திமொழி பேசும் வட இந்தியர்கள், வங்காளிகள், தெலுங்கர்கள், பஞ்சாபிகள் முதலியவர்கள் 20 விழுக்காடும் இருக்கின்றனர். மொத்த மக்கள் தொகையில் தமிழர்கள் 4 விழுக்காடுகள் இருக்கின்றனர். மொத்தத் தமிழ் மக்கள் தொகையில் இலங்கைத் தமிழர்கள் 3 விழுக்காடு இருக்கின்றனர். சிங்கப்பூரைத் தங்களுடைய தாயகமாக 75 விழுக்காடு தமிழர்கள் கருதுகின்றார்கள்; 15 விழுக்காடு தமிழர்கள் இந்தியாவிற்கும் சிங்கப்பூருக்கும் இடையே பல தடவை பயணம் செய்கின்றார்கள். உலகத் தமிழர்களின் மொத்தத் தொகையில் சிங்கப்பூர்த் தமிழர்கள் 0.3 விழுக்காடு இருக்கின்றார்கள் என ஞானசூரியன் கூறுகின்றார்.

1979 மக்கள்தொகை பங்கீடு

1.	சீனர்கள்	18 இலட்சம்	(76 விழுக்காடு)
	மலேயர்கள்	4 இலட்சம்	(15 விழுக்காடு)
	இந்தியர்கள்	1,62,000	(6,3 விழுக்காடு)
	மொத்தம்	24 இலட்சம்	(எல்லா இனப் பிரிவினர்களும்)
2.	இந்தியர்கள்	1,62,000	100 விழுக்காடு
	தமிழர்கள்	98,425	65 விழுக்காடு (இதில் இலங்கை தமிழர்கள் 3 விழுக்காடு)
	மலையாளிகள்	22,000	15 விழுக்காடு
	மற்ற இந்தியர்கள் (வட இந்தியர்கள், வங்காளிகள், தெலுங்கர்கள், பஞ்சாபிகள்)		20 விழுக்காடு

மூலம் :(திரு. முருகரத்தனம், தமிழர் வாழும் அண்டை நாடுகளில் தமிழ்க் கல்வி—தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1986)

1984ஆம் ஆண்டு மக்கள்தொகை (1984ஜூன் 30ம்நாள் வரை கணக்கிடப்பட்டது)

சீனர்கள்	*19,35,000*	*(76.5 விழுக்காடு)*	*இவர்களில் சிங்கப்பூரில்*
மலேயர்கள்	*3,74,400*	*(14.8 விழுக்காடு)*	*பிறந்தவர்கள் தொகை*
இந்தியர்கள்	*1,62,000*	*(6.4 விழுக்காடு)*	*80 விழுக்காடு*
மற்றவர்கள்	*57,100*	*(2,3 விழுக்காடு)*	

(SOURCE: EUROPA YEAR BOOK 1984-85, Singapore 1985).

சிங்கப்பூர் வளர்ச்சியில் தமிழர்களின் பங்கு.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் குறிப்பாக 1820ஆம் ஆண்டுகளில் சிங்கப்பூரின் தொடக்ககால வளர்ச்சியில், தமிழர்கள் சிறப்பாகப் பங்கேற்றனர். 1820ஆம் ஆண்டுகளின் தொடக்கத்தில் வந்த தமிழர்களில் பெரும்பான்மையோர் பிரிட்டிஷ் அரசின் கைதிகள். இவர்கள் 1823-26ஆம் ஆண்டுகளில் ஆங்கில அரசால் சிங்கப்பூருக்குக் கொண்டு வரப்பட்டார்கள். இக்கைதிகள் தான் கூறப்போனால், சிங்கப்பூரில் இருக்கும் மிகப் பழைய தமிழ்க்கோயிலான மாரியம்மன் கோயிலை கட்டினார்கள். புனித ஆண்டுரு கோயில் (St. Andrewis Cathedral), மலேசியா, சிங்கப்பூர் நாடுகளை இணைக்கும் ஜோஹூர் பாலம், செம்பாவங் துறைமுகம், கல்லாங் விமானநிலையம் முதலியவை தமிழர்களின் கடின உழைப்பின் சின்னங்கள் என்று கூறலாம். இத்தமிழ்க் கைதிகளும், பின்பு தொழிற்கட்டுபாட்டு ஒப்பந்தம் செய்து கொண்ட தமிழர்களும், சாலைகள், இரயில்பாதை, பாலங்கள், கால்வாய்கள், அரசு கட்டிடங்கள் போன்ற பொதுநல அமைப்புகளைக் கட்டுவதில் சிறப்பான பங்கேற்றனர். ஒரு காலத்தில் எல்லாக் காவல் துறையாளர்களும் தமிழர்களே. பிறகு சீக்கியர்கள் மிகுதியாகக் காவல்துறைப் பணியில் சேர்ந்தார்கள். ஆங்கிலேயர்கள் ஆட்சியின் போது கல்வித் துறையிலும் தமிழர்கள் செல்வாக்கு ஓங்கியிருந்தது. சிங்கப்பூரின் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்க வளர்ச்சியின் போது ஆங்கில அரசும், கிறித்துவ சமயப் பரப்பாளர் பள்ளிகளும் தமிழர்களைத்தான் ஆசிரியர்களாகத் தேர்ந்தெடுத்தனர். இன்று வழக்குரைஞர்களாகவும், பேராசிரியர் களாகவும், மருத்துவர்களாகவும், பொறியாளர்களாகவும், அரசு அலுவலர்களாகவும், அரசியல்வாதிகளாகவும், தொழிற்சங்க உறுப்பினர்களாகவும் - எல்லா வாழ்க்கை துறைகளிலும் தமிழர்களை நாம் காணலாம்.

சமய வாழ்க்கை அமைப்பு:-

தாயிஸசம்(**DAOISM**)*: புத்தசமயம், இசுலாம், கிறித்துவமதம், இந்துசமயம் முதலிய சமயங்களைப் பெரும்பான்மையான மக்கள் சிங்கப்பூரில் பின்பற்றுகின்றார்கள். பெரும்பான்மையான சீனர்கள் புத்தசமயத்தையோ அல்லது தாயிஸசமயத்தையோ தழுவியிருக்கிறார்கள். ஏறக்குறைய எல்லா மலாய் இனபிரிவினரும், பாக்கிஸ்தானியரும் முசுலீம்கள், ஐரோப்பியர்களும், யூரேசியர்களும் கிறித்துவர்கள். பெரும்பான்மையான*

இந்தியர்கள் இந்துக்கள். பல சமயத்தினர்கள் தொடர்பு கொண்டு ஒற்றுமையாக வாழ உதவுவதற்காக 1949இல் சமய இணைப்பு நிறுவனம் (Inter-Religions Organisation) அமைக்கப்பட்டது.

சமயப் பிரிவினர்களின் புள்ளிவிவரம் (1980)

புத்தர்கள்	5,29,140	–
தாயிஸத்தினர்	5,80,535	(கம்பூசியஸ், மென்சியஸ், லாவோஜி முதலியவர்களை பின்பற்றுபவர்கள் உட்பட)
முசுலிம்கள்	3,23,867	(16 விழுக்காடு)
இந்துக்கள்	72,401	(4 விழுக்காடு)
ரோமன்கத்தோலிக்க சமயப் பிரிவினர்	91,042	–
புரோடஸ்டன்டுகள்	1,12,475	–

Protestants

1980 ஆண்டு புள்ளி விவரப்படி 65 சீனர்கள், 60 மலேயர்கள், மற்ற இனப்பிரிவினர்களில் 96 பேர் இந்துக்களாக இருந்தார்கள். மொத்தம் 221 இந்துக்களே, இந்திய இனப்பிரிவுகளைச் சேராதவர்களாக இருந்தார்கள். சீனர்களைப் போல தங்களுடைய சமயம், பண்பாடு, கலை முதலியவைகளைத் தமிழர்களும் சிங்கப்பூருக்குக் கொண்டு வந்தனர். பல தமிழ்க் கோயில்கள் சிங்கப்பூரில் கட்டப் பட்டிருக்கின்றன. இந்துக்களின் பண்டிகைகள், சடங்குகள் மையமாகத் திகழ்ந்தது இக்கோவில்கள். தமிழ்ப் புத்தாண்டு, தைப்பூசம், தீபாவளி, நவராத்திரி, மாசிமகம் முதலிய பண்டிகைகளைத் தமிழர்கள் கொண்டாடுகின்றனர். சிங்கப்பூரின் ஒரு தேசிய திருவிழாநாளாக தீபாவளி கருதப்படுகின்றது. விசாக் நாள் (Vesak Day), தீபாவளி முதலிய திருவிழா நாட்கள் தேசிய விடுமுறை நாள்களாகும்.

புகழ் வாய்ந்த தமிழ்க்கோவில்கள் மாரியம்மன் கோயில் (1828), சிவன் கோயில் (1830), பெருமாள் கோயில் (1855). இன்று 20 முக்கியக்கோவில்கள் நகரப்புறங்களிலும் நாட்டுப்புறங்களிலும் இருக்கின்றன. மாரியம்மன், பிள்ளையார், முருகன், திரௌபதி முதலிய கடவுள்கள் மக்களின் பேராதரவைப் பெற்றிருக்கின்றன. தென்பாலச் சாலையிலுள்ள (South Bridge Road) மாரியம்மன் கோயில் மிகப் பழமையானதும், மிக முக்கியமானதும் ஆன இந்துக்கோயில் எனக் கருதப்படுகின்றது. இக்கோவிலின் கதவுகளிலும், உச்சிப் பகுதிகளிலும், ஐந்து அடுக்கு கோபுரங்களிலும் இந்து புராணங்கள் சம்பந்தப்பட்ட அழகான உருவங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன.

குளம் சாலையிலுள்ள (Tank Road) தண்டாயுதபாணி கோவில் மற்றொரு முக்கியக் கோவிலாகும். பணக்கார செட்டியார்கள் இக்கோவிலை 1859ஆம் ஆண்டு கட்டினார்கள். இக்கோவிலின் இராசகோபுரம் மீண்டும் 1903 நவம்பர் திங்களில் கட்டப்பட்டது.

சிங்கப்பூர்-இன அடிப்படையில் மொத்த மக்கள் தொகையைப் பகிர்ந்து அளித்தல்

SINGAPORE-DISTRIBUTION OF POPULATION BY RACIAL GROPS

1	2	3	4	5	6 %	7 %	8 %	9 %	10. %	11
1824	3,317	6,431	756	179	31.0	60.2	7.1	1.7	100.0	10,683
1830	6,555	7,640	1,913	526	39.4	45.9	11.5	3.2	100.0	16,634
1836	13,749	12,538	2,932	765	45.9	41.7	9.9	2.6	100.0	29,984
1840	17,704	13,200	3,375	1,110	50.0	37.3	9.5	3.1	100.0	35,389
1849	27,988	17,039	6,284	1,580	52.9	32.2	11.9	3.0	100.0	52,891
1860	50,043	16,202	12,973	2,516	61.2	19.8	15.9	3.1	100.0	81,734
1871	54,572	26,141	10,313	3,790	56.8	27.1	11.9	4.0	100.0	94,816
1881	86,766	33,012	12,086	5,858	63.0	24.0	8.8	4.3	100.0	1,37,722
1891	1,21,908	35,956	16,009	7,727	67.1	19.7	8.8	4.3	100.0	1,81,602
1901	1,64,041	35,986	17,047	9,768	72.1	15.8	7.8	4.3	100.0	2,26,842
1911	2,19,577	41,806	27,755	14,183	72.4	13.8	9.2	4.7	100.0	3,03,321
1921	3,15,151	53,595	32,314	17,298	75.3	12.8	7.7	4.2	100.0	4,18,358
1931	4,18,640	65,014	50,811	23,280	75.1	11.7	9.1	4.2	100.0	5,57,745
1947	7,29,473	1,13,803	68,967	25,901	77.8	12.1	7.4	2.8	100.0	9,38,144
1957	10,90,595	1,97,060	124,084	34,190	75.4	13.6	8.6	2.4	100.0	14,45,929

5. *Saw Swee Hock, "The Changing Population Structure in Singapore, 1824-1962 "Malayan Economic Review (Singapore), vol. 9, pp. 90-101.*

1.ஆண்டு, 2.சீனர்கள், 3.மலேய் மக்கள், 4.இந்தியர்கள், 5.மற்ற இனத்தினர், 6.சீனர்கள், 7.மலேயர்கள், 8.இந்தியர்கள், 9.மற்றவர்கள்

10.மொத்தம் 11.மக்கள் தொகை.

மலேசியா-சிங்கப்பூர்-மக்கள் தொகை-இனப்பிரிவு அடிப்படையில்-1961.
MALAYSIA-POPULATION BY ETHNIC GROUPS-END-1961.[140] (in Thousands) (ஆயிரங்களில்)

	மலேயா கூட்டரசு	விழுக்காடு	சிங்கப்பூர்	விழுக்காடு	சரவாக்	விழுக்காடு	வடபோர்னியோ	விழுக்காடு	மலேசியா	விழுக்காடு
1. சீனர்கள்	2,670	36.9	1,279	75.2	243	31.1	110	23.3	4,302	42.2
2. மலேய் மக்கள்	3,616	50.1	238	14.0	137	17.5	-	-	3,991	39.2
3. இந்தியர்களும் பாக்கிஸ்தானியர்களும்	813	11.2	142	8.3	-	-	-	-	955	9.4
4. கடல் டயாக்குகள்	-	-	-	-	246	31.5	–	–	–	–
5. நிலடயாக்குகள்	-	-	-		-61	7.8	-	-	-	-
6. மெலாநவ்	-	-		--	46	5.9	-	-	-	-
7. டுசன்	-	-	-	-	-	-	152	31.8	-	-
8. பாஜௌ	-	-	-	-	-	-	63	13.1	716	7.0
9. முருத்	-	-	-	-	-	-	22	4.8	-	-
10. மற்ற தேசிய இனமக்கள் (வேறு எங்கும் கூறப்படாதவர்கள்)	4	-	-	-	39	5.1	83	17.5	-	-
11. தேசிய இனத்தோடு சேராதவர்கள் (பிற இடங்களில் கூறப்படாதவர்கள்)	129	1.8	41	2.5	8	1.1	45	9.5	223	2.2
மொத்தம் (எல்லா இனப் பிரிவினர்களும்) விழுக்காடு	7,232	100.0	1700	100.0	780	100.0	475	100.0	10,187	100 .0
அடிப்படையில் பங்கீடு	70.9		16.7		7.7		4.7		100.0	

Report of the Economic Aspects ot Malaysia, Misc., 3 of 1963 (Singapore, 1963), Table III.

தீ மிதித்தல், காவடி தூக்குதல், அலகு குத்துதல், கரக ஆட்டம் முதலிய சடங்குகள் சிங்கப்பூரிலும் பக்தியுடன் பின்பற்றப்படுகின்றன. உதாரணமாக, தைப்பூசம் திருவிழாவின் போது ஜனவரி, பிப்ரவரி திங்களில் காவடிகளைத் தூக்கிக்கொண்டு பக்தர்கள் செரன்கூனில் உள்ள பெருமாள் கோவிலிலிருந்து குள்ம் சாலையிலுள்ள தண்டாயுதபாணி கோவில் வரை செல்வார்கள். காவடி என்பது மயில் தோகைகளால் அலங்கரிக்கப்பட்ட, மர அடிப்பகுதியுள்ள மர வில் வளைவு அமைவாகும். பழங்கள், பூக்கள், பால்கிண்ணங்கள் முதலியனவும் காவடியுடன் எடுத்துச் செல்லப்படும். சில பக்தர்கள் உலோகத்தால் செய்யப்பட்ட காவடிகளைத் தூக்கிக் கொண்டும் போவார்கள். கன்னங்களிலும், உடம்புகளிலும், நாக்குகளிலும் அலகுகளைக் குத்திக்கொண்டு பலர் செல்வார்கள். பக்தியுடன், ஆசாரத்துடன், உண்ணா நோன்பு இருந்து, பூஜை செய்து வேண்டிய பிறகுதான் இம்மாதிரியான சடங்குகளை மக்கள் பின்பற்றுகின்றனர்.

1917 மார்ச்சுத் திங்கள் இந்து ஆலோசனைக்குழு (Hindu Advisory Board) ஒன்று இந்து சமயம், பழக்கவழக்கங்கள் தொடர்பாகவும், இந்து சமுதாயத்தின் பொது நலம் தொடர்பாகவும் அரசுக்கு ஆலோசனை கூறுவதற்காக நிர்வாகப் பொறுப்புடன் அமைக்கப்பட்டது. இக்குழுவின் உறுப்பினர்களாக 10 உறுப்பினர்கள், ஒரு தலைவர், ஒரு செயலாளர் இருக்கின்றார்கள். தைப்பூசத் திருவிழாவை இந்து மானிய அளிப்புக் குழுவுடன் (Hindu Endownment Board) இணைந்து இவர்கள் நடத்துகிறார்கள். (The Hindu Advisory Board C/o Ministry of Social Affairs, Pearl's Hill Terrace, Singapore 0316 tel 914111, Chair, P. Selvadurai)

இந்து மானிய அளிப்புக்குழு (Hindu Endownment Board) 1968ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. ஸ்ரீமாரியம்மன் கோவில், ஸ்ரீசீனிவாசப் பெருமாள் கோவில், ஸ்ரீசிவன் கோவில், ஸ்ரீவைரவிமாதா காளியம்மன் கோவில் முதலிய கோவில்களின் நிர்வாகப் பொறுப்பு இதன் வசம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது.

சிங்கப்பூர்த் தமிழர்களில் 40 விழுக்காடு தமிழ் முசுலிம்கள் எனச் சிலர் கூறுகின்றனர். சோழ மண்டலக் கடற்கரைப் பகுதிகளிலிருந்து வந்தவர்கள் மூலம், சிங்கப்பூரில் உள்ள பெண்களுடன் செய்து கொண்ட கலப்புத் திருமணங்கள் மூலமும் தமிழ் முசுலிம்களின் தொகை அதிகரித்தது எனக் கூறலாம்.

பொங்கல் திருவிழாவைத் தமிழர் திருநாள் என்று கருதினாலும் தமிழ்க் கிறித்துவர்களும், தமிழ் முசுலிம்களும் இத்திருநாளைக் கொண்டாடவில்லை என்பதால் தமிழர்களை ஒன்று படுத்தும் நோக்கத்துடன் தைத் திங்களில் மற்றொரு நாளைத் தேர்ந்தெடுத்து அந்நாளைத் தமிழ்த் திருநாள் என்று சிங்கப்பூர்த் தமிழர்கள் கொண்டாடுகின்றார்கள்.

சிங்கப்பூர் அரசு 19 வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாத்துக் கொண்டு வருகிறது. மாரியம்மன் கோவில் (242 தெற்குப் பாலம் (South Bridge), ஸ்ரீபெருமாள் கோயில் (397 செரன்கூன் சாலை), நாகூர் தர்கா (140 தெலோஅயத் தெரு) முதலிய கோயில்களும் இம்மாதிரியான வரலாற்றுச் சின்னங்களாகக் கருதப்பட்டு, சிங்கப்பூர் அரசால் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

தமிழர்களின் பொருளாதார நிலை:

25 விழுக்காடு மேல் உள்ள தமிழர்கள் வணிகர்களாகவும் அரசு அலுவலர்களாகவும் இருக்கின்றார்கள். இவர்கள் சமூக அமைப்பின் மேல்தட்டில் இருப்பதாகக் கருதலாம். அடகுக்கடை வைத்து, வியாபாரம் செய்யும் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள், உயர்படி அமைப்பில் இருக்கின்றார்கள். இவர்களில் பெரும்பான்மையான வணிகர்கள் தமிழ்நாட்டுடன் மற்ற இந்தியப் பகுதிகளுடன் தொடர்பு வைத்திருக்கின்றார்கள்.

சில்லரை வியாபாரத்திலோ, ஏற்றுமதி இறக்குமதி வாணிபத்திலோ தமிழ் வணிகர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். கடந்த நூறு ஆண்டுக்குள், சில்லரை வாணிபம் செய்யும் நடுத்தர வகுப்பினர்கள் தோன்றினர். பொது வாணிபச் சரக்குகள் குறிப்பாக நெய்ப்பொருள்கள் விற்பதில் ஈடுபட்டு இவர்கள் மூலம் சில்லரை வாணிபம் ஒர் சிறப்பு நிலையை அடைந்தது எனக்கூறலாம். பொதுவாக வட்டித் தொழிலர்கள் எல்லோருமே இந்தியர்களாக - குறிப்பாக நாட்டுக் கோட்டைச் செட்டியார்களாக இருந்தார்கள். வணிகர்களுக்கும், அரசியல்வாதிகளுக்கும், சிறு கடை வணிகர்களுக்கும், குறைந்த ஊதியத் தொழிலாளர்களுக்கும் இவர்கள் வட்டிக்குப் பணம் கடன் கொடுத்தனர். இரப்பர், தகரம் முதலிய ஏற்றுமதி வாணிபத்தில் இந்தியர்களுக்கு, குறிப்பாகத் தமிழர்களுக்கு மிகுதியான பங்கு கிடையாது. ஒரு சிலரைத் தவிர, பொதுவாக இறக்குமதி, ஏற்றுமதி செய்யும் தமிழ் வணிகர்கள் சீன வணிகர்களையே நம்பி வாழ்கின்றார்கள். இறக்குமதி, ஏற்றுமதி வாணிபம் வெறும் தரகுத்தொழிலாகச் செயல்பட்டு வருகின்றது. வழக்குரைஞர்களாகவும், டாக்டர்களாகவும் பல தமிழர்கள் இருக்கின்றார்கள். குற்றச்சாட்டு வழக்குரைஞர்கள், எதிர்வாதி வழக்குரைஞர்கள், நீதிபதிகள் முதலியவர்கள் எல்லோரும் சில விசாரணைகள் நடக்கும்போது தமிழர்களாகவே இருக்கின்றார்கள்.

மற்ற தமிழர்கள், ஏறத்தாழ 75 விழுக்காடு தமிழர்கள் தொழிலாளிகளாகப் பணிபுரிகின்றார்கள். இவர்களில் நான்கில் மூன்று பங்கினர் அயல்நாடுகளில், பெரும்பான்மையோர் சிங்கப்பூரில் பிறந்தவர்கள் ஆவார்கள்.

தேசிய (அலுவலக) மொழிகள்:

சிங்கப்பூரில் நான்கு அலுவலக மொழிகள் – மலேய்மொழி (தேசிய மொழி) சீனமொழி (மேண்டரின்), தமிழ், ஆங்கிலம், முதலிய மொழிகள் இருக்கின்றன. நிர்வாக மொழியாக ஆங்கிலம் இருக்கின்றது. தேச முன்னேற்றம் என்றால் எல்லா இனத்தினரும் தன்னியற்படுத்தப்பட்டு ஒன்றுபடவேண்டும் என்று இல்லை, ஒருவரோடு ஒருவர் இணைந்து, கூடிக்கலந்து, ஒருவர் மற்றொருவரை மதித்துப் பொறுத்தமைவுப் பண்புடன் வாழ வேண்டும். 'பண்பு வளம் உள்ள மக்களாட்சி *(Cultural Democracy)* தேவை 'தன்னியற்படுத்தும் நாகரீக நயம்' *(Cultural Assimilation)* தேவை இல்லை என மக்கள் நடவடிக்கை கட்சி *(Peoples Action Party)* கூறுகின்றது. இதன் உட்கருத்து என்னவென்றால் பெரும்பான்மை இனத்தினரும் சிறுப்பான்மை இனத்தினரும் போராட்டங்களைத் தவிர்த்து, பிறருடன் கூடியுழைக்க வேண்டும். சிங்கப்பூர் சட்டசபையில் தமிழ் மொழியைப் பயன்படுத்த அனுமதி தரப்பட்டிருக்கின்றது. எல்லா அரசு அறிக்கைகளிலும் தமிழ் பயன்படுத்தப் படுகின்றது. எல்லா வங்கிகளின் ஆண்டறிக்கைகளும் தமிழிலும்

வெளியிடப்படுகின்றன. ஆகையால், சிறுப்பான்மையினரின் பண்பாட்டை முழுமையாக அடக்கி ஒடுக்க வேண்டும் என்ற மனப்பான்மையைச் சிங்கப்பூர் அரசிடம் நாம் காணமுடியாது. பதிலாக, பல் இன தேசியப் பண்பாட்டு அமைப்பைப் பொறுத்தமைவுப் பண்புடன் உருவாக்கி, உயரத் தூக்கி, பல்வேறு இனத்தினரின் பண்பாட்டு மரபைப் பாதுகாத்துப் பேணிவளர்க்க வேண்டும் என்ற எண்ணம் தான் மேலோங்கி இருக்கிறது. 1966ஆம் ஆண்டு, துணைக் குடியரசுத் தலைவர் ஜாகிர் ஹுசேன் (*Vice President Zakir Hussain*) சிங்கப்பூருக்குச் சென்ற போது பின்வருமாறு கூறினார்:- தமிழ் மொழியைச் சிங்கப்பூர் அலுவலக மொழியாக ஏற்றுக் கொண்டதாலும் இந்தியப் பண்பாட்டு மன்றங்கள் உரிமையுடன் செயல்பட்டு வளர்ச்சியடைய வாய்ப்பளித்திருப்பதாலும் சிங்கப்பூரின் தேசிய ஒற்றுமை வளர்ச்சியில் இந்தியர்கள் எதிர்மறை யல்லாத ஒத்துழைப்பைத் தருகின்றார்கள் என்று சிங்கப்பூர் அரசு ஒப்புக் கொள்கின்றது எனத் தெளிவாகத் தெரிகின்றது என அவர் கூறினார்.

தமிழர்கள் சிங்கப்பூர் குடிமகன்கள்:-

மலேசியாவிலும் சிங்கப்பூரில் பிறந்த தமிழர்கள், அதாவது 75 விழுக்காடு தமிழர்கள் சிங்கப்பூர் குடிமகன்களாக இன்று இருக்கின்றார்கள். 1967 அக்டோபர் புள்ளி விவரப்படி 1,46,000 இந்தியர்கள் இருந்தார்கள். இவர்களில் 64,000 பேர்கள் சிங்கப்பூர் குடிமகன்கள், 25,000 பேர்கள் இந்தியக் குடிமகன்கள், 57,000 பேர்கள் நாடற்றவர்கள். சிங்கப்பூரில் பிறந்தவர்கள் எல்லோருக்கும் குடிமகன் உரிமை உண்டு. மேலும் பதிவீடு செய்தவர்களுக்கும் (*Registration*), அயல் நாட்டவர்களுக்கும் குடியுரிமை பெற வாய்ப்பு உண்டு.

தமிழ்க்கல்வி:-

தமிழ்க்கல்வியானது சிங்கப்பூர் நிறுவப்பட்ட காலத்திலேயே தொடங்கப் பட்டது என்றாலும் அது ஒரு வகையில் ஒருமுகப்படுத்தப்பட்டு முறையாகவும் சீராகவும் இயங்கத் தொடங்கியது 2ஆம் உலகப் போருக்குப்பின்னரே என்றே சொல்ல வேண்டும். சிங்கப்பூர் உமறுப்புலவர் தமிழ் மொழி நிலைய மூத்த துணை ஆசிரியரான திரு கோ.கலியபெருமாள் பின்வருமாறு கூறுகின்றார்:- இரண்டாம் உலகப்போருக்கு முன்பே தனியார் பள்ளிகளும் மிஷன் தமிழ்ப் பள்ளிகளுமாக மொத்தம் 18 தமிழ்ப்பள்ளிகள் இருந்தன. அவற்றில் சுமார் 1000 மாணவர்கள் பயின்று வந்துள்ளனர். இரண்டாம் உலகப்போருக்குப்பின்னர் இந்த எண்ணிக்கை படிப்படியாக உயர ஆரம்பித்தது. இந்தக்காலக் கட்டத்தில்தான் அதாவது 1945க்குப் பின்னர்தான் இரண்டாம் மொழியின் முக்கியத்துவத்தை எல்லோரும் உணர்ந்தனர்.

இரண்டாம் உலகப் போர் முடிவுற்றதும் உருவாக்கப்பட்ட புதிய கல்விக் கொள்கையின் முக்கியக் கூறுகளில் ஒன்று இரண்டாம் மொழி கற்பதின் அவசியத்தை வலியுறுத்தியதாகும். அக்கல்விக் கொள்கையின்படி ஆங்கிலப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்குத் தத்தம் தாய் மொழியை இரண்டாம் மொழியாகப் பயில ஊக்கம் அளிக்கப்பட்டது.

பின்னர் 1959ஆம் ஆண்டில் இரண்டாம் மொழி கட்டாயப்பாடமாக்கப்பட்டதால் தமிழை இரண்டாம் மொழியாகப் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியது. தமிழைத் தவிர பிற தென்னிந்திய மொழிகளைத் தங்கள் தாய் மொழியாகக் கொண்ட மாணவர்களும் தமிழை இரண்டாம் மொழியாகக் கற்க முன்வந்தனர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

தமிழ் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகம் ஆகஆக, பல ஆங்கிலப் பள்ளிகளில் மேலும் பல தமிழாசிரியர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டனர். குறைவான மாணவர்களைக் கொண்ட பள்ளிகளில் உள்ள மாணவர்களுக்கும் தமிழ் பயில வாய்ப்பளிக்கும் நோக்கத்தில் சனிக்கிழமைகளில் நடைபெறும் தமிழ் வகுப்புகள் ஒரு சில வட்டாரங்களில் தோற்றுவிக்கப்பட்டன.

இவ்வாறு தமிழ் கற்கும் மாணவர்களது எண்ணிக்கையும் தமிழ்க்கல்வியின் தரமும் படிப்படியாக வளர்ச்சியடையவே, ஆங்கில உயர்நிலைப் பள்ளிகளிலும் தமிழ்க்கல்வியைத் தொடர்ந்து கற்பிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

எனவே 1955க்கும் 1957க்கும் இடைப்பட்ட காலத்தில் மூன்று உயர்நிலைப் பள்ளிகளில் தமிழ் நிலையங்கள் தோற்றுவிக்கப்பட்டன. சுமார் 150 மாணவர்கள் இங்குத் தமிழ் கற்றனர். பினனர் அடுத்தடுத்த ஆண்டுகளில் மேலும் பல தமிழ் நிலையங்கள் தேவைக்கேற்பத் தோற்றுவிக்கப்பட்டன. தற்சமயம் சிங்கப்பூர் கல்வி அமைப்பின் கீழ் ஒன்பது தமிழ்மொழி நிலையங்கள் இயங்கி வருகின்றன. 1955இல் முதன்முறையாகத் தமிழ் மொழியை ஆங்கில உயர்நிலைப்பள்ளிகளில் கற்பிக்கத் தொடங்கிய போது தமிழை ஒரு பாடமாகப் பயின்ற சுமார 50 மாணவர்களே கேம்பிரிட்ஜ் தேர்வு எழுதினர். 1961இலிருந்து கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகப் புகுமுகத்தேர்வில் தமிழையும் ஒரு முக்கியப் பாடமாகக் கொண்டு தேர்வு எழுதினர்.

மேலும், திரு.கலியபெருமாள் உமறுப்புலவர் தமிழ் மொழி நிலையத்தைப் பற்றி பின்வருமாறு கூறுகின்றார்: இவ்வாறு நம் ஆங்கிலப் பள்ளி மாணவர்களுக்குத் தமிழை இரண்டாம் மொழியாகவும் முதல்மொழியாகவும் கற்பிக்கத் தோன்றிய தமிழ்மொழி நிலையங்களுள் ஒன்றே உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம் ஆகும். இந்நிலையம் 1982ஆம் ஆண்டு வரை தமிழ் மொழி நிலையம் என்ற பெயரில் இயங்கி வந்தது.

1945இல் தனியார் தமிழ்த் தொடக்கப்பள்ளியாக நிறுவப்பட்டு, 1945இல் அரசினர் உதவிபெறும் பள்ளியாக இயங்கி 1958இல் அரசினர் பள்ளியாக மாறிய செயிண்ட் ஜார்ஜஸ் தொடக்கப்பள்ளியின் பெயரையே 1982 வரை இந்நிலையம் தாங்கியிருந்தது.

2 ஆம் உலகப் போருக்குப் பின்னர் சிங்கப்பூர் கடையநல்லூர் முசுலிம் லீக் உறுப்பினர்களால் தஞ்சோங்பகார் வீதியில் 1946ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 54 மாணவர்களுடன் இரவு நேரத் தமிழ் வகுப்பாகத் தொடங்கப்பட்டதே இப்பள்ளியாகும். இரவு நேரப் பள்ளியாயிருந்து பின்னர் இது காலைப் பள்ளியாக மாறியது. அதன் பின்னர் 1947 முதல் காலையிலும் பிற்பகலிலும் தமிழ் வகுப்புகள் நடத்தப்பட்டன. இரவு நேரத்தில் ஆங்கில வகுப்புகளும் நடத்தப்பட்டன. இப்பள்ளி 1950இல் மெக்ஸ்வெல் வீதியில் உள்ள கட்டடத்திற்கு மாற்றப்பட்டது.

தொடக்க நிலைக் கல்வியோடு உயர்நிலைக் கல்வியையும் மாணவர்கள் பெற வேண்டும் என்ற காரணத்தால் 1960ஆம் ஆண்டு உமறுப்புலவர் தமிழ் உயர்நிலைப் பள்ளி உருவானது. செயின்ட் ஜார்ஜ்ஸ் தொடக்கப்பள்ளி என்று அழைக்கப்பட்ட இத்தொடக்கப் பள்ளியில் போதுமான மாணவர்கள் இன்மையால் 1975இல் இது மூடப்பட்டது. அது முதல் முற்றிலும் ஆங்கில உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கான தமிழ் மொழி நிலையமாக இது இயங்கி வந்தது. செயின்ட் ஜார்ஜஸ் தமிழ் மொழி நிலையம் என்ற பெயர் மாற்றம் 1978இல் செய்யப்பட்டது. அப்போது பயின்று வந்த மாணவர்களுக்கும் போதுமான இடவசதியும் வேறு பல வசதிகளும் இந்நிலையத்தில் இன்மையால் 1982ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 27ஆம் நாள் பழைய பீட்டி உயர்நிலைப் பள்ளிக் கட்டிடத்திற்கு இது மாறியது. அதே ஆண்டில் மெக்ஸ்வெல் வீதியில் இருந்த உமறுப்புலவர் தமிழ் உயர்நிலைப் பள்ளியில் மாணவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்ததால் டிசம்பர் மாதம் அப்பள்ளி மூடப்பட்டது.

எனவே, சீறாப்புராணம் தந்தருளிய உமறுப்புலவரின் திருப்பெயர் நிலைத்திருக்கும் பொருட்டு 1983 ஜனவரியில் செயின்ட் ஜார்ஜஸ் தமிழ்மொழி நிலையம் என்றழைக்கப்பட்ட இந்நிலையத்திற்குக் கல்வி அமைச்சு அப்பெயரைச் சூட்டியது. அன்றிலிருந்து இந்நிலையம் உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம் என்றே அழைக்கப்பட்டு வருகிறது.

சிங்கப்பூரில் இயங்கிவரும் தமிழ் மொழி நிலையங்களுள் இந்நிலையம் பெரியதொரு நிலையமாகத் திகழ்கிறது. மற்ற நிலையங்களைப் போலல்லாமல் தனி நிலையமாக இது இயங்கி வருகிறது. உயர்நிலை வகுப்பு ஒன்று முதல் புகுமுக வகுப்பு மூன்று வரையில் இங்கு வகுப்புகள் நடை பெறுகின்றன. இத்துடன் பல்கலைக் கழகப் புகுமுக வகுப்பு மாணவர்களுக்கு மேல் நிலையில் தமிழ் மொழி, தமிழ் இலக்கிய வகுப்புகளும் நடைபெறுகின்றன.

ஆங்கில உயர்நிலைப் பள்ளிகளில் உயர்நிலை ஒன்றிலும் பயிலும் மீத்திறம் பெற்ற மாணவர்களுக்குத் தமிழை முதன் மொழியாகப் பயில்வதற்கான வகுப்புகள் 1986ஆம் ஆண்டு முதல் இங்குத் தொடங்கப் பெற்று நடைபெற்று வருகின்றன. பள்ளியின் அமைப்பு வசதி ஆகியவற்றின் அடிப்படையில் சிங்கப்பூரில் முதல்மொழி பயிலும் மாணவர் களுக்கு இந்நிலையம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

ஒரு மேற்பார்வையாளரையும் ஒன்பது ஆசிரியர்களையும் இரண்டு பணியாளர்களையும் கொண்டு இயங்கும் இந்நிலையத்தில் மாணவர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் உள்ளன. 56 உயர்நிலைப் பள்ளிகளிலிருந்து 845 மாணவர்கள் இரண்டாம் மொழியாகத் தமிழ் பயில்கின்றனர். 12 உயர்நிலைப் பள்ளிகளிலிருந்து 17 மாணவர்கள் தமிழை முதன் மொழியாகப் பயில்கின்றனர்.

இந்நிலையத்தின் நூலகம் தமிழ் நூல்களைப் பொறுத்தவரை தேசிய நூலகத்தின் தமிழ்ப்பகுதிக்கு அடுத்த நிலையில் விளங்குகிறது. கதை, கட்டுரை, புதினம், மொழி, கலை, அறிவியல், கணிதம், தொழிலியல், சமூகவியல் தொடர்பான சுமார் 5000 நூல்கள் இங்கு உள்ளன. மாத இதழ்களான கலைமகள், மஞ்சரி, செந்தமிழ்ச்செல்வி, நல்வழி போன்றவையும், தமிழ்முரசு, தமிழ் நேசன் ஆகிய நாளேடுகளும் இங்கு உள்ளன.

இந்நிலையத்தில் கற்பித்தலுக்கான துணைக்கருவிகள் நிறைந்த ஒளிப்படச் சாதன அறை முழு வசதிகளுடன் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. ஒளி ஊடுருவித் தாள்கள், ஒளிப்படவில்லைகள், அறிஞர் பெருமக்களின் வாழ்க்கை வரலாறுகளை விளக்கும் படங்கள், விளக்கப்படங்கள் மாணவர்களின் கலைப் படைப்புகளைக் கொண்ட ஒளிப்பதிவு நாடாக்கள் முதலானவையும், தமிழ் அறிஞர் பலரின் இலக்கியச் சொற்பொழிவுகள் பதிவு செய்யப்பட்ட ஒளி நாடாக்களும் கணிசமான அளவு உள்ளன. அவ்வப்போது தொலைக் காட்சியில் ஒளிபரப்பப்படும் இலக்கியச் சார்புள்ள திரைப்படங்களும், விளக்கப்படங்களும் மாணவர் நலன் கருதி ஒளிப்பதிவு செய்து வைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையத்தில் பயிலும் மாணவர்கள் தமிழில் சிறந்தோங்குவதோடு மட்டும் நின்றுவிடாமல் நமது கலாசாரத்தோடு பின்னிப்பிணைந்துள்ள கலைகளைக் கற்றுக் கொண்டு அவற்றில் தேர்ச்சி பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் வாரந்தோறும் சனிக்கிழமைகளில் பாட்டு, வீணை, வயலின், தபேலா, நடனம், நாடகம் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகின்றன. ஆடல், பாடல், நாடகம், விவாதம், கட்டுரை, புதிர், பேச்சு ஆகியவற்றில் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

பிற நிறுவனங்களும் இந்நிலையத்தில் ஆண்டு தோறும் தொடக்க உயர்நிலைப் புகுமுக வகுப்பு மாணவர்களுக்கான சமயம், கணிதம், மேனிலைக்கணிதம், பௌதிகம், பொருளாதாரம்(மேனிலை), ஆங்கிலமொழி, இலக்கியம், வரலாறு, கணக்கியல் முதலிய பாடங்களில் பயிற்சி வகுப்புகளையும் நடத்தி வருகின்றனர்.

(மூலம்: உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம் ஆண்டு மலர் 1986, சிங்கப்பூர்.)

சிங்கப்பூரில் பள்ளிக்கல்வியில் மாணவர்கள் அனைவரும் முதலாவதாக ஆங்கில மொழியைக் கட்டாயமாகக் கற்க வேண்டும். இரண்டாவதாக சீனம், மலாய், தமிழ் ஆகிய தாய்மொழிகளில் ஒன்றைக் கட்டாயம் கற்க வேண்டும். மேல்நிலை முடிகின்ற வரை அந்நிலை உள்ளது. தமிழ் மாணவர்கள் 100க்கு 10பங்கினர், சீனமொழி கற்கவும் 100க்கு 1 பங்கினர் மலாய் மொழி கற்கவும் செல்கின்றனர். சிங்கப்பூரில் 100க்கு 75 பங்கு மக்கள் சீனர்களே. தமிழ் கற்பிக்கும் பள்ளிகளில் சிங்கப்பூரில் 700 இருப்பதாகவும் தமிழ் மாணவர்கள் தொடக்கப்பள்ளிகளில் 15,000 உயர்நிலைப் பள்ளிகளில் 7,500, புகுமுக வகுப்புகளில் 300முதல் 400 வரையில் படிப்பதாகவும் தெரிகிறது என்று தி. முருகரத்தனம் கூறுகிறார்.

ஆனால் சிங்கப்பூரில் தமிழில் உயர் கல்வி இல்லை. தமிழில் பட்டம் பெறுவோர் தோன்றுதல் இல்லையாகிவிட்டது. சிங்கப்பூரில் சிங்கப்பூர்த் தேசியப் பல்கலைக்கழகம் என ஒரே ஒரு பல்கலைக் கழகம் இயங்குகின்றது. பல்வேறு துறைகளிலும் ஏறத்தாழ 7000 மாணவர்கள் கற்கின்றனர். அவர்களுள் தமிழ் மாணவர்கள் 200 பேர் இருக்கலாம். தமிழ்க்கல்வியினையும், இந்தியக் கல்வியினையும் எடுத்துப் படிக்கும் மாணவர்கள் போதுமான அளவு இல்லாமையால் சிங்கப்பூர்த் தேசியப் பல்கலைக்கழகத்தில் இந்தியக் கல்வித்துறை அல்லது தமிழ்க் கல்வித்துறை ஏற்படுவதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. குறைந்தது 15 மாணவர்களாவது தமிழ்க்கல்வி படிக்க முன் வருவார்களேயானால், சிங்கப்பூர் தேசியப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறையோ, இந்திய கல்வித்துறையோ ஏற்பட வாய்ப்பு இருக்கும் எனத் தெரிகிறது. ஒரு சில ஆண்டுகளுக்கு

முன்னர் தமிழ்க்கல்வித்துறை வேண்டும் என்று தமிழர்கள் சிலர் பல்கலைக்கழகத் துணைவேந்தருக்கு வேண்டுகோள் விடுத்த போது அத்துணைவேந்தர், பல்கலைக்கழகத்தின் சேர்க்கைக் கான விண்ணப்பம் செய்த தமிழ் மாணவர்கள் 32பேர் எனவும், அவர்களுள் சேர்க்கைக்குத் தகுதியுடையவர்கள் 8பேர் எனவும், தமிழுக்கு வர விரும்புவோர் 4பேர் எனவும் ஒரு பள்ளி விவரத்தை அனுப்பிவிட்டு வாளாவிருந்து விட்டார். மலேசியாவும், சிங்கப்பூரும் ஓர் அரச ஓ்இயங்கிய போது 1950ஆம் ஆண்டு வாக்கில் சிங்கப்பூரின் ஒரு பல்கலைக் கழகத்தில் இந்தியக் கல்வித்துறை தொடங்கப்பட்டது. சிங்கப்பூரும், மலேசியாவும் இரு நாடுகளாக பிரிந்தபோது இந்தியக் கல்வித்துறை கோலாலம்பூரில் உள்ள பல்கலைக் கழகத்திற்கு மாற்றப்பட்டது. பல ஆண்டுகளாக சிங்கப்பூர் தேசியப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறை ஏற்பட வாய்ப்பு இல்லாமல் இருந்து வருகின்றது.

சிங்கப்பூரில் அமைந்துள்ள நூற்றுக்கணக்கான பள்ளி ஆசிரியர்கள் பொருட்டுப் பல்வேறு பயிற்சிகளையும் வழங்குவதற்குக் கல்வி கல்லூரி நிறுவனம் 14 ஆண்டுகளுக்கு முன் தோற்றுவிக்கப்பட்டு நடந்து வருகிறது. ஆங்கிலம், சீனம், தமிழ், மலாய் ஆகிய மொழிகள் கற்பிக்கும் பள்ளி ஆசிரியர்கள் இங்கே குறுங்காலப் படிப்பும்,

நெடுங்காலப் படிப்பும், கல்விப் பட்டப் படிப்பும், கல்வி முதுநிலைப் பட்டபடிப்பும் கற்கின்றனர். பி.எச்.டி எனும் ஆராய்ச்சிப் பட்டப் படிப்பும் கற்பிக்கப்படுகின்றது. சிங்கப்பூரில் உள்ள பள்ளிக் கல்வி நிறுவனங்களின் பல்வேறு தேவைகளையும் இந்நிறுவனம் கவனித்துக் கொள்கிறது. இருப்பினும் பொதுவாகப் பயிற்சி பெற்ற தமிழ் ஆசிரியர்கள் குறைவாக உள்ளனர். தமிழ் ஆசிரியர் பயிற்சிக்கும் பாடநூல்கள் தயாரித்தலுக்கும் அந்நிறுவனத்தில் வாய்ப்புகள் முழுமையாக இல்லை. தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட மாணவர்களுக்கும் தமிழ் அறிவில்லாத தமிழர்களுக்கும் தமிழ் கற்பிப்பதற்கு ஏற்ற வாய்ப்பினை அந்நிறுவனம் நாடி நிற்பதாகத் தெரிகிறது.

தமிழாசிரியர் சிலர் இந்தியப் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றவர்களாக இருக்கின்றனர். அவர்களில் ஒரு சிலரே தமிழ் மொழியில் பயிற்சி பெற்றவர்களாக இருக்கின்றனர். அவர்களுடைய பல்கலைக்கழகப் பட்டப்படிப்புக்கேற்ப ஊதியம் தரப்படுவதில்லை. மாறாக சிங்கப்பூர் பள்ளியிறுதிச் சான்றிதழ் பெற்றவருக்குத் தரப்படும் ஊதியமே அவர்களுக்கும் தரப்படுகிறது. ஆயினும், பட்டதாரித் தமிழாசிரியர் இல்லாத குறை சுட்டிக்காட்டப்படும் போதெல்லாம், இந்த ஆசிரியர்கள் பட்டதாரி ஆசிரியர்களாகப் பொது மக்களுக்குக் காட்டப்படுகின்றனர்.

தமிழ்மொழி ஆசிரியர்களால் பயிற்றுவிக்கப்படும் கல்விக் கழகத்தில் கூட மற்றப்பிரிவுகளில் பணியாற்றுவோரிடம் எதிர்பார்க்கப்படும் கல்வித் தகுதி இல்லாதவர்களே தமிழ் மொழி ஆசிரியர்களுக்குப் பயிற்றுவிக்கின்றனர். பள்ளி இறுதிச்சான்றிதழ் உடன் கூடிய ஆசிரியர் பயிற்சி மட்டுமே பெற்றவர்கள் தமிழாசிரியர்களைப் பயிற்றுவிக்கின்றனர்.

தேவைக்கேற்ற தமிழ்ப்பாடநூல்கள் இல்லாமை தொடர்ந்து நிலவி வருகிறது. உயர்நிலைப் பள்ளிக் கூடங்களில் கற்பிக்கப்படும் தமிழ், கற்கப்படும் தமிழ் இன்றும் தமிழ் நாட்டுப் பாடநூல்களையே நம்பியிருக்கிறது. சிங்கப்பூரின் மொழித் தேவைக்கேற்ப

எழுதப்பட்ட தமிழ்நூல்கள் இல்லாமை, மாணாக்கர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் சிக்கல்களை ஏற்படுத்தி வருகின்றன. கடையநல்லூர் முசுலிம் லீக் 'நன்னெறிப் பயனீடு' என்ற தமிழ்ப் பாடநூலைப் பாடநூலாக வெளியிட்டுள்ளது. பேரவையும் பாலர்களுக்கான விளக்கப் பாடநூலையும் வெளியிட்டுள்ளது. இது பாலர் கல்விக்கு அறிமுகப் புத்தகமாகும்.

பொதுவாகச் சிங்கப்பூர் தமிழ் மக்களிடத்திலும் சிங்கப்பூர் அரசிடத்திலும் அமைந்த கவலை பள்ளிகளில் நிலவும் தமிழ்க் கல்வியினை எவ்வாறு காப்பது என்பதும் எவ்வாறு சிறப்புறச் செய்வது என்பதுமேயாகும். பள்ளிகளில் தமிழ்க் கல்வி கற்பிக்கப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களும், பாடநூல்களும் போதிய அளவு இல்லாமையே அங்குப் பெருங்குறையாகக் கொள்ளப்படவேண்டும். தமிழில் பாடப் புத்தங்களை அச்சிடுவதற்குப் பெருஞ்செலவு பிடிக்கிறது. மேல் வகுப்புகளுக்குச் செல்ல செல்ல மாணவர்கள் தொகையும் குறைந்து விடுகிறது. அந்நிலையினை மாற்ற அரசும் தலைவர்களும் ஆவல்கொண்டு உள்ளனர் எனத் தெரிகிறது.

சிங்கப்பூர் தமிழ்

ஆகையால் தமிழ் கூறும் நல்லுலகில் சிங்கப்பூருக்கு என்று சில தனித் தன்மைகள் உள்ளன. தமிழை அதிகாரத்துவ மொழியாக ஏற்றுக்கொண்டுள்ள நிலை, நாடாளுமன்றத்தில் இடம் தந்த சிறப்பு, ஆசியான் மட்டத்தில் தமிழைக் கொண்டு நிறுத்தும் தகுதி, பள்ளிகளில் தொடக்கநிலை முதல் இறுதி நிலை வரை தமிழை ஒரு பாடமொழியாக வைத்திருக்கும் இயல்பு, வானொலியிலும் தொலைக்காட்சியிலும் தமிழுக்கு வழங்கி இருக்கும் வாய்ப்பு, தென் கிழக்காசியத் தமிழுக்கு, தமிழிலக்கிய வளர்ச்சிக்குத் தோற்றுவாய் செய்த சிறப்பு, எழுத்துச் சீர்திருத்தம் பற்றிய முதல் கட்டுரை எழுதிய இயல்பு, முதல் செய்தித்தாள் வெளியிட்டது, மலாயப் பல்கலைக் கழக இந்திய ஆய்வியல் துறைக்கு வித்திட்டது, தென்கிழக்காசியாவில் தமிழில் பயிற்றும் ஓர் உயர்நிலைப் பள்ளியை உருவாக்கியது என்று இவற்றைப் பட்டியல் இடலாம்.

சிங்கப்பூர்த் தமிழை எழுத்துத் தமிழ், பேச்சுத் தமிழ் என்று இருவகைப் படுத்தலாம். பேச்சுத்தமிழை யாழ்ப்பாணத் தமிழ், இந்தியத் தமிழ் என இருவகைப்படுத்தலாம். இந்தியத் தமிழையும் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டு பேசுவோர் தமிழ் என்றும், மலையாளம் தெலுங்கு ஆகியவற்றைத் தாய்மொழியாகக் கொண்டு பேசுவோர் தமிழ் என்றும்வகைப்படுத்தலாம், தமிழை தாய்மொழியாகக் கொண்டு பேசுவோர் தமிழிலும் இல்லங்களில் ஆங்கிலம் பேசுவோர் தமிழ் என்றும் இல்லங்களில் தமிழ் பேசுவோர் தமிழ் என்றும் வகைப்படுத்தலாம். பேச்சுத் தமிழில் உள்ள கூறுகள் சிலவற்றை மலாய், ஆங்கிலம், சீனம் ஆகிய பிறமொழிச் செல்வாக்கு, பொதுக்கூறுகள் என்றும் தலைப்பில் விரிவாக விளக்கலாம்.

"உயர்நிலைப் பள்ளிகளுக்கான தமிழ்" என்னும் பாடநூல்கள், பயிற்சி நூல்கள், ஆசிரியர் கையேடுகள், துணைக்கருவிகள் என்பன சிங்கப்பூர் பாடத்திட்ட மேம்பாட்டுக் கழகத்தால் தயாரிக்கப்பட்டுள்ளன. கல்வியமைச்சால் அங்கீகரிக்கப்பட்ட பாடத்திட்டத்திற்கு ஏற்பத் தயாரிக்கப்பட்டிருக்கும் இந்தப் பாடநூல்கள் தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பிக்கும் எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

பல ஆண்டுகள் உயர்நிலைப் பள்ளிகளில் தமிழ் கற்பித்துப் பட்டறிவு பெற்ற ஆசிரியர்களால் இப்பாட நூல்கள் எழுதப்பட்டுள்ளன. கல்விக் கழகத்தில் பணியாற்றும் மொழியியல் வல்லுநர் டாக்டர் சுப. திண்ணப்பன் அவர்கள் மதியுரைஞராய் இருந்து அரிய கருத்துரைகள் வழங்கியுள்ளார். இந்தப் பாடநூல்கள் பல்வேறு பள்ளிகளில் வெள்ளோட்டமாகப் பயன்படுத்தப்பட்டுத் தேவையான மாற்றங்கள் செய்த பின்னர் இறுதி வடிவம் பெற்றன.

சிங்கப்பூர் சூழலுக்கும் மாணவர்களின் தரத்திற்கும் ஏற்ற வகையில் பாடப்பொருள்களும் பயிற்சிப் பகுதிகளும் இந்நூல்களில் அமைக்கப்பட்டுள்ளன. பாடங்கள் கவர்ச்சியாகவும், மாணவர் கவனத்தை ஈர்க்கும் வண்ணம் அமைவதற்குத் தேவையான, ஒளியூடுருவித் தாளில் படியெடுப்பதற்குரிய படங்கள், ஒலி, ஒளி வண்ணப்பட வில்லைகள் ஆகியவை தயாரிக்கப்பட்டுள்ளன. மேலும் மாணவர்களின் கேட்கும் திறன் வளர உதவும் கேட்டல் கருத்தறிதல் ஒலி நாடாக்களும் இசை கூட்டிப் பதிவு செய்யப்பட்ட செய்யுள் ஒலிநாடாக்களும் தயாரித்து வழங்கப்பட்டுள்ளன. இவை மாணவர்களின் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய அடிப்படை மொழித் திறன்கள் வளர உதவும்.

பாடநூல்கள் சிறப்புக் கூறுகள்

1. உள்நாட்டுச் சூழலில் சில பாடங்கள் எழுதப்பட்டுள்ளன.

2. நாடு, சமூகம், பண்பாடு, சமயம், மொழி, இலக்கியம், அறிவியல், பெரியார் வாழ்க்கை வரலாறு, அறநெறி, தொழில் போன்ற பல்வேறு துறைகளைச் சார்ந்த பாடங்கள் இடம் பெற்றுள்ளன.

3. கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய திறன் வளர்க்கும் குறிக்கோளை மனத்தில் கொண்டு பாடங்கள், இலக்கண விளக்கங்கள் எழுதப்பட்டுள்ளன.

4. கடவுள் வாழ்த்து, நீதி, கதை, வருணனை ஆகிய கூறுகள் சார்ந்த செய்யுட்கள் இடம்பெற்றுள்ளன.

பயிற்சி நூல்கள் சிறப்புக் கூறுகள்

1. சிங்கப்பூர் சூழலுக்கு ஏற்றவாறும், மொழி, பண்பாடு, சமயம் போன்றவற்றை கருத்திற்கொண்டும் கருத்தறிதல் பயிற்சிகள் அமைக்கப்பட்டுள்ளன.

2. மாணவர்கள் பலதரப்பட்ட செய்திகளையும் கருத்துக்களையும் படித்துப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக விளம்பரங்கள், அறிவிப்புகள், கருத்துணர் பகுதிகள் முதலானவை கருத்தறிதலுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

3. மொழிப்பயிற்சி, இலக்கணப் பயிற்சிக் கூறுகள் கல்வியமைச்சின் பாடத்திட்டத்தினை ஒட்டியே தயாரிக்கப்பட்டுள்ளன.

4. மாணவர்கள் பிழையின்றி எழுதுவதற்கு ஒலிவேறுபாட்டுச் சொற்களிலும், ஒரு சொல் பல பொருள் சொற்களிலும், பல பொருள் ஒரு சொல் சொற்களிலும் போதிய பயிற்சிகள் கொடுக்கப்பட்டுள்ளன.

5. வலி மிகுதலைத் தெரிந்துகொள்வதற்குத் தேவையான பயிற்சிகள் கொடுக்கப்பட்டுள்ளன.

6. மொழி வளர்ச்சிக்குத் தேவையான மரபுத் தொடர்கள், பழமொழிகள் இணைமொழிகள், உவமைத் தொடர்கள், இரட்டைக் கிளவிகள் ஆகியவற்றில் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

7. மாணவர்களின் எழுத்தாற்றலை வளர்க்கும் பொருட்டு உரையாடல், கடிதம் வரைதல், வாக்கியம் அமைத்தல், கோடிட்ட இடங்களை நிரப்புதல் போன்ற பயிற்சிகள் வகுப்பிற்கேற்றவாறு தரப்பட்டுள்ளன.

ஆசிரியர் கையேடுகள் சிறப்புக் கூறுகள்

1. பாடநூல்களில் இடம்பெற்றுள்ள பாடங்களின் நோக்கங்கள் ஆசிரியர்களுக்குத் தேவைப்படும் விவரங்கள், கற்பிக்கும் முறைகள் பற்றிய ஆலோசனைகள் ஆகியவை கையேட்டில் விளக்கப்பட்டுள்ளன.

2. மௌன வாசிப்பு, உரகக்ப் படித்தல் ஆகியவற்றில் சிறப்பு நோக்கங்கள் விளக்கப்பட்டுள்ளன.

3. வாசிப்பு, இலக்கணம், செய்யுள், மரப்புத்தொடர்கள், கேட்டல் கருத்தறிதல் ஆகியவற்றிற்கான விளக்கங்கள், வழிகாட்டிக் குறிப்புகள் ஆகியவை இடம்பெற்றுள்ளன.

4. ஒவ்வொரு பாடத்திற்குமுரிய கற்பித்தல் பொது நோக்கம், சிறப்பு நோக்கம் ஆகியன விளக்கப்பட்டுள்ளன.

ஒலி நாடாக்கள்

1. மாணவர்களின் கேட்டல் திறனை வளர்த்தல்.

2. மாணவர்கள் இசையுடன் கூடிய செய்யுட்களின் ஓசை நயத்தை அறிந்து பாடி மகிழ ஊக்கமூட்டுதல்.

3. கேட்டல்-கருத்தறிதல் திறனை வளர்ப்பதற்காக உரையாடல், கதை, கட்டுரை, சிற்றுரை, நாடகம், பாடல் ஆகியவை தயாரிக்கப்பட்டுள்ளன.

ஒலி நாடாக்கள்

கேட்டல்-கருத்தறிதல்	பாடநூல் செய்யுட்கள் (உ.நி. 1, 2, 3, 4)	
உரையாடல்-உரைநடை (உ.நி. 1, 2, 3)	நாடகம் (உ.நி. 1, 2, 3, 4)	பாடல் (உ.நி. 1, 2)
கதை (உ.நி. 1)	கட்டுரை (உ.நி. 1, 2, 3, 4,)	சிற்றுரை (உ.நி. 3, 4)

ஒளியூடுருவிப் படங்களும் வண்ணப்பட வில்லைகளும்
OHP MASTERS/COLOUR SLIDES

1. ஒளியூடுருவிப் படங்களும் வண்ணப்பட வில்லைகளும் பாடங்களில் இடம் பெறுகின்ற தகவல்கள், நிகழ்ச்சிகள் முதலியவற்றை விளக்குவதற்கும் கதை மாந்தர்களின் உருவங்கள் மாணவர்கள் மனத்திற் பதிவதற்கும் உதவியாய் விளங்குகின்றன.

2. செவிவழி கேட்ட செய்தியைக் கண் வழி பார்த்துப் பாடத்தை மேலும் தெளிவாகக் கற்க இவை உதவுகின்றன.

3. உயர்நிலை 1,2,3 ஆகிய வகுப்புகளுக்கு ஒளியூடுருவிப் படங்களும் வண்ணப்பட வில்லைகளும் தயாரித்து வழங்கப்பட்டுள்ளன.

4. உயர்நிலை வகுப்பு நான்குக்கு ஒலியுடன்கூடிய வண்ணப்பட வில்லைகள் தயாரித்து வழங்கப்பட்டுள்ளன.

சிங்கப்பூர் அரசியலில் தமிழர்களின் பங்கு

சிங்கப்பூர் அரசின் குடியரசுத் தலைவர் நாடாளு மன்றத்தால் நான்கு ஆண்டிற்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படுகின்றார். பொதுவாக இவர் பிரதமரின் (முதலமைச்சர்) ஆலோசனைப்படி நடப்பார். குடியரசுத் தலைவர் முதல் அமைச்சரை நியமனம் செய்கிறார். முதல் அமைச்சர் நாடாளு மன்றத்திற்குப் பதிலளிக்க கடமைப்பட்டவர்.

தமிழர்களுக்கு என்று ஓர் பெரிய அரசியல் கட்சி கிடையாது. 7-8-1962 இல் தோன்றிய சிங்கப்பூர் இந்தியர் காங்கிரஸ் ஓர் பெரிய கட்சி இல்லை. சீனர்களின் ஆதிக்கம் மேலோங்கியதால் 1948ஆம் ஆண்டிற்குப் பின் சிங்கப்பூர் தேசிய காங்கிரசின் முக்கியத்துவம் குறையத் தொடங்கியது. பொதுவாக. இக்கட்சியில் வடஇந்திய வணிகர்களின் ஆதிக்கம் மேலோங்கியிருந்தது. தமிழ், மலையாளி தொழிலாளர்களுடன் இவர்களுக்கு நெருங்கிய உறவு கிடையாது. ஆகையால் 1948ஆம் ஆண்டிலிருந்து தமிழர்கள் சிங்கப்பூரில் உள்ள வேறு பல கட்சிகளிலும் உறுப்பினர்களாக தொடங்கினர். மிக முக்கிய கட்சியான செயற்படுமுறை கட்சியிலும் (PAP) சேர்ந்தனர். PAP, பாரிஸான் சோஷியலிஸ கட்சிகள் அமைப்பதற்கு தமிழ் தீவிரவாதிகளும் முக்கிய பங்கேற்றனர். சிங்கப்பூர் அரசில் அமைச்சர்களாக பணிபுரிந்த சில தமிழர்கள் தேவன்நாயர்(1981ஆம் ஆண்டில் குடியரசுத் தலைவராக பொறுப்பேற்றார்), தனபாலன் (வெளி நாட்டுறவு அமைச்சர்), ஜெயகுமார் (உள் துறை அமைச்சர்) , இரண்டாவது துணைப் பிரதமர் ராஜரத்தினம்(*Second Deputy Prime Minister*), நாடாளுமன்ற உறுப்பினர் ஜபார். 1972இல் அமைக்கப்பட்ட சிங்கப்பூர் ஜஸ்டிஸ் கட்சியின் செகரட்டரி-ஜெனரலாக முத்துச்சாமி ராமசாமி எனும் தமிழர் இருக்கின்றார். 1961இல் அமைக்கப்பட்ட தொழிலாளர் கட்சியின் (*Workers party*) செகரட்டரி- ஜெனரலாக ஜெயரத்னம் என்பார் இருக்கின்றார்.

இனி, சமய முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்களையும், சட்டங்களையும் பரிசீலனை செய்ய தலைமை நீதிபதி தலைமையின் கீழ் உள்ள 21 உறுப்பினர்கள் அடங்கிய குடியரசுத் தலைவர் மன்றம் (*Presidential Council*) ஒன்று செயல்பட்டு வருகின்றது. இனி. சமய

வேறுபாடுகள் செய்யப்படுகின்றதோ, சிங்கப்பூர் குடிமகன் அடிப்படை உரிமைகளை மீறி இருக்கின்றனவா என இம்மன்றம் பரிசீலனை செய்கின்றது.

செய்திப் பரவல் தொடர்புச் சாதனங்கள் :

தேசியக் காப்பகங்கள்

சிங்கப்பூர் தேசிய நூலகத்தில் 72,657 (1982ஆம் ஆண்டு) தமிழ் நூலகள் உள்ளன. 1887 முதல் 1890 வரை சிங்கப்பூரில் வெளி வந்த தமிழ் ஏடான சிங்கைநேசன் அந்நூலகத்தில் பேணிப் பாதுகாக்கப் பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. அவ்வாறு ஏறத்தாழ 40 ஆண்டுகளாக நடைபெற்று வரும் தமிழ் முரசின் ஏடுகளும் நுண் படமாக்கப்பட்டு அந்நூலகத்தில் பேணி பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அவ்வகையில் அந்நூலகம் ஆராய்ச்சிக்குப் பயன்படும்.

தமிழருக்கு உரிய பகுதி ஒன்றும் தேசிய அரும் பொருட்காட்சியகத்தில் இல்லை. அடுத்து தேசியப் பழஞ்சுவடி, பழம் பதிவேடுகள் காப்பகம்(National Archives and Records Centre) ஒன்று இயங்குகிறது. கி.பி.1800 முதலான அரசாவணங்கள் அங்குள்ளன.

பத்திரிக்கைகள், செய்தித்தாள்கள்

சிங்கப்பூரில் தமிழ் வரலாறு வண்ணை நகர் சதாசிவ பண்டிதரால் 1887இல் ஏற்படத் தொடங்கியது. 1887இல் சிங்கைநேசன் எனும் தமிழ்ச் செய்தித்தாள் வெளிவரத் தொடங்கியது. ஆயினும் 1876இல் சிங்கை வர்த்தமானி எனும் பெயரில் ஒரு பத்திரிக்கை வெளிவந்திருப்பதாகக் குறிப்புக் கிடைக்கிறது. சுதேசமித்திரன், தேசபக்தன், தினமணி, தமிழ்நாடு முதலிய தமிழ் நாட்டுப் பத்திரிக்கைகள் அங்குப் பிரபலமாயின. விடுதலை இதழால் சுயமரியாதை இயக்கம் பரவியது. அப்பத்திரிக்கைகளைப் பின்பற்றி தமிழ் முரசு, சீர்த்திருத்தம், முன்னேற்றம், தமிழன், ஜோதி என்பன சமூக சீர்திருத்தத்தை விழையும் ஏடுகளாகச் சிங்கப்பூரில் மலர்ந்தன. வேல், திரையொளி, இந்தியன் மூவி நியூஸ், கொள்கை முழக்கம், முரசொலி ஆகிய இதழ்களும் சிங்கப்பூரிலிருந்து வெளியாகின்றன. தமிழ் மொழியின் வளர்ச்சிக்குத் தமிழ் முரசு ஆற்றியுள்ள பணி சிறப்பானது. கோ.சாரங்கபாணியார் இந்த ஏட்டை 1936இல் தோற்றுவித்தார். தமிழ் முரசின் விலாசம் 139-14 Lavender St. Singapore. இதன் ஆசிரியர் ஐயராம் சாரங்கபாணி. Circulation daily 6000, 10,000 on Sunday Tel. 2980249. சிங்கப்பூரின் ஆங்கிலத் தேசிய நாளிதழ் வாரந்தோறும் தமிழிலும்,ஆங்கிலத்திலும் இலக்கியப் பண்பாட்டுக் கட்டுரைகளை வெளியிட்டு வருகிறது. தமிழர் பேரவை 'பேரவை' என்ற ஏட்டை தமிழிலும், ஆங்கிலத்திலும் 1980 முதல் வெளியிட்டு வருகிறது. சிங்கப்பூர் தேசியப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரவை 1980 முதல் 'தமிழ்ச்சுடர்' ஏடு நடத்துகிறது.

தமிழ் எழுத்தாளர்கள், சங்கங்கள்

சிங்கப்பூரில் சுமார் 150 கவிஞர்களும் 20 எழுத்தாளர்களும் 5 நாவல் ஆசிரியர்களும் அற்புதமாகப் பணியாற்றுகின்றனர் என 1982ஆம் ஆண்டு தமிழ்முரசு ஆசிரியர் திரு. வி.என்.எம்.முகைதீன் கூறினார். சிங்கப்பூர் எழுத்தாளர்களுள் பிரபலமானவர்கள் இளங்கண்ணன், ராமாகண்ணபிரான், பாவலர், என். பழனிவேல், ஏ.பி. சண்முகம்,

ஈ.வி.சிங்கன் முதலியவர்கள் ஆவார்கள். ஒவ்வொரு ஆண்டும் கிட்டத்தட்ட 8 அல்லது 10 தமிழ் சிறுகதைகள், கவிதைகள் வெளிவருகின்றன.

சென்ற நூற்றாண்டில் தமிழகத்தின் நாகூரிலிருந்து சென்ற முன்ஷிஅப்துல்லா என்னும் இசுலாமியர் ஒருவர் முதன் முதலாக மலாய் மொழியில் இலக்கணம் எழுதினர், வசன நூல்கள் எழுதினார். இவருக்குப் பின்னரே மலாய் மொழியில் இலக்கிய வளர்ச்சி தொடங்கியது. இவர் நூல்களைத் திரட்டிச் சென்று முனைவர் இராம. சுப்பையா மொழி பெயர்த்து பல்கலைக்கழக வெளியீடாக வெளியிட்டுள்ளார் என தமிழ் முரசின் ஆசிரியர் திரு. மொகைதீன் கூறுகின்றார்.

சிங்கப்பூரில் 50 இந்தியச் சங்கங்களுக்கு மேல் இருக்கின்றன. 1. செம்பாவங் தமிழர் மன்றம். 2. மாதவி இலக்கிய மன்றம். 3.கரம்பகுடி திருவள்ளுவர தமிழ் வளர்ச்சிக் கழகம். 4. தமிழ் இளைஞர் மன்றம் 5. தமிழ்வேல் நாடக மன்றம் 6. தமிழர் இயக்கம் 7. தமிழர் சீர்த்திருத்த சங்கம் 8.இலங்கைத் தமிழர் சங்கம், 9. கடயநல்லூர் முசுலீம் லீக் போன்ற பல சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

வானொலி, தொலைகாட்சி

சிங்கப்பூர் வானொலியில் சீனம், ஆங்கிலம், மலேசிய மொழி ஒலிபரப்புக்குச் சமமாக அதிக அளவில் தமிழ் நிகழ்ச்சிகள் ஒலிப்பரப்பப்படுகின்றன. நாள்தோறும் காலை 6 முதல் 9 மணி வரை இடை விடாமல் தமிழ் ஒலிபரப்பு நடைபெறுகிறது. ஏ.எம் எனப்படும் மத்திய, சிற்றலை வரிசைகளிலும் எஃப் எம் எனப்படும். ஒலி அலைச்சீர் வரிசையிலும் தமிழ் நிகழ்ச்சிகள் ஒலிப்பரப்பப்படுகின்றன. உலகில் முதன் முறையாக சிங்கப்பூரில் தான் இருவழி ஒலிபரப்பில் (எஃப் எம் ஸ்டீரியோ) தமிழ் நிகழ்ச்சிகள் ஒலி பரப்பாகின்றன. புத்தகவளம்-இலக்கியச்சோலை என்ற பகுதியில் தமிழ் நூல்கள் அறிமுகம் செய்யப்படுகின்றன. ஐம்பெருங்காப்பியங்களை நாடகமாக்கி ஒலிபரப்பியது சிங்கப்பூர் வானொலியின் சிறப்பான பணியாகும்.

தொலைக் காட்சியிலும் தமிழ்மொழி நிகழ்ச்சிகள் காண்பிக்கப் படுகின்றன. சேனல்-8 (channel 8) மூலம் தமிழ் மொழி, மாண்டரின் மொழி நிகழ்ச்சிகள் ஒளியேறுகின்றன. வாரம் ஒரு முறை தமிழ் திரைப்படங்கள் காண்பிக்கப்படுகின்றன. தொலைக்காட்சியில் இராமாயண நாட்டிய நாடகம் புதன்கிழமை தோறும் நடந்தது SBC Television Singapore, Maxwell Road, POB 1902 Singapore 19036, F.1963. Colour transmission since 1974.

தவிர சிங்கப்பூரில் உள்ள 49 சினிமா தியேட்டர்களிலும் தமிழ்ப்படங்கள் காண்பிக்கப்படுகின்றன.

வங்கிகள்

மலேசியாவில் இந்திய வங்கிகள் கிடையாது.ஆனால்சிங்கப்பூரில் 5 இந்திய வங்கிகள் இருக்கின்றன.

1. பாங்க் ஆப் இந்தியா (Bank of India) 108 Robinson Road, Singapore 0106, tel 2220011,telex 21484.

2. இந்தியன் பாங்க் 59 Robinson Road 00-01, Public Insurance Bldg, Singapore 0106 Tel 2229433 telex 34885.

3. இந்தியன் ஓவர்சீஸ் பாங்க் 5 Shanton way, 01-01. OIC Bldg, Singapore 0106 TEl 2251100 Telex 23098.

4. யுனைடட் கமர்சியல் பாங்க் (இந்தியா) 140-142, Robinson Road, 01-00 Chow House, Singapore, 0106 tel 2239722, telex 21682.

5. ஸ்டேட் பாங்க் ஆஇந்தியா 6 Shanton way 10-01 DBS Bldgs. Singapore 0106 Tel 2222033 Telex 23184 .

இந்தோனேசியா

சுமத்திரா, சாவா, பாலித் தீவுகள் எனக் கூறினல் பொதுவாக எல்லாத் தமிழர்களுக்கும் ஓரளவு தெரியும். இந்தச் சுமத்திரா, சாவா, பாலி, காலிமன்தான் (போர்னியோ), சுலவேசி (செலிபிஸ்) இரியன் ஜயா (நியூகினி) போன்ற 13,700 தீவுகளடங்கிய பகுதிகளைத்தான் இன்று இந்தோனேசியா என அழைக்கின்றார்கள். இத்தீவுக் கூட்டங்கள் மலேயா தீபகற்பத்திலிருந்து நியூகினி வரை பரவிக் கிடக்கின்றன. இரியன் ஜெயாவின் கிழக்குப் பகுதியிலும், மலேசியாவின் வடபோர்னியாவின் பகுதிகளாக இருக்கும் சரவாக், சபா எல்லைகளிலும் மட்டும்தான் இந்தோனேசியாவின் நில எல்லை அமைப்புகளைப் பார்க்கலாம். தென்சீனா கடலும் பசிபிக் பெருங்கடலும், இந்து மாபெருங்கடலும் 74,101 சதுர மைல்கள் அடங்கிய இத்தீவுக் கூட்டங்களை சுற்றிச் சுற்றி வருகின்றன.

தமிழ் நாடு-இந்தோனேசியா தொடர்பும் வரலாறும்

சங்க கால நூல்களில் இந்தோனேசியாவைப் பற்றிய சில செய்திகள் நமக்குக் கிடைக்கின்றன. இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ், மொலுக்காஸ் போன்ற தீவுப் பகுதிகளை முந்நீர்ப் பழந்தீவு என இந்நூல்களில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. என்று சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இத்தீவுகளைப் பன்னீராயிரம் என மணிமேகலைக் காப்பியம் குறிப்பிடுகின்றது. தமிழர்கள் சாவாவைச் சாவாகம், சாவகத் தீபம், யவத் தீபம் என்றும் சுமத்திராவை சிரிவிசயம், சொர்ணதீபம் என்றும் அழைத்து வந்தனர். தமிழ் வணிகர்களும் தமிழ்ப் பெருமக்களும் சங்க காலத்திற்கு முந்திய காலத்திலிருந்தே சாவகத்துடன் தொடர்பு வைத்திருந்தனர் என நம்பப்படுகின்றது. பொதுவாக அந்தமான், நிக்கோபார் தீவுகள் வழியாக மலேசியா, இந்தோனேசியா தீவுகளுக்குப் பண்டைய தமிழர்கள் சென்றார்கள்.

பொதுவாக சாவகம்(சாவா) பற்றிய செய்திகள் ஐம்பெருந் தமிழ்க் காப்பியங்களுள் ஒன்றாகப் புகழ்ந்து கூறப்பெறும் மணிமேகலையில் இடம் பெற்றிருக்கின்றன. மணிமேகலையில் சாவக நாட்டிலுள்ள நாகபுரம் என்னும் பட்டினம் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் பூமி சந்திரன், புண்ணிய ராசன் போன்ற அந்நாட்டு அரசர்கள் பெயர்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. தமிழகத்திற்கும்

சாவகத்திற்கும் நீர்வழிப் போக்குவரத்துக்கள் நிகழ்ந்து வந்துள்ளன.

மாநீர் வங்கம் வந்தோர் வணங்கிச்
சாவக நன்னாட்டுத் தன்பெயல் மறுத்தலின்
ஊனுயிர் மடிந்த துரவோயென்றால்
அமரர்கோ னாணையினருந்துவோர்ப் பெறாது
குமரி மூத்தவென் பாத்திர மேந்தி
அந்த நல்நாட்டுப் புகுவெதன் கருத்தென
வங்க மாக்களோடு மகிழ்வுடனறிக்
கால் விசை கடுகக் கடல் கலக் குறுதலின்
மாயிதை மணி பல்லவத்திடை விழ்த்துத்
தங்கிய தொருநாட்டானாங் கிழிந்தனன்
இழிந்தோனேறின னென்றிதை யெடுத்து
வழங்கு நீர் வங்கம் வல்லிருட் போதலும் (மணி மேகலை 14:73-85)

என்று மணிமேகலை கூறுகிறது.

இஃதன்றி மணிமேகலை சாவகம் போந்து, அங்கு ஆட்சி நடத்திய ஆபுத்திரனோடு மணிபல்லவம் வந்து அங்கே தீவ திலகையின் மூலம் காவிரிப் பூம்பட்டினம் கடல் கொள்ளப்பட்டதையும் மாதவியும சுதமதியும் அறவன அடிகளோடு வஞ்சி நகர் சென்றதையும் அறிந்து அங்கிருந்து விண்வழியாக வஞ்சிநகர் போந்ததும் மணிமேகலையில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

இதனை ஆதரித்து அறிஞர் முதலியார் சி. இராசநாயகம் அவர்கள் பண்டைய யாழ்ப்பாணம் என்னும் நூலில், "கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் தென் இந்தியாவில் உள்ள பாண்டிய நாட்டினின்று கப்பல்கள் சாவகம் சுமத்திரா முதலிய நாடுகளுக்கு யாழ்ப்பாணத்திலுள்ள துறைமுகத்தின் வழியாகச் சென்றன. இதற்குச் சான்று மணிமேகலை போன்ற தமிழ் நூல்களிலும் காணக்கிடைக்கின்றது". என்று குறிப்பிட்டுள்ளார்.

திரி திர தயா என்னும் பிராமணன் கம்போடியாவிலிருந்து 800 கிளிங் குடும்பங்களோடு சாவகம் போந்து பிரமாரிகாளி என்ற சாவகப் பெண்ணை மணந்து அந்நாட்டிற்கு அரசனானான் என்று அந்நாட்டுப் பழங்கதைகள் கூறுகின்றன. சாவகத்தின் முதல் மன்னனுக்குச் சீர்மாறன் என்று பெயர். இந்தப் பெயர் சாவகத்தின் அரச பரம்பரை தமிழர்களோடு நெருங்கிய சம்பந்தம் உடையதென்பதை நன்கு விளக்குவதாக இருக்கிறது. சாவகத்திலுள்ள பட்டாக் (**BATAKS**) என்னும் மக்களிடையே இன்றும் திராவிட குடும்பப் பெயர்கள் வழங்குகின்றன என்று அறிஞர் ஆர். பானர்ஜி கூறுகின்றார்.

வின்சென்ட் ஸ்மித் என்னும் வரலாற்றாசிரியர் திராவிடர்கள் எப்பொழுது சாவகத்தில் குடியேறினர் என்பதை ஆராய்ந்து சீன நூல் ஒன்றிலிருந்து ஒரு சான்று காட்டியுள்ளார். அஃதாவது, "சீன நாட்டில் குவாங்-வர்-டி (*Kwang-wa-ti*) என்னும் மன்னன் ஆட்சி செலுத்திய காலத்தில் சாவகத்தீவில் இந்துக்கள் குடியேற ஆரம்பித்தார்கள் என்று அந்நூலில் கூறியிருப்பதை நாம் நம்பாமல் இருப்பதற்கு வழியில்லை" என்பதே அவரது

கருத்து (இக்காலம் கி.பி.75 ஆம் ஆண்டாக இருக்கலாம்). கி.பி. 3ஆம் நூற்றாண்டிலே சுமத்திராவில் தமிழர் நாகரிகம் தழைக்க ஆரம்பித்தது.

பல்லவர்கள் காலத்தில் (கி.பி. 550-750) கடல் மார்க்கம் வழியாக இந்தோனேசியாவிற்குப் பல தமிழ்ப் பெருமக்கள் சென்றார்கள் என்பதற்குச்சான்றுகள் இருக்கின்றன. இது சம்பந்தமாக இந்தோனேசியாவில் கல்வெட்டுகள் கூட கிடைத்திருக்கின்றன.

பல்லவ இரண்டாம் நரசிம்மன் எனும் புகழ்வாய்ந்த இராசசிம்மன் காஞ்சியில் கயிலாசநாதர் கோயிலை எடுப்பித்தவனாவன். அக்கோயிலின் வெளிப்புற மதிலுக்கு அடுத்துத் தெற்குப் பக்கத்தில் பலசிறுகோயில்கள் உள்ளன. அவற்றுள் மூன்றாவதாக உள்ள கோயிலை இராசசிம்மனுடைய மனைவியருள் ரங்கபதாகை என்னும் அரசி தம் சொந்தசெலவில் கட்டியுள்ளார்.

இதை அக்கோயிலில் உள்ள மூன்று சமஸ்கிருத சுலோகங்களைக் கொண்ட ஒரு கல்வெட்டு தெரிவிக்கிறது. அதில் ரங்க பதாகையின் தந்தையாரின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. 'சைல அதிராஜா' என்பது ரங்க பதாகையினுடைய தகப்பனாரின் பெயர் எனத் தெரிகிறது. 'சைல அதிராஜா' என்பது இயற்பெயராக தோன்றவில்லை. சிறப்புப் பெயராக இருத்தல் வேண்டும். இப்பெயருடைய அரசன் அக்காலத்தில் தென் இந்தியாவிலோ, வடஇந்தியாவிலோ வாழ்ந்ததற்குரிய ஆதாரங்கள் ஒன்றும் கிடைக்கவில்லை. இந்தப் பெயர் இந்தோனேசிய சைலேந்திர அரசனையே சுட்டுவதாகக் கொள்ளுவது பொருத்தமாக அமைகிறது என்று தி.நா. சுப்பிரமணியன் அவர்கள் கருதுகிறார். சைலேந்திரருடைய ஆட்சியின் தொடக்க காலகட்டமே பல்லவரின் ஆட்சிக்காலமாகும். ஓர் அரசமரபு தோன்றும் பொழுது அக்கம்பக்கத்திலுள்ள அரசர்களோடு திருமண உறவுகொண்டு தங்கள் நிலையை வலுப்படுத்திக் கொள்ள முயலுவது இயற்கை (T.N.Subramaniyan, The Pallavas of Kanchi in Southeast Asia 43. டாக்டர் க.த.திருநாவுக்கரசு பக்.407-408)

தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழ்ப்பண்பாடு

சைலேந்திரர் மலையத்துவச பாண்டியன் வழியினர் என சில அறிஞர்கள் கருதுகின்றார்கள். பேராசிரியர் கே. ஏ. நீலகண்டசாஸ்திரியார் அவர்கள் 'மலையரசன்' (கிரீசசன்) என்ற பெயர் பெரிதும் சிவபெருமானுக்குரிய பெயராகப் பேசப்படுகிறது என்பர். இந்தோனேசிய மக்களின் நம்பிக்கைகளை ஏற்றுக்கொண்ட இந்துக்கள், அதைத் தங்களுக்கு ஏற்றவகையில் மாற்றியும் திருத்தியும் அமைத்துக்கொண்டு இருக்கலாம். தமிழகத்தைச் சேர்ந்த பாண்டிய மன்னர்கள் சிவபெருமானுடைய மரபிலே வந்தவர்கள் என்று உரிமை கொண்டாடியவர்களாவர். சாவக அரசர்கள் "மீனாங்கித சைலேந்திரர்" என்ற பட்டபெயரை சூட்டிக்கொண்டு இருந்தனர் என்பதை அவர்களுடைய கல்வெட்டுக்களால் அறிகிறோம். "சைலம்" என்ற வடசொல்லிற்கு "மலை"என்பது பொருள்; இந்திரர் என்ற சொல்லிற்குத் "தலைவர்" அல்லது "அரசர்" என்பது பொருள்.

"மீனாங்கித" என்பதற்கு "மீனினை இலச்சினையாக உடைய" என்பது பொருளாகும். எனவே, அத்தொடருக்கு "மீனினை இலச்சினையாக உடைய மலைகளின் தலைவர்" என்பது பொருளாக இருக்கவேண்டும். பாண்டியருடைய கொடியில் எப்பொழுதும் இரட்டை கயல் மீன் பொறிக்கப்பட்டிருந்தமை யாவரும் அறிந்த செய்தியாகும். தென்கிழக்கு ஆசியாவை ஆட்சிபுரிந்த சைலேந்திரர்களுக்கும் கயல்மீன் சின்னமாக, இருந்தமை இங்குக் குறிப்பிடத்தக்கது. எனவே சைலேந்திரர்கள் தமிழகத்தில் தோன்றியவர்களாக இருக்கவேண்டும். இவர்கள் திருவிளையாடல் புராணத்தில் குறிப்பிடும் 'மலையத்துவச பாண்டியன் வழிவந்தவராக இருக்கலாம் என கே.ஏ.நீலகண்டசாஸ்திரி கூறுகின்றார். இக்கூற்றை ஜே. பிரசிலஸ்கி ஜி கோயிடஸ் போன்ற அறிஞர்கள் ஏற்கமறுக்கின்றனர்.

சோழ மன்னர்களின் கல்வெட்டுகள் சிலவற்றிலும் சாவகம் குறிப்பிடப்பட்டுள்ளது. லெய்டன் சாசனம் என்ற இராசஇராச சோழனின் சாசனத்தில் கடாரத்தரசன் (கெடா மன்னன்) சூளாமணிவர்மனாலும் அவன் மகன் மாற விஜயோத்துங்க வர்மனாலும் நாகப்பட்டினத்தில் கட்டப்பெற்ற ஒரு பௌத்த விகாரம் கி.பி. 1006-ஆம் ஆண்டில் கட்டுவதற்குத் தொடங்கப்பட்டது. அதற்கு இராசஇராசப் பெரும்பள்ளி என்று பெயர் வைக்கப்பட்டது. இதற்கு இராசஇராசன் ஆனைமங்கலம் என்னும் ஊரை நிவந்தமாக அளித்தான் என்று குறிப்புகள் காணப்படுகின்றன. (The Larger Leiden Plates of Rajaraja I, EP. Ind. Vol. XXII No:34).

இராசேந்திர சோழ அரசனின் பிரஸாஸ்தி (Prasasti) இந்தோனேசியாவில் ஆட்சி செய்து கொண்டிருந்த ஸ்ரீவிசயப் பேரரசுக்கு எதிராக சோழர்கள் எடுத்த கடற்படையெடுப்பைப் பற்றி கூறியிருக்கின்றது. இப்பேரரசை ஆட்சி செய்த இந்தோனேசிய அரசனின் பெயர் சங்கிரமவிசயோதுங்க வர்மன் என்பவன் ஆவான். ஸ்ரீ விசய பேரரசைத் தோற்கடித்த இராசேந்திர சோழன் பல இடங்களைக் கைப்பற்றினான்; மேலும் சங்கிரமவிசயோதுங்கவர்மனையே கைப்பற்றினார். இராசேந்திரன் கைப்பற்றிய இடங்கள் சுமத்திராவின் கிழ்க்கரையில் உள்ள பன்னை (Pannai) சுமத்திராவின் கிழ்க்கரையில் இருந்த ஊரான ஜம்பி எனும் மலையூர் (Malaiyur) மலேயாவின் நடுவிலிருந்த ஊரான மாயிருடிங்கம் (Mayirudingam) மலேயாவில் கெடாவிற்குத் தெற்கேயுள்ள பகுதியான இலங்கசோகம் (Illangasogam) முதலிய பகுதிகள் ஆகும். மேலும் கிராப்பூசந்திக்கு அடுத்துள்ள மாப்பாபாளம் (Mappapalam) மெவி லிம்பங்கம் (Mevilimbangam) , வளைப்பந்தூர் (Valaippanduru) கிராப்பூசந்திக்குத் தெற்கே மலேயாவின் மேற்குக் கரையில் உள்ள தகோபா மாவட்டத்தின் தலைநகராகிய தகோபா நகர் அல்லது தலைதக்கோலம் (Talaittakolam), மாடமலிங்கம் (கிழக்கு மலேசிய கடற்கரைப் பகுதி) வடசுமத்திராவிலுள்ள இலாமுரிதேசம் (Ilamuridesam) மாநக்கவாரம் (நிக்கோபர் Mannakkavaram), கடாரம் (Kadaram) முதலிய பகுதிகளை இராசேந்திர சோழன் கைப்பற்றினான். மேலே குறிப்பிட்ட பகுதிகள் எல்லாம் சுமத்திராவிலும், மலேயா தீபகற்பத்திலும் இருக்கின்றன. (இவை தொடர்பான ஜார்ஜ் டபுள்யு ஸ்பென்ஸாரின் கருத்தை 'அறிமுகம்' அத்யாயத்தின் கடைசியில் பார்க்கவும்)

இராசராச சோழனின் சோழர் கடற்படை கடாரத்தையும் மலைநாட்டையும் வென்றமையால் வெற்றியின் நினைவுக் குறியாக இராசேந்திர சோழன் கடாரம்வென்றான்

மலைநாடு கொண்டான் என்ற பட்டங்களைச் சூட்டிக் கொண்டதோடு கடாரம் வென்றான், மலைநாடு கொண்டான் என்ற பெயர்கள் பொறித்த இரு பொற்காசுகளை வெளியிட்டுள்ளான். இப்பொற்காசுகள் கிண்ணம் போல் உட்குழிந்ததாக இருக்கின்றன. இந்தக் காசுகள் அவன் தென்கிழக்கு ஆசியத் தீவுகளில் அவன் பெற்ற அரிய வெற்றிக்கு எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றன.

இராசேந்திரனுடைய மெய்க்கீர்த்திகளில் குறிப்பிடப்படும் நாடுகள் பெரும்பாலும் ஸ்ரீவிசயப் பேரரசின் ஆதிக்கத்திற்குட்பட்ட குறுநில மன்னர்களின் அரசுகளாக இருந்தன என்பதைச் சீனர்களின் வரலாற்றுக் குறிப்பேடுகள் தெரிவிக்கின்றன. சோழப்பேரரசுக்கும் சைலேந்திரருக்கும் இடையே பகைமை உண்டானமைக்குரிய காரணத்தைத் தெளிவாக அறிய இயலவில்லை. சோழர்களுடைய கல்வெட்டுகளும் செப்பேடுகளும் ஓர் உண்மையை உணர்த்துகின்றன. கலிங்கத்தையும் கங்கைச் சமவெளியையும் கைப்பற்றிக் கொண்டபிறகுதான் சோழவேந்தன் கடாரத்தின் மீது படையெடுத்து இருக்கிறான் என்பதே அந்த உண்மை. குமரிமுதல் கங்கைக்கழிமுகம் வரையிலுள்ள கிழைக் கடற்கரைப் பகுதி முழுவதையும் தன்னுடைய ஆதிக்கத்தின் கீழ்க்கொண்டுவந்த இராசேந்திரன் கடற்படை ஆற்றல் மிக்கவனாக விளங்கினான். அந்நிலையில் தன்னுடைய கடற்படை அனைத்தையும் ஒருங்குதிரட்டிப் பொன்றாப்புகழ்பெற விரும்பி அவன் கடாரப்படையெடுப்பில் இறங்கியிருக்கவேண்டும் எனக் கருத இடமுண்டு.

மேலும் கிழை ஆசியாவிற்கும் மேலை நாடுகளுக்குமிடையே நடந்து வந்த கடல் வாணிகத்தின் முதன்மையான இடத்தைச் சைலேந்திரப் பேரரசு பெற்றிருந்தது. அதனைக் கைப்பற்றினால் தனக்குப் புகழ் மட்டுமல்லாமல் பெரும் செல்வமும் பொன்னும் பொருளும் கிடைக்குமென்ற ஆவல் காரணமாக இராசேந்திரன் போருக்குச் சென்றிருக்கலாம். அல்லது தமிழகத்து வாணிகர்களுக்குக் கிழைநாடுகளில் உண்டான இன்னல்களையும் இடையூறுகளையும் போக்கி, தமிழ்நாட்டு வாணிகத்திற்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்க விரும்பியதின் பயனாகச் சைலேந்திரருக்கும் சோழருக்கும் பகைமை உண்டாகியிருக்கலாம். அப்பகைமை காரணமாகத் தமிழகத்து வாணிகர்கள் கிழை நாடுகளில் துன்புறுத்தப்பட்டும் இருக்கலாம்; இதனால் சீற்றமுற்ற இராசேந்திரன் தன்னுடைய பெரும்படையைச் சைலேந்திரர்களுக்கு எதிராக அனுப்பி அப் பேரரசினை அழித்திருக்கலாம். இதன் விளைவாக சோழப் பேரரசு கடல் கடந்த நெடுந் தொலைவிலுள்ள நாடுகளில் சென்று பரவியதோடு அமையாமல், கிழ நாடுகளின் கடல் வாணிகத்தில் தமிழகம் தனிப்பெரும் செல்வாக்கினைப் பெற்றதாகத் தெரிகிறது. இம்மாபெரும் கடற்போர் வெற்றிக்கு முதன்மையான காரணம் சிறந்ததொரு கப்பற்படையைச் சோழர்கள் போற்றிக்காத்து வந்தமையேயாகும்.

மீண்டும் நல்ல அமைதியான உறவு 1089-90இல் சிறுலீடன் பட்டயம் (Smaller Leiden Grant) கொடுத்த போது அமைக்கப்பட்டது. நாகப்பட்டினத்திலிருந்த சூடாமணி விகாரம் சம்பந்தமாக மேலும் பல சலுகைகள் ஸ்ரீவிசய அரசருக்கு அளிக்கப்பட்டன.

தமிழர்கள் விருப்பம் போல் தென் கிழக்கு ஆசியாவில் வணிகம் செய்யத் தடை ஏற்பட்டதனால் 11ஆம் நூற்றாண்டில் மாபெரும் சோழற்படை தென்கிழக்காசியாவில் பல நாடுகளிலும் புகுந்து வெற்றி வீரர்களாக ஆங்காங்குள்ள மன்னர்களோடு நட்புறவு கொண்டு தமிழர்கள் தங்குதடையின்றி வணிகம் புரியவும் குடியேறி வாழவும் வழிவகை செய்தனர். சங்கிரம விசயோதுங்கவர்மன் தான் கடைசியாகக் கெடாரத்தை ஆண்டு வந்த இந்து அரசன் என்றும், அவனுக்கப் பின் அவன் வழியினர் இசுலாமிய சமயத்தைச் சேர்ந்து இன்று வரை துங்கு என்பதைத் தம் பெயரின் இறுதியிலோ முதலிலோ இணைத்துக் கொண்டு வருவதாகவும்கூறப்படுகிறது.துங்கவர்மன் என்ற பெயரைக் கொண்டு இவனை இராசராச சோழன் மகனாக இருக்கலாமோ என்று சிலர் ஐயப்பட்டு வருகின்றனர். ஏனெனில் இராசேந்திரன் மகள் வழி வந்த மன்னனுக்குக் குலோதுங்கன் என்ற பெயர் சூட்டப்பட்டிருப்பதை ஆதாரமாக எடுத்துக் காட்டுகின்றனர்.

ஆனால் கெடாவை ஆண்டு வந்த சங்கிராம விசயோத்துங்கவர்மன் இரட்டை மீன்கள் பொறித்த பாண்டிய நாட்டுக் கொடியைப்பெற்றிருந்ததாலும் கி.பி. 620 முதல் 645 வரை பாண்டிய நாட்டை ஆண்ட மாறவர்மன் அவனி சூளாமணியின் பெயரைப் பெற்றிருந்ததாலும்கெடா (கேதா) மன்னர்கள் பாண்டிய மன்னர்களின் வழி வந்தவர்களாக இருக்கலாம் என்று எண்ணலாம். அதோடு சூளாமணி வர்மன் மகன் மாற விசயோத்துங்கவர்மன் என்ற பெயரை வைத்திருப்பதைப் பார்த்தால் இவர்கள் பாண்டிய மன்னர்களின் வழி வந்தவர்கள் என்று எண்ணுவதற்குப் பல சான்றுகள் உள்ளன. பாண்டிய மன்னர்கள் மாற என்னும் பட்டத்தைப் புனைந்து வந்துள்ளனர். எடுத்துக்காட்டாக, அரிகேசரி மாறவர்மன், மாறவர்மன், இராச சிம்மன், மாறவர்மன் விக்ரம பாண்டியன், மாறவர்மன் வீர பாண்டியன் வர குணவர்மன் முதலிய பெயர்களைக் குறிப்பிடலாம். மகேந்திரவர்மன், சிம்மவர்மன், ஸ்கந்தவர்மன், வீரவர்மன், நந்திவர்மன், பரமேஸ்வர வர்மன் முதலிய பெயர்கள் பல்லவ மன்னர்களின் பெயர்களாக இருந்தன. சேரர்களும் இரவிவர்மன், மார்த்தாண்ட வர்மன், இராமவர்மன், கேரளவர்மன் போன்ற பெயர்களைத் தாங்கி இருக்கின்றனர். இதனால் பொதுவாக மாற விசயோதுங்க வர்மனும் அவன் தந்தை சூளாமணி வர்மனும் தமிழர் வழிவந்தவர்கள் என்று கூறுவது குறிப்பாக - ஏன்? சிறப்பாக பாண்டிய மரபில் வந்திருக்கலாம் என்று யூகிக்க முடியும். என்றாலும் இதற்கு இன்னும் சிறந்த சான்றுகள் தேவை .: (அ. இராகவன், தமிழக சாவகக் கலைத்தொடர்புகள், 1967, PP. 25-26)

சோழர்கள் - சுமத்திரா அரசர்களிடையே இச்சமயத்தில் நெருங்கிய தொடர்பு இருந்ததைப் பற்றிய பலச் சான்றுகள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. சுமத்திராவில் 11ஆம் நூற்றாண்டில் பொது மக்கள் பயன்படுத்திய பத்திரங்களில் (*Public Documents*) தமிழ் மொழி பயன்படுத்தப்பட்டது என வுல்ட்ஸ்(*Hultz*) என்பாரும் கே.ஏ. நீலகண்ட சாஸ்திரியும் கூறுகின்றனர். மேலும் தமிழ் வாணிகக் குடியிருப்புகள் இங்கு இருந்ததாகவும் சான்றுகள் கிடைத்துள்ளன. சுமத்திராவில் உள்ள லோபுதுவா (*Loboe Toewa*) எனும் இடத்தில் கிடைத்துள்ள தமிழ்க் கல்வெட்டில் 1500 பேர் அடங்கிய ஓர் வணிக கூட்டமைப்பு இருந்ததாக குறிப்புகள் உள்ளன. அயர்லிங்கா (*Airlingga*) (1019-1049) எனும் சாவக அரசனின் குறிப்புகளிலும் திராவிட, கலிங்க, சிங்கள, கருநாடக நாட்டவர்கள் சாவகத்தில் வாணிகம் செய்ய வந்தனர் என கூறப்பட்டிருக்கின்றது. மேலும் முதலாம் இராசராசன்

காலத்திலிருந்து குலோத்துங்கன் காலம் வரையில் உள்ள கல்வெட்டுகளில் சுமத்திர பேரரச ஸ்ரீவிசயாவைப்பற்றி (கடாரம்) செய்திகள் கிடைக்கின்றன. ஆகையால் பிற்காலச் சோழர்கள் காலத்தில் இந்தோனேசியாவிற்கும் தமிழ்நாட்டிற்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது எனத் தெரிகின்றது.

இத்தொடர்பு தொடர்ந்து நீடித்தது என்று சில செய்திகள் மூலம் நாம் உறுதிப்படுத்திக் கொள்ளலாம். இந்தோனேசிய அரசரான இராசசனாகர மன்னனின் அவைப்புலவரான பிரபன்சா (Prapantja) எழுதிய நகர கர்த்தகாமாவில் (Nagarakertagama கி.பி. 1365) காஞ்சிபுரத்தில் வாழ்ந்த புத்தாந்த்தியர் சாவக மன்னனைப் பற்றி எழுதிய பாடல்களைப் பாராட்டி சொல்லப்பட்டிருக்கின்றது. ஜெயனகர மன்னன் (1309 - 28) அவனுடைய முடிசூட்டுவிழாவின் போது சுந்தர பாண்டியன் எனும் பட்டப்பெயர் சூட்டிக் கொண்டான். பாண்டிய இலச்சினையான மீனைத்தனது இலச்சினையாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டான். காஞ்சிபுரத்திலிருந்து வந்த புத்த பிக்குகள் 14ஆம் நூற்றாண்டில் சாவாவை ஆட்சி செய்த ஹயாம் வுருக் எனும் அரசரைப் புகழ்ந்துரைக்கின்றனர். பதினேழாம் நூற்றாண்டில் இந்தோனேசியாவிலிருந்து டச்சுக்காரர்கள் தமிழ், தெலுங்கு முதலிய மொழிகளின் ஆவணங்களையும், பதிவேட்டுகளையும் வைத்திருந்தார்கள் என ஆதாரங்கள் கிடைத்திருக்கின்றன. பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை மலாக்கா கடற்கரையோரப் பகுதிகளில் விவரமான அறிக்கைகள், கணக்கு (Account) தமிழிலும் வைக்கப்பட்டன என்று சான்றுகள் கிடைத்திருக்கின்றன. இச்சமயத்தில் தமிழர்களைச் கெலிங் (Keling) என அழைத்தனர் எனத் தெரிய வருகின்றது.

தமிழர்கள் குடியேறிய எந்த நாட்டிலும் மண்ணாசைகொண்டு அந்நாட்டை ஆள எண்ணியதில்லை. அங்குத் தங்கள் எண்ணிக்கையைப் பெருக்கி ஆட்சியைக் கைப்பற்ற எண்ணியதும் இல்லை. ஆனால் தமிழர்கள் குடியேறிய நாடுகளில் தங்கள் சமயம் கலை, நாகரீகம், பண்பாடுகளை வளர்த்தனர். அந்நாட்டு மக்களுடன் இரண்டறக் கலந்தனர். இதற்கு ஒரு நல்ல எடுத்துக் காட்டகச் சாவகம் விளங்குகின்றது.

அனைத்துலகப் புகழ் பெற்ற கலை மேதை ஆனந்தக் குமார சுவாமி அவர்கள், "மத்திய சாவகத்தில் ஏழாம் நூற்றாண்டில் எழுந்துள்ள நாகரீகச் சிறப்பிற்குச் சான்று அங்கு நிகழ்ந்த இந்திய கலைகளே ஏற்ற எடுத்துக்காட்டுகளாக மிளிர்கின்றன; இந்த அபிவிருத்திகள் அனைத்தும் தென்னிந்தியாவிலிருந்து நீண்ட காலமாக நடைபெற்று வந்த குடியேற்றத்தின் நற்பயனேயாகும்" என்று முடிவு கட்டியுள்ளார்.

இந்தோனேசிய பண்பாடு:- தமிழ்நாட்டின் செல்வாக்கு

ஆகையால் இந்தோனேசிய பண்பாடு வளர்ச்சியடைவதற்குத் தென் இந்தியாவும், குறிப்பாகத் தமிழ்நாடும் ஒரு சிறப்பான காரணமாக இருந்தது எனக் கூறலாம். குறிப்பாக இடைக்காலத்தில் தமிழ் நாட்டின் செல்வாக்கை ஓரளவு பார்க்கலாம். இந்து சமயம் மூலம் தான் பொதுவாகத் தமிழ்நாட்டுப் பண்பாடு இந்தோனேசியா பண்பாட்டில் மாறுதல் உண்டு பண்ணியது. குறிப்பாகச் சுமத்திராவில் தான் தமிழ்நாட்டின் செல்வாக்கு மிகுதியாக

இருந்தது எனக் கூறலாம். சுமத்திராவில் வாழும் காரோபட்டக் (*Karobatak*) என்னும் இனத்தைச் சேர்ந்தவர்கள். தம் இனத்தவரின் உட் பிரிவுகளுக்குச் சேரர், சோழர், பாண்டியர், கலிங்கம்; மலையாளியர் என்னும் பெயர்களை வழங்கி வருகின்றனர் என்பது அறியத்தக்கது.

இந்தோனேசிய இந்து கோயில் கட்டட அமைப்பிலும், சிற்பங்களிலும் பல்லவ காலத்து கலாச்சார பண்பாட்டின் தாக்கத்தைப் பார்க்க முடிகின்றது. எகிப்திய கூர்ங் கோபுரம் (*Pyramid*) போலும் பல தள அடுக்குகள் உள்ள மேற்கட்டுமானப் பகுதி உள்ள இக்கோவில்கள் தமிழ்நாட்டு மகாபலிபுரத்தில் உள்ள ஏழாம் நூற்றாண்டு கோவில்களைப் போல் இருக்கின்றன. (இதற்குச் சிறப்பான உதாரணம் டியங்பிளேட்டியு) (*Dieng Plateau*) நினைவுச் சின்னங்களாகும். இந்து சிவன் கோவில்கள் டியங்கில் கட்டப்பட்டன (கி.பி.675) இந்தோனேசியாவில் உள்ள மிக பழமையான எளிமையான நினைவுச் சின்னம் இந்நினைவு சின்னமாகும். இச்சின்னம் ஏழாம் நூற்றாண்டில் அல்லது எட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். பல்லவவம்ச கோவில்கள், உதாரணமாக ஏழாம் நூற்றாண்டு மாமல்லபுரம் ரதங்கள் இக்கோவில் கட்ட முன்னோடி மாதிரியாக இருந்திருக்கலாம். ஆனால் டியங் கூர்ங் கோபுரப் படிகளில் நுண்ணளவில் கட்டப்பட்ட கட்டிடங்களுக்குப் பதிலாக, சில அணி வேலைப்பாடுள்ள வார்ப்படங்கள் உள்ள அடிகுலா (*ornamental aediculae which have moldings*) இருக்கின்றது.

சாவகத்திலுள்ள சிவன் கோயில்கள் பெரும்பாலும் 6,500 அடி உயரமுள்ள டியெங் பீடபூமியிலேயே உள்ளன. இங்கு மாமல்லபுரத்திலுள்ள கோயில்களைப் போல் ஐந்து கோவில்கள் உள்ளன. மாமல்லபுரத்தில் உள்ள ஒற்றைக் கோயிலை அறியா மக்கள் பஞ்ச பாண்டவர் இரதங்கள் என்று ஆதியில் கூறிவந்தனர். அதுவே இன்றும் நிலைத்துள்ளது. அதே போல டியங் பீடபூமியிலுள்ள ஐந்து கோயில்களும் பஞ்ச பாண்டவர்கள் பெயரில் உள்ளன. என்றாலும் எல்லாம் தென்னாட்டுத் தமிழக வழியில் வந்த சிவ வழிபாடுடைய திருக்கோயில்களேயாகும். இங்கு சிவனுடைய உருவம் சிறிது வேற்றுமையுடையதாய் விளங்குகிறது. சிவன் தாடியுடையவனாகவும் தொப்பி அணிந்தவனாகவும் காணப்படுகிறான். ஆனால் கையில் அத்தி மாலையும் கமண்டலமும் உடையவனாகக் காட்சி அளிக்கிறான். குடமுனிவன் என்றும் சிவகுரு என்றும் தமிழ் வளர்த்த அகத்தியனின் குள்ள உருவமுள்ள சிலைகளும் இங்குக் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இங்கு எழுந்த திருக்கோயில்கள் திராவிட சிற்ப முறையைத் தழுவிக் கட்டப்பட்டவைகளாகும். தமிழகத்திலிருந்து சாவகம் போந்த சிற்பிகளிற் சிலர் மனைவி மக்களோடு அங்குச் சென்று குடியேறினர், அங்குச் சென்றவர் தம் சகோதரர்களுக்கும், மக்களுக்கும் சாவகப் பெண்களையே மணம் செய்து வைத்துச் சாவகத்தைத் தாயமாகக் கொண்டு வாழ்ந்தனர். மேலும் சிற்பத் தொழிலை அங்குள்ள மக்களுக்கும் கற்றுக் கொடுத்தனர். இந்தியச் சிற்பிகளிடம் சிற்பத்தைக் கற்ற சாவகச் சிற்பிகள் ஆசிரியர்களைவிடச் சிறந்தவர்களாக இந்தியச் சாயலுடைய ஒரு சிற்ப முறையைச் சாவகத்தில் வளர்த்துள்ளனர். இந்தியச் சிற்பங்களை விட சாவகச் சிற்பம் சாலச் சிறப்புடைய திராவிடச் சிற்பம் என்று கலைஞர்கள் கூறுகின்றனர்.

சாவகத்தில் குடியேறிய திராவிடப் பெருங்குடி மக்கள் தம் நாட்டிலிருந்து செல்லும்போது சேர நாட்டவராக, பாண்டிய நாட்டவராக, சோழ நாட்டினராக தொண்டை நாட்டவராக சென்றனர். இன்னும் சொல்வதனால் பார்ப்பனர்களாக, ஆதி சைவர்களாக, வேளாளர்களாக, செட்டியார்களாக, அகம்படியர்களாக, மறவர்களாக, கம்மாளராக , பிற இனத்தவர்களாக அங்குச் சென்றனர் என்பது மறுக்க முடியாத உண்மை. ஆனால் சாவக நாட்டில் தங்கள் சாதி உணர்ச்சிகளை பலியிட்டுச் சாவகக் குடி மக்களாக மாறிவிட்டது நாம் கண்டு அதிசயிக்கத் தககது. ஆனால் இன்று சிலர் நாங்கள் பாண்டியர் குடி என்றும் சொல்லி வருகிறார்களாம். ஆனல், பெயரளவில் இந்தப் பேச்சு இருக்கிறதேயொழிய இவை ஒன்றும் அவர்களுக்குள் எவ்வித வேற்றுமையையும் வளர்க்கவில்லை.

சாவகத்தில் குடியேறிய மக்கள் தமிழ் மொழியை மறந்துவிட்டனர். இப்பொழுது அவர்கள் தாங்கள் தமிழர்களின் சந்ததிகள் என்றோ இந்தியர்களின் சந்ததிகள் என்றோ அறியார்கள். அவர்கள் கோயிலில் இன்றும் பாடப்பட்டு வரும் திருவாசகத்தைத் தமிழ் என்று அறியார்கள். நாம் கூறினாலும் அது தமிழல்ல - எங்கள் மந்திரம் என்று கூறி வருகின்றார்கள்.

மேற்குப் போர்னியோவில் தெகாதெக் ஆறு (*Sungei Tekatek*) அருகிலுள்ள பாட்டு பாஹட் (*Batu Pahat*) டில் ஓர் நுணுக்க ஓவியக் கலையுள்ள ஸ்தூபம் (*Miniature Stupa*) கண்டுபிடிக்கப்பட்டது. அதன் பக்கச் சுவர்களில் எட்டு கல்வெட்டுகள் செதுக்கப்பட்டிருக்கின்றன. இக்கல்வெட்டுகளில் பிற்காலப் பல்லவ கையெழுத்து முறைகளைப் பார்க்கலாம். புத்த சமயக் கருத்துகள் இருக்கின்ற போதிலும், இக்கல்வெட்டுகளைத் தெளிவாகப் படிக்கமுடியவில்லை. மற்றொரு பல்லவ மொழிக் கல்வெட்டு கி.பி.732ஐ சேர்ந்ததாகும். இக்கல்வெட்டு இந்து ராஜா சஞ்சயனைப் பற்றிக் கூறுகின்றது. சைலேந்திரர்களுக்குப் பிறகு மத்திய சாவாவை ஆண்ட இந்து மதரம் (*Mataram*) அரசர்களில் ஒருவராக இவர் கருதப்படுகிறார்.

சாவா, போர்னியோ முதலிய பகுதிகளை ஆட்சி செய்து வந்த பழங்கால அரசர்கள் வேதகால வேள்விகளைச் செய்தார்கள். அவற்றைப் பற்றி தங்களுடைய யூபா கல்வெட்டுகளில் (*Yupa Inscriptions*) நான்காம் அல்லது ஐந்தாம் நூற்றாண்டு பல்லவ கிரந்த கையெழுத்து முறைகளைப் பயன்படுத்தி பதிவு செய்திருக்கின்றார்கள்.

பல்லவர்கள், சேரர்கள், பாண்டியர்கள் பெயர்களின் இறுதியில் காணப்படும் வர்மன் என்னும் பட்டம் சாவக மன்னர் பெயர்களின் இறுதியிலும் காணப்படுகின்றன. தென் இந்தியாவில் வழங்கப்படும் சகம் என்னும் சாலிவாகன சகாப்தமே இந்தோனேசியக் கல்வெட்டுகளிலும் காணப்படுகின்றன. ஒரு கல்வெட்டு குஞ்சர குஞ்சம் என்னும் ஊரைச் சேர்ந்த அரச வமிசத்தரனான சஞ்சயன் இலிங்கபிரதிஷ்டை செய்ததாகக் கூறுகிறது. இந்தக் குஞ்சர என்ற ஊர் தென் இந்தியாவில் உள்ள ஊர். இது வராகமிகிரரின் பிருகத் சங்கிதையில் கூட உள்ளது என்று குறிப்பிடப்படுகிறது. சாவகத்தை ஆண்ட மன்னர்களும், பெருநிலக் கிழார்களும், செல்வர்களும், தன வணிகர்களும் இராசா, பிரவு, பூபதி, அதிபதி என்ற பெயர்களைப் பயன்படுத்தி வந்துள்ளனர் என்பதற்கு அவர்கள் வரலாறுகள் சான்று தருகின்றன. முற்காலச் சாவக அதிகாரிகள் மந்திரி, பதி, தியாக்ஷ் (அதியாக்சர்) போன்ற

பட்டங்களை உபயோகப்படுத்தி வந்தனர். முசுலிம் பிரபுக்கள் சூரிய புத்திர சூரிய விநோத சாஸ்திரா விதாடீத என்ற பட்டங்களைச் சூட்டிக் கொண்டு வருகின்றனர்.

ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதிவரைத் தமிழ் நாட்டைப் போலவே சாவகத்தில் சுடு மண்ணால் கோயில் கட்டப் பெற்றும் சுண்ணத்தினால் மேற்பூச்சுப் பூசப்பட்டும் வந்தது. மேலே மரங்களினால் சட்டங்களும் விட்டங்களும் இணைத்துக் கூரை வேயப்பட்டு வந்தது. அப்பால் தமிழகத்தில் கற்றளிகள் எழுந்ததைப் போல சாவகத்திலும் கற்றளிகள் தோன்றத் தலைப்பட்டன. தமிழகத்திலிருந்து கல்தச்சர்களும், ஸ்தபபதிகளும், பார்ப்பனர்களும் குடியேற்றப்பட்டனர். அவர்களிற் பலர் அந்நாட்டிலேயே தங்கி நிலைத்த குடிமக்களாய் வாழ்ந்து வந்தனர்.

பொதுவாக சிற்பங்கள் அழகு படுத்தப்பட்டிருக்கும். பல்லவ, சாளுக்கிய கலையில் சங்கிலிருந்தும் (Conch) சக்கரப் படையிலிருந்தும் (Discus) தீக்குழம்பு கிளம்பி மேலே போகும். இதே முறை சாவா நாட்டு சிற்பங்களிலும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது.

மேலும் சாவா நாட்டு பிராம்மணர்கள், ரிஷிகள் முதலியவர்களின் சிற்பங்கள் பல்லவ, சோழநாட்டு முறையை ஒத்திருக்கின்றன. நீண்ட சடைகளும், பூணல்களும் யஞ்ஞோபவீதமும், (Yajnopa vita) காதுகளில் குண்டலங்களும் (Kundalas) பெரிய தொப்பையும் ரிஷிகளின் சிற்பங்களில் காணலாம். இம்மாதிரியான சாவா சிற்ப அமைப்புகளைத் தமிழ் நாட்டிலுள்ள தாராசுரம், சிதம்பரம், நாகப்பட்டினம், பட்டீஸ்வரம் முதலிய இடங்களில் பார்க்கலாம். பல்லவ, சோழ நாட்டு சிற்பங்களில் இருப்பது போல சாவா நாட்டு பிராம்மண சிற்பங்களிலும் பிராமணர்கள் மூங்கிலால் செய்யப்பட்ட எளிமையான குடைகளைப் பிடித்துக் கொண்டிருப்பதைக் காணலாம். மகாபலிபுரத்தில் அரஜ்ஜுனன் தவம் செய்யும் முறையைத் தான் சாவா ரிஷி சிற்பங்களிலும் பார்க்கலாம்.

10ஆம் நூற்றாண்டுக்குப் பின் சாவகக் கலை சிறிது சிறிதாக இந்தியக் கலையின் தொடர்பைத் துண்டித்துக் கொண்டது. 10ஆம் நூற்றாண்டில் கிழக்குச் சாவகத்தில் அரும்பிய சாண்டி சாகோ (Chandi Djago) சாண்டி பணாதரன்(Chandi Panataran) கோயில்கள் முற்றிலும் சாவகத்தில் புதிய பாணியில் எழுந்த கோயில்களாகும். இந்தக் கோயில்களின் வெளித் தோற்றத்தில் சாவகக் கலை அமிசம் அதிகமாக இருப்பது போல் காணப்படினும் உள்ளே இருக்கும் சிலைகள் நடுச் சாவக முறையைத் தழுவியதாக இருக்கின்றன. இரண்டு அரிய முறைகளும் இணைந்து விளங்குகின்றன என்பதைப் பாரா என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கணபதி சிலையினின்று நன்கு அறிய முடியும். அதன் முன்புறத் தோற்றம் தமிழகக் கலை அம்சம் நிறைந்ததாய்க் காணப்படுகிறது. பின்புறத் தோற்றம் இந்தோனேசிய முறை பொருந்தியதாய்த் காணப்படுகிறது.

இந்தோனேசிய மக்கள் அசுரர்களையும் அரக்கர்களையும் பூதங்களையும் விண்ணவர்களையும் சித்தரிப்பதில் விருப்பமுடையவர்களாக இருந்தனர். சாவகத்தில் பௌத்தமும் சைவமும் தலைசிறந்த சமயமாய் விளங்கின. சிவனுக்கும் விஷ்ணுவிற்கும் வேறுபாடு காட்டவில்லை. ஆனாலும் சாவக மக்கள் தங்கள் மன்னர்களைத் திருமாலைப் போல் (விஷ்ணுவைப் போல்) காட்டாமல் சிவனைப் போலவும் புத்தரைப் போலவுமே காட்டியுள்ளார்கள். ஆனால் தமிழ் மக்கள் மன்னர்கள் மகாவிஷ்ணுவின் கூறு தான் என்று

கருதுவார்கள். "திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் கண்டேன்' என்னும் வாசகம் திருவாய்மொழி எனத் தமிழ்ப் புலவர்கள் பாடுவார்கள் என்பது நமக்குத் தெரியும்.

கொற்றவையே உமையாம். முருகக் கடவுள் ஆலமர் கடவுளுக்கும் (சிவன்) கொற்றவைக்கும் புதல்வன் எனத் திருமுருகாற்றுப்படை முதலிய இலக்கியங்கள் கூறுகின்றன. பண்டைய தமிழர் கண்ட தாய்த் தெய்வம் கொற்றவை. பின்னர் துர்க்கையாகவும், மகிசாசுரவர்த்தினியாகவும் போற்றப்பட்டாள். துர்க்கையை உமையாகவும் பார்வதியாகவும் வழிபடுவது உண்டு. இவளைத் தமிழர்கள் தாங்கள் குடியேறிய இந்தோனேசியாவிற்குக் கொண்டு போயினர். உதாரணமாக, மேற்குச் சாவகத்தில் உள்ள சிங்கசாரியில் அழகிய துர்க்கையின் உருவம் ஒன்று கிடைத்துள்ளது. துர்க்கையை உமையாகவும் பார்வதியாகவும் வழிபடுவது உண்டு. இவள் தீமைகளை அழிப்பாள். மகிஷாசுரனை வதைத்தவள். இவளுக்கு எட்டுக் கரங்கள் உண்டு. இவளது வாகனம் எருமை. மகிஷாசுரனின் கழுத்தினின்று ஒரு பூதம் எழுந்தது. எருமையின் மீது முழங்காலில் நின்றுகொண்டு இருக்கிறாள். ஒருகை எருமையின் வாலைப் பிடித்திருக்கிறது. துர்க்கை இளம்பிறையும் கபாலமும் தலையில் அணிந்திருக்கிறாள். அவள் அரையில் ஆடையும் மார்பில் சட்டையும் தாமரை அணிகளும் இன்னும் வழக்கமான அணிகளும் பூண்டிருக்கிறாள். பண்டைய தமிழ் மக்கள் எப்படி தங்களுடைய கடவுளை உருவகப்படுத்தியிருக்கிறார்கள் என்பதற்கு இது ஒரு நல்ல எடுத்துக்காட்டு. இந்த உருவம் சிங்கசாரியில் கண்டெடுக்கப்பட்டது. இன்று லெய்டன் தொல்பொருள் காட்சிசாலையில் உள்ளது. இதன் உயரம் 68 அங்குலம். பல்லவர்காலக் குடைவரை, கட்டடக்கோயில்கள் பலவற்றிலும் கொற்றவையின் சிற்பங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. சிவன் அல்லது திருமால் கோயில்களில் இறைவிக்கெனத் தனிக்கருவறை அமைத்து, அதன்கண் இறைவியின் திருஉருவை நிலைநிறுத்தும் வழக்கம் பிற்கால சோழராட்சியில் ஏற்பட்ட ஒன்றாகும்.

இந்தோனேசியர்கள் இந்துக் கோவில்களைச் சாண்டி (Candi) என்று அழைத்தார்கள். சாண்டி என்றால் பல பழங்கால கல் நினைவுச் சின்னங்கள் என்று பொருள். குறிப்பாக, இச்சின்னங்களைச் சாவா, சுமத்திரா, பாலி முதலிய இடங்களில் பார்க்கலாம். பொதுவாக, சாண்டி என்று இந்தோனேசியர்களால் அழைக்கப்பட்ட இந்து கோவில்களில் பிரம்மா, சிவன், விஷ்ணு, அகத்தியர், துர்க்கா, விநாயகா போன்ற தெய்வங்களின் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, மத்திய சாவாவிலுள்ள சோக் சக்கர்த்தாவில் சாண்டி பிரம்மா, சாண்டி விஷ்ணு கோவில்களைப் பார்க்கலாம்.

இந்தோனேசியர்கள் சிவனுக்கும் விஷ்ணுவிற்கும் அவ்வளவு வேறுபாடு காட்டவில்லை. ஆனாலும், சாவகத்தில் காணப்படும் திருக்கோயில்களுள் பல சிவனுக்கு உரியன. சாவக மக்களின் அமரமாலை என்னும் நூல் மிகத் தொன்மை வாய்ந்தது. அது அந்நாட்டு மக்கள் வழிபட்ட தெய்வங்களைப் பற்றிக் கூறுகின்றது. அந்நூலின் மூலம் சாவகத்தினர் சிவபெருமானையே முழுமுதற்கடவுளாக வழிபட்டார்கள் என்று தெரிகிறது. சிவன், ஈஸ்வரன், குரு என்ற பெயர்களால் அவர்கள் வழிபட்டு வந்திருக்கின்றனர். மேலும் சாவக மக்கள் தங்கள் மன்னர்களைத் திருமாலைப்போல காட்டாமல் சிவனைப்போலவும், புத்தரைப் போலவும் காட்டியுள்ளார்கள்.

பிரம்மானன் என்னும் இந்துக்கோவில் சாவகத்தில் இருக்கின்றது. பிரம்மானன் சிவன் கோவில் கி.பி.856இல் கட்டத் தொடங்கப்பட்டது. ராஜாதக்ஷன் என்பவனால் கி.பி.900இல் கட்டி முடிக்கப்பட்டது. நடுவில் சிவன் கோயிலும், சுற்றிலும் நான்முகன், திருமால், கொற்றவை, அகத்தியர் கோயில்களும் கட்டப்பட்டன. இங்குப்புடை சிற்பமாகச் செதுக்கப்பட்ட இராமகதை மிகச் சிறப்புடையது. இச்சமயத்தில் இப் பகுதியை மதரம் *(Mataram)* அரசர்கள் ஆட்சி செய்து வந்தார்கள். பிரம்மானன் சிவவழிபாட்டு முறை சைவசித்தாந்த வழிபாட்டு முறையை ஒத்திருக்கிறது என்று சில அறிஞர்கள் கருதுகின்றனர்.

பிரம்மானன் என்ற இக்கோவிலின் பெயர் வேதாரண்யம் என்ற சொல்லிலிருந்து வந்திருக்கலாம். வேதா என்றால் பிரம்மா என்று பொருள். ஆரண்யா என்றால் காடு (வனம்) என்று பொருள். வேதாரண்யா என்ற சொல் பிரம்ம வனா என்றும், பின்னர் இச்சொல்லே பிரம்மானன் என்றும் மாறியது என்று தி.என்.இராமச்சந்திரன் கூறுகின்றார். தென்னிந்தியாவில் இருக்கும் வேதாரண்யத்தில் அகத்தியர், சிவன் வழிபாடு சிறப்பாக இருப்பதைப் பார்க்கலாம். வேதாரண்யத்தில் இறைவன் காளையின் மீது சாய்ந்த வண்ணம் நின்று, வலக்காலை மடக்கி ஊன்றியும், இடக்காலை நேராக ஊன்றியும் திகழ்கிறார். இவருக்கு இடப்புறம் இறைவி நின்று காட்சியளிக்கிறார். வேதாரண்யத்திலுள்ள வழிபாட்டு முறைகள் பிரம்மானனிலும், சாவகத்தின் மற்றப் பகுதிகளிலும் பார்க்கலாம். பிரம்மானன் கோயில்களின் அமைப்பும் அவற்றின் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் விக்கிரகங்களின் தன்மையும் சோழர் காலத்துக் கட்டடக்கலை, சிற்பக்கலை ஆகியவற்றின் சாயலை ஒட்டி அமைந்திருக்கின்றது. இந்த இந்தோனேசிய வழிபாட்டு முறை தமிழ் நாட்டிலிருந்து சென்றிருக்கலாம். குறிப்பாக, பிரம்மானன் சிவவழிபாட்டு முறை தமிழ் நாட்டுச் சைவசித்தாந்த வழிபாட்டு முறையை ஒத்திருக்கின்றது. மேலும், தமிழககோவில் போன்ற அமைப்பு, நுட்பம் கல்லடுக்குத் திறன் முதலியவற்றைப் பார்க்கலாம். கரும் கற்பாறைகளை ஒரு சதுரமாக வெட்டி எடுத்துக் கோயிலை அமைத்துள்ளனர். இந்தோனேசிய ஆயிரம் ரூபாய் நோட்டிலும் ஐம்பது ரூபாய் வெள்ளி நாணயத்திலும் பிரம்மானன் கோவில் உண்டு.

பிரம்மானன் கோயிலின் சுவர்களில் சிவதாண்டவத்தில் 32 முத்திரைகளும் செதுக்கப்பட்டுள்ளன. பொதுவாக, கர்ணாக்களை பிரம்மானன் சிவன் கோயிலிலும், தமிழ்நாட்டுத் தஞ்சாவூர்க் கோயிலிலும், சிதம்பரம் கோவில் கோபுரங்களிலும் காணலாம். தஞ்சாவூர் கோயிலில் உள்ள நாட்டியச் சித்திரங்களையும் போரோபுதூரில் உள்ள நாட்டியச் சித்திரங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால் அவற்றுக்குள் இருக்கும் ஒற்றுமை ஓரளவு தெளிவாகத் தெரிகிறது என்று சிவராமமூர்த்தி கூறுகின்றார். பொதுவாக, சோழர் ஆட்சியில் பரதநாட்டியக் கலைக்கு முதன்மையான ஆதரவு கொடுக்கப்பட்டது. பரதநாட்டியத்திலுள்ள கரணங்களை விளக்கும் சிற்பங்கள் உருவாக்கப் படலாயின. நடராசர் சிற்பங்களும், படிமங்களும் இக்காலத்திலிருந்துதான் அதிக அளவில் செய்யப்பட்டன. கோயில்களில் ஆடல் மகளிர் அதிகமாக நியமிக்கப்பட்டதும் இக்காலத்தில்தான் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மேற்குச் சாவாவில் சாண்டிசாரி என்னுமிடத்தில் இருக்கும் சிவபெருமானின் திரு உருவம் சாவகத்தின் வட எல்லைக்கு அருகில் டெகால் என்னும் இடத்திற்குப் பக்கத்திலுள்ள ஆற்றில் கண்டெடுக்கப்பட்டது. இதன் உயரம் மூன்றடிக்கு மேல் இருக்கும்.

கீழ் உதடும் மூன்று கண்களும் பொன்னால் ஆனவை. இது ஏறக்குறைய நல்ல நிலையில் மிகவும் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. இந்த அழகிய செப்புப் படிமம் 9 ஆம் நூற்றாண்டில் செய்யப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. இத்திரு உருவம் தமிழகத்தில் வார்க்கப்பட்ட உருவம்போல் எழில் மிக வாய்ந்ததாக இலங்குகிறது. தலையில் சடாமகுடம் போல் காணப்படவில்லை. மார்பில் பூணூலும், கழுத்திலும் காதிலும் அணிகலங்களும் அழகுடன் காணப்படுகின்றன. வலப்புறமுள்ள பின்கையில் உடுக்கை காணப்படுகிறது. முன்பக்கமுள்ள கையில் இருக்கும் உருவம் புலப்படவில்லை. இடப் பக்கம் இருக்கும் பின்புறக்கையில் நெருப்பு எரிவதுபோல் காணப்படுகிறது. முன்புறமுள்ள கையில் கமண்டலம் காணப்படுகிறது. அரையில் ஆடை கணுக்கால் வரை நீண்டு இருக்கிறது. அவர் பாதம் பாதரட்சை மீது இருப்பதுபோல் காணப்படுகிறது. புயத்திற்குக்கீழே கைகளில் அணிகள் காணப்படுகின்றன. பீடம் சாதாரணமாக நீண்ட சதுரவடிவில் இருப்பதுபோல் காணப்படுகிறது.

மத்திய சாவாவில் செபால் என்னுமிடத்தில் ஓர் அற்புதமான வெள்ளைக் கல்லில் செதுக்கப்பட்ட சிவபெருமானின் சிறப்புமிக்க சிலை ஒன்று கிடைத்துள்ளது. அவரது தலையில் சடா மகுடம் இல்லை. இரத்தின மகுடம் உள்ளது. காதில் தமிழ்நாட்டுச் சிற்ப வடிவங்களைப்போல் குண்டலங்கள் தொங்குகின்றன. இவ்வுருவம் மிகவும் அழகு வாய்ந்ததாய், தமிழ்நாட்டுச் சிலைகளைப்போல் சிறப்பு மிக்கதாய் விளங்குகிறது.

சுமத்திராவிலே வாரா: யொங்ராங் என்னுமிடத்தில் பல ஆலயங்கள் அழிந்து கிடக்கின்றன. அதன் நடுவில் பெரிய சிவன் கோயிலும், திருமால் நான்முகன் கோயில்களும் எதிரே நந்தியின் ஆலயமும் காணப்படுகின்றன. இஃதன்றி மங்கை பங்கன் திருவடிவமும் தென்படுகின்றது. கணபதியின் வடிவங்கள் பல இங்கு உள்ளன. இவை எல்லாம் தமிழகத்தில் உள்ள கோயில்களில் காணப்படும் படிமங்களை ஒத்தவையாகவும் காணப்படுகின்றன. இங்குக் கிடைத்த திருமால் சிலை மிக எழில் வாய்ந்தது. கி.பி.ஏழாம் நூற்றாண்டில் செய்யப்பட்டது. இதில் தெளிவாகப் பல்லவர் பாணி தென்படுகிறது என அறிஞர்கள் மொழிகின்றார்கள். இங்குக் கண்டெடுக்கப்பட்ட சிலைகளில் சிவனுடைய கழுத்திற்கு மேற்பட்ட சிலை உருவம் மிகச் சிறப்பானது. அழகு மிக்கது. தமிழர்களின் சிறப்பிற்கு எடுத்துக்காட்டாக மிளிர்கிறது.

பொதுவாக, பழைய சாவா கல்வெட்டுகளில் அகத்தியரின் பெயரைப் பார்க்கலாம். அகத்தியரை அகஸ்தி, காலசாயா, கும்பயோனி என்றும் அழைத்தார்கள். ஓர் அரசர் கருப்பு சலவைக் கல்லால் செய்த ஓர் சிற்பத்தை வைத்து அகத்தியருக்குக் கோயில் கட்டினார். குடமுனிவன் என்றும், சிவகுரு என்றும், தமிழ் வளர்த்த அகத்தியனின் குள்ள உருவமுள்ள சிலைகளும் சாவகத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. புத்த கோவிலான போரோபுதூரில் கூட ஓர் அகத்தியர் சிற்பத்தைக் காணலாம். போர்னியோவில் கோம்பெங் என்னுமிடத்திலும், சிவன் சிற்பங்களும், அகத்தியர் சிற்பங்களும் கண்டு பிடிக்கப்பட்டன. பொதுவாக, மகாபலிபுரத்திலும், வேதாரண்யத்திலும்,திருவாரூரிலும், தென் இந்தியாவின் பிற பகுதிகளிலும், சாவா சிற்பங்களிலும் முனிவர்களுக்கு அதாவது ரிஷிகளுக்குச் சிறப்பான இடம் அளிக்கப்பட்டிருக்கின்றது.

கி.பி.750ஆம் ஆண்டில் பொறிக்கப்பட்ட மற்றொரு கல்வெட்டின் மூலம் அகத்தியர் படிமம் அமைந்துள்ள ஓர் ஆலயம் இருந்ததாகவும் தெரிகிறது. அ. ராகவன் பின்வருமாறு கூறுகிறார்:- "அங்கு அகத்திய முனிவரின் வழிபாட்டு முறை நன்கு நிலவியிருந்ததாகத் தெரிகிறது. அகத்தியன் ஆரியன் என சிலர் கூறிக்கொண்டாலும், அவன் சிவனை வழிபட்டு வந்தவன்; தமிழ் வளர்த்தவன்; தமிழ் முனிவன் என்று தமிழ் இலக்கியங்கள் புகழ்ந்தேத்தும் பேறு பெற்றவன் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். மேலும், அங்குக் கிடைத்த சாசனங்களில் குஞ்சாரகுஞ்ச நாட்டினின்று குடியேறியவர் தங்கள் நாட்டினின்று ஓர் அற்புதமான ஒளி வீசும் அரிய சிவலிங்கத்தைக் கொண்டு வந்தனர் என்று குறிப்புகள் காணப்படுகின்றன. சிவலிங்க வழிபாடு தமிழர்க்கு உரியது. சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே திராவிடர்கள் சிவலிங்க வழிபாடு உடையவர்கள் என்பதை மொகஞ்சோதரோவில் கண்டெடுக்கப்பட்ட சிவலிங்க உருவங்கள் உறுதிப்படுத்தியுள்ளன. சிசினதேவர் வணக்கம் என்று இழித்துக் கூறி வந்தவர்கள் ஆரியர்கள் என்பதை எவரும் மறுத்துரைக்கார். எனவே அகத்திய வழிபாடும், சிவலிங்க வழிபாடும் நிலவியதைக்கொண்டு அங்குக் குடியேறியவர்கள் தமிழர்கள் என்று ஏற்றுக்கொள்ளத் தயங்கினாலும் திராவிடர்கள் என்பதை நிச்சயம் ஏற்றுக்கொள்ளலாம்."

பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியார் கீழ்க்காணும் கருத்துக்களை அளித்துள்ளார்: சாவாவில் கிடைத்துள்ள சிலைகளுள் அகத்தியருடைய சிலைகள் சிறப்பிடத்தைப் பெற்றுள்ளன. பாண்டிய அரசு மரபோடு நெருக்கமான தொடர்பு உடையவராகத் தென்னிந்தியாவில் அகத்தியர் போற்றப்படுகிறார். இதைப் போன்று சம்பா, காம்போஜம் போன்ற அரசுகளை நிறுவுவதில் அகத்தியர் முக்கியமான பங்கினைப் பெற்றவர் என்ற நம்பிக்கை கி.பி. பத்தாம், பதினோராம் நூற்றாண்டுகள் வரையில் அந்நாடுகளில் இருந்து வந்ததை முன்னரே கண்டோம். மாண்புமிகு கிரேக்க நாட்டில் கிரேக்கர்கள் தங்கள் தாயகத்திலிருந்து புதிய நாடுகளுக்குச் சென்று குடியேறிய பொழுது, தங்கள் நகரிலுள்ள புனிதமான நெருப்பு குண்டத்திலிருந்து தீயினைத் தங்களுடன் எடுத்துச் சென்றனர். தங்கள் தாயகத்தோடு கொண்டிருக்கும் பாரம்பரியத் தொடர்பினை நினைவூட்டும் அறிகுறியாக அவர்கள் தீச்சுடரைக் கொண்டு சென்றனர். அதைப் போன்று, இந்தியக் குடியேறிகள், தங்களுடன் சிவவழிப்பாட்டு நெறிகளை உடன்கொண்டு சென்றனர். அவ்வழிபாட்டு நெறியின் தலைவராகிய சிவன், நாட்டைக் காக்கும் காவல் தெய்வமாகவும் போற்றப்பட்டார். அவ்வழிபாட்டு நெறியைக் கீழைநாடுகளுக்குக் கொண்டு சென்றவர் சிவபெருமானின் முதன்மையான பக்தனும், பாண்டிய அரசர்களின் அரசுகுருவுமாக விளங்கிய அகத்தியரேயாவார். *(History of Sri Vijaya, pp.6-7)*.

சிங்கசாரியில் உள்ள முக்கண் கபால கணபதி உருவம் கிடைத்தற்கரிய உருவமாகும். இந்தியாவில் இல்லாதவாறு இந்தக் கணேசர் புது மாதிரி காணப்படுகிறார். இவர் சிவகுமாரன் ஆனபடியால் சிவனைப்போல் முக்கண்ணும் கபிலமும் இளம்பிறையும் உடையவராக விளங்குகிறார். இவர் கைகளில் ஜெப மாலையும், யானைக் கைக்கொம்பும், கோடரியும், ஒரு சிறு கவசமும் வைத்திருக்கிறார். இவரது உருவம் ஒவ்வொரு வீட்டின் வாசல்படியிலும் இருக்கும். நூல்களில் இவரது வணக்கம் முதல் இடம் பெற்றிருக்கும். இவரது வயிறு பெருத்திருக்கும். இவரது வாகனம் பெருச்சாளி, சிங்கம் முதலியனவாகும்.

இந்தச் சிவகுமாரனாகிய கணபதி சிவனுடைய பைரவ மூர்த்தியின் மைந்தனாகச் சித்தரிக்கப்பட்டிருக்கிறது. கணபதி கபாலங்களின் மீது அமர்ந்திருக்கிறார். இவரின் காதணிகளும், காலணிகளும், கையணிகளும், இடுப்பணிகளும், கழுத்தணிகளும் கபாலங்களாகக் காணப்படுகின்றன. முன்கையில் அரைக்கபாலங்கள் உள்ளன. இந்த உருவம் 60 அங்குல உயரம் உள்ளது. இவ்வுருவம் இன்று லெய்டன் தொல் பொருள் காட்சி சாலையில் உள்ளது.

கிழக்குச் சாவகத்தில் உள்ள பாரா என்னுமிடத்தில் உள்ள கணபதி உருவம் குறிப்பிடத்தக்கதாம். இது மிக உயர்ந்த முறையில் தமிழகச் சிலைகளை ஒத்த வண்ணம் அரிய கலைநயம் வாய்ந்ததாய்த் திகழ்கிறது. இஃது உண்மையில் திராவிட மூலக்கலை அமிசத்தில் உருவாக்கப்பட்டது. இந்தக் கணபதியைக் கபால கணபதி என்று கூறலாம். இதன் பீடம் வரிசையாகப் பல கபாலங்கள் இருப்பதுபோல் அமைக்கப்பட்டிருப்பது ஒரு சிறந்த அமிசமாகும். இந்தக் கணபதி உருவம் குறுகி உட்கார்ந்திருப்பது போல் காணப்படுகிறது. தமிழ்நாட்டுக் கணபதி உருவம்போல் தலை நிமிர்ந்து கம்பீரமான பார்வையில் காணப்படவில்லை. மகுடமும் உயர்ந்து பொலியவில்லை. பல்லவர்கள் காலத்தில் விநாயகர் சிற்பங்கள் இராச சிம்மன் காலத்துக் கோயில்களிலும் அதற்கும் பிற்பட்ட கோயில்களிலும்தான் அதிகமாகக் காணப்படுகின்றன. விநாயகப் பெருமானை நாட்டியமாடும் நிலையில் அமைக்கும் வழக்கம் இடைக்காலச் சோழராட்சியில் ஏற்பட்டதாகும்.

மண்டி இட்டுக் கொண்டு இருக்கும் பெரிய பூதங்கள், அசுரர்களின் நுழைவாயிலைப் (PORTICO) பார்த்துக்கொண்டு இருப்பதைச் சாவா கோவில்களின் புகுவழிகளில் பார்க்கலாம். இச்சிற்பங்கள் தென் இந்திய கோவில்களில் உள்ள பேரழகு வாய்ந்த பூதவாகனங்களைப்போன்று இருக்கின்றன,

அ. இராகவன் கூறுவதாவது: "சாவகத்தில் நிலவிய சைவம் பண்டைக்காலச் சைவமன்று. அது சமணம், பௌத்தம் ஆகிய மதங்களை எதிர்த்து வீழ்த்திச் சுமார்த்த மதத்தோடு கூட்டுறவு கொண்டது. தனது சமய சாத்திரங்களைத் தேவநாகரியிலும் வடமொழியிலும் வரைந்தது. அதனோடு இந்து மதம் என்ற பொதுப்பெயரோடு எழுந்த இந்தத் தென் இந்திய சைவத்தில் சில வட இந்திய சுமார்த்த சமயக் கொள்கைகளும் அஃதாவது பிராமணீயக் கொள்கைகளும் கலந்ததுண்டு"

பனாதரன் கோயில் தொகுதி பதினைந்தாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலே தோன்றியதாகக் கருதப்படுகிறது. ஆனால், இன்று பனாதரனில் பிராதன கோயிலின் அடித்தளம் மட்டும் எஞ்சி நிற்கின்றது. அது சரவடிவில் மூலைகள் திரிபுற்றதாய்த் திகழ்கிறது. மேற்றளத்தின் கீழே இராம கதை சித்திரிக்கப்பட்டுள்ளது. துவார பாலகர்களின் உருவங்கள்கூட சிறப்புடன் திகழ்கின்றன. தமிழகத்தின் சிற்பச் சாயல்கள் இங்குள்ள சிற்பங்களில் நன்கு பொலிகின்றன என்று அறிஞர்கள் பலரும் கருதுகின்றனர்.

எட்டாவது நூற்றாண்டில் போரோபுதூரில் தோன்றிய பௌத்த சமய சைத்தியங்கள் கூடப் பல்லவர்கள் சோழர்கள் கட்டடப் பாணியை ஒட்டியே காணப்படுவதாக வரலாற்று அறிஞரான வின்சென்ட் ஸ்மித் அவர்கள் கூறியுள்ளார்கள்.

வெய்டன் தொல்பொருட்காட்சி சாலையில் உள்ள பிராச்ன பரமிதா (Prajnaparamita) என்ற பிரச்சித்தி பெற்ற சிற்பச் சிலை, பார்வதியின் திரு உருவம் போன்று தெய்வீக ஒளியை வீசும் அரிய சிலை,இந்து-சாவகக் கலையின் உயர்ந்த நிலையைக் காண ஏற்ற எடுத்துக்காட்டாக இலங்குகிறது. இது 'கிழக்கு மேற்குக் கலைகளிலும் ஒரு சிறந்த ஆத்மிகப் படைப்பாகத் திகழ்கிறது' என ஹேவல் எனும் கலை அறிஞர் கூறுகின்றார்.

கலாமகரா என்பது வாயில்களையும் மாடங்களின் முன்புறங்களையும் அலங்கரித்துக் காட்ட ஒரு விசித்திரமான விலங்கு வடிவைச் செடிகளாலும் கொடிகளாலும் செய்து கட்டும் ஓர் அழகிய தோரணமாகும். மத்திய இந்தியாவின் முற்கால ஸ்தூபங்களின் புகழ் பெற்ற தோரணங்களின் அலங்கரிப்பு முறையை அடுத்து போரோபுதூர், இன்னும் எண்ணற்ற கோயில்களின் வாயில்களின் மேல் உள்ள தோரண அலங்கரிப்பு முறை சந்தேகத்திற்கிடமின்றி இந்திய மூலத்தை உடையதாக இருக்கின்றது. இந்தியாவில் இந்த அலங்கார வேலைப்பாடுகள் எல்லாம் ஒரு யாளியின் தலையை வைத்தே அணிசெய்யப்படும். தெக்காணத்தில் உள்ள திராவிடக் கட்டடக் கலையில் இன்றும் யாளியின் உருவம் காணப்படுகிறது என்று சாவேதுபரே கூறியுள்ளார். காலாதலை என்று கூறப்படும் ஒரு புதிய உருவத்தைச் சாவகச் சிற்பிகள் சாவகநாட்டுக் கட்டடங்கள் பலவற்றிலும் இணைத்து அலங்கரித்துள்ளனர். இஃது இந்தியாவில் சிற்பிகள் வாயில்களின் இருபுறமும் வைத்து அணி செய்யும் மகரத் தலை போல் சாவகச் சிற்பிகள் இதைப் பயன்படுத்தியுள்ளனர் - பொதுவாக சாவகத்தில் காணப்படும் கலா மகர அலங்கார வேலைப்பாடுகள் நிச்சயமாக இந்தியக் கலையைச் சார்ந்தனவே என்பதைச் சேபியெச் வோகல் உறுதிப்படுத்தியுள்ளார். உதாரணம் போரோ புதூர் நுழை வாயிலின் மீது சித்தரிக்கப்பட்டுள்ள 1 கலா மகர தோரண வேலைப்பாடுகள்.

சுமார் 70 ஆண்டுகளுக்கு முன் தமிழகத்தில் பாவைக்கூத்துக்கள் பரவலாக நடைபெற்று வந்தன. சாவகத்தில் நிலவிய பாவைக்கூத்து இந்திய மூலத்தை உடையது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. ஏனெனில், சாவகத்தில் இதன் உயிர்நாடி இராமகாதையும் பாரத, இதிகாசமும். எனவே இந்தியர்கள் இந்தியாவிலிருந்து சாவகத்திற்குப் பௌத்தம், சைவம் ஆகிய சமயங்களோடு இசையையும் கொண்டு சென்றனர். இராமாயணம், பாரதம் போன்ற இதிகாசங்களையும் இதை விளக்கும் சிற்பக் கலையையும் பொம்மலாட்டம் என்ற புதுக்கலையையும் கொண்டு போனார்கள் என நம்பப்படுகின்றது. அநேகமாக அரண்மனை நாட்டியங்கள் அனைத்தும் அலங்கார வகையாகவே இருக்கும். அபிநயங்கள் காட்டும் முறைகள் எல்லாம் தமிழகப் பாணியைத் தழுவியனவாகவே இருக்கும். தமிழர் கண்ட நாட்டியத்தின் மாற்று வடிவு சாவகத்தில் காணக்கிடக்கின்றது.

திரு அ.இராகவன் கூறுவதாவது: "சாவக நாட்டுத் தேசிய பாணியில் உள்ள பஞ்சாடை பாட்டிக் (Batik) என்பது தமிழக மூலத்தை உடையது என்பது எள்ளளவிலும் ஐயமின்று. . . . சாவக மக்களில் முகச்சாயலும் நடையும் ஆடைகளும் நாகரீகமும் பண்பும் தமிழகத்தோடு மிக நெருங்கி நிற்பதை இன்றும் காணலாம். சாவகர்கள் மங்கோலி மரபினர் என்று கூறப்பட்டாலும் திராவிட இனத்தவர்களின் முகச்சாயல் அவர்களிடம் பெரிதும் எதிரொலிக்கிறது. உடையில் நடையில் உணவில் குணத்தில் தமிழ்ச் சாயல் நன்கு காணப்படுகின்றது". . . . தமிழ் நாட்டுக்கலை எது? தமிழ் நாட்டு மொழி எது? தமிழ் நாட்டு

நாகரிகம் எது? என்று பிரித்துக் காணமுடியாதவாறு எல்லாம் சாவகத்தில் இணைந்துள்ளன. . . . . எனவே, நாம் சாவகத்தில் வாழும் மக்களை இந்தோ சாவக மக்கள் என்றும், அங்குக் காணும் கலைகளை இந்தோ சாவகக் கலை அல்லது திராவிட சாவகக் கலை என்றும் கூறலாம்".

திரு நா. கடிகாசலம் கூறுவதாவது: "தற்போர்து பேசப் பெறும் இந்தோனேசிய மொழியில் சில தமிழ்ச் சொற்கள் உள்ளன. பணத்தைத் துனை என்றும், காப்பாளரைக் காவலர் என்றும், கவியைத் தோழன் என்றும், மதிப்பை நிலை என்றும், சுங்கவரியைச் சுங்கே என்றும், கொடியைத் தாலி என்றும் குறிப்பிடுகின்றனர். இடம், வட்டில், பண்டம், கலம், கடலை, கண்டு என்னும் சொற்களும் வழங்கி வருகின்றன. கோயில் என்னும் சொல் இந்தோனேசிய மொழியில கூயில் என மருவி வழங்குகிறது. சாகோ அரிசி - சவ்வரிசி எனவும், கெடுங் என்பது கிட்டங்கி எனவும் தமிழில் வழங்குகின்றன" (தமிழும், தமிழரும், பக் 73) புஞ்சைப் பயிர்கள் விளையும் பாண்டுங்கை (Bandung) புஞ்சாக் என அழைக்கின்றனர். இங்குப் பழ மரங்கள், தானிய வகைகள், சோளம் அதிகம்; நெற் பயிர் இல்லை. ஒரு காலத்தில் சாவகத்தில், தமிழ் அரசாங்க மொழியாகக் கூட இருந்தது என்று சிலர் எண்ணுகின்றார்கள். போகர் தமிழ்நாட்டின் பழங்கால மூலிகை வைத்தியர். இவர் பெயர் சாவாவில் உள்ள 'போகர் (Bogor) எனும் ஊருக்கு சூட்டப்பட்டிருக்கிறது".

பாலியும் தமிழ்ச் சமயமும்

பாலியில் சித்திரை 2ஆம்நாள் கலைமகள் விழா கொண்டாடுகிறார்கள். இதனைச் சித்திரைத் தெய்வமாக சரஸ்வதி விழா என்று கொண்டாடும் இந்து பாலிப் பெண்கள், மலரும் பழமும் ஏந்தப்பட்ட தாழங்கூடையைத் தலையில் வைத்துக் கொண்டு அணி அணியாகக் கோயில்களுக்குச் சென்று மலர் தூவி வணங்குகிறார்கள். கைகளைக் கூப்பி நெஞ்சத்திற்கு நேராக வைத்துக் கும்பிடுகின்றனர். நவராத்திரி விழா நடத்துகின்றனர். சிவராத்திரி அன்று பெருவிழா படைத்து நடனமாடுகின்றனர். பாலித்தீவில் இன்று (1985) 26,72,000 பேர்கள் இருக்கின்றனர். இவர்களில் 93.37 விழுக்காடு இந்துக்கள் ஆவர். இவர்கள் பெரும்பான்மையோர் சிவனை வழிபாடு செய்கின்றார்கள்.

பண்டைய இந்தோனேசியாவில் பின்பற்றப்பட்ட சமயத்தை இந்து - புத்த சமயம் என்று அழைக்கின்றார்கள். கி.பி.8-10 ஆம் நூற்றாண்டுகளை இந்து சமயத்தின் பொற்காலம் என்று கூறலாம். இதற்குப்பிறகு படிப்படியாக இந்து சமயம் சாவநீய மயமாக்கப்பட்டது. இறுதியில் 15 ஆம் 16 ஆம் நூற்றாண்டுகளில் இஸ்லாம் சமயம் பரவியவுடன் இந்து சமயத்தின் வீழ்ச்சி தொடங்கியது. ஆனாலும், இன்றும் பாலித்தீவில் பெரும்பான்மையான மக்கள் இந்து சமயத்தைப் பின்பற்றுகின்றனர்.

இந்தியா, நேப்பாளம் நீங்கலாக, இந்துக்கள் பெரும்பான்மையாக இருக்கும் இடம் பாலித்தீவாகும். சாவாவிற்குக் கிழக்கில் உள்ள இத்தீவு இயற்கை வளம் நிறைந்தது. இயற்கை வழிபாடும், ஆவி உலகக் கோட்பாட்டில் நம்பிக்கையும் உள்ள பாலித்தீவினரிடம் கி.பி.இரண்டாம் நூற்றாண்டு முதற் கொண்டே பௌத்த, இந்து சமயக் கருத்துக்கள் பரவ ஆரம்பித்தன. இவை ஸ்ரீவிசயா, சயிலேந்திரா, மஜபாகிட் போன்ற காலங்களில் மக்களிடையே விரிவாகப் பரவலாயின. சுமத்திராவிலும், சாவாவிலும் பதினைந்தாம்

நூற்றாண்டில் இசுலாமிய சமயம் பரவியபோது இந்த இரு தீவுகளிலும் வாழ்ந்து வந்த இந்து பௌத்த சமயத் துறவிகளும் அறிஞர்களும் கலைஞர்களும் பாலியைத் தங்கள் புகலிடமாகக் கொண்டனர் என வரலாற்று அறிஞர்கள் கூறுகின்றனர்.

பாலி மக்கள் இயற்கைப் பொருள்களைக் கடவுளாக எண்ணி வழிபடுகின்றனர். அவர்கள் வணங்கும் தெய்வங்களில் மிக முக்கியமானது சூரியன் ஆகும். நிலம், நீர், தீ, காற்று, மலை எல்லாவற்றையும் அவர்கள் கடவுள்களாகவே எண்ணி வழிபடுகின்றனர். பாலித்தீவினர் மலைகளையெல்லாம் சிவன் குடிகொண்டுள்ள இடமாகக் கருதி வணங்குகிறார்கள். ஆனால், தமிழர்கள் எல்லா மலைகளையும் முருகன் கோயில் கொண்டுள்ள இடமாகக் கருதுகின்றார்கள்.

இந்தோனேசியர்கள் இந்துக்களாக இருந்தார்கள் என்று நாம் கூறினாலும், இவர்கள் பெரும்பாலும் சைவசமயத்தையே பின்பற்றினார்கள் என்று கூறலாம். இன்றும் பெரும்பான்மையான பாலினியர்கள் சிவவழிபாடு செய்கின்றார்கள். இவ்வாறு இவர்கள் சிவவழிபாடு செய்தபோதிலும் இவர்கள் பின்பற்றும் சமயத்தை இந்து-புத்த சமயம் என்று ஏன் அழைக்கின்றோம் என்றால், இவர்கள் புத்த சமயத்தில் பல கருத்துக்களை ஏற்றுக்கொண்டார்கள். அதேபோல் புத்த சமயத்தினரும் இந்து சமயத்தின் பல கருத்துக்களை ஏற்றுக்கொண்டார்கள். பாலினியர்களின் ஒரு பழங்கதைப்படி சிவனும் புத்தரும் இரு சகோதரர்கள். சிவன் மூத்தவர், பல சிறப்புரிமைகள் உடையவர். புத்தர் இளையவர், இயல்பாகத் திறமையுள்ளவர். குறிப்பாகத் தவ வலிமையுள்ளவர்.

இவ்வாறு இந்தோனேசியர்கள் சிவ வழிபாடு செய்ததால்தான் இவர்கள் பின்பற்றும் சமயத்தில் தமிழ்ச் சமயத்தின் தாக்கம் இருக்கின்றது என்று அறுதியிட்டுக் கூறுகின்றோம். ஏனென்றால், சிவவழிபாடு பிறந்த இடம் திராவிடநாடு, திராவிடருக்குச் சொந்தமானது. மேலும், ஆரியர்கள் தொன்றுதொட்டுச் சிவவழிபாட்டை எதிர்த்து வந்தார்கள்; சிவவழிபாட்டைச் சிசினிதேவ வணக்கம் என்று இழித்துக் கூறிவந்தார்கள் என அ.இராகவன் கூறுகின்றார். சைவ சமயம் ஆரியருக்கு முற்பட்ட தமிழர்களது சமயம் என்று டாக்டர் போப்பையர் கூறுகின்றார். சிவபெருமான் தமிழ்க் கடவுள் என்றும் அவர் தியானப் பொருளாகவும், இலிங்க வடிவமாகவும் பாவிக்கப்பட்டார் என்று ஸ்டிவென்சன் என்னும் அறிஞர் கூறுவர். சிவவழிபாடு ஆதியில் தமிழருக்குள் இருந்தது என்று ரகோசன் (Ragozen) என்னும் பண்டிதர் கூறுவர். சிவவழிபாடு வடநாட்டைப் பார்க்கிலும் தென்னாட்டுக்கே உரிமை பூண்டது எனப் பெர்கூசன் (Fergusson) என்னும் அறிஞர் 'மரமும் சர்ப்ப வணக்கமும்' என்னும் நூலில் கூறுகின்றார். தென்னிந்திய சிற்பங்களை ஆராய்ந்த கங்கோலி என்பவர் சிவ வழிபாடு தென்னிந்தியத் தமிழர்களுக்கே உரியது என்று தெளிவாகக் கூறியுள்ளார். மேலும், சிறந்த பெரும்புலவர்களான மாக்ஸ் முல்லர், ஜி.யு.போப். ஹிராஸ் பாதிரியார் முதலியவர்களும் சிவவழிபாடு தமிழர்களுக்கே உரிய வழிபாடு என்பதை ஐயத்திற்கு இடமின்றி அறிவித்திருக்கிறார்கள். உயர்ந்த சீர்திருத்தமுள்ள திராவிடர்களின் சேர்க்கையில் வேதமதம் கடவுட்கொள்கையுள்ள மதமாக மாறிற்று. மேலும், எப்பொழுதும் ஆரியக் கொள்கைகள் தாம் மேலாகவிருந்தனவென்று கருத வேண்டாம். ஆரியர் அல்லாதவர்களுக்கு ஆரியர் பணிந்த இடங்களுண்டு. வேதகாலத் தலைவரான இந்திரனுக்கும் கிருஷ்ணனுக்கும் நடந்த போராட்டமொன்று; சிவமதத்தின் எழுச்சி இன்னொன்று என டாக்டர் எஸ்.ராதாகிருஷ்ணன் கூறுகின்றார்.

கலித்தொகை, அகநானூறு, புறநானூறு முதலிய சங்க இலக்கியங்களில் காணப்படும் கடவுள் வாழ்த்துக்களால் சிவவழிபாடு தென்னாட்டில் பரவி இருந்தது என்பது வெளிச்சமாகின்றது. 'தென்னாடுடைய சிவனே போற்றி' 'பாண்டிநாடே பழம்பதியாகவும் 'பக்தி செய்யடியரை பரம்பரத்துய்ப்பவன்', 'தண்ணார் தமிழளிக்குத் தென்பாண்டி நாட்டான்' முதலிய தமிழக எண்ணங்கள் தமிழ்நாட்டில் சிவநெறி உண்டென விளக்குகின்றன.

சங்ககாலத்திற்குப் பிறகு சைவசமயம் வேதநெறியைத் தழுவி புதிய உருவம் பெற்றது. அறுபத்து நான்கு நாயன்மார்களும் அப்புதிய சைவ சமயத்திற்குப் பெருந்தொண்டு புரிந்து அதனை வளர்த்து வந்தனர். பல்லவ மன்னர்களில் சிலர் சிறந்த சைவர்களாக விளங்கினார்கள். பாண்டிய மன்னர்களும் சைவசமயத்தை மிகவும் பேணி வந்தனர். கி.பி.9ஆம் நூற்றாண்டு முதல் 13ஆம் நூற்றாண்டுவரை சைவத்தின் பொற்காலம் எனக் கூறலாம். அக்காலத்துச் சோழர்கள் சைவசமயத்தை அரசாங்க சமயமாகவே ஆக்கினர்.

சைவ சித்தாந்தமும் பாலினீயர்களின் சிவதத்துவமும்

தமிழ்நாட்டின் சிவன் மட்டும் இந்தோனேசியாவிற்குச் செலவவில்லை. சிவவழிபாடு தத்துவமும், குறிப்பாகப் பல சைவ சித்தாந்த தத்துவமும் இந்தோனேசியாவிற்குச் சென்றன என்று கூறலாம். ஆகையால், தமிழ்நாட்டுச் சைவசித்தாந்தத்திற்கும் பாலினியர்களின் சிவதத்துவத்திற்கும் சில ஒற்றுமைகளைக் காணலாம்.

பிரபஞ்சத்தை மாயையினின்றும் தோற்றி, நிறுத்தி, ஒடுக்குபவன் சிவனே என்பது சைவசித்தாந்தம். பல உறுப்புகளைக்கொண்ட ஒரு தேரினைப் பலர் செய்வதைப்போல இப்பிரபஞ்சத்தையும் பல கடவுளர் உண்டாக்கியிருக்கலாமே என்று கூறுவது அனேகேஸ்வரவாதம். இவ்வாதத்தைச் சைவ சித்தாந்தம் ஏற்பதில்லை. மேற்சொன்ன மூவரைப்போல் பலர் சேர்ந்து செய்கின்றார்கள் என்று கொண்டாலும் அவர்கள் அனைவரும் முதல்வன் ஒருவனின் ஆணைப்படியும் அவன் வழி நின்றும் செய்கின்றனர் என்று கொள்வதே பொருத்தம் என்று சித்தாந்தம் கருதுகின்றது. ஆகையால் அயனும், மாலும்,அரனின் ஏவலால் தத்தம் தொழில்களைச் செய்கின்றனர் என்பது சித்தாந்தம்.

இதே மாதிரியான கருத்தைப் பாலினீய இந்துக்களிடம் பார்க்கலாம். அவர்கள் தத்துவப்படி உள்பொருள் உலகமுழுமையின் மூலகாரணம் சிவாதித்யா (*Sivaditya*) இவரே எங்கும் உள்ள, எக்காலத்திற்கும் உரிய கடவுள். பிரம்மா, விஷ்ணு, ருத்ரா எனும் மூன்று வடிவங்களை எடுத்துக் கொண்டு சிவாதித்யா உலகத்தைப் படைக்கின்றார், ஆளுகின்றார், அழிக்கின்றார். சிவனைப் பாலினீயர்கள் ருத்ரன், ஈஸ்வரன், கிரிபதி, பஞ்சமுகா, மஹாதேவா என்றும் அழைக்கின்றார்கள்.

மேலும், சைவசித்தாந்தத்தின் நம்பிக்கைப்படி சிவனின் திருமேனி அத்துவாக்களாலும் பஞ்சமந்திரங்களாலும் ஆனது. பஞ்ச மந்திரங்கள் பின்வருபவன

ஈசானம்	- தலை
தத்புருஷம்	- முகம்
அகோரம்	- இருதயம்
வாமதேவம்	- குஹ்யம் (மறைவிடம்)
சத்யோஜாதம்	- திருவடி

பாலனீயர்களின் கருத்துப்படி சிவாதித்யாவே ஐந்து பிரம்மரூபம் (Pancha brahma form of Siva). இவை முறையே ஈசானா, சத்யோஜாதம், வாமதேவா, தத்புருஷா, அக்ஹோரா.

சிவன், சக்தி, நாதம், விந்து, சதாசிவன், மகேசுவரன், உருத்திரன், மால், அயன் என்னும் ஒன்பது வடிவ வேறுபாடுகளுடன் ஒன்றாயுள்ள இறைவனே ஐந்தொழில்களைச் செய்வான் என்று சைவ சித்தர்ந்தம் கூறுகிறது. பாலினீயர்களின் தத்துவப்படி ஓம் என்ற சொல்லில் ஐந்து ஒலி வடிவங்கள் அடங்கியிருக்கின்றன: a-u-m- nada - bindu இந்த ஐந்து வடிவங்களின் கடவுள்கள் முறையே பிரம்மா, விஷ்ணு, ருத்ரா (மஹேஸ்வரா) சாதாசிவா, பரமசிவா. ஆகையால் சித்தாந்திகளைப்போல், பாலினீயர்களும் நாதம், விந்து, சதாசிவன், மகேசுவரன், உருத்திரன், மால்(விஷ்ணு), அயன் (பிரம்மா) முதலிய கடவுள்களையும் ஒலி வடிவங்களையும் குறிப்பிடுகின்றார்கள். மேலும் பாலினீயர்களும் சித்தாந்தமும் ஓம் என்னும் பிரணவம் முழுமுதலுக்கு ஒலிவடிவாக இருக்கின்றது என்று கருதுகின்றார்கள். பிரபஞ்ச மனைத்துக்கும் மூலகாரணம் சிவனே எனப் பாலினீயர்கள் கருதுகின்றார்கள். பிரபஞ்சமனைத்தும் சக்தி சிவமயம் என்பது சித்தாந்தம்.

சித்தாந்தத்தின் மரபுப்படி சிவனுக்குப்பொது இயல்பில் உருவம், அருஉருவம், அருவம் என்று மூன்றும் உண்டு. அருவினால் அவன் தான் நினைத்த திருமேனி எடுத்துக் கொள்வான். கண்ணுக்குத்தெரிவதால் உருவமாயும் குறிப்பிடத்தக்க யாதொரு உருவமாயிராதது பற்றி அருவமாயுள்ளது இலிங்கம் 'நிற்குணனாய் நின்மலனாய் நித்திய நத்தனாய்' என்றுகூட ஓர் சிவஞானபோத வெண்பா கூறுகின்றது. ஆகையால், இறைவன் அருவன், குறிப்பிடத்தக்க யாதொரு உருவமுமில்லை என்ற கருத்தும் சித்தாந்தத்தில் உண்டு.

பாலினீயர்களின் கோயில்களில் கருவறைகளில் கடவுள் உருவச்சிலைகள் வைக்கப்படவில்லை. மற்ற இடங்களில் கடவுள் உருவச் சிலைகளைப் பார்க்கலாம். ஆகையால், இவ்வழிபாட்டு முறை சைவசித்தாந்தத்தின் உருவம், அருவம் தத்துவத்தைத் தழுவியிருக்கின்றது என்று கூறலாம். ஆனால், பாலினீயர்கள் அறிவெல்லை கடந்த சிவதத்துவத்தை சூன்யம் என்று கூறலாம் என நம்புகின்றார்கள். சூனியம் எனும் தத்துவத்தை சைவசித்தாந்தம் ஏற்பதில்லை. உலகம் உள்பொருளே என்றும் அதற்கு முதற்காரணமாக இருப்பது மாயை என்றும் சித்தாந்திகள் கூறுகின்றனர். உள்பொருள் அனைத்தையும் முப்பொருள் என வகைப்படுத்தி அவற்றை, பதி, பசு, பாசம் என்று கொள்வது சைவ சித்தாந்த மரபு. மேலும் காரணமாகிய மாயையும் என்றும் உள்பொருள் என்பது சித்தாந்தம்.

அரூப கருவறை பாலனீயர்களின் கோயில்களில் இருக்கும் போதிலும் அவர்கள் சிவனின் எண்குண அமைப்புகளை வழிபடுகின்றார்கள். அவை முறையே தர்மம், ஞானம், வைராக்யம், ஐச்வர்யம் முதலியனவும், அவற்றின் எதிர்மாறான குணங்களும் ஆகும். சைவசித்தாந்தமும் சிவனின் எண்குண அமைப்புகளை வழிபடுவதில் நம்பிக்கை வைத்திருககிறது. ஆனால், இந்த எண்குண அமைப்புகள் பின்வருவன ஆகும் (1) தன்வயத்தனாதல் (2) தூய உடம்பினனாதல் (3) இயற்கை உணர்வினனாதல் (4) முற்றுமுணர்தல் (5) இயல்பாகவே பாசங்களின் நீங்குதல் (6) பேரருளுடைமை (7) முடிவில்லாற்றலுடைமை (8) வரம்பிலின்பமுடைமை என்பன. ஆகையால் பாலினீய, சைவசித்தாந்த எண்குண அமைப்புகளில் சில வேறுபாடுகள் இருக்கும் போதிலும், இரு நாட்டினரும் சிவனின் எண்குண அமைப்பில் நம்பிக்கை வைத்திருந்தனர் எனக் கூறலாம்.

பண்டைய தமிழர்கள் ஒவ்வொரு மலையிலும், சோலையிலும், இயற்கை நீர்நிலைகளிலும் ஒவ்வொரு தெய்வம் நிலையாக வதிந்ததாகக் கருதி அவற்றையும் வணங்கி வந்தனர். இதே மாதிரியான நம்பிக்கை பாலினீயர்களிடம் இன்றுகூட இருக்கின்றது.

பாலியில் சிறியதும் பெரியதுமான 4,661 கோயில்கள் இருப்பதாக ஜே.எஸ்.ஸ்லெல்லன் கிரிபல் கூறுகின்றார். இக்கோயில்கள் தமிழகத்தில் உள்ள கோயில்களைப்போல் அமைப்பில் இல்லை. இக்கோயில்களில் நம் நாட்டில் உள்ளதுபோல இறைவன் சிலையோ, இறைவியின் சிலையோ இல்லை. இங்கு எத்தகைய உருவ வழிபாட்டினையும் காண இயலாது. கோபுரங்களோ, கூரைவேய்ந்த மண்டபங்களோ இக்கோயில்களில் கிடையாது.

கோயில் வெளிச்சுற்றில் கோயில் மணிக்கூண்டு, மடைப்பள்ளி, நேர்த்திக்கடன் செய்வோரின் காணிக்கைகளைச் சேமிக்கும் இடம், இசைக் கருவிகளை வாசிப்போர் இடம், பக்தர்கள் தங்கும் இடம் யாவும் உள்ளன. வெளிச்சுற்றில் இசை, நடனம், நாடகம் நடைபெறும். நம்நாட்டுக் கோயில் வெளிச்சுற்றுகளும் இவ்வாறே பயன்படுத்தப்படுகின்றன.

உள்திருச்சுற்றில் பலதெய்வங்கள் உறையும் இடங்கள் உள்ளன. இவற்றை 'மேரு' எனக்கூறுகிறார்கள். ஒவ்வொரு மேருவின் மேற்பகுதியும் படிப்படியாகக் குறைந்து செல்லும் அடுக்குகளை உடையது. அடுக்குப் புல்லால் வேய்ந்த கூரை உடையது. மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது, பதினொன்று என ஒற்றைப்படையிலேயே அடுக்குகள் இருக்கும். மூன்று அடுக்குகளையுடைய மேரு ஸ்ரீ தேவிக்கும், ஐந்து ஈஸ்வரனுக்கும், ஏழு பிரம்மாவிற்கும், ஒன்பது விஷ்ணுவிற்கும், பதினொன்று மகேஸ்வரனுக்கும் உரியதாகும்.

மேரு சீனக் கோயிலின் தோற்றம் உடையது. தெய்வம் வந்து தங்குவதற்கு மேருவின் அடிப்பகுதியில் மேடை ஒன்று உண்டு. இது மிகுந்த வேலைப்பாடு கூடியது. இந்த மேடையினை நம்கோயில்களில் உள்ள கருவறை போல் கருதலாம். இந்தக் கருவறை எப்போதும் திறந்தே இருக்கும். சுற்றுச் சுவரோ, கதவுகளோ கிடையாது. மேலும் இந்தக் கருவறையில் எத்தத் தெய்வச்சிலையும் இல்லை. மக்கள் இங்கு வந்து வழிபடுகின்றபோது இறைவன் ஆவி ரூபத்தில் இருந்து அருளுவதாக பாலித் தீவினர் நம்புகின்றனர்.

உட்பிரகாரத்தின் கிழக்குப் பகுதியில் சுற்றுச் சுவரோடு கதவுகளை உடைய ஒரு கருவறை உள்ளது. கோயில் உள்ள பகுதியில் வாழ்ந்த செல்வாக்கு பெற்ற மூதாதையர்கள் ஒருவர்க்கு உரியது இது. இதனுள் மட்டும் சிவலிங்கம் ஒன்றுள்ளது. இந்தக் கருவறைக்கு சுற்றுச் சுவரும், கதவுகளும் உண்டு. இக்கதவுகள் எப்போதும் பூட்டி இருப்பதால் இதனுள் பலவகை உலோகங்களிலான உருவச் சிலைகளையும் உற்சவ மூர்த்தியின் படிமங்களையும் வைத்திருக்கிறார்கள்.

விழாக்காலங்களில் மட்டுமே உருவ வழிபாடு நடைபெறுகிறது. இச்சமயங்களில் உற்சவ மூர்த்தியின் உருவத்தை அலங்கரித்து நீராட்ட ஆற்றங்கரைக்கோ, கடற்கரைக்கோ எடுத்துச் செல்வார்கள். உற்சவ மூர்த்திக்கு முன்னால் நடுத்தர வயது உடைய பெண்கள் வரிசைப் பொருள்களைத் தட்டுகளில் ஏந்திச் செல்வர். பூக்கள், பழங்கள், பல வகைத்தின்பண்டங்கள், ஆடை அணிகலன்கள் இவற்றை வரிசைப் பொருள்களாகக் கொண்டு செல்வதுண்டு.

நீராட்டிய பிறகு உற்சவ மூர்த்தியை அலங்கரித்து மக்கள் தொழக் கோயிலில் வைப்பார்கள். பிமாங்கு (*Pemangu*) எனப்படும் அந்தணரல்லாத பூசாரி உற்சவ மூர்த்திக்கு முன்னால் உட்கார்ந்து கொண்டு பக்தர் கொடுக்கும் பலவகைத் தின்பண்டங்களையும், பழங்களையும் மூர்த்திக்கு முன்வைத்து விடுவார். அதனை அவர்கள் வீட்டிற்குக் கொண்டு வந்து உறவினர்களோடு கலந்துண்பர்.

உற்சவ மூர்த்தியை நதிக்கோ, கடற்கரைக்கோ நீராட்ட எடுத்துச் செல்வது, அப்போது ஆடை அணிகலன்களை உடன் எடுத்துச் செல்வது போன்றவற்றிலும், உற்சவ மூர்த்திக்குப் பூசை செய்வது போன்ற சமயச் சடங்குகளிலும், தமிழகப் பழக்க வழக்கங்கள் சமயச் சடங்குகள் ஆகியவற்றின் தாக்கம் நிறைந்திருப்பதாக ஈ.ச.விசுவநாதன் கருதுகின்றார்.

பாலித்தீவில் உள்ள மக்கள் பொதுவாக விழாக்காலங்களிலேயே கோயில்களுக்குச் செல்கிறார்கள். மற்ற காலங்களில் பெரும்பாலும் நாள்தோறும் வீடுகளில் மூதாதையர் வழிபாடும் இறைவணக்கமும் நிகழ்த்துகிறார்கள். கோயில் தேவதைகளாலும், ஆவிகளாலும் இடுக்கண் வராமல் தடுக்க அவைகளுக்கென தனியாக சில பூசைகளைச் செய்கிறார்கள். இந்த பூசையில் வழக்கமான பொருள்களோடு இறைச்சிப்பானையும், மதுவையும் படையலாக படைக்கின்றனர். இத்தகைய சடங்குகளை தமிழ் நாட்டிலும் முனீஸ்வரன், காட்டேரி போன்ற கிராமத் தெய்வங்களை வழிபடும் போது செய்கிறார்கள்.

கோயில்களுக்குள் எல்லாச் சமயத்தவரும் சென்று வரலாம், எல்லாச் சாதியினரும் சென்று வழிபடலாம். எனினும் சில நடைமுறை விதிகளை யாவரும் தவறாமல் கடைபிடிக்க வேண்டும். கோயில்களுக்குச் செல்வதற்கு முன்பு, காலணிகளைக் கழற்றிவிட்டு, கோயிலுக்கு முன்புள்ள குளத்திலோ, ஓடையிலோ, ஆற்றிலோ, கை, கால்களையும் முகத்தையும் கழுவிக் கொள்ள வேண்டும். பிறகு பூசாரி கொடுக்கும் துண்டை இடுப்பில் கட்டிக்கொண்டு கோயிலுக்குள் செல்ல வேண்டும். பாலித்தீவில் கிந்தாமணி (*Kintamani*) என்னுமிடத்தில் துண்டை கட்டிக்கொள்ளாமல் நான் ஓர் கோவிலுள் நுழையப் போன போது பாலினியர்கள் கைதட்டி என்னை நிறுத்தி துண்டு கட்டிக்கொண்டு போகச் சொன்னார்கள் எனது கோட்டை இடுப்பில் கட்டிக்கொண்டு நான் கோவிலுக்கு உள்ளே சென்றேன். மேல்

துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக்கொண்டு ஆண்கள் கோயிலுக்குச் செல்லும் வழக்கம் தமிழகத்தில் உண்டு. ஆனால், பாலியில் பெண்களும் பூசாரி கொடுக்கும் துண்டை இடையில் கட்டிக்கொண்டுதான் கோயிலுக்குச் செல்ல வேண்டும். இந்தத் துண்டிற்குச் சிறு தொகை ஒன்றைக் கட்டணமாக வசூலிக்கிறார்கள். இது கோயிலுக்குச் செலுத்தும் காணிக்கை யாகவும் கருதுகிறார்கள். கோயிலின் உள்திருச்சுற்றில் தூய்மையையும் அமைதியையும் யாவரும் காக்க வேண்டும்.

சிவனோடு ஒப்ப எண்ணப்படுகின்றவர் இவர்கள் வழிபடும் "பாதாரகுரு" (Batara Guru) என்பவர். திருமூர்த்திகளில் ஒருவராகிய பிரம்மாவைத் தியாகவும், பிரஜாபதியாகவும் நினைக்கின்றனர். இவருக்கு ஒரே முகம்தான் உண்டு. நான்முகனை இவர்கள் பிரம்மாவாகக் கருதாமல் ஒருவகையில் அழிக்கும் கடவுளாகவும், மக்கள் தெய்வமாகவும் நினைக்கிறார்கள். நீர்நிலைக்கடவுளாக விஷ்ணுவைப் பாலிமக்கள் கருதுகிறார்கள். கருவளம் (Fertility) தரும் கடவுளும் இவரே. இவரைத் தேவலோகத்தின் தலைவனாகவும் தேவர்களின் காப்பாளனாகவும் படைத்தலைவனாகவும் கருதுகின்றனர். காக்கும் கடவுளாகிய விஷ்ணு பாலித்தீவில் இந்திரனும் வருணனும் செய்யும் செயல்களைச் செய்கின்றனர். ஸ்ரீதேவியினை விஷ்ணுவின் மனைவியாகப் பாலித்தீவினர் வழிபாடு செய்கின்றனர். இவளே விளை நிலங்களின் தலைவியாகவும் கருதப்படுகின்றாள். இத்தீவில் நெல் வயல்கள் நிறைந்துள்ள இடங்களில் எல்லாம் இத்தேவியின் கோயில்களைக் காணலாம். ஈசனுடைய அம்சமாகக் காலனை இத்தீவில் உள்ள மக்கள் எண்ணிப் போற்றுகின்றனர். சுடுகாட்டில் உறையும் தெய்வம் துர்க்கை. இவள் இறந்தவர்களின் ஆவிகளை எமனிடம் தீர்ப்பிற்கு அனுப்புவதாக இப்பாலி மக்களிடம் ஒரு நம்பிக்கை உள்ளது. ஆதலின் இவளை அஞ்சத்தக்க தெய்வமாக கருதி வணங்குகிறார்கள். சிவபெருமானுடைய மைந்தனாகவும் குழந்தைகளின் தெய்வமாகவும் முருகனைக் கருதி பாலித்தீவினர் வழிபடுகின்றனர். குழந்தைகளுக்குப் பெயர் வைத்தல், காதுகுத்துதல் போன்ற சடங்குகளையெல்லாம் முருகனை நினைத்தே இங்குள்ளவர்கள் செய்கிறார்கள். கணபதியை இத்தீவினர் 'கன' (Gana) என அழைக்கின்றனர். இவர் ஞானத்தின் கடவுளாகப் பாலினியர் கருதுகின்றார்கள். கணபதி வழிபாடு ஒரு காலத்தில் பாலி முழுவதும் பரவி இருந்ததாக வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றார்கள். தற்போது இத்தீவில் உள்ள மக்கள் அணியும் தாயத்துகளில் கணபதி உருவத்தைப் பொறித்து அணிந்துகொள்கிறார்கள். இத்தாயத்துக்களை அணிவதால் ஆவிகள் தம்மை அணுகுவதில்லை என்பது பாலித்தீவினரின் நம்பிக்கை. இந்த நம்பிக்கை சாவாதீவிலும் பரவலாக உள்ளது. பாலித்தீவினருக்கும் அழகுத் தெய்வம் மாறன்தான். இவனுடைய மனைவியின் பெயரும் ரதியே. உமாதேவியை இயற்கை அன்னையாக இம்மக்கள் வழிபடுகின்றனர். இவளை நாம் சிவனுடைய மனைவியாகவும் மலைமகளாகவும் கருதுகிறோம். ஆனால் பாலித் தீவினர் மலைமகளைச் (Giriputri) சிவனுடைய இரண்டாவது மனைவியாகக் கருதுகிறார்கள். வாழ்க்கை வளமெல்லாம் அருளும் அன்புத் தெய்வமாக எண்ணித் துதிக்கின்றனர். சிவனுடைய பூத கணங்களை முச்சந்திகளில் எல்லாம் வழிபாடு செய்கிறார்கள். ஆகையால் "பாலி மக்களின் சமய வாழ்வில் இந்து சமயக் கடவுள் வழிபாட்டுக் கூறுகளும், தமிழகச் சடங்கு முறை கூறும் இடம் பெற்றுள்ளன என்பதைப் பாலித்தீவிற்குச் செல்லும் யாவரும் தெளிவாக உணரலாம்" என ச.சு.விசுவநாதன் கூறுகின்றார்.

இந்தோனேசியர்கள் சிவனை மட்டும் வழிபாடு செய்யவில்லை. அவர்கள், நான்முகன், திருமால், கணபதி, அகத்தியர், துர்க்கா அல்லது கொற்றவை போன்ற கடவுள்களையும் வழிபட்டார்கள். உதாரணமாக, பாலித்தீவில் இறைவன் புகழ்பாடல்கள் பெரும்பாலும் சிவனின் பல்வேறு குண அமைப்புகளைப் பற்றித்தான் இருக்கும். ஆனாலும், விஷ்ணு, பிரம்மா, அக்னி, சூர்யா, சந்திரா, காமா, கணேசா, வருணா, அனந்தா, சரஸ்வதி, கங்கா முதலியவர்களைப் பற்றியும் பாலித தீவில் பாசுரங்கள் உண்டு.

சுமத்திராவில் கிடைத்த திருமால் (விஷ்ணு) சிலை எழில் மிக வாய்ந்தது. கி.பி.ஏழாம் நூற்றாண்டில் செய்யப்பட்டது. இதில் தெளிவாகப் பல்லவர் பாணி தென்படுகிறது என அறிஞர்கள் மொழிகின்றனர். இங்குக் கண்டெடுக்கப்பட்ட சிறந்த சிலைகளில் சிவனுடைய கழுத்திற்கு மேற்பட்ட சிலை உருவம் மிகச் சிறப்பானது. அழகு மிக்கது. இது லோகேஸ்வரர் சிலை உருவம் என்று கூறப்படுகிறது. இது அழகு மிக்கது. தமிழர்களின் கவின் மிக்கச் சிறப்பிற்கு சிறந்த எடுத்துக்காட்டாக மிளிர்கின்றது. இப்பொழுது சக்கர்த்தா தொல்பொருள் காட்சிச் சாலையில் உள்ளது. இது இளவரசர் தும்ராங் (DUMRONG) என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. இந்தச் சிலையின் அமைப்பைப்பற்றி அறிஞர் கோடெஸ் என்பவர் புகழ்ந்து பின்வருமாறு கூறியுள்ளார்:

"இது இந்தியச் சிற்பச் சிலை வடிவுகளில் கீர்த்தி மிக்கது. இந்தச் சிலையுருவின் சித்தரிப்பு தரம் அறியாதவாறு சிதைந்துள்ளது. இதன் ஆடைகள் அதிகச் சிறப்பானவை. உயர் குலத்துக்குரியவைகளைத் தாங்கிய நிலையிலுள்ள திரண்ட தோள்கள், அருளொழுகும் அமைதி நிலவும் அழகிய முகங்கள்".

மற்றோர் அற்புதமான சிலை மனித உருவம் தாங்கிய கருடன் மீது திருமால் (விஷ்ணு) அமர்ந்திருப்பதுபோல் காட்சியளிப்பதாகும். முற்காலத்திராவிடச் சிற்பங்களில் திருமாலின் வாகனமாகிய கருடன் பறவை வடிவிலே இருந்தது. ஆனால் இடைக்கால சிற்பங்களில் வளைந்த கூரிய அலகுடைய ஒரு மனிதனுடைய உருவிலே மாறியது. இந்த இந்திய மூலப் படிமத்தை அனுசரித்துச் சாவகச் சிற்பிகள் இந்தப் பெருமை மிக்க கருடாழ்வாரை உருவாக்கிவிட்டனர். இந்த ஆழ்வார் பெரும்பாலும் மனித உருப்பெற்றிருந்தாலும் முன்னே நீண்டு தள்ளிக் கொண்டிருக்கும் அலகும் இறக்கைகளும், நீண்ட அழகிய வாலும், நகங்களும் அது பறவையின் மூலத்தினின்று பிறந்தவை என்பதை எடுத்துக்காட்டுகின்றன.

தமிழகத்தில் முல்லை நிலத்துக்குரிய கடவுள் மாயோன். அந்தத் திருமாலே விட்டுணுவாகவும், கண்ணனாகவும் காட்சி தருகின்றான். சங்க காலத்திற்குப் பின்னரே திருமாலை முழுமுதற் கடவுளாகக் கொண்ட வைணவம் தனியொரு சமயமாகத் தோன்றியது. பல்லவ மன்னர்களில் சிம்மவிஷ்ணு, நரசிம்மன், பரமேசுவரன் முதலியோர் சிறந்த வைணவர்களாக வழங்கினார்கள். சோழ மன்னர்களும் சைவர்களாக இருப்பினும் வைணவக் கோயில்களைப் பேணி வந்தனர். ஆகையால் திருமால் வழிபாடும் தமிழ் நாட்டிலிருந்து இந்தோனேசியாவிற்குச் சென்றது.

இந்தோனேசிய மொழியில் தமிழ்ச் சொற்கள்

பன்னெடுங் காலமாகத் தமிழ் நாட்டோடு தொடர்பு கொண்டுள்ள இந்தோனேசிய மொழியில் தமிழ்ச் சொற்கள் பலவும், தமிழ்வழிச் சமஸ்கிருதச் சொற்கள் சிலவும் பேச்சுவழக்கிலும், இலக்கிய வழக்கிலும் இடம் பெற்றுள்ளன. ஆனால் பொருளில் மட்டும் சிறிது மாற்றத்தை அவை அடைந்துள்ளன பொருள்திரிந்த தமிழ்ச் சொற்கள் .

வழங்கும் தமிழ்ச் சொற்கள்	திரிந்த பொருள்
1) கவி	தோழன்
2) காப்பாளர்	காவலர்
3) செட்டி	விற்பவன்
4) தம்பி	இளைஞர், தவறு செய்யும் பையன்
5) திசாந்து (சாந்து)	அபினி
6) பணம்	துணை
7) மதிப்பு	நிலை

வடிவில் திரிந்த தமிழ்ச் சொற்கள்

தமிழ்ச் சொற்கள்	திரிந்தவடிவம்
1) அச்சு	அதிச்
2) இஞ்சி	இஞ்சா
3) இலை	ஹெலை
4) கடலை	கடலா
5) காட்டு	கூட்டி
6) கிடங்கு	குடங்கு
7) குடுமி	கல்டியுமக்
8) குண்டு	கண்டோ
9) கொத்தமல்லி	கெத்துமலரான்
10) சீ	சே
11) சீச்சி	சிஸ்
12) செருப்பு	தெஜாப்பு
13) பவளம்	புதலான்

14) மாங்காய்	மங்கா
15) முதல்	மொடல்
16) வட்டி	கெஜட்டி
17) வடை	படை
18) வண்ணான்	பெரூண்
19) விலங்கு	பெலுங்காண்
20) வேசி	பேசி
21) வைரம்	வேளரம்

சமஸ்கிருதச் சொற்கள்

தமிழின் மூலம் இந்தோனேசிய மொழியில் நுழைந்த வடசொற்கள் சில உள்ளன.

தமிழ்வழி சமஸ்கிருதச் சொற்கள்	இந்தோனேசியச் சொற்கள்
1) கஜம் (யானை)	கஜா
2) கொலா (சருக்கரை)	குலா
3) தேவதா (பெண்தெய்வம்)	தேவதா
4) நாகம்	நாகா
5) பீஜம் (விதை)	பிஜி
6) புத்ரி	புத்திரி
7) மந்திரி	மந்திரி
8) மோக்ஷா	மோட்சா
9) ராஜா	ராஜா
10) விஷம்	விஷா

தனித்தமிழ்ச் சொற்கள்

அப்பம், இடம், கஞ்சி, கட்டில், கடமை, கலம், காட்டு, காவல், கூண்டு, கூலி, சுக்கு, பண்டம், பண்டிதர், மணி, மாமா, மாமி, முகம், முத்து, வட்டில் என்பனவாகும். இவையாவும் பண்டைய சாவகக் கவிதையில் ஆளப்பட்டுள்ளன. இவை அல்லாமல் கப்பல், குதிரை, கூடை, தாலி, பிட்டு (உணவு வகை) பெட்டி எனும் சொற்களும் காணப்படுகின்றன. *(Audilakshmi Anjaneyalu 'Tamil words in the Indonesian Malayan Language in Tamil Culture Vol. IX, No 1 Jan-Mar 1951, pp. 43-55;* டாக்டர் க.த.திருநாவுக்கரசு op.cit pp. 563-566

பாலியின் தென்பாசர் எனும் தலைநகருக்கு அருகில் தமிழருடைய மரக்கலம் ஒன்று மோதுண்டு அழிந்த இடம் இருக்கிறது. அக்கரையை அடுத்துள்ள ஊரைக் கப்பால் என்னும் பெயரால் அழைக்கின்றனர். மற்றும் பாலித்தீவில் கோயிலைக் "கூயில்" எனக் குறிப்பிடுகின்றனர்.

இத்தகைய வேற்று மொழிச் சொற்கள் அயல்மொழி ஒன்றில் வழங்க வேண்டும் எனில் அதற்கு மொழியியல் அறிஞர் இரு காரணங்களைக் காட்டுவர். முதலாவது வேற்றுமொழி (தமிழ்) பேசும், மக்கள் அயல் (இந்தோனேசிய) நாட்டில் கணிசமான அளவிற்கு நெடுங்காலம் வாழ்ந்து இருக்கவேண்டும். காலப்போக்கில் குடியேறிய அயல்நாட்டு மக்களோடு மக்களாக மாறிப்போய் இருக்கவேண்டும். அம்மொழிகள் வழங்கும் இரு நாடுகளுக்கு இடையே மிக நெருக்கமான வாணிக, பண்பாட்டுத் தொடர்பு நெடுங்காலம் நிலவி இருக்கவேண்டும் என்பது இரண்டாவது காரணமாகும். (டாக்டர் க.த. திருநாவுக்கரசு, op.cit.pp.565-566) இன்றும் இந்தோனேசிய அரசுவிமான போக்குவரத்து நிறுவனத்தை கருடா ஏர்வேஸ் (*Garuda Airways*) என்று தான் அழைக்கின்றனர். தமிழ் நாட்டிலும் நாம் எப்போதும் கருடனை விரும்பி வழிபடுகிறோம்.

இந்தோனேசியாவில் பல்லவ-கிரந்த எடுத்துக்கள்

பல்லவர் ஆட்சிகாலத்தில் தமிழ் நாட்டில் சமஸ்கிருத மொழியை எழுதுவதற்காகக் கிரந்த எழுத்துக்கள் அமைத்துக் கொள்ளப்பட்டன. ஏறக்குறைய கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் 'கிரந்த எழுத்துக்கள்' வடிவம் பெற்றன எனலாம். கீழைச்சாவகத்திலும், கீழைக் கலிமந்தானிலும் கி.பி. ஆறாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே பல்லவ கிரந்த எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட சமஸ்கிருத மொழிக் கல்வெட்டுகள் கிடைத்துள்ளன.

கி. பி. எட்டாம் நூற்றாண்டில் கீழைச் சாவகத்தில் சாவானிய மொழிக்கு எழுத்து வடிவம் வகுக்கப்பட்டது. அந்த எழுத்துக்கள் 'பல்லவ கிரந்தத்தை' அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டன. பின்னர் சாவாவில் மலாய் மொழியே செல்வாக்குப் பெற்றது. இதனுடைய எழுத்துமுறையும் பல்லவ கிரந்தத்தைத் தழுவியதாகும். இதனை ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த சுமத்திராவின் கல்வெட்டுகளால் அறிகிறோம். கி.பி. பதினாறாம் நூற்றாண்டு வரையில் பல்லவ கிரந்தமே இந்தோனேசிய மொழிகளின் எழுத்துமுறை வரி வடிவங்களாக இருந்தன. இசுலாம் சமயம் பரவியவுடன் இந்தோனேசிய மலாய் மொழிக்கு அராபிய எழுத்து முறை வகுத்துக் கொள்ளப்பட்டது. (டாக்டர் க. த. திருநாவுக்கரசு, *op. cit., pp 565-567)*

வட சுமத்திராவில் தமிழர்கள்

டாக்டர் அ. வீரமணி எழுதிய 'வட சுமத்திராவில் தமிழர்கள்' எனும் நூலை அடிப்படையாக வைத்துக் கொண்டு பின்வரும் செய்திகள் அளிக்கப்படுகின்றன.

இந்தோனேசியாவுக்கு வந்த இந்தியர்களில் பெரும்பாலோர் தமிழகம், கேரளம் ஆகிய இடங்களிலிருந்து வந்தனர். இவர்களில் பெரும்பான்மையோர் இசுலாமிய மதத்தினர் எனவும் கடந்த கால வெளியீடுகள் குறிப்பிடுகின்றன. இந்தியர்கள் பெருவாரியாக வந்திறங்கிய இடம் சுமத்திர தீவின் கிழக்குக் கடற்கரையாகும். அக்காலத்தில் 'டெல்லி' என்று வழங்கப்பட்ட இன்றைய வட சுமத்திராவிலேயே அவர்கள் விவசாயத் தொழிலாளர்களாகத் தருவிக்கப்பட்டனர்.

அ. வீரமணி மேலும் பின் வருமாறு கூறுகின்றார்: கடந்த கால வெளியீடுகளில் இந்தியர்களைக் குறிக்க பல சொற்கள் பயன்படுத்தப்பட்டன. பெரும்பாலான வெளியீடுகளில் அவர்களைக் "கிள்ளிங்" 'பெங்காளி' என்றே குறிப்பிட்டுள்ளனர். அடுத்ததாக 'ஓராங் பம்பாய்' (பம்பாய் மனிதர்) என்ற சொல்லும் பயன்படுத்தப்பட்டது. சில வெளியீடுகள் அவர்களைப் 'பிரிட்டிஷ் இந்தியர்கள்' எனக் குறிப்பிட்டுள்ளன. 'கிள்ளிங்' என்ற சொல் தென்னிந்தியர்களைக் குறிப்பாகத் தமிழர்களைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. தென்னிந்தியரல்லாத இதர இந்தியர்களைச் சீக்கியர்கள் உட்பட 'பெங்காளி' என்றே அழைத்தனர். ஆனல் எல்லாப் பணக்கார இந்திய வியாபாரிகளையும் 'ஓராங் பாம்பாய்' என்றே அழைத்தனர். ஏனென்றால் பெரும்பாலான துணி வியாபாரிகள் பம்பாய் நகரத்தவிருந்து வந்தனர். இன்றும் தமிழர் ஒருவரை 'கிள்ளிங்' என்று குறிப்பிட்டால் அவருக்கு மனம் பொறுக்காது. அது ஆத்திரத்தை வெளிக் கொணரக் கூடிய சொல். வேற்று இனத்தவர்கள் தமிழர்களைத் தாழ்ந்தவர்கள் எனக் குறிப்பிடுவதற்கே அச்சொல் பயன்படுத்தப்படுவதாகப் பலர் நம்புகின்றனர். அதற்கு விளக்கும் தரும் சிலர் இதர இனத்தார், தமிழர்கள், கலிங்கப் பேரரசிலிருந்து வந்தவர்கள் என நம்புவதால் தான் 'கலிங்கம்' என்று சொல்லுவதாக் கூறுகின்றனர். ஆனால் 'கிள்ளிங்' என்ற சொல் வழங்கப்படுகிற வட்டாரத்தின் வரலாற்றைப் பார்த்தால், அச்சொல் அண்மைய இரு நூறு ஆண்டுகளிலேயே தோன்றியிருப்பதை அறியலாம். அதோடு சோழமண்டலக்கரையுடன் பல நூற்றாண்டுகளாகத் தொடர்பு வைத்திருந்த தென் கிழக்காசியர்கள் 'தமிழர்' என்ற சொல் தெரியாமல் இருந்திருப்பார்கள் என்பது சிந்தித்துப் பார்க்க வேண்டிய ஒன்று. 'சூலியன்' என்ற சொல் தென் கிழக்காசியர்கள் மத்தியில் சோழ மண்டலக் கரையிலிருந்து வருவோரைக் குறிக்கப் பயன்படுத்தப் படுகிறது.

நியன்ஹூய்ஸ் என்ற டச்சுப்புகையிலைத் தோட்ட உரிமையாளர் முதன் முதலில் இருபத்தைந்து தமிழக் கூலிகளை 1873 இல் பினாங்கிலிருந்து இறக்குமதி செய்தார். சீனத் தொழிலாளிகளுக்கு உதவியாக இருக்கவே அவர்கள் கொண்டு வரப்பட்டனர். பாக்குத் தோட்டங்களைச் சுத்தப்படுத்தவும், குடிநீர் கொண்டு வரவும் சாக்கடைகளையும், சாலைகளையும் அமைக்கவும் அவர்கள் பயன்படுத்தப் பட்டதாகத் தெரிகிறது. 1875இல் சாவானியக் கூலிகள் உட்பட கூலிகளாகப் பணியாற்றிய தமிழர்களின் எண்ணிக்கை ஆயிரமாக உயர்ந்தது. தமிழர்கள் பினாங்கு, சிங்கப்பூர் ஆகிய இடங்களிலிந்து டெல்லி என்று அழைக்கப்பட்ட முன்னாளைய வட சுமத்திராவிற்குச் சென்றனர் எனக் கடந்த கால வெளியீடுகள் கூறுகின்றன. ஆனால், மேடானில் உள்ள தமிழ் முதியோர்கள் அவர்கள் தத்தம் கிராமங்களிலிருந்து நேராக வட சுமத்திராவுக்குக் கொண்டு வரப்பட்டனர் எனக் கூறுகின்றார்கள். டச்சு அரசாங்க வெளியீடுகளில் ஒன்று (A Manual of Netherland & India, P 134) தமிழர்களைப் பற்றி பின்வருமாறு வருணிக்கிறது:

"அவர்கள் அனைவருமே மிகவும் தாழ்ந்த சமூக நிலையில் உள்ளவர்கள். சிங்கப்பூரில் வேலை கிடைப்பது கடினமாக இருப்பதாலும், சம்பளம் குறைந்ததாக இருப்பதாலும், நெதர்லாந்து இந்தியாவுக்குச் (இந்தோனேசியாவிற்கு) செல்கின்றனர்."

ஒப்பந்தக் கூலிகளாகப் பணியாற்றிய தமிழர்கள், பெரும்பாலும் சாலைகள், சாக்கடைகள், கால்வாய்கள் ஆகியவற்றை அமைப்பதிலேயே பயன்படுத்தப்பட்டனர். பலர் மாட்டு வண்டி ஓட்டிகளாகவும் பணியாற்றினர். நீரிணைக் குடியேற்றப் பிரதேசத்திலிருந்தும் (Straits Settlement) சொந்த கிராமங்களிலிருந்தும் சேகரிக்கப்பட்ட தமிழர்களைக் கங்காணிகள் (மேற்பார்வையாளர்கள்) தோட்டந்தோறும் எடுத்துச் சென்று தோட்ட உரிமையாளர்களிடம் விற்றனர். தமிழர்கள் வேலை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதும் கங்காணி தன் இலாபத்தைப் (கமிஷனை) பெற்றுத் திரும்பி விடுவார். கங்காணிக் கூலிகளைக் கொண்டு வர செலவிட்ட பணத்தையும் தோட்ட உரிமையாளர்கள் அடைத்து விடுவார். எனவே தமிழகப்பாட்டாளிகள் வேலை ஒப்பந்தத்தால் கட்டுப்படுத்தப்படுவதுடன், தோட்ட உரிமையாளர்களிடம் கடனாளியாகவும் மாற்றப்பட்டார்கள். தோட்ட உரிமையாளர்கள் ஒரு குழுவில் வரும் எல்லாத் தமிழர்களையும் 'வாங்க' முடியாததால் சில சமயம் கணவன் ஒரு தோட்டத்திலும், மனைவி பிறிதொரு தோட்டத்திலும் 'விற்கப்பட்ட' அவல நிலையும் அன்று நிலவியது.

வட சுமத்திராவில் கூலி வேலை செய்யச் சென்ற தமிழர்களை அவர் தம் பாரம்பரிய பிரிவுகளுக்கேற்ப பிரித்து வைத்தனர். சாதி இந்துக்களையும் ஆதித் திராவிடர்களையும் தனித்தனியே குடியிருக்கச் செய்தனர். தமிழர்களுக்கென தண்டல் (மேற்பார்வையாளர்) ஒருவர் தோட்டங்கள் தோறும் நியமிக்கப்பட்டார். தமிழர்கள் தண்டல் சொற்படி நடந்தனர். 'கூலிச் சட்ட திட்டத்தின்' படி எந்த ஒப்பந்தமும் ஓராண்டுக்கு மேல் இருக்கக் கூடாது என்றிருந்தாலும் பெரும்பாலான தமிழர்கள் தத்தம் கடனை அடைக்க குறைந்தது, மூன்று ஆண்டுகளாவது வேலை செய்தனர். எனவே போதிய பணத்துடன் தமிழகம் திரும்ப நினைத்த தமிழர்கள் பல ஆண்டுகள் உழைக்க வேண்டியிருந்தது.

தோட்டத் தண்டல்கள் செய்த கொடுமைகளைப் பொறுக்காது ஓடினால் டச்சுக்காரர்கள் ஓடியவர்களைப் பிடித்து ஆறுமாத காலச் சிறை தண்டனை விதித்தனர். சிறை சென்ற தமிழர்கள் வட சுமத்திராவில் அரசாங்கச் சாலைகளைக் கட்டப் பயன்படுத்தப்பட்டனர். சிறை தண்டனை முடிந்து, மீண்டும் பழைய தோட்டத்திற்கே திரும்பி, ஒப்பந்தக் காலத்தை அவர்கள் முடித்துத் தர வேண்டியிருந்தது. ஒப்பந்தக் கூலிகளைப் பிணைத்த கூலிகள் சட்ட திட்டத்தை 1936இல் டச்சுத் தோட்ட உரிமையாளர்கள் முழுமையாக அகற்றியதால் தமிழர்கள் சுதந்திர மனிதர்களாயினர்.

டச்சுத் தோட்ட உரிமையாளர் தமிழர்களின் உழைப்பிற்குச் சீனர்களைக் காட்டிலும் குறைந்த அளவு ஊதியமே தந்தனர். எட்டு மாத கால உழைப்பிற்குச் சீனர்கள் 150கில்டர்ஸ் (டச்சு நாணயம்) பெற்றால் தமிழர்களுக்கு 120 கில்டர்ஸ் தான் கொடுக்கப்பட்டது.

ஒப்பந்த கூலிகளாக பணியேற்ற தமிழர்களைத் தவிர மற்ற சுதந்திரத் தமிழர்கள் வியாபாரம் நிமித்தமாகவும் நகர்ப்புற வேலைகள் செய்யும் பொருட்டும் மேடான்

நகரத்திற்கு வந்தனர். மேடான், வட சுமத்திரா மாநிலத்தின் தலை நகரமாகும். செட்டியார்கள், செட்டிகள், வேளாளர், முதலியார், பத்தர்கள் பலரும் மேடான் நகருக்குச் சென்றார்கள். குறிப்பாக பினங்கிலிருந்து டெல்லி அரசின் ஆரம்பகாலத் தலைநகரான லாபுவானுக்குச் செட்டியார்கள் சென்றார்கள். வட சுமத்திராவில் செட்டியார்கள் கிட்டங்கி வைத்து வியாபாரம் செய்த வீடுகளில் ஒன்று இன்றும் லாபுவானில் நிற்கிறது. புதுச்சேரியிலிருந்து டச்சு வர்த்தக நிறுவனங்களில் கணக்கர்களாகப் பணியாற்ற, இந்நூற்றாண்டின் தொடக்கத்திலேயே பிள்ளை, முதலியார் எனக் குறிப்பிடப்படும் தமிழர்களும் மேடான் வந்தனர். இந்தோனேசியர்களின் தேவைகளையும் நகர்ப்புறத் தோட்டப்புறத் தமிழர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் , பூசாரிகள். ஐயர்கள், முடிதிருத்துவோர், சலவைத்தொழிலாளிகள், பத்தர்கள் ஆகியோரும் மேடானுக்குள் குடியேறினர். இவர்களின் வழித்தோன்றல்கள் இன்றும் மேடானில் வாழ்கின்றனர்.

மேடானில் இந்தியர்களுக்கென ஒதுக்கப்பட்ட மயானங்களின் வரலாறு, ஒவ்வொரு மொழிப்பிரிவினரும் ஒரு சமுதாயமாகக் கருதப்பட்ட ஆண்டினை அறுதியிட்டு கூற உதவும். தமிழ் இந்துக்களின் புதை குழி, சாலான்சிலோன் என்னுமிடத்தில் அரசாங்கத்தால் 1899இல் தரப்பட்டது. பின்னர் வேற்றிடத்திற்கு மாற்றப் பட்டதால் இன்று அவ்விடம் சந்தையாகப் பயன்படுத்தப்படுகிறது. இப்பொழுது ஜாலான் காஜா மாடா இந்துக்களின் மயானமாகப் பயன்படுகிறது. ஜாவி பெக்கான் என்றழைக்கப்பட்ட தென்னிந்திய முசுலிம்களின் புதை குழி முதலில் கம்போங் கிள்ளிங் என்னும் இடத்தில் இருந்தது. 1901இல் அவர்களுக்கென மசூதியைக் கட்ட இடமும் தரப்பட்டது.

இரண்டாவது உலகப்போர் தமிழக மத்தியில் பல மாற்றங்களைத் தோற்றுவித்தது. ஜப்பானியரிடம் தோல்வியுற்ற பிரிட்டிஷ் துருப்புகளை, ஜப்பானியர்கள் மேடானில் அடைத்து வைத்தனர். இத்துருப்புகளில் பெரும்பாலோர் இந்தியர்களாக இருந்தனர். இவர்களைக் கொண்டும், உள்ளூர்த் தமிழ் இளைஞர்களைக் கொண்டும் இந்திய தேசியப் படையின் பிரிவு ஒன்று மேடானில் உருவாக்கப்பட்டது. ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட பயிற்சியளிக்கப்பட்ட அவர்கள், பர்மா போர் முனைக்குச் செல்ல, மேடானை விட்டுப் புறப்பட்டனர். பர்மா போர் முனைக்கு புறப்பட்ட பலர் மேடானுக்கு திரும்பவில்லை. இந்திய விடுதலைப்படை மணிப்பூரில் தோல்வியுறவே, மேடான் தமிழர்கள் பலர் மலேயாவிலும் சிங்கப்பூரிலும் நிரந்தரமாகத் தங்கி விட்டனர். போர் தொடங்குவதற்கு முன்னரேயே, மேடான் நகரத்து வியாபாரிகளும், பணக்காரத் தமிழர்களும் இந்தியாவிற்கு ஓடிவிட்டனர்.

ஜப்பானிய ஆட்சியின் போது தோட்டப்புறங்களில் வாழ்க்கை கடினமாகவும், தோட்ட நிர்வாகம் முறையாக நடை பெறாமல் இருந்ததாலும் தோட்டப் புறத் தமிழர்கள் படிப்படியாக மேடானுக்கும் இதர நகரங்களுக்கும் குடியேறத் தொடங்கினர். பிறகு இந்தோனேசிய புரட்சியால் கிட்டதட்ட 4000 இந்தியர்கள் இந்தியாவுக்குத் திரும்பினர். இந்தோனேசிய விடுதலைக்குப்பின்னர் வடசுமத்திரா தமிழர்களின் வாழ்வும் வளமும் நகர்புறத்தை ஒட்டியே அமைந்துள்ளது. அண்மைய ஆண்டுகளில், மேடானை விட்டு இதர பல மாநிலங்களின் தலை நகரங்களுக்கும் இந்தோனேசியத் தலைநகரான சக்கர்த்தாவுக்கும் பொருளீட்டும்; நிமித்தம் தமிழர்கள் வெளியேறத் தொடங்கினர்.

எங்குச் சென்றாலும், தங்களை 'மேடான் தமிழன்' என்று பெருமையுடன் கூறிக் கொள்ள அவர்கள் தயங்குவதில்லை.

மக்கள் தொகை

இந்தோனேசியாவுக்கு வந்த இந்தியர்களில் பெரும்பாலனோர் தமிழகம், கேரளம் ஆகிய இடங்களிலிருந்து வந்தனர். இவர்கள் பெருவாரியாக வந்திறங்கிய இடம் சுமத்திரா தீவின் கிழக்குக் கடற்கரையாகும். தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதி மேடான் நகரமாகும். முக்கால் பகுதித் தமிழர்கள் மேடான் நகரச் சுற்றுப்புறப் பகுதிகளில் வாழ்கின்றனர். வடசுமத்திரா மாநிலத்தின் தலைநகரம் மேடான். வடசுமத்திராவில் 61.38 விழுக்காடு முசுலிம்களும் 0.21 விழுக்காடு இந்துக்களும் வாழ்கின்றனர்.

1920ஆம் ஆண்டு இந்தோனேசியாவில் இருந்த மொத்த இந்தியர்களின் எண்ணிக்கை 21,000; 1930இல் 30,000

அட்டவணை: இந்தோனேசியத் தீவுகளில் இந்தியர்களின் எண்ணிக்கை 1930

தீவு	மொத்தம் எண்ணிக்கை	இந்தோனேசியாவில் பிறந்தோர் விழுக்காடு
சாவா-மதுரா	5,500	58.2%
சுமத்திரா	20,100	48.5%
போர்னியோ(காலிமந்தான்)	2,900	36.0%
சிலிபிஸ் (சூலவாசி)	800	44.0%
ஏனைய தீவுகள்	700	58.0%
	30,000	49.3%

இந்தியர்கள் அதிகப்படியாக வாழ்ந்த தீவுகள் முறையே சுமத்திரா, சாவா-மதுரா ஆகிய தீவுகளாகும். இந்தோனேசியாவில் பிறந்த இந்தியர்கள் அதிகப்படியாக காணப்பட்ட இடம் சாவா-மதுராவும் இதர தீவுகளும் தான். சுமத்திராவில் வாழ்ந்த இந்தியர்களில் 48.5 விழுக்காட்டினர் அங்கேயே பிறந்து வளர்ந்தவர்களாக இருந்தனர். இதிலிருந்து 1930லேயே இந்தியர்கள் இந்தோனேசியர்களாக வாழத் தலைப்பட்டிருப்பது புரிய வருகிறது. 'கடல் கடந்த நாடுகளில் இந்தியர்கள்' என்னும் நூலை ஆங்கிலத்தில் படைத்த சி.கொண்டாப்பி 1940ஆம் ஆண்டில் 27,638 இந்தியர்கள் இந்தோனேசியாவில் வாழ்ந்ததாகக் குறிப்பிடுகிறார். இது சில ஆயிரம் இந்தியர்கள் தாயகம் திரும்பியதைக் காட்டுகிறது.

1945ஆம் ஆண்டளவில் 100 அல்லது 200 தமிழர்கள் இந்தோனேசியாவின் தலைநகரான சக்கர்த்தாவில் வாழ்ந்து வந்தார்கள். ஆனால் தற்சமயம் இங்கு சுமார் 1000 தமிழர்கள் வாழ்கின்றார்கள். 1972இல் அறுநூறு தமிழ் குடும்பங்கள் இருந்தன என விசுவநாதன் கூறுகின்றார். தமிழர்களைப் பற்றிய புள்ளி விவரம் இதுவரை எடுக்கப்படவில்லை. தோராயமாக மதிப்பிடுதலிலும் முக்கிய வேறுபாடுகளைக் காணலாம்.

மேடானில் 1972ஆம் ஆண்டில் ஏறக்குறைய 50,000 தமிழர்கள் இருந்ததாக மாரியம்மன் கோயில் அறங்காவலர் கூறினார் என ஈ.ச.விசுவநாதன் கூறுகின்றார்; ஆனால் வீரப்பன் இன்று மேடானில் சுமார் 35 ஆயிரம் தமிழர்கள் வாழ்கின்றனர். எனவும் அ. வீரமணி 15,000 தமிழர்கள் வாழ்வதாகவும் கூறுகின்றனர்.

தமிழ் சமுதாய அமைப்பு: தமிழ் மொழி கலாச்சாரத்தின் நிலை

வட சுமத்திரா தமிழர்கள் முற்றிலும் இந்தோனேசியர்களாக மாறிவிட்டனர். வடசுமத்திராத் தமிழர்கள் மலாய் மொழியில் வல்லவர்களாக இருந்து. தமிழ் பயில வாய்ப்பில்லாததால் தமிழில் தடுமாறுகின்றனர். முதியவர்கள் திறம்பட தமிழைப் பேசவும், எழுதவும், செய்கின்றனர். இளையவருக்கு ஆர்வம் இருக்கிறது. ஆனால் பயிற்சி இல்லாததால் தமிழ் உரையாடத் தயங்குகின்றனர். சிறு குழந்தைகளுக்குத் தமிழ் புரிகிறது. ஆனால் பேசத் தடுமாறுகின்றனர். வடசுமத்திராத் தமிழர்கள் அனைவருமே மலாய்மொழியில் வல்லவர்களாக இருக்கின்றனர். தங்களுடைய உறவினர் மத்தியில் முடிந்தவரை தாய்மொழியிலேயே பேச முயலுகின்றனர். தமிழர்கள் பொதுவாக இந்தோனேசிய மொழிப் பள்ளிக்கூடங்களில் பயில்கின்றனர்.

1960 வரை தமிழ்ப்பள்ளிகள் வடசுமத்திராவில் நடைபெற்று வந்தன. அதற்குப் பின்னர், இந்தோனேசிய மொழி போதிக்கப்படாத பள்ளிக் கூடங்களுக்குத் தடை விதிக்கப்பட்டதால், பல பள்ளிக்கூடங்கள் இந்தோனேசியப் பள்ளிகளாக மாறின. ஆனால் இந்தோனேசிய அரசாங்கம், தமிழ் மொழிக்கு மட்டும் விதி விலக்கு அளித்து, தமிழர்கள் தங்களுடைய மொழியை தத்தம் கோயில்களில் வகுப்பு நடத்தித் தங்களுடைய பிள்ளைகளுக்குக் கற்பிக்கலாம் என்ற சலுகையையும் வழங்கிற்று. இந்த அடிப்படையில் தான் மேடான் மாரியம்மன் கோயில் நிர்வாகத்தினர் சுமார் நாற்பதாயிரம் தமிழ் நூல்களைத் தமிழக அரசிமிடருந்து அன்பளிப்பாகப் பெற்று தமிழ்க் குழந்தைகளுக்கு விநியோகம் செய்தனர். ஆனால் 1974க்குப் பின்னர் தமிழ் வகுப்புகள் மாரியம்மன் கோயிலில் நடத்தப்படவில்லை என்றாலும், இதர கோயில்களில் முடிந்த அளவிற்கு மாலை நேரங்களில் தமிழ் வகுப்புக்களை நடத்தும் முயற்சி தொடர்ந்து நடைபெற்று வருகிறது, அச்சத்துடன்தான் இவ்வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

மேடான் மாரியம்மன் கோயில் சார்பில் இரண்டு பள்ளிக்கூடங்கள் இயங்கி வருகின்றன. 'தர்மபுத்திரா முதல் பள்ளி' கோயிலின் பின்புறத்திலுள்ள கட்டிடத்தில் இயங்குகிறது. 'தர்மபுத்திரா இரண்டாம் பள்ளி' ஜாலான் டாராட் என்னுமிடத்தில் இயங்குகிறது. இப்பள்ளிகளில் பன்னிரெண்டு ஆண்டுகள் பயின்று விட்டு, இந்தோனேசியப் பல்கலைக் கழகங்களில் பயிலச் செல்லலாம். ஏழைகளான தமிழ்ச் சிறுவர்களுக்குக் கட்டணம் வாங்கப்படுவதில்லை. வருமானம் போதாத பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு அரைக் கட்டணம் விதிக்கப்படுகிறது.

வீரப்பன் பின்வருமாறு கூறுகின்றார்:- மாரியம்மன் ஆலயம் வெளி மதில் சுவருக்குள் தேசிய பள்ளி ஒன்று இருக்கின்றது. இங்கு கம்போங்டாரட் பகுதியிலும் 400 பேர் மலாய் மொழி பயிலுகின்றனர். துணைமொழி ஆங்கிலம்- இங்குப் படிக்கும் மாணவர்களில் தமிழ்

மாணவர்களின் எண்ணிக்கை 60 விழுக்காடு. கட்டாயப் பாடம் இந்து சமயக் கல்வி, ஆகமம். முதலிரண்டு வகுப்புகளில் இப்பாடங்களை இரண்டு மணி நேரம் படிக்கின்றனர்; 6 ஆவது வரை 3 மணி நேரம் படிக்கின்றனர். இப்பள்ளியின் பெயர் தருமபுத்திரா. காலை-மாலை நேரங்களில் 1 மணி நேரம் தனிப்பட்ட தமிழ் வகுப்பு நடக்கின்றது. இவர்கள் எல்லோரும் தமிழ் நன்றாக பேசுகின்றார்கள். ஆனால் தமிழ் ஏடோ, அச்சகமோ, பதிப்பீடோ இங்கு இல்லை.

வட சுமத்திராவில் தமிழ் வகுப்பு நடத்தும் ஒரு சில கோயில்களில் பிஞ்சய் மாரியம்மன் கோயிலும் ஒன்று. பிஞ்சய் நகரம் மேடான் வடக்கிழக்கில் மேடானுக்கு அருகே இருக்கின்றது. இவ்விடத்தில் 50 தமிழ்க் குடும்பங்களே வாழ்வதால் இந்நகரில் வாழும் தமிழர்களால் தங்களுடைய கோயில்களுக்கும், மொழிக்கும் அதிகமான பணிகளை ஆற்ற முடியவில்லை.

கோயில்களில் கற்பிக்கப்படும் தமிழைத் தவிர, இதர வழிகளிலும் தமிழ் கற்பிக்கப்படுகிறது. தனிப்பட்ட முறையில் பல பெற்றோர் தங்களுடைய குழந்தைகளுக்குத் தமிழில் எழுதவும், படிக்கவும் கற்பிக்கின்றனர். வசதி படைத்தவர்கள் வயது முதிர்ந்த சில ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுத்து தங்களுடைய பிள்ளைகளைத் தமிழ் படிக்கச் செய்கின்றனர்.

இந்தோனேசியாவின் தலைநகரான சக்கர்த்தாவிலுள்ள மத்தியப் பல்கலைக் கழகமான இந்தோனேசியப் பல்கலைக்கழகத்தில் இந்தியத்துறை பேராசிரியர் பதவி ஒன்று உள்ளது. அந்தப்பதவியில்அண்ணாமலைப்பல்கலைக்கழகத்தைச் சார்ந்த டாக்டர். செ. வை. சண்முகம் அவர்கள் இரண்டு ஆண்டுகள் அங்கு தங்கி தமிழ் கற்பித்தார்கள். பல தமிழ் நூல்களும் தமிழ் பற்றிய ஆங்கில நூல்களும் இப்பல்கலைக்கழக நூல்நிலையத்தில் உள்ளது.

பொதுவாகக் கூறுவதென்றால் வடசுமத்திராத் தமிழர்கள் இரண்டு இடங்களில் தமிழைப் பாதுகாத்து வருகின்றனர். ஒன்று தமிழர்களின் குடும்பங்களிலும், பிறிதொன்று கோயில்களில்.

வடசுமத்திராத் தமிழர்கள், தங்கள் உணவு, உடை முதலிய பழக்க வழக்கங்களில் பெரும்பாலும் இந்தோனேசியர்களையே பின்பற்றுகின்றனர். சேலை கட்டிய தமிழ்ப் பெண்களை இவர்களிடையே காண்பது அரிது. விழாக்களின் போதும் திருமணங்களின் போதும் இவர்களில் 50 விழுக்காட்டினர் வேட்டி, புடவைக் கட்டிக் கொள்கின்றனர். பொதுவாக, தமிழ்ப் பெண்மணிகள் அணியும் ஆடை கவுன் (Gown) ஆகும். ஆகையால் தமிழர்களின் கலாச்சார அடையாளங்களான புடவை, நகைகள் முதலானவை முக்கியமான நிகழ்ச்சிகளின் போதுதான் அணியப்படுகின்றன. மேலும் இந்தோனேசிய சுதந்திரத்தின் போது சாதிப் பெயர்கள் வைத்துக்கொள்வதில்லை என இத்தமிழர்கள் தீர்மானம் எடுத்துச் செயல்படுத்தினர். சீர்திருத்த திருமண முறையையே இவர்கள் விரும்புகின்றனர். தமிழ்த் திருமண முறையும் உண்டு. மேலோட்டமாக மேடான் நகரைச் சுற்றிப் பார்க்கும் ஒருவர் தமிழர்களை இந்தோனேசிய மக்களிலிருந்து இனங் கண்டு கொள்வது எளிதல்ல. முற்றிலும் இந்தோனேசியர்களாக மாறிவிட்ட வடசுமத்திரா தமிழர்கள் இந்தோனேசியாவின் பல பகுதிகளுக்குச் சென்றாலும், மேடானையும் அதைச் சுற்று வட்டாரத்தையும் தாயகமாகக் கருதி, அடிக்கடி திரும்புகின்றனர்.

சமயம்

தமிழ் இந்து மதம் ஒன்றுதான் வட சுமத்திராத் தமிழர்களைத் தமிழர்களாக திகழ வைக்கிறது. அதுவும் இந்தோனேசிய சூழ்நிலைக்கேற்ப பல மாற்றங்களைப் பெற்றுள்ளது.

முப்பத்திரண்டு தமிழ் இந்துக் கோயில்களும், தென்னிந்திய மசூதி ஒன்றும் தமிழர்களால் எழுப்பப்பட்டன எனத் தெரிய வருகிறது. தென்னிந்திய பள்ளிவாசல் மேடான் நகரத்திலேயே அமைந்துள்ளது. தமிழ் இந்துக் கோயில்கள் மேடானிலும், முன்பு தோட்டங்கள் இருந்த இடங்களிலும் இருக்கின்றன.

தமிழ் இந்துக் கோயில்கள் பின்வரும் இடங்களில் இருக்கின்றன: பூலாவ் சினா, பாயார் பக்கம், பெலாராங், பாடான் செர்மின், பெக்கியோங், தஞ்சோங் பெரிஞ்சின், பெக்காயா, தஞ்சோங் ஜாதி, புங்கை, லெபுக் பக்கம், தெம்புக்கான், செம்பாலிங், மெரிண்டால், தெம்போங், பூலான் பிரியாவ், தே எஸ்டேட், பத்துமண்டி, மாபார், லாபுவான் டெல்லி, மரிலான், பத்தாங்குயிஸ், கெலாம்பிர் லிமா, தெபிங் திங்கி, கம்போங் தாராட், கெபுன்சாபோர், சுங்காய், சுங்கை சூமாயாங்.

இவற்றைத் தவிர மேடான் நகர மையத்தில் காளி கோயில், மாரியம்மன் கோயில், தண்டாயுதபாணி கோயில் முதலியவை இருக்கின்றன. வட சுமத்திரா மாநிலத்துக்கு வடக்கில் உள்ள ஆச்சை மாநிலத்தின் தலை நகரான ஆச்சை நகரில் மூன்று கோயில்கள் இருப்பதாக மேடான் தமிழர்கள் கூறுகின்றனர்.

இக்கோயில்களைப் பற்றி மேலும் அ.வீரமணி கூறுகின்றார்: மேற்குறிப்பிட்டவற்றுள்ள பல கோயில்கள் இன்று இயங்கவில்லை. இதற்குக் காரணம் தோட்டப்புறங்களில் தமிழர்கள் வாழாததுதான். மேடான் நகரத்திலுள்ள கோயில்கள் சிறப்பாக இயங்குகின்றன. ஏனைய கோயில்கள் தமிழர்கள் இருக்கும் இடங்களில் செம்மையாக இயங்குகின்றன. தமிழர்கள் வாழாத இடங்களில் மரத்தால் ஆன கோயில் சுவர்கள், கரையானுக்கும் காடுகளுக்கும் இரையாகி வருகின்றன. இச்சின்னங்களைக் காப்பாற்றும் முயற்சி வட சுமத்திரா தமிழர்களிடையே சமுதாய அடிப்படையில் நடைபெறவில்லை. ஆனால் அதைப்பற்றி நிறைய பேசுகிறார்கள். வட சுமத்திராவில் இன்று பத்தொன்பது தமிழ் இந்துக் கோயில்கள் செயல்படுகின்றன. மேடான் நகரத்தைச் சுற்றிப் பார்க்கும் எவரும் மாரியம்மன் கோயிலைப் பார்க்காமல் இருக்க முடியாது. ஜலான் எச்.சைதூல் அரிவ்வின் துங்கு உமார் எனும் சாலையில், அதாவது மேடான் நகரக் கடைத்தெருக்களில் முக்கியமான ஒன்றில் மாரியம்மன் கோயில் அமைந்துள்ளது. இக்கோவிலைப் பற்றி மேலும் அ. வீரமணி கூறுவது: கோயிலின் வாசலில் சிறு கோபுரம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. கோயில் மதில்களால் சூழப்பட்டு இருக்கிறது. இடப்புறமாகக் கோயிலை வலம் வந்தால் முதலில் நவக்கிரகங்கள் ஆலயம் தென்படும். அதனையொட்டி வீரனாருக்குக் கோயில் எழுப்பப்பட்டிருப்பதைக் காணலாம். கோயிலின் பின்புறத்தில் (மூலையில்) சிவன் ஆலயம் உள்ளது. அதையடுத்து அலுவலகமும், பெருமாள், கோயிலும் இருக்கின்றன. கோபுர வாயிலின் வலப்புறத்தில் இடும்பன் கோயில் அமைக்கப்பட்டுள்ளது. கோயில் மண்டபத்திற்குள் மாரியம்மன் மூலத்தானமும், பக்கங்களில் பிள்ளையார், முருகன் ஆகியோருக்கான கோயில்கள் இருக்கின்றன. கோயில் பின்புறத்தில் 'தர்மபுத்திரா' பள்ளிக்கூடம் அமைந்திருக்கின்றது.

நிலப்பதிவேடுகளின்படி மாரியம்மன் கோயில் 1884இல் கட்டப்பட்டதாகத் தெரிகிறது. மாரியம்மன் கோயிலைப் பலமுறை பிரித்துக் கட்டியிருக்கின்றனர். கோயிலின் சமயச் சார்பான நிகழ்ச்சிகள் அனைத்தும் கோலாலம்பூர் மாரியம்மன் கோயிலின் சமய அட்டவணையைப் பின்பற்றியே நடத்தப்படுகின்றன. ஆனால் இறைவனுக்குப் பூசை செய்யும் முறைகளில் சிங்கப்பூரில் காணப்படும் ஆகம முறைகள் காணப்படவில்லை. அதுபற்றி வட சுமத்திரா தமிழர்களும் கவலைப்படவில்லை. இக்கோவிலில் இந்துமதத்தை இந்தோனேசிய மொழியிலேயே கற்பிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வெள்ளிக்கிழமைகள் தோறும் பிரார்த்தனை வகுப்பு இரவு மணி ஏழரைக்கு நடத்தப்படுகிறது.

1973 வரை தைப்பூசத் திருவிழா, தமிழர்களின் தனி விழாவாக மேடான் மாரியம்மன் கோயிலில் கொண்டாடப்பட்டது. மாரியம்மன் கோயிலுக்குச் சிறிது தூரத்தில் இருக்கும் பபுரா நதிக்கையில் அமைந்துள்ள காளி கோயிலிலிருந்து காவடிகள் மாரியம்மன் கோயிலுக்குக் கொண்டுவரப்பட்டன. பபுரா நதியில் நீராடி, காவடிகளைத் தாங்கி வரும் காட்சியைக் காண மேடான் நகரமே புடை சூழத் திரண்டு வந்தது. அன்றிரவு இரதத்தில் முருகப் பெருமான் மேடான் நகரத்துத் தெருக்களை வலம் வருவார். இன்று அத்தகைய பக்தி வழிபாடும் மக்களின் ஆரவாரமும் மேடானில் இல்லை. 1973இல் தைப்பூசத் திருவிழா இக்கோவிலில் நிறுத்தப்பட்டது. இதனால் மேடான் மாரியம்மன் கோயிலுக்குச் செல்லும் பக்தர்களின் எண்ணிக்கை குறைந்து, இதரக் கோயில்களில் முக்கியத்துவம் அதிகரிக்கத் தொடங்கியது. பொதுமக்கள் தைப்பூசம், தீமிதி முதலிய தமிழர் விழாக்கள் நிறுத்தப்பட்டதற்குக் கோயில் நிர்வாகத்தினரே காரணம் என்று கூறுகின்றார்கள்.

வட சுமத்திராத் தமிழர்கள் கொண்டாடிய திருவிழாக்களில் இரண்டு குறிப்பிடத் தக்கவை. ஒன்று மேடான் நகரத்து மாரியம்மன் கோயில் தைப்பூசம், அடுத்தது சுங்கு சுப்பு பெக்காலா மாரியம்மன் கோயில் தீமிதித் திருவிழா. தைப்பூசம், மேடான் கோயில் நிர்வாகத்தினரால் நிறுத்தப்பட்டுவிட்டது. தீமிதி, சுங்கு சுப்பு மாரியம்மன் கோயில் நிர்வாகத்தினரால் பல இன்னல்களுக்குகிடையிலும் தொடர்ந்து நடத்தப்பட்டுவருகிறது.

1876இலேயே சுங்கு சுப்பு மாரியம்மன் கோயில் இருந்திருப்பதாகக் கூறுகின்றார்கள். தீமிதித் திருவிழா ஒவ்வோர் ஆண்டும் ஜூன் திங்கள் முதல் ஞாயிற்றுக் கிழமையன்று கொண்டாடப்படுகிறது. சுமார் ஐந்து நாள்கள் இந்நிகழ்ச்சி நடக்கின்றது. இந்தோனேசியப் புரட்சியின் போதுகூட இந்நிகழ்ச்சி தொடர்ந்து நடைபெற்றிருக்கிறது.

மேடான் மாரியம்மன் கோயிலைத் தவிர, மேலும் இரண்டு கோயில்களை மேடானில் உள்ள தமிழர்கள் பாராட்டுகின்றனர். இதில் காளி கோயில் ஒன்று, பிறிதொன்று நாட்டுக்கோட்டை நகரத்தார்களால் கட்டப்பட்ட தண்டாயுதபாணி கோயில், மாரியம்மன் கோயிலிலிருந்து சற்றுத் தூரத்தில் இருக்கிறது. காளி கோயிலின் அருகே 'புபுரா' நதி ஓடுகிறது. 1973ஆம் ஆண்டு வரை, தைப்பூசக் காவடிகள் காளிகோயிலிலிருந்துதான் மாரியம்மன் கோயிலுக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

இன்றைய தண்டாயுதபாணி கோயில் 1918இல் துவங்கப்பட்டது. நாள்தோறும் இரு தடவைகள் பூசைகள் நடக்கின்றன. பூசைகளைச் செய்ய பண்டாரம் ஒருவர்

நியமிக்கப்பட்டிருக்கிறார். போருக்கு முந்திய காலத்தில் பங்குனி உத்திரம், தீமிதி, முதலிய விழாக்களைச் சிறப்பாகக் கொண்டாடிய இடங்களில் பாடாங் செர்மின் மாரியம்மன் கோயில் குறிப்பிடத்தக்கது. அதே போல் போருக்குமுன் தைப்பூசம், தீமிதி திருவிழாக்கள் லெபுக் பக்கம் சுப்பிரமணியர் கோயிலிலும் பிஞ்சய் மாரியம்மன் கோயிலிலும் கொண்டாடப்பட்டன. மேடான் தமிழர்கள் சக்கர்த்தாவிலும் தமிழ்க் கோவில் ஒன்றை எழுப்பி உள்ளனர். சித்திரை முதல் நாள் சக்கர்த்தா சிவன் கோயிலில் மலாயில் எழுதிய 'அரே ராம அரே கிருஷ்ணா' தேவார திருவாசகத்தைப் பாடி கும்பிடுவார்கள்.

பொருளாதார நிலை அ.வீரமணி பின்வரும் விவரங்களை அளிக்கின்றார்.

வட சுமத்திராவில் வாழும் பதினைந்தாயிரம் தமிழர்களில் பொருளாதார முன்னேற்றம் கண்டிருப்பவர்கள் மிகக் குறைவாகக் காணப்படுகின்றனர். முப்பது குடும்பங்களையே பொருளாதார அடிப்படையில் முன்னேற்றம் பெற்றுள்ள குடும்பங்கள் என வருணிக்கலாம். பெரும்பாலன தமிழர்கள் ஏதாவது சொந்த வியாபாரத்தில் ஈடுபடுகின்றனர். மற்றும் சிலர் சாவானியர்களிடமும், சீனர்களிடமும் தமிழர்களிடமும் வேலை செய்கின்றனர். இவ்வாறு வேலை செய்வோரின் மாத வருவாய், ஐம்பது சிங்கப்பூர் வெள்ளியிலிருந்து நூறு சிங்கப்பூர் வெள்ளிக்குள் இருக்கிறது. ஒரு சில தமிழர்கள் அரசாங்கத்திலும் பணியாற்றுகின்றனர். கல்வித் துறையில் தமிழர்கள் அதிகம் நாட்டம் காட்டவில்லை. பலர் உயர்நிலைப் பள்ளிப் படிப்போடு முடித்துக் கொண்டு ஏதாவது தொழிலில் ஈடுபடுகின்றனர்.

ஒரு காலத்தில் நூற்று இருபது வட்டிக் கடைகள் வைத்திருந்த செட்டியார்களுக்கு இன்று நான்கு கடைகளே உள்ளன. இவையும் கொடுத்த கடனை மீண்டும் பெறுவதற்காகவே இயங்குகின்றன. வடசுமத்திராவில் செட்டியார்கள் சியந்தார், ஆச்சை, மேடான் ஆகிய மூன்று இடங்களிலேயே தனி வணிகத் தொழில் செய்து வந்தார்கள். 1920க்குப் பின்னரே அவர்கள் வந்தனர் ஒரு சிலர் நேரடி ஏற்றுமதி - இறக்குமதி வியாபாரத்தில் ஈடுபட்டாலும் பலர் தனவணிகத் தொழிலில் ஈடுபட்டிருந்தனர். 'மு.அ.' எனப் பெயரிய நகரத்தார் நிறுவனம், துணி, புழுங்கல் அரிசி முதலியவற்றைச் சென்னையிலிருந்து கொண்டு வந்து மேடானில் விற்றதாகத் தெரிகிறது. முதலில் டெல்லி சுல்தானின் தலைநகரான லாபுவான் எனுமிடத்தில் தங்கியிருந்தனர். டெல்லி சுல்தான், தனது தலைநகரை மேடானுக்கு மாற்றவே அவர்களும் பின் தொடர்ந்தனர். தற்சமயம் நான்கு நகரத்தார்களே மேடானில் வாழ்கின்றனர்.

சக்கர்த்தாவிலிருந்து சில தமிழர்கள் கைத்தறி லுங்கிகளைத் தமிழகத்திலிருந்து வரவழைத்து இந்தோனேசியா முழுவதும் வியாபாரம் செய்து வந்தார்கள். மேலும் சிலர் மேற்படி துணிகளை உருவாக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்தார்கள். நாட்டுக்கோட்டை நகரத்துச் செட்டிமார்களில் சிலர் வட்டிக்கடைகளை நடத்தி வந்தனர்.

செய்திப் பரவல் தொடர்புச் சாதனங்கள்

போருக்கு முந்திய காலத்திலும், அதற்குப் பிந்திய காலத்திலும் செயற்பட்ட சங்கங்கள் (1) திராவிட இந்து சபை (2) டெல்லி இந்து சபை (3) கிருஷ்ண சபை (4) தமிழ்ச்

சிறார்களுக்கென நடத்திய 'இந்தியன் பாய்ஸ் ஸ்கௌட்' (சாரணியர் சங்கம்) (5, இந்தோனேசிய இந்து இளையர் சங்கம் (6) வட சுமத்திரா பரோபகாரச் சங்கம். இன்று சிறப்பாக இயங்கும் சங்கங்கள் மாதர் சங்கங்கள் (1) பாசுந்தனன் மாதர் சங்கம் (1960). மேலும் பல வட்டாரங்களிலும் மாதர் சங்கங்கள் செவ்வாய், வெள்ளி தோறும் கூடுகின்றன. பொதுவாக வட சுமத்திராத் தமிழரிடையே, சமூக சங்கங்கள் மடிந்துவிட்டன.

சக்கர்த்தா தமிழர்கள் 'தரும ஏக்சுளா' எனும் புதிய தரும ஸ்தாபனத்தை அமைத்திருக்கிறார்கள். மேலும் இந்தோனேசிய தமிழர் பிரதிநிதித்துவ சங்க தேசியப் பேரவை என்ற சங்கமும் 1978இல் அமைக்கப்பட்டன. பொதுவாக, தமிழர்களின் கல்வி, சமூகத்துறை, மகளிர் உபகாரச் சம்பளம், அநாதை உதவி முதலிய துறைகளில் ஈடுபட்டு வருகிறது.

'சக்கரம்' என்ற சமயப் பத்திரிக்கை சில காலம் பௌத்த மதக் கொள்கையைப் பரப்பிற்று. அதற்கு எதிராக இந்துமதக் கொள்கைகளைப் பரப்பிய பத்திரிக்கை ஒன்றும் தோன்றி மறைந்தது.

மேடான் நகரில் தமிழ்த் திரைப்படங்களைக் காண முடியாது. மேடான் தமிழர்கள் ஆவலோடு பார்ப்பது மலேசியத் தொலைக்காட்சி. மலேசியத் தொலைக் காட்சி வியாழக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை ஆகிய நாள்களில் தமிழ், இந்திப் படங்களைத் திரையிட்டு வந்தது. ஆகையால் சிங்கப்பூர் வானொலியும், மலேசியா வானொலியும் தொலைக்காட்சியும் மேடான் தமிழர்களின் தமிழுணர்வை வளர்க்க உதவுகின்றன. வடசுமத்திராத் தமிழர்கள் தனிப்பட்ட வானொலி நிலையங்களை வீட்டிலிருந்து செயல்படுத்தினாலும் அதில் தமிழொலி கேட்பதில்லை. ஆனால் நாள் முழுவதும் தமிழ்த் திரைப் படங்களின் ஒலியை இந்தோனேசியத் தமிழர்களின் இல்லங்களில் கேட்கலாம்.

சட்டம்

இன்று இந்தோனேசியாவில் உரிமை வழக்குச் சட்டம் (Civil Law) அடிப்படையில் மக்களை மூன்று முக்கியப் பிரிவினர்களாக பிரிக்கின்றனர். (அ) இந்தோனேசியர்கள் (ஆ) ஐரோப்பியர்கள் (இ) அயல்நாட்டுக் கீழை நாட்டினர் (Foreign Orientals) இவர்கள் மூவருக்கும் வெவ்வேறு சிவில் சட்டம் பின்பற்றப்படுகின்றது. இவர்கள் மூவரும் ஒருவரோடு ஒருவர் சம்பந்தப்படும் போது இன்டர் ஜென்டில் சட்டம் (Inter-Gentile Law) பயன்படுத்தப்படுகின்றது. தற்சமயம் நடைமுறையிலிருக்கும் கிரிமினல் சட்டம் (குற்றவாளிச்சட்டம்) 1918ஆம் ஆண்டிலிருந்து நடைமுறையில் இருக்கின்றது. இச்சட்டம் ஐரோப்பிய தண்டனைக்குரிய சட்டத்தைத் (Penal Law) தழுவியிருக்கின்றது. இச்சட்டம் எல்லாப் பிரிவினர்களுக்கும் சமமாகப் பயன்படுத்தப்படுகின்றது. ஆனால் தனியார், வாணிபச் சட்டங்கள் மாறுபடுகின்றன. ஒவ்வொரு பிரிவினருக்கும் தனிச்சட்டம் இருக்கின்றது. உதாரணமாக, அயல்நாட்டு கீழை நாட்டின் வழக்குகளில் 1874 தனியார் சட்டம் (Private Law Act), 1847ம் ஆண்டு வாணிபச் சட்டம் (Commercial Law Act) பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் குடும்பச் சட்டம், பரம்பரை உடைமை முதலிய விவகாரம் சம்பந்தமாக இச்சட்டங்கள் பயன்படுத்தப்படுவதில்லை. தண்டனைக்குரிய சட்டம் 1981இல் தொகுக்கப்பட்டு வந்து கொண்டிருக்கும் நிலையில் இருந்தது.

அரசியல்

அரசியலிலிருந்து தமிழர்கள் ஒதுங்கி வாழ்ந்தனர். ஆயினும் அதிபர் சுகர்னோ ஆட்சியின்போது பெரியசாமி கிருஷ்ணா என்ற பெயரிய தமிழர், தமிழர் அல்லாதார் ஆதரவுடன், வடசுமத்திரா மாநில மக்களவையில் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தியாவுக்கும் இந்தோனேசியாவுக்கும் இடையே 1965இல் பிரச்சனை தோன்றிய போது இந்தோனேசியாவில் நிரந்தர குடிவாசிகளாக வாழும் இந்தியப் பிரஜைகள் அனைவரின் உடைமைகளையும் சிறப்புக் கண்காணிப்பின் கீழ் அதிபர் சுகர்னோ கொண்டு வந்தார். ஆனால், சுகர்த்தோ ஆட்சிக்கு வந்த பிறகு 1965இல் விதிக்கப்பட்ட இச்சிறப்புக் கண்காணிப்புச் சட்டம் 1969ஆம் ஆண்டு சனவரி திங்களில் நீக்கப்பட்டது.

அ. வீரமணி பின்வரும் கருத்தினைக் கூறுகின்றார்: சாவா சென்ற மேடான் தமிழர்களும், புதிய இந்தோனேசிய பொருளாதார வளர்ச்சியினால் பயனுற்ற தமிழர்களும் பெருவாரியான இந்தோனேசிய (சாவா) கலாச்சாரத்தோடு ஒன்றிணைந்து காணப்பட வேண்டுமென்று விரும்புகின்றனர். இந்தோனேசியர்கள் குறிப்பாக, சாவானியர்களிடமிருந்து, தங்களை வேறுபடுத்திக் காட்டும் கலாசாரக் கூறுகளைக் களைந்துவிட அவர்கள் விரும்புகின்றனர். ஆனால், முற்றிலும் தங்களின் பாரம்பரியக் கலாசாரத்தை இழந்து விட இவர்கள் விரும்பவில்லை. ஆகையால், பாலித்தீவின் இந்துமதக் கூறுகளை ஏற்று உண்மையான இந்தோனேசியக் குடிமகனாக (வர்கா நெகரா இந்தோனேசியா) வாழத் திட்டமிட்டுள்ளனர். தமிழ் இந்து மதத்தைப் பாலி இந்து மதத்துடன் இணைத்து விடுவதால், தமிழ் இந்து மதத்தால் தர இயலாத சில அரசியல் செல்வாக்கு இவர்களை நாடிவரும் என்பது இவர்களுடைய எண்ணம். அவர்களது போக்கிற்கு மறுப்பும் எதிர்ப்பும் தரும் இதர தமிழர்கள் இந்தோனேசியாவின் 1945ஆம் ஆண்டு அரசியல் சட்ட திட்டத்தின் 28ஆவது பகுதியையும் பஞ்சசீலத்தையும் சுட்டிகாட்டி, அது மத வழிபாட்டிற்குத் தரும் சுதந்திரத்தைக் காட்டி, தங்களுடைய பாரம்பரிய சமய வழிபாட்டு முறைகளைப் பின்பற்றுவதில், எவ்வகையிலும் தாங்கள் உண்மையான இந்தோனேசியக் குடிமக்களாக வாழ்வதினின்றும் தவறவில்லை என்கின்றனர்.

பர்மா

இந்தியாவின் கிழக்குப் பகுதியில் உள்ள பர்மா, 1936 வரை பாரதத்தின் ஒரு மாநிலமாக இருந்து வந்துள்ளது. பர்மாவிற்கும் தமிழ் நாட்டிற்கும் பண்டைய காலத்திலிருந்தே தொடர்பு இருந்து வந்திருக்கிறது. 1947ஆம் ஆண்டில் சோஸியலிச குடியரசு கூட்டரசு பர்மா என்று அழைக்கப்பட்ட இந்நாடு தென்கிழக்கு ஆசியாவின் வடமேற்குப் பகுதியில் திபெத்து நிலமேட்டிற்கும் மலேயா தீபகற்பத்திற்கும் இடையே உள்ளது. 6,76,552 சதுர மைல்கள் உள்ள பர்மா நாட்டின் வடமேற்கு எல்லையில் இந்தியாவும், வங்காள தேசமும் இருக்கின்றன. வடகிழக்கு எல்லையில் சீனாவும் லாவோசும் இருக்கின்றன. தென்கிழக்கு எல்லையில் தாய்லாந்து இருக்கின்றது. பர்மாவில் பஞ்சம் இல்லை. அரிசி, தேக்கு, பெட்ரோலியம், முத்து, நவரத்தினம் ஆகியன ஏராளமாக விளைந்து அந்நிய செலவாணியை ஈட்டி தந்து பர்மாவை செல்வ நாடாக்கி விட்டது. பர்மாவின் தலைநகரம் இரங்கூன்.

பர்மாவில் பேசப்படும் முக்கிய மொழிகள் பர்மிய மொழி, ஷான் (Shan) காரேன் (Karen) அரகானிசு (Arakanese) மான் (Mon) காசின் (Kachin), சின் (Chin) முதலிய மொழிகளாகும். இந்திய சமஸ்கிருத மொழி கையெழுத்துமுறை, புத்த சமயப் பாலி மொழிக் கையெழுத்து முறை ஆகிய இரண்டு கையெழுத்து முறைகளின் கலப்பு உருவமே பர்மிய மொழியின் எழுத்துத் தொகுதியாகும். சின் மொழியைத் தவிர, மேலே கூறிய எல்லா மொழிகளும், பர்மிய கையெழுத்து முறையைப் பயன்படுத்துகின்றன. ஐராவதி சமவெளியின் நடுப்பகுதியில் வசிக்கும் பெரும்பான்மையான பர்மியர்கள் பர்மிய மொழியைப் பயன்படுத்துக்கின்றனர். ஐராவதி, சிட்டாங் பள்ளத்தாக்குகளைச் சுற்றி வளைத்து இருக்கும் புற எல்லைப் பகுதிகளில் பல பழங்குடியினர் சுமார் நூறு வேறுபட்ட மொழிகளைப் பேசுகின்றனர். மான்களும், சான்களும் தாய் மொழியுடன் (Thai Language) தொடர்புள்ள மொழிகளைப் பேசுகின்றனர். லாவோ (Lao) இனப்பிரிவினர் ஒருவிதத் தாய்மொழியின் கிளை மொழியைப் பேசுகின்றனர். இவர்கள் பர்மாவின் மொத்த மக்கள் தொகையில் பத்து விழுக்காடு இருக்கின்றனர். ஆனால் நாட்டின் மொத்த நிலப்பகுதியில் 20 விழுக்காடு பகுதியில் இவர்கள் இருக்கின்றனர். காசின்களும், சின்களும் ஒன்றோடு ஒன்று நெருங்கிய தொடர்புள்ள 44 மொழிகளைப் பேசுகின்றனர். பர்மாவின் மொத்த மக்கள் தொகையில் 10 விழுக்காட்டுக்கு மேல் உள்ளவர்கள் காரென்கள் ஆவார்கள். அரகானிசு, பாலௌங் (Palaung) இனப்பிரிவினர்கள் ஆஸ்திரேலியா, ஆசிய கண்டத்தைச் சார்ந்த மொழிகளைப் (Austro-Asiatic Languages) பேசுகின்றனர்.

பர்மா தமிழ்நாடு தொடர்பு வரலாறு

பண்டைய காலத்திலிருந்தே நிலம், கடல் மூலம் தமிழ் நாட்டிற்கும், பர்மாவிற்கும் தொடர்பு இருந்து வந்தது. வடகிழக்கு இந்தியாவில் உள்ள வங்காளப் பிரதேச நிலவழி மூலம் தமிழர்கள், பண்டைய காலத்திலிருந்தே பர்மாவுக்குச் சென்றனர். வங்காள விரிகுடா கடல் மார்க்கம் மூலமாகவும் தமிழர்களும், தமிழ்ப் பண்பாடும் பர்மாவுக்குச் சென்றனர். பர்மா-தமிழ்நாடு தொடர்பு தோன்றிய முதற் காலக் கட்டத்தைப் பற்றி தெளிவான சான்றுகள் இல்லை. ஆனால், தொடக்க காலக் கட்டத்தில் அமைதி வழி மூலம்தான் தமிழ்ப் பண்பாடு பர்மாவிற்குச் சென்றது என்று கூறலாம். தொடர்பு காலத்தின் முற்பகுதியில் தமிழ் அரசு பரம்பரையான பல்லவர்களுக்கும் பர்மியர்களுக்கும் தொடர்பு இருந்தது. பல்லவ கையெழுத்து முறை பர்மிய மொழியில் மாறுதல் உண்டு பண்ணியது என்று கி.பி.ஐந்தாம் நூற்றாண்டு சான்றுகள் கிடைத்திருக்கின்றன. "கி.மு.200 முதல் 300 வரை காஞ்சிபுரத்திலிருந்து புத்த சமயக் கருத்துக்களுடன் பல்லவ எழுத்து, நாகரிகம், பண்பாடு மூலம் தமிழகத் தொடர்பும், நட்பும் ஏற்பட்டன. தட்டாம் எனப்படும் சுவர்ண பூமிக்குப் புத்தத்துறவிகளால் அவை கொணரப்பட்டன எனப் பர்மியப் பண்பாட்டு வரலாறு என்ற நூல் கூறுகிறது" (இர.ந. வீரப்பன்.) காஞ்சிபுரத்தைப் பற்றியும், மதிப்புரைஞர் தர்மபலாவைப் பற்றியும், மற்ற அறிஞர்களைப் பற்றியும், பொதுவாகத் தமிழ்நாட்டைப் பற்றியும் தலைங் பதிவுக் குறிப்புகளில் *(TALAING RECORDS)* இருக்கின்றன. இச்சமயத்தில்தான் புத்தசமயம்கூட பல்லவ, காஞ்சிபுரத்திலிருந்து பர்மாவுக்குச் சென்றதாக நம்பப்படுகிறது. எட்டாவது நூற்றாண்டில் அதாவது கி.பி.765ஆம் ஆண்டளவில் இந்தியாவில் அரசியல் குழப்பம் தோன்றிய போது நான்கு பிராமண குல மரபுக்குழுக்கள் கிழக்குத் திசை வழியாக வனியாராவிலிருந்து பர்மா, பெகு, லாவோஸ், சியாம், கம்போடியா முதலிய நாடுகளுக்குச் சென்றனர். இச்சமயத்தில் தான் ஹர்ஷர், புலிகேசி, நரசிம்மவர்மனுக்கு இடையே போராட்டங்கள் ஏற்பட்டன; இப்போராட்டங்கள் இக்குடிபெயர்வு நிகழ்ச்சிக்கு காரணமாக இருக்கலாம் என நம்பப்படுகிறது. இந்தியாவை விட்டு அயல் நாடுகளுக்குச் சென்றவர்கள் எல்லோரும் தங்களுடைய பண்பாட்டையும் எடுத்துச் சென்றார்கள்.

சோழர்களுடைய ஆட்சிக் காலத்தின் போதும் பர்மாவுக்கும் தமிழ் நாட்டிற்கும் உள்ள தொடர்பு வளர்ச்சியடைந்தது. சோழர் ஆட்சிக் காலம் வரை தமிழ்நாடு அமைதி முறை மூலம்தான் பர்மாவுடன் தொடர்பு வைத்திருந்தது. ஆனால், சோழர்கள் ஆட்சியின் போது பர்மாவின் சில பகுதிகளைச் சோழர்கள் கைப்பற்றினார்கள். கி.பி.1025இல் இராசேந்திர சோழன் (1012-1044) கடாரம் மேல் படையெடுத்தான். கடாரம் பர்மாவைத் தாய்லாந்துடன் இணைத்தது என நம்பப்படுகிறது. அதாவது கடாரம் என்பது ஒரு பகுதி பர்மாவையும் (கீழ்ப்பகுதிகள்) மற்றொரு பகுதி தாய்லாந்தையும் இணைக்கும் வால் போன்ற தென்பகுதி என்று ஒரு சாரார் கூறுகின்றனர். 'பரக்கும் ஒதக் கடாரம்' என்று கலிங்கத்துப்பரணியும், 'குளிறுதெண்டிரைக் கடாரம்' என அந்நூலும் சுட்டுகின்றன. 'காழகத்து ஆக்கமும்' என்று பத்துப்பாட்டும், பட்டினப் பாலையும் பகர்கின்றன. காழகம் எனும் கடாரத்தை 'அருமணதேயம்' என சிலப்பதிகாரம் செப்புகிறது. ஆகையால் கலிங்கத்துப்பரணி, பத்துப்பாட்டு, பட்டினப்பாலை, சிலப்பதிகாரம் முதலிய நூல்களில்

கடாரத்தைப் பற்றிய குறிப்புகள் இருக்கின்றன. கடாரம் என்பது பர்மாவின் மற்றொரு பெயர் எனப் பண்டைய, இடைக்காலத் தமிழ்ப்புலவர்கள் கூறுகின்றனர். பர்மாவில் உள்ள பெகு அரசுக்கு எதிராக இராசேந்திர சோழன் படையெடுத்ததாக நம்பப்படுகிறது. வங்காளத்தின் வழியாக இப்படையெடுப்பு ஏற்பட்டிருக்கும் என்றும், இரண்டு முறை கடல் வழியாகவும், ஒரு முறை நில வழி அதாவது வங்காளம் வழியாகவும் பர்மாவின் மேல் இராசேந்திர சோழன் படையெடுத்தான் என்றும் ஆர்.ஸி.மஜூம்தார் கூறுகின்றார். அகழ்வாராய்ச்சிச் சான்றுகளும் இப்படையெடுப்பைப் பற்றி உறுதிப்படுத்துகின்றன. பெகுவிற்கு அருகே இரண்டு கருங்கல் தூண்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இராசேந்திர சோழன் கி.பி.1025-1027 ஆண்டுகளுக்கு இடையே பெகுவின் மேல் படையெடுத்து வெற்றியடைந்த பிறகு, தன்னுடைய வெற்றியைப் பறை சாற்றும் நோக்கத்துடன் இந்த வெற்றித் தூண்களை அல்லது ஜயஸ்தம்பங்களை அமைத்தான் என்று பர்மா அகழ்வாராய்ச்சியாளர்கள் [உதாரணம் டெசெயங்கோ (1912)] கூறுகின்றனர். 'திருமன்னிவளர இருநில மடந்தையும்' என்ற சிதைந்த வரி உள்ள ஒரு தூண் இராசேந்திரனுடைய பர்மாவின் ஒரு பகுதியை குறிப்பிடும் வெற்றித்தூண் அங்கு இன்றும் உள்ளது.

கி. பி. பதினோராம் நூற்றாண்டுக்குரிய தமிழ்மொழி வரிவடிவத்தில் இக்கல்வெட்டுச் செய்திகள் பொறிக்கப்பட்டுள்ளதாக நம்பப்படுகின்றது. டெசெயெங்கோ. "அவை இராசேந்திர சோழனுடைய வெற்றித் தூண்களே" என்பதை அறுதியிட்டு உறுதியாகக் கூறியுள்ளார். (Archalogical Report on Burma, 1908, Para 25) ஆனால் 1918ஆம் ஆண்டில் கோடஸ் (Coedes) என்னும் டச்சுக்காரர் மலாயா தீபகற்பத்தில் உள்ள 'கடா' என்னும் பகுதியே இராசேந்திர சோழனின் கல்வெட்டில் குறிப்பிடப்படும் "கடாரம்" என்று தாம் கருதுவதாகத் தெரிவித்தார். இவருடைய கருத்தினையே சமகாலத்து அறிஞர்கள் போற்றத் தொடங்கினர். இதன் விளைவாக பெகுவில் உள்ள இரு வெற்றித்தூண் தமிழ் கல்வெட்டுக்கள் பொய்யானவை என்று புறக்கணிக்கப்பட்டன.

ஆகையால் 1918வரை ஆராய்ச்சியாளர்கள் கடாரம் பர்மாவில் உள்ளதாகவே கருதினர். ஆனால் கல்வெட்டுக் கலைஞர் வெங்கையா அவர்களின் ஆராய்ச்சி முடிவு பர்மியக் கல்வெட்டுத்துறை அதிகாரி டெசெயங்கோ அவர்களின் கருத்தை உறுதிப்படுத்த உதவுகின்றது. வெங்கையா அவர்கள் கூற்றின்படி கடாரப் படையெடுப்பின் போது இராசேந்திரன் கைப்பற்றிய பப்பாளம் பர்மாவில் இருந்தது. ஏனென்றால் பர்மாவின் துறைமுகத்தை 'பப்பாளம்' என மகாவம்சம் குறிப்பிடுகின்றது. ஆகையால் இராசேந்திரன் கைப்பற்றிய பப்பாளமும் மகாவமிசத்தில் கூறப்பட்டிருக்கும் பப்பாளமும் ஒரே இடத்தை குறிப்பிடுகின்றன என வெங்கையா கருதுகின்றனர். (EPI Ind. vol 22, pp 280-283) மேலும் பர்மிய கல்வெட்டு அதிகாரியே பர்மாவில் உள்ள இக்கல்வெட்டுகள் 'இராசேந்திரனின் கல்வெட்டுகள் என ஒப்புக் கொள்கின்றார். மேலும் கோடெஸ் இக்கல்வெட்டுகளை ஏன் புறக்கணிக்க வேண்டும் எனதக்க விளக்கங்களை அளிக்கவில்லை. ஆகையால் பர்மா கடராத்தின் ஒரு பகுதியாக இருக்கவில்லை என தக்கச் சான்றுகளுடன் அறுதியிட்டுக் கூறமுடியாது.

இப்படையெடுப்புக் காலத்தைத் தவிர, பொதுவாக மற்ற காலங்களில் தமிழ் நாட்டிற்கும் பர்மாவிற்கும் இடையே அமைதியான உறவு நிலவியது எனக் கூறலாம். கி. பி. 1084–1112ஆம் ஆண்டுகளில் வாழ்ந்த சான்சித்தர் என்ற பர்மிய மன்னனும் சோழப் பேரரசனும் சிறந்த நண்பர்களாக இருந்தனர் என்றுகல்வெட்டும் இங்கு உண்டு. பண்டைய காலத்திலிருந்தே பர்மாவிற்கும்-தமிழ்நாட்டிற்கும் இடையே வாணிப உறவு இருந்தது. மேலும் தமிழர்கள் குடிபெயர்ந்து பர்மாவில் குடியேற்றம் செய்வதும் தொடர்ந்து நடந்தது. ஆனால் கிழை பர்மாவை 1852ஆம் ஆண்டில் ஆங்கிலேயர்கள் கைப்பற்றிய உடன்தான் உண்மையில் மிகுதியான அளவில் தமிழர்கள் பர்மாவிற்குச் சென்று குடியேறுவது அதிகரிக்கத் தொடங்கியது. ஆங்கிலேயர்கள் கிழைப் பர்மாவைக் கைப்பற்றுமுன் பொதுவாக வாணிபம் செய்து வந்த பெரும்பான்மையான தமிழர்கள் இரங்கூனில் வசித்தனர்; ஆனால் ஆங்கிலேயர்கள் கிழைப் பர்மாவைக் கைப்பற்றிய பிறகு தமிழர்கள் இரங்கூனிலிருந்து கிழைப் பர்மாவிற்குச் சென்று குடியேறத் தொடங்கினார்கள்.

சென்னை, வங்காளம் மாநிலங்களிலிருந்துதான் பெரும்பான்மையான இந்தியர்கள் கிழைப் பர்மாவிற்கும் சென்றார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசி காலக் கட்டத்தில் சென்று குடியேறியவர்களில் 60 விழுக்காடு சென்னை மாநிலத்திலிருந்து சென்றவர்கள் ஆவார்கள்; வங்காளத்திலிருந்து 1881ஆம் ஆண்டளவில் சென்றவர்கள் 30 விழுக்காடு, 1901ஆம் ஆண்டளவில் சென்றவர்கள் 25 விழுக்காடு ஆவார்கள். பம்பாய், வடமேற்கு மாநிலம், அவுத், மத்திய இந்திய மாகாணங்கள், பஞ்சாப் முதலிய மற்ற பகுதிகளிலிருந்து பர்மாவிற்குச் சென்றவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவேயாகும்.

சென்னை மாநிலத்திலிருந்து சென்றவர்கள் குறிப்பாகச் சென்னை கிழக்குக் கடற்கரைப் பிரதேசங்களில் உள்ள ஏழு மாவட்டங்களிலிருந்து சென்றார்கள். தஞ்சாவூர், கஞ்சம், கோதாவரி, விசாகப்பட்டினம், மதறாஸ் நகரம், தென்னாற்காடு, கிருஷ்ணா முதலிய மாவட்டங்களிலிருந்துதான் தமிழர்களும், மற்ற தென் இந்தியர்களும் பர்மாவிற்குச் சென்றார்கள். 1874-1884ஆம் ஆண்டுகளுக்கு இடையே 83,197 பேர்கள் தென் இந்தியாவிலிருந்து பர்மாவுக்குச் சென்றார்கள். 1881ஆம் ஆண்டில் இவர்கள் கிழைப் பர்மாவிற்குச் சென்றனர். 1886ஆம் ஆண்டில் வட பர்மா பகுதிகளுக்குச் சென்றனர். 1890ஆம் ஆண்டளவில் மியங்கன், மைக்கியோ முதலிய பகுதிகளுக்குச் சென்றனர்.

பர்மாவிலிருந்த இந்திய மக்கள்தொகை 1881-1941

ஆண்டு	மொத்த மக்கள் தொகை	இந்திய மக்கள் தொகை	இந்தியர்கள் %
1881	37,36,771	2,43,123	6.5
1891	80,98,014	4,20,830	5.1
1901	1,04,90,624	5,68,263	5.4
1911	1,31,15,217	7,43,288	5.1
1921	1,32,13,192	8,87,077	6.7

1931	*1,46,67,146*	*10,17,825*	*6.9*
1941	*1,68,23,798*	*9,18,000*	*5.4*

(Burma Hand Book, Simala, Govt.of India Press, 1943, p.4)

பர்மாவில் குடியேறிய தமிழர்களுள் புகழ் வாய்ந்தவர்கள் செட்டியார்கள் ஆவார்கள். இராமநாதபுரத்து நகரத்தார்கள் பர்மாவில் முதன்முதலில் 1850இல் மொய்மீன் பகுதியில் குடியேறி வட்டித் தொழிலைத் தொடங்கினார்கள். கீழ்ப்பர்மாவில் 1881இலும், வடபகுதியில் 1886இலும், மாந்தலையில் 1890இலும், மைங்ஙானில் 1891இலும், மைக்கிலோவில் 1892இலும், லெப்போவில் 1894இலும் இவர்கள் குடியேறினர். குறிப்பாக, 1850-1950 ஆண்டுகளுக்கிடையே இவர்கள் செல்வாக்கு பர்மாவில் ஓங்கி இருந்தது. 1850இல் முதன்முதலில் பொருளீட்ட தமிழக நகரத்தார் குடியேறி பொருளகத்தையும், நெல்வயல்களையும், கடைகளையும் திறந்தனர். அதன் பிறகு தலைநகர் இரங்கூன் உட்பட நாடெங்கும் தமிழர்கள் பெரும் வணிகர்களாகவும் உயர்ந்து விட்டனர். பர்மாவில் செட்டியார்களுக்கு 1655 கடைகள் 5 1/2 கோடி ஸ்டெர்லிங் பவுன் மூலதனத்துடன் இயங்கி வந்தன. அப்போது அவர்களிடம் மூன்றரை லட்சம் ஏக்கர் நெல் வயல்களும் வேறு உடைமையாக இருந்தன. 1930க்கு முன் மலேயாவுக்கு (700 கிட்டங்கி) அடுத்த நிலையில் 400 கிட்டங்களில் வட்டித்தொழில், நில அடைமானம், ஆலை நிர்வாகம் முதலிய தொழில்களில் முதலீடு செய்து பொருளீட்டினர். 1105 கிட்டங்களில் கிடைத்த 75 கோடி ரூபாயில் பர்மியர்கள் மட்டுமே பெற்றது, கடனாக 35 கோடி, தமிழர்கள் வாங்கிய கடன்கள் இதில் 40 கோடி ரூபாய். 1929-30இல் 5,70,000 ஏக்கர் (அதாவது மொத்தத்தில் 6 விழுக்காடு நிலம்) கீழ்ப்பர்மாவில் இவர்களுக்குச் சொந்தமாகியது. இது 1938இல் 24,68,000 ஏக்கராக (சுமார் 24 லட்சம் ஏக்கருக்கு மேல்) உயர்ந்துவிட்டது. இது மொத்தத்தில் 50 விழுக்காடாக இருந்தது. இதுவே 30-12-1947 இல் ஐம்பது இலட்சம் ஏக்கர் நிலமாக, செட்டியார் கழகங்களுக்கு உரிமையாகி விட்டது, இங்குக் குறிப்பிடத்தக்கது. 1938இல் மட்டும் ஐயாயிரம் கிட்டங்கிகளிடம் முப்பது லட்சம் ஏக்கர் நிலமும் இதன் ஆதிக்கத்திற்கு வந்துவிட்டன. இது இருபது விழுக்காடு நிலமாகும். 'செட்டிநாடு பாங்' என்ற பெரிய அமைப்பையே அமைத்தவர்கள் நகரத்தார்கள். மேலும் நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள் கழகம் ஒன்றையும் அமைத்தனர்.

1913ஆம் ஆண்டு 1929ஆம் ஆண்டுகளுக்கிடையே 45 இலட்ச இந்தியர்கள் பர்மாவிற்குச் சென்றனர். இவர்களில் 60 விழுக்காட்டிற்கு மேல் தமிழர்கள் இருந்தனர் எனக் கூறலாம். பர்மாவில் இருந்த இந்தியர்களின் செல்வாக்கு வளர்ச்சியடைந்தது. இரங்கூன் ஒர் இந்திய நகரமாக மாறியது. ஒவ்வொரு ஆண்டும் பர்மாவிற்குச்சென்று குடியேறும் இந்தியர்களில் 60 விழுக்காடு இந்தியர்கள் இரங்கூனில் குடியேறினர். 1901ஆம் ஆண்டில் இரங்கூனில் மொத்த மக்கள் தொகையில் 48 விழுக்காடு இந்தியர்கள் இருந்தார்கள்; 1931ஆம் ஆண்டில் இவ்வெண்ணிக்கை 53 விழுக்காடாக அதிகரித்தது. 32 விழுக்காடு பர்மியர்களே இரங்கூனில் இச்சமயத்தில் வாழ்ந்தனர். துறைமுகம் கப்பல் தொகுதி சார்ந்த துறைகளிலும், மற்றும் சில துறைகளிலும் இந்தியப் பணியாளர்களே அதிகமாக இருந்தனர். இரங்கூனில் திறமைத் தொழிலாளர் துறையில் (Skilled Positions) 62

விழுக்காடு இந்தியர்கள் இருந்தார்கள்; கைத்திறன் பெற்றிராத தொழிலாளர் துறையில் (Unskilied jobs) 95 விழுக்காடு இந்தியர்கள் இருந்தார்கள். பர்மியர்கள் மிகுதியாக வாழும் ஐராவதி டெல்டா பகுதியில் 1931ஆம் ஆண்டளவில் 65.8 விழுக்காடு வாணிபமும், 52.1 விழுக்காடு அரசாங்க நிர்வாகப் பணிப் பொறுப்புகளும், 36.3 விழுக்காடு போக்குவரத்து பணிப் பொறுப்புகளும் இந்தியர்கள் வசம் இருந்தன. 1930ஆம் ஆண்டளவில் இரங்கூனில் 82.8 விழுக்காடு வங்கிகளும், வட்டித்தொழில்களும் இந்தியர்கள் வசம் இருந்தன. மற்ற மாவட்டங்களில் இத்துறையில் 51.4 விழுக்காடு இந்தியர்கள் வசம் இருந்தன. இரங்கூனில் இத்துறையில் ஒரு பர்மியர் கூட இருந்ததாகப் புள்ளி விவரம் கிடையாது. மற்ற மாநிலங்களில் 34.3 விழுக்காடு மட்டும் இத்துறையில் பர்மியர்கள் வசம் இருந்தன. பர்மியர்கள் பட்டினியால் வாடவில்லை என்றாலும், பொதுவாக பொருளாதாரத்தில் பின் தங்கிய நிலையில் இருந்தனர். ஆகையால், பர்மியர்களுக்கு இந்தியர்கள் மேல் வெறுப்பு இருந்தது. உதாரணமாக 1930இல் இந்தியர்களுக்கு எதிராகக் கலகம் கூட தோன்றியது. இக்கலகத்தில் 100பேர் இறந்தனர்.

1930ஆம் ஆண்டளவில் பொருளாதாரத்தில் மந்த நிலை தோன்றியவுடனும் 1937 ஆம் ஆண்டில் பர்மா இந்தியாவிலிருந்து பிரிந்தவுடனும், பர்மாவிற்கு வரும் இந்தியர்களின் எண்ணிக்கை குறையத் தொடங்கியது. குறிப்பாக 1938ஆம் ஆண்டிலிருந்து பர்மாவில் உள்ள இந்தியர்கள் பாதிக்கப்பட்டார்கள். நிலம் வாங்கும் மசோதா, குத்தகைக்காரர் சட்டம், புத்த மகளிர் மரபுரிமை, திருமணச்சட்டம், இரங்கூன் முனிசிபல் சட்டம் முதலியவை மூலம் பர்மிய மயமாக்கும் கொள்கை தீவிரமாக்கப்பட்டவுடன் தமிழர்கள் மிகுதியாக பாதிக்கப்பட்டார்கள். தவிர, 1938 ஆண்டில் இந்தியர்களுக்கு எதிராக ஓர் கலகமும் தோன்றியது. மேலும் குடிபுகு உடன்பாடு (Immigration Agreement) பர்மாவில் உள்ள இந்தியர்களை பாதித்தது. இக்காரணங்களால் செட்டியார்கள் பர்மாவிலிருந்து வெளியேறுவது நல்லது என்று தீர்மானித்தனர்.

இரண்டாம் உலகப் போர் தோன்றியவுடன் பர்மாவில் உள்ள இந்திய மக்கள் தொகையின் எண்ணிக்கை மிகுதியாகக் குறையத் தொடங்கியது. ஜப்பானிய படையெடுப்பின் போது 5,00,000 இந்தியர்கள் பர்மாவை விட்டு வெளியேறினர். இவர்களில் பல ஆயிரம் பேர் வழியில் மாண்டனர். கால்நடையாகத் தமிழகம் திரும்பியோர் அனந்தம். 1931இல் பர்மாவில் இருந்த இந்தியர் எண்ணிக்கை பத்துலட்சம். 1946இல் பர்மாவிலிருந்து திரும்பிய இந்தியர்களின் எண்ணிக்கை 2,46,000. பர்மாவிற்குள் நுழைபவர்கள் எல்லோரும் விசா (Visa அயல் நாட்டு நுழைவுரிமை தரும் கடவுச் சீட்டின் மீது அளிக்கப்படும் மேல்வரிச் சான்றுரிமைக் குறிப்பு) பெற்றிருக்க வேண்டும் என்னும் அல்லது குடிபுகு செயல்துறைக் கட்டுப்பாட்டு அதிகாரி அளித்திருக்கும் அனுமதிச்சீட்டு பெற்றிருக்க வேண்டும் என்றும் பர்மிய அரசாங்கம் 1947 ஜூன் மாதம் அறிவித்தது. இதன் விளைவாக பர்மாவிற்குப் போகும் தமிழர்களின் எண்ணிக்கை, குறிப்பாக செட்டியார்களின் எண்ணிக்கை, குறையத் தொடங்கியது. 1953ஆம் ஆண்டு புள்ளி விவரப்படி இரங்கூனில் 1953ஆம் ஆண்டு மொத்த மக்கள் தொகை 7,37,079; அதில் இந்தியர்களின் எண்ணிக்கை 40,396, 22 ஆண்டுகளுக்கு முன் 1931ஆம் ஆண்டளவில் இரங்கூனின் மொத்த மக்கள்தொகையில் இந்தியர்கள் மட்டும் 51 விழுக்காடு இருந்தனர்.

மேலும் வாடகை மதிப்புத் தகவுச் சட்டம் (*Standard Rent Act.*), குத்தகை ஒழுங்கமைவுச்சட்டம் (*Tenancy Disposal Act. 1947-48*), வேளாண்மை கடன் துயர்த்தீர்ப்புச் சட்டம் (*Agricultural Dept. Relief Act. 1848*) நிலம் தேசியமயமாக்குதல் சட்டம் 1940 (*Land Nationalisation Act. 1948*) வேளாண்மைத்துறை வங்கிச் சட்டம் (*Agricultural Bank Act. 1948*). பர்மா அரசியல் அமைப்புச் சட்டம் 1947 (*Buramese Constitution 1947*), பர்மா அயல்நாட்டினர் சட்டம் 1948 (*Burma Foreigners Act. 1948*) முதலியவைகள் இந்தியர்களின் செல்வாக்கை குறைத்தன. குறிப்பாக இந்தியர்களைச் சிறுபான்மையினர் (*Minority*) என அரசியல் அமைப்புச் சட்டம் அங்கீகரிக்கவில்லை. இதன் உடனடி விளைவு செட்டியார்களின் செல்வாக்கு வீழ்ச்சியடையத் தொடங்கியது. 10,000 இந்தியர்கள் மட்டுமே பர்மா நாட்டுக் குடிமகன்களாக மாறினர் மேலும் அரசு அலுவலர் துறையிலும் பர்மியர்களுக்கு மட்டுமேமுதன்மை இடம் அளிக்கப்பட்டதால் தமிழர்கள் அரசியல் அலுவலர்கள் பணியினை இழந்தார்கள்.

1962-1966ஆம் ஆண்டுகளுக்கு இடையே எல்லா கடைகளும் தேசிய மயமாக்கப்பட்டன. அல்லது அந்நியர்கள் கடை உரிமையாளர்களாக இருப்பது தடைச் செய்யப்பட்டது. ஆகையால் அயல்நாட்டினர்கள் பர்மாவை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயச் சூழ்நிலை உருவாகியது அல்லது பர்மாவில் தங்க அனுமதி பெற்றால் வேலை செய்யவோ, வாணிபம் செய்யவோ வாய்ப்பளிக்கப்படவில்லை. ஆகையால் பெரும்பான்மையான இந்தியர்கள், தமிழர்கள் உட்பட, இந்திய அரசு உதவியுடன் பர்மாவை விட்டு, தங்கள் உடைமைகளைப் பர்மாவில் விட்டுவிட்டு, வெளியேறினர். தங்களுடைய சேமிப்பில் ஒரு சிறுபகுதியே அவர்களால் இந்தியாவுக்குக் கொண்டு வர முடிந்தது. இதற்குக் காரணம் பர்மா நாட்டு அந்நிய நாட்டுச் செலாவணி கட்டுப்பாடுகள் ஆகும். இன்று பர்மா நாட்டு இயற்கை வளம் முழுவதும் அரசின் சொத்து; மக்களுக்காக இவ்வியற்கை வளத்தைப் பயன்படுத்தும் உற்பத்தி வழிவகைகள் எல்லாம் (*Means of Production*) தேசியமயமாக்கப்படும் என பர்மிய அரசு தெரிவித்தது.

1962க்குப் பின் எழுந்த பயங்கர சோதனைக்குப் பின் அகில பர்மா இந்தியர் காப்பு முகாம் 16-6-1963ல் கம்பை நகரில் அமைக்கப்பட்டது, இது பர்மா இந்திய அகதிகள் முகாம். கப்பல்களில் சென்றுவிட்டவர்களின் (இந்தியாவுக்கு, அதிகமாக சென்னைக்கு) எண்ணிக்கை 62,412 பேர். 1964 இல் இது நடந்தது. இந்த முகாம் பொறுப்பாளர்கள் இந்திய அரசிடம் இந்தியாவில் வீடு கட்ட மனையும், வேளாண்மைக்கு நிலமும், வணிகர்களுக்குத் தொழிலும் செய்ய பணமும் கோரி விண்ணப்பித்தனர். இத்திட்டத்திற்கு அகில பர்மா இந்தியர் காங்கிரசு, நேதாஜி உதவிக்கழகம், தொண்டர் பேரணி, இந்திய தூதரகம் ஆகியவை உதவின.

1974ஆம் ஆண்டு புதிய அரசியலமைப்புச் சட்டம் மேலும் எல்லாத் தமிழர்களையும் பர்மிய குடிமகன்களாக மாறியவர்கள் உட்பட, எல்லோரையும் பாதித்தது. 1982 ஆம் ஆண்டு குடிமகன் சட்டம் மூன்றுவித குடிமகன் பிரிவுகளை அளித்தது. தாயக நாட்டினரல்லாதவர்கள் முக்கிய பதவிகள் வகிக்க முடியாது என இச்சட்டம் கூறியது. ஆகையால், பர்மா சுதந்திரம் அடைந்த பிறகு தமிழர்களின் செல்வாக்கு மிகவும் வீழ்ச்சியடையத் தொடங்கியது.

பர்மியப் பண்பாட்டிற்குத் தமிழர் கொடை

இந்தியப் பண்பாடு முதன்முதலாக ஐந்தாம் அல்லது ஆறாம் நூற்றாண்டின் தொடக்கத்தில்தான் ஐராவதி ஆற்றுப் பள்ளத்தாக்கில் இருந்தது என்று சான்றுகள் உள்ளன. பாலி மொழியிலும், பிற இந்திய மொழிகளிலும் எழுதப்பட்ட நூல்கள் ப்ரோம் அருகே உள்ள சுற்றுப்புறப் பகுதிகளில் கிடைத்தன.

பர்மாவில் புத்தசமயம் பின்பற்றப்படுகின்றது. ஆனாலும், பிராமணியம் *(Brahmanism)* தொடர்பான சான்றுகளும கிடைத்திருக்கின்றன. பர்மியத் தொடக்ககால மான் கல்வெட்டுகளில் மிகுதியான இந்திய அடிப்படைக் கூறுகளைக் காணலாம். மான்களிடமிருந்து பர்மியர்கள் இந்திய எழுத்து முறையையும், இந்து, புத்த சமயம் பற்றியும் கற்றறிருந்தனர். சுவர் (சுவர்க்கம்), தர்மா, போன்ற சமஸ்கிருத சமயச் சொற்றொகுதிகளும், பல சமய, சமூகப் பழக்க வழக்க முறைகளும் சமஸ்கிருத புத்த சமயத்திற்கும் பிராமணியத்திற்கும் பொதுவாக இருக்கின்றன. பண்டைய காலத்திலிருந்தே ஒரு புத்த சமயப் பிரிவினர்கள் பர்மாவில் சமஸ்கிருத மொழியைப் புனிதமொழியாகக் கருதி பர்மாவில் சமஸ்கிருத மொழியைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். இம்மாதிரியான பிராமணியத்தின் தாக்கத்தால் தொடக்ககால மான்பதிவேடுகளில் சமஸ்கிருத அடிப்படைக் கூறுகளைக் காணலாம். இப்பதிவேடுகளில் பிராமணியத்தைப்பற்றி அதிகக் குறிப்புகள் வருவதால் பர்மிய மன்னர் அவையில் அச்சமயத்திற்கு மிகுந்த செல்வாக்கு இருந்தது எனக் கூறலாம்.

கி.பி. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து ஒன்பதாம் நூற்றாண்டுவரை சுமார் 500 ஆண்டுகள் தென் இந்தியா ஆரிய மயமாக்கப்பட்டது; வடஇந்திய தர்ம சாஸ்திரங்கள் பல்லவ அரசில் செல்வாக்குடன் வாழ்ந்தன, சமஸ்கிருத மொழி ஏற்றுக்கொள்ளப்பட்டது. அரசு வெளியிட்டக் கல்வெட்டுக்களில் இம்மொழி பயன்படுத்தப்பட்டது. பெரும்பான்மையான பல்லவக் கல்வெட்டுக்கள் சமஸ்கிருத மொழியில் இருந்தன. தமிழில் இருந்த சில கல்வெட்டுக்களில்கூட பிரசாஸ்தி பகுதி சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டிருந்தன. கோவில்களில் சம்ஸ்கிருதம் கற்றுத் தரப்பட்டது. காஞ்சிப் பல்கலைக் கழகம் சம்ஸ்கிருத மொழி கற்றுதருதலுக்குப் புகழ் வாய்ந்ததாக இருந்தது. இப்பல்கலைக் கழகத்திலிருந்துசமஸ்கிருத மொழி பண்பாடு தென், தென்கிழக்காசிய நாடுகளுக்குப் பரவியது. பர்மாவிற்கும் பரவியது. பர்மியர் பின்பற்றிய சடங்குகளிலும் பிராமணீயத்தின் தாக்கத்தை ஓரளவு காணலாம். மேலை பர்மாவிலுள்ள பண்டையகால ஊர்களின் பெயர்களும் பிராமணீயத்தின் தாக்கத்தை எடுத்துக்காட்டுகின்றன. தவிர, அகழ்வாராய்ச்சியின் பொழுது பிராமணீயக் கடவுள்களும் கோவில்களும் பர்மாவில் கண்டுபிடிக்கப்பட்டன. பேகனிலுள்ள பிராமணீயக் கூறுகளையுடைய நாட்-லாவுங் கியாவுங் *(Nat-hlaung Kyaung)* கோவில் பண்டைய பர்மிய இந்துக் கோவில்களுள் முக்கியமானவையாகும். வீடு கட்டுவதில் தேர்ச்சி பெற்றிருந்த பிராமண சோதிடர்களிடம் எல்லாப் பொறுப்புகளும் விடப்பட்டிருந்தன. ஏதாவது ஓர் சமய நிகழ்ச்சியின் பொழுது பயன்படுத்தப்படும் தண்ணீர்கூட பிராமணர்களால் கொண்டுவரப்பட்டது. மேலும், இத்தண்ணீர் கொட்டப்படும் சங்கும் (விஷ்ணுவின் அம்சம்) பிராமணர்களால் கொண்டுவரப்பட்டது. ஆ[illegible]யால் பேகன் காலத்தில் புத்த சமயம் பெரும்பான்மையானவர்

சமயமாக இருந்த போதிலும் மக்களின் அன்றாட வாழ்க்கையில் பிராமண சமயத்தின் முக்கியப் பங்கினையும் பார்க்கலாம்.

பர்மாவில் பிராமணக் கடவுள்களுள் விஷ்ணுவிற்குச் செல்வாக்கு மிகுதியாக இருந்தது. எல்லா முக்கியச் சமயச் சடங்குகள் நடப்பதற்கு முன் விஷ்ணு வழிபாடு செய்யப்பட்டது. வாழைப்பழங்கள், கரும்பு, பாய், தங்கப் பூக்கள், மெழுகுவர்த்தி, கோப்பை வடிவமுள்ள ஒரு பாத்திரத்தில் வேகவைத்த அரிசியை நிரப்பி அதன்மேல் மெழுகுவர்த்திகளைச் செருகி நாராயணனுக்கு நைவைத்தியம் செய்வார்கள். பேகனில் நாட்லாவுங் கியாங்கில் வழிபாடு செய்யப்பட்ட முதற்கடவுள் விஷ்ணு. அக்கோவிலின் சுவரிலும், கருவறைகளிலும் விஷ்ணுவின் பத்து அவதாரங்களின் கற்சிலைகள் உள்ளன. கி.பி. 12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மியன்பாகனில் (Myinpagan) உள்ள ஓர் தமிழ்மொழி கல்வெட்டில் இக்கோவிலைப் பற்றி குறிப்புகள் உள்ளன. மலைமண்டலத்தில் மகோதயார் பட்டணத்தைச் (அதவாது மலபாரில் உள்ள ஓரங்கனூர்) சேர்ந்த ஒருவர் அளித்த அன்பளிப்பை பற்றி இத்தமிழ்க் கல்வெட்டில் கூறப்பட்டிருக்கின்றது. அன்பளிப்பு அளித்தவர்களின் பெயர் ஸ்ரீகுலசேகர நம்பி, வைஷ்ணவ ஆசாரியர் குலசேகரரை வழிபடுபவர். கல்வெட்டின் தொடக்கப்பகுதி குலசேகரனின் குமுகுண்டமாலாவிலிருந்து எடுக்கப்பட்டதாகும். புக்கம் (Pukkam) அல்லது அரிவட்டநாபூர் அதாவது பேகனில் உள்ள நானாதேசிவின் நகரா விஷ்ணு கோவிலுக்கு இந்த அன்பளிப்பு அளிக்கப்பட்டது. நானாதேசிவின் நகரா என்றால் இந்த விஷ்ணு கோவில் பல நாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்டது என்று பொருளாகும். பொதுவாக, இந்திய வாணிபர்கள் நிலையாக தங்கிய இடங்களிலும் அல்லது குடியேறிய பகுதிகளிலும் அவர்கள் வழிபாடு செய்த கடவுள்களுக்குக் கோவில்களை கட்டினார்கள் எனக்கூறலாம். பொதுவாக செங்கற்களை பயன்படுத்தி இக்கோவில்கள் கட்டப்பட்டன. ஆனால் இக்கோவில்கள் எல்லாம் பாழடைந்து மறைந்துவிட்டன. தற்பொழுது பேகனில் உள்ள நாட்லாவுங் கியாவுங் மட்டும் பாழடைந்து மறையாமல் இருக்கின்றது. பல நூற்றாண்டுகளாகப் பாழடைந்த நிலையில் இருக்கும் இக்கோவிலின் சிதை கூளத்திலிருந்து வெளிப்படுகின்ற பல உருவச்சிலைகளை, ஒரு காலத்தில் இக் கோவில்களில் நிறுவி வழிபட்ட உருவச்சிலைகளைக் காணலாம். பேகனில் உள்ள மியன்காபாவில் ஓர் அடி உயரமுள்ள, நல்ல வேலைப்பாடுள்ள ஓர் செம்பு உருவச்சிலையை ஓர் சாது கண்டுபிடித்தார். மணற்பாறையில் செய்யப்பட்ட நான்கு கைகளையுடைய பத்மாசனத்தில் அமர்ந்திருக்கும் ஓர் சிறிய உருவச்சிலையைப் பேகன் அருங்காட்சியத்தில் இன்றுகூடப் பார்க்கலாம்.

பர்மாவில் குடியேறிய தமிழர்களால் வைணவ சமயம் பரப்பப்பட்டது. ஸ்ரீக்ஷேத்திர அரசர்கள் வைணவ சமயச் சார்புடையவர்களாக இருந்தனர். புரோம் நகரிருந்த இடத்திலும், ம்ஙாணிலும் அகழ்ந்தெடுக்கப்பட்டபோது, வைணவ சமயத்துக்குரிய தெய்வத்திருவுருவங்களும், கோயில்களும் கிடைத்துள்ளமை, இதை வலியுறுத்துகிறது. அப்பொருள்களில் திருமாலின் பத்து அவதாரங்களைக் கொண்ட அரைகுறையான புடைச்சிற்பம் (Bas Relief) சிறந்து விளங்குகிறது.

பர்மாவில் பாகாங்கு என்னும் இடத்தில் ஒரு தமிழ்க் கல்வெட்டு கிடைத்து இருக்கிறது. அக்கல்வெட்டு கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில் வழங்கிய தமிழ்

எழுத்துக்களில் பொறிக்கப்பட்டிருந்தது. (சேரமான்) குலசேகர ஆழ்வாரின் "முகுந்த மாலா" என்ற வடமொழி நூலில் உள்ள ஆறாம் சுலோகத்தோடு தொடங்கி, கீழ்க் காணும் தமிழ்ப் பகுதியோடு முடிகிறது.

"சுவஸ்திஸ்ரீ புக்கம் ஆன அரிவர்த்தனப்
புரத்து நானாதேசி விண்ணகர்
ஆழ்வார் கோயில் திருமண்டபமும்
திருக்கதவும் இட்டேன், மலை மண்டலம்
தூயமகோதையர் பட்டினத்து
ஈராயிரான சிறியனான சீகுலசேகர
நம்பியேன்

என்பது கல்வெட்டு வாசகம். இதனால் "புக்கம் ஆகிய அரிமர்த்தனபுரம் என்னும் அந்த ஊரில் நானாதேசிகளாகிய தமிழகத்து வாணிகர்கள் கட்டியுள்ள 'விண்ணகர் ஆழ்வார்' என்ற திருமால் கோயிலில் சேரநாட்டில் மகோதைப் பட்டிணத்தைச் சேர்ந்த குலசேகரநம்பி என்ற வாணிகன் செய்த திருப்பணிகளை அறிகிறோம். அவ்வணிகன் திருமால் வழிபாட்டினன் என்பதும், குலசேகரர் ஆழ்வாரிடத்து ஈடுபாடுடையவன் என்பதும் புலனாகின்றன.

பேகன் ஆட்சிக்காலத்தின் பிற்பகுதியில் பர்மியக் கல்வெட்டுகளில் சிவ வழிபாடு தொடர்பான செய்திகளையும் பார்க்கலாம். ஒரு காலத்தில் இலிங்கவுரு வழிபாடு இருந்தது என லின்துயின் (லிங்கா) எனும் கிராமத்தில் கி.பி. 1235இல் வெளியிடப்பட்ட ஓர் கல்வெட்டின் மூலம் அறிந்துகொள்ளலாம். நாட்லாவுங் கியாங்கியிலிருந்து எடுக்கப்பட்ட ஓர் சிவன் உருவச்சிலை பேகனிலுள்ள ஆனந்த அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. அச்சிலையின் உருவ அமைப்பும், வேலைபாட்டுத்திறனும் தென் இந்திய தாக்கத்தை வெளிப்படுத்துகின்றது; கி.பி. 12ஆம் நூற்றாண்டில் செய்யப்பட்ட சிலைபோல் தோன்றுகிறது. மியின்பேகனிலுள்ள சிவி—ஒன்மின் (Shewe-Onhmin) துறவி மடத்தின் அருகிலுள்ள ஆற்றங்கரையில் ஓர் சிவன் சிலை கண்டுபிடிக்கப்பட்டது. அபேயாதனா கோவிலில்(Abeyandana temple) உள்ள சுவர் சித்திரங்களில் சிவன் நந்தி விடை எருதுவின் மேல் சவாரி செய்யும் சித்திரமும் இருக்கின்றது.

கி.பி.1057 இல் தாட்டனில் (மான்வட்டம்) கணேசருக்கு ஓர் கோவில் கட்டப்பட்டது. இக்கோவில் சோழர் காலத்துக் கோவிலாக கருதப்படுகின்றது. கி.பி. 1279 ஆம் ஆண்டு கல்வெட்டில் கடவுள் மஹாபின்னை (மஹாவிநாயகா) அல்லது கணேசாவை பற்றிய குறிப்புகளை காணலாம். கி.பி.1179 ஆம் ஆண்டு கல்வெட்டில் காவம்பட்டி (Govampatti) புத்தர் அவருடைய இரு சிஷ்யர்கள் பற்றிய செய்திகள் கிடைக்கின்றன. பர்மாவில் காவம்பட்டியை,சிவனின் மகனான கணேசரோடு தொடர்பு படுத்தி பேசுகிறார்கள் கி.பி. 1057ஆம் ஆண்டு தாட்டனை கைப்பற்றியவுடன் [illegible] பேகனில்

இவர் வழிபாடு பரவியது. புகழ்வாய்ந்த புத்த துறவிகளை இந்துக் கடவுள்களோடு தொடர்புபடுத்தி வழிபடும் பழக்கம் பர்மாவில் இருந்தது. கி.பி. 1930 ஆம் ஆண்டில் குறுகிய தொப்பையும், மயிர் மழுக்கை செய்த ஓர் கணேசர் உருவம் கண்டுபிடிக்கப்பட்டது. ஒரு காலத்தில் கணேசரும், இந்தத் தொப்பையுள்ள உருவமும் பர்மாவில் மக்கள் பாரட்டிற்குரியதாக இருந்தன என ட்யூராய்செல்லி (Duroiselle) என்பார் கூறுகின்றார்.

சிவ உருவச்சிலைகள், கணேசர், நந்தி போன்ற சிவ வழிபாடு தொடர்பான சிலைகள் பர்மாவில் கண்டுபிடிக்கப்பட்டதால் தென் இந்திய வாணிக குடும்பங்கள் இப்பகுதிகளில் குடியேறியிருந்திருக்கலாம்எனத் தோன்றுகிறது. அவ்வாறு குடியேறிய தென் இந்தியர்கள் தங்கள் சமயத்தை மறக்காமல் தங்கள் சமய உருவச்சிலைகளை வைத்து வழிபாடு செய்திருக்க வேண்டும். ஆனால் எல்லா பர்மிய மக்களும் இச்சிவ வழிபாட்டு உருவச் சிலைகளை வழிபாடு செய்ததாகச் சான்றுகள் இல்லை; மேலும் சைவம் பர்மிய மக்களின் அல்லது பர்மிய நாட்டின் சமயமாக இருந்ததில்லை.

பர்மாவில் பிரம்மா, பிற பிராமண கடவுள்களின் செல்வாக்கு மிகக் குறைவாக இருந்தது. எனக்கூறலாம். நான்பாயாவிலும், மியின்பேகனிலுமுள்ள மனுவதா கோவிலிலும் பிரம்மாவின் சிலைகளைக்காணலாம். இக்கோவில்கள் சிறை செய்யப்பட்ட மனுவதன் அரசனால் 1060-70 ஆம் ஆண்டுகளில் கட்டப்பட்டதாக நம்பப்படுகிறது.

நாட்லாவுங்கியாங் வெளிச்சுற்று கிழக்குப் பகுதியில் சூர்ய பகவானின் உருவச் சிலையைப் பார்க்கலாம். தென் இந்தியச் சாயலை இச்சிலையில் பார்க்கலாம். பொதுவாகத்தென் இந்தியாவிலிருக்கும் சூரியபகவான் காலணிகளை அணிவதில்லை. குதிரை பூட்டிய இரதத்தில் ஏறி செல்வதில்லை. அபேயாதனா கோயில் சித்திரங்களில் ஹம்சாமேல் வீற்றிருக்கும் சரஸ்வதி, மகராவின்மேலுள்ள கங்கா, வருணா, ஐராவதா வெள்ளையானை மேலிருக்கும் இந்திரன், ஆட்டின்மேல் சவாரி செய்யும் அக்னி, எருமையின்மேல் அமர்ந்திருக்கும் யமன் முதலிய சித்திரங்களைக் காணலாம். பர்மாவின் பல பகுதிகளில் இந்து உருவச்சிலைகளும், கடுமட் பாண்டத்திலும் நாணயங்களிலும் எழுதப்பட்ட இந்து சமய உருவங்களும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

பேகன்நகரில் 1701இல் கட்டப்பட்ட குகைக் கோயில்களில் பரிமியம் , மான், புயு, சியம், தமிழ், சீனம் ஆகிய மொழி வடிவக் கல்வெட்டுக்கள் உண்டு என்பது வரலாறாக உண்டு. ஆகையால், பிராமணீயமும் புத்தசமயமும் கலந்திருப்பதைப் பர்மாவில் காணலாம். கி.பி. ஐந்தாவது நூற்றாண்டிலிருந்து ஒன்பதாம் நூற்றாண்டுவரை புத்த சமயம், இந்து சமயம் அமைதியாக இணைந்து பர்மாவில் செல்வாக்குடன் தழைத்தோங்கின.

பேகனிலுள்ள ஓர் இந்துக் கோவில் கி.பி. பத்தாம் நூற்றாண்டில் கட்டப்பட்ட நாட்லாவுங்கியாங் ஆகும். கருமனை கோபுரம் உடைய அமைப்புடன் இக்கோவில் கட்டப்பட்டது. விஷ்ணுவிற்காக அமைக்கப்பட்ட இக்கோவிலில் விஷ்ணுவின் பத்துஅவதாரங்களையும் பார்க்கலாம். புத்தர் 9ஆவது அவதாரமாக இருப்பதைப் பார்க்கலாம்.

புத்தசமயம் இந்தியாவில் மறையத் தொடங்கியவுடன் தென் இந்தியாவிலிருந்து பல்லவர், சோழர் கட்டடக்கலைக் கருத்துக்கள் பர்மாவிற்குச் சென்றன. புத்த சமயத்தைப்

பின்பற்றியவர்கள் கூட இக்கருத்துக்களை ஏற்றுக் கொண்டு, குறிப்பாக ஆற்றின் கழிமுக அரங்கத்தைச் சார்ந்த பர்மாவின் பகுதிகளில், பயன்படுத்தினார்கள் எனக் குவாரிட்ஸ் வேல்ஸ் (Quarittch Wales) என்பார் கூறுகின்றார். தென் இந்தியாபேகன் கட்டடக்கலை உறவினைப் பற்றி போர்ச்ஹேமர் (Forchhammer) என்பார் எடுத்துரைக்கின்றார். கி.பி. 1090இல் பேகனில் கட்டி முடிக்கப்பட்ட ஆனந்த கோவில் "வடஇந்திய சிகாரத்தை உடைய தென் இந்தியக் கோயில்" எனச் சரியாகவே வருணிக்கப்பட்டிருக்கிறது என்று இவர் கூறுகின்றார். விஷ்ணு, கணேசர், பிரம்மா உருவச் சிலைகள் எஸ்மாவீஸ் (Hmawze) எனுமிடத்திலும், விஷ்ணு, கருடா, ஹனுமான் உருவச்சிலைகள் மெர்குரி (Merguri) என்னுமிடத்திலும், சூர்யா துர்கா, விஷ்ணு அராகன் (Arakan)எனுமிடத்திலும், கிடைத்திருக்கின்றன.

சியாம், கம்பூசா, பர்மா அரசு அவைச்சடங்குகளை நடத்தியவர்கள் பிராமணர்கள். இவர்கள் சோதிடர்களாகவும் பணிபுரிந்திருக்கின்றனர்.

தொடக்கத்திலிருந்த தலைங் மொழியின் எழுத்துத் தொகுதி Talaing alphabet நான்கவாது நூற்றாண்டைச் சார்ந்த வெங்கி மொழியின் எழுத்துத் தொகுதியைத் (Vengi alphabet) தழுவியிருந்தது எனப் போர்ச்ஹேமர் கூறுகின்றார். மான் எனுமிடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பண்டைய கல்வெட்டுகளின் கையெழுத்து முறையும், மத்திய சியாமில் லோப்புரியில் கண்டுபிடிக்கப்பட்ட கற்றூண்களில் உள்ள கையெழுத்து முறையும் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த பல்லவ கையெழுத்து முறையினைத் தழுவியிருக்கின்றன. மற்றக் கல்வெட்டுகளில் கிடைத்த சான்றுகளும் தென் இந்திய மொழிகளின் தொடர்பின் மூலம் பர்மிய எழுத்துத் தொகுதி உருவாகியிருக்கலாம் என் உறுதிப்படுத்துகின்றன.

புரோமில் இருபது பொன்னேடுகளைக் கொண்ட ஓர் ஓலைச் சுவடி கிடைத்து இருக்கிறது. அதில் பாலி மொழியிலுள்ள மறைநூல் கருத்துக்கள், சுலோகங்களாகப் 'பயூ' மொழியில் பொறிக்கப்பட்டுள்ளன. அப் 'பயூ' மொழி எழுத்துக்கள், தமிழ்மொழியின் பழைய எழுத்து வடிவமான வட்டெழுத்தைப் போன்று எழுதப்பட்டுள்ளன. அவ்வெழுத்து வடிவம் நேரடியாகத் தென் இந்தியாவில் இருந்து கொண்டுசெல்லப்பட்டதாக இருக்கவேண்டும் என்பது புலனாகிறது. களிமண் பட்டயங்களிலும், வெள்ளிப் பாத்திரங்களின் மீதும் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துகளாலும் பழைய புரோமில், ஈனயான பௌத்த சமயத்தோடு மகாயான பௌத்த சமயமும், இந்து சமயமும் செல்வாக்குற்று இருந்தமை தெரியவருகிறது. இதனை அங்குக் கிடைத்துள்ள சிற்பங்களும் வெண்கலச் சிலைகளும் உறுதிப்படுத்துகின்றன.

பர்மாவின் பழங்குடி மக்களான பயூக்கள் இறந்தோரின் சாம்பலைத் தாழியிலிட்டு, அதன்மீது இறந்தோர் பெயரை எழுதிப் புதைக்கும் பழக்கம் உடையவராக இருந்தனர். கி.பி. எட்டாம் நூற்றாண்டு அளவில், புதைக்கப்பட்ட தாழிகளின் மீது 'ஆரிய விக்கிரம 'தைரியவிக்கிரம', 'சிம்ம விக்கிரம' என்ற பெயர்கள் காணப்படுகின்றன. அவை யாதோ ஓர் அரசமரபைக் குறிப்பதாகத் தெரிகிறது. இதிலிருந்து அக்காலப் பயூத் தலைவர்கள் இந்திய இரத்தக் கலப்பு உடையவர்களாக இருந்திருக்கலாம் என்பது குறிப்பாகத் தோன்றுகிறது.

மேலும் சில தாழிகளில் 'வர்மன்' 'விக்கிரமன்' என்னும் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அத்தாழிகளின் எழுத்துகள் பொறிக்கப்பட்ட காலம் நம் கருத்தைக் கவருகிறது. அக்காலத்தில் தமிழ் நாட்டில் செங்கோலோச்சிய மாண்புமிக்க மாபெரும் பல்லவர்கள் 'வர்மன்' என்ற பட்டப்பெயரைச் சூட்டிக் கொண்டவர்களாக இருந்தனர். இதனால் தமிழகத்திற்கும் பர்மாவிற்கும் நெருங்கிய அரசியல் தொடர்பு இருந்திருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது.

வெள்ளியாலான பேழை ஒன்றைத் தொல்பொருள் ஆராய்ச்சியாளர் பர்மாவில் கண்டெடுத்தனர். அப்பேழை கி.பி. ஏழாம் அல்லது எட்டாம் நூற்றாண்டில் செய்யப்பட்டதாக இருக்கலாம் என்று அவர்கள் கருதுகின்றனர். அப்பேழையில் புத்தரின் திருவுருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அதன் மூடியின் ஓரத்தைச் சுற்றிலும், பயூமொழியிலும் பாலி மொழியிலும் பொறிக்கப்பட்ட எழுத்துக்கள் காணப்படுகின்றன. அவ்வெழுத்துக்கள் தென்னிந்தாயாவிற்குரிய கிரந்த எழுத்துக்களைப் போன்று தோன்றுகின்றன. அவை பெரிதும் பல்லவர் கதம்பர் காலத்திய எழுத்து வடிவத்தை ஒத்துள்ளன.

அப்பேழையின் கீழ்புறத்தில் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துக்கள் "ஸ்ரீபிரபு வர்மன்" என்ற ஓர் அரசனைக் குறிப்பிடுகிறது. ஸ்ரீபிரபு வர்மன், அந்நாட்டை ஆண்ட மான் அரசு மரபைச் சேர்ந்தவனாக இருக்கலாம்; 'வர்மன்' என்னும் பட்டப்பெயர் இந்திய மன்னர்கட்கு உரியது என்பது உறுதி. பர்மாவினை ஆண்ட மான் மரபைச் சேர்ந்த அரசர்கள், தமிழகத்தில் ஆட்சி புரிந்த பல்லவரகளைக் கண்டு, அவர்களைப் போன்று தாங்களும் பட்டப்பெயர்களைச் சூட்டிக் கொண்டிருக்கலாம். இதைப் போன்று, இன்னும் பல இந்தியச் சொற்கள் 'மான்' மொழியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன. பேழையில் பொறிக்கப்பட்டுள்ள புத்தவடிவம் ஈனயான புத்தசமயத்திற்குரிய திருவுருவமாகும்.

இங்குப் பல்லவர் சிற்ப முறையினைப் பின்பற்றி அமைக்கப்பட்டுள்ள சிற்பங்கள் பலகிடைத்துள்ளன. அவை பண்டைக் கால புரோம் நகரில் காணப்படும் இந்து சமய சிற்பங்களாகும். அவற்றுள் சிறப்புடையவை திருமால், இலக்குமி ஆகியோரின் புடைப்புச் சிற்பங்களாகும். அவற்றின் தலைகள் சிதைந்துபோயுள்ளன. அவை பல்லவர் சிற்ப முறையினைப் பின்பற்றி செய்யப்பட்டுள்ளன. தென்னிந்தியாவில் காணப்படும் சிற்ப முறையோடு நெருங்கிய தொடர்புடைய ஒரு ஸ்தூபி 1926-27 இல் கண்டுபிடிக்கப்பட்டது. (டாக்டர் க. த. திருநாவுக்கரசு, op. cit. பக். 59-62)

இரங்கூன் ஒரு பெரிய நகரமாக வளர்ச்சியடைந்ததில் தமிழ்த் தொழிலாளிகளுக்கும் தமிழ் ஒப்பந்தக்காரர்களுக்கும் சிறப்பான பங்கு உண்டு. ஆகையால் நகர அமைப்பு, வாய்க்கால் சீரமைப்பு முதலிய பொதுப்பணிகளில் பங்கேற்றனர். 1824ஆம் ஆண்டில் இரங்கூனில் 1500 வீடுகளும், 9000 குடிகளும்தான் இருந்தன. அப்பொழுது அது ஒரு கிராமமாக இருந்தது. 1901ஆம் ஆண்டளவில் அது ஓர் பெரிய நகரமாக மாறத் தொடங்கியவுடன், தமிழர்களும் மற்ற இந்தியர்களும் 1,30,000 பேர்கள் அதாவது

இரங்கூனில் இருந்த மொத்த மக்கள் தொகையில் 50 விழுக்காடாக இருந்தனர். காடுகளை அழிக்கவும், சதுப்பு நிலத்தை மாறறவும், சாலைகள், புகைவண்டிச் சாலைகள், மாவட்டங்களைக் கட்டவும், அரிசி, உற்பத்தி, வாணிபம் செய்யவும், மரம் வெட்டவும், தேயிலை வாணிபம் செய்யவும் தமிழர்கள் மிகுதியாகப் பயன்படுத்தப் பட்டனர். ஆகையால் இன்றைய பர்மாவை உருவாக்கியதில், குறிப்பாக ஆங்கிலேய ஆட்சியின்போது, தமிழர்களுக்குச் சிறப்பான பங்கு உண்டு என அறுதியிட்டுக் கூறலாம்.

பர்மாவில் உள்ள தமிழ் மக்கள் தொகை

பர்மாவில் உள்ள மொத்த இந்தியர்களில் தமிழர்கள் 60 விழுக்காடு இருக்கின்றனர். ஆனால், ஏற்கனவே விவரித்தபடி குறிப்பாக இரண்டாம் உலகப் போருக்குப் பின் தமிழர்களின் தொகை குறையத் தொடங்கியது. இன்று பர்மாவில் 2,50,000 தமிழர்கள் வாழ்கின்றனர். உலகத் தமிழர்களின் மொத்தத் தொகையில் இவர்கள் 0.4 விழுக்காடு உள்ளனர். என ஞானசூரியன் என்பார் கூறுகின்றார்.

பர்மாவில் இருந்த இந்திய மக்கள்தொகை- 1881-1941

ஆண்டு	மொத்த மக்கள்தொகை	இந்திய மக்கள் தொகை (இவர்களில் தமிழர்கள் 60 விழுக்காடு உள்ளனர்)	இந்தியர்கள் %
1881	3 7,36,771	2,43,123	6.5
1891	8 0,98,014	4,20,830	5.1
1901	1,0 490,634	5,68,263	5.4
1911	1,31,15,217	7,43,288	6.1
1921	1,32,13,192	8,87,077	6.7
1931	1,46,67,146	10,17,825	6.9
1941	1,68,23,798	9,18,000	5.4

(SOURCE: N.R. Chakravarthi, Indian Minority in Burma p 15)

1953ஆம் ஆண்டில் பர்மாவின்மொத்த மக்கள் தொகை 29,40,704 ஏறக்குறைய 30 இலட்சம் இந்தியர்கள் (மொத்த இந்தியர்களில் தமிழர்கள் 60 விழுக்காடு இருந்தனர்) 2,86,093 (ஆண்கள் 1,85,301; பெண்கள் 1,01,602) (மூலம்: இர. ந. வீரப்பன், உலகத்தமிழர், பக். 153.)

1982ஆம் ஆண்டில் பர்மாவில் [illegible],00,000 இந்தியர்கள் இருந்தார்கள். இவர்களில் 40,000 பேர்களிடம் இந்தியன் பாஸ்போர்ட் இருந்தன. 40,000 பேர்களிடம் தேசியப் பதிவுக்

கார்டுகள் இருந்தன. 1,80,000 பேர்கள் நாடற்றவர்களாக இருந்தனர். (SOURCE Uma Shanker Singh, " Indians in Burma" in Indians in South-east Asia ed. by. I.J. Bahadur Singh p. 111), இந்த மொத்த இந்தியர்களின் எண்ணிக்கையில் தமிழர்கள் 2,50,000 பேர் இருந்தனர் என ஞானசூரியன் என்பார் கூறுகின்றார்.

இன்று பர்மாவில் இருக்கும் 4 இலட்சம் இந்தியர்களில் 2 இலட்சம் நாடற்றவர்களாக இருக்கின்றனர். ஒரு இலட்சம் பேர் பர்மிய நாட்டு குடிமகன்களாக இருக்கின்றனர். 1 இலட்சம் அனுமதி சீட்டு பெற்று (Resident Permit) வாழ்கின்றனர்.

(The Hindu – 17-9-1988)

வீரப்பன் (op. Cit, பக் 153) கூறுகின்றார். "இன்று நான்கு இலட்சமாகத் தமிழர் எண்ணிக்கை வளர்ந்துவிட்டது. இது 1984ஆம் ஆண்டு கணக்கு என்பது குறிப்பிடத்தக்கது. "இன்று மூன்று இலட்சத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் நாடற்றவர்களாகி விட்டனர். இதுவே உலக நாடுகளில் குடியுரிமையற்ற தமிழர் மிகுந்துள்ள முதன்மை நாடாகும். மிகக் குறைந்தவர்களே இங்குக் குடிவாணர்களாகி உள்ளனர். இவர்களும் அரசுத் துறையைச் சார்ந்தவர்களாவர், வீரப்பன் அளிக்கும் தமிழ் மக்கள் தொகை விவரம் எவ்வளவு தூரம் உண்மை என்பது தெளிவாக தெரியவில்லை .

தமிழர்கள் மிகுதியாக வாழும் பகுதிகளில் இரங்கூன் மத்தியப் பகுதி, கிழக்குப் பகுதி, வடக்கு, மத்திய பகுதிகள். 'இலாமூடா, தட்டாகலே கம்மாகச்சி, தட்டோன், கம்பை, கலாபஸ்தி, இஞ்சின், மினிக்கோன், தெஅவுக்கலப்பா, தாம்புவே, தல்லா, கீழந்தான், கம்மாயுட். தீங்காஞ்சூன், சூரியம்-டாம்பின்குயின், மண்டலை, மோல்மின், பாகான். பொதுவாக இந்தியர்கள் இரங்கூன், அராகன், ஐராவதி ஆற்றங்கரையோரம், தென்னாசரீம், மாக்னே முதலிய இடங்களில் வாழ்கின்றனர்.

சமய வாழ்க்கை நிலை

1961இல் பர்மாவில் அரசு சமயமாகப் புத்தமதம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.பர்மாவின் மொத்த மக்கள் தொகையில் 85 விழுக்காட்டினர் புத்த மதத்தைப் பின் பற்றுபவர்கள், தவிர ஆன்மவாதிகள் (5%) முசுலிம்கள் (4%), இந்துக்கள் (4%), கிறித்துவர்கள் (2%) சிறுபான்மையினராக இருக்கின்றார்கள். எல்லோரும் சட்டத்தையும், தேசியநலத்தையும் மீறாமல் அவர் அவர்களுடைய சமயத்தைப் பின்பற்ற உரிமை உண்டு.

பர்மாவிற்குச் சென்ற பெரும்பான்மையான தமிழர்கள் இந்துக்கள் ஆவார்கள். பர்மாவில் 40 இந்துக்கோயில்களுக்கு மேல் இருக்கின்றன. தவிர தமிழ்க் கத்தோலிக்கக் கோயில்களும் இருக்கின்றன. முக்கிய இந்துத் தமிழர் கோயில்கள் சித்தி விநாயகர் கோயில் (1860), காளிகோயில் (1860), தாட்டனில் உள்ள தண்டாயுதபாணி கோயில் (1888), இரங்கூன் மகாமாரியம்மன் கோயில் (1903) சுந்தரவிநாயகர் ஆலயம் (1908), வரதராசபெருமாள் கோயில் (1927) முதலிய கோயில்கள் ஆகும். தவிர நடராசர், பெருமாள், சிவன் கோயில்களும் உண்டு.

1933வரை 62 ஆலயங்கள் பர்மா செட்டியார்கள் பேராதரவுடன் கட்டப்பட்டன. இரங்கூனுக்கருகில் கம்பை என்ற ஊரில் திருமால் ஆலயம், தண்டாயுதபாணி ஆலயம், பிள்ளையார் கோயில்கள் அமைக்கப்பட்டன. அகன்ற பெரிய மோகுல் தெருவில்உட்கட்டட அமைப்பில் தண்டாயுதபாணி ஆலயத்தை அமைத்துள்ளனர். பசுமந்தானில் இதுபோல் தண்டாயுதபாணி கோயிலுக்கு அரசகோபுரம் 1900இல் கட்டப்பட்டது. 1942இல் இது குண்டு வீச்சில் சேதமடைந்து மறு சீரமைப்பு 1967இல் அமைக்கப்பட்டது. மற்றும் சித்தி விநாயகர், காளியம்மன் ஆலயங்களும் எழுந்தன. மோல்மீனில் முதலாவது செட்டியார் குடியேற்றம் (கிழக்குப் பர்மா) ஏற்பட்ட போது வேல்முருகன் ஆலயம் அமைத்தனர். இது மலைக்கோயிலாக, சிவத்தலமுள்ள கோயிலாகவும் பின்னர் மறு உருவாக்கப்பட்டு தைப்பூசக்காவடி, வேலாட்டம் முதலியன பெருவிழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இதுவே பர்மாவில் பெரிய இந்து ஆலயம். 32 ஊர்களில் தண்டாயுதபாணி கோவில்கள் நாட்டுக்கோட்டை செட்டியார்களால் நிருவகிக்கப்படுகின்றன.

முப்பனின் நகரிலும், நிம்பலே பட்டணத்திலும் தமிழ்க்கோயில்கள் உண்டு. கமாயூட் மாரியம்மன், அருள் முத்து மாரியம்மன் ஆலயங்களும், இன்சீன் தில்லை மாகாளியம்மன், மினிக்கோன் சுப்பிரமணியர் ஆகிய ஆலயங்கள் தமிழ்ப்பணி ஆற்றுகின்றன. இதுபோல் சித்தி விநாயகரும் செயல்படுகிறது. தமிழும் சமயமும் இருகண்களாக பயன்படும் கோயில்கள் பல உள.

டாக்டர் க. த. திருநாவுக்கரசு அளிக்கும் மேலும் பல செய்திகள்:-

தேன் கரு மாப்பிள்ளை என்பவர் இரங்கூன் மாநகரில் மாரியம்மன் திருக்கோயில் ஒன்றை எழுப்பியுள்ளார். ஆடி, தை, சித்திரை மாதங்களில் இத்திருக்கோயிலில் திருவிழாக்கள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன. இக்கோயிலில் ஆடிமாதத்தில் நடைபெறும் தீமிதித்தல் திருவிழா, பெருஞ்சிறப்பு வாய்ந்தது. இக்கோயிலில் நடைபெறும் விழாக்கள் எல்லாவற்றுக்குமே, பர்மாவின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்து வரும் தமிழ் மக்கள் பேரார்வத்தோடு வந்து வழிபாடு செய்கின்றனர். தமிழன் குடியேறிய நாடுகளில் எல்லாம் கண்ணகி மதுரையை எரித்ததின் அடையாளமாகப் போற்றப்படும் 'தீமிதித்தல்' திருவிழா நடத்தப்பட்டு வருவது கருதத்தக்கதாகும்.

இராமநாதன் செட்டியார் என்பவர் அங்குத் திருமால் (பெரும ்ர) கோயிலைக் கட்டியுள்ளார். இக்கோயில், காஞ்சி வரதராசப் பெருமாள் கோயிலின் பாணியில் அமைக்கப்பட்டுள்ளது. கோயில் வழிப்பாட்டு முறை பாஞ்சராத்திரிக ஆகமத்தை அடிப்படையாக கொண்டுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

பர்மாவில் கொண்டாடும் தமிழர் திருவிழாக்களில் பௌத்த குருமார்களும் கலந்து கொள்கின்றனர். 'தீமிதிப்பு'ப் போன்ற சடங்குகளிலும் அவர்கள் நேரடியாகவே பங்கு கொண்டு வழிபாடும் செய்து வருகின்றனர். தேரில் முருகப் பெருமான் ஊர்வலம் வரும்பொழுது, பர்மிய மக்கள் தட்டுகளில் தீபாராதனைப் பொருள்களை ஏந்திய வண்ணம் தங்கள் வீட்டுவாசல்களில் காத்து நிற்கின்றனர்; தங்கள் வீட்டிற்கு நேராகத் தேர்

வந்தவுடன் அர்ச்சனை, ஆராதனை செய்து திருநீற்றைப் பெற்று நெற்றியில் வழிபாட்டுணர்வோடும் பக்தியுணர்வோடும் அணிந்து கொள்கின்றனர். இந்த அளவிற்குத் தமிழனின் சமயவழிபாட்டில் பர்மியமக்கள் பேரீடுபாடு கொண்டுள்ளனர்.

அகில பர்மா இந்து மத்திய வாரியம் என்ற பெரிய அமைப்பு உண்டு. இந்தச் சபையில் 75 கோயில்களும், கழகங்களும் சேர்ந்துள்ளன. 75இல் தமிழர் கோயில் 15 இரங்கூனில் இருந்தன. 1976 வரை இவ்வாரியமும் கோயில்களும் ஐந்து மாநாடுகளை நடத்திற்று. இவ்வாரியம் மிகப் பெரிய மலர் ஒன்றை வெள்ளி விழா மலராக ஆங்கிலத்தில் (1957-1978) வெளியிட்டு உள்ளது.

தமிழர்கள் கார்த்திகை, சித்திரை பிறப்பு, தீபாவளி, பொங்கல் மற்றும் சில சமய விழாக்களையும் திருநாள்களையும் கொண்டாடுகிறார்கள். பொங்கலுக்கே பெருஞ்சிறப்பு. 'பர்மியத் தமிழர் வடக்கு, கிழக்கு, மத்திய பகுதிகளில் பெரும்பாலோர் நெல் விவசாயத்தில் ஈடுபட்டு பெரும் பங்காற்றி வருகிறார்கள். தமிழகத்தைப் போல பொங்கலை, மாட்டுப் பொங்கலையும், விசாக தினத்தையும் சிறப்புடன் நடத்துவதாக கேள்விப்பட்டோம். இந்து-புத்த சமூக ஒருமைப்பாடு மிகுந்த நல்லெண்ணத்தை இது வளர்த்திருக்கிறது." (வீரப்பன், op. Cit. p. 149.)

பர்மாவில் தமிழ்க் கத்தோலிக்கர் ஆலய நூற்றாண்டு விழா (1877-1977) கொண்டாடப்பட்டிருக்கிறது. இச்சமயம் லெருவரர் அடிகளாரால் இங்குத் துவங்கியது. இது புனித அந்தோனியார் திருவாலயமாக வளர்க்கப்பட்டு வரும் மாதா கோயிலாக பாதுகாக்கப்பட்டு வருகிறது. 1946க்குப் பின் இந்த சமயத் தலைவர்களாக தமிழர்களே உருவாகியிருக்கின்றனர். தமிழ், பர்மியம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளில் 1977ல் சிறப்பு மலர்கள் வெளியிட்டனர். சிறியம் தமிழர் கலாசாரக் கழகம் 1977 முதல் தை மலராகப் பொங்கல் சிறப்பேடாக வெளியிட்டு பிரபலம் அடைந்திருக்கிறது.

பொருளாதார நிலை

ஆங்கிலேய ஆட்சியின் போது மூன்று வகைத் தமிழர்கள் பர்மாவில் பணிபுரிந்து செல்வம் திரட்டுவதற்காக வந்தனர். 1. முதலாளித்துவ அல்லது வணிகர் பிரிவினர்-குறிப்பாக, தமிழ், தெலுங்குச் செட்டியார்கள், 2. அறிவுத்திறனுடையவர் பிரிவினர்கள். (Intellectual Class) - இவர்கள் குறைவாகத்தான் இருந்தனர். ஆசிரியர்கள், பேராசிரியர்கள், டாக்டர்கள், பொறியாளர்கள், வழக்குரைஞர்கள், கணக்கர்கள், எழுத்தர்கள், நிருவாக அலுவலர்கள் முதலியவர்களை இப்பிரிவினர்களாகக் கருதலாம். ஐரோப்பியர்களுடன் இணைந்து அறிஞர்கள் தற்கால கல்வி, மருத்துவ, நிருவாக, நீதி நிருவாகம் உட்பட-முதலிய அமைப்புகளைப் பர்மாவில் உருவாக்கினர். இராசபுத்திரர்கள், சீக்கியர்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் படை, காவல் துறைகளில் பணிபுரிந்த தமிழர்கள் குறைவு. பொதுவாக வாழ்க்கைத் தொழிலர்களாக பணிபுரிந்தனர் (Professional Classes) எல்லாச் சாதிப் பிரிவிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். குறிப்பாகப் பிராமணர்கள் பலர் வாழ்க்கைத் தொழிலர்களாகப் பணி புரிந்தனர். 3. இறுதியாக, தொழிலாளிகள் கூலியாட்கள்-திறமைத் தொழிலாளர் குழுவினர், கைத்திறன் பெற்றிராத கூலியாட்கள் என

இரு பிரிவினர் இருந்தனர். தென் இந்தியாவில் உயர்படி நிலையை அடைய முடியாமல் இருந்த பல தொழிலாளர்கள், குறிப்பாக வேளாண்மைத் துறையினர், பர்மாவிற்கு வந்து குடியேறினர். பர்மாவில், குறிப்பாக வேளாண்மை, தொழில் துறையில் இவர்களுக்கு ஓரளவு அதிக ஊதியம் கிடைத்தது. பர்மாவில் ஒரு குடும்பத்திற்குப் பத்து ஏக்கர் நெல் விவசாய நிலம் உண்டு. நல்ல விளைச்சல் பகுதிகள் மிகுதி. இதில் பாகுபாடு கிடையாது. தமிழர்களுக்கும் இந்த உரிமை உண்டு. நிலத்தில் விளையும் பாதியை அரசாங்கமே விலை கொடுத்து வாங்கிக் கொள்கிறதாம். அதனால் வறுமை இவ்வாறு நிலவுடைமையாளர்களிடம் இல்லை. அற்றைக்கூலியோ. கொத்தடிமையோ தமிழர்களிடம் இல்லை என்றாலும் வட பகுதிகளில் கலாச்சார வீழ்ச்சியும், வறுமையும் இருப்பதாகக் கூறுகின்றார்கள்.

தமிழ்க் கல்வி நிலை

பர்மாவில் தமிழ் மொழியின் வளர்ச்சி, தமிழ்க் கல்வியின் வளர்ச்சி, நலிந்த தமிழர்களின் மனப்பான்மையை மட்டும் சார்ந்திருக்க வில்லை. ஆளும் வகுப்பினர்களின் மனப்பான்மையையும் சார்ந்திருந்தது. அதாவது பர்மியர்களுக்குத் தமிழர்களின் மேல் இருந்த வெறுப்புணர்ச்சி தமிழ் மொழியின் வளர்ச்சியைப் பாதித்தது. தமிழர்களின் உயர்வுப்படி பொருளாதார நிலைதனைப் பார்த்து தாழ்ப்படியில் இருந்த பர்மியர்களுக்குப் பொறாமையும் வெறுப்புணர்ச்சியும் ஏற்பட்டது. ஆகையால், பர்மாவிற்குச் சுதந்திரம் வந்த பிறகு பர்மியர்களை உயர்த்த வேண்டும். தமிழர்களின் ஆதிக்கத்தை, எல்லா அயல்நாட்டினரின் ஆதிக்கத்தை ஒழிக்க வேண்டும் எனும் கொள்கை உருவாகியது. இதன் விளைவால் பர்மியர்கள் தமிழர்களையும் வளரவிடவில்லை; தமிழ் மொழியையும் வளரவிடவில்லை. எல்லா அயல்நாட்டு வாடையையும் முற்றிலும் ஒழிக்க வேண்டும் என்பதே அவர்கள் குறிக்கோளாக இருந்தது.

பண்டைய பர்மாவில் சமயம் சார்ந்த கல்வி முறை இருந்தது. கிராமிய துறவி மடங்களில் 6 வயதிலிருந்து 12 வயது வரை உள்ள பர்மிய குழந்தைகளுக்குக் கல்வி அளிக்கப்பட்டது. பாலி மொழி மூலம் கல்வி அளிக்கப்பட்டது. ஆனால் பர்மாவில் ஆங்கிலேய ஆட்சி தொடங்கியவுடன் சமயச் சார்பற்ற பொது நிலை வாழ்விற்குரிய கல்வி முறை (Secular Education) அறிமுகப்படுத்தப்பட்டது. ஆகையால் பர்மாவில் 19ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேய ஆட்சி தொடங்கியவுடன் சமயச் சார்பற்ற பொது நிலை வாழ்விற்குரிய கல்வி முறையும், அரசுப் பள்ளிகளும், கிறித்துவ சமயப் பரப்பாளர்கள் நடத்திய தனியார் பள்ளிகளும், பர்மிய தலைமை ஆசிரியர்கள் உள்ள தனியார் பள்ளிகளும் அமைக்கப்பட்டன. பெரும்பான்மையான பள்ளிகளில் தாய் மொழியே பயன்படுத்தப்பட்டது. ஆனால், உயர்படி கல்வி ஆங்கில மொழி மூலம் கற்பிக்கப்பட்டது. இரங்கூனில் மட்டும் பல்கலைக் கழகம் மூலம் கல்வி பயில 1920ஆம் ஆண்டிலிருந்து வாய்ப்பு இருந்தது. மண்டலேவில் ஒரு வேளாண்மைத் துறைக் கல்லூரி இருந்தது.

ஆங்கிலேய ஆட்சியின் முதல் காலக் கட்டத்தின் போது இந்தியர்களும், பர்மியர்களும் ஒருவரோடு ஒருவர் கலந்து, இணைந்து வாழாமல் தனித்தனி இனமாக வாழ்ந்து வந்தனர். இவ்விரு இனப்பிரிவினர்களிடையே உள்ள வேறுபாடுகளுக்கு நத்தான்

இக்காலக் கட்டத்தில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. உதாரணமாக, கல்வித்துறையில் ஒவ்வொரு இனப்பிரிவினர்களும் தங்கள் இனப் பிரிவினர்களுக்குத் தனி இனைப்பள்ளிகள் அமைக்க வாய்ப்பளிக்கப்பட்டது. அரசு உதவியும், மேற்பார்வையாளர் தொகுதியும் (Inspectorate) ஒவ்வொரு இனப்பிரிவினருக்கும் தனித்தனியாக அளிக்கப்பட்டது. ஆகையால், பல்வேறு இனப்பிரிவினர்கள் பல்வேறு பள்ளிகளைத் துவக்கி நடத்த அனுமதி அளிக்கப்பட்டது. தமிழர்களும் தங்கள் இனப்பிரிவினர்களுக்குத் தனிப்பள்ளிகள் நடத்தினர். 1898-99 ஆண்டளவில் தமிழர்களுக்கும், தெலுங்கர்களுக்கும் 45 பள்ளிகள் இருந்தன. இதைவிட மிகுதியான பள்ளிகள் முசுலீம்களுக்கும், மற்ற இந்திய இனப்பிரிவினர்களுக்கும் இருந்தன. வங்காளிகளும், இந்திக்காரர்களும், தமிழர்களும், தெலுங்கர்களும்,உருது பேசும் முசுலீம்களும் தனித்தனிப் பள்ளிகளை நடத்தினர். ஒருவர்கூட பள்ளிகளில் பர்மிய மொழியைக் கற்பிக்க வாய்ப்பளிக்கவில்லை. 1920ஆம் ஆண்டு வரை இந்திய மாணவர்களுக்குப் பர்மிய மொழி ஒரு கட்டாயப் பாடமாகக் கற்பிக்கப்படவில்லை. தமிழ்ப் பள்ளிகளிலும் பர்மிய மொழி கற்பிக்கப் படவில்லை. பர்மிய மொழியைக் கற்றுக் கொள்ளும் இந்திய மாணவர்கள் உட்பட ஆங்கிலேயப் பர்மியர் பள்ளிகளிலும், பர்மியப் பள்ளிகளிலும் சேர வாய்ப்பிருந்தது. ஆனால் பொதுவாக, இந்திய மாணவர்கள், தமிழ் மாணவர்கள் உட்பட, எல்லோரும் தங்களுடைய இனப்பள்ளியிலே கல்வி பயில விரும்பினார்கள். இக்காரணத்தால் தமிழ்ப் பள்ளிகள் மூலம் பர்மியத் தமிழர்களிடையே தமிழ்க் கல்வி வளர்ச்சியடைய வாய்ப்பு உருவாகியது.

தமிழும், தமிழர்களும் பத்தொன்பதாம், இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கக் காலத்திலே வளர்ச்சியடைய வாய்ப்பு ஏற்பட்ட போதிலும் தமிழர்கள் பர்மியர்களோடு இணைந்து வாழும் கல்விச் சூழ்நிலை, மனப்பான்மை உருவாகவில்லை. இந்துச் சட்டம் முசுலீம் சட்டம், பர்மியர் புத்த சமயச் சட்டம் என்று தனித்தனிச் சட்டம் நடைமுறையில் இருந்தன. 1882ஆம் ஆண்டளவிலே இரங்கூன் நகர மாநகராண்மைக் கழகத்திலே இந்தியர்களுக்குத் தனிப்பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டது. ஆகையால் பர்மியர்களையும் தமிழர்களையும் இணைக்கும் பாலமாக இருந்த மொழி ஆங்கில மொழியாகும். பள்ளி உயர்படி நிலையில் ஆங்கில மொழி கட்டாயப் பாடமாக இந்தியர்களுக்குக் கற்பிக்கப்பட்டதால் அவர்கள் இம்மொழி மூலம் பர்மியர்களுடன் தொடர்பு வைத்துக் கொள்ள முடிந்தது. ஆனால், பெரும்பான்மையான தமிழ்த் தொழிலாளர்கள் படிக்க முன்வரவில்லை. இவர்களால் பர்மியர்களுடன் ஆங்கிலமொழி மூலம் தொடர்பு வைத்துக்கொள்ள இயலவில்லை. ஆகையால் பர்மாவிற்குச் சென்று பர்மிய மொழியை நன்றாகக் கற்றுக் கொள்ளாமல் இருந்ததால் தமிழர்கள் தமிழ் மொழியை மட்டும் பேணி வரும் தனி இனமாக வாழ்ந்து வந்தனர்.

பர்மாவிற்குச் சுதந்திரம் கிடைத்தபிறகு பல தனியார் பள்ளிகள், தமிழ்ப் பள்ளிகள் உட்பட அரசு அதிகாரத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன. எல்லாப் பாடங்களும் பர்மிய மொழி மூலம்தான் கற்பிக்கப்பட்டன. இரண்டாவது கட்டாய மொழியாக ஆங்கிலம் கற்பிக்கப்பட்டது. தமிழ்மொழியைப் பர்மிய அரசு கற்றுத்தரவில்லை. 1955ஆம் ஆண்டிலிருந்து பல்கலைக் கழக நுழைவுக்குத் தேவையான மெட்ரிக்குலேஷன் தேர்வு பர்மிய மொழியில் மட்டும்தான் நடத்தப்பட்டது. பல்கலைக் கழகக் கல்வியும் பர்மிய மொழியில் மட்டும்தான் அளிக்கப்பட்டது. ஆகையால் பர்மிய மொழி மயமாக்குப்

இச்சூழ்நிலையில் தமிழ்மொழி வளர்ச்சியடையும் சூழ்நிலை உருவாகவில்லை. தமிழர்களின் பொருளாதார வளர்ச்சியைப் பார்த்துப் பொறாமையடைந்த பர்மியர்கள் தமிழர்களின் தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு வாய்ப்பளிக்க முன்வரவில்லை.

தமிழ்மொழிக் கல்வி வளர்ச்சியடையாத போதிலும் பர்மாவில் கல்வித்துறை வளர்ச்சியடைந்தது. 1960ம் ஆண்டளவில் 50 விழுக்காடு குழந்தைகள் தொடக்கப் பள்ளிகளில் சென்று பயின்றனர்; 3 விழுக்காடு மாணவர்கள் உயர்படி நிலைப் பள்ளிகளில் கல்வி கற்றனர். 1958ஆம் ஆண்டில் மாண்டலெ பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டது. 1950ஆம் ஆண்டில் 3000 மாணவர்கள் பல்கலைக் கழகத்தில் கல்வி பயின்றனர். இதுவே 12,000 மாணவர்களாக 1960இல் உயர்ந்தது.

1962 மார்ச்சு 2ஆம் நாள் ஜெனரல் நீவினின் ஆட்சி, அதாவது படைத்துறை ஆட்சித் தொடங்கியது. இவருடைய ஆட்சித் தொடங்கிய பிறகு தமிழர்களின் நிலை மேலும் மிகுதியாகப் பாதிக்கப்பட்டு நலிவடையத் தொடங்கியது. ஜெனரல் நீவின் பர்மாவை முழுவதும் பர்மியமயமாக்குவதில் ஈடுபட்டார். பர்மாவில் ஒரு சோஸலிஸ சமுதாய அமைப்பை உருவாக்க வேண்டும் எனும் முயற்சியைத் தொடங்கினார். இதன் விளைவாகப் பல தமிழர்கள் பர்மாவை விட்டு வெளியேற வேண்டியதாக இருந்தது.

1947ஆம் ஆண்டு பர்மிய அரசியலமைப்பு சட்டப்படி எல்லாக் குடிமக்களுக்கும் கல்வி கற்கும்உரிமை உண்டு. பர்மிய மொழிதான் பொதுமொழி; ஆனால் மற்றத் தேசிய சிறுபாண்மையினரின் மொழிகளையும் (Minority Languages) கற்பிக்கலாம். ஒவ்வொரு குடிமகனுக்கும் அடிப்படைக் கல்வி கட்டயாமாகக்கற்பிக்கப்படும். இச்சட்டப்படி தமிழ்மொழி கற்பிக்க வாய்ப்பளிக்கப்படவில்லை. ஏனென்றால் தமிழர்களைத் தேசியத் சிறுபான்மையினராகப் (Minorities) பர்மிய அரசு அங்கீகரிக்கவில்லை. 10,000 இந்தியர்கள் மட்டுமே பர்மியக் குடிமக்களாக மாறினர். மற்றவர்கள் நாடற்றவர்களாக (Stateless) இருந்தனர்.

1964ஆம் ஆண்டு கல்வித்துறையிலும் நீவின் மாற்றங்களை உருவாக்கினார். கலைத்துறைக்கு (Arts) முக்கியம் அளிக்கப்படவில்லை. தொழில்துறை வளர்ச்சியடைய உதவும் அறிவியல் துறைக்குமுதன்மை இடம் அளிக்கப்பட்டது. இரங்கூன், மாண்டலே பல்கலைக் கழகங்களில் தன்னாட்சி முறை (Autonomy) அறிமுகப்படுத்தப்பட்டது. பல்கலைக் கழகங்களின் எண்ணிக்கை 2இலிருந்து 10ஆக உயர்ந்தது. 8கல்லூரிகள் (Affilliated Colleges) தோன்றின. பர்மிய மாணவர்கள் கலகத்தை ஒடுக்கும் நோக்கத்துடன் இத்திட்டம் செயல்பட்டது. இதே நோக்கத்துடன்தான் 1976ஆம் ஆண்டு 22 வாழ்க்கைத் தொழில் சார்ந்த இளையோர் கல்லூரிகள் (Junior Colleges) சின் மாநிலத்தைத் தவிர மற்ற மாநிலங்களில் அமைக்கப்பட்டன.

மேலும், எல்லாப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் ஆங்கிலமொழி மூலம் கற்பிக்கப்படுவது நிறுத்தப்பட்டது. அயல்நாட்டுச் செய்தித்துறை (Foreign Information Organization) தடை செய்யப்பட்டது. அயல்நாட்டினரின் கல்வி, பண்பாடு நடவடிக்கைகளுக்குத் தடையாணையிடப்பட்டது. அயல்நாட்டினர் நடத்திய பள்ளிகள்

எல்லாம், குறிப்பாகச் சமயப்பரப்பாளர்கள் ஆதரவுடன் நடத்தப்பட்டக் கல்லூரிகள் எல்லாம், தேசியமயமாக்கப்பட்டு அரசுப்பள்ளிகளாக மாற்றப்பட்டன. தமிழ் கற்றுத்தரும் 50 தொடக்கநிலைப் பள்ளிகள் 1966ஆம் ஆண்டில் இருந்தன என ஞானசூரியன் என்பவர் கூறுகின்றார். நீவினின் தேசிய மயமாக்கும் கொள்கை இத்தமிழ்ப் பள்ளிகளையும் பாதித்தது.

ஆகையால் பத்தொன்பதாம் நூற்றாண்டிலும், இருபதாம் நூற்றாண்டின் இடைக்காலம் வரையிலும் பர்மாவில் தமிழர்களுக்கும் தமிழ்க் கல்விக்கும் சிறப்பிடம் இருந்தது. ஆனால் பர்மா சுதந்திரமடைந்தவுடன் தமிழ்க்கல்வியின் வீழ்ச்சி தொடங்கியது. தமிழர்கள் சிறுபான்மையினர்கள் (Minorities) என்றுகூட ஏற்றுக் கொள்ளப்படாததால் சிறுபான்மையினருக்கு அளிக்கப்பட்டிருக்கும் மொழி உரிமைகூட தமிழர்களுக்கும் தமிழுக்கும் அளிக்கபடவில்லை. மேலும், பர்மாவில் உள்ள அயல்நாட்டு மொழிகள் நிறுவனத்திலும்கூட தமிழ் மொழியோ, மற்ற இந்தியமொழிகளோகற்பிக்கப்படுவதில்லை. பர்மியர்களை உயர்த்த வேண்டும். பர்மாவைச் சோஸலிஸப் பாதையில் அழைத்துச் செல்ல வேண்டும், அயல்நாட்டுப் பொருளாதார ஆதிகத்தை ஒழிக்க வேண்டும் என்ற பர்மிய நாட்டுப்பற்று மேலோங்கியதால் தமிழ் மொழியின் வளர்ச்சி முற்றிலும் பாதிக்கப்பட்டது. ஒரு வேளை தமிழர்கள் தொடக்கத்திலிருந்தே பர்மிய மொழியையும் தமிழ் மொழியையும் கற்றுக் கொண்டு பர்மியர்களுடன் இணைந்து வாழ முயற்சி செய்திருந்தால் தமிழர்களுக்கும் அதாவது இந்தியர்களுக்கும் சிறுபான்மையினர் தகுதி அளிக்கப்பட்டிருக்கலாம். தமிழ் மொழியும் பர்மாவில் வளர்ச்சியடையும் வாய்ப்பு பெற்றிருக்கும் எனக் கூறலாம். ஆனால் வரலாறு வேறு திசையில் சென்றுவிட்டது.

இன்றும் பர்மாவில் ஏறக்குறைய இரண்டரை இலட்சம் தமிழர்கள் வாழ்கின்றனர். ஆகையால்,அரசு தடையாணை மூலம் தமிழ்க் கல்வியை முற்றிலும் நீக்க முடியவில்லை. பர்மியப் பள்ளிகளில் தமிழ் வகுப்பு இல்லை என்றாலும் சிலத் தமிழ்க் கோயில்களில் மாலை, இரவு வகுப்புகள் நடத்தப்படுகின்றன. பேகானில் பத்துக் கோயில் இருந்தும் ஒரு கோயிலில் தான் தமிழ்ப்பாடம் போதிக்கப்படுகிறது. கமாயூட் மாரியம்மன் கோயில், மினிக்கோன் சுப்பரமணியர் ஆலயம் முதலிய ஆலயங்கள் இன்றும் தமிழ்ப்பணி ஆற்றுகின்றன. கோயில்களும் கழகங்களும் ஞாயிறு தோறும் தமிழைப் படிப்பிக்கின்றன. இக்கோவில் பள்ளிகளில் பர்மாவில் வெளியிடப்படும் பாலர் நூல்கள்பயன்படுத்தப்படுகின்றன. பி.சுப்பிரமணியன், மா. சந்திரன் என்பவர்கள் 'அண்ணா அரிச்சுவடி' எனும் பாலர் பாடநூலை 1981இல் வெளியிட்டனர். 'கலைமகள் அரிச்சுவடி நூலை' பால் பள்ளிக்காக வேறு ஒருவர் வெளியிட்டார். "ஔவையார் ஆத்திச்சூடி" வெளியிட்ட தமிழ்ப் புலவர் என். எம். நாகரத்தினம் பாலர் பாடம் என்ற முதல் வகுப்பு, 2ஆம் வகுப்பு நூல்களை 1980 முதல் வெளியிட்டு வருகிறார். அரசு ஆதரவு இதற்கு உண்டு என்று கருதலாம். கோயில்களின் மாலை, இரவு நேர வகுப்புகளுக்கு இவை பயன்படுகின்றன. சிலகோயில்களில் தமிழ் பயில வாய்ப்பில்லை, பொதுவாகப் பர்மாவில் வாழும் தமிழ்க் குழந்தைகட்குத் தனிப்பட்ட முறையில் தமிழ் கற்பிக்க பல ஆசிரியர்கள் இருக்கிறார்கள். இருந்தாலும் தமிழ் படிப்போர் குறைந்து வருகின்றனர். வடபர்மாவில் இந்நிலை பரிதாபமாக உள்ளதாம். தமிழ் படிப்பிக்க எல்லாக் கோயில்களிலும் கட்டாயமாக்கவும், கட்டொழுங்காக்கவும் பர்மிய இந்துச் சங்கம் முயற்சித்து வருகிறது.

தமிழர்களும் அரசியலும்

பர்மாவில் முதன் முதல் இரங்கூனில் அமைக்கப்பட்ட முதற் தொழிற் சங்கம் 'தென்னிந்திய ஓட்டல் தொழிலாளர் சங்கம்'. இதன் தலைவராகப் பணியேற்றவர்களில் திரு.டி.எஸ். மணியும் ஒருவர். 1946 இல் அகில பர்மா தமிழர் சங்கம் அமைத்தனர். அதில் டிஎஸ். மணியும் ஒருவர். இது 13-3-1952இல் கட்டடம் கட்டியது. 1931இல் பர்மா சுயமரியாதைச் சங்கத்தைப் பர்மிய தமிழர்கள் அமைத்தார்கள். அகில பர்மா தமிழர் சங்கம் தீ. வெள்ளம், புயல் போன்ற இயற்கை பாதிப்புகளிலிருந்தும், சமூகவுயர்வுக்கும் பாடுபட்டது. 1950 இல் பர்மா திராவிட முன்னேற்ற கழகம் அமைக்கப்பட்டது.

மிக முக்கியமான சங்கம் அகில பர்மா இந்தியன் காங்கிரஸ் ஆகும். 1947ஆம் ஆண்டிலிருந்து இச்சங்கம் இந்தியவர்களின் நலனை மேம்படுத்த முயன்று வந்தது. ஆனால் 1962 ஆம் ஆண்டிற்கு பிறகு இதன் முக்கியத்துவம் குறைந்தது. ஏனென்றால் பர்மிய அரசு இந்தியர்களைப்பாகுபடுத்திஒதுக்கும்புதியகொள்கையைஅறிமுகப்படுத்தியது ஆகையால் பிற்காலத்தில் பண்பாடு சம்பந்தமான சமூகம் தொடர்பான விழாக்களை மட்டும் இச்சங்கம் நடத்தியது. இந்திய சுதந்திர நாள், குடியரசு தினம் போன்ற விழாக்களை மட்டும் கொண்டாடியது. இக்காரணத்தால் இச்சங்கத்தின் தலைவர்களால் சிறப்பான தொண்டு ஒன்றும் புரிய முடியவில்லை.

அரசு ஆதரித்த பர்மா சோஸலிஸ அமைப்பு திட்டகட்சியை தவிர மற்ற எல்லா அரசியல் கட்சிகளும் 1964ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் முதல் தடைசெய்யப்பட்டன. 1969, 1983ஆம் ஆண்டுகளில் தி.மு.க கட்சி தடை செய்யப்பட்டது. இதன் அலுவலகம் மூடப்பட்டது. ஆகையால் அரசியலில் தலையிடாமல் பர்மாவில் தமிழர்கள் ஒதுங்கி வாழ்கின்றார்கள். மேலும் அரசுக்கு எதிராகத் தோன்றியிருக்கும் கலகங்களையோ, கிளர்ச்சிகளையோ, தமிழர்கள் ஆதரிப்பதில்லை. பர்மாவில் கூட்டாட்சி அமைக்க வேண்டும் எனும் கூறும் கம்யூனிஸக் கட்சியையும் ஆதரிப்பதில்லை.

செய்திப் பரவல் தொடர்புச் சாதனங்கள்

சங்கங்கள் அரசு விவகாரங்களில் தலையிடாக் கொள்கையைப் பின்பற்றிய போதும் பண்பாடு போன்ற மற்ற விவகாரங்கள் தொடர்பாகத் தமிழர்கள் பர்மாவில் சங்கங்கள் அமைத்திருக்கின்றார்கள். இங்குள்ள முக்கியமான சங்கங்களும் கோயில்களுமே தமிழையும், பண்பாட்டையும் பரப்பி வருகின்றன. அவற்றில் சில திராவிட முன்னேற்றக் கழகம், அண்ணா தி.மு.க., பர்மா இந்துத் தமிழ் மன்றம். அனைத்து பர்மா சுயமரியாதை இயக்கம், தமிழர் இளைஞர் முன்னணி மன்றம்,பர்மா திராவிடர் கலாச்சாரக் கழகம், பர்மா தமிழர் கலாச்சாரக் கழகம் (1977) மக்கள் கவி பாரதியார் முன்னேற்றக் கலை மன்றம், தமிழ் இளைஞர் பொதுநலக்குழு, பர்மா தமிழ் இளைஞர் சங்கம் (1954) பர்மா, ஈழ மாணவர் பொது மன்றம் (1976), அறிஞர் அண்ணா அறிவகம், அறவழி அன்பர்கள் குழு, தமிழர் முன்னேற்றக் கழகம். ஆண்டு தோறும் அறிஞர் அண்ணா விழாவும், பொங்கலைத் தமிழர் திருநாளாகவும் கொண்டாடி வருகிறார்கள். பெரியார் நூற்றாண்டு விழாவும், பாரதியார் நூற்றாண்டு விழாவும் கொண்டாடப்பட்டன. தட்டோனில் வள்ளுவர் கோட்டம் மிகப் பிரம்மாண்டமாக உருவாகி வருகிறது. பர்மாவில் வீரமாமுனிவர் விழா, திருவள்ளுவர்

திருநாள், டாக்டர் அம்பேத்கர் விழா, பாரதி விழா, மேலும் பல விழாக்கள் இச்சங்கங்களால் நடத்தப்படுகின்றன. தமிழக மாதிரியில் விழா நடத்தி வருகின்றனர்.

மேலும், பர்மாவில் இரங்கூனை மையமாகக் கொண்ட பல இசுலாமியக் கழகங்கள் இருக்கின்றன. 1. சோலியா முசுலீம் சங்கம், 2- சோலியா முசுலீம் சன்மார்க்க சேவையகம்- 3-சோலியா முசுலீம் மார்க்க நிதி ஸ்தாபனம்- 4- பர்மா வாழ் வீர சோழன் முசுலீம் ஜமா அத் முதலியவை குறிப்பிடத்தக்கன. சில சங்கங்கள் இவ்வாறு பல நூற்றாண்டாக இயங்கி வருகின்றன. சோழர் காலத்துத் தமிழர்கள் இவ்வாறு பர்மாவிலும், இலங்கையிலும், 'சோலியா முசுலீம்களாக' இயங்கி சற்று மாறுபட்ட இசுலாமியத் தமிழர்களாக, தமிழோடு வாழ்ந்து வருவது வரலாற்றில் ஆதாரம் உண்டு. சிலர் தமிழை மறந்த நிலையில் வேறுபட்டு விட்டனர். பர்மாவில் தமிழ் முசுலீம்கள் மிகப் பிரபலமான வணிகர்களாகப் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டு சிறப்பாக வாழ்கின்றனர்.

செய்தித்தாள்கள், மாத ஏடுகள், தமிழ் நூல்கள்

1876இல் விக்டோரியா பேரரசிக்குத் தமிழில் எழுதி வாழ்த்துப் பாவை பாடியவர் இராமசாமிப் புலவர். மீண்டும் இரண்டாம் பதிப்பாக அதனை நூலாக 1877இல் வெளியிட்டிருக்கிறார். அப்போதே பர்மா, ஆங்கிலம், தமிழ், இந்தி அகராதியை சோசப் என்பவர் எழுதி வெளியிட்டிருக்கிறார். 'சத்திய சோதி' இதழும் 'தமிழ் உள்ளம்' என்ற ஏடும் வந்தன. தமிழ் உள்ளம் 1975-76இல் வெளியிடப்பட்டது. 1976இல் தமிழ்த் தென்றல் ஏடும் கையெழுத்தில் வெளிவந்தது. தமிழ் அச்சகம் சில உண்டு.

29.7.1936இல் 'லோகமான்யா' என்ற புதன்கிழமை தோறும் வெளிவரும் வார ஏட்டைப் பவானி நடேசன் ஆசிரியராக இருந்து வெளியிட்டிருக்கிறார். 1931க்கு முன் 'இஸ்லாம் அலின்' என்ற மாத ஏட்டைத் தமிழறிஞர் பா. தாவுத்சா நடத்தியிருக்கிறார். 'சாந்தி' எனும் நாளேட்டை அமரர் எம்.கே. எம். இபுராகிம் நடத்தினார். இவ்வேடு 1952 வரை வெளிவந்தது. பிறகு இவரே 'தொண்டன்' என்ற நாளேட்டையும் நடத்தினார். இது 40 ஆண்டாக வெளிவந்திருக்கிறது. 1981இல் இவர் காலமானபின் 'தொண்டன் நினைவு மலர் 1982இல்' என அவர் பெயர்ச் சிறப்பில் பாதி தமிழும் பர்மிய மொழியிலும் சிறப்பான மலர் ஒன்று வெளியிட்டுப் பாராட்டியிருக்கிறார்கள்.

பூ.செ. புதியணனை ஆசிரியராகக் கொண்ட இலக்கிய ஏடு-காலாண்டிதழாக 1981இல் வெளியிடப்பட்டு வருகிறது. இலக்கிய ஏடாக ஒரு காலத்தில் 'இரசிக ரஞ்சினி' என்ற ஏடும் பிறவும் வந்திருக்கின்றன. ஆயுர்வேத வைத்தியரான திரு. எம்.என். நாகரத்தினத்தை ஆசிரியராகக் கொண்டு 'அறங்காவலன் ஏடு' 1983 முதல் அகில பர்மா இந்து மத்திய சபையால் வெளியிடப்பட்டு வருகிறது. புத்தர் பெருமானின் 'தம்மபதம்' இவரால் தமிழாக்கப்பட்டு இந்த ஏட்டில் தொடர்ந்து வருகிறது. பாலி மொழியிலிருக்கும் சுலோகங்களின் விரிவுரையும் வெளிவருகிறது.

தமிழறிஞர்களிலே மிகச் சிறப்பாகத் தொண்டாற்றிய பெருமை வே. சாமிநாத சர்மா அவர்களுக்கு உண்டு. தமிழிலே மிகுதியான நூல்களை வெளியிட்ட பெருமையும் இவருக்கு உண்டு. 'தாயும் தாய்மையும்' என்ற அருமையான புதிய நூலை 1981இல் திரு-

பூ.செ. புதியணன் வெளியிட்டார். இந்நூல் பிரபலமான பர்மிய ஆசிரியர் சிட்சன்வின் எழுதிய நூலின் தமிழாக்கம். மற்ற எழுத்தாளர்களில் சிலர் கலைதாசன், திலகம், வசந்தி, பாணபட்டன், வாணவளவன், பாரதிநேசன், ரத்னா, கிருஷ்ணகுரு, தமிழ்மணி, பி.எஸ்.பி. அப்துல் வகாப், கே.ஓ.எம் முகம்மது இசுமாயில், கார்முகில் கவிராயன், கவி.கே.ஏ. மஜீது, உறிஜி எஸ்.ஏ. ரகீம், திரு. எஸ்.எம்.யூனுஸ், தமிழ்ப் பித்தன், சிறுத்தொண்டன்.

கம்பை நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள் கல்வி வாரியம் 1964இல் வசன நூலாகத் திருக்குறளைப் பர்மிய மொழியில், பர்மிய அறிஞர் ஊமியோதாண்ட் என்பவரை எழுதச் செய்து வெளியிட்டது. இவர் ஆங்கிலத்திலிருந்து பர்மிய நூலாக்கினார். 'நூலில் கம்பை தனவைசியர் கல்விக் கழக வெளியீடு' எனக் குறிக்கப்பட்டது. தவிர சில ஆண்டுகளுக்கு முன் புத்தத் துறவியாகிவிட்ட ஒரு தமிழறிஞர் திருக்குறளைப் பர்மிய மொழியில் வெளியிட்டிருக்கிறார். தட்டான் திருக்குறள் இயக்கம் திருக்குறளைப் பரப்புகிறது. டாக்டர் மு.வ.வின் திருக்குறள் தெளிவுரையை தொகுப்பாகத் தொடர்ந்து வெளியிட்டவர் வி.சுப்பிரமணியன். இவர் 'சத்திய சோதி' தீபாவளி சிறப்பிதழை இலக்கிய மலராக 1979 முதல் வெளியிட்டு வருகிறார். ஆனால் ஒரே நூலாக டாக்டர் மு.வ. தெளிவுரையை 1980-இல் பூ.செ. புதியணன் வெளியிட்டார்.

அகில பர்மா இந்து மத்திய சபை, தமிழில் 'சமஸ்கிருத மாலை' என்ற நூலை 1974இல் வெளியிட்டது. ஆகையால் பர்மாவில் இன்று தமிழ் மொழி முற்றிலும் மறையவில்லை. தமிழ் உணர்வு இருக்கின்றது. பர்மிய அரசின் அடக்குமுறைக் கொள்கையே தமிழ் உணர்வை அடக்கி மறைத்து வைத்திருக்கின்றது. இந்த அடக்கு முறை சூழ்நிலையின் விளைவால் இன்று பர்மாவில் தமிழ் ஒலிபரப்பு இல்லை. தமிழ்ப்படம் காண்பிக்கப்படுவதில்லை. தமிழ் ஏடுகளும் ஒன்று அல்லது இரண்டுதான். *1964க்குப்பின் சென்னையில் அமைக்கப்பட்ட பர்மா அகதிகள் முகாமும், நீண்ட பசாரும் இன்றைய பர்மாவின் அரசியல் சூழ்நிலையில் உருவாகிய தமிழர் நிலையையும், தமிழ்க் கல்வி நிலையையும், தமிழ் மொழி நிலையையும் தெளிவாகப் படம்பிடித்துக் காண்பிக்கின்றன. பர்மாத் தமிழர் பர்மாவைத் தங்கள் தாயகமாக ஏற்றுக் கொண்டுவிட வேண்டும். அப்போதுதான் அவர்களின் தற்கால சோக வரலாறுக்கு ஒரு சரியான விடை கிடைக்கும் என பலர் நம்புகின்றனர்.

தாய்லாந்து

மலேசியா, சிங்கப்பூர் முதலிய நாடுகளைத் தெரிந்தளவு தமிழ்ப்பொது மக்களுக்கு 1939ஆம் ஆண்டு வரை சியாம் என்றழைக்கப்பட்ட தாய்லாந்தைப் பற்றி தெரியாது என்று கூறலாம். மேலும் இன்று நிலையாக, தாய்லாந்திலே குடியேறி வாழும் தமிழர்களின் எண்ணிக்கை மிகக் குறைவு. ஆகையால், தமிழ்நாட்டுப் பண்பாட்டின் தாக்கம் ஓரளவு சமீப காலம் வரையில் தாய்லாந்தில் இருந்தது, இன்று ஓரளவு தொடர்ந்து இருக்கிறது என்பதைக் கேட்க, பல தமிழர்களுக்கு ஓரளவு ஆச்சரியமாக இருக்கும். 5,14,000 சதுர கிலோமீட்டர் அளவு உள்ள தாய்லாந்தின் வடக்கே பர்மாவும், இந்துமாப்பெருங்கடலும், கிழக்கே தாய்லாந்து வளைகுடாவும், கம்பூசியாவும் (கம்போடியா), தெற்கிலும், வடக்கிலும் லாவோஸும் இருக்கின்றன. மேலும் கிரா பூசந்தி வழியாக மலேசியா தீபகற்பத்தின் எல்லை வரையிலும் தெற்கு நோக்கிச் செல்லும் தாய்லாந்து மலேசியாவின் எல்லை அருகே இருக்கின்றது. பர்மாவுடன் சேர்ந்து பங்கிடப் பெற்றிருக்கும் பூசந்தி தாய்லாந்திற்குச் சிறியதான இந்து மாப்பெருங்கடல் கரையோர எல்லையை அளித்திருக்கின்றது; மேலும், நீளமான பசிப்பிக் பெருங்கடல் கரையோர எல்லை தாய்லாந்து வளைகுடாவில் இருக்கின்றது. நிலவுலக வெப்பமண்டலப் பகுதி சார்ந்ததாகவும், ஈரக் கசிவானதாகவும் உள்ள இந்நாட்டின் தலைநகரம் பாங்காக் நகரமாகும்.

தாய்லாந்து-தமிழ்நாடு உறவு வரலாறு

பொதுவாக, பண்டையக் காலத்திலும், இடைக்காலத்திலும் வங்காளம், பர்மா நிலவழியாகவும் அல்லது வங்காள விரிகுடா கடல் மார்க்கம் வழியாகவும் தமிழர்கள் தாய்லாந்திற்குச் செல்லலாம். வடகிழக்கு இந்தியாவின் மலைப்பாங்கான பிரதேசங்களில் இருக்கும் சில கணவாய்கள் மூலமாக பர்மாவிற்குள் நுழைய முடியும் என்ற போதிலும், நிலவழி கடினமான கரடு முரடான பாதையாக இருந்ததால், அவ்வழிக்கு அதிகமான பொது மக்கள் ஆதரவு கிடைக்கவில்லை. கப்பல் வழி நிலை தெரிமுறையில் பண்டையக் காலத் தமிழர்கள் முன்னேற்றம் அடைந்தவர்களாக இருந்ததால், பொதுவாக பொது மக்கள் தாய்லாந்து செல்வதற்குப் பயன்படுத்திய பாதை கடல் வழியே ஆகும்.

தமிழ்நாடு-தாய்லாந்து பண்டைய கால உறவினைப் பற்றி பட்டினப்பாலை, கலிங்கத்துப் பரணி முதலிய நூல்களில் சில குறிப்புகள் உள்ளன. நமக்குக் கிடைக்கும் சான்றுகள் கிராபூசந்தி அருகே இருக்கும் பின்வரும் பகுதிகளைப் பற்றியதாக இருக்கிறது. தகுவாப்பா (தக்கோலம்), மாயிருடிங்கம், பிங்பங்கம், லிங்கியா, வளைப்பத்தார் மாதமர்லிங்கம். சி.ஓடிஸ் (C. Coed:s. பின்வருமாறு கூறுகின்றார். செம்மர்கள் தாய்லாந்தில்

நுழைந்து ஆக்கிரமிப்பதற்கு முன் தாய்லாந்தில் இருந்த பண்டைய கால இனத்தினர் மான்ஸ் என்பார்கள் ஆவர். தென் இந்தியாவிலுள்ள தெலிங்கான பகுதியிலிருந்து இவர்கள் வந்ததாகக் கருதியதால் இவர்களைத் தலைங்ஸ் *(Talaings)* என்று பர்மியர்கள் அழைத்தார்கள் எனக் குறிப்பிடுகின்றார். இம்மாதிரியான பண்டைய கால கலாச்சார, வாணிப உறவு தொடர்ந்து பல்லவர்கள் காலத்திலும் நீடித்தது. மேலும் தாய்லாந்தின் தெற்குப் பகுதிகளைப் பல்லவர்கள் கைப்பற்றினார்கள் என நம்பப்படுகின்றது. தாய்லாந்தில் தகுவா-பா எனும்இடத்தில் ஓர் பல்லவக் காலத் தமிழ் கல்வெட்டு கிடைத்திருப்பதால் இச்சமயத்தில் தமிழ் வாணிபக் குடியேற்றங்கள் தாய்லாந்தில் இருந்திருப்பதைப் பற்றிச் சான்றுகள் கிடைத்திருக்கின்றன. பேராசிரியர் எம்.ஈ.மாணிக்கவாசகம் பின் வருமாறு கூறுகின்றார்: “இக்கல்வெட்டில் சேனாமுகம் என்றச் சொல் இருப்பதால் படைப் பிரிவுகள் உடைய வாணிபக் கூட்டுறவுத் சங்கங்கள் இருந்தன என்று கூறலாம்; மேலும் பல்லவர் காலத்தில் தாய்லாந்து தீபகற்பத்தில் குடியேறியவர்களின் இராணுவ நடவடிக்கைகளுக்கு இப்படைகள் உதவியிருக்கலாம் எனவும் கூறலாம்.” *(Dravidian Influence in Thai culture : p 213)*,மேலும் இவர் கூறுகிறார்: “தென் கிழக்கு ஆசியாவிலுள்ள தகுவாப்பாவை *(Taku-vapa)* மையமாக வைத்துக் கொண்டு இவ்வாணிபக் குடியேற்றங்கள் வாணிபம் செய்திருக்கலாம்., என்று இந்தக் கல்வெட்டிலிருந்து ஊகிக்கலாம். (p 6) துணி, முத்து சம்பந்தமான வாணிபம் பண்டைய காலத்திலிருந்தே இப்பகுதிக்கும் தென் இந்தியாவுக்கும் இருந்தது. பேராசிரியர் மாணிக்க வாசகம் இவ்வாறு கூறும் போதும் பல்லவர்கள் தென் தாய்லாந்தைத் தாக்கினார்கள் எனக் கூறுவதற்குத் திருப்தி அளிக்கும் அளவு ஆதாரம் கிடைக்கவில்லை என்று தான் கூறவேண்டும்.

பழைய தகுவா-பா நகரில் வாட் நா மியாங்கு *(Wat Na Miang)* கோயில் உட்புறத்தில் கல்லின் மீது, தமிழ் மொழியில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு கிடைத்தது தொடர்பாக ஹீல்ஷி என்ற கல்வெட்டியல் ஆராய்ச்சியாளர், அக்கல்வெட்டு பழைய தமிழ் எழுத்துக்களில் பொறிக்கப்பட்டு இருப்பதாகக் கருதுகிறார். அக்கல்வெட்டு விசயநந்தி விக்கிரவர்மனின் திருவல்லம் கல்வெட்டோடு ஒப்புமையுடையதாகக் காணப்படுகின்றது என்று அவர் கூறுகிறார். விசயநந்திவர்மன், பல்லவப் பேரரசர்களுள் இறுதியாகச் சிறப்புற்று விளங்கிய மூன்றாம் நந்திவர்மன் என்பதில் சிறிதும் ஐயமில்லை *(Journal of Oriental Reserach vol. 6, p. 304)* அவன் கி.பி. 846 முதல் 869 வரை ஆண்டான் என்பர். அக்கல்வெட்டின் வாசகம்:

“..........(5)வர்மன்கு [ணா]...... மாந்தன்
நாங்கூருள (யா)ன் தொட்டகுளம் பேர்ச்ரி
அவணிநாரணம். மணிக்கிராமத்தார்க் (கும்)
சேனாமுகத்தார்க்கும் பதார்க் கம் அடைக்கலம்”

(Hultzsch,, Journal of Royal Asiatic Society 1913 pp 337, 1914

1914-39 ff, T.A. Gopinatha Rao Epigraphia Indica, vol. 18, pp 71-74)

இக்கல்வெட்டினால் சில உண்மைகள் தெரிய வருகின்றன. 'அவணி நாரணன்' என்னும் பட்டப்பெயரையுடைய மூன்றாம் நந்திவர்மன் காலத்தில் அக்கல்வெட்டு பொறிக்கப்பட்டதாகும். தமிழகத்து 'மணிக்கிராமம்' என்ற வாணிகக் குழுவினைச் சேர்ந்த வாணிகன் ஒருவன் சயாமில் உள்ள திருமால் கோயிலில் குளம் ஒன்றை வெட்டி, அதற்கு 'அவணிநாரணன்' குளம் என்று பெயரிட்டான் என்பது அறியப்படுகிறது. இதனால் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில், தமிழ்நாட்டு வாணிகக்குழு ஒன்று சயாமில் நிலையாகத் தங்கி இருந்தமையும், அவர்கள் அங்குத் திருமாலுக்குக் கோயில் அமைத்து, குளந்தொட்டு விழா வெடுத்தமையும் புலனாகின்றன. "இதனால் மூன்றாம் (பல்லவ) வர்மனின் அரசியல் ஆதிக்கம் சிறிது காலமேனும் மலேயாதீப கற்பத்தின் மேலைக் கடற்கரையின் பகுதிகள் சிலவற்றியாகினும் சென்று பரவியிருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது என்பது பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியாரின் கருத்தாகும். (டாக்டர். க.த. திருநாவுக்கரசு)

இராசராச சோழனின் மெய்க்கீர்த்தியும், தஞ்சாவூர் பெருவுடையார் ஆலயக் கல்வெட்டுகளும் சோழர்களுக்கும் தாய்லாந்துக்கும் உள்ள தொடர்பை உறுதிப்படுத்துகின்றன. சோழர்கள் கடாரத்தைக் கைப்பற்றிய பின், தாய்லாந்தின் சில பகுதிகள் சோழர்களின் மேலாட்சியின் கீழ் வந்தன என நம்பப்படுகிறது. (ஏனென்றால் தென் தாய்லாந்தும் இணைந்த பகுதியைத் தான் கடாரம் எனக்குறிப்பிடுகிறோம் என்று ஒரு சாரார் கூறுகின்றனர்.) கேதாவை ஆண்டு வந்த பல்லவ அரசன் மாறா விசயோதுங்கனை இராசேந்திர சோழன் தோற்கடித்தார், பிறகு தோல்வியுற்ற அவ்வரசனிடம் மீண்டும் அவன் நாட்டை அவனுக்குக் கொடுத்தார் என ஆர்.என்.வீரப்பன் கூறுகின்றார்.

10ஆம் நூற்றாண்டில் தென் தாய்லாந்தில் கடாரம் என்ற பெயரில் சோழர்களின் மேலாதிக்கம் இருந்தது என புகிட்சுங்கோலா (Bukit Sungala) போன்ற பகுதிகளிலிருந்து கிடைக்கும் சான்றுகளிலிருந்து தெரிகின்றது என மேலும் இவர் கூறுகின்றார். இராசராசனின் மெய்க்கீர்த்தியும் இதனைச் சொல்கிறது. தஞ்சைப் பெரிய கோயில் கல்வெட்டுகளிலும் சான்று உண்டு என இவர் மேலும் தெரிவிக்கின்றார். ஆனால் சோழ தென் தாய்லாந்து படையெடுப்பைப் பற்றியும் நாம் அறுதியிட்டுக்கூற முடியாது. இருந்தாலும் தமிழர்களுக்கும், தாய்லாந்துக்கும் உள்ள பண்பாட்டு உறவை அலசி ஆராய்ந்தால் சோழ படையெடுப்பைப் பற்றி நம்பலாம் எனத் தோன்றுகிறது. நிருபிக்கக் கூடிய ஆதாரங்களிலிருந்து சோழர்களின் தாய்லாந்து படையெடுப்பை நம்பலாம் என பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியார் கூறுகின்றார் (மாணிக்கவாசகம், op,Cit, p. 5)

தாய்லாந்து பண்பாட்டில் தமிழ் நாட்டின் தாக்கம்:

ஏறக்குறைய 94 விழுக்காடு தாய் மக்கள் தெரவேதா அல்லது ஹீனாயன புத்த சமயத்தைப் பின்பற்றுகின்றார்கள். பல்லவர்களின் ஆட்சியின் போது தமிழ் நாட்டில் காஞ்சிபுரம் கீர்த்தி வாய்ந்த புத்த சமயத் தலமாக விளங்கியது. ஆகையால் தாய்லாந்தில் புத்த சமயம் பரவுவதற்குத் தமிழ் நாடும் பங்கேற்றிருக்கலாம் எனக் கூறலாம். பல்லவர்கள் காலத்தில் சீனாவுக்குச் சென்ற தென் இந்திய புத்த சமயப் பரப்பாளர்கள் மூலம்

தாய்லாந்தில் புத்த சமயம் பரவியது என்று சிலர் கூறுகின்றார்கள். ஒரு சிலர் தாய் புத்த சமயத்தைத் 'திராவிட புத்தயம்' (*Dravida Buddhaiyam*) எனக் குறிப்பிடுகின்றார்கள். இதனால் இந்தியாவின் தென்னகக் கலாச்சார மூலமே இது பரவியிருக்க முடியும்.

தாய் பிராமணர்கள்:

தாய் மக்கள், ஹீனாயன புத்த சமயத்தைப் பின்பற்றிய போதும் அவர்களிடையே சில பிராமணீய ஆக்கக் கூறுகளையும், சோதிடத்திலும், ஆன்மவாதத்திலும் (*animism*) நம்பிக்கையையும் காணலாம். பிராமணீயம் (*Brahmanism*) தாய்லாந்தில் எவ்வாறு தோன்றியது என்பதைப் பற்றி பேராசியர் மாணிக்க வாசகம் பின் வருமாறு கூறுகின்றார். "தாய் பிராமணர்களை (*Thai Brahmins*) இன்று தாஇனப்பிரிவினர்களோடு இணைந்தவர்கள் என்றே கூறலாம். வேறு எந்த நாட்டையும் அவர்கள் தங்களுடைய தாயகம் என்று உரிமைக் கோரிக்கை விட முடியாது. ஆனால் அவர்கள் பயன்படுத்தும் இறைவன் புகழ்பாடு பாசுரங்களிலிருந்து, அவர்களுடைய முன்னோர்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன் இந்தியாவின் ஓர் பகுதியிலிருந்து சென்றிருக்க வேண்டும் என நிச்சயமாகத் தெரிகின்றது. ஆனால் இந்தியாவின் எப்பகுதியிலிருந்து இவர்கள் சென்றார்கள் என்பது ஓர் சிக்கலான பிரச்சனையாகும். விசாரணை செய்த போது, தங்கள் முன்னோர்களின் இருப்பிடம் தென் இந்தியாவிலுள்ள இராம நகரம் என்று தற்சமயம் தாய்லாந்து பிராமணர்களின் தலைவராக இருப்பவர் கூறினார். இந்த உண்மையை மெய்பிக்கும்படியான பதிவுக்குறிப்புகள் தங்கிடம் இருந்ததாகவும், ஆனால் தொலைந்து விட்டதாகவும் அவர்கள் கூறினார்கள்." (*op. cit. p117*). சயாமிலுள்ள பின்னாளைய ஓலைச் சுவடிகள் சில அவர்கள் இந்தியாவிலிருந்து எட்டாம் நூற்றாண்டில் பர்மாவுக்கும், தாய்லாந்துக்கும் சென்ற கதையைக் கூறும்.

1822ஆம் ஆண்டு ஏப்ரல் 13ஆம் நாள் பாங்காக்கில் (*Bangkok*) தான் சந்தித்த பிராமணர்களைப் பற்றி ஜான்கிராபோர்டு (*John Crawford*) பின்வருமாறு கூறுகின்றார்: "பாங்காக் இந்துக்களில் முக்கியமானவரும் , தலைவருமாக இருந்தவரின் பெயர், அல்லது பட்டப்பெயர் எனக்கு புரிந்தவரை ——————பிரா-மஹாராஜா-குரோ-புத்ர-குரு (*Pra-Mahararaja-Kro-Putra-Guru*) இச்சொற்களின் முதல் சொல்லின் பொருள் இறைவன், அண்ணல், கோமான் (*Lord*) சியாமில் உள்ள எல்லா புத்தபிக்குகளும் இந்தப்பொதுப் பெயரை வைத்துக் கொள்கிறார்கள். கடைசி இரண்டு சொற்களும் சமிஸ்கிருத மொழிச் சொற்கள்-அவற்றின் பொருள், 'ஆன்மீக வாழ்க்கை வழிகாட்டியின் புதல்வன்.' அவர் குடும்பத்தில் முதன் முதலாக எழுபது ஆண்டிற்கு முன் சியாமிற்கு வந்தவர் அவர் தந்தையார்வார். புத்ர-குரு என்பவர் உயரமான, ஒல்லியான முதியவர். அவர் சியாம் தாயிற்குப் பிறந்த போதிலும் இந்துக்களின் அங்க அமைப்பு அவரிடம் அதிகமாக இருந்தது. தன்னைப் பற்றியும், பாங்காக்கில் இருந்த மற்ற இந்துக்களைப் பற்றியும் அவர் பின் வரும் செய்திகளைக் கூறினார். அவர்களுடைய முன்னோர்கள் எல்லோரும் புனித தீவான இராமேஸ்வரத்திலிருந்து வந்தவர்கள், அவர்கள் தங்கள் குடும்பங்களை விட்டு விட்டு இங்கு வந்தார்கள். இங்கு இருக்கும் பெண்மணிகளை திருமணம் செய்து கொண்டார்கள். அவர்கள் எல்லே ம் இந்து சாதி அமைப்பின் முதல் இரண்டு பிரிவைச் சேர்ந்தவர்கள். . .ர்ச்சகர்கள் அல்ல படைவீரர்கள், சைவ சமயத்தைப் பின்பற்றுபவர்கள். இச் வர்களைப்

பார்ப்பதற்குத். தற்சமயம் எங்களுக்கு ஒரு வாய்ப்பு கிடைத்தது. அவர்கள் நெற்றியில் சைவர்களைப் போல திருநீற்றைப் பூசிக் கொண்டிருந்தார்கள், மேலும் உயர் சாதி அமைப்பினர் தரிக்கும் நூல் கயிற்றைத் (பூணூலை) தரித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் எங்களிடம் கூறினார்கள் அவர்களுடைய முன்னோர்கள் பயன்படுத்திய தாய் மொழியை இழந்து விட்டார்கள், அவர்களிடம் சமிஸ்கிருத மொழி இலக்கிய ஏடுகளும், அவர்களுடைய மூல முதலான மாகாண மொழி ஏடுகளும் இருக்கின்றன. புத்தரைக் கடவுள் என்று புகழ்வதில்லை, நன்மதிப்புடைய திருத்தொண்டர் என்று தான் உணர்வாக மதிக்கின்றோம் ......" *(Journal of an Embassy to the Courts of Siam and Cochin-China pp 149-150; also Ibid p118).* இப்போதுள்ள பிராமணர்கள் காசியிலிருந்து வந்ததாகச் சொல்லிக் கொள்கிறார்கள். இவர்கள் பிற்காலத்தில் வந்தவர்களாகலாம். இவர்கள் வெள்ளை சட்டை உடுத்தியிருந்தனர். தலைமைக் குருவின் சட்டையில் வெள்ளிப்பூ வேலை விளங்கும்.

பேராசிரியர் மாணிக்க வாசகம் பின்வரும் முடிவுக்கு வருகின்றார்: "..... பின்வரும் புனைவுகோள் (hypothesis) உண்மையென ஏற்றுக் கொள்ளப்படுகிறது. தமிழகத்திலிருந்து தொடக்கத்தில் வந்து குடியேறியவர்களின் வழித் தோன்றல்கள் தாய் பிராமணர்கள். இன அடிப்படையில் அவர்கள் தேவாரம், திருவாசகம் தமிழ்ப் பாசுரங்களையும் ஓரளவு சமிஸ்கிருத மந்திரங்களையும் இறை வழிப்பாடு சம்பந்தமாக பயன்படுத்தும் ஓதுவார், ஆதிசைவர் அர்ச்சக வமிசத்தினரைச் சேர்ந்தவர்கள் என்று கூறலாம்" *(Ibid p.121).* தாய் பிராமணர்கள் சைவ சாப்பாட்டாளர்கள் அல்லர். ஆண்டிற்கு பதினைந்து நாட்கள் தான் பாவை விழாவின் *(Paavai festival)* போது அவர்கள் புலால் உண்ணாதவர்களாக இருக்கின்றார்கள். ஆனால் இவர்களுடன் ஒப்பிட்டு பார்த்தால் மாறுபட்ட தன்மையுடையவர்கள் தமிழ் பிராமணர்கள். அவர்கள் சைவ சாப்பாட்டாளர்கள். தாய்லாந்து பிராமண வழித்தோன்றல்கள் மட்டும் தான் தாய் பிராமணர்களாக் ஏற்றுக் கொள்ளப்படுகிறார்கள். தாய் பிராமணர்கள் புனித நூல் கயிறை (பூணூலை) தரித்துக் கொள்கிறார்கள். அவர்களிடம் இருக்கும் தேவாரம்,திருவாசகம், திவ்வியப் பிரபந்தம், சமிஸ்கிருத நூல்கள் முதலியவற்றை மனப்பாடமாக ஓதுவதற்கு சிறு வயதிலேயே அவர்களுக்குக் கற்றுத் தரப்படுகிறது.

இப்போது இவர்கள் தூய பிராமணர்கள் என்று சொல்வதற்கில்லை. கடல் கடந்த வந்த போது தங்கள் இனப் பெண்களைக் கொண்டு வாராமையால் தாம் வந்த நாட்டிலேயே தலை முறை தலைமுறையாக மணம் செய்து கொண்டு பெரும்பான்மையும் அந்நாட்டினராகவே இன வகையில் விளங்கினார்கள், எனலாம். இவர்கள் பேசுவது சயாம் (தாய்) மொழியேயாகும். சடங்குகளைச் செய்யும் முறையெல்லாம் சயாம் மொழியிலே உள்ளனவாம். இந்தப் பிராமணக் கையேடுகள் பாங்காக் நூல் நிலையத்தில் 1931இல் இருந்தன என்று அறிஞர் வேல்ஸ் கூறுகின்றார். இந்தச் சடங்குகளில் பௌத்த மதக் கூறுகளும் புகுந்துள்ளன. அவர்கள் இப்போது பௌத்தர்களாகவே விளங்குகிறார்கள். அவர்கள் பிராமணராக ஆவதற்கு உபநயனம் போன்ற சடங்கு ஒன்று நிகழும் அதில் மூன்று இழை பூணூலை அணிந்து கொள்வார்கள். பின்னர் ஒரு சடங்கு நிகழும். அப்போது ஆறிழைப் பூணூல் பூணுவார்கள். இவர்களுடைய நீண்ட குடுமியைக் கொண்டே இவர்களைப் பிரித்தரியலாம். மூன்று கோயில்கள் சுற்றியே இவர்கள் வாழ்கின்றனர்.

தாய்லாந்து ஆளும் வகுப்பினர்களுக்குப் பிராமணியம்(Brahmanism) இன்றியமையாததாக இருந்தது. முழுமையான வரம்பற்ற முடியாட்சியின் போது வரிசை முறை சமூக அமைப்பின் தேவையைச் சரியெனக் காட்டியது. அதே சமயத்தில் புத்தரின் கோட்பாடுகளை மெய்ப்பொருள் சம்பந்தமான விஷயங்களில் கவனம் செலுத்துவதற்காக அரசு பரம்பரையினர்களும், விவசாயிகளும் பயன்படுத்தினர். பிராமண புராண இலக்கியத்தில் மேருமலை பிரபஞ்சத்தின் மையமாகக் கருதப்பட்டது போல தாய் அரசு மாளிகை தாய் அரசின் மையமாகக் கருதப்பட்டது. அரசர்கள், இராணிகள், சபை அலுவலர்களின் தனிப்பெயர்கள் மேரு மலைப்பகுதிகளின் பெயர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டன. பிராமண அண்டத்தின் (Brahman Coesmos) உருச்சாயலே தலைநகரம் என்று கருதப்பட்டது. ஆகையால் 'தேவதூதர்களின் நகரம்' (City of Angels) என்ற நற்குறியுள்ள பெயர் பாங்காக்கிற்கு சூட்டப்பட்டது.

தாய்லாந்து மன்னர்களின் முடிசூட்டு விழாவின்போது பிராமண அர்ச்சகர்கள் தமிழ்ப் பாடல்களான திருவெம்பாவை, திருப்பாவைகளை ஓதுவார்கள். பிராமணர்களும் புத்தத் துறவிகளும் தூயதிரு வாழ்த்துக்களைக் கூறுவார்கள். இந்துக் கடவுள்களின் ஆசியைப் பெறுவதற்காக பிராமண சடங்குகள் செய்யப்படும். பிராமணர்கள் பக்திப் பாடல்களைப் பாடி, சிவன், விஷ்ணு அரசனுடைய உடம்பில் ஊடுருவிப் பாயவேண்டும் என வேண்டி அரசனைத் தூய்மையாக்கி முடிசூட்டுவார்கள்; பிறகு ஓம்கார என்னும் அழைக்கப்படும் பிராமணர்களின் தலைவர் அரசனுக்கு முடிசூட்டு விழாவில் பயன்படுத்தப்பெறும் அரசுரிமை சின்னங்களைக் கொடுப்பார்கள் (மகுடம், வாள், தங்கச்செருப்பு, விசிறி, செங்கோல், சிவனடியார் பயன்படுத்தும் அரைக்கச்சை, விஷ்ணு சக்கரப்படை (Discus)) அடுத்தபடியாக மக்கள் சார்பில் இவற்றைப் பிராமணத்தலைவர் ஒப்புக்கொள்ளுதல், இறுதியில் சிம்மாசனம் இருக்கும்) அரண்மனையிலுள்ள நீண்ட அறையில் சம்பிரதாயமான பேட்டி மன்னரால் அளிக்கப்படும். பட்டாபிஷேகத்திற்குப் போகும்போது பிராமணத்தலைவர் யானைமேல் ஏறிச்செல்வார்.

இச்சடங்குகளில் முக்கியமானது பிரா மஹாராஜகுரு (phra-Maharjaguru) என அழைக்கப்படும் பிராமணத்தலைவர் சிவ, விஷ்ணு கடவுள்கள் மன்னரின் உடலில் ஊடுருவிப்பாய வேண்டும் என்று பக்திப்பாடல்களைப் பாடி இக்கடவுள்களை அழைக்கும் சடங்கே ஆகும். சடங்கின்போது கி.பி. ஏழாம் நூற்றாண்டிலிருந்து 9ஆம் நூற்றாண்டுவரை சேர்ந்த சிவனடியார்கள் பாடிய தேவாரமும், வைணவப் பெரியார்கள் தோற்றுவித்த திவ்யபிரபந்தமும் பயன்படுத்தவார்கள். சிவ, விஷ்ணுவை புகழ்ந்து பாடும் இப்பாசுரங்களை இச்சடங்கின்போது பயன்படுத்துவது சரியே என்று கூறலாம்.

தாய்மொழியில் poet pratu sivaalai (சிவாலயத்தின் நுழைவாயிலைத் திறப்பது) pit pratu krlilaat (கைலாசத்தின் நுழைவாயிலைத் அடைப்பது) loripavai (லோரிபாவை) என்று அழைக்கப்படும் பாடல்கள் முறையே சம்பந்தர் இயற்றிய திருமுறையிலுள்ள முதல் பதினாறு பாடல்கள் சுந்தரர் இயற்றிய திருமுறையிலுள்ள முதல் பத்துப் பாடல்கள், அப்பர் இயற்றிய நாலாவது திருமுறையிலுள்ள முதல் பத்துப் பாடல்கள், மாணிக்கவாசகர் இயற்றிய திருவெம்பாவைப் பாடல்கள், வைணவ ஆண்டாள் இயற்றிய திருப்பாவை என்பன ஆகும். 1875ஆம் ஆண்டு தாய் பிராமணத் கையெழுத்துப்படியில் தென் இந்திய

கிரந்த முறையில் இவை எழுதப்பட்டிருக்கின்றன. பண்டைய காலத்திலிருந்து இப்பாசுரங்கள் தாய்லாந்திலும், கம்போடியாவிலும் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும் எனப் பேராசிரியர் சிங்காரவேலு கூறுகின்றார். தாய் முடிசூட்டுவிழாவில் சிவன். விஷ்ணுவை புகழ்ந்துபாடும் இப்பாசுரங்கள் தாய்லாந்து அரசர்கள் தெய்வத்தன்மை வாய்ந்தவர்கள் தேவாராஜர்கள் (Devaraja) என்னும் கோட்பாட்டை வலியுறுத்துவதற்காகவும் பயன்படுத்தப்படுகின்றன. தாய்நாட்டு மக்கள் சயாமை வென்றபொழுது அவர்கள் பழைய மரபைக் காத்துக் கணணில் உயர்த்துவதற்காகப் பழைய சடங்குகள் இயற்ற பிராமணர்களைக் கொண்டு வந்து குடியேற்றினார்களாம். ஆகையால், தாய்லாந்து அரசர்கள் பொதுமக்கள் வாழ்க்கையை உருவாக்குவதற்கு தாய் பிராமணர்கள் மிகவும் உதவியிருக்கின்றார்கள். இன்று கூட அவர்கள் ஓதும் பாசுரங்களில் பெரும்பான்மையான பாசுரங்கள் தமிழ்ப்பாசுரங்களான தேவாரம், திருவாசகம் ஆகும். 1932ஆம் ஆண்டில் வரம்பற்ற முடியாட்சி ஒழிக்கப்பட்டவுடன் பிராமண, புராண இலக்கியத்தின் முக்கியத்துவம் தாய் மக்கள் வாழ்க்கையில் குறையத் தொடங்கியது. ஆனால் இன்றும் பெரும்பான்மையான தாய்மக்கள் பிராமண அண்டத்தோடு ஒத்திசைவு இருக்க வேண்டும் என விரும்புகின்றார்கள். ஆகையால், கொஞ்சம் கொஞ்சமாக அவர்கள் பிராமணியத்திலிருந்து சோதிடத்திற்குக் கவனம் செலுத்தத் தொடங்கியிருக்கிறார்கள். கல்யாணமோ, திடீர்ப்படை அரசியல் புரட்சியோ, ஈமச்சடங்கோ;- முக்கியமான எந்த நிகழ்ச்சியும் சோதிடரைக் கேட்காமல் நடப்பதில்லை. இம்மாதிரியாக, தாய் மக்கள் சோதிடரிடம் அறிவுரை கேட்பது தமிழ் மக்கள் சோதிடரிடம் அறிவுரை கேட்பதைப் போன்றிருக்கிறது.

சயாமிலும் பல பிராமணர் அரண்மனையைச் சார்ந்திருந்தனர். இப்போது குடியரசு வந்தமையால் இவர்களுக்கு அரசியலில் பங்கொன்றும் இல்லை. ஆனால் சுமார் 50 ஆண்டுகளுக்கு முன் இங்கே சென்ற அறிஞர் எண்பது பிராமணக்குடும்பங்கள் இருந்தன என்று கூறுகின்றார்.

பிராமணர்கள் மந்திரம் எழுதிய ஏடுகளில் கீழ்க்காண்பவை உள்ளனவாம்.

முதற்பகுதி: எட்டுத் திக்குகளின் வழிபாடு; அன்ன வழிபாடு; யட்ச வழிபாடு; சிவாலயக் கடை திறப்பு.

இரண்டாம் பகுதி: பூசை;பஞ்சகௌவ்யம்;வாஸ்து பூசை, கலச பூசை கும்ப பூசை, இராச ஹமேசபூசை, மகாகணபதி பூஜை, அரசனைப் பின்பற்றி நடப்பதற்குத் தீர்த்தத்தைக் கடவுள் தன்மை உடையதாக்கல்.

மூன்றாம் பகுதி: ஹம்ச பூசை; நவக்கிரக பூசை; ஓமகுண்டம்; நீராஞ்சன பூசை; அனுமான் மந்திரம், பிராத்திய பூசை (?).

நான்காம் பகுதி ப்ரஹ்ம அபிஷீத் (?) பூசை முறை (இது தமிழாயிருப்பதைக் காண்க) சிவாலயக் கடை வாயிலை மூடுதல்.

ஐந்தாம் பகுதி கடவுளை அழைத்தல்; யம்பு (?) வழிபாடு; சிவன், உமை, விநாயகர் வழிபாடு, சந்திர நமஸ்காரம்; வேதம்.

ஆறாம் பகுதி யானைத் திருவிழா.

ஏழாம் பகுதி பழத்தை உயர்த்துதல்; மூன்று (பாங்காக்) கோயிலிலும் பூப்பலிஇடுதல்.

பட்டாபிஷேகம் பற்றிமேலும் சில கருத்துக்கள்: பட்டாபிஷேகத்தின் போது பிராமணர் முன்னே போக அரசர் பின்னே செல்வர். எட்டுக் கோணமான அரச கட்டிலில் அரசர் அமர்வார். பாலி மொழியால் அந்தப் பிராமணர் அரசரை வாழ்த்துவர். அரசர் பாலிமொழியில் அவர் கூற்றை ஏற்று, நாட்டையும், மக்களையும், பௌத்த மதத்தையும் காக்க அரசேற்பதாக உறுதி கூறுவார். அங்கிருந்து அரசு சின்னங்களோடு பட்டாபிஷேகத்திற்குச் செல்வார். பத்திரபீட அரசு கட்டிலில் அரசர் அமர்வார். அப்போது ஏழடுக்குக் குடையே மேலிருக்கும். பட்டாபிஷேகமானவுடன் ஒன்பதடுக்குக் குடை அங்கே வைக்கப்பெறும். அரசர் முழு இறைமையைப் பெற்றார் என்பதற்கு அது அடையாளமாகும். சிவனாரை வழிபடும் அரசகுரு அரசர் எதிரே வந்து வணங்கிய பின் சயாம் மொழியில் "கைலாசக் கடைதிறப்பு' என்ற வழங்கும் தமிழ் மந்திரத்தை ஓதுவார். அரசருடைய பட்டங்களை எழுதிய பொன் ஏட்டை அரசர் கையில் தந்து பாலிமொழியில் அரசரை அரசேற்கவேண்டிக்கொள்வார். "அப்படியே ஆக" என்று அரசரும் பாலியில் விடை தருவார். பாலிமொழியில் கூறியதைச் சயாம் மொழியில் மறுபடியும் இருவர் கூறுவர். அரச குரு வெற்றி முடியை, அதனை எடுத்து வந்தவர் கையினின்றும் வாங்கி, அரசர் கையில் தருவார். அரசர் தாமே முடியை அணிந்து கொள்வார். கொண்டு வருபவர் யார் என்று அறிஞர் வேல்ஸ் குறிப்பிடவில்லை.

அரச குரு பின் அரசச் சின்னங்களை ஒவ்வொன்றாகத் தருவார். திருமால் கோயில் பிராமணர் ஒன்பதடுக்குக் குடையைத் தருவார். அவரும் அரசகுரு போலவே பாலியிலும், சயாம் மொழியிலும் பேசுவார். முடிவில் சிவன் கோயில் அரச குரு மண்டியிட்டு வாழ்த்துவார்.

கைலைக் கடைதிறப்புப் பாடுவது சிவனாரை வழிபடுதற்காக அழைப்பதாகும். பட்டாபிடேகத்தன்று அதனைப் பாடுவது அரசரைச் சிவனாக கொள்வதற்குரிய அறிகுறியாகும். அரசர் பட்டங்களில் 'திவ்யதேவாவதாரம்' என்பதும் ஒன்று. இங்கே தமிழ்ப்பாட்டு ஒன்றை மந்திரம் என்று பாராட்டுவதைக் குறிப்பிட வேண்டும். சிவன் கோயில் பிராமணருக்கு முதலிடம் அமைத்ததையும் மறந்து விடுதலாகாது. முற்காலத்தில் சைவமும், வைணமும் நாட்டில் தலைமை பூண்டதையும், அப்போது தமிழுக்கு இருந்த மந்திரச் சிறப்பையும் இவை கொண்டு உய்த்துணரலாம்.

தாய்லாந்தில் திருவெம்பாவை, திருப்பாவை என்ற நூலைத் தெ.பொ.மீ. எழுதியுள்ளார்: தெ.பொ.மீ:- பின் வருமாறு கூறுகின்றார். அந்த நாட்டினர் தேசியத் திருவிழாவாகக் கொண்டாடிய திருப்பாவைத் திருவெம்பாவைத் திருவிழா நடந்த வெட்டவெளியைக் கண்டேன். தண்ணீர்த் திருவிழாவாகக் கொண்டாடுவதற்காக நட்ட இரண்டு மரத்தூண்களும் சிவப்பு வண்ணம் பூசப் பெற்று, இன்னும் நிற்கக் கண்டேன். ஆனால், அந்தத் திருவிழா நின்று போய்ப் பல நாள்கள் ஆயினவாம்; எனினும் அங்குள்ள கோயில்களில் திருமேனிகள் வழிபடப்படுவதையும் கண்டேன்.

அங்கே மூன்று கோயில்கள் இருக்கின்றன. ஒன்று பிள்ளையார் கோயில்; இரண்டாவது சிவன் கோயில்; மூன்றாவது பெருமாள் கோயில். அந்தப் பெருமாளின் பெயர் சுகோதயப் பெருமாளாம். சுகோதயம் என்பது தாய்லாந்தின் பெயர். சுகோதயம் என்றால் 'இன்ப விடியல்' என்று பொருள். இக்கோயில்களில் வழிபாடு நடத்தி வைப்பவர்கள் அரசப்

புரோகிதர்களாகப் பாராட்டப் பெறுகின்றார்கள். ஈசானம், தற்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோஜாதம் என்று வழங்கும் பஞ்ச பிரம்ம மந்திரங்களின் பெயர்களையே தத்தம் பெயர்களாகக் கொண்டுள்ளார்கள். எனவே, ஆகம வழக்கு இங்கே பரவியிருந்தது தெளிவாகின்றது. இவர்கள் ஒரு காலத்தில் இராமநாதபுரத்திலிருந்து வந்தார்கள் என்று சொல்லிக் கொள்ளுகின்ற குறிப்பை நூலில் கண்டுள்ளேன். அதனையும் கேட்டுத் தெரிந்து கொண்டேன். ஆனால், இவர்கள் பெண்களைக் கொண்டு வரவில்லையோ, போதிய அளவில் தொடர்ந்து பெறவில்லையோ தெரியவில்லை, இதன் பயனாக இவர்களுடைய முன்னோர் அந்த நாட்டில் பெண்களை மணந்து கொள்கின்ற பழக்கம் நிலைத்து விட்டது. இவர்கள் முகத்தைக் கண்டாலே, இஃது ஐயமின்றி விளங்கும். இவர்கள் கயிலாயத்திலிருந்து வந்ததாகக் கூறிக் கொள்வதும் உண்டு. தமிழ் நாட்டிலுள்ள திருவாவடுதுறை, தருமபுரம் முதலியன கயிலாயப் பரம்பரை என்றே கூறிக் கொள்வதே அங்கங்குள்ள திருமடங்களின் தலைவர்களிடம் கேட்டு உணரலாம். எனவே, இவர்கள் ஸ்மார்த்த பிராமணர்கள் ஆகாமல், ஆதி சைவர்களின் வழியில் வந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

திருப்பாவை, திருவெம்பாவை திருவிழாவின் போதும், அரச பட்டாபிஷேகம் முதலிய சடங்குகளின் போதும் வழங்கிய மந்திரங்கள் ஓலைச் சுவடியில் எழுதப்பட்டிருக்கின்றன. இந்தச் சுவடியை அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மைக்ரோபிளம் (Micro-film) செய்து வாங்கி வைத்திருக்கிறது. 418 பக்கமுள்ளதில் ஏறக்குறைய 53 பக்க அளவு தமிழ்ப் பாடலாக இருக்கக் காண்கிறோம். சுவடியில் அரைக்கால் பகுதி தமிழ் மந்திரங்களாம். பிற மந்திரங்கள் பலமுறை திருப்பித் திருப்பி எழுதப் பெறுவதைக் காண்பதால் தமிழ் மந்திரங்களே பெரும்பான்மை இடத்தைப் பிடித்துக் கொள்கின்றன எனலாம்.

இங்கே சுவடியில் திருவெம்பாவை வருகிறது. இருந்தாலும் அதன் முதல் இரண்டு பாடல்கள் எழுதிய ஓலை தவறி போய் உள்ளது. 'முத்தன்ன வெண்நகையாய்' என்ற மூன்றாவதுபாடலின் முதல் வரியும் காணவில்லை. பிற பகுதிகள் எல்லாம் உள்ளன. இடையே 'பூஜா முறை' என்ற ஒரு வரி வருகிறது. எனவே, இந்தப் பாடல்கள் எல்லாம் பூஜையில் வரும் மந்திரங்களாகக் கருதப்பட்டன என்பது தெளிவு.

திருவெம்பாவை முடிந்தவுடன் திருப்பாவை தொடங்குகிறது. அதற்கு முன் "விஷ்ணு முறை சடகோப ஸ்ரீநாராயணன்" என்ற வரி காணப்படுகின்றது. திருமாலின் பெயர்களைச் சொல்லிய பின் 'அன்னவயல் புதுவை' என்ற தனியன் வருகிறது. ஆனால் எந்தத் தனியனையும் தொடர்ந்து முழுவதும் எழுதவில்லை. 'இன்னிசையால் பாடி' என்ற தன் பின் 'நாராயணனே நமக்கே பறை தருவான் பாரோர் புகழப் படிந்தேலோர் எம்பாவாய்' என்ற வரிகள் வந்தபின் தனியனில் உள்ள மற்றப் பகுதி வந்து முடிகிறது. அதன் பின்னர் 'மார்கழித் திங்கள்' என்ற திருப்பாவையின் முதற்பாட்டு துவங்குகிறது. இந்த முதற்பாட்டை எழுதும் போதும் "நாயகப் பெண்பிள்ளாய்! நாராயணன் மூர்த்தி' என்று பின்னே வருகிற பாடலின் பகுதியும் 'தேவாதி தேவனைச் சென்று நாம் சேவித்தாய்' எனவரும் மற்றொரு பாடலின் பகுதி இடையிட்டுக் குழப்புகின்றன. முதற் பாவைப் பாட்டுக்குப் பின்னர் 'போற்றி, போற்றி' என முடிகிற சில விளங்காத பகுதிகள் வருகின்றன.

இவற்றின் பின் 'நாராயணனே நமக்கே பறை தருவான், பாரோர் புகழப் படிந்து ஏலோர் எம்பாவாய்' என்ற அடிகள் எழுதப்பட்டு உள்ளன. இப்படியே இனங்கண்டு அறிய முடியாத பகுதிகளின் பின் மறுபடியும் 'நாராயணனே' என்ற பகுதி வருகிறது. பின்னர்த் திருச் சிற்றம்பலம் என்பது பொருத்தமின்றி நுழைகின்றது. பின்னர் வடமொழிச் சொற்கள் இனங்காண முடியாதபடி வந்தபின் 'நாராயணனே' என வரும் இரண்டு அடிகளும் இருமுறை வரக் காண்கிறோம்.

இதிலிருந்து என்ன தெரிகின்றது? திருவெம்பாவை முழுவதும் இந்தச் சுவடி எழுதும் போது அந்நாட்டில் நன்றாகத் தெரிந்திருந்தது. ஆனால் திருப்பாவையோ முதல் பாட்டன்றி பிற பாடல்கள் மறந்து போய் விட்டிருத்தல் வேண்டும். எனவே வைணவப் பாட்டின் செல்வாக்கு ஒரு காலத்துச் சிறந்திருந்ததும் இதனால் விளங்குகின்றது. ஆனால் திருப்பாவையின் செல்வாக்கு ஒரு காலத்தில் சிறந்திருந்ததும் இதனால் விளங்குகின்றது.

திருப்பாவை மட்டுமன்றிபிற வைணவப் பாடல்களிலும்தீழை நாடுகளில் பரவியது. மேலே கூறிய திருப்பாவையின் பின், முன்னரே குறிப்பிட்டபடி சில மந்திரங்கள் வந்தபின் 'பித்ப்ரது சிவாய்யை' என வரும் வரியின் பின் நம்மாழ்வாரின் திருவாய்மொழியின் முதலில் வரும் 'திருவழுதி நாடென்னும்' என்ற தனியனும் 'மனத்தாலும் வாயாலும்' என்ற தனியனும் வருகின்றன. அதன் பின்னர் 'உயர்வற உயர்நலம் உடையவன்' என்ற பதிகம் வருகிறது. பல பகுதிகள் குறைந்தும் பிறழ்ந்தும் வரக் காண்கிறோம். 'திருவாய்மொழி' என இப்பகுதி முடிகிறது. இங்குள்ள குழப்பம், வைணவப் பார்ப்பனர் இல்லாத குறையால் ஆதி சைவர்கள் திருவாய் மொழியைக் குழறி வந்த கதையை விளக்குகிறது.

அடுத்துத் தேவாரப் பகுதிகள் வருகின்றன. மேலே கண்ட அகராதிப்படி பல மந்திரங்கள் வந்தபின் 'மட்டிட்ட புன்னையங்கானல்' என்ற பூம்பாவை பதிகம் வருகின்றது. இங்கும் சிற்சில பகுதிகள் குறைந்தும் பிறழ்ந்தும் வந்தாலும் பதிகத்தின் பெருமை இங்கு இருக்கக் காண்கிறோம். இதன் பின்னே 'தோடுடைய செவியன்' எற பதிகம் தொடங்குகிறது. இங்கேயும் சில பாடல்கள் முன்னும் பிறழ்ந்து வருகின்றன. இந்தப் பதிகத்தின் பின் 'பித்தா பிறைசூடி' என்ற சுந்தரர் பாடிய முதற்பதிகம் வரக் காண்கிறோம். இங்கேயும் பாடல்கள் பிறழ்ந்து உள்ளன. சில பாடல்கள் திரும்பத் திரும்ப வருகின்றன.

இதன்பின் "பித் ப்ர: தூக்ரைலாத்" என்ற வரி வருகிறது. "க்ரைலாத்" என்பதைக் "கைலாஸ்" என க்வாரிட்ச் வேல்ஸ் குறிப்பிட்டுக் "கைலாயம் (அல்லது) கோயிலைத் திறப்பது" என்று பொருளும் எழுதியுள்ளார். இந்த வரியின்பின் திருநாவுக்கரசர் பாடிய 'கூற்றாயின்வாறு' என்ற பதிகம் வருகிறது. சில சொற்கள் விடுபட்டிருந்தாலும் பாக்கள் முறையே பதிகத்தில் உள்ளபடியே வந்துள்ளன. தேவாரப் பதிகங்கள் ஒவ்வொன்றும் திருச்சிற்றம்பலம் என்றே முடிகின்றன.

சில மந்திரங்கள் வந்தபின் 'மத்தினை' என்ற ஏதோ ஒரு தமிழ்ப் பாடல் தொடங்குகின்றது. 'எம்பாவாய் எம்பாவாய்' என இரண்டு சொற்கள் தெரிகின்றன. மற்றைப்படி ஒன்றும் விளங்கவில்லை. மறுபடியும் தேவாரத்தின் முற்ற் பதிகங்கள் மூன்றும் வருகின்றன. ஆனால் இந்த முறை 'கூற்றாயினவாறு' முதலும் 'தோடுடைய செவியன்'

இரண்டாவதும் 'பித்தா பிறை சூடி' மூன்றாவதுமாக வரிசைப்படுத்தியிருக்கக் காண்கிறோம்.

இவ்வளவே இந்த மந்திரச் சுவடியில் வருகின்ற தமிழ்பாடல்கள். இந்த பாடல்கள் தாய்லாந்தில் மொழி பேசுவாராக ஆதி சைவர்கள் ஆன போது தமிழைத் தாய்மொழியின் எழுத்துக்களைக் கொண்டு எழுதுவது எவ்வளவு அருமை என்பது விளங்குகின்றது. டகரமெல்லாம் தகரமாகவே தோன்றுகிறது. ணகரமும், னகரமும், நகரமாகவே வருகின்றன. ழகரம் ரகரமாகவே வருகிறது. அந்த மொழியில் ள,ல என இரண்டு இல்லை. வல்லின றகரம் தனி வந்தால் ரகரமாகவும் இரட்டித்தால் இரட்டித்த தகரமாகவும் வருகின்றன. ஏ ஐகாரமாகவும் ஐகாரம் ஏகாரமாகவும் மாறாடவும் காண்கிறோம். 'அருளாளர்' என்றால் எப்படியோ ஈற்றிலே ஒரு 'ந்' அவர்களுக்குக் கேட்கிறது. ஏகாரம் இகரமாகக் கேட்பதும் உண்டு. இப்படி இன்னும் பலப்பல வேற்றுமைகள் அவற்றைத் தனி ஆராய்ச்சியாக எழுத வேண்டுமேயன்றி இங்கே விளக்கிச் சொல்வது பொருத்தமல்ல.

இந்த மந்திரச் சுவடியின் எழுத்துக்களின் வடிவைக் கொண்டு அந்தச் சுவடி 12ஆம் நூற்றாண்டினதாக இருக்கலாம் என்று கூறலாம். சம்பந்தருக்கும், திருநாவுக்கரசருக்கும், சுந்தரருக்கும், மாணிக்க வாசகருக்கும் பின்னே தான் அந்தப் பாடல்கள் கிழக்கடல் நாட்டுக்குச் சென்றிருக்கக் கூடும். ஒன்பதாம் நூற்றாண்டிற்கு முன்னர் போயிருக்க முடியாது. இந்தபாடல்கள் மட்டுமன்றிச் சிறப்பாக திருப்பாவை திருவாய்மொழி இவற்றின் தனியன்களும் அங்குச் சென்றிருக்கக் காண்கிறோம். இவை இராமானுசர் காலத்தில் தனியன்களாக ஆழ்வார்களின் பாடல்களுக்கு முன் பாடப்பெறும் வழக்கத்தை நிலை நாட்டியிருத்தல் வேண்டும். எனவே 11ஆம் நூற்றாண்டு என்று அந்த மந்திரச் சுவடி கால வரையறை பெறுவது பொருத்தமே எனலாம். சுகோதய மன்னர்கள் (1253 - 1350) ஆட்சிக்காலத்திலிருந்து திருவெம்பாவை திருப்பாவை திருவிழா கொண்டாடப்பட்டது. மக்களும், மன்னரும் இவ்விழாவில் மகிழ்ச்சியுடன் கலந்து கொண்டனர் என்று நாங்நோபோமாஸ் விட்டுச் சென்ற ஏடுகள் கூறுகின்றன.

இப்பொழுது மூலப்பாடமே நமக்குக் கிடைத்துள்ளது. அதனைத் திறந்து அறிந்து கொள்ளும் திறவுகோலும் நமக்குக் கிடைத்துள்ளது. இருந்த எழுத்தையே சில மாற்றங்களோடு பிராம்மண 'தாய்' நெடுங்கணக்காக இந்தச் சுவடி எழுதப் பயன்பட்டுள்ளது. தாய்மொழியின் பழைய எழுத்துக்களையும் அறிவோம். இவை அங்கங்கே சுவடியில் வருகின்றன. எனவே இவற்றின் துணை கொண்டு மூலத்தை இன்று படிக்கமுடியும். தாய்லாந்தில் மட்டுமன்றி காம்போஜம் முதலிய கிழைக்கரை நாடுகளிலும் இந்தத் திருவிழா நடந்தது என அறிகிறோம். பிராமணர்கள் அங்கேயும் இருக்கிறார்களா? ஆனால் அங்கேயும் சுவடிகள் உண்டா? அவற்றை இன்றும் பாடி வருகிறார்களா? இவற்றைப் பற்றிய குறிப்பு ஒன்றும் இதுவரை கிடைக்கவில்லை.

தாய்லாந்தில் இருக்கும் இந்தியப் பண்பாட்டுச் சடங்குகளில் ஊஞ்சல் திருவிழா ஒன்றாகும். தாய்லாந்து நாட்டின் தேசிய திருவிழாவை "லோஜின்ஜா" எனவழங்குகிறார்கள். இப்பெயருக்கு "ஊஞ்சலை இழுப்பது" என்பது பொருளாகும். இத்திருவிழா விற்சென்றே நிலையாக இரண்டு தேக்குத் தூண்கள் உள்ளன. ஒவ்வொன்றும் 80அடி உயரம் இருக்கும். இத்தூண்களைப் பயன்படுத்தி கயிறு கட்டி ஊஞ்சல் பலகையைத் தொங்கவிடுவார்கள்.

இத்திருவிழாவின் முதல்நாள் ஆட்டம், ஊர்வலம் புறப்பட்டு ஊஞ்சலிருக்கும் இடத்திற்கு வந்ததும் நடக்கும். இரண்டாம் நாளன்று ஊஞ்சலாட்டம் நிகழாது. மூன்றாம் நாளன்று காலையிலன்றி மாலையில் முதல் நாளிற் போலவே மூன்று முறை ஊஞ்சலாட்டம் நிகழும். இந்த ஊஞ்சலாட்டம் கோயிலிலும் நடைபெறுகிறது. கடவுள் திருமேனியை வைத்து ஊஞ்சலாட்டுவது நடைபெறுகிறது. இத்திருவிழாவின் போது சிவனார் என ஒருவர் பெருமையுடன் வருவார். முற்காலத்தில் அரசரே அவ்வாறு வந்தார் எனக்கருதற்கு இடமுண்டு என்பர் வேல்ஸ் என்ற அறிஞர். எந்தச் செலவையும் செய்ய அவர்க்கு அப்போது முழு உரிமையுண்டு. "மூன்று நாளைய அரசர்' என்று அவரைக் கூறலாம்.

அந்நாட்டவர்தம் ஆண்டின முதல் திங்களில் இத்திருவிழா நிகழும். வளர்பிறை சத்தமி அல்லது ஏழாம் நாள் காலையில் சிவனார் ஊர்வலமாக வருவார். அவர்கள் வணங்கும் புத்தர் பெருமான் கோயிலிலிருந்து ஊர்வலம் தொடங்கும், ஊஞ்சற் கம்பிகள் நட்டுள்ள இடத்திற்கு வரும் சிவபெருமான் அப்போதுதான் உலகத்தில் வந்துள்ளார் என்று எல்லோரும் கொள்வர். இச்சிவனார் பல்லக்கில் ஏறிச் செல்வார்.

பாங்காக்கில் மூன்று கோயில்கள் உள்ளன மூன்று நீண்ட சதுரக் கட்டடங்கள். அவற்றிற்கு அருகே தான் பிராமணர்கள் வாழ்கின்றனர். இக்கோயில்கள் வெளியிலிருந்து பார்த்தால் சயாம் நாட்டுக் கட்டடங்கள் போல் கூரைப் பகுதி விளங்கும். உட்புறத்திலே நம்நாட்டிற் போல வெள்ளையடித்திருப்பார்கள். இம்மூன்று கோயில்களுள் வடபுறத்திலுள்ள கோயில் திருமாலின் கோயிலாகும். தென்புறத்திலிருப்பது சிவன் கோயில் இவற்றினிடையே விளங்குவது பிள்ளையார் (கணேசர்) கோயிலாம்.

கோயில்களின் வாயிற்புறம் கிழக்கு நோக்கியே இருக்கும். கோயிலுக்குள் மேற்கு எல்லையில் கடவுள் திருமேனி அமர்ந்திருக்கக் காணலாம். கட்டடத்தின் நடுவே ஊஞ்சற் கம்பங்கள் இரண்டு நடப்பெற்றிருக்கும். இரண்டு கம்பங்கட்கிடையே அமைந்த குறுக்குச் சட்டத்திலிருந்து திருவிழாவின் போது தொட்டிலைத் (ஊஞ்சற் பலகையை) தொங்க விடுவார்கள்.

சிவன்கோயிலில் பல திருமேனிகள் உள்ளன. சிவனும் உமையும் வெள்ளைநிற மேற்கட்டியின் கீழ்க் காட்சியளிக்கக் காணலாம். இருபுறத்தும் 'எருதேறும் நாயனார்' (ரிஷபாரூடர்) திருமேனியுண்டு. முன்காலத்தில் 'ஹரிஹரர்' கோலங்கொண்ட திருமேனி இருந்ததாம். அது காட்சிச் சாலைக்குச் சென்று விட்டது. இந்த வடிவம் பத்தாம் நூற்றாண்டையது என்றும், சோழர்கள் அமைத்த திருமேனி வடிவத்தோடு ஒத்ததென்றும் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

தாய்லாந்து மக்களிடையே தீபாவளி, கார்த்திகை விளக்கு என்று நாம் கூறுவது போன்ற வழிபாடும் இருந்திருக்கக் காண்கிறோம். அவர்களுடைய ஆண்டு மார்கழியில் தொடங்கும். அவர்களுக்குப் பன்னிரண்டாவது மாதம் கார்த்திகையாகும். அப்போது சூரியன் விருச்சிகத்தில் இருப்பான். கார்த்திகை நட்சத்திரம் நன்றாக விளங்கும் போது விளக்கைக் கொம்பில் அவர்கள் தூக்கி விடுவது உண்டு. சய தீபத்தம்பத்தை அன்று காலை அரசர் பெருமானார் தீர்த்தம் தெளித்துப் புனிதமாக்குவர். அரசர் அவ்வாறு தீர்த்தத்தைத் தெளிப்பதற்குப் பிராமணர்களே நீரைத் தருவர்.

மற்றொரு திருவிழாச் சடங்கும் சென்ற நூற்றாண்டில் நடந்து கொண்டு வந்தது. முதலில் அது கார்த்திகை மாதத்தில் நடைபெற்றது என்றும், பின்னர் ஊஞ்சல் திருவிழா தை மாதத்தில் கொண்டாடப்பெற்றபோது, இத்திருவிழா மார்கழி மாதத்தில் கொண்டாடப் பெற்றது என்றும் கூறுவர் அறிஞர் வேல்ஸ். நான்கு முழ உயரமுள்ள மூன்று மேடைகளை முன்னே கூறிய மூன்று கோயில்களின் எதிரே அமைப்பார்களாம். ஒவ்வொரு மேடையின் நாற்புறத்தும் மணலும் சாணமும் கொண்டு மலை என்ற பெயரால் நான்கு குவியல்கள் குவிப்பார்கள். ஒவ்வொன்றும் ஒரு முழ உயரம் இருக்கும் நூல் சுற்றிய புதுக்குடங்கள் மூன்றினை "இரத்தின கலசம்" எனப் பெயரிட்டுப் பிராமணர் கொண்டு வருவர். ஒரு துத்த நாகக் குழையில் நான்கு பருத்தித் திரிகளை அமைத்துக் குடந்தில் செருகுவார்கள். குடத்திற்குள் எள், பருப்பு (நவதானியம்) முதலியவற்றைத் தனித்தனியே துணியில் கட்டி வைப்பார்கள். 'தேவ தண்டம்' எனப் பன்னிரண்டு குச்சிகளைக் கொண்டு வருவர். இவை ஒவ்வொன்றும் நான்கு முழ நீளம் இருக்கும். ஒவ்வொன்றின் இரு நுனிகளிலும் துணியைச் சுற்றி வைத்திருப்பர். இரவானதும் அரச குரு அக்குச்சிகளையும், குடத்தையும் தூய்மைப்படுத்திக் குடத்தில் உள்ள திரிகளை ஏற்றுவார். குடங்களை மேடையின் அருகேயுள்ள கம்பங்களின் மேல் வைத்துவிட்டுக் குச்சிகளின் முனைகளை ஏற்றி, ஒன்றன் பின் ஒன்றாக மலைகளை நோக்கி எறிவார். அவை விழும் திசையைக் கொண்டு நன்மை தீமை அறிவதும் உண்டு. அரச குரு இரத்தின கலசத்திற்குப் பொரியைப் பலியாக வழங்குவார். இவ்வாறு மூன்று இரவு இரததின கலசத்தில் உள்ளவை எரிந்து கொண்டிருக்கும் மூன்றாம் நாள் கலசங்களைக் கோயிலுக்குச் கொண்டு சென்று தீர்த்தத்தால் நெருப்பை அவிப்பார்கள்.

முதலில் கூறிய சயப்பிரதீபத்தம்ப விழாவோ வைணவர்கள் செய்வது. பின்னே கூறியதோ கார்த்திகேயன் திருவிழா என வழங்கும். இரண்டும் கார்த்திகைத் திருநாளின் தொடர்புடையவை என்பதை வற்புறுத்த வேண்டுவதில்லை. "மலை" என அமைத்து, அதன் முடியில் குடவிளக்கேற்றுவது அண்ணாமலைத் தீபத்தை நமக்கு நினைப்பூட்டுவதோடு தமிழ்நாட்டு ஊர்களில் சொக்கபானை எரிப்பதையும் நினைப்பூட்டும்.

கார்த்திகை மாதத்திலும் ஐப்பசி மாதத்திலேயும் வாழைத் தண்டை மிதக்கவிட்டு, அதில் கொடி, காகிதக் குடை, புகை விளக்கு, பூ பொரி முதலியன வைத்து ஆற்றில் மிதக்க விடுதலும் உண்டு. இது நம்நாட்டுப் பழையதொரு வழக்கம். ஆற்றினைத் தாயாக வழிபடுவோர் இவ்வாறு வழிபடுவதை இன்றும் நம்நாட்டில் காணலாம், வடநாட்டுக் கங்கையிலும் காணலாம். இதுவன்றி, தெப்பத்திருவிழா நம் நாட்டு கோயில்களில் இன்றும் நிகழ்கின்றது. கடவுளர்க்கன்றி பொது மக்களுக்கும் அத்தகைய நீர் மாடங்கள் வாய்ந்திருந்தன எனப் பரிபாடலில் அறிகின்றோம்.

தாய்லாந்தில் அத்தகைய நீர் மாடங்கள் பற்பல விளக்குகளோடு கார்த்திகைத் திங்களில் மிதக்க விடப்பெறும். அரசர், முதலில் அணி செய்த படகொன்றை மிதக்கவிடுவார். அரண்மனைப் பெண்களுள் ஒவ்வொருவரும் அவ்வாறு செய்வர். பொது மக்களும் தங்களால் இயன்ற அளவு வேலைப்பாடான மிதவைகளை மிதக்க விடுவர். இப்போது இதனைப் புத்தர் திருவடியினை மிதவையில் வைத்து வழிபடுவதென மக்கள் பொருள் கொண்டாலும், கார்த்திகை மாதத்தில் இக்கொண்டாட்டம் நிகழ்வதைக் கருதும்போது இது கார்த்திகை விளக்கேற்றுத் திருவிழாவோடு தொடர்புடையதென்பதில் ஐயமில்லை.

தாய்லாந்தில் வளர்பிறையின் முடிவுநாளான பௌர்ணமியன்று சிவனாரது வழிபாடு முடிகின்றது. அடுத்து, திருமால் வழிபாடு தொடங்குகிறது. இங்குச் சைவப் பிராமணர்கள் ஒரு பெயராலும் (*Brahmana Bidi*) வைணவப் பிராமணர்கள் வேறொரு பெயராலும் (*Brahmana Bhidipasa*) அழைக்கப்பெறக் காண்கிறோம். தமிழ் நாட்டில் திருவெம்பாவை ஓதுவது திருவாதிரையோடு முடிகின்றது. இந்த அளவுக்குத் தாய்லாந்தில் நடப்பது தமிழ்நாட்டு வழக்கோடு ஒத்துள்ளதெனலாம். ஆனால், தமிழ் நாட்டில் திருப்பாவையை மார்கழித் திங்கள் முப்பது நாளும் ஓதி வருகின்ற வழக்கமே உண்டு. தாய்லாந்தில் இதனைத் தேய்பிறை முதலிலிருந்து தொடங்குகிறார்கள்.

இந்த ஆராய்ச்சியின் முடிவு தமிழ்ப் பாவைப்பாட்டுப் பண்பாடு தாய்லாந்து வரை பரவியிருந்ததை நிலைநாட்டுவதேயாம். தமிழ்த் தொடர்பு அங்கும் உண்டு என்பதே இவ்வாராய்ச்சியின் முடிவுக்கு முதலாம் அடிப்படை. தமிழை அங்கே படிப்பவர் சிலராவது இருந்திருக்க வேண்டும் என்பது இரண்டாவது அடிப்படை. இதனைத் தக்கோபா கல்வெட்டு ஓரளவு நிலை நாட்டுகிறது. தமிழகப் பிராமணர்கள் தாய்லாந்து வரை பரவியிருந்தனர் என்பது மூன்றாவது அடிப்படை. இந்தத் தமிழ்ப் பிராமணர் அரசியற் சடங்குகளில் சிறப்பிடம் பெற்றிருந்தனர் என்பது நான்காவது அடிப்படை. தமிழ் மந்திரம் அங்கு ஓதப்பெற்றது ஐந்தாவது அடிப்படை. திருவெம்பாவை, திருப்பாவை என்பதே இதன் பெயர் என்பதில் ஐயம் இல்லை. இதனைத் தாய் மக்கள் 'த்ரீயம் பாவாய்" என்று முதற்குறையாக வழங்கினர். ஐந்தாவது இராம அரசர் எழுதிய நூலிலிருந்து எடுத்து அறிஞர் வேல்ஸ் தரும் பகுதியில் இந்த முதற்குறைப் பெயரே உள்ளது.

எனவே, திருப்பாவை அங்கு வழங்கியதில் ஐயமில்லை. சைவத்தின் ஆக்க நிலையே இந்தத் தொடரில் அதற்கு முதலிடம் தந்துள்ளது. சைவத் திருவிழா அன்றோ முதலில் நிகழ்ந்தது. திருப்பாவையும் அங்கு வழங்கியதில் ஐயமில்லை. வைணவர் கோயில் விரிவானது. பின்னர் நிகழ்ந்ததையொட்டி இத்தொடரில் திருப்பாவை இரண்டாம் இடம்பெறுகிறது.

இன்று இத்திருவிழா பாங்காக்(*BANGKOK*) பிராமணர் கோவிலில் நடைபெறுகிறது. பொதுவாக, திருவெம்பாவை-திருப்பாவைத் திருவிழா டிசம்பர் கடைசி வாரத்திலிருந்து ஜனவரி முதல் வாரம் வரை 15 நாள்கள் ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்படுகின்றது. பதினாறாம் நாள் காலை எட்டுமணி அளவில் இத்திருவிழா முடிகின்றது. முன்னர்க் கூறியபடி இங்குச் சிவன் கோயில் இருக்கின்றது. இச்சிவன் கோயிலில் தான் மற்ற விஷ்ணு, கணேசர் கோயில்களைவிட இத்திருவிழா அதிக நாள் கொண்டாடப்படுகிறது. சிவன் கோயில் எதிரில் வெளி பலிபீடம் கொண்ட சிறு அறையில் பிரம்மா சிலை இருக்கின்றது. இத்திருவிழாவின் போது தான் ஆண்டிற்கு ஒரு முறை பிராமணர்களாகத் தொடக்கம் செய்யும் சடங்கு (*initiated into Brahmanhood*) செயலாற்றப்படுகிறது.

இத்திருவிழா சேவையின் போது முதலில் ஓதப்படும் பாசுரம் தேவாரத்திலிருந்து எடுக்கப்பட்ட பாசுரமான 'ஆதியும் அந்தமும்.....' பாசுரம் ஆகும். மேலும் ஒவ்வொரு சடங்கின் போதும் தேவாரப் பாசுரமான 'பித்தா பிறை சூடி' பாடப்படுகின்றது. இத்திருவிழா சிவன் கோயிலில் (ஈசன் கோயில் என தாய் மக்கள் அழைக்கின்றார்கள்)

தொடங்கப் படுகிறது. இங்கு ஒரு வாரம் கொண்டாடிய பிறகு இத்திருவிழா தொடர்ந்து நாராயணன் கோயிலில் நடைபெறுகிறது. இன்றும் இத்திருவிழாவிற்குத் தாய் மக்களின் ஆதரவு இருக்கின்றது. இந்தத் திருவிழா முடிந்த பிறகு பதினாறாம் நாளன்று புத்த பிக்குகள் சிலர் பிராமணர் கோவிலுக்கு வந்து புத்த சமய இலக்கியப் பாசுரங்கள் சிலவற்றைப் பாடுகின்றார்கள். இதன் நோக்கம் இந்தத் திருவிழாவை ஆசீர்வதிப்பதே ஆகும். இவ்வாறு இவர்கள் பாடிய பிறகு புத்த சமயக் குருமார்களுக்குச் சைவ உணவு அளிக்கப்படுகின்றது. பொதுவாக, இப்புத்த சமயக் குருமார்கள் புலால் உண்ணுபவர்கள். ஆனால், இந்தத் திருவிழாவின் போது பதினாறாம் நாள் மட்டும் அவர்கள் சைவ உணவைச் சாப்பிடுகின்றார்கள். இந்தப் பதினாறு நாள் திருவிழாவின் போது தாய் பிராமணர்களும் சைவ உணவு தான் சாப்பிடுகிறார்கள். *(Manickovasagem op. cit, pp 60 - 74)*

இந்தத் திருவிழா பாங்காக்கில் நடப்பதற்கு முன் தாய்லாந்தில் முன்னைய தலைநகரங்களாகிய ஆயுதத்திலும், சுயோதத்திலும் நடந்தன என்பதனைக் காட்ட அங்கும் ஊஞ்சற்கம்புகள் இன்றும் நின்று நிலவுகின்றன. மற்றைய நகரங்களில் எல்லாம் இந்தத் திருவிழா நடைபெற்றதாம். நகர ஸ்ரீ தர்மராஜா என்ற இடத்தில் ஊஞ்சல் இன்றும் நின்று கொண்டிருக்கிறதாம். எனவே, தமிழ்ப் பண்பாடு பரவிய உண்மை இதனால் நன்கு விளங்குகிறது.

முன்காலத்தில் திருவெம்பாவையில் முதலிரண்டு பாடல்களே பாடப்பெற்றன என தவத்திரு தனிநாயக அடிகளார் கூறுகின்றார். அவ்வாறே திருப்பாவையிலும் முதலிரண்டு பாடல்களையே முன்னெல்லாம் பாடினார்கள் போலும். இத்தகைய நூல்களை விரைவில் ஓதுவோர் முதற்பாடலையும் கடைப்பாடலையும் ஓதுவதை நம்முடைய கோயில்களில் இன்றும் காண்கிறோம். அவ்வாறு தாய்லாந்தில் பாடாமையை இங்குக் குறிப்பிடல் வேண்டும். வரிசையாகத் தொடங்கியதில் முதல் இரண்டே எஞ்சின. ஆகவே முன் காலத்தில் திருவெம்பாவை திருப்பாவை முழுவதையும் அம்மக்கள் ஓதினார்கள் எனலாம்.

ஆகையால், தை மாதத் திருவிழாவாகத் திருப்பாவை திருவெம்பாவை ஓதப்படுகிறது. இவை பழந்தமிழ்ப் பாடல்களாகவே தாய்லாந்து இசை வடிவுடன் ஒலிக்கப்பட்டு வருகின்றன. சித்திரையில் தேவாரம், திருவாசகம் இவ்வாறு ஓதப்படுகின்றன. புத்தர் கோயில்களில் பிராமணர்கள் அந்தத் தமிழ்ப் பாடல்களை விட்டு விடாமல் சைவ-வைணவ நெறியொலிகளை இசைப்பாக்களாகப் பாடி வரும் மரபும் வழக்கமும் இன்று வரை உண்டு. இந்நிலை என்றும் வாழும். மணிமேகலைத் தெய்வக்கோயிலும் மாரியம்மன் ஆலயமாக்கப்பட்டு வணங்கப்பட்டதாக தெரிகிறது.

இந்தப் பண்பாடு பரவியது போரினால் அன்று. இவர்களை நிலை நாட்டியது தமிழ் அரசும் அன்று. தமிழ்ப் பண்பாட்டு அரசினையே இவர்கள் எங்கும் பரப்பினர். இவ்வாறு பரப்பி வந்த போது அவர்கள் தங்களுடைய தமிழ்ப் பாடல்களையும் தமிழ் நாட்டின் பண்பாட்டினையும் அங்கே சென்று வளர்த்தார்கள். ஊஞ்சல் திருவிழா பாவைப்பாட்டில் பண்பாட்டு விளக்கமாக இருப்பது கொண்டு இதனை நாம் நன்கு அறிகிறோம். இவர்கள் பண்பாட்டினை வளர்த்த பொழுது தாங்கள் சென்ற நாட்டின் பண்பாட்டினை அறவே அழிக்க முயலவில்லை.

ஆகையால், பாவை நோன்பும் அங்குச் சென்று நாட்டிற்கு ஏற்ப, மாறுதல் அடைந்து விளங்கியதைக் காண்கிறோம். பெணகளே வாராத ஒரு பாவை நோன்பினைத் தமிழ நாட்டில் எண்ணிப் பார்க்கவே முடியாது. ஆனால் தாய்லாந்தில் அத்தகைய சூழ்நிலை ஏற்பட்டதினால் அதற்கு ஏற்ப, ஊஞ்சல் திருவிழாவில் பெண்கள் வாராத ஒரு நிலையைச் காண்கிறோம். அந்நாட்டு வழக்கங்களையும் தங்களுடைய சடங்குகளில் உட்புகுத்தி, அந்நாட்டு மக்கள், இச்சடங்குகளை வேற்று நாட்டின என்று நினையாதபடி தமிழரகள் தாய்லாந்தில் ஒரு புதிய பண்பாட்டினை உருவாக்கினார்கள். மழைத்திருவிழா எங்கும் நடைபெறுகிறது. ஆனால் அதனைப் பாவைத் திருவிழாவோடு ஒன்றாக்கி விட்டார்கள். அங்குச் சென்ற தமிழர்கள் இங்கு நடந்த ஊஞ்சல் திருவிழாவினையும் அம்மக்கள் தம்முடையன என எண்ணும்படி மாற்றி அமைத்தார்கள், அந்தத் தமிழர்கள். இம்மாற்றங்களே தமிழப் பண்பாட்டின் பெருமையை விளக்குகின்றன எனலாம்.

(மூலம்: தெ.பொ.மீ. தாய்லாந்தில் திருவெம்பாவை, திருப்பாவை)

ஆற்று விழா, கடல்விழா, அறுவடைத் திருநாள் போன்ற ஆடல் பாடல் இசைகளில் இந்திரவிழாவின் பெருமைகளால் பதினெட்டாம் பெருக்கும் கொண்டாடப்பட்டு வருவதிலிருந்து கலாச்சார விழாக்கள் தமிழர் மூலம் பரவி உள்ளன எனத் தெரிகின்றது.

இந்துச் சிலைகளும், தமிழ்க் கோவில்களும்

தாய்லாந்தில் இந்தியாவில் அகப்படுவது போல, கிரேக்க உரோம விளக்கொன்றைக் கண்டெடுத்துள்ளார்கள். தென்னாட்டிலிருந்து இவ்விளக்கு அங்கே போயிருக்கலாம். ஸ்ரீதேவ் என்ற இடத்தில் செங்கல்லால் கட்டிய ஒரு வைணவக் கோயில் உள்ளதைக் கண்டு பிடித்துள்ளார்கள். அங்கேயுள்ள அரண்மனைகளிலும், கோயில்களிலும் இந்து மதத்தைச் சார்ந்த வைணவமும், சைவமும் பரவியிருந்தன என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. பௌத்த மதம் பின்னர்ப் பரவிய போது அது மேலோங்கியது. சைவ, வைணவ விக்கிரகங்கள் பௌத்தர் கோயிலுக்குள் புகுந்தன.

தாய்லாந்தின் கிழக்குப் பகுதியில் திருமாலின் நின்ற கோலச்சிலை ஒன்று கிடைத்துள்ளது. அது பல்லவர் காலத்தில் (கி.பி. 8-9 நூ.ஆ.) காஞ்சியில் செய்யப்பட்ட திருமாலின் திருமேனியை பெரிதும் ஒத்துள்ளமை ஆராய்ச்சியாளரின் கருத்தை கவர்ந்துள்ளது.

அங்குள்ள மற்றோர் இடிபாட்டின் தெற்குப் பகுதியில் புடைப்புச் சிற்பங்கள் சில கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. திருமாலின் கிடந்த கோலச் சிற்பமும், கண்ணன் கோவர்த்தன கிரியைக் குடையாகப் பிடிக்கும் அற்புதக் காட்சிச் சிற்பமும், கவர்ச்சிமிகு புடைப்புச் சிற்பங்களாக விளங்குகின்றன. இவை மாமல்லபுரத்துக் குடைவரைக் கோயில் (மண்டபங்)களில் வீறுடன் விளங்கும் கல்லோவியங்களைப் பெரிதும் ஒத்துள்ளன. மாமல்லபுரத்துச் சிற்பங்கள் கி.பி. ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. இவற்றையொட்டி தாய்லாந்தின் சிற்பங்கள் அமைக்கப்பட்டிருக்கலாம் என்பது சிம்மரின் கருத்தாகும்.

தாய்லாந்தில் சிவன், திருமால், பிரம்மா, உமை, இலக்குமி முதலிய இந்துச் சமயத் தெய்வங்களின் வெண்கலச் சிலைகளும் கிடைத்துள்ளன. அவை நேர்த்தியும், சீர்த்தியும் வாய்ந்தவை. இவை சோழர் காலத்திய (கி.பி. 10 நூ. ஆ.) கலைப்பாணிகள் நிறைந்தனவாக உள்ளன.

மேலும், இன்று கூட, தாய்லாந்து அரும் பொருட்காட்சி மனையில் மிகுதியான சிவன், விஷ்ணு, கணேசர் சிலைகளைக் காணலாம். தாய்லாந்து நாட்டின் நுண்கலைகள் துறையில் (Fine Arts Deptt.) தனிக்குறி, சிறப்பு அடையாளச் சின்னம் (emblem) கணேசர் ஆகும்: சியாங் ரய்யில் ஒரு கணேசர் கோயில் இருக்கின்றது. பழைய தமிழ்க் கோயில்கள் சியாங்ரய், சியாங்மை, காஞ்சினபுரம், அயுத்யா, பாங்காக், பிகியூத் முதலிய பகுதிகளில் இருக்கின்றன. தவத்திரு தனிநாயக அடிகளார் பின்வருமாறு கூறுகின்றார்; "தமிழ்த் தாக்கம் மிகுதியாக இருந்ததைத் தென் ஆசிய சமயம் எடுத்துக் காட்டுகின்றது. சிவ வழிபாடும், லிங்க வழிபாடும் இந்நாடுகளில் எல்லாப் பகுதிகளிலும் பரவியது"

மாரியம்மன் கோயில்

அண்மைக் காலத்துக்குரிய தமிழ்க் கோயில் பாங்காக்கில் சிலாம் சாலையிலுள்ள மாரியம்மன் கோயிலாகும். வைத்தி படையாட்சி என்பார் இக்கோயிலைக் கட்டினார். 1888ஆம் ஆண்டில் இக்கோவில் விரிவாக்கம் செய்யப்பட்டது. இவ்வாறு முன் கோபுர முகப்பில் எழுதப்பட்டுள்ளது. "சிய்யம் பெங்கோக் 188 யேப்பிரல் மாத செல்வ விநாயக மாரியம்மன் பாலதண்டாயுத பாணி கோவில் மண்டபம்...." சிங்கப்பூர் மகா மாரியம்மன் கோபுரம் எழுப்பிய தஞ்சைச் சிற்பி சிதம்பரநாதன் என்பவரே இதனையும் கட்டினார். 1955 ஆம் ஆண்டில் இக்கோயிலின் குடமுழுக்கு நடந்தது. இக்கோயிலில் இருக்கும் முதற் கடவுள் மாரியம்மன் ஆகும். ஆனாலும் சிவன், பிரம்மா, முருகன், கணேசர், சைவ நாயன்மார்கள் விக்கிரகங்களும் வழிபாட்டிற்காக அமைக்கப்பட்டிருக்கின்றன. தமிழ்ப் பண்டாரம் ஒருவர் இக்கோவிலின் அர்ச்சகராகப் பணியாற்றுகிறார். இவர் தமிழிலே வழிபாட்டு மந்திரங்களை ஓதுகின்றார். ஆனால் இக்கோவிலின் நிர்வாகப் பொறுப்பு தமிழ் முன்னோர்கள் வழித்தோன்றலான தாய் மக்களிடம் இருக்கின்றது. மாணிக்க வாசகம் பின்வருமாறு கூறுகின்றார். 'இக்கோவிலில் வரும் பெரும்பான்மையான பக்தர்கள் தாய்மக்களும், சீனர்களும் ஆவார்கள். மிக அதிகமாக வருவோர் தாய்லாந்து மக்களே. இந்தத் தாய், சீன பக்தர்கள் பக்தியுடன் அளிக்கும் பணம் முதலிய காணிக்கைகளிலிருந்துதான் இந்தக் கோயில் ஆதரவு பெற்றுக் காப்பாற்றப்படுகின்றது. இத்தெய்வம் சக்தி வாய்ந்த தெய்வம். வழிபட்டால் வெற்றியும், லாபமும் கிடைப்பது உறுதி என இவர்கள் நம்புகின்றார்கள்."(Op. Cit. P. 113) வேறுபாடின்றி மாரியம்மன் கோயிலிலும் பலவகைச் சிற்பங்களைக் கொண்ட பல புத்த உருவங்களையும் வைத்திருக்கிறார்கள். பன்னிரண்டு மணி நேரம் திறந்தே அம்மன் பார்வை படர்கிறது. ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர்த் திங்களில் நவராத்திரி, சிவராத்திரித் திருவிழா ஒன்பது நாட்கள் இக்கோவிலில் நடைபெறுகின்றன. காவடி தூக்கல், அலகு குத்தல், தேர் தூக்கல் போன்ற பல்வேறு தமிழ் நாட்டு சமய வழிபாட்டு முறைகள் இக்கோவில் திருவிழாவின் போது பின்பற்றப்படுகின்றன. பத்தாவது நாள் ஊர்வலம் வரும் போது தாய் மக்கள் இந்த

மாரியம்மன் முன் விழுந்து வணங்குகின்றார்கள், விபூதியைப் பயபக்தியுடன் வாங்கிக் கொள்கிறார்கள். மலேசியாவிலிருந்தும் சிலர் அங்கு இதற்காகப் போவது உண்டு.

கம்பராமாயணத்தின் செல்வாக்கு:

தாய்லாந்திலும் இராமாயணம் இருக்கின்றது. இதை ' ராமா கியன்' என்று கூறுகின்றார்கள். சிங்காரவேலு என்பார் கூறுகின்றார்: வால்மீகி இராமாயணத்தை விட, கம்ப இராமாயணத்தின் நெருங்கிய தொடர்பையே தாய் இராமாயணத்தில் பார்க்கலாம். 21 நிகழ்வுகளில் தாய், தமிழ் இராமாயணம் இடையே ஒப்புமை இருக்கின்றது; ஆனால் 22 நிகழ்வுக் கூறுகளில் தாய்,வால்மீகி (சமஸ்கிருத) இராமாயணமிடையே வேறுபாடுகள் உள்ளன. புத்தர் கோயில் சுற்று மண்டபங்களில் இராமாயணக் காட்சிக்குரிய ஓவியங்கள் யாவும் கம்பராமாயணத்தை அடிப்படையாக அமைத்தவிதம் சோழர்களுடையது எனச் சிலர் கூறுகின்றனர்.

தாய் மீகாலாகதை, மணிமேகலைக் கதையைத் தழுவியிருப்பதால் தாய் மக்களுக்கு மணிமேகலைக் கதை தெரிந்திருக்க வேண்டும் என்று மாணிக்கவாசம் கூறுகின்றார். (op. cit. p. 132)

சிற்பங்கள்

தாய்லாந்தின் கலை, கட்டடக்கலை மிகவும் சிறப்பு வாய்ந்ததாக உள்ளது. இந்நாட்டின் முக்கிய கலை, பண்பாட்டு மரபுகள் நேரடியாகவோ, அல்லது வழியாகவோ கம்போடியா, இந்தியா அமராவதி, பல்லவர், குப்தர்களின் பிற்காலம் பாலா (Pala) இலங்கையிலிருந்து (அனுராதபுர, பொலன்னறுவா) வந்தன. புத்த சமயத்தினர் பெரும்பான்மையினராக இருந்த போதிலும் இந்துக் கடவுள்களும், வழிமுறைகளும் நல்ல ஆட்சி அமைவதற்கும், அரசு பரம்பரையினருக்கும் தேவை என மதித்து நடந்தார்கள். இதனால் தான் சுகோதயாவிலுள்ள சில கட்டடங்கள் இந்து சமய வழிபாட்டு முறைக்காக அமைக்கப்பட்டிருந்தன.

பண்டைய காலத் தாய்லாந்து இந்து உருவச் சிலைகள் கூட கண்டுபிடிக்கப்பட்டன. ஆனால் பொதுவாக இந்து உருவச் சிலைகள் தாய்லாந்தில் ஒரு வரையறைக்குட்பட்டுதான் இருக்கின்றன. மிகவும் பழைமையான கட்டடம் சுகோதாயின் வடக்கில் உள்ள கெம்மர் கோவிலான சால தேவரக்ஷா. இக்கோவில் இரண்டாம் சூர்யவர்மன் காலத்திலிருந்து இருக்கின்றது. அங்கோர் வாட்டிலுள்ள இந்துக்கடவுள் சிலைகள் போலுள்ள கற்கலில் செய்யப்பட்ட பல இந்து உருவச் சிலைகள் இக்கோவிலில் கண்டு பிடிக்கப்பட்டன. இவற்றில் சில சிலைகள் தென் இந்தியாவிலுள்ள சிலைகள் போல் இருக்கின்றன. பொதுவாக, சிவன், விஷ்ணு, பிரம்மா, கணேசர், ஸ்கந்தா, விஸ்வகர்மா, கருடன், நவக்கிரகம் போன்ற விக்கிரகங்களின் சிலைகளைத் தாய்லாந்தில் காணலாம். குறிப்பாக, தாய்லாந்து திபகற்பத்திலும், நாகோர்ன் சிதமாராட், சையா போன்ற இடங்களிலும் சிவலிங்கங்கள், ஸ்நான துரோணி, சிவன், விஷ்ணு, கணேசர், உமா, லக்ஷ்மீ, போன்ற பல இந்து உருவச்சிலைகளை மிகுதியாகக் காணலாம். குறிப்பாக, சுகைகோலாக், கோரட்புத்தாஸ்,

சையா, உதோங், போன்ற இடங்களில் தென் இந்திய கலைச் செல்வாக்கு ஓங்கியிருந்தது என சுபத்திராதிஸ் டிங்குல் கூறுகின்றார்.

பத்தாம் நூற்றாண்டில் எழுந்த பல கோயில்களில் இன்னமும் சைவ சமயச் சின்னங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. பொன்கோவில் உயர முகப்பில் சிவன் சூலாயுதம் சின்னமாக உள்ளது. அனுமன் கோபுரத்தின் சுவர்களில் இராமாயணச் சிற்ப ஓவியங்களும் உள்ளன. நாட்டின் தேசியச் சின்னமான நாகபாசம் சூட்டிய கருடனார் இருக்கிறார். இருதார சிவனும் உண்டு. நிற்கும் நெடும் புத்தர், பள்ளி கொண்ட பாரத புத்தர், கருஞ்சிலை புத்தர், ஆயிர உருவப் புத்தர்கள் எல்லாம் உண்டு. சிவனாரைத் தூக்கிய கருட வாகனமும் கவர்ச்சிச் சின்னமாகக் காணப்படுகின்றன.

புத்த சமய உருவச் சிலைகளிலும் தென் இந்தியக் கலையின் செல்வாக்கைக் காணலாம். பாய்ஸ் செலியர் (Biosselier) என்பார் பின்வருமாறு கூறுகின்றார்: " தாய்லாந்து தீபகற்பத்திலுள்ள இந்தியக் கலைக் கூடத்தை இரு பிரிவாகப் பிரிக்கலாம். பல்லவ மரபில் வந்த சிற்பக் கலைப் படைப்புகள், சோழர் மரபில் வந்த சிற்பக் கலைப்படைப்புகள்....கிராபூசந்தியில் திராவிடர் பட்டறைகள் இருந்தன" ஆகையால் சில புத்த சமயச் சிற்பக் கலைப் படைப்புகள் பல்லவ, சோழ மரபு முறையையும் தழுவியிருந்தன. இன்று பாங்காக் தேசிய அருங்காட்சியகத்தில் உள்ள தாய்லாந்து மாவட்டத்தைச் சேர்ந்த " பூவுலகத்தையே சாட்சியாக அழைக்கும்" புத்தர் வெண்கலச் சிலை நாகப்பட்டினச் செயற்பாணியை, அதாவது வெண்கல வார்ப்புருக் கலையைக் (Bronze Casting Arts) குறிப்பாக வெண்கலபுத்தர் சிற்பக்கலையைத் தழுவியிருக்கிறது எனப்பரியாகி ரைரிக்ஷ் (Priya Krairiksh) கூறுகின்றார். மேலும் தாய்லாந்து புத்த சிற்பக் கலைப் படைப்புகள் குப்தர் காலக்கலையைப் பின்பற்றாமல் பத்தாம் நூற்றாண்டிலிருந்து பன்னிரண்டாம் நூற்றாண்டு வரை இருந்த தென்இந்திய இலங்கை வெண்கலக்கலை நயத்தைப் பின்பற்றின. இவ்வளவு சான்றுகள் கிடைத்த போதிலும் முழுமையான, தூய தமிழ்ச் சிற்பக் கலைப்படைப்புகளின் செல்வாக்கு தாய்லாந்தில் இருந்தது என அறுதியிட்டுக் கூறமுடியாது. அதே சமயத்தில் தமிழ்ச் சிற்பக் கலைப் படைப்புகளின் தாக்கத்தை மறைக்க முடியாது. தாய்லாந்தில் இருந்த ஒரு புகழ் வாய்ந்த கலைக் கூடத்தை நாகப்பட்டினம் கலைக் கூடம் (Nagapattinam School) என்றே அழைத்தார்கள் எனப் பிரியா கிரைரிக்ஷ் கூறுகின்றார். பொதுவாகத் தமிழ்ச் சிற்பக் கலை நயம் குப்தர்கள், குப்தர்கள் பிற்காலம், பாலா, போன்ற மற்ற தென், வட இந்தியக் கலைகளுடன் கலந்து தாய்லாந்து சிற்பக் கலைப் படைப்புகளை உருவாக்கியது எனக் கூறலாம்.

தாய்மொழியில் தமிழ்மொழிச் சொற்கள்

டாக்டர் க.த. திருநாவுக்கரசு கீழ்காணும் கருத்தை அளிக்கின்றார்:

தமிழ் மக்களுடைய தொடர்பால் தாய்மொழியில் பல தமிழ்ச் சொற்கள் இடம் பெற்றுள்ளன. தாய் மொழியில் 18 உயிரொலிகளும், 23 மெய்யொலிகளும் உள்ளன. அம்மொழி தொனிக்கும் முறையால் எடுத்தல், படுத்தல், நலிதல் போன்ற முறைகளால் வெவ்வேறு பொருளை உணர்த்துவதாகும்.

அம்மொழியில் கிழமை 'வாரம்' என வழங்கப்படுகிறது. இந்திய, தமிழ் முறைப்படியே, ஒரு வாரத்திற்குரிய ஏழு நாட்களின் பெயர்களும் வழங்கி வருகின்றன. தாய்மொழியில் வழங்கும் தனித்தமிழ்ச் சொற்கள் பல. அவற்றுள் வேளா (வேளை) பார்வே (பார்வை), தூக் (தூக்கு), மாங்க் (மாங்காய்) போன்ற சொற்கள் நம் கருத்தை கவருவனவாகும்.

மற்றும் இன்றைய பேச்சு வழக்கில் தமிழில் வழங்கும் சொற்கள் அம்மொழியில் ஏராளமாகத் திரிந்த நிலையில் வழங்கி வருகின்றன.

தாய்மொழி	தமிழ்மொழி
காருணா	கருணை
நகான்	நகரம்
பட்டோம்	பட்டணம்
கோங்கா	கங்கை
சிந்தனா	சிந்தனை
ராஜ்	ராஜா
ராணி	ராணி
தம்மசாட்	தருமசத்திரம்

(Phya Anyuman Rajadha, Thai Literature Quoted in Tamil Culture Vol.V.No.3,P.213)

முடிவுரை

ஆகையால் இன்று தாய்லாந்து நாட்டிற்குத் தமிழர்கள் போனால் அங்குத் தாய்லாந்து மக்கள் வாழ்க்கையில் தமிழ்ப் பண்பாட்டின் தாக்கத்தை ஓரளவு மகிழ்ச்சியுடன் காணலாம். குறிப்பாகத் தென் தாய்லாந்தில் தமிழ்ப் பண்பாட்டின் செல்வாக்கு ஓங்கியிருக்கின்றது என்பதைக் காணலாம். இப்பண்பாட்டுத் தாக்கத்தை ஆதாரமாக வைத்துக் கொண்டு பேராசிரியர் மாணிக்க வாசகம் பின்வரும் முடிவுக்கு வரப் பார்க்கிறார்: "தாய்லாந்து தென் பகுதிகளில் வாழும் மக்களின் அங்க அமைப்பு திராவிடர்களின் அங்க அமைப்புகள் போலவே இருப்பதைப் பார்க்கலாம். பலரிடம் இந்த அங்க அமைப்பு ஒற்றுமை தெளிவாகவே தெரிகின்றது. தோலின் நிறம், நெற்றி, புருவம், கண்ணிமை அமைப்புகள், கண்கள், மூக்கு, காதுகள் முதலிய அங்கங்களின் அமைப்பு, ஆண்களானாலும், பெண்களானாலும்,திராவிட முகத் தோற்றக் கூறுகளை ஒத்திருந்தது. தென் தாய்லாந்து நாட்டில் . . . . இவை பின்வரும் புனைவுகோளைத் தருகின்றன . . . . தமிழர்கள் வந்து குடியேறியிருக்கலாம், தாய்லாந்து நாட்டினரோடு, குறிப்பாகத் தென்தாய்லாந்து நாட்டினரோடு இவர்கள் ஒரு சேரக் கலந்திருக்கலாம்" (p 7). இதற்குக் கல்வெட்டுகள், மற்றும் பல ஆதாரங்கள் இருக்கின்றன. 15,16ஆம் நூற்றாண்டு வரை தமிழர்கள் தாய்லாந்துடன் வாணிப உறவு வைத்திருந்தனர் என்பதற்குச் சான்றுகள் இருக்கின்றன.

நூற்றாண்டுக்கு முன்பு தமிழர்களே (தஞ்சை மாவட்டம்) முதன் முதலில் பாங்காக்கில் வைரம் முதலிய கல் வணிகம் தொடங்கினர். பின்னர் ஜப்பானியர் ஆட்சியில் மரண இரயில்வேகளுக்குப் போனவர்கள் பல்லாயிரம் பேர். காஞ்சிபுரத்திலிருந்து பல பகுதிக்குச் சென்று தாய்லாந்துப் பெண்களை மணம் முடித்துக் கொண்டு வாழும் மலேசியத் தமிழர்களும் மலாக்கா செட்டிகள் போல் வாழ்வதாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள். வெவ்வேறு பகுதிகளில் இவ்வாறு சிறு சிறு ஊர்களின் அடையாளம் தோற்றம், பெயர் மாறி வாழ்கின்றனராம். சியாங் ராயில் வாழும் இத்தகையவர்களால் பிள்ளையார் கோயில் கட்டப்படுகின்றது என்று திரு. ச. மணியம் அறிவித்திருக்கிறார். தமிழர்களே நிதி திரட்டிக் கட்டுகிறார்கள்(1983). 1830இல் குடியேறிய தமிழர் பலர் தமிழையும் தமிழ்ப் பெண்களையும் மறந்து வாழ்கின்றனர். சிலருக்கு மட்டுமே தமிழில் எழுத, பேச, படிக்கத் தெரியும். தமிழ் மொழியின் வேரும் சீரும் தாய்மொழியைப் பண்படுத்தியிருக்கின்றன எனக் கூட கூறலாம். தாய்லாந்தில் பல ஊர்களின் பெயர்கள் தமிழ் நாட்டுப் பெயர்களைத் தழுவியிருக்கின்றன. உதாரணம், காஞ்சினபுரம், பத்தேயா, சுருந்தா, ஆரணியபிரதாப், சிதம்பராத், ராஜசிம்மா, சோழலங்காரா, பட்டாணி, ராமா, சூரதாணி, சாந்தபுரி, பதம்புரி, நந்தபுரி (வீரப்பன் p 193). மேலும், நாராயண என்ற பெயர் மருவி நரை என்றாகி ஒரு ஊரின் பெயராக விளங்குகின்றது என, கே. ஏ. நீலகண்டசாஸ்திரி கூறுகின்றார். பேராசிரியர் மாணிக்க வாசகம் பின்வரும் புனைவுகளை அளிக்கின்றார். அதாவது திராவிடச் சொற்கள் நேராகவே தாய்லாந்திற்குச் சென்றிருக்க வேண்டும். சமஸ்கிருதம் அல்லது மற்ற இந்தோ ஆரிய மொழிகள் திராவிட மொழிகள் மூலம் தாய்லாந்து மொழியுடன், எழுதும், பேசும் மொழியுடன், தொடர்பு கொண்டிருக்கவேண்டும். ஆனால் இவர் கூறும் கருத்தை மொழி நூலாராய்ச்சியாளர்கள் மேலும் ஆய்வு செய்தால் தான் தாய்மொழிக்கும் தமிழ் தமிழுறவுடன் உள்ள ஓர் அமைப்பு இது தான். கல்லூரி மாணவர்களுடன் பாங்காக்

பண்டைக் காலத்திலும், இடைக்காலத்திலும் மட்டும் தமிழ் நாட்டின் தாக்கம் தாய்லாந்தில் இருந்தது என எண்ணவேண்டாம். தற்காலத்தில் கூட, தமிழர்களும் சேர்ந்து கட்டிய ஒரு சின்னம் இன்று தாய்லாந்தில் இருக்கின்றது. இச்சின்னத்தை மரணப்பாலம் என்று அழைக்கின்றார்கள். மோல்மினுக்கும் மேற்குத் தாய்லாந்துப் பகுதியான காஞ்சனபுரிக்கும் இடையில் இந்நாடுகளை இணைக்கும் இப்பாலம் இன்று மரணப்பாலம் எனப்படுகிறது. 428 கிலோ மீட்டர் நீளமுள்ள இப்பாலத்தைக் கட்ட ஜப்பானியர்கள் 60 ஆயிரம் ஆள்களைக் கொண்டு வந்தனர். இவர்களோடு 10,000 தமிழர்களும் இப்பாலத்தைக் கட்டுவதற்காகக் கொண்டு வரப்பட்டனர். ஆனால், இப்பாலம் முடிவுறாமல் 1948இல் கைவிடப்பட்டது. (வீரப்பன், 197). இம்மாதிரியான வரலாற்று நினைவுச் சின்னங்களைத் தவிர மற்ற தமிழ்ச் செல்வாக்குச் சின்னங்கள் இன்று கிடையாது. தமிழர்கள் இன்று மிகமிகக் குறைவாகத் தான் தாய்லாந்தில் இருக்கின்றார்கள். இன்று தாய்லாந்தின் மொத்த மக்கள் தொகை 5,05,88,000. இதில் பிராமணர்கள், இந்துக்கள், சீக்கியர்கள் சேர்ந்து 25,200 பேர்தான் இருக்கின்றார்கள். வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, செங்கற்பட்டு, தஞ்சாவூர், காரைக்கால் முதலிய இடங்களிலிருந்து வந்த தமிழ் முசுலீம்கள் ஐந்நூறு பேர் இருக்கிறார்கள். இவர்கள் தமிழ் மூஸ்லீம் சங்கம், சோழியா முசுலீம் மன்றமும் அமைத்து இரத்தினக்கல் வியாபாரம் செய்கின்றார்கள். இவர்களுக்குத் தமிழ் மட்டும் தெரியும். இந்தி, உருது, தெரியாது. தாய்லாந்திலுள்ள அயோத்திய தர்காவுக்கும் நாகப்பட்டினம் தர்காவுக்கும் நிறைய ஒற்றுமை இருக்கின்றது. பாங்காக் நகரில் பல தொழில் துறையில்

பணியாற்றும் தமிழர் புள்ளி விவரங்களைச் சேகரித்து வருகிறார்கள். தாய்லாந்திலே தமிழுறவுடன் உள்ள ஓர் அமைப்பு இது தான். கல்லூரி மாணவர்களுடன் பாங்காக் நகரில் பிரபல தமிழர் சிலர் சேர்ந்து உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கக் கிளை அமைத்திருக்கின்றனர். பல ஆண்டுகளாகத் தீபாவளியுடன், தை முதல் நாளில் தமிழர்கள் பொங்கல் விழா நடத்துகிறார்கள். குமுதம், குங்குமம், ஆனந்த விகடன், தினமணி, தினகரன், முரசொலி கிடைக்கின்றன. ஒரு தமிழ் முசுலீம் முயற்சியின் மூலமாக இவ்விதழ்கள் கிடைக்கின்றன. சியாங்ராய், சியாங்மாய், காஞ்சினபுரம், அயோத்தியா, பாங்காக், பீகியூத் போன்ற பகுதிகளில் உள்ள பழந்தமிழ்க் கோயில்களைப் பற்றி மேலும் ஆராய்ச்சி செய்தால் நமக்குப் பல சான்றுகள் கிடைக்கும். மேலும் பத்தேயா, சுகுந்தா, ஆரணிய பிரதாட், சிதம்பராத் ராஜசிம்மா, சோழலங்காரா, பட்டாணி, ராமா, சூரதாணி, சாந்தபுரி, பத்மபுரி, நந்தபுரி போன்ற ஊர்களில் உள்ள வரலாற்றுச் சின்னங்களும், புதை பொருள்களும், கல்வெட்டுகளும் தமிழர்-தாய்லாந்து உறவைப் பற்றி மேலும் பல செய்திகளை அளிக்கலாம். சியாங்ராய் மணியம் என்பார் தாய்த் தமிழ் அகராதி ஒன்றை எழுதிக் கொண்டிருக்கிறார்.

கம்பூசியா, லாவோஸ், வியட்நாம்

(இந்தோ-சீனா)

கம்பூசியா (கம்போடியா), லாவோஸ், வியட்நாம்(சம்பா) முதலிய நாடுகளை இந்தோ-சீனா நாடுகள் என்று அழைப்பது வழக்கம். இந்நாடுகளில் சீன, இந்திய கலாச்சாரங்கள் இரண்டும் கலந்து செல்வாக்குடன் வளர்ந்தன. பண்டைக் காலத்தில் வியட்நாமியர்கள் வாழ்ந்த டொங்கின் பகுதியில் சீனப் பண்பாடு வேரூன்றத் தொடங்கியது. ஆனால், மற்ற இந்தோ-சீனா பகுதிகளில், அதாவது சம்பா (*Champa*), கம்பூசியா, அங்கர் (*Angkor*) லாவோஸ் பகுதிகளில் இந்திய நாகரிகமும் பண்பாடும் வளர்ச்சியடைந்தன. இன்று கம்பூசியாவின் வட எல்லையில் தாய்லாந்து, லாவோஸ் நாடுகள் இருக்கின்றன. கிழக்கு எல்லையில் வியட்நாம் இருக்கின்றது; தெற்கில் தாய்லாந்து வளைகுடா (*Gulf of Thailand*) இருக்கின்றது. இப்பகுதியில் பேசும் மொழி கெம்மர் மொழி யாகும். பெரும்பான்மையான மக்கள் பின்பற்றும் சமயம் தெரவேதா புத்த சமயமாகும். நான்கு பக்கங்களிலும் நில எல்லைகளால் சூழப்பட்ட நாடு லாவோஸ் ஆகும்; வட எல்லையில் சீனாவும், கிழக்கில் வியட்நாமும், மேற்கில் தாய்லாந்தும், வடமேற்கில் பர்மாவும் இருக்கின்றன. பெரும்பான்மையான மக்கள் பேசும் மொழி லாவோ மொழியாகும், பின்பற்றும் சமயம் புத்தமதம் ஆகும். வியட்நாமின் வடக்கே சீனாவும், மேற்கே லாவோஸ், கம்பூசியாவும், கிழக்கில் தென் சீனா கடலும் இருக்கின்றன. இங்குப் பேசும் மொழி வியட்நாமிய மொழியாகும்.

இந்தோசீனா-தமிழ்நாடு-தொடர்பு:-சான்றுகள்

வரலாற்றுக்கு முந்திய காலத்து மக்கள் குடிபெயர் குழுக்கள் மூலம் சியாம், கம்போடியா, மற்ற இந்தோசீனா பகுதிகளில் இந்தியப் பண்பாடு பரவத் தொடங்கியது என எல்லிஸ்மித் (*Ellis Smith*) கூறுகின்றார். இந்திய இளவரசன் ஒருவன் மூலம் கம்போடியாவில் ஓர் அரசு வரிசையே தோன்றியதாக நம்பப்படுகிறது.

கம்போடியா, சாவா (*Indonesia*), தமிழ்ப் பல்லவ மரபினர் முதலிய எல்லோருக்கும் நாகர் முன்னோர்கள் (*Naga ancestors*) இருந்தார்கள் .எனச் சான்றுகள் உள்ளன. சாவக நாட்டில் (சாவாவின் தமிழ்ப்பெயர்) நாகபுரம் எனும் ஊர் இருந்தது என மணிமேகலை கூறுகின்றது. நாகபுரத்தின் அரசர்கள் பூமி சந்திரா, புண்யராஜா என்பவர்கள் ஆவார்கள். இவர்களுடையே முன்னோர்கள் இந்திரனும், இந்திரன் வமிசத்தினர்களும் ஆவார்கள். இவர்களைப் பற்றிய செய்திகள் நமக்குக் கிழக்குப் போர்னியோவில் உள்ள யூபா கல்வெட்டுகளில் கிடைக்கின்றன. நாகர் புராணக்கதை இலக்கியம் காஞ்சி நாட்டுப்

பல்லவர்களிடமும் காணலாம். ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த இரு கல்வெட்டுகளில் பல்லவ அரசு பரம்பரையினர் பெயர்கள் கூறப்பட்டிருக்கின்றன. முதல் கல்வெட்டில் பின்வருமாறு கூறப்பட்டிருக்கிறது: துரோணரின் மகன் அஸ்வத்தாமா ஓர் நாகர் பெண்ணை மணந்து கொண்டார். அவர்களுடைய மகளின் பெயர் ஸ்காந்தாசிஷ்யா (*Skandasisya*). பல்லவ புராண இலக்கிய முன்னோரகளில ஒருவன் ஸகந்தாசிஷ்யா ஆவான்.

வட ஆர்க்காட்டில் தோண்டி எடுக்கப்பட்ட இரண்டாவது கல்வெட்டில் பின்வருமாறு கூறப்பட்டிருக்கிறது; விருகார்ச்சா ஒரு நாகர் பெண்மணியைத் திருமணம் செய்து கொண்டான். அவளிடமிருந்து அரசு அறிகுறி அடையாளச் சின்னங்களைப் பெற்றுக் கொண்டான். அவனுக்குப் பிறகு ஸ்கந்தாசிஷ்யா பதவிக்கு வந்தான். கம்பூசியாவில் நாகர் ஒருவன் தான் புதிய அரசு வம்சம் ஒன்றை நிறுவினான். காஞ்சிபுரத்தில் விருகார்ச்சாவிற்கு அரசு அறிகுறி அடையாளச் சின்னம் கொடுத்தவள் ஓர் நாகர் பெண்மணியாகும். ஆகையால் இந்தோசீனா, இந்தோனேசியா (ஸ்ரீவிசயாசை லேந்திரர்கள்) பல்லவர் காஞ்சி புரம் இடையே நெருங்கிய தொடர்பு இருந்திருக்க வேண்டும் என நம்பப் படுகிறது. மேலும இந்நாடுகளில் உள்ள கல்வெட்டுகளிலும் ஒரே பல்லவகிரந்த எழுத்துமுறை இருக்கின்றதைப் பார்க்கின்றோம். இந்நாடுகளை ஆண்ட அரசர்களின் பெயர்கள் ஒரே மாதிரியாக வர்மன் என முடிகின்றன. உதாரணமாக, பல்லவ அரசர்களின் பெயர்கள் மஹேந்திர வர்மன், நரசிம்ம வர்மன். அதேபோல, கம்போடிய மன்னர்களின் பெயர்கள் ஜயவர்மன், இந்திர வர்மன், ருத்திர வர்மன், பவவர்மன்.

இந்தோசீனா, கம்போடியா பகுதிகளில் முதல் நூற்றாண்டில் கிமர் பேரரசு தோன்றுவதற்கு மூல காரணமாகத் தமிழர் தொடர்பு இருந்தது. சிலப்பதிகாரக் காலத்துப் பூம்புகார் சோழ மன்னன் கிள்ளிவளவனுக்கும் சாவகப் பெண் பீலிவளைக்கும் பிறந்த தொண்டைமான் இளந்திரையனே முதல் கம்போடியா மாமன்னன் என வரலாறு உண்டு. மணிமேகலையிலும் இது உண்டு. கிள்ளிமார் என்பது கிமர் (*Khemer*) ஆகிவிட்டது. இளந்திரையன் பிறந்த ஆண்டு கி.பி.77. இதைப் பிளினி என்பவரும் கண்டு உரைத்திருக்கின்றார்.

டாக்டர் க. த. திருநாவுக்கரசு அவர்கள் அளிக்கும் செய்திகள்:

கவுண்டின்யன் (*Kaundinya*) எனும் இந்தியன் இந்தோசீனாவிலும் அதற்குத் தெற்கிலுமுள்ள தீவுகளிலும் நாகரீகத்தினைக் கொண்டுவந்து புகுத்தினான் என்று கூறப்படுகிறது. கம்பூச்சிய அரசு மரபுகளும், இடைக்கால சம்பா, சாவகம், சுமத்திரா, போர்னியோ போன்ற நாடுகளின் அரசர்குடிகளும் கவுண்டின்யனைத் தங்கள் மூதாதை என்று பெருமையோடு போற்றுவது இதனை வலியுறுத்துகிறது. கவுண்டின்யன் விண்ணந்தாயன் (புறநானூறு-160) என்ற பார்ப்பனரின் வழித் தோன்றலாகவே இருந்திருக்கவேண்டும் என்று பிராஞ்சு நாட்டு அறிஞர் டாக்டர் டூவே பிலியோழா அவர்கள் கருதுகிறார். அந்த கவுண்டின்யன், தமிழ்நாட்டிலிருந்து பியூணானுக்கு குடியேறியிருக்கலாம்.

பியூணானின் அரச மரபினர், சந்திர குலத்தைச் சேர்ந்தவர்கள் என்று அவர்களுடைய கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. பியூணானின் ஆதி அரசன் ஒருவன் சந்திரனுடைய பெண்களைத் திருமணம் செய்து கொண்டதாகச் சொல்லப்படுகிறது. தமிழகத்தை ஆட்சிபுரிந்த பல்லவர்களும் சந்திர குலத்தைச் சேர்ந்தவர்களாவர். அவர்களுடைய தலைநகரமாகிய காஞ்சிபுரத்தைப் பற்றிக் கெமர்களுடைய கல்வெட்டுகளில் சிறப்பாகப் பேசப்படுகிறது. பியூணான், அவர்களுடைய கல்வெட்டுகளுள் இந்தியாவில் உள்ள நகரங்களில் காஞ்சியை தவிர வேறெந்த நகரத்தைப்பற்றிய குறிப்பைக் காணோம். இதனால் பல்லவர்களுக்கும் கெமர்களுக்கும் நெடுங்காலம் முதல் ஏதோ ஒரு வகையான தொடர்பு இருந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது. மேலும், கெமர்களும் பல்லவர்களைப் போன்றே அசுவத்தாமனின் மரபிலே வந்த ஒருவனுக்கும் நாககன்னிகை ஒருத்திக்கும் பிறந்தவனே, தம்முடைய மூதாதை என்று கூறிவந்தமை இங்கு ஒப்பு நோக்கத்தக்கதாகும். எனவே, பியூணானின் கலைவளர்ச்சிக்கு மூலதாரமாகப் பல்லவருடைய கலைப்பணி இருந்ததாக ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

பியூணான் காலத்திய புத்த விகாரைகளின் சிகரங்கள் தென்னிந்தியாவில் பல்லவர்கள் ஒற்றைக் கல்லில் செதுக்கிய கோயில்களின் பாணியில் அமைக்கப்பட்டுள்ளன.

தென்னாட்டுச் சைவசமயம் பியூணானில் தழைத் தோங்கியது.கோயில் கட்டடக் கலைப்பாணி, சிற்ப வடிவு அமைப்புகள், வாழ்க்கை முறையின் சிறப்புமிகு இயல்புகள் முதலியன யாவும் தமிழ் நாட்டின் பிரதிபலிப்பாகப் பியூணானில் நிலவியது.

திருமணச் சடங்குகள், விருந்தோம்பல், குழந்தை பிறந்த சில மாதங்களில் அல்லது ஆண்டுகளில் அதற்கு காது குத்தல், தலைமயிரை நீக்கும் சடங்கு, உடைகளாக வேட்டியும், சேலையும் அணிதல், ஆடவர் குறுமீசை வைத்துக் கொள்ளுதல், இறந்தோரை அடக்கம் செய்யும்முறைசவஅடக்கத்தின் பொழுது, தலை முடியைப் பிள்ளைகளும், பங்காளிகளும் மழித்துக் கொள்ளுதல், தாழிப்புதையல் போன்ற பழக்கவழக்கங்கள் எல்லாம், சங்க காலத் தமிழரின் வாழ்வியலில் சிறப்புற்று விளங்கியபழக்க வழக்கங்களேயாகும்.

இவற்றால் தமிழ்நாடு மக்களின் குடியேற்றம் பியூணானில் கிறித்துவ நூற்றாண்டின் தொடக்கத்திற்கு முன்பே, அமையத் தொடங்கி இருக்கவேண்டும் என்ற எண்ணம் எழுகிறது. (க. த. திருநாவுக்கரசு)

தமிழர்கள் பண்டைக் காலத்திலிருந்தே இந்தோசீனாவுக்குச் சென்று கொண்டிருந்தார்கள். கி.பி.ஏழு, எட்டாம் நூற்றாண்டில், குறிப்பாகப் பல்லவர், சாளுக்கியர் ஹர்ஷவர்த்தனர் போர்களின் போதும், அதற்குப் பின்பும் தமிழர்களும், மற்ற இந்தியர்களும், பெகு, பர்மா, லாவோஸ், சியாம், கம்போடியா முதலிய நாடுகளுக்குக் குடி பெயர்ந்து சென்றதாக நம்பப் படுகின்றது.

ஏழாவது நூற்றாண்டில் கம்புச நாட்டிலிருந்து வரும் ஒரு கல்வெட்டு, பவவர்மன் தன் தம்பி சித்திரசேனனுடன் சேர்ந்து பழைய பியூணான் (Funan) நாட்டிற்குத் தன்நாடு அடங்கியிருந்த நிலைமையைத் தள்ளிக்களைந்து விடுதலை தந்தான் என்று கூறுகிறது.

சித்திரசேனன் பவவர்மனுக்குப் பின் அரசனானான். இவன் கி.பி.589க்கும் 608க்குஇடையே வெற்றியுடன் வாழ்ந்தான் எனத் தெரிகிறது. சித்திரசேனன் மகேந்திரவர்மன் எனத் தனக்குப்பெயர் வைத்துக் கொண்டான். அதே காலத்தில் வாழ்ந்த பல்லவ மகேந்திரவர்மனுக்கும் இவனுக்கும் தொடர்பு இருக்குமா என நம் மனம் கேட்கிறது. கி. பி. பதினான்காம் நூற்றாண்டில் சாவாவை ஆண்ட சயநகரன் அக்காலத்தில் பாண்டியப் பேரரசனாய் இருந்த சுந்தர பாண்டியனுடைய பெயரையே தன் பட்டப் பெயராகக் கொண்டு முடிசூடிக் கொண்டதோடு பாண்டியரது இரட்டை மீனையும் தன்னுடைய இலச்சினையாகக் கொண்டான் என்று அறிவதால் சித்திரசேனனும் மகேந்திர வர்ம பல்லவனுடைய பெயரைச் சூடிக் கொண்டானோ என்ற ஐயம் எழுவது இயல்பேயாகும். அதே ஏழாம் நூற்றாண்டில் கம்புச மன்னனான சயவர்மனது கல்வெட்டே காஞ்சிபுர அரசனைச் சுட்டுகிறது என்பதும் இங்கே குறிக்கத்தக்கதாம்.

'மகரிஷி சம்பு' என்பவரின் வழி வந்தவர்களும், கவுணியன் ஒருவனின் வழிவந்தவர்களும் அங்கே சென்று நாட்டை வளப்படுத்தி, சம்பாவை ஆண்டனர் எனக் கதைகள் கூறும். சம்பா என்பது காவிரிப்பூம்பட்டினத்தின் மற்றொரு பெயரை நினைப்பூட்டுகின்றது. கவுணியரான ஞானசம்பந்தர் வாழ்ந்த சீகாழிக்கும் சண்பை என்ற பெயருண்டு.

காவிரிப்பூம்பட்டினத்திற்குச் 'சம்பாபதி' என்று மற்றொரு பெயர் வழங்கியதைப் பண்டைத் தமிழ் இலக்கியத்தால் அறிகிறோம்.

"சம்பு என்பான் சம்பாபதியினுள்
செங்கதிர்ச் செல்வன் திருக்குலம் வேண்ட
கரகம் கவிழ்த்த காவிரிப் பாவை
செங்குணத் தொழுகி அச்சம் பாபதியைப்
பொங்கு நீர்ப்பரப்போடு பொருந்தித் தோன்ற"
(மணிமேகலை, பதிகம் 8-1-4)

என்பது மணிமேகலையால் அறியப்படுகிறது. தமிழகத்து மக்கள், தாங்கள் குடியேறிய நாட்டிற்குக் காவிரிப்பூம்பட்டினத்தின் நினைவாக 'சம்பா' என்ற பெயரை, அந்நாட்டிற்கு வழங்கியிருக்கலாம். அந்நாட்டில் கிடைத்துள்ள மிகப்பழைய கல்வெட்டுகள் தென்னிந்திய எழுத்துக்களில் பொறிக்கப்பட்டிருப்பது, இக் கருத்தினை அரண் செய்கிறது. இன்றைய தென்வியட்நாம் பகுதியை அக்காலத்தில் சம்பா என்று அழைத்தனர்.

மௌரியப் பேரரசு வீழ்ச்சியுற்ற பின் சுங்கர்களும், கண்வர்களும் மகதத்தைஆண்டு கொண்டிருந்தனர். அக்காலத்தில் தக்காணத்தில் ஆந்திரர்களும், தமிழகத்தில் முடியுடை மூவேந்தர்களும் ஆட்சி புரிந்தனர். கி.மு. முதல் நூற்றாண்டிற்கும் கி.பி. இரண்டாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் தான் இந்தியர்கள் சம்பாவிற்குச் சென்று

குடியேறியிருக்கவேண்டும். சம்பாவில் வோசண் (Vo-Chann) என்னும் இடத்தில் கிடைத்துள்ள கல்வெட்டு (கி.பி. இரண்டு அல்லது மூன்றாம் நூற்றாண்டு) ஒன்றால் சம்பாவில் குடியேறிய மக்களின் தாயகம் தென்னிந்தியா என்பது தெரியவருகிறது. அக்கல்வெட்டு "ஸ்ரீமாறன்"என்ற அரசனுடைய குடும்பத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறது. பாண்டிய அரச மரபைச் சேர்ந்த ஸ்ரீமாறன், சம்பாவில் குடியேறியிருக்கலாம். அண்மைக்கால ஆராய்ச்சியாளரான மூவோ பிலியோழா, "மாறன்" என்பது பாண்டியரின் குடிப்பெயர் ஸ்ரீமாறன் எனும் தமிழகத்தைச் சேர்ந்தவன் சம்பாவில் முதன் முதலாக அரசினை நிறுவினான். அவன் தமிழ் நாட்டுப் பாண்டியர் குடியில் தோன்றியவனாக இருத்தல் கூடும்" என்று கூறியுள்ளார். ஆனாலும் இங்கு முதலில் குடியேறிய தமிழர்கள் வாணிகர்களாக வேறு வீரவாழ்வை விரும்பிய கடல் மறவர்களாகவோ இருந்திருக்க வேண்டும் அவர்கள் தென்னிந்தியாவிலிருந்து வைதிகச் சமயத்தினைக் கொண்டு சென்று புகுத்தியிருக்கலாம்.

சம்பாவில் (வியட்நாமில்) முற்காலத்தில்இருந்த பார்ப்பனர்கள் அண்மைக் காலத்தில் இசுலாமியர் ஆயினர். ஆயினும் அவர்கள் 'ஆச்சாரியர்' "குரு" என்ற பட்டத்தைப் பெற்றவர்களாக உள்ளனர். அவர்களுக்குச் சமஸ்கிருதமொழி தெரியாது. ஆனால் அவர்கள் கெமர் எழுத்துக்களில் எழுதப்பட்ட சாத்திரங்களைப் படித்து, அவற்றிற்குப் பொருள் விளக்கம் கூறுகின்றனர். தங்களுடைய மூதாதையார் இந்தியாவிலிருந்து சிறப்பாகச் சோழ மண்டலக் கடற்கரையிலிருந்து எட்டாம் நூற்றாண்டு அளவில் காம்போஜத்திற்கு வந்ததாக அவர்கள் நம்புகின்றனர். இந்தக் குடியேற்றம் பல்லவருடைய ஆட்சிக்காலத்தில் நடைபெற்றதாகத் தெரிகிறது. (டாக்டர் க.த.திருநாவுக்கரசு)

சிவ பாத வழிபாடும் கீழைத் தீவுகளில் சிறந்து விளங்கியது. இந்த அறிவு கொண்டு தான் அப்பரடிகள் 'ஐயாறன் அடித்தலமே' என்று பாடுவதன் உண்மைப் பொருளை நாம் அறிய முடிகின்றது. புத்தரது திருவடியையும், திருமாலின் திருவடியையும் வணங்கியதுபோல சிவ பெருமானது திருவடியையும் வணங்கி வந்த வழக்கம் நமக்குத் தெரிய வருகிறது. ஒன்பதாவது நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுந்த ஒரு கல்வெட்டு சங்கராச்சாரியருடைய மாணவர் என்ற அந்நாட்டு அரச குருவான சிவ சோமனாரைக் குறிக்கின்றது. பாசுபத மதம் அங்கே பரவியிருந்தது. பல சைவ ஆச்சாரியர்களின் பெயரையும் அங்கே காண்கின்றோம். முடி மழித்தல் முதலான பல சடங்குகளும் அந்நாடுகளில் பரவியிருந்தன. இச்சடங்குகளைச் செய்து வைப்போர் பார்ப்பனரே.

டாக்டர். க.த. திருநாவுக்கரசு கீழ்க்காணும் செய்திகளை அளிக்கின்றார்.

சம்பாவில் முதன்முதலில் அரசை நிறுவிய பாண்டிய குடிவழியில் வந்த அரசன் ஸ்ரீமாறன் ஓர் சைவன். பண்டைச் சம்பாவில் மிசோன் என்னும் இடத்தில் இருக்கும் கோயில்களும், பேராநகர் என்னும் இடத்தில் இருக்கும் கோயில்களும் சிவனுக்குரிய கோயில்களாகவே காணப்படுகின்றன. சிவபெருமானும், உமாதேவியுமே சம்பாவின் கல்வெட்டுகளில் முதலிடம் பெற்றுள்ளனர். சம்பாவின் கல்வெட்டுகள் சிவபெருமானைச் சர்வன், பவன், பசுபதி, ஈசானன், உருத்திரம், மகாதேவன், உக்கிரன் என்னும்

பலபெயர்களால் குறிப்பிடுகின்றன. சக்தியை உமா,கௌரி தேவி, மகாதேவி, பகவதி, மகாபகவதி என்றும் மாதரி, லிங்கேசுவரி, பூமிசுவரி என்றும் பலவாறாக அழைத்தார்கள். திருமூர்த்திகளில் முதல் மூர்த்தி என்றும் 'தேவாதிதேவர்' என்றும் சிவபெருமானைக் கல்வெட்டுகள் போற்றுகின்றன. சிவனுடைய திருமேனியைக் காட்டிலும் சிவலிங்கமே இந்தியாவைப் போன்று சம்பாவிலும் பெருவழக்குடையனவாக விளங்கின.

பழைய சிவலிங்கங்களைப் போற்றிக் காப்பதும், புதியலிங்கங்களை அமைப்பதும் தங்களுடைய புனிதமான கடமையாகச் சம்பாவின் அரசர்கள் கருதினர். புதிய லிங்கங்களுக்குத் தங்களுடைய பெயர்களைச் சேர்த்துப் பெயரிடுவதை அவர்கள் வழக்கமாகக் கொண்டிருந்தனர். தமிழ் நாட்டில் குறிப்பிட்ட ஓர் அரசன் கட்டிய கோயிலுக்குத் தன்னுடைய பெயரை இட்டு வழங்குவது மரபாகும். குணபரன் கட்டிய ஈச்சுரம் 'குணபர ஈச்சுரம்' என்றும், இராசராசன் எடுப்பித்த கோயில், இராசராசேச்சுரம் என்றும் வழங்கப்பட்டு வருவதை நாம் நன்கு அறிவோம். இதைப் போன்று சம்பாவில் கோயில்களுக்கு மட்டும் அல்லாமல், கோயிலில் எழுந்தருளியுள்ள மூர்த்திகளுக்கும் அப்பெயரிடப் பெற்றதைக் காணுகின்றோம்.

கௌதாரா என்ற சம்பாவின் தெற்கு மாநிலத்தில் சக்திவழிபாடு சிறப்புற்று விளங்கியதாகத் தெரிகிறது. போநகரிலுள்ள பகவதி, கௌதாரேசுவரி கோயில் நாடுமுழுவதும் இருந்த மக்களால் பெரிதும் போற்றப்பட்ட சக்திகோயிலாகும். சம்பாவில் விநாயகர் சிலைகள் மிக பலவாகக் கிடைத்துள்ளன. "போ" நகரில் விநாயகருக்குத் தனிக்கோயில் ஒன்று இருந்தமை கல்வெட்டுகளால் தெரியவருகிறது. முருகப் பெருமானின் சிலைகள் நான்கைந்து கிடைத்துள்ளன. இரண்டு சிலைகள் அவருடைய மயில் வாகனத்தோடு காணப்படுகின்றன. வேறு இரு சிலைகளில் முருகன் காண்டா மிருகத்தின் மீது அமர்ந்து காட்சிதருகிறான். இந்தியாவில் உள்ளவர்களுக்கு இக்காட்சி புதுமையானது. நான்கு திருக்கைகளையுடைய கோலத்தில் திருமாலின் வடிவம் சம்பாவில் வணங்கப்பட்டது. கருடவாகனத்தில் அவர் ஏறிச்செல்வதும், பாற்கடலில் ஆதிசேடன் மீது அவர் அறிதுயில் கொள்ளுவதும் சிற்பங்களாகவும் சிலைகளாகவும் செதுக்கப்பட்டுள்ளன. பிரமனைப்பற்றிப் பலகுறிப்புகள் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. ஆனால் அவர் என்றும் சிறப்பான இடத்தைச் சம்பாவில் பெறவில்லை.

அக்காலத்தில் காம்போஜத்தில் சைவமும், வைணவமும் தழைத்தோங்கின. காம்போஜத்தின் அரசர்கள் பல்லவர்களுக்குரிய 'வர்மன்' என்ற பட்டப்பெயரை பூண்டு இருந்தனர். ஆங்கோர்வாட், பயோன் முதலிய கோயில்கள் தென்னிந்தியக் கோயில்களைப் பெரிதும் ஒத்துள்ளன. மேலும் தென்னிந்தியாவிலிருந்து 'சிவநடராசவடிவம்' காம்போஜத் திற்குக் கொண்டு செல்லப்பட்டமை ஆகிய எல்லாவற்றையும் ஒருங்கு இணைத்துப் பார்க்கின்ற பொழுது, தென்னிந்தியர்களே கம்போடியாவிற்குச் சென்று குடியேறி இருக்கவேண்டும் என்ற முடிவிற்கு வரவேண்டியுள்ளது என்று ஆராய்ச்சியாளர் கூறுவர். *(P.N.Bose, Hindu Colony of Cambodik P.17)*

பண்டைக் காலக் கெமர் அரசர்களுள் சிறந்தவர்கள் பவவர்மனும் அவனுடைய தம்பி சித்திரசேனனுமாவார். இவர்கள் கி.பி. ஆறாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலும், ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் ஆண்டதாகத் தெரிகிறது. பண்டைக்காலத்திய கெமர் அரசர்கள் சைவசமயத்தில் பெரிதும் ஈடுபாடுடையவர்களாக இருந்தனர். அவர்களுடைய மதகுரு "சோமவர்மன்" என்பவராவர். அவர் சாம வேதத்தினை நன்கு கற்றிருந்ததாகவும் தென்னிந்தியாவில் காஞ்சி மாநகரைச் சேர்ந்த "கடிகையில் கல்விபயின்றதாகவும் தெரிகிறது. அக் குருநாதர் பவவர்மனின் தங்கையை மணம்புரிந்து கொண்டார். சோமவர்மர் திரிபுவன ஈசுவரருக்கும் சூரியனுக்கும் கோயில் கட்டினார். அக் கோவிலின் விழாக் காலங்களில் இராமாயணமும், பாரதமும் விரிவுரையாற்றுவதற்குரிய அறக் கட்டளைகளை அமைத்து, தம்மிடமிருந்த இராமாயண ஏடுகளை அக்கோயிலுக்கு கொடுத்து அவர் உதவியதாகவும் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

பவவர்மனுக்கு பிறகு சித்திரசேனன் 'மகேந்திரவர்மன்' (கி.பி. 604-627) என்ற பட்டப்பெயருடன் அரசனாக முடிசூட்டிக் கொண்டான். அவனுடைய கி.பி. 604ல் பொறித்த கல்வெட்டு ஒன்று கம்பூச்சியாவில் கிடைத்திருக்கிறது. அது பல்லவர்கள் காலத்திலே கிரந்த எழுத்துக்களால் சமஸ்கிருத மொழியில் பொறிக்கப்பட்டிருக்கிறது. அதில் யோக நெறியையும் பாசுபதத்தையும் கைக்கொண்டுள்ள சிவபெருமானை வழிபடும் துறவிகள் சிலரைப்பற்றியும் குறிப்புகள் காணப்படுகின்றன. உண்மையில் காம்போஜத்தை ஆட்சிபுரிந்த சித்திரசேனனுக்கும், அதே காலத்தில் தமிழ்நாட்டை ஆட்சிபுரிந்த பல்லவ வேந்தனாகிய மகேந்திர வர்மனுக்கும் தொடர்பு இருந்திருக்கவேண்டும் என்பது இதனால் புலனாகின்றது.

காம்போஜ மன்னனான சித்திரசேனன், அரசு கட்டிலேறியவுடன் மகேந்திர வர்மன் என்ற அபிடேகப் பெயரைச் சூட்டிக் கொண்டான். இதனால் காஞ்சிக்கும் காம்போஜத்திற்கும் யாதோ ஒரு வகையான தொடர்பு இருந்திருக்க வேண்டும் என்பதும், அத்தொடர்பின் பயனாகக் காம்போஜ மன்னன் பல்லவர் குடியின் சிறப்பை உணர்ந்து, அவர்களைப் போன்று தானும் பட்டங்களைச் சூட்டிக்கொள்ளவும் பெயர்களை மாற்றியமைத்துக் கொள்ளவும் முன்வந்திருக்கவேண்டும் என்பதும் அறியப்படுகிறது. (K.A. Nilakanta Sastri, South Indian Influence in the Far East p 37)

பல்லவ அரசன் இரண்டாம் ஸ்கந்த சிஷ்யனுடைய இராயக் கோட்டை செப்பேட்டில் காணப்படும் வாசகம் ஒன்று நம் கருத்தைக் கவருகிறது. அச்செப்பேட்டை வழங்கிய அரசனைக் 'கடலை குடித்த அகத்தியரோடு உவமித்துப் போற்றுகிறது' கி.பி. ஏழாம் நூற்றாண்டு அளவில் அகத்தியர் வழிபாட்டு நெறி தென்கிழக்காசிய நாடுகளில் பெருஞ்செல்வாக்குடன் இருந்ததை அறிகிறோம். எனவே அகஸ்தியரைப்பற்றிய உவமையில் இருந்து ஸ்கந்த சிஷ்யன் தென்கிழக்கு ஆசியநாடுகளை வெற்றிக் கொண்டு இருக்கவேண்டும் எனத்துணியலாம்.

இரண்டாம் நரசிம்மவர்மனாகிய இராசசிம்மனுடைய வயலூர்க் கல்வெட்டு 'த்விபலட்சத்தி(வி)ல் வாழும் குடிமக்களின் நலனையும், அவன் நாடுவதாகத் தெரிவிக்கிறது.'

இந்த கல்வெட்டைப் பதிப்பித்த கல்வெட்டு அறிஞர் எச்.கிருஷ்ண சாஸ்திரி "இத்தொடர் இலட்சத்தீவுகளைக் குறிக்கவில்லை; நெடுந்தொலைவிற்கு அப்பால், கடலில் உள்ள எண்ணற்ற தீவுகளையே சுட்டுகிறது' என்று முடிவு செய்துள்ளார். இந்த உயந்துணர்வை ஸ்கந்த சிஷ்யனைப்பற்றிய வாசகத்தோடு தொடர்புப்படுத்திப் பார்ப்போமானால், பல்லவர்களுடைய கடலாதிக்கம் பற்றிய நம்பிக்கை உறுதிப்படும்.

உருத்திரவர்மன் என்பவன் கம்பூச்சியாவின் சிறப்புமிகு அரசானாவான். அவனுக்கு முன்னர் கிருதவர்மன், சிரேஷ்டவர்மன் எனும் மன்னர்களும் ஆட்சிபுரிந்தார்கள். இந்தப் பெயர்களின் 'வர்மன்' எனும் சிறப்பு மிகுதி இடம் பெற்றிருப்பதை நோக்குக. 'வர்மன்' எனும் பெயர்ச்சொல் 'சத்திரியரை'க் குறிக்கும் சிறப்புப் பெயராகச் சமஸ்கிருதத்தில் உள்ள 'அமரகோசம்' எனும் நிகண்டு தெரிவிக்கிறது. இதே கருத்தினைத் தமிழிலுள்ள நிகண்டுகளும் அறிவிக்கின்றன. கி.பி. ஏழாம் நூற்றாண்டு அளவில் 'வர்மன்' எனும் பட்டப்பெயரைச் சூடியிருந்த இந்திய அரசர்கள் பல்லவரே ஆவர் எனத் தெரிகின்றது.

கம்பூச்சியாவின் அரசனான முதலாம் செயவர்மனுடைய (657-674) கல்வெட்டு ஒன்று பல்லவர்களைப் பற்றி நேரடியாகவே குறிப்பிடுகிறது. அக்கல்வெட்டு வாசகம் முழுமையாகக் கிடைக்கவில்லை எனினும் 'ஆ-காஞ்சிபுர நிருபா' எனும் தொடர்மட்டும் கிடைத்து இருக்கிறது. அது காஞ்சி அரசனைப் போற்றும் வகையிலே அமைந்துள்ளதைக் காணுகின்றோம். (*T.V. Mahalingam, Readings in South Indian History p. 19*).

கம்பூச்சியாவின் கல்வெட்டுகளில் பீமவர்மனையும், இரணியவர்மனையும் பற்றிய குறிப்புகள் காணப்படுவதால் பல்லவ அரசமரபின் இளையகிளை சிம்மவிஷ்ணுவின் தம்பியான பீமவர்மன் காலத்திலேயே (கி.பி. 520 அளவில்) கம்பூச்சியாவில் குடியேறி இருந்ததோடு அங்கு ஒரு இராச்சியத்தை ஆட்சிபுரிந்து வந்ததையும் அறியமுடிகிறது என தி.நா.சுப்பிரமணியன் கூறுகின்றார் (*Pallavas of Kanchi in South East Asia pp 80-94*) இதனை டாக்டர் டி.வி. மகாலிங்கமும் உடன்பட்டுள்ளார் (*op. cit. pp. 27-32*)

கம்பூசியாவில் உள்ள நாம்போன்சில் இன்றும் பார்ப்பனர்கள் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் குடுமியும் பூணூலும் உடையவர்களாக காணப்படுகின்றனர். அவர்கள் கோயில் வழிபாட்டிலும் சமயச் சடங்குகளிலும் முதன்மையானஇடத்தைக்கடந்த காலத்தில் பெற்றிருந்தனர். அதைப்போன்றே அரசவையில் நடத்தப்படும் சடங்குகளிலும் அவர்களுக்குச் சிறப்பிடம் தரப்பட்டது. முடிசூட்டு விழாவில் அவர்கள் பெரும்பங்கு கொண்டனர்.

தமிழ்நாட்டிலிருந்து அகத்தியர் என்ற தமிழ் முனிவர் கம்பூச்சியாவிற்குச் சென்றதாகத் தெரிகிறது. அங்கு அவர் ஓர் அரச மரபினைத் தோற்றுவித்தார் என்றும் ஓர் செவிவழி செய்தி இந்நாட்டில் வழங்கி வருகிறது. (*K.A. Nilakanta Sastri, Agastya on the Rise and spread of Hindu Culture in Journal of Benares Hindu University, 22-8-1938, p. 7*) முதலாம் இந்திரவர்மன் (877-889) தமிழகப் பிராமணரான அகஸ்தியரின் வழியில் வந்தவன் என்று தன்னைக் கூறிக்கொண்டான்.

கெமர்கள் பண்டைக் காலத்தில் சைவசமயத்தைப் போற்றினர். மக்களுடைய உள்ளத்தைச் சிவலிங்க வழிபாடு கவர்ந்தது சிவபெருமான்.. "ஸ்ரீசிகர ஈசுவரன்" "ஸ்ரீகிரி ஈச்வரன்" என்னும் பெயர்களால் போற்றப்பட்டார். சைவ சமயத்தின் பல்வேறு பிரிவுகளுள் ஒன்றான பாசுபதமும் கம்பூச்சியாவில் செல்வாக்குற்றிருந்தது. அச்சமயத்தைச் சார்ந்த ஆச்சாரியர் வித்தியா புஷ்பா என்பவர் சைவ சித்தாந்தத்திலும் அதன் கலை ஞானங்களிலும் சிறப்புற்று விளங்கினார்.

திருமால் வழிபாடும் கம்பூச்சியாவில் மக்களிடையே பரவியிருந்ததைக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. குணவர்மன் 'சக்கரதீர்த்த சுவாமி' என்ற பெயருடன் விளங்கிய திருமால் கோயிலுக்குச் செய்த திருப்பணிகளைப்பற்றி, அவை அறிவிக்கின்றன. தமிழ்நாட்டு ஆழ்வார்களின் 'அடிசேர்தல்' எனும் பிரபத்தி தத்துவம் இராமாநுஜரால் சரணாகதி தத்துவமாகப் போற்றப்பட்டது. இதனால் கி.பி. பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஸ்ரீஇராமாநுஜ ஆச்சாரியாரின் சரணாகதி தத்துவம் கம்பூச்சியாவில் பரவி இருந்ததைக் காணுகிறோம். *(R.C.Majumdar, Kambuja Desa p.41)*

கம்பூச்சியாவின் திருமால் கோயில்களில் தமிழ்நாட்டுத் தென்கலை வைணவர் பின்பற்றும் பாஞ்சராத்திர ஆகமப்படி பூசைகள் செய்யப்பட்டன. *(C. Coedes, The Making of South East Asia p203)* இந்த பாஞ்சராத்திர ஆகம வழிபாடு தமிழ் நாட்டிற்கே உரியதாகும்.

தமிழ்நாட்டில் முதன் முதலில் வணங்கப்பெற்ற சைவநாயன்மார் காரைக்கால் அம்மையாரே (கி.பி. 5ஆம் நூற்றாண்டு)ஆவர். தம்மை 'காரைக்கால் பேய்' என்றே சுட்டிக்கொண்ட அம்மையாரின் பெயரை எளிதில் மக்கள் மறந்தனர். கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு முதல் தமிழ்நாட்டின் கடல் வாணிகர்கள் காரைக்கால் பேயைத் தங்கள் குலதெய்வமாகக் கருதி போற்றிவழிபட்டனர்.

அலை கடல் கடலைக் கடந்து, பிற நாடுகளோடு வாணிகம் செய்வதற்குச் சென்ற பொழுது தங்கள் குலதெய்வமாகிய அம்மையின் சிலையையும் தங்களுடன் வாணிகர்கள் எடுத்துச் சென்றுள்ளனர். கம்பூச்சியா, தாய்லாந்து, இந்தோனேசியா போன்ற நாடுகளில் உள்ள கோயில் சிற்பங்களுள் ஊழிக்கூத்தன் திருமேனியும் அதற்கு எதிரில் காரைக்கால் பேயின் சிலை கல்லிலும் செம்பிலும் செய்யப்பட்டு வழிபாட்டிற்கும் சிறப்ப அலங்காரத்திற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

சங்க காலத்தை ஒட்டி கடல் வாணிகம் செய்த தமிழ்நாட்டு வாணிகர்கள் மணிமேகலை என்னும் கடல்தெய்வ வழிபாட்டை தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்குக் கொண்டு சென்று பரப்பினர். சிறப்பாக தாய்லாந்து, மலேயா போன்ற நாடுகளில் 'மின்கேலா' எனும் பெயரால் மணிமேகலை என்னும் கடல் தெய்வ வழிபாடு வழக்கில் இருந்ததை அறிகிறோம். *(Sylvain Levi Asiatic Researches Journal of Royal Asiatic Society 1912 No. 12, p48)* இதைப் போன்று கி.பி. 5ஆம் நூற்றாண்டுக்கும், 8ஆம் நூற்றாண்டுக்கும் இடையே காரைக்கால் அம்மையாரின் வழிபாடு அந்நாடுகளில் வழக்கில் இருந்ததை டாக்டர் ழான் பிலியோசா தக்க காரணங்கள் காட்டி நிலை நாட்டியுள்ளார்.

சம்பாவில் போங்குலே எனும் கோயிலில் பதினாறு கைகளை உடைய ஊழிக் கூத்தன் திரு முன்னர் அம்மையாரின் சிலை செதுக்கப்பட்டுள்ளது. கம்பூச்சியாவில் ஈசானவர்மன் கல்வெட்டில் சம்பேபிரேய் கூப்கோயிலில் (கி.பி. 677) 'நிருத்தே சுவரர்' என்னும் பெயரால் நடராசர் குறிப்பிடப்படுகிறார். அடுத்து சூரியவர்மனின் பண்டேய் ஸ்ரீஎனும் கோயிலில் (11ஆம் நூற்றாண்டு) அம்மையாரோடு கூடிய ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியின் கற்சிலையும் செப்புச்சிலையும் காணப்படுகின்றன. (*C.Sivaramamurti,Nataraja in Art, Thought and Tradition, pp.353-355, 362*

பிலியோசா தென்கிழக்கு ஆசியநாடுகளில் சிறப்பாகத் தாய்லாந்தில் பீமாய் (*Pimay*) எனும் இடத்தில் அம்மையாரின் சிலைகண்டு பிடிக்கப்பட்டுள்ளதைச் சான்றாகக் காட்டியுள்ளார். இவற்றால் காரைக்கால் அம்மையாரின் வழிபாடு கி.பி. பதினொன்றாம் நூற்றாண்டு வரையில் தென் கிழக்கு ஆசிய நாடுகளில் வழக்கில் இருந்தமை தெளிவாகிறது. தமிழ்நாட்டு மக்கள் இடையே வழக்கில் இருந்த பல்வேறு வழிபாட்டு நெறிகளுள் நடராசர் வழிபாட்டு நெறி (ஊழிக்கூத்து) காரைக்கால் அம்மையாரின் வழிபாட்டு நெறியோடு பின்னிப்பிணைத்து இருந்தமை இதனால் புலனாகிறது. (டாக்டர் க. த. திருநாவுக்கரசு)

ஒன்பதாம் நூற்றாண்டிற்கு முன்பு இருந்த கம்பூசியாவின் கலைத் திறனுக்கும் அதற்குப் பின்பு தோன்றிய கலைத் திறனுக்கும் மிகுந்த வேறுபாடு இருக்கின்றது என எம்.பார்மென்டியர் (*M.Parmentier*) கூறுகின்றார். ஒன்பதாம் நூற்றாண்டிற்கு முன்பு கிடைத்த கலைச் சின்னங்கள் பின்வருவன ஆகும். தனித்து நிற்கும் தூபிகள், கோபுரங்கள் (*Isolated Towers*). இவை செங்கற்களால் எளிமையான திட்டத்துடன் கட்டப்பட்டவை ஆகும். செங்கோண அமைப்புடையவை. பொய்க் கதவுகளுடன் இருக்கும் சுவர்கள். இக்கட்டடங்களின் அணி வேலைப்பாடுகள் தென் இந்தியப் பல்லவர் கலைத் திறனைத் தழுவியிருக்கின்றன.

எம்.ஜார்ஜ் கிராஸ்லியர் (*M.George Groslier*) பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: ஒன்பதாம் நூற்றாண்டிற்கு முன்பு இருக்கும் சிற்பங்கள், கட்டட அமைப்புகள் இந்திய, குறிப்பாகத் தென் இந்தியக் கலைத்திறனைத் தழுவியிருக்கின்றன. இக்கலைப் பொருள்கள் பியூணானின்இறுதி காலக் கட்டத்தில் தோன்றியவை ஆகும். தனித்து நிற்கும் செங்கற் கோபுரங்களில் இருக்கும் அழகான சிற்பங்கள் எல்லாம் இந்தியக் கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கின்றன. இவ்விந்தியப் பண்பாடுகள் திராவிட இந்தியாவிலிருந்து வந்தன. மகாபலிபுரக் கட்டடக்கலை, சிற்பக் கலை முழுவதையும் பூனான் கட்டடக்கலை, சிற்பக்கலையில் காணலாம். இந்தக் கம்பூசியக் கட்டடங்கள் இந்தியக் கட்டடக் கலைஞர்களால் கட்டப்பட்டிருக்கலாம்.

எம். கொலுபுயு (*M. Golubew*) மேலே கூறிய கருத்துக்களை முற்றிலும் ஏற்றுக்கொள்ள வில்லை. கெம்மர் கட்டடக்கலையை இரு பிரிவாகப் பிரிப்பது சரியல்ல. எப்பொழுதும், ஒன்பதாம் நூற்றாண்டிற்குப் பிறகும், கெம்மர் கட்டட, சிற்பக் கலையில் இந்தியப் பண்பாட்டையும் செல்வாக்கையும் காணலாம். தென் கிழக்காசியாவிலுள்ள மற்ற நாடுகளில் இருக்கும் இந்தியக்கலை வளர்ச்சிக்கும் கெம்மர் நாட்டுக் (கம்பூசியா) கலை வளர்ச்சிக்கும் ஒற்றுமை இருக்கின்றது.

தொகையோ என்னும் இடத்தில் முற்றுப்பெறாமல் அமைக்கப்பட்டிருக்கும் கோயில் படிப்படியாக அமைந்த பிரமீட்டு மீது தனிப்பட்ட 8 விமானங்கள் முறைப்படுத்திக் கட்டப்பட்டு இருப்பதைக் காட்டுகிறது. இப்பணி பிற்காலத்தில் ஆங்கோர்வாட்டில் முழு நிறைவு அடைந்திருக்கிறது என்பர். இவற்றைப் போன்ற பல பழைய கோயில்கள் கம்பூச்சியாவில் இங்கும் அங்கும் சிதறிக்கிடக்கின்றன. அவை தென்னிந்தியாவில் பல்லவர்கள் முதன்முதல் கட்டிய கோயில்களைப் போன்று காணப்படுகின்றன. சிற்சில பண்புகளில் அவை குப்தர் காலத்து கோயில்களையும் ஒத்துள்ளன. அலங்கார வேலைப்பாடுகளின்றிப் பொதுவாக எளிமையாகத் தோன்றும் இக் கோயில்கள் வடஇந்தியாவின் சிக்கலான கிரேக்கப் பாணியைப் பின்பற்றியவை அல்ல. அவை தமிழகத்தின் பல்லவர்களுடைய பாணியை பின்பற்றி அமைக்கப்பட்டவை என்பது தெளிவாக புலனாகிறது. *(H. Quaritch Wales, The Making of Greater India pp152-153)*

கம்பூசியாவிலுள்ள மற்றொரு கோயிலான ஆங்கோர்வாட் கோயில் திராவிடக் கட்டடக்கலையை அடிப்படையாகக் கொண்டு, புதியதொரு பாணியில் கட்டப்பட்டிருக்கிறது. பனைமலையில் பல்லவர்களால் எடுப்பிக்கப்பட்ட திருக்கோயிலை ஆங்கோர்வாட் கோயில் பெரிதும் ஒத்திருக்கிறது என்று டாக்டர் ஆனந்த குமாரசுவாமி அவர்கள் கூறுகின்றார் *(History of Indian and Indonesion Art p. 184)*

பண்டேய் ஸ்ரீ கோயில்களின் கலைப்பாணியும் கட்டட வடிவழகும். பெரிதும் தமிழகச்சாயல் உடையவனாகத் தோன்றுகின்றன. இக்கோயிலின் உள்ளே நுழைகின்றவர்கள் தமிழ்நாட்டு கோயில் ஒன்றின் உள்ளே நுழைந்ததைப் போன்ற அகத்தெழுச்சியை எளிதில் பெறுவர். மேலும் பண்டேய் ஸ்ரீயில் காணப்படும் ஆடல் அரம்பையரின் முகத்தோற்றமும், வடிவழகும் தமிழ்நாட்டு ஆடல் அழகினையே நினைவுப் படுத்துகின்றன.

சம்பாவில் கட்டப்பட்டுள்ள கோயில்கள் எல்லாம் பெரும்பாலும் கிழக்கு நோக்கியே கட்டப்பட்டுள்ளன. அங்குள்ள கோயில்கள் திராவிடக் கட்டடக்கலை முறையைப் பின்பற்றி அமைக்கப்பட்டுள்ளன. பெரும்பாலும் இங்குள்ள கோயில்கள் செங்கற்களால் கட்டப்பட்டுள்ளன. ஒரு பெரிய கோயிலைச் சூழ்ந்து, இரண்டு, மூன்று சிறிய கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் காணப்படும் பரிவார தேவதைகளின் கோயில்களைப் போல அவை உள்ளன.

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் கட்டப்பட்டுள்ள மிசோன் என்னும் இடத்திலுள்ள கோயில்கள் திராவிடக் கட்டடக்கலை முறையைப் பின்பற்றியே கட்டப்பட்டுள்ளன இக்கோயில்கள். வட்டவடிவமான பள்ளத்தாக்கில் கட்டப்பட்டுள்ளன. இக்கோயில்களின் உயரம் போகப்போக அகலம் குறைந்து ஒன்றின் மேல் ஒன்றாக மாடிபோல் அமைக்கப்பட்டிருக்கும் மாடங்கள் உடையனவாக உள்ளன. இவை மாமல்லபுரத் தேர்களையும் காஞ்சிபுரத்துக் கயிலாசநாதர் கோயிலையும் அமைப்பில் பெரிதும் ஒத்திருக்கின்றன. மாமல்லபுரத்து தருமராசர் ரதமும், அருச்சுனன் தேரும் கொண்டுள்ள சிகரங்களே பெரிதும் சம்பாவின் கோயில் கோபுரங்களுக்கு வழிகாட்டியாக

அமைந்திருக்கவேண்டும் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். *(R.C. Majumdar, Ancient Indian Colonies in the Far East. p. 187)*

பான்ராங்கு *(Phan Rhang)* அருகில் உள்ள சக்பாதாப் *(Chak Ba Thap)* கோயிலின் கலைவாயிலுக்கு மேல் ஒரு மாடம் இருக்கிறது. அம்மாடத்தில் நடராசர் சிலை ஒன்று ஆறு கைகளுடன் காணப்படுகிறது. அச்சிலையின் அமைப்பும் அழகும் சோழர்காலத்திய நடராச வடிவத்தினை நினைவு படுத்துகின்றன.

மேலும் பல்லவர்கள் மரபு முறைப்படியும், பிற்காலத்தில் சோழ வம்ச மரபு முறைப்படியும், தாங்கள் வைக்கும் கடவுள் சிலைக்குத் தங்கள் பெயரையே (உதாரணமாக ராஜசிம்ஹேஸ்வரா என்ற பெயரை) வைக்கும் பழக்கம் அரசர்களிடையே உண்டு. இதே முறை கம்பூசியாவிலும் பின்பற்றப்பட்டது. கம்பூசிய மன்னர் இந்திரவர்மன் பெயர் சூட்டப்பட்ட கடவுள் உருவம் தான் இந்திரேஸ்வரா, இக்கோயிலின் பெயர் இந்திரேஸ்வரகிரிஹா.

தவிர, கல்வெட்டுகளில் ஒரே செய்தியை இரண்டு முறை கூறும் வழக்கமும், அச்செய்தியை இரண்டு வெவ்வேறு மொழி மூலம் கூறும் வழக்கமும் தமிழ்நாட்டிலிருந்து கம்பூசியாவிற்குச் சென்றிருக்கலாம் என நம்பப்படுகிறது. இதற்குச் சான்று இந்திரவர்மனின் மகனான யசோவர்மனின் (889-910) ஒருங்கு ஒரோலி யுடைய ஈரெழுத்துக் கல்வெட்டுகள் ஆகும் *(Digraphic inscriptions)*. இக்கல்வெட்டுகள் ஒரே உரைச் செய்தியை இருமுறை கூறுகின்றன. ஒருமுறை எப்பொழுதும் கூறும் கம்பூசிய எழுத்துக்கள் மூலமும், இரண்டாம்முறை, அயல்நாட்டு எழுத்து முறை மூலமும் இச்செய்திகள் கூறப்பட்டிருக்கின்றன. பொதுவாக இம்முறை இந்தோசீனாவிலோ, இந்தியாவிலோ பயன்படுத்தாத போதிலும், இம்முறையையும் பல்லவர்கள் பயன்படுத்துவதைக் காணலாம். சென்னை அருகே உள்ள ஏழு கோபுரங்களிலும் *(Seven Pagodas)* ஏழு ரதங்களிலும் இம்மாதிரியான ஒருங்கு ஒரோலியுடைய ஈரெழுத்து முறையைப் பயன்படுத்தியிருப்பதைக் காணலாம். சென்னை அருகே இருக்கும் இச்சின்னங்கள்; கம்பூசியா யசோவர்மனுக்கு முன்பு அமைக்கப்பட்டவை ஆகும். கம்போடிய முடிசூட்டு விழாக்களில் தமிழ் ஓதப்பட்டது என நம்பப்படுகிறது. ஆகையால் அங்குள்ள ஆலயங்கள், அரண்மனைச் சிதைவுகள், அன்றாட வாழ்க்கைப் போக்கு பழந் தமிழ் உறவை எடுத்துக் காட்டுகின்றன.

சோழர்களுக்கும் கம்போடியர்களுக்கும் தொடர்பு இருந்தது என்பதற்குச் சான்றுகள் உள்ளன. கம்பூசிய மன்னன் முதலாம் சூர்ய வர்மன் (1002-1049) சோழர்களின் உதவியை நாடினான். சூர்ய வர்மன் கேதாவில் ஆட்சி செய்து வந்த ஸ்ரீவிசய பேரரசுக்கு எதிராகப் போர்புரிவதற்குச் சோழர்களின் உதவியை நாடியதாகச் சோழர்களின் கல்வெட்டுகளில் கூறப்பட்டிருக்கின்றது. சோழர்களுடன் உள்ள உறவைப் பலப்படுத்துவதற்குச் சூர்யவர்மன் ஒரு தேரை இராசேந்திர சோழனுக்கு அன்பளிப்பாக அனுப்பி வைத்தான். ஸ்ரீவிசயாவிற்கு எதிராகத் தோன்றிய சோழப் படையெடுப்பு சோழ-கம்பூசிய உறவின் விளைவாக இருக்கலாம் என ஆர்.ஸி.மசூம்தார் கூறுகின்றார்.

19ஆம் நூற்றாண்டிலிருந்து

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்தோசீனா முழுவதும் பிரெஞ்சு ஆட்சியின் கீழ் வந்தது. அப்போது தமிழ்நாட்டுப் புதுச்சேரியிலும் பிரெஞ்சுக் காரர்கள் ஆட்சி புரிந்து வந்தார்கள். வாணிபம் செய்வதற்காகவும், வேலை தேடியும் புதுச்சேரி, காரைக்கால், மாகி முதலிய பகுதிகளிலிருந்து தமிழர்கள் இந்தோ-சீனாவுக்குச் சென்றார்கள். 1937ஆம் ஆண்டு புள்ளிவிவரப்படி 998 பேர் இருந்தனர். தவிர, இந்திய பிரிட்டிஷ் பகுதியிலிருந்து சென்ற 6000 ஆசிய அயல்நாட்டினரும் இந்தோசீனாவில் வசித்து வந்தனர். இவர்களில் பெரும்பான்மையோர் தமிழ் பேசும் தென் இந்தியர்கள், குஜராத்தியர்கள், சிந்திகள். இந்தியர்களை விட சீனர்களே அதிகமாக வந்து குடியேறினர். மொத்தம் ஒரு விழுக்காடு இந்தியர்கள் கூட இந்தோசீனாவிற்குச் சென்று குடியேறவில்லை (உதாரணம் வியன்சியன் *(Vientiane)* லுவாங்பிரபாங் *(Luan Pra Banc)* பகுதிகள்)

பொதுவாக இந்தியர்கள், நகரப் பகுதிகளில் வாழ்ந்து வந்தனர். வியட்நாமிலுள்ள சைகான், ஹநாய், கம்போடியாவிலுள்ள நாம்பென், சியாம் சிப், லாவோஸிலுள்ள வியன்சியன், லுவாங்பிரபாங் முதலிய நகரப்பகுதிகளில் தமிழர்கள் குடியேறியிருந்தார்கள். நாம்பென்னில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் இருந்தார்கள். இப்போது இங்கு இருக்கும் தமிழர்கள் குறைவு. இவர்கள் வணிகத்துறையில் உள்ளனர். இவர்கள் தமிழ்த் தொடர்பு இழந்துவிட்டனர். 65 விழுக்காடு ஜவுளிக்கடைகள் இந்தியர்களுக்குச் சொந்தம். பொதுவாக, துணி வியாபாரம் செய்து வந்தார்கள். மற்றும் சிலர், சிறு கடைகள், உணவகங்கள், ஒன்று அல்லது இரண்டு திரைப்பட அரங்குகள் வைத்திருந்தார்கள். அரிசி, சோளம், பட்டு மற்றும் தமிழ்நாட்டுப் பண்டங்களை அதிகமாக வாணிபம் செய்தவர்கள் செட்டியார்கள் ஆவார்கள். குறிப்பாக, செட்டியார்கள் விவசாயிகளுக்கு வட்டிக்குக் கடன் கொடுத்தார்கள். முக்கியமாகக் கம்பூசியாவிலும் கொச்சின் சீனாவிலும் இவ்வட்டித் தொழிலில் செட்டியார்கள் அதிகமாக ஈடுபட்டிருந்தார்கள். மேலும், செட்டியார்கள் மிகுதியாக வட்டி வாங்கினார்கள். ஆண்டிற்கு 3 விழுக்காடிலிருந்து 40 விழுக்காடு வரை வட்டி வாங்கப்பட்டது. இந்தோசீனாவில் வட்டிக்குக் கொடுக்கப்பட்ட பணத்தில் ஏறக்குறைய மூன்றில் ஒரு பங்கு செட்டியார்களால் கொடுக்கப்பட்டது. இதன் மூலம் செட்டியார்களுக்கு அதிக இலாபம் கிடைத்தது. தென் வியட்நாமிலுள்ள சைகானில் மூன்று அல்லது நான்கு தெருக்களில் இந்திய வணிகர்களே மிகுதியாக இருந்தார்கள்.

தமிழர்களும், மற்ற இந்தியர்களும் இந்திய நாட்டுப் பண்பாட்டை மறக்கவில்லை. சிவன், கணேசர், சுப்பிரமணியர் முதலிய கடவுள்களுக்குக் கோவில்கள் கட்டினார்கள். 1880ஆம் ஆண்டளவிலேயே தண்டாயுதபாணி (சுப்பிரமணியசுவாமி) கோவில் சைகானில் கட்டப்பட்டது. 1971ஆம் ஆண்டில் இக்கோவிலுக்கு நகைகள் உட்பட 5கோடி இந்திய ரூபாய்கள் சொத்து இருந்ததாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. மொத்தத்தில் வியட்நாமில் 3 கோவில்களைச் செட்டியார்கள் கட்டினார்கள். ஆனால் கம்பூசியா - லாவோஸ் நாடுகளில் ஒரு கோவில் கூட கட்டவில்லை. தென்வியட்நாமில் தமிழ்ப்படங்கள் காட்டப்படுவதும் உண்டு. தமிழ் முசுலிம்களுக்கும், தமிழ் கத்தோலிக்கர்களுக்கும் வியட்நாமில் தனிக் கோயில்கள் உண்டு. இந்த நாட்டில் உள்ள சம்பா என்னும் பகுதி தமிழ்த் தொடர்புடைய சம்பாவாக இருக்கலாம் என்பது ஒரு சாரார் கருத்து. இங்கே தமிழ்ச் சங்கம், தமிழ் மக்கள் சங்கம் ஆகிய பலவகைச் சங்கங்களும் உண்டு.

1954ஆம் ஆண்டில் இந்தோசீனாவிலிருந்து பிரெஞ்சுக்காரர்கள் வெளியேறியவுடன் இப்பகுதிகளில் சோஷலிஸ அரசுகள் அமைக்கப்பட்டன. போர்கள் நடந்தன. இம்மாதிரியான சூழ்நிலை தமிழர்களுக்குச் சாதகமாக இல்லை. உதாரணமாக லாவோஸ் நாட்டில் 500 இந்திய வணிகர்கள் இருந்தார்கள். 1978ஆம் ஆண்டில் இவர்கள் 100 ஆகக் குறைந்தனர். ஜூலை 1980இல் 60 இந்தியர்கள் தான் லாவோஸில் இருந்தார்கள். அதே போல வியட்நாமில் ஜூலை 1980ல் 200 இந்தியர்கள் தான் இருந்தார்கள். கம்யூனிஸம் இந்தோசீன பகுதியில் பரவியதால் தமிழர்களின் வாணிபச் செல்வாக்கு குறைந்து விட்டது எனக் கூறலாம். 1976இல் வட வியட்நாமியர் ஆட்சிக்கு வந்தபின் பெரும்பான்மையான தமிழர்கள் தமிழகம் திரும்பி விட்டனர். பலர் உடுத்திய உடையுடன் திரும்பினர். பெரும்பாலோர் தமிழ் பேசவும் மறந்து விட்டனர். முப்பது ஆண்டுகளுக்கு முன்பு போனவர்களே தமிழைப் பேசுகின்றனர். ஆகையால் தமிழ்ப் பண்பாடுகளை இந்தோசீனாவில் நாம் ஓரளவு பார்த்தாலும், அவ்வளவாகத் தமிழர்களை இன்று காண முடியாது.

கம்பூசியாவில் இன்றும் (Phnom-ponch) பகு என்கிற அரண்மனைப் பார்ப்பனர்கள் வாழ்கின்றார்கள். அவர்கள் குடுமியும், பூணூலும் கொண்டு விளங்குகிறார்கள். சம்பா நாட்டிலும் முன்னிருந்த பார்ப்பனர்கள் இசுலாமியரான பின்னும் "ஆச்சாரியார்" "குரு" என்ற பட்டம் பெற்றுள்ளார்கள். இப்போதுள்ள பார்ப்பனர் 'பஸ்ஸே' என்று அழைக்கப்படுகின்றனர். இது "தபஸ்வீ" என்ற சொல்லின் மரூஉ என்று அறிஞர் கொள்கின்றனர். சயாமிலுள்ள பின்னாளைய ஓலைச் சுவடிகள் சில, அவர்கள் இந்தியாவிலிருந்து எட்டாம் நூற்றாண்டில் பர்மாவுக்கும், தாய்லாந்துக்கும் சென்ற கதையைக் கூறும். நாம்பென்னில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் வாழ்ந்தனர். இப்போது குறைவு. இந்தியர்களில் இங்குத் தமிழர்களே குறைவு. வணிகத்துறையிலுள்ள இவர்களும் தமிழ்த் தொடர்பை இழந்துவிட்டனர். நாம்பென்னில் 65 சதவிகிதம் ஜவுளிக் கடைகள் இந்தியர்களுக்குத்தான் சொந்தம்.

ஜப்பான், கொரியா

இரண்டாம் உலகப்போர், கராத்தே (karate), ஜுடோ (Judo), சென்புத்தசமயம் (Zen Buddhism), முதலியவை மூலம் தமிழர்களிடையே இன்று பிரபலமாக இருக்கும் நாடுகள், ஜப்பானும், கொரியாவும் ஆகும். இந்நாடுகளுடன் மொழி, கலாச்சாரத் துறைகளில் தமிழ் நாடு பண்டைக் காலத்திலிருந்து தொடர்பு கொண்டிருக்கலாம் என்று சில ஆராய்ச்சியாளர்கள் கூறுவது பலருக்கு வியப்பைத் தரலாம்.

ஜப்பானும் கொரியாவும் கிழக்கு ஆசியாவில் இருக்கின்றன. 3000 தீவுகளுக்கு மேல் உள்ள நாடு ஜப்பான். ஜப்பானில் பேசப்படும் மொழி ஜப்பானிய மொழி (Japanese). கொரியா வின் வட எல்லையில் தான் சீனா இருக்கின்றது. கொரியாவில் பேசும் மொழி கொரியா மொழி (Korean).

தமிழ்ச் சொற்களுக்கும், கொரிய மொழியில் உள்ள சில சொற்களுக்கும் ஒற்றுமை இருக்கின்றது என ஒரு பேராசிரியர் கூறுகின்றார்.

Common Words பொதுச்சொற்கள்	கொரியன் (Korean)	தமிழ் (Tamil)	
Father	Appa	Appa	(அப்பா)
mother	Amma	Amma	(அம்மா)
Brother's wife	Unni	Anni	(அண்ணி)
Grass	pull	pull	(புல்)

இதே மாதிரியான மொழித் தொடர்பு ஜப்பானிய மொழிக்கும், தமிழ் மொழிக்குப் கூட உள்ளது என ஜப்பானிய மொழியியலறிஞர் சுசுமு ஓனோ கூறுகின்றார். மதுரையில் நடைபெற்ற ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டில் அவர் பின்வருமாறு குறிப்பிட்டார் "தமிழ் ஜப்பான் ஆகிய மொழிகளுக்குப் பொதுவாக ஏறக்குறைய 300 சொற்கள் இருக்கின்றன; ஒரே பொருள் தரக்கூடிய 510 சொற்கள் இவ்விரு மொழிகளிலும் காணப்படுகின்றன".

பிரயாணிகள் மூலமாகத் தமிழ் மொழி சீனா வழியாக ஜப்பானுக்கு வந்திருக்கலாம். அதே போல கப்பல் வியாபாரிகள் மூலமாக வந்திருக்கலாம். நாளாவட்டத்தில் மத்திய ஜப்பான் கலாச்சாரம் இந்தத் தமிழ்ச் சொற்களை வடக்கேயும் தெற்கேயும் தள்ளிவிட்டிருக்க வேண்டும். வட ஜப்பானிலும் தென் ஜப்பானிலும் இப்பொழுதும் தமிழ்ச் சொற்கள் நடைமுறையில் உள்ளன என இவர் விளக்கினார்.

ஜப்பானிய மொழியில் உள்ள தமிழ்ச் சொற்கள்

அ, இ, உ, ஏ, ஒ வரிசைச் சொற்களில் 100க்கு மேல்

க, ச, த, நா, ப, ம, வ, ய சொற்களில் 300க்கு மேல்

அகர வரிசையில் 40க்கு மேல், இகரம் 13, உகரம் 18,

ககரம் 57, சகரம் 37, தகரம் 13, நகரம் 23, பகரம் 57, மகரம் 47.

பொதுச்சொற்கள்

அப்பா, அன்னை, கல், கீரை, காவல், சட்டம், சலவை, தாவு, தூய, வடம், மந்தி, சட்டி, நிலம், நாற்று, படகு, பாத்தி, மட்டம், மண், வரி, வாய், வேர், கிறு (கிறுதல்). நரி (இநாரி)

இரு மொழிகளிலும் ஒரே விதமான ஒலிப்பு உச்சரிப்பாக இருக்கிறது. ஒரேவிதமான பொருளையும் கொண்டியங்குகிறது. குறிப்பாக விவசாயத் துறை சம்பந்தமாக 350 தமிழ்ச் சொற்கள் ஜப்பானிய மொழியில் பயன்படுத்தப்படுகின்றன. பொதுவாக வடஜப்பான், தென் ஜப்பான் ஜப்பானிய மொழியில் தான் தமிழ் மொழியுடன் இருக்கும் தொடர்பைப் பார்க்கலாம். மத்திய ஜப்பானில் இத்தொடர்பைப் பார்க்க முடியாது என சுசுமு ஒனோ கூறுகின்றார்.

தென்னாட்டுத் திராவிட மொழிகளிலிருந்து ஜபபான் மொழி தோன்றியது எனப் புங்கி உத்தமர் கூறியதாக உலோகோப்ப சாரியில் கூறப்படுகிறது. ஜப்பானில் உள்ள சென் புத்த மதம் (*Zen Buddhism*) காஞ்சி மாநகர் புத்த சமய இளவரசன் புத்தவர்மனால் பரப்பப்பட்டு உருவாகியது என்றும் சிலர் கூறுகின்றனர்.

கி.பி. ஆறாம் நூற்றாண்டில் காஞ்சிபுரத்தைச் சேர்ந்த போதிதர்மா (*Bodhidharma*) என்பார் கடல் வழியாகத் தென் சீனாவுக்குச் சென்றார். அங்குச் சோங்சான் சாலின் துறவி மடத்தில் (*Songshan Shaolin Monastery*) அதிகக் காலம் தங்கினார். சுவர் எதிரில் உட்கார்ந்து கொண்டு ஒன்பது ஆண்டுகள் தவம் செய்தார்.

போதிதர்மா ஜப்பானுக்கு வந்ததாக உறுதியான சான்றுகள் நமக்குக் கிடைக்கவில்லை. ஆனால் அவர் இறந்த பிறகு அவருடைய செல்வாக்கு ஜப்பானில் ஓங்கியது. குறிப்பாக, ஜப்பானிய சமயத்திலும், மக்கள் மரபாராய்ச்சியிலும் (*Folk-Lore*) அவருடைய செல்வாக்கு அதிகரித்தது. ஜப்பானியர்கள் அவரை, தாருமா (*Daruma*) என அழைக்கின்றனர். சவரம் செய்யாத முகத்துடன், கடுஞ்சீற்றமுடைய கண்களுடனும், எடுப்பான தோற்றமுடைய மூக்குடன் உள்ள இவர் படத்தை இன்று கூட குயோடோவில்

(Kyoto) உள்ள தென்ருயுஜி கோவிலில் (Tenryuji temple) பார்க்கலாம். போதிதர்மாதான் தியானச் சீடர் குழாமைத் (Dhyana School) தொடங்கினார். இக்குழாமைச் சீனர்கள் சான் (Ch'an) என்று அழைத்தனர். இன்று நாம் இதைப் புகழ் வாய்ந்த சென் புத்தமதம் என்று அழைக்கின்றோம்.

இன்று ஜப்பானில் உள்ள எல்லாக் கலை வடிவமைப்பிலும் சென் சமயத்தின் செல்வாக்கைக் காணலாம். ஓவியக்கலை, கையெழுத்து நேர்த்தி (calligraphy) இயற்கைக் காட்சி ஓவியம், தேநீர்ச் சடங்கு முறை, செய்யுட் கலை, விற்றொழில் கலை (Archery), வாட்போர்த்திறம், கென்டோ (Kendo), ஜூடோ (Judo) போருக்குகந்த கலைத்திறன் (Martial Arts) முதலியவை எல்லாம் சென் நடைமுறை, தெய்விக மறை அச்சமதிப்புச் சூழமைவிலிருந்து (Mystique) தோன்றின. எளிமை, சாந்தம், ஒத்திசைவு (பண்ணிசை), துல்லியம் (precision) முதலியன இதனுடைய அடிப்படைத் தத்துவங்கள் ஆகும் போருக்குகந்த கலைத்திறன் கேரளா பகுதியில் உள்ள களரிபாயாட்டு (Kalaripayattu) போல் இருக்கின்றது. ஆகையால் இவ்வாறான ஒரு சூழ்நிலையை ஜப்பானில் இருப்பதற்கு ஒரு தமிழர் சீனாவில் நிறுவிய மதம் காரணமென்றால் நாம் மகிழ்ச்சியடைவதில் ஆச்சரியமில்லை.

முதன் முதலாக ஜப்பானுக்குச் சென்ற ஓர் இந்தியர் ஒரு தென் இந்தியர் என வரலாறு கூறுகின்றது. இவர் பெயர் போதி சேனா பரத் வாஜா. இவர் கி.பி. 736இல் ஜப்பானுக்குச் சென்றார். இவருக்கு உயர்ந்த சமய குரு பதவி அளிக்கப்பட்டது. தோடைஜியில் நாரா (Todaiji nara) விலுள்ள பெரிய புத்தர் சிலையின் எழுந்தேற்றத்தின் போது வழிபாட்டு முறையாற்றுவதற்கு இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஜப்பானிய மதகுருமார்களுக்கு இவர் சமஸ்கிருத மொழியைக் கற்றுத்தந்தார். ஒரு கம்பூசிய சந்நியாசியுடன் இணைந்து இவர் சில சமயம்-சார்ந்த நடனங்களை அறிமுகப்படுத்தினார். அரசவைக்குரிய பழக்க வழக்கமுடைய இசை, நாட்டியம் குறிப்பாக ககாகூ (Gagaku) புகாகூ (Bugaku) வின் ஒரு பகுதியாக இவர் அறிமுகப்படுத்திய நடனங்கள் மாறின. ககாகூ புகாகூ நடனத்தின் போது செந்நிற உடுப்புகளையும், நடுக்கந்தருகிற முகத்திரையும் அணிந்து கொள்வார்கள். நாராவிலுள்ள சில கோவில்களிலும், பரம்பரை பரம்பரையாக வரும் அரண்மனை இசைப்பாடகர்கள் நடனமாடுபவர்களாலும் இவை அழியாமல் பாதுகாப்பு செய்யப்பட்டிருக்கின்றன. இந்தப் புகாகூ நடனத்தை இடப்பக்க நடனம் (Left dance) வலப்பக்கம் நடனம் என இரு பிரிவாகப் பிரிக்கலாம். இடப்பக்க நடனத்தில் இந்திய நாட்டியக் கலையின் தாக்கத்தைக் காணலாம். இப்பிரிவு நடனத்தைச் சாமை (Samai) என அழைக்கின்றனர். பொதுவாக மெதுவாகவும், அன்பாகவும், கனிவாகவும், நேர்த்தியாகவும் செந்நிற உடுப்பு உடுத்திக் கொண்டு சாமை நடனமாடுபவர்கள் ஆடுவார்கள். உதாரணமாக இப் பிரிவைச் சேர்ந்த நடனங்கள் ரான்ரியோ - ஓ (Ranryo-o) சுண்டைகா (Sundeika) சோம குஷா (Somakusha) காட்டன் (Katen) முதலியவை ஆகும்.

ஜப்பானிய இசைப்பெயர்களில் கூட, இந்தியாவின் தாக்கத்தைக் காணலாம் என முனைவர் ஹஜிமா நாகமுரா (Dr. Hajime Nakaumra, Japan and India Asia 1961) கூறுகின்றார். உதாரணம் பய்ரோவும், பைரவாவும் ஜப்பானிய இசையில் உள்ள ரிட்சு (Ritsu) சுத்த சாவேரி அல்லது துர்க்கா போல் இருப்பதைக் காணலாம், சாம கானத்தை ஒத்திருப்பதைப் பார்க்கலாம் என மாதவன் கூறுகின்றார்.

ஜப்பானுக்கு மஹாயான புத்த சமயம் சென்றது. ஆகையால் இதன் மூலம் இந்து, பல தெய்வக் கோயில் பண்பாடும் ஜப்பானில் பரவியது. உதாரணமாக, காமகூராவில் *(Kamakura)* உள்ள அவலோகித் ஈஸ்வரா கானோன் கோவிலில் *(Kannon temple)* இருக்கும் ஒரு ஒதுக்கிடமான குகையில் சரஸ்வதி சிலையைக் காணலாம். நாம் வணங்கும் பல தெய்வங்களுக்கு ஜப்பானியர்கள் பெருமதிப்பு காட்டுகின்றார்கள். தேவகணங்கள் *(Deva Ganas)* புத்த வழிபாட்டில் சிறப்பிடம் பெற்றிருக்கின்றன. துவாரபாலகர்கள் அதாவது நான்கு வானுலக அரசர்கள் ஒவ்வொரு கோவிலின் நுழைவாயிலையும் கடுஞ்சீற்றத் தோற்றத்துடன் காவல் செய்கின்றனர். ஜப்பானியப் பெயர்களுடன் உள்ள வருணன், இந்திரன், பிரம்மா, அக்னி, யமன், குபேரன், மஹாகாலன், சூர்யன், விஷ்ணு, கணேசர், லக்ஷ்மீ, கருடன், கடுமையிராத அசுரர்கள் முதலியவர்களின் உருவச்சிலைகளை ஜப்பான் முழுவதிலும் பார்க்கலாம். சிங்கன் சமய பிரிவினர் *(Shingon)* மண்டலங்களில் *(Mandalas)* இந்துக் கடவுள்கள் வைக்கப்பட்டு ஜப்பானிய மயமாக்கப்பட்டன. *[Dr. Dwijendra Nath Bakshi, Hindu Divinities in the Buddhist Pantheon, Calcutta, 1979].*

பொதுவாக, ஜப்பானிய புத்த சமயத்தில் இந்தியப் பண்பாட்டின் தாக்கத்தைக் காணலாம். ஆனால் ஷின்டோ *(Shinto)* பழக்க வழக்கங்களிலும் இந்தியப் பண்பாட்டின் செல்வாக்கைப் பார்க்கலாம். உதாரணமாக, முன்னோர் வழிபாடு, பிணம் எரித்தல், பழக்க வழக்கங்களில் திராவிடப் பண்பாட்டின் தாக்கத்தைக் காணலாம். நறுமணத்தூபம் இடுதல், நெய்ப்பொருள்கள், சூதாட்ட விளையாட்டு, ஹோமா *(Homa)* போன்ற சடங்குகள், பழங்கதைகள், புராணக்கதைகள், தூய்மையும், தீட்டும் தொடர்பான கருத்துக்கள், ஸ்ராத் *(Shradh)*, ஒபன் *(Obon)* போன்ற விழாக்கொண்டாட்டங்கள் மூடநம்பிக்கைகள், மலை, ஆறு, கடவுள்கள், மேலும் பல ஆவி உரு நம்பிக்கைகள், யாத்திரை செல்லும் மனப்பான்மை, வீடுகளில் சாமிஅறை, தமிழ்நாட்டுக் கொலுவிழா போல் இருக்கும் ஜப்பானிய பெண்களுக்கான பொம்மை விழா, *(Dolls Festival)* கதகளி கோவில் நாடகம் போலுள்ள நோவா *(Noh)*, கபூகி *(Kabuki)* நாடகக் கலைகள் - முதலியவற்றில் நம் இரு நாடுகளுக்கும் உள்ள தனிச்சிறப்பான ஒற்றுமையைப் பார்க்கலாம் என மாதவன் கூறுகின்றார். பண்டைக் காலத்திலிருந்தே தமிழர்கள் கடல் வழியாகப் பல நாடுகளுக்குச் சென்றார்கள் எனச் சான்றுகள் நமக்கு கிடைக்கின்றன. குறிப்பாகச் சோழர்கள் காலத்தில் சோழர்களின் செல்வாக்கு தென்கிழக்காசியா, சீனா முதலிய நாடுகளில் ஓங்கியிருந்தது என நமக்குச் செய்திகள் கிடைக்கின்றன. ஆகையால் ஜப்பானுடனும் தமிழ் நாட்டிற்குத் தொடர்பு இருந்திருக்கலாம் என்றால் ஆச்சரியமில்லை. ஜப்பான், கொரியா, சீனா முதலிய நாடுகள் கிழக்கு ஆசிய நாடுகளாகும். ஜப்பானில் உள்ள முக்கிய சமயங்கள் புத்த மதம், சின்டோயிஸம் *(Shintoism)*. புத்த மதம் இந்தியாவிலிருந்து ஜப்பானுக்குச் சென்றிருக்கின்றது அதுவும் காஞ்சிபுரத்திலிருந்து சென்றிருக்கலாம், என்பதற்கு ஆதாரம் இருக்கும்போது ஏன் தமிழ் மொழியும், தமிழ்ப் பண்பாடும் தமிழர்கள் மூலம் ஜப்பானுக்குச் சென்றிருக்கக் கூடாது? இத்தொடர்பைப் பற்றி மேலும் ஆய்வு செய்தால் நமக்கு மேலும் பல செய்திகள் கிடைக்க வாய்ப்பு இருக்கின்றது. குறிப்பாக, ஜப்பான்- தமிழ்நாடு புத்த சமயம், யோகப் பயிற்சி முறைகளைப் பற்றி ஆய்வு செய்வது நல்லது.

இலங்கைத் தமிழர்களுக்கும், ஜப்பானியர்களுக்கும் ஈமச்சடங்கு *(Funeral Practices)* சம்பந்தமாகப் பல ஒற்றுமைகள் இருக்கின்றன என சுசுமோ ஓனோ *(Susumh Ohno)* கூறுகின்றார். இது சம்பந்தமாக பின்வரும் 12 காரணங்களைக் கொடுக்கின்றார்.

ஜப்பானியர்கள்	இலங்கைத் தமிழர்கள்
1. பேரின்பவீடு, மனித உலகம் நரகம் (கீழுலகம்)முதலிய பிரிவுகள் (நம்பிக்கை)	மேல் உலகம், நடு உலகம், கீழ் உலகம் முதலிய பிரிவுகள் (நம்பிக்கை)
2. இறந்து போனவர்கள் இருக்கும் உலகம் கீழ் உலகம்.	கீழ் உலகம் இறந்து போனவர்கள் இருக்கும் உலகம்
3. கீழ் உலக எல்லையில் ஓர் கணவாய் அமைந்துள்ளது	கீழ் உலக எல்லையில் ஓர் வாயில் அல்லது துளை உள்ளது.
4 மொகாரி *(Mogari)* இறந்தவர்களின் உடலை ஓர் குறிப்பிட்ட காலம் வரை ஓர் சிறப்பான இடத்தில் வைப்பது.	மூச்சு அடங்குதல் வழக்கம் பின்பற்றப் படுகின்றது
5. இறந்தவர்களை ஓர் ஈமச் சடங்கு வீட்டில் *(Funeral House) (Moya)* வைப்பது.	இறந்தவர்களை ஓர் விசேஷ சிறப்பான இடத்தில் வைப்பது.
6. ஈமச்சடங்கு வீட்டில் நுழைவதற்கு நெருங்கிய உறவினர்களுக்கும், இரண்டு இழவு வினை கூட்டுறவுக் குழு *(Funerary guild asobibe)*வினர்களுக்கும் மட்டும்தான் உரிமை உண்டு.	நெருங்கிய உறவினர்களும், தவிர இரண்டு உடன் செல்கிறவர்களும் *(attendants)* மட்டும் தான் இறந்தவர்கள் அருகில் போகலாம்.
7. எட்டு நாள்கள் இரவும், பகலும் பாட்டு, நடனம் உண்டு.	எட்டு நாள்கள் துக்கம் கொண்டாடப்படும்.
8. கூலிக்காக மாரடைப்பவர்கள்*(Nakime)*பயன்படுத்தப் படுகின்றார்கள்.	உடன் செல்பவர்கள் *(Attendants)* எட்டு நாள் அழுது துக்கம் கொண்டாடுகிறார்கள்.
9. எட்டு மந்திரகாரிகள் *(Hags)* இஜநகியை *(Izanaki)* துரத்திக் கொண்டு வருகின்றார்கள்	மந்திரக்காரிகள் அல்லது பெண்பேய்கள் *(Hagdemons)* மனிதர்களை துரத்திக் கொண்டு வருவதாக ஓர் நம்பிக்கை.
10. உணவு போட்டு மந்திரக்காரிகளின் கவனத்தை இஜநகி மாற்றுகின்றான்.	எட்டுப் பெண் பேய்களுக்கும் உணவு தயாரிக்கப்படுகின்றது.

11. கீழ் உலகம் போகும் கணவாய் வழியை ஓர் கல் தூக்கி வைத்து இஜநகி அடைக்கின்றார்.	ஒரு கல்லைத் தூக்கிக் கொண்டு ஆறு அல்லது கடலில் போடும் பழக்கம்.
12. மூன்று வெவ்வேறு இடங்களில் இஜநகி தன்னைத் தூய்மைப் படுத்திக் கொண்டான்.	மூன்று முறை குனிந்து கொண்டு ஒருவர் தஉடலை சுத்தப்படுத்திக் கொள்ளும் பழக்கம்.

இது போலவே தமிழ் நாட்டுப்பொங்கல் விழாவிற்கும் ஜப்பான் நாட்டுக் கோசோ காட்சு விழாவிற்கும் பல ஒற்றுமைகள் இருக்கின்றன, என சுசுமோ ஓனோ கூறுகின்றார்.

ஜப்பான் கோசோகாட்சு **(koshogatsu)**	தமிழ்நாடு இலங்கை பொங்கல் விழா.
1. சனவரி 14 ஆம் தேதி	
1. தொன்டோயாகி (Tondoyaki) பழைய சாமான்களை எரிக்கும் சடங்கு.	*பழைய சாமான்கள் எரித்துப் போடப்படுகின்றன.*
2. குடில்களை எரித்தல்	*கால்நடை தொழுவத்தை எரித்தல்*
3. பட்டாசு விடுதல்	*பட்டாசு விடுதல்*
2. சனவரி 15 ஆம் தேதி	
4. அணியலங்காரம் செய்தல்	*அணியலங்காரம் செய்தல்*
5. ஆண்டில் முதல் முதலாக நன்னீரை எடுத்தல் (fresh water)	*ஆண்டில் முதல் முதலாக நன்னீரை எடுத்தல் (drawing fresh water)*
6. அரிசி பாழ்ங்கூழ் (Rice gruel) செய்து செந்நிறப் பீன்ஸ் உடன் பரிமாறுவது.	*அரிசி பாழ்ங்கூழ் அல்லது பீன்ஸ் பாற்கஞ்சி பரிமாறுவது.*
7. காகங்களுக்கு உணவு அளிப்பது	*காகங்களுக்கு உணவு அளிப்பது.*
8. 'ஓங்கார ஓங்கார' (Hongara Hongara) என்று கூவிக் கொண்டு மக்கள் தங்கள். வீடுகளைச் சுற்றி வலம் வருவது.	*'பொங்கலோ பொங்கல்' என்று எனக் கூவிக் கொண்டு மக்கள் தங்கள் வீடுகளைச் சுற்றி வலம் வருதல்.*
9. மரம் அடித்தல்	*மரம் அடித்தல்*
3. சனவரி 16 ஆம் தேதி	
10. பணியாளர்களுக்கு விடுமுறை நாள்(விளையாட்டு விடுமுறை நாள்)	*கேளிகூத்து, விளையாட்டு விடுமுறை நாள்.*
11. பணியாளர்களுக்குப் புதுத்துணி கொடுத்தல்	*புதுப்புடவைகள், மற்ற துணிகள் அன்பளிப்பாக அளிக்கும் நாள்.*

12. தாய் தந்தை வீட்டிற்குக் குடும்பத்தினர் சென்று சந்தித்தல், குடும்பக் கல்லறைக்குச் செல்லுதல்.	தாய் தந்தை வீட்டிற்குப் குடும்பத்தினர் செல்லும் வழக்கம், முன்னோர்களை வழிபடும் சடங்கு செய்யப்படுகின்றது.
13. வித்தைக்காரர் மக்கள் வீட்டிற்கு வருதல்.	வித்தைக்காரர்கள் வீட்டிற்குத் தெருவிற்கு வருதல்.
14. பாட்டும், நடனமும்	கூத்தும் நடனமும் (Group dancing).
15. அம்பை எய்தல்	கோலாட்டம் ஆடுவது
16. குதிரைகளையும் பசுமாடுகளையும் வழிபாடு செய்தல்.	மாடுகளை வழிபடுதல்.

ஜப்பான் நாட்டில் திராவிடமொழி ஆராய்ச்சியை விரிவு படுத்துவதற்காகத் தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் டாக்டர் வ.அய்.சுப்பிரமணியம் 1981 ஆம் ஆண்டில் ஜப்பான் சென்ற பொழுது முயற்சி எடுத்தார். அவருடைய நோக்கங்கள் பின்வருமாறு: 1. திராவிடமொழி ஆராய்ச்சிக்காகப் புதிய துறைகளை ஏற்படுத்த வேண்டும்.

2. தற்போது உள்ள துறைகளில் திராவிட ஆராய்ச்சியைப் புகுத்த வேண்டும்

3. திராவிடர் வாழும் பகுதிகளில் சில ஆராய்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும்.

இந்நோக்கங்கள் தொடர்பாக, டாக்டர். நோபோரு கராசிமா, தோக்கியோப் பல்கலைக் கழகத்தில் வரலாற்றுத்துறைப் பேரராசிரியர் பின்வரும் விளக்கங்களை அளித்தார்:- ஜப்பானில் திராவிட மொழி ஆராய்ச்சி நடைபெறாமல் இருப்பதற்குக் காரணம், பன்மொழிக் கல்வி முறை மக்களிடம் அதிக அளவில் அறிமுகம் ஆகாமல் இருப்பதே ஆகும். மேலைநாடுகளில் சமஸ்கிருதத் துறையைச் சார்ந்த இரண்டு முதுநிலைப் பேரராசிரியர்கள் திராவிட, சமஸ்கிருத மொழிகளை ஒப்பிட்டுப் பயிலும் முறையில் நூல்கள் பலவற்றைப் படைத்திருப்பினும் சமஸ்கிருதத் துறைகள் திராவிட மொழி ஆராய்ச்சிக்கு ஆர்வம் காட்டவில்லை. ஜப்பானில் திராவிட மொழி ஆராய்ச்சிக்காக ஒரு துறையையோ மையத்தையோ ஏற்படுத்துவது என்பது கடினம். தொகுநாகா கூறியது போல் திராவிட மொழி ஆராய்ச்சியில் ஆர்வமுள்ள ஆசிரியர்களைப் பணியில் அமர்த்துவதோடு அல்லாமல் அவர்களுடைய பணியில் சில மாற்றங்களைச் செய்ய வேண்டும். மேலும், ஆராய்ச்சி செய்யும் முறையையும் மாற்றி அமைக்க வேண்டும். அது திராவிட மொழி ஆராய்ச்சி மக்களிடையே பரவுவதைப் பொறுத்து அமைந்துள்ளது. தென் இந்திய மொழிகளுக்காக அமைந்துள்ள ஜப்பான் கழகம் பல சிறந்த உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. அவர்களுள் சிலர் தொகுநாகா, சிங்கமாட்சு, தாக்காகாசி, மிசுசிமா. கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டில் புதுச்சேரி என்னும் தலைப்பில் முதுநிலைக் கல்வியில் கட்டுரை எழுதியுள்ளார். தென் இந்திய மொழி ஆராய்ச்சியில் முதலில் நாம் நம்மை ஈடுபடுத்திக்கொண்டு,. அதில் சிறந்து விளங்கிய பின்பு, மாணவர்களுக்கு அத்துறையில் ஆர்வம் உண்டானதும் சிறிது சிறிதாகத் தனித்தனித் திராவிடமொழி ஆராய்ச்சித்

துறைகளை ஏற்படுத்தலாம். தோக்கியோப் பல்கலைக் கழகத்தில் நாங்கள் இந்திய வரலாற்று இலக்கியத் துறையையும் ஆசிய வரலாற்றுப் பண்பாட்டுத் துறையையும் கொண்டுள்ளோம். வரலாற்று ஆசிரியர்கள் பரந்த மனப்பான்மை உடையவர்களாதலால் எதையும் பலவகைக் கோணங்களில் ஆராய்வார்கள். ஆனால் மொழி, இலக்கியத்துறைகள் ஒரு குறிப்பிட்ட பகுதியை மட்டும் விரிவாக ஆராய்கின்றன. பல நோக்கு ஆராய்ச்சியை ஜப்பானில் உருவாக்க வேண்டும். திராவிடமொழி ஆராய்ச்சியை விரிவடையச்செய்து திராவிட சமஸ்கிருத மொழி ஆராய்ச்சிகளுக்கு இடையேயுள்ள பிரிவினைக் குறைக்க வேண்டும். பலநோக்கு ஆய்வு முறையைப் பரவச்செய்தால் சமஸ்கிருதத் திராவிட மொழி ஆய்வுகளுக்கு இடையேயுள்ள பிரிவு தானாகவே குறைந்துவிடும் என்று நினைக்கின்றேன்.

டாக்டர் தொகுநாகா, கிபு பல்கலைக் கழகத்தில் இணைப்பேராசிரியராகப் பணிபுரிந்தார். அவர் பின்வரும் விளக்கத்தை அளிக்கின்றார். "ஜப்பானில் பௌத்த மத ஆய்வுத்துறைகள் போதுமான அளவில் உள்ளன. அவர்கள் தங்களுடைய ஆர்வத்தைப் பௌத்த மத ஆராய்ச்சியிலிருந்து, இந்திய மொழி ஆராய்ச்சிக்குத் திருப்பினார்களேயானால் அதுவே ஒருபடி முன்னோக்கிச் செல்வதோடு போதுமானதாகவும் இருக்கும். பிறகு ஆய்வாளர்கள் இயற்கையாகவே திராவிடமொழி ஆராய்ச்சியில் ஆர்வம் கொள்வார்கள். ஏனெனில் இந்திய மொழியில் ஆராய்ச்சி செய்யும் பொழுது திராவிட மொழியைவிட்டு விட முடியாது.

இவர் கூறியதற்கு ஆதரவாக டாக்டர் வ.அய். சுப்பிரமணியம் பின்வரும் கருத்துக்களை அளித்தார்: நாம் கையாளக்கூடிய ஒரு வழி தமிழ்மொழி. இந்தியாவில் பௌத்த மத நூல்களைச் சமஸ்கிருதத்திற்கும் பாலிமொழிக்கும் அடுத்தபடியாகக் கொண்டிருக்கிறது. இரண்டாவதாகத் தேரவாத பௌத்தர்கள் இலங்கையில் தமிழ் நாட்டின் மூலம் பரவியுள்ளனர். புத்த கோசர் போன்ற பௌத்த மத அறிஞர்கள் பலர் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள். (திருநெல்வேலி, மதுரை முதலிய இடங்கள்) ஆகவே, இலங்கை பௌத்த மதத்தை அறிவதற்குத் தென்னிந்திய ஆராய்ச்சியும் இன்றியமையாதது. ஓரளவு கிடைத்துள்ள விம்பிசாரகதை, மணிமேகலைக் காப்பியம் மற்றும் சமஸ்கிருதத்தையும், தமிழையும் ஒருங்கிணைக்க, புதிய முறையைக் கையாளும் வீரசோழிய இலக்கணம் முதலியன பௌத்தர்களால் எழுதப்பட்டனவாகும். வீரசோழியத்தில் கல்வெட்டு மொழி காணப்பட்டது என்ற செய்தியைக் கூறும்பொழுது, வரலாற்று வல்லுநர் என்ற முறையில் உங்களுக்கு அதில் ஆர்வம் இருக்கும் என்று நினைக்கின்றேன். ஆகவே, பௌத்த மொழியில் ஆராய்ச்சி செய்யும்பொழுது தென்னாட்டு மொழிகளைப் பற்றிய ஆராய்ச்சியை விட்டுவிடமுடியாது.

ஆனால், ஜப்பானில் உள்ள பௌத்தமத ஆய்வாளர்கள் திராவிட மொழியைப் பற்றியும், பௌத்தமொழி ஆராய்ச்சிக்குத் திராவிட மொழி ஆராய்ச்சியின் இன்றியமையாமை பற்றியும் அறியாதவர்களாக இருக்கிறாரகள். மேலும், இப்பௌத்தமத ஆய்வாளர்கள் மேற்கத்திய முறைகளையே அதிகமாகப் பின்பற்றுகின்றனர் என டாக்டர் தொகுநாக மேலும் விளக்கினார்.

ஆகையால், ஜப்பானில் ஆசிய ஆப்பிரிக்க மொழி நிறுவனம் ஒன்று தோக்கியோவில் அமைக்கப்பட்டிருக்கிறது. தமிழ்க்கல்வி பெற்றுக் கொள்ளும் வாய்ப்பை இந்நிறுவனம்

அளிக்கின்றது. தமிழ்-ஜப்பானியமொழி அகாரதி ஒறை இந்நிறுவனத்தில் தயாரித்துக்கொண்டு வருகிறார்கள். தவிர, தோக்கியோ, கியோட்டோ பல்கலைக் கழகங்களிலும் ஓரியண்டல் நூலகத்திலும் தமிழ் நூல் பிரிவு இருக்கின்றது.

சுசுமோ ஒனோ ஜப்பானியர்-தமிழர் உறவுமுறையைப்பற்றி இப்போது தொடர்ந்து ஆராய்ச்சி செய்து வருகின்றார். 1981 ஆம் ஆண்டு மதுரையில் நடநத உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் பொழுது இப்பொருளைப்பற்றி ஓர் கட்டுரையை வழங்கினார். ஜப்பான்மொழி தமிழ் மொழியோடு நெருங்கிய தொடர்பு உள்ளது என முதன்முதலாக இம்மாநாட்டின் பொழுதுதான் இவர் கூறினார். தொடக்கத்தில் தமது ஆராய்ச்சிக்குத் தமிழ் அகராதி (Tamil Lexicon) திராவிட சொல்லிலக்கண அகராதி (Dravidian Etymological Dictionary) முதலியவற்றைப் பயன்படுத்தினார். இவ்விருமொழி சொற்களிடையே உள்ள ஒலி, பொருள் ஒற்றுமைப் பற்றி ஆராய்ச்சி செய்தார் "தமிழ், ஜப்பான் மொழி ஒலி ஒப்புமைக்கூறுகள்" (Sound Correspondences between Tamil and Japanese, Tokyo) எனும் நூலை வெளியிட்டார். பிறகு இம்முடிவிற்குப் பொருத்தமான உதாரணங்களை ஜப்பானிய, தமிழ் பண்டை இலக்கியங்களில் தேடினார். பேராசிரியர் சண்முகதாஸ் சங்க இலக்கியம் தொடர்பாக இவருக்கு உதவி அளித்தார். இவ்வாராய்ச்சியின்பொழுது ஜப்பானிய, தமிழ் மொழிகளில் பயன்படுத்தப்பட்ட பல்வகை இடைச்சொற்களைக் (Particles) கண்டு பிடித்தார். இந்த இடைச்சொற்கள் தொடர்பாக மேலும் ஆராய்ச்சி செய்து "ஜப்பானிய தமிழர் உறவு. பண்டைய ஜப்பானிய மொழியிலும் பண்டைத்தமிழ் மொழியிலும் உள்ள இடைச்சொற்களின் ஒப்புமைக் கூறுகள்" (Japanese Tamil Relationship: Particle Corresepondences Between Old Japanese and Old Tamil) என்ற கட்டுரையை மலேசியாவில் 1987 ஆம் ஆண்டு நடந்த ஆறாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் படித்தார்.

இலங்கைத் தமிழர் ஏ.சண்முகதாசும் தமிழ்மொழி-ஜப்பானிய மொழி தொடர்பான ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார். "தமிழ்-ஜப்பானிய தரமான சொற்கள் -ஒப்பீடு செய்தல்" (A Comparison of Tamil- Japanese quality words) எனும் கட்டுரையை ஆறாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் படித்தார். தமிழ், ஜப்பானிய மொழிகளில் சில சொற்றொகுதிகள் சொற்கூட்டுச் சொற்களில் பெயரடையாகவும் (பெயரைத் தழுவுகின்ற சொற்கள்) (adjectives in compound words) பெயரடை எச்சங்களாகவும் (adjective particles) வினையடை வினையெச்சமாகவும் (advebial participles) பயனிலைத் தன்மை வாய்ந்த பெயற்சொல் இயல்புடைய வடிவமாகவும் (Predicative nominal forms) செயற்படுகின்றன என இவர் கூறுகின்றார்.

சீனா

சீனா என்றால் மிகப்பெரிய நாடு, பழம்பெரும் பண்பாடு உள்ள நாடு, முதன்முதலாகப் பொது உடைமைக் கொள்கையைத் தழுவிய ஆசிய நாடு, மக்கள் தொகை மிகுதியாக உள்ள நாடு எனப் பல தமிழர்களுக்குத் தெரியும். இக் காலத்தில்கூட சீன மருத்துவர்கள் பலர் தமிழ்நாட்டில் இருக்கின்றார்கள். தமிழ்நாட்டு நகரங்களில் சீன உணவகங்களையும் சீன உணவகச் சீன முதலாளிகளையும் இன்று கூடப் பார்க்கலாம். ஆகையால் சீனாவைப்பற்றியும், சீனர்களைப் பற்றியும் தமிழர்களுக்கு ஓரளவுக்குத் தெரியும். இச் சீனநாடு கிழக்கு ஆசியாவில் இருக்கின்றது. சீனாவிற்கு வடக்கே மங்கோலியாவும் வடக்கே,மேற்கே சோவியத் யூனியனும், மேற்கே ஆப்கானிஸ்தானும், பாக்கிஸ்தானும், தெற்கே இந்தியா, நேப்பாள், பூடான், பர்மா, லாவோஸ், வியட்நாம் நாடுகளும் இருக்கின்றன.

இச்சீன நாட்டுடன் பண்டைக் காலத்திலிருந்தே தமிழ் நாட்டிற்குத் தொடர்பு இருந்திருக்கின்றது. சீனப் பயணிகள் பழங்காலத்திலேயே தென்னகத்தைப்பற்றித் தம் பயணக் குறிப்புகளில் குறித்துச் சென்றுள்ளார்கள். பொதுவாக, தமிழகத்தைச் சேர்ந்த பழங்காலப் பரதவர்கள் (Paradavars) சீனா, மங்கோலியா, இந்தோனேசியா, அரேபியா போன்ற பல நாடுகளுக்குப் பண்டைக் காலத்திலிருந்தே சென்றார்கள். கி.மு.ஏழாம் நூற்றாண்டிலேயே தமிழ் நாட்டிற்கும் சீனாவிற்கும் வாணிபத் தொடர்பு இருந்தது என ஸ்காப் (Schoff) என்பார் கூறுகின்றார். சீனப் பட்டுத்துணியை இன்று மட்டும் அல்ல, பண்டைக் காலத்திலிருந்தே தமிழர் விரும்பி வாங்கினார்கள்.சங்ககாலத்திலேயேதமிழர்கள் சீனப் பட்டு என்று அழைக்கும் பட்டுத் துணிகளை உடுத்திக் கொண்டார்கள். இந்தப் பட்டுத்துணிகளைத் தமிழ் நாட்டிற்கு அறிமுகப்படுத்திய பெருமை சீனாவுக்குத்தான் உண்டு என்று பலர் கூறுகின்றனர். அதனால்தான் பட்டுத் துணிகளை சீனாம் (Sinam) என்று தமிழர்கள் அழைக்கின்றனர். சர்க்கரை (Sugar) கூட சீனாவிலிருந்து தமிழ் நாட்டிற்கு வந்ததாகக் கருதப்படுகிறது. அதனால்தான் சர்க்கரையைச் சீனி என்று தமிழர்கள் அழைக்கின்றார்கள். குறிப்பாக, பாண்டிய, சோழநாட்டுத் தமிழகப் பகுதிகளில் இன்றுகூட சர்க்கரையை சீனி என்று கூறுவது தான் மரபு. சீனாவிலுள்ள புஜியன் (Fujian) வட்டார மொழியில் தேநீரை தே குடிக்கின்றேன் என்றுதான் கூறுகின்றார்கள்.

தமிழர்கள் சீனாவுக்கு வாணிபத் தொடர்பாக எடுத்துச் சென்ற பொருள்கள் மிளகு, ஏலக்காய், சாம்பிராணி, செம்பவழம் முதலியன ஆகும். இவ்வாணிபம் கடல் வழியாக நடந்திருக்கும் என நம்பப்படுகின்றது. நீண்ட பசிபிக் பெருங்கடல் கடற்கரைப் பகுதிகள் சீனாவின் எல்லையாக இன்றுகூட இருக்கின்றன. ஹவ் ஆங்சே (Hou Ang Tche) எனும் சீன

மன்னர் கி.மு.2 ஆம் நூற்றாண்டில் காஞ்சிபுரத்திற்கு வந்தார் எனச் சான்றுகள் இருப்பதாக வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

தென் இந்தியாவில் தற்பொழுது சென்னைக்கு அருகிலுள்ள காஞ்சிபுரத்தைப் பண்டைய சீனர்கள் குவாங்ஜி (Huang Zhi) என்று அழைத்ததாக இன்றைய சீன வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றார்கள். குவாங்ஜி என்ற பெயருடைய தேசம் சீனாவிற்குள் கிடையாது. குவாங்ஜியைப்பற்றி பண்டைய சீனவரலாற்றுக் குறிப்பேடுகளிலும் இலக்கியங்களிலும் காணலாம். ஹன்-ஷு (Han-Shu) ஹன் வம்ச வரலாறு) எனும் சீன வரலாற்றில் மன்னன் ஹன்வூதி (Han-Wu-Di, கி.மு.140-87) காலம் முதல் சீன அரசுக்கும் குவாங்ஜீ தேசத்திற்கும் தொடர்பு உண்டு என்று குறிப்பு உள்ளது.

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் யுவான் சுவாங் (Yuan-Swang) இந்தியாவிற்கு வந்து 17 ஆண்டுகள் தங்கியிருந்தபொழுது பல்லவர் ஆண்டு வந்த காஞ்சிபுரம் வந்தார். சீனாவிற்குத் திரும்பியபிறகு இந்தியாவைப்பற்றி ஒருநூல் எழுதினார். இந்தியப் பயணக்குறிப்புகள் எனும் தலைப்புள்ள இந்நூலின் பத்தாவது பிரிவிலே திராவிட நாட்டின் (தாலோபிது Daluopitu) தலைநகரம் காஞ்சிபுரம் என்னும் தலைப்பிலே தமிழ்நாட்டைப் பற்றி ஒரு கட்டுரையை விரிவாக எழுதியுள்ளார். யுவான்சுவாங் குறிப்பிட்ட காஞ்சிபுரமும், மேலே குறிப்பிடப்பட்ட குவாங்ஜீ தேசமும் ஒரே இடத்தைக் குறிக்கின்றன எனத் தற்கால சீன வரலாற்று ஆய்வாளர்கள் கூறியிருக்கின்றார்கள்.

வரலாற்று ஏடுகளில் மட்டுமல்ல சீனப்பழங்கால இலக்கியங்களிலும் குவாங்ஜீ தேசத்தைப்பற்றிக் குறிப்புகள் வருகின்றன. உதாரணமாக, பன்கூ (Bangu) எனும் எழுத்தாளரின் ஒரு கவிதையிலும் தூ-தோ (DuDu) என்பாருடைய கவிதையிலும் குவாங்ஜீதேசம் பற்றிக் குறிப்புகள் உள்ளன. இக்கவிஞர்கள் பண்டைய ஹன் வமிசக் காலத்துக் கவிஞர்கள். ஆகையால், சீனப் பொது மக்களுக்கு அக்காலத்திலேயே தென் இந்தியாவைப்பற்றி, குறிப்பாகக் காஞ்சிபுரத்தைப்பற்றித் தெரிந்திருக்கின்றது. ஆகையால், கடல்மூலம் வாணிப, அரசியல் தொடர்பு சீனாவிற்கும் தமிழ்நாட்டிற்கும் இடையே இருந்தது என இச்சான்றுகள் காட்டுகின்றன.

பல்லவர்கள் காலத்திலும், சோழர்கள் காலத்திலும் சீனாவிற்கும் தமிழ்நாட்டிற்கும் தூதுவரகத் தொடர்பு இருந்ததாகச் சான்றுகள் கிடைக்கின்றன. காஞ்சிபுரத்திலிருந்து கி.பி.எட்டாம் நூற்றாண்டிலேயே ஒரு தூதுவரகக்குழு சென்றதாகக் கூறப்படுகின்றது. இம்மாதிரியான தொடர்பு இருந்ததாகப் பண்டைய சீன நூல்களும் கூறுகின்றன. இந்நூல்கள் இராசராசசோழனை லோ-சா-லோ-சா (Lo-tsa-Lot-Sa) என்று அழைக்கின்றன. ஆகையால் 11ஆம் நூற்றாண்டில் சுங் வமிசத்து சீன அரசாங்கத்திற்கும் தென் இந்திய சோழ அரசர்களுக்கும் தூதுவத் தொடர்பு இருந்தது. கி.பி.1015இல் முதலாம் இராசஇராசன் அனுப்பிய ஒரு தூதுக்குழு சீனாவிற்கு வந்தது. இத்தூதுக் குழுவில் 52 பேர் இருந்தனர். தூதுக்குழுவினர் மூலம் சோழஅரசன் பரிசுக் கடிதம் அளித்ததாக சோங்-ஷீ (Song Shi) எனும் சுங் வமிச வரலாற்று நூலிலே குறிப்புகள் இருக்கின்றன. மேலும் 1150 நாள்கள் தமிழ் நாட்டிலிருந்து சீனாவுக்குக் கப்பல் பயணம் செய்த பிறகு சீனாவிற்கு வந்து சேர்ந்ததாகக் குறிப்பு இருக்கின்றது. ஆகையால் இத்தூதுக்குழு தமிழ்நாட்டைவிட்டுக் கிளம்பும்போது இராசராசன் உயிரோடு இருந்தான். ஆனால் இத்தூதுக்குழு சீனாவிற்கு

வந்து சேர்ந்தசமயம் அவன் உயிரோடு இல்லை. கி.பி.1014 ஆம் ஆண்டு இராசராசன் இறந்தான். இராசேந்திரன் அதே ஆண்டில் பேரரசனானான். சில ஆண்டுகளுக்குப் பிறகு கி.பி.1015-19இல் தங்கம் நன்கொடையாக அளிக்கப்பட்டது. இவற்றில் சில சீனாத்தங்கம் (Chinakkanakam) என்று அழைக்கப்பட்டது, கேதா அரசனின், உதவியாளர் ஒருவர் பிராமணர்களுக்கு இச்சீனாத் தஙகம் அளித்ததாகக் குறிப்புகள் உள்ளன. மேலும் கி.பி.1020, 1023, 1077 ஆம் ஆண்டுகளிலும் தமிழ்நாட்டிலிருந்து தூதுவர்கள் சீனாவுக்கும் சென்றதாகவும் சீன நூலகளில் குறிப்புகள் இருக்கின்றன. கி.பி.1077இல் குலோத்துங்கசோழன் தூதர்களைச் சீனாவுக்கு அனுப்பினான் என்று குறிப்பு உள்ளது. குலோத்துங்கச் சோழனைச் சீனமொழியில் சீ-லோ-லோ-சா-இன்-தோ-சு-லோ (Shi-do-lo-cha-yin- to-lo-chu-lo) என்று நூல்கள் அழைக்கின்றன.

போகர், புலிப் பாணி ஆகிய இரு சித்தர்களும் சீனர்கள் என்று ஒரு செவி வழிச் செய்தி நிலவுகிறது. சீனாவில் உள்ள சென்புத்த சமயம் காஞ்சி இளவரசன் புத்தவர்மனால் தோற்றுவிக்கப்பட்டது என்பர். உண்மையில் காஞ்சியிலிருந்து போதி தர்மா (Bodhi dharma) என்பவர் சீனாவுக்குச் சென்று புத்த சமயம் பரப்பினார். அவர் மூலம் சீனாவிலிருந்து ஜப்பானுக்குச் சென் புத்தசமயம் சென்றதாக வரலாற்று குறிப்புகள் உள்ளன. சமீபகாலத்தில் (South China) தென்சீனாவில் ஃபுஜியன் (Fujin) மாநிலத்தில் சென்கு (Quan-zhou) நகரத்திலே ஓர் கல்வெட்டு கண்டெடுக்கப்பட்டது. இக் கல்வெட்டு தமிழ் மொழியிலே எழுதப்பட்டிருக்கின்றது. இக்கல்வெட்டின் அடியிலே மட்டும் சீனமொழியில் எழுதியிருக்கின்றது. இக் கல்வெட்டு 13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டாகும். தமிழ்ப் பல்கலைக் கழக கல்வெட்டுத்துறை வெளியிட்ட ஓர் நூலில் இக்கல்வெட்டின் படமும், குறிப்பும் இருக்கின்றன.

இன்றைய சீனா

தமிழர்கள்

இன்றைய சீனாவில் தமிழ்க் கல்விக்கு வாய்ப்பு ஏதும் இல்லை. எனினும் சீனாவில் தமிழுக்கு இடம் உண்டு. பொதுவாகச் சீனாவில் நிரந்தரமாகத் தங்கி வசித்துவரும் இந்தியர்களே இல்லை எனலாம். சாங்காய், டியன்ஜின் முதலிய துறைமுக நகரங்களில் துறைமுகப் பணியாளர்களாகவும், சில்லறை வியாபாரிகளாகவும் ஒரு சில இந்தியர் இருந்ததாகக் கூறப்படுகிறது.

தற்போது சீனாவில் வெளிநாட்டுத் திறப்புக்கொள்கை நடை முறைப்படுத்தப்படுகின்றது. எனவே, வாணிக அல்லது தொழில் நிறுவனத்தைத் தொடங்கும் பொருட்டு இனிமேல் இந்தியர்-தமிழர் எவரேனும் சீனா வந்து தங்க வாய்ப்பு உண்டு.

தற்போது சீனாவில் பீகிங்கில் பணிபுரிந்துவரும் ஒரேஒரு இந்தியத் தமிழர் டாக்டர் ந.கடிகாசலம், சீனாவில் பிற நகரங்களில் தமிழர் எவரும் பணிபுரிவதாகத் தெரியவில்லை என்று கடிகாசலம் கூறுகின்றார்.

மருத்துவம், பொறியியல், சீனமொழி ஆகியவற்றைக்கற்கும் பொருட்டு, இலங்கையிலிருந்து ஆண்டுதோறும் சுமார் ஏழுமுதல் பத்து மாணவர்கள் வரை சீனாவுக்கு வருகின்றனர். அவர்களில் மூன்று தமிழ் மாணவர்கள் காணப்படுவதுண்டு. சீன மொழி கற்கும் பொருட்டு இந்தியாவிலிருந்து ஆண்டுதோறும் ஐந்துமுதல் ஏழு மாணவர்கள் வரை சீனாவுக்கு வருகின்றனர். இவர்களில் தமிழ் மாணவர் களைக் காண்பது அரிது. ஆனால் 1984ஆம் ஆண்டு வந்த மாணவர்களில் ஒரு தமிழர் இருந்தார்.

தமிழ்க்கல்வி.

சீனாவில் தமிழர்களே இல்லை என்ற நிலையில் தமிழ்ப்பள்ளிக்கூடம் உண்டா என்ற வினாவுக்கு இடமில்லை. பீகிங்கில் உள்ள தமிழர் தம் குழந்தைகள், இந்தியத் தூதரகப் பள்ளியில் சேர்ந்து கல்வி கற்கலாம். அங்குத் தமிழ் கற்பிக்கப்படுவதில்லை. பிற பாடங்களுடன் ஆங்கிலமும், இந்தியும் மட்டுமே கற்பிக்கப்படுகின்றன. சர்வதேசப் பள்ளியில் சேர்ந்து படிக்கலாம். அங்குப் பிற பாடங்களுடன் ஆங்கிலம் மட்டுமே கற்பிக்கப்படுகின்றது.

அப்படி இருந்தும் சீனாவில் தமிழ்க் கல்விக்கு வாய்ப்பு இல்லை எனக் கூற முடியாது. பீகிங் வானொலியில் தமிழ் ஒலிபரப்புத் தொடங்கப் பட்டதால், அங்குப் பணி புரியத் தேர்ந்தெடுக்கப்பட்டோர்க்கெனப் பீகிங் ஒலிபரப்புக் கல்லூரியில் 1960ஆம் ஆண்டில் தமிழ்க் கல்வி தொடங்கப்பட்டது. படிப்புக்காலம் 4 ஆண்டுகள். இருபதுபேர் தமிழ் மொழியையும் இலக்கியத்தையும் கற்றனர். திருநாதன் (மலேசியத் தமிழர்) திருமதி சாரதா சர்மா (இந்தியத் தமிழர்) ஆகியோர் தமிழைக் கற்பித்தனர். அடுத்த கட்ட வகுப்பு 1964 முதல் 1968 வரை நடைபெற்றது. இதில் மேலும் பதினேழுபேர் சேர்ந்து தமிழைக் கற்றனர். 1976இல் சீனாவில் தோன்றிய 'பண்பாட்டுப் புரட்சியின்' காரணமாக இக் கல்லூரியில் 1968க்குப் பின்னர் தமிழ்க்கல்விக்கு வாய்ப்பில்லாது போயிற்று. எனினும் 1984ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் இக் கல்லூரியில் தமிழ்க்கல்வி மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது. (தமிழ்தவிர ஆங்கிலம், துருக்கி, வங்காளம், பிலிபினோ, ஆகிய மொழிகளும் இங்குக் கற்பிக்கப்படுகின்றன). மூன்று சீன மாணவர்கள் இவ்வகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஆங்கிலம், அரசியல் முதலிய பாடங்களை முதலிரு ஆண்டுகளில் படித்தபின்னர், மைசூரிலும் சென்னையிலும் நான்கு ஆண்டுகள் தமிழைக் கற்பார்கள். பின்னர் இம்மூவரும் பீகிங் வானொலியின் தமிழ்ப் பிரிவில் சேர்வர். ஏனெனில் இப்பணிக்காகவே தற்போது அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

பீகிங் வானொலி நிலையம்

1963 முதல் பீகிங் வானொலி நிலையத்தில் தமிழ்ப் பிரிவு உண்டு. நாள்தோறும் ஒருமணிநேரம் (அரைமணி நேரம் வீதம் இருமுறை) நல்ல தமிழ் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகின்றன. இசை, பண்பாடு சீனப்பொருளாதாரம், செய்திகள் அனைத்துலக விவகாரங்கள் பற்றிய விவாதம் இந்நிகழ்ச்சிகளில் இடம் பெறுகின்றன. 1960 முதல் 1968 வரை பீகிங்கில் தமிழ் பயின்ற பதினோருபேர் இங்குப் பணிபுரிந்தனர். அயல்நாட்டு நிபுணர் என்ற நிலையில் இலங்கையைச் சேர்ந்த திரு மாத்தளை கந்தசாமி திரு சின்னத்தம்பி ஆகிய

இரு தமிழர்கள் பணிபுரிந்துள்ளனர். 1983 முதல் டாக்டர் நா.கடிகாசலம் நிபுணராகப் பணிபுரிந்து வருகின்றார். பீகிங் வானொலி நிலையம் தமிழ்ப் புத்தகங்களை வாங்குகின்றது. பீக்கிங் சீனச் சமூக அறிவியற் கழகத்துத் தென், தென்கிழக்காசிய ஆராய்ச்சி நிறுவனத்தின் நூலகத்தில் தற்சமயம் சுமார் 300 தமிழப் புத்தகங்கள் இருக்கின்றன. சென்னைப் பல்கலைக்கழகம் சுமார் 100 புத்தகங்களை அன்பளிப்பாக அனுப்பியது. தவிர தினமணி, கலைமகள், தினமணிக்கதிர் முதலிய இதழ்களும் வருகின்றன.

தமிழ் இடம் பெற்றிருக்கும் பிற அலுவலகங்கள்

சீனாவில் தமிழ் இடம் பெற்றிருக்கும் பிற அலுவலகங்கள் பின்வருவனவாகும். 1. தென், தென் கிழக்காசிய ஆராய்ச்சி நிறுவனம். 2.சீனச் சமூக அறிவியற் கழகத்தின்கீழ் உள்ள தென்கிழக்காசிய ஆராய்ச்சி நிறுவனத்தில் தமிழாராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. 2. சீன கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டியின் (அயல்நாட்டுத்) தொடர்புத்துறை 3. சீனமக்கள் குடியரசு அரசாங்கத்தின் பாதுகாப்பு அமைச்சகம் ஆகிய இரண்டிலும் தமிழ்மொழி பெயர்ப்பாளர் உண்டு. 4. அயல்மொழிப்பதிப்பகம்: சீனா பற்றிய நூல்களையம், சீன இலக்கியங்களையும் அந்நியமொழிகளில் வெளியிடுவது இப்பதிப்பகத்தின் பணியாகும். இங்கு, 1964 இல் தமிழ்ப் பிரிவு தொடங்கப்பட்டது. இலங்கையைச் சேர்ந்த இராணி சின்னத்தம்பி எனும் பெண்மணி இங்குப் பணியாற்றினார். 1975இல் தமிழ்ப்பிரிவு மூடப்பட்டது.

டாக்டர் ந.கடிகாசலம் கூறுகின்றார்: "பீகிங்கிலுள்ள அயல்மொழிக் கல்லூரியில் தமிழ்க் கல்வியைத் தொடங்கவும், அயல்மொழிப் பதிப்பகத்தில் தமிழ்ப் பிரிவை மீண்டும் தொடங்கவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டால் காலம் கனியும் போது உறுதியாக நிறைவேறக்கூடும். முதல் வகுப்பு முதல் முனைவர் பட்டம் வரை தமிழ்க்கல்வி இல்லாது போயினும் பீகிங் வானொலி நிலையம் உள்ள வரை சீனாவில் தமிழ் ஒலித்துக்கொண்டே இருக்கும்."

தமிழறிந்த முக்கிய சீனர்கள்

1. சுன்-கோ-யாங் *(Sun-guoqiang)* பீகிங் வானொலி நிலையத்தில் தமிழ்க் குழுவின் தலைவராகப் பணியாற்றியவர். இனிமையான குரலிலே தமிழை நன்றாக உச்சரிக்கும் இவர் ஒலிபரப்பாளராகவும் அறிவிப்பாளராகவும் பல ஆண்டுகள் பணிபுரிந்து வருகின்றார். தமிழை நன்றாக பேசுவார். ஐந்தாம் உலகத் தமிழ்நாடு மதுரையில் 1981 ஜனவரி மாதம் நடந்தபோது இவர் கலந்து கொண்டார். இவரே முதன் முதலாக இம்மாதிரியான மாநாட்டிற்கு வந்த ஒரு சீனப் பிரதிநிதி.

2. சாங்-சீலின் *(ZwangXilin)* 1945ஆம் ஆண்டு குவாங்துங் *(Guang-Dong)* மாநிலத்தில் பிறந்த இவருக்குச் சீனம், தமிழ், ஆங்கிலம் தெரியும். இவர் பீக்கிங்கில் சீனச்சமூக அறிவியற் கழகத்தின்கீழ், தென், தென்கிழக்காசிய ஆராய்ச்சி நிறுவனத்தில் *(Institute of South & Southeast Asian Studies, Chinese Academy of Social Sciences, Beijing, China)* பல்லாண்டுகளாகத் தமிழ் இலக்கியத்தை ஆராய்ச்சி செய்து வருகின்றார். சீன நாட்டின் இந்திய இலக்கிய ஆராய்ச்சிச் சங்கத்தில் *(Chinese Society of Indian Literature)* பொதுத் துணைச்

செயலாளராகப் பணிபுரிகின்றார். அவ்வாராய்ச்சி நிறுவனத்தில் 4 துறைகள் உள்ளன. 1. தென்னாசியநாட்டு அரசியல் பொருளாதாரத்துறை, 2. தென்னாசியநாட்டு சமய-மெய்யறிவு வரலாற்றுத்துறை, 3.தென்னாசியநாட்டு சமூகப் பண்பாட்டுத்துறை, 4.தென் கிழக்காசியததுறை. சாங்-சீ-யின் சமூகப் பண்பாட்டுத்துறையின் துறைத்தலைவர். 1964 முதல் 1968 வரை பீகிங்-வானொலி கழகத்து அயல்மொழித் துறையில் 4 ஆண்டுகள் தமிழ் பயின்றார். 1975-77 ஆண்டுகளுக்கிடையே இரண்டு ஆண்டுகள் இலங்கையில் வித்தியலங்கார வளாகத்தில் தமிழ் இலக்கியத்தைக் கற்றார். ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டில் கலந்துகொள்ள இவருக்கு அழைப்பிதழ் வந்தது. இவருக்குத் தமிழ் இக்கால இலக்கியத்தில் நல்ல ஈடுபாடு உண்டு. அகிலன் படைத்த "பெண்", "பொன்மலர்' சிறுகதைகள் 32 முதலியவற்றைச் சீனமொழியில் மொழிபெயர்த்திருக்கின்றார். 25 ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதியிருக்கிறார். (வெளியிட்டன) இவர் மிகவும் அழகாகத் தமிழ் பேசுவார், தமிழிலும் அழகாக எழுதுவார். 1987-88ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக் கழக இலக்கியத்துறையிலே ஆய்வாளராக சேர்ந்துள்ளார். இவர்தான் முதன்முதலாக சங்க இலக்கியத்தில் ஈடுபட்டுள்ள சீனர். இவர் தமிழ் இலக்கியத்தில் செய்யவிருக்கும் பணி: 1.குறள்-கன் பூசியன் - ஒப்பீடு, 2.தமிழ்-சீனம் அகராதி, 3.தமிழ்ப் பண்பாட்டு ஆய்வுக் கட்டுரைகள், 4. கல்கியின் அலைஓசை, அகிலனின் பாவை விளக்கு மொழிபெயர்ப்பு, 5.சங்க இலக்கிய ஆராய்ச்சிக் கட்டுரைகள்.

செங்-ஞெ-சியாங் *(Zheng Rui-Xilang)* இவர் பீக்கிங் சர்வதேச பிரச்சனைகள் ஆராய்ச்சி நிலையத்தில் பணிபுரிகின்றார். அலுவலகத்திலே தமிழ் பயன்படுத்த வாய்ப்பில்லாமலிருந்தாலும் ஓய்வு நேரத்தில் தமிழ்மொழி பெயர்ப்பில் ஈடுபடுகின்றார். இலங்கை எழுத்தாளர் இளங்கீரன் எழுதிய "நீதியே நீ கேள்"? எனும் தமிழ் நாவல் ஒன்றைச் சீன மொழியில் மொழி பெயர்த்து சமீபத்தில் வெளியிட்டார். தற்சமயம் ரகுநாதன் எழுதிய 'பஞ்சம் பசியும்' எனும் நாவலைச் சீன மொழியில் மொழிபெயர்த்துக் கொண்டிருக்கிறார்.

வாங்-பாஓ-ஷி *(Wang Bao-Shi)* இவர் பீச்சிங் வானொலி நிலையத்துத் தமிழ்க் குழுவில் பணிபுரிகிறார். 1983ஆம் ஆண்டில் தமிழ்ப் பல்கலைக் கழகத்து அயல் நாட்டுத் தமிழ்க் கல்வித்துறையில் தமிழ் மொழியைப் பயின்றவர். டாக்டர் மு.வ.எழுதிய "கரித்துண்டு" என்னும் நாவலைச் சீன மொழியில் பெயர்த்து எழுதினார்.

சாங்-வெய்-சுன் *(Zhang Wei-Jun)* இவரும் தமிழை நன்கு கற்றறிந்தவர். 5ஆவது உலகத்தமிழ் மாநாட்டில் கலந்து கொண்டார். ஈழத்தமிழர் பிரச்சினை பற்றி சில கட்டுரைகளை எழுதினார்.

முடிவுரை

தற்பொழுது சீனாவில் தமிழ் தெரிந்தவர்கள் 40 பேர். பொது மக்களுக்குப் பொதுவாக இந்தி, வங்காளம் ஆகிய இந்திய மொழிகளைப் பற்றித் தான் தெரியும். ஆனால், சமீப காலத்தில் சாங்-சீயின்,சங்க இலக்கியம், தற்கால இலக்கியம் முதலியவற்றை மொழிபெயர்த்து மொழி ஆராய்ச்சியில் மிகுதியாகக் கவனம் செலுத்துவதால் சீனர்களுக்கும் தமிழ்நாட்டைப்பற்றியும் தமிழைப்பற்றியும் புரிந்துகொள்ள சிறிதளவு அக்கறை தோன்றியிருக்கின்றது. கம்ப இராமாயணம், சிலப்பதிகாரம், திருக்குறள், பாரதியார் கவிதைகள் முதலியனவும் மு.வ. அகிலன்; கல்கி, நா.பார்த்தசாரதி, ஜெயகாந்தன், தி. ஜானகிராமன், சை. கணேசலிங்கம் முதலிய தமிழர்களின் தமிழ் நூல் களின் சீனமொழி மொழிபெயர்ப்பு முயற்சி மூலமும் தமிழ்த்தென்றல் சீனாவில் வீசத் தொடங்கியிருக்கின்றது.

பீஜித்தீவு

ஆஸ்திரேலியாவின் கிழக்கில் சுமார் 2000 மைல் தொலைவில் தென் பசிபிக் பெருங்கடலில் 7055 சதுர மைல் பரப்பில் சிதறிக்கிடக்கும் 300 தீவுக் கூட்டங்களைத்தான் பீஜித்தீவு என அழைக்கின்றோம். இத்தீவின் தலை நகரம் சுவா. இத்தீவில் பெரும்பாலும் இந்தியர்களும் பீஜியர்களுமே வாழ்கின்றார்கள். பீஜித்தீவில் பேசப்படும் முக்கிய மொழிகள் பீஜியன், இந்தி, ஆங்கிலம். தமிழர்கள் இத்தீவில் வாழ்ந்தாலும் தமிழ் ஒரு முக்கிய மொழியாகக் கருதப்படவில்லை. பிரிட்டிஷ் காலனியாக இருந்த பீஜித்தீவு 1970இல் பூரண சுதந்திர நாடாயிற்று.

பீஜித்தீவில் தமிழர் குடியேற்றம்

பண்டைக் காலத்திலிருந்தே தமிழர்களும், பிற இந்தியர்களும் தென், தென் கிழக்காசிய, கிழக்காசிய நாடுகளுக்குச் சென்றதாகச் சான்றுகள் இருக்கின்றன. ஆனால், தென்கிழக்காசிய நாடுகளுக்கு அருகே இருக்கும், இந்தியாவிலிருந்து 12,000 மைல் தொலைவிலிருக்கும் பீஜித்தீவுக்குப் பண்டைய காலத்தில் இந்தியர்கள் சென்று குடியேறியதாகச் சான்றுகள் இல்லை. திரைகடல் ஓடித் திரவியம் தேடிய பண்டைய இடைக்காலத் தமிழர்கள் பீஜித்தீவுக்குச் சென்றதில்லை என்று கூறலாம்.

1874ஆம் ஆண்டு பீஜித்தீவு பிரிட்டனின் முழுக்குடியேற்றமாக மாறியது. கொப்பரைத் தேங்காய், சர்க்கரை முதலிய முக்கிய ஏற்றுமதிப் பொருள்கள் மூலம் 1877ஆம் ஆண்டளவில் அதிகச் செல்வம் கிடைத்தது. இதன் பயனாகக் கரும்புத் தோட்டம் அமைப்பதற்காக இந்தியாவின் பல பகுதிகளிலிருந்து, குறிப்பாக பீகார், வங்காளம், பஞ்சாப், தமிழ்நாடு முதலிய பகுதிகளிலிருந்து இந்தியத் தொழிலாளிகள் பீஜித்தீவுக்குக் கொண்டுவரப்பட்டனர். 1879ஆம் ஆண்டில்தான் முதலாவதாக வந்த இந்தியர்கள் பணிபுரிய வந்தனர். முதலில் லியோனிதாஸ் என்ற கப்பலில் வந்த 1500 மக்களில் மூன்றில் ஒரு பங்கினர் கொள்ளைநோயால் மாண்டனர். தொழில் முறைக்கட்டுப்பாடு ஒப்பந்தம் செய்துகொண்டு (Indenture System or the so called Girmit system.) இவர்கள் பீஜித்தீவுக்குச் சென்றனர். பீஜித்தீவில் குடியேறியிருந்த ஐரோப்பியத் தோட்ட முதலாளிகளிடம் கூலி வேலை செய்து பிழைக்கவே இவர்கள் வந்தனர்.

ஆங்கிலேய அரசு ஏன் இந்தியாவிலிருந்து கூலியாட்களைக்கொண்டு வந்தது? இதற்குப் பல காரணங்களை எடுத்துக் கூறலாம். பீஜித்தீவில் ஆட்சிசெய்த முதல் ஆளுநர் (First Substantive Governor). சர் ஆர்தர் கார்டன் பீஜித்தீவின் பழக்கவழக்கங்கள், மரபுமுறைகள், பண்பாடு முதலியவற்றைப் பாதுகாக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன்

செயல்பட்டார். ஆகையால், பீஜியில் நிலவிய வாழ்க்கை முறையில் தலையிடுவதை அவர் விரும்பவில்லை. மேலும், சர் ஆர்தர் கார்டன் ஏற்கனவே மொரீசியஸ், டிரினாட் முதலிய பகுதிகளில் ஆளுநராகப் பணியாற்றி அனுபவம் பெற்றவர், இந்நாடுகளில் பணிபுரிந்த தொழில்முறை கட்டுபாட்டு ஒப்பந்தக் கூலிகள் தொடர்பான அனுபவம் உள்ளவர். இக்கூலிகள் கடுமையாகவும் திறமையாகவும் பணிபுரிவார்கள் என இவருக்குத் தெரியும். இம்மாதிரியான திறமையான கூலியாட்களை மற்ற அயல் நாடுகளிலிருந்து வரவழைப்பதைவிட இந்தியாவிலிருந்து வர வழைப்பது சுலபம்; ஏனென்றால் இந்தியா பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்தது. மேலும் இந்தியாவில் மக்கள் தொகை அதிகம், வேலையில்லாத் திண்டாட்டமும், வறுமையும் மிகுதியாக இருந்தது. தவிர, இச்சமயத்தில் கடினமாகப் பணிபுரிவதைப் பீஜியர்கள் விரும்பவில்லை.

பிரிட்டிஷ் அரசால் நியமனம் செய்யப்பட்ட முகவர்கள் (Agent) கூலியாட்களைப் பணியில் சேர்க்கும் வேலையில் ஈடுபட்டார்கள். இவர்களை 'அர்காதிஸ்' (Arkatis). என்று அழைத்தார்கள். பீஜித்தீவில் பணிபுரியும் ஆட்களைத் தேடுவதற்காக இவர்கள் இந்தியா முழுவதும் சென்றார்கள். பீஜித்தீவு வளமையுள்ள நாடு என ஏமாற்றி, மக்களைக் கவர்ந்து இணங்கச்செய்து, புகழ்ச்சியாகப் பேசி வசப்படுத்தி, வற்புறுத்தித் தூண்டி, மயக்கிச் சிக்கவைத்து, நயமாக ஏய்த்து, பீஜித்தீவுக்கு அழைத்துச் சென்றனர். ஒரு சிலர் சுயமாகவே விருப்பத்துடன் சென்றனர். 100 ஆண்டுகளுக்கு மூன்று பெண்களே முதலில் பணிக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டனர். பிறகு இதுவே 100க்கு 20 பெண்ணாக மாறி இறுதியில் 5க்கு 1 பெண்ணாக மாறியது. பீஜித்தீவுக்கு கப்பலில் அழைத்துச் செல்லும் வரை இவர்களைக் கல்கத்தா, மதராஸ் முதலிய நகரங்களிலிருந்த தொழிலாளிகள் கிடங்குகளில் தங்க வைத்தார்கள்.

தொழிற் முறைக் கட்டுப்பாடு ஒப்பந்தத்தின்படி ஒப்பந்தம் செய்துகொண்ட தொழிலாளி ஐந்து ஆண்டுகளுக்குப் பணிபுரிய வேண்டும்; விரும்பினால் மேலும் ஐந்து ஆண்டுகளுக்கும் ஒப்பந்தம் செய்து கொள்ளலாம். பத்து ஆண்டுகளுக்குப்பின் அரசு செலவில் இந்தியாவிற்கு மீண்டும் திரும்பலாம். ஒப்பந்தம் செய்து கொண்டவர்கள் திகைக்கவைக்கிற காட்டுமிராண்டித்தனமான சூழ் நிலையில் பணிபுரிய கட்டாயப்படுத்தப்பட்டார்கள். ஒப்பந்தத்தை மீறும் கூலியாட்கள் நீதி மன்றத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள்; அபராதம் அளிக்கக் கட்டாயப்படுத்தப்பட்டார்கள், சிறையிலடைக்கப்பட்டார்கள் குறிப்பிட்ட கால கெடுவுக்குள் இட்டவேலையை செய்து முடிக்காவிட்டாலும் இம்மாதிரியான நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பீஜியில் தென் இந்திய சன்மார்க்க ஐக்கிய சங்கத்தை அமைத்த சென்னை மாகாணத்திலிருந்து சென்ற ஸ்ரீசாது குப்புசாமி தம்மைப்பற்றி தமது கைப்பட தமிழில் எழுதி வைத்துள்ள குறிப்பில் பின்வருமாறு கூறுகின்றார்:- 1912இல் 5 வருஷ அக்ரிமெண்டு ஒப்பந்தத்தில் சி.எஸ்.ஆர். கம்பெனி வேலைக்கு நான் வந்தபோது புருஷர்களும் ஸ்திரிகளும் ஒப்பந்தத்தில் வந்திருந்தார்கள். அச்சமயத்தில் சி.எஸ்.ஆர் கம்பெனி கொலம்பர்கள் என்னும் அதிகாரிகள் ஒப்பந்த முறையில் வந்த ஜனங்களுக்குத் தன் வாயால் சொல்வதே சட்டம். கொலம்பர்களுக்குக் கீழ் இருந்து வேலை செய்யும் அதிகாரிகளைச் 'சர்தார்' என்பார்கள். கொலம்பர்கள் வாயால் சொல்லும் வார்த்தைகளைச் சர்தார்கள் நடைமுறையில் நிறைவேற்ற வேண்டும். ஒப்பந்த ஆள்களுக்கு ஒவ்வொரு தினமும்

இவ்வளவு வேலை செய்ய வேண்டும் என்ற திட்டங்களைக் கொலம்பர்கள் சர்தார்களுக்குச் சொல்வார்கள். சொல்லும் அளவுக்குத் திட்டப் பிரகாரம் வேலை செய்து முடிக்காத ஆள்களுக்குப் புருஷர்களாயினும் பெண் மக்களாயினும், சர்தார்களும் கொலம்பர்களும் அவர்களைக் கீழே தள்ளி மார்பு மேல் குத்தினார்கள். உதைத்தார்கள். கூலியைக் குறைத்தார்கள். வாயால் சொல்லத் தகாத அசிங்கமான வார்த்தைகளால் புருஷர்களையும் ஸ்திரிகளையும் திட்டினார்கள். இதுவன்றிக் குறித்த அளவு திட்டபடி வேலை செய்து முடிக்காதைப்பற்றிச் சில சமயங்களில் கொலம்பர்கள் மாஜிஸ்ட்ரேட்டுகளிடம் போய்ச் சொல்லுவார்கள். இதைப் பற்றிக் கோர்ட்டில் ஆஜராக வேண்டும் என்று சம்மனும் வரும். குறித்த அளவுப்படி செய்யாத குற்றத்தால் கோர்ட்டுகளில் அபராதமும் விதிப்பதுண்டு".

"கரும்பு எஸ்டேட்டுகளில் சாதாரணமாய் ஜனங்கள் செய்து வந்த வேலைகளாவது. ஏர் உழுதல், கரும்பு நடல், புல்வெட்டுதல், மோரி வெட்டுதல், கரும்பு வெட்டுதல். கரும்புக்கு உப்பு எரு முதலியன போடுதல்".

"இதுவும் தவிர ஒப்பந்தக் கூலிகளாகிய புருஷர்களையும் ஸ்திரிகளையும் சர்தார்மார்களும் கொலம்பர்களும் கரும்பு வயல்களில் செய்யும் இம்சைகளைப் பொறுக்க முடியாமல் சர்தார்களையும் கொலம்பர்களையும் எதிர்த்து அடித்து அக்குற்றங்களுக்காக, சர்க்காரால் தண்டனை விதிக்கப்பட்டு ஜெயிலுக்குப் போய் வந்தவர்கள் அநேகம் பேர்கள்".

"அக்ரிமெண்டில் கொண்டுவந்தவர்களுக்கு,சராசரி நான்கு புருஷர்களுக்கு மத்தியில் ஒரு ஸ்திரிவீதம் வந்தார்கள். இதனால் எண்ணற்ற கொடுமைகளும் கொலைகளும் நடந்தன. இக்குற்றங்களால் தூக்கு தண்டனையும் அடைந்தார்கள்".

"பாரத தேசத்திலிருந்து பீஜிக்கு ஐந்து வருஷ அக்ரிமெண்டில் வந்தவர்களுக்கு அக்ரிமெண்டின் கெடுவு தீர்ந்துவிட்ட ஜனங்கள் கம்மித்திகளிடம் லீஜின் பேரில் நிலம் பிடித்துக் காடு வெட்டிப் பண்படுத்தி விவசாயம் செய்தார்கள். சிலர் சி.எஸ்.ஆர் கம்பெனி இடமே வேலையும் செய்தார்கள். மற்றும் கம்பெனிகளிலும் வேலை செய்தார்கள். சிலர் சொந்த வியாபாரம் செய்து வந்தார்கள். இப்படி, சுயமாய்ப் பாடுபட்டு வீடுவாசல்களை அமைத்துக்கொண்டு குழந்தை குட்டிகளுடன் ஜீவித்தார்கள்".

ஆள் பிடித்துக் கொணரும் கங்காணி முறைமூலம் 1879-1916க்கு இடையே 87 கப்பல்களில் 65,000 இந்தியத் தொழிலாளர்கள் வந்தனர். இவ்வாறு 38 ஆண்டுகளில் வந்த தென்னிந்தியர்களின் எண்ணிக்கை 16,615 ஆகும். அப்போது ஒரு நாள் சம்பளம் 10 அணா (1சிலிங்) ஓர் அறையில் ஒரு குடும்பம் வாழ்ந்தது. இத் தொழிலாளர்கள் துன்பத்தைப் பற்றிப் பாரதியார் பின்வருமாறு பாடுகின்றார். தெற்கு மா கடலுக்கு நடுவினிலே அங்கோர் கண்ணற்ற தீவினிலே

கரும்பு தோட்டத்திலே - அவர்
கால்களும் கைகளும் சோர்ந்து விழும்படி
வருந்துகின்றனரே ஹிந்துமாதர் தன்
னெஞ்சு கொதித்து கொதித்து மெய்
சுருங்குகின்றனரே.

1880ஆம் ஆண்டிலிருந்து சுமார் 14,000 கரும்பு பயிரிடும் விவசாயிகள் கரும்புத் தோட்டத்தில் பணிபுரிந்தார்கள். இவர்களில் 90 விழுக்காடு இந்தியர்கள். இவர்களில் பாதிக்கு மேல் ஆங்கில வாணிக சங்கத்தின் குத்தகைக்காரர்களாகப் பணிபுரிந்தனர். பீஜித் தீவில் இருக்கும் மொத்த நிலத்தில் ஐந்தில் ஒரு பங்கு வேளாண்மை செய்வதற்குப் பயன்பட்டது. இதில் மூன்றில் ஒரு பங்கு நிலத்தில் கரும்பு பயிரிட்டார்கள். வடக்குக் கரையிலும் விடி லெவு என்னுமிடத்திலும் கரும்பு மிகுதியாகப் பயிரிடப்பட்டது பீஜித்தீவின் மொத்த ஏற்றுமதியில் பாதிக்குமேல் சர்க்கரை ஏற்றுமதி செய்யப்பட்டது.

1915ஆம் ஆண்டில் தீனபந்து ஆண்டரூஸ்துரை பீஜிக்கு விஜயம் செய்தார். அக்ரிமெண்டில் வந்த இந்தியர்களின் குறைகளைக் கேட்டு மனமிரங்கி, குறைகளை நிவர்த்திக்க கூடுமான வரையிலும் பீஜி சர்க்கார் இடத்திலும், சி.எஸ்.ஆர்.கம்பெனி இடத்திலும் பீஜி இந்தியர் பொருட்டுப் பேசினார். அப்போது நாள் ஒன்றுக்கு பன்னிரெண்டு பேனி கூலியாக இருந்தது. பதினைந்து பேனியாக தீனபந்துவின் முயற்சியால் கூலியும் உயர்ந்தது என்று சாது குப்புசாமி கூறுகின்றார்.

தொழில் முறைக்கட்டுப்பாட்டு ஒப்பந்தத்தை ஒழிக்க பீஜியில் முயற்சி எடுக்கப்படவில்லை. முதலில் இந்தியாவில்தான் இதற்கு எதிர்ப்பு தோன்றியது. ஜே.டபுள்யு பர்டன் என்பார் எழுதிய நூல் மூலம் இவ் ஒப்பந்தம் மூலம் தோன்றும் இன்னல்களைப்பற்றி இந்தியர்கள் அறிந்தார்கள். சி.எப்.ஆண்டுரூஸ், மகாத்மா காந்தியின் நண்பர், அவர் நேரடியாக பீஜித் தீவிற்கே வந்து இதன் மூலம் மக்கள் அனுபவிக்கும் துன்பத்தைப்பற்றி அறிந்தார். டோடா ராம் சனாதயா எனும் இந்தியர்தான் இவ் வொப்பந்தம் மூலம் 21 ஆண்டுகள் தான் பீஜியில் அனுபவித்த கஷ்டங்களைப் பற்றி வரைந்து ஓர் நூல் வெளியிட்டார். ஆகையால் தீனபந்து சி.எப்.ஆண்டுரூஸ், வெ.பியர்சன் போன்றவர்களின் தீரா உழைப்பினால் இறுதியில் 1917ம் ஆண்டளவில் இக் கொத்தடிமைக் குத்தகைச் சட்டம் ஒழிக்கப்பட்டது. இறுதியில் 1920 முதல் ஒரு விதக் கட்டுபாடும் இல்லாமல் பீஜித்தீவில் குடியேறுவதற்குத் தமிழர்களுக்கும் பிற இந்தியர்களுக்கும் வாய்ப்பு கிடைத்தது.

சுரண்டலை எதிர்த்து தமிழக சுவாமிஜியின் போர்:

பீஜித்தீவில் இருந்த கரும்புத் தோட்டங்கள் முழுவதும் சி.எஸ்.ஆர் என்ற ஆஸ்திரேலியா கம்பெனிக்குச் சொந்தம். ஒவ்வோர் இந்திய விவசாயிக்கும் பத்து ஏக்கர் நிலம் பத்து வருடங்களுக்குக் குத்தகை விடப்பட்டது. அதில் ஒரு வீடு கட்டிக் கொள்ளலாம். ஒன்பது ஏக்கர் கரும்பு சாகுபடி செய்ய வேண்டும். ஓர் ஏக்கரில் சொந்தமாகப் பயிரிடலாம். கரும்பு அனைத்தையும் வெட்டி வண்டி நிறைத்துக் கொடுக்க வேண்டும். அதனைக் கம்பெனியார் சர்க்கரை ஆலைக்குக் கொண்டு செல்வார்கள். அவர்கள் நிர்ணயிக்கும் குறைவான விலையைத்தான் விவசாயி பெற வேண்டும். சர்க்கரை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வார்கள். ஒரு டன் சர்க்கரையின் விலையில் முப்பது விழுக்காடு விவசாயிக்கு எழுபது விழுக்காடு அரைத்துச் சர்க்கரை செய்த கம்பெனிக்கு.

சி.எஸ்.ஆர். கம்பெனியார் ஆறுமாத காலம் கரும்பை அரைத்துப் பிழிகிறார்கள். ஆண்டு முழுவதும் இந்தியர்களை அரைத்துப் பிழிகிறார்கள்' என்று சுவாமி அவிநாசானந்தர் ஒரு முறை கூறினார்.

யுத்த காலத்தில் கரும்பின் விலை அடுப்பெரிக்கும் விறகின் விலையில் பாதியாகக் குறைந்துவிட்டது. விவசாயிகள் எவ்வளவோ முறையிட்டும் கம்பெனியார் ஒன்றும் செய்யவில்லை. அரசாங்கம் தலையிட மறுத்துவிட்டது.

விவசாயிகள் சுவாமி ருத்திரானந்தரிடம் முறையிட்டனர். சுவாமி ருத்திரானந்தர் மாயவரத்தை அடுத்த மணல்மேட்டில் ஒரு பிரபலமான மிராசுதார் குடும்பத்தில் பிறந்தவர். பெற்றோர் இட்ட பெயர் முத்துக்கிருஷ்ணன். சுவாமிஜி 'கல்கி' யின் பள்ளித் தோழர். 1937ஆம் ஆண்டு சுவாமி ருத்திரானந்தரைப் பீஜித்தீவுக்கு இராமகிருஷ்ண மடத்தார் அனுப்பினர். சுவாமிஜியும், தென்னிந்திய சன்மார்க்க ஐக்கிய சங்கத்தில் சட்ட ஆலோசகரான பாரிஸ்டர் அம்பாலால் படேலும் அவர்கள் வசித்த நந்தி என்ற ஊரிலிருந்து ஐந்து மைல் வட்டத்துக்கு மேல் செல்லக் கூடாது என்று அரசாங்கம் தடைவிதித்தது. விவசாயிகள் கட்டுப்பாடாக இருந்தனர். அரசாங்கத்தின் உதவி கொண்டு கம்பெனியார் பலவந்தமாகக் கரும்பு வெட்ட முயன்றனர். இதனைக்கண்டு விவசாயிகள், தங்கள் பயிர்களுக்குத் தங்கள் கையாலேயே தீயிட்டனர். தீவு முழுவதும் நெருப்பு. இதனை 'லங்கா தகனம்' என்றனர்.

அரசாங்கம் பணிந்தது

விவசாயிகளின் கட்டுப்பாட்டையும் தியாகத்தையும் கண்ட அரசாங்கம் பணிந்தது; விவசாயிகள் வெற்றி பெற்றனர். பீஜி சுதந்திரமடைந்த பின்னர் லார்டு டென்னிங் கரும்பு சம்பந்தமாக ஒரு தீர்ப்பு செய்தார். அந்தத் தீர்ப்பின்படி சர்க்கரை விலையில் விவசாயிக்கு 65 விழுக்காடும், ஆலை முதலாளிக்கு 35 விழுக்காடும் என்று ஏற்பட்டது. அது கம்பெனியாருக்குச் சாதகமாக இல்லை. எனவே தங்கள் நிலங்களையும் கரும்பு ஆலைகளையும் விற்க முடிவு செய்தனர். கரும்பு விவசாயத்தோடு சர்க்கரை உற்பத்தி விற்பனை ஆகிய எல்லாவற்றிலும் நாற்பத்தைந்து விழுக்காடு குத்தகைகாரர்களான இந்திய விவசாயிகளுக்கே வேண்டும் என்று கிளர்ச்சி செய்து வெற்றியும் பெற்றனர். ஆரம்பத்தில் அடிமைகளைப் போன்று ஒப்பந்தக் கூலிகளாகச் சென்ற தமிழர்களும், பிற இந்தியர்களும் இப்பொழுது ஆலை, நிலச் சொந்தக்காரர்களாகவும் இருக்கின்றனர். இதற்கு முக்கிய காரணம் சுவாமிஜியும் அம்பாலால் படேலுமே எனக் கூறலாம்.

தமிழ் மக்கள் தொகை

பீஜித்தீவின் மொத்த மக்கள் தொகை 6,78,000. இவர்களில் 40 விழுக்காடு மெலநேசிய மரபு வழியில் தோன்றிய பீஜியர்கள். சுமார் 50 விழுக்காடு இந்தியாவிலிருந்து பீஜித் தீவுக்குச் சென்று குடியேறிய தொழிலாளர்களின் வாரிசுகள். எஞ்சியிருக்கும் 10 விழுக்காடு மக்கள் சீனர்கள், ஐரோப்பியர்கள், மைக்கிரோநேசியர்கள், போலிநேசியர்கள். பீஜித்தீவில் ஆலோசகராகப் பணியாற்றும் எம்-ஆர். பால கணபதி பின்வரும் புள்ளிவிவரங்களை அளிக்கின்றார். பீஜித்தீவில் இருக்கும் பீஜியர்களின் தொகை 3,30,441. இந்தியர்களின் தொகை 3,47,445. ஐரோப்பியர்கள்,சீனர்கள் மற்றவர்கள் 36,662. இந்தியர்களில் மூன்றில் ஒரு பங்கினர் தென் இந்தியாவைச் சேர்ந்தவர்கள். அதாவது மதராசிஸ் என அழைக்கப்படும் தென் இந்தியர்களின் எண்ணிக்கை 1,16,000. இவர்களில் 70 அல்லது 80 ஆயிரம் பேர்கள் தமிழர்கள். இரண்டு அல்லது மூவாயிரம் பேர்கள்

கேரளத்தைச் சேர்ந்த மலையாளிகள், மற்றவர்கள் தெலுங்கர்கள். இப்புள்ளி விவரங்கள் தோராயமாக அளிக்கப்பட்டிருக்கின்றன. தென் இந்தியர்களைப் பற்றித் தனிப் புள்ளி விவரம் எடுக்க வேண்டும் எனக் கேட்ட போது பீஜி குடிமதிப்புப் புள்ளிவிவரத் தொகுதி இலாகா (Census Department). இக்கோரிக்கையை ஏற்க மறுத்துவிட்டது. பீஜித்தீவில் பேசப்படும் முக்கிய மொழிகள் பீஜியன், இந்தி (Hindustani). ஆங்கிலம். தமிழர்கள் இத்தீவில் வாழ்ந்தாலும் தமிழ் ஒரு முக்கிய மொழியாகக் கருதப்படவில்லை.

தமிழர்கள் மிகுதியாக இருக்கும் பகுதிகள்

பீஜித்தீவின் கிழக்குப் பகுதிகளில் பீஜியர்கள் வாழ்கின்றார்கள். இப் பகுதிகளில் தமிழர்களையும் பிற இந்தியர்களையும் அதிகமாகப் பார்க்கமுடியாது. லம்போஸா, சாவுசாவு முதலிய இடங்களில்தான் சில தமிழர்களைப் பார்க்கலாம்.

பீஜித்தீவின் மேற்குப் பகுதிகளில் தமிழர்களும் பிற இந்தியர்களும் பெரும்பான்மையாக இருக்கின்றார்கள். இந்தியர்கள் மிகுதியாக இருக்கும் பகுதிகள் நன்ரோகா, நந்தி, லௌத்தோகா, தாவுவா மாநிலம் ராக்கி ராக்கி, மாநிலம். தமிழர்கள் ஓரளவு பெரும்பான்மையாக வாழும் பகுதிகள் நந்தியில் இருக்கும் ஊதியாய் (Uciwai), ராக்கி ராக்கி, டேங்கிடாங்கி, மலோலோ முதலிய பகுதிகள் ஆகும்.

தமிழ்க்கல்வி

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழர்கள் பீஜிக்குச் சென்றபோது நிலவிய தமிழ்க்கல்வி நிலையைப்பற்றி, சாதுசாமியார் பின்வருமாறு கூறுகின்றார். "பீஜியில் அக்ரிமெண்டு காலத்தில் இந்தியக் குழந்தைகள் படிப்பதற்கு ஸ்கூல் கிடையாது. பாதிரி மிஷனரிமார்கள் தர்ம அனுசாரத்தை ஒத்து சுவா போன்ற சிற்சில இடங்களில் பாடசாலைகள் அமைத்திருந்தார்கள். இதனுடன் தம் குழந்தைகளுக்கு, எழுதப்படிக்கத் தெரிந்து கொள்வதற்கு, இந்தியாவிலிருந்து அக்ரிமெண்டில் வந்த சிலருக்கு எழுதப்படிக்கத் தெரியுமாதலால் அவர்களைக் கொண்டு, தம் சொந்த ஹோதாவில் இயன்ற வரையில் தம் பாஷையில் எழுதப்படிக்கவும், தம் தாய்நாட்டின் பழக்கவழக்கங்களையும் மத விஷயத்தைப் பற்றியும் போதித்து வைத்தார்கள்".

"பீஜியில் அந்தக் காலத்தில் இந்தியாவில் ஆரிய சமாஜத்தைப் பற்றித் தெரிந்தவர்களின் முயற்சியால், ஸ்ரீ சுவாமி மனோகரானந்த மஹராஜ், பீஜிக்கு வந்து பீஜியில் ஆரிய சமாஜத்தை ஸ்தாபிதம் செய்து, மதப்பிரசாரத்துடன் கல்விப் பிரசாரமும் செய்து, லத்தோக்கா ஜில்லாவில் செமோனியில் ஆரிய சமாஜ் மூலமாக, குருகுல் ஸ்கூல் ஸ்தாபித்து, அதன் மூலம் பிள்ளைகளுக்குக் கல்வி போதிக்கப்பட்டது. அதை ஒட்டியே கனம் பத்ரி மஹராஜ் ராக்கி ராக்கி ஜில்லாவில் வாய்ருக்கில் ஒரு பாடசாலை ஸ்தாபிதம் செய்து, எல்லாக் குழந்தைகளுக்கும் படிப்பு சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்து வைத்தார். பீஜி ஆரியசமாஜத்தார்கள் அவர்களுக்குத் தெரிந்த வழிகளில் பிள்ளைகளின் படிப்பு விஷயமாகக் கூடுமான வரையில் வேலை செய்து வந்தார்கள். ஆனால் சனாதன தர்மம், ஆரிய சமாஜ தர்மம் என்ற சச்சரவுகளினாலும், இந்தியாக்காரன், மதராஸ்காரன் என்ற

பாஷா பேதங்களாலும் சக்திக் குறைவாலும், பிள்ளைகள் படிப்பதற்குத் தேவைக்கு வேண்டிய மட்டும் பள்ளிக்கூடம் விருத்தியாகாமல் இருந்து வந்தது."

1917இல் தீனபந்து ஆண்டுருஸ் துரை "பீஜிக்கு விஜயம் செய்தார். இத்தடவை நந்தி ஜில்லாவில் இந்தியக் குழந்தைகளுக்கு நந்தியில் ஒரு ஸ்கூலுக்கும், சாம்பேத்தாவில் ஒரு ஸ்கூலுக்கும் ஏற்பாடு செய்து வைத்தார். இந்த ஸ்கூல்களுக்கு ஆண்டுருஸ் ஸ்கூல் என்றே பெயர். இந்த ஸ்கூல்கள் நன்றாய் நடந்துவருகின்றன."

"1920 ஆம் வருஷப் பிற்பகுதியில் இந்தியாவிலிருந்து பீஜிக்குச் சாது வஷிஷ்டமுனி என்னும் மஹான் வந்தார். இந்த மஹான் பீஜியில் இந்தியர்கள் எந்த எந்த பாகங்களில் வசித்து வந்தார்களோ அந்த அந்த இடங்களுக்கு எல்லாம் கால் நடையாகவே சுற்றுப் பிரயாணம் செய்து, நேரில் ஜனங்களைக்கண்டு அவர்களின் கேவலமான ஸ்திதிகளையும், நடத்தைகளையும் பார்த்து, நல்ல வழிகளில் நடக்கும் படியான நல்ல உபதேசங்களை ஜனங்களுக்குச் செய்தும், குழந்தைகளின் படிப்புக்காக அவர் சுற்றுப் பிராயணம் செய்த பலவிடங்களில் கிராம ஜனங்களைக் கூப்பிட்டுப் பிள்ளைகளின் படிப்புக்காக இந்த இடத்தில் ஒரு கூரை வீடு கட்டுங்கள்' என்று சொல்லி, வேலை முடிகிற வரையில் அங்கேயே இருந்து, வீடுகட்டி ஆனதும், ஸ்கூல் உபாத்தியாயராக ஒருவரை நியமித்தும், பள்ளிக்கூடம் திறந்து பிள்ளைகளைப் படிக்கச் செய்ய ஏற்பாடு செய்துவிட்ட பின்னர்தான், அந்த இடம் விட்டுப் போவார். அப்படி அவர் பீஜியில் இருந்த சொற்ப நாட்களில் சில இடங்களில் அவரால் பள்ளிக்கூடங்கள் ஏற்படலாயிற்று. பீஜி இந்தியர்களின் துர் அதிர்ஷ்டத்தினால் இந்த மஹான் பீஜியில் பத்து மாதத்திற்கு மேல் இருக்க வசப்படவில்லை. அவர் பீஜியை விட்டுப் போன பின்னரும் கூட, இங்குள்ளவர்களின் முயற்சியால், சுவாமி வஷிஷ்ட முனி சொன்னபடியே, தம் குழந்தைகளுக்குப் படிப்பு அவசியம் தேவை ஆனதால் அதற்குள்ள ஏற்பாடுகளைத் தாங்கள் தாங்களே ஒற்றுமையாகச் சேர்ந்து செய்து கொள்ள வேண்டும்; கொஞ்சம் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களும் கூட உபாத்தியாயராக இருந்து குழந்தைகளுக்கு எழுதப்படிக்கக் கற்றுக்கொடுக்க வேண்டும், என்ற அவர் உபதேசங்களை முன்னிட்டு குழந்தைகளின் படிப்புகாக ஸ்கூல்கள் அங்கங்கே ஏற்பட்டுக் கொண்டிருந்தன."

"மேற்கண்ட இந்த விஷயங்களில் எல்லாம் மதராஸ்காரர்களும் தம்மால் இயன்ற அளவு குழந்தைகளின் படிப்புக்காக. தாங்களும் அங்கங்கே சேர்ந்து வேலை செய்தார்கள்."

"இந்த மேற்கண்ட பள்ளிக்கூடங்களில் எல்லாம் இந்தி பாஷைப் படிப்பே இருந்தது. ஆதலால், பீஜியில் உள்ள தென்னிந்தியர்கள் தம் குழந்தைகளுக்குச் சிலவிடங்களில் சொந்தப்பொறுப்பில் தனித்தனியாகத் தாய்பாஷை தெரிந்த யாரையேனும் உபாத்தியாயராக வைத்துக் கொண்டு பிள்ளைகளுக்குப் படிப்பு கற்றுக் கொடுத்து வந்தார்கள்"

"வாய்ருக்கு பத்ரீ மகராஜ் தம் பள்ளிக்கூடத்தில் வேண்டுமானால் உங்கள் வாத்தியாரை வைத்து தெலுங்கு தமிழ் படித்துக் கொள்ளலாம்" என்றார். அதே விதம் வாய்ருக்கு ஸ்கூலில் வாத்தியாரை வைத்து, தென்னிந்திய பாஷைகள் பிள்ளைகளுக்குப் படிப்பிக்கப்பட்டன."

"இந்தக் காலத்தில் மதராஸ்காரர்களின் குழந்தைகளுக்கு உபாத்தியாயர்களாக வேலை செய்தவர்கள் கீழ் வருமாறு:-

லத்தோக்கா ஜில்லா	வைரம் பேத்தாவில் கெங்கு பிள்ளை
லத்தோக்கா ஜில்லா	பலூக்கா பஹாட் கிராமத்தில் வேலாயுதம் பிள்ளை
நந்தி ஜில்லா	எஸ்.நாரயணபிள்ளை.
தாபுவா ஜில்லா	டாங்கிடாங்கியில் இராமசாமிக் கவுண்டர்
தாபுவா ஜில்லா	வாய் கோனாவில் கதிர்வேலு முதலியார்
பாஜில்லா	தஞ்சாவூர் பிரியில் அரங்கசாமி அய்யங்கார்
பாஜில்லா	20-ஆம் நெம்பர் கிராமத்தில் வடிவேலு நாட்டார்
ராக்கிராக்கிஜில்லா	தோதி கிராமத்தில் பெரியசாமி
ராக்கிராக்கிஜில்லா	வாய்ருக்கில் வி. கோபால் முதலியார்
ராக்கிராக்கிஜில்லா	முல்லாவு கிராமத்தில் குப்புசாமி சாது

இதே மாதிரி இன்னும் சில இடங்களில் உபாத்தியாயர்கள் வேலை செய்தார்கள்

"இந்த உபாத்தியாயர்கள் தம் தாய் பாஷைகளைக் கூடுமான வரையில் புகட்டி, குழந்தைகளுக்கு எழுதப்படிக்கக் கற்றுக் கொடுத்தும் நல்ல நெறிகளையும் போதித்தார்கள்".

"தவிர சாது வதிஷ்டமுனி பீஜியிலிருந்து போகிற சமயத்தில் ராக்கி ராக்கி ஜில்லா முல்லாவு கிராமத்தில் தாய்பாஷைக்காக கே.எஸ்.ராமன் என்பவரால் புதியதாய்க் கட்டி ஏற்படுத்தி இருந்த பள்ளிக்கூடத்துக்கு உபாத்தியாயராக 1921ஆம் வருஷப் பிற்பகுதியிலிருந்து சுமார் நான்கு வருஷங்கள் வரையிலும் நான் (தமிழர் சாது குப்புசாமி) வேலை செய்துவந்தேன் .... "

சாது குப்புசாமியிடம் படித்த முதல் மாணவர்கள் துரைசாமி, குப்பன், பெருமாள் செட்டி, ராஜ்கவுண்டர், ராமசாமி நாயுடு, முருகம்மா, அப்துல் காதர் முதலியவர்கள் ஆவார்கள். நான்கு ஆண்டுகளுக்குப்பின் இவர் பணிபுரிந்த பள்ளி மூடப்பட்டவுடன் வாய்ருக்பள்ளியில் தமிழ் கற்றுத் தரப்பட்டது. இச்சமயம் தமிழ் ஆசிரியர்களாகப் பணிபுரிந்தவர்கள் புருஷோத்தம் முதலியார், கந்தசாமி பிள்ளை, நமசிவாயம் முதலியார், குரு நாதன் பிள்ளை, பெரியசாமி பிள்ளை குருசாமி, கோபால முதலியார் முதலியவர்கள் ஆவார்கள்.

பீஜித்தீவில் உள்ள பள்ளிகளில் தென் இந்திய மொழி கற்றுத்தரப்பட வேண்டும் என பீஜிக் கல்விக் கமிஷன் முன் கிருஷ்ணசாமி, மச்சோநாயர், கிருஷ்ணாரெட்டி, எம்.என், நாயுடு, அரங்கசாமி முதலியவர்கள் எடுத்துரைத்தார்கள். இதன் தொடர்பாகக் கமிஷனிடம் எம்.என்.நாயுடு எழுத்து மூலமாய் முறையீடு செய்தார். பிறகு 1929இல் கமிஷனின் பரிந்துரையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு செயல்படுத்தியது. கமிஷனின்

பரிந்துரைப்படி தொடக்க நிலைப் பள்ளிகளில் இந்தி கற்றுத்தரப்படும், ஆங்கிலம் விரைவில் பேசும் மொழியாகவும், பிறகு கல்வி கற்பிக்கும் மொழியாகவும் அறிமுகப்படுத்தப்படும். அதே சமயத்தில் பிறமொழி பெற்றோர்கள் ஓரளவு மிகுதியாகயிருந்தால் அவர்கள் விருப்பப்படி தமிழ், உருது, தெலுங்கு, குஜராத்தி முதலிய மொழிகளையும் இந்தி, ஆங்கிலம் மொழிக் கல்வியுடன் இணைத்துக் கற்பிக்கலாம்.

டாங்கிடாங்கியில் தமிழ்க்கல்வி: 1921ஆம் ஆண்டில் டாங்கிடாங்கி சஞ்சீவிரெட்டி பள்ளிக்கூடம் கட்டுவதற்காக 5 ஏக்கர் நிலம் தானம் வழங்கினார் அதோடு தனது பின்வீட்டைப் பிடுங்கி விட்டுப் பள்ளியும் கட்டித்தந்தார். ஸ்ரீமான் மாணிக்க ரெட்டி தகப்பனார் கண்ண கண்ணியப்ப ரெட்டி, சிங்கிரி நாயுடு முதலியோர்கள் இப்பள்ளியில் ஆசியர்களாகப் பணிபுரிந்தார்கள். தமிழ், தெலுங்கு மொழிப்படிப்பே இருந்தது. 1926ஆம் ஆண்டில் சென்னையிலிருந்து வந்த சமரசம் என்ற உபாத்தியாயர் தமிழோடு ஆங்கிலமும் கற்பிக்க முற்பட்டார். 1927ம் ஆண்டில் ராஜகோபால நாயுடு என்ற மும்மொழித்திறமை பெற்ற ஆசிரியரைப் பெறும் பாக்கியம் இப்பள்ளிக்கு அமைந்தது. இவர் ஆங்கிலம், தமிழ், தெலுங்கு என்ற மூன்று மொழிகளிலும் கல்வி புகட்டி வந்தார். நாயுடு அவர்களுக்குப் பிறகு இப்பணியை மேற்கொண்டவர் ஜேம்ஸ் கர்பாமசி ஆவார். கெங்காதர முதலியார், இராமசாமிநாயுடு முதலியவர்கள் இந்நிலையில் தாய்மொழிகளை விடாமல் கற்பித்து வந்தனர். 1930ம் ஆண்டில் டாங்கிடாங்கி இந்தியர்கள் புதிதாக ஒரு கட்டடம் கட்டினர். அதில் எல்லாக் குழந்தைகளையும் ஒன்றாகச் சேர்த்து ஆங்கிலம், இந்தி, தமிழ், ஆகிய பாடங்களைக் கற்பித்தனர். இந்நிலையில்தான் டாங்கிடாங்கியில் தமிழ் மொழிக்கல்வியில் கொஞ்சம் பலவீனமும் ஊதியக்குறைவும் ஏற்படத் தொடங்கின. 1950ம் ஆண்டில் மே மாதத்தில் 4ஆம் நாளில் டாங்கிடாங்கியில் மற்றும் ஒரு புதிய கட்டடவேலை தொடங்கப்பட்டது. அவ்வேலை 1958ம் ஆண்டில் மார்ச்சுமாதம் 5ஆம் தேதி புதன் கிழமையன்று இனிதே முடிவடைந்தது. புதிய பள்ளியில் உபாத்தியாயர்களாக இருந்து வேலை செய்தவர்கள் எம். வெங்கண்ண ராவ், எம். ராமசாமி மாறன், கிருஷ்ணய்யா ரெட்டி, கேதார் நாத் ஷர்மா, சதேவ் சிங், உண்ணாமலை சதாசிவன், விஸ்வநாதன் முதலியோர் ஆவர். 1938ஆம் ஆண்டிலிருந்து இன்று வரையில் வாலிபசங்கத்தின் அங்கத்தினர்களும் டாங்கிடாங்கி கிராமத்தில் தமிழ் மொழி கற்றுக் கொடுத்து வருகிறார்கள்.

தென் இந்திய சன்மார்க்க ஐக்கிய சங்கத்தின் கல்வி தொடர்பான குறிக்கோள்கள்:

1926 ஜனவரியில் தோன்றிய தென் இந்திய சன்மார்க்க ஐக்கிய சங்கத்தின் கல்வித் தொடர்பான நோக்கங்கள் "(அ) விஞ்ஞான சாஸ்திரம், கலாஞானம், கைத்தொழில் இவற்றுக்கான கல்வியைப் போதிப்பதும் அபிவிருத்தி செய்வதும்; (ஆ) பள்ளிக்கூடங்களில் கலாசாலைகள், புத்தகாலயங்கள் முதலியவற்றை ஸ்தாபிப்பதும் சம்ரக்ஷிப்பதும், உதவி செய்வதும், நடத்துவதும் (இ) உபாத்தியாயர்களைப் பயிற்சி செய்வதும் அவை பாமர ஜனங்களைக் கிட்டும் வண்ணம் செய்ய முயல்வதும் (ஈ) பாமர ஜனங்களிடையே கல்வி பரவுவதற்கான காரியங்களை மேற்கொண்டு செய்வதும்".

சங்கமும் தமிழ்க்கல்வியும்:

1927 மார்ச்சு 14ஆம் நாள் நந்தி சுப்ரமணியர் கோயில் காம்பவுண்டில் சங்கம் ஒரு பள்ளியைத் தொடங்கியது. 1927இல் மேலும் ஊதுவாய் ஸ்கூலும், டாங்கி டாங்கி ஸ்கூலும், லூபு ஸ்கூலும் திறக்கப்பட்டன. 1928இல் சாம்பேத்தோ ஸ்கூல் ஆலகூறு ஸ்கூல், நண்டாலா ஸ்கூல், மூக்கா ஸ்கூலும் திறக்கபபட்டன. 1929இல் நந்தி ஸ்கூல் வெள்ளத்தில் போய்விட்டது. இரண்டு மூன்று ஆண்டு காலத்தில் இன்னும் சில ஸ்கூல்கள் மூடப்பட்டன. 1930இல் நந்தி சங்கம் புதிய ஸ்கூலை அமைத்தது.

மற்றொரு சங்கம் மதராஸ் மஹாசங்கம் 1930ல் உலைகாலியா (Uluicalia), நாவ்சோரியில் ஒரு பள்ளியை நிறுவியது. 1931இல் இப்பள்ளி வெள்ளத்தில் மூழ்கியது. முதன்முதலாக இப்பள்ளியில் பணிபுரிந்த ஆசிரியர்கள் குமாரசுவாமி, அப்பாபிள்ளை ஆவார்கள். 1943ம் ஆண்டிற்குப் பிறகு இப்பள்ளிக்கு அரசு அங்கீகாரம் கிடைக்கவில்லை.

பொதுவாக, தொடக்கத்தில் தமிழ் மொழிக் கல்வி வளர்ச்சியடைந்து வந்தது போலிருந்தாலும், குறிப்பாக 1930க்குப் பிறகு தமிழ் மொழிக்கல்வியின் வளர்ச்சி பாதிக்கப்பட்டதுஎன்று கூறலாம். 1937ஆம் ஆண்டு இராமகிருஷ்ணமடத்தைச் சேர்ந்த ஸ்வாமி அவிசாநந்தர் பிஜித்தீவிற்கு வந்தார். தென் இந்தியர்களின் கல்வி வளர்ச்சி அடையவேண்டும் என்று பிரசாரம் செய்தார். இவர் இவ்வாறு பிரசாரம் செய்யும் சமயத்தில் எல்லா இந்தியப்பள்ளிகளிலும் இந்துஸ்தானியும், ஆங்கிலமும் கட்டாயப்பாடமாக இருந்தன. ஓர் இரண்டாம் மொழிக்கல்வி பல நிபந்தனைகளுக்கு அடிப்படையில் அனுமதிக்கப்பட்டது. சுவாமி அவிசாநந்தரின் முயற்சியைப் பற்றிக் கல்வி இலாகா பாராட்டியது. அவருடைய முயற்சியில் தென் இந்தியர்கள் தென் இந்திய மொழிக் கல்வியிலும், பொதுவாகத் தென் இந்தியர்களின் கல்வியிலும் மேலும் ஊக்கமும் அக்கரையும் காட்டினார்கள் எனத் தன் அறிக்கையில் கல்வி இலாக்கா கூறியது.

சுவாமி அவிசாநந்தர், தென் இந்திய சன்மார்க்க ஐக்கியச் சங்கம் எடுத்துக் கொண்ட முயற்சியால் தென் இந்தியர்களின் கல்வி நிலையில் சிலமாற்றம் ஏற்பட்டது. ஆகையால் 1937இல் மாத்யூஸ் கல்வி அறிக்கை வெளியிடப்பட்டது. இவ்வறிக்கையின் படி இந்திக்காரர்கள் அல்லாதவர்கள் பெரும்பான்மையாக இருக்கும் பள்ளிகளில் ஆங்கிலம் கல்வி மொழியாக இருக்க வேண்டும்; இரண்டாம் மொழிக் கல்வி எந்த இந்திய மொழியிலும் இருக்கலாம் என அனுமதி தரப்பட்டது. அரசாங்கம் மாத்யூஸ் கல்வி அறிக்கையின் பரிந்துரையை ஏற்றுக் கொண்டதோடு அல்லாமல் எல்லா இந்தியக் குழந்தைகளுக்கும் அவர்களுடைய தாய் மொழி கற்பிக்கப்படவேண்டும் எனும் சட்டத்தையும (ordinance No. 48 of 1937.) வெளியிட்டது.

சுவாமி அவிசாநந்தர் முயற்சியால் 1938 ஏப்ரல் 7ஆம் தேதியிலிருந்து நந்திஸ்கூலில் தமிழ், தெலுங்கு, குஜராத்தி மூன்று வெவ்வேறு அறைகளில் பாடம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. 1938 ஜூன் 10ஆம் தேதி இந்தியாவிலிருந்து ஆசிரியர்களை வரவழைக்க வேண்டும் என்று சங்கம் தீர்மானம் எடுத்தது. இதன் பயனாலும் இந்தியாவுக்குத் திரும்பிய சுவாமி அவிசாநந்தர் எடுத்த முயற்சியினாலும் சுவாமி ருத்ரானந்தாவும், ஆசிரியர் என். இராமகிருஷ்ணன் பி.ஏ.பி.டியும் 1939 பிப்ரவரி 24ஆம் தேதி பிஜித்தீவுக்கு வந்தார்கள்.

இராமகிருஷ்ணன் பீஜிதீவுக்கு வந்தபிறகு 1939 அக்டோபர் 20ஆம் தேதி கல்வித் திட்டம் ஒன்றைச் சங்கம் வெளியிட்டது. இத்திட்டத்தின்படி 1முதல் 4 வகுப்புகள் தாய் மொழியில்,5முதல் ஆங்கிலத்தில், எல்லா வகுப்பிலும் தாய்மொழி,மேல் படிப்புகளில் இந்தி, கிராமப்பள்ளியில் 4 வகுப்புகள், ஜில்லாக்களில் 6, ஸென்ட்ரல் 8 என அறிவிக்கப்பட்டது. இந்தக் கல்வித்திட்டத்துக்குக் கல்வி இயக்குநர் இசைவு தெரிவித்தார். இதன் விளைவாகத் தமிழ்க் கல்வியும், பிற தென் இந்திய மொழிக்கல்வியும் வளர்ச்சியடையத் தொடங்கின. இராமகிருஷ்ணன் ஒரு பள்ளியிலிருந்து மற்றொரு பள்ளிக்குச் சென்று பீஜியில் உள்ள எல்லா ஆசிரியர்களையும் ஊக்குவித்தார்.

1941இல் மூலமூலோ, பிலாத்தா, ஸ்கூல்களில் தமிழ் ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டனர். 1941 ஏப்ரல் 12,13, தேதிகளில் சங்கம் நடத்திய கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. "(அ) தமிழ், தெலுங்கு, மலையாளம் மொழிகளில் தேர்ந்தவர்களுக்கு, சங்கம் சர்டிபிகேட் அளிக்கும் (ஆ) இந்தியாவிலிருந்து வரும் மாஸ்டர்களுக்கு கவர்மெண்ட் கிராண்ட் தரவேண்டும்".

கல்வி, ஆங்கிலத்தில் கற்பிக்க உத்தேசித்துச் செயயப்படும் சூழ்ச்சியை எதிர்க்கவேண்டும் என 1944 மே மாதம் சங்கம் கூறியது. இச்சமயத்தில்தான் ஆசிரியர் இராமகிருஷ்ணன் பதவியிலிருந்து விலகினார். கல்வி தாய்மொழியில் தான் கற்பிக்க வேண்டும் என்று சங்கம் பிரசாரம் செய்தது.

1945 மே மாதம் சங்கம் வெளியிட்ட அறிக்கையில் சங்கம் பள்ளிகளில் பணிபுரிந்த ஆசிரியர்களைப்பற்றிப் பின்வரும் புள்ளிவிவரங்கள் அளிக்கப்பட்டிருந்தன: தமிழுக்காக 8 ஆசிரியர்கள், தெலுங்குக்காக 8, மலையாளம் 1, தமிழுக்கும் தெலுங்குக்கும் 3 பேர்; படிக்கும் பிள்ளைகள் 1449, போர்டிங்கில் 32 பேர்.

1946 செப்டம்பர் 8ஆம் தேதி நடந்த கூட்டத்தில் சங்கம் பின்வரும் தீர்மானங்களை வெளியிட்டது:

அ) தாய்பாஷைகளிலும் பரிக்ஷை நடத்த வேண்டும். அத்துடன் உபாத்தியாயர் ட்ரெய்னிங்கில் தாய் பாஷையில் பரிக்ஷைக்கு இடந்தராவிட்டால் நத்தம்புவா ட்ரெய்னிங்கில் தாய் பாஷை நடத்த வேண்டும்.

ஆ) தென்னிந்திய உபாத்தியாயர்களுக்குச் சங்கம் பரிக்ஷை நடத்தி பாஷைக்காகக் கிராண்ட் கொடுக்க.

இ) தாய் பாஷைகளைப் பரிசோதிக்க சர்க்கார் அதிகாரிகளை அனுப்பாவிட்டால் சங்கம் அனுப்ப சர்க்கார் அனுமதி கொடுக்க வேண்டும்.

"வாலிபர்கள் தாய் பாஷை வேண்டாம் என்கிறார்கள் ஒரு சில கிழவர்களோ வேண்டுமென்கிறார்கள்" என அரசு அறிவித்தது. (1947 செப்டம்பர்) அரசின் பதில் எல்லோருக்கும் ஏமாற்றத்தை அளித்தது.

தென் இந்திய சன்மார்க்க ஐக்கிய சங்கம் நடத்திய பள்ளிகளைச் சங்கம் பள்ளிகள் என்று அழைக்கின்றனர். இரண்டாம் உலகப் போருக்கு முன்பே பல சங்கப் பள்ளிகளை

அமைத்த பெருமை சுவாமி ருத்ரானந்தருக்கு உண்டு. பீஜி இராமகிருஷ்ண மடத்தலைவரான சுவாமி ருத்ரானந்தர் சமீபகாலம் வரை முப்பது பள்ளிகளை நிருவகித்தார். இன்று இப்பள்ளிகளில் பதினையாயிரம் மாணவர்களுக்கு மேல் பயிலுகின்றனர். பீஜியில் உயர்தரப்படிப்பு உண்டாவதற்குச் சுவாமிஜி நாடியில் ஆரம்பித்த ஸ்ரீ விவேகாநந்தா உயர்நிலைப்பள்ளியே காரணமாக இருந்தது. இக்கல்லூரி 1949ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. 1981ஆம் ஆண்டில் இப்பள்ளியில் 783 இந்தியர்கள் 168 பீஜியர்கள், 6 ஐரோப்பியர்கள் படித்துக் கொண்டிருந்தனர். இக்கல்லூரியின் முன்னாள் முதல்வராகப் பணியாற்றியவர் திரு பாலகணபதி பிள்ளை. தற்போது ஜி. நாயக்கர் என்பார் முதல்வராக இருக்கின்றார். பீஜியில் நடுநிலைப்பள்ளிக் கல்வியை அளித்த முதல் பள்ளி இப்பள்ளியே ஆகும். 1959ஆம் ஆண்டிலிருந்துதான் இப்பள்ளிக்கு அரசு உதவித் தொகை கிடைக்கத் தொடங்கியது. பீஜியில் இன்று இருக்கும் ஒரே பல்கலைக்கழகம் ஏற்படுவதற்கும் தமிழ் நாட்டைச் சேர்ந்த இச் சுவாமிஜியே காரணமாக இருந்தார்.

இரண்டாம் உலகப்போருக்கு முன் சங்கம் பள்ளிகளில் தமிழ், தெலுங்கு,மலையாளம் முதலியமொழிகள் போதிக்கப்பட்டன. 1950 ஆம் ஆண்டுவரை இத் திட்டம் ஓரளவு நன்றாகவே செயல்பட்டது. தென்னிந்திய மொழிகளைச் சங்கப் பள்ளிகள் கற்றுத்தரலாம் என்று அரசு அனுமதி அளித்த போதிலும், இம் மொழிகளில் தேர்வு வைத்து மாணவர்களை ஊக்குவிக்க அரசு அனுமதி தரவில்லை. பொதுவாக இப்பள்ளிகள் அளிக்கும் வாய்ப்பினைப் பயன்படுத்தித் தமிழர்கள் தங்கள் குழந்தைகளுக்குத் தமிழ் கற்றுத்தர முன் வந்தார்கள்.

1940 ஆம் ஆண்டுகளிலே அரசு சங்கம் பள்ளி ஆசிரியர்களை அரசுப் பணியாளர்களாக ஏற்றுக் கொண்டது. ஆகையால் இவ்வாசிரியர்களுக்கு அரசு ஊதியம் அளித்தது; முன்புபோல் சங்கம் பள்ளிப் பொறுப்பாளர்கள் ஊதியம் அளிக்கவில்லை. இச்சூழ்நிலையில் ஆசிரியர்கள் தமிழை நன்றாகக் கற்பிக்கும் மனப்பான்மையை இழந்தார்கள். கல்வி அமைச்சும் தமிழ்க்கல்வியை ஊக்குவிக்க வில்லை. மேலும் பீஜியில் இருக்கும் வடஇந்தியர்கள் இந்தி மொழியைக் கற்பிக்க முனைந்தனர். வடஇந்தியர்களைப் பார்த்துத் தாழ்வு மனப்பான்மையை உருவாக்கிக்கொண்ட தமிழர்கள், தமிழை மறக்க, இழக்கத் துணிந்தனர். இரண்டாம் உலகப்போரின்போது தமிழ்நாட்டுடன் இருந்த தொடர்பை இழந்ததாலும், பிரிட்டிஷ் அரசு தமிழ்க்கல்விக்கு ஆதரவு அளிக்க முன்வராததாலும் தமிழர்களின் தாழ்வு மனப்பான்மையாலும், ஆர்வமின்மையினாலும், இந்தி தீவிரவாத இயக்கத்தின் வெறியினாலும் தமிழ்க்கல்வி 1950 ஆம் ஆண்டுக்குப் பிறகு பீஜித்தீவில் நலியத் தொடங்கியது.

1940 ஆம் ஆண்டளவில் ஓர் இலட்சம் தமிழர்கள் பீஜியில் இருந்தார்கள். ஆனால் 47 ஆண்டுகளுக்குப் பிறகு இவர்களின் எண்ணிக்கை 70,000 மாகக் குறைந்துவிட்டது. இவர்களில் இன்று 5,000 அல்லது 6,000 தமிழர்களுக்கே தமிழில் எழுதப்படிக்கத் தெரியும். பெரும்பான்மையான தமிழர்களுக்குத் தமிழ் பேசக் கூடத் தெரியாது. தமிழர் என்று சொல்லிக் கொள்ளவும், தமிழில் பேசவும் பலர் வெட்கப்படுகின்றனர். கலப்புமணம் ஏற்படுவதாலும் பலர் தமிழ்ப் பண்பாட்டை இழந்தார்கள். இவர்கள் இந்தி, ஆங்கிலம் பேசுகின்றனர். ஒரே தமிழ்க் குடும்பத்தில் பல்வேறு இந்திய இனக்கலப்பு மணம் நடைபெறுவதால் இக்குடும்பத்தில் தமிழ் மறைந்து இந்தியே ஆட்சிசெய்யும் நிலை

தோன்றியிருக்கின்றது. குறிப்பாக இளம்பரம்பரைத் தமிழர்கள் வீட்டில்கூட இந்திமொழிதான் பேசுகின்றார்கள்.

இச்சூழ்நிலையில் தமிழைப் பாதுகாக்க வேண்டும் என்ற மனப்பான்மை ஒருசிலரிடையே தோன்றியிருக்கின்றது. 1985ஆம் ஆண்டு அப்பாபிள்ளை தலைமையில் தமிழ் பாதுகாப்புக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. குறிப்பாகக் கடந்த மூன்று, நான்கு ஆண்டுகளாகத் தமிழ், தெலுங்கு முதலிய மொழிகளைக் கற்பிக்கவேண்டும் என்று தென் இந்திய சன்மார்க்க ஐக்ய சங்கம் முயன்று வருகிறது இம்முயற்சியின் முதுகெலும்பாக இருப்பவர் திரு.எம்.ஆர். பாலகணபதி.இவர் ஸ்ரீ விவேகாநந்தா உயர்நிலைப் பள்ளியின் முதல்வராகப் (Principal) பல ஆண்டுகள் பணியாற்றினார். இன்று அரசு ஆதரவுடன் இவர் தமிழ் ஆலோசகராகப் (Tamil Advisor) பொறுப்பேற்றிருக்கின்றார். தென் இந்திய சன்மார்க்க ஐக்கியச் சங்கத்தின் பொதுச் செயலாளராக (General Secretary) பணிபுரியும் என். கே. நாயுடு என்பாரும் தமிழ் மறுலர்ச்சிக்காகச் சிறப்பாகப் பாடுபடுகின்றார். தமிழ், தெலுங்கு, மலையாளம் முதலிய மொழிகளை வளர்ப்பதற்காகச் சங்கம் மூன்று தொகுதிகளை (Units) அமைத்திருக்கின்றது. பல ஆண்டுகளுக்கு முன் அரசால் நியமிக்கப்பட்ட கல்விக்குழு (Education Commission) எல்லோரும் அவர் தாய்மொழியைக் கற்றுக் கொள்ளவேண்டும்; ஆகையால் தமிழர்கள் தமிழையும் கற்றுக் கொள்ளவேண்டும் எனப்பரிந்துரை செய்தது.

இன்று பீஜித்தீவில் 16 சங்கம் பள்ளிகளிலும் , 3 சங்கம் அல்லாப் பள்ளிகளிலும் (Non-Sangam Schools) தமிழ் கற்பிக்கப்படுகின்றது. சுமார் 1600 இலிருந்து 1800 மாணவர்கள் வரை தமிழ் படிக்கின்றனர். ஆகையால் பீஜி அரசு தொடக்கப்பள்ளிகளில் தமிழ், தெலுங்கு முதலிய மொழிகளைக் கற்றுத்தரலாம் என அனுமதி அளித்திருக்கின்றது. மேலும் எட்டாம் வகுப்புத் தேர்வின்போது (Class 8) தமிழ் பயிலும் மாணவர்கள் தமிழ்மொழித் தேர்வும் எழுத வாய்ப்பளிக்கப்பட்டிருக்கின்றது. இப்புதிய திட்டம் அறிமுகப்படுத்திய பிறகு 1989 ஆம் ஆண்டில்தான் முதல் மாணவர் குழாம் தமிழ்த் தேர்வுக்காக உட்கார முடியும். இன்று (1987) 6ஆம் வகுப்பில் 250 மாணவர்கள் தமிழ் படித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

தமிழ்க் கல்வி அளிக்கவேண்டும் எனும் ஆர்வம் சில தமிழர்களிடையே பீஜியில் இருந்தாலும் அதற்குத் தேவையான வசதிகள் குறைவாகவே இருக்கின்றன. முதலில் தமிழ்க் கல்வி கற்பிக்கக்கூடிய தகுதியுள்ள ஆசிரியர்கள் பலர் இல்லாத நிலை. ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்க வேண்டும் எனும் முயற்சியை எடுத்த பெருமை தென் இந்திய ஐக்கியச் சன்மார்க்கத்திற்கு உண்டு. ஆசிரியர் பயிற்சிக்காக சமீபத்தில் 18 ஆசிரியர்களின் பெயரை இவர்கள் பரிந்துரை செய்தார்கள். அவர்களில் 5 பேருக்கு "High Recommendation" செய்தார்கள். பரிந்துரை செய்யப்பட்ட மற்ற ஆசிரியர்களுக்கு நன்றாகத் தமிழும் தெரியாது, உயர்தரப்பட்டமும் கிடையாது. சன்மார்க்கம் பரிந்துரை செய்த ஐந்து "Highly Recommended" ஆசிரியர்களில் 4 ஆசிரியர்களை அரசு தேர்ந்தெடுத்து பீஜி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் அவர்களுக்குப் பயிற்சி அளித்து வருகின்றது. இப்பயிற்சிக் கல்லூரியில் உயர்தரமான பயிற்சி அளிக்கப்படுகின்றது என அறுதியிட்டுக் கூறமுடியாது. அரசால் நடத்தப்படும் நாசினு பயிற்சிக்கல்லூரியில் (Nasinu's Training College) ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகின்றது.

மேலும் தேவையான பாடநூல்கள் இல்லாததால் இன்று தமிழ்க் கல்வியின் வளர்ச்சி பாதிக்கப்பட்டிருக்கின்றது. பிஜி அரசு தமிழ் ஆசிரியர் பயிற்சிக்கு உதவி அளிக்கின்றது மேலும் பல முறைகள்மூலம் தமிழ் வளர்ச்சிக்கு உதவி அளிக்கின்றது. ஆனால் தேவையான தமிழ்பாடநூல்கள் வெளியிடுவதற்கு யாரும் முழு உதவி செய்ய முன்வரவில்லை. பல ஆண்டுகளாகத் தமிழ்நாட்டில் வெளியிடப்படும் பாடநூல்களையே பீஜி ஆசிரியர்கள் மாணவர்கள் நம்பி வாழ்ந்தனர். ஆனால் பீஜித்தீவில் தமிழ்ப் பாடம் பயிற்சியளிக்கும் போது பீஜி சூழ்நிலைக்கு ஏற்றவாறு பாடப்புத்தகம் தயாரிக்க வேண்டியிருக்கின்றது. ஏனென்றால் பீஜித்தீவில் தமிழ் இரண்டாம் மொழியாக மட்டும் கற்பிக்கப்படுகின்றது.

ஆகையால் திரு. பாலகணபதி போன்றவர்களின் இடைவிடா முயற்சியினால் பீஜித்தமிழர்களின் தேவைக்கேற்ப பாடநூல்கள் தயாரிக்க முயலுகின்றனர். மு.வ.,எம்.ஆர்.பி.குருசாமி அறிமுகப்படுத்திய 'ரோமன் தமிழ்' எழுத்து முறையை இன்று பீஜித்தீவில் பயன்படுத்துகின்றார்கள். ஏனென்றால் பீஜியில் உள்ள தமிழர்களுக்குக் கூட தமிழ்மொழி ஓர் அயல் நாட்டு மொழியாக இருக்கின்றது. ஆங்கிலமொழியின் எழுத்துத் தொகுதிகளைப் பயன்படுத்தித் தமிழைக் கற்பிக்கும் முறையையே ரோமன் தமிழ் என அழைக்கின்றனர். ஆங்கில மொழியின் எழுத்து தொகுதிமூலம் தமிழ் எழுதுவதற்கும் உச்சரிப்பதற்காகவும், பூஜா தனி வழிகாட்டும் குறிப்பு (key) அளிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் ரோமன் தமிழ்த் திட்டம் மூலம் தமிழை வளர்க்க பீஜித்தீவில் முயற்சி எடுக்கப் பட்டிருக்கின்றது.

ரோமன் தமிழ்த்திட்டம் அடிப்படையில் சங்கம் தமிழ்ப் பாட புத்தகங்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. திரு.ஜி.எஸ்.நாயுடு, Senior Education officer, இயக்குநர் தமிழ் வளர்ச்சிக் கழகம், அவர்கள் தலைமையில் இருந்த தமிழ்த் தொகுதி (Tamil Units) எடுத்துக் கொண்ட முயற்சியினால் இப்பாட நூல்கள் தயாரிப்பதற்குத் தேவையான சூழ்நிலை உருவாக்கப்பட்டது. தற்சமயம் புத்தகம்-1 (Book 1) புத்தகம்-2 (Book 2) மட்டும் தான் வெளியிடப்பட்டிருக்கின்றன. இவ்விரண்டு புத்தகங்கள் வகுப்பு 4-5 வரை பயன்படும். இப்புத்தகங்களைத்தவிர ஆசிரியர்களுக்கு மட்டும் மேலும் கையெழுத்தில் மட்டும் இருக்கும். பாடங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. இவ்விரண்டு புத்தகங்களையும் அச்சிட்டு வெளியிடுவதற்குத் தமிழ்நாடு அரசு உதவியிருக்கின்றது. ஒவ்வொரு பாடநூலிலும் 10,000 படிகள் (Copies) அச்சிட்டுத் தமிழ்நாடு பீஜித்தமிழர்களுக்குக் கொடுத்திருக்கின்றது. இம்மாதிரி தமிழ் நாடு அரசு உதவியதால்தான் தமிழ் மறுமலர்ச்சி தோன்றி வளர்வதற்கான சூழ்நிலை இன்று உருவாகியிருக்கின்றது.

புத்தகம்-3 (Book 3) புத்தகம்-4 (Book 4) எழுதப்பட்டு அச்சிடப்படுவதற்காகத் தயாராக இருக்கின்றன. ஆனால் அவை அச்சிட்டு வெளியிடுவதற்குத்தான் சமீப காலம்வரை ஆள் இல்லை. மதுரை காமராசர் பல்கலைக் கழகம் புத்தகம்-4ஐ அச்சிட்டு வெளியிடப்போவதாக செய்தி கிடைத்திருக்கின்றது. புத்தகம் 3-இன் நகல் மலேசியா தமிழ்க் கலைக் கழகம் தலைவருக்கு (Malaysian Tamil Arts Society, President) இரண்டு ஆண்டுகளுக்கு முன் அனுப்பப்பட்டது. தொடக்கத்தில் உதவி செய்வதாக வாக்குறுதி அளித்த போதிலும், பிறகு இவர்கள் உதவி கிடைக்கவில்லை. ஆகையால் தமிழ்ப் பல்கலைக் கழகம் புத்தகம்-3ஐ வெளியிட உதவி தரவேண்டும் என பீஜித்தமிழ்த் தலைவர்கள்

கேட்டுக்கொண்டார்கள். இது சம்பந்தமாக திரு பாலகணபதி கூறுவதை ஆங்கிலத்திலே மேற்கோள் எடுத்துக் கூறுகிறேன் *"We do need a lot of materials. Books (esp. Book - 3 - then 4) other books. cassettes, Teaching Aids like charts etc.etc. could you help us First with Book 3 Sir, Save our souls Save and serve the cause of reviving Tamil. This is not a more academic matter for disscussion, debate, thesis etc, I need not add sir. This is an urgent call from the otherside of the world. The Tamilians here will lose all touch with Tamil if the help does not come now. now or never is a fact. I hope I have conveyed enough about the the plight of Tamil and Tamilians here" . . . If Tamil Nadu and Tamil University do not come to our aid where else can we go?"* ஆகையால் தேவையான பாடநூல்கள் இல்லாததால் தமிழ்க் கல்வியின் வளர்ச்சி பீஜித்தீவில் தடைப்பட்டிருக்கின்றது. திரு பாலகணபதி கேட்டுக்கொண்டபடி புத்தகம் 3னை தமிழ்ப்பல்கலைக்கழகம் வெளியிட்டது.

தமிழர் கல்வியின் வளர்ச்சி இந்தி திவிரவாதிகள் மூலமும் பாதிக்கப்படுகின்றது என்று திரு பாலகணபதி கூறுகின்றார். சமீபத்தில் பீஜித்தீவில் வாழும் இந்தி மொழிப்பிரிவினர் அகில பீஜி இந்திப் பேராண்மைப் பேரவை (All Fiji Hindi Convention) ஒன்றைக் கூட்டினார். இக்கூட்டத்தில் இந்தி மொழி ஒரு கட்டாய பாடமாகப் போதிக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் பீஜி அரசு இத்தீர்மானத்தை இதுவரை செயல் படுத்தவில்லை. இச்சூழ்நிலை தமிழ் வளர்ச்சியைத் தடுக்கும் சூழ்நிலையாகவும் இருக்கின்றது என்று சில பீஜித் தமிழர்கள் கூறுகின்றனர்.

பீஜித் தமிழர்களின் தாழ்வுமனப்பான்மையும் (Inferiority complex) தமிழ்மொழியின் வளர்ச்சியை மிகுதியாகப் பாதித்திருக்கின்றது. தமிழ்மொழியைக் கற்றுக் கொள்ளவேண்டும், தமிழ்மொழியை வளர்க்க வேண்டும். என்ற ஆர்வம் போதிய அளவில் இவர்களிடையே இல்லாததால் தமிழ்மொழி வளர்ச்சி அடைய முடியவில்லை.

மேலும் சுவாமி ருத்ரானந்தா போன்ற தமிழர்கள் பரந்த மனப்பான்மையுடன் இந்தியப் பண்பாட்டைப் பாதுகாக்க முயற்சியெடுத்தார்கள். தமிழ்ப்பண்பாட்டையும் ஓரளவு பாதுகாத்து வளர்க்க இவர்போல, சிலர் முன்வந்தபோதும் தமிழுக்கு மட்டும் பாடுபடும் தலைவர்கள் தோன்றவில்லை எனத் தெரிகின்றது. ஆனால் சுவாமி ருத்ரானந்தா தமிழ் மொழியின் வளர்ச்சியில் பெரும் பங்கு கொள்ள வில்லை எனக் கூறுவது தவறு எனத் திரு பாலகணபதி கூறுகின்றார்.

சமீபகாலம் வரை திரு பாலகணபதி தமிழ் ஆலோசகராக (Tamil Advisor) பணிபுரிந்தார். இவருக்குச் சமீபகாலம் வரை அரசு ஆதரவு இருந்தது. மேலும் தமிழ், தெலுங்கு, மொழி வளர்ச்சிக்காகத் தேவேந்திரராவ் எனும் ஓர் உயர்நிலைக் கல்வி அதிகாரி Curriculam Development Officer 1987ஆல் அமைக்கப்பட்ட புதிய பீஜி அரசால் நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் சுவா சங்கம் உயர் நிலைப்பள்ளியின் முன்னாள் முதல்வராக இருந்தார். இவர் ஆந்திரநாட்டைச் சேர்ந்ததென் இந்தியர்பொதுவாக, திரு பாலகணபதி, என்.கே.நாயுடு மூலம், குறிப்பாகத் தென் இந்திய சன்மார்க்க ஐக்கிய சங்கம் மூலம் மீண்டும் தமிழ்மொழி மறுமலர்ச்சி தோன்றக் கூடிய சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கின்றது. இச்சூழ்நிலையைப் பாதுகாத்து, தமிழைப்பீஜியில் வளர்ப்பதற்குத்

தமிழக அரசும், தமிழ்ப் பல்கலைக் கழகமும், மதுரை காமராசர் பல்கலைக் கழகமும் மேலும் சில அறிஞர்களும் இணைந்து செயல்படவேண்டும்.

ஆனால், தமிழ் நலிவு தோன்றியிருக்கும் இச்சூழ்நிலையில் நாம் உணர்ச்சி வசப்படாமல் தமிழ்மொழியின் வளர்ச்சிக்காகப் பாடுபடவேண்டும். இன்று இருக்கும் தமிழ்மொழிச் சூழ் நிலையில் தமிழ்மொழியை இரண்டாம் நிலை மொழியாக (Second Language) மட்டும்தான் பீஜித்தீவில் கற்பிக்கமுடியும். பீஜித்தமிழர்களுக்கே தமிழ் மொழி ஓர் அயல்நாட்டு மொழியாக மாறிவிட்டது. ஆகையால் தமிழ்மீடியம் மூலம் எல்லாக் கல்வியையும் அளிக்க முடியாது. ஆனால் தமிழ்மொழியை இரண்டாம் நிலை மொழியாகக் கற்பிக்கும் முயற்சியில் தயக்கமோ, தளர்ச்சியோ ஆர்வமின்மையோ தோன்றக்கூடாது. தமிழ்மொழி வளர்க்கும் ஆர்வம் தமிழ்மொழி வெறியாக மாறி மற்ற மொழிகளின் வளர்ச்சியினைத் தடுக்கக் கூடாது. தமிழும் வளரவேண்டும்: பிற இந்திய மொழிகளும் வளரவேண்டும்; பீஜியின் மொழியும் வளரவேண்டும். ஆகையால் பீஜித் தமிழர்கள் இந்தி பேசுவதை எதிர்க்கக் கூடாது. "நாங்கள் இந்தி பேசுகிறோம். எல்லா இந்தியர்களும் ஒற்றுமையாகவும், சந்தோஷமாகவும் இருக்கிறோம். எங்களுக்குள் வேறுபாடு இல்லை" என்று சமீபத்தில் ஒரு பீஜித்தமிழ் மாணவர் மதுரையில் என்னிடம் கூறினார். இந்தி மொழியை எதிர்த்து இந்தி மொழியை வெறுத்து, இந்தி மொழியை அழித்து தமிழர்களிடையே தமிழை வளர்க்க வேண்டும் என நினைப்பது சரியல்ல. இந்தி, தமிழ் பீஜியின் பிற இந்திய மொழிகளின் கூட்டு வளர்ச்சிக்காகப்பாடுபடுவதே நல்லது. இம்மாதிரியாகப் பணிபுரியும் காலக்கட்டத்தில் இந்தி மொழி பேசும் தமிழர்களுக்குத் தமிழ் மொழியின் மேல் பற்றுத்தோன்றி வளரும் சூழ்நிலையை உருவாக்க வேண்டும். தமிழின் மேல் தோன்றியிருக்கும் தாழ்வு மனப்பான்மையை நீக்கப்பாடுபட வேண்டும். தமிழ் வளர்ச்சியடைந்தமொழி. இந்திக்கு முன் தோன்றிய இனிமையான பண்டைய மொழி எனும் விழிப்புணர்வைப் பீஜித்தமிழர்களிடையே ஊட்ட வேண்டும். தமிழர்களின் தாழ்வு மனப்பான்மையை அழிக்கும் தமிழ் மொழிப்பற்றை, தாகத்தை உருவாக்கவேண்டும். தமிழ்மொழி மறுமலர்ச்சி பூத்துக்குலுங்கும் சூழ்நிலையை அமைக்கப்பாடுபடவேண்டும். இந்தி, பீஜியன் மொழிகளுடன் தமிழுக்கும் சம வாய்ப்பளித்து, தமிழ் மொழியை வளர்க்க முயலவேண்டும். பீஜி அரசும், தமிழக அரசும், இந்திய அரசும் இவ் வளர்ச்சிக்கு வேண்டிய ஆதரவும் ஊக்கமும் அளிக்கவேண்டும்.

பீஜியில் கல்வி நிலை: பொதுநோக்கு

1916ஆம் ஆண்டிற்கு முன் பிரிட்டிஷ் அரசு பள்ளிக்கூடங்களை அமைத்தது. கல்வித்துறை பொதுவாக சமயப்பரப்பாளர்கள் வசம் இருந்தது. சுவா (Suva) எனுமிடத்தில் இரண்டு இலக்கணப் பள்ளிகள் (Grammar School) இருந்தன. இப்பள்ளிகளில் பொதுவாக ஐரோப்பியர்களுக்கே வாய்ப்பளிக்கப்பட்டது. தவிர லிவுகா (Levuka) எனுமிடத்தில் ஒரு பெருமக்கள் பள்ளி (Public School) இருந்தது. சுவா அருகே இருக்கும் இராணி விக்டோரியா பள்ளி (Queen Victoria School) பீஜியர்களுக்கு உயர் பள்ளிப் படிப்புக்கு வாய்ப்பு அளிக்கின்றது. கல்வித்துறை அனுமதியுடன் பல்வேறு நிறுவனங்கள். சிறப்பாகச் சமயப் பரப்பாளர்கள், பீஜியர்களுக்குத் தொடக்கநிலைப் பள்ளிகளை நடத்துகின்றார்கள்.

பீஜித்தீவில் வாழும் தமிழர்களுக்கு இருக்கும் பொதுக்கல்விச் சூழ்நிலையைப்பற்றி பின்னால் விவரிக்கப்பட்டுள்ளது.

1965 ஆம் ஆண்டிற்குமுன் பல்கலைக் கழகமோ, உயர்கல்வி நிறுவனங்களோ (Higher Educational Institute) பிஜீத்தீவில் இல்லை. பல நடுநிலைப் பள்ளி பணிப்பயிற்சி வசதிகளும் (Post Secondary Training Facilities), இறைமையியல் கல்லூரிகளும் (Theological college)தான் இருந்தன.

நடுநிலைப்பள்ளியில் மூன்று அல்லது நான்கு ஆண்டு படித்தபிறகு நியூசிலாந்து பள்ளிச் சான்றிதழ்த் தேர்வு (Newzealand School Certificate Examination) எழுதுகின்றார்கள். நான்காவது அல்லது ஐந்தாவது ஆண்டுப்படிப்பிற்குப் பிறகு நியூஜிலாந்துப் பல்கலைக் கழக நுழைவுரிமைத் தேர்வு (Newzealand University Entrance Exam) எழுதுகின்றார்கள். மேலும் வேளாண்மைத்துறை, வாணிபம், ஆசிரியர்ப் பயிற்சி முதலியவற்றுக்கான பயிற்சி நடுநிலைப்பள்ளி அளவிலேயே (Secondary School Education) அளிக்கப்படுகின்றன.

தொடக்கத்தில் 8ஆண்டுகள் தொடக்கநிலைப் பள்ளியும் (கல்வி வகுப்புகள் 1 இலிருந்து 8வரை), நான்கு ஆண்டுகள் நடுநிலைப்பள்ளியும் (பள்ளிப்படிவம் (Forms)3இலிருந்து 6வரை) இருந்தன. ஆனால் தற்போது இம்முறை மாற்றப்பட்டதால் தொடக்கநிலைப் பள்ளி 6 ஆண்டுகளாகவும் (கல்வி வகுப்புகள் 1 இலிருந்து 6வரை) நடுநிலைப்பள்ளி 6 ஆண்டுகளாகவும் (பள்ளிப்படிவம் [Forms] 1 இலிருந்து 6வரை) செயல்படுகின்றன.

பீஜித்தீவில் இன்று 760 தொடக்கநிலைப் பள்ளிகளும், நடுநிலைப் பள்ளிகளும் இருக்கின்றன. இவற்றில் 32 பள்ளிகளைத்தவிர மற்ற எல்லாப்பள்ளிகளும் அரசு சார்பற்ற நிறுவனங்களால் (Non-Government Bodies) நடத்தப்படுகின்றன. இப்பள்ளிகளுக்கு எல்லாம் மிகுதியான அரசு உதவித்தொகை (Heavily Subsidised) கிடைகின்றது.

பீஜிகுடிமக்கள் 6ஆவது பள்ளிப்படிவம் (Form 6) தேர்வில் வெற்றி பெற்றால்தான் பல்கலைக் கழகத்தில் சேரமுடியும். அதாவது பீஜிமாணவர்கள் நியூஜிலாந்து பள்ளிச் சான்றிதழ் தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அல்லது கேம்பிரிட்ஜ் அயல்நாட்டுப் பள்ளிச் சான்றிதழ் தேர்வில் (Cambridge Overseas School Certificate) வெற்றி பெற்றிருக்கவேண்டும். இதற்குப் பிறகுதான் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து பயிலத் தகுதி உண்டு. 1968ஆம் ஆண்டுதான் முதன்முதலாகத் தென்பசிபிக் பல்கலைக்கழகம் (University of South Pacific) சுவாநகர் அருகே அமைக்கப்பட்டது. இந்த ஒரே ஒரு பல்கலைக் கழகம் தான் பீஜித்தீவில் இருக்கின்றது. பல்கலைக் கழகத்தில் ஆங்கிலம் மூலம் கல்வி கற்பிக்கப்படுகின்றது. பொதுவாக பல்கலைக் கழகம் பிப்ரவரியிலிருந்து நவம்பர் வரை ஒவ்வோர் ஆண்டும் இரண்டு செமஸ்டர்களாகச் (Semester) செயல்படுகிறது. இப்பல்கலைக் கழகத்தில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை 2082. பீஜித்தீவில் பல்கலைக் கழகம் அமைப்பதற்கு முன் பல்கலைக் கழகப் படிப்பிற்காக, அயல்நாடுகளுக்குச் செல்லவேண்டிய சூழ்நிலை நிலவியது. குறிப்பாக 1100 மைல் தொலைவிலுள்ள நியூஜிலாந்துக்குச் சென்று பட்டம் பெறுவது வழக்கத்தில் இருந்தது. இன்று 18-22 வயதுள்ள மாணவர்களில் 3 விழுக்காடே உயர்படிப்பிற்காக வருகின்றனர்.

பீஜி வேளாண்மைத்துறைக் கல்லூரி 1954 இல் அமைக்கப்பட்டது. அக்கல்லூரியில் 3 ஆண்டு வெப்பமண்டலப்பகுதி வேளாண்மை டிப்ளமா (பல்கலைக் கழகப்பட்டயச் சான்றிதழ்) கல்வி அளிக்கப்படுகின்றது. 1964 ஆம் ஆண்டு Fiji Institute of Technology அமைக்கப்பட்டது. தவிர 1886 இலிருந்து பீஜி மருத்துவப்பள்ளி (Fiji School of Medicine) செயல்படுகின்றது.

கட்டாயமாகப் படிக்கவேண்டும் என்ற சட்டம் பீஜித்தீவில் கிடையாது. வீட்டிலிருந்து 5 கிலோமீட்டர் தொலைவுக்குள் பள்ளி இருந்தால் 6 வயதிலிருந்து 14 வயது வரை உள்ள மாணவர்கள் பள்ளிக்குச் செல்ல வேண்டும். சுமார் 85 விழுக்காடு சிறுவர்கள் பள்ளிக்குச் செல்லுகின்றனர். இலவசத் தொடக்க நிலைப்பள்ளி வசதி அளிக்க அரசு முயற்சி செய்கின்றது. பீஜி வரவுசெலவுத் திட்டப்பட்டியலில் 19 விழுக்காடு கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றது. உயர்கல்விக்காக 2 விழுக்காடு ஒதுக்கப்பட்டிருக்கிறது (1974) ஆனால் பீஜியில் தேவையான அளவு ஆசிரியர்கள் இல்லை. சராசரியாகத் தமிழர்களைவிட பிற இந்தியர்களைவிட,பீஜியர்களே அதிகம் படித்தவர்கள்.

தென் இந்திய சன்மார்க்க ஐக்கியச் சங்கம்:

தமிழ்க்கல்வியின் தொடர்பாக வரையும்போது இச்சங்கத்தின் சேவைகளை எடுத்துரைத்தோம். 1926 ஜனவரி 10-ஆம் நாள் ராக்கி ராக்கியில் ஸ்ரீ விவேகானந்த சுவாமிகளின் ஜனனோற்சவத்தின்போது இச்சங்கம் அமைக்கப்பட்டது. ஜனவரி 31ஆம் தேதி நந்தியில் சபை கூடியது. மே மாதம் 20-ஆம் தேதி வரை எல்லா ஜில்லாக்களிலும் மகாநாடு நடத்தப்பட்டது. இச்சங்கத்தை ஸ்ரீ சாது குப்புசாமி என்பார் அமைத்தார். இவருக்கு உதவிய மற்ற தென் இந்தியர்கள் கோபால் முதலியார். கே.எஸ். ராமன், நாராயண் நாயர், கே.கருப்பன், சர்தார் நாகையா, அப்பாசாமி. ஆகியோர்

இச்சங்கத்தின் கல்வித் தொடர்பான நோக்கங்களை ஏற்கெனவே பார்த்தோம். பிற நோக்கங்கள் "அ. அனாதாச்சரமங்கள், வைத்திய சாலைகள், சிகித்ஸாலயங்கள், தளர்ச்சியுற்றோர், நோயாளிகள், துன்பப்பட்டோர் ஆகியவர்களுக்கான இல்லங்கள், உணவு விடுதிகள், உணவுச் சாலைகள், கல்வி தர்மம் ஆகிய இவற்றைப் போன்ற இதர செயல்கள் நிறுவனங்கள் முதலியவற்றை நிறுவுவதும், காப்பதும், உதவிசெய்வதும், நடத்துவதும். (ஆ) கோயில்கள் சத்திரங்கள் மடங்கள் ஆகியவற்றைக்கட்டுவதும் எழுப்புவதும் நிர்வகிப்பதும் நடத்துவதும். இ. சங்கத்தின் நோக்கங்களுக்கு இணங்க புத்தகங்கள் துண்டு வெளியீடுகள், தினசரி பத்திரிகைகள், சமயப் பத்திரிகைகள், ஆகியவற்றை அச்சிடுவதும், வெளியிடுவதும் விற்பதும், இனாமாகவோ வேறுவிதமாகவோ அவற்றை வழங்குவதும். (இ) இந்து தர்மம், அதனுடைய சாத்திர கிரந்தங்கள், ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சருடைய உபதேசங்கள் இவற்றைப்பற்றிய ஞானத்தைப் போதித்தும் அபிவிருத்தி செய்வதும், இதர தர்மங்களைப் பற்றிய தாரதம்ய ஞானத்தை எவ்வளவு தூரம் விரிவாக்க முடியுமோ அவ்வளவு தூரம் அபிவிருத்தி செய்வதும் ஸர்வதர்ம ஸமன், வய்துவதற்காக வேண்டிய உதவியைச் செய்து அதை முற்றுவிப்பதும்".

சங்கத்தின் தலைமைச் செயலகம் நாடியில் அமைக்கப்பட்டது. இச்சங்கத்தின் கொடியில் ஓம், சிலுவை, பிறை அடையாளங்கள் இடம் பெற்றன. இராமகிருஷ்ண நூலகம்

ஒன்றையும் 1928 இல் அமைத்தனர். ஆனால், சங்கத்தின் பணிகளை எல்லோரும் ஒரு முகமாக வரவேற்கவில்லை சங்கத்தின் தலைவர்பதவி (President) தனக்குக் கிடைக்கவில்லை என, வி.எம்.பிள்ளை வருத்தப்பட்டார். இவரைக் காட்டிலும் வடக்கு மேற்கு விட்டிலெவுப்பகுதியில் எம்.என்.நாயுடுவிற்கு ஆதரவு இருந்தது. ஆனால் தென் கிழக்கு விட்டிலெவுப்பகுதியில் வி.எம்.பிள்ளைக்கு ஆதரவு இருந்தது. ஆகையால் சுவாவில் அவரே ஒரு சங்கத்தை அமைக்க முன் வந்தார். அது சம்பந்தமாக இவர் சுவாவில் கூட்டிய கூட்டத்தில் சுவா, நாவுவா, மாவட்டங்களில் உள்ள தென் இந்தியர்கள் கலந்து கொண்டனர். தென் இந்தியசங்கம்ஒன்றை அமைக்க வேண்டும் என்பதே இக்கூட்டத்தின் நோக்கமாகும். இச்சங்கம் 1927 டிசம்பர் 26ஆம் நாள் அமைக்கப்பட்டது. வி.எம்.பிள்ளை இதன் தலைவராக (President) நியமிக்கப்பட்டார். இச்சங்கத்தின் குறிக்கோள் (அ) தென் இந்தியர்களைத் திரட்டி அவர்களிடையே ஒற்றுமையுணர்ச்சியை வளர்க்கவேண்டும் (ஆ) பொதுவாக, சூழ்நிலையை மேம்படுத்துதல், சமுக சேவையின் ஆதரவுக்கு ஆதரவு தருதல். (இ) தென் இந்தியக் குழந்தைகளுக்கு ஓர் சென்டரல் ஸ்கூலை அமைத்து, தொடக்கக்கல்வியை வளர்த்தல். இச்சங்கத்திற்கு மதராஸ் மஹா சங்கம் எனப்பெயரிட்டது. தென் இந்திய சன்மார்க்க ஐக்கிய சங்கத்தினர் இச்சங்கம் அமைத்ததற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். இவ்வாறு மற்றொரு தென் இந்தியச் சங்கம் அமைப்பதால் தென் இந்தியர்களிடையே நிலவும் ஒற்றுமைச் சூழ்நிலை பாதிக்கப்படும் என அவர்கள் கூறினர்.

சில ஆண்டுகளுக்குப்பிறகு மதராஸ் மகாசங்கம் அதன் முக்கியத்துவத்தை இழந்தது. ஆனால், இதன் மூலம் 1931 இல் தென் இந்திய வாலிபர் சங்கம் தோன்றியது. இவ்வாலிபர்சங்கத்தின் தலைவராக அப்பாபிள்ளை என்பார் (President) தேர்ந்தெடுக்கப்பட்டார். இன்று இச்சங்கத்திற்கு 20 கிளைகள் இருக்கின்றன. இச்சங்கம் தெருக்கூத்து, நாகசுவரம் முதலிய கலைகளில் பயிற்சி அளிக்கின்றது.

மதராஸ் மகாசங்கம் தோன்றியபோதிலும் தென் இந்தியச் சன்மார்க்க ஐக்கிய சங்கத்தின் முக்கியத்துவம் குறையவில்லை. இந்தியாவிலிருந்தும் இச்சங்கத்திற்கு ஆதரவு கிடைத்தது. மதராஸ் இராமகிருஷ்ண மிஷன் ஸ்வாமி அவிசாநந்தரை பீஜிக்கு 1937 மே மாதம் அனுப்பியது. அவிசாநந்தர் பீஜிக்கு வந்த பிறகு சங்கத்தின் பொற்காலம் தொடங்கியது எனக் கூறலாம். சங்கம் நன்றாகத் திறம்பட வேண்டுமானால் அதற்குச் சட்டபூர்வமான அங்கீகாரம் கிடைக்கவேண்டும் என அவிசாநந்தர் கூறினார். இது சம்பந்தமாக ஏ.பி.படேலின் உதவி அவருக்கு கிடைத்தது. 6.1.1938 இல் சங்கம் 1913 கம்பெனி சட்டப்படி(Companies Ordinance 1713)பதிவு (registered) செய்யப்பட்டது. மேலும் ஸ்வாமி அவிசாநந்தர் முயற்சியால் மாதர் சங்கம் ஒன்று மகளிர்க்காக நாடியில் அமைக்கப்பட்டது. ஸ்ரீமதி முத்தம்மா மாரியப்ப கவுண்டர் இதன் முதல் தலைவராகத் (President) தேர்ந்தெடுக்கப்பட்டார். இம்மாதர் சங்கம், அவிசாநந்தர் கூறியபடி ஓர் மாணவர் இல்லத்தைக் (Hostel) கட்டியது. ஒவ்வொரு தென் இந்தியர் வீட்டிலிருந்தும் தினம் ஒரு கைப்பிடி அரிசி அனுப்பப்பட்டு இவ்விடுதியில் உணவு தயாரிக்கப்பட்டது.

அவிசாநந்தர் இந்தியா திரும்பியவுடன் ஸ்வாமி ருத்ரானந்தாவை அனுப்பி வைத்தார். ஸ்வாமி ருத்ரானந்தா பீஜித்தீவுக்கு 1939 பிப்ரவரி 2-ஆம் நாள் வந்தார். ருத்ரானந்தா குறுகிய மனப்பான்மையுள்ள தமிழர் அல்லர். தமிழ் , தெலுங்கு பேசுவார். இவர் இராமகிருஷ்ணமடத்தின் கருத்துக்களைப் பரப்பினார். பஜனைப்பாடல்களைத்

தமிழிலும் பாடுவார். இவருடைய முதன்மைக் குறிக்கோள் மக்களின் பொருளாதார நிலையை அபிவிருத்தி செய்யவேண்டும் என்பதே ஆகும். சங்கத்தின் வளர்ச்சிக்கு கப் பாடுபட்ட எம்.என்.நாயுடுவிற்குத் 'தன்வீர்" என்ற பட்டமும் சாதுகுப்புசாமிக்குச் 'சேவக ரத்னம்' என்ற பட்டத்தையும் சங்கம் 1941 ஏப்ரல் 12-13 தேதிகளில் அளித்தது. ஸ்வாமிருத்ரானந்தர் கிரிஷி மகாசங்கம் எனும் பீஜி விவசாயிகள் சங்கம் ஒன்றை 1941 இல் அமைத்தார். இதற்குப் பிறகு சங்கத்தின் உறுப்பினர்கள் சர்க்கரை உற்பத்தித் தொழில் சம்பந்தமான விவகாரங்களில் சிறப்பான பங்கேற்றனர். 1948 ஆம் ஆண்டு கூட்டுறவு அங்காடிகளைச் சங்கம் அமைக்க முன் வந்தது. 1948 இல் சங்கம் சாரதா பிரிண்டிங் பிரஸை அமைத்தது. சங்கத்தின் 25 ஆண்டு நிறைவுவிழா 1951 ஆம் ஆண்டு மேஜூன் மாதம் நாடி சங்கம், பள்ளியில் கொண்டாடப்பட்டது. தக்கின இந்திய ஆந்திர சங்கம் தோன்றியபோதிலும் சங்கத்தின் ஒற்றுமை வளர்ச்சி குறையவில்லை. தெலுங்கர்கள் பலர் தொடர்ந்து சங்கத்தின் உறுப்பினர்களாகச் செயல்பட்டார்கள். 1950 ஆம் ஆண்டு சுவாமி ருத்ரானந்தர் ஆலோசனைப்படி இராமகிருஷ்ண மிஷன் ஒன்று பீஜியில் அமைக்கப்பட்டது. ஏனென்றால் சங்கம் முற்றிலும் தென் இந்தியர்கள் சங்கமாக இருந்தது. ஆனால், இராமகிருஷ்ணா மிஷன் அமைத்தால் எல்லா இந்துக்களும், வட இந்தியர்களும் பங்கு கொள்ளலாம். இதன் பயனால் இராமகிருஷ்ணா மிஷன் 1952 செப்டம்பர் 26 ஆம் நாள் அமைக்கப்பட்டது.

ஸ்வாமி ருத்ரானந்தா இராமகிருஷ்ணா மிஷனை அமைத்தவுடன் சங்கத்தின் பொறுப்பில் இருந்த 1. விவேகாநந்தா உயர்நிலைப்பள்ளி 2. இராமகிருஷ்ணா நூலகம். 3. இராமகிருஷ்ணா ஆஸ்ரமம், 4. இராமகிருஷ்ணா அனாதாலயா (துணையற்றவர்களின் இல்லம் destitute home) இராமகிருஷ்ண மிஷனின் பொறுப்பில் விடப்பட்டன. இதற்குப் பிறகு சங்கத்தின் பொறுப்பாளர்களுக்கு எதிர்ப்பு தோன்றத் தொடங்கியது. இறுதியில் 1955 ஆம் ஆண்டு என்.கே. நாயுடு போன்ற தலைவர்கள் சங்கத்தை விட்டு வெளியேற்றப்பட்டார்கள். சங்கத்தின் பொறுப்பின் கீழ் இருந்த பள்ளிகள் எல்லாம், சங்கத் தலைமைச் செயலகத்திற்குப் பணம் அனுப்புவதை நிறுத்தின. இப்பள்ளிகள் உரிமையுடன் இயங்கத் தொடங்கின. லௌத்தாக வாலிபர் சங்கத்தின் ஆதரவினாலும் 23 ஆண்டுகளுக்குப் பிறகு 1970 ஆம் ஆண்டு ஏப்ரல் 18 ஆம் நாள் சங்கம் மீண்டும் புதுமலர்ச்சியுடன் தோன்றியது. பெருமாள் கவுண்டர் என்பார் புதிய ஜெனரல் மேனேஜராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இச்சூழ்நிலையில் சங்கத்தின் பொன்விழா அக்டோபர் 8-10 வரை 1976 இல் நடந்தது. இச்சமயம் 500 பக்க மலர் வெளியிடப்பட்டது. இம்மலரில் தமிழ் 16 பக்கம் இருந்தது. இச்சங்கம் தற்சமயம் தமிழர் அல்லாதவர்களின் செல்வாக்கின் கீழ் உள்ளது எனச் சிலர் கூறுகின்றனர்.

தமிழர்களின் பொருளாதார நிலை:

பெரும்பான்மையான தமிழர்கள் விவசாயிகள். பெரும்பான்மையான விவசாயிகள் நிலத்தைக் குத்தகைக்கு எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். இவர்கள் ஓரளவு மகிழ்ச்சியான ஆறுதலளிக்கக்கூடிய வாழ்க்கை வாழ்கின்றார்கள். பலர் 10 ஏக்கர் நிலத்தின் சொந்தக்காரர்களாக இருக்கின்றனர். சொந்தமாக டிராக்டர் கூட பலர் வைத்திருக்கின்றனர். நல்லவீடுகளில் வசிக்கின்றனர். மூன்றில் இரண்டு பேர் வானொலி

வைத்திருக்கின்றனர். 20இல் ஒருவர் விடியோ வைத்திருக்கின்றனர். 40இல் ஒருவர் கார் வைத்திருக்கின்றனர். எனத் தோராயமாகக் கூறலாம். தமிழ்நாட்டு விவசாயிகளைவிட பீஜி நாட்டில் உள்ள தமிழ் விவசாயிகள் பணக்காரர்களாக இருக்கின்றனர் எனக் கூறலாம்.

சில தமிழர்கள் குஜராத்திகளின் கடைகளில் பணிபுரிகின்றனர். பொதுவாக, குஜராத்திகளின் வீடுகளில் தென்னிந்திய வேலைக் காரிகள் பணிபுரிகின்றனர். சில தமிழர்கள் ஆடைத் தொழிற் சாலைகளில் பணிபுரிக்கின்றனர்.

உயர்ந்த பதவியில் இருந்த தென் இந்தியர்களும் உண்டு. ஆர். என். நாயர் என்பார் சிவில் சர்வீஸில் இருந்தார். ஆஸ்திரேலியாவில் பீஜித்தீவின் ஹைகமிஷனராகவும் பணியாற்றினார். மாணிக்கம் பிள்ளை என்பார் அமைச்சர் அலுவலகத்தில் அட்வகேட் ஜெனரலாக இருந்தார். புகழ் மிக்க வழக்குரைஞர் ஜெயராம ரெட்டி சட்டக்கமிஷன் சேர்மனாகவும், சமீபகாலம் வரை அட்வகேட் ஜெனரலாகவும் பணிபுரிந்தார். ஒய்.பி.ரெட்டி எஸ்.என்.நாயுடு, என்.கே.நாயுடு போன்ற செல்வந்த வாணிபர்களும் பீஜியில் இருக்கின்றார்கள்.

தமிழர்களின் சமயமும், கோவில்களும் :

வட இந்தியர்களைவிட தென் இந்தியர்களுக்கே பீஜியில் அதிகக்கோவில்கள் இருக்கின்றன. வட இந்தியர்களில் பலர் ஆரிய சமாஜத்தினர்; சனாதன தர்மத்தைப் பின் பற்றுபவர்கள். (Sanatonists). பிள்ளையார், சுப்பிரமணியர் நந்தி லம்பாஸா பெருமாள், சக்தி, மாரியம்மன், காளியம்மன், பெரிய ஹரே கிருஷ்ணா கோவில்கள் பீஜியில் இருக்கின்றன. எந்தக் கோவிலுக்குச் சென்றாலும் பொதுவாக எல்லாத் தென் இந்தியர்களும் 'கோவிந்தா, கோவிந்தா' எனக் கோவிலுக்குள் கோஷம் போடுகின்றனர். ஆகையால், பொதுவாக, தென்இந்தியர்களை யெல்லாம் பீஜியர்கள்'கோவிந்தா,கோவிந்தா'என அழைக்கின்றனர். பீஜியர்களும் கோவிலுக்கு வருகின்றனர். ஆனால் பக்தியுடன் வருவதில்லை. ஏனென்றால் அவர்கள் எல்லோரும் கிருத்துவர்கள். ஆனால் தமிழர்களைத் திருமணம் செய்து கொண்ட பீஜியர்கள் நம்மைப்போல வழிபாடு செய்கின்றனர். வடஇந்தியர்களும் நம் கோவிலுக்குப் பக்தியுடன் வருகின்றனர்.

பொதுவாக, கோவிலில் கற்பூர ஆரத்தி பண்ணுவார்கள் அர்ச்சனையைக் குருக்கள் சமஸ்கிருத மொழியில் செய்வார். சாமிக்கு அபிடேகம் செய்து மாலைபோடுவார்கள். ஆரத்தி காண்பிப்பார்கள். பஜனை நடக்கும் இராமாயணம்வாசிப்பார்கள். பஜனையில் சில தமிழ்ப்பாட்டுகளும் பாடுவார்கள்.

மகாதேவி மாரியம்மன் கோவில்

உதாரணமாக, சுவாவில் உள்ள முதல் சங்கக் கோவிலை எடுத்துக்கொள்வோம். இந்த மகாதேவி கோவிலைக் கட்டியவர்கள் கந்தன் பூசாரி, ரெங்கசாமி நாயுடு மற்றும் சிலர், இக்கோவிலின் பூசாரியாக இருந்தவர்களின் பெயர்கள் (1) 1923 -25 கந்தன் பூஜாரி, (2) 1926 - 45 சுப்பையா பூசாரி (3) 1946-57 வண்ணார முனுசாமி, (4) 1958 - 63 முனுசாமி பண்டாரம் (5) 1964 ரத்தினசாமி நாயடு (6) 1965 வீராசாமி பூசாரி (7) 1966 ரத்தினசாமி நாயுடு. தினம் பூசை நடக்கும் நேரங்கள்: காலை 6.30-7, மாலை 6.30, ஆராதனையும்,

வழிபாடு செய்வோர்களின் பூசையும் காலை 7 இலிருந்து மாலை 9 மணி வரை இக்கோவிலில் தீமிதி விழா ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்டு திங்களில் நடக்கும். இவ்விழா பத்துநாள் கொண்டாடப்படும். அதாவது வியாழக்கிழமை தொடங்கி ஞாயிற்றுக்கிழமை முடியும். இந்தக் கோயிலின் முதல் தீமிதிப்பு விழா 1928ஜூன்16 ஆம் நாள் நடந்தது. தீ மேல் முதன் முதலாக நடந்தவர்கள் சுப்பையா பூசாரி, ரங்கசாமி பூசாரி, ராம்சாமி. கந்தன் நடேசன் முதலியார் முதலியவர்கள் ஆவார்கள்.

தீமிதி விழாச் சடங்குகள்:

வியாழக்கிழமை மாலை ஆறுமணிக்குச் சுப்பையா பூசாரியின் ஞாபகார்த்தமாகக் குரு பூசை நடக்கும். மாலை 6 இலிருந்து 11 மணிவரை அம்மனுக்குப் பால், தயிர், தேன், மஞ்சள் தூள் தண்ணீர், தண்ணீர் ஆகியவைஅபிடேகம் செய்யப்படும் புனிதமான துணியினால் சிலையைத் துடைத்துவிட்டு, புதுப்புடவை கட்டுகின்றனர். நகை போடுகின்றனர். பூக்களை வைத்து அலங்கரிக்கின்றனர். அம்மனுக்கு முதல் பூசை வியாழன் நள்ளிரவிலிருந்து வெள்ளிக்கிழமை காலை 1 மணி வரை செய்யப்படுகின்றது. வெள்ளிக்கிழமை காலை 10 மணி அளவில் மதுரை வீரன் கடவுளுக்கு ஒரு கொடி உயர்த்தப்படுகின்றது.

மாலையில் உடுக்கு, தபேலா நாதங்களை இசைத்துக் கொண்டு அம்மனுக்குப் பூசை செய்வார்கள். பூசை நடக்கும் போது வழிபாடு செய்பவர் ஒருவருக்குச் சாமி பிடித்து, கங்கணம் (*Kangan*) கட்ட வேண்டும் கடவுள் சிலையிலிருந்து பூவிழுவதற்குப் பூசாரி காத்துக் கொண்டிருப்பார். முதலில் கங்கணம் கணேசருக்குக் கட்டப்படும். பிறகு மகாதேவிக்கும், அதற்குப் பிறகு சூலம், மற்ற கடவுள்கள், தலைமைப் பூசாரி, தர்மகர்த்தா, சங்கத்தின் தலைவர், மற்ற வழி பாடு செய்பவர்கள் முதலியவர்களுக்குக் கங்கணம் கட்டப்படும். சனிக்கிழமையிலிருந்து அடுத்த வெள்ளிக்கிழமை வரை கங்கணம் கட்டிக்கொண்ட பக்தர்கள் சூலத்தோடு வீடு வீடாகச் சென்று காலை 8 மணியிலிருந்து மாலை 4 மணி வரை பூசை செய்வார்கள். திரும்பியவுடன் அவர்கள் கோயிலுக்கு அரிசி, பழம், உண்டியில் பக்தர்கள் போட்ட பணம் முதலியவற்றை அளிப்பார்கள்.

வெள்ளிக்கிழமை இரவு 11 மணி அளவில் கடற்கரையிலிருந்து சக்தி கரகம் திரும்பி வரும். அப்போது தபேலா, செனாய் இசையுடன் இணைந்து, பக்தர்கள் குரவை எழுப்புவார்கள். அவர்கள் பாதி வழியில் திரும்பி வரும்போது திரௌபதி அம்மனும், முகமூடி போட்டுக் கொண்ட ஓர் ஆணும், ஓர் பெண்ணும் அவர்களைச் சந்தித்து சக்திக் கரகத்துடன் கோவிலுக்கு வருவார்கள்.

வெள்ளிக்கிழமை மாலை பக்தர்களுக்கும், பொது மக்களுக்கும், சங்கம் கமிட்டியினர் உணவளிப்பார்கள்.

சனிக்கிழமை மாலை தென் இந்தியத் தெருக்கூத்து நடனநாடகம் இரவு 8.30 மணிக்குத் தொடங்கும். இரவு 11 மணிக்கும் 11.30 மணிக்கும் இடையில் பக்தர்கள் தங்கள் தோள்களில் திரௌபதி அம்மன் சிலையை எடுத்துச் செல்வார்கள். மேலும் பூசாரி அக்னி-கரகத்தை (*Agni Karagam*) எடுத்துச் செல்வார். கோயிலைச்சுற்றி இவர்கள் மூன்று முறை வலம் வருவார்கள். அக்னி-கரகம் எதிரில் வைக்கப்படும். சங்கத்தின் தலைவர்,

தர்மகர்த்தா, மற்ற கமிட்டி உறுப்பினர்கள் முன் தலைமைப் பூசாரி தீக்குழியில் திமூட்டுவார். பக்தர்களும் கோவிந்தா இசைத்துக் கொண்டு கற்பூரம் ஏற்றி விறகின் மேல் போடுகிறார்கள். நள்ளிரவு சமயத்தில் இது நடக்கின்றது.

ஞாயிறு காலை 6 மணிக்குத் தெருக்கூத்து முடிகின்றது. கங்கணம் கட்டிக்கொண்ட பக்தர்கள் கடலுககுச் சென்று குளிக்கின்றார்கள். பிறகு காலை7 மணிக்குக் கோயிலுக்கு வருகின்றார்கள். பக்தர்கள் பால், பழம் போன்ற உணவை உட்கொள்கின்றார்கள்.

இதற்கிடையில் கோயிலின் நுழைவாயிலும் கோயிலுக்குச் செல்லும் பாதையிலும், கோயிலைச் சுற்றியுள்ள இடங்களிலும் மாவிலை, வேப்பிலை, தென்னை ஓலை முதலியவற்றால் செய்யப்பட்ட தோரணங்களைக் கட்டி அலங்கரித்து வைப்பார்கள். மத்தியானம் 2 இலிருந்து 3.30 மணி வரை தீமிதி விழாவைப் பார்க்க வந்திருக்கும் மக்களின் பொழுது போக்கிற்காக ஏதாவது வேடிக்கை காட்சி நடத்தப்படும்.

கடற்கரை ஓரத்திலுள்ள தீமிதியாளர்கள் குளித்து விட்டு அக்னி, கங்கைக் கரகங்களை அலங்கரிப்பார்கள். விபூதி, குங்குமம், சந்தனம் தடவிக்கொண்டு உடம்பில் அலகுகளையும் சூலத்தையும் குத்திக் கொள்வார்கள்.

மாலை 3 மணிக்குக் கடற்கரையிலிருந்து கிளம்பி 4.30 மணி அளவில் தலைமைப் பூசாரியும் மற்ற பக்தர்களும் சக்தி கரகத்தையும் அக்னி கரகத்தையும், கங்கா கரகத்தையும் தூக்கிக்கொண்டு தீ மேல் நடக்கத் தொடங்குவார்கள். மூன்றுமுறை இவர்கள் தீ மேல் நடப்பார்கள். ஒவ்வொரு முறையும் கோயிலைச்சுற்றி வலம் வருவார்கள்.

திங்கள் காலை 9 மணிக்குச் சக்தி கரகம், அக்னி கரகம், கங்கா, சூலம், முதலியவற்றுக்குப் பூசை செய்வதற்காகக் கடலுக்கு எடுத்துச் செல்வார்கள். அச்சமயத்தில் பக்தர்கள் கங்கணத்தை நீக்கி விடுவார்கள். கடலிருந்து பக்தர்கள் கடல் தண்ணீரைப் பித்தளைப் பாத்திரங்களில் எடுத்துக்கொண்டு சாந்தி வருவதற்காகக் கோயில் உள்ளேயும், சுற்றியும் தெளிப்பார்கள். மாலையில் பெரும்பான்மையான பக்தர்கள் கோயிலை விட்டு வெளியேறி விடுவார்கள்.

ஒரு வாரம் கழித்து வரும் ஞாயிற்றுக்கிழமை அனறு பக்தர்களும், பொதுமக்களும், பூசாரியும் அம்மனுக்குக் கூழ்படைப்பார்கள். அச்சமயத்தில் நல்ல புது உடை போட்டு, பூக்களாலும், நகைகளாலும் அம்மனை அலங்கரிப்பார்கள். கூழ் படைத்தல் சடங்கு முடிந்தவுடன் ஆடையும் காணிக்கைகளும் பூக்களும், மற்ற அலங்காரங்களும் அம்மனின் வணங்குவதற்குரிய இடத்திலிருந்து நீக்கப்பட்டு, கடல் தண்ணீரோடு கலக்கப்படும். அன்று மாலை 3.30 மணிக்குக் கொடி இறக்கப்படும். கடைசியாக மதுரைவீரன் கடவுளுக்கும், கணேசருக்கும் பிரமாதமான பூசை செய்யப்படும். இத்துடன் தீமிதித்திருவிழா முடிவடைகிறது.

மற்ற விழாக்களும், பிற கோவில்களும் :

இன்று பீஜித்தீவில் ஏறக்குறைய நாற்பது கோயில்களில் தீமிதிப்பு விழா நடைபெறுகின்றது. தவிர ஆண்டுதோறும் பொங்கல், தமிழ் வருடப் பிறப்பு, பங்குனி

உத்திரம், கார்த்திகை, சாதுசாமிதினம் (ஆகஸ்டு3ஆம்) தேதி கொண்டாடப்படுகின்றன. வைகாசி விசாகம் பீஜியில் கொண்டாடப்படுவதில்லை. தவிர, வாரந்தோறும் பட்டி தொட்டிகளிலெல்லாம் பஜனைகள் நடைபெறுகின்றன.

தென் இந்திய சன்மார்க்க ஐக்கிய சங்கத்தை ஸ்தாபித்த சாது குப்புசாமி இறந்தவுடன் அவருடைய சாம்பல் மேல் ஓர் நினைவுச்சின்னத்தை அமைத்தார்கள். பிறகு சில மாதங்களுக்கு அங்கே ஒரே கல்லை வைத்தார்கள். பிறகு நந்தியை வைத்தார்கள். இவ்வாறாக இறுதியில் அமைக்கப்பட்டதுதான் நாடி சிவன் கோவில். நந்தி சிவ சுப்ரமணிய சுவாமி கோவில், லம்பாஸா வேங்கடேசப் பெருமாள் கோயில் முதலிய பத்துக் கோயில்களைச் சுவாமி ருத்ரானந்தா நிர்வகித்தார்.

தைப்பூசத் திருவிழா

தைப்பூசத் திருவிழாவும் தமிழர்களால் விமரிசையாகக் கொண்டாடப்படுகின்றது. கிறிஸ்துமஸ் சமயத்தின் போதோ, புத்தாண்டுத் தொடக்கத்தின் போதோ இத் திருவிழா கொண்டாடப்படும். பொதுவாக, பீஜியில் இச்சமயத்தில் கரும்பு, அறுவடைப் பருவம் முடிவடைந்த சமயம்.இத்திருநாள் பத்துநாள்கள் கொண்டாடப்படும்.

இப்பத்துநாள் திருவிழாக்கள் போது முதலில் கொடியேற்றம் செய்யப்படும். பிறகு ஒவ்வொரு நாளும் விசேஷ பூசைகளும், காணிக்கைகளும், படையல்களும் செய்யப்படும். நூற்றுக்கணக்கில் மக்கள் வந்து இப்பூசையைச் செய்கின்றார்கள்.

ஓர் விசேஷ வழிபாட்டுமுறை என்னவென்றால் விரும்பியவர்கள் முருகனிடம் பக்தி செலுத்தி ஒரு குறிப்பிட்ட காலம் வரை உண்ணாநோன்பு இருப்பார்கள். காவடி தூக்க வேண்டும் இக்காவடி மர அடிப்பகுதியில் மரவில் வளைவு அமைவாகும். இது மயில் தோகைகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். பூக்கள், பால்கிண்ணங்கள், சர்க்கரை முதலியவற்றைக் காவடியுடன் எடுத்துச் செல்வார்கள், வாயைத் திறக்காமல் செல்வார்கள்.

சூரியன் மறைந்தபிறகு முருகக்கடவுளை அழகாக அலங்கரிக்கப்பட்ட இரதத்தில் வைத்து, நகரத்தில் உள்ள முக்கியத் தெருக்கள் வழியாக இழுத்துச் செல்வார்கள். வீடுகளுக்கு அருகில் கடவுள் ரதம் வரும்போது பக்தர்கள் கடவுளுக்கு அர்ச்சனை செய்வார்கள்.

பத்து நாள்களிலும் பக்தர்களுக்கும் மற்றவர்களுக்கும் பிரசாதம் அளிக்கப்படும்.

நாடி மாவட்டத்திலுள்ள பலமக்கள் இணைந்து விசேஷ பூஜை, உணவளித்தல் செலவுகளை ஏற்றுக் கொள்வார்கள். பக்கத்து ஊர்களிலிருந்தும் இவ்விழாவுக்கு வருவார்கள். நாடி மாவட்டத்தில் உள்ளவர்களே விருந்தளிப்பவர்களாக (*Host*) இருப்பார்கள். பீஜித்தீவின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் இத்திருவிழாவின் போது நாடி கோவிலுக்குப் பக்தர்கள் வருவார்கள். ஏனென்றால் முருகன் வழிபாடு செய்பவர்களுக்கு இக்கோயில்தான் தேசியக் கோவிலாக இருக்கின்றது.

சாபிடா (Sabeto) வில் உள்ள 3 குடும்பங்கள் இணைந்து ஆண்டுதோறும் நாடிக்கோவிலில் கொண்டாப்படும் கார்த்திகைத் தீபத்தின் செலவை ஏற்றுக்கொள்வார்கள். அதேபோல நாடிக் கோவிலில் கொண்டாடப்படும் கந்த சஷ்டியின் செலவை எம்.என்.நாயுடு குடும்பத்தினர் ஏற்றுக்கொள்கிறார்கள். ஆண்டுதோறும் பொங்கல், தமிழ் வருடப்பிறப்பு, பங்குனி உத்திரம், மகான் சாதுதினம் (ஆகஸ்டு 3ம் நாள்) முதலிய திருவிழாக்களையும் கொண்டாடுகின்றார்கள்.

பீஜித் தென் இந்தியர்கள் புரட்டாசி சனித் திருவிழாவையும் விமரிசையாகக் கொண்டாடுகின்றார்கள். தமிழ்ப்புரட்டாசி மாதத்தில் (செப்டம்பர்-அக்டோபர்) 4 அல்லது 5 சனிக்கிழமைகளில் இத்திருவிழாவைக் கொண்டாடுவார்கள். திருப்பதி வெங்கடேசப் பெருமாள் மேல் உள்ள பக்தியால் இம்மாதிரி கொண்டாடுகின்றார்கள். பெருமாள், ஏழுமலை என்ற பெயரைச் சிலர் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். புரட்டாசி சனி என்றால் புரட்டாசி மாதத்தில் வரும் சனிக்கிழமைகள் என்று பொருள். தமிழ்நாட்டின் வடஎல்லையில் இருக்கும் திருப்பதியிலிருந்து பல தொழிலாளிகள் பீஜிக்கு வந்து குடியேறியிருப்பதால் இத்திருவிழா இங்கு கொண்டாடப்படுகின்றது. இம்மாதத்தில் பெருமாளின் பக்தர்கள் புலால் உணவு உண்ணுதல் வெறிக்குடிவகைகளைக் குடித்தல் முதலிய பழக்கங்களை விட்டுவிடுவார்கள். குளித்துவிட்டு அருகில் உள்ள வெங்கடேசப் பெருமாள் கோயிலுக்குச் செல்வார்கள். பெருமாளின் பக்திப் பாடல்களைப் பாடுவார்கள். பெருமாள் பெயரை மீண்டும் மீண்டும் சொல்வாரகள். ஓர் விளக்கை ஏற்றிவிட்டு வலம் வருவார்கள். சிலர் உண்ணாநோன்பு இருப்பார்கள். சிலர் ஒரு வேளை உணவு, ஒரு நாள் உண்ணா நோன்பு, இருப்பார்கள். சிலர் பிரசாதம் மட்டும் சாப்பிடுவார்கள். அதாவது புலனடக்கம் தத்துவத்தைப் பின்பற்றுவார்கள். நாமம் இட்டுக் கொள்வார்கள். பிரசாதம் அளிக்கும் போதும் தேங்காய் உடைக்கும் போதும், ஆரத்தி காண்பிக்கும் போதும், அந்தத் தீபத்தை எடுத்து எல்லோருக்கும் காண்பிக்கும் போதும் கோவிந்தா, கோவிந்தா என்று சப்தம் போடுவார்கள்.

பொதுவாக, பீஜியில் உள்ள தமிழர்கள் எல்லோரும் தமிழிசை, நடனம், தெருக்கூத்து, முதலிய கலைகள் தமிழ் விழாக்கள் ஆகியவற்றில் ஆர்வம் காட்டுகின்றனர். ஆனால் அவ்வாறு இருந்தாலும் அவர்கள் முற்றிலும் தமிழ்நாட்டில் உள்ள தமிழர்கள் போல சமயப்பற்றுடன் இருக்கின்றார்கள் எனக்கூறமுடியாது. விபூதி அல்லது சந்தனப்பொட்டு பூசைசெய்யும் போதுதான் இட்டுக்கொள்வார்கள். ஆனால் வெளியில் வரும்போது எவருமே பொட்டு வைத்துக்கொண்டு வரமாட்டார்கள். தமிழ்ப் பெண்களை பொட்டு இட்டுக் கொள்ளச் சொல்லாம். ஆண்களை ருத்ராக்ஷ மாலை அல்லது துளசி மாலை போட்டுக்கொள்ளச் சொல்லலாம் என திரு பால கணபதி கூறுகிறார்.

தமிழ்நாட்டிலுள்ள தமிழர்களைப் போல, பீஜித்தமிழர்கள் கடவுளின் பெயரை வைத்துக் கொள்கிறார்கள். பொதுவாக இவர்கள் பயன்படுத்தும் பெயர்கள் பின்வருவன: முருகன், வேலாயுதன், குமரன், குகன், சுப்பிரமணியன், சிவசுப்ரமணியன், சுப்பையா, பழனியப்பா, தணிகாசலம், திருவேங்கடம், வெங்கடாசலபதி, பெருமாள், அருணாசலம், சண்முகம், சண்முகசுந்தரம், சண்முக ஈஸ்வரன், கந்தசாமி, நாகராஜன், நாகநாதன், கிருஷ்ணா, சிவகுமாரன், நந்தகுமாரன், ஹரிகிருஷ்ணா, ராமன், நாராயணன், கோபாலன், கோவிந்தன், கேசவன், மாதவன், மதுசூதனன், ஸ்ரீதரன், தாமோதரன், நரசிம்மன், அச்சுதன்,

ஜனார்த்தனன்,உபேந்திரன், சிவன், சிவம், முனியப்பா, முனிசாமி, ராமசாமி, வெற்றிவேலன், நடராஜன், ரங்கராஜன், ரங்கநாதன், ரங்கசாமி. பெண்கள் வைத்துக்கொள்ளும் பெயர்கள்: வள்ளி, பார்வதி, ரங்கம்மா, கிருஷ்ணம்மா, கண்ணம்மா, முத்து, ரத்தினவேல், ராதா, ருக்மணி, லக்ஷ்மி, லோகேச்வரி, காளி, காளியம்மா, தங்கம்மா, ரத்னம்மா, மாணிக்கம்மா, கன்னியம்மா, உண்ணாமுலை, இளங்கத்தம்மா, பாமா, பிரேமா, வீரம்மா, பாஞ்சாலி, சீதம்மா, மைதிலி, கோவிந்தம்மா, முருகம்மா, சின்னம்மா, ராஜம்மா, வெங்கடம்மா, மீனாட்சி, காமாட்சி, விசாலாட்சி, பச்சம்மா, முத்தம்மா, தாயம்மா, அன்னம்மை, பிச்சம்மா, குப்பம்மா, பொன்னம்மா, கங்கம்மா, சுப்பம்மா. ஆகையால் பொதுவாக முருகன், கிருஷ்ணர் தொடர்பான பெயர்களை வைத்துக்கொள்கிறார்கள். தவிர, சிவன் தொடர்பான பின்வரும் பெயர்கள், சிவன், சிவம், பரமசிவன்,சதாசிவன், நமச்சிவாயம், அருணாசலம், நடேசன், சங்கரன், சங்கரநாராயணன், ராமலிங்கம், கங்காதரன், நாகபூஷணம், சந்திரசேகரன், மலையப்பன், மலையாண்டி, வில்லப்பன், வீராண்டி, சிவனாண்டி, சிவசாமி, தட்சிணாமூர்த்தி, மேலும் சில பெண்கள் பெயர்கள், மாரியம்மா, லக்ஷ்மம்மா,சிவகாம சுந்தரி, சரஸ்வதி, அம்பிகா, இந்திராணி, உமா, உமாதேவி, கமலா, மாயா, புவனேச்வரி, எல்லம்மா, ;நீலவமா, சந்திரா, சந்திராதேவி, லலிதா, கிரிஜா, கௌரி, பவானி, கன்யா முதலியன

மேலும், பல தமிழர்கள் தங்கள் பெயருடன் சாதிப்பெயரை இணைத்துக் கொள்கிறார்கள். உதாரணம் முத்துசாமி ஐயர், முன்சாமி ரெட்டி, சாதிப்பெயரை ஆண்கள் மட்டுமில்லாமல் தமிழ்ப்பெண்களும் தங்கள் பெயரோடு இணைத்துக்கொள்கிறார்கள். உதாரணம் முனியம்மாள் கவுண்டர், லட்சுமி ரெட்டி, சீதா ஐயர், ஆகையால் ஐயர், கவுண்டர், நாயுடு, ரெட்டி, நாயர், நாயக்கர், பிள்ளை, முதலியார், போன்ற சாதி அடையாளப் பெயர்களை ஆண்களும் பெண்களும், இந்நாட்டில் வைத்துக்கொள்கிறார்கள். ஆனால், பொதுவாக இங்குச் சாதி உணர்வு அவ்வளவு கிடையாது. பலருக்குத் தங்கள் பெயருடன் இணைந்திருக்கம் பெயர் சாதிப்பெயர் என்று கூடத் தெரியாது. திருமண உறவுத் தொடர்பு கொள்ளும் போதிலும் சாதி உணர்வு மேலோங்குவதில்லை. வட இந்தியர்களைக்கூட திருமணம் புரிந்து கொள்வதில் ஒரு வித ஆட்சேபணையுமில்லை. ஆனால் சமீபத்தில் ஒரு சிலருக்குச் சாதி உணர்வு தோன்றத் தொடங்கியுள்ளது. தங்களைப் 'பிள்ளை' என அழைத்துக் கொள்ள விரும்புகிறார்கள். இதனால் உண்மையில் சாதி உணர்வு உள்ளூற இருப்பது போல் தோன்றுகிறது.

1958 முதல் மித்திரன் என்ற எட்டு பக்கத்து பக்த கையெழுத்து ஏடு நடத்தப்பட்டு வருகின்றது. மலேசியா, இலங்கை, தமிழகம் முதலிய நாடுகளிலிருந்து ஓரளவு தமிழ் வெளியீடுகள் அனுப்பப்படுகின்றன. ஆனந்த விகடன், கல்கி, குமுதம் விற்கப்படுகின்றன. இவற்றை அதிகமாக வாங்குபவர்கள் கிடையாது.

சுவாமி ருத்ரானந்தா அவர்கள் ராமாயணம்,திருக்குறள் ஆகியவற்றின் பீஜி மொழி (கைவித்திய மொழி) பெயர்ப்பினை வெளிவரச் செய்தார். சுவாமிஜியின் ஆதரவில் நடைபெற்ற பத்திரிக்கைகள் மூன்று,ஆங்கிலத்தில் 'Pacific Review' என்ற வாரப்பத்திரிகை. இதில் இரண்டு பக்கங்கள் கைவித்தி மொழியில் கைவித்தியர்களுக்காக வெளிவருகிறது. இரண்டாவது 'ஜாக்ருதி' எனும் இந்தி மொழிவாரப் பத்திரிக்கை. மூன்றாவது சங்கம் என்பது தமிழ் மொழி மாதப் பத்திரிக்கை. பீஜித்தீவில் தமிழர்கள் ஓரளவு சந்தோஷமாக

வாழ்வதற்கு உதவிய பெருமை சுவாமி ருத்ரானந்தருக்கு உண்டு எனக் கூறலாம். ஆர்.கே.பண்டாரம் என்பார் தொடக்கத்தில் தமிழ்த் திரைப்படங்களை வரவழைத்துக் காண்பித்தார். ஆனால் அவருக்கு இந்த முயற்சியில் வெற்றிகிடைக்கவில்லை. தற்சமயம் தமிழ் வீடியோ சினிமாப் படங்கள் கிடைக்கின்றன. தமிழர் அல்லாதவர்கள் கூட இவற்றை விரும்பி வாங்கிப்பார்க்கின்றனர். ஸ்ரீதேவி போன்ற தமிழ் நடிகைகளை இவர்களுக்குப் பிடிக்கும்.

பீஜியர்கள் எல்லோருமே எல்லா இந்தியர்களையும் இந்தியர்கள் என்றுதான் அழைக்கின்றார்கள். தமிழர்கள் வடநாட்டினர் என வேறுபடுத்தி அழைப்பதில்லை. ஏனென்றால் எல்லா இந்தியர்களுமே இந்தி பேசுகின்றனர். ஆனால் பீஜியர்கள் நம்முடைய ஆடையையோ புடவைகளையோ அணிவதில்லை. தமிழர்களுக்கும், பீஜியர்களுக்கும் திருமணம் நடப்பது அபூர்வம். தமிழர்களின், பிற இந்தியர்களின் கடைகளில் அபூர்வமாகத்தான் பீஜியர்கள் பணிபுரிவதைப் பார்க்கலாம். பொதுவாக, எல்லா இந்தியர்களும் பீஜியர்களை 'ஜங்கிலி' (Junglee) என்று அழைத்தனர். ஜங்கிலி என்றால் நாகரிக மற்றவர்கள் எனப்பொருள்.

பீஜியர்கள் நல்லவர்கள். இந்தியர்களின் மேல் வெறுப்போ கோபமோ அவர்களுக்கு இருந்ததில்லை. சமீப காலத்தில் தான் ஒரு சில பீஜியரின் நடவடிக்கைகள் இந்தியர்களின் மேல் ஓரளவு வெறுப்புணர்ச்சி தோன்றியிருக்கின்றது என எடுத்துக் காட்டுகின்றது. இந்தியர்களை நாடு கடத்த 1975 இல் எழுந்த முயற்சி தோற்கடிக்கப்பட்டு விட்டது. அதே போல 1987இல் இந்தியர்களுக்கு எதிராக ஓர் அரசு அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பொதுவாக, பீஜித்தமிழர்கள் இந்தியாவுக்குத் திரும்பவிரும்பவில்லை. ஏனென்றால் இப்போது பெரும்பான்மையான பீஜி மக்கள் இந்தியர்களை வெறுக்கின்றார்கள். எதிர்க்கின்றார்கள் என நாம் கூறமுடியாது.

முடிவுரை

1987 ஆம் ஆண்டு ஏப்ரல் 11ஆம் நாள் பீஜித்தீவில் தேர்தல் நடந்தது. இத் தேர்தலின் முடிவின்படி இந்தியர்களுக்கு மிகுதியான செல்வாக்கு உள்ளஅரசு முதன் முதலாகப் பதவிக்கு வந்தது. பீஜித்தீவின் பொருளாதார அமைப்பில் இந்தியர்களுக்குச் செல்வாக்கு அதிகம் இருக்கின்றது. பீஜித்தீவில் உள்ள பெரிய வாணிப அமைப்புகள் எல்லாம் 10 விழுக்காடு இந்தியர்கள் வசம் இருக்கின்றன. பீஜித்தீவின் நிர்வாக அமைப்பிலும், படைப்பிரிவிலும் தாயக பீஜியர்களின் பெரும்பான்மை இருக்கின்றது. இந்தியர்களின் அரசியல் செல்வாக்கு ஓங்கியதை விரும்பாத சில பீஜியர்கள் கர்னல் ராம்புகா (Col. Rabuka) என்பவர் தலைமையை ஏற்றுக்கொண்டு1987 ஆம் ஆண்டு மே 14ஆம் நாள் சட்டப்படி தேர்தலில் பெரும்பான்மை பெற்று பதவிக்கு வந்த இந்தியர்களின் செல்வாக்கு உள்ள அரசைக் கவிழ்த்தார்கள். இராணுவ ஆட்சி அமைக்கப்பட்டது. கர்னல் ராம்புகா பீஜியர்கள் பெரும்பான்மையுள்ள ஓர் அரசை அமைத்திருக்கின்றார். இம்மாதிரியான இந்தியர்களின் மேல் உள்ள வெறுப்பு அதிகரித்த சூழ்நிலை உருவாகியவுடன் சில தமிழர்கள் ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து முதலிய நாடுகளுக்கு வேலை தேடிச் சென்று குடிபெயரத் தொடங்கியிருக்கின்றனர்.

இக்குழப்பமான சூழ்நிலையில், தமிழ்க் கல்வி சூழ்நிலையிலும் சில மாற்றங்கள் தோன்றிவுள்ளன. திருமதி உமா நிர்குணன் அவர்கள் தென் இந்திய சன்மார்க்க ஐக்கிய சங்கம் நடத்தும் சங்கப் பள்ளிகளுக்கு ஆலோசகராக (அட்வைசராக) நியமிக்கப்பட்டுள்ளார். திருமதி உமா நிர்குணன், இன்று வரை தமிழ்நாட்டுப் பாட திட்டத்தின் படி நடத்தப்பட்ட சங்கப்பள்ளிகளில் பாடத்திட்டத்தை ஓரளவு மாற்றியமைத்து, இலங்கை தீவின் பாடத்திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளார். இவர் இம்மாதிரியாகச் செய்த மாற்றத்திற்குப் போதுமான ஆதரவு கிடைத்ததாகத் தெரியவில்லை. இத்தகைய மாற்றங்கள் செய்யும்போது எல்லா பீஜித் தமிழர்களுடைய ஒருமித்த கருத்தையும் அறிந்து செயல்படுதல் நல்லபயனை நல்கும். இம் மாற்றத்திற்காகவும் தமிழ் மொழியின் சிறப்பான வளர்ச்சிக்காகவும் திரு அப்பாபிள்ளை தமிழ் மொழி காப்பாளர் கழகம், பீஜி, பீஜி சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம் போன்ற பீஜித் தமிழர்கள் சிறப்பாகப் பாடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

பிரிட்டன்

ஸ்காட்லாந்து, வட அயர்லாந்து, வேல்ஸ், இங்கிலாந்து ஆகிய நான்கும் அடங்கிய நாட்டை யு.கே. (யுனைடட் கிங்டம்) அல்லது கிரேட் பிரிட்டன் என்று அழைக்கின்றார்கள். இந்நாட்டின் பரப்பளவு 94,214 சதுரமைல்கள். இந்நாட்டின் தலைநகரம் இலண்டன் மாநகர். இந்த நாட்டில் பெரும்பான்மையோர் பேசும் மொழி ஆங்கிலம் ஆகும். தவிர கேபலிக், வெங்ஷ் மேங்ஸ் பிரெஞ்சு மொழி பேசுபவர்களும் இருக்கின்றனர். பிரித்தானிய நாட்டில் மொத்தம் 156 மொழிகள் பேசப்பெறுவதாக அரசினர் அறிக்கைப்பட்டியிலிருக்கிறது. இவற்றுள் நம் தமிழும் ஒன்று.

பிரிட்டன்-தமிழ்நாடு உறவு

வாணிபம், அரசியல், சமயம், கல்வி, முதலிய பல்வேறு காரணத்தொடர்பினால் தமிழர்-ஆங்கிலேயர் உறவு தொடர்ந்து வலுவடைந்தது. ஆங்கிலேயர்கள் தமிழ்நாட்டிற்கு வந்து வாணிபம் செய்யத்தொடங்கியவுடன் ஓரளவு தமிழ்மொழி பயில வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. தவிர ஆங்கிலம் தெரிந்த தமிழர்களின் பணியும் தேவையாக இருந்தது. இச்சூழ்நிலையின் தாக்கத்தால் பிரிட்டன் தமிழ்நாடு உறவு தோ...றி மலரத் தொடங்கியது.

ஆங்கிலேயர் ஆட்சி தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டவுடன் ஆங்கிலேய அரசு தமிழின் முக்கியத்துவத்தை மேலும் தமிழ் நாட்டில் பணிபுரியும் ஆங்கிலேய அரசு அதிகாரிகளுக்குத் தமிழறிவு தேவை என வலியுறுத்தியது. வலியுறுத்தியதோடு நில்லாமல் ஆங்கிலேய அரசு அதிகாரிகள் தமிழ்கற்றுக்கொள்ள வழிவகைகளையும் செய்து கொடுத்தது. ஆங்கிலேய சிவில் பணியாளர்களுக்குத் (Civil Servants) தமிழ் கற்பிப்பதற்காகவும், மேலும் பல அரசு அலுவலகப் பயிற்சி அளிப்பதற்காகவும் போர்ட் செயின்ட் ஜார்ஜ் காலேஜ் (Fort St George College) எனும் ஒரு கல்லூரியைச் சென்னையில் அமைத்தது. தவிர கல்கத்தாவிலிருந்த போர்ட் வில்லியம் காலேஜிலும் சிலகாலம் தமிழ் கற்பிக்கப்பட்டது. மேலும் பிரித்தானிய அரசின் அன்றைய ஆட்சிக்குட்பட்ட நாடுகளில் வழங்கிய பழம்பெரு மொழிகளையெல்லாம் கற்பிக்க கீழைநாட்டு, ஆப்ரிக்கக்கல்வி நிறுவனம் இலண்டன் மாநகரில் தோற்றுவிக்கப்பட்டது. இந்த நிறுவனம் ஆங்கிலேயர்கள் மூலம் தமிழ் கற்பித்ததோடு, தமிழர்களை அழைத்துப் பணியமர்வு செய்தும் தமிழ் கற்பித்தது.

மொழித்துறையில் இப்படித்தொடர்பு ஏற்பட்டதோடு பிற அறிவுத்துறைகளிலும் பிரிட்டனுக்கும், தமிழகத்துக்கும் தொடர்பு வளர்ந்தது. ஏனென்றால் அரசியல்

பணிகளுக்காகவும் சமயத்தொண்டுக்காகவும் ஆங்கிலம் தெரிந்த தமிழர்களும் தமிழ் தெரிந்த ஆங்கிலேயர்களும் தேவைப்பட்டதால் பிரிட்டனிலும் தமிழகத்திலும் தமிழ்க்கல்வி, ஆங்கிலக்கல்வி கற்பிக்கக் கல்வி நிலையங்கள் தோற்றுவிக்கப்பட்டன.

மேலும் பிரிட்டானிய கிறித்துவ சமய அடியார்கள் கிறித்துவ சமயத்தைத் தமிழர்களிடையே பரப்பும் நோக்கத்துடன் தமிழ்கற்றுக்கொண்டு தமிழிலே மக்களோடு தொடர்பு கொண்டார்கள். தமிழ் மொழி ஆராய்ச்சியிலும் தமிழ் இலக்கியக் கல்வியிலும் மொழிபெயர்ப்பிலும் ஈடுபட்டுப் பிரித்தானியக் கிறித்துவ சமய அடியார்களில் சிலர் பெரும்பணி ஆற்றியிருக்கின்றார்கள்.

இப்படிப்பட்ட சூழலில்தான் தமிழ்தெரிந்த பிரித்தானியர்களின் தொகையும், ஆங்கிலம் தெரிந்த தமிழர்களின் தொகையும் வளரத்தொடங்கின. மேலும் தமிழர்களும் பிரிட்டனுக்குச் சென்றுகுடியேறத் தொடங்கினார்கள். கல்விக்காக பிரிட்டனுக்குச் சென்று அங்கேயே பணி வாய்ப்பு பெற்று அங்கேயே தங்கிவிட்ட தமிழர்களும் உண்டு. கல்வி கற்பிப்பதற்காகப் பணியமர்வு வாய்ப்பு பெற்று குடியுரிமை பெற்ற தமிழர்களும் உண்டு. வாணிப நோக்கில் சென்று தங்கிவிட்ட சிறுபான்மையாளரும் உண்டு. தொழில் வழிக்குடியேற்றம் செய்தவர்களும் உண்டு. மலேயா சிங்கப்பூர் முதலிய நாடுகளிலிருந்து வந்து குடியேறிய தமிழர்களும் உண்டு.

பிரித்தானிய நாட்டைப் பொறுத்தவரை கடந்த நாற்பது ஆண்டுகளிலேயே தமிழர் குடியேறத்தொடங்கினர். அதுவும் தமிழ் நாட்டிலிருந்து இங்கு வந்து குடியேறியோர் எண்ணிக்கை குறைவு எனலாம். இலங்கை விடுதலைபெற்ற பிறகு அந்நாட்டுப் பல்கலைக் கழகங்களில் இடம் கிடைக்காத நிலையில் மேற்படிப்புக்காக இங்குவந்து தக்க பணியேற்ற பின்னர் இங்கேயே சிலர் தங்கிவிட்டனர் . பின்னர் இலங்கையில் அரசியல் சூழல்களின் காரணமாக இங்கே குடியேறத்தொடங்கினர். யாழ்ப்பாணப்பகுதியைச் சேர்ந்த தமிழர்கள். கடந்த பதினைந்து ஆண்டுகளில் தமிழ் மக்களுக்கு எதிரான கொடுங்கோன்மை கட்டு மீறிப் போகவே அணிஅணியாய் குடும்பம் குடும்பமாய் பல்லாயிரக்கணக்கான தமிழர் இங்குக் குடியேறியுள்ளனர். குறிப்பாகக் கடந்த நான்கைந்து ஆண்டுகளில் பல்லாயிரக்கணக்கான தமிழர்க்ள் குடும்பம் குடும்பமாக இங்கு வந்துள்ளனர்.

பிரித்தானிய நாட்டுக்குத் தமிழர்க்ள் குடியேறத்தொடங்கியது 1947-1948, அதாவது இந்திய இலங்கை விடுதலை பெற்ற நேரக் காலக்கட்டத்தில் என்றாலும் கடந்த இருபது ஆண்டுகளிலே கணிசமான அளவில் தமிழர்கள் இந்நாட்டில் குடியேறியுள்ளனர்.

இந்தியா, இலங்கை போன்ற நாடுகளிலிருந்து மேற்படிப்புக்காகவும், சிறப்புப் பயிற்சிக்காகவும் இங்குக் கணிசமான அளவில் தமிழர்கள் வந்தனர். அக்காலக்கட்டத்தில் மருத்துவர் போன்ற பணிபுரிய இந்நாட்டு அமைச்சு இந்தியர்களைத் தருவித்து அமர்த்தியது. அம்மருத்துவர்களில் கணிசமான அளவினர் தமிழர் எனின் மிகையாகாது. இன்று இலண்டனில் பாதித்தமிழர்கள் டாக்டர்களாகவும், இஞ்சினியர்களாகவும், வழக்கறிஞர்களாகவும்,பேராசிரியர்களாகவும், வணிகர்களாகவும் இருக்கின்றனர்.

இருபது ஆண்டுகட்கு முன் பிரித்தானியப் படைத்தளங்களை மலேசியா சிங்கையில் மூடியதால் அப்படைத்தளங்களில் பணியாற்றி வேலையிழந்து

பிரித்தானியப்படைத்தளங்களில் ஊழியம் செய்த தமிழர்கள், பிரித்தானியக் குடியுரிமையும் சிறப்பான எல்லைக்கடவையும் பெற்றுக் கணிசமான அளவில் தங்கள் குடும்பத்தினரோடு இங்கே குடியேறினர்.

தமிழ் மக்கள் தொகை

இலண்டன் தமிழ்ச்சங்கத் தமிழ்ப் பள்ளிப் பேராசிரியர் இராம வீரசிங்கம் (பாரி) பின்வருமாறு கூறுகின்றார்: பிரிட்டனுக்கு வெளியே வாழுகின்ற தமிழர்களுக்குப் பிரிட்டனில் எத்தனை இந்தியர்கள், அதிலும் எத்தனைத் தமிழர்கள் வாழ்ந்து வருகிறார்கள் என்று அறிந்து கொள்வதற்கு ஆர்வம் இருக்கும். பிரிட்டனின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அறிக்கையை ஆர்வமுடன் ஆராய்பவர்கள் அதிலும் எத்தனைத் தமிழர்கள் பிரிட்டனில் வாழந்து வருகிறார்கள் என்று அறிய விரும்பி ஆண்டுகளையும் விகிதாசாரங்களையும் துழாவித் தேடுபவர்கள் சற்றுச் சோர்வடைந்துதான் போவார்கள். பிரிட்டனின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அறிக்கையில் கிடைக்காத விவரங்களை நமது சமூகத்தினரிடமிருந்து நாம் தெரிந்து கொள்வது மேல். நாடெங்கிலும் ஆங்காங்கே சிற்சில குடும்பங்களாகச் சிதறி வாழ்ந்தாலும் இலண்டனில்தான் தமிழர்கள் அதிகமாக வாழ்ந்து வருகிறார்கள்.

1985 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி பிரிட்டனில் வாழும் மக்கள் எத்தனைபேர் வெளிநாடுகளில் பிறந்தவர் என்னும் வினாவுக்கு ஏறத்தாழ 3.4 கோடி மக்கள் அத்தகையவர் என்று அறிந்து கொள்ளலாம். இதில் பாதிக்கு மேற்பட்டோர் வெள்ளையர்கள் (1.89 கோடி) 607 ஆயிரத்து மேற்பட்டோர் அயர்லாந்திலும் 153 ஆயிரம் பேர் பழைய காமன்வெல்த்திலும் (ஆஸ்த்திரேலியா, நியுசிலாந்து, கனடா) 1.13 கோடி மக்கள் மேற்கு ஐரோப்பா உட்பட வேறுநாடுகளிலும் பிறந்தவர்கள். எஞ்சியவர்கள் கறுப்பு, பழுப்பு இனத்தவர்கள். புதிய காமன் வெல்த் நாடுகளிலும் இந்தியா, பாகிஸ்தானிலும் பிறந்தவர்கள். இதில் கிழக்கு ஆப்பிரிக்காவில் கென்யா மலாவி, தான்சானியா, உகாண்டா, சாம்பியா, தென்னாப்பிரிக்காவும் போத்சுவானா, லெசோத்தோ, சுவாசிலாந்து, சிம்பாப்வே, மேற்கு ஆப்பிரிக்காவில் கேம்பியா, காணா, நைஜீரியா, சிய்யாரலியோன், கரீபியனில் பார்பேடோஸ, ஜமெய்க்கா, டிரினிடாட் மற்றும் தொபாகோ, அண்டிகு, செயின்ட் கிட்ஸ்-நெவிஸ் அங்குய்லா, பெலீஸ் கியானா, தென் ஆசியாவில் பாகிஸ்தான், வங்காளதேசம், இந்தியா, ஸ்ரீலங்கா, தென் கிழக்காசியாவில் ஹாங்காங், மலேசியா, சிங்கப்பூர், மத்தியதரைநாடுகளில் சைப்ரஸ், ஜிப்ரால்டர் (மாட்டா கோசோ உட்பட), எஞ்சியவற்றில் மொரீசியஸ், செய்ச்செல்லர், போல்க்லாந்து தீவுகளும் மற்றும் இதர தீவுகளும் மற்றும் பிராந்தியங்களும் அடங்கும். இவர்கள் இலண்டனில் மட்டும் பேசுகின்ற மொழிகள் 180 க்கும் மேலாக இருக்கிறது. பிரிட்டனில் தற்போது வாழ்ந்து வருகின்ற பல்லினச் சமூகங்களில் சிறுபான்மை சமூகத்து மக்கள் கூட்டில் தானுமொரு சின்னஞ்சிறிய சமூகமாகத் தமிழ்ச்சமூகம் இயங்கி வருகிறது. (SOURCE : Commission for Racial Equality (1985) Ethinic Minorities in Britain Statisional Information on the Pattern of Settlement, southern Publishing Co., Brighton).

சமீபத்தில் தி ஹிந்து (The Hindu) பத்திரிக்கை வெளியிட்ட புள்ளிவிவரப்படி பிரிட்டனில் வாழும் இந்தியர்களின் எண்ணிக்கை 8வட்சம். இவர்களில் 40 விழுக்காடு தெனிந்தியர்கள் இருக்கின்றார்கள் என்பதால் பிரிட்டனில் மொத்தம் தோராயமாக 2,50,000 தமிழர்கள் இருக்கவேண்டும். ஆகையால் திரு அரங்க முருகையன் அளிக்கும் புள்ளிவிவரத்தைவிட (35,000) மேலும் அதிகமாகத் தமிழர்கள் பிரிட்டனில் இருக்கின்றார்கள் என நம்பலாம்.

தமிழர்கள் மிகுதியாக இருக்கும் பகுதி இலண்டன், விம்பிள்டன், கிராய்டன், சவுத்தாள், கிளாஸ்கோ, மேஞ்ச்செஸ்டர், பர்மிங் காம்.

தமிழ்ப்பண்பாட்டின் தாக்கம்

1. தமிழ் நாட்டிலிருந்த கிறித்துவ சமய அமைப்புகள் தமிழ் மயமாக்கப்பட்டன. தமிழிலேயே விவிலியநூல் எழுதப்பட்டது. தமிழிலே கிறித்துவமதம் போதிக்கப்பட்டது.

2. தமிழ்ச்சமயம், குறிப்பாக இலண்டனுக்குச் சென்றது. பிரிட்டனின் பல்சமய அமைப்பில் தமிழ்ச் சமயமும் ஒன்றாக இருக்கின்றது. தமிழ்க்கலைச் சின்னங்களை, தெய்வ உருவச்சிலைகளைப் பிரிட்டனில் காணலாம்.

3. தமிழர் உணவும் பிரிட்டனுக்குச் சென்றது. ஆனால் தமிழர் வட்டாரத்தில்தான் தமிழ் உணவு கிடைக்கும். சிங்கப்பூர் சிராங்கன்ரோடு கோலாலம்பூர் செட்டித்தெருபோல் இவை உள்ளன. தமிழர் பண்பாடு, நாகரீகம், தமிழர் தம் இசைக்கருவிகள், தமிழக ஆட்சி இவை தொடர்பான பல பொருள்களை விக்டோரியா அண்ட் ஆல்பெர்ட் பொருட்காட்சிச் சாலை முதலிய பொருட்காட்சிச் சாலைகளில் காணலாம்.

4. தமிழ்மொழி பிரிட்டனுக்குச் சென்றது. தமிழ்நூல்களும், தமிழ்க் கையெழுத்துப் படிகளும் பிரிட்டனில் இருக்கின்றன. தமிழ் ஆராய்ச்சிக்கு வாய்ப்பளிக்கப்பட்டிருக்கும் சூழ்நிலை உருவாகியிருக்கின்றது. இந்நிலையில் பிரிட்டனில் தமிழ் ஆராய்ச்சியும் தமிழ்ப்படிப்பும் வேரூன்றி நிற்கின்றது. பிரிட்டிஷ் நூலகத்தில் பல அரிய நூல்களும் கையெழுத்துப் படிகளும் உள்ளன. ஏறத்தாழ 20,000 தமிழ் நூல்களும், 300க்கு மேற்பட்ட கையெழுத்துப் படிகளும் உள்ளன. பிரிட்டிஷ் நூலகத்திற்கு அடுத்தபடியாக இந்திய ஆபீஸ் நூலகத்திலும் 16,000 நூல்களும், 34 கையெழுத்துப் படிகளும் உள்ளன. பல அரிய நூல்கள் இவ்விரண்டு நூலகங்களிலும் போற்றிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. கீழைநாட்டு ஆப்பரிக்கக் கலைக்கழக நூலகத்தில் 2,500 தமிழ் நூல்களும், 20 தமிழ்க் கையெழுத்துப் படிகளும் உள்ளன. மேலும் இலண்டனிலுள்ள பைபிள் சொசைட்டியிலும், ஆக்ஸ்போர்டிலுள்ள போட்லியன் நூலகத்திலும், கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழக நூலகத்திலும் இலண்டனிலுள்ள ராயல் ஆசிய மன்ற நூலகத்திலும் நிறைய தமிழ் மொழி நூல்கள் உள்ளன. இலண்டன் பல்கலைக் கழக நூலகத்தில் 1982 ஆண்டளவில் மூவாயிரம் தமிழ் நூல்களும், தமிழ்க் கையெழுத்துப் படிகளும் (20) இருந்தன.

5. சிலதமிழ்ச் சொற்கள் ஆங்கில மொழியுடன் கலந்து வேரூன்றின. அரங்க முருகையான் கூறுகிறார். "முனைவர் உரோனாட்டு ஆசர் அன்னைத்தமிழ் ஆங்கில

மொழிக்கு அருங்கொடையாக நல்கிய சொற்கள் ஆயிரத்தை விஞ்சும் என்கிறார். ஆணைக்கொன்றான் (ஒருவகை பாம்பு), மிளகுத் தண்ணீர் (*Mulagu Tawry*), கட்டுமரம் (*Cattamaran*), தேக்கு (*Teak*), அரிசி, நாவாய், வெற்றிலை போன்ற எத்தனையோ நற்றமிழ்ச் சொற்கள் நேரடியாகவும் ஓரை (*Hour*) போன்ற இலத்தின், பழங்கிரேக்க மொழிவாயிலாகவும் ஆங்கிலத்தில் வந்தேறியுள்ளன. குருளை (*Givil*) தந்தை, தாதை (*Dad*) பானை (*Pan*) போன்றுதாம் வந்த சுவட்டினைக்காட்டும் சொற்கள் பல. மட்காப்பு (*Mudguard*) சம்பளம் (சம்பு-அளம் - *Saluary-Salt*) என்ற சொல் தொக்கி நிற்றலை ஓர்க) போன்றும் ஞாயிறு (*Sunday*) திங்கள் (*Monday*) என்பன போன்றும் ஒரே சாயலான சொற்கள் தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் வழங்கி வருவது இவை முத்தமிழிலிருந்து ஆங்கிலத்துக்கு வந்தவை என்பதைத் தெள்ளியதாய்க் காட்டுகின்றன. ஒரு மொழி நூலறிஞர் தக்க ஆய்வுகளை மேற்கொண்டபின் ஆங்கிலத்துக்கே தாய்மொழி தமிழ்தானென்றும், தமிழின் சேய் மொழியாக துளுவமொழி பேசுவோர் ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பு பழம்பெரும் பாய்மரத்தோணிகளில் பயணம் செய்து பிரித்தானிய நாட்டுக்கு வந்துகரையிலிறங்கிக்குடியேறினார் என்றும், அவர்கள் பேசிய (துளுவ) மொழி பின்னாளில் இலத்தின் கிரேக்கமொழி, சமஸ்கிருதம், பிரெஞ்சுமொழி பல்வேறு மொழிச்சொற்களையும் மீண்டும் அலைஅலையாய் வந்தாலும் தமிழ்ச் சொற்களோடும் இணைந்தே இன்றைய ஆங்கில மொழி தழைத்துள்ளது என்றும் கூறியுள்ளார்."

தமிழ்ச்சமயம்

மூன்று இந்தியக் கோயில்கள் இருக்கின்றன. இதில் புதிதாகக் கட்டப் பட்டது முருகன் ஆலயம். பர்மிங்காமில் வெங்கடேஸ்வர கோயில் இருக்கின்றது. ஆனைமுகன் கோயில்களும் உண்டு. இங்கெல்லாம் சமயக் கல்வியும் தமிழ்க் கல்வியும் பயிற்றுவிக்கப்பெறுகின்றன. கோவில்களுக்குப்போவது, பூஜைசெய்வது, விழாக்கள் கொண்டாடுவது, வெள்ளிக்கிழமை விரதம் இருப்பது, மாதந்தோறும் தமிழ்ப்படம் பார்ப்பது போன்ற நடவடிக்கைகளை இங்கிருக்கும் தமிழர்களிடையே பார்க்கலாம். சித்திரைத் திருவிழா, தீபாவளி, பொங்கல் போன்ற பல சமய விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. சமயநம்பிக்கை உள்ள தமிழ்க் குடும்பங்களில் வழிபாட்டின்போது தமிழ்ப்பாடல்கள் பாடப்படுகின்றன. தமிழ் தெரியாவிட்டாலும் குழந்தைகள் இந்த வழிபாட்டுப் பாடல்களை மட்டும் கற்றுக் கொண்டு பாடுகிறார்கள்.

இந்துக்கோயில் அறநிலையம், இலண்டன் தமிழ்த்திருசபை, பிரிட்டானிய இந்துமாமன்றம், சைவ முன்னேற்றச்சங்கம், சைவ சிந்தாந்தமையம் முதலியன தமிழ்ச்சமயம் தொடர்பாகச் செயற்படுகின்றன.பிரிட்டானிய சைவ மாமன்றத்தில் சமயம் சார்ந்த விழாக்கள் சமயச்சார்பான உரைகள் நடத்தப்படுகின்றன. மேலும் இந்நிறுவனங்கள் சமய வளர்ச்சி பற்றிய நூல்களை, ஏடுகளை, வெளியிடுகின்றன.

தமிழ்க்கல்வி

ஐரோப்பாவிலே தொடக்கத்திலிருந்தே தமிழில் பட்டப்படிப்பும் ஆராய்ச்சிப் படிப்பு வசதியும் பிரிட்டனில்தான் இருந்தது என்பது இங்குக்குறிப்பிடத்தக்கது.சென்ற நூற்றாண்டிலே ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் தமிழுக்கும் தெலுங்குக்கும்

இடமளிக்கப்பட்டிருந்தது. அறிஞர் ஜி.யு.போப் அவர்கள்தான் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் 1884 முதல் 1896 வரை தமிழ்-தெலுங்கு விரிவுரையாளராகப் பணியாற்றினார். தன்னைத் தமிழ்மகன் என்று சொல்லிக் கொள்வதில் பெருமை கொண்டவர் இவர் என்பதை நாம் நன்கு அறிவோம். இவர் மறைவுக்குப்பின் ஆக்ஸ்போர்டில் தமிழ்க் கல்விக்கு வளர்ச்சி குன்றிவிட்டதெனலாம்.

ஜி.யு. போப்பிற்குப் பிறகு இலக்கியத்துறையில் ஈடுபடும் அக்கறையும் கொண்டவர் திரு தாம்ப்சன் என்பவராவார். (School of Oriental and African Studies) கீழ்த்திசை மற்றும் ஆப்ரிக்கக் கல்வி நிறுவனம் என்ற நிறுவனத்தில் பணிபுரிந்த இவர் டாக்டர் உ.வே. சாமிநாதய்யரிடம் தமிழ் பயின்றவர். தமிழ்க் கல்விக்கும் தமிழாராய்ச்சிக்கும் சிறப்பாக ஓர் இடமளித்திருப்பது இலண்டன் பல்கலைக் கழகத்தில் உள்ள கீழைநாட்டு ஆப்பிரிக்கா கலைக் கழகம் தான் என்றாலும், ஆக்ஸ்போர்டு பர்மிங்காம், மான்செஸ்டர், எடின்பரோ முதலிய இடங்களில் உள்ள பல்கழகங்களிலும் தமிழில் ஆய்வு செய்ய வாய்ப்பிருப்பது இங்கு குறிப் பிடத்தக்கது. இலண்டன் பல்கலைக் கழகத்தில் தொடக்க நிலை முதல் தமிழ் பயின்று உயர் ஆய்வு செய்து பட்டம் பெறவும் வழியுண்டு. தமிழில் ஆர்வம் கொண்ட பிற துறை மாணவர்கட்கும் இங்கே தமிழ் கற்பிக்கப்படுகிறது. எடின்பரோ பல்கலைக்கழகத்தில் மொழியியல் முதுகலைப்பட்டபடிப்பிற்குத் தமிழின் கூட்டமைப்பு ஒரு விருப்பப் பாடமாக வைக்கப் பட்டுள்ளது.

அடுத்து தமிழ்ப் பணிபுரிந்தவர் டாக்டர் ஆஷர் அவர்கள். தமிழ் மொழிபற்றிய ஆராய்ச்சியில் தலை சிறந்தவர். ஆங்கில மாணவர்களுக்காகத் தமிழ் பயிற்றுவிக்கும் பொருட்டு ஒரு தனி நூலை வெளியிட்டவர். தமிழ் இலக்கியம், தமிழ் இலக்கணம், தமிழ்ப் புதினங்கள் போன்ற பலதுறைகளில் ஈடுபாடு கொண்டவர். தமிழுக்கே தன்னை அர்பணித்துக் கொண்டவர் என்று சொன்னால் கூட அது மிகையாகாது. செந்தமிழும் நாப்பழக்கம் என்பதற்கேற்ப தமிழிலேயே உரையாட விரும்புவர் இவர். இன்று எடின்பரோ பல்கலைக்கழகத்தில் மொழியியல் பேராசிரியராக இருந்து வரும் இவர் தமிழ் மாணவர்களை உற்பத்தி செய்வதிலும் தமிழ் இலக்கிய இலக்கணம் பற்றி ஆராய்வதிலும் தன்னுடைய நாள்களை கழித்து வருபவர். எடின்பரோ செல்லும் மாணவர்கட்கு உறுதுணையாக இருந்து அவர்களின் வாழ்விற்கும் பெருமைக்கும் அடிப்படையாக இருப்பவர். அவருடைய கைவண்ணத்தில் மலர்ந்த மாணவர்கள் பலர். இவரைப்போன்றே கீழை ஆப்பிரிக்கக் கலைக்கழகத்தில் பணியாற்றிவரும் டாக்டர் மார் என்பவரும் குறிப்பிடத்தக்கவர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியாகயிருந்த டாக்டர் அ.சிதம்பரநாதன் செட்டியாரின் கீழ் ஆராய்ச்சிகளை நடத்தியவர். இப்பல்கலைக்கழகத்தில்தான் டாக்டர் பொற்கோ போன்றவர்கள் தமிழ் கற்பித்து வந்தார்கள்.இரண்டு ஆண்டுகள் தமிழ் கற்பித்த பெருமை இவருக்குண்டு டாக்டர் மார் அவர்கள் தமிழ் இலக்கிய இலக்கணத்தில் மட்டுமன்றித் தமிழ்ப்பண்பாட்டிலும் நாட்டம் கொண்டவர். இவரைப்போன்றே ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருந்த டாக்டர் பர்ரோ அவர்களும் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் திராவிட மொழியியல் உலகுக்குச் செய்த தொண்டு ஏட்டில் அடங்காது. டாக்டர் விட்லி, டாக்டர் லாஸ், டாக்டர் கூர்மன் திருமதி கௌர் போன்றவர்களெல்லாம் தமிழ்மொழியில் நாட்டம் கொண்டவர்கள். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு அடிக்கடி வந்து ஆலோசனை கூறியவர்கள், வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் தமிழுக்கு என்ன செய்யவேண்டுமோ

அதனைச் செய்பவர்கள். தமிழ் ஆராய்ச்சி எந்தக் கோணத்தில் போக வேண்டுமோ அந்தக் கோணத்தில் போகவேண்டும் என விரும்புபவர்கள் மேல் நாட்டு அறிஞர்களால்தான் தமிழ்மொழி உலக அரங்கில் நல்ல நிலையில் உள்ளது என்று கூறினால் அது மிகையாகாது. (ச.அகத்தியலிங்கம், சு.சக்திவேல்)

ஆங்கிலேயர்களின் தமிழ்மொழிச்சேவையைக் கவனித்தோம். தவிர, பிரிட்டனில் உள்ள தமிழ்க் குலத்தாரும் தமிழ்க்கல்விக்காக அரியசேவை செய்கின்றனர். இவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். டாக்டர் ஆர்.நித்தியானந்தன், தலைமையாசிரியர், மேற்கு இலண்டன் தமிழ்ப்பள்ளி, க.நவசோதி, ஆசிரியர், மேற்கு இலண்டன் பள்ளி, இராம வீரசிங்கம் (பாரி), இலண்டன் தமிழ்ச்சங்கத்தமிழ்ப் பள்ளி (108 Queens Road West, Plaistow, London E13 OPF. CTCL. 01-4703804.) இலண்டன் வாழ் தமிழ் சிறார்களின் தமிழ்ககல்விப் பணியில் ஆலயங்களும் தமிழ்ச்சங்கங்களும் நன்மைபுரி இயக்கங்களும், முன்னேற்றக் கழகங்களும் தனித்துவமான தமிழ்ப்பள்ளிகளும், கலைக்கழகங்களும், இவ்வாறமைந்த இருபத்துமூன்று அமைப்புகள் அரும்பணி ஆற்றுகின்றன.

இலண்டனில், மாநகராட்சி மன்றங்கள் யாவும் "எல்லார்க்கும் சம வாய்ப்புகள்" என்ற நியதியைக் கொள்கையாக்கி மிகச்சிறிய சமூகமாக இருந்தாலும் சரி, அல்லது குழுவினராக இருந்தாலும் சரி, அவர்களின் தேவைகளை நிறை வேற்றி வைப்பதற்குக் கடமைப்பட்டுள்ளோம் என்ற கொள்கையைப் போட்டு வைத்திருக்கின்றன. இவ்வகையில் இலண்டனில் இயங்கி வருகின்ற தமிழ்ப் பள்ளிகள் சில மாநகர் மன்றங்களிடமிருந்து மானியம் பெற்று இயங்கி வருகின்றன. நகராட்சி மன்றங்கள் தங்கள் தேவைகளுக்கேற்ப வரி வசூல் செய்கின்றன. தங்களின் வட்டத்தில் வாழும் மக்களுக்குத் தேவையும் அவசியமுமான சேவைகளை வழங்குவதற்கு முடியாததொரு கட்டுப்பாட்டு நிலையும் பிரிட்டனின் அரசியல் முறையில் இருந்து வருகிறது. இதற்குக் காரணம் மத்திய அரசாங்கம் நீலமாகவும் மாவட்ட மாநகர் மன்றங்கள் பல சிவப்பாகவும் இருப்பதுதான் காரணம் (இராமவீரசிங்கம்)

தமிழ்மொழி போதனையில் சமூகத்தின் அக்கறை அல்லது ஈடுபாடு என்ன அல்லது எவ்வளவு என்று சீர்தூக்கிப்பார்த்தால் உண்மை விளங்கும். பிரிட்டனில் அதிலும் இலண்டன் வாழும் தமிழ் மக்கள் ஒருசிறுபான்மை இனமென்ற நிலையிலும், இன்று பிரிட்டனில் இயங்கி வருகின்ற தமிழ்ப் பள்ளிகளின் எண்ணிக்கைகளைக் கொண்டு உணரலாம். தங்கள் பிள்ளைகள் தாய்மொழியையும், கலைகளையும் கற்கவேண்டும். அவற்றில் திறமை பெறவேண்டும் என்ற நோக்கத்தில் பிரிட்டன் தமிழர்கள் விடாப்பிடியாக இருந்து வருகிறார்கள்.

தமிழர்கள் எண்ணிக்கையில் குறைந்த அளவினராய் இருந்தபோது தத்தம் வீட்டிலேயே தம் தாய் மொழியைத் தங்களுக்கு இயன்ற அளவில் கற்றுத் தந்து வந்தனர். பின்னர் தமிழர்கள் எண்ணிக்கை மிகுந்ததும் பிள்ளைகளை ஒரு பொது இடத்திற்கு அழைத்து வந்து சனி அல்லது ஞாயிற்றுக்கிழமைகளில் தக்காரைக் கொண்டு தமிழ் பயிற்றுவிக்கத் தலைப்பட்டனர்.

இவ்வாறு தமிழர்கள் கணிசமான அளவில் வாழும் விம்பிள்டன் பகுதியிலும், கிழக்கு இலண்டனிலுள்ள ஈஸ்ட் ஹேமிலும் 1974இல் முறையே விம்பிள்டன் தமிழ்ப்பள்ளியும்

திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளியும் தொடங்கப் பெற்றன. இன்றளவும் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. விம்பிள்டன் பள்ளியிலும், திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளியிலும் படிப்பவர்கள் ஆரம்ப நிலையை முடித்துஉயர்நிலைத்தமிழ்கற்றபின் ஜி.இ.சி. என்ற பாடவிடைத்தாள் எழுதி அரசாங்க உயர் தமிழில் தேர்வு பெற்று, பல்கலைக்கழகத்தில் தமிழைப் படிக்கலாம். ஏற்கனவே கூறியபடி பிரிட்டனில் தொடக்க நிலையிலிருந்து தமிழைக்கற்று, தமிழில் பி.ஏ., எம்.ஏ., பட்டங்களைப் பெறவும் பின் ஆராய்ச்சி நடத்தி டிஃபில் பட்டம் பெறவும் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இலண்டன் மாநகரின் தென் மேற்கிலுள்ள விம்பிள்டனுக்கும் கிழக்கிலுள்ள ஈஸ்ட்ஹேமுக்கும் தங்கள் பிள்ளைகளைக்கொண்டு செல்ல முடியாத பெற்றோர்கள் மேற்கு இலண்டன் பகுதிப்புற நகரான கிரின் போர்டில் 1978 இல் மேற்கு இலண்டன் பள்ளியைத் தோற்றுவித்தனர்.

தொடர்ந்து இலண்டன் மாநகரின் பல பகுதிகளிலும் பர்மிங்காம்,மான்செஸ்டர், இசுகாட்லாந்தில் உள்ள கிளாஸ்கோ போன்ற பெரும் நகர்களிலுமாக இதுகாறும் 22 தமிழ்ப்பள்ளிகள் தோற்றுவிக்கப்பெற்று நன்கு இயங்கி வருகின்றன.

பிரிட்டனில் இயங்கி வரும் தமிழ்ப்பள்ளிகள் பட்டியல் வருமாறு

TAMIL SCHOOLS IN THE UNITED KINGDOM

1.	*Asian Project London N1B*	*Ms.K.Manickavasagar*	01.803-2357
2.	*Ganapathy Temple Arts School, London S.W. 19*	--	--
3.	*Institute of Tamil Culture Surbiton, Surrey*	*K-Jegatheeswaran W.Thayalan*	01-949-3012
4.	*London Sri Murugan Temple Art School, London E.13*	-- *S.K.Ganapathy*	-- 01-478-8433
5.	*London Tamil Sangam Tamil School London E.13*	*Rama Veerasingam*	01-470-3804

6. *London Tamil School*	*S.Thiruchelvam*	01-542-5140
London S.W.20		
7. *London Art Circle*	*Yoga Thillainathan*	01-461-3530
London S.E. 6		
8. *London Veens Music Group*	*S.Rajah*	01-672-0603
London S.W. 17		
9. *Shakespeare School of*	--	--
Oriental Dancing Middleses	*Mrs.G.Shakespeare*	01-951-0594
(Dance Only)		
10. *South East London Tamil*	*M.Sivagnanam*	01-692-0823
Youth Centre Tamil School	*P.Philomin*	01-697-5181
London S.E.13		
11. *South London Tamil School*	*S.Kanagasundaram*	01-680-8578
Croydon		
12. *The Tamil Association of*	*Dr.Theivendra*	01-423-2418
Brent Tamil School Brent		
13. *T.M.K.Thiruvalluvar Tamil*	*D.Devadas*	01-552-1775
School London E.12	—	01-552-8124
14. *Tamil Academy of Language*	*K.S.Pillai*	01-857-6168
• Arts South Lewisham Institute	--	01-291-2818
London S.E.26		

15. *Waltham Forest Tamil Sangam*	*R.Navanayagam*	01-521-1272
Tamil School London E.17	*S.Sathkunanathan*	01-521-8116
Lakshmi Arts Centre	*L.Ramakrishnan*	01-423-0189
Northolt (Dance & Music)	--	--
West London Tamil School	*Dr.R.Nithyananthan*	01-904-5939
Greenford.		
16. *Birmingham Tamil School*	*Sivayageewaran*	--
--	*3.Newlerson Walmley*	--
--	*Sutton Coldfield*	--
17. *Glasgow Tamil School*	*M.Vyapooree*	--
--	*6.Ness Gardens*	--
--	*Bishop Briggs,*	--
--	*Glascow-*	--
20. *Northern Tamil Association*	*Segarajasingha*	--
Manchester	*11 Kent Road West*	--
--	*Rusholme, Manchester,*	--
21. *Tamil Cultural Association*	*S.Suntharalingam*	0772-715186
Preston		
22. *Tamil Union of Herts*	*L.Rasiah*	0923-662811
Herts		
Yorkshire Tamil Community	--	--
Tamil School	*S.Balakrishnan*	0274-498126

(இராம விரசிங்கம் (பாரி), பிரிட்டனில் தமிழ்மொழி போதனை)

இப்பள்ளிகள் பெரும்பாலும் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் இயங்குவதற்குக் காரணம் தமிழ்ச் சிறார்கள் திங்கள் முதல் வெள்ளி உள்ளிட்ட ஐந்து நாள்களில் அரசினர்ப்பள்ளி சென்று கணக்கு, ஆங்கிலம், அறிவியல் முதலியன கற்பதேயாம்.

மேற்கண்ட இருபத்திரண்டு தமிழ்ப்பள்ளிகளும் ஒன்றோடொன்று தொடர்பின்றி தம் மனம்போனவாக்கில் பயிற்றுவிக்காவண்ணம் இப்பள்ளிகளையெல்லாம் இணைக்கும் பிரித்தானியத்தமிழ்ப்பள்ளிகளின் ஒன்றியம் (British Association of Tamil Schools) நிறுவப் பெற்றுள்ளது. இவ்வொன்றியத்தின் கண்காணிப்பில் மொழிப் பயிற்சிக்கு மட்டுமன்றி நாட்டியம் இசை போன்றவற்றுக்கும் பாடத்திட்டங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. மேற்கு இலண்டன் தமிழ்ப்பள்ளி இந்நாட்டுச் சூழலுக்கேற்ப மூன்றுபாடல்களை இயற்றியுள்ளது. இன்னும் பல் வேறு நூல்களை வெளிக் கொணரத் திட்டமிட்டுள்ளது. தமிழை உயர்பள்ளி இறுதி நிலை அளவில் ஒரு பாடமாகக் கொண்டு இந்நாட்டில் அரசினர் தேர்வு எழுதவும் வாய்ப்புள்ளது. மேற்கு இலண்டன் பள்ளியில் தமிழ் பயிற்றுவித்தவரான காலஞ்சென்ற திரு.சு.இரத்தினம் அவர்கள் எழுதிய நூலே இந்நாட்டில் எழுதி வெளியிடப்பட்ட முதல் தமிழ்ப் பாடநூல் எனலாம்.

டாக்டர் ஆ.க. நித்தியானந்தம் பின்வரும் கருத்தைத் தெரிவிக்கிறார்:- "இலண்டன் தமிழ்வாசகம் எனும் பெயரில் இருநூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இலண்டனில் பதிப்பு வசதி இன்மையால் தமிழ் நாட்டிலும் மலேசியாவிலும் இவை பதிப்பிடப்பட்டன. சிறார்களின் மனம் கவரும் வகையில் எழுத்துக்களும் வண்ணப்படங்களும் செவ்வகையாக இந்த நூல்களில் அமையவில்லை. தமிழ் உச்சரிப்பினையும் பொருளினையும் ஆங்கிலத்தில் இவை அமைத்துத் தரவில்லை. தமிழ் எழுத்துக்கள் எழுதும் முறையினையும் இவை தெரிவிக்கவில்லை. ஒவ்வொரு நாட்டின் சூழலுக்கமையவும் அந்த நாடுகளின் தேசியமொழி வழியே பொருளை அறியக்கூடியதாகவும் தமிழ்ப்பாடநூல் அமையவேண்டிய இன்றியமையாமையை இவை தெரிவிக்கின்றன".

அரங்கமுருகையன் (மேற்கு இலண்டன்) கூறுகிறார்:- "இங்குள்ள பள்ளிகளுள், பெரும்பான்மையானவை தமிழ்நாடு, இலங்கை மலேசியா சிங்கையில் வெளியிடப் பெற்றுள்ள தமிழ் நூல்களையே தத்தம் பள்ளிகளில் பயன்படுத்துகின்றன. இந்நூல்கள் ஒரு வாரம் ஐந்து நாள்கள் பயிலும் பிள்ளைகள் கற்றறிந்து பயனுறும் வகையில் எழுதப்பெற்றுள்ளன. இங்கோ ஒரு கிழமையில் திங்கள் முதல் வெள்ளி ஈறாக ஐந்து நாள்கள் அரசினர் ஆங்கிலப் பள்ளியில் பயின்று பின் ஒரேயொரு நாள் மட்டும் தமிழ் கற்க வரும் பிள்ளைகளுக்கு மிக்ககடினமானதாகத்தோன்றுகிறது. இங்கே வளரும் பிள்ளைகளுக்குப் பெயரளவில்தான் தாய்மொழி தமிழ்; உண்மையில் அவர்களின் தாய்மொழி ஆங்கிலம் என்றே கூறல் வேண்டும். முன்பெல்லாம் ஆங்கிலத்திற்கு மொழி மாற்றம் செய்து கருத்தை வெளிப்படுத்துகிறீர்கள் என்று சொல்வது வழக்கம்.அதற்குநேர் எதிர்மாறாக இங்குள்ள தமிழ்ப்பிள்ளைகள் இந்நாட்டுச் சூழலுக்கேற்ப ஆங்கிலத்தில் சிந்தித்து, பின்னர் அதைத்தமிழ்ப்படுத்தி நம்மிடம் சொல்லுகையில் நமக்குத் தூக்கிவாரிப் போடும், ஆகையால் பிள்ளைகளின் அகவை, கற்றறியும் திறனுக்கேற்ப சிறு எளிய சொற்களை முதலில் அறிமுகப்படுத்தி பின்னர் படிப்படியாகச் சற்றுக் கடினமான சொற்களைப் பயன்படுத்தச் செய்யலாம். தமிழ்க்கதைகள் எளிய நடையில் எழுதப்பெற்று, சித்திரங்களை மிகுதியாகக்கொண்ட (Comics) சிறு நூல்களாக வெளியிடப்பட வேண்டும். சித்திரங்கள் மிகுந்த அகராதிகள் தேவை."

இராமவீரசங்கம் அளிக்கும் பின்வரும் செய்திகளைக் கவனிப்போம் :- பிரிட்டனில் இயங்கும் தமிழ்ப்பள்ளிகளில் குறிப்பிட்டுச் சொல்லத் தகுந்த அம்சம் என்னவென்றால்

பெரும்பாலான பள்ளிகள் தமிழ்மொழி போதனையோடு பரதநாட்டியம், சங்கீதம், இசைக் கருவிகளை மீட்டுதல் போன்றவற்றையெல்லாம் பயிற்றுவித்து வருகின்றன. சில பள்ளிகளில் மொழி போதனை இல்லை. கலை போதனை மட்டுமே உண்டு. சில பள்ளிகள் கலையைப் போதிப்பதையே முதன்மையாகக் கொண்டுள்ளன. மொழி போதனை அவர்களுக்கு இரண்டாவது நிலையிலான முக்கியத்துவம் மட்டுமே.

பிரிட்டனில் தமிழ்ப் பள்ளிகளுக்கு உரிய தனியான பிரச்சினை என்னவென்றால், மாணவர்கள் தங்களின் பொதுப்பள்ளிகளில் இத்தனை வயதில் இந்த வகுப்பு என்று சேர்ந்து பயில்வது போன்று அவர்களைத் தமிழ்ப் பள்ளிகளில் அவர்களின் வயதை மட்டும் வைத்துக் குறிப்பிட்ட வகுப்புகளில் சேர்ப்பதற்கு முடிவதில்லை. மொழித் திறனை முதலாவதாக வைத்து, அவர்களின் தரத்திற்கேற்பவும், மொழியின் ஆற்றலுக்கேற்பவும் வகுப்புகளில் சேர்க்க வேண்டியுள்ளது. என்றாலும் அந்த முறையிலும் ஒரு சிரமம் என்னவென்றால் வயது கூடிய ஒரு மாணவனிடத்தில் தமிழ்மொழித் திறமை இல்லை என்பதால் திறமைமிக்க ஆனால் வயதில் சிறிய ஒரு மாணவனோடு அவனை உட்கார வைத்துப் போதிப்பதற்கும் முடியாத ஒரு நிலை. ஆகவே, சிறுசிறு தரநிலை குழுக்களாகப் பிரிந்து அவர்களுக்கு மொழிபோதனை செய்ய வேண்டியிருக்கிறது.

பிரிட்டனில் தமிழ்ப் பள்ளிகளை நடத்துவதற்குப் பெற்றோர்களின் எதிர் பார்ப்புகள், சமூகத்தின் நோக்கங்கள் போன்றவற்றையெல்லாம் எண்ணிப்பார்க்க வேண்டியிருக்கிறது. எடுத்துக்காட்டிற்கு:-

இலண்டன் தமிழ்ச்சங்கம் ஏறத்தாழ ஐம்பது ஆண்டு-காலம் இலண்டனில் இயங்கித் தமிழ்ப் பணிகள் புரிந்து வருகின்றது. அதன் தமிழ்ப் பள்ளியின் அகவை இன்று ஆறு ஆண்டுகள்தாம் என்றாலும் அதன் தமிழ்ப் பணி குறிப்பிடத்தக்கது. தமிழ்மொழி போதனையில் தீவிர அக்கறை செலுத்தி வருகிறது.

ஆண்டு தோறும் சங்கம் நடத்திவரும் பொங்கல் விழாவினை முத்தமிழ் விழாவாக மலரச்செய்து வருகிறது. இதில் மாணவர்கள் தங்களின் தமிழ் மொழி ஆற்றலை வெளிப்படுத்துவதற்குப் பல வாய்ப்புகளை வழங்கி வருகிறது. தாய்மொழி பயிலும் தங்களின் பிள்ளைகளின் வாய்மொழி தமிழ்த் திறனைப் பெற்றோர் கேட்டு மகிழ்வதற்கும் மறைமுகமாகவே மாணவர்கள் சிறுவயது முதலே தமிழ் இலக்கியத்தில் திளைப்பதற்கும் ஏதுவாக ஆத்திசூடி, கொன்றை வேந்தன், திருக்குறள் ஆகியவற்றிலிருந்து பாக்களைத் தேர்ந்தெடுத்து தொகுத்துத் தந்து போதித்து அவர்களை ஊக்குவித்து வருகின்றது. பதினான்கு வயதுக்கும் குறைந்த குழந்தைகள் என்றாலும் தேசிய விநாயகம் பிள்ளை, பாரதியார், பாரதிதாசன் போன்றோர் கவிதைகளையெல்லாம் பாடி மகிழ்வதோடு தங்களின் பெற்றோர்களையும் மகிழ்விக்கக்கூடிய ஒரு நிலையில் இருந்து வருகிறார்கள். ஏறத்தாழ நூறு மாணவர்கள் இலண்டன் தமிழ்ச் சங்கத்தின் வார இறுதித் தமிழ்ப் பள்ளியில் தமிழ் பயின்று வருகிறார்கள். மொழி, இலக்கியம் ஆகியவற்றிற்கு இலண்டன் தமிழ்ச் சங்கத் தமிழ்ப் பள்ளி முக்கியத்துவம் வழங்கி வருகிறது. கிழக்கு இலண்டனில் இயங்கிவரும் திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளியினைத் தமிழர் முன்னேற்றக்கழகம் பொறுப்பேற்று நடத்தி வருகின்றது. அப்பள்ளியிலும் ஏறத்தாழ நூறு மாணவர்கள் பயின்று வருகிறார்கள்.

சனிக்கிழமையில் திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளிக்கும் ஞாயிற்றுக் கிழமையில் இலண்டன் தமிழ்ச் சங்கத்தின் தமிழ்ப் பள்ளிக்கும் போகின்ற மாணவர்களும் உண்டு.

கிழக்கு இலண்டனிலேயே சீரும் சிறப்புமுற்று விளங்கி வரும் இலண்டன் ஸ்ரீமுருகன் கோயில் சமயப்பணிகளுடன், சமூகப் பணிகளையும், கலைப் பணிகளையும் செய்து வருகின்றது. முழுநேர சமூகப் பணி அதிகாரி ஒருவர் இருந்து இதன் நிர்வாகங்களைத் திறம்பட நடத்தி வருகின்றார். பரதம், சங்கீதம், வீணை, மிருதங்கம் என்றெல்லாம் பயில விரும்பும் மாணவர்கள் இலண்டன் ஸ்ரீமுருகன் கோயிலுக்குச் செல்கிறார்கள். ஆகவே தனது பாடத்திட்டத்தில் கலை பயிற்றுவித்தலை இலண்டன் தமிழ்ச் சங்கத் தமிழ்ப் பள்ளி தவிர்த்துவிட்டது.

கிழக்கு இலண்டனின் நிலை இப்படி என்றால் மேற்கு இலண்டனில் இயங்கும் ஒரு பள்ளியான மேற்கு இலண்டன் தமிழ்ப் பள்ளியின் பாடங்களை ஒப்பிட்டுப் பார்ப்போம்.

மேற்கு இலண்டன் தமிழ்ப் பள்ளியின் தமிழ்மொழி போதனையோடு கர்நாடக இசை, வாய்ப்பாட்டு, வீணை, வயலின், மிருதங்கம், பரதநாட்டியம், நாடகம், சமயம், கணினி இயக்கப் போதனை என்றெல்லாம் தங்களின் பாடத்திட்டத்தில் இணைத்துள்ளதைச் சுட்டலாம். இதில் எல்லா மாணவர்களும் எல்லாவற்றையும் கற்பதில்லை என்றாலும், ஒருமுகப்படுத்தப்பட்ட ஒரு பாடத் திட்டத்தை எல்லாப் பள்ளிகளுக்கும் அறிமுகப்படுத்தக்கூடிய வேளையில் இப்பாடங்கள் யாவற்றையும் குறிப்பிட்டுப் பார்க்க வேண்டிய அவசியமாகிறது. பிரிட்டனின் அரசியல் நிலைமைகள், நாட்டு நடப்புகள், கல்வித்திட்டம் போன்றவற்றை எல்லாம் ஆய்ந்து நமது குழந்தைகளுக்கு இவ்வளவுதான் தமிழ்மொழி போதனை அல்லது எல்லாமும் தமிழ்மொழி போதனையா என்பதையும் நாம் சீர்தூக்கிப் பார்த்தால் நல்லது. (இராமவீரசிங்கம்)

செய்தி பரவல் தொடர்புச் சாதனங்கள்

இங்குள்ள மிகப் பழையகழகமானஇலண்டன் தமிழ்ச்சங்கம் தமிழர் கலையும், சங்கீதமும், பரதமும் கற்பித்து வருகிறது. தமிழர் மாணவர் சபை இசை அரங்கேற்றம் நடத்திவருகிறது. தவிரகிராய்டன்தமிழ்க்கலாச்சாரக்கழகம், சிலம்பொலி மாதர் சங்கம், மத்திய பிரிட்டிஷ் தமிழ் அகதிகள் நீதிக்கழகம், அமச்சூர் கலைக்கழகம், இலண்டன் ஈழத்தமிழர் கழகம், தமிழர் ஒருங்கிணைப்புக்கழகம், தமிழ் ஈழ மக்கள் விடுதலைக்கழகம், தொல் காப்பியக் கல்விமன்றம், இலங்கையர் இசைமன்றம், முத்தமிழ்க்கலைக் கழகம், வானவில் இசைமன்றம்,ஈழத்தமிழர்இளைஞர்அணி, தமிழ் இளைஞர் முன்னேற்றக் கழகம், இலண்டன் தமிழ்ச் சங்கம், இலண்டன் தமிழ் முன்னேற்றக் கழகம் முதலிய கழகங்கள் இருக்கின்றன. வட இலண்டனில் பல தொழில் நுட்பக் கல்லூரியுடன் தமிழ் மாணவர் மன்றமும் திராவிட அறநிலையமும், விம்பிள்டன் ஈழ ஆய்வகமும் உண்டு.

இலண்டன் தமிழ்ச்சங்கம் உயர்ந்த ஆய்வுக் கட்டுரைகள் அடங்கிய இரண்டு சிறப்பு மலர்களை 1973லும் 1976லும் வெளியிட்டது. ஐந்தாவது உலகத்தமிழ் மாநாட்டின்போது தமிழ் மலர்ச்சி ஒரு சிறப்பு மலரை வெளியிட்டது. திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளி 1978இல் ஒரு சிறப்பு மலரை வெளியிட்டது.

வைத்துக்கொள்வதே நல்லது என நினைத்துச்செயல்படுத்தினர். 1889 ஆம் ஆண்டிலிருந்து பெரும்பான்மையான நிலங்களையும் வீடுகளையும் வாங்கினர்.

மக்கள் தொகை

கரீபியன் நாடுகளுக்கு வந்து குடியேறிய ஆசிரியர்களைக் கிழக்கிந்தியர்கள் (East Indians) என்று அழைத்தனர். ஆகையால் தமிழர்களையும், பிற இந்தியர்களையும் இந்நாடுகளில் கிழக்கிந்தியர்கள் என்றே அழைத்தனர்.

கயானாவின் மொத்த மக்கள் தொகை 8,00,000 அவர்களில் இந்தியர்களின் எண்ணிக்கை 4,80,000. லெஸ்லிபாட்டர் என்பவர் பின்வருமாறு கூறுகின்றார். "1921 ஆம் ஆண்டு இறுதிக்குள் இந்தியாவிற்குத் திரும்பிய கிழக்கிந்தியர்களின் எண்ணிக்கை 69,970 ஆகும். இவர்களில் பெரும்பான்மையோர் சென்னை மாநிலத்திலிருந்து வந்தவர் என்பதனைப் பெயர் பட்டியலைக்கொண்டு அறியமுடிகின்றது."

ஈ.ச.விசுவநாதன் பின்வரும் விளக்கங்களை அளிக்கின்றார்:

"1838 ஆம் ஆண்டு தொடங்கி 1917 ஆம் ஆண்டுவரை கயானாவிற்கு மட்டும் வந்த இந்தியர்களின் தொகை 2,38,979 ஆகும். இவர்களில் சென்னையிலிருந்து வந்தவர்கள் எத்தனைப்பேர் என்பதனைத் தற்போது கணக்கிட வழியில்லை. எனினும் 1845 முதல் 1862 வரை இந்த நாட்டிற்கு வந்த தமிழர்களின் எண்ணிக்கை கணிசமாக இருந்திருக்க வேண்டும். ஏனெனில் 1845 ஆம் ஆண்டு முதல் 1848 ஆம் ஆண்டுவரை ஒப்பந்தக்கூலிகளை ஏற்றிவந்த நாற்பத்தைந்து கப்பல்களில் இருப்பத்தோரு கப்பல்கள் சென்னையிலிருந்து வந்ததாக அறிகின்றோம். மேலும் 1845-1862 வரை கயானாவிற்கு வந்த இந்தியர்களில் ஏறக்குறைய ஐம்பது சதவிகிதத்தினர் மதராசிகள் எனக் கணக்கிட்டுள்ளனர். ஆதலால் மேற்குறிப்பிட்ட காலக்கட்டத்தில் சென்னையிலிருந்து வந்தவர்களின் தொகை சுமார் ஓர் இலட்சத்திற்குக் குறையாமல் இருக்கலாம் என ஊகிக்கமுடிகின்றது. இந்த நிலை நீண்டகாலத்திற்கு நீடிக்கவில்லை. குறிப்பாக 1860 ஆம் ஆண்டிற்குப்பிறகு தமிழர்களின் எண்ணிக்கை படிப்படியே குறைய ஆரம்பித்தது எனும் அதற்கான காரணங்கள் பல என்றும் அறிகின்றோம். 1874 ஆம் ஆண்டு அறிக்கையின்படி கயானாவிற்கு வந்த இந்தியர்களில் நாற்பத்து நாலாயிரம் பேர் கல்கத்தாவிலிருந்தும், இரண்டாயிரத்து ஐநூறு பேர் சென்னையிலிருந்தும் வந்தவர்கள் என அறிகின்றோம். இதற்குப்பிறகு சென்னையிலிருந்து அதிகமான கூலிகள் இந்நாட்டிற்கு வரவில்லை என்றாலும், மறுபடியும் மதராசிகளின் வருகை 1913 ஆம் ஆண்டு முதல் தொடங்கப்பட்டு 1917ம்ஆண்டோடு முடிவடைந்தது. இந்த ஆண்டுக்களுக்கிடையில் வந்த தமிழர்களின் எண்ணிக்கை மிக அதிகமாக இருந்திருக்கமுடியாது என்பதனைத் தற்போது இந்நாட்டில் வாழும் தமிழர்களைக்கொண்டும் எங்கள் களஆய்வினாலும் பெற்ற தகவல்களைக்கொண்டும் உய்த்துணர முடிகின்றது."

ஈ.சு.விசுவநாதன் மேலும் பின்வருமாறு கூறுகின்றார்: "தற்போது இந்நாட்டில் (கயானாவில்) வாழும் தமிழ் வம்சாவளியினரை இருவகையாகப்பிரிக்கலாம். 1. 1921 ஆம் ஆண்டிற்குமுன் இந்தியாவிற்குத் திரும்பியவரைத்தவிர எஞ்சியிருந்த ஏறக்குறைய 1500

தமிழர் - தெலுங்கர்கள் குடும்பங்களின் சந்ததியினர் 2. 1913-17 ஆம் ஆண்டுகளுக்கிடையில் வந்த சென்னை வாசிகளின் வழித்தோன்றல்கள் இவர்களின் எண்ணிக்கை தற்போது (1986) 80,000திற்குமேல் இருக்கமுடியாதென என் கள ஆய்வின் மூலம் பெற்ற குறிப்புகளின் மூலம் அறிய முடிகின்றது. இவர்கள் தங்கி வாழும் நகரங்களும் பேரூர் சிற்றூர்களும் இந்நாட்டில் உள்ள நான்கு பெரிய நதிக்களுக்கிடையே உள்ளன. தமிழர்கள் தற்போது ஏறக்குறைய அறுபது ஊர்களில் வாழ்ந்து வருகின்றனர். அவை சிலவற்றில் ஒருசில குடும்பங்களே உள்ளன. ஆனால் கொரன்டின் பகுதியில் உள்ள கங்காராம் குடியிருப்பு, ஆல்பியன், ஹாம்ஸாயர், வில்லியம்பர்க், ரோஸ்ஹால், விய், போர்ட் மொராண்ட், பெல்விடீர் போன்ற ஊர்களிலும், டெமராரா நதியின் மேற்குப்பகுதியில் உள்ள லெனோராவிலும் ஸ்டுவர்ட்வில்லிலும், கிழக்கு கரையில் உள்ள ஹெர்டெலிங்கிலும், டெமராராநதியின் கிழக்குப்பகுதியில் உள்ள என்மூர், மய்கோனி போன்ற ஊர்களிலும் சுமார் அறுபது முதல் நூறுகுடும்பங்கள் இருக்கலாமென. என கள ஆராய்ச்சிமூலம் தெரியவருகின்றது . . .(இவைகளில்) கங்காராம் என்பது மட்டும் இந்தியப்பெயராகும்."

டிரினிடாட், டொபாகோ நாட்டின் மொத்த மக்கள்தொகை 12,00,000 இந்திய வம்சாவளியினரின் மொத்த மக்கள் தொகை 6,20,000. ஆப்பிரிக்க அடிமைகளின் வம்சாவளியினர்களும், கிழக்கிந்தியக்கூலிகளின் வம்சாவளியினரும் நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 83 விழுக்காடு இருக்கின்றனர். இவர்களில் பெரும்பான்மையோர் டிரினிடாட்டிலேயே பிறந்தவர்கள். குறிப்பாக1916க்குப்பின் பியார்க்கோ விமானநிலையம் அருகில் சென்னைக்குடியிருப்புப்பேட்டை என்ற வீடமைப்புத்தொகுதி உண்டு. தமிழர்கள் மிகுதியாக வாழும்பகுதி வாட்டர்லூ என்ற பகுதியாகும்.

ஜமெய்க்காவில் இருக்கும் மக்கள் தொகையில் பெரும்பான்மையோர் கருப்பர்கள், கிழக்கிந்தியர்கள் (3.5 %), சிறுப்பான்மையினர்களும் மிகுதியாக இருக்கின்றனர். இந்நாட்டின் மொத்த மக்கள் தொகை 22,00,000 இந்திய வமிசாவளியினரின் எண்ணிக்கை 59,000. 1845-1971 ஆம் ஆண்டுகளுக்கிடையே 36,412 இந்தியர்கள் இந்நாட்டிற்கு வந்தனர். இவர்களில் 72 விழுக்காடு இந்தியர்கள் கிழக்கு உத்திரப்பிரதேசம், பீஹார் முதலிய பகுதிகளிலிருந்து வந்தனர். எஞ்சிய 28 விழுக்காட்டினர்களில் பெரும்பான்மையோர் பிற வடஇந்தியப் பகுதிகளிலிருந்து வந்தனர். ஆகையால் தமிழர்களின் எண்ணிக்கை குறைவு. இங்கிருக்கும் தமிழர்களில் பலர் வாழைத் தோட்டங்களில் பணிபுரிகின்றனர்.

சூரிநாம்நாட்டின் மொத்த மக்கள் தொகை 4,00,000 இந்திய வமிசாவளியினரின் எண்ணிக்கை 1,42,000. 1921 ஆம் ஆண்டு மொத்தமக்கள் தொகை 1,12,300 - 50 விழுக்காட்டினர் கிரியோல்கள் (Creole) 28 விழுக்காடு இந்தியர்கள், 17 விழுக்காடு ஜாவானியர்கள், 1939இல் இவர்களின் எண்ணிக்கை முறையே 45,29,21 விழுக்காடாக மாறியது. கிழக்கிந்தியக் கூலியாட்கள் குடியேறிய பிறகு குறிப்பிட்ட மாவட்டங்களில் ஒவ்வொரு இனப்பிரிவினரும் பிரிந்து வாழும் சூழ்நிலை உருவாகியது. 1939 ஆம் ஆண்டில் மரோவிஜ்னி (Marowijne) யில் நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 2 விழுக்காடு இருந்தனர். இவர்களில் 90 விழுக்காடு கிரியோல்கள் இருந்தனர், கொரோநியில் (Coronie) 3விழுக்காடு இருந்தனர், இவர்களில் 90 விழுக்காடு கிரியோல்கள். நாட்டின் தலைநகரமான

பரமாரிபோவில் (Paramaribo) 35 விழுக்காடு மக்கள் வாழ்ந்து வந்தனர். இவர்களில் 79 விழுக்காடு கிரியோல்கள், 10 விழுக்காடு இந்தியர்கள், 2 விழுக்காடு சாவானியர்கள். கோமிவிஜ்னியில் (Commewijne) 16 விழுக்காடு இருந்தனர். இவர்களில் 67 விழுக்காடு சாவானியர்கள், 18 விழுக்காடு இந்தியர்கள், 13 விழுக்காடு கிரியோல்கள் ஆகும். சரமாச்சாவிலும் (Saramacca) நிக்கெரியிலும் (Nickerie) இந்தியர்களின் பெரும்பான்மை இருந்தது. சரமாச்சாவில் 6 விழுக்காடு மக்கள் வாழ்ந்தனர். இவர்களில் 49 விழுக்காடு இந்தியர்கள், 23 விழுக்காடு கிரியோல்கள், 20விழுக்காடு சாவானியர்கள் நிக்கெரியில் 10 விழுக்காடு மக்கள் இருந்தனர். இவர்களில் 49 விழுக்காடு இந்தியர்கள், 27 விழுக்காடு கிரியோல்கள், 20 விழுக்காடு சாவானியர்கள்ஆகும். மொத்தத்தமிழர்களின் புள்ளிவிவரங்கள் கிடைக்கவில்லை. கிரெனடாவின் மொத்த மக்கள் தொகை 1,10,000 இவர்களில் இந்திய வமிசாவளியினர் 15,000. இந்நாட்டில் இருந்த இந்தியர்கள் சிலர் இருபதாம் நூற்றாண்டின் தொடக்க ஆண்டுகளில்பனாமாகால்வாய்ப்பகுதியில்பணிபுரியச் சென்றனர். இதே காலத்தில் சிலர் பிரேஜில், அருபா, கனடா, அமெரிக்கக் குடியரசு, இங்கிலாந்து, டிரினிடாட் முதலிய நாடுகளுக்குச் சென்றனர். தங்களுடைய சமூக, பொருளாதார நிலையை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் இவர்கள் குடிபெயர்ந்து சென்றார்கள். இந்நாட்டில் வாழும் தமிழர்களின் மொத்த மக்கள் தொகை புள்ளிவிவரம் கிடைக்கவில்லை. இன்று இந்தியர்கள் இத்தீவின் எல்லாப்பகுதிகளிலும் பரவி வாழ்கின்றனர். குறிப்பாக போர்ட் (Forde) செயின்ட் ஜேம்ஸ் (Saint James) சமாரிடான் (Samaritan) கும்மா (Cumma) கிரேண்ட் பாக்கோலெட் (Grand Bacolet) புளோரிடா, கோயுயாவ் (Gouyave) முதலிய இடங்களில் இந்தியர்கள் மிகுதியாக இருக்கின்றனர்.

தமிழ்ப் பண்பாடும், சமயமும்

கயானா

கயானாவில் வாழும் தென்னிந்தியர்களை மதராசிகள் என அழைக்கின்றனர். இவர்களில் பெரும்பான்மையோர் இந்துக்களாக இருந்தபோதிலும் முப்பத்தைந்து சதவிகிதத்தினர் கிறிஸ்துவர்களாக உள்ளனர். பெரும்பான்மையான தமிழர்கள் உயர்சாதிப்பிரிவினர் அல்லர் காளிமே (Kali Mai), மாரியம்மா முதலிய கடவுள்களை வழிபடுகின்றார்கள். காளியைத்தான் இவர்கள் காளிமே என அழைக்கின்றார்கள். காளியின் தோற்றம் சக்தி, பணிகள், உறவுகள் பற்றிய கதைகள் பல உண்டு. காளியும் அவளுடைய பாதுகாவலன் மதுரைத் தலைவனான மதுரைவீரனையும் பற்றிக் கொண்டாடிப் போற்றுகின்றார்கள், இவ்வழிபாடு இந்நாட்டின் நாட்டுப்புறப் பண்பாடுகளில் ஒன்றாக இருக்கின்றது.

காளி என்றால்கருப்புத்தாய்என்று பொருள். காளியை மஹா காளி, காளிமாதா, மாரியம்மா, மாரியம்மன் என்றும் அழைக்கின்றார்கள். அம்மை, காலரா நோய் தோன்றுவதற்கு இத்தாய்தான் காரணம் என்று கருதுகின்றார்கள். சிவபெருமானின் மனைவி காளி. 1950-1964 ஆம் ஆண்டுகளுக்கு இடையே காளி வழிபாடு குறையத் தொடங்கியது. தமிழர்கள் மிகுதியாக வாழும் ஒவ்வொரு தோட்டத்திலும் கிராம ஆண்டு

அல்லது கவ்பூஜை (*Annual Grama or Gauw puja*) கிராம வழிபாட்டு முறையில் நடக்கின்றது. பெரிய அழகான கோயில் கட்டடங்கள் எழுப்பப்படவில்லை. சில தோட்டங்களில் மட்டும் சிறு கோவில்கள் எழுப்பப்பட்டன. கடவுள் சிலைகள் அமைக்கப்பட்டன. கிராம ஆண்டுத் திருவிழாவின்போது தோட்டங்களில் கிடைக்கும் பொருள்களைப் பயன்படுத்தி கூடாரங்கள் அப்பொழுதுதான் தேவைக்காக எழுப்பப்படும். களிமண்ணில் செய்த கடவுள் சிலைகள் அலங்கரிக்கப்பட்டு வழிப்பாட்டிற்குப் பயன்படுத்தப்படும். ஆனால் பூசைகள் முடிந்து விழா முடியும் தினத்தில் இச்சிலைகளைத் தண்ணீர் உள்ள குளங்களிலோ, கிணறுகளிலோ போட்டுவிடுவார்கள். இத்திருவிழாக்களின் போதுதான் பூசாரிகள் தெய்வம் ஆடத்தொடங்குவர். அப்போது அவர்கள் உடல், மனநோய், உள்ளவர்களுக்குத் தேவையான அறிவுரைகளை அளிப்பார்கள். மற்ற நாள்களில் ஆண்டு முழுவதும் கடவுளை வீட்டுப் பூசை அறைகளில் வழிபடுவார்கள் அல்லது கோயிலோஸ் (*koeloos*) என்று அழைக்கப்படும் கோயில்களில் வழிபடுவார்கள்.

1940 ஆம் ஆண்டுக்கும் 1960 ஆம் ஆண்டுக்கும் இடையே ஆண்டுத் திருவிழா கொண்டாடப்படுவது பல இடங்களில் குறையத்தொடங்கியது. மக்களின் ஆர்வமும் குறையத்தொடங்கியது. கொரன்டீன் கடற்கரைப்பகுதிகளில் (*Corentyne Coast*) பகுதிகளில் மட்டும்- குறிப்பாகக் கூறப்போனால் ஆல்பியன் போர்ட் மௌரண்ட்டில் (*The Albion Port Mourant*) மட்டும் ஆர்வம் குறையாமல் இந்த இருபது ஆண்டுகளிலும் இடைவிடாமல் இத்திருவிழா கொண்டாடப் பட்டது. பல நூற்றுக்கணக்கான தமிழர்கள் (*Madrassis*) இக்கோவில்களுக்கு ஆண்டு யாத்திரை செய்வார்கள்.

1960ஆம் ஆண்டு, ஆண்டுத் திருவிழாவின்போது பூஜைகளையும் சடங்குகளையும் தமிழர்கள் மட்டும் செய்தார்கள். தமிழர் அல்லாதவர்களுக்கு உடல் மனநோய் தொடர்பான அறிவுரைகள் மட்டும் வழங்கப்படும். இச்சமயத்தில் எல்லாக் கோயில்களிலும் பலியிடும் சடங்குகளும் இருந்தன. டெமராராவில் (*Demarara*) நான்கு கோயில்கள் மட்டும் இருந்தன. ஆனால் பலர் வீட்டில் பூஜை அறைகள் இருந்தன. அவர்களில் சிலர் ஆண்டு திருவிழாவைப் பொதுமக்களை அழைத்துத் தங்கள் இல்லங்களில் கொண்டாடினர். 1960ஆம் ஆண்டுவரை எசிக்யூபோவில் (*Essequibo*) கோவில்களே இல்லை. இப்பொழுது இருக்கும் கோவில்களில் பாதி அளவு கோயில்கள் கூட 1960ம் ஆண்டில் பெர்டீஸ் மாவட்டத்தில் (*Berbice*) இல்லை. இக்கோவில்களில் சடங்குகளும் பூஜைகளும் மரபுவழாத தமிழர் முறைகளில் தமிழர்களால் பின்பற்றப்பட்டன. ஆனால், மிருகங்களின் தலைகள் வெட்டுவது பறவைகள், சேவல் கோழிகளின் கழுத்தைக் கடித்துக்கொய்தல் இரத்தத்தைக் குடித்தல் போன்ற சடங்குமுறைகளின் தத்துவத்தைப் புரிந்து கொள்ளாத கயானா பொதுமக்கள் இக்காளியின் ஆண்டு வழிபாட்டைக் காட்டுமிராண்டி வழிபாடு என்றும் பிசாசு தீயஆவி வழிபாடு என்றும் வெறுக்கின்றார்கள் என்று பேஜியர் என்பார் கூறுகின்றார்.

கடந்த பதினைந்து ஆண்டுகளில் காளியின் வழிபாடு புத்தெழுச்சி பெற்றிருக்கின்றது. கோயில்களின் எண்ணிக்கை மூன்று மடங்கு பெருகியிருக்கின்றது. சடங்குமுறைகள் திருத்தப்பட்டிருக்கின்றன. சில பழைய முறைகள் விட்டுவிடப்பட்டன. புதிய முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றன. மக்களின் ஆதரவு அதிகரித் திருக்கின்றது. வாரம் ஒருமுறை எல்லோரும் இணைந்து கோவிலில் வழிபாடு

செய்கின்றார்கள். காளி தெய்வம் வரும் (பிடித்தாட்டும் Possessed) அனுபவம் பலருக்கு இருக்கின்றது.

டெமராரா மாவட்டத்தில் முன்பு இரண்டு கோயில்கள் தான் இருந்தன. தற்சமயம் ஆண்டுப்பூசை நான்கு இடங்களில் நடைபெறுகின்றன. தற்சமயம் 16 கோயில்கள் இருக்கின்றன. எல்லாக் கோயில்களிலும் தவறாமல் வார பூசைகள் நடக்கின்றன. இக்கோயில்கள் அழகாக நன்றாகக் கட்டப்பட்டிருக்கின்றன. எசிக்யூபோவில் இரண்டு கோயில்கள் சமீபத்தில் எழுப்பப்படுகின்றன.

தற்சமயம் கொல்லாமைச் சடங்குகளைப் பின்பற்றும் பிரிவினர்கள் (Non killing Group) இருக்கின்றார்கள். ஏழு கோயில்கள் இம்முறையைப் பின்பற்றுகின்றன. பலி சடங்குபின்பற்றும் கோயில்களில் கூட இரு பிரிவுகள் இருக்கின்றன. பெருமாள் கோயில் (Perumal koeloo) மாரியம்மன் கோயில். பெருமாள் கோயிலில் இந்துசமய மரபு வழி, உருவ வழிபாட்டுமுறை பின்பற்றப்படுகின்றது. முன்பு தமிழ்மொழி மூலம் மட்டும் தான் கோயிலில் தொடர்பு கொண்டிருந்தனர். தற்சமயம் இந்தி, ஆங்கிலம் பயன்படுத்துகின்றனர். ஆனால் நெடுங்காலமாக இருக்கும் கோயில்களில் இன்றுகூட, தமிழ் மொழி தொடர்புக்குத்தான் முதன்மை அளிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் இக்கோயில்களிலும் ஆங்கில மொழி பெயர்ப்பு அளிக்கப்படுகின்றது. கீர்த்தனைபாடும் பிரிவினர்கள், பஜனை செய்பவர்கள் தமிழ்மொழி, இந்திமொழி முதலிய மொழிகளைப் பயன்படுத்துகின்றார்கள். பலகோயில்களில் இந்தி, ஆங்கிலம் மட்டும் பயன் படுத்தப்படுகின்றன.

மரபுவழிக் கோயில்களில் பெண்கள் நுழைந்து வழிபாடு செய்வது அனுமதிக்கப்படவில்லை. பெண்கள் கோயில்கதவு வரை மட்டும்தான் போகலாம். கதவருகே சென்றவுடன் தாங்கள் கொண்டு வரும் காணிக்கைப் படையல்களை உதவியாளர்கள் மூலம் அனுப்புவார்கள். கோயிலுக்குள் சென்று அவர்கள் வழிபாடு செய்ய இயலாது. கோயில் முற்றங்களில் மட்டும்தான் வழிபாடு செய்ய முடியும். தற்சமயம் இம்முறையில் மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது. பெண்களும் கோயிலுக்குள் நுழைய அனுமதி அளிக்கப்பட்டிருக்கின்றது. பெண்கள் 5 கோயில்களின் தலைவர்களாகவும் பணி புரிகின்றார்கள்.

போர்பாஸ் (Fore Pass) என்று அழைக்கப்படும் தீ மிதித்தல் விழா தற்சமயம் நடத்தப்படுவதில்லை. கைகளின் மேல் குதிரைச் சவுக்கால் அடித்தாலும் ஒருவித வலியோ காயமோ இல்லாமல் இருப்பது அல்லது கற்பூரத்தை ஏற்றி வாய்க்குள் அணையும் வரை வைப்பது போன்ற சடங்குகள்தான் தற்சமயம் பொதுவாகப் பின்பற்றப்படுகின்றன.

ஆண்டுத் திருவிழாப் பூசைகளுக்கும் வார பூசைகளுக்கும் பலவேறுபாடுகள் இருக்கின்றன. நாட்டின் எல்லா இனப்பிரிவினர்களுக்கும் தற்சமயம் காளிபூசை ஈடுபாடு ஏற்பட்டிருக்கின்றது. எந்த ஞாயிற்றுக்கிழமை பூசை நாளிலும் மதராசிகளைத்தவிர பிற இந்தியர்களும், மற்ற சமயத்தினரும் ஆப்ரிக்கர்களையும் காணலாம். எல்லோரும் இக்கோயில்களை நோய்தீர்க்கும் மருத்துவ நிலையங்களாகவும் கருதுகின்றனர். கொரன்டின் பகுதியில் உள்ள ரோஸ்ஹால் அம்மன் கோயிலை ஓர் ஆப்பிரிக்க பகதர்

நடத்துகிறார். ஹெர்ஸ்டெலிஸ் கோயிலில் பக்தியோடு குறி சொல்லும் இளைஞர் ஒரு முசுலிம். *(Source:Dennis W.M.Z.Bassier,Kali Mai Worship in Guyana A quest For a New Identity)*

கிறிஸ்துவர்களைப் போலவே தமிழர்களும், ஞாயிற்றுக்கிழமைகளில் கோயிலுக்குச் செல்லும் பழக்கத்தை நடைமுறையில் கைக்கொண்டுள்ளனர். இந்துக் கோயில்களையும் கிறிஸ்துவ முறைப்படியே "சர்ச்" என்று அழைக்கின்றனர். சில சமயங்களில் "இந்து சர்ச்" என்று கூறுவதும் உண்டு. இத்தகைய இந்து சர்ச்சுகளைத் தமிழ்நாட்டில் உள்ள கோயில்களோடு எந்த வகையிலும் ஒப்பிடமுடியாது. உயர்ந்த கோபுரங்களையோ, பெரிய திருச்சுற்று மதில்களையோ, கற்சிலைகளையோ, படிமங்களையோ இந்தக் கோயில்களில் காண இயலாது. பெரும்பான்மையான கோயில்கள் நம் வீட்டுப் பூசை அறைபோல பெரிய அளவில் உள்ளன. தெய்வச்சிலைகளுக்குப் பதிலாகக் கடவுள் படங்களை வைத்து வழிபடுகின்றனர். பெரும்பான்மையான கோயில்களில் லட்சுமி, சரசுவதி படங்களையும் வெங்கடேசப்பெருமாள், சிவபெருமான் படங்களையும் காணலாம். சிலகோயில்களில் படங்களோடு களிமண்ணால் சிலைகளைச் செய்து அழகிய வண்ணங்களைத்தீட்டி வழிபாட்டிற்குப் பிரதிஷ்டை செய்து வைத்துள்ளனர்.

இத்தகைய கோயில்களில் பல பெரிய வீடுகள் போல் நாற்பதுக்கு மேற்பட்ட ஊர்களில் உள்ளன. இக்கோயில்களை இந்நாட்டு மக்கள் காளிசர்ச்சுகள் என அழைக்கின்றனர். இவை கொரன்டீன், பெர்பீஸ் பகுதிகளில் பதினாறு ஊர்களிலும், கிழக்கு டெமராராவில் இருபதுக்கு மேற்பட்ட ஊர்களிலும், மேற்கு டெமராராவில் இருபதுக்கு மேற்பட்ட ஊர்களிலும், எசிக்யூபோவில் மூன்று ஊர்களிலும் உள்ளன.

இக்கோயில்கள் யாவற்றிலும் முழுமுதற்கடவுளாக இடம் பெறுவது காளியோ, மாரியம்மனோ ஆகும். இந்நாட்டில் உள்ள தமிழர்களில் பலருக்கு வழிபடும் தெய்வமாக உள்ளது, இக்கடவுள்களில் ஏதாகிலும் ஒன்றாகும். மேலும் மதுரை வீரன், முனேஸ்வரன் (முனீஸ்வரன்) மாயன் பெருமாள், போன்ற கடவுள்கள் இடம் பெறுகின்றன. ஆல்பியனில் உள்ள காளி கோயிலில் சூர்ய நாராயண்ஜிக்கும் ஒரு முக்கியம் கொடுத்துள்ளனர். பல கோயில்களில் கிராம தேவதைகளும் உற்சவமூர்த்திகள் போல முக்கிய இடம் பெறுகின்றன.

இக்கோயில்களில் மிகப்பழமையானவை பெர்பீஸில் உள்ள மிஸ்போமியும் ஆல்பியன் பிரண்டும், டெமராராவில் உள்ள ஹெர்ஸ் டெலிங்கும் ஆகும். கொரன்டீனில் உள்ள பிளாக்புஷ் போல்டரில் உள்ள கோயிலை நிறுவியவர் கரையாய் (கனகராஜ்) ஆவார். போர்ட்மொராண்டில் உள்ள கோயிலை நிறுவியவர்கள் கிஷ்டின் நாயுடு (கிருஷ்ணன் நாயுடு) அவர்களும் டோமிநாயுடு அவர்களும் ஆவர். டெமராராவில் உள்ள மில்லர்தெரு ட்ரையம்ஸ் கோயிலைத் தோற்றுவித்தவர் ஜோனாஸ் ஜான் ஆவர். பெட்டர் ஒப்பில் உள்ள இரண்டு கோயில்களையும் கட்டியவர் டோராவும், புத்தியும் ஆவர். அதுபோல சோஸ்டையில் உள்ள கோயிலைச் சுக்ரீம் அவர்களும் க்ரூவில் உள்ள கோயிலை மென்ஜீ அவர்களும் தோற்றுவித்தார்கள். எசிக்யூபோவில் உள்ள கோயிலை நிறுவியவர் ஜான் ஆவார்கள்.

தமிழர் கோயில்களை இரண்டுவகையாகப் பிரிக்கலாம். காளியம்மன், மாரியம்மன் போன்ற தெய்வங்களையும், கிராம தேவதைகளையும் உள்ளடக்கிய கோயில்கள் (2)

மேற்கூறிய கடவுள்களோடு சிவன், பெருமாள், இலட்சுமி, சரசுவதி ஆகிய தெய்வங்களை உள்ளடக்கிய கோயில்கள். முன்னதை மதராசிகளின் கோயில்கள் என்றும் இரண்டாவதை இந்துக்கோயில்கள் என்றும் அழைக்கின்றனர். ஆண்டுதோறும் இக்கோயில்களில் திருவிழா நடைபெறுவதுண்டு. டீரையம்பில் உள்ள கோயிலில் அப்போது அம்மன் சிலையை வீதியில் வழிபாட்டிற்காக எடுத்துச்செல்வதுண்டு. அதோடு தீ மிதித்தலும் நடக்கும் (போஜியர் தற்சமயம் தீ மிதித்தல் விழா இல்லை எனக்கூறுகின்றார்)

இந்நாட்டுக் கோயில்களில் மூலவரான காளியம்மனுக்குப் பெரிய அறையும் மதுரைவீரன் போன்ற கிராம தேவதைகளுக்குத் தனித்தனிச்சிறிய அறைகளும் உள்ளன. கோயில்கள் சிறியவையாக இருந்தால் எல்லாக் கடவுளரையும் ஒரே அறையில் உயரமான மேடையில் வைத்திருப்பார்கள்.

ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமைகளில் நடக்கும் பூசையில் கலந்துகொள்ள அக்கம்பக்கத்தில் உள்ள ஊர்களிலிருந்து பக்தர்கள் பூசைத்தட்டில் வாழை, ஆரஞ்சு, போன்ற பழங்களையும், பலவகைப் பூக்களையும் தேங்காயையும் கொண்டுவருவர். சிலர் வடை, சுண்டல், அரிசி மாவால் செய்த கேசரி போன்ற பொருள்களைச் சிறப்புப் படையலாகக்கொண்டு வருவர். வேண்டுதல் கைகூடிய போதும் துன்பங்கள் விலகிய போதும் சில பக்தர்கள் இச்சிறப்புப்படையல்களைக்கொண்டு வரும் வழக்கம் இந்த நாட்டில் உள்ளது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஒப்பந்தக்கூலிகளாக வாழ்க்கை தொடங்கிய போது அந்தத் தோட்டங்களில் சர்ச்சுகள்தான் இருந்தன. அவற்றில் விடுமுறைநாளான ஞாயிற்றுகிழமைகளில் மட்டும் வழிபாடு நிகழும். அந்தப் பழக்கத்தை இந்த நாட்டு இந்துக்களும் பின்பற்றத் தொடங்கிய காரணத்தால் ஞாயிற்றுக் கிழமைகளில் மட்டும் கோயில் வழிபாடு நடைபெற்றுவருகிறது.

பூசாரி வந்தவுடன் கோயிலில் கூட்டுப்பிரரத்தனை ஒருமணி நேரத்திற்கு நடைபெறும். அப்போது 'மாரியம்மன் தலாத்து' (மாரியம்மன் தாலாட்டு) சிலக்குத்து(சிலம்புக்கொத்து) போன்ற நூல்களில் உள்ள பாடல்களைத் தாளத்தோடு பாடுவர். வட இந்தியாவில் பாடப்படும் சில பஜனைப் பாடல்களையும் ஆங்கிலத்தில் எழுதி வைத்துக்கொண்டு பாடும் வழக்கமும் உண்டு. எத்தகைய பாடலைப் பாடுவதாக இருந்தாலும், பாடுபவர் ஒருவரியைப் பாட மற்றவர் அதே வரியைத் திரும்பப்பாடுவர். இந்தமுறை எல்லாக் கோயில்களிலும் பின்பற்றப்படுவதால் கோயிலுக்கு வரும் பக்தர்கள் யாவரும் பல பாடல்களை மனப்பாடமாக அறிந்துள்ளனர்.

கூட்டுப்பிரார்த்தனை முடிந்ததும் பூசாரி தம் பூசையைத் தாம் அறிந்தபடி முறையாகத் தொடங்குவார். முதலில் பக்தர்கள் கொண்டுவந்த பூக்களைக் காளியம்மன் பாதத்தில் வைத்துவிட்டுத் தேங்காய்களை உடைத்துச் சாம்பிராணி தூபம் காட்டிக் கற்பூர ஆராதனையோடு பூசையை முடித்து விடுவர். பூசை நடைபெறும் காலத்தில் பக்தர்களில் பலர் பாடிக்கொண்டிருப்பர். இருவர் பறை ஒலி எழுப்புவர், ஓரிருவர் மணி அடிப்பர். பெருமாளுக்குப் பூசை செய்யும் போது சங்கு ஊதுவதும் உண்டு.

பூசை நிகழும்போது சில பக்தர்கள் ஆண், பெண் இருபாலர்களும் உணர்ச்சிவசப்பட்டு பத்துமுதல் பதினைந்து நிமிடங்கள் வரை தெய்வம் ஆடுவதைக் காணலாம். பக்தர்களுக்கான பூசை முடிந்தவுடன் வேறோர் சிறப்புப்பூசை நடைபெறும். அப்போது கோயிலைச் சார்ந்த ஒருவர் உணர்ச்சி மேலிட்டால் தெய்வம் ஆடத்தொடங்குவார். இந்த ஆட்டம் மூன்று மணி நேரம் தொடரும். இச்சமயத்தில் பக்தர்கள் கேட்கும் கேள்விகளுக்கு விடைதருவதோடு, நோய்க்கு நாட்டு மருந்தும் சில பரிகாரங்களையும் கூறி அனுப்புவார்.

இறைவனிடம் வேண்டுதல் செய்துகொண்டு அந்த வேண்டுதல் நிறைவேறியதும், தம் இல்லங்களிலேயே தாம் வழிபடும் கடவுளுக்குச் சிறப்புப் பூசைகள் செய்தல் உண்டு. அத்தகைய பூசைகள் சிவனுக்கும் காளியம்மனுக்கும் மாரியம்மனுக்கும் மட்டைரவீரனுக்கும், சூரியநாராயணனுக்கும், அனுமன்ஜிக்கும் செய்வதுண்டு. பூசை முடிந்ததும் எந்தக் கடவுளுக்குப் பூசை செய்தார்களோ அந்தக் கடவுளுக்குரிய கொடியை வீட்டின் சுற்றுச்சுவரின் ஒரு மூலையில் நடுவார்கள். மேற்கோளாக அனுமன்ஜிக்கும் பூசைசெய்வோர் சிவப்புக் கொடியை நடுவார்கள். சூர்யநாராயணஜிக்குக் கொடி வெள்ளை, மதுரை வீரன் சாமிக்கும் அம்பாளுக்கும் உரிய கொடி மஞ்சள், மாரியம்மனுக்குரியது மஞ்சள் அல்லது சிவப்பு நிறக்கொடி, சிவனுக்குரியது பச்சை, காளிக்குரியது கருமைநிறக்கொடியாகும். இப்பழக்கத்தைப் பீஹார் நாட்டிலிருந்து வந்தவர்களிடம் தமிழர்கள் கற்றுக்கொண்டு தம்முடையதாக்கி கொண்டனர். இதுபோலவே வங்காளத்தில் விமரிசையாகக் கொண்டாடப்படும் காளிபூசையும் இந்நாட்டுத் தமிழர்கள் சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள்.

பல தோட்டங்களில் மாதா கோயிலும் கிறிஸ்தவ சமயப் பிரசாரமும் இருந்தன. அவற்றில் வாரந்தோறும் ஞாயிற்றுக் கிழமைகளில் முறையாக நடைபெறும் பிரார்த்தனைக் கூட்டங்களுக்குச் சென்றுவர ஆரம்பித்ததின் காரணமாக மதம் மாறியவர்கள் சிலருண்டு. புதிதாக வந்த தமிழர்களைப் படிப்படியாகத் தங்கள் பிரசாரத்தின் மூலம் பாதிரியார்கள் திட்டமிட்டுக் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவும்படியும் செய்திருக்கிறார்கள். இந்துக்களுக்குள் இருக்கும் சாதி வேறுபாடு, பல கீழ்ச்சாதிகள் எனக்கூறப்படுகின்ற தமிழர்களைக் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவும்படியும் செய்துள்ளது. அவ்வாறு மதம் மாறியவர்களில் பலர் காலப்போக்கில் தம் பழைய சமயத்தின் பாரம்பரியத்தையும் மேன்மையையும் அறிந்து மறுபடியும் இந்து சமயத்திற்கே திரும்பியதும் உண்டு. இந்த நாட்டிற்கு வந்த மதராசிகளில் பெரும்பான்மையோர் இந்துக்களாக இருந்தபோதிலும், ஏறக்குறைய முப்பத்தைந்து சதவிகிதத்தினர் தற்போது கிறிஸ்த்தவர்களாக உள்ளனர்.

(மூலம்: ஈ.ச. விசுவநாதன், கயானாவில் தமிழர்கள், தமிழ்க்கலை, தமிழ் 5, கலை 3 -4)

(டிரினிடாட்டில் தமிழர் சிவன் கோயில் கவிரா சாலையில் (Cavira Road) இருக்கின்றது. இக்கோவிலுக்கு ஒரு பூசாரி உண்டு.)

ஜமெய்க்கா:

முதலில் ஜமெய்க்காவிற்கு வந்து குடியேறிய இந்தியர்கள் தாங்கள் பணிபுரிந்த தோட்டங்களை விட்டு வெளியே செல்ல மாட்டார்கள். சமயத் திருநாள்களையும், பிற பண்பாட்டுத் தொடர்பான நடவடிக்கைகளையும் தோட்டத்திற்குள்ளேயே கொண்டாடுவார்கள். மொஹரம் அல்லது ஹோசே (*Hosay*) ஊர்வலத்தில் மட்டும் பல தோட்டங்களிலிருக்கும் இந்தியர்கள் கலந்துகொள்வார்கள்.

விடியற்காலையில் எழுந்தவுடன் குளித்துவிட்டு, சூரியனுக்குப் பிரார்த்தனை செய்வது வழக்கமாக இருந்தது. ஆனால், தற்சமயம் அப்பழக்கத்தை நடைமுறையில் பார்ப்பது அரிது. குழந்தைகள் இராமாயணம், மகாபாரதம் கதைகளை விரும்பிக் கேட்பார்கள். பலசடங்குகளில் நம்பிக்கையுள்ளவர்களாக இருந்தார்கள். குழந்தை பிறந்த 6ஆவது அல்லது 12-வது நாள், முடியிறக்குதல் (*Mundan*) திருமணம், இறந்தபிறகு செய்யும் சடங்குகள் ஆண்டுதோறும் இறந்தவர்களின் நினைவுநாள் இவற்றை இந்துசமயச் சடங்குமுறைகளைப் பின்பற்றிக் கொண்டாடுவார்கள்.

ஆனால், 1880 ஆம் ஆண்டிலிருந்து கிறிஸ்த்தவ சமய குருமார்கள் போர்ட்லாண்டு, வெஸ்ட்மோர்லாண்டு முதலிய பகுதிகளில் வாழும் இந்தியர்களிடையே தீவிரமாக மதப்பிரச்சாரம் செய்தனர். இச்சூழ்நிலையிலும் 1917 ஆம் ஆண்டில் ஜமெய்க்காவில் இருந்த 26,000 இந்தியர்களில் 80 விழுக்காடு இந்துக்களாக இருந்தார்கள். ஆனால் 1943 ஆம் ஆண்டில் இந்துக்களின் எண்ணிக்கை 4.043 ஆகவும் 1961 ஆம் ஆண்டில் 1,181 ஆகவும் குறைந்தது. இன்று இந்து சமயமுறைகளை அன்றாட நடவடிக்கைகளில் பின்பற்றும் இந்துக்கள் 520, இசுலாம் சமய முறைகளைப்பின்பற்றும் முசுலிம்களின் எண்ணிக்கை 150 ஆகும். அரசு, சமூகம் ஆதரவு பெற்ற கிறிஸ்த்தவ சமய குருமார்களின் பிரச்சாரத்தின் வெற்றியே இந்து, முசுலிம் சமய வீழ்ச்சிக்குக் காரணமாக இருந்தது. சிறப்பான கல்வி வசதி, நல்ல வேலை, வசதியுள்ள வாணிப வாய்ப்பு சூழ்நிலை, சமூக அமைப்பில் உயர் படிநிலை, நல்ல மருத்துவ வசதி முதலியன தருவதாகப் பிரசாரம் செய்து இந்தியர்களைக் கிறிஸ்த்தவ சமயத்திற்கு மத மாற்றம் செய்தனர். இந்துசமயத்தைப் பற்றி நன்கு அறியாதவர்களாக இருந்ததாலும், இந்து சமயத்தைக் காட்டுமிராண்டிகள் சமயம் என்று பழித்ததை நம்பியதாலும் இந்துப் பூசாரிகளின் சமய அறிவு, குறைவாக இருந்ததாலும், தங்கள் பொருளாதாரச் சூழ்நிலையை அபிவிருத்தி செய்வதற்காக நாட்டின் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று குடியேறியதாலும், ஜமெய்க்கா நாட்டுப் பள்ளிகளிலே பைபிள் கட்டாயமாகக் கற்றுத்தந்ததாலும், அவ்வாறு கற்பிக்கும்போது இந்து, முசுலிம் சமயங்கட்கு எதிராகப் பிரசாரம் செய்ததாலும், கிறிஸ்த்தவ சமய குருமார்களின் சமயப் பிரசாரத்தினாலும் இந்துக்கள், கிறிஸ்த்தவ சமயத்தைத் தழுவினர். ஜமெய்க்காவிற்குச் செல்வம் திரட்டும் நோக்கத்துடன் வந்திருக்கின்றோம். இந்துசமய, இந்தியப் பண்பாட்டைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் வரவில்லை என்ற எண்ணம் இந்தியர்களிடையே மேலோங்கியிருந்ததால், பொருளாதாரச் சூழ்நிலையை அபிவிருத்திசெய்ய வாய்ப்பு கிடைத்தபோது தங்கள் சமயத்தையும் பண்பாட்டையும் துறந்தனர். இக்காரணத்தினால் தான் இந்து சமய பூசாரிகள் (*Priest*) 1920, 1930 ஆம் ஆண்டுகளில் நாட்டுப்புறங்களிலிருந்து கிங்ஸ்டன் நகரத்திற்குச் சென்று குடியேறினர்.

பின்பு இவர்களிடையே செல்வம் குவிந்தபோது கூட ஒரு இந்துக்கோயிலைக்கூட இவர்கள் 1976 ஆம் ஆண்டுவரை கட்டவில்லை. குவாடிலோப்பில் உள்ள சிறுபான்மையினரான இந்துக்கள் பல கோயில்களைக்கட்டிய போதிலும் ஜமெய்க்காவில் உள்ள இந்துக்கள் ஒரு கோயிலைக்கூட கட்டவில்லை. 1976 ஆம் ஆண்டு பிசி.சுட்கன் என்பவர் எடுத்துக்கொண்ட முயற்சியால் ஒரே ஒரு இந்துக்கோவில் மட்டும் கட்டத்தொடங்கினார்கள். ஆனால், இது கட்டிமுடிக்காத நிலையில் தற்சமயம் உள்ளது. இங்கு நடக்கும் திருவிழாக்களிலும் வீடுகளில் நடக்கும் பண்டிகை நாள்களிலும் சமயச்சார்பற்ற எல்லா இந்தியர்களும் பங்கு கொள்கிறார்கள். ஆனால் தீபாவளி, பாக்வா(Phagwa) அதாவது ஹோலி பண்டிகைகள் மட்டும்தான் கொண்டாடுகின்றார்கள். மேலும் ஈத் (Id), ஹோசைன் (Hosein) போன்ற முசுலீம் திருவிழாக்களும் எல்லா இந்தியர்களாலும் கொண்டாடப்படுகின்றன. கிழக்கிந்திய சங்கம் (East Indian Association) இன்று இந்திய சமயத்தைப் பாதுகாக்க முயன்று வருகிறது. இச்சங்கத்தினர் வாரந்தோறும் பிரார்த்தனைகள் நடத்துகின்றனர். எப்பொழுதாவது குழந்தைகளுக்கு மத சம்பந்தமான அறிவு அளிக்கின்றார்கள். வருங்காலப் பூசாரிகளாகச் செயலாற்றுவதற்குச் சிலருக்குப் பயிற்சி அளிக்கின்றார்கள். இராமநவமி, ஜன்மாஷ்டமி, தசரா, தீபாவளி, கார்த்திகை, பாக்வா(ஹோலி), போன்ற திருவிழாக்களைக் கொண்டாடுகின்றார்கள். இத்திருவிழாக்கள் 48 ஸ்பானிஸ் டவுன்ரோடில் கட்டியிருக்கின்ற குடிசையில் கொண்டாடப்படுகின்றன.

சூரிநாம்

1940 ஆம் ஆண்டில் சூரிநாமில் இருந்த இந்தியர்களில் 70 விழுக்காடு இந்துக்கள், 20 விழுக்காடு முசுலீம்கள், 10 விழுக்காடு கிறிஸ்த்தவர்கள் குழந்தை இல்லங்களுக்குச் சென்று கிறிஸ்த்தவ சமய குருமார்கள் பிரச்சாரம் செய்தார்கள். பரமாரிபோவில்(Paramoribo) இந்திய இளைஞர்கள் படிப்பதற்கு ஏற்பாடு செய்தார்கள். ஆகையால் இந்தியர்களிடையே இவர்களுடைய செல்வாக்கு அதிகரித்தது. இந்துக்களில் பெரும்பான்மையோர் சனாதனதர்மத்தைப் பின்பற்றுபவர்கள். 20 விழுக்காடு இந்துக்கள் ஆரியசமாஜக் கொள்கையைப் பின்பற்றுவார்கள்.

கிரெனடா

கிரெனடா நாட்டில் இந்தியர்கள் குடியேறத் தொடங்கியவுடன் அவர்களைக் கிறிஸ்த்தவ சமயத்திற்கு மாற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பிரசபிடேரியன் கிறிஸ்த்தவ சமயத்தை (Presbyterions) இந்தியர்களுக்குக் கற்பிக்க வேண்டும் என்றும், பண்பாடு உள்ளவர்களாக மாற்றிடவேண்டும் என்றும் விவிலிய நூலில் கூறியுள்ள உண்மையை அவர்களிடையே பரப்பவேண்டும் என்றும், முயற்சி எடுத்தனர். இந்துக்களும் முசுலீம்களும் கிறிஸ்த்தவ சமயத்தை ஏற்றுக்கொண்டு கிரெனடா நாட்டுப் பண்பாட்டுடன் ஒரு சேரக்கலந்தனர். இந்தியப் பண்டிதர்களும், மௌல்விகளும் மிகுதியாக இல்லாத காரணத்தால் மதமாற்றம் செய்வது சுலபமாக இருந்தது. மேலை நாட்டுப் பண்பாட்டின் தாக்கத்தால் இந்தியர்களின் பெயர்கள்கூட மாற்றம் அடையத்தொடங்கின. லால்பிஹாரி சிங் எனும் பெயர் லாசீ (Lalsee, Later Lalee) என்றும் சமாரா எனும் பெயர் சார்லெஸ் என்றும் உருமாறின.

பரியாக் என்னும் பண்டிதர் ஒருவர் வேட்டி, குர்தா உடுத்திக் கொண்டு இந்தி ஆங்கிலம் படாயிஸ்(*Patois*) மொழிகளைப் பேசிக்கொண்டு கிரெனடாவில் வாழ்ந்து வந்ததாகச் செய்திகள் கிடைத்திருக்கின்றன. 1930 ஆம் ஆண்டுகளில் சமாரிடான் மாரன் பகுதிகளில் கதா(*Katha*) பூசைகள்(*Puja*) நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டதாகவும் சிலர் கூறுகின்றனர். 1960 ஆம் ஆண்டு டிரினிடாட் சென்று திரும்பிய ஒரு பெண்மணி பொன் வெள்ளியிலான சிறு பேழை பதக்கம் (*Kounti-Locket*) குல்லாய்(*Headwear*) நெற்றியில் திலகம்(*Tilak*) அணிந்திருந்த ஒரு நீக்ரோ பண்டிதர் அவளிடம் இந்தி மொழியில் பேசியதாகக் கூறுகின்றார். பல இந்தி சொற்கள், பாடல்கள்,இராமாயணக்கதைநிகழ்ச்சிகள் முதலியவைகளைப் பல வயதான இந்தியர்கள் இன்றும் நினைவுக்குக் கொண்டு வருகின்றார்கள். கூட்டயாஸ் (*Kooteyas*) என்று அழைக்கப்படும் கோயில்கள் தனியார் வீட்டு நிலங்களில் இருந்ததாகக் கூறுகின்றார்கள். ஆனால் மசூதியோ, கோவிலோ ஒன்றுகூட இன்று இந்நாட்டில் இல்லை. 1964 ஆம் ஆண்டளவிலே கிரெனடாவில் ஒரு இந்துவோஅல்லது ஒரு முசுலிமோ இல்லை, எல்லாம் கிறிஸ்த்தவர்கள் என்று சமயகுரு தேவாஸ் கூறுகின்றார்.

சமூக அமைப்பும் சாதி அமைப்பும்

கயானா

இந்தியாவில் உள்ளது போன்ற சாதிப்பிரிவு தெளிவாக இந்த நாட்டில் இருப்பதாகத் தெரியவில்லை. இங்குள்ள சில கோயில்களில் சாதிப்பாகுப்பாடு பாராட்டுகிறார்கள். ஆனால், உயர்ந்த சாதியினரையும் தாழ்ந்த சாதியினரையும் எவரென்று தனித்தனியே பாகுபடுத்திக் காட்டத்தெளிவு இங்கில்லை. ஆல்பியன் காளிகோயில் பூசாரி பாஸ்கர் நாயுடு கருத்துப்படி ராம்சாமி (ராமசாமி) வெங்கட்சலம் (வேங்கடாசலம்) நாராயண்சாமி, முன்சாமி, கோவிந்ட்சாமி (கோவிந்தசாமி) போன்றோர் உயர்சாதியினர். மற்றையோர் தாழ்ந்த சாதியினர். இச்சாதிப்பாகுபாடு பெர்பீஸ் பகுதியில் அதிகம் இருக்கிறது. என ஈ.ச.விசுவநாதன் கூறுகின்றார். ஆல்பியனில் மற்றொரு தமிழ்க்கோயிலில் பணியாற்றும் ரங்கசாமி ரங்கநாயீ என்பவர்தான் கோயிலில் சாதிக்கட்டு உண்டென்றும் தாழ்ந்த சாதியினர் கோயிலுக்கு வெளியே நின்று பிரார்த்தனை செய்ய வேண்டும் என்றும் கூறினார். இப்பாகுபாட்டைக் கடைப்பிடிப்பதில் தவறொன்றுமில்லை என இவர் கருதுகின்றார். இந்த நாட்டிற்குக் கவுண்டர்களும், நாயுடுகளும், நாயக்கர்களும், உடையார்களும் (குயவர்கள்) கரையாளர்களும் (மீன்பிடிப்போர்) வந்து உள்ளதாக ஈ.ச.விசுவநாதன் கூறுகின்றார்.

ஜமெய்க்கா

தோட்டங்களில் குடியேறிய இந்தியர்கள் பஞ்சாயத்துக்களை அமைத்தார்கள். சாதி, குடும்ப மற்ற சமூக அமைப்புகள் தொடர்பான விவரங்களை இந்தப் பஞ்சாயத்துக்கள் கவனித்தன. எல்லா ஆண்மகன்களும் ஒன்றாகத் தீர்மானம் செய்து பஞ்சாயத்துக்களைத் தேர்ந்தெடுத்தார்கள். பொதுவாக ஒரு சர்தார் அல்லது புரோகிதர் ஒருவர் இச்சமூக அமைப்பின் தலைவராகப் பொறுப்பேற்பார். தொடக்ககாலத்தில் சிறுசண்டைபூசல்கள்

தீர்ப்பதற்கும், குழந்தை பிறப்பு, திருமணம் திருவிழா போன்ற பொது நலன்களைக் கவனிப்பதற்கும் பஞ்சாயத்துகள் பயன்படுத்தப்பட்டன. ஆனால், டிரினிடாட், கயானா முதலிய நாடுகளிலிருந்து பஞ்சாயத்துக்களைப்போல இப்பஞ்சாயத்துக்கள் திறம்பட செயல்படவில்லை. 1930ஆம் ஆண்டில் இந்தியர்கள் தோட்டங்களை விட்டு வெளியேறி புதிய பணிவாய்ப்புகளைத் தேடிச் செல்லத்தொடங்கியவுடன் இப்பஞ்சாயத்துக்களின் முக்கியத்துவம் குறையத் தொடங்கியது. மேலும் பல இடங்களில் பஞ்சாயத்து நிர்வாகிகளின் நாணயத்தின் மேல் சந்தேகம் வரத்தொடங்கியது. இறுதியில் இந்தியர்கள் கிறித்தவ சமயத்திற்கு மாறியபிறகு பஞ்சாயத்து முறை விரைவில் நலியத்தொடங்கியது. தற்சமயம் கூட சில சிறு சண்டைகளுக்கு நம்பிக்கை வாய்ந்த இந்தியத் தலைவர்கள் நடுவராக இருந்து தீர்ப்பு அளிக்கின்றார்கள்.

குடியேற்றம் தொடங்கிய காலத்தில் சில பிராமணர்கள், க்ஷத்திரியர்கள், முசுலிம்கள் தங்களுடைய சாதி மதத்தைப் பாதுகாத்துக்கொள்ளும் நோக்கத்துடன் தங்கள் சாதி மதப்பிரிவினர்களிடையே திருமண உறவு வைத்துக்கொண்டார்கள். பிறகு இந்த மனப்பான்மை மறையத்தொடங்கியது. ஜமெய்க்காவில் இந்துக்களும், முசுலிம்களும் ஒற்றுமையாக வாழ்கின்றார்கள். பல இந்துக்களும், முசுலிம்களும், மாட்டிறைச்சி அல்லது பன்றியிறைச்சி சாப்பிடுவதில்லை. புரோகிதர்களுக்கு, ஆப்பிரிக்க - ஜமெய்க்கர்கள் உள்பட, எல்லோரும் மரியாதை அளிக்கின்றனர். ஒரு சமயப் பிரிவினர் நடத்தும் விழாக்களில் மற்ற சமயப் பிரிவினர்களும் பங்கு கொள்கின்றனர். ஆனால் இம்மாதிரியான சூழ்நிலை டிரினிடாடிலும், கயானாவிலும் நிலவவில்லை என்று கூறலாம்.

இந்தியக் கூட்டுக்குடும்ப் அமைப்பை, பலஇன, பலசமய, பலசாதி திருமண உறவு முறை வலுப்படுத்தியது. கூட்டுக்குடும்பத்தின் தலைவர் தந்தை. அவர் இல்லாத நேரத்தில் மூத்த மகன் தலைவனாக இருந்தான். எல்லாச் சகோதரர்களும் இணைந்து குடும்பத்தை நடத்துகின்றார்கள்: குடும்பச்சொத்தைச் சேகரிப்பதில் ஈடுபடுகின்றார்கள். திருமணம் ஆனபிறகு மாட்டுப்பெண் கூட்டுக் குடும்பத்தின் ஓர் உறுப்பினராகச் சேருகின்றாள். எல்லா உறவினர்களையும் இந்தியப் பண்பாட்டுமுறையைப் பின்பற்றி காக்கா (Kaka) சாசா (Chacha) மாமா (Mamoo) என்று அழைக்கின்றனர். தற்சமயம் திருமணம் ஆனபிறகு 80 விழுக்காடு நடுத்தர உயர்தர வகுப்பினர்கள் 20 விழுக்காடு கீழ்ப் படியிலுள்ள பிரிவினர் கூட்டுக்குடும்பத்தைவிட்டுப் பிரிந்து தனிக்குடும்பம் அமைக்கின்றனர். ஆனால், கூட்டுக் குடும்பப் பாச, பந்தம் தொடர்ந்து அவர்களைப் பிணைக்கின்றது. மனைவிமார்கள் கணவர்களை மதித்து நடக்கின்றனர், கணவன் உணவு சாப்பிட்டபிறகே அவர்கள் உணவு உட்கொள்கிறார்கள். பெரும்பான்மையான படித்த நகரப் பெண்மணிகள் கணவர்களின் சமூகப் படிநிலைகளின் சம நிலையை அடைந்திருக்கின்றார்கள். இந்தியா, டிரினிடாட் நாடுகளில் இருக்கும் பெண்களைவிட ஜமெய்க்காவில் இருக்கும் இந்தியப் பெண்மணிகள் சமூகப்படி நிலையில் முன்னேறி இருக்கின்றார்கள். ஆனாலும், பொதுவாக எல்லா இந்தியப் பெண்களும் குடும்ப நலனில்தான் முழுக்கவனம் செலுத்துகின்றனர். தந்தை தாய் சொற்படி வாழ வேண்டும். திருமணம் புரிந்து கொள்ளவேண்டும் என 75 விழுக்காடு படித்த பெண்களும், 25விழுக்காடுபடிக்காதநாட்டுப்புறப்பெண்களும் கூறுகின்றனர். மகன், மகள் திருமணம் நடத்துவதைத் தங்கள் பொறுப்பாகப் பெற்றோர்கள் கருதுகின்றனர். 1980ஆம் ஆண்டுவரை பெற்றோர்கள் திருமண உறவை அமைத்துக்கொடுத்தார்கள். ஆனால் இன்று

திருமணம் செய்துகொள்பவர்களே தீர்மானம் எடுத்துத் திருமணம் செய்துகொள்கின்றார்கள். இந்தியா, டிரினிடாட், பிஜித்தீவில் உள்ள இந்தியர்களைப்போல் ஜமெய்க்காவில் உள்ள இந்தியர்களிடையே தற்சமயம் நெருங்கிய பந்தபாச உறவு இல்லை எனக்கூறலாம்.

கிரெனடா

கூட்டுக்குடும்ப அமைப்புமுறை கிரெனடாவில் இந்தியச் சமூகத்தினரிடையே மறைந்துவிட்டது. பொருளாதாரச் சிக்கல்கள் தோன்றியதாலும், சுதந்திரமாக வாழவேண்டும் என்ற மனப்பான்மை தோன்றியதாலும் இக்கூட்டுக் குடும்ப அமைப்புமுறை மறைந்துவிட்டது. ஆனாலும் முதியோர்களுக்கு மரியாதை கொடுக்கும் வழக்கம் மறையவில்லை.

பள்ளிக்கூடம், பணிபுரியும் இடம் போன்ற பல்வேறு சூழ்நிலையில் இந்தியர்களும், ஆப்பிரிக்கர்களும் சந்திப்பதால் இவர்களிடையே மிகுதியான திருமண உறவு தோன்றுகிறது. பெற்றோர்களும், சிறிதுமனவருத்தத்துடன் இவர்களின் கலப்புத் திருமணத்தை ஏற்றுக்கொள்கிறார்கள். ஒவ்வொரு இந்தியர் வீட்டிலும் இந்தியர் அல்லாத ஒருவர் அல்லது பலர் குடும்ப உறுப்பினர்களாக இருப்பதைக்காணலாம். ஆனால் போர்டில் (Forde) மட்டும் இக்கலப்புக் குடும்ப அமைப்புமுறையை அதிகமாகக் காணமுடியாது. இப்பகுதியில் குடும்பக்கட்டுப்பாடு அதிகம் எனக்கூறலாம். இந்தியப் பெண்மணிகள் பண்பாடு உள்ளவர்கள். நல்லகுண அமைப்பு உள்ளவர்கள் என்று கருதப்படுவதால் திருமணமாகாத பல கருப்பர்கள் இந்தியப் பெண்களையே திருமணம் செய்துகொள்ள விரும்புகின்றார்கள்.

தொடக்கத்தில் இந்தியர்கள் குடியேறியபோது நீக்ரோக்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொள்ளத் தயங்கினர். ஆனால் நாள்கள் செல்லச்செல்ல இம்மனப்பான்மை மாறியது; ஆப்பிரிக்கர்களுடன் கலந்து வாழத்தொடங்கினர். சில ஆப்பிரிக்கர்கள் இந்திமொழி பேசுகின்றார்கள். அவர்கள் இந்தியர் பஞ்சாயத்துக்களின் உறுப்பினர்களாகக் கூடத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். கலப்புத் திருமண முறை இந்தியர்கள் கிரெனடா பண்பாட்டுடன் ஒரு சேரக் கலந்து இருப்பதற்கு ஒரு முக்கியக் காரணமாக இருந்தது. கிரெனடாவில் இனப் பாகுபாடு மனப்பான்மை குறைவு என்று கூறலாம். பொதுவாகக் கிரெனடாவில் இந்தியர்களும், ஆப்பிரிக்கர்களும் இணைந்து அன்போடு ஒற்றுமையாக வாழ்கின்றார்கள் எனவும் கூறலாம்.

பொருளாதார அமைப்பு

கயானா

தமிழர்களில் பெரும்பான்மையோர் தோட்டப்புறங்களில் பணி புரிந்தார்கள். தோட்டங்களைவிட்டு வெளியேறிய சிலர் நகர்ப்புறங்களில் வெள்ளைக்காரர்களின் வீடுகளில் எடுபிடிவேலை செய்தனர். இன்றும் சிலர் பெட்டிக்கடைகள் (Kiosks) வைத்து

வாழ்க்கை நடத்தினர். மற்றும் சிலர் எந்த வேலையும் கிடைக்காத காரணத்தினால் பிச்சை எடுத்துத் தம் வாழ்க்கையை நடத்தினர். நகராட்சிகளில் பெட்டிக்கடை வைத்தவர்களில் பலர் படிப்படியே பணவசதியைப் பெருக்கிக்கொண்டதோடல்லாமல் தம் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்திக் கொண்டனர். அதேபோல் நகரத் துப்புரவுத்துறையில் வேலை செய்தவர்களும் வசதியோடு வாழ ஆரம்பித்ததோடல்லாமல் தம் மக்களையும் படிக்கவைத்து வாழ்க்கையில் முன்னேறியதாக அறிகின்றோம். மருத்துவத்துறையில் புகழ்பெற்றுவிளங்கும் ஒருசிலரில் வெஸ்லிமுத்து என்னும் தமிழர் குறிப்பிடத்தக்கவர். இந்நாட்டிலுள்ள இலட்சாதிபதிகளில் ஒருவராகத் திகழ்கின்ற திரு சாமி என்பவர் வியாபாரத்துறையில் சிறந்து விளங்குகின்றார். கயானா பல்கலைக்கழகத்தில் உயிர்நூல் துறையில் பணியாற்றும் ஜே.ஆர்.ராம்சாமி கல்வித்துறையில் புகழோடு விளங்குபவர் ஆவார். அரசாங்கத்தில் உயர்ந்த அதிகாரிகளாக உள்ள தமிழர்கள் மிகக்குறைவு, ஜேம்ஸ் நாயுடு என்பார்மட்டும் ஆம்ஸ்டர்டாமில் கமிஷனராக உள்ளார். இவர்களைத்தவிர சிலர் ஆசிரியர்களாகவும் நர்சுகளாகவும் பொறியாளர்களாகவும் பணிபுரிகின்றனர். இத்தகையோர் தற்போதுள்ள தமிழர்களில் ஐந்துமுதல் பத்து சதவிகிதத்திற்கு மேல் இருக்கமாட்டார்கள். மற்றவர்கள் யாவரும் நெற்பண்ணைகளிலோ கரும்புத் தோட்டங்களிலோ பல்வேறு வேலைகளில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் காலை எட்டுமணியிலிருந்து மாலை நான்கு மணிவரை பணிபுரிகின்றனர். இவர்களில் சிலர் வீட்டில் தோட்டம் போடுவதோடு கோழிப்பண்ணை போன்றவற்றை வைத்து மேல்வரும்படிக்கு வழி செய்து கொள்கின்றனர். மருத்துவர்களாகவும், ஆசிரியர்களாகவும், பொறியியல் நிபுணர்களாகவும், நர்சுகளாகவும் இருந்த தமிழர்களில் பலர் 1960ஆம் ஆண்டிற்குப் பிறகு நாட்டில் நிலவிவரும் அரசியல் பொருளாதார சூழ்நிலைகளின் காரணமாக அமெரிக்காவிற்கும், பிரிட்டனுக்கும், கனடாவிற்கும் சென்று விட்டதாக இங்குள்ள தமிழர்கள் கூறுகின்றார்கள். கணவனும், மனைவியும் ஏதாவது ஒரு வேலை செய்கின்றனர். அவ்வாறு சம்பாதிக்காமல் குடும்ப வாழ்க்கையை இங்குப் பொதுவாக யாரும் செம்மையாக நடத்தமுடியாது.

பொதுவாகக் கரும்புத் தோட்டங்கள் அழியாமல் காத்த பெருமையும், அரிசி ஆலைகள் (Rice Industry) வளர்ச்சியடைந்த பெருமையும் இந்தியர்களைச் சாரும். கயானாவின் பொருளாதாரம் முக்கியமாகச் சர்க்கரையையே நம்பியிருக்கின்றது. கயானாவின் பொருளாதார அமைப்பில் அரிசி மூன்றாவது இடத்தைப் பிடித்திருக்கின்றது.

ஜமெய்க்கா

தொழில்முறைக் கட்டுப்பாடு ஒப்பந்தம் மறைந்தபிறகும்கூட பெரும்பான்மையான இந்தியர்கள் பணிபுரியவும் தங்கி வாழவும் தோட்டங்களையே நம்பினர். தங்களுக்குத் தொடர்ந்து கூலியாட்கள் தேவை என்ற மனப்பான்மையிருந்ததால் தோட்ட முதலாளிகளும் தொலை ஒதுக்கமான இடங்களில் உள்ள தங்கள் நிலங்களை இந்தியர்களுக்குக் குத்தகைவிட்டார்கள். இதன் பயனால் மிகுதியான இந்திய மக்கள் தொகையுள்ள சில குடியேற்றங்கள் தோன்றின. உதாரணமாக வெரி (Vere) கெம்ப்ஸ்ஹில் (Kemps Hill) கிளாரண்டனில் உள்ள போர்ட்லேண்ட் காட்டேஜ் (Portland Cottage) பால்ஐலந்து (Paul Island) வெஸ்ட்மோர்லாந்திலுள்ள செயின்ட் ஜார்ஜஸ்பிளைன், கிங்ஸ்டனிலுள்ள

கோபர்க் கார்டன்ஸ் (*Coburg Gardens*) முதலிய இடங்கள் இந்தியக் குடியேற்றங்களாக மாறின. வசதிபடைத்தவர்கள் குறைவாகக் கிடைக்கும் நிலங்களை வாங்கினார்கள். அல்லது குத்தகைக்கு எடுத்துக்கொண்டார்கள், பெரும்பான்மையோர் நல்ல வேலை கிடைத்தபோதோ நல்ல வாணிப வசதி ஏற்பட்டபோதோ தோட்டங்களை விட்டு வெளியேறினர்.

நெல் உற்பத்தியில் தான் இந்தியர்கள் மிகுதியாகக் கவனம் செலுத்தினார்கள். 1960ஆம் ஆண்டுகள் வரை பால்திவு போன்ற இடங்களில் நெல் உற்பத்திதான் மிகுதியாக இருந்தது. இந்தியர்கள் பயன்படுத்தும் சொற்களான கல்யாண் (*Khalyan*) பெர்ட் (*Berd*) சூப் (*Soop*) ஜார்னா (*Jhama*) இன்று எல்லா இந்தோ-ஆப்ரோ-ஜமெய்க்கர்களால் பயன்படுத் தப்படுகின்றன. இந்திய விவசாயிகள், தீவிர கரும்பு வாழைத்தோட்டங்கள் உற்பத்தியிலும் கவனம் செலுத்துகின்றனர். 1950ஆம் ஆண்டுகள் வரை கிங்ஸ்டனில் காய்கறிகளின் ஏகபோக உரிமை இந்தியர்களிடமே இருந்தது. ஒவ்வொரு இந்தியர் வீட்டிலும் காய்கறித் தோட்டங்கள் இருக்கின்றன. நாட்டுப்புறங்களில் வாழும் இந்தியர்கள் பசு, ஆடு, போன்ற மிருகங்களை வளர்க்கின்றனர்.

பலர் தங்களுடைய முன்னோர்கள் செய்த தொழில்களைச் செய்கின்றார்கள். நகைக்கடை முதலாளிகளாகவும், கருமான்களாகவும், தச்சர்களாகவும், குயவர்களாகவும், தையற்காரர்களாவும், நர்சுகளாகவும், பூசாரிகளாகவும் இந்தியர்கள் பணிபுரிகின்றனர். ஜமெய்க்கா பாராளுமன்றத்தில்கூட மூன்று இந்தியர்கள் உறுப்பினர்களாக இருக்கின்றனர். நாட்டுப்புறங்களில் 25 விழுக்காடு இந்தியர்கள் ஆசிரியர்களாகவும், எழுத்தராகவும், விற்பனையாளர்களாகவும் இம்மாதிரி பல்வேறு வாழ்க்கைத் தொழிலாளர்களாகப் பணிபுரிகின்றார்கள். 18 விழுக்காடு சிறு விவசாயிகளாகவும், 12 விழுக்காடு பெரிய விவசாயிகளாகவும், 10 விழுக்காடு வியாபாரிகளாகவும், 20 விழுக்காடு திறமைத் தொழி லாளர்களாகவும் (*Skilled*) 15 விழுக்காடு கைத்திறன் பெற்றிராத தொழிலாளர்களாகவும் பணிபுரிகின்றனர். கிங்ஸ்டனில் இருக்கும் இந்தியர்களில் 5 விழுக்காடு டாக்டர்களாகவும் வழக்குரைஞர்களாகவும், உயர் அரசுப் பணியாளர்களாகவும், (*Senior Civil Servants*) 50 விழுக்காடு பிற வாழ்க்கைத் தொழிலாளர்களாகவும், 17 விழுக்காடு வணிகர்களாகவும், 22 விழுக்காடு திறமைத்தொழிலாளர்களாகவும், 6 விழுக்காடு கைத்திறன் பெற்றிராத தொழிலாளர்களாகவும் பணிபுரிகின்றனர்.

சூரிநாம்

முதன்முதலாக சூரிநாம் வந்த இந்தியக் கூலிகள் ஐந்தாண்டு ஒப்பந்தம் செய்துகொண்டு வந்தார்கள். பெண்களுக்கு தினசரி 40 சூரிநாமிய சென்ட்களும், ஆண்களுக்கு 60 சென்ட்களும் கூலியாக அளிக்கப்பட்டது. 1920ஆம் ஆண்டிலிருந்து இக்கூலியே 60 சென்ட், 80 சென்ட்டாக உயர்த்தப்பட்டது. வாழ்க்கைத் தரத்திற்கு ஏற்றாற்போல் குறிப்பாகப் பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் கூலிகொடுக்கவில்லை என ராட்சேன பஹ்வான்பாலி என்பார் கூறுகின்றார்.

1873ஆம் ஆண்டில் 55 விழுக்காடு இந்திய விவசாயிகள் தொழிற்சாலைப் பணியாளர்களாக இருந்தார்கள்; 1904ஆம் ஆண்டில் 27 விழுக்காடாகவும், 1931ஆம்

ஆண்டில் 18 விழுக்காடாகவும் குறைந்தது. தோட்டங்களில் பணிபுரிந்தவர்கள் கடுமையாக உழைக்க வேண்டியதாக இருந்தது. கோக்கோ தோட்டங்களில் உழைத்தவர்களின் வாழ்க்கை கரும்பு தோட்ட பணியாளர் வாழ்க்கையைவிட, தரம் உயர்ந்ததாக இருந்தது. இந்தியர்கள் 1873, 1875, 1876, 1877, 1878, 1882, 1883, 1884, 1885, 1891, 1902 ஆண்டுகளில் முதலாளிகளை எதிர்த்து வேலைநிறுத்தம் செய்தனர். சிலசமயங்களில் இவ்வேலைநிறுத்தத்தின் தலைவர்களாகப் பெண்கள் இருந்தார்கள்.

1903ஆம் ஆண்டில் 1972 இந்தியர்கள் 14, 182 ஏக்கர் பொது நிலங்களைப் பயன்படுத்திக்கொண்டோ குத்தகைக்கு எடுத்துக்கொண்டோ, விலைக்கு வாங்கியோ வைத்திருந்தார்கள். 1911ஆம் ஆண்டில் 4250 இந்தியர்கள் 30,448 ஏக்கர் நிலத்தைத் தங்கள் கைவசம் வைத்திருந்தனர்.

சில இந்திய விவசாயிகள் தங்கள் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளும் உற்பத்தியாளர்களாக இருந்தார்கள். மற்றவர்கள் தங்கள் விளைச்சலில் ஒரு பகுதியை விற்றார்கள். சூரிநாமில் குறிப்பாகப் பரமாரிபோ சுற்றுப்புறத்தில் இவ்விவசாயிகள் காய்கறிகள், பிற தோட்ட வேளாண்மைப் பொருள்களை உற்பத்தி செய்தார்கள். பால், இறைச்சி முதலியவற்றை நகரப்புற மக்களுக்கு விற்றார்கள். புற மாவட்டங்களில் (Outer Districts) பல விவசாயிகள் தங்கள் தேவைகளை நிறைவேற்றுவதற்காகவும் ஏற்றுமதி, வாணிபம் செய்வதற்காகவும் நெல் உற்பத்திசெய்தார்கள். ஒரு சில இந்தியர்களே கைவண்ணக் கலைஞர்களாகப் பணிபுரிந்தார்கள். பரமாரிபோவில் பெரும்பான்மையான இந்தியர்கள் வண்டி ஓட்டிகளாகவும், தையற்காரர்களாகவும், வணிகர்களாகவும், சிறுவியாபாரிகளாகவும் பணிபுரிந்தனர். பரமாரிபோவில் பிரிட்டிஷ் கயானாவிலிருந்து வந்த இந்தியர் வாணிபம் செய்து உயர்படி நிலையை அடைந்தார்கள். 1921 ஆம் ஆண்டு மொத்த இந்தியர்களில் இவர்கள் 8 விழுக்காடு இருந்தனர். 1925இல் இந்தியர்களுக்குச் சொந்தமாக இருந்த மொத்த வீடுகளில் 30 விழுக்காடு இவர்கள் வசம் இருந்தன. பரமாரிபோவில் உள்ள இந்திய வாணிபர்களும் செல்வந்தர்களாக இருக்கின்றனர். அவர்கள் மக்களுக்கு மேலைநாட்டுமுறைப் படிப்பு வசதி கிடைக்கின்றது. ஆனால் பெரும் பான்மையான இந்தியர்கள் ஏழையாகத்தான் இருக்கின்றார்கள்.

1964 ஆண்டுப் புள்ளிவிவரப்படி 15 விழுக்காடு இந்திய ஆண்களும், 6 விழுக்காடு இந்தியப் பெண்மணிகளும் படைத்துறைசாராத சிவில் பணியாளர்களாகப் (Civil Servants) பணிபுரிந்தார்கள். (உலகப்போருக்கு முன் இந்தியர்களை அரசுப் பணியாளர்களாகப் பார்ப்பது அரிதாகும்.) 30 விழுக்காடு ஆண்களும், 23 விழுக்காடு பெண்களும் வாணிபத்தொழில்களில் ஈடுபட்டிருந்தார்கள், 6 விழுக்காடு ஆண்கள் கட்டடத் தொழில் களும், 3 விழுக்காடு ஆண்கள், 4 விழுக்காடு பெண்கள் சுரங்கத்துறைப் பணியிலும் இருந்தார்கள். 1964 ஆம் ஆண்டளவில் மிகுதியான இந்தியர்கள் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டிருந்தார்கள். ஆனால் 1980 ஆம் ஆண்டளவில் இவர்களின் எண்ணிக்கை 50 விழுக்காடு குறைந்தது. இரண்டாம் உலகப்போருக்குப் பின் தோன்றிய புதுத்தொழில்களில் இவர்கள் பணிபுரியத் தொடங்கினார்கள். இன்றும் நிக்கெரி(Nicharie) சரமாச்சா (Saramacca) சூரிநாம் மாவட்டங்களில் இருக்கும் சிறுவிவசாயிகள் இந்திய வமிசா வளியினராவர். நாட்டுப்புறங்களில் பெரும்பான்மையான பாட்டாளி வர்க்கத்தினர்

இந்தியர்களே. சில இந்தியர்கள் இறக்குமதி, ஏற்றுமதித் தொழில்களில் முன்னேற்றம் அடைந்துள்ளனர்.

கிரெனடா

தொழில்முறை கட்டுபாடு ஒப்பந்தம் முடிந்த பிறகு பல இந்தியர்கள் டில்லெரிஸ்(*Tillers*) சாட்டெர்ஸ்(*Sauters*) போன்ற குடியேற்றங்களுக்குச் சென்று புல் வெட்டுபவர்களாகவும், வாடகை நிலங்களில் வாழைப் பயிரிட்டு வாணிபம் செய்பவர்களாகவும் மாறினர். சிக்கனமாகச் செலவுசெய்து கடினமாக உழைத்த இந்தியர்கள் நீர்ப்பொருளாயிராத கூலம் போன்ற பண்டங்கள்(*Dry foods*), விற்றல், போக்குவரத்து, வாணிபம் முதலிய தொழில்களை வெற்றிகரமாக நடத்தினர். சிலர் தொடர்ந்து வெஸ்ட்டர்ஹால் உட்லண்ட்ஸ் காலிவிகிங் (*Caliviging*) டென்பெர்மிலைன் (*Denfermline*) முதலிய இடங்களில் இருந்த கரும்புத் தோட்டங்களில் பணிபுரிகின்றனர்.

தமிழர் பண்பாடு

கயானாவில் உள்ள தமிழர்கள் ஆங்கில அமெரிக்கப் பண்பாட்டின் ஈர்ப்பில் தங்கள் பாரம்பரியப் பண்பாடு முழுவதையும் பேணிக்காக்க முடியவில்லை. எனினும் அந்தப் பாரம்பரியத்தின் ஒருசில கூறுகளையாவது மறவாமல் போற்றிவருவது பாராட்டத் தக்கதாகும். அவைகளில் ஒன்றுதான் கடவுள் நம்பிக்கையும் கோயில் வழிபாடுமாகும். தமிழ்மக்களுக்குள் இனக்கலப்பு பெருவாரியாக நிகழ்ந்துள்ளது. இந்த இனக்கலப்பை இந்தியர்களைவிட மற்ற இனத்தவரிடம் அதிகம் காணலாம். மதராசிகளில் பலர் கல்கத்தாவிலிருந்து வந்தவர்களோடு கொள்வினை, கொடுப்பினை தொடர்பை அதிகம் ஏற்படுத்திக்கொண்டுள்ளனர். ஐரோப்பியர்கள் மதராசிகளின் பெயரைத் தவறாக உச்சரித்தாலும் அந்தத் தவறான உச்சரிப்போடு கூடிய பெயர்களையே தாங்கள் பெயராகக் கொண்டதாலும் இவர்களின் பெயர்கள் உருத்தெரியாமல் சிதைந்துபோயின எனக்கூறலாம். தமிழர்களின் சிலபெயர்கள். பூனாய் (பொன்னையா), லகிமா (லட்சுமிஅம்மா), ராம்சாமி (ராமசாமி) கோப்பால் ஓர்யன் (கோபால் உடையார்) வீர்மா (வீரம்மா) கார்ப்பேன் (கருப்பண்ண கவுண்டர்) ராம்நெரின் (ராமநாராயணன்) சோன்முக் (சண்முகம்) களிச்சரன் (காளிஸ்வரன்) மரியாய் (மாரியம்மா) நயினி (நளினி) திரெளதி (திரெளபதி) வெள்ளமா (வெள்ளையம்மா) ராம்சாமி சின்னப்பேன் (ராமசாமி சின்னப்பன்) கிறிஸ்தவர்களாக மாறி மீண்டும் இந்து சமயத்திற்குத் திரும்பிய தமிழ்க்குடும்பத்தினரின் இயற்கையான இந்துச்சமயப் பெயர்களோடு ஜான், ஜோசப் போன்ற கிறித்தவப் பெயர்களும் இணைந்திருப்பதைக் காணலாம். இந்தக்காரணத்தினால் சின்னப்பனோடு ஜான் என்னும் பெயரும் இணைந்துள்ளது. (வேதவல்லிஜான், வெங்கடேஸ்வரன் ஜான், விஜயலட்சுமி, ஜான், கணேசன் ஜான்). பொதுவாக இந்தியர்களின் கல்விமொழியாகவும், அன்னிய மொழியாகவும். பேச்சு மொழியாகவும் ஏன் சமய மொழியாகவும் விளங்குவது ஆங்கிலமே. பலருக்குத் தமது தாய்மொழி அறவே தெரியாது. ஓரளவு தெரிந்திருந்தாலும் முழுவதும் விளங்காது.

ஜமெய்க்காவில் உள்ள இந்தியர்களில் பெரும்பான்மையோர் கிறித்தவர்களாக மாறிவிட்டனர். இந்தியப் பண்பாடு 1940 ஆம் ஆண்டுவரைதான் தழைத்தோங்கியது. பல கிறித்தவர்கள் சில இந்துச் சடங்கு முறைகளைப் பின்பற்றினாலும் இந்தியப் பண்பாடு நலியத்தொடங்கிவிட்டது. 1920 ஆம் ஆண்டுவரை குர்த்தா, வேஷ்டி, குர்தா பைஜாமா, புடவை அணிந்துகொண்டிருந்தார்கள். 1940 ஆம் ஆண்டில் கூட சில இந்தியர்கள் இந்திய உடைகளை அணிந்துகொண்டு போவதைப் பார்க்கமுடிந்தது. ஆனால் 1920 ஆம் ஆண்டிலிருந்து மேலைநாட்டு உடைகளை எல்லா இந்தியர்களும் அணியத்தொடங்கிவிட்டனர். தற்சமயம் பண்டிகைகளின் போது சிலர் இந்திய உடைகளை அணிகின்றார்கள். 1960 ஆம் ஆண்டுவரை இந்திமொழியில் பேசிக்கொண்டிருந்தார்கள். 1950 ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்தி, உருது பேசப்படுவது மிகுதியாகக் குறைந்துவிட்டது. 1920 ஆம் ஆண்டுகளில் மிருதங்கம், டோலக், தம்ரூ, நகரா போன்ற இசைக்கருவிகளைப் பயன்படுத்தினார்கள். தற்சமயம் ஹார்மோனியம், தபேலாதான் அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள். 1950 ஆம் ஆண்டுவரை பைரவி தும்ரி, தாத்ரா(Dadro) தோடி, ராக்மல்ஹர், ராக்பசந் முதலிய இராகங்களுக்கும் பாடல்களுக்கும் செல்வாக்கு இருந்தது. 1950 ஆம் ஆண்டுவரை துளசிதாஸ் ராமாயணம் கபீர் டோஹாஸ் (பாடல்கள்) பிரபலமாக இருந்தன. தற்சமயம் இவை இருக்கும் இடம் தெரியவில்லை. பொதுவாக இவர்களுக்கு இந்திய மரபுவழிமுறை நடனங்கள் (Classical Dances) தெரியாது. அவ்வாறு நாட்டுப்புற நடனங்கள் சிலவற்றை ஆடினாலும் பெண்கள் ஆடுவதில்லை. ஒரு சிலபெண்களே 1974 ஆம் ஆண்டிலிருந்து நடனம். ஆடுகின்றனர். இந்தியப் பஞ்சாயத்து முறை மாறிவிட்டது. கூட்டுக்குடும்பமுறையின் அஸ்திவாரம் ஆடிக்கொண்டிருக்கிறது. இந்திமொழி, இந்திய உடை, அணிகலன்கள் பயன்படுத்துவதே அரிதாகிவிட்டது. இன்று 50 விழுக்காடு இந்தியர்கள் ஐரோப்பியர் குடும்பப்பெயர்களையே வைத்திருக்கிறார்கள். ஆனால் இந்திய சங்கீதம், நடனம்,உணவு வகைகள் மக்களின் பாராட்டைப் பெற்றிருக்கின்றன. கிழக்கிந்தியச் சங்கம் தற்பொழுது இந்தியப் பண்பாட்டை இந்நாட்டில் பாதுகாப்பதற்காக முயன்று வருகிறது. பெரும்பான்மையான இந்தியர்கள் ரொட்டி கரிபாஜி கரோலா(Karela) சேமியா, ஊறுகாய், சட்னி முதலிய உணவு வகைகளைச் சாப்பிடுகிறார்கள். இளம் பரம்பரையினர் பலர் இந்திய உணவு வகைகளில் பலவற்றைச் சாப்பிட்டதே இல்லை.

சூரிநாமில் வாழும் 90 விழுக்காடு இந்தோ-சூரிநாமியர்கள் (Indo- Surinomise) இந்தி மொழி பேசுகின்றனர். தங்களுடைய இந்தியப் பண்பாட்டைப் பாதுகாத்து வளர்க்கவேண்டும் என்பது இவர்கள் நோக்கமாகும்.

ஜமெய்க்காவில் கிழக்கிந்தியச் சங்கம்(East Indian Association) தோன்றிய ஆண்டு 1925, கிழக்கிந்தியத் தேசிய ஒன்றியம் (The East Indian National Union) கிழக்கிந்திய முன்னேற்ற சமுதாய அமைப்பு (The East India Progressive Society, 1935) ஜமெய்க்கா இஸ்லாமிய சமுதாய அமைப்பு (The Islamic Society of Jamaica, 1950) இந்தியக் கழகம் (The Club India, 1956), இந்து சமாஜம் (The Indian Samaj 1957) சனாதன தரராம் மந்திர் (The Sanatan Dhararam Mandir) பிரேம் சத்சங்க சமுதாயம் (The Prema Sat Sangh Society, 1972) சாயிதர்பார் சத்சங் (The Sai Durbar Sat Sangh, 1974) இந்தோ- ஜமெய்க்கன் பண்பாட்டு மன்றம் (The Indo-Jamaican Cultural Society, 1978) முதலியவை இந்தியப் பண்பாட்டைப் பாதுகாத்து வருகின்றன.

டிரினிடாட், சூரிநாம், கயானா இந்தியர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது கிரெனடா நாட்டு இந்தியர்கள் இந்தியப் பண்பாட்டை இழந்த நிலையில் (deculturalised) இருக்கின்றனர் எனக் கூறலாம். ஆனாலும் அவர்கள் முற்றிலும் இந்திய மரபுமுறைகளை இழக்கவில்லை. கிரெனடா நாட்டிற்குக் கூலி வேலை செய்யவந்தபோது இந்தியர்கள் அவர்களின் சங்கீதம், மொழி, பாட்டு, கைவேலைப் பாடு திறன்கள் போன்ற பல்வேறு இந்தியப் பண்பாடுகளுடன் வந்தார்கள். ஆனால், நாளடைவில் இப்பண்பாடுகள் கிரெனடா சமுதாயப் பழக்கமுறைகளுடன் கலந்து மறைந்தன. இன்றும் இந்தியர்களால் போரிக் (Borgh) என்ற விழா கொண்டாடப்படுகிறது. ஒருவர் இறந்து இரண்டு ஆண்டுகளுக்குப்பிறகு இவ்விழா கொண்டாடப்படுகிறது. இவ்விழாவின்போது இந்திய நடனங்களும், பிராஹா (Biraha), தோவா (Dowha), சால்டி (Chaltee) போன்ற பாட்டுகளும் பாடி இரவு முழுவதும் கொண்டாடப்படுகின்றது. பிறகு தரையில் உட்கார்ந்து இலைகளில் விருந்தினர் உணவு உட்கொள்கின்றனர். முதலில் ஆண்களும், பிறகு பெண்களும், இறுதியாக இந்தியர் அல்லாதவர்களும் உணவு உட்கொள்கின்றனர்.

கிரனடாவிலுள்ள டிலெக்ஸ் சினிமா கிரென்வெல்லி (Delux Cinema Grenvile) என்னுமிடத்தில் மட்டும் இன்று தீபாவளி கொண்டாடப்படுகின்றது. 1970ஆம் ஆண்டுகளிலிருந்து டிரினிடாட்டிலிருந்து வந்த டாக் ராகூபார் என்பவர் முயற்சியால் இத்திருவிழா கொண்டாடப்படுகின்றது. பல இன மக்கள் இத்திருவிழாவில் கலந்து கொள்கிறார்கள். கடந்த இருபது ஆண்டுகளாகக் கிரெனடாவில் இந்து அல்லது முஸ்லிம் திருமணம் ஒன்றுகூட நடக்கவில்லை என அங்குள்ளவர்கள் கூறுகின்றனர். ஆனால் இந்திய சங்கீதமும், பாட்டுகளும், சங்கீதக் கருவிகளும், நடனங்களும் கிரெனடாவில் மறையவில்லை. சாரங்கீ, டோலக், மஞ்சுரா, தந்தால், கஞ்சாரி, சாரங்கி போன்ற இசைக்கருவிகள் தொடர்ந்து பயன்படுத்தப்படுகின்றன. சனிக்கிழமை இரவுகளில் பஜனைக் குழுவினர்கள் கீத்மாலா (Gil Mala) எனும் இந்தி நூலில் இருக்கும் பாடல்களைப் பாடுகின்றனர். பங்கு பெறுவோர் வீடுகளில் மாறிமாறி ஒவ்வொரு சனிக்கிழமையும் பஜனை செய்யப்படுகின்றது. ஆனாலும், கிறித்தவசமயம் இந்துசமயக் குடும்ப வழி பாட்டுமுறைகளை முற்றிலும் ஒழித்துவிட்டது எனக் கூறலாம். குழந்தை பிறந்து ஓர் ஆண்டுக்குள் அல்லது இரண்டாவது ஆண்டு தலைமுடி மழிக்கை விழா இன்றும் கொண்டாடப்படுகின்றது. இவ்விழாவின்போது விருந்து, ஆடல் பாடல்கள் இடம் பெறுகின்றன. இவ்விழாவும் தற்சமயம் கொஞ்சம் கொஞ்சமாக மறையத் தொடங்கியிருக்கின்றது. இந்தியர்கள் பொதுவாக இந்து சமயக் கடவுள்களில் பெயர்களைத் தங்கள் குழந்தைகளுக்குத் தற்சமயம் வைப்பதில்லை. ஆனால் ராம்தானி (Ramdhanny) போலா, புத்லாய், கன்ஹாய், அலி போன்ற பெயர்களைக் காணலாம்.

தொடக்கத்தில் கிரெனடாவிற்கு வந்து குடியேறிய போது இந்தியர்கள் குர்தா, வேஷ்டி, புடவை முதலியவற்றை அணிந்து கொண்டார்கள். குடியேறிய இருபது ஆண்டுகளுக்குப் பிறகு ஒஹ்ரினி (Ohrini) எனும் கழுத்துத்துண்டைப் பயன்படுத்தத் தொடங்கினார்கள். மேலைநாட்டுப் பண்பாட்டுத் தாக்கத்திற்குப் பிறகு உடைமுறைகளில் மிகுதியான மாற்றம் ஏற்பட்டது. கிரெனடாவில் உள்ள பெண்கள் இந்திய நகைகளை, அணிகலன்களை விரும்பி அணிகின்றார்கள். இப்பழக்கத்தைத் தற்சமயம் புதிய கிறித்தவக் கோவில்கள் தாக்குகின்றன. இந்தியர்கள் ரொட்டி (Rotti), அரிசி, பருப்பு, பூசணிக்காய்,

காய்கறிகள், உருளைக்கிழங்கு, பீன்ஸ், ஊறுகாய், சட்னி போன்ற இந்திய உணவுப் பண்டங்களைத் தொடர்ந்து பயன்படுத்துகின்றார்கள்.

பெரும்பான்மையான இந்தோ கிரெனடியர்களுக்கு இந்தி, அரபிக் மொழிகள், தமிழ் தெரியாது. அவர்கள் ஆங்கிலமே பேசுகின்றார்கள். முதியோர்கள் சிலர் இன்னும் இந்தி மொழியில் பேசமுடியும். டிரினிடாட் வானொலி அளிக்கும் இந்தியப் பண்பாட்டு நிகழ்ச்சிகளை இம்முதியோர்கள் இன்றுகூடக் கேட்கின்றார்கள்.

1950ஆம் ஆண்டு மே 1-ஆம் நாள் இந்தியர்கள் கிரனடாவிற்கு வந்து குடியேறிய நூறாவது ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவின் போது இந்தியர்கள் வேஷ்டி, புடவை, தோள்மேல் போடும் துண்டு முதலியவற்றை அணிந்து கொண்டு விழாவில் பங்கேற்றனர். 1947ஆம் ஆண்டிலிருந்து ஜமெய்க்கா, கிரெனடாவில் இந்திய சுதந்திர தினம் கொண்டாடப்பட்டது. ஆனால் 1960ஆம் ஆண்டுகளிலிருந்து கிரெனடாவில் இவ்விழா கொண்டாடப்படுவதில்லை. டியகோபீஸ் (Diego Piece), சமாரிடான் இந்தியர்கள் இணைந்து சனிக்கிழமை இரவுகளில் பாட்டுபாடிக் கொண்டாடுகின்றனர். வாரம் இரண்டுமுறை இந்தியத் திரைப்படங்கள் காண்பிக்கப்படுகின்றன.

இந்திய சங்கீதம், நாடகம், இலக்கியம், தத்துவம், சமூகப் பழக்கவழக்கங்கள், உணவுப் பழக்கவழக்கங்கள், இந்தியக் கட்டடக்கலை முதலியவற்றின் செல்வாக்கை டிரினிடாட் நாட்டில் இன்றும்காணலாம். கரோனி, சாகுவாநாஸ் (Chaghanas), வாட்டர் லூ, போரிஸ்பார்க் (Forres Park) போன்ற பகுதிகளில் ஒரு சிறிய இந்தியாவைப் பார்க்கலாம். பல இந்திய நாட்டுப்புறப் பாடல்களின் செல்வாக்கை இன்றும் காணமுடியும். திரௌபத் (Dhrupad), தில்லானா (Tilana), தும்ரி (Thumri), கஜால் (Gazal), ஹோரி (Hori), மார்பாட் (Marpat), பீஹாஹ் (Behag), காபி (kafi), பீலு (Piloo), தாத்ரா (Dadra), பைரவி (Bhairavi) போன்ற பாடல்கள் 20 ஆம் நூற்றாண்டு தொடக்கத்திலிருந்து செல்வாக்கு பெற்றிருக்கின்றன. பிராமட், இமாமி, ராமசான், தரம் கோசைன், ரஹமதுல்லா பஹதூர்சைனி, பெல்பாகை, அலிஜான், பக்கீர்மஹம்மது போன்றவர்கள் 1920, 1930ஆம் ஆண்டுகளில் இந்தியப் பண்பாட்டை வளர்க்கப் பாடுபட்டார்கள். 1935ஆம் ஆண்டில் பாலஜோபன் எனும் இந்தியத் திரைப்படம் காட்டப்பட்டது. இன்று இந்தியத் திரைப்படங்களின் செல்வாக்கு ஓங்கியிருக்கிறது.

தமிழ் நாட்டிலிருந்தும், ஆந்திரப்பிரதேசத்திலிருந்தும் வந்து குடியேறியவர்கள் குறைவு. அவர்களும் தங்களுடைய நாட்டுப்புறப் பாடல்களையும், நடனங்களையும் உதாரணமாக, வெங்கடேசப்பெருமாள் (Venkatesa Perumal) மாலசரித்திரா (Malasarithra) சோமேரிநடனம் (Someri Dance) முதலியவற்றை டிரினாட்டிற்குக் கொண்டுவந்தனர். சில விழா நாள்களில் அவர்கள் தாய்நாட்டுப் பாடல்களைப் பாடுகின்றனர். நடனங்கள் ஆடுகின்றனர். குறிப்பாகத் திருமண நாள்களில் இப்பண்பாட்டைக் காணலாம். ஆனால், காலப்போக்கில் இப்பண்பாடு ஆதரவில்லாமல் மறைந்துவிட்டது. தென் இந்தியர்கள் சிறுபான்மையினராக இருந்ததால், காலப்போக்கில் வட இந்தியப் பண்பாட்டைத் தழுவினர். இவர்களின் திருமண விழா, சாவுச்சடங்குமுறைகள் தற்சமயம் வட இந்தியப் பண்பாட்டைத் தழுவியிருக்கின்றன. அவர்களுடைய நாட்டுப்புற நடனங்களின் சுவடே

தெரியவில்லை. அவர்களிடையே இருக்கும் முதியோர்கள் சிலர் மூலம் சில நாட்டுப்புறப்பாடல்கள் இங்குள்ள இந்தியர்களுக்குக் கிடைத்திருக்கின்றன.

தென் இந்தியர்களை டிரினிடாட்டில் மதராசிகள் என அழைக்கின்றனர். இவர்கள் பக்தியுடன் அதிக ஆண்டுகள் தீ மிதித்தல் விழாக் கொண்டாடினர். இவ்விழாக் கொண்டாடிய காலத்தில் 12 அடி நீளம் 6 அடி அகலம் 1 அடி ஆழம் உள்ள குழிகளைத் தோண்டி அக்குழிக்குள் தீ மூட்டப்பட்ட விறகுகளைப் போட்டிருப்பார்கள். ஒருவாரம் பிரார்த்தனை, உண்ணா நோன்பு இருந்த பக்தர்கள் முதுகில் உடை அணியாமல் உறையற்ற கால்களுடன் இத்தீக்குழியின் மேல் நடப்பார்கள். இவர்கள் தீமிதிக்கும் போது முரசொலிக்கப்படும். டிரினிடாட்டில் வாழும் தமிழர்களுக்குக் குறிப்பாக இளம் பரம்பரையினருக்குத் தமிழ் தெரியாது.

டிரினிடாட்டில் வாழும் இந்துக்களைத் தீவிர பழமைவாதிகள், ஆரிய சமாஜப்பிரிவினர்கள் என இருவகையாகப் பிரிக்கலாம். 1930, 40ஆம் ஆண்டுகளிலே இவர்களிடையே போராட்டம் ஏற்பட்டது. ஆனால் 1950ஆம் ஆண்டளவிலே தீவிர பழமைவாதிகளின் செல்வாக்கு ஓங்கியது. இவர்கள் கோயில்களைக் கட்டினார்கள், பள்ளிக்கூடங்களைக் கட்டினார்கள். ராம்லீலா, கிருஷ்ணலீலா திருவிழாக்களை ஏற்பாடு செய்துகொண்டாடினார்கள். இந்து நூல்களிலிருந்து சில பகுதிகளைப் பொது மக்களுக்குப் படிப்பதற்கு ஏற்பாடு செய்தார்கள். ஆனால் 1960ஆம் ஆண்டிற்குப் பிறகு இந்த நடவடிக்கைகள் குறையத் தொடங்கியிருக்கின்றன. தற்சயம் சாயிபாபா வழிபாடு செய்பவர்கள் அதிக அளவில் உள்ளனர். இராமாயணம், மஹாபாரதம், புராணங்கள் டிரினிடாட் இந்துக்களிடையே மிகச்செல்வாக்குப் பெற்றிருக்கின்றன. ராமரின் மேல் பக்தியைக் காண்பிப்பதற்காக அனுமான் தன் மார்பைப் பிளந்து காண்பித்தது, கிருஷ்ணன் அர்ஜுனனுக்குப் போரின் போது அறிவுரை அளிப்பது போன்ற நிகழ்ச்சிகள் எல்லோராலும் இன்றும் போற்றப்படுகின்றன.

1930ஆம் ஆண்டுகள் வரை சில தோட்டங்களிலும், 1940ஆம் ஆண்டுகள் வரை கிங்ஸ்டனிலும், குறிப்பாக, டிரினிடாட், கயானா, சூரிநாம் நாடுகளில் ராம்லீலா, கிருஷ்ண லீலா நடன நாடகங்களுக்கு மிகுதியான செல்வாக்கு இருந்தது. ஆனால் 1950ஆம் ஆண்டுகளிலிருந்து இந்நடன நாடகங்கள் மறைந்து விட்டன.

தென் ஆப்பிரிக்கா

காந்திஜியின் தென் ஆப்பிரிக்கப் போராட்டம், தென் ஆப்பிரிக்காவின் இன ஒதுக்கல் கொள்கை முதலியவற்றைப் பற்றிக் கல்வியறிவு உள்ள எல்லாத் தமிழர்களுக்கும் நன்கு தெரியும். ஆப்பிரிக்காக் கண்டத்தின் தெற்கு முனையிலே இருக்கும் நாடு தென் ஆப்பிரிக்க நாடு ஆகும். தென் ஆப்பிரிக்காவின் வடமேற்கில் நபிபியாவும் (தென்மேற்கு ஆப்பிரிக்கா), வடக்கில் பாட்ஸ்வானா, ஜிம்பாப்வேயும், வடகிழக்கில் மொசாம்பிக்கும், கிழக்கில் சுவாஜிலாந்தும் இருக்கின்றன. நான்கு மாநிலப்பகுதிகள் தென் ஆப்பிரிக்காவை உருவாக்குகின்றன. (1) கேப் மாநிலம் (2) விடுதலை பெற்ற ஆரஞ்சுநாடு (3) நேட்டால் (4) திரான்சுவேல் முதலியவை ஆகும். தென் ஆப்பிரிக்காவில் உள்ள நான்கு முக்கிய நகரங்கள் (மக்கள் தொகை அடிப்படை வரிசையில்) ஜோஹேனஸ்பெர்க், கேப்டவுன், டர்பன், பிரிடோரியா முதலியவை ஆகும்.

தமிழ்நாடு - தென் ஆப்பிரிக்க உறவு

பத்தொன்பதாம் நூற்றாண்டிலும், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் ஆயிரக்கணக்கான தமிழர்களும், பிற இந்தியர்களும் வெளி நாடுகளுக்குச் சென்று குடியேறினார்கள். பொதுவாக அவர்கள் பிரிட்டிஷ் பேரரசின் பிற பகுதிகளுக்குச் சென்றார்கள். இந்தியாவிலுள்ள வடகிழக்கு, மேற்குப்பகுதிகளிலிருந்தும், பெரும்பான்மையோர் தென் இந்தியாவிலிருந்தும் அயல் நாடுகளுக்குச் சென்று குடியேறினர்.

பொதுவாக, இவர்கள் ஒப்பந்தக் கூலிகளாகவோ, வேறு விதமாகவோ அயல்நாடுகளுக்குச் சென்றார்கள். சிலர் உரிமையுள்ள மனிதர்களாகச் சென்று குடியேறினார்கள். இவர்கள் ஏன் இம்மாதிரி அயல்நாடுகளுக்குச் சென்று குடியேறினார்கள் என்பது பற்றி அறிஞர்களிடையே விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. வறட்சி, பஞ்சம் தான் முக்கியக் காரணங்களாகக் கூறப்படுகின்றன. அதே சமயத்தில் பிரிட்டிஷ் பேரரசுக் கொள்கைகளின் நேர்முக அல்லது மறைமுகத் தாக்கத்தையும் மறந்துவிடக்கூடாது.

உடனடியாகப் பணங்கட்டி எடுப்பதற்குரிய விளைச்சல் சரக்குகளை (Cash crop) இந்திய விவசாயிகள் உற்பத்தி செய்வதற்குப் பிரிட்டிஷ் பேரரசு ஊக்கம் அளித்தது. தொழிற்புரட்சியின் பொழுது பிரிட்டன் முன்னேறுவதற்காகவும், பிரிட்டிஷ் வாணிபம் விரிவடைவதற்காகவும் பிரிட்டன் இந்தியாவிலிருந்து மூலப்பொருள்களை வரவழைத்தது. உணவுப்பொருள்களைப் பொதுவாக உற்பத்தி செய்யும் விவசாயிகளைப் பருத்திப் பயிர்

செய்யத் தூண்டிவிட்டு ஆசை காட்டியது. பஞ்சுத் தேவை (உதாரணமாக அமெரிக்க உள்நாட்டுபோர்) மிகுதியாக இருந்தபொழுது மிகுதியான செல்வம் கிடைத்தது. பருத்திப்பயிர் விளைச்சல் செய்யும் நிலங்கள் இரு மடங்காகப் பெருகின. ஆனால், பஞ்சின் தேவை குறைந்தவுடன் விவசாயகளிடம் மிகுதியான பஞ்சு மிஞ்சித் தங்கியது; உணவு தானியங்கள் கிடைப்பது அரிதாக இருந்தது. நல்ல சூழ்நிலையின் பொழுது கடன் வாங்கினார்கள். ஆனால் பற்றாக்குறை சூழ்நிலையின்போது கடனைத் திருப்பி அளிக்க முடியாத நிலையில் இருந்தார்கள். வறட்சியும் தோன்றியது. இம்மாதிரியான பற்றாக்குறை சூழ்நிலையில் விவசாயிகள் வேலைதேடி நகரங்களுக்குச் சென்றனர்.

மேலும் குறைவான விலையுள்ள பிரிட்டிஷ் வாணிகச் சரக்குகள் இந்தியாவில் இறக்குமதி செய்யப்பட்டதால் இந்தியத் தாயகக் கைவினைஞர்கள் பாதிக்கப்பட்டார்கள். ஆகையால் வாழ்க்கை முன்னேற்றத்திற்காக இவர்கள் நாட்டுப்புறப் பகுதிகளுக்குச் செல்லத் தொடங்கினார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில், அந்த நூற்றாண்டின் தொடக்கத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால், இந்தியப் பொருளாதார அமைப்பு மேலும் நாட்டுப்புறங்களைத் தழுவியதாக இருந்தது. (இந்திய, பிரிட்டிஷ் தொழிற் சாலைகள் ஒரளவு முன்னேறியிருந்தன. ஆனால் வேலையிழந்த கைவினைஞர்களுக்கோ, நிலத்தைவிட்டு ஓடிய விவசாயிகளுக்கோ இத்தொழிற்சாலைகளின் உதவி கிடைக்கவில்லை,

தவிர 1857-58ஆம் ஆண்டு சிப்பாய்க் கலகத்தின்பொழுது ஏற்பட்ட இழப்பின் காரணமாகப் பிரிட்டிஷ் அரசு கடுமையான வரியை விதித்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை தன்னிறைவு நிறையுடையதாக இருந்த இந்தியா இம்மாதிரியான புதிய சூழ்நிலையினால் மிகவும் பாதிக்கப்பட்டது.

மேலும் 1868-1878ஆம் ஆண்டுகளுக்கிடையே பஞ்சம், கொள்ளை நோய் முதலியவற்றால் மக்கள் மிகுதியாகப் பாதிக்கப்பட்டனர். 1876-78ஆம் ஆண்டுகளுக்கிடையே தக்காணம், தென் இந்தியப் பகுதிகள் மிகவும் பாதிக்கப்பட்டன. 1868-69 ஆம் ஆண்டுகளில் ராஜபுதனத்திலும், 1873-74ஆம் ஆண்டில் வங்காளத்திலும் மக்கள் கடுமையான பஞ்சத்தால் பாதிக்கப்பட்டார்கள். மழை இல்லாமை உடனடிக் காரணமாக இருந்த போதிலும், பிரிட்டிஷ் வாணிபக் கொள்கையின் விளைவுகளால் இம்மாதிரியான பற்றாக்குறைச் சூழ்நிலை உருவாகியது எனக் கூறலாம். உடனடியாகப் பணங்கட்டி எடுக்கும் விளைச்சல்சரக்குப்பொருளாதார அமைப்பின் விளைவால் உள்ளூர் மரபுமுறை தானிய சேமிப்பு பாதிக்கப்பட்டது. மேலும் கிராம மக்களிடையே உள்ள சார்பு நிலையும் தளர்வுற்றது. 1895-1900 ஆம் ஆண்டுகளுக்கிடையே தோன்றிய பஞ்சம் மிகவும் கொடியதாக இருந்தது. தக்காணப் பகுதியில் விவசாயிகள் கலகம் செய்தனர். வன்முறைச் செயல்களில் ஈடுபட்டனர்.

இம்மாதிரியான சூழ்நிலை உருவான பொழுதுதான் இந்தியாவிலிருந்து இந்தியர்கள், தமிழர்கள் உட்பட, அயல்நாடுகளுக்கு வேலைதேடிச் சென்று குடியேறினார்கள்.

முதன் முதலில் சட்டப்படி தொழில்முறைக் கட்டுபாட்டு ஒப்பந்தம் (*Indenture system*) செய்து கொண்டுதான் தமிழ்த் தொழிலாளிகள் தென் ஆப்பிரிக்காவிற்குச் சென்றார்கள். கரும்புத் தோட்டங்களில் பணி புரிவதற்காக இவர்கள் கொண்டுவரப்பட்டனர். முதன் முதலாக இவர்கள் 1860ஆம் ஆண்டு டர்பன் மாவட்டத்தில் உள்ள கரும்புத் தோட்டங்களில் பணிபுரிவதற்காக வந்தார்கள். இவர்களைத் தவிர தனிப்பட்ட முறையில் தமிழ், குறிப்பாக இந்தி, குஜராத்தி வணிகர்கள் தென் ஆப்பிரிக்காவிற்கு வரத்தொடங்கினர். இந்தியர்கள், தமிழர்கள் உட்பட, பொதுவாக நேட்டால் (*Natal*) திரான்சுவேல் (*Transvaal*) பகுதிகளில் குடியேறினர். மற்றப் பகுதிகளுக்கு அவ்வளவாகச் சென்று குடியேறவில்லை. குடியேறிய இந்தியர்களில் பெரும்பான்மையோர் தமிழர்களே ஆவர். இவர்கள் தென் ஆப்பிரிக்காவிற்குச் சென்று குடியேறியதற்குச் சிறப்பான காரணம் அவர்கள் வறுமை நிலையே ஆகும். மற்ற காரணங்கள் (1) சாதி அமைப்பும் அதன் கொடுமை, அடக்குமுறையும் (2) வாணிபம், தொழில் துறைகள் தேயத் தொடங்கின. (3) அடிக்கடி தோன்றும் பஞ்சம் (4) வட்டிக்கொடுமை (5) கடுஞ்சுரண்டல், சமூகச் சீரழிவு, கொடூர அடக்குமுறை முதலியவை ஆகும்.

1860-66 ஆண்டுகளில் 5448 இந்தியர்கள் நேட்டாலுக்கு வந்தார்கள். சென்னை மாநிலத்திலிருந்து 1881-82இல் 1763 பேரும் 1882-83இல் 1358 பேரும் 1883-84இல் 1532 பேரும் நேட்டாலுக்குச் சென்றார்கள். 1911ஆம் ஆண்டளவில் 1,42,670 இந்தியர்கள் தென் ஆப்பிரிக்காவிற்கு அழைத்து வரப்பட்டனர்: 1860-1911ஆம் ஆண்டுகளுக்கிடையே 1,52,184 பேர் இந்தியாவிலிருந்து வந்தார்கள் எனப் பேராசிரியர் சுரேந்திரபான் கூறுகிறார். இவர்களில் மூன்றில் இரண்டு பங்குத் தமிழர்களும், தெலுங்கர்களும் ஆவார்கள். தென் ஆப்பிரிக்காவில் வந்து குடியேறிய இந்தியத் தொழிலாளர்களில் பெரும்பான்மையோர் தமிழர்கள்; வணிகர்களில் பெரும்பான்மையோர் குஜராத்திகள், சிந்திகள். குறிப்பாக 1891-ஆம் ஆண்டிலிருந்து, தொழிலாளி தவிர மற்ற இந்தியர்களும் தென் ஆப்பிரிக்காவிற்குச் சென்று குடியேறினர்.

இந்தியர்கள் தென் ஆப்பிரிக்காவில் வந்து நிரந்தரமாகக் குடியேறுவதைத் தென் ஆப்பிரிக்க (நேட்டால்) அரசு விரும்பவில்லை. இதைத் தடுப்பதற்காக 1893இல் ஒரு சட்டத்தை அறிமுகப்படுத்தியது. தொழில் முறைக் கட்டுப்பாடு ஒப்பந்தம் முடிந்த பின்பும் தொடர்ந்து நிலையாகத் தென் ஆப்பிரிக்காவிலே வாழும் இந்தியர்கள் ஆண்டிற்கு 3 பிரிட்டிஷ் பவுண்டு காசுகள் (3) வரி செலுத்த வேண்டும் எனும் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும் இந்தியர்களுக்கு ஓட்டு அளிக்கும் உரிமை கிடையாது எனும் சட்டம் 1894இல் கொண்டுவரப்பட்டது. காந்திஜியின் தலைமையில் இச்சட்டத்தை இந்தியர்கள் எதிர்த்தனர். உடனடியாக இந்தியர்களுக்கு வெற்றி கிடைத்தபோதிலும் 1896ஆம் ஆண்டுச் சட்டம் 1894 சட்டத்தை உறுதிப்படுத்தியது.

போயர் போருக்குப்பின் இந்தியர்களை வெறுத்து ஒதுக்கும் கொள்கை மேலும் வளரத் தொடங்கியது. 1907ஆம் ஆண்டுச் சட்டம் இந்தியர்கள் திரான்சுவேலுக்குள்

நுழையக்கூடாது என்று கூறியது. 1910ஆம் ஆண்டு தென் ஆப்பிரிக்கக் கூட்டரசு நாடு அமைக்கப்பட்டது. அதற்குப் பிறகுதான் 1911ஆம் ஆண்டுத்தொழில் முறைக் கட்டுப்பாடு ஒப்பந்தம் ஒழிக்கப்பட்டது. ஆனால், இந்தியர்கள் இனி வந்து தென் ஆப்பிரிக்காவில் குடியேறக்கூடாது எனும் சட்டம் கொண்டுவரப்படவில்லை.

ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு இந்தியர்கள் சுதந்திரமாகப் போகக் கூடாது என்ற சட்டம் 1913இல் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தியச் சடங்கு முறைப்படி செய்யும் திருமணம் செல்லுபடியாகாது என்ற சட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டது. இச் சூழ்நிலையால்தான் நேட்டாலில் காந்திஜி கரும்புத் தோட்டத் தொழிலாளர்களுடன் இணைந்து வேலை நிறுத்தம் செய்தார். பல இந்தியர்கள், பெண்மணிகள் உட்பட கைது செய்யப்பட்டனர். தஞ்சாவூரைச் சேர்ந்த வள்ளியம்மாள் எனும் 16 வயது பெண் சிறையில் இறந்துபோனாள். காந்திஜியின் சத்தியாக்கிரகத்தின்போது பி.கே.கவுண்டன், தம்பிநாயுடு எனும் தமிழர்கள் தீவிரமாகப் பங்கேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த வேலை நிறுத்தத்தின் பயனாக இறுதியில் 1914இல் இந்தியர்கள் 3 பிரிட்டிஷ் பவுண்டுகள் வரி செலுத்த வேண்டும் என்று கூறிய சட்டம் ஒழிக்கப்பட்டது.

பேராசிரியர் சுரேந்திரபானா, அவர் ஆராய்ச்சியின் அடிப்படையில் பின்வரும் முடிவுகளுக்கு வருகின்றார்:- தென் ஆப்பிரிக்காவிற்கு வந்த இந்தியர்களின் இந்தியக் குடும்பச் சூழ்நிலையைப் பார்க்கும்பொழுது அவர்கள் எல்லோரும் இந்தியச் சமூகப் பொருளாதாரப் பொங்கெழுச்சியின் விளைவால் பாதிக்கப்பட்டவர்கள் என விளங்குகிறது. இவர்களில் பெரும்பான்மையோர் வேளாண்மைத் துறையைச் சேர்ந்தவர்கள். பெரும்பாலும் அவர்கள் தாழ் படியிலுள்ள விவசாயிகள் அல்லது கைவினைஞர்கள். கப்பல்களிலுள்ள பதிவேடுகளைப் படித்தால் இவர்களில் பெரும்பாலோர் பறையர், வன்னியர், வெள்ளாளர் சாதிப்பிரிவைச் சேர்ந்தவர்கள். இப்பதிவேடுகளில் மிகுதியாகக் காணப்படும் சாதிப்பிரிவினர்கள்: பால்ஜி (அல்லது பாலிஜா) செட்டி, எடியா, கரார், கவுண்டா, கொல்லா, கவாரய், கயூ, கம்மா, மல்லா, மூட்லி, ஒட்டி, படையாட்சி, ரெட்டி, உப்பாரா, உடையார்.

ஆர்க்காடு, செங்கல்பட்டு, சித்தூர், சென்னை, வெல்லூர், மாவட்டங்களிலிருந்து மிகுதியான தமிழர்கள் வந்தார்கள். பிற மாவட்டங்களிலிருந்து வழக்கமாக வந்தவர்கள் கோயமுத்தூர், காஞ்சீவரம், கடலூர், கோண்டா, மதுரை, மதுராந்தகம், மைசூர், நெல்லூர், போரூர், சேலம், சைதாபேட், தஞ்சாவூர், திருச்சிராபள்ளி, திருவெள்ளூர், விசாகப்பட்டணம். இப்பதிவேடுகளில் வழக்கமாக அடிக்கடி வரும் பெயர்கள்: அருணாசலன், சின்னசாமி, செங்காடு, கோவிந்த(ன்), குப்பன், முனிசாமி, முனியன், முருகன், பெருமாள், ராமசாமி, ரங்கசாமி, வீராசாமி, வெங்கடாசலம், வெங்கடசாமி.

பெரும்பான்மையான தென் இந்தியர்கள் ஒப்பந்தக் கூலிகளாக வந்தனர். பலர் உரிமையுள்ள மனிதர்களாகவும் வந்து குடியேறினார்கள். தொழில் முறைக் கட்டுப்பாடு ஒப்பந்தப்படி இவர்கள் 5 ஆண்டு பணிபுரிய வேண்டும். ஒப்பந்தம் முடிந்த பிறகு மீண்டும் ஐந்து ஆண்டிற்கு இவ்வொப்பந்தத்தைப் புதுப்பித்துக்கொள்ளலாம். (ஒரு சிலரே புதுப்பித்துக்கொண்டனர்) அல்லது இந்தியாவிற்குத் திரும்பலாம் அல்லது உரிமையுள்ள மனிதர்களாகக் குடியேறித் தொடர்ந்து வாழலாம். 1911ஆம் ஆண்டளவில் மூன்றில் இரண்டு பங்கு இந்தியர்கள் நிரந்தரமாகக் குடியேறி வாழத் தொடங்கினார்கள். ஆனால் 1930ஆம் ஆண்டளவில் பல இந்தியர்கள் இந்தியாவிற்கும் திரும்பி வந்தார்கள். ஒப்பந்தக் கூலிகளாகக் கரும்பு, தேயிலைத் தோட்டங்களிலும், நிலக்கரிச் சுரங்கங்களிலும், இடையீட்டுத் தடைவேலிவரை தொழிற்சாலைகளிலும் (Wattle - industry) நாட்டில் அரசு ரயில்வே போக்கு வரத்து அலுவலகங்களிலும், தனியாட்சியுரிமை நகராண்மைக் கழகங்களிலும் பணிபுரிந்தார்கள். ஒப்பந்தம் முடிந்தபிறகு பலர் தோட்டங்களில் பயிரிட்டு வாணிபம் செய்தனர். பருந்து போன்ற வேட்டைப் பறவைகளை வளர்த்து, வாணிபம் செய்தனர் (Hawing) பண்டங்களைக் கூவி விற்றனர், வாணிபம் செய்தனர். 1900 ஆம் ஆண்டுகளின் தொடக்கத்தில் கூலி வேலை செய்ய வந்தவர்களின் சந்ததியினர்கள் நகரப்புறத்திலுள்ள அரசு சிவில் பணிகளிலும், தொழிற்சாலைகளிலும், தொழிலர் தொகுதியிலும் (Professional) பணிபுரியத் தொடங்கினர்.

தோட்டங்களிலோ, சுரங்கங்களிலோ, தமிழர்களுக்கும், தமிழர் அல்லாதவர்களுக்கும் பணி அளித்த எஜமானர்கள் வேறுபாடு காட்டவில்லை. அதேபோல் இந்தியச் சிறுவர்கள் படித்த பள்ளிகளிலும் வேறுபாடு தோன்றவில்லை. அரசியலிலும் இம்மாதிரியான வேறுபாடு காட்டப்படவில்லை. இந்தியர்கள் என்ற எண்ணம்தான் மேலோங்கியிருந்தது.

1944 ஆம் ஆண்டு டிரான்சுவேல் நேட்டால் பகுதிகளில் இந்தியர்களுக்கு என்று தனியிடம் ஒதுக்கப்பட்டது. இந்த இடங்களில் மட்டும்தான் இந்தியர்கள் வீடுகளையும் நிலங்களையும் வாங்கலாம். மற்ற இடங்களில் வீடுகளையும், நிலங்களையும் வாங்குவதற்கோ, வசிப்பதற்கோ இந்தியர்களுக்கு உரிமை இல்லை. மேலும் 1946 ஆம் ஆண்டுச் சட்டம் மற்ற இடங்களில் தென் ஆப்பிரிக்கக் கூட்டரசு முழுவதிலும் இந்தியர்கள் வாழ உரிமை இல்லை எனக் கூறியது. இன வகுப்புவாத அடிப்படையில் இந்தியர்களுக்கு ஓட்டுரிமையும் அளிக்கப்பட்டது. இந்தச் சலுகையை இந்தியர்கள் ஏற்றுக் கொள்ள மறுத்தனர். பிறகு தென் ஆப்பிரிக்க அரசு மற்றொரு சட்டத்தை அறிமுகப்படுத்தியது. சட்ட மன்றத்திற்கு (House of Assembly) நான்கு வெள்ளைக்காரப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க ஆசியர்களுக்கு உரிமை உண்டு.

1961ஆம் ஆண்டு தென் ஆப்பிரிக்கா குடியரசாக மாறியவுடன் 1964ஆம் ஆண்டில் இவ்வரசு தென் ஆப்பிரிக்க இந்திய மன்றம் (South African Indian Council) ஒன்றை அமைத்தது. இதன் நோக்கம் இந்தியர்களுடன் தொடர்பு கொண்டு இயங்குவதே ஆகும்.

தொடக்கத்தில் 21 உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டனர். பிறகு இவ்வுறுப்பினர்களின் எண்ணிக்கை 30 ஆக உயர்ந்தது (15 நியமன உறுப்பினர்கள் 15 தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள்). 1975 சனவரி மாதம் இந்த மன்ற உறுப்பினர்கள் எல்லோருமே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும், அவர்களுக்குச் சட்டமியற்றும் உரிமையும், சட்டம் செயற்படுத்தும் உரிமையும் அளிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. 1981 நவம்பர் மாதம் இம்மன்றத்திற்கு முதல் தேர்தல் நடத்தப்பட்டது. ஒரு சிலரே வாக்களிக்க முன் வந்தனர்; சராசரியாக 10.5 விழுக்காடு இந்தியர்களே வாக்கு அளித்தனர். கேப் மாநிலம் மூன்று உறுப்பினர்களையும், திரான்சுவேல் 10 உறுப்பினர்களையும், நேட்டால் 27 உறுப்பினர் களையும் (மொத்தம் மன்றத்தின் 40 உறுப்பினர்கள்) தேர்ந்தெடுத்தன. இந்தியப் பிரதிநிதித்துவம் சம்பந்தமான ஒரே மன்றம் தென் ஆப்பிரிக்க இந்திய மன்றம் தான், மற்ற மன்றங்களில் இந்தியர்களுக்குப் பிரதிநித்துவம் கிடையாது எனத் தென் ஆப்பிரிக்க அரசு அறிவித்தது.

தென் ஆப்பிரிக்காவின் மொத்த மக்கள் தொகையில் 70 விழுக்காடு "கறுப்பர்கள்" (ஆப்பிரிக்கர்கள்) இருக்கிறார்கள். இவர்களுக்கு என்று 14 விழுக்காடு தென் ஆப்பிரிக்க நிலம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இங்குத் தான் அவர்கள் வசிக்க வேண்டும். மற்ற 30 விழுக்காட்டினர்: வெள்ளையர், கலரெட்ஸ் (Coloureds), இந்தியர்கள் முதலியவர்கள் ஆவார்கள். 1984ஆம் ஆண்டு தென் ஆப்பிரிக்கா நாடாளுமன்ற முறையை ஒழித்து விட்டு, ஜனாதிபதி (குடியரசுத் தலைவர்) முறையை அறிமுகப்படுத்தியது. ஆகையால் மூன்று அவை நாடாளுமன்ற அமைப்பு தோன்றியது. வெள்ளையர்கள், கலரெட்ஸ், இந்தியர்களுக்கு என்று இம்மூன்று அவைகள் அமைக்கப்பட்டன. இம்மூன்று இனப் பிரிவினரும் தென் ஆப்பிரிக்க மொத்த மக்கள் தொகையில் 30 விழுக்காடு இருக்கின்றனர். வெள்ளையர் அவையில் 178 உறுப்பினர்கள், கலரெட்ஸ் 85 உறுப்பினர்கள், இந்தியர்கள் 45 உறுப்பினர்கள் இருக்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. அந்தந்த இனப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

இப்புதிய திட்டத்தின்படி கலரெட்ஸ் தேர்தல் 1984ஆகஸ்டு 22ம் தேதியும், இந்தியர்கள் தேர்தல் ஆகஸ்டு 28ஆம் நாளும் நடத்தப்பட்டன. ஆனால் 30 விழுக்காடு கலரெட்ஸ் வாக்காளர்களே, 17 விழுக்காடு இந்தியர்களே ஓட்டுப் போட்டனர். இப்புதிய அரசியலமைப்பு 1984 செப்டம்பர் 2ஆம் தேதியிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்கு முன்பு சிறுபான்மையினரான வெள்ளையர் ஆட்சியே இருந்தது. ஆனால் 1984 செப்டம்பரிலிருந்து இன அடிப்படையில் ஒதுக்கப்பட்டு அமைக்கப்பட்ட இப்புதிய அரசு தோன்றியது. இதன் விளைவால் இரண்டு இந்திய அமைச்சர்களும் (அமின்சந்த், ராஜ்பான்சி) ஒரு கலரெட்ஸ் அமைச்சரும் (ஆலன் ஹென்டிரிக்ஸ்) தென் ஆப்பிரிக்க ஜனாதிபதி போதா (Botha) அமைச்சரவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

நகராட்சி சம்பந்தமாக (Municipal Government) இந்தியர்களுக்குச் சலுகைகள் இருந்ததில்லை. 1924ஆம் ஆண்டு நேட்டாலில் இந்தியர்களுக்கு நகராட்சி வாக்குரிமை நீக்கப்பட்டது. 1926ஆம் ஆண்டு நகராட்சி சுகாதார மன்றங்களின் பிரதிநிதித்துவத்தை

இந்தியர்கள் இழந்தனர். 1940ஆம் ஆண்டு நகராட்சி மன்றம், உடல்நல, மலேரியா குழுக்களின் உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்பட்டனர். ஆனால் 1963ஆம் ஆண்டு உள்ளூர் விவகாரக் குழுக்களை இந்தியர்கள் வாழும் இடங்களில் அமைக்கலாம். இக்குழுக்களின் உறுப்பினர்கள் முதலாண்டு முழுவதிலும் நியமனம் செய்யப்பட வேண்டும் என்றும், நான்காவது ஆண்டு ஓரளவு சொத்துரிமை உள்ள 21 வயது அடைந்த இந்தியர்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்றும் ஒரு சட்டம் அறிமுகப்படுத்தப் பட்டது. இதற்குப் பின் இந்தியர் வாழும் நேட்டால், திரான்சுவேல், கேப் நகரங்களில் இம்மாதிரி குழுக்கள் அமைக்கப்பட்டன. இக்குழுக்களின் பரிந்துரைகளை, குறிப்பாக இந்தியர்கள் சம்பந்தமான பரிந்துரைகளை நகராண்மைக் கழகம் சட்டப்படி ஆழ்ந்து ஆராய வேண்டும், கவனமாய்ப் பார்க்க வேண்டும்.

மக்கள் தொகை - தமிழர்கள்

1980ஆம் ஆண்டு மக்கள் தொகை (திரான்ஸ்கை, போபுதட்ஸ்வானா வென்டா முதலிய பகுதிகள் சேர்த்துக் கொள்ளப்படவில்லை)

மொத்த மக்கள் தொகை	2,48,85,940
வெள்ளையர்கள்	45,28,000
கலரெட்ஸ்	26,12,000
கருப்பர்கள்(Blacks)	1,69,23,000
ஆசியர்கள்	8,05,000

தென் ஆப்பிரிக்க இந்திய மக்கள் தொகை (மொழி அடிப்படையில்)

மொழி	விழுக்காடு	மக்கள் தொகை
தமிழ்	37	2,96,000
இந்தி	33	2,64,000
குஜராத்தி	14	1,12,000
உருது	9	72,000
தெலுங்கு	7	56,000

தமிழர்கள் மிகுதியாக வாழும் பகுதி நேட்டால் ஆகும்.

லண்டன் டைம்ஸ் (London Times) 29Oct, 1983 கொடுக்கும் விவரம்

வெள்ளையர்கள் 4.6 மில்லியன், கலரெட்ஸ் 2.7 மில்லியன்
இந்தியர்கள் 85,000 விகிதத்தில் (in Ratio) 4:2:1
(Source : K.Nambi Arooran, Indians in South Africa, PP 5, 130.)

சமயம்:

தென் ஆப்பிரிக்காவிலுள்ள இந்தியர்களில் மூன்றில் இரண்டு பங்கு (70 விழுக்காடு) இந்துக்கள் ஆவார். தொடக்கத்தில் கரும்பு, தேயிலைத் தோட்டங்களில் பணிபுரிந்த இவர்களில் பெரும்பான்மையோர் நேட்டால் மாநிலத்தில் வாழ்கின்றார்கள். பின்னால் வந்து குடியேறிய ஒரு சில இந்து வணிகர்கள் திரான்சுவேல், கேப் மாநிலங்களில் வாழ்கின்றார்கள். இந்துக்கள் தமிழ் அல்லது தெலுங்கு அல்லது. இந்தி அல்லது குஜராத்தி மொழி பேசுகின்றார்கள்.

தென் ஆப்பிரிக்கத் தமிழர்களில் பெரும்பான்மையோர் சிவவழிபாடு செய்பவர்கள். இங்குப் பல கோவில்களையும் கட்டியிருக்கின்றார்கள். உம்பிலோ (Umbilo) தென் கரையில் ஸ்ரீசுப்ரமணியர் ஆலயமும், மவுண்ட் எட்சிகோம்பு (Mount Edge Combe) எனும் இடத்தில் எம்பெருமானார் ஆலயமும், சாம்ட்சென் சாலையில் (Somtsen Road) கட்டுக்குடியிருப்புகள் கோயிலும் (Magazine Baracks Temple) தென் ஆப்பிரிக்காவில் தமிழர்களால் முதன் முதலில் 1875 ஆண்டளவில் கட்டப்பட்ட கோயில்களாகும். இப்பொழுது தென் ஆப்பிரிக்காவில் இருக்கும் மிகப் பழைய இந்துக் கோயில்கள், நியுலாந்தில் உள்ள (New Lands) நாராயணசாமி கோயிலும் (1896) மவுண்ட் எட்சிகோம்புவில் உள்ள கணேசர் ஆலயமும் ஆகும். இக்கோயில்களைக் கட்டியவரின் பெயர் கிருஷ்ணப்பா ரெட்டி. தவிர அரேனாபார்க் சிவாலயம் (Arena Park Siva Alayam), கிளட்ஹவ் ஸ்ரீ எம்பெருமான் கோவில் (Gladhow Shri Empernal Temple) போயனிக்ஸில் உள்ள முருகன் கோயில் (New Farm Murugan Temple in Phoenix) கிளேர்வுட்டில் உள்ள (Clairwood) ஸ்ரீ சுப்ரமணியர் கோயில், போர்ட் எலிஜபெத்தில் (Port Elizabeth) உள்ள ஸ்ரீசிவசுப்ரமணியர் ஆலயம், ஸ்ரீ விஷ்ணு கோயில், ரெய்லேந்து, கேப்டவுனில் உள்ள (Reyland, Capetown) . சிவ ஆலயம், வெருலாமிலுள்ள (Verulom) சிவ சுப்ரமணியர் கோயில், டர்பனில் உள்ள ஸ்ரீ வைத்தியநாத ஈஸ்வரர் ஆலயம், உம்பிலோ ஈஸ்வரர் கோயில் (Umbilo Esvarar Temple) முதலிய கோயில்களும் உள்ளன. ஆகையால், பொதுவாக முருகனுக்கும், சிவனுக்கும் கோயில்கள் கட்டப்பட்டன. விஷ்ணுவிற்குக் கோயில்கள் கட்டப்படவில்லை.

தமிழர்களுக்குப் பொதுவாக, தேவாரம், திருவாசகம், திருப்புகழ், திரு அருட்பா முதலிய சமய இலக்கியங்களில் ஈடுபாடு உண்டு. திருப்புகழ் முருகனைப் புகழ்ந்தும், மற்ற மேலே கூறிய இலக்கியங்கள் சிவனைப் போற்றியும் பாடப்பட்டன. தமிழர்கள் இங்குப்

பொதுவாகக் கொண்டாடும் பண்டிகைகள் பின்வருபவன ஆகும் 1.பொங்கல், 2.தைப்பூசம் அல்லது காவடித் திருவிழா, 3. மஹாசிவராத்திரி, 4. தமிழ்ப்புத்தாண்டு, 5. ஸ்ரீராமநவமி, 6. சித்ரா பருவம், 7. விநாயக சதுர்த்தி, 8. கிருஷ்ண ஜன்மாஷ்டமி, 9. சக்தி பூசை (நவராத்திரி பூசை) 10. தீபாவளி, 11. கார்த்திகை தீபம். காவடித் திருவிழாவின் போது வேண்டுதலை நிறைவேற்றுவதற்காக சிலர் காவடி தூக்கும் வழக்கமும் உண்டு.

பொருளாதார அமைப்பு:

தொடக்கத்தில் கரும்புப் பண்ணைகளில் பணிபுரிய இந்தியர்கள் தென் ஆப்பிரிக்காவிற்கு வந்தார்கள். இன்று பெரும்பான்மையோர் பண்ணைப் பணியை விட்டு விட்டனர். 3.7 விழுக்காட்டு இந்தியர்களே கிராமப்புறங்களில் வசிக்கின்றார்கள். இவர்களுக்கும் கரும்புத் தோட்டங்கள், வாணிபக் கோட்டங்கள் சொந்தமாக இருக்கின்றன. பெரும்பான்மையான இந்தியர்கள் நகரங்களில் வாழ்கின்றனர். துணி செய் தொழில் துறை, தட்டு முட்டுப் பொருள்கள் (Furniture), இரும்புச் சாமான்கள், நகை, எழுதும் பொருள்கள் (Stationery) முதலியவை சம்பந்தமான தொழில்களில் இந்தியர்கள் நகரங்களில் ஈடுபட்டிருக்கின்றனர். தொழிலாளிகளில் 23 விழுக்காடு மேசையடி தொழிலாளிகளாகப் (White Collar jobs) பணி புரிகின்றனர்.

1970ஆம் ஆண்டுப் புள்ளி விவரப்படி 35.3 விழுக்காடு இந்தியத் தொழிலாளர்கள் ஆக்கத்தொழிலில் (Manufacturing) ஈடுபட்டிருக்கின்றனர்; 28.4 விழுக்காடு வாணிபத்திலும், 12.9 விழுக்காடு பணித்துறையிலும் (அரசுத்துறை போன்ற துறை Services) ஈடுபட்டிருக்கிறார்கள். வாணிபப் பொறுப்பேற்புப் பணியில் (Business Undertakings) சம்பந்தமாக இந்தியர்கள் சொந்தமாக வைத்துக் கொண்டிருப்பது 1961இல் 187 இலிருந்து 1970இல் 768ஆக அதிகரித்தது. தொழில் துறையில் நேட்டால் மாநிலத்தில் பணிபுரியும் இந்தியர்களின் எண்ணிக்கை 32,000 இலிருந்து (1961) 67,000ஆக (1970) அதிகரித்து இருக்கிறது. கடல்-நில-வான் படைத்துறைகளிலும், காவல்துறையிலும், அஞ்சல் சார்ந்த துறைகளிலும் சட்டத்துறைகளிலும் இந்தியர்கள் திறமையுடன் பணிபுரிகின்றனர்.

புறநகரிலுள்ள (Suburbs) இந்தியர்கள் ஏழ்மையில் வாடுகின்றனர். ஏழ்மைக்கோட்டைச் சிறிதளவு தாண்டி வாழ்பவர்கள் 28 விழுக்காடு. 6 விழுக்காடு இந்தியர்கள் இடைநிலைப்பட்ட வகுப்பினராக ஓரளவு சௌகரியத்துடன் வாழ்கின்றார்கள்: சுமார் ஒரு விழுக்காடு இந்தியர்களே மகிழ்ச்சி வாய்ந்த வாழ்க்கையை அனுபவிக்கின்றனர். செல்வம் அதிகமாக உள்ள இந்தியர்கள், குஜராத்தியர்கள் குறிப்பாக

முசுலிம் குஜராத்தியர்கள் குறைந்த வருமானம் உடையவர்கள் இந்தி, தமிழ், தெலுங்கு இனப்பிரிவினர்கள் ஆவார்கள். அரை குறை பயில் திறம் (Semi-skilled) கைத்திறன் பெற்றிராத (unskilled) பிரிவினர்களில் பெரும்பான்மையாக இருப்பவர்கள் தமிழர்களும், தெலுங்கர்களும் ஆவார்கள்.

தமிழ்க் கல்வி:

தென் ஆப்பிரிக்காவிலே தமிழ்க் கல்வியை அறிமுகப்படுத்துவதற்கு முதன் முதலாகப் பாடுபட்டவர்கள் கிறித்தவ சமயப் பரப்பாளர்கள் ஆவார்கள். இவர்களுடைய முக்கிய நோக்கம் என்னவென்றால் இக்கல்வி வாய்ப்பு மூலம் தென் ஆப்பிரிக்கத் தமிழர்களைக் கிறித்தவ மதத்திற்கு மாற்றுவதே ஆகும். இது சம்பந்தமாக ஜே.பி.பிரைன் (J.B.Brain) என்பார் Christian Indians in Natal 1890-1911 (நேட்டால் கிறித்தவ இந்தியர்கள் 1860-1911) எனும் நூலை எழுதியிருக்கிறார். இம்மாதிரி தமிழுக்காக உழைத்த பெருமை பாதிரியார் ஜுன் பாப்டிஸ்டே சபோன் (Father Jean Baptiste Sabon) என்பவருக்கு உண்டு. 1852-1861 ஆண்டுகளில் தமிழை ஓரளவு நன்றாகக் கற்றுக் கொண்டார். 1867ஆம் ஆண்டில் இந்தியக் குழந்தைகளுக்காக (30 மாணவர்கட்கு) ஓர் பள்ளியை அமைத்தார். 1872ஆம் ஆண்டளவிலே இந்திய மாணவர்களுக்காக இருந்த நான்கு பள்ளிகளில் இது ஒன்றாகும். தமிழுக்காக உழைத்த மற்றொரு பாதிரியார் கௌர்லே (Father Gourlay). இவர் ரோமன் கத்தோலிக்கப் பள்ளியில் (Roman Catholic Mission) தலைவராகப் பணியாற்றினார். தமிழைக் கற்றுக் கொடுத்த மற்றொரு பாதிரியார் அருட்திரு ரால்ப் ஸ்டாட் (Rov. Ralph Stott) என்பார் ஆவார். 1873ஆம் ஆண்டளவில் உம்ஜெனி (Umgeni), உம்பிலோ (Umbilo), வெருலம் (Verulam), டர்பன் (Durban) ஆகிய பகுதிகளில் முறையே நான்கு பள்ளிகளை நடத்திக்கொண்டிருந்தார். தவிர, ஆங்கில நாட்டுத் திருச்சபை சார்ந்தவர்கள் (Anglicans) நேட்டாலில் 1884ஆம் ஆண்டளவில் 9 பள்ளிகளை நடத்தி வந்தார்கள்.

மேலும் அரசாங்க ஆதரவுடன் 1908ஆம் ஆண்டளவில் நேட்டால் இந்தியர்களுக்கு என 5 அரசாங்கப் பள்ளிகளும் இருந்தன. அரசாங்க உதவி பெறும் பள்ளிகளும் நடத்தப்பட்டன.

தொடக்கத்தில் இனவேறுபாடு இல்லாமல் நேட்டால் பள்ளிகளில் இந்திய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். ஆனால் 1899 ஆம் ஆண்டில் ஐரோப்பிய பள்ளிகளில் இந்திய ஆண் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்கள் என்றும், 1905 ஆம் ஆண்டிலிருந்து பெண் மாணவிகளும் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்கள் என்றும் நேட்டால் அரசு சட்டம் அறிமுகப்படுத்தியது. கேப் மாநிலத்திலும் தொடக்கத்தில் பள்ளிகளில் இனப்பாகுபாடு செய்யப்படவில்லை. ஆனால் பிறகு இன பேத மனப்பான்மை உருவானதால் இந்திய மாணவர்கள் கலரெட் குழந்தைப் பள்ளிகளுக்கே சென்று படித்தார்கள். ஆனால் திரான்சுவேலில் தொடக்கத்திலிருந்தே இனவேறுபாடு இருந்தது. இந்தியப் பள்ளிக்கூடங்கள் ஆரம்ப காலத்திலிருந்தே தனியாக அமைக்கப்பட்டன. விடுதலை பெற்ற ஆரஞ்சு நாட்டில் அவ்வளவு இந்தியர்கள் இல்லை. அங்கு வசித்த சில இந்தியக் குழந்தைகளும் தனியாகச் செயற்பட்டு வந்த கலரெட் குழந்தைப் பள்ளிகளில் படித்தனர்.

1929ஆம் ஆண்டில் இந்திய ஆண் மாணவர்களுக்காக டர்பனில் சாஸ்திரி கல்லூரி (Sastri College) துவக்கப்பட்டது. தென் ஆப்பிரிக்காவில் இந்தியாவின் முதல் ஏஜன்ட்-ஜெனரலாகப் (Agent General) பணிபுரிந்த வி.எஸ்.சீனிவாச சாஸ்திரியின் பெயர் இக்கல்லூரிக்கு சூட்டப்பட்டது. சாஸ்திரி கல்லூரி ஆரம்பிப்பதற்குமுன் இந்திய மாணவர்களுக்கென்று தனிக்கல்லூரி கிடையாது. ஏனென்றால் மெட்ரிகுலேஷன் படித்த இந்திய மாணவர்களே குறைவு. 1936ஆம் ஆண்டில் சாஸ்திரி கல்லூரியில் பி.ஏ. (B.A.,) அறிமுகப்படுத்தப்பட்டது. அரசாங்கம் இந்தக் கல்லூரி அளித்த பட்டத்தை அங்கீகரித்ததால் இக்கல்லூரியின் செல்வாக்கு வளரத் தொடங்கியது.

தவிர இந்திய மாணவர்கள் அறிவியல் அல்லது மருத்துவப் பட்டப் படிப்பிற்காகக் கேப்டவுன், விட் வாட்டர்ஸ்ரேண்ட் (Witwatersrand) பல்கலைக் கழகத்திற்குச் சென்று படித்தார்கள். ஒரு சிலர் மருத்துவப் படிப்பிற்காக இங்கிலாந்திற்குச் சென்றார்கள்.

1959 ஆம் ஆண்டில் ஒவ்வொரு இனப்பிரிவினருக்கும் தனி இன அடிப்படை கல்லூரி அமைக்கப்பட வேண்டும் என்ற சட்டத்தை அரசு அறிமுகப்படுத்தியது. இதன் விளைவாக 1961ஆம் ஆண்டில் டர்பனிலுள்ள சாலிஸ்பரீ தீவில் இந்தியர்களுக்காக ஒரு பல்கலைக் கழகக் கல்லூரி அமைக்கப்பட்டது. இக்கல்லூரிக்கு 1971ஆம் ஆண்டளவில் தன்னாட்சி உரிமை (Autonomous Status) அளிக்கப்பட்டவுடன் இக்கல்லூரி டர்பனின் மேற்கிலுள்ள வெஸ்ட்வில்விக்கு மாற்றப்பட்டது. ஆகையால், தற்சமயம் இக்கல்லூரியை டர்பன்-வெஸ்ட்வில்லி பல்கலைக் கழகம் என அழைக்கின்றார்கள். இக்கல்லூரியில் சேர முடியாத நிலையில் இருக்கும் இந்திய மாணவர்கள் அஞ்சல் வழிக் கல்வி அளிக்கும் தென்ஆப்பிரிக்கப் பல்கலைக் கழகத்தில் படிக்கின்றார்கள். மேலும், பல இந்திய மாணவர்கள் ஒய்ட் பல்கலைக் கழகம் (White University), விட்வாட்டர்ஸ்ரேண்ட், கேப்டவுன், நேட்டால், ரோட்ஸ் பல்கலைக்கழகங்களிலும் படிக்கின்றார்கள். தவிர எம்.எல்.சுல்தான் டெக்னிகல் (தொழில் நுட்பத்துறை) கல்லூரி (M.L.Sultan Technical College), கேப்டவுன், ஜோஹெனெஸ்பர்க் டெக்னிக்கல் (தொழில் நுட்பத்துறை) கல்லூரிகளிலும் இந்திய மாணவர்கள் படிக்கின்றார்கள். படிக்காதவர்களின் எண்ணிக்கை (illiteracy) வெள்ளையர்கள் 7 விழுக்காடு, ஆசியர்கள் 29 விழுக்காடு, கலரெட்ஸ் 38 விழுக்காடு, கருப்பர்கள் 68 விழுக்காடு.

1984ஆம் ஆண்டைத் தமிழ்க் கல்வி வளர்ச்சியின் முக்கிய ஆண்டாகக் கருதலம். எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் தமிழும், மேலும் நான்கு இந்திய மொழிகளும் கற்றுத் தரப்பட வேண்டும் என அரசு அறிவித்தது. டர்பனில் இதன் பயனாக 4300 மாணவர்கள் தமிழ் படிக்க முன் வந்திருக்கிறார்கள். ஆரம்ப நிலையானதால் தற்போது இரண்டாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை தமிழ் கற்றுத் தரப்படுகிறது. தேவையான தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் கிடைக்கவில்லை: 90 முதல்நிலைப் பள்ளிகளிலும் (Primary) 4 உயர்நிலைப் பள்ளிகளிலும் (High Schools) தமிழ் 1984 ஆம் ஆண்டிலிருந்து கற்றுத் தரப்படுகிறது.

1984ஆம் ஆண்டிற்கு முன்பு தமிழ்க் கல்வி அரசு இசைவுடன் அறிமுகப்படுத்தப் படவில்லை. 1914ஆம் ஆண்டு வரை டர்பனில் இரண்டு தனியார் பள்ளிகளில் தமிழ் கற்றுத் தரப்பட்டது. 1914 ஆம் ஆண்டு இந்துத் தமிழ் நிறுவனம் (Hindu Tamil Institute)

அமைக்கப்பட்டவுடன், அந்நிறுவனம் இக்கல்லூரியின் பொறுப்புகளை ஏற்றுக்கொண்டது. ஆங்கிலக் கல்விப் பள்ளி நேரம் முடிந்த பிறகு மத்தியானத்தில் தமிழ் மொழி வகுப்புகள் நடத்தப்பட்டன. 1939 ஆம் ஆண்டில் இக்கல்லூரி மூன்று மாடிக் கட்டடத்தில் இருந்தது. 1978 ஆம் ஆண்டு 50 ஆண்டுப் பொன்விழா (Golden Jubilee) கொண்டாடப்பட்டது. இன்று இந்நிறுவனம் சனி, ஞாயிறு மத்தியானம் குழந்தைகளுக்கும், பெரியோர்களுக்கும் தமிழ் மொழி கற்றுத் தருகிறது. ஒரு காலத்தில் வாரக் கடைசியிலும், பள்ளி நேரம் முடிந்தவுடனும் 32 பள்ளிகளில் தமிழ் மொழி கற்றுத் தரப்பட்டு வந்தது. மக்கள் குடிபெயர்ச்சியினால் இப்பள்ளிகளுக்கு ஆதரவு குறைந்தது. " 1981 ஆம் ஆண்டு தமிழ்ப் பயிற்சியைத் தொடங்கிய பெருமை இந்துத் தமிழ் வித்தியாலயம், நேட்டால் தமிழ் சைவ சபை முதலியவைகளுக்கு உண்டு" என வீரப்பன் கூறுகிறார்.

தமிழ்த்தொண்டு

தமிழ்ப் பாடநூல்கள், தமிழ் மொழி எழுத்துத் தொகுதிகள் நிறைந்துள்ள அட்டைகள், மாணவர் பெயர் பதிவேடுகள், சாக்பீஸ் போன்ற பல்வேறு பொருள்களை டர்பன் நகரில் உள்ள பள்ளிகளுக்கும், கிராமப் பகுதிகளில் உள்ள பள்ளிகளுக்கும் நேட்டால் தமிழ் வேதசபை இலவசமாக அளிக்கின்றது.

தமிழ் மொழி கற்பிப்பதற்காக தமிழ் நியூஸ் எனும் ஆங்கிலமொழி திங்கள் இதழ் தனது இதழில் ஒரு பக்கம் ஒதுக்கியிருக்கின்றது. தமிழ்ப் பாடங்களை சித்திர விளக்கங்களுடன் வெளியிட்டது. மேலும் தமிழ்மொழி எழுத்துத் தொகுதிப் பாடங்கள், சொல் அட்டவணைப் பாடங்கள், தொடக்கநிலைப் பள்ளிச் சிறுவர் பாடல்கள் (நர்சரி ரெய்ம்ஸ்) முதலியவற்றையும் இம்மாத இதழ் வெளியிட்டுக் கொண்டு வந்தது. சரியான உச்சரிப்பைப் பெற்றோர்களிடமிருந்து மாணவர்கள் கற்றுக் கொள்ளவேண்டும் என வலியுறுத்தியது. பண்டைய, தற்காலத் தமிழ் அறிஞர்கள், புலவர்கள் முதலியவர்களின் வாழ்க்கை வரலாற்றை சுருக்கி வெளியிட்டுக் கொண்டுவந்தது. இலக்கியங்களிலிருந்து, குறிப்பாகத் தேவாரம், திருவாசகம் போன்ற திருமறைகளிலிருந்து, சில சிறப்பானப் பகுதிகளை தேர்ந்தெடுத்து வெளியிட்டுக் கொண்டுவந்தது. சுப்பிரமணிய பாரதியார், தனிநாயக அடிகளார், திருஞானசம்பந்தர், ஔவையார் போன்ற அறிஞர்கள், புலவர்களைப் பற்றி கதைகள் எழுதி சித்திர விளக்கங்களுடன் வெளியிட்டுக் கொண்டு வந்தது.

அரசு பாடத்திட்டம்

1984ஆம் ஆண்டு அரசு ஆதரவுடன் பள்ளிகளில் தமிழ் மொழிக் கல்வி அறிமுகப்படுத்தியவுடன் தென் ஆப்பிரிக்கக் கல்வி அமைச்சு ஓர் தமிழ் மொழிப் பாடத்திட்டத்தை வெளியிட்டது. 1984ஆம் ஆண்டு 2-ம் வகுப்பிலும் (Second Standard), 1985ஆம் ஆண்டு மூன்றாம் வகுப்பிலும், 1986ஆம் ஆண்டு நான்காம் வகுப்பிலும், 1987 ஆம் ஆண்டு ஐந்தாம் வகுப்பிலும் இப்புதிய பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என அரசு அறிவித்தது.

இப்புதிய பாடத்திட்டத்தின் குறிக்கோள்:- ஏந்தாம் வகுப்பு படித்து முடிக்கும் மாணவர்கள் சுலபமாக தமிழ்மொழி படிக்கும் திறனைப் பெற்றுவிடவேண்டும். எளிமையான செய்யுள் பிறபாடல்கள் எளிமையான உரைநடை முதலியவற்றைப் புரிந்து கொள்ளும் திறனைப் பெற்று விடவேண்டும். தவறில்லாமல் எழுதல், பேசுதல் திறன்களைப் பெற்று விடவேண்டும். தமிழ் இலக்கியம், வரலாறு முதலியனவைகளைப் படித்து தமிழ்ப் பண்பாட்டைப் புரிந்து கொள்ளும் திறனை பெற்றுவிட வேண்டும்.

பயிற்சி, வாய்மொழிப் பயிற்சி, எழுதுதல் பயிற்சி என இருவகையாகப் பிரிக்கப்படும். உரையாடல், படித்தல், இலக்கியம் முதலிய முறைகள், வாய்மொழிப் பயிற்சியில் பயன்படுத்தப்படும். தமிழ் மொழித் தொகுதி எழுதுதல், மேலும் பொதுவாக எழுதுதல், மொழி அமைப்பு, இலக்கணம் மொழிபெயர்ப்பு முதலியவைகள் தொடர்பான எழுதுதல் பயிற்சி அளிக்கப்படும்.

வாய்மொழி, எழுதுதல் தொடர்பான தேர்வுகள் நடத்தப்படும். இத்தேர்வில் இவ்விரண்டு திறன்களுக்கும் சம அளவில் முக்கியத்துவம் அளிக்கப்படும். எளிமையான பாடங்களை, பாடல்களைப் புரிந்து கொள்ளும் திறன், எளிமையான வாக்கியங்களை பேசும் திறன், உரையாடல் திறன் முதலியன தொடர்பாக வாய்மொழித் தேர்வு ஆண்டு முழுவதும் நடத்தப்படும். சொற்றொகுதி நினைவுத்திறன் எளிமையான வாக்கியங்களை எழுதும் திறன், எழுத்துக் கூட்டுத்திறன், புரிந்து கொள்ளுதல் திறன் முதலியன தொடர்பாக சிறிதளவான இடைவெளிவிட்டு அவ்வப்போது எழுதுதல் தேர்வு நடத்தப்படும்.

பரிந்துரைச் செய்யப்பட்ட பாடநூல்கள்

வகுப்பு-2: *Tamil Primer Std. I, Patchirajan, Mahatma Gandhi Institute, Mauritius* (ஆசிரியர்களுக்காக மட்டும்)

மாணவர்களுக்காக தமிழ் அரிச்சுவடி, முத்து பைன் ஆர்ட்ஸ் பப்ளிகேஷன்ஸ், சிவகாசி.

வகுப்பு 3, 4, 5 புத்தகங்கள் 1, 2, 3-தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவன வெளியீடு.

தேவை நோக்கீட்டு நூல்கள்

1. Nursery Rhymes by Natal Tamil Vedic Society.

2. Easy way to Tamil by Natal Tamil Vedic Society.

3. Sivam Arul Thirattu by Natal Tamil Vedic Society.

4. Adippadai Ilakkanam

5. Cassettes a on Nursery Rhymes and songs of the saints vailable from Natal Tamil Vedic Society.

தற்பொழுது மேலும் 1936இல் அமைக்கப்பட்ட மியர்பாங்க் தமிழ்ப் பாடசாலை சபை (Merebank Tamil Society) தமிழ் மொழி, தமிழ்ப் பண்பாடு வளர்ச்சிக்காக சிறப்பாக பாடுபடுகின்றது. தேவையான நிதிதிரட்டுவதில் கடந்த பத்து ஆண்டுகளாக ஈடுபட்டிருக்கின்றது. ஓரளவு நிதி திரட்டியவுடன் 1988ஆம் ஆண்டு இறுதியில் 5 தமிழ் மாணவர்களுக்கு உதவித்தொகை அளித்து தமிழ் நாட்டிற்கு அனுப்பி தமிழ் மொழி, தமிழ் பண்பாடு கற்றுக்கொள்ள ஏற்பாடு செய்வதாகதென்ஆப்பிரிக்கப் பத்திரிக்கையில் ஓர் அறிக்கை வெளியிட்டது. இம் மாணவர்களுக்கு தமிழ்மொழி, இசை, நாடகம், சமயம், பொதுவாகப் பண்பாடு தொடர்பாக பயிற்சியளிக்க வேண்டும் என இவர்கள் விரும்புகின்றார்கள். இவ்வாறு நான்கு ஆண்டுகள் இம்மாணவர்கள் தமிழ்நாட்டில் பயிற்சி பெற்றவுடன் மீண்டும் தென் ஆப்பிரிக்காவிற்கு திரும்பிச் சென்று அங்கு ஆசிரியர்களாக பணியாற்றி தமிழ் மொழி தமிழ்ப் பண்பாடு வளர்ச்சிக்கு உதவ வேண்டும் என இவர்கள் விரும்புகின்றனர். இந்த நான்கு ஆண்டு பயிற்சியை தமிழ்ப் பல்கலைக் கழகம் அளிக்க வேண்டும். எனவும் மேலும் இப்பயிற்சித் தொடர்பாக தமிழ்ப் பல்கலைக் கழக அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறையுடன் இவர்கள் தொடர்பு கொண்டுள்ளனர். தமிழ்ப் பல்கலைக் கழக துணைவேந்தர் டாக்டர் அகத்தியலிங்கம் இம்முயற்சி வெற்றியடைய முழு ஆதரவும் ஊக்கமும் அளித்து வருகின்றார்.

செய்தி பரவல் தொடர்புச் சாதனங்கள்:

சங்கங்கள்:

தமிழர்கள் சங்கங்களும் தென் ஆப்பிரிக்காவில் இருக்கின்றன. இதில் சிறப்பும் சீர்த்தியும் வாய்ந்த கழகம் நேட்டால் தமிழ் வேதக் கழகம் (Natal Tamil Vedic Society) இது தொடங்கப்பட்டு 70 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. தமிழ்ப் பண்பாட்டின் பாதுகாவலனாக இக்கழகம் பணியாற்றி வருகின்றது. மற்ற தமிழ்க் கழகங்கள் : 1தென் ஆப்பிரிக்காஅருட்பா கழகம். 2.தமிழ் இசைக் கழகம். 3. வைதிக சைவக் கழகம். 4. தமிழ் மன்றக் கழகம். 5. சைவ சிந்தாந்தக் கழகம். 6. திருக்குறள் கழகம். 7. பிரிட்டோரியாத் தமிழர் கழகம். 8. தெய்வ நெறிக் கழகம். 9. ஆரிய சமாஜம். 10. இராமகிருஷ்ணா சங்கம். 11. தென்னாப்பிரிக்கத் தமிழர் கூட்டமைப்புக் கழகம். 12. அருட்பா மாதர் கழகம், பேவியு (Bayview) 13. பெனோனி தமிழ்ப் பள்ளிக் குழு (Benoni Tamil School Board) 14. கிளேர் எஸ்டேட் மாதர் சங்கம் (Clare Estate Mather Sangam) 15. தென் ஆப்பிரிக்கத் திராவிட சங்கம் (Dravida Society of South Africa), கிழக்கு லண்டன் பள்ளிக்குழு (East London Tamil School Board), 16. ஹிந்து மஹாசபா 17. இசிபிங்கோ பீச் அருட்பா கழகம் (Isipingo Beach Arutpa Kazhogem) 18. இசிபிங்கோ ஹில்ஸ் (Isipingo hills) அருட்பா கழகம். 19. லெனாசியா தமிழ்க் கூட்டிணைக் கழகம் (Lenasia Tamil Federataion) 20. மியர்பாங்குத் (Merebank) தமிழ்ப் பாடசாலை சபை 21. நார்த்டேல் (North Dale) சிவ ஞான சபா, 22. ஓம் சாந்தி பண்பாட்டு நிலையம் (Om

Shanthi Cultural Centre) 23. இராமலிங்க அடிகள் மாதர் சங்கம். 24. சமரசக் கழகம், 25. சாதி சன்மார்க்க சங்கம்,, 26. சல்கிராஸ் (Shall Cross) தமிழ்ச் சமுதாயம், 27. தென் ஆப்பிரிக்க சிவ ஞான சபை 28. சிவஞான சங்கம், நார்த்டேல் (Northdale) பீட்டர் மாரிட்ஸ்பர்க் (Pieter Maritzburg), 29. சிவ மன்றம். 30. திரான்சுவேல் தமிழ் கூட்டிணைக்கழகம், 31. வெய்பாங் (Wyebank) தமிழ்ச் சங்கம். 32. ஸ்டாங்கர் (Stanger) செந்தமிழ் நிறுவனம் முதலியவை ஆகும்.

சைவ சித்தாந்த சங்கத்தை அமைத்தவர் சிவ சுப்பிரமணிய குரு சுவாமிகள் (1910). டர்பனில் இப்போது இச்சங்கத்திற்கு 100 கிளைகள் உண்டு. சங்கத்திற்குப் பல கோயில்கள் உண்டு. இங்குத் திருமணங்கள், திருக்கார்த்திகை, தீபாவளி, குரு பூசை, பொங்கல், பூசம் நடக்கின்றன.

தமிழ் பேசும் தமிழர்களால் அமைக்கப்பட்டுப் பெரிய நிறுவனமாக உள்ளது 'தென்னாப்பிரிக்கத் தமிழர் கூட்டிணைப்புக் கழகம்' என்பது தான். எல்லாவிதத் தமிழர் கழகங்களையும் இதனுடன் இணைத்து, பெரிய கழகமாக்கும் முயற்சி இப்போது தீவிர மாக்கப்பட்டு வருகிறது. அதன் பெயர் 'தேசிய தென்னாப்பிரிக்கத் தமிழர் பேரவை' என்று சொல்லலாம். இங்குள்ள சங்கங்கள் எல்லாம் தேவாரம், திருவாசகம், அருட்பா பாடுவதில் காலத்தைக் கழித்து வருகிறார்கள் என வீரப்பன் கூறுகின்றார்.

ஏடுகள்

முன்பு வெளி வந்த தமிழ் ஏடுகள் விவேகபானு, செந்தமிழ்ச் செல்வன், மாணவர் உலகம், இந்தியன் ஒளி முதலியவை ஆகும். தற்சமயம் வெளிவரும் முக்கிய ஏடு ஆங்கிலத்தில் வெளியிடப்படும் தமிழ்ச் செய்திகள் (Tamil News) மாதம் ஒரு முறை வெளியிடப்படுகின்றது. இவ்வேட்டில் ஒவ்வொரு மாதமும் ஒரு பக்கம் தமிழ்ப் பாடங்கள் கற்றுத் தருவதற்கு என ஒதுக்கப்பட்டிருக்கிறது. பண்டைக்கால, தற்காலத் தமிழ் செய்திகளை இவ்வேடு வெளியிடுகின்றது. தேவாரம், திருவாசகம் முதலிய சமய நூல்களை விளக்கவுரையுடன் வெளியிடுகின்றது.

தமிழ், பொதுவாக முறைப்படி கற்றுத்தரப்படாததால், தனியார் முயற்சியின் மூலம்தான் தமிழ்க் கல்வி வளர்ச்சியடைவதற்கு வாய்ப்பளிக்க முடியும். இச்சூழ்நிலையில் தமிழர்களின் இடைவிடா முயற்சிகளைப் பாராட்ட வேண்டும். தொடக்கத்தில் இளைஞர் வேத சமுதாயமும் (Young Men's Vedic Society 1905) இந்துத் தமிழ் நிறுவனமும் (Hindu Tamil Institute 1914) தமிழ்க் கல்விக்காகப் பாடுபட்டன. இவ்விரண்டு சங்கங்களின் முயற்சியும் இணைந்து 1951 ஆம் ஆண்டிலிருந்து தமிழ் வேத சமுதாயம் (Tamil Vedic Society) தமிழ்க் கல்விக்காகப் பாடுபடுகிறது. மேலும் 1928 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட கிளாயிர்வுட் தமிழ் நிறுவனமும் (Clairwood Tamil Institute. 1928) 1936 ஆம் ஆண்டில் தோன்றிய 'மியர்பாங்குத் தமிழ்ப் பாடசாலை சபை (Merebank Tamil School Society) தமிழ்மொழி முன்னேற்றத்திற்காகக் கடந்த 50 ஆண்டுகளாகப் பாடுபடுகின்றன. 1899 ஆம் ஆண்டு டர்பனில் சத்திய ஞான சங்கம் அமைக்கப்பட்டது. இம்மாதிரியான பாடசாலைகளை இத்தமிழ்ச் சங்கங்கள் அமைத்து பராமரித்து வருகின்றன.

தென்னாப்பிரிக்காவில் வாழும் தமிழர்கள் மேற்கொண்டுள்ள தமிழ்க் கல்விப் பணி பற்றித் திராவிடர் கழகத்து விடுதலை இதழ் (15.01.88) சில அரிய தகவல்களைத் தந்துள்ளது.

18,000 தமிழ்ச் சிறுவர், சிறுமியர் தமிழ்க் கல்வியைக் கற்று வருகின்றனர். தென்னாப்பிரிக்க ஆரம்பப் பள்ளி மாணவர்களின் சூழ்நிலைக்கு ஏற்ப திரு.என்.சி.நாயுடு என்பார் தமிழ் அகராதியினைத் தயாரித்துள்ளார்.

இவரால் தயாரிக்கப்பட்ட தமிழ்ப் பாரம்பரிய நாடகங்களை இளையோர் நடித்து வருகின்றனர்.

தமிழ் நாட்டில் ஒலிப்பதிவு செய்யப்பட்ட தேவார திருவாசகப் பாடல்கள் இங்கு பரவலாக்கப்பட்டுள்ளன.

தமிழ் சினிமா

இந்தியாவிற்கும், தென் ஆப்பிரிக்காவிற்கும் தூதர் உறவு (Diplomatic Relations) இல்லாததால், தமிழ்த் திரைப்படங்கள் தென் ஆப்பிரிக்காவிற்கு அனுப்பப்படுவதில்லை. ஆனால் தமிழ்ச் செய்திகள் (Tamil news) சினிமா சம்பந்தமான செய்திகளை அளிக்கின்றது. மேலும் ஒளிப்பதிவு நாடாப் படங்கள் (வீடியோ பிலிம்ஸ், Video Films) கிடைப்பதால் தமிழ் நாட்டில் வெளியிடப்படும் எல்லாத் தமிழ்ப் படங்களும் தென் ஆப்பிரிக்கத் தமிழர்களுக்குக் கிடைக்கின்றன. என டாக்டர் நம்பி ஆரூரன் கூறுகின்றார். இப்படங்கள் சிங்கப்பூர் வழியாகத் தென் ஆப்பிரிக்காவிற்கு செல்கின்றன.

சீசெல்சு

கிழக்கு ஆப்பிரிக்காவில் உள்ள மொம்பாசாவிற்கு ஆயிரம் மைல் கிழக்கிலும் மடகாஸ்கருக்கு அறுநூறு மைல் வடகிழக்கிலும் 92 தீவுகள் அடங்கிய கூட்டம் ஒன்று இந்துமாக்கடலில் உள்ளது. இதனைச் சீசெல்சு, செசெல்ஸ், சீசெல்ஸ் எனப் பலவகையாகக் கூறுகிறார்கள். "*Seychelles*" எனும் பிரெஞ்சு மொழிச் சொல்லைச் சே செல் (*Se-shel*) என உச்சரிக்க வேண்டும் என ஈ. சு. விசுவநாதன் கூறுகின்றார். இத்தீவின் மொத்த நிலப்பரப்பு 171 சதுரமைல்களாகும். மாகித் தீவின் பரப்பளவு மட்டும் 57 சதுரமைல். எந்த இடத்திலும் இத்தீவின் அகலம் ஐந்து மைல்களுக்கு மேலில்லை. மாகியில்தான் சீசெல்சின் தலைநகரமான விக்டோரியா உள்ளது.

தமிழ்நாடு - சீசெல்சுத் தொடர்பு - வரலாறு

பொதுவாகத் தமிழர்கள், பிற இந்தியர்கள், அரேபியர்கள், ஆப்பிரிக்கர்கள், சீனக்கடலோடிகள் இத்தீவுக் கூட்டங்களைப் பலமுறை கடந்துசென்றுள்ளனர். ஆனால் முதல் முதலாக இத்தீவுகளைக் கண்டவர்கள் அரேபியர்கள். அரேபியரோ, தீவுகளைக் கடந்த மற்ற நாட்டினரோ இத்தீவுகளில் தங்குவதற்கான முயற்சியை மேற்கொள்ளவில்லை.

ஐரோப்பாவிலிருந்து இந்தியாவிற்கு வரக் கடல்வழியைக் கண்ட போர்த்துக்கீசிய மாலுமியாகிய வாஸ்கோடகாமாவும் கி.பி. 1502 ஆம் ஆண்டில் சீசெல்சுத் தீவுகளுக்குத் தெற்கில் உள்ள அமிரெண்ட்ஸ் தீவுகளைப் பார்த்திருக்கிறார். ஆனால் அவரும் சீசெல்சுத் தீவுகளை அடைந்ததாகச் சான்றுகள் இல்லை.

கி.பி. 1609 ஆம் ஆண்டில் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியைச் சார்ந்த அலெக்சாண்டர் செர்பே என்பவர் உணவுப் பொருட்களை நாடி இத்தீவுகளை அடைந்ததாக அறிகிறோம். ஆனால், இவர் இத்தீவுகளை இங்கிலாந்தின் குடியேற்றமாக்க எத்தகைய முயற்சியும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை.

இத்தீவுகளைக் குடியேற்ற நாடாக மாற்றும் முயற்சியில் முதல் முதலில் ஈடுபட்டவர்கள் பிரெஞ்சுக்காரர்களேயாவர். இதன் விளைவாக 1756 ஆம் ஆண்டில் சீசெல்சு, பிரெஞ்சுக்குடியேற்றமாக மாறியது. பிரெஞ்சுக்காரர்கள் குடியேறிய காலத்தில் இத்தீவுகளில் பழங்குடிமக்கள் யாரும் இல்லை எனக் கூறப்படுகின்றது. ஆகையால் முதன்முதலாக வந்த பிரெஞ்சுக்காரர்களையும் அவர்களுக்குத் துணையாக வந்த ஆப்பிரிக்க அடிமைகளையும்தான் இந்நாட்டின் பழங்குடி மக்களாகக் கருதவேண்டும். இவர்களைத் தொடர்ந்து தொழில்நுட்ப விளைஞர்களாகவும், கடைக்காரர்களாகவும் இந்தியர்களும், சீனர்களும் குடியேறினர்.

இந்தியாவிலிருந்து வந்த பெரும்பான்மையோர் தமிழர்கள். பிரெஞ்சுக்காரர்களின் ஆட்சியின்போது 1770 ஆம் ஆண்டளவில் தமிழர்கள் புதுச்சேரியிலிருந்து இத்தீவுகளுக்கு அழைத்து வரப்பட்டனர். 1770 ஆம் ஆண்டு 28பேர்கள் சென்ற முதல் குடியேற்றக் குழுவில் 15 வெள்ளையர், 7 கறுப்பரான அடிமைகள 5 தமிழர் சென்றதாகச் சான்றுகள் உள்ளன என க. சச்சிதானந்தன் கூறுகின்றார். இந்த ஐந்து தமிழர்களின் பெயர்கள் ஆசாரி, முத்தையா, குமார் மீனாட்சி, கோவிந்தன், தொமினிக் என்று இவர் கூறுகின்றார். 1783 -84 ஆம் ஆண்டிலிருந்து தமிழர்கள் தொடர்ச்சியாகச் சீசெல்சு வந்து குடியேறினர். பெரும்பாலோர் மொரிசியஸ், ரீயூனியன் வழியாகவும், சிலர் நேராகப் புதுச்சேரித் துறைமுகத்தின் வழியாகவும் சீசெல்சுத் தீவுகளுக்கு வந்து குடியேறினர். தஞ்சாவூர், சிதம்பரம், மாயவரம், காரைக்கால், கடலூர் போன்ற ஊர்களிலிருந்து கிளம்பி புதுச்சேரி வழியாக சீசெல்சு தீவுகளுக்கு வந்தார்கள்.

கி.பி. 1810 ஆம் ஆண்டு மொரிசியஸ் இங்கிலாந்தின் குடியேற்றமாக மாறியது. இதனால் மொரீசியஸின் அதிகாரத்திற்குட்பட்டிருந்த சீசெல்சுத் தீவுகளும் இங்கிலாந்தின் ஆட்சிக்குட்பட்ட குடியேற்றமாக மாறவேண்டிய அவசியம் ஏற்பட்டது. நெப்போலியனின் ஐரோப்பியப் போரை முடிவுக்குக் கொண்ட பாரிஸ் உடன்படிக்கையின் படி மொரீசியஸ், சீசெல்சு பிரிட்டிஷ் குடியேற்றங்களாக மாறின. ஆகையால் ஆங்கிலேய அதிகாரிகள் பலர் இந்நாட்டிற்கு வந்து குடியேறினர். ஆங்கிலேய ஆட்சியின்போது தமிழர்கள் தொடர்ச்சியாக வந்து குடியேறினர். குறிப்பாக இருபதாம் நூற்றாண்டில் பல தமிழர்கள் வியாபார நோக்கத்தோடு வந்து குடியேறினார்கள். இவர்களில் பெரும்பான்மையோர் காரைக்கால், புதுச்சேரி, தஞ்சாவூர் போன்ற பகுதிகளிலிருந்து வந்தார்கள்.

மக்கள் தொகை

1976 இல் சுதந்திரமடைந்த சீசெல்சுத் தீவின் மொத்த மக்கள் தொகை 60,000. நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 25 சதவிகிதத்தினர் தலைநகரான விக்டோரியாவிலே வாழ்கின்றனர். கொள்வினை கொடுப்பினை காரணமாக நிறைய இனக்கலப்பு இந்நாட்டு மக்களிடையே நிகழ்ந்துள்ளது. ஆகையால் நிலையாகக் குடியேறிய தமிழர்களும் இதற்கு விதிவிலக்கல்ல எனக் கூற வேண்டும்.

க. சச்சிதானந்தன் பின்வரும் செய்திகளை அளிக்கின்றார்:-சீசெல்சில் இன்று உள்ள மொத்த மக்களுள் இந்தியர் எனக் கணிக்கப்படுவோர் 5 விழுக்காடு மட்டுமே. இவர்களுள் 10-15 குஜராத்திக் குடும்பங்களைத் தவிர எஞ்சியவர்கள் யாவரும் தமிழர்களே. சுமார் 3000 தமிழர்கள்இருக்கின்றார்கள்எனக் கூறலாம். ஆனாலும் தமிழ்ப் பெயர்கள் தாங்கிய சீசெல்சு மக்களின் தொகை 30 விழுக்காடு வரை இருக்கலாம்; சுமார் 17,000 திருமணங்கள் சீசெல்சில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றுள் 770 திருமணங்கள் தமிழ்ப் பெயர் உடைய மணமகனையோ மணமகளையோ கொண்டன. 330 மணமகள், 470 மணமகன் ஆகியோர் தமிழ்ப்பெயர் கொண்டிருந்தனர். தமிழ்நாட்டிலிருந்து ஆண்களே பெரும்பாலும் சென்றனர். ஆப்பிரிக்கப் பெண்களைக் கந்தர்வ மணம் புரிந்தனர். பெற்ற பிள்ளைகள் தமிழர் பெயரைப்பெறாமல் தாய் தந்தையின் பெயரைப் பெற்றனர். ஈ.ச. விசுவநாதன் அவர்கள் சீசெல்சுத் தீவுகளில் சுமார் 500 தமிழ்க் குடும்பங்கள் உள்ளன எனக் கூறுகின்றார்.

முறைப்படி தமிழர்களைப் பற்றிய புள்ளி விவரங்கள் எடுக்கப்படாததால் ஆய்வு அடிப்படையில் க. சச்சிதானந்தன் எடுக்கும் முடிவுகளைத் தற்காலிகமாக ஏற்றுக்கொள்வது நல்லது.

தமிழர் சமயம்

இந்நாட்டு மக்களில் பெரும்பாலோர் கத்தோலிக்கர்கள். இந்தியர்களில் பலர் இந்துக்களாகவும், சீனர்களில் பலர் பௌத்த சமயத்தைத் தழுவியவர்களாகவும் உள்ளனர். தமிழர்கள் தமிழ்நாட்டில் தமது ஊர்களில் வழிபட்ட கிராமத் தெய்வங்களையும் சைவ, வைணவ கோயில்களையும் நினைவில் நிறுத்தி வழிபட மறப்பதில்லை. ஆனால் 1984 ஆம் ஆண்டுவரை தமிழர்கட்கான கோயிலோ, சமய அமைப்புகளோ இருக்கவில்லை. 1984 ஆம் ஆண்டு ஜூன் 10 ஆம் நாள் சீசெல்சு இந்துக்கோயில் சங்கம் அமைக்கப்பட்டது.

இந்துக்கோயில் சங்கம் இருக்கும் குவின்சி தெருவில் (Quincy Street) வழிபாடு செய்ய இடம் இருக்கின்றது. ஒவ்வொரு ஞாயிறும் காலை 8 மணிக்கும், மாலை 7 மணிக்கும் வழிபாட்டு முறைக் கூட்டம் கூடும். ஞாயிறு காலையிலும், விசேஷ நாள்களிலும் விநாயகர், நடராஜர் சிலைகளுக்கு அபிஷேகம் செய்யப்படும். விநாயகர் சதுர்த்தி, கிருஷ்ண ஜயந்தி, திருவிளக்கு பூஜை, நவராத்திரி, விஜயதசமி, தீபாவளி, ஸ்கந்தசஷ்டி, திருவெம்பாவைநாள், தைப்பொங்கல், மகாசிவராத்திரி, தமிழ்ப்புத்தாண்டு, மலையாளப் புத்தாண்டு முதலிய விழாக்களை இச்சங்கத்தினர் கொண்டாடுகின்றார்கள். மேலும் தமிழர்கள் கொண்டாடும் எல்லாப் பண்டிகைகளையும் தமிழர்கள் தங்கள் இல்லங்களில் கொண்டாடுகிறார்கள். இசை, நாட்டியம், கோலாட்டம், தமிழ்மொழி, இந்தியப் பண்பாடு முதலியவற்றுக்குப் பயிற்சி அளிக்கின்றார்கள். இவை சம்பந்தமான வகுப்புகள் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலை 7 மணியிலிருந்து 11 மணிவரை நடத்தப்படுகின்றன.

1985 ஆம் ஆண்டு இச்சங்கத்தினரால் கோயில்கட்ட காணி வாங்கப்பட்டது. கோயில் கட்டுவதற்குத் திருப்பதி-திருமலா தேவஸ்தானம் நிதி உதவி அளிப்பதாக வாக்குறுதி அளித்திருக்கின்றது. தற்சமயம் தமிழ்க் கோவில்கள் கிடையாது.

சாதி, சமூக அமைப்பு

ஆசாரி, செட்டி, பிள்ளை, நாயுடு, நாயக்கள், படையாட்சி என்ற பெயர் இறுதிகள் இல்லாத தமிழர் அல்லது தமிழர் வழி வந்தோர் எண்ணிக்கை மிகக்குறைவு. அவர்களில் பிள்ளை, செட்டி இரண்டும் மிகவும் புழக்கத்தில் உள்ளன. நாயுடு, படையாட்சி என்பன அதிகமான உள்ளன. மூதாதை உயிரணுக்கள் தமிழரிடமிருந்து பெற்ற சீசெல்சு மக்கள் சாதிப் பெயரையும் பெற்றுள்ளார்கள். ஆனால் தமிழராகக் கருதப்படாது கறுப்பரோகவோ, வெள்ளையராகவோ கருதப்படுவர். பாதிக்கு மேற்பட்டோர் மூதாதை உயிரணுக்களைத் தமிழரிடம் பெற்றிருப்பது கண்கூடு. தலைமுறைகளின் பெருமைபேசும் சில வெள்ளைக்காரக் குடும்பங்கள்கூடத் தமது மூதாதைத் தமிழரின் சாதிப்பெயர் பெருமையைப் பேசி சாதிபராக்கிரமங்களைக் கூறி மெய் சிலிர்ப்பர் என க.சச்சிதானந்தன் கூறுகின்றார்.

ஆப்பிரிக்கப் பெண்களையும் கந்தர்வ மணம் புரிந்தனர். கலப்புத் திருமண வாழ்க்கை நடத்தினர். குழந்தை பிறந்தால் தாயின் தந்தை பெயர் வைக்கப்பட்டது. பெரும்பாலும் தாய், தமிழ் நாட்டைச் சேர்ந்தவளாக இருக்கமாட்டாள். குழந்தை பிறந்தால் சைவ, வைணவ சமயிகள்கூட, கத்தோலிக்க குருமாரிடம் சென்று ஞானஸ்நானம் செய்தனர். மதப் பெயரை மேலதிகமாக ஏற்றனர். திருமணங்கள், சைவ, வைணவ சமயிகளுக்கிடையேகூட கத்தோலிக்க கோவில் குருமார் ஆசியுடன் அம்மத முறைப்படியே நடைபெற்றது. சிலர் தமிழர் முறைப்படி திருமணம் செய்துகொண்டு கட்டுப்பாடான குடும்ப வாழ்க்கை நடத்துகின்றனர். இறந்தவர்கள் தகனம் செய்யப்படாது கத்தோலிக்க மதக்கிரியைகளுடன் புதைக்கப்பட்டனர். ஏனென்றால் சுடுகாடு சீசெல்சுத் தீவுகளில் இல்லை. ஒன்றை ஏற்படுத்த இந்துக்கோயில் சங்கம் இப்போது முயலுகிறது. பொதுவாக நடைமுறையைக் கவனித்தால் சீசெல்சில் கத்தோலிக்க மதத்தில் சேராமல் அந்த மதம் சார்ந்த வாழ்வைத் தமிழர் வாழ்கின்றனர் எனக்கூறலாம்.

நம்நாட்டில் உள்ள காய்கறிகள் யாவும் மாகியில் கிடைக்கின்றன. அன்றாட உணவில், பழங்கள், காய்கறிகள் முதலியவைகளை நிறைய பயன்படுத்துகின்றனர். சீசெல்சு நாட்டு மக்கள் பெரும்பான்மையோர் கடற்கரையை ஒட்டியுள்ள சிற்றூர்களிலும், கிராமங்களிலும் வாழ்கின்றனர். இவர்கள் வாழும் குடிசை மிகவும் எளிமையானவை; பனை ஓலை வேய்ந்த கூரைகளை உடையவை. இக்குடிசைகளின் உள்ளும் புறமும் எப்போதும் மிகத்தூய்மையாகவே இருக்கும். சமையலைப் பெரும்பாலும் இம்மக்கள் வீட்டிற்கு வெளியிலேயே செய்கின்றனர். ஒவ்வொரு குடிசையைச் சுற்றிலும் பெரும்பாலும் தோட்டம் ஒன்றுண்டு. இத்தோட்டத்தில் தம் அன்றாட தேவைக்கான காய்கறிகளைப் பயிரிடுகிறார்கள். இறைச்சிக்காகப் பன்றிகளையும் கோழிகளையும் ஒவ்வொரு குடும்பத்தினரும் நிறைய வளர்க்கின்றனர்.

அரசியல்

மேனாட்டிலிருந்து விடுதலைப் பெற நடத்திய போராட்டத்தில் தமிழர் பங்கு பெறவில்லை. சுதந்திரம் பெற்றபின் ஆட்சி செய்த அமைச்சரவையில் 1977 ஆம் ஆண்டுக்கு முன் திரு. செட்டி என்பார் அமைச்சராக இருந்தார்.

பொருளாதார அமைப்பு

சீசெல்சு நாட்டு மக்கள் பெரும்பான்மையோர் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். இதில் கணிசமான தொகையினர் தங்கள் சொந்த நிலத்திலேயே தென்னை, வெனிலா, ஏலக்காய், இலவங்கப்பட்டை போன்றனவற்றைப் பயிரிடுகின்றார்கள்.

சீசெல்சு நாட்டில் பொதுவாக வேலையில்லாத் திண்டாட்டம் மக்கள் மத்தியில் இல்லை. பலர் தற்போது கொல்லத்துக்காரர்களாகவும் தச்சர்களாகவும், மோட்டார் ஓட்டிகளாகவும், ஓட்டல் தொழிலாளர்களாகவும் பணிபுரிகின்றார்கள்.

சீசெல்சு நாட்டில் உள்ள வியாபார நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கையில் ஆகக்கூடிய வியாபார நிறுவனங்கள் தமிழர் பெயரிலேயே இருக்கின்றன. குறிப்பாகத் தஞ்சையில் இருந்து சென்ற நாயுடு, பிள்ளை படையாட்சி, செட்டி முதலியவர்கள் வசம் வியாபார நிறுவனங்கள் உள்ளன. எந்த ஊரிலும், கிராமத்திலும் உள்ள கடை தமிழரால் நடத்தப் படுவதாக இருக்கும். ஆங்காங்கே சீனர்களும் வாணிபம் செய்கின்றனர். துணி ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரம், உணவு, வீட்டுப் பாவனைப் பொருள்கள் வியாபாரம் தமிழரால் செய்யப்படுகின்றன. ஒரு சிலரைத் தவிர, வியாபாரிகள் சிலர் ஏற்றுமதி,

இறக்குமதி செய்யும் பெரிய வியாபாரிகள், மக்களுக்கு வேண்டிய பொருள்கள் யாவற்றையும் ஒரு சேர ஒரே இடத்தில் வாங்கத்தகுந்த கடைகளை வைத்துக்கொண்டு இங்குள்ள தமிழர்கள் வியாபாரம் செய்கின்றனர். மாகித்தீவில் உள்ள மிகப் பெரிய வணிகக் கடையை வைத்து நடத்துபவர் ஒரு தமிழரே.

முருகன் ஸ்டோர்ஸ், பாலன் ஸ்டோர்ஸ், ஸ்வாமி ஸ்டோர்ஸ், சேகர் ஸ்டோர்ஸ், மோகன் இந்து ஷாப்பிங்சென்டர், சக்தி ஸ்டுடியோ போன்ற தமிழ் இந்துக்கள் பெயருடைய கடைகளை விக்டோரியாவிலும் பிற ஊர்களிலும் பார்க்கலாம்.

ஏர் இந்தியா விமானம் சீசெல்சு வழியாக மொரீசியஸ் செல்வதால் தமிழ் வியாபாரிகள் தமிழகத்தோடு நெருங்கிய தொடர்பை வைத்துக் கொண்டுள்ளனர். பல பொருள்களைத் தமிழகத்திலிருந்து வரவழைத்து விற்பனை செய்கின்றனர். இங்கிலாந்திலிருந்தும், பாரிஸிலிருந்தும் பல அழகு சாதனப் பொருள்களைத் தருவித்து நல்ல இலாபத்திற்கு விற்கின்றனர்.

ஒரு சில தமிழர்கள் கல்வித் துறையிலும், அரசாங்கத்துறையிலும் பணியாற்றுகின்றார்கள். அரசு ஊழியத்தில் தமிழரை மூதாதையராகக் கொண்டவர்கள் ஏராளமாக உள்ளனர். காவல் துறைத் தலைவராக ஒரு தமிழரும், படைப்பிரிவில் ஒரு தமிழரும் உள்ளனர். தொலைக்காட்சி வானொலி, மருத்துவம் ஆகிய துறைகளில் தமிழர் வழி வந்தோர் தமிழ்ப் பெயருடைய முக்கிய பதவிகளை வகிக்கின்றனர்.

தமிழ்மொழி சூழமைவு

ஏறக்குறைய 160 ஆண்டுகள் சீசெல்சு ஆங்கிலேயர்களின் ஆட்சியிலிருந்தது. இந்நாடு பிரெஞ்சு ஆதிக்கத்தின் கீழிருந்தது 40 ஆண்டுகளேயாகும். எனினும் இத்தீவில் பிரெஞ்சு மொழி, பண்பாடு இவற்றின் தாக்கத்தைக் காணலாம். நாட்டின் பெயரும், இந்நாட்டிலுள்ள பல இடப்பெயர்களும் பிரெஞ்சுப் பெயர்களேயாகும். இந்நாட்டு மக்கள் பெருவாரியாகப் பேசும் கிரியோல் (*Creole*) மொழி பிரெஞ்சுக் கிளை மொழியிலிருந்து உருவானது. ஆங்கிலம் ஆட்சி மொழியாக இருந்த போதிலும் மக்களின் பேச்சு மொழியாக உள்ளது கிரியோல் ஆகும். பிரெஞ்சு மொழி நாட்டின் இரண்டாவது மொழியாக உள்ளது.

தமிழர் முதலில் பிரெஞ்சு மொழியைப் பயன்படுத்தினர். பின்னர் கறுப்பரின் மொழியும் பிரெஞ்சு மொழியும் கலந்த கிரியோல் மொழியைப் பயன்படுத்தினர். தமிழ்ச் சொற்கள் அதுவும வட்டு பாவனைப் பொருட்களின் சொற்களைக் கறிவேப்பிலை, போன்ற சொற்கள் மட்டுமே கிரியோல் மொழிக்குள் புகுந்தன.

தமிழ் மொழி பேசுவோர், எழுதுவோர் எண்ணிக்கை காலப்போக்கில் குறைந்து வந்தது. இறுதியில் தமிழையே மறந்தனர். தமிழ்ப் பள்ளிகள் சீசெல்சு நாட்டில் கிடையாது. ஆனால் 1984ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட இந்துக்கோவில் சங்கம் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் காலை 9 லிருந்து 11 மணிவரை தமிழ் மொழிப் பாட வகுப்புகளை நடத்துகின்றது.

தமிழை மறக்காத சில தமிழர்களும் இருக்கின்றனர். சீசெல்சு நாட்டைச் சேர்ந்த மு.நடேசன் என்பார் சீசெல்சு தீவைப்பற்றித் தமிழில் பின்வரும் பாடலை எழுதியுள்ளார்.

எங்கள் சீசெல்சு நாடு
அலைகடல் பொங்கி வரும் நாடு
அசையாத குன்றம் நிறை நாடு
எங்கும் பசுமைவளர் காடுடைய நாடு
எங்கள் சீசெல்சு நாடு
சுற்றுலாப் பயணிகள் சுற்றிவரும் நாடு
சுத்தம் மிக்க நாடு
எங்கும் மலர் மணக்கும் நாடு
எங்கள் சீசெல்சு நாடு
பன்னாட்டு மக்களும் பகிர்ந்துள்ள நாடு
பலமொழி பேசியே பாடிவரும் நாடு
அப்படிக் கலந்து வாழ்ந்துவரும் நாடு
எங்கள் சீசெல்சு நாடு.

சீசெல்சு நாட்டைச் சேர்ந்த பழனி என்பார் மதுரை மீனாட்சித் தாயைப் பற்றிய கவிதையில் பின்வருமாறு கூறுகின்றார்.

உன் சிந்தனையிருந்தாலே சிறப்பெல்லாம் வந்தமையும்
நின் துணைவேண்டும், உனை எந்நாளும் மறவாத
சிந்தனை வேண்டும்; சிங்கார வல்லியே!
அருள்தருவாய்! அங்கயற் கண்ணம்மையே

அதேபோல ஜோதி மாணிக்கவாசகம் என்பார் எழுதிய கவிதையின் ஒரு பகுதி:

வந்துதித்த மழலை மொட்டின் இனிமையும்
நின்றுதித்த மலர்ந்த மலரின் வளமையும்
வென்றுதித்த மலர்க் கொம்பின் செழுமையும்
பிறகுதித்த மணம்கமழும் தோப்பின் அழகையும் - கொண்டிட்ட
என்றோ உதித்த மாட்சிமை பெற்றதாயே! தமிழ்த்தாயே!
இன்றுதித்த சிறுவன் வணங்குகின்றேன் - காத்தருள்வாய் இவ் வையத்தை!

செய்தி பரவல் தொடர்புச் சாதனங்கள்

சீசெல்சு இந்துக் கோவில் சங்கத்தின் உறுப்பினர்களின் பண்பாட்டு நிகழ்ச்சி நிரல்கள் (Cultural Programme) சீசெல்சின் தொலைக்காட்சியில் காண்பிக்கப்படுகின்றது. ஆனால் தமிழ்க்கலைகள் வாழவோ, வளரவோ எந்தவித முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை.

தமிழ் ஒளிப்பட மகிழ்நர் குழாம் (Tamil Video Club).P.O.Box 88, விக்டோரியா, சீசெல்சு பின்வரும் விளம்பரத்தைக் கொடுத்திருப்பதைப் பார்த்தேன்: "எங்களிடம் 200க்கு மேலான தமிழ்ப் படங்கள் டேப்புகளில் வாடகைக்குக் கிடைக்கும்" ஆகையால் வீடியோ உலகில் மேல் ஓங்கி நிற்கும் கலை நிறுவனம் மூலம் தமிழ்ப்படம் பார்க்க வசதி செய்யப்பட்டிருக்கின்றது.

சீசெல்சுத் தமிழர்களில் பெரும்பான்மையோர் இந்தியாவுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு வாழ்கின்றனர். இத்தொடர்பு 1971ஆம் ஆண்டிற்குப் பிறகு வலுவடைந்துள்ளது எனக் கூறலாம். 1985ஆம் ஆண்டு நவம்பர் 2ஆம் நாள் சீசெல்சில் திருமதி.ராஜ்ஸ்ரீயின் பரதநாட்டிய நிகழ்ச்சி நடந்தது. இந்தியாவின் முன்னணிக் கலைஞராக இருக்கும் இவரை சீசெல்சு இந்துக்கோவில் சங்கம் வரவழைத்தது.

மொரீசியஸ்

'சிறிய இந்தியா' என மொரீசியஸ் அழைக்கப்பட்ட போதிலும். இந்துப் பெருங்கடலில் வீற்றிருக்கும் இத்தீவைப்பற்றி எல்லாத் தமிழர்களுக்கும் நன்றாகத் தெரியும் என்று கூற முடியாது. தென்மேற்கு இந்துப் பெருங்கடலில் இருக்கும் இச்சிறுதீவு, இந்தியாவிலிருந்து 4,000 கிலோ மீட்டர் தூரத்தில், பம்பாயிலிருந்து 5000 கிலோ மீட்டர் தூரத்தில், ஆப்பிரிக்கக் கண்டத்திலிருந்து 1800 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. இத்தீவுக்கு அருகே 300 கிலோ மீட்டர் தூரத்தில் மலகாசே குடியரசு (Malagasy Republic) இருக்கிறது. ஒன்பது மாவட்டங்களை உடைய இத்தீவின் தலை நகரம் போர்ட்லூயி ஆகும்.

தமிழ்நாடு - மொரீசியஸ் உறவு:

மாஸ்கரனீஸ்:-

2,100 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு உள்ள மொரீசியஸ், அதன் 100 மைல் தொலைவிலுள்ள 2512 சதுர கிலோ மீட்டர் அளவுள்ள ரீயூனியன், 110 சதுர கிலோமீட்டர் அளவுள்ள ரோட்ரிக்ஸ் முதலிய தீவுகளை இணைத்து மாஸ்கரனீஸ் (Mascarenes) என்று அழைத்து வந்தார்கள். பதினாறாம் நூற்றாண்டில் போர்ச்சுக்கீசியர்கள் இத்தீவுகளுக்கு வந்து பார்த்த போது மக்கள் தங்கி வாழும் குடியிருப்புப பகுதிகளாக இத்தீவுகள் இல்லை. முதன் முதலாக 17ஆம் நூற்றாண்டில் டச்சுக் காரர்களும், பிரெஞ்சுக்காரர்களும் வந்து இப்பகுதிகளில் குடியேறினார்கள். 1710ஆம் ஆண்டில் டச்சுக்காரர்கள் சென்றவுடன் பிரஞ்சுக்காரர்கள் நூறு ஆண்டுகளுக்கு மேல் மாஸ்கரனீஸ் தீவுகளிலும்சிசெல்சு(Seychelles), சாகோஸ் தீவுக் கூட்டங்களிலும் ஆட்சி செய்து வந்தார்கள். 1810ஆம் ஆண்டில் போரில் பிரான்சு தோல்வியடைந்தவுடன் ரீயூனியனைத் தவிர மற்ற தீவுகளைப் பிரான்சு பிரிட்டனுக்குக் கொடுத்தது. ஆகையால் மொரீசியஸ் தீவும், மடகாஸ்கருக்குக் கிழக்கே இருக்கும் மற்ற தீவுகளும் பிரிட்டனின் ஆட்சியின் கீழ் 1810இல் வந்தன.

மொரீசியஸ் தீவின் முன்னேற்றத்திற்காக டச்சுக்காரர்கள் பாடுபடவில்லை. முழு மூச்சுடன் இத்தீவின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட நாடு பிரஞ்சு நாடாகும்.

முனீந்திரநாத் வர்மா என்பார் பின்வருமாறு கூறுகிறார்: "போர்ச்சுக்கீசியர்கள்" வருவதற்கு நெடுங்காலத்திற்கு முன்பே இந்தியர்களுக்கு இந்நாட்டைத் (மொரீசியஸ்) தெரியும். கிறித்து பிறப்பதற்கு முன்பே இந்துப்பெருங்கடலில் சென்ற இந்திய வாணிகர்கள் இத்தீவுக்கும் சென்றார்கள். மடகாஸ்கருக்குச் செல்லும் போது இந்தியர்கள் இந்நாட்டிற்கும் வந்தார்கள்."

பிரெஞ்சு ஆட்சி:

மொரீசியஸ் பிரஞ்சுக் குடியேற்றப்பகுதியாகப் பதினெட்டாம் நூற்றாண்டில் மாறியவுடன் ரீயூனியன் (அல்லது பூர்பானி) தீவில் குடியேறியிருந்த சில இந்தியர்களை மொரீசியஸ் தீவிற்கு அழைத்து வந்தார்கள். இந்தியர்களின் வேலைத் திறத்தைப் பார்த்து வியந்த பிரெஞ்சுக்காரர்கள் மேலும் பல இந்தியர்களை 1729ஆம் ஆண்டில் அழைத்து வந்தனர்.

இச்சமயத்தில் புதுச்சேரியிலும், சந்திர நாகூரிலும் பிரெஞ்சுச் செல்வாக்கு மிகுதியாக இருந்தது. 1765ஆம் ஆண்டளவில் இச்செல்வாக்கு தழைத்தோங்கியது. ஆகையால், இப்பகுதியிலிருந்து பணியாட்களை அழைத்துக் கொண்டு போவது கடினமாக இல்லை. தனித்திறம் காட்டுகின்ற தொழிலாளர்களையும் (*Skilled labourers*) கைவினைஞர்களையும் (*artisans*) இப்பகுதிகளிலிருந்து மொரீசியஸ் நாட்டிற்குப் பிரெஞ்சுக்காரர்கள் அழைத்துச் சென்றார்கள். குறிப்பாக 1731ஆம் ஆண்டிலிருந்து தமிழர்கள் இப்பகுதிகளிலிருந்து மொரீசியஸ் தீவுக்குச் சென்று குடியேறத் தொடங்கினார்கள்.

ஆப்பிரிக்கா, மலகாசே அடிமைகளும் மொரீசியஸிற்குக் கொண்டு வரப்பட்டனர். இவர்கள் பொதுவாகக் கைகளை மட்டும் நம்பி வாழ்ந்த பணியாட்கள். ஆனால் பிரெஞ்சுக்காரர்களுக்குத் தச்சர்கள், கொத்தன்கள், கருமான்கள், நிலைப் பெட்டி செய்பவர்கள் போன்ற திறமையான கைவினைஞர்கள் தேவையாக இருந்தது. இச்சமயத்தில் தான் தமிழர்கள் மொரீசியஸில் இருக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கு உதவி செய்தனர். தமிழர்கள் செய்த பேருதவியின் காரணமாகத்தான் ஒன்றுமில்லாத மொரீசியஸ் தீவை விட்டு டச்சுக்காரர்களைப் போல பிரெஞ்சுகாரர்கள் வெளியேறவில்லை என்று கூறலாம். குறிப்பாக 1735ஆம் ஆண்டில் லேபர்டொநேஸ் (*Labour donnais*) என்பார் ஆளுநராகப் பதவியேற்ற பிறகு இந்தியக் கூலிகளும், மற்ற இந்தியர்களும் மிகுதியாக மொரீசியஸ் நாட்டிற்கு வரத் தொடங்கினார்கள். பொறியாளர்கள், பொற்கொல்லர்கள், வாணிபர்கள், மேசைத் தொழிலாளர்கள், தகவாலர்கள், தொழில் நுட்ப வல்லுநர்கள், பணியாளர்கள், பண்ணையாட்கள் வந்து குடியேறினார்கள்.

தமிழர்கள் உதவியுடன் சாலைகள், வீடுகள், கூட்டுக் குடியிருப்புகள், கோட்டைகள் கட்டப்பட்டன. துறைமுக அபிவிருத்தியிலும், கப்பல்கட்டும் தொழிலிலும் தமிழர்கள் பங்கேற்றனர். இன்றும் போர்ட் லூயி துறைமுகத்தில் அன்று தமிழர்கள் கட்டிய கட்டடங்களைக் காணலாம். கரும்புத் தோட்டங்கள், பருத்திச் செடிகள், அவுரிச் செடிகள் (*Indigo*) வளர்ச்சியடைவதற்காகப் பணிபுரிந்தனர். கரும்பு ஆலைகளும் தோன்றி வளர்ச்சியடைந்தன.

கடைசி பிரெஞ்சு ஆளுநர் சார்லஸ் டிகேன் (*Charles Decaen 1803-1810*) காலத்திலும் பல இந்தியர்கள், குறிப்பாகச் சில செல்வந்தர்களும் வந்து மொரீசியசில் குடியேறினர். சிலர் அரசு அலுவலகப் பணியாளர்களாக நிர்வாகப் பொறுப்பு ஏற்றுப் பணியாற்றினர். தவிர, பல தொழில் ஆலைகளை அவர்கள் நடத்தினார்கள்.

ஆங்கிலேய ஆட்சி:

பொதுவாக, தமிழ் நாட்டிலிருந்து வந்த தமிழர்கள் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, காரைக்கால், புதுச்சேரி (புதுவை) முதலிய பகுதிகளிலிருந்து வந்தனர். பிரெஞ்சு மக்கள் ஆட்சி புரிந்த காலத்தில் அவர்கள் வணிகராகவும், தச்சர், கொத்தராகவும், சிப்பாய்களாகவும், கைத்திறன் படைத்த வேலையாட்களாகவும் மொரீசியஸ் தீவிற்குச் சென்றார்கள். தமிழ்நாடு, மகராஷ்டிரா பகுதிகளைவிட வங்காளத்திலிருந்து (கல்கத்தா) மிகுதியான இந்தியர்கள் வந்து குடியேறினர். 1861ஆம் ஆண்டில் கல்கத்தா துறைமுகம் வழியாக 99,670 பேர்களும், சென்னைத் துறைமுகத்திலிருந்து 56,202 பேர்களும், பம்பாய்த் துறைமுகத்திலிருந்து 15,863 பேர்களும் மொரீசியசிற்கு வந்தனர். 1881ஆம் ஆண்டளவில் கல்கத்தா துறை முகத்திலிருந்து 83,120 பேர்களும், சென்னைத் துறைமுகத்திலிருந்து 39,041 பேர்களும், பம்பாய்த் துறைமுகத்திலிருந்து 7,440 பேர்களும் வந்தனர். பொதுவாகப் பண்ணைகளில் பணிசெய்வதற்காக இவர்கள் வந்தனர். தவிர 1862-1867 ஆண்டுகளுக்கு இடையே சுமார் 1000 தமிழர்கள் வாணிபம் செய்வதற்காகவும், விவசாயம் சம்பந்தமாகவும் சுதந்திர மனிதர்களாக வந்தனர். பொதுவாக இவர்கள் செங்கல்பட்டு, வடஆர்க்காடு, கோயமுத்தூர், தென் ஆர்க்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களிலிருந்து வந்தனர். "அடிமைமுறை ஒழிப்பு, சமுதாயத்தில் ஒடுக்கப்படல், நிலப் பிரபுக்கள் மற்றும் வட்டிக்கடைக்காரர்களின் பொருளாதாரச் சுரண்டல், வாணிபம் மற்றும் தொழில்களில் வீழ்ச்சி, பஞ்சம் ஆகியவை குடிபெயர்வுக்கு முக்கியக் காரணிகளாகும்" (சு. இராசாராம்).

பிரெஞ்சு ஆட்சியின் போது போர்ட்லூயி மூன்று இனப் பிரிவினர்களிடையே பிரிக்கப்பட்டது. கிழக்குப் பகுதியில் இந்தியர்கள் வாழ்ந்தார்கள். இப்பகுதியை கேம்ப்டெஸ் மலபார்ஸ்' (Camp des Malabars) என்று அழைத்தார்கள். நடுப்பகுதியில் வெள்ளையர்கள் வாழ்ந்தார்கள். அரசாங்கப்பணி அலுவலர்கள் அதிகரித்ததாலும், இந்தியர் தனியார் நிறுவனங்கள் மிகுதியானதாலும், போர்ட்லூயின் அமைப்பு மாறத் தொடங்கியது. பல கடைகள் திறக்கப்பட்டன. ஒவ்வொரு தெருவிலும் கறிகாய் விற்பவர்களும், பண்டங்களைக் கூவி விற்பவர்களும், (பிட்டு விற்பவர்களும்) அலையத் தொடங்கினார்கள். இந்தியர்கள் அலுவலகங்களிலும் பணிபுரியத் தொடங்கினர். பொதுவாக, பல தோட்ட இந்தியப் பணியாளர்கள் கிறித்துவ சமுதாயத்தோடு ஒரு தரம் கலந்து வாழத் தொடங்கினர். இந்தியாவிலிருந்து ஆங்கிலேயர்களுக்கெதிராக நான்கு முறை மொரீசியஸ் இந்தியர்கள் பிரெஞ்சு போரில் பயன்படுத்தப்பட்டனர்.

ஆங்கிலேயர்கள் 1810ஆம் ஆண்டில் பிரெஞ்சு மொரீசியசைப் படையெடுத்தபோது இந்தியப் படைவீரர்களும் குறிப்பாகத் தமிழ்ப்படை வீரர்களும் சென்றார்கள். ஆங்கிலேயர்களின் வெற்றிக்கு ஆகவே தமிழர்களும் உறுதுணையாக இருந்தனர் எனக் கூறலாம். 1810ஆம் ஆண்டு ஆங்கிலேயர் மொரீசியஸ் தீவைக் கைப்பற்றியதும் மொரீசியஸ் குடிமக்கள் கையொப்பமிட்ட விசுவாசப் பத்திரம் சவரிமுத்து, சின்னதம்பி, துரைச்சாமி என்ற பலர் தமிழிலேயே கையொப்பமிட்டிருப்பதைக் கண்டேன் எனத் தனி நாயக அடிகளார் கூறுகின்றார். மொரீசியசில் ஆங்கிலேயர்களின் ஆட்சி தொடங்கியவுடன் கிட்டதட்ட 800 இந்திய தண்டக் கைதிகள் மொரீசியசிற்குக் கொண்டு வரப்பட்டனர். பட்டு ஆடை நெய்வதற்கும், சாலைகள் அமைப்பதற்கும் அவர்கள்

பயன்படுத்தப்பட்டனர். இக்கைதிகள் கௌரவத்துடனும், சுய மரியாதையுடனும் நடந்து கொண்டார்கள் எனக் கூறப்படுகிறது.

பிரெஞ்சு ஆட்சியின் தொடக்கத்தின் போது வேளாண்மைத்துறைக்கு முதன்மை அளிக்கப்பட்டது. பிற்காலப் பிரெஞ்சு ஆட்சியின் போது வாணிகத்திற்கு முதன்மை அளிக்கப்பட்டது. ஆனால் 1810ஆம் ஆண்டு ஆங்கிலேயர்கள் மொரீசியஸைக் கைப்பற்றியவுடன் கரும்புத் தோட்டங்களின் வளர்ச்சி அதிகரித்தது. ஆகையால் மீண்டும் கூலியாட்கள் இந்தியாவிலிருந்து மொரீசியசிற்கு அழைத்து வரப்பட்டார்கள். இவர்களுடன் தமிழ்க் கூலியாட்களும் வந்தார்கள்.

தொழில் முறை கட்டுப்பாடு ஒப்பந்தம்:

1810ஆம் ஆண்டில் ஆங்கில ஆதிக்கம் தொடங்கிய பின்னர் தமிழர்கள் மேலும் அதிகமாகக் குடியேறலானார்கள். தொழில் முறைக் கட்டுப்பாடு ஒப்பந்தம் மூலம் சென்னை, கல்கத்தா, பம்பாய் வாணிபச் சங்கங்கள் (Chambers of Commerce) தொழிலாளர்களைத் தேர்ந்தெடுத்து மொரீசியசிற்கு அனுப்பின. இச்சமயத்தில் பல தொழிலாளர்கள் ஏமாற்றப்பட்டனர். ஒப்பந்தங்கள் மீறப்பட்டன. ஒப்பந்தத்திற்கு மீறிய பணிகளில் அவர்கள் பயன்படுத்தப்பட்டனர். சில சமயம் ஆறுமாதம் வரை ஒரு சென்ட் பணம் கூட கொடுக்கப்படவில்லை. இம்மாதிரியான அடிமைச் சூழ்நிலை உருவாகியதால் இந்தியர்கள் இந்தியாவில் இம்முறையைக் கண்டனம் செய்தனர். ஆகையால் 1839ஆம் ஆண்டில் தொழிலாளர்கள் மொரீசியசிற்கு அனுப்பப்படுவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. இது பண்ணை முதலாளிகளைப் பாதித்தது. மீண்டும் சில சலுகைகளுடன் 1840ஆம் ஆண்டிலிருந்து இந்தியர்கள் மொரீசியசிற்கு அனுப்பப்பட்டனர். 1860ஆம் ஆண்டில் வாணிபத்திலும், ஆக்கத் தொழில்களிலும் மொரீசியசில் 24,048 இந்தியர்கள் ஈடுபட்டிருந்தனர், வேளாண்மைத் துறையில் 53,243 இந்தியர்கள் இருந்தனர்.

பொதுவாக, மொரீசியசில் 1861-1871ஆம் ஆண்டளவில் இந்தியர்கள், தமிழர்கள் உட்பட செய்த பணிகள் பின்வருமாறு: கருமான்கள், வண்டி ஓட்டுபவர், வண்டி செய்பவர்கள், முடிவெட்டுபவர்கள், பண்டங்களைக் கூவி விற்பவர்கள், கொற்றன்கள், கொத்தன்கள், பாய் நெய்பவர்கள், சுருள் வில் அமைவுற்ற மெத்தை செய்பவர்கள், சேணம், குதிரைக்கயனை செய்பவர்கள், கடை வைத்திருப்பவர்கள், வண்டிக்கம்மியர்கள், ஈயத்தொழிலாளர்கள், புகையிலை வணிகர்கள், பொற்கொல்லர்கள், தொழிலாளர்கள், ஆணைத்தலைவர்கள் (Sirdar), விறகு வெட்டிகள், தோட்டக்காரர்கள், கரிவிளக்கு செய்பவர்கள், தகவலாளர்கள், படகு ஓட்டுபவர்கள், காவலாள்கள்.

1860ஆம் ஆண்டு வரை பொதுவாக இந்தியர்கள், தமிழர்கள் உட்பட கரும்புத் தோட்டங்களில் கூடாரங்கள் போட்டுக் கொண்டு வாழ்ந்து வந்தார்கள். ஆனால் 1860க்குப் பிறகு கொஞ்சம் கொஞ்சமாக நாட்டுப்புறங்களுக்குச் சென்று வாழத் தொடங்கினர். இம்மாதிரியான குடிப்பெயர்ப்பு திட்டமிட்டு நடக்கவில்லை, தற்செயலாக நடந்தது.

1922ஆம் ஆண்டு சட்டம்:

1922ஆம் ஆண்டு வரை இந்தியப் பணியாளர்கள், தமிழர்கள் உட்பட, பல உரிமைகள் பறிக்கப்பட்டு தோட்டங்களில் பணி செய்து வந்தனர். 1922ஆம் ஆண்டுச் சட்டம் இந்நிலையை ஓரளவு சீரமைத்தது. இச்சட்டப்படி ஒவ்வொரு தோட்டத் தொழிலாளருக்கும் மாதம் ரூ.7ம், நாள் ஒன்றுக்கு 750 கிராம் அரிசியும், வாரம் ஒருமுறை 250 கிராம் பருப்பும், வாரம் ஒருமுறை 257 கிராம் உப்பு மீனும், வாரம் ஒரு முறை 125 கிராம் நெய் அல்லது எண்ணையும், வாரம் ஒருமுறை 125 கிராம் உப்பும் அளிக்கப்பட்டது. ஒரு மாதத் தவணை கொடுத்து விட்டு வேலையிலிருந்து விலகலாம் தொடர்ந்து கரும்புத் தோட்டங்களில் உள்ள கூடாரங்களில் வாழ வேண்டும் எனக் கட்டாயப்படுத்தக் கூடாது. இம்மாதிரியாகப் பல சலுகைகள் பணியாளர்களுக்கு அளிக்கப்பட்டன.

இந்தியர்களின் நிலை:

1910ஆம் ஆண்டளவில் குடியேறிய இந்தியர்களும், அவர்களுடைய சந்ததிகளுக்கும் 47,888 ஏக்கர் நிலம், அதாவது மொரீசியசிலுள்ள மொத்த நிலத்தில் 45.9 விழுக்காடு நிலம் சொந்தமாக இருந்தது. கரும்புத் தோட்டங்களில் மூன்றில் ஒரு பங்கு இந்தியர் வசம் இருந்தது; இதில் 80 விழுக்காடு விவசாயி சொந்தக்காரர்களிடமிருந்தது. தவிர அதிகப் பணமும் சேமித்திருந்தார்கள்; இந்தியாவிலுள்ள தங்கள் உறவினர்களுக்குப் பணம் அனுப்பிக் கொண்டிருந்தார்கள். மொரீசியசில் அதிக வரியும் செலுத்திக் கொண்டிருந்தார்கள்; தவிர, கடைகள், வாகனங்களின் சொந்தக்காரர்களாக இருந்தார்கள். மேலும், இந்தியக் குழந்தைகள் தொடக்கப் பள்ளிகளுக்கும், உயர் பள்ளிகளுக்கும் சென்று கொண்டிருந்தார்கள்.

அரசியல்-இந்தியர்கள்:

1921ஆம் ஆண்டிலிருந்து தேர்தலிலும் நிற்கத் தொடங்கி விட்டார்கள். மற்ற இனத்தினரோடு, குறிப்பாக கலரெட் அறிவாளிகளுடன் (Coloured intellectuals) இந்தியர்கள் இணைந்து தொழிற்கட்சி (Labour Party) ஒன்றைத் தொடங்கினார்கள். 1936ஆம் ஆண்டளவில் இக்கட்சி வலுவடைந்த நிலையில் இருந்தது. கரும்புத் தோட்டங்களில் வேலை நிறுத்தம் செய்ய, தொழிற் கட்சி ஆதரவு தந்தது. தொழிற்கட்சியில் இந்து பெரும்பான்மை இருக்கின்றது. இவர்களுக்கு 'மொரீசியஸ் முசுலிம்களின் ஆதரவும் இருக்கின்றது. 1948 தேர்தலில் தொழிற்கட்சிப் பதவிக்கு வந்தது. 1958ஆம் ஆண்டில் எல்லோருக்கும் வாக்குரிமை அளிக்கப்பட்டது. தொடர்ந்து பிரிட்டிஷ் அரசின் ஆட்சியின் கீழ்தான் இருந்தது. ஆனால் 1968 மார்ச்சு 12ம் நாள் மொரீசியஸ் நாட்டிற்குச் சுதந்திரம் கிடைத்தது. 150 ஆண்டு ஆட்சிக்கு பிறகு பிரிட்டிஷ் பேரரசின் ஆட்சி முடிவடைந்தது.

அரசியல்: தமிழர்கள் பங்கு

அரசாங்க முக்கியத் துறைகளில் தமிழர் ஆளுமை மிகுந்துள்ளது. தமிழை இரண்டாம் மொழியாகப் பயன்படுத்துகிறார்கள். பல ஆண்டுகளாகப் பிரதமராக ராம்கூலம் எனும் மொரீசியஸ் இந்திய இந்து பணியாற்றினார். இன்று பிரதமராகப்

பணியாற்றுபவரும் அனிருத்ஜகனாத் எனும் இந்தியரே. வீராசாமி ரிங்காடு எனும் மொரீசியஸ் தமிழர் இன்று மொரீசியஸ் ஆளுநராக இருக்கின்றார். கதிரேசன் பிள்ளை என்பார் தொழில்துறை அமைச்சராகப் பணிபுரிகின்றார். கல்வி அமைச்சராக ஆறுமுகம் பரசுராமன் என்பார் பணி புரிகின்றார்கள். அ. புட்பரதம் என்பார் தமிழ்க் கல்வித் துறையின் தலைமைத் துறையில் உள்ளவர். மொரீசியஸ் தொழிற்கட்சியின் செகரட்டரி-ஜெனரலாக (Secretary-General) விஜய்வெங்கடசாமி என்பார் இருக்கின்றார்.

ஆகையால் மொரீசியஸை உருவாக்குவதில் தமிழர்களுக்குச் சிறப்பான பங்கு உண்டு என்பதில் ஐயமில்லை. கடினமாக உழைத்துச் செல்வத்தைச் சேமித்தார்கள். இவர்களின் உழைப்பின் மூலம் வெள்ளையர்களுக்குச் செல்வம் குவிந்தது. இன்று நாம் மொரீசியஸில் பார்க்கும் பசுமை நிறமுள்ள வயல்கள், பொங்கு வளம் உள்ள பருவகாலங்கள், ஓடிக்கொண்டிருக்கும் பேருந்துகள், கார்கள், அழகாக இருக்கும் சாலைகள், நடைபெற்றுக் கொண்டிருக்கும் சர்க்கரை ஆலைகள், கப்பலில் சரக்கேற்றுவது இறக்குவது மட்டுமன்று எல்லாத் துறைகளிலுமே-தமிழர்களின் கடின உழைப்பின் சிறப்பான பங்கு உண்டு.

மக்கள் தொகை:

இந்தியர்களுக்குள் மிகுதியாக மொரீசியசில் இருப்பவர்கள் பீகார் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள். அடுத்ததாக இந்தியன் முசுலீம்கள்; தமிழர்கள் மூன்றாவது இடத்தைப் பிடித்திருக்கின்றனர். அடுத்ததாகத் தெலுங்கர்கள், மராத்தியர்கள், குஜராத்திகள் முறைப்படியே வருகின்றனர். தமிழர்கள், அதிகமாக வாழும் பகுதி தலைநகரமான போர்ட்லூயி, வடக்கு, தென்கிழக்கு மாவட்டங்களாகும். தஞ்சாவூர் வீதி, திருச்சிராப்பள்ளி வீதி என்று போர்ட் லூயிசில் இருக்கும் வீதிகளில் ஒரு காலத்தில் தமிழ் பேசும் மக்களே வாழ்ந்தனர். ஆனால் இன்று தமிழர் பலர் அந்த இடங்களை இழந்து விட்டனர். இந்தியர்களைத்தவிர கிரியோல்களும், வெள்ளையர்களும், சீனர்களும், ஆப்பிரிக்கர்களும் மொரீசியசில் வாழ்கின்றனர். இந்தியன்-ஆப்பிரிக்கர்கள், ஐரோப்பியர்-ஆப்பிரிக்கர்கள், இந்தியர்-ஐரோப்பியர், சீனர்-ஆப்பிரிக்கர், சீனர்-கிரியோல்கள் போன்ற பல கலப்புத் திருமணங்களில் பிறந்த இனத்தினரே கிரியோல்கள். இவர்கள் பேசும்மொழி கிரியோல் மொழியாகும். மொரீசியசின் மொத்த மக்கள் தொகையில் (1983ஆம் ஆண்டு புள்ளிவிவரப்படி) ஐந்தில் ஒரு பங்கு கிரியோல்கள் இருக்கின்றார்கள் (380,377) மொத்த மக்கள் தொகையில் சுமார் பத்தில் ஒரு பங்கு தமிழர்கள் இருக்கின்றனர். குஜராத்தியை மூதாதையர் மொழியாகப் பேசுபவர்களின் எண்ணிக்கை 1707, இந்தி பேசுவோர் 10இல் மூன்று பங்கு இருக்கின்றனர் (2,08,450) உருதுபேசுவோர் 53,347. 1972ஆம் ஆண்டளவிலே இருந்த மொத்தத் தமிழர்கள் 70,000 என அ. புட்பரதம் கூறுகின்றார். 1983ஆம் ஆண்டு தமிழை மூதாதையர் மொழி எனக்கூறிக் கொண்டவர்கள் 66,154; தெலுங்கு மூதாதையர் மொழியாகப் பேசுபவர்கள் 25,619 மொரீசியஸ் மொத்த மக்கள் தொகையில் இந்துக்கள் 52 விழுக்காடு, முசுலீம்கள் 20 விழுக்காடு இருக்கின்றனர். (1983இல் 5,07, 985 இந்துக்கள்). ஆகையால் மொத்தம் 75 விழுக்காடு மக்கள் இந்திய மரபினர் (1983இல் 6,64,488) மொரீசியசின் மொத்த மக்கள் தொகை 8,50,000 (1974) 1983 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி 9,66,863 ஆகும். மொரீசியஸ் இந்தியத் தூதுவரகத் தகவல்படி இன்று 1,00,000 தமிழர்கள் இருக்கின்றனர்.

தமிழ்க்கல்வி:

1810ஆம் ஆண்டில் ஆங்கிலேய ஆட்சி தொடங்கிய அந்நாளில் இந்தியச் சிறுவர்களுக்கு எனத் தனியாகப் பள்ளிக்கூடங்கள் இருந்தன. முதன் முதலில் தன்னார்வம் மிக்க மூன்று ஆசிரியர்கள் திண்ணைப்பள்ளிகளில் தமிழ் கற்பித்தனர். மாலை நேரங்களில் தமிழ் கற்பித்தனர். 1865ஆம் ஆண்டளவிலே 26 தமிழ்ப் பள்ளிகள் இருந்தன. 1872ஆம் ஆண்டில் பல தமிழ் நூல்கள் இங்கு வரவழைக்கப்பட்டன.

ஆனாலும் க. இராசாராம் பின்வரும் கருத்தை அளிக்கின்றார். "தோட்ட உரிமையாளர்கள் அனைவரும் ஐரோப்பியர்களாக இருந்ததாலும், ஆப்பிரிக்க அடிமைகளோடு வேலை செய்யவேண்டியிருந்ததாலும் அடிமைகள் பேசி வந்த-ஐரோப்பியர்களுக்குப் புரிந்த கிரியோல் மொழியை இவர்கள் கற்க வேண்டியவர்களானார்கள். தமிழ் மொழியின் பயன்பாடு குறைந்தது. இருந்த போதிலும் முதல் தலைமுறையினர் பெரும்பாலும் தமிழைப் பயன்படுத்தினர். ஆனால் இரண்டாம் தலைமுறையினரிடம் தமிழ் முதல் இடத்தையும் கிரியோல் இரண்டாவது இடத்தையும் பெற்றது. அநேகமாக எல்லாச் சூழ்நிலைகளிலும் கிரியோல் மொழியைப் பயன்படுத்தினர். மிகக் குறைவாகக் குடும்பச் சூழ்நிலைகளில் அவ்வப்போது தமிழைப் பயன்படுத்தினர். நான்காம் தலைமுறையினரிடம் கிரியோல் மட்டுமே இடம் பெற்றது. தாய் மொழியாகிய தமிழை முழுவதுமாக இவர்கள் மறந்தனர். குடும்பச் சூழ்நிலையும் இதற்குச் சாதகமாக அமைந்திருந்தது. ஆங்கில ஆதிக்கத்தில் தமிழ் எங்கே மதிக்கப்படப் போகிறது என்று தமிழர்களுக்கு ஏற்பட்ட விரக்தியும் தமிழ் மொழி இழப்புக்கு முக்கியக் காரணியாகும். மேலும், பொருளாதார நிலையில் முன்னேறத் துடித்துக் கொண்டிருந்த அக்காலத் தமிழினம் பிரெஞ்சு மொழியையோ ஆங்கில மொழியையோ கற்றால் மட்டும் தான் வாழ்க்கையில் உயர முடியும் என நினைத்தனர். அது மட்டுமன்றிப் பள்ளிக் கூடங்களில் தமிழ் கற்கும் வாய்ப்பு இல்லை. இக்காரணங்களால் தமிழ்க் கல்வி தமிழர்களாலேயே புறக்கணிக்கப்பட்டது. இருந்தாலும் 'வாத்தியார்கள்' என்று அழைக்கப்பட்ட தமிழ் ஆசிரியர்கள் ஆங்காங்கே திண்ணைப் பள்ளிகளில் தமிழ்க் குழந்தைகளுக்குத் தமிழ் மொழியைக் கற்பித்து வந்தனர்". "ஆனால் வீட்டிலும் புறச்சூழ் நிலையிலும் கிரியோல் மொழியையே பயன்படுத்துகின்றனர். தாய்மொழி போல் இவர்களிடையே இன்று வழங்குவது கிரியோல்தான்."

'அண்மைக் காலம் வரை இவர்களுக்குத் தமிழ் மொழி உணர்ச்சிகூட இல்லாமல் இருந்தது. மேலும் அண்மைக் காலம் வரை தங்களை மதராஸ் (*Madras*) என அழைத்துக் கொண்டார்கள். 'தமுள்' தமிழன் என்னும் சொல்லுக்கு இன்று மதிப்பு கிடையாது' என அ. புட்பரதம் கூறுகின்றார்.

விடுதலைக்குப் பின்னர் கல்வித் திட்டத்தில் தமிழ் இடம் பெற்றது. தமிழ் கற்க விரும்பிய பள்ளிக் குழந்தைகளுக்குத் தமிழ் கற்பிக்க தகுந்த ஆசிரியர்கள் இல்லை. ஓரளவுத் தமிழ் பயின்றவர்களுக்கு முறைமையான ஆசிரியர் பயிற்சி அளிக்கத் தமிழகத்திலிருந்து தமிழாசிரியர்கள் வரவழைக்கப்பட்டனர். மொரீசியஸ் சூழ்நிலைகளுக் கேற்றவாறு தமிழ்ப்பாட நூல்களை இவர்கள் எழுதினர்.

1954இல் 50 மாணவர்கள் தமிழ் பயின்றனர். 1957இல் 1500 குழந்தைகள் பாலர் தமிழ் வாசகம் நூலின்வழித் தமிழ் பயின்றனர். 11பேர் ஆசிரியர் பணிக்குப் பயிற்சி பெற்றனர். 1966இல் முறையான பயிற்சி வகுப்பு தொடங்கப்பட்டது. 1967இல் ஆசிரியர் எண்ணிக்கை 60, தமிழ் கற்பிக்கும் பள்ளிகள் 75, மாணவர்கள் 5,000 ஆக உயர்ந்தனர். 1968ஆம் ஆண்டு மார்ச்சு 12 ஆம் நாள் மொரீசியஸ் நாடு விடுதலை பெறவே, கீழை மொழிகளுக்குப் புத்துயிர் கிட்டியது. புதுப் பூரிப்பு எழுந்தது. அன்னைக் கஸ்தூரி சின்னப்பன் அளிக்கும் புள்ளிவிவரப்படி இன்று ஏறத்தாழ 175 பள்ளிகளில் 218 தமிழ் ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர். 10,000 மாணவர்கள் தமிழ் பயில்கின்றனர். இயல்,இசை,நாடகம் ஆகிய முத்தமிழும் கோயில்களில் பயிற்றுவிக்கப்படுகின்றன. கலைமகள், மஞ்சரி, ஆனந்தவிகடன் முதலிய தமிழ் ஏடுகள் வரவழைக்கப்படுகின்றன. ஆனால் மொரீசியஸில் இருக்கும் இந்தியத் தூதுவரகத் தகவல்படி 200 தொடக்கப்பள்ளிகள் தமிழ் கற்றுத்தருகின்றன. சில நடுநிலைப் பள்ளிகளிலும் தமிழ் கற்பிக்கப்படுகின்றது.

அ. புட்பரதம் கூறும் செய்திகள்: கல்வி அமைச்சின் கீழ் உள்ள தொடக்கப் பள்ளிகளில் முதல் வகுப்பு தொடங்கி 6ஆம் வகுப்பு முடிய முறையான தமிழ்ப் பயிற்சி உண்டு. ஆசிரியர்ப் பயிற்சிக் கல்லூரியில் எல்லா ஆசிரியர்களும் பயிற்சி பெறுகின்றனர். 1979ஆம் ஆண்டு வரை ஓராண்டுப் பயிற்சி அளிக்கப்பட்டது. 1979ஆம் ஆண்டிலிருந்து ஈராண்டுப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. பயிற்சியின்போது அவர்களுக்கு மொழி, இலக்கியம் முறை (Method) கல்விக்கொள்கை, உளவியல் முதலியவை தமிழிலேயே கற்றுத் தரப்படுகின்றன. தேர்வில் வெற்றிபெறுபவர்களுக்குக் கல்வித் துறையே வேலை தருகின்றது. பயிற்சிப் பள்ளியில் தமிழ் கற்றுப் பட்டம் பெற்ற இருவர் பணிபுரிகின்றனர். அனைத்து மொரீசியசுத் தமிழ்த் தேர்வுக் குழு (All Mauritius Tamil Examination Syndicate) என்ற அமைப்பு, தனித்தமிழ்த் தேர்வு நடத்திச் சான்றிதழ்கள் வழங்குகின்றன. தமிழ்மணி என்னும் மூன்றாண்டுப் பட்டத் தேர்வு சென்னை மாணவர் மன்றத்தின் சார்பில் நடத்தப்பெறுகிறது. மேற்படிப்புக்குத் தமிழகத்தில் பயிலவும் அரசு உதவிகள் உண்டு.

தொடக்கப்பள்ளிகளில் மட்டுமன்றி மகாத்மா காந்தி நிறுவனத்திலும் இராயல் கல்லூரியிலும் உயர்நிலையில் தமிழ்க்கல்வி கற்பிக்கப்படுகிறது. மகாத்மா காந்தி நிறுவனம் இந்திய அரசின் ஒத்துழைப்பாலும் உதவியாலும் நிறுவப்பெற்றது. மேலும் இந்திய மொழிகளில் தகுந்த பாடநூல்களை எழுதி வெளியிட ஆவண செய்து வருகிறது. தமிழ்ப் பாடநூல் வரிசை எழுதி முடிக்கப் பெற்று வெளிவந்துவிட்டது. இந்நிறுவன நூல் நிலையத்தில் தமிழ்ப் பகுதியில் கலைமகள், மஞ்சரி, ஆனந்தவிகடன் ஆகிய மூன்று இதழ்களே வரவழைக்கப்படுகின்றன. இந்தி, உருது ஆகிய இந்திய மொழிகளுக்கு அடுத்தாற்போல் தற்போது 8701 மாணவர்கள் தமிழைக் கற்று வருகின்றனர். 219 தமிழாசிரியர்கள் மொரீசியஸ் முழுவதிலும் இம்மொழியைக் கற்பித்து வருகின்றனர். பள்ளித் திட்டத்தில் மட்டுமின்றித் தமிழில் ஆர்வம் உடையோரை ஊக்குவிக்கும் வகையில் மாலைப் பள்ளிக்கூடம் நடத்தப்படுகின்றன. இவற்றுள் மகாத்மா காந்தி நிறுவனம் நடத்திவரும் தமிழ்ச் சான்றிதழ் மற்றும் பட்ட வகுப்புகளில் ஆண்டுக்கு நாற்பது பேர் தமிழ்க் கல்வி பெற்று வருகின்றனர். (கூ இராசாராம்). பள்ளிக் கல்வியில் குழந்தைகள் தம் சூழ்நிலைகளில் கற்றுத் தேர்ந்த எந்த மொழியும் பயிற்று மொழியாகவோ

பாடமொழியாகவோ இல்லை. எடுத்துக்காட்டாக, தமிழ்ச் சூழலில் வளரும் ஒரு குழந்தையின் தாய்மொழியான தமிழோ, புறச் சூழலில் கற்கும் மொழியான கிரியோலோ, போஜ்புரியோ பள்ளிக்கல்வித் திட்டத்தில் இடம் பெறுவதில்லை. பயிற்று மொழியாகவும் பாட மொழியாகவும் அன்னிய மொழிகள் ஆரம்ப நிலையில் இடம் பெறுகின்றன. இன்று பயிற்று மொழியாக ஆங்கிலம் மேல் வகுப்புகளில் உள்ளது (சு. இராசாராம்) மொரீசியஸ் கல்விக் கழகமும் (Mauritius Institite of Education) மொரீசியஸ் வானொலி, தொலைக்காட்சி நிறுவனங்களும் தமிழ்மொழி கற்பிக்கின்றன.

சமயம்-பண்பாடு

மொரீசியஸில் சில காளி கோயில்களும், மாரியம்மன் கோயிலும் இருக்கின்றன. சுமார் 125 இந்துக் கோவில்கள் இருக்கின்றன. பெரும்பாலும் எல்லா ஊர்களிலும் தமிழர்களுக்குக் கோயில் உண்டு. முருகன், சிவன், விநாயகர், மாரியம்மன், கிருஷ்ணா, துர்க்கை, இராமன், வீரமாகாளி அம்மன், முனீஸ்வரர், மதுரைவீரன், கன்னியாகுமரி முதலிய தெய்வங்களும் உருவச் சிலைகளும் உள்ளன. இங்குள்ள சொக்கலிங்கம் மீனாட்சியம்மன் கோயில் பெரியது. இக்கோயில்களில் இரத்தப் பலியிடுவது உண்டு. ஆனால் இக்காலத்தில் இப்பழக்கம் மிகுதியாகக் காணப்படவில்லை. தைப்பூசக் காவடி மிகப் பெரிய திருவிழா ஆகும். இது பொது விடுமுறை நாள். கொடியேற்றத் தொடங்கி விரதம் எடுத்து, காவடி எடுப்பதுண்டு. காவடியோடு மாவிளக்கு, பால் குடம் எடுப்போரும் உண்டு. காவடி எடுக்கும்போது பெண்கள் மஞ்சள் ஆடையும், ஆண்கள் காவி நிற ஆடையும் அணிவார்கள். பெண்டிர், ஆடவர் வாயில் நாக்கில் அலகுகளைக் குத்தியும், ஆடவர் உடம்பெல்லாம் அலகுகளைக் குத்தியும், சிலர் காலில் ஆணி நிறைந்த காலணிகளை அணிந்தும் ஊர்வலமாக நடந்து போவார்கள். வழி நெடுகிலும் முருகக் கடவுள் பாடல்கள், காவடிப்பாடல்கள் “வேல், வேல்” “அரோகரா”-கேட்கலாம். காவடிகள் மிக அழகாக மலர்களால் அலங்கரிக்கப்பட்டு இருக்கும். இவர்கள் தீவிர முருக பக்தர்கள். ஆனாலும் கந்த சஷ்டி, பங்குனி உத்திரம் கொண்டாடுவதில்லை. மேலும், தீ மிதித்தல் என்பது மாரியம்மன் கோயில்களில் பெருமளவில் நடத்தப்படுகிறது. திரௌபதையம்மனுக்கும் தீ மிதி நிகழுவதுண்டு. பாடி நோன்பிருந்து விழா நடத்துவார்களாம். தாலாட்டு, அரிச்சுவடி பாடி, கும்மி கோலாட்டம் அடித்து, கரகாட்டம் ஆடி களிப்பார்களாம். காவடியில்-பூசக்காவடி, சித்திரைக்காவடி, வைகாசிக்காவடி, அம்மன்கோயில்களில் தீமிதி, கஞ்சி, கத்திபூசை முதலிய திருவிழாக்கள் சிறப்பாகத் தமிழ் பண்பாட்டோடு கொண்டாடப்படுகின்றன.

இப்போது தலைநகரில் உள்ள ஒரே கோயில் அருள்மிகு மீனாட்சி-சொக்கலிங்கம் கோயில். இக்கோயிலில் இலங்கை அர்ச்சகர் ஒருவர் இருக்கிறார். ஏனைய கோயில்களில் (125) உள்நாட்டுப் பூசாரிகளே பூசை நடத்துகின்றனர். ஆனால் இந்தப் பூசாரிகளுக்கு மதத்தைப் பற்றியோ அல்லது சடங்குகளைப் பற்றியோ அவ்வளவாகத் தெரியாது. கோயில்கள் கலைக் கூடமாகவும், கோட்டையாகவும் தமிழில் சமயம், நாடகம், இசை விழாக்கள் நடக்கும் இடங்களாகவும் இருந்தன.

மற்றொரு முக்கிய விழா கோவிந்தன் விழாவாகும் (புரட்டாசிவிரதம்) புரட்டாசித் திங்களில் ஒவ்வொரு சனிக்கிழமையும் தமிழர்கள் விரதமிருப்பதுண்டு. ஆடித் திங்களில் பதினெட்டாம் நாளன்று திருமணம் ஆன மகளிர் தத்தம் தாலிக் கயிற்றைப் புதுப்பித்துக்

கொள்ளும் விழா நடைபெறுகின்றது. தமிழ்ப் புத்தாண்டும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. இந்நாளில் தெய்வாலயங்களுக்குத் தமிழர்கள் அனைவரும் செல்கின்றனர். விசேடப் பூசையுடன் முத்தமிழில் கலை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. காமண்டி (காமன் கூத்து) கதையாட்டமாடி, இலாவணிபாடி, பொங்கல் கொண்டாடுகின்றனர். தீபாவளிப் பண்டிகை, சிவராத்திரி திருவிழாக்களும் மிகச் சிறப்பாகத் தமிழ்ப் பண்பாட்டோடு கொண்டாடப்படுகின்றன.

செவ்வாய்க்கிழமை மாலையில் "சைவம் பேசுகிறது" என்ற தலைப்பில் அந்த வாரத்தில் வரும் விரதம், விழா பற்றி உரை இடம்பெறும். இதிலிருந்து தமிழ் மக்கள் தங்களுக்குரிய சமயப்பண்பாட்டுத் தொடர்பான செய்தியை அறிய வாய்ப்புக் கிடைக்கும். மேலும் தெய்வீகப் பாடல்கள், கருநாடகப்பாடல்கள்,திரைப்படப் பாடல்கள் ஒலிபரப்பப்படுகின்றன. தொலைக்காட்சியில் அவ்வப்போது தமிழ்த் திரைப்படம் காட்டப்படும். இந்தியாவில் சிறந்து விளங்கும் பரதக்கலை இங்குத் தமிழர் விசேடநாட்கள் அனைத்திலும் தொலைக்காட்சியில் இடம்பெறும். இக்கலை நிகழ்ச்சிகளை அளிப்பவர்கள் இந்நாட்டுப் பெண்மணிகளே. ஆண்களும் நடனம் ஆடுகின்றனர்.

இசைத்தமிழ், கோயில்கள் வழி இசைக்கருவிகளுடன் மிக நல்ல முறையில் பயிற்றுவிக்கப்படுகிறது. கோயில்களில் இளம் பிள்ளைகள் செய்யும் பஜனைகள் செவிக்கும் விருந்து, தெய்வத்துக்கும் விருந்து. நாடகம் என்ற அமைப்பு தமிழ்த் திருவிழாக்களில் இடம் பெறுகின்றது. "தேசிய நாடக விழாவை"க் கல்வி அமைச்சு நடத்துகிறது. எல்லா மொழிகளிலும் இந்நாடகவிழா நடைபெறும். தமிழ் மொழியிலும் நாடகங்கள் நடைபெற இது ஒரு நல்ல வாய்ப்பு.

மேலே கூறியபடி காவடித்திருவிழா-இங்கு வீற்றிருக்கும் முருகப் பொருமானுக்கு மிகச்சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. முருகனுக்குப் பூக்காவடி, இளநீர்க்காவடி, பால்காவடிகள் எடுக்கப்படுகின்றன. அலகு போடுதலை, 'நாக்குக் குத்தல்' என்று சொல்கின்றனர். பிஞ்சுக்குழந்தைகள், மங்கையர், ஆடவர், வயது முதிர்ந்தவர்கள் யாவரும் அலகு குத்திக்கொள்ள அஞ்சுவதில்லை. கடவுள் பக்தியில் மொரீசியஸ் நாட்டுத் தமிழர் தன்னிகரற்று விளங்குகின்றனர்.

தமிழ்ச் சமையலுக்கு இத்தீவில் தனிச் சிறப்புண்டு. சமையலில் தமிழர் பயன்படுத்தும் பல பொருளுக்கும் தமிழ்ப் பெயர்களே இங்கு வழங்கப்படுகின்றன. இந்நாட்டில் 'விரதச் சாப்பாடு' சிறப்பானது. புலால் உணவை விரும்பும் இந்நாட்டு தமிழ் மக்கள் விரதச் சாப்பாட்டில் மிகவும் ஈடுபாடுடையவர்கள். சாதத்துடன் சாம்பார், ரசம், பலவகைக் காய்கறிகள், பச்சடி, அப்பளம், வடை, பாயசம் அனைத்தும் வாழை இலையில் உண்டு மகிழ்கின்றார்கள். பெரும்பாலான விரதங்களில் இச்சாப்பாடு அல்லது சைவப் பிரியாணி சமைக்கப்படும். புளிச்சாதமும் பூரியும் சில இடங்களில் திருவிழாக்களில் கொடுக்கப்படும். இங்கு வழங்கப்படும் சில தமிழ்ச் சொற்கள்-கொத்தமல்லி, கறிவேப்பிலை, பீர்க்கங்காய், புடலங்காய், அவரைக்காய், பாகற்காய், கத்திரிக்காய், உருளைக்கிழங்கு, வாழைக்காய், பறங்கிக்காய், பூசணிக்காய், கொட்டாச்சி முதலியன இங்கு வேரூன்றிவிட்ட தமிழ்ச் சொற்கள். மேலும் பிட்டு, உருண்டை, தோசை, முறுக்கு, அதிரசம்,

பால்கொழுக்கட்டை, பானகம், கஞ்சி, வெற்றிலை, பாக்கு, பொன்னாங்கண்ணி, முருங்கை, வெட்டிவேர், இஞ்சி முதலியனவும் இங்கு வடிவம் சிதையாமல் வழங்கப்படுகின்றன.

சுப்பையா, சந்நியாசி, சங்கிலி முதலிய பழந்தமிழ்ப் பெயர்கள் வழக்கில் உள்ளன. நம்பி, வெள்ளிவீதி, நக்கீரன், மங்கையர்க்கரசி, மணிமேகலை, கண்ணகி, மாதவி, சிவகாமி, மீனாட்சி, போன்ற தூயதமிழ்ப் பெயர்களும் வழக்கில் வந்துள்ளன. முத்தையா-முச்சியா, முருகன்-மூர்கன், வீரப்பன்-வீர்லப்பென், திருவேங்கடம்-திருவேங்கடும் என நல்ல தமிழ்ப்பெயர்கள் பிரெஞ்சுப் பண்பாட்டுத்தொடர்பினால் திரிந்து வழங்குவதையும் காணலாம்.

உறவு முறை:

தமிழ்க் குடும்பங்களில் அன்பின் நெருக்கத்தை உணரலாம். அன்பின் அடிப்படையில் எழும் குடும்ப வாழ்வில் மதிப்பும்-மரியாதையும் நிலைத்து வாழ்கின்றன. முறைப்பெயர்களைச் சொல்லி அழைப்பதில் தமிழன் தனிப்பெருமை அடைகிறான். இந்நாட்டில் தமிழர்கள் தமிழ் மொழியில் பேசுவதில்லை. காரணம் கிரியோல் என்ற மாற்றான் தாய்மொழி. ஆனாலும் இந்நாட்டுத் தமிழ் மக்கள் முறைப்பெயர்களைச் சொல்லி அழைப்பதில் தமிழ் மொழியிலேயே பயன்படுத்துகின்றனர். தந்தையின் சகோதரர்களைச் சித்தப்பா என்றும் அழைக்கின்றனர். அண்ணனை அண்ணன் என்று எல்லோரும் சொல்லுகின்றனர். தாயின் சகோதரர்களை மாமா என்பதைச் சற்றே மாற்றி "மாமே" என அழைக்கின்றனர். அக்காவின் கணவன் அத்தான், மாமியாரை அத்தை என்றும் பாட்டியை அப்பாயி, அம்மாயி என்றும் சொல்லுகின்றனர். இம்முறைப் பெயர்கள் தமிழர்க்கே உரியன.

அன்னை கஸ்தூரி சின்னப்பன் இவர்களைப் பற்றிக் கூறுகிறார். " முழுக்க முழுக்கத் தமிழ் நில வாழ்வையே ஒத்துள்ளது. அமைதியான வாழ்க்கை, ஆனால் முன்னேற்றம் காணத்துடிக்கும் வாழ்க்கை. மது, மாமிசம், மீன்கறி, மான்கறியை விரும்பும் இத்தமிழர்-செவ்வாய், வெள்ளியில் சாம்பார், ரசம் தான் சாப்பிடுகின்றனர். இதுபோற்றத்தக்கது. அதே நாளில் தலை குளித்துக் கோயிலுக்குச் செல்கின்றனர். நோய் நொடிவரின் " மந்திரமாவது நீறு என்று திருநீற்றையே பூசுகின்றனர். விருந்தோம்பல் பண்பாட்டில் சங்கத்தமிழரை ஒத்துள்ளது. இவர்களது பண்பு. இவர்கள் தமிழ் நிலத்தில் வாழவில்லை. ஆனால் தமிழ் மணத்தில் வாழ்கின்றனர்". "இங்கே தமிழ், தெலுங்கு, மராட்டி, இந்தி, உருது, போஜ்பூரி, குஜராத்தி, அரபு, பிரெஞ்சு, ஆங்கிலம், சீனம் முதலிய பலமொழி பேசும் மக்கள் வாழ்கின்றனர். பலமொழி பலஇனம் பலவகைப்பட்ட பண்பாடு உடைய மக்கள் வாழினும் அனைவரும் ஒற்றுமையாய், ஒரு குடும்பமாய் வாழ்கின்றனர். சண்டை, சச்சரவு இல்லை. போட்டி, பொறாமை இல்லை" யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற உலகத் தத்துவத்தைக் காப்பாற்றுகின்றனர், இந்நாட்டு மக்கள்."

ஆடை அணிகலன்கள்

திருவிழாக்கள் பண்பாட்டினை வெளிப்படுத்துகின்றன. நாகரீகமும் ஆடை அணிகலன்களால் வெளியுலகத்திற்குச் சொல்லப்படுகிறது. தமிழரது நாகரீகம் எவ்வளவு

மேம்பட்டது என்பதற்கு அவரது அடக்கமான அலங்காரமே சான்று. மொரீசியஸில் பெரும்பாலான விழாக்களில் கும்மி, கோலாட்டம் இடம் பெறுகின்றன. அன்றாட வாழ்க்கையில் முழுங்கால்வரை 'கவுன் ' போடும் இந்நாட்டுப் பெண்கள் கும்மி தட்டும்போது கால்பாதம் வரை பாவாடை, மேல் ஜாக்கெட், தாவணி அணிகின்றனர். கைநிறைய வளையல், காதில் தோடு, ஜிமிக்கி, மாட்டல், நெற்றிச் சுட்டி, நீண்ட பின்னல் அதில் குஞ்சம், மூக்குத்தி, தலைநிறையப் பூச்சூடுகின்றனர். ஆனால் அப்பூ வாடாமலர்; காகிதத்தால் ஆனது. காலில் கொலுசுபோடுகின்றனர். "பட்லி" என்று இங்கு அதற்குப் பெயர். திருமணத்தில் மணப்பெண் தமிழ் நாட்டுப் பெண்ணை மிஞ்சுகிறாள். ஒட்டியாணம் முதல் காசுமாலை வரை அவள் அணியாத அணிகலன்களே இல்லை. ஆடை என்று பார்க்கும்போது, திருமணத்தில் மணப்பெண் பட்டுச்சேலையைக் கட்டுகிறாள். மாப்பிள்ளையும் பழைய தமிழ் மரபுப்படியே பட்டுவேட்டி, மேல் அங்கி, மேற்சட்டையுடன் காட்சி அளிக்கிறான். வெள்ளிக்கிழமை மற்றும் விசேட நாள்களில் கோயிலுக்குச் செல்லும் தமிழ்ச் சுமங்கலிப்பெண்கள் புடவையே கட்டிச் செல்கின்றனர். மொரீசியஸில் நிலைத்திருக்கும் இத்தகைய அருந்தமிழ்ப் பண்பாடு தமிழர்க்கே உரியது ஆகும்.

பழக்க வழக்கங்கள்

குழந்தை பிறந்தால் 30 நாள்வரை அந்த வீட்டிற்குச் சென்று வந்தால் தலை முழுகுகின்றனர். காது குத்து வைபவம் பெண் குழந்தைகளுக்கு மட்டுமே உண்டு. திரட்டிச் சடங்கும் செய்கின்றனர். திருமணத்தில் நிச்சயம் செய்தல், மஞ்சள் பூசுதல் (நலுங்கு வைத்தல்) பரிசம்போடுதல், தாரைவார்த்தல், கன்னிகாதானம் செய்து கொடுத்தல், மஞ்சள் கயிற்றில் தாலி கட்டும் தமிழ் மரபு, பாதபூசை செய்தல், சீர்வரிசை வைத்தல், நாத்தனார் மிஞ்சி அணிவித்தல், மாலை மாற்றல்-அனைத்துச் சடங்குகளும் தமிழ் மரபை ஒத்துள்ளன. இறப்பில் கோடி போடுதல், எட்டுப் படைத்தல், கருமாதி, சோறு ஆக்கிப்போடுதல், மகன் மொட்டை அடித்தல் முதலிய யாவும் ஒன்றும் குறைவின்றித் தமிழர்கள் கடைப்பிடித்து வருகின்றனர்.

செய்தி பரவல் தொடர்புச் சாதனங்கள் .

மிகப்பெரிய தமிழர் கழகம், மொறிசியஸ் தமிழர் கழகம். 5800 உறுப்பினர்கள் இக்கழகத்தில் இருக்கின்றார்கள். 1985 இல் செப்டம்பர் அக்டோபரில் மொரீசியஸ் தமிழர் குடிபுகு 250 ஆம் ஆண்டு நினைவு விழா நடந்தது. தவிர, தமிழ்க்கோயில் கூட்டுறவுச் சங்கம் (Tamil Temple Co-Operative Society) தமிழ்ப்பாட்டுக்களைப் பதிவு செய்து கற்பிக்கின்றது.

மொரீசியஸ் தமிழ்ப் பெண்களின் பாங்கான பண்பாடும் சமயமும் பற்றி திருமதி இராதாமணி பொன்னுசாமி படைத்திருக்கிறார். மொரீசியஸில் தமிழ்ப் பண்பாட்டுக் கலாசாரப் புரட்சியைப் பற்றிய வரலாற்றை டாக்டர். சி. எம். பிள்ளை எழுதியிருக்கிறார். நூற்றாண்டு நாடகத் தமிழ் வளர்ந்து நாடகப் போட்டியும் நடத்தி வருகிறார்கள். மொரீசியஸில் தமிழ்க் கல்வி என்ற தலைப்பில் அரசாங்கத் தமிழ்துறை அதிகாரி திரு. பொ. கணேசன் எழுதியுள்ளார். தமிழில் மாதமிருமுறை தொலைக்காட்சி நிகழ்ச்சிகளான விவரங்களையும் தமிழ் மணிப்புலவர் பட்டத் தேர்வும் தொடர்ந்து வருவதுடன், தமிழக அரசின் பாடநூல்களும் கிடைப்பதாகக் குறிப்புகள் உள்ளன.

மொரீசியஸில் தமிழ்ப் பெண்களின் பாங்கான பண்பாடும் சமயமும் பற்றி மொரீசியஸ் வானொலியில் தமிழ் ஒலிபரப்பு உண்டு. தினந்தோறும் அரைமணி நேரம் தமிழ் ஒலிபரப்பு நடைபெறுகிறது. மூன்று வாரங்களுக்கு ஒருமுறை மொரீசியஸ் கலைஞர்கள் தமிழகக் கலைஞர்களின் அரைமணி நேர நிகழ்ச்சி ஒலிபரப்பப்படுகிறது.

தைப்பூசக் காவடித் திருவிழாவுக்கு முந்திய நாள் இரவு பத்து மணிமுதல் மறுநாள் காலை ஆறு மணிவரை முருகன் பாடல்கள் ஒலிபரப்பப்படுகின்றன. புரட்டாசி நோன்பு பருவத்தில் கோவிந்தன் திருவிழாவினைத் தழுவி ஒரு மாத அளவில் காலையில் பத்து மணியளவிற்குச் சிறப்பு நிகழ்ச்சி, மாதத்தில் இரு தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் இப்போது தமிழுக்கு உண்டு. தமிழ்ப் புத்தாண்டு நாளில் தொலைக்காட்சி ஒளிபரப்பு வெளி ஒளிபரப்பாக இடம் பெறுவதுண்டு. (தமிழும், தமிழரும்: 67) வானொலியிலும், தொலைக்காட்சி ஒளிபரப்பிலும் தமிழ் முறையாகக் கற்றுத்தரப்படுகின்றது.

மொரீசியஸ் தீவின் ரூபாய் நோட்டில் தமிழ் எழுத்துக்கள் அச்சிடப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இந்நாட்டில் தமிழ் அச்சு வசதிகள் உண்டு. முதன்முதலாக 1940 ஆம் ஆண்டளவிலே தமிழ் அச்சகம் அமைக்கப்பட்டது.

இங்கு இரண்டாவது உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாடு 1980 ஆம் ஆண்டு ஆகஸ்டில் நடந்தது. மாநாட்டின் நினைவாக மொரீசியஸ் அரசாங்கம் அஞ்சல் தலை, *Air letters* (வெளிநாட்டுக் கடிதங்கள்) வெளியிட்டது. தமிழ், ஆங்கிலம், பிரெஞ்சு மொழிகள் விசேஷ இதழையும் வெளியிட்டது. தமிழக அரசின் நிதி அமைச்சரும், கல்வி அமைச்சரும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநரும் இம்மாநாட்டில் கலந்துகொண்டார்கள்.

சு. இராசாராம் பின்வருமாறு கூறுகின்றார்: "தமிழ்ப் பத்திரிக்கை வரலாறு கிட்டத்தட்ட 125 ஆண்டுக்காலப் பாரம்பரியம் உடையது. என மொரீசியன் என்ற நாளிதழில் 1861 ஆம் ஆண்டு கட்டுரையொன்று வெளியிடப்பட்டது. இக்காலத்தில் பல தமிழ் இதழ்கள் தோன்றி மறைந்தன. 1868 தொடங்கி *The Mercantile Advertiser* (1868), *Mimic Trunpater* (1911) *Tamilkalvi Kazagam* (1944) *Tamil Maha Sangam* (1947) *The Peacock* (1961), *L Eclaireur* (1963) *Tamil Voice* (1964) ஆகிய இதழ்கள் குறிப்பிடத்தக்கன. இன்று 'ஒளி' 'சக்திவேல்' என்ற இரு வார இதழ்களிலும் பெரும்பாலான செய்திகள் பிரெஞ்சு மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியாகின்றன. தமிழில் எழுதுவோரும் படிப்போரும் அருகி வருகின்ற நிலையை இவ்விதழ்கள் காட்டுகின்றன. . . . அவ்வப்போது தமிழ்த் திரைப்படங்கள் திரையிடப்படுகின்றன. அரசு நடத்தும் நாடக விழாக்களில் தமிழ் நாடகங்கள் இடம் பெறுகின்றன". "ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலேயே ஆங்காங்கே தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு வித்து ஊன்றப்பட்டது. அக்கால ஆங்கிலம் மற்றும் பிரெஞ்சு நாளிதழ்களில் கட்டுரைகளும் மிக அரிதாகச் சில கவிதைகளும் எழுதப்பட்டன. 1861 ஆம் ஆண்டு சூன் 20ஆம் நாளிட்ட லெமொரீசியன் என்ற பத்திரிக்கையில் வெளியான ... தமிழ்க் கட்டுரையொன்றை எடுத்துக்காட்டாகக் கூறலாம். 1920 களில் பெருமாள் சுப்பராயன் *Guy de Theramond* என்ற பிரெஞ்சு நாவலாசிரியர் எழுதிய *'Cavengar'* என்ற நாவலைத் தமிழிலே மொழிபெயர்த்தார். 1927இல் ஜி.வெங்கடசாமி என்பவர் 'சீதாலட்சுமி' என்ற நூலையும் 1940இல் அருணாசலம் என்பவர் 'கலைமகள் போதனம்' என்ற நூலையும், எஸ்.முதலியார் என்பவர் 1940இல் 'தமிழ் மன்னன் குமரன்' என்ற நூலையும் எழுதினார்கள். தமிழர்கள்

பிரெஞ்சு மொழியை எளிதாகக் கற்றுக் கொள்ளும் வகையில் ஜி.சீனிவாசன் Vocabulare Tamoul-Francais என்ற நூலை 1911இல் எழுதினார். இன்று பள்ளிகளில் தமிழ் கற்பித்து வருகின்ற தமிழாசிரியர்கள் பலர் கட்டுரைகளும், கவிதைகளும் எழுதி வருகின்றனர். முத்துக்குமரன் சங்கிலி பிரெஞ்சு மொழியில் மொழி பெயர்த்த திருக்குறளும், முத்துக் குமாரன் சங்கிலியும் அம்பிகனும் மொழி பெயர்த்த பாரதியின் சில பாடல்களும் மொரீசியஸ் தமிழர்களிடையே பிரபலமாகி உள்ளன".

"சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து மொரீசியஸ் அரசு இந்தியமொழி, பண்பாடு, தமிழ்மொழி உட்பட, வளர்ச்சியடைவதற்காகச் சூழ்நிலையை உருவாக்கிக்கொண்டு வருகிறது. பல கலாச்சாரக் குழுக்கள், அறிஞர்கள் இந்தியாவிலிருந்து மொரீசியஸ் அரசால் வரவழைக்கப்பட்டனர். ம.பொ. சிவஞான கிராமணி, சீர்காழி கோவிந்தராஜன் சமீபத்தில் வரவழைக்கப்பட்டனர்மொரீசியஸ் அரசு சில தமிழ்த் திரைப்படங்களையும் காண்பித்தது. தமிழ்மொழி, பண்பாடு வளர்ச்சியில் ஆர்வமுள்ள பல தனியார் தமிழ் மன்றங்களும் இந்திய அரசின் உதவியை நாடுகின்றன. ம.பொ.சி. 1987 ஏப்ரல் மாதம் சென்றபொழுது மொரீசியஸ் தமிழ்மொழி, தமிழ்ப் பண்பாட்டு மேம்பாட்டிற்கு தமிழக அரசு, இந்திய அரசு எவ்வாறு உதவி புரியவேண்டும் எனும் ஓர் விண்ணப்பத்தை அவரிடம் அளித்தனர். மேலும் மலேசியாவில் நடந்த ஆறாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின்பொழுது அடுத்த மாநாட்டை 1989 ஆம் ஆண்டில் மொரீசியஸில் நடத்தப்போவதாக மொரீசியஸ் மாநாட்டு உறுப்பினர்கள் வாக்குறுதி அளித்திருக்கின்றார்கள். ஆகையால் மொரீசியஸில் தமிழ்மொழி தமிழ்ப் பண்பாடு வளர்ச்சியடைவதற்கு வேண்டிய சூழ்நிலை உருவாகி இருக்கின்றது.

மொரீசியஸ் அரசைப்போல இந்திய அரசும் மொரீசியசில் இந்திய மொழிகள், குறிப்பாகத் தமிழ்மொழி, பண்பாடு வளர்ச்சியில் ஆர்வம் காட்டுகின்றது. 1986அக்டோபர் திங்களில் பிரதமர் இராஜீவ்காந்தி மொரீசியஸ் சென்றபொழுதும், 1987செப்டம்பர் திங்களில் மத்திய அரசு அமைச்சர் திரு. நரசிம்மராவ் மொரீசியஸ் விஜயம் செய்தபொழுதும், 1988 மார்ச்சு திங்கள் இந்திய துணை ஜனாதிபதி டாக்டர். சங்கர்தயாள் சர்மா மொரீசியஸ் சென்றபொழுதும் இக்கொள்கையைப் பின்பற்றுவதாக வலியுறுத்தினர். இந்நாட்டில் பெருங்கடல் விழா (International Ocean Festival) நடந்தபொழுது அமைச்சர் நரசிம்மராவ் 200 இந்தியர்களடங்கிய பண்பாட்டு, கலை, கலாச்சாரக் குழுவினை இந்தியாவிலிருந்து அழைத்துச் சென்றார்; அக்குழுவில் 50 தமிழர்கள் இருந்தனர். துணை ஜனாதிபதி சங்கர்தயாள்சர்மா பல்வேறு மொரீசியஸ் தமிழ் மன்றங்களுக்கு மிகுதியான தமிழ் நூல்களையும், அகராதிகளையும் அன்பளிப்பாக அளித்தார். பிரதமர் இராஜீவ்காந்தி மொரீசியஸ் தமிழ்க் கோயிலுக்கு மூன்று மயில்களையும், தமிழ்ப் புத்தகங்களையும் அன்பளிப்பாக அளித்தார். மேலும் தமிழ், பிற இந்திய மொழிகள், இந்தியப் பண்பாடு மேம்பாட்டுத் தொடர்பாக மொரீசியசு உடன் இந்திய அரசு 1986 டிசம்பர் திங்களில் இரண்டாண்டு பண்பாட்டு உடன்படிக்கை செய்துகொண்டது. இரண்டு ஆண்டிற்குப் பிறகு இவ்வுடன்படிக்கை மீண்டும் புதுப்பிக்கப்படலாம்.

ஆகையால் இந்திய அரசின் மனப்பான்மை, மொரீசியஸ் அரசின் தாராளப் பண்பாட்டுக் கோட்பாடு, மொரீசியஸ் தமிழ் மக்களின் புத்தெழுச்சி ஆதரவு-மொரீசியஸில் தமிழ்மொழி, தமிழ் பண்பாடு மேலும் நன்றாக வளர்ச்சி அடையும் வாய்ப்பினை இன்று

உருவாக்கியிருக்கின்றது எனக் கூறினால் மிகையாகாது. அதுவும் இன்றைய சூழ்நிலையில் மொரீசியஸில் இருக்கும் 1 இலட்சம் தமிழர்களிலே 2 விழுக்காட்டினர் மட்டுமே தமிழைச் சரளமாகப் பேசும் திறன் பெற்றவர்கள்; மேலும் 3-4 விழுக்காட்டினருக்குத் தமிழை எழுதவும், படிக்கவும் தெரியும் எனக் கூறலாம். தமிழைச் சரளமாகப் பேசும் திறன் பெற்றவர்கள் பொதுவாக 60 வயது அடைந்தவர்களாக இருக்கின்றார்கள். 20 வயதிலிருந்து 60 வயதுள்ள தமிழர்கள் பொதுவாகத் தமிழைக் கற்றுக்கொள்ளவோ, பயன்படுத்தவோ வாய்ப்பளிக்கப்படவில்லை. ஆனால், இவர்கள் தங்கள் குழந்தைகள் தமிழைக் கற்றுக்கொள்ள வேண்டும்; அதற்கு வாய்ப்பளிக்க வேண்டும் என விரும்புகின்றார்கள். ஆகையால் பெரும்பான்மையான தமிழர்களிடையே இன்று தமிழ்மொழி, பண்பாடு பெற்று புத்துயிர் பெற்று வேரூன்றத் தொடங்கியிருக்கின்றது. அவர்களால் தமிழை எழுதவோ, சரளமாகப் படிக்கவோ, சரளமாகப் பேசவோ முடியவில்லை என்றாலும் தமிழ்மொழி, பண்பாட்டைப்பற்றி அறிந்துகொள்ளும் ஆர்வம் மிகுதியாக இருக்கின்றது. இச்சூழ்நிலையில்தான் இந்தியப் பண்பாடு, மொழிகளை மேம்படுத்தி ஆதரவு அளிக்கும் நோக்கத்துடன் இந்திய அரசு இந்தியப் பண்பாடு இந்திராகாந்தி மையம் (Indra Gandhi Centre for Indian culture) ஒன்றை மொரீசியஸில் அமைத்திருக்கிறது. இச்சூழலில் நமக்குச் சாதகமாக அதை நாமும் பயன்படுத்தி நாமும் தமிழும், தமிழ்ப்பண்பாடும் மொரீசியஸில் தழைத்தோங்கப் பாடுபடவேண்டும்.

இவ்வாறு பாடுபடும்பொழுது மொரீசியஸில் இருக்கும் இன்றைய சூழ்நிலையைப் புரிந்துகொள்ள வேண்டும். ஒரு தமிழ்க் குழந்தை தனது ஐந்தாவது வயதில் தொடக்கப்பள்ளியில் சேருகின்றாள். ஆறு ஆண்டுகள் படித்த பிறகு முதல் பொதுத் தேர்வு (Public Examination-the CPE Certificate of Primary Education) எழுதுகிறாள். பள்ளியில் அவள் மூன்று மொழிகளைக் கற்றுக்கொள்கிறாள். ஆனால் ஒன்று கூட தாய்மொழி அல்ல. ஆங்கிலம் மூலம் கல்வி கற்பிக்கப்படுகின்றது. செய்தித்தாள், வானொலி, தொலைக்காட்சி, வங்கிகள், அலுவலகங்களில் பிரெஞ்சு மொழிகள் பயன்படுத்தப்படுகின்றன. ஆறாவது ஆண்டுத் தேர்வின்போது இம்மொழிகளுக்கும், கணக்கு, அறிவியல் முதலியவற்றுக்கும்தான் சிறப்பிடம் அளிக்கப்படுகின்றது. தமிழ் விருப்பப் பாடமாக (Optional) விரும்பிப் படிப்பவர்களுக்குக் கற்றுத் தரப்படுகின்றது. ஆனால், பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் பிற இயல்களைக் கற்றுக்கொள்வதில் ஆர்வம் காட்டுகிறார்கள். ஏனென்றால் அவை மூலம்தான் வருங்கால வாழ்வு நிர்ணயிக்கப்படுகின்றது. தற்காலம் வரை தொடக்கப்பள்ளிகளில் தமிழ்நாட்டில் வெளியிடப்பட்ட பொங்கல் தமிழ் வாசகம் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் நூல்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவை தமிழ் நாட்டின் சூழலுக்கு ஏற்றவாறு எழுதப்பட்டிருக்கின்றதே தவிர மொரீசியஸ் மொழி, பண்பாடு, அரசியல் சூழலுக்கு ஏற்றவாறு எழுதப்படவில்லை. ஆகையால் புதிய பாடத்திட்டமும் கற்பிக்கும் முறையையும் அறிமுகப்படுத்தி, தமிழ் கற்றுக்கொள்ளும் ஆர்வத்தை அதிகரிக்கவேண்டும் என மொரீசியஸ் நாட்டைச் சேர்ந்த மி. திருமலைசெட்டி அவர்கள் கூறுகின்றார்கள். ஆகையால் இச்சூழ்நிலையையும் மனத்தில் வைத்துக் கொண்டுதான் மொரீசியஸில் தமிழ்மொழி வளர்ச்சிக்குப் பாடுபட வேண்டும். இன்று தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக மொரீசியஸில் மொரீசியஸ் தமிழர்களான அருணாசலம் புட்பரதம், திருமலைச் செட்டிக்குடும்பத்தினர், அமைச்சர்பரசுராம், மேலும் 200க்கு மேற்பட்ட தமிழாசிரியர்கள், பல அறிஞர்கள் இடைவிடாமல் பாடுபடுகின்றனர்.

ரீயூனியன்

பிரெஞ்சுத் தமிழ்க் குடியேற்ற நாடுகளான 27 தீவுகளில் ஒன்று ரீயூனியன். இத்தீவைத் தமிழில் ரீயூனியோன் என்றும் அழைக்கிறார்கள். இந்து மாக்கடலில் புவிமையக் கோட்டிற்குத் தெற்கே மடகாஸ்கர் தீவுக்கும் மொரீசியஸ் தீவுக்கும் இடையில் உள்ள ஒரு தீவே 2510 சதுரகிலோமீட்டர் உள்ள ரீயூனியன் (Reunion). மடகாஸ்கர் வடக்கே 300மைல் தொலைவில் இருக்கும் இத்தீவு மொரீசியஸைவிடக் கொஞ்சம் பெரியது. இதன் தலைநகரம் செயின்ட்டெனிஸ், இத்தீவு தற்சமயம் பிரெஞ்சு அயல்நாட்டுத்துறையின்ஒரு பகுதியாக (French Overseas Department) இருக்கின்றது.

தமிழ்நாடு-ரீயூனியன் தொடர்பு

பண்டைத் தமிழர்கள் இந்து மாப்பெருங்கடலைக் கடந்து ஐரோப்பாவிற்கு ஆப்பரிக்க மேற்கு ஆசிய நாடுகளுக்குச் சென்றபோது இத்தீவைப் பார்த்திருக்கலாம். ஆனால் தமிழர்களோ, பிற இந்தியர்களோ 17 ஆம் நூற்றாண்டுவரை இத்தீவுக்குச் சென்று குடியேறியதாகச் சான்றுகள் கிடையாது.

பல்லாண்டுக்களுக்குமுன் கடலில் எரிமலை கக்கிய குழும்பாலான இத்தீவு, கேட்பாரற்றுக் கிடந்த போது ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரரும் அங்குக் குடியேறினர். முடிவில் பிரெஞ்சு அரசு இத்தீவைக் கைப்பற்றிற்று. இன்று பிரெஞ்சு நாட்டின் அங்கமாகத் திகழ்கிறது.

இத்தீவை ஆரம்பத்தில் பண்படுத்த ஆள்கள் தேவையாக இருந்தது. ஆகையால் 18ஆம் நூற்றாண்டில் இந்தியாவின் பிரெஞ்சு பகுதிகளான புதுச்சேரி, காரைக்கால் போன்ற நகரங்களிலிருந்தும், அவற்றைச் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்தும் வேலையாட்களைப் பிரெஞ்சுக்காரர்கள் தங்கள் காலனியாட்சி பலத்துடன் அழைத்துச் சென்றார்கள். இவர்கள் பெரும்பாலும் ரீயூனியனில் உள்ள கரும்புத் தோட்டங்களிலும் காப்பித் தோட்டங்களிலும் பணிபுரிந்தனர். அவர்களுக்கு ஊதியம்தான் குறைத்து அளிக்கப்பட்டது. மொரீசியஸ் நாட்டிற்கு வந்து தமிழர்கள் குடியேறுவதற்கு முன்பே ரீயூனியனிக்கு வந்து அவர்கள் குடியேறினார்கள். அவ்வாறு வந்து குடியேறியவர்கள் ரீயூனியனிலேயே நிலையாகத் தங்கி விட்டனர். அவர்களுடைய சந்ததியார் தாம் இன்று இத்தீவில் வாழ்ந்து வருகின்றனர். மேலும் 1848ஆம் ஆண்டு பிரெஞ்சுப் பேரரசில் அடிமைமுறை ஒழிக்கப்பட்டவுடன் மேலும் பல தமிழர்கள் இத்தீவிற்கு வந்து குடியேறினார்கள். 1954 ஆம் ஆண்டு புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளுக்குச் சுதந்திரம் கிடைத்தவுடன் பல பிரெஞ்சுக் குடிமக்கள் குறிப்பாகச் சிவில் நீர்ப்பாசனத்துறையில் பணி

புரிந்தவர்கள், இத்தீவிற்கு வந்தனர். இவர்களும் மொரீசியஸிலிருந்து வந்த சில தமிழர்களும் தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சிக்குப் பாடுபடுகின்றனர்.

தமிழர்கள் இத்தீவில் வந்து குடியேறிய போது தமிழ் நாட்டில் பலருக்கு இத்தீவைப்பற்றி ஒன்றுமே தெரியாது. ரீயூனியனைச் சேர்ந்த பேராசிரியர் வி. குமாரசாமி கூறுகிறார்: மொரீசுத்தீவு ஒரு சுதந்திர நாடு ஆதலால் அதைப்பற்றி உலக மக்கள் அறிவர். ஆனால் ரேயூனியோன் தீவு பிரான்ஸ் நாட்டின் கடல் கடந்த பகுதி என்பதால் இத்தீவு மிகப்பலருக்குத் தெரியாது. ஒருமுறை சென்னையிலிருந்து எங்கள் ரேயூனியோன் தீவுக்குத் தொலை பேசியில் தொடர்பு கொள்ள விரும்பியபோது, தொலைபேசி அலுவலகத்தில் பணிபுரிவோர் அப்படியொரு தீவு இல்லவே இல்லை என்று சொல்லி விட்டார்கள்."

தமிழ் மக்கள் தொகை

ரீயூனியனில் 18ஆவது நூற்றாண்டில் 1797 ஆம் ஆண்டளவில் இருந்த மொத்த மக்கள் தொகை 56,800. வெள்ளையர்கள் 10.400, உரிமைபெற்ற மனிதர்கள் 1600, அடிமைகள் 44,800. 1850 ஆம் ஆண்டளவில் ரீயூனியனில் இருந்த மொத்த மக்கள் தொகை 1,10,891 ஆகும், தமிழர்களும் 18ஆம் நூற்றாண்டிலிருந்தே குடியேறியிருந்தார்கள்.

1977 ஆம் ஆண்டில் இருந்த மொத்த மக்கள் தொகை 5 1/2 இலட்சம், தமிழர்கள் 1 1/2 இலட்சம் இருந்தார்கள். நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 28 விழுக்காட்டினர் தமிழர்கள். ரீயூனியனில் வாழும் பேராசிரியர் வி. குமாராசாமி, இன்று ரீயூனியனில் இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள்வாழ்கின்றனர் எனக் கூறுகின்றார்.

தமிழர் சமயம்

" கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டா" என்ற பழமொழி இங்குத்தான் கடைப்பிடிக்கப்படுகிறது. ஒவ்வொரு ஊரிலும் ஒரு கோயிலுண்டு. சிவன், முருகன், காளிகோயில்கள் அதிகமுண்டு. முருகன் கோயில்கள் பல.தலைநகரமான செயின்டென்னிஸ் (Saint Dennis) செயின்ட்பியரி (Saint Pierre) செயின்ட்பால்(Saint Paul) செயின்ட் ஆண்டிரி (Saint Andre) முதலிய இடங்களில் இருக்கின்றன, சிவ, திருமால் கோயில்களில் தமிழ் நாட்டிலிருந்து வரவழைக்கப்பட்ட குருக்கள் பணியாற்றுகின்றனர். 1980 இல் மொரீசியஸ் தமிழ் மொழி விழிப்புக்குப்பின் சில தமிழ்ப் பண்டாரங்கள் ரீயூனியன் கோயில்களில் தமிழில், வடமொழியில் அர்ச்சனை செய்கிறார்கள். அதற்கு முன்பு பிரெஞ்சு மொழிதான் இத்தீவில் உள்ள தமிழர்கள் கோயில்களின் ஆட்சிமொழி.

பல கோயில்களில் தீ மிதிக்கின்றனர். சில கோயில்களில் ஆட்டுக் கடா வெட்டிச் சமைத்துப் படையலிட்டுக் கூட்டாக உட்கார்ந்து இருநூறு முந்நூறு பேர் சாப்பிடுகின்றனர். மொரீசியஸ் நாட்டின் காவடி தீ மிதித் திருவிழாவிற்குப்பலர் ரீயூனியனிலிருந்து போகிறார்கள்.

பெரிய கோயிலானாலும் சரி, சிறிய கோயிலானாலும் சரி ஆண்டு தோறும் பத்து நாள் திருவிழா நடைபெறுகிறது. அப்போது மக்கள் திரண்டு வந்து தினந்தோறும் மூன்று,

நான்கு மணி நேரம் அமைதியாக இருந்து வழிபாட்டில் பங்கேற்கின்றனர். காவடி எடுப்பதும், செடல் குத்துவதும் இங்குப் பழக்கம். காளியம்மன் கோயிலில் அம்மன் ஊர்வலமும், சக்திக் கரக ஆட்டங்களும் சிறப்பாக நடைபெறும். ஊர்வலத்தின் போது பக்தர்கள் வீடுதோறும் தீபாராதனை செய்கின்றனர்.

தமிழ்க் கிறித்தவர்கள் நீண்ட கவுன்களும், மேக்சிகளும் அணிந்து வந்து இந்துக் கோயில்களில் தவறாமல் வழிபடுகிறார்கள். நீளக் காலுறையுடன் கோயிலுக்கு வருவோரே மிகுதி. பொங்கல், தீபாவளி, புத்தாண்டு, விரதம், தீமிதி திருவிழாக்களைத் தமிழர்கள் கொண்டாடுகின்றனர்.

தமிழ்ச் சமுதாய அமைப்பு, சாதி அமைப்பு

பிரெஞ்சுக் காலனியாக இருந்து வந்த இந்தத் தீவு 1947 இல் பிரான்ஸின் கடல் கடந்த ஓர் அங்கநாடு" என்று ஏற்றுக் கொள்ளப் பட்டபின், அனைவரும் நிறவேற்றுமையின்றி முழுக்குடியுரிமை பெற்றுப் பிரான்ஸ் மக்கள் போல் வாழ்கின்றனர். சாதிகள் இல்லை. சமயக் காழ்ப்புணர்ச்சிகள் இங்கு இல்லை. இன்று சாதிமத ஆசாரங்கள் கிடையா. தமிழர்கள் மாட்டிறைச்சி உண்பதில்லை. பண்டிகை சமயங்களில் தமிழ்நாட்டு உணவுச் சமைத்துண்கின்றனர்.

திருமணங்களும், மற்றச் சடங்குகளும் தமிழ் நாட்டிலிருந்து வரவழைக்கப் பட்ட குருக்களால் நடத்தப்படுகின்றன. பிறந்த குழந்தைக்கு உரிய காலத்தில் முடியிறக்கித் தெய்வ வழிபாட்டை நிறைவேற்றுவது வழக்கம். ஆனால் காதுகுத்தும் வழக்கம் மறைந்து வருகிறது.

இறந்தவர்களை எரிக்கும் வழக்கம் இங்கு அறவே இல்லை. எல்லா மதத்தினரும் இறந்தோரைப் புதைத்து விடுகின்றனர்.

இங்குள்ள தமிழர்கள் பொதுவாக மேலை நாட்டுப் பாணியிலேயே உடையணிகின்றனர். இந்து மதக்கோவில் விழாக்களிலும், திருமணச் சடங்குகளிலும் ஆர்வமுள்ள இளைஞர் பலர் வேட்டி, சட்டை அல்லது ஜிப்பா அணிவதும், பெண்களில் பலர் புடவை, ரவிக்கை அணிவதும் தமிழ் நாட்டுக் கலாச்சாரத்தை நினைவுபடுத்தும். பொங்கல், தீபாவளி, புத்தாண்டு, விரதம், தீமிதிப்பு முதலிய நாள்களின் போது புடவை அணிந்து கொள்கிறார்கள். நகைகள் அணிந்து கொள்கிறார்கள்.

ஆப்பிரிக்காவின் சந்ததியார், சீனர்கள், முன்குடியேறிய பிரெஞ்சுக் காரர்களின் சந்ததியார், அண்மையில் வந்த பிரெஞ்சுக்காரர்கள், தமிழர்கள் அனைவரும் ஒற்றுமையாக வாழ்கின்றனர். ஏராளமாகக் கலப்புத் திருமணங்கள் நடப்பதால் இங்குப் பல வண்ண மக்களைக் காணலாம். இவர்களுடன் அண்மையில் வந்து குடியேறிய குஜராத் இந்துக்களும் முசுலிம்களும் நகரங்களில் வாழ்கின்றனர்.

பொருளாதார அமைப்பு:

இன்றும் தமிழர்கள் பலர் கரும்புத் தோட்டங்களில் பணிபுரிகின்றார்கள். பெரும்பான்மையான தமிழர்கள் விவசாயிகளாக இருக்கின்றனர். பிரான்ஸிலே படித்த,

பிரெஞ்சுமொழிபேசும், படித்த தமிழர்கள் முக்கிய பதவிகளில் இருக்கின்றார்கள். மருத்துவர்களாகவும், வழக்குரைஞர்களாகவும், ஆசிரியர்களாகவும், விரிவுரையாளர்களாகவும் பணிபுரிகின்றார்கள். 28 விழுக்காடு தமிழர்கள் அரசியல், வாணிபம், தொழில்துறையில் பணிபுரிகின்றனர்.

பேராசிரியர் வி. குமாரசாமி பின்வரும் கருத்தை அளிக்கின்றார்: "இத்தீவில் வசிக்கும் தமிழர்கள் எல்லாவிதத் தொழில்களிலும் ஈடுபட்டிருக்கின்றனர். அரசுத் துறையிலிருந்து தனியார் துறைவரை பல வேலைகளிலும் உழைத்து வருகின்றனர். குஜராத்திலிருந்து வந்துள்ள இந்துக்களும் முசுலிம்களும் பெரும்பாலும் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். பிரான்சில் பாரிசிலுள்ள சட்ட மன்றங்களில் தமிழர்கள் சிலர் அங்கம் வகிக்கின்றனர். கரும்புத் தோட்டங்களிருப்பதால் சர்க்கரை ஆலைகள் உண்டு. சர்க்கரை ஏற்றுமதி செய்யப்படுகிறது. வெட்டிவேர், ஜெரானியம் போன்ற வாசனைப் பொருள்கள் பயிர்த்தொழில் வளர்ச்சி பெற்று வருகிறது. இருநூறு கிலோ மீட்டர் தூரத்திலுள்ள மொரீசியஸ் தீவைவிட இங்கு வாழ்க்கைத்தரம் பன்மடங்கு உயர்ந்துள்ளது. பிரான்ஸ் வாழ்க்கையே இங்கு இருப்பதால் எத்தொழிலுக்கும் குறைந்த அளவு சம்பளம் 3500 FF, அதாவது 7,000 ரூபாய் ஊதியம் தரவேண்டும்.

ஒவ்வொரு குடும்பமும் டிவி., காருடன் வாழவசதியுண்டு. உலகிலேயே அதிக விகிதத்தில் கார் விற்பனையாகும் இரண்டாவது இடம் ரீயூனியன்தான். சுருக்கமாகச் சொன்னால் மக்கள் எல்லா வசதிகளுடனும் வாழ்கின்றனர். வேலையற்றிருக்கும் படித்த இளைஞர் முதல் தளர்ந்து நடைபோடும் முதியோர் வரை எல்லாக் குடிமக்களுக்கும் அரசு பல வகைகளிலும் உதவி செய்வதால் இங்கு வறுமையென்பதற்கே இடமில்லை."

தமிழ்மொழி, தமிழ்க்கல்வி

தமிழ் மக்களாகிய இவர்கள் தமிழை மறந்துவிட்டனர். அனைவரும் கிரியோல் (*Creole*) மொழி பேசுகின்றனர். கிரியோல் மொழி பிரெஞ்சுக் கலப்புமொழி, தேசிய மொழியாகும். படித்தவர்கள் மட்டுமே பிரெஞ்சுமொழி பேசுகின்றனர். பிரெஞ்சுமொழி பணித்துறை, அலுவலக மொழியாக விளங்குகின்றது. பொதுவாக 100க்கு 95 தமிழர்களுக்கு தமிழ் எழுதவோ, படிக்கவோ, பேசவோ தெரியாது. பாரிஸ்-புதுவை தொடர்புள்ள ஒரு சிலர் தமிழ் பேசுகின்றனர்.

இங்கு இலவசக்கல்வி அனைவருக்கும் வழங்கப்படுகிறது. பதினாறு வயதுவரை பிள்ளைகள் அனைவரும் பள்ளி செல்லவேண்டும். இல்லையேல் பெற்றோர்களுக்குத் தண்டனை விதிக்கப்படும். அனைத்துப் பாடங்களும் பிரெஞ்சுமொழியில் போதிக்கப்படுகின்றன. ஆங்கிலம், ஜெர்மன், ஸ்பானிஷ் மொழிகளை அயல் மொழிகளாகக் கற்றுக்கொடுக்கின்றனர். பிரெஞ்சுப் பகுதிகளிலும், பிற பகுதிகளிலும் தமிழ்ப் பள்ளிக் கூடங்கள் கிடையாது. ரீயூனியனில் கற்பித்த முதல் தமிழாசிரியர் மொரீசியஸைச் சேர்ந்த திரு சங்கிலி (*Sangeelee*) என்பவர் ஆவார். ஆனால் சென்ற மூன்றாண்டுகளாகத் தமிழ் மொழியும் கற்றுக் கொடுக்கப்படுகிறது. இது ஒரு புதுமை. இஃதன்றிப் பல்கலைக் கழகத்தின் ஓர் அங்கமாகிய *Institute of Linguistics And Anthropology* இல் பதினெட்டு வயது மேற்பட்டோருக்குத் தமிழ் போதிக்கப்படுகிறது. தமிழைப் பல பல்கலைக் கழகத்

தேர்வுகளில் விருப்பப்பாடமாக எடுத்துக் கொள்ளலாம். இதனால் தமிழின் நிலை மேம்படுத்தப்பட்டு வருகிறது. பிரெஞ்சு மொழியில் பேராசிரியராக வளர்ந்துள்ள திரு.வீ.தேவகுமாரன் பல ஆண்டுகளுக்கு முன் தமிழ் பிரெஞ்சுப் பாட நூல் எழுதிப் படிப்பிக்கச் செய்தார். அவர் எழுதிய நூலின் பெயர் *II 'appreds le tamoul'*. அவர் ஓர் தமிழாசிரியர். பிரெஞ்சு மூலம் தமிழ் படிக்க, பாலர் பாடநூல் பள்ளியில் கற்பிக்கப்படுகிறது.

முக்கியமாக ரீயூனியனில் தொலைக்காட்சி, ஒலி, ஒளிப்பதிவு நாடாக்கள், பஜனைப் பாராயணம், நேர்முக வகுப்பு, கோயில் ஆகியவற்றில் தமிழ் பயன்படுத்தும் முயற்சி நடைபெறச் செய்யத் தொடங்கிவிட்டார்கள்.

தமிழ்ப் பண்பாடு

ஆகையால், தமிழை மறந்தாலும் தமிழ் மொழியை மீண்டும் இங்கு மலர வாய்ப்பு அளிக்கவேண்டும் என்ற எண்ணம் வேரூன்றித் தொடங்கி இருக்கிறது. தமிழ் மொழி ஆர்வம் பிறந்திருக்கிறது. இவ்வார்வத்தை வளர்ப்பது தமிழ் நாட்டின் கடமையாகும். மேலும் தமிழ்க் கல்வியையும் முற்றிலும் மறக்கவில்லை. தமிழ்மொழிக் கற்பிக்கவும், படிக்கவும் வாய்ப்புக்கள் தோன்றியிருக்கின்றன. தமிழ்மொழி மேல் இருக்கும் ஆர்வம் இதன்மூலம், குறிப்பாக இளம்பரம்பரையினரிடையே, மேலும் வளர்ச்சியடைய சூழ்நிலை உருவாகியிருக்கின்றது. தமிழ்ப் பண்பாட்டையும் ரீயூனியன் தமிழர்கள் முற்றிலும் இழக்கவில்லை. தமிழ்ச் சமய, பிற பண்பாட்டைச் சிறிதளவாவது நினைவில் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். தொடர்ந்து இத்தமிழ் இந்துப் பெயர்கள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அரங்கசாமி, இராமாசாமி, கிருட்டிணன் இராமன், முருகன், கணேசன் என்ற பெயர்களை எங்கும் கேட்கலாம். காத்தாயி, முருவாய், இராமாய், மீனாட்சி, மீனா, மைனாவதி, காமாட்சி போன்ற பெயர்களுக்கும் பஞ்சமில்லை. ஆகையால் இவர்களின் பெயர்கள் தமிழ்நாட்டுப் பெயர்கள். பெரும்பாலோருக்குத் தமிழ்ப் பெயர்களோடு கிறித்தவப் பெயர்களும் *(First name)* உண்டு. உதாரணமாக பிலிப் இராமன் *(Philip Raman)*.

அரசியல்

ரீயூனியன் சட்ட மன்றத்தில் சில தமிழர் இருக்கின்றனர். சம உடமைக் கட்சி, தொழிற்கட்சிகளில் தமிழர்களில் பெரும்பான்மையோர் உறுப்பியம் வகிக்கிறார்கள். பிரெஞ்சுப் பகுதியின் நாடாளுமன்றத்தின் ரீயூனியன் பகுதிக்கு ஐந்து உறுப்பினர்களில் *(Five deputies)* ஒருவர் தமிழர்; இவர் பெயர் வீரப்பாபிள்ளை. இவருக்குத் தமிழ் தெரியாது; மேலும் ரீயூனியனிலிருந்து செல்லும் மூன்று சட்டமன்ற மேலவை உறுப்பினர்களில் *(Senators)* இருவர் தமிழர்கள்.

செய்தி பரவல் தொடர்புச் சாதனங்கள்:-

1965 ஆம் ஆண்டு ரெனிகிசனின் *(Rene Kichenin)* எனும் வழக்குரைஞர் 'திரிடெண்ட்' *(Trident)* எனும் நாளேட்டை வெளியிட்டார். இவ்வேட்டின் நோக்கம் தமிழ் மொழி,

பாண்பாட்டை மேம்படுத்துவதாகும். 1968 ஆம் ஆண்டு இளைஞர்களுடன் இணைந்து தமிழ் கிளப் ஒன்று(Club Tamoul)அமைத்தார். 1977 க்கு முன் தமுல் (Tamil) என்ற பிரெஞ்சு மொழி ஏடு வெளிவந்து கொண்டிருந்தது. 1980 இலிருந்து பிரசென்ஸ் (Presence) என்ற பிரெஞ்சு ஏடு தமிழர்களைப் பற்றியும், தமிழர்கள் பண்பாடு, கலாச்சாரம், சமயம், பண்டிகை போன்றவற்றைப் பற்றி முக்கியக் கட்டுரைகளையும், முக்கியத் திருவிழாக்களின் அட்டவணைகளைப் பற்றியும் எழுதி வெளியிடுகின்றது. 1975-1982 ஆம் ஆண்டுகளுக்கிடையே இவ்விரண்டு செய்தி ஏடுகளும் வெளியிடப்பட்டன. கிழமைதோறும் ஒளி என்ற ஏடு அச்சாகி விற்கப்படுகின்றது. இந்த ஏட்டின் முகப்பில் தில்லை நடராசர் நாட்டியச் சின்னமுண்டு.

1981 ஆம் ஆண்டு இறுதியில் ஸ்ரீபெருமாள் வானொலி தமிழ் ஒலிபரப்பு தொடங்கியுள்ளார். இது ஒரு தனியார் ஒலிபரப்பு. செயின்ட் பியாரையில் உள்ளது. மொரீசியஸ் வானொலி தொலைக் காட்சிகளை ரீயூனியனில் பார்க்கலாம். ஆகையால் அங்கிருந்து திரையிடப்படும் தமிழ்ப் படங்களை ரீயூனியன் தமிழர்கள் பார்க்கின்றார்கள். வாரந்தோறும் அங்கிருந்து வரும் தமிழ்ப் பாடல்களைக் கேட்கின்றார்கள்.

திரு. தண்டபாணி என்பாரும், மற்றும் பலரும் தமிழ்மொழி, பண்பாடு முதலியவற்றைப் பற்றி நூல்கள் எழுதியிருக்கிறார்கள். திரு. ஜெயபார்லென் பெர்மாள் (Djeabarlene Permale, President of the French Tamil cultural Centre, Former Director of Kaleivani Radio Broadcasting in.Tamil) தமிழ் பிரெஞ்சுப் பண்பாட்டு மையத்தின் தலைவர் கலைவாணி தமிழ் ஒலி பரப்பின் முன்னாள் இயக்குநர், ரீயூனியனில் தமிழ்ப் பண்பாடு வளர்ச்சியடைவதற்காகவும், பாதுகாக்கப்படுவதற்காகவும் சிறப்பாகப் பாடுபடுகிறார். திரு. பொனின் பரசூர்மென் (Ponin Parashourmen) வானொலி வெள்ளி (Radio Velly) இயக்குநர், தமிழ் ஒலிபரப்பு செய்கின்றார். இவரும் தமிழ்ப் பண்பாட்டின் மேம்பாட்டிற்காகப் பாடுபடுகின்றார். பேராசிரியர் வி. குமாரசாமி (President, Institute De Linguistique Et D' Anthropologie) ரீயூணியன் பல்கலைக்கழகம் அவர்களும் தமிழ் மொழியின் வளர்ச்சி, தமிழ்ப் பண்பாட்டின் மறு மலர்ச்சிக்காக சிறப்பாகப் பணிபுரிகின்றார்.

பிற பிரெஞ்சுத் தமிழர்கள்

மற்ற அயல் நாடுகளில் வாழும் தமிழர்களை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம். அ. பிரெஞ்சுத் தமிழர்கள். ஆ. ஆங்கிலம் பேசும் நாடுகளில் வாழும் தமிழர்கள் இ. மற்ற மொழிகள் பேசும் நாடுகளில் வாழும் தமிழர்கள்.

பிரெஞ்சுத் தமிழர்களை. இரு பிரிவாகப் பிரிக்கலாம். 1. பிரான்சில் வாழும் தமிழர்கள் 2. பிரெஞ்சுக் காலனிகளில் வாழும் தமிழர்கள். புதுச்சேரியில் இப்பொழுது வாழும் தமிழர் தொகையளவு பிரான்சிலும், பிரெஞ்சுக் காலனிகளிலும் தமிழர்கள் வாழ்கின்றனர். குறிப்பாக இப்பகுதிகளில் தமிழ்ப் பள்ளிகள் இல்லை.

பிரெஞ்சுக் குடியேற்றப் பகுதிகளாக 36 நாடுகள் இருந்தன. அதில் 29 நாடுகளில் தமிழர்கள் வாழ்கின்றனர். 1. மொரீசியஸ். 2.ரீயூனியன். 3. சீசெல்சு 4. மார்தினிக். 5.குவாடிலோப். 6. சூரிநாம் (பிரெஞ்சுக் கயானா) 7. நியூகலிடோனியா. 8. தாகித்தி. 9. டொமினிக். 10 பிரெஞ்சுக்கனடா 11. கம்போடியா. 12. வியட்நாம். 13. லாவோஸ், தவிர ஆப்பிரிக்க, பிரெஞ்சுப் பகுதிகளிலும் தமிழர்கள்வாழ்கின்றனர். 1. அல்ஜீரியா. 2. டுசினி 3.மொராக்கோ. 4. ஜிபுதி. 5. நைஜீரியா. 6. பிரெஞ்சுக்கினி. 7. காமரூன். 8. ஐவரிகோஸ்ட். 9. காங்கோ. 10. காமேரன். 11. செனெகால். 12. மத்திய ஆப்பிரிக்கக்குடியரசு. 13. மாலி. 14. சேட். 15. சோமாலி. மொரீசியஸ், ரீயூனியன் , கம்போடியா, வியட்நாம், லாவோஸ் பகுதிகளில் வாழும் தமிழர்களைப் பற்றி விவரமாக ஏற்கனவே இந்நூலில் எழுதியிருக்கின்றது. ஆகையால் இங்கு மற்றப் பகுதிகளில் உள்ள தமிழர்களைப் பற்றிய செய்திகள் தரப்படுகின்றன.

பொதுவாக மேலே குறிப்பிட்ட 28 நாடுகளுக்கும், தவிர பிரான்சுக்கும் தமிழர்கள் புதுச்சேரி, காரைக்கால், ஏனாம், கடலூர், நாகப்பட்டினம், சென்னை முதலிய பகுதிகளிலிருந்து சென்றார்கள். இவ்வாறு போனவர்களுக்குப் பிரெஞ்சு மொழி மட்டும் தெரியும், தமிழ் பேசத் தெரியாது. பலர் பிரெஞ்சுப் படையில் சேர்ந்தனர். பிரெஞ்சுப் பட்டாளத்தில் திருமணத் தடையில்லை. மேலும் பிரெஞ்சுப் பணியாளர்களுக்குச் சம்பளம் மிகுதியாக மும்மடங்கு சம்பளம் தரப்பட்டது. வேலை நேரம் குறைவு, ஆகையால் ஓய்வு, விடுமுறை மிகுதி. இலவசச் சம்பளக் கல்வி வாய்ப்பு, உபகாரச் சம்பளமும், உயர்வும் கிடைத்தது, பொதுவாக, தமிழர்களுக்குப் பிரெஞ்சுத் தமிழ்ப் பள்ளிகள், கல்லூரிகள்,

தூதரகங்கள், பட்டாளம், அரசுத்துறைகள் முதலியவற்றில் பணிபுரிய வாய்ப்புக் கிடைத்தது.

இந்தியாவிற்கு மேற்கே 15,000 மைல் தொலைவில் இருக்கும் மார்தினிக் குவாடிலோப்தீவுகளுக்கு 110 ஆண்டுகளுக்கு முன் இப்பிரெஞ்சுத் தமிழர்கள் சென்றார்கள். 1849ஆம் ஆண்டில் மார்தினிக்கிற்கு 6506 தமிழர்களும், குவாடிலோப்பிற்கு 5006 பேர்களும் கரும்புத் தோட்டங்களில் பணிபுரிவதற்காகச் சென்றனர். 6.5.1853இல் காரைக்காலிலிருந்து 318 தமிழர்களும், 4.12.1862இல் 402 பேரும், 1864-1865இல் 1400 பேரும் மார்தினிக் தீவுக்குச் சென்றனர். 19.4.1857இல் மார்தினிக் தீவில் 283 நிர்வாகங்களில் 6032 கூலிகள் 5 அல்லது 10 ஆண்டு ஒப்பந்தங்கள் செய்து கொண்டு வாழ்ந்து வந்தனர். 1859-1889இல் 4656 தமிழர்கள் தாய் நாட்டிற்குத் திரும்பினர். 1882இல் ஏறக்குறைய 30,000 தமிழர்கள் இத்தீவுகளுக்குச் சென்றனர். கரும்புத் தோட்டங்களில் பணிபுரிந்த இத்தமிழர்களைக் கூலிகள் எனத்தான் அழைத்தனர். கலப்பினத் தமிழர்கள் 'சாப்ஸ் கூலி' என அழைக்கப்பட்டனர். மார்தினிக் தீவின் தலைநகரம் போர்ட்டி பிரான்சு.

மார்தினிக் தமிழர்கள் கல்விக்காக மதம் மாறினர். கத்தோலிக்க சமயக் கல்வி, பிரெஞ்சு கற்றனர். இரண்டாவது தலைமுறையிலே பிரெஞ்சு மொழி வீட்டு மொழியாக மாறியது. இவர்களுடைய நடை, உடை, கலாச்சாரம் கூட மாறிவிட்டது. பெயர்கள் கூடப்பேச்சிலும், எழுத்திலும் மாறிவிட்டன. இன்று இத்தீவில் தமிழ்ப்பெற்றோருக்குப் பிறந்தவர்கள் 14,000 பேர் இருப்பார்கள் எனக் கூறலாம். 10,000 தமிழர் ஒரு நூற்றாண்டுக்கு மேல் வாழ்கின்றனர். இவர்களில் பலர் கத்தோலிக்க மதத்தைத் தழுவிய போதிலும் தாலி கட்டித் திருமணம், ஐயனார் சிலைக்கு ஆராதனை, தைப்பொங்கல் விழா, தீபாவளி கொண்டாடுகின்றனர். மதுரை வீரன், சீதா லெட்சுமி, காளியம்மன் விழாக்கள் இருந்தன. விழாவன்று அனைவரும் வெள்ளை ஆடைகள் அணிவார்கள். மாரியம்மன் கோவில் விழா ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும். இவ்விழாவின் போது ஆடு, சேவல் பலியிடுவார்கள். இவர்களில் சிலர் அம்மன் வழிபாடு செய்கின்றனர். 1930ஆம் ஆண்டுகளில் இவர்கள் தெருக்கூத்து, தமிழ் நடனங்கள், ராமர், தேசிங்குராஜா, இரண்யகசிபு, ஹரிச்சந்திரா நாடகங்கள் நடத்தினர். இவர்கள் வைத்துக் கொண்ட பெயர்கள் லூசியன் வேலாயி, பெர்னாண்ட் பொன்னன், அல்பர்ட் மாரிமுத்து, வின்செண்ட் சாயபு, எர்னஸ்ட் முத்து சாமி, மௌனியன், மூட்டு லெட்சுமி, சீனம்மா முதலியன. குவாடிலோப்பின் மொத்த மக்கள் தொகை 1982ஆம் ஆண்டுப் புள்ளிவிவரப்படி 3,28,400 ஆகும். 60 ஆயிரம் தமிழர்கள் இருக்கின்றனர். எனத் தோராயமாக மதிப்பீடு செய்யப்படுகின்றது. இங்குள்ள தமிழர்களும் மார்தினிக் தமிழர்களைப் போல் தமிழ் மொழியை மறந்து விட்டனர். பிரெஞ்சு மொழிதான் இங்கு எல்லோருக்கும் தெரிந்த மொழி. பிரெஞ்சு, நீக்ரோவர், முல்லட்டோவர் ஆகிய பல்வேறு இனமக்கள் இங்கு வாழ்கின்றனர். நீக்ரோ-வெள்ளையர்-தமிழர் கலப்பு மண வாரிசுகள் உண்டு.

தமிழர்கள் இங்கு பஸ்ஸெதொர தலை நகரிலும், கேப்தா நகரிலும் அதிகமாக வாழ்கின்றனர். இவர்களுடைய முன்னோர்கள் மஞ்சக்குப்பம், கடலூர், தரங்கம்பாடி, நாகப்பட்டினம், சந்திர நாகூர், புதுவை, காரைக்கால் முதலிய பகுதிகளிலிருந்து சென்றனர்.

இவர்களிடையே சாதி அமைப்புக் கிடையாது. சேலை கிடையாது. சிலர் சேலை கட்ட விரும்புகின்றனர். ஆனால் சேலை கிடைப்பதில்லை. சேலை போல் துணியை உடுத்துகின்றனர். தமிழ்ப் பெண்களில் பலர் கவுன் போட்டுக் கொள்கின்றனர். இவர்களில் சிலர் நீக்ரோ பெண்களையும் திருமணம் செய்து கொண்டிருக்கின்றனர். இவர்கள் கரும்பு, வாழைத்தோட்ட ஆட்டுப் பண்ணைச் சொந்தக்காரர்களாகவும் பொறியாளர்களாகவும், படைத்துறைப் பணியாளர்களாகவும் பணிபுரிகின்றனர். பிரெஞ்சு மொழி படித்த தமிழர்கள் பெரும் ஊதியம் பெறுகின்றனர். தமிழர்கள் அரசியல்வாதிகளாகவும், பணக்காரர்களாகவும் கூட இருக்கின்றனர்.

குவாடிலோப் தமிழர்கள் பயன்படுத்தும் சில தமிழ்ச் சொற்கள் வெப்பல் (வேப்பிலை) மூல்தானி (மிளகு, செடி), குலம்போ(குழம்பு). வீடியோ டேப் மூலம் இப்போது ஓரளவுத் தமிழ்ப் படம் இங்கு நுழையத் தலைப்பட்டு விட்டது. புதுவை அரசு புதுவை கிளையின் மூலம் பிரெஞ்சு - தமிழ்ப் பாட நூல்கள், பண்பாட்டு நூல்கள் போன்ற நூல்களை குவாடிலோப்புக்கு அனுப்பியிருக்கின்றது.

இங்கு மாரியம்மன், நாகூர்மீரா கோயில்கள் உண்டு. காளி, முருகன், விநாயகர் கோவில்களும் உண்டு. மதுரை வீரன் விழா, தீ மிதி விழா, மாரியம்மன் விழா, தீபாவளி, பொங்கல் விழா உண்டு. பூசாரிகள் பிரெஞ்சு பேசுகின்றனர். மாரியம்மன் விழாவின் போது தெருக்கூத்தும் பிரெஞ்சுப் பாட்டும் உண்டு. 1962க்கு முன் கரிபியன் பிரெஞ்சுத் தமிழ்ப் பகுதிகளில் தை மாதம் பொங்கல் விழா நடந்து வந்தது. கரும்புத் தோட்டப் பாதிப்பால் இதனை இப்போது நிறுத்தி விட்டனர்.

நூமியா என்பன நியூகாலடோனியாவின் தலைநகர், இந்த நாட்டில் மலனேஷியன்ஸ், ஐரோப்பியர், இந்தோனேஷியர், வியட்நாமியர் ஆகிய பலவகை மக்கள் வாழ்கிறார்கள். இங்குப் பெருவாரியாக வழங்கும் மொழி பிரெஞ்சு. இங்கும் சில தமிழர்கள் வாழ்கின்றனர். இங்கும் தாகித்திலும் சுமார் 20 குடும்பத்தினர் பெயர்களை வைத்துக் கொண்டு ஆராய்ந்தால் அவர்களின் முன்னோர்கள் தமிழர்கள் என்று புரியும். உதாரணம் ராயப்பன், சாமிநாதன், தீவி, வீராசாமி முதலியன. (ஞான சூரியன்)

(முக்கியமான ஆதாரம்: வீரப்பன்-உலகத் தமிழர்கள்)

பிரான்ஸ்

பிரான்சின் பரப்பளவு 2,10,039 சதுர மைல்கள். இந்நாட்டின் தலைநகரம் பாரிசு. இந்த நாட்டில் பிரெஞ்சு மக்கள், இத்தாலியர், ஸ்பானிஷ் மக்கள், அல்ஜீரியர், போர்ச்சுகீசியர் ஆகிய பல்வகை மக்கள் வாழ்கிறார்கள். இங்குப் பிரெஞ்சு, பிளமிஷ், ஸ்பானிஷ் ஆகிய மொழிகள் வழங்குகின்றன.

பொதுவாக 18ஆம் நூற்றாண்டிலிருந்து பிரெஞ்சுக்காரர்கள் தமிழ்நாட்டின் மீதும், தமிழின் மீதும் தீவிர கவனம் செலுத்தத் தொடங்கினார்கள் என்று கூறலாம். தென்னிந்திய வரலாறு, வழிபாடுகள் முதலியவை பற்றி சுவாமி காஸ்டெட், சுவாமி பெர்ட்ரண்ட் ஜூன் ஜாக்கஸ்டெஸ்ஸியர், தாமஸ் டிபாயிட்டியர் போன்றவர்கள் முதன்முதலாக எழுதினார்கள். இவற்றை அடுத்து 1761ஆம் ஆண்டில் பிரெஞ்சு மொழியில் திருக்குறள் மொழிபெயர்ப்பு

வெளிவந்தது. ஜூகன் பால்குவின் என்பார் 1778-1783 ஆம் ஆண்டுகளில் குறள், நாலடியார் நீதி வெண்பா முதலிய நூல்களில் சில பகுதிகளை விரிவுரை குறிப்புகளுடன் பிரெஞ்சு மொழியில் வெளியிட்டார். 1788 ஆம் ஆண்டு மரியதாஸ் பிள்ளை என்பார் தமிழ் பாகவதத்தைப் பிரெஞ்சு மொழியிலே மொழி பெயர்த்து வெளியிட்டார். 1867 ஆம் ஆண்டு தமிழ்ச் செய்யுள்களின் பிரெஞ்சு மொழி பெயர்ப்பு வெளிவந்தன. காரைக்காலில் நீதிபதியாகப் பணியாற்றிய ஆடம் என்பார் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், வெற்றிவேற்கை, மூதுரை, நல்வழி முதலிய நூல்களைப் பிரெஞ்சு மொழியில் மொழி பெயர்த்து வெளியிட்டார். காரைக்கால் அம்மையாரின் பாடல்களை லியோன் செயின்ட் ஜான் என்பார் மொழி பெயர்ப்பு செய்து வெளியிட்டார். (காரைக்கால் பிரெஞ்சு நீதிபதி) ஞானதியாகு என்பார் குறள், கம்பராமாயணம் பகுதிகளையும், நீதி இலக்கியங்களையும் மொழி பெயர்த்தார். குறட்பகுதிகளையும், திருக்கோவையாரையும் ஆரியல் என்பார் மொழிபெயர்த்தார். 1894இல் தமிழ் இலக்கணம், ஆனந்தரங்கம் பிள்ளையின் தினப்படி சேதிக் குறிப்பு முதலிய நூல்களின் மொழி பெயர்ப்பு வெளிவந்தன. நெப்போலியன் தம்முடைய நூலகத்தில் கம்ப ராமாயண நூலொன்றை வைத்திருந்தார் என்று ஒரு செய்தி உலவுகிறது. இராமு சூரியமூர்த்தி மொரீசியஸ் தமிழர் வரலாற்றைப் பிரெஞ்சு மொழியில் எழுதியிருக்கிறார். அறிஞர் மு. சங்கிலி திருக்குறளையும், நீதி நூல்களையும் பிரெஞ்சு மொழியில் மொழி பெயர்த்திருக்கிறார்.

இந்தியவியல் பற்றிய பிரெஞ்சு நிறுவனம் 1954இல் புதுச்சேரியில் அமைக்கப்பட்டது. திருப்பாவை, திருமுருகாற்றுப்படை மொழி பெயர்ப்புகள் வெளிவந்தன. மேலும் தமிழ் தொன்மை மருத்துவ முறை, தென்கிழக்காசியத் தமிழ்ப் பண்பு, திராவிடமொழி ஒப்பிலக்கணம் முதலிய நூல்கள் வெளிவந்தன. இவ்வாறாக ஆயுர்வேத மருத்துவம், சைவ ஆகமங்கள், பல்லவர்கள் கோயில்கள் அமைப்பு போன்ற பல்வேறு துறைகளைப் பற்றித் தொடர்ந்து ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கின்றது இந்நிறுவனம்.

பொதுவாகப் புதுச்சேரியில் இருக்கும் இந்தியப் படிப்பு நிறுவனம் தமிழ் வரலாற்றில் சிறந்ததோர் இடத்தைப் பெற்றிருக்கிறது. டாக்டர் பிலியோசா, டாக்டர் க்ரோ ஆகியோரின் மேற்பார்வையில் நடந்து வரும் இவ்வாராய்ச்சி நிறுவனம் பல்வேறு நிலைகளில் தமிழின் வளர்ச்சிக்குப் பாடுபட்டு வருகிறது. சங்கத் தமிழ்ச் சொற்களின் அகராதி, தமிழ்நாட்டு ஆகமங்கள், தமிழ் நாட்டுச் செடிவகைகள், பரிபாடலின் பிரெஞ்சு மொழி பெயர்ப்பு முதலியன இந்த ஆராய்ச்சியில் கனிந்த கனிகள். இதை அடியொற்றிப் பிரான்சு நாட்டில் தமிழ் மொழியின் பயிற்சியும் தமிழ் ஆராய்ச்சியும் தலைநிமிர்ந்து நிற்கக் காண்கிறோம்.

ஜூலியன் வின்சன் சிலம்பு, மணிமேகலை, ஆனந்தரங்கம் பிள்ளையின் நாட்குறிப்பு போன்றவற்றைப் பிரெஞ்சு மொழியில் மொழிபெயர்த்துள்ளார். ஜூலிஸ் பிளாக் (Julies Block) திராவிட மொழிகளின் மொழியமைப்பை ஆராய்ந்து நூல் வெளியிட்டுள்ளார். டாக்டர் பிலி யோசா 'கோலேஞ்-து-ப்ரான்ஸ்' என்ற பாரிஸ் நிலையத்தில் தமிழும் தமிழ்நாட்டுப் பண்பாடும் கற்பிப்பவர். பாரிஸில் பிப்லியோதக் நாகியனேவ் என்ற பெரிய நூல் நிலையம் உள்ளது. அங்கே தமிழ்ச் சுவடிகளைச் சேமித்து வைத்துள்ளனர். ஜூலியன் வின்ஸன் என்பவர் பாரிஸ் பல்கலைக் கழகத்தில் தமிழ் கற்பித்து வந்தார். அவர் பிரெஞ்சு

மொழியில் காமத்துப்பாலை மொழி பெயர்த்துள்ளார். தமிழ் ஏட்டுச் சுவடிகளும் பழைய காலத்தில் அச்சேறிய தமிழ் நூல்களும் பிரெஞ்சில் மொழிபெயர்த்த தமிழ் நூல்களும் பிப்லியோ தெக் நாஷியனேல் என்ற நூல்நிலையத்தில் பாதுகாத்து வைக்கப்பெற்றுள்ளன. இலத்தீன் மொழியில் பெயர்த்து வடித்த தமிழ் நூல்களின் பட்டியலையும் இலத்தீனிலுள்ள தமிழ் இலக்கணத்தையும் (Grammatica Damulica) அங்கே காணலாம். 1845 ஆம் ஆண்டு வெளியான தமிழ்-லத்தீன் அகராதியும் 1815ஆம் ஆண்டில் அச்சான இராமயண உத்தரகாண்டத்தையும் அங்கே காணலாம்.

மூன்றாவது உலகத்தமிழ் மாநாடு பிரெஞ்சு நாட்டில்தான் நடைபெற்றது. பிலியோசா அவர்களே அனைத்து உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவராவார். பாரிசில் காசி என்பவர் தமிழ் கற்பிக்கின்றார். பாரிசில் உள்ள தமிழ்ச் சங்கம் பாரதி நூற்றாண்டு விழாவினை மிகச் சிறப்பாகக் கொண்டாடியது. பாரிசில் 17 தமிழர் கழகங்கள் பலவகையாக உள்ளன. அண்மைக்காலத்தில் பல்லாயிரம் இலங்கைத் தமிழர்கள் குடியேறித் தமிழைப் பரப்புகின்றனர். இவர்கள் கட்டுப்பாடாகப் பிரான்சுத் தமிழர் இயக்கம் நடத்துகிறார்கள். தமிழர் வானொலி ஒன்றையும் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினர் செந்தமிழோசையும் ஒலிபரப்புகின்றார்கள்.

1977 இல் சர்பான் பல்கலைக் கழகத் தென்னிந்திய மொழியில் ஆய்வுக்கான தனிப்பேராசிரியத்துறை ஒன்று அமைக்கப்பட்டது. இங்குத் தமிழும் கற்றுத் தரப்படுகின்றது. புதுமைப்பித்தன், கி.வா.ஜா., ஜானகிராமன், ஜெயகாந்தன் நூல்கள், புதுக்கவிதைகள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. பாரிசுப் பல்கலைக் கழகத்தில் தமிழ் கற்க வாய்ப்புண்டு. இப்பல்கலைக் கழகத்தில் திராவிட இயல் பற்றிய ஆய்வுகள் நடைபெறுகின்றன. சில பிரெஞ்சு நூல்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றன.

தஞ்சை, தமிழ்ப் பல்கலைக் கழக துணைவேந்தர் ச. அகத்தியலிங்கம் இந்திய-பிரெஞ்சு பரிமாற்றுத்திட்டத்தின் கீழ் 1988ஆம் ஆண்டு பாரிஸ் சென்றிருந்தார். அங்கு அவர் அறிஞர்களுடன் கலந்துரையாடி, ஆய்வு நிறுவனங்களைப் பார்த்தார். அங்குப் பல்கலைக் கழகங்களில் தமிழ் பயிற்றுவிக்கப்படுவது பற்றியும் ஆய்வுகள் நடத்துவது பற்றியும் ஒரு கட்டுரையை எழுதி 25–3–88 அன்று தினமலர் (திருச்சி) செய்தித்தாளில் வெளியிட்டார். அவர் அக்கட்டுரையில் அளிக்கும் செய்திகள் பின்வருமாறு:

பிரெஞ்சு நாட்டில் இன்று பல்வேறு நிறுவனங்கள் இந்தியப் படிப்பில் அக்கறை கொண்டுள்ளன. ஆனால் ஓரிரு நிறுவனங்களும் ஒரு சில அறிஞர்களும் மட்டுமே தென்னிந்திய படிப்பில் அதிலும் குறிப்பாகத் தமிழகக் கல்வியில் அக்கறை காட்டுபவர்களாக உள்ளனர். கீழ்த்திசை மொழி-பண்பாடு தேசியக்கல்வி நிறுவனம், பாரிஸ் பல்கலைக் கழகம் பேரா, குரோ தலைமை தாங்கி நடத்தும் சர்பான் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த மேநிலை ஆராய்ச்சி நிறுவனம் என்ற மூன்று நிறுவனங்களே இன்று தமிழ் பற்றிய படிப்புக்கு முக்கிய இடங்களாகக் கருதப்படுகின்றன.

இவற்றில் முந்தியது பிரெஞ்சு அரசாங்கத்தின் நேரடிப் பார்வையில் உள்ள தேசியக் கல்வி நிறுவனத்தைச் சார்ந்துள்ளது. இந்நிறுவனம் கி.பி. 17வது நூற்றாண்டிலேயே (1669) தொடங்கப்பட்டது. இந்திய நாட்டில் பேசப்படுகின்ற இந்தி, தமிழ், இலங்கையில்

பேசப்படுகின்ற சிங்களம் போன்ற நூற்றுக்கும் அதிகமான மொழிகள் இங்குக் கற்பிக்கப்படுகிறன. மொழிகள் மட்டுமல்லாமல் அவை தம் நாட்டுக் கலைகள், கலாச்சாரம், பண்பாடு போன்றவையும் கற்பிக்கப்படுகின்றன. 500க்கும் அதிகமான ஆசிரியர்கள் இங்கு உள்ளனர். இந்திய மொழிகளில் தமிழ், வங்காளி, தெலுங்கு, உருது ஆகியவையும் இடம்பெற்றுள்ளன. இந்தி மொழி பயிலுவோராக நூற்றுக்கும் அதிகமான மாணவர்கள் உள்ளனர். தமிழ் பயிலும் மாணவர்களாக 32 பேர் உள்ளனர். இவர்களில் பிரெஞ்சு நாட்டினர் பாதிக்கும் மேலாக இருக்கின்றனர். மேலும் ரீயூனியன், மொரீசியஸ், போன்ற இடங்களிலிருந்து வந்த தமிழர்களும் இடம் பெறுகின்றனர். இதுபோன்ற பிரெஞ்சு நாட்டில் குடியேறிய தமிழ் மக்களின் குழந்தைகளும் இங்குப் பயில்கின்றனர்.

திருமதி சேதுபதி (இவர் ஒரு பிரெஞ்சுப் பெண்மணி, சேதுபதி என்ற இலங்கைத் தமிழரைக் கணவராகப் பெற்றவர்), முடியப்பநாதன், காசி (பகுதி நேரம்) போன்றவர்கள் தமிழ் கற்பித்து வருகின்றனர். இவர்களோடு கலந்து உரையாடும்போது நல்ல நூல்கள் கிடைப்பதில்லை என்றும் அவை கிடைப்பதற்கு வழிவகைகள் செய்தால் நலமென்றும் தமிழ் நாட்டிற்கு வரும் பிரெஞ்சு நாட்டு மாணவர்களுக்கு உதவிச் சம்பளம் அளித்தால் இன்னும் நிறைய மாணவர்கள் ஆர்வத்தோடு தமிழ் படிக்க வருவார்கள் என்றும் கூறினர். நான் அங்குச் சென்றபோது 50க்கும் அதிக மாணவர்கள் கூடியிருந்து தமிழ் பேசி மகிழ்ந்தது இன்னும் என் நெஞ்சில் நீங்காது நிற்பதைக் காணுகிறேன். பாரிசில் ஒரு துறையை உருவாக்கி அதில் பிரிட்டன், துச்சவா, காட்டலன், பாஸ்க்ட, பர்பர், ஆக்ஸிடன், தமிழ் ஆகிய மொழிகளைக் கற்றுக் கொடுக்கின்றனர். இங்கு 11 மாணவர்கள் தமிழ் படிக்கின்றனர். டாக்டர் முருகையன் என்பார் இத்துறையில் தமிழ் கற்பித்து வருகிறார். இங்கு மொழியியல் அடிப்படையில் தமிழ் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. தமிழ், பிரெஞ்சு அகராதி உருவாக்கப்படுகிறது. பேச்சு மொழியை அடிப்படையாக வைத்துக் காசட் போன்றவைகளின் உதவியால் புதிய முறையில் தமிழ்மொழி கற்பிக்கப்படுகிறது. பல்வேறு நூல்களுக்கு மொழி பெயர்ப்புக்களும், பொருளும் எழுதப்படுகிறது. ரியூனியன், மொரீசியஸ் போன்ற இடங்களில் இருந்தெல்லாம் மாணவர்கள் வந்து படிக்கின்றனர்.

இதுபோன்று சார்பான் பல்கலைக் கழகத்தில் தமிழ் ஆராய்ச்சி நடைபெறுகிறது. பேரா, குரோவின் தலைமையில் பல்வேறு அறிஞர்கள் ஆராய்ச்சி செய்கின்றனர். சங்க இலக்கியங்கள், மொழி நூல், தமிழர்களின் நாகரிகம் போன்ற பல்வேறு பிரிவுகளில் இங்கு ஆராய்ச்சி நடைபெறுகிறது. பிரெஞ்சு நாட்டிலும் ஐரோப்பிய நாடுகளிலும் இவர் நன்கு மதிக்கப்படுகிறார். புதுச்சேரி ஆராய்ச்சி நிறுவனத்தோடு தொடர்பு கொண்டு பல அரிய ஆராய்ச்சிகள் இங்கு நடைபெறுகின்றன.

அடுத்துக் குறிப்பிடத்தக்கது இந்திய ஆசிய ஆய்வு நிறுவனம். கி.பி. 1960ஐ ஒட்டி லூயின் டுமாண்ட் என்பவரின் முயற்சியால் பாரிஸ் நகரத்தில் நிறுவப்பட்ட இந்நிறுவனத்தில் எரிக்மேயர் உட்பட பலர் ஆராய்ச்சி செய்து வருகின்றனர். பெரும்பாலானோர் வட இந்திய ஆய்வுகளிலே ஈடுபட்டுள்ளனர். நாட்டுப்புற இலக்கியங்களைச் சமுகஇயல் பார்வையில் ஆராய்தல், பண்டைய இந்துமதப் போக்கிற்கும் இன்றைய இந்து மதத்திற்கும் இடையே உள்ள வேறுபாடுகளையும் வளர்ச்சிகளையும் ஆய்தல் போன்ற பல தலைப்புகளில் இங்கு ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன. இவர்களில்

இரண்டு அல்லது மூன்று பேர்களே தமிழ்சார் ஆய்வுகளைச் செய்கின்றனர். ரெனிச் அம்மையார் திருநெல்வேலி, திருவண்ணாமலை, உடையார்பாளையம் போன்ற இடங்களில் களஆய்வு செய்து தனது ஆய்வுப் பணியைத் தொடங்குகிறார். தமிழகப் பெண்கள் தெய்வ வழிபாடு செய்யும் நிலையில் சமூகத்தில் அதன் தாக்கம் போன்றவை பற்றிப் பிரெஞ்சு மொழியில் கட்டுரைகள், நூல்கள் எழுதியுள்ளார். தமிழ்ப் பெண்களைப் பற்றிபேசும்போது இவர் முகத்தில் காணப்படும் மகிழ்ச்சியும் பூரிப்பும் இவரது ஆர்வத்தை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது. முதலில் தமிழே தெரியாமல் தமிழகம் வந்தேன். ஆங்கிலமோ அல்லது பிரெஞ்சோ தெரியாத தமிழ்ப் பெண்களோடு எவ்வாறு என் ஆராய்ச்சியை நடத்துவது என்ற ஐயம் எனக்கு இருந்தது. தமிழகப் பெண்களின் அறிவுக் கூர்மையும் செய்திகளைப் புரிந்துகொள்ளும் ஆற்றலும் என்னை மேலும் மேலும் ஊக்குவித்ததால் என் ஆய்வை இன்னும் தொடருகிறேன். என்று கூறி வாய்விட்டுச் சிரித்து மகிழ்ந்தார்.இவர் திருவண்ணாமலைக் கோயில், சைவ மடங்கள் தமிழக ஜமீன்தாரி அமைப்பு போன்ற தலைப்புகளில் ஆய்வுகளை நடத்தி வருகிறார். போர்டாக் பல்கலைக் கழகத்தில் புவியியல் பேராசிரியராக இருக்கும் பேரா ஜீன் ரேசின் தமிழ்சார் ஆய்வில் ஈடுபட்டுள்ளார். பல ஆண்டுகளுக்கு முன்னே புதுச்சேரியிலுள்ள தமிழ்ப் பெண்ணை மணந்து தமிழோடு ஒட்டி வாழ்பவர் இவர். நன்றாகப் பேசுகிறார். தமிழ்சார் ஆய்வில் நல்ல ஈடுபாடும் பிறரை ஊக்குவிக்கும் உள்ளமும் கொண்டவர்.

(மூலம்: டாக்டர் ச. அகத்தியலிங்கம், துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக் கழகம்)

மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள ஒரு சிறுநாடு செனகால் நாடு ஆகும். பிரெஞ்சு பேசப் பெறும் ஆப்பிரிக்க நாடுகளில் ஒரு தலைமை வாய்ந்த நாடு இந்நாடு ஆகும். 1979ஆம் ஆண்டில் செனகால் தக்கார் பல்கலைக் கழகத்தில் இரண்டாவது மொழிகளுள் ஒன்றாகத் தமிழ் அறிமுகப்படுத்தப்பட்டது. செனகால் நாட்டின் அதிபரான செங்கோரின் ஆர்வத்தின் விளைவாகத் தமிழாய்வுப் பகுதி இந்நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆப்பிரிக்காவிலுள்ள 53 நாடுகளில் முதன் முதலாகப் பல்கலைக்கழக அளவில் தமிழை அறிமுகப்படுத்திய நாடு செனகால் ஒன்றே ஆகும். பிரெஞ்சுபேசப் பெறும் உலக நாடுகளிலேயே செனகால் தான் முதன் முதலாகத் தமிழை ஏற்றுள்ளது. இந்நாட்டில் தமிழர்கள் மிகுதியாக இல்லை. ஆப்பிரிக்கர்களும் வெபனியர்களும் தமிழைக் கற்றுக் கொள்கிறார்கள். இவர்களுக்குப் பிரெஞ்சு மொழி மூலம் தமிழ் கற்பிக்கப்படுகின்றது. தக்கார் பல்கலைக் கழக இணைவான ஆப்பிரிக்க அடிப்படை ஆய்வகத்தில் இணைந்த டாக்டர் க.ப. அறவாணன் திராவிட-ஆப்பிரிக்கரிடையே பண்பாட்டுப் பழக்க வழக்கங்களின் ஒற்றுமையை ஆராய்ந்தார். *Anthropological Studies on the Dravido Africans* என்ற நூலை வெளியிட்டார். 2-6-1980 இல் தமிழ்ப் பண்பாட்டுக் கழகம் அமைக்கப்பட்டது. ஞாயிறுதோறும் இலவசத் தமிழ் வகுப்பு, இலக்கியம் மற்றும் வரலாறு, கலந்துரையாடல், கோலம் போடுதல் முதலியவை கற்றுத் தரப்படுகின்றன. இக்கழகத்தின் குறிக்கோள் பிரெஞ்சு மொழி பேசப்படும் நாடுகளில் வாழும் பிரெஞ்சுத் தமிழர்களைப் பண்பாட்டு அடிப்படையில் ஒன்று திரட்டி, ஒருமுகப் படுத்தி, தமிழர் தம் மரபு, கலை, நாகரீகம் ஆகியவற்றை நிலை நிறுத்தல் வேண்டும்; பிரெஞ்சு மொழி வழியாகத் தமிழினத்தின் பெருமையை எடுத்துரைக்க வேண்டும் என்பதாகும். ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடே இந்நாட்டில்தான் நடப்பதாக இருந்தது. பல்வேறு சூழ்நிலை காரணமாக அஃது தமிழகத்திலேயே நடைபெற வேண்டியதாயிற்று.

மேற்கு செருமனி

95,959 சதுர மைல் பரப்புள்ள மத்திய ஐரோப்பாவிலுள்ள மேற்கு செருமனியின் தலைநகரம் பான் ஆகும். செருமன் குடியரசு 10 மாநிலங்களையும் மேற்குப் பெர்லினையும் சேர்த்து உருவாக்கப்பட்டது. இன்று செருமன் நாட்டில் 61.5 மில்லியன் (615.0 இலட்சம்) மக்கள் வாழ்கின்றனர். பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் (1706) சீகன் பால்கு (Bartholomaeus Ziegen balg) என்பார் முயற்சியின் மூலம் தமிழுக்கும் செருமனிக்கும் தொடர்பு ஏற்பட்டது என்று கூறலாம். சீகன் பால்கு 1706 ஆம் ஆண்டு தரங்கம்பாடிக்கு வந்தார். பிறகு தமிழ் கற்றுக் கொண்டார். ந.கடிகாசலம் கூறுகின்றார்: "தமிழை ஆழமாகக் கற்றுத் தேர்ந்து உலகநீதி, கொன்றை வேந்தன், நீதிவெண்பா முதலிய நூல்களை மொழிபெயர்த்தார். ஓலைச் சுவடிகளாக இருந்த தமிழ் நூல்களைத் தேடித் தொகுத்து ஒரு நூலகத்தை நிறுவிக்கொண்டது-தமிழ்ச் சுவடிகளுக்கு ஒரு விளக்கப்பட்டியலை அமைத்துக் கொண்டது-தமிழைப் பயிலும் போதே அகராதிகளைத் தொகுக்கத் தொடங்கியது-தமக்குப்பின் தமிழைக் கற்போருக்குப் பயன்படுமாறு தமிழ் இலக்கணம் ஒன்றை வரையறுத்தது- தமிழ்த் தெய்வங்களின் மரபு முறையை விளக்கிக் காட்டியது. தமிழ் மக்களைப் பற்றிய கலைக் களஞ்சியம் ஒன்றை உருவாக்கியது போன்ற தமிழ்ப் பணிகளை இவர் நிறைவேற்றியது வியப்புக்குரியதேயாகும்."

இவருக்குப்பின் வந்தவர்களில் தமிழுக்குச் சேவை செய்தவர்களில் முக்கிய மாணவர்கள்: வால்தார் (Walther) பப்ரிஸியுஸ் (Fabricius) பிராட்ஹவுப்ட் (Breithaupt) பைஸன் ஹெர்ட்ஸ் (Baisen herz) கிரவுல் (Graul) ரெனியுஸ் (Rhenius) பைத்தான் (Beythan) ஷொமேருஸ் (Schomerus) லேமன் (Lehumanm) இவர்கள் சமயம், இலக்கணம் மொழி பெயர்ப்பு சம்பந்தமான நூல்களை வெளியிட்டார்கள். இந்நூல்கள் செருமனி பல்கலைக் கழகங்களில் கற்பிக்கப்படுகின்றன. பிரிடிரிக் ருங்கர்ட் என்பார் தமிழில் இலக்கணம், அகராதி முதலியவற்றை எழுதியிருக்கின்றார் எனத் தனிநாயக அடிகளார் கூறுகின்றார்.

மேற்கு செருமனியில் மேற்குப் பெர்லின், மர்புர்க், பிரேமன் ஆகிய நகரங்களில் அவ்வப்போது தமிழ் கற்பிக்கப்பட்டிருந்தாலும் ஹாம்புர்க்,ஹைடல்பர்க்,கொலோன் ஆகிய மூன்று பல்கலைக் கழகங்களில் மட்டுமே தொடர்ந்து தமிழ் கற்பிக்கப்படுகிறது எனலாம். இவற்றுள்ளும் ஹாம்புர்க் பல்கலைக் கழகத்தில் 1978 ஆம் ஆண்டுக்குப்பிறகு தமிழ் கற்பித்தல் முன்போல் தீவிரமாக இயங்கவில்லை. இப்பல்கலைக் கழகத்தில் 1970 ஆம் ஆண்டிலிருந்துதான் தமிழ் கற்பித்தல் சிறப்பாக ஊக்குவிக்கப்பட்டது. ஆரம்ப வகுப்பு

முதல் இலக்கிய வகுப்புவரை அனைத்து நிலைகளிலும் தமிழை அறிமுகப்படுத்தி ஹாம்புர்க் பல்கலைக் கழக மாணவர்களிடையே தமிழ் ஆர்வத்தைத் தூண்டிய பெருமை திருமதி அன்டோான் அவர்களையே சாரும். இவரும் டி. ஹெல்மன் என்பாரும் இணைந்து "Tamil usage in Mass Media" எனும் நூலை எழுதியுள்ளார்கள். இந்தியக்கலை வரலாற்றுத் துறையை விட்டு 1978இல் டாக்டர் அன்டோான் விலகிய பின்னர் அங்கே படிப்படியாகத் தமிழ்க் கல்வி குறைந்து நின்றுவிட்டது.

கொலோன் பல்கலைக் கழகத்தில் 1968ஆம் ஆண்டு முதல் தமிழ் கற்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. இங்கே தமிழை அறிமுகப்படுத்திய பெருமை பேராசிரியர் யானர் அவர்களுக்கு உண்டு. மாணவர்களிடையே தமிழைக் கற்பிதற்குரிய ஆர்வம் போதிய அளவு இல்லாததால் தமிழ் கற்பித்தலைவிட நூலடைவுகள்(Bibliography) அகராதிமுதலியவற்றைத் தொகுக்கும் நீண்டகாலத் திட்டங்களுக்கே கடந்த நான்காண்டுகளாக முதலிடம் கொடுக்கப்படுகிறது.

ஹைடல்பர்க் பல்கலைக் கழகத்தில் 1962இல் தெற்காசியக் கழகத்துறை அமைக்கப்பட்டது. தமிழைத் தலைமைப் பாடமாக எடுத்து எம். ஏ., அல்லது டாக்டர் பட்டம் வரையில் கற்கும் வாய்ப்பு தெற்காசியக் கழகத்தில் மட்டுமே உண்டு. தொடக்கநிலை வகுப்பு முதல் இறுதி நிலை இலக்கிய வகுப்பு வரையில் எல்லா நிலைகளிலும் இங்குத் தமிழ் கற்பிக்கப்படுகிறது. இலக்கண இலக்கியங்களோடு பேச்சுத் தமிழ், மொழிபெயர்ப்பு முதலியனவும் மாணவர்களின் தரத்திற்கேற்பப் பாடதிட்டத்தில் இடம் பெற்றுள்ளன. மூன்றாண்டுகள் மொழியைக் கற்ற பிறகு குறிப்பிட்ட பொருளியல் எம்.,ஏ., அல்லது டாக்டர் பட்டத்திற்கான ஆராய்ச்சியில் மாணவர்கள் ஈடுபடுகிறார்கள். இப்பல்கலைக் கழகத்தில் ஒரு நல்ல நூலகமும் இருக்கின்றது. 'திருக்குறள் மேற்கோள் விளக்கம்' (1970) திருக்குறள். இலக்கணம் (1972), தமிழில் அகராதிகள் ஒரு நூலடங்கல்கள் (1928) நன்னூல் மூலமும் கூழங்கைத் தம்பிரான் உரையும் (1980) முதலிய நூல்களை இக்கழகம் வெளியிட்டிருக்கிறது. தவிர பல ஆண்டுகளாகக் கையெழுத்துப் பிரதியாக முடங்கிக் கிடந்த சிவஞான சித்தியாரின் செருமன் மொழிபெயர்ப்பை வெளியிட்ட பெருமையும் இக்கழகத்திற்கு உண்டு. ஆகவே மேற்கு செருமனியில் ஹைடல்பெர்க் பல்கலைக் கழகத்தில் மட்டுமே தமிழைப் பயிற்றுவித்தல் இப்போது சுறுசுறுப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தமிழ்ப் பல்கலைக் கழகத்தைச் சேர்த்த திரு. ஹார்ஸ்ட் சிவய்யா, பேராசிரியர் இராசாராம் இருவரும் இணைந்து செர்மன்-தமிழ் அகராதி ஒன்றை விரைவில் வெளியிட உள்ளனர்.

பல்லாயிரம் இந்தியத் தமிழர்களும், இலங்கைத் தமிழர்களும் இங்குக் குடியேறி, தமிழ்ப் பண்பையும், தாய்மொழியையும் மறந்துவிடாமல் காப்பாற்றி வளர்த்து வருகிறார்கள். சிலர் மதம் மாறி உள்நாட்டுப் பெண்களை மணமுடித்துக் கொண்டு தமிழையும் மரபையும் பேணுவது இல்லை. பெர்லினில் முத்தமிழ் மன்றம் 1970 இல் அமைத்துச் சிறப்புடன் நடத்தி வருகிறார்கள். 1983ஆம் ஆண்டிற்குப் பிறகு 25,000 இலங்கைத் தமிழர்கள் குடியேறி யிருக்கின்றார்கள். அவர்களின் எதிர்காலம் இலங்கை அரசியல் மாற்றத்தை எதிர் நோக்கியுள்ளது.

பெரிஸின் தமிழ்ச் சங்கத்தினர் ஆறு ஆண்டுகளுக்கு மேல் பொங்கல் கொண்டாடுகின்றனர். பொங்கலின் போது திருவள்ளுவருக்கு மாலை அணிவித்தல், பூசை செய்தல், குத்துவிளக்கு ஏற்றுதல் போன்றவற்றைச் செய்கின்றனர். ஞாயிற்றுக் கிழமைகளில் இச்சங்கத்தினர் திரைப்படம் காட்டுகின்றனர். தமிழ் உணவு சமைத்து உண்கிறார்கள். நாட்டில் எப்பொழுதும் தமிழில் உரையாடுகிறார்கள். மாதந்தோறும் தமிழக ஏடும், இலண்டன் முரசும் வருகின்றன.

இலங்கைத் தமிழ் அகதிகள்:-

இலங்கையில் தமிழ் ஈழப் பிரச்சனை தோன்றியவுடன் இலங்கைத் தமிழ் அகதிகள், ஒருநாளைக்கு 100 தமிழர்கள் மேல், குடிபெயர்ந்து தமிழ்நாடு, ஆஸ்திரேலியா, மேற்கு செருமனி, ஹாலந்து, சுவிட்ஸர்லாந்து, பிரிட்டன், அமெரிக்கக் குடியரசு, கனடா முதலிய நாடுகளுக்கு அமைதியான வாழ்க்கையைத் தேடிச் சென்று குடியேறினர்.

1983 ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் தமிழர்களுக்கு எதிராக இலங்கையில் கலகம் தோன்றியவுடன் இலங்கைத் தமிழர்களில் சிலர் மேற்கு செருமனிக்கும் சென்று குடியேறினர். அவதிக்குள்ளான யாழ்ப்பாணத் தமிழர்களில் பலர் இந்தியாவுக்குச் சென்று குடியேற விரும்பவில்லை. ஏனென்றால் பல யாழ்ப்பாணத் தமிழர்கள் இந்தியாவும் ஒரு அந்நிய அயல்நாடுபோல்தான் எனக் கருதினார்கள். இந்தியாவில் அவர்களின் உறவினர்களோ,வேறுவித நெருங்கிய பந்தபாசமோ அவர்களுக்குக் கிடையாது. மேலும், அகதிகளாகச் சென்ற பலர் படித்துப்பட்டம் பெற்றவர்கள், மேலைநாடுகளுக்குச் சென்றால் நல்ல உயர்மட்ட வேலை வாய்ப்பு கிடைக்கும், மேம்பட்ட வாழ்க்கை சூழ்நிலையும் உண்டாகும் என்ற நோக்கத்துடன் அவர்கள் மேலை நாடுகளுக்குச் சென்றார்கள். 1987ஆம் ஆண்டு ஜூலை 29ஆம் தேதி இலங்கையில் அமைதி மற்றும் சமூக நிலையை ஏற்படுத்தும் இந்திய இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்டவுடன் இவ்வாறு இலங்கையிலிருந்து குடிபெயர்ந்து செல்லும் அகதிகளின் எண்ணிக்கை குறையத் தொடங்கியது. ஆனால் மேற்கு செருமனிக்கும், பிற மேலைநாடுகளுக்கும் சென்ற அகதிகளோ திரும்பி வரவேயில்லை எனக் கூறலாம்.

செருமன் வானொலி அறிக்கையின்படி மேற்கு செருமனியில் 25,000 இலங்கைத் தமிழ் அகதிகள் இருக்கின்றனர். செருமன்-தமிழ் நட்புறவுச் சங்கத்தின் செயலர் எம். எஸ். சின்னத்துரை கூட, தற்சமயம் செர்மனியில் அகதியாகத்தான் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்.

இலங்கை அகதிகள் வந்து குடியேறும் செருமனியில் உள்ள சூழ்நிலையைப் பற்றி அறிந்து கொள்வது நல்லது. செருமன் நாடு பல்வேறு மலை வாழ் இனமக்களின் சேர்க்கையால் உருவாயிற்று. அத்தகைய மலையின மக்களை இன்றும் காணலாம். இத்தகைய வேறுபாடு மாநிலத்திற்கு மாநிலம், பகுதிக்குப் பகுதி உள்ளது. பல்வேறு இன மக்கள் வாழ்வதே செருமன் நாட்டிற்கு ஒரு அழகைக் கொடுக்கின்றது. இன்றுவரை மக்கள் உள்நாட்டுக் கிளை மொழிகளில் உரையாடினாலும் உயர்ந்த செருமன் (Houchdeutsch) நாட்டின் அலுவலக மொழியாகப் பயன்படுத்தப்படுகின்றது. செருமன் குடியரசின் மக்கள் தொகை அந்நாட்டு மலையின மக்களை மட்டும் கொண்டதல்ல. பல்வேறு நாடுகளிலிருந்து

குடிபெயர்ந்த மக்களையும் கொண்டுள்ளது. இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் போலந்திலிருந்து மிகுதியாகத் தொழிலாளர்கள் செருமனியின் நிலக்கரிச் சுரங்களில் வேலை செய்யக் குடிபெயர்ந்தார்கள். இவர்கள் செருமன் மக்களோடு முழுதும் ஒன்று கலந்து விட்டனர். அவர்களுடைய குடும்பப்பெயர்கள் மட்டுமே அம்மக்கள் போலந்து நாட்டைச் சார்ந்தவர்கள் என்பதைச் சுட்டுகின்றன. கடந்த சில பத்தாண்டுகளில் முன்னாள் செருமன் கிழக்கு எல்லைப் பகுதிகளிலிருந்தும், கிழக்கு தென்கிழக்கு ஐரோப்பாவிலிருக்கும் ஐரோப்பியர் அல்லாத பிற நாடுகளிலிருந்து நாடு கடத்தப்பட்டவர்கள், அகதிகள், குடியேற்றவாசிகள் முதலியோர் மிகுதியான அளவில் செருமனிக்குக் குடியேறினார்கள். இந்நூற்றாண்டின் அறுபதுகளில் செருமனியில் தொழிலாளர் பிரச்சினை தோன்றியது இந்நேரத்தில் வெளிநாட்டுத் தொழிலாளர்கள் செருமன் குடியரசிற்குக் குடிபெயர்ந்தார்கள். சுமார் 25இலட்சம் மக்கள் அழைப்புப் பணியாளர்களாக வேலை செய்தனர். இவர்கள் முக்கியமாக இத்தாலி, துருக்கி, யுகோஸ்லேவியா, கிரீஸ், ஸ்பெயின், போர்ச்சுக்கல் போன்ற நாடுகளிலிருந்து வந்தனர். தொடக்கத்தில் தனியாக வந்த தொழிலாளிகள் பின்னர் தங்கள் குடும்பங்களை அழைத்து வந்தனர். இத்தகைய அயல்நாட்டுத் தொழிலாளர்களும், அவர்களுடைய குடும்பங்களும் சேர்ந்து 45 இலட்சம் மக்களாகும். இவர்களில் பாதிப்பேர் 10 ஆண்டு செருமனியில் வாழ்ந்தனர். இந்த அயல்நாட்டுத் தொழிலாளர்களைக் காஸ்டர்பெய்டர் (Gastarbeiter) என அழைத்தனர். சமீபகாலத்தில் உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து பல்வேறு இனமக்கள் செருமனிக்கு வந்தனர். பொருளாதாரப் பிரச்சனைகளும், உள்நாட்டில் தோன்றும் அடக்குமுறைகளுமே இதற்கு முக்கியக் காரணங்களாகும். அவர்கள் குடிப் பெயர்ச்சியின் பின்னனி அரசியலை அடிப்படையாகக் கொண்டது. சிங்களவர்களால் கொடுமைப் படுத்தப்படுவதையும், கீழ்ப்படுத்தப்படுவதையும் தாங்கிக் கொள்ள முடியாமல் இலங்கைத் தமிழர்கள் குடி பெயர்ந்தனர்.

குறிப்பாக, செருமன் குடியரசு இரண்டுகாரணங்களுக்காகப்பாதுகாப்பான நாடாக அவர்களால் கருதப்பட்டது. முதலாவது செருமன் குடியரசு அரசியல் பாதுகாப்புக் கொடுப்பதற்காக வசதியைத் தன் அரசியல் அமைப்புச் சட்டத்தில் கொண்டிருந்தது. இரண்டாவதாக, பெர்லின்(கிழக்கு) பெர்லின் (மேற்கு) இங்கிருந்து உரிய விசா இல்லாமல் செருமன் குடியரசிற்குள் நுழைவது அவ்வளவாகக் கடினமில்லை. ஏனெனில் இந்நகரின் மேற்கு எல்லைப் பகுதிகளில் கண்டிப்பான சோதனைகள் நடத்தப்படுவதில்லை. எனவே, பெர்லின் நகரம் குடிப்பெயர்ச்சியின் நுழைவாயில் போல இலங்கைத் தமிழர்களுக்கு அமைந்தது. சமீபத்தில் தோன்றிய கிழக்கு-மேற்கு செருமனி உடன்பாட்டிற்கு பிறகு இவ்வாறு நுழைவது சுலபமில்லை,எனக்கூறலாம். இவைதவிர வேறு சில வழிகளும் பெயர்ச்சிக்குத் துணை செய்கின்றன.

இத்தகைய தமிழர்களின் குடிப்பெயர்ச்சியும் பாதுகாப்புத் தேடுவோர் குடிப்பெயர்ச்சியும் உலகப் போருக்குப் பின்னர் செருமனிக்குள் நிகழ்ந்த குடிப்பெயர்ச்சி அலை என்று கருதலாம். தற்போது சுமார் 4,000 மக்கள் மாதம் ஒன்றுக்குப் பல வெளிநாடுகளிலிருந்து செருமன் நாட்டிற்கு அரசியல் பாதுகாப்பு தேடுவோராக வந்த வண்ணம் உள்ளனர். இவர்களில் பெரும்பாலும் லெபனான்,துருக்கி, இலங்கை ஆகிய

நாடுகளிலிருந்து வருகின்றனர் என அதிகாரிகள் கூறுகின்றனர். (செருமனி வானொலி அறிக்கை 7.3.1987)

இவ்வாறு செருமன் நாட்டிற்கு வந்த இலங்கைத் தமிழர் அகதிகளின் எண்ணிக்கை 25.000 ஆகும். செருமன் நாட்டிற்கு வந்த பிறகு இவர்கள் போலிசிடம் சரணடைய வேண்டும். இவர்கள் போலிசில் அரசியல் பாதுகாப்புக் கோருவோர்கள். அதிகாரிகள் அவர்களைப் பதிவு செய்து கொண்டு நாட்டின் பல்வேறு இடங்களிலிருக்கும் பாதுகாப்பிடங்களுக்கு அனுப்புவார்கள். இத்தகைய தற்காலிக இருப்பிடத்தில் உணவு, உடை, தங்குமிடம், கைச்செலவிற்குப் பணம் (சுமார் 300. D.M./P.M.) முதலியன கொடுக்கப்படும். இத்தருணத்தில் இவர்கள் எந்தவிதப் பணியும் செய்ய அனுமதிக்கப் படுவதில்லை. அவர்கள் பொருளீட்ட வந்துள்ளனரா. அரசியல் பாதுகாப்பிற்கு வந்துள்ளனரா என்பது மெய்ப்பிக்கப்படவேண்டும். இத்தகைய சோதனை பொதுவாக நீண்டநாள் எடுக்கும். சோதனைக் காலம் முடியும் வரை இவர்கள் இவ்விடங்களில் இருப்பர். இக்காலத்தில் செருமன் மொழிப்பயிற்சி அளிக்கப்படும் தமிழர்கள் செருமன் மொழியைப் பயில்வார்கள். நீண்டநாள்கள் தங்க முடியாது என்ற காரணத்தினால் சில தமிழர்கள் இந்த பயிற்சியில் அதிகம் அக்கறை எடுத்துக் கொள்வதில்லை. துருக்கி மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து வந்த தொழிலாளர்களைக் காட்டிலும் செருமனியில் உள்ள தமிழர்கள் அதிகமாகக் கல்வி பயின்றுள்ளார்கள். அயல்நாட்டுத் தொழிலாளர்கள் (Gastarbeiter) பிற்பட்ட கிராமப் பகுதிகளிலிருந்து பணியமர்த்தப்பட்டவர்கள். மொழிக் கல்வியைக் கற்பதில் இவர்கட்கு இடர்ப்பாடு இல்லை. தமிழர்களைப் பொறுத்தவரை அவர்களுடைய கல்வித் தகுதியின் காரணமாக மொழியைக் கற்பது எளிதாக இருக்கின்றது.

செருமன் மொழி வாழ்வின் எல்லாத் துறைகளிலும் செயல்படுகின்றது. அலுவலகம், கல்வி, இலக்கியம், செய்தித்தாள், வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம் எல்லாமே செருமன் மொழியில்தான். ஆங்கிலம் எடுத்துக்காட்டாக அலுவலகத்திலோ வெளியிலோ பயன்படுத்தப்படுவதில்லை. எனவே, செருமன் நாட்டில் வாழ்ந்தாலே செருமன் மொழி தெரிந்திருக்க வேண்டும்.

இந்தச் சூழல் செருமன் மக்களுக்குப் பொருந்துவதாக அமைந்துள்ளது. ஆனால் செருமனியில் வாழும் வெளிநாட்டவர்களுக்குப் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கின்றது. செருமன் மொழி தெரியாதவர்கள் எண்ணற்ற மொழிச் சிக்கலுக்கு உள்ளாகின்றனர். ஆனால், செருமன் அரசு வெளிநாட்டவர்கள் செருமன் மொழி படிப்பதையே எதிர்பார்க்கிறது. செருமனியில் வாழ்வதற்கு எந்நாட்டவர் வந்தாலும் செருமன் மொழியைக் கற்க வேண்டும். அரசும் இதற்கு மிகுதியாக உதவி செய்கின்றது. செருமன் பல்கலைக் கழகத்தில் பயில விரும்பும், அயலக மாணவர்கட்குச் செருமன் மொழி கற்பிக்கப்படும். செருமன் மொழி கற்றபிறகே அவர்கள் கல்வி பயிலமுடியும். செருமன் குடியரசுக்கு வரும் அயலகப் பள்ளிக் குழந்தைகள் இரண்டு ஆண்டிற்குள் செருமன் மொழி பயில வேண்டும். பின்னரே இவர்கள் செருமன் மாணவர்களுடன் சேர்க்கப்பட்டு, கல்விபயில அனுமதிக்கப்படுவர். அயலக மாணவர்கள் பொதுவானப் பாடங்கள் தவிர வாரத்திற்கு மூன்று அல்லது ஐந்து மணி நேரம் தங்கள் சொந்த மொழியிலும் பயிற்சி பெறுவர். இதற்கான பாடங்கள் அந்தந்த நாட்டு ஆசிரியர்கள் தயார் செய்து கற்பிப்பார்கள்.

இப்பாடங்கள் மாணவர்களின் சொந்தமொழி வரலாறு, புவியியல் மதம் தொடர்பாக அமையும் கூடுமானவரை மாணவர்கள் தங்கள் சொந்த நாட்டின். தொடர்பு அறுந்து விடாமல் செருமன் நாட்டுடன் ஒன்றுகலப்பதையே செருமன் அரசு கொள்கையாகக் கொண்டுள்ளது. செருமன் குடியரசுக்கு ஒருவர் நிரந்தரமாகக் குடியேற முடியாதாகையால் அயல் நாட்டவர்கள் மீண்டும் அவர்கள் தாய் நாட்டிற்குச் செல்கின்றார்களா என்றும் அரசு கவனிக்கின்றதுஅயல்நாட்டவர்கள் தங்கள் நாட்டுடன் பண்பாட்டு ரீதியாக தொடர்பு கொண்டிருந்தால் தான் அவர்கள் திரும்பிச்செல்ல இயலும். இல்லையென்றால் மீண்டும் திரும்பிச் செல்லும்போது அவர்கள் மேலும் சில பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டி வரும். சமீப காலங்களில் செருமனியில் உள்ள சிறுபான்மையினரின் மொழிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. தொலைக்காட்சியும் வானொலியும் துருக்கி, கிரேக்கம், இத்தாலி, ஸ்பானிஷ், போர்ச்சுக்கல் போன்ற மொழிகளில் சில நிகழ்ச்சிகளை ஒலிபரப்புகின்றன. செய்தித்தாள்களும் இம்மொழிகளில் வெளிவருகின்றன. முக்கியமான அறிக்கைகள் செருமன் மொழியிலும் மேல் குறிப்பிட்ட மொழியிலும்ஒலிபரப்பப்படு இத்தகைய ஏற்பாடுகள் மொழிச் சிறுபான்மையோர் தங்கள் நாடுகளுடனும், செருமன் நாட்டுடனும் அனுசரித்துச் செல்வதற்கு வசதியாக அமைகின்றன.

திரு ஹார்ட்சிவாயா (மேற்கு செருமனி), பின்வரும் கேள்வியை எழுப்புகின்றார் (1987 மார்ச்சு மாதம்) செருமனிக்கு வரும் தமிழர்களின் நிலை என்ன? மேலே குறிப்பிட்ட எந்த இனத்தவர்களுடனும் இவர்கள் பொருந்திவரவில்லை. மேலும் மேலே சொல்லப்பட்ட மொழிகளின் பயனும் அவர்கட்குச் சென்றடைவதில்லை. தமிழர்கள் 1983க்குப் பிறகே செருமனிக்கு வர ஆரம்பித்தனர். அவர்களுக்குரிய சோதனை பாதுகாப்பிற்கு வந்துள்ளனரா, பொருளீட்ட வந்துள்ளனரா எனும் அரசு சோதனை இன்னும் முடியாத நிலையில் அவர்கள் பாதுகாப்பு இருப்பிடத்திலேயே இருக்கின்றனர். அவர்களின் எதிர்காலம் நிலையில்லாமல் இலங்கையின் அரசியல் மாற்றத்தை எதிர்நோக்கியுள்ளது. அரசியல் பாதுகாப்புக்கொடுக்கப்பட்டாலும் செருமன் மக்களோடு அவர்களை எவ்வாறு ஒன்றிணைப்பது என்பது பிரச்சனையாக உள்ளது. சமீபகாலத்தில் முதன்முதலாகச் செருமன் அரசு 70 இலங்கைத் தமிழர்களுக்குப் பணி செய்ய அனுமதி அளித்துள்ளது. முன்னாளில் குடிபெயர்ந்தவர்களைப் போலில்லாமல் இவர்கள் நிலை முற்றிலும் மாறுபட்டது. இவர்களுடைய வாழ்க்கை நடைமுறைகள் பண்பாடு, மொழி, யாவும் செருமன் நாட்டினரிடமிருந்து மிகவும் மாறுபட்டுள்ளன. செருமனிக்கென்றே ஆசியாவில் காலனி நாடுகள் இல்லாததால் (TSINGTAU வைத் தவிர) ஆசியாவிலிருந்து வரும் மக்களை எவ்வாறு நடத்துவது என்ற அனுபவம் இல்லை. இதற்கான வழிமுறைகளை இனிமேல் தான் செருமன் அரசு காண முயல வேண்டும்இலங்கைத் தமிழர் அனைவரும் இளைஞர்கள் பெண்கள், குழந்தைகள் என்ற சமூகம் தமிழர்களிடையே பெரும்பாலும் இல்லை இந்நிலையில் நிரந்தரப் பாதுகாப்பு கொடுத்தாலும் என்ன நிகழும் என்று சொல்வதற்கில்லை. இவர்கள் செருமன் மொழியைக் கற்று அம்மக்களுடன் பழகி மாற்றம் அடைவார்களா? இவர்களுக்கெல்லாம் பணிகிட்டுமா? தாய் நாட்டிலிருந்து ஏற்படும் பிரிவைத் தாங்கிக் கொள்வார்களா? இக்கேள்விகளுக்கெல்லாம் இப்போது விடை காண்பது எளிதல்ல. இவை எல்லாவற்றையும் அடைந்தால் கூட, செருமன் மக்களுடன் ஒன்றிணைவது கடினம். அவர்கள் தங்கள் மொழியையும் பண்பாட்டையும் பாதுகாப்பார்களா என்பது அவர்களது நடவடிக்கைகளைப் பொறுத்தே அமையும் துருக்கி மற்றும், மற்

இனத்தவர்களைப்போல அவர்கள் செயல்படமுடியும்.வியட்னாமிய குடும்பங்கள் லோயர் ஸாக்ஸானாவில் (Lower Saxona) தனிக்குழுக்களாக வாழ்கின்றனர். செருமானியர்களுடன் செருமன் மொழியில் உரையாடுகின்றனர். அவர்களுக்கென்று இருப்பிடங்கள் உள்ளன. அவர்கள் தனித்தே வாழ்கின்றனர். அவர்கள் தங்கள் மொழிகளையும் மரபுகளையும் பாதுகாக்கிறார்கள். பண்பாட்டில் மட்டும் அடுத்து வாழ்கின்ற செருமானியர் பண்பாடு கலந்துள்ளது. தமிழர்களைப் பொறுத்தவரையில் (தற்சமயம் சமீபத்தில் வந்த இளைஞர்கள் இவர்கள் தங்கள் மொழி, பண்பாடுடன் வாழ்பவர்கள், அடுத்த தலை முறையினர் எவ்வாறு வாழ்வார்கள்),அவர்களின்மொழியும் பண்பாடும் மரபும் எவ்வாறு இருக்கும் என்பது அவர்கள் தங்கள் வாழ்வை (குடும்பத்தை) எவ்வாறு அமைத்துக் கொள்ள விரும்புகின்றார்களோ அதைப் பொறுத்தே அமையும் அவர்கள் எதிர் காலத்தில் தமிழ்ப்பெண்களை மணந்து கொள்ள முடியுமா? இவ்வாறு இருப்பின் அவர்கள் மொழி, மரபு பண்பாடு ஆகியவற்றைப் பாதுகாத்துக் கொள்ளமுடியும். கலப்பு மணந்தான் அவர்களுக்கு வழி என்றால் செருமன் பண்பாடும்,செருமன் மொழியும் அவர்களைக் காலப்போக்கில் ஆதிக்கம் கொள்ளும். அச்சுத்தொழில், வீடியோ, கேசட், ரிக்கார்டர்கள் போன்ற நவீன தொழில் நுட்பக்கருவிகள் மூலம் அவர்கள் தங்கள் பண்பாட்டைப் போற்றிப்பாதுகாத்துக் கொள்ள முடியும். அவர்கள் தங்கள் தாய்நாட்டுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். தாய்நாடும் பண்பாட்டு வழியில் அவர்களுக்குத் துணை செய்யவேண்டும். செருமானியர்களுக்கும் தமிழ்ப் பண்பாட்டில் ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும். இது இரண்டு இனமக்களும் புரிந்து ஒத்து வாழ வகை செய்யும்."

பொதுவாக செருமானியர்களும் அயல்நாட்டவர்களும் அமைதியாகவும் ஒழுங்காகவும் வாழ்கின்றனர். ஆனால் 20 விழுக்காட்டிற்கு மேல் அயல் நாட்டவர்கள் அதிகமாக வாழும் நகரங்களில் சில பிரச்சினைகள் இல்லாமல் இல்லை. சுமார் 16 இலட்சம் எண்ணிக்கையுள்ள துருக்கிய முசுலிம்கள் செருமானியர்களின் பண்பாட்டிற்கும் வாழ்க்கை முறைக்கும் முற்றிலும் மாறுபட்ட நிலையில் செருமன் நாட்டில் பல சிக்கல்களுக்கு உள்ளாயினர்.

புதியதாகக் குடியேறிய செருமனியில் இனப்பாகுபாடு அனுபவம் ஒருசில இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு உண்டு . ஓரிரு சூழ்நிலையில் செருமானியர்களுடன் சிக்கல்களும் பிரச்சினைகளும் தோன்றின. ஆனாலும், பொதுவாக அவர்கள் அமைதியுடன் வாழ்கின்றார்கள்என்று கூறலாம். அவர்கள் எவரும் இலங்கைக்குத் திரும்பியதாகச் செய்தி கிடையாது. ஆனால் சிலர் கனடாவுக்குச் சென்று குடியேறியிருக்கின்றார்கள் என்ற தகவல் கிடைத்திருக்கின்றது.

இதர மேற்கு ஐரோப்பிய நாடுகளில் இலங்கை அகதிகள்:

இலங்கைத் தமிழர்களை மேற்கு செருமனியை விட்டுவெளியே அனுப்ப மேற்கு செருமனி அரசு எந்தவித முயற்சியும் எடுக்கவில்லை. அவர்களைச் செருமனியில் தங்குவதற்கு அனுமதி அளித்திருக்கிறது. ஆனால் இலங்கைத் தமிழ் அகதிகள் மேற்குச் செருமனியைத் தவிர நெதர்லாந்து, பெல்ஜியம், பிரான்சு, பிரிட்டன் முதலிய இதர மேலை ஐரோப்பிய நாடுகளிலும் இருக்கின்றனர். பிரிட்டனில் சுமார் 2,500. பேர் இருக்கின்றனர். பிரிட்டன் இவர்களைப் பிரிட்டனை விட்டுவெளியேற்றத் தீர்மானம் எடுத்து அதைச்

செயல்படுத்தத்தொடங்கியிருக்கின்றது.1987 செப்டம்பர்த் திங்கள் 6-ஆம் தேதி இலங்கைத் தமிழர்களை அகதி என்று ஏற்றுக்கொள்ளாமல் அவர்களை இலங்கைக்குத் திரும்ப அனுப்ப பிரிட்டிஷ் அரசு முடிவு எடுத்தது.

ஆனால் பிரிட்டிஷ் நீதிமன்றங்கள் அரசுத் தீர்மானத்தை எதிர்த்தன. ஆகையால் தொடர்ந்து அவர்கள் பிரிட்டனிலே வாழ்கின்றார்கள். பெரும்பான்மையான அகதிகள் 20-25 வயதினர். அவர்களில் பெரும்பான்மையோர் திருமணம் செய்து கொள்ளாதவர்கள். பலர் ஹோட்டல்களிலும், ரெஸ்டாரண்டுகளிலும்(உணவகங்கள்)பெட்ரோல் பங்குகளிலும் பணிபுரிகின்றனர். சட்டப்படி அளிக்கப்பட வேண்டிய ஊதியம் அவர்களுக்கு அளிக்கப்படுவதில்லை. இவர்களில் எவ்வளவுபேர் இலங்கையில் அமைதியான சூழ்நிலை உருவாகியவுடன் திரும்பி போவார்கள் என்று தெரியவில்லை. ஆனால் இவர்களை அகதிகள் என்று மேற்கு ஐரோப்பிய நாடுகள் ஏற்றுக் கொண்டால்தான் இவர்கள் நிலையாக இந்நாடுகளில் குடியேறி வாழமுடியும். இந்நாடுகளில், சட்டத்தைப் புறக்கணித்து மறைந்து வாழ்பவர்களுக்குச் சரியான ஊதியம் அளிக்காமல் அவர்களுடைய முதலாளிகள் அவர்களைச் சுரண்டிப் பிழைக்கின்றார்கள். ஐ. நா. அகதிகள் ஹை கமிஷனர் (*U. N. High Commissoners for Refugees*) இப்பொழுதிருக்கும் சூழ்நிலையில் இலங்கைத் தமிழர்களை மீண்டும் இலங்கைக்கு அனுப்பாமல் இருப்பது நல்லது என மேலை ஐரோப்பிய நாடுகளிடம் பரிந்துரை செய்தார்.

பிற நாடுகளில் தமிழும் தமிழர்களும்

இத்தலைப்பின் கீழ் வரும் நாடுகளை நான்கு பிரிவாகப் பிரிக்கலாம். (1) கம்யூனிச நாடுகள் (பொதுவுடமை நாடுகள்) (2) ஏனைய ஐரோப்பிய நாடுகள் (3) ஆப்பிரிக்க நாடுகள் (4) மற்ற ஆசிய நாடுகள்

(1) கம்யூனிச நாடுகள்

சோவியத் யூனியன், சீனா. கம்பூசியா, லாவோஸ், வியட்நாம். செக்கோஸ் லோவாகியா,போலந்து, கிழக்கு செருமனி, ஹங்கேரி, யூகோஸ்லேவியா, . வடகொரியா முதலிய நாடுகளைக் கம்யூனிஸ்டு நாடுகள் எனக் கூறலாம். சீனா, கம்பூசியா, லாவோஸ், வியட்நாம் முதலிய நாடுகளில் வாழும் தமிழ் மரபைப் பற்றி ஏற்கனவே கூறிவிட்டேன்.

சோவியத் யூனியன்

86,00,350 சதுர மைல்கள் பரப்புள்ள சோவியத் யூனியன் (சோவியத் ஒன்றியம்) நாட்டின் தலைநகரம் மாஸ்கோ. இந்நாட்டில் ருஷ்யமொழி, உக்ரேனியன், பைலோ ரஷ்யன், ஆர்மீனியன் முதலான பல மொழிகள் வழங்கி வருகின்றன. சோவியத் யூனியனில் மாஸ்கோவில் உள்ள சர்வதேச உறவுக்கல்லூரியிலும், கீழைக்கலையியல் நிறுவனத்திலும், ஆசிய ஆப்பிரிக்கக் கலையியல் நிறுவனத்திலும், மேலும் லெனின் கிராட் பல்கலைக் கழகத்திலும் தமிழ்க் கல்விக்கு வாய்ப்புக்கள் உண்டு.

டாக்டர் ந. கடிகாசலம் கொடுக்கும் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன:

திராவிட மொழிகள் பற்றிய ஆய்வு சோவியத் ஒன்றியத்தில் நெடுங்காலமாக நடந்து வருகிறது. 1787-89 ஆம் ஆண்டுகளில் பீட்டர்ஸ் பர்க்கில் (இன்றைய லெனின் கிராட்) வெளியான பன்மொழிகள்-கிளைமொழிகளின் ஒப்பீட்டு அகராதி தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய நான்கு திராவிட மொழிகளின் சொற்றொகுதியின் விரிவான சுருக்க விளக்கத்தை அளிக்கிறது. 1901 ஆம் ஆண்டு, சொற்களஞ்சிய அகராதி வெளியிடப்பட்டது. அதில் மாஸ்கோ பல்கலைக் கழக ஸ்லாவ் இனமொழிகளின் பேராசிரியராக விளங்கிய எஸ். கே.புலிச் என்பவர் தமிழ் மொழி பற்றி எழுதியுள்ளார்.

1926 இல் லெனின்கிராடில் தமிழ் மொழியின் இலக்கணம் என்ற நூல் வெளியானது. இதை ருஷ்ய மொழியில் எழுதியவர் ஏ.எம்.மெர்வர்த். இவர் தயாரித்த தமிழ்-ருஷ்ய மொழி அகராதியில் 38,000 சொற்கள் இடம் பெற்றுள்ளன. தமிழ் மொழியின் சொல்வடிவமைப்பு என்ற நூலை இவர் எழுதினார்.

திராவிட மொழியினைப் பற்றி ஐம்பதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியவர் பேராசிரியர் எம். ஆந்திரனோ ஆவார். இன்றைய தமிழில் வினைச்சொற்கள் என்பது குறித்து 1960 இல் ஆராய்ச்சி நூலொன்று எழுதினார். தமிழ் மொழி, கொச்சைத் தமிழும், வட்டார வழக்குகளும், தமிழ் இலக்கணம் ஆகிய நூல்களையும் எழுதியுள்ளார். 25 திராவிட மொழிகளையும் பல வட்டார வழக்குகளையும் ஒப்பிட்டு இவர் ஆராய்ந்ததன் விளைவாக ருஷ்ய மொழியில் எழுந்த நூலே திராவிட மொழிகளின் ஒப்பியல் இலக்கணம் ஆகும். *A standard Grammar of Modern and Classical Tamil* என்னும் இவருடைய ஆங்கில நூல் சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பரிசைப் பெற்றுள்ளது.

தமிழ்ப்பாடப் புத்தகம், இக்காலத் தமிழ் இலக்கிய வரலாறு ஆகிய நூல்களை டாக்டர் ஸ்வெத்லானா துருப்னிக் கோவா என்பவர் எழுதியுள்ளார். ஓலைச்சுவடிப் பாடல்கள் என்ற தலைப்பில் பழந்தமிழ்ப் பாடல்களை ருஷ்ய மொழியில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார் அலெக்ஸாண்டர் துமியான்ஸ்க் என்பார். மற்றும் தமிழ் இலக்கிய ஆய்வுத் தொடர்பான கட்டுரைகள் எழுதியவர்கள் விளாமிதிர் மக்கா ரெங்கோ, விக்டர் புர்னிக்கா.

தமிழ் இலக்கிய மொழிபெயர்ப்பில் உலகநாடுகளில் முதன்மை இடம் பெறுவது சோவியத் ஒன்றியம் என்பதில் ஐயமில்லை. திருக்குறள் மூன்று முறை சோவியத்தில் வெளியிடப்பட்டது. கவிதை வடிவிலான திருக்குறள் மொழிபெயர்ப்பு 1974 இல் வெளிவந்தது. அந்நூலில் குறள் ஒவ்வொன்றும் இரண்டே வரியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது சிறப்பானதாகும். சங்கப்பாடல்கள் பலவும், சிலப்பதிகாரக் காவியமும் பல ஆண்டுகளுக்கு முன்பே ருஷ்ய மொழியில் மொழிபெயர்க்கபப்பட்டுவிட்டன.

பேராசிரியர் அகத்தியலிங்கம், பேராசிரியர் சக்திவேல் பின்வரும் செய்திகளை அளிக்கின்றனர்:-

இப்ராகிமோவ் என்பவர் திருக்குறளை ஈரடிச் செய்யுளிலேயே மொழிபெயர்த்துள்ளார். 20ஆம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியங்களும், கதை, நாவல், சிறுகதைகளும் ருஷ்ய மொழியில் மொழிபெயர்க்கப்படுகின்றன. ஸ்மிர்னோவா, பாரதியார் பாடல்களை மொழிபெயர்த்துள்ளார். ஜெயகாந்தன், புதுமைப்பித்தன், இலட்சுமி முதலிய நாவல் ஆசிரியர்களைப் பற்றி மகரென்கோ ஆராய்ந்துள்ளார். புதுமைப்பித்தன் சிறுகதையைப் பற்றி பிசிகி ஆராய்ந்துள்ளார். விபர்னிகா ஜெயகாந்தன் படைப்புக்களை ஆராய்ந்து கொண்டுள்ளார். துப்பான்ஸ்கி 'முல்லைப்பாட்டை' ரஷ்யர்கட்கு அறிமுகப்படுத்தினார். பியாத்திகோர்ஸ்கி தத்துவ இயல் அறிஞர்: பலமொழிகளைக் கற்ற பன்மொழிப் புலவர். ஸ்லாவிய மொழிகளில் முதன்முதலாக வெளியான தமிழ்-ருசிய அகராதியின் பெரும்பகுதியைத் தொகுத்தவரும் இவரே. அருடைய நினைவாற்றல் வியப்பிற்குரியது. அகராதி மட்டுமின்றித் 'தமிழ் இலக்கியத்தில் காணும் தத்துவக் கூறுகள்'

என்ற தலைப்பில் நூலும் எழுதியுள்ளார்கள். சங்ககாலம் முதல் வள்ளலார் காலம் வரை தமிழ் இலக்கியத்தில் வழங்கிவந்துள்ள தத்துவ மரபுகளை மேற்கோளுகளுடன் விவரித்திருக்கிறார். தமிழர்கள் நினைவில் என்றும் நிலைத்து நிற்கும் சோவியத் தமிழர் செம்பியன் எனும் ருதீன் அவர்களை இங்கு நினைவுகூரவேண்டும். சோவியத் நாட்டில் தமிழ் பரவுவதற்கு இவரும் ஒரு காரணகர்த்தாவாகயிருந்தவர் என்றால் மிகையாகாது. இன்று சோவியத் நாட்டில் தமிழ் பரப்பும் சோவியத் தமிழர்கள் பெரும்பாலும் இவரது மாணவர்களே எனின் அவரது சிறப்பு நன்கு விளங்கும். நல்ல தமிழில், பழகு தமிழில் பேசக்கூடிய ஆற்றல் வாய்ந்தவர். 'செம்பியன்' என்ற தமிழ்ப்புனைப்பெயரையும் கொண்டிருந்த ருதீன் பல ஆராய்ச்சிக்கட்டுரைகளை எழுதியது மட்டுமின்றி சிறுகதைகளையும் மொழிபெயர்த்துள்ளார். இவரது மறைவு தமிழ்க் கல்விக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். இப்ரகீமவ் கல்கியின் 'அலைஓசை' முதலியவற்றை ருஷ்ய மொழியில் ஆக்கினார். இவருடைய மொழிபெயர்ப்புக்கு ரஷ்ய நாட்டில் நல்ல வரவேற்பு உண்டு. தி.ஜானகிராமன், கு.அழகிரிசாமி, சிதம்பர ரகுநாதன், ஜெயகாந்தன் போன்ற எழுத்தாளர்களின் படைப்புக்களை ரஷ்ய வாசகர்களுக்கு வழங்கி வருகிறார். மாஸ்கோ பல்கலைக் கழகத் தமிழ்ப் பிரிவைச் சார்ந்த அலெக்சாந்தர் துயியாஸ்கி அவர்களும் பல சோவியத் தமிழர்களை உருவாக்கியிருக்கின்றார்கள். வியூபாபிக்னா புதுமைப்பித்தனின் படைப்புகள் பற்றி ஆய்வுரை எழுதிப் பட்டம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. ஸ்வெத்லானா த்ருப்கினா, ஆகுலா ரோதவ்த்ஸவா தமிழ் மாணவர்களுக்குப் பயிற்சி அளித்து வருகிறார். வித்தாலி பூர்னிக்கா என்பவர் தமிழ் விழாக்களைப் பற்றிப் பத்திரிக்கை வாயிலாக, சோவியத் மக்களுக்கு வழங்குகிறார். ஜெயகாந்தன் கதைத் தொகுப்பு ஒன்றையும் வெளியிட்டுள்ளார்கள். சோவியத் நாட்டில் பண்டைய இலக்கியம், இலக்கணம், தற்கால இலக்கியம் என்னும் மூன்று துறைகளிலும் தமிழ் ஆராய்ச்சிப்பணி தொடர்ந்து நடந்து வருவது மிகவும் மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

மாஸ்கோ வானொலியில் தமிழ் ஒலிபரப்பு உண்டு என்பது குறிப்பிடத்தக்கது. நாகர்கோவில் பகுதியைச் சார்ந்த சினிஸ்மானி மாஸ்கோ வானொலியில் தமிழ்மொழி முழக்கம் பணி செய்து வந்தார். சென்னையிலுள்ள நியுசெஞ்சுரி புத்தக நிலையம் வழியாக இருமொழி இணைவுக்கான தொண்டுகள் நடைபெறுவது இங்குக் குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

போலந்து

1,20,725 சதுர மைல் பரப்புள்ள போலந்தின் தலைநகரம் வார்சா. 1972இல் முதன் முதலாக வார்சா பல்கலைக் கழகத்தில் தமிழ்க் கல்வி தொடங்கப்பட்டது. திருமுருகாற்றுப்படை, திருவெம்பாவை, பாலை பாடிய பெருங்கடுங்கோவின் பாடல்கள், பட்டினப் பாலை, கம்பராமாயணத்தில் வாலிவதைப் படலம், பாரதியின் கண்ணன் பாட்டு ஆகியவை மாணவர்களால் போலிஷ் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டன. இராம சுந்தரம் அவர்களின் துணையோடு போஹ்நன் கெப்பார்கி என்பவர் திருக்குறள் முழுவதையும் போலிஷ் மொழியில் மொழிபெயர்த்து வெளியிட்டார். மேலும் இராம சுந்தரம் போலிஷ் மாணவர்களின் தேவைக்காக, தமிழ் வாசகம் தயாரித்து, பல்கலைக் கழகம் மூலம் வெளியிட்டார். வார்சா பல்கலைக் கழக நூலகத்தில் தமிழிலும், தமிழைப் பற்றியும்

நூற்றுக்கணக்கான நூல்கள் உள்ளன. தமிழில் ஆராய்ச்சி இதழ்களும் வார, மாத இதழ்களும் இங்குக் கிடைக்கின்றன. டாக்டர் இராம சுந்தரம் இங்கு, தமிழை ஏழு ஆண்டுகள் கற்பித்துள்ளார். மொத்தம் 16 மாணவர்கள் பயின்றார்கள் "தமிழ் மொழியைக் கற்றுக் கொள்வதில் போலிஷ் மாணவர்கள் உண்மையான ஆர்வம் கொண்டிருந்தனர்" என டாக்டர் இராம சுந்தரம் கூறுகின்றார். திருவெம்பாவை, திருப்பாவை, ஜெயகாந்தன் கதைகள் ஆகியவற்றை போலிஷில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார் திராவிட மொழிகள், பண்பாடு தொடர்பான சுமார் 600க்கு மேற்பட்ட புத்தகங்களை கொண்ட ஒரு சிறு நூலகத்தையும் அங்கு அமைத்தார்.

செக்கோஸ்லவாக்கியா, பின்லாந்து, ஹங்கேரி

49,373 சதுர மைல் பரப்பளவு உள்ள செக்கோஸ்லவாக்கியா போலந்திற்கு அருகே இருக்கிறது. இந்நாட்டின் தலைநகரம் பிராக். 1959ஆம் ஆண்டிலிருந்து பிராக் நகரில் உள்ள சார்லஸ் பல்கலைக் கழகத்தில் தமிழ் மொழி கற்றுத்தரப்படுகின்றது. இங்குத் தமிழின் வளர்ச்சிக்குப் பாடுபடுவர் டாக்டர் கமீல் சுவலபில். இவர் சங்க கால அகப்பாடல் சிலவற்றையும், சிலப்பதிகாரத்தையும், சில தமிழ்ச் சிறுகதைகளையும் செக் மொழியில் மொழிபெயர்த்து வழங்கியுள்ளார். அண்மையில் தமிழ் இலக்கிய வரலாறு பற்றிய மூன்று நூல்களை வெளியிட்டுள்ளார். பிராக் நகரிலிருந்து வெளிவரும் *Archiv Orientalni* என்னும் இதழில் தமிழியல் குறித்துப் பல கட்டுரைகள் வெளிவந்துள்ளன.

தமிழ் இலக்கியத்தில், தமிழ் மொழி இயலில் ஒன்றிவிட்டார் கமில் சுவலபில். தமிழ்ச் சுவடியில் நூற்றுக்கணக்கான ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதியுள்ளார். எத்தனையோ நூல்களை எழுதியிருக்கிறார். இவர் *The Smile of Muruga, Tamil Literature* போன்ற பல நூல்களை இயற்றி, தமிழ் மணம் பரப்பி வருகிறார். எத்தனையோ தமிழ்ப்பாடல்களை மொழி பெயர்த்து இருக்கின்றார். செக் மொழியில் மட்டுமின்றி ஆங்கில மொழியிலும் இவர் மொழி பெயர்த்துத் தந்திருக்கிறார். சங்ககால இலக்கியங்கள், இடைக்கால இலக்கியங்கள், தற்கால இலக்கியங்கள் போன்ற பல ஆராய்ச்சி நூல்களை எழுதியுள்ளார். மொழிஇயலிலும் சிறந்த பணியாற்றியுள்ளார். உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் வெளிவரும் *The Journal of Tamil Studies* என்ற இதழில் தொல்காப்பியம் பற்றிய ஆய்வு வெளிவந்தது தமிழ் அறிஞர் உலகம் நன்கு அறியும். சார்லஸ் பல்கலைக் கழகத்தில் டாக்டர் வாசக் என்பவர் தமிழ் மொழியை நன்கு அறிந்தவர். பேசும் திறன் படைத்தவர். செக் நாட்டிற்குச்சென்று தமிழ் மணம் பரப்பிய பெருமை அங்கே மறைந்துவிட்ட பேராசிரியர் திருமதி தியாகராசனுககு உண்டு. பல தடைகளுக்கிடையே பல நூல்களைச் செக் மொழியில் மொழிபெயர்ப்பதற்கு உதவியாக இருந்தார் இவர்.

1,30, 229 சதுரமைல் பரப்புள்ள பின்லாந்து நாட்டின் தலைநகரான ஹெல்சின்கியில் உள்ள ஹெல்சின்கிப் பல்கலைக்கழகத்தில் சமஸ்கிருதம் முதலிய மொழிகளோடு தமிழ் மொழியும் இந்தியவியல் துறையில் கற்பிக்கப்படுகின்றது. டாக்டர் பன்னீர் செல்வம் அவர்கள் ஓராண்டு தமிழ் கற்பித்தார். இங்குள்ள நூலகத்தில் தமிழ்பற்றி நூற்றுக்கு மேற்பட்ட நூல்கள் உள்ளன. பேராசிரியர் பெண்டி ஆல்தோவும், ஆஸ்கோ பார்ப்போலாவும் சிந்துவெளி எழுத்துக்களைப் பற்றி ஆராய்ச்சி மேற்கொண்டமையால் திராவிட மொழியியல் துறையிலும் ஆர்வம் உண்டாயிற்று.

ஹங்கேரிநாட்டு ஜி.எஸ்.பாவிண்ட் (1884-1915) அவர்கள் பன்மொழி புலவர். இவர் தமிழ்-திராவிடம் (Tamil Dravidian Studies) என்ற நூலை 1897இல் வெளியிட்டார். ஹங்கேரியிலுள்ள மற்றொரு அறிஞர் டாக்டர் சார்லஸ் பேப்ரி; மகாபலிபுரச்சிற்பங்களைப்பற்றி ஆராய்ந்த அறிஞர்.

(2) ஏனைய ஐரோப்பிய நாடுகள்

தமிழ்க் கல்வி, தமிழ்ப் பண்பாட்டுடன் தொடர்பு உள்ள ஏனைய ஐரோப்பிய நாடுகள் மேற்கு செருமனி, ஹாலந்து, இத்தாலி, சுவீடன், முதலிய நாடுகளாகும். இந்திய வரலாற்றில் திராவிடப் பண்பாடு அடிப்படையாக அமைந்திருப்பது போல கிரேக்கப் பண்பாட்டிற்கு மூலகாரணமாக இருந்தவர்களும் இந்தியத் திராவிட மக்களின் இனத்தவரே என்பது ஒரு சில ஆய்வாளரின் கருத்து ஆகும். தமிழ் பற்றியும் திராவிடம் பற்றியும் பாதர் ஹென்றி ஹெராஸ் (1888-1955) எனும் ஸ்பானியர் ஏராளமாக எழுதியுள்ளார். பதினாறாவது நூற்றாண்டிலேயே தமிழ் நூல்களை அச்சிட்ட பெருமை போர்ச்சுகீசியரையே சாரும். லிஸ்பனிலுள்ள டாரிடாஸ் டோம்போங் நூலகத்தில் பல தமிழ்க் கையெழுத்துப் படிகள் உள்ளதாகத் தனிநாயக அடிகள் குறிப்பிடுகின்றார்.

இத்தாலி

1,16,313 சதுரமைல் பரப்புள்ள இத்தாலி நாட்டின் தலைநகரம் ரோம் ஆகும். ரோமுக்கும் பழந்தமிழகத்துக்கும் இருந்த தொடர்புகட்குப் பழைய இலக்கியங்களும் அகழ்வாராய்ச்சியில் கண்டெடுத்த பொருள்களும் சான்று பகர்கின்றன. புதுச்சேரிக்கு அருகே இருக்கும் அரிக்கமேடு என்னும் இடத்தில் பழைய தொடர்புகளுக்கான சான்றுகள் கிடைத்திருக்கின்றன. இங்குக் கண்டு பிடிக்கப்பட்ட ரோமருடைய பழைய கட்டடங்களும், தாழிகளும் கி.பி.முதல் அல்லது இரண்டாவது நூற்றாண்டிலே ரோமர்கள் தமிழ் நாட்டிற்கு வந்திருக்க வேண்டும் என நம்பவைக்கின்றன. சிலப்பதிகாரம், பத்துப்பாட்டு, பதிற்றுப்பத்து முதலியவை யவனர்களின் தமிழகக் குடியேற்றத்தைப் பற்றிக் கூறுகின்றன. காவிரிப்பூம்பட்டினத்திற்கு யவனர்கள் வந்து வாணிபம் செய்ததை இந்நூல்கள் குறிப்பிடுகின்றன. தமிழ் மன்னர்களின் மெய்க்காப்பாளராகவும், ஊர்க்காப்பாளராகவும் யவனர்கள் பணிபுரிந்தனர் என வரலாறு மூலம் அறிகிறோம். ரோம் மன்னர் அகஸ்டஸ், ரோமப் பேரரசின் தலைவராகப் பொறுப்பேற்ற போது தமிழ் அரசுகள் அவரை வாழ்த்துவதற்குத் தூதர்களை அனுப்பியதாகச் சான்றுகள் உள்ளன. தமிழ் நாட்டிற்கு வந்த யவனர்கள் நறுமணச் சரக்குகள், தங்கம், விலைமதிப்புள்ள மணிக்கல்கள், சந்தன மரம் முதலியவற்றை வாணிபம் செய்தார்கள். இத்தாலி நாட்டைச் சேர்ந்த மார்க்கோபோலோ, நிக்கோலாடிகென்டி (1395-1462) போன்றவர்கள் தமிழ் நாட்டிற்கு வந்து தமிழ் நாட்டைப் பற்றிய குறிப்புகளை விட்டுச் சென்றிருக்கின்றனர்.

ராபர்ட்-டி-நொபிலி (1577-1656) என்பாரும் பெஸ்கி எனும் வீரமா முனிவரும் (1680-1747) தமிழில் பல உரைநடை நூல்களை எழுதியுள்ளார்கள்.

பாலினஸ் பார்த்தலோமியோ (1748-1806) என்பாரும் தமிழ் நாட்டைப் பற்றிய செய்திகளை வரைந்துள்ளார். ஆஞ்சலோ டிகு பர்னாட்டிஸ் (1840-1913) என்பவர்

திருவள்ளுவரைப் பற்றிய குறிப்புகளையும், மலையாளத் தமிழ் மொழிச் சுவடிகளைப் பற்றிய விளக்கக் குறிப்புகளையும் எழுதியுள்ளார். திராவிட மொழிகளைப் பற்றி ஆய்வு செய்த மற்ற இத்தாலி நாட்டு அறிஞர்கள் சிராவியாடோ இசையா அசோலி, பாலோ மாண்டிகாஸா, ஆல்பிரரோட்டம் போட்டி, ஆஞ்சலோ மரியா பினு கல்லி, ஊசி சாந்தா மரியா, அலெக்சாண்ரோ பசானி, கபிரியல் எசிங்கர் பெர்ரோ ஊசி. இவர்கள் எழுதிய நூல்களில் குறிப்பிடத்தக்க நூல்கள் ஆல்பி ஏரோட்டம் போட்டி எழுதிய மொழியின் தோற்றம், அலெக்சாண்ரோ பசானி எழுதிய தமிழில் பாரசீகச் சொற்கள் முதலியவை ஆகும்.

தமிழ் மொழி நூல்களை வாட்டிக்கன் நகரில் உள்ள அரிய நூற்கூடத்தில் பார்க்கலாம். இங்குப் பதினேழாம் நூற்றாண்டில் அச்சிடப்பெற்ற தமிழ் போர்ச்சுகீசிய அகராதியின் அச்சுப் பிரதி இருக்கின்றது.

வெளிநாட்டு வானொலி நிலையங்களில் தமிழுக்கு இடம் கொடுத்த முதல் நிலையம் வாட்டிக்கன் வானொலி நிலையமே ஆகும்.

ஆனால் இன்று தமிழ்த் தொடர்பின்றி இத்தாலி நாடு இருக்கிறது என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

ஹாலந்து

15,770 சதுரமைல் பரப்புள்ள ஹாலந்து நாட்டின் தலைநகரம் தி ஹேக் ஆகும். இந்நாட்டில் கெர்ன் இன்ஸ்டிட்யூட், ஸ்டேட் யூனிவர்சிடி ஆஃப் உத்ரெஹத் முதலியவற்றில் இந்தியவியல் துறை உண்டு. இந்திய மொழிகளும் இங்குக் கற்பிக்கப்படுகின்றன. உத்ரெஹத் பல்கலைக் கழகத்தில் மாணவர்கள் தமிழை முதன்மைப் பாடமாகவோ, இரண்டாம் பாடமாகவோ, ஏதாவது ஒரு திராவிட மொழியுடன் அல்லது திராவிட மொழி ஒப்பியல் பாடத்துடன் சேர்த்துப் படிக்கலாம். டாக்டர் கோவிந்தன்குட்டியும், செக்நாட்டு அறிஞர் கமில் சுவலபிலும் இந்நாட்டில் தமிழ் கற்பித்து வருகிறார்கள். கமில் சுவலபில் சிக்காகோ, ஹைடல்பர்க், காலேஜ் ஆப் பிரான்ஸ் போன்ற இடங்களிலெல்லாம் தமிழ்மொழியைக் கற்பித்தார்.

டச்சுக்காரர்கள் இலங்கையிலும், தென்னிந்தியாவிலும் சில நூற்றாண்டுகள் அண்மைக்காலத்தில் தங்கியிருந்தனர். இவர்கள் தமிழ் நாட்டைப் பற்றி அனுப்பிய பல குறிப்புகள் ஹாலந்து நாட்டில் உள்ள நூல் நிலையங்களில் போற்றிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

ஸ்வீடன்

1,73,647 சதுரமைல் பரப்புள்ள ஸ்வீடன் நாட்டின் தலைநகரம் ஸ்டாக்ஹோம். இந்நாட்டில் உள்ள ஸ்டாக்ஹோம் பல்கலைக் கழகத்தில் Institute of Indology என்னும் பெயரில் இந்தியவியல் நிறுவனம் ஒன்று உள்ளது. இங்குத் தமிழ்க் கல்விக்கும், தமிழ் ஆராய்ச்சிக்கும் வாய்ப்பு உண்டு. உப்சலா பல்கலைக் கழகத்தில் ஒப்பியல் நோக்கில் தமிழ்க் கல்விக்கு இடம் உண்டு. இங்கே தமிழ்ப் பயிற்சியுள்ளவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்

பேராசிரியர் ஸ்டித் விக்கந்தர், பேராசிரியர் கார்ல் குஸ்தாவ்டையேல், பேராசிரியர் சீபிரிட் வியனெடார்ட், திருமதி எச்.எல்.வால்டன்.

ஹோபன் ஹேகனில் (டென்மார்க் தலைநகரம்) ராயல் லைப்ரரி நூல் நிலையத்தில் தமிழ் நூல்களும் இருக்கின்றன. ஸ்விட்சர்லாந்து நாட்டில் தமிழுக்கு வாய்ப்பில்லையெனினும் பேராசிரியர் கார்கெல்வர் தமிழ் மலையாளம் ஆகிய இரு மொழிகளிலும் பயிற்சி உள்ளவர்.

ஆப்பிரிக்கா கண்டம்

ஆப்பிரிக்காவுக்கும் திராவிடர்களுக்கும் பண்டைக் காலத்திலிருந்தே தொடர்பு இருந்திருக்கலாம் என லியோ பிரோபினியஸ் (*Leo Frobenius*) கூறுகின்றார். குறிப்பாக, வேளாண்மைத் துறையில் ஆப்பிரிக்கர்கள் திராவிடப் பண்பாட்டினைப் பின்பற்றினார்கள் எனச் சான்றுகள் உள்ளன. உதாரணம், ஆப்பிரிக்க மலைச்சரிவுகளில் விளையும் நெல் (*Mountain Paddy*) திராவிடப் பண்பாட்டினைப் பின்பற்றியிருக்கிறது. மலைச்சரிவுகளில் விளையும் நெல்லைப் பண்டைத் தமிழர்கள் ஐவனம் என அழைத்தார்கள். சிலப்பதிகாரத்திலும், புறநானூற்றிலும் ஐவனத்தைப் பற்றிய குறிப்புகள் உள்ளன.

இன்று ஆப்பிரிக்காவில் 50 நாடுகளுக்கு மேல் உள்ளன. இதில் பல நாடுகளில் தமிழர்கள் குடியேறியிருக்கின்றார்கள். கென்யா, சோமாலியா, உகாண்டா, தான்சானியா, ஜாம்பியா, நைஜீரியா, செனகால்,தென் ஆப்பிரிக்காபோன்ற பல நாடுகளில் தமிழர்கள் குடியேறியிருக்கின்றனர். செனகால், தென் ஆப்பிரிக்காவில் வாழும் தமிழர்களைப் பற்றி ஏற்கனவே கூறப்பட்டுவிட்டது. ஆசிரியர்களாகவும், பொறியாளர்களாகவும், கணக்கர்களாகவும், டாக்டர்களாகவும், தொழில்துறை வல்லுநர்களாகவும் ஆப்பிரிக்கா நாட்டில் உள்ள தமிழர்கள் பணிபுரிகிறார்கள். 18,19ஆம் நூற்றாண்டிலேயே உகாந்தா, கென்யா, தாங்கனீகா, மடகாஸ்கர் முதலிய நாடுகளில் தமிழர்கள்குடியேறிவிட்டதாகக் கருதப்படுகிறது. கென்யாவில் சென்ற நூறு ஆண்டுகளுக்கு முன்பே மொரீசியஸ் தமிழர்கள் குடியேறிவிட்டதாகக் கருதப்படுகிறது. கென்யா கரும்புத் தோட்டங்களில் பணிபுரிவதற்காக இவர்கள் வரவழைக்கப்பட்டனர். எவர்க்கும் தமிழே தெரியாது. மிகச் சிறந்த வேலைகளைத் தமிழர்கள் செய்கிறார்கள். கணக்காய்வாளர்கள், பொறியியலறிஞர்கள், ஆசிரியர், மருத்துவர், தொழில்நுட்பர்கள் ஆகிய பெரும்பணிகளில் இந்தியர்களே உள்ளனர். முக்கியக் கரும்புத் தொழிலுக்காகவே தென்னாட்டவர்களை ஆங்கிலேயர் இங்குக் குடியேற்றினர். 1947இற்குப் பின் கேரளர், தமிழர் பலர் குடியேறி ஆசிரியர்களாகப் பணியாற்றுகிறார்கள். உயர்கல்வி, பட்டக்கல்வி இல்லை. ஸ்ரீலங்காத் தமிழர்கள் அதிகமாக இருக்கும் பகுதி சாம்பியா, நைஜீரியா முதலிய நாடுகளாகும். கென்யாவில் 79,000, மொசாம்பிக்கு 22,043 தான்சானியாவில் 59,000. ஏமனில் 1 லட்சம் இந்தியர்கள் இன்று இருக்கின்றனர். ஜாம்பியாவில் வீடுகளில் தமிழ்க் குடும்பங்கள் தமிழ்ப்பாட்டு, பரதம், முழு நாடகம், கும்மி, கோலாட்டம் கற்றுத் தருகிறார்கள். பொங்கல் போன்ற திருவிழாக்கள் தமிழர்களால் இந்நாடுகளில் கொண்டாடப்படுகின்றன. நைஜீரியாவில் புராதன தமிழ்ப் படங்களுக்கு ஆதரவு இருக்கின்றது. கம்பாலாவில் தமிழ் நாட்டுச் சேலைகளை எல்லோரும் விரும்பி உடுக்கின்றனர். 1972இல் யுகண்டாவில் வாழ்ந்த இந்தியர்கள், தமிழர்கள் உட்பட வெளியேற்றப்பட்டனர். ஆனால், யுகாண்டாவில் வாழ்ந்து

வந்த தமிழர்களின் எண்ணிக்கை மிகக் குறைவு. வெளியேற்றப்பட்ட இந்தியர்களில் சிலர் பிரிட்டனில் வாழ்கின்றனர். அவ்வாறு சென்ற தமிழர்களின் எண்ணிக்கை மிகக் குறைவு. பலர் தமிழ் நாட்டுக்கே திரும்பிவிட்டனர். பொதுவாக இந்தியர்கள் என்றால் மேற்கு ஆப்பிரிக்க நாட்டினருக்குத்தான் பிடிக்கும். கிழக்கு ஆப்பிரிக்கருக்குப் பொருளாதார ஆக்கிரமிப்பு செய்துள்ள இந்தியர்களைப் பிடிக்காது.

இலிபியா

திரு.இரா.வேங்கடகிருட்டிணன், எம்.ஐ.இ. இப்போது இலிபியாவில் உள்ள உரத்தொழிற்சாலையில் மேல்நிலை மின்பொறியியல் வல்லுநராக 5 ஆண்டுகளாகப் பணியாற்றுகிறார். இலிபியாவில் இருப்பினும் என்றுமுள தென்றமிழின் மீது இவர் காட்டுகின்ற ஈடுபாடு போற்றத் தக்கதாகும். இவருடைய இலிபியா அனுபவத்தை, இவர் அளிக்கும் இலிபியா தொடர்பான செய்திகளைக் கீழே அளிக்கின்றேன்:

இலிபியா ஒரு வட ஆப்பிரிக்க நாடாகும். மக்கள் தொகை 30 இலக்கம். நிலத்தடி எண்ணெய் வளத்தால் தொழில் வளர்ச்சி பெருகி இருப்பதாலும், இதனால் வேலை வாய்ப்புப் பெருகி இருப்பதாலும், உலகில் உள்ள பல நாட்டினரும் இங்கு வந்து பணிபுரிகின்றனர். இதனால் இலிபியா ஒரு சிறிய ஐ.நா.போலக் காட்சி அளிக்கிறது.

இந்தியர் பலர் இங்குப் பணிபுரிகின்றனர். மற்ற மேற்கு ஆசிய நாடுகள் போலின்றி, ஒரு குறிப்பிட்ட மாநிலத்தார் மட்டுமின்றி இந்திய நாட்டில் உள்ள அனைவரும் இலிபியாவில் பணிபுரிகின்றனர். குறிப்பாக பிரேகா என்ற ஊரில் உள்ள "நேப்பட்கோ" என்ற மாபெரும் உரத் தொழிற்சாலையில் பெரும்பாலும் தமிழர்கள் பணிபுரிகின்றனர்.

அரசு மொழி அரபி:

இலிபியாவில் உள்ள தொழிற்சாலைகள் அனைத்தும் அரசுடைமை ஆக்கப்பட்டவையே. ஆட்சிமொழியாக அரபு மொழியே வழங்குகிறது. உயர் அதிகாரிகள் அனைவரும் இலிபியர்களே. அதிகாரிகள் ஒருவருக்கொருவர் அரபு மொழியிலேயே அறிவியல் எழுத்துகளைப் பரிமாறிக் கொள்கின்றனர். அவைக்கூட்டங்களிலும் கோப்புகள் எழுதுவதும் அனைத்தும் அரபு மொழியிலேயே நடைபெறுகின்றன. வெளிநாட்டு அதிகாரிகள், தொழிலாளர்கள் ஆகியோரிடம் மட்டுமே ஆங்கிலத்தில் உரையாடுகின்றனர்; எழுதுகின்றனர்.

பிரேகாவில் தமிழ்:

உரத் தொழிற்சாலையில் உள்ள உரம் ஏற்றுமதி செய்யும் பிரிவில் பெரும்பாலும் தமிழர்களே பணிபுரிகின்றனர். இதனால் அங்குப் பணிபுரியும் இலிபியத் தொழிலாளர்கள் தமிழ் பேசக்கற்றுக் கொண்டுள்ளனர். தமிழர்களும் அரபு மொழி அறிந்து கொண்டனர். இலிபியர்கள் தமிழ் பேசுவது கேட்க வியப்பாகவும் இனிமையாகவும் இருக்கிறது.

ஆட்சி மொழி - தமிழ்

பிரேகாவில் உள்ள உரத்தொழிற்சாலையில் உள்ள பல பிரிவுகளில் தமிழர்கள் பணிபுரிகிறார்கள். இதனால் ஒருவரோடு ஒருவர் தொலைபேசியில் தொழிற்சாலை இயக்கம் குறித்துத் தமிழிலேயே உரையாற்றுகிறோம். இதனைக் கண்ணுற்ற பலர் லிபியாவில் உள்ள பிரேகாவில் தமிழ் ஆட்சி மொழியாக இருக்கிறதா எனக்கூட ஐயுறுவர். லிபியர்கள் கூடச் சிற்சில நேரங்களில் நாங்கள் பேசுவது கண்டு புரியாமல் ஆங்கிலத்தில் பேசும்படிக் கேட்டுக் கொள்கிறார்கள். நம் நாட்டுத் தொழிற்சாலைகளில் கூட இதுபோன்று தமிழில் பேச இயலாது. பெருமைக்காவது தவறான ஆங்கிலத்தில் நான் நம்நாட்டுத் தொழிற்சாலைகளில் உரையாடுகிறோம். தமிழ்நாட்டு எல்லையைத் தாண்டிய பின்புதான் நமக்குத் தாய்மொழிப்பற்றே வருகிறது போலும்!

இந்தியாவின் பெரிய மொழி - தமிழ்

தமிழர்கள் பெரும்பான்மையாக இருப்பதோடு, பொழுது போக்கிற்காக வீடியோ குழுக்கள் பலவும் அமைத்துள்ளனர். மேற்கு ஆசிய நாடுகள் போன்று தமிழ்த் திரைப்படங்களோ, இதழ்களோ இங்குக் கிடைப்பதில்லை. எனவே இந்தியாவிலிருந்தே திரைப்படங்கள் கொண்டு வருகிறோம். பெரும்பான்மையான திரைப்படங்கள் தமிழ் என்பதால் அதிகமாகத் தமிழ் வீடியோ படங்கள் இங்கு உலா வருகின்றன.

லிபியர்கள் இந்தியத் திரைப்படங்களை விரும்பிப் பார்க்கின்றனர். லிபியத் திரை அரங்குகளிலும் சிற்சில நேரங்களில் தொலைக்காட்சியிலும் இந்திப் படங்கள் காட்டப்படுகின்றன. இது போன்று தமிழ்ப் படங்கள் காட்டப்படுவதில்லை. ஆனால் பிரேகாவில் தமிழ்த் திரைப்பட வீடியோ கேசட்டுக்கள் அதிகமாக இருப்பதால் இங்குள்ள லிபியர்கள் அவைகளை வாங்கிப்பார்க்கும் வாய்ப்புப் பெறுகிறார்கள். இந்திய மொழிகளில் தமிழ்த் திரைப்படங்களே இங்கு அதிகமாகக் கிடைப்பதால் பல லிபியர்கள் இந்தியாவின் மிகப்பெரிய மொழி தமிழே என்று எண்ணிக் கொண்டும், சொல்லிக் கொண்டும் இருக்கிறார்கள்.

இனிமையான மொழி - தமிழே

தமிழ் வீடியோ திரைப்படப் பாடல்கள் நிறைந்த கேசட்டுகளும் பல உள்ளன. அதனை விரும்பி வாங்கி லிபியர்கள் பார்க்கிறார்கள். என்னிடம் பணிபுரியும் அப்துல் என்ற லிபியர் இந்தத் திரைப்படப் பாடல்களைக் கேட்டுவிட்டுத் தமிழ்மொழிப் பாடல்கள் கேட்க மிக மிக இனிமையாக இருக்கின்றன என அடிக்கடி கூறி மகிழ்கிறார். ஆனால் தமிழர்கள் இருவர் பேசுவதைக் கேட்பதற்குத் தான் கடுமையாக இருப்பதாக அவர் எண்ணம். தமிழ் இசைக்குப் பிற நாட்டவரும் செவி சாய்க்கின்றனர். தமிழுக்கு இசை இல்லை என்பவர் எவர்?

ஈழத்தமிழர்:

இலிபியாவில் பல ஈழத்தமிழ் இளைஞர்கள் தொழிலாளர்களாகப் பணிபுரிகின்றனர். வயதில் மிக இளையவராகக் காணப்படும் அவர்களைக் காண மனம்

நோகிறது. அவர்கள் பேசும் இனிமையான யாழ்ப்பாணத் தமிழைக் கேட்பதே எங்களுக்கு ஒரு பொழுதுபோக்கு. ஊதியம் குறைவாக இருப்பதால் அவர்களால் வீடியோ முதலியன வாங்க இயலாது. எனவே, தமிழர்கள் இல்லங்கள் வந்து பார்க்கும்படி அழைப்போம். தமிழ்த் திரைப்படங்களை மிக மிக விரும்பிப் பார்க்கின்றனர். ஈழத் தமிழர்களுக்காக இலிபியா நாட்டுத் தலைவர் திரு. கடாபி கூட உதவி செய்கிறார் என அறிந்து மகிழ்கிறோம். உலகில் முழுவதும் TAMIL என்ற சொல்லையே இன்று அறிந்து கொண்டமைக்குக் காரணமே இன்று ஈழத் தமிழர்கள். தங்கள் இன்னுயிர் தந்து, தங்கள் நாட்டு விடுதலைக்குப் போராடுவதால் தான். அதற்காக அவர்களுக்குத் தலை வணங்குவோம்.

இந்தி மொழி:

தமிழ்த் திரைப்படங்கள் காணும் முன்னர் இந்திய நாட்டில் 14 மொழிகள் உள்ளன என்றால் இலிபியர்கள் வியக்கிறார்கள். இந்தி மொழி மட்டுமே இந்தியாவின் ஒரே மொழி என்பது அவர்கள் எண்ணம். இந்தியப் பேரரசின் கொள்கையே வெளிநாட்டினர் இந்தத் தவறான முடிவுக்கு வரக் காரணமாகும். இந்திய மொழிகள் அனைத்தையுமே இந்தியப் பேரரசு வெளிநாடுகளில் அறியும் வண்ணம் செயல்பட வேண்டும்.

இதை விட வியப்பு என்னவெனில் இங்குப் பணிபுரியும் இந்தியாவைச் சேர்ந்த பிற மாநிலத்தவரே. தமிழ்மொழி இலங்கை, சிங்கப்பூர், மலேசியா போன்ற வெளிநாடுகளிலும் வழங்கப்படுகிறது என்று அறியாமல் இருக்கிறார்கள்.

என்னுடன் பணிபுரியும் இலிபியர் மற்றும் வெளி நாட்டவரிடம் தமிழின் சிறப்பை அதன் முதன் மொழித் தன்மையை நான் விளக்கினால் வியக்கிறார்கள். தமிழ் என்ற மொழி இருப்பதே பலருக்குத் தெரியவில்லை. திருக்குறள் என்ற சிறப்பு நூலையும் எவரும் அறிந்தாரில்லை. வடமொழி பற்றிக் கூடச் சிலர் தெரிந்து வைத்துள்ளனர். நம் தமிழ்மொழியை நாம் உலகுக்கு எடுத்துக்காட்டத் தவறிவிட்டோம்.

அரபு-தமிழ்:

இலிபியா ஒரு மத்திய தரைக்கடல் நாடு. பழந்தமிழர்கள் இந்தப் பகுதியிலிருந்து வந்ததாகவும் ஒரு கருத்து நிலவுகிறது. இலிபியர்கள் உணவு, உடை, பழக்க வழக்கங்கள் கூடத் தமிழர்களைப் போல் தான் உள்ளது.

அரபு-தமிழ், தாய்-தந்தை உறவு முறையுடன் பல உலக மொழிகளைப் பெற்றெடுத்தன என மதுரைத் தமிழ் மாநாட்டில் ஒரு முகம்மதிய அறிஞரே உரையாற்றினார் என்பதை இங்கு நினைவு கூர்கிறேன்.

இலிபியர்கள் ஆப்பிரிக்க நாட்டுக் கறுப்பு இனத்தவர் போன்றும், வெள்ளையர் போன்றும், இரண்டுக்கும் இடைப்பட்ட சிவப்பு வண்ணத்திலும் தோற்றமளிக்கின்றனர். இவர்களில் பழங்குடியினர் கறுப்பு இனத்தவரே. அவர்களில் தமிழர்கள் போலச் சிலர் காட்சி அளிக்கின்றனர்.

அரபு மொழிச் சொற்கள் பலவற்றை யாம் ஆராய்ந்து அவை தமிழ் வேர் வந்ததாகக் கண்டு பெருமிதம் கொண்டோம். இரு மொழிகளையும் ஆய்ந்து ஆராய்ந்தால் பல பேருண்மைகள் தெரியவரும்.

உணவு:

இலிபியர்கள் உணவு முறை நம் உணவுமுறை போலவே உள்ளது. அரிசி உண்கிறார்கள். காரம் சேர்த்துக் கொள்கிறார்கள். மிளகாய்ப் பொடி, மஞ்சள், கடுகு முதலியன கிடைக்கின்றன. நம் இரசச்சாறு போன்று சூப் செய்து உண்கிறார்கள். நம் குழம்பு உணவைச் சுவைத்து உண்கின்றனர்.

தொழிற்சாலையில் பணிபுரிவோருக்குப் புதிய முறையில் பொதுவான பெரிய உணவகம் ஒன்று உள்ளது. இங்கு இந்தியருக்கு அரிசி, குழம்பு உணவு கொடுக்கிறார்கள். வெளிநாட்டவர் சிலரும் இந்தியன் கறி குழம்பு உணவை விரும்பி உண்கின்றனர்.

உடை:

இலிபிய நாட்டின் பழங்கால இலிபியப் பெண்கள் உடை, நம் தமிழ்நாட்டுச் சேலையைப் போல உடுத்துகின்றனர். ஆண்கள் உடையும் தமிழர்களைப் போல உள்ளது. தற்கால இலிபியப் பெண்களே ஐரோப்பிய உடை உடுத்துகின்றனர். சில சூடான் நாட்டுப் பெண்களும், இலிபியாவில் நம்நாட்டுச் சேலை போலவே உடை அணிந்திருப்பதைக் கண்டு வியப்படைகிறோம்.

நம்நாட்டுப் பட்டுச் சேலை போலவே, நம் நாட்டுத் தறிகளில் நெய்வது போல நெய்கிறார்கள். நம் நாட்டுப் பட்டுச் சேலையையும் விரும்புகின்றனர். நம்நாட்டுக் கலைப் பொருட்களையும் பெரிதும் விரும்புகின்றனர்.

உறைவிடம்:

இலிபியர்கள் இல்லத்தின் உட்புறம் தூய்மையாகவும், அழகாகவும் வைத்துள்ளனர். ஆனால் வெளிப்புறத்தூய்மை குறைவே. உட்புறம் அலங்கரிக்கப்பட்டும் இருக்கிறது. தரையில் கம்பள விரிப்புப் பயன் படுத்துகின்றனர். உலகப்புகழ் பெற்ற கம்பள விரிப்பை இலிபியாவில் உருவாக்குகின்றனர்.

இலிபியர்கள் கழிவறை, இந்திய முறைப்படியே உள்ளது. ஜப்பானிலும் இந்திய முறைப்படியே கழிவறை உள்ளது. ஐரோப்பிய முறையை இலிபியர்கள் ஏற்பதில்லை.

பழக்க வழக்கங்கள்:

நம்நாட்டில் பெண்கள் திருமணத்திற்கு ஆண்கள் வீட்டாருக்குப் பெரும் பொருள் தருவது போலவே, இலிபியாவில் ஆண்கள் திருமணத்திற்குப் பெண்வீட்டாருக்குப் பெரும் பொருள் தர வேண்டும். ரூபாய் 4,00,000 வரை கூடச் செலவாகும் என்பதால் பல ஆண்கள் திருமணம் ஆகாமல் இருக்கின்றனர். நம் நாட்டுத் திருமண முறை அறிந்து கொண்டு இங்கு

வந்து பெண் எடுத்தால் பணம் கிடைக்குமே என்று எண்ணி ஏங்குகின்றனர். நாட்டுக்கு நாடு வழக்கு மாறுபடுகிறது.

தமிழர் அமைப்பு:

உள்நாட்டு அரசியல் காரணமாகவும், குறைந்த நாட்களே அங்குத் தங்குவதாலும் தமிழர்கள் தங்களுக்கென்று ஓர் அமைப்பை இங்கு உருவாக்கவில்லை எனினும், தமிழ்மொழி தமிழர்களை இணைக்கிறது. திரைப்படங்கள், இதழ்கள் இவற்றை ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்வோம்.

ஓய்வு நேரத்தில் இந்திய, தமிழ்நாட்டு அரசியல், ஈழம், இந்தி மொழி பற்றிக் கலந்துரையாடல் திரைப்படங்கள், தமிழ் இதழ்கள் குறித்தும் உரைகள் நிகழும் ஆனால் தமிழ் மொழியின் சிறப்புப் பற்றி எவரும் ஆர்வமுடன் அறிந்து கொள்ள முயற்சி செய்வதில்லை.

தமிழர்கள் திறமையாகப் பணிபுரிபவர்கள் என்ற எண்ணம் எங்கும் உள்ளது. மேற்கு ஆசிய நாடுகளில் தமிழர்கள் நற்பண்புகளுடன் பணிபுரிவதால், மற்ற மாநிலத்தவரை விடத் தமிழ்நாட்டினரையே அவர்கள் பணிக்கு எடுக்க விரும்புகின்றனர். உலகு முழுவதும் தமிழர்கள் சென்று தமிழ்ப் பண்பாடு காத்து, பெருமையும் புகழும் சேர்ப்பது தமிழ் நாட்டினருக்கும் பெருமிதம் அளிக்கிறது. அந்த வகையில் வெளி நாட்டில் பணிபுரியும் தமிழர்கள் தமிழ்மொழியின் தூதுவர்களாக இருந்து வருகிறார்கள். லிபியாத் தமிழர்களும் அந்த வகையில் தங்கள் பணியைச் செய்து வருகிறார்கள்.

(இரா. வேங்கடகிருட்டிணன்)

பிற ஆசியத் தமிழர்கள்

தமிழ்ப்பண்பாடு தென்கிழக்கு, கிழக்கு ஆசியப் பகுதிகளுக்குப் பரவியிருப்பதைப் பற்றிய விவரங்களை ஏற்கனவே கூறியாகிவிட்டது. அதே போல் தமிழ்ப் பண்பாட்டிற்கும் மேற்கு ஆசியப் பண்பாட்டிற்கும் ஓரளவு ஒற்றுமைகள் இருப்பதாகச் சில ஆசிரியர்கள் கருதுகின்றனர்.

மேற்கு ஆசியா

ஆசிய மைனர் (*Asia Minor*) சேர்ந்த லிசியர்கள் தங்களுடைய கல்வெட்டுகளில் தங்களை 'திரிமாலி (*Trimmali*)' என அழைத்துக் கொண்டனர். இச்சொல் டிரமிலா (*Dramila , Tamil*) தமிழ் என்ற சொல்லுடன் நெருங்கிய தொடர்பு உள்ளதாகும். ஆப்கானிஸ்தான், இரான் மேட்டுவெளிப் பிரதேசங்கள், யூப்ரொடிஸ், டைகிரிஸ், மெசபொடோமியா முதலிய பகுதிகளில் இருக்கும் பண்டைய ஊர்களின் பெயர்கள் திராவிடப் பண்பைத் தழுவியிருக்கின்றன. பொதுவாக ஆரியர் அல்லாத யூதர் அல்லாத இப்பகுதி மக்கள் திராவிட மொழி பேசினர் என நம்பப் படுகின்றது. பலுச்சிஸ்தானில் பேசப்படும் *Brahui* என்னும் மொழி ஒரு திராவிட மொழி என்பதை மொழியியல் அறிஞர்கள்

உறுதிப்படுத்தியிருக்கிறார்கள். தென் இந்தியப் பாம்பு வழிபாடு போல, பாம்பு வழிபாடு பெர்சி போலிஸ் பகுதியில் இருந்தது. திராவிட கோயில் வழிபாடு முறை, பலியிடும் பழக்கங்களுக்கும் பண்டைய சுமேரிய பழக்கங்களுக்கும் ஒற்றுமை இருக்கின்றது.

பாக்தாத் மாநகரத்தைத் தலைநகராகக் கொண்டு விளங்கும் ஈராக் நாட்டில்தான் பண்டைய அசிரியா, சுமேரியா என்ற நாடுகள் இருந்தன. தமிழர் பழங்காலத்திலிருந்தே இந்நாடுகளுடன் தொடர்பு கொண்டிருந்தனர்; காகம், தோகை, யானைக்கொம்பு ஆகியவற்றைத் திராவிட மக்களே முதன் முதலில் இந்நாட்டிற்குக் கொண்டு வந்தனர் எனச் சொல்லுவோரும் உண்டு. ஊர் என்ற நகரின் பெயர் மாபெரும் கல்தேயருடைய ஊரைக் குறிக்கின்றது. அவர்களுடைய பெருங்கடவுளுக்கு ஆண் என்ற பெயருண்டு. தமிழ்க் கோயில்களில் பணிபுரிய பெண்களை நியமித்தது போல, அவர்களின் கோயில்களில் கோயில் பணிக்கென்றே பெண்களை நியமித்திருந்தார்கள்.

இன்றும் மேற்கு ஆசியாவில் உள்ள ஈராக், ஈரான், குவைட், துப்பாய் போன்ற பல நாடுகளில் தமிழர்கள் பொறியாளர்களாகவும், தொழில்நுட்ப வல்லுநர்களாகவும், டாக்டர்களாகவும், ஆசிரியர்களாகவும், பணியாளர்களாகவும் பணிபுரிகின்றனர். இந்நாடுகளில் பணிபுரியும் இந்தியர்களின் எண்ணிக்கை ஏமன் 1 லட்சம், ஆப்கான் 30,000, சவுதி அரேபியா 1.2 லட்சம், குவைத் 65,000 ஈராக் 20,250, ஈரான் 20,800.

பிலிப்பைன்ஸ்

இதே போல, தென்கிழக்காசியாவில் பரவியிருந்த தமிழ்ப் பண்பாட்டினைப் பற்றிப் படித்தோம். தென்கிழக்காசியாவில் பர்மா, மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து, இந்தோனேசியா, கம்பூசியா முதலிய நாடுகளில் மட்டும் தமிழ்ப் பண்பாடு பரவியிருந்தது என்று நினைக்கக் கூடாது. மற்ற நாடுகளுக்கும் பரவியிருந்தது. குறிப்பாகப் பிலிப்பைன்ஸ் தீவில் தமிழ்ப் பண்பாடு பரவியிருந்தது. பேராசிரியர் பிராங்கோ எனும் மணிலாக்காரர் பிலிப்பைன்ஸ் தகலாக் மொழிகளில் நூற்றுக்கணக்கான தமிழ்ச் சொற்கள் உள்ளன எனக்கூறுகின்றார். இன்று இத்தீவில் 100 தமிழர்கள் உள்ளனர். முந்நீர்ப் பழந்தீவு பன்னிரண்டாயிரம் (பவளத் தீவுகள்) எனும் இத்தீவுகளைப் பற்றிய சான்றுகள் மணிமேகலை, சிலப்பதிகாரம், பட்டினப்பாலை, மதுரைக் காஞ்சியில் கிடைக்கின்றன. மணிமேகலை இத்தீவுகளுக்குச் சென்றாள் எனவும் நம்பப்படுகிறது. இங்கு ஆசியா வெரித்தாஸ் என்ற கிறிஸ்துவக் கழகத்தார் தமிழ் ஒலிபரப்பை நடத்துகிறார்கள். காலையில் 10-10 1/2 வரையிலும், இரவு 10 1/2 - 11 மணி வரையிலும் தமிழ் ஓசை, தமிழ் செய்திகள் ஒலிபரப்பப்படுகின்றன. மேலும், இங்கு வந்த சிலர் தமிழ் இலக்கியங் குறித்துப் பேசிய பேச்சுக்களை ஒலிபரப்புகிறார்கள். இது தெளிவான கிழக்காசிய ஒலிபரப்பாகும். பர்மாவில் மிகத் தெளிவாகக் கிடைக்கின்றது என எழுதுகின்றனர். பொது அறிவையும் தமிழ்ப் பற்றையும் வளர்க்கும் கட்டுரைப் போட்டி, வினா-விடைப் போட்டி, தமிழ்க் கையெழுத்துப் போட்டி ஆகியவற்றைத் திங்கள் தோறும் நடத்திப் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கி வருகிறது 'தமிழ்ப் பணி'.

தொல் பழங்காலத்திலேயே சிறப்பாகப் பழைய கற்கருவிக் காலம் முதலே தென்னிந்தியாவிற்கும் பிலிப்பைன்ஸ் தீவுகளுக்கும் நெருக்கமான தொடர்பு இருந்தமை,

அக்காலக் கருவிகள் ஒற்றுமை பண்புடன் இவ்விருநாடுகளிலும் கிடைத்துள்ளன. அடுத்துப் புது கற்கருவிக் காலப் பயன்பாட்டுப் பொருள்களும், இரும்புக் கருவிக்காலப் பெருங்கல் (Megalithic) நினைவுச் சின்னங்களும் தமிழ்நாட்டில் கிடைத்துள்ளனவற்றைப் போன்றே அங்கும் கிடைத்துள்ளன. இவற்றையெல்லாம் ஆராய்ந்துள்ள தொல்லியல் அறிஞர்கள் பிலிப்பைன்ஸ் தீவின் தொல் பழங்காலத்திய பழங்குடிமக்கள் பண்பாடு தென்னாட்டில் இருந்து பெறப்பட்டது எனக் கருதுகின்றனர். (Jhan R. Francisco, Palaeolithic Relation between Philippines and India pp. 48-50)

கிறித்துவ நூற்றாண்டின் முதல் இரு நூற்றாண்டுகளிலேயே தமிழகத்து மக்கள் வாணிகத்தின் பொருட்டுத் தென்கிழக்கு ஆசியநாடுகளுக்குச் சென்ற பொழுது, பிலிப்பைன்ஸ் தீவுகளிலும் தங்கள் குடியேற்றத்தை அமைத்து இருக்கவேண்டும் என்று கெர்ன் (Kern) எனும் அறிஞர் கருதுகிறார். இக் கருத்தினை நிறுவுவதற்குச் சான்றுகள் சிலவற்றை அவர் தந்துள்ளார்.

சிறப்பு மிக்க கடலோடிகளான தமிழர், தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கு வந்த பொழுது திசைமாறிச் சென்ற மரக்கப்பல்கள் இத்தீவுகளின் கரைகளை அடைந்து இருக்கவேண்டும் என்பர். இன்று இத்தீவில் வாழும் மக்களுள் மூன்று நான்கு வகையான (நெதரிட்டோ, இதரெட்டோ, பிசாயன்) பழங்குடி மக்கள் திராவிடரின் உடற்கூற்று அமைப்புகளை உடையவர்களாக இருக்கின்றனர். மற்றும், இன்றும் அவர்களுடைய பழக்க வழக்கங்கள் தமிழ் நாட்டு மக்களின் பழக்க வழக்கங்களோடு ஒத்தனவாக உள்ளன. திருமணச் சடங்கில் மணமகன், மணமகளுக்குத் தாலிகட்டும் வழக்கம். பிலிப்பைன்ஸ் தீவு மக்களுள் சில பிரிவினரிடத்துக் காணப்படுகிறது. உதாரணமாக நீக்கி ரிட்டோ பழங்குடி மக்கள் இந்தச் சடங்கினைத் தமிழர்களே வரலாற்றுக் காலம் நெடுக பின்பற்றி வருகின்றனர் என அறிஞர் கெர்ன் மொழிகின்றார்.

இந்தோனேசியப் பேரரசுகளின் ஆதிக்கம் (கி.பி. 700-1500) இந்நாட்டில் பரவிய காலத்தில் சாவானியப் பண்பாட்டு வழித் தமிழ்ப் பண்பாடு பிலிப்பைன்ஸ் தீவுகளில் வேரூன்றுவதற்குரிய வாய்ப்பும் வசதியும் பேரளவில் கிடைத்து இருக்க வேண்டும் என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

கி.பி. ஏழாம் நூற்றாண்டு அளவினதான மண்பாண்டங்களும் அவற்றின் உடைந்த ஓடுகளும் இத்தீவுகளில் ஏராளமாகக் கிடைத்துள்ளன. அவற்றில் சமய வழிபாட்டிற்குரிய பல்வேறு குறிகளும், வடிவங்களும் காணப்படுகின்றன. இம்மட்கலக் குறிகளால் (Graffiti) இரண்டு உண்மைகள் புலப்படுகின்றன. ஒன்று சிவவழிபாடு அங்குச் செல்வாக்குற்று இருந்தமையாகும். சூரியனின் வடிவம், சிவலிங்க வடிவம், விநாயகருடைய புனையா ஓவியம் போன்றவை மண்பாண்டங்களின் மீது வரையப்பட்டுள்ளமை நம் கருத்தைக் கவருவதாகும்.

அடுத்துப் பல்லவர் காலத்திய கிரந்த எழுத்துக்களில் வழிபாட்டு மந்திரங்கள் சுலோக வடிவில் எழுதப்பட்டுள்ளன. மற்றும், அம்மண் பாண்டங்களைச் செய்த குயவர்

குழுக்களைப் பற்றிய குறிப்புகளும் அவ்வெழுத்துக்களில் காணப்படுகின்றன. இவை தமிழ்நாட்டு மக்கள் பலர் அங்கு வாழ்ந்தமைக்குச் சான்று பகருகின்றன.

பிலிப்பைன்ஸ் தீவுகளில் சுடுமண்ணால் செய்யப்பட்ட விநாயகர், தாய்த் தெய்வம், குதிரை வீரர், சேவல், மயில், வேலேந்திய வீரன் (முருகன்) முதலிய சிலைகள் பரவலாகக் கண்டு எடுக்கப்பட்டுள்ளன. சுடுமண் சிலைகள் இன்றைய தமிழகத்திலும் இடம் பெறுவதைக் காணலாம். ஒருவகைச் சரளைக் கல்லினால் செய்யப்பட்ட சிவலிங்கங்களும் பிலிப்பைன்ஸ் தீவுகளில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சிகளில் கிடைத்துள்ளன. மேலும் செப்பினால் செய்யப்பட்ட சிவபெருமானின் உருவம் ஒன்றும், பொன்னால் செய்யப்பட்ட பெண் தெய்வத்தின் சிலை ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவை தமிழகத்தின் சோழர் காலத்திய வெண்கலச் சிலைகளின் கலைப் பாணியைப் பின்பற்றிச் செய்யப்பட்டுள்ளன. பெண் தெய்வத்தின் உடற்கூறும், ஆடை அணிகளும் தமிழ்நாட்டுப் பெண்களின் தோற்றப் பொலிவை நினைவூட்டுகின்றன. சிவபெருமான், பார்வதி, கணேசன், முருகன் முதலியோர் சிலைகள் தொடக்ககாலச் சோழர்கலைப் பாணியை ஒட்டிச் செய்யப்பட்டனவாகத் தோன்றுகின்றன. திருமாலின் நின்ற கோலச் சிலைகள் சில, இரு தேவியருடன் கிடைத்துள்ளன. பல்லவர் காலத்திய உருளை வடிவில் செய்யப்பட்ட திருமுடியுடைய திருமால் அணிந்துள்ள கோலத்தில் காட்சி தருகிறார். உடல் வாகும், கட்டமைப்பும், நுட்பமான அணிகல வேலைப்பாடும் காஞ்சியின் கோயில்களில் உள்ள மூலவர் திருமால் சிலைகளைப் பெரிதும் ஒத்துள்ளன.

கி.பி. 1762 ஆம் ஆண்டு ஆங்கிலேயர்கள் இந்தியாவிலிருந்து ஸ்பானியர் ஆட்சிக்குட்பட்டிருந்த பிலிப்பைன்ஸ் தீவுகளின் (மணிலாவின்) மீது படையெடுத்துச் சென்றனர். இந்த படையெடுப்பில் 2000 படை வீரர்களும், கப்பல் பணிமக்களும் கலந்து கொண்டனர். இவர்களுள் செம்பாதியான எண்ணிக்கை (1000) உடையவர்கள் மதறாஸ் (சென்னை) நகரத்திற்கு அருகிலுள்ள ஆர்க்காட்டுப் பகுதியைச் சேர்ந்த தமிழ்நாட்டுச் சிப்பாயிகளாவர். இவர்களோடு தமிழ்நாட்டுத் தொழிலாளிகள் 1400 பேர் உடன் சென்றனர். இவர்கள் யாவரும் மணிலா முற்றுகையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

கி.பி. 1762ஆம் ஆண்டு செப்டம்பர் 24ஆம் நாள் இந்தப்படை மணிலாவைச் சென்று அடைந்தது. பதினைந்து மாதங்கள் இந்துப்படை மணிலாவைக் கைப்பற்றித் தன்வசம் வைத்திருந்தது. இந்தப் போரில் ஏராளமான தமிழர்கள் இறந்து போயினர்.

கி.பி. 1764 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முன்னறிவிப்பு இன்றி திடீரென்று பிரிட்டிஷ் கப்பல்கள் இங்கிருந்து இந்தியாவுக்கு புறப்பட்டன. எஞ்சி இருந்த இந்திய (தமிழ்)ச் சிப்பாய்களுக்குத் தெரிவிக்காமலே பிரிட்டிஷ் கப்பல்கள் புறப்பட்டுவிட்டன.

ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனிப் படைத்தலைவர்களால் கைவிடப்பட்ட-அலட்சியமாகப் புறக்கணிக்கப்பட்ட-தமிழ் நாட்டுப் படை வீரர்கள் பிலிப்பைன்ஸ் தீவுகளின் நாட்டுபுறப் பகுதிகளில் ஒதுங்கி வாழ்வதற்கு வழிதேடினர். சிறுசிறு குழுக்களாகப் பிரிந்து பரவலாக வாழத் தொடங்கினர். பிறகு தமிழர்களின்

குடியிருப்பு இன்றைய 'கெயிண்டா' (Gainta) எனும் ஊராக வளர்ந்தது. தமிழ் நாட்டுச் சிப்பாய்களின் வழித்தோன்றல்களே கெயிண்டா பட்டணத்தில் இன்றும் பேரளவில் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் பிரிட்டிஷாரின் ஆட்சிக் காலத்தில் 'மதராஸ் மாகாணம்' எனவும், இப்பொழுது தமிழ்நாடு எனவும் வழங்கப்படுகின்ற மாநிலத்தைச் சேர்ந்த தமிழ் மக்களின் கால் வழியினர் என்பதை இன்றைய உலகம் மறந்து கொண்டு வருகிறது. (Ajit Singh Rye, India-Philippines Cultural Relations, p 36) முனிசாமி, குப்புசாமி, கந்தசாமி, இராமசாமி எனும் பெயருடையவர்களாக இன்று இத் தமிழ்படை வீரர்களின் கால் வழியினர் வாழ்ந்து வருகின்றனர். ஆகையால் ஆங்கிலேயர்களின் 1762ஆம் ஆண்டு மணிலாப் படையெடுப்பு தமிழ்நாட்டிற்கும் பிலிப்பைன்ஸ் தீவுகளுக்கும் நேரடியான தொடர்பு உண்டாவதற்கும் பண்பாட்டுத் தாக்கம் நிகழ்வதற்கும் சிறந்ததொரு வாய்ப்பை அளித்தது.

(டாக்டர் க.த. திருநாவுக்கரசு, op. cit., பக் 550-561)

ஹாங்காங்

ஹாங்காங்கில் 300 தமிழ் முசுலீம்கள் இருக்கின்றார்கள். இவர்களைப் பொன்மனச் செம்மல்கள் என அழைக்கின்றார்கள். ஹாங்காங்கிற்கு வரும் தமிழர்களுக்குப் பொன்மனச் செம்மல்கள் விருந்து படைத்து வழியனுப்புவது வழக்கம். எல்லா நாட்டுத் தமிழர்களையும் சமயம், அரசியல், நாடு பேதமின்றி வரவேற்கிறார்கள். தமிழகக் கலைஞர்களை வரவழைத்து கலை நிகழ்ச்சிகளையும் நடத்தி வருகின்றனர். தொலைக்காட்சியில் வீடியோ தமிழ்ப்படம் காட்டுகிறார்கள். அவர்கள் குடியிருக்கும் ஊர் தோறும் பள்ளிவாசல் அமைத்துள்ளார்கள். தமிழ் முசுலீம்களைத் தவிர மற்ற தமிழ்ச் சமயப் பிரிவினர்களும் ஒரு சிலர் இருக்கின்றனர்.

உலகத்தமிழர் நிறுவனங்கள்

மதுரையில் ஒரு சங்கத்தை நிறுவி, தங்கத் தமிழை நமது முன்னோர்கள் வளர்த்தார்கள். அதன் பின்னர் தமிழின் வளர்ச்சியானது தனிப்பட்ட அறிஞர்களின் தொண்டாகவே இருந்துவிட்டது.

தமிழ் மறைக்கழகம்

1952இல் நவம்பர் 23ஆம் நாள் தமிழ் மறைக்கழகம் கொழும்பில் தொடங்கப்பட்டது. திருக்குறளை உலகமெங்கும் பரப்புவதற்கும் திருக்குறளே தமிழரின் மறை, தமிழ் மறை என்பதை நிலை நாட்டி, தமிழ் மக்கள் யாவரையும் அதில் ஈடுபடச், செய்வதற்கும் திருவள்ளுவர் திருநாளைத் தமிழர் வாழும் நாடுகள் எங்கும் கொண்டாடச் செய்வதற்கும் திருவள்ளுவர் தொடர் ஆண்டினைத் தமிழ் இனத்தின் தொடர் ஆண்டாக வழங்கச் செய்வதற்கும் இக்கழகம் தொடங்கப்பட்டது. மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா, பீஜி, மொரிசியஸ்,தென்ஆப்பிரிக்கா கனடா, ரீயூனியன், இங்கிலாந்து, போன்ற பல்வேறு நாடுகளில் வாழும் தமிழ் மக்களோடு முதலிலே தொடர்பு கொண்டு அவர்களை இணைத்து இயங்கச் செய்த நிறுவனம் மறைக்கழகமேயாகும். பல நாடுகளிலுள்ள நூற்றுக்கும் மேற்பட்ட தமிழ் அறிஞர்கள் இக்கழகத்தின் உறுப்பினர்களாக உள்ளனர்.

இலங்கையின் பல நகரங்களிலும் ஊர்களிலும் ஆண்டுதோறும் இருபத்து நான்கு திருக்குறள் மாநாடுகளை நடத்தியது. பாலர் தொடக்கம் எல்லாப் பருவத்தினரும் பங்கு கொள்ளத் தக்கதாக நான்கு பிரிவுகளாகத் திருக்குறள் தேர்வுகளையும் பேச்சுப் போட்டிகளையும் ஆண்டுதோறும் நடத்திப் பதக்கங்களும், பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கியது. அனைத்துலகத் தமிழ் மறைக் கட்டுரைப் போட்டி நடத்திப் பரிசு பெற்ற கட்டுரைகளையும் ஏனைய சிறந்த கட்டுரைகளையும் சேர்த்து, தீந்தமிழ் மறைக்கட்டுரைகள் எனும் நூலை 1959இல் வெளியிட்டது. அறிக்கைகள், நூல்கள் முதலியவற்றை வெளியிட்டு இக்கழகம் திருவள்ளுவர் திருநாளைத் தமிழர்கள் வாழும் நாடுகளெங்கும் கொண்டாடச் செய்தது. திருவள்ளுவர் தொடர் ஆண்டினையும் வழங்கச் செய்தது.

சென்னை, திருச்சி, கொழும்பு, கோலாலம்பூர், சிங்கப்பூர் நிலையங்கள் திருவள்ளுவர் திருநாளின் போது சிறப்பு நிகழ்ச்சிகளை ஒலி பரப்பச் செய்தது. திருக்குறளைக் கைவித்திய மொழியிலும், பர்மிய மொழியிலும் மொழி பெயர்க்கச் செய்தது. மேலும் பல மொழிகளில் மொழி பெயர்ப்பிற்கு ஆக்கமும் ஊக்கமும் நல்கியது.

திருக்குறள் பற்றிய பல்வகை நூல்களையும், திருக்குறள் மலர்கள், பதிப்புகள், மொழி பெயர்ப்புகள் முதலியவற்றைச் சேர்த்துத் திருக்குறள் நூற்காட்சியைத் திறம்பட நடத்திய தனிப்பெருமையும் இக்கழகத்திற்கு உரியது.

உலகத்தமிழ் மாமன்றம்

மலேசியத்தமிழ் மக்களின் ஆதரவுடன் 1963ஆம் ஆண்டு உலகத் தமிழ் மாமன்றம் கோலாலம்பூரில் அமைக்கப்பட்டது. மலேசிய நாட்டுச் சட்டப்படி இம்மன்றம் அங்குப் பதிவுச் செய்யப்பட்டது. பத்து நாடுகளிலிருந்து மன்றக் காப்பாளர்களாகப் பேரறிஞர் இருபதின்மர் தெரிவு செய்யப்பட்டனர். தமிழ் மக்கள் வாழும் நாடுகள் ஒவ்வொன்றிலும் மன்றம் கிளைகளை அமைப்பதென்றும் தமிழ் உலகு எனும் முத்திங்கள் ஏட்டினை நடத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

பல நாடுகளில் வாழும் தமிழ் மக்கள் தமிழாக்கத்துக்குச் செய்யும் பணிகளையெல்லாம் இணைத்து ஒருமுகப்படுத்தி வளர்க்கவும், உலகமெங்கும் உள்ள தமிழர்களை ஒன்றுபடுத்தவும் தமிழ் மொழி வளர்ச்சிக்காகவும் தமிழின் உயர்வுக்காகவும் இம்மன்றம் குறிப்பாக டாக்டர் கா.பொ.இரத்தினம் என்பார் எடுத்துக்கொண்ட முயற்சியால் நிறுவப்பட்டது.

உலகத்தமிழ் ஆராய்ச்சிமன்றம்

26-ஆவது அனைத்துலக மொழி நிபுணர்கள் மாநாட்டின் போது 7.1.1964ஆம் நாளன்று அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் புதுடெல்லியில் அமைக்கப்பட்டது. பேராசிரியர் சேவியர் தனி நாயகம் அவர்களால் முன் மொழியப்பட்டு, டாக்டர் காமில் சுவலபில் அவர்களால் வழிமொழியப் பட்டு இந் நிறுவனம் தோற்றம் பெற்றது. இந்தத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் அமைய முன்னோடிகளாய் இருந்தவர்களுள் முதன்மையானவர் அப்போது மலாயப் பல்கலைக் கழக இந்திய ஆய்வியல் துறையின் தலைவராக இருந்த பேராசிரியர் சேவியர் எஸ்.தனிநாயகம் "இந்த நவீன காலக்கட்டத்தில் மற்ற புதிய ஐரோப்பிய மொழிகளுக்கு ஈடாகத் தமிழ் மொழியும் வளர்ச்சிபெற வேண்டிய அவசியம் இருக்கிறது. ஆகவே ஒவ்வொரு ஆண்டும் அனைத்துலக நிலையில் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவர்களை ஒன்றுகூட்டி, பாடப் பிரச்சினைகள், போதனா முறைகள், தமிழ் மொழி ஆய்வுத்திட்டங்கள் போன்றவற்றை விவாதிக்க வேண்டும்" என இப்பேராசிரியர் கூறினார்.

இதன் பிறகு 1964இல் முதல் தமிழாராய்ச்சி மாநாட்டுக்கான உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் கோலாலம்பூரில் மலாயப் பல்கலைக்கழகத்தில் அமைந்துவிட்டது. இதன்படி 1966ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16ஆம் நாள் முதல் 23 ஆம் நாள் வரை - முதல்

தமிழ் ஆராய்ச்சி மாநாடு கோலாலம்பூரில் வெற்றிகரமாக நடந்தது. இம் மாநாட்டை மலாயப் பல்கலைக் கழகம், தேசிய இந்தியக் கல்வி வளர்ப்பு மன்றம், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் ஆகிய மூன்று அமைப்புகளும் கூட்டாக நடத்தி முடித்தன. இம்மாநாடு மலாயா அரசாங்கத்தின் ஆதரவுடன் நடத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

முதல் உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாட்டினை வெற்றிகரமாக நடத்திய நிலையில் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் கிளையினை மலேசியாவில் தோற்றுவிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இலங்கை, பிரான்சு, கனடா, ஐக்கிய அமெரிக்கா, இத்தாலி போன்ற நாடுகளில் ஏற்கனவே இதன் கிளை நிறுவனங்கள் அமைக்கப்பட்டு விட்டன என்பது குறிப்பிடதக்கதாகும். இந்நிலையில் தான் 1967ஆம் ஆண்டு சூலை மாதம் 16 ஆம் நாள் மலேசியாவின் உலகத் தமிழ் ஆராய்ச்சி கிளை நிறுவனம் தோற்றம் கண்டது. இதன் நோக்கங்கள் 1. தமிழ் மொழித் தொடர்பான ஆய்வுப் பணிகளுக்கு ஊக்கம் தந்து, அவ்வாய்வின் முடிவுகளை நூல் வடிவில் கொண்டு வருதல். தொடர்ந்து இவ்வாய்ப்பினையொட்டி, தேசிய அனைத்துலக அளவிலான கருத்தரங்குகளையும் மாநாடுகளையும் ஏற்பாடு செய்தல். 2. தமிழியல் ஆராய்ச்சியின் பல்வேறு துறைகளில் தொல்பொருள் துறை, உளவியல், சமூகவியல், சமயம், தத்துவம், வரலாறு, பொருளாதாரம், மொழியியல், இலக்கியம், வாணிபம், நுண்கலைகள், கல்வி, அறிவியல், தொழில் நுட்பம், நாட்டுப்புறப் பண்பாடு ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளவர்களை ஒருங்கிணைத்து ஓர் அனைத்துலக மாநாட்டை நடத்துதல்.

இரண்டாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு சென்னையில் தமிழ் நாட்டின் முதலமைச்சர் பேரறிஞர் அண்ணாவின் அயரா உழைப்பினால் ஒப்புயர்வில்லாப் பெருஞ்சிறப்புடன் 1968இல் நடைபெற்றது. மூன்றாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு பிரான்சு நாட்டுப் பேரறிஞர் பிலியோசரின் பேருழைப்பால் 1970 இல் பாரிசில் நடைபெற்றது.

நான்காம் உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் 1974இல் இலங்கை அரசின் ஒத்துழைப்பின்றித் தமிழ் மக்களின் பேருழைப்பால் நடைபெற்றது. ஐந்தாம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு முதலமைச்சர் புரட்சித் தலைவர் டாக்டர் எம்ஜி.இராமச்சந்திரனுடைய பேருழைப்பால் 1981இல் சிறப்புடன் மதுரையில் நடைபெற்றது.

கோலாலம்பூரில் (இந்திய ஆய்வியல் துறை) மலாயப் பல்கலைக் கழகம், உலகத் தமிழர் மாமன்றம் ஆகிய அமைப்புகள் மலேசிய அரசாங்கத்தின் ஆதரவோடு கோலாலம்பூரில் உள்ள மலாயப் பல்கலைக்கழகத்தில் 1987ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் ஆறாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை நடத்தியது.

முதல் நான்கு மாநாடுகளுக்கும் தவத்திரு தனிநாயக அடிகளார் வழிகாட்டியாகவும், உறுதுணையாகவும் இருந்து பணியாற்றினார். நடந்துமுடிந்த மேற்கண்ட மாநாடுகளில் அனைத்துக் கூட்டங்களிலும் தமிழ்நாட்டுப் பல்கலைக் கழக அறிஞர்களும், அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பா போன்ற மேனாட்டுப் பல்கலைக்கழக அறிஞர்களும், தமிழ் மொழியையும், தமிழ் இனத்தையும் உட்படுத்திப் பல ஆய்வுக்

கட்டுரைகளை வழங்கியுள்ளனர். மாநாட்டுக்குப் பிறகு இந்த ஆய்வுக் கட்டுரைகள் நூல் வடிவம் பெற்றன.

இதுவரையில் நடந்துள்ள மாநாடுகளின் வழியாக நமது மொழி எதிர்நோக்கும் பிரச்சினைகளை அடையாளம் கண்டுகொண்டு அதன் எதிர்கால வளர்ச்சிக்கான திட்டங்களையும் வகுக்க வழி பிறந்துள்ளது. அத்துடன் தமிழின் நிலை பற்றிய பல ஆழமான ஆய்வுகளும் செய்யப்பட்டுத் தமிழுக்கு தரம் சேர்க்கப்பட்டுள்ளது. இம் மாநாடுகளின் வழியாக உலகம் முழுவதும் உள்ள தமிழ் அறிஞர்கள் கூடிப்பேசி, தமிழ் உணர்வுகளை மேலோங்கச் செய்யவும் வழி பிறந்துள்ளது. தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும் என்று பாரதியார் கண்ட கனவு நனவாகிறது. தமிழ் மொழியின் வளம், கலை, கலாச்சாரம், பண்பாடு, தமிழர் நாகரீகம் பற்றிய அறிஞர் பெரு மக்களின் ஆராய்ச்சிகள், இவை போன்ற ஆராய்ச்சிகளின் வழி தெரிந்து கொள்ளப்படும் புதிய உண்மைகள், மொழியின் சிறப்புத் தன்மைகள் அனைத்தும் நூலாக வெளிவந்திருக்கின்றன. இத்தகைய முயற்சிகள் மொழியின் பெருமையை உலகறியச் செய்வதோடு மட்டுமல்லாமல், தமிழ்மொழியின் வளர்ச்சிக்கும் பெருமளவு துணை நிற்கும்.

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்

இரண்டாம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் பேரறிஞர் அண்ணா அறிவித்தபடி 1968இல் தமிழ் நாட்டரசால் உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் நிறுவப்பட்டது. இந்நிறுவனம் செய்து வரும் பணிகள். 1. அயல்நாட்டினருக்குத் தமிழ் கற்பிக்கும் பணி, 2. மொழி பெயர்ப்புக்குரிய அடிப்படைப்பணிகள், ஆண்டுதோறும் மாணவர்கள் பலருக்கு மொழிபெயர்ப்புப் பயிற்சி அளித்தல், 3. உயர் ஆராய்ச்சி வாய்ப்பு, 4.உயர் பணியாக அமைவது ஆராய்ச்சி நூல்களை வெளியிடுவதாகும். தமிழியல் ஆராய்ச்சித் துறைகளில் நூற்று முப்பதுக்கு மேற்பட்ட நூல்களை இந்நிறுவனம் வெளியிட்டுள்ளது. முனைவர் க.த.திருநாவுக்கரசு இந்நிறுவனத்தின் இயக்குநராகப் பணியாற்றுகிறார்.

உலகத்தமிழ் இளைஞர் பேரவை

1970 இல் இலங்கையில் முனைவர் இரா. சனார்த்தனம் அவர்களால் அமைக்கப்பட்டது. மலேசியா, சிங்கப்பூர், தென்னாப்பிரிக்கா, இலங்கை முதலிய நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட ஓர் சிறப்புமாநாட்டைச் சென்னையில் 1983ஆம் ஆண்டு இப்பேரவை நடத்தியது.

இலங்கையில் எல்லா உரிமைகளையும் இழந்து, சிங்களப்படைகளால் இனக்கொலைக்கு ஆளாகி, வாடி வதங்கித் துடிக்கும் தமிழ் மக்களின் துன்பநிலைமையைப் பற்றிப் பிற நாடுகள் நன்கறியச் செய்யவும், தமிழ் நாடும் இந்தியாவும் அவர்களுக்குக் கைகொடுத்து உதவவும் செய்ததற்கு இப்பேரவை ஊர்வலங்கள், கிளர்ச்சிகள் முதலியவற்றையும் நடத்திவருகிறது, பொதுக் கூட்டங்கள், அறிக்கையின் வாயிலாகவும் இலங்கைத் தமிழர் இடுக்கண் களைவதற்கு முயல்கின்றது.

உலகத்தமிழ்க் கழகம்

இக்கழகம் 6.10.68இல் திருச்சியில் தொடங்கப்பட்டது. மொழி ஞாயிறு தேவ நேயப்பாவாணர் இக்கழகத்தில் தலைவராகப் பணிபுரிகின்றார். இக்கழகத்தின் செய்தி ஏடாகத் தொடக்கத்தில் தென் மொழி எனும் ஏடு வெளிவந்துகொண்டிருந்தது. இக்கழகத்தின் இரண்டாம் மாநாடு 1968இல் பரமக்குடியிலும், மூன்றாம் மாநாடு 1971இல் மதுரையிலும், மாநில மாநாடு 1978இல் சென்னையிலும் நடை பெற்றன. இக்கழகத்தின் கிளைகள் தமிழ் நாட்டிலும் பிற மாநிலங்களிலும் இருக்கின்றன.

உலகத் தமிழின் முன்னேற்றக் கழகம்.

8.11.81இல் இக் கழகம் புலவரேறு பெருஞ்சித்திரனாரால் தொடங்கப்பட்டது. 1982ஆம் ஆண்டு தொடக்கத்திலிருந்து தமிழ் நிலம் எனும் ஏட்டை வெளியிட்டு வருகிறது.

உலகத்தமிழ்ப் பண்பாட்டியக்கம்

இந்த இயக்கம் யாழ்ப்பாணத்தில் 8.1.1974இல் தொடங்கப்பட்டது. 1974இல் ஈழத்தமிழரும், அயலகத் தமிழரும் சந்தித்தபோது இப்புதிய திட்டம் புத்துணர்ச்சி பெற்றது. இலங்கை, இந்தியா, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளின் பிரதிநிதிகள் இத் தொடக்கக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். முனைவர் சாலை இளந்திரையன் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கிறார். இவருடைய பெருமுயற்சியால் இந்தியா, மலேசியா, பர்மா, இந்தோனேசியா, பிஜி, தென்னாப்பிரிக்கா, அமெரிக்கா, பிரான்சு, மொரீசியஸ், வியட்நாம், இங்கிலாந்து முதலியநாடுகளில் கிளைகள் அமைக்கப்பட்டன. உலகில் 30 நாடுகளில் இக்கிளைகள் இயங்குகின்றன.

இயக்கத்தின் முதல் மாநாடு 1977இல் சென்னையிலும், இரண்டாம் மாநாடு 1980இல் மொரீசியசிலும், மூன்றாம் மாநாடு 1985இல் சேலத்திலும் நடைபெற்றன. நான்காம் மாநாட்டைக் கோலாலம்பூரில் நடத்த முன் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. பிஜித்தீவு, இலண்டன், பாரீஸ் நாடுகளிலும் மாநாடு நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்ப் பண்பாட்டுக்கு ஓர் இயக்கம் எனுந்தலைப்பில் இந்த இயக்கத்தின் நோக்கம், பணிகள் முதலியன பற்றித் தலைவர் சாலை இளந்திரையன் ஓர் ஆண்டறிக்கையை வெளியிட்டுள்ளார். இவ்வியக்கம் தமிழர்வாழும் நாடுகளுடன் தமிழில் தொடர்பு கொண்டு, தமிழையும் பரப்பிவருகிறது. தமிழ்ப் பண்பாட்டை. வளர்க்க, தமிழ் பயிலத்தக்க வழி வகைகள் செய்து வருகிறது.

பன்னாட்டுத் தமிழுறவு மன்றம்

பெருங்கவிக்கோ முனைவர் வா.மு.சேதுராமன் அவர்களுடைய பெரு முயற்சியால் தொடங்கப்பட்டது. தலைவராக நியூயார்க் நகரமுனைவர் வின்சன் பஞ்சாட்சரம் அவர்களும், செயலாளராக மேரியாண் முனைவர் கோபால் குருசாமி அவர்களும் பணியாற்றுகின்றனர். மலேசியா, சிங்கப்பூர், அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, தாய்லாந்து, கோங்கோங்கு, இலங்கை, செருமனி, பிரான்சு, மொரீசியஸ் முதலிய பல நாடுகளிலும், தமிழ்நாட்டின் ஆறு மாவட்டங்களிலும் கிளைகள் நிறுவப்பட்டுள்ளன.

உலகத் தமிழ்ச் சங்கம்

தமிழ்நாட்டரசு உலகத் தமிழ்ச்சங்கத்தை நிறுவும் எனும் நற்செய்தியை முதலமைச்சர் புரட்சித்தலைவர் எம்.ஜி.இராமச்சந்திரன் 1981இல் மதுரையில் ஐந்தாம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் போது கூறினார். உலகத்தமிழ்ச் சங்கத்தை நிறுவுவதாக அறிவித்து ஐந்தாண்டுகள் கழிந்தபின் 1986ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் உலகத்தமிழ்ச் சங்கத் தொடக்கப் பெருவிழாவை மதுரையிலே தமிழ் நாட்டரசு மிகச் சிறப்பாக நடத்தியது. இவ்விழாவின் கடைசி நாளான 15.4.86இல் முதலமைச்சர் உலகத்தமிழ்ச் சங்கத்தைத் தொடங்கி வைத்தார். சங்கத்தின் புரவலரான அவர் இச்சங்கத்துக்குப் பத்துகோடி உருபாநிதி வழங்குவதாகவும் அன்று அறிவித்தார். இச்சங்கத்தின் நோக்கம் உலகமெங்கும் வாழும் தமிழர்களுடன் தொடர்பு கொண்டு தமிழ் மொழி, இலக்கியம், கலை, பண்பாடு முதலியவற்றை ஓம்புதற்கும், பரப்புதற்கும் விரைந்து தொண்டாற்ற வேண்டும் என்பதே ஆகும்.

உலகத்தமிழர் மாமன்றம்

இம்மன்றம் 1984இல் சென்னையில் அமைக்கப்பட்டது. இம் மன்றத்தை அமைத்தவர்கள் இம்மன்றத்தின் தலைவரும், மலேசியநாடாளுமன்ற உறுப்பினருமான முனைவர் வி.டேவிட்டு, இம்மன்றத்தின் இந்தியக்கிளை அமைப்பாளராகப் பணிபுரியும் முனைவர் இரா. சநார்த்தனம், கலைமாமணி எம்.கே.முஸ்தபா ஆகியோர் ஆவர்.

சென்னையிலும் கோலாலம்பூரிலும் இம்மன்றத்தின் அலுவலகங்கள் இருக்கின்றன. உலகத்தமிழர் பல்கலைக் கழகம் ஒன்றைத் தென்னிந்தியாவில் தொடங்குவதற்கும் உலகத்தமிழர் வங்கியினை நிறுவுவதற்கும் முன்முயற்சிகளில் இம்மன்றம் ஈடுபட்டுள்ளது.

உலகக் கிறித்தவத் தமிழ்ப்பேரவை

திருச்சியில் இப்பேரவை 1981ஆம் ஆண்டு தோன்றியது. இப்பேரவையைத் தொடங்கிய தலைவர் பேராயர் சாலமோன் துரைசாமி என்பாராவார். தென்னகத்திலும், உலகத்தின் வேறு இடங்களிலும் உழைத்துவருகின்ற பேராயர்களும், திருச்சபை ஊழியர்களும் இதன் உறுப்பினர்களாக இருக்கின்றார்கள்.

இப்பேரவை மூன்று தமிழ் மாநாடுகளைச் சிறப்பாக நடத்தியுள்ளது. மூன்றாவது மாநாடு 1986 டிசம்பரில் சென்னையில் நடைபெற்றுள்ளது. மாநாட்டு மலரும் வெளியிடப்பட்டுள்ளது. மாநாடுகளில் தமிழ்ப்பேரறிஞர்களுக்கு நற்செய்தித் தமிழ்க்காவலர், தமிழ் மாமணி, அரும்கலைஞர் நற்செய்திச் செல்வர் முதலிய பட்டங்களும் வழங்கப்படுகின்றன. பேரவையின் சார்பில் இதழொன்றினை வெளியிடுவது, இரட்சணிய யாத்திரிகம் உரை வெளியிடுவது, கிறித்தவத் தமிழ் இலக்கிய ஆய்வு மன்றம் ஒன்றினை அமைப்பது முதலிய திட்டங்களையும் இப்பேரவை நடைமுறைப்படுத்த முயல்கின்றது.

உலகத் தமிழ் பணியியல்

மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் 1981-ஆம் ஆண்டு சனவரித் திங்களில் கூடிய ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டுக் கருத்தரங்கில் கலந்து கொண்ட அயல்நாட்டுத் தமிழறிஞர்களும், மற்றையோரும் துணைவேந்தரிடத்து ஒரு விருப்பம் தெரிவித்தனர். அவ்விருப்பமானது, உலகில், தமிழர் எங்கிருந்தாலும் அவரெல்லாம் தமிழ் கற்கவும், எழுதவும், பேசவும் வழிவகை செய்திடல் வேண்டும் என்பதாம். அவர்கள் விருப்பத்தை வேண்டுகோளாக ஏற்ற துணைவேந்தர் 'உலகத் தமிழ்ப் பணியியல்' என்னும் அமைப்பினை 1981ஆம் ஆண்டு பெப்ருவரித் திங்கள் 9ஆம் நாள் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் தோற்றுவித்தார்.

உலகத் தமிழ்ப் பணியியல் குறிக்கோளை நிறைவேற்று முகமாக அவ்வாண்டே செப்டம்பர்த் திங்களில், இலண்டன் மாநகரத்துப் பள்ளித் தமிழ்ச் சிறார்களுக்கு 'இலண்டன் பாரதீய வித்யா பவன்' நிறுவனம் வழியாக 253 தமிழ் நூல்கள் அனுப்பப்பட்டன.

உலகத் தமிழ்ச் சிறுவர்கள் எழுத்திலும், பேச்சிலும் ஆற்றல் பெற ஒரு கருவியாக, இப்போது உலகத் தமிழ்ப் பணியியல், இசையோடு கூடிய ஒலிப்பதிவு நாடாச் சுருள்களை வெளியிடுகிறது. இவ் ஒலிப்பதிவு நாடாச் சுருள்கள் வழியாகத் தமிழகத்தும், பிற மாநிலங்களிலும், அயல்நாடுகளிலும் வாழும் குழந்தைகள் தமிழ் உச்சரிப்பையும், தமிழ் இலக்கியப் பெருமையையும் ஒருசேர உணரும் வாய்ப்பைப் பெறுகின்றனர். இசையோடு கூடிய 'குழந்தைத் தமிழ்' 'நீதித் தமிழ்' போன்று, தமிழர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் வகையில் மேலும் பல நாடாச் சுருள்களை 'உலகத் தமிழ்ப் பணியியல்' வெளியிடுவதற்குத் திட்டம் போட்டிருக்கின்றது.

அயல்நாட்டுக் தமிழ்க் கல்வித்துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்

1982 ஏப்ரலிலிருந்து இத்துறை செயல்படத் துவங்கியது. அயல்நாடுகளில் வாழும் தமிழர் நலனைக் கருத்தில் கொண்டு அவர்களுடன் தொடர்புகொண்டு அவர்கள் தங்கள் மொழி, பண்பாடு , தனித்தன்மை ஆகியவற்றைப் பேணிப்பாதுகாக்க உதவுவது இதன் தலையாய பணி. அத்துடன் உலகின் பல பாகங்களில் பழங்காலத்திலும், இடைக் காலத்திலும், தற்காலத்திலும் தமிழர் குடியேற்றம் பற்றி வரலாற்று நோக்கில் பல்துறைச் சார்புடையதாக ஆய்வு செய்யும் பணியும் இத்துறையின் நோக்கமாகும்.

அயல்நாடுகளில் பேசப்படும் தமிழ் மொழியை மதிப்பிடுதலும் மேம்படுத்துதலும் இதன்முக்கிய நோக்கமாகும். அயல் நாடுகளில் தமிழ் மொழித் தாக்கம், தமிழ் மொழிச் சூழமைவு, தமிழ் மொழிக் கல்வி, தமிழ் மொழி இலக்கிய வளர்ச்சி முதலியவற்றைப் பற்றி ஆராய்தல்: மேலும் அயல் நாடுகளில் உள்ள செய்தி பரவல் தொடர்புச் சாதனங்களைப் பற்றியும், அங்குத் தோன்றியுள்ள தமிழ்ச் சங்கங்கள் பற்றியும்; ஆராய்ந்து தமிழ் எழுத்தாளர்களிடையே ஒத்துழைப்பை உயர்த்தப் பாடுபடுதல் இத்துறையின் நோக்கமாகும்.

மேலும், அயல் நாடுகளில் மிகப் பழங்காலத்தே நிகழ்ந்த குடியேற்றம் குறித்தும், பழங்காலத்தில், இடைக்காலத்தில் தற்காலத்தில் தமிழர்கள் மேற்கொள்ளும் புலப் பெயர்ச்சியினைக் குறித்து ஆராய்தலும் இத்துறையின் மற்றொரு நோக்கமாகும்.

தவிர, அயல்நாடுகளில் நிலவும் தமிழ்ப் பண்பாட்டை ஆராய்ந்து மதிப்பிடுதலும் மேம்படுத்தலும் குறிப்பாக உலகப் பண்பாட்டிற்குத் தமிழ்நாடு அளித்துள்ள பங்கு குறித்தும், தமிழ்ப் பண்பாட்டிற்கு அயல் நாட்டுத் தமிழர்கள் அளித்துள்ள பங்கு குறித்தும், தமிழ்ப் பண்பாட்டிற்கு அயல்நாட்டுப் பண்பாடு அளித்துள்ள பங்கு பற்றியும் ஆராயத் திட்டம் உள்ளது. மேலும் அயல் நாடுகளில் தமிழர், அயல்நாட்டவரிடையே ஏற்படுகின்ற இனக்கலப்பு குறித்தும், அயல்நாட்டுத் தமிழர்கள் தமிழ் நாட்டோடு கொள்ளும் பண்பாட்டு தொடர்புகள் குறித்தும் ஆராய்ச்சி நடத்த முயலுகின்றது.

இத்துறை மேலும் அயல்நாடுகளில் நிலவும் தமிழர் மதம், கலை, கட்டடக்கலை, சமூக அமைப்பு, பொருளாதார நிலை, முதலியவை தொடர்பாக ஆராய்ச்சி செய்யவும் திட்டமிட்டிருக்கிறது. அயல் நாடுகளில் நிலவும் பன்மைச்சமுதாயத்தில் தமிழர்களுக்குத் தோன்றும் பிரச்சினைகளை, குறிப்பாக அயல்நாடுகளில் மற்ற இனக் குழு மக்களுக்கும் தமிழர்களுக்கும் இடையேயுள்ள ஒருமைப்பாட்டையும் ஒற்றுமையையும் குறித்தும் ஆராய்தல், அயல் நாட்டுத் தமிழ் அகதிகள், குறிப்பாக அவர்கள் தொடர்பான மனித உரிமைகள், சமூகப் பொருளாதாரப் பிரச்சனைகளை ஆராய்தல் இத்துறையின் மற்றொரு நோக்கமாகும்.

இவ்வாறான ஆராய்ச்சியின் மூலம் அயல்நாட்டுத் தமிழர்களின் தேவைகளையும், கோரிக்கைகளையும் தமிழ்நாட்டு மக்களுக்கும், அரசுக்கும் அறிவித்தல், தமிழர்களின் பிரச்சனைகளை அயல்நாட்டுத் தமிழர்கள் அறியச் செய்தல், உலகத் தமிழர்களிடையே ஒற்றுமையையும், ஒருமைப் பாட்டையும் மேம்படுத்தல் இத்துறையின் குறிக்கோளாகும்.

இத்துறையினர் 1987 ஆம் ஆண்டுவரை இரண்டு நூல்கள் வெளியிட்டுள்ளனர் 1. பேராசிரியர் நம்பி ஆரூரன் எழுதிய *Indians in South Africa with special reference to Tamils*, 1983, 2. முனைவர் சு.இராசாராம் எழுதிய *English-Tamil Pedagogical Dictionary*, 1986.

அயல்நாடுகளில் தமிழர் எனும் இந்நூலும், முனைவர் சு.இராசாராம் எழுதிய மொரீசியஸ் தமிழரும் தமிழும் எனும் நூலும் 1989 ஆம் ஆண்டு இறுதிக்குள் வெளிவர இருக்கின்றன. விரைவில் செருமன்-தமிழ் அகராதி ஒன்றும் வெளிவர இருக்கின்றது. தற்சமயம் செயல்பட்டுக்கொண்டிருக்கும் ஐந்து ஆண்டுத் திட்டத்தின் கீழ் 9 ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இத்துறை அயல்நாட்டுத் தமிழறிஞர்களுக்காக 1982-83, 1983-84, 1988-89 ஆகிய ஆண்டுகளில் 'தமிழ்ப் பண்பாடு: ஓர் அறிமுகம்' என்ற 30 நாள் பயிற்சி வகுப்புகளை நடத்தியது. இம்மூன்று பயிற்சி வகுப்புகளிலும் மேற்கு செருமனி, தென் ஆப்பிரிக்கா, மொரீசியஸ், மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து, சீனா, பிரான்சு, ஆகிய நாடுகளிலிருந்து 68 பயிற்சியாளர்கள் பங்குபெற்றனர். தமிழர் வரலாறு, சமூக வாழ்க்கை, சமயம், தத்துவம், மொழி, இலக்கியம், நுண்கலைகள் ஆகியவற்றை அறிந்து கொள்ளும் வகையில் வகுப்பு பயனுள்ளதென அவர்கள் கண்டனர்.

பிறமொழியாளர்களுக்குத் தமிழ் மொழியைக் கற்பித்தலுக்கென இத்துறை தமிழ்ச் சான்றிதழ் வகுப்பு ஒன்றினை நடத்தி வருகிறது. இவ்வகுப்பில் மேனாட்டுத் தமிழ் ஆய்வாளர்களும், பிற இந்திய மாநில ஆய்வாளர்களும் தமிழ் கற்று வருகின்றனர்.

இத்துறையின் குறிக்கோள்களை நிறைவேற்றும் வகையில் 1987ஆம் ஆண்டு "அயல்நாடுகளில் தமிழும் தமிழரும்" என்ற கருத்தரங்கையும், 1988ஆம் ஆண்டு அனைத்துலக நிலையில் "அயல்நாட்டுத் தமிழர்க்குத் தமிழ்மொழிப் பாடத் திட்டங்கள் வகுப்பதிலும் பாடநூல்கள் எழுதுவதிலும் எழும் பிரச்சினைகள்" என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கையும் நடத்தியுள்ளது. இக்கருத்தரங்கில் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், மொரீசியஸ், பிரிட்டன் ஆகிய நாடுகளிலிருந்து ஆய்வாளர்கள் பங்கேற்றனர்.

உலகத் தமிழர் நிறுவனங்கள்

அனைத்துலகத் தமிழ் மொழி கற்றல் அவையம்

International Council for Tamil Language Learning

அயல் நாடுகளில் தமிழ்மொழி வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டு அனைத்துலகத் தமிழ் மொழி கற்றல் அவையம் (International Council for Tamil Language Learning (ICTALL)) என்றொரு அமைப்பு தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டு 1988 பிப்ரவரித் திங்கள் 23,24 ஆகிய நாள்களில் "அயல் நாட்டுத் தமிழர்களுக்குத் தமிழ்மொழிக் கல்வித் திட்டம் வகுப்பதிலும் பாட நூல்கள் எழுவதிலும் எழும் பிரச்சினைகள்" என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கில் இந்த அவையம் உருவானது. தமிழ்ப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த அயல் நாட்டுத் தமிழ்க் கல்வித்துறை நடத்திய இக்கருத்தரங்கில் இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், மொரிசியஸ், இங்கிலாந்து ஆகியநாடுகளிலிருந்து இருபதுக்கு மேற்பட்ட தமிழறிஞர்கள் கலந்துகொண்டனர்.

இன்று கிட்டதட்ட ஒரு கோடி தமிழர்கள் உலகெங்கும் பரந்து வாழ்கிறார்கள் என்பதை நாம் அறிவோம். இலங்கை, பர்மா, மலேசியா, சிங்கப்பூர், மொரிசியஸ், தென் ஆப்ரிக்கா, பிஜி ஆகிய நாடுகளில் மிகுதியாகவும், தாய்லாந்து, இங்கிலாந்து, அமெரிக்க ஐக்கிய நாடுகள் பிரிட்டிஷ் கயானா போன்ற நாடுகளில் சிறுபான்மையினராகவும் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர். உலகின் எந்தப் பகுதியில் வாழ்ந்தாலும் தமிழ் மொழியையும் பண்பாட்டையும் மேலை நாகரிகத் தாக்கத்தினின்றும் தமிழர்கள் காத்து வருவது நமக்கெல்லாம் பெருமையளிப்பதாகும்.

தமிழர்கள் பெரும்பான்மையினராக வாழுகின்ற நாடுகளில் கல்வித் திட்டத்தில் அந்தந்த நாட்டு மொழிகளுக்கு இணையாகத் தமிழும் முக்கியப் பங்கு வகிக்கிறது. சிறுபான்மையினராக வாழும் நாடுகளில் கல்வி மொழித்தகுதியைத் தமிழ் பெறாவிட்டாலும் தமிழ்க் கல்வி பள்ளிகளில் ஊக்குவிக்கப் படுகின்றது. இக்கல்வி நிறுவனங்களுக்கு அப்பால் தமிழ்க் குழந்தைகளுக்கெனத் தமிழ்ச்சான்றோர் தனிப்

பள்ளிகள் நடத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது. தமிழ்மொழி மற்றும் பண்பாட்டுக் கழகங்களும் இப்பணியைச் செவ்வனே செய்து வருகின்றன. பொருத்தமான கல்வித் திட்டங்களும் (Curricula) பாடத்திட்டங்களும் (Syllabi) பாடநூல்களும் (Text book) உருவாக்கப்பட்டுள்ளன. இருந்தாலும் கல்வித்திட்டத்தைப் பொறுத்தவரையிலோ, பாடத்திட்டத்தைப் பொறுத்த வரையிலோ பாடநூல்களைப் பொறுத்தவரையிலோ மன நிறைவான வெற்றியை நாம் இன்னும் பெறவில்லை என்றே கூறவேண்டும். இதற்குக் காரணம் பலவிதமான அரசியல், சமூகப், பொருளாதார மற்றும் கல்வி, மொழியியல் முதலான பிரச்சினைகள் என்றால் மிகையாகாது.

ஒவ்வொரு அயல்நாட்டிலும் வாழுகின்ற தமிழர்க்கெனக் கல்வித்திட்டம் உருவாக்கப்படும்பொழுதும் பாடத்திட்டத்தை அடியொற்றிப் பாடநூல்கள் எழுதப்படும்பொழுதும் மேலே கூறப்பட்ட பிரச்சினைகள் தெளிவாக ஆராயப்பட வேண்டும். இது மட்டுமின்றி அந்தந்த நாட்டு அரசியல் வகுத்து அளிக்கின்ற மொழிக்கொள்கையையும் சரியாகப் புரிந்து கொண்டு மொழிக்கல்வித் திட்டத்தை உருவாக்க வேண்டும். அதைப்போலவே சமூக, பொருளாதார, கல்வி, மொழியியல் பிரச்சினைகளையும் புரிந்து கொண்டு பாடநூல்களை எழுதவேண்டும்.

கல்வித் திட்டத்தைத் தவிர தமிழ் மொழியைக் கற்பதற்கும் கற்பிப்பதற்கும் தகுந்த கேள்வி-காட்சிக் கருவிகளை உருவாக்கவேண்டியது இன்றையத் தேவையாகும். மேலை நாட்டுத் தொழில் நுட்ப வளர்ச்சியை மனத்திற்கொண்டு, அச்சடித்த நூல்களுக்கு ஒரு படிமேலாகத் தொழில் நுட்பத் துணைக்கருவிகளைத் தமிழ் மொழியைக் கற்பிக்க உருவாக்க வேண்டிய காலக்கட்டத்திற்கு நாம் வந்துள்ளோம்.

எனவே, அயல்நாடுகளில் தமிழ் மொழியையும் பண்பாட்டையும் மேம்படுத்தும் வகையிலே பள்ளி மற்றும் கல்லூரி நிலையில்

1. தமிழ் மொழிக்கல்வித்திட்டத்தை உருவாக்குவது,

2. தமிழ்ப் பாடநூல்கள் எழுதுவது,

3. தமிழ் மொழியைக் கற்றல் மற்றும் கற்பித்தலுக்கான கேள்வி காட்சிக் கருவிகளை உருவாக்குவது.

4. கல்வித்திட்டம், பாடநூல் ஆகியவை தொடர்பாக அவ்வப்போது ஆராய்ச்சியில் கருத்தரங்குகள் நடத்துவது.

5. அயல்நாட்டுத் தமிழாசிரியர்களுக்குத் தமிழ்மொழியைத் கற்பிக்கப் பயிற்சி அளிப்பதுமாகிய இன்னோரன்ன தேவைகளை நிறைவேற்றுவது.

ஆகியவை இந்த அவையத்தின் முக்கியக் குறிக்கோள்களாகும்.

தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் ச. அகத்தியலிங்கம் இதன் தலைவராகப் பொறுப்பேற்றுள்ளார். பேராசிரியர் கா. சிவத்தம்பி (யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம், இலங்கை) பேராசியர் சுப. திண்ணப்பன், (கல்வியல் கழகம், சிங்கப்பூர்),

பேராசிரியர் ஜி.கிருஷ்ணபகவான் (பாடத்திட்ட மேம்பாட்டுக்கழகம், மலேசியா), திரு திருமலைச்செட்டி (மகாத்மா காந்தி நிறுவனம், மொரீசியஸ்), திரு இராம. வீரசிங்கம் (இலண்டன் தமிழ்ச்சங்கம், இலண்டன்) டாக்டர் ஆர். நித்தியானந்தன் (இலண்டன் தமிழ்ப் பள்ளி, இலண்டன்) , டாக்டர் ஈ.சா. விசுவநாதன்(கயானா பல்கலைக் கழகம், கயானா) ஆகியோர் தமிழர் வாழும் அயல்நாடுகளின் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக் கப்பட்டுள்ளனர். தென்ஆப்பிரிக்கா பிஜி, பர்மா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட உள்ளனர். மிக விரைவில் பல்வேறு ஆக்கப்பணிகளில் ஈடுபட இந்த அவையம் தீர்மானித்துள்ளது என்று இதன் அமைப்புச் செயலாளர் டாக்டர் சு. இராசாராம் தெரிவிக் கிறார்.

அனைத்துலகச் சைவ சித்தாந்த ஆராய்ச்சிமன்றம்

இம்மன்றம் தருமபுர ஆதீனத்தின் சார்பில் இயங்கி வருகின்றது. இம்மன்றம் சென்ற ஆண்டில் கோலாலம்பூரில் இரண்டாவது உலக சைவ சித்தாந்த ஆராய்ச்சி மாநாட்டை நடத்திற்று.

ஆகையால் பல உலகளாவிய நிறுவனங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. பல நிறுவனங்கள் தமிழ் நாட்டிலும், இந்தியாவிலுமேயே முடங்கிக் கிடக்கின்றன. இவற்றில் சில மன்றங்கள் பிற நாடுகளுடன் தொடர்பு கொண்டுள்ளன. ஆனாலும் பிற நாடுகளில் வாழும் தமிழர்களுடன் நிலையான தொடர்பு கொண்டியங்கும் நிறுவனம் ஒன்றேனும் இல்லாதிருப்பது பெருங்குறையேயாகும். அயலகத் தமிழர்கள் தாயகத்தமிழர்களிடம் பொன்னையும் பொருளையும் எதிர்பார்க்கவில்லை. ஆனால் அவற்றினும் மேலான பண்பாட்டுத் தொடர்பையும், மொழித்தொடர்பையும், நல்லுறவையும் அவர்கள் ஆவலோடு எதிர்பார்க்கிறார்கள்.

உதவிய கட்டுரைகள்

1 டாக்டர் கா. பொ. இரத்தினம், தமிழர்கண்ட உலகளாவிய நிறுவனங்கள்.

2 அனைத்துலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், தோற்றமும் வளர்ச்சியும் ஆறாம் உலகத்தமிழ் மாநாட்டு மலர்

3 மலேசிய வீடமைப்பு ஊராட்சித்துறை, துணையமைச்சர், மாண்புமிகு டத்தோ. சி.சுப்ரமணியம் அவர்களின் 6ஆவது மாநாடு வாழ்த்துறை, மலேசிய நல்வாழ்வுத்துறைத் துணைஅமைச்சர், டத்தோ கு.பத்பநாபன் அவர்களின் 6ஆவது மாநாடு வாழ்த்துறை; இர.ந. வீரப்பன் வருங்கால வாழ்வு அத்தியாயம் உலகத்தமிழர்; அயல் நாட்டுத் தமிழ்க் கல்வித்துறை, தமிழ்ப்பல்கலைக்கழகம் 'பதிவேடுகள்'

அயல்நாட்டார் தமிழுக்குச் செய்த தொண்டு

பதினாறாம் நூற்றாண்டில் தமிழ் அச்சுத் துறை அமைக்கப்பட்ட பிறகுதான் அயல்நாட்டார் தமிழுக்குச் செய்த தொண்டைப்பற்றிய செய்திகள் கிடைக்கின்றன. கி.பி.1554 ஆம் ஆண்டு போர்ச்சுகீசைச் சேர்ந்த லிஸ்பன் நகரில் கார்ட்டில்லா (Cartilla) என்னும் லூசோ-தமிழ் சமய வினாவிடை என்கிற துண்டு வெளியீடு அச்சிடப்பட்டு வெளியாகியது. இந்தியாவில் கோவா நகரில் போர்ச்சுகீசிய கிறிஸ்தவக் கத்தோலிக்கப் பாதிரிமார்களால் கி.பி. 1556 இல் தமிழ் சமயப் பரப்புதலுக்காக வேண்டி ஓர் அச்சகம் நிறுவப்பட்டது. கோவாவில் உருவான இத்தமிழ் எழுத்து வடிவங்கள் கொல்லத்தில் செப்பம் செய்யப்பட்டன. இந்திய மொழிகளில் முதன்முதலாகத் தமிழ் மொழிதான் ரோமன் வரிவடிவில் மொழி பெயர்க்கப்பட்டு அச்சடிக்கப்பட்டது. இந்த நூலின் ஒரு பிரதி லிஸ்பன் நகரிலுள்ள பெலன் மனிதவியல் அருங்காட்சியகத்தில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுக் காப்பாற்றப் பட்டு வருகிறது.

கோவாவில் அச்சகம் ஏற்பட்டதற்கு ஓராண்டு கழித்து 1557 இல் கொல்லத்திலும், கொச்சியிலும், அம்பழங்காட்டிலும், புன்னைக் காயலிலும், வைப்புக்கோட்டையிலும் கத்தோலிக்கப் பாதிரிமார்களால் அச்சகங்கள் தோற்றுவிக்கப்பட்டன.

இந்திய நாட்டில் முதல் அச்சுக்கண்ட நூல் 1557 இல் கொல்லத்தில் அச்சடிக்கப்பட்ட "தம்பிரான் வணக்கம்" என்னும் 16 பக்கங்கள் கொண்ட சமய வினாவிடை எனும் சிறு வெளியீடாகும். இதனைப் போர்ச்சுகீசிய மொழியிலிருந்து தமிழில் மொழி பெயர்த்தவர் ஆந்திரிக்கசு அடிகளார் ஆவார் (1520-160). இந்நூல்தான் இந்திய மொழிகளில் ஒன்றான தமிழ் வரிவடிவில் அச்சிடப்பட்டுள்ளதாகும். இவ்வெளியீட்டிற்கு வேண்டி தமிழ் எழுத்துக்களைத் தம்கையினால் திருத்தி உழைத்துச் செதுக்கி வடித்துக் கொடுத்தவர் கொன்சால் பஸ் பாதிரியார் ஆவார். ஆந்திரிக்கசு அடிகளார் இராயப்பர் என்பவரின் துணையோடு போர்ச்சுக்கீசிய மொழியிலிருந்து செய்த தமிழாக்கமே இந்நூல். அமெரிக்க நாட்டு ஆர்வர்து பல்கலைக் கழகம் இந்நூலைப் பேணிக் காத்து வருகின்றது.

ஆந்திரிக்கசு அடிகளாரால் போர்ச்சுகீசிய மொழியிலிருந்து தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட மற்றொரு நூலின் பெயர் "கிரிசித்தியரீனி வணக்கம்" என்பதாகும். இது 122 பக்கங்கள் கொண்டது. கொச்சியில் அச்சிடப்பட்டது. பாரிசு அரசினர் நூலகத்தில் இடம் பெற்றுள்ளது. வத்திக்கான் நூலகத்தில் இன்னும் இயங்குகின்ற "அடியார் வரலாறு" அறுநூற்று அறுபத்தொன்பது பக்கங்களுடன் அமைந்துள்ளது. முற்பகுதியில் சில

பக்கங்களும், இறுதியில் சில தாள்களும் தவறியுள்ளன. 1586 ஆம் ஆண்டு இந்நூல் "முத்துக்குளித்துறையாக" மிளிர்ந்த கொற்கையருகே புன்னைக் காயலில் அச்சிடப் பெற்றுள்ளது.

செருமானிய நாட்டின் ஆலிநகரில் "பரதீசுத்தோட்டம்" ,"ஞானக் கண்ணாடி", "உண்மைக்கிறித்தவம்" ஆகிய தமிழ் நூல்கள் அச்சாயின. அங்கிருந்து தமிழகத்தரங்கம்பாடிக்கு 1713 ஆம் ஆண்டு அச்சுப் பொறியைக் கொண்டு வந்தவர் பார்த்தலோமேயு சீகன்பால்கு (1663-1719) ஆவார். மார்டின் லூதரால் எழுதப்பட்டதைச் சீகன்பால்கு மொழி பெயர்த்து அச்சிட்ட "தமிழ் வினாவிடைதான்" ஆசிய மொழிகளிலேயே முதன்முதலாக வெளியிடப்பட்ட கிறிஸ்தவ சீர்திருத்தப் பிரிவினரின் வெளியீடு என்று கூறப்படுகிறது. அவர் மொழி பெயர்த்தும் புதியதாக அமைந்ததுமான "தோத்திரப்பாடல்கள்" 1715 அல் அச்சாகியது. இப்பாடல்கள் ஐரோப்பிய இசை மெட்டிலும், தமிழ் இசைப் பண்ணிலும் அமைக்கப்பட்டவையாகும். இவர் தன்னந் தனியாகத் தமிழில் மொழி பெயர்த்துத் தந்த புதிய ஏற்பாடு 1715இல் இங்கு அச்சேறியது. இந்தியாவிலேயே முதன்முதலாகப் புத்தக உருவில் வெளிவந்த விவிலியநூல் இத்தமிழ் மொழி பெயர்ப்பேயாகும்.

சீகன் பால்குவினால் 1713இல் பொறையாற்றில் ஏற்படுத்தப்பட்ட அச்சுவார்ப்படச்சாலையும் 1715 இல் காணப்பட்ட காகிதப்பட்டறையும் தமிழகத்திலே, ஏன் இந்தியாவிலேயே முதன் முதலாக நிறுவப்பட்ட அமைப்புகளாகும். இங்கு மை தயாரிக்கவும் சீகன் பால்கு திட்டமிட்டார்.

செருமானிய செந்தமிழ்ச் செல்வரான சீகன் பால்கு எகாரரா உயிரெழுத்துக்களுக்கும் அவை ஏறிய உயிர் மெய் எழுத்துக்களாகிய கெ, கே ஆகியவற்றுக்கும் உள்ள வேறுபாட்டைத் தெளிவுற உணர வழிவகுத்தார். வீரமா முனிவர் குறில் நெடில் வேறுபாட்டையும் மெய்யெழுத்துக்களுக்கு மட்டுமே புள்ளியிடும் முறையையும் தெளிவுறுத்தி, எழுத்துவரி வடிவச் சீர்திருத்த முன்னோடியாக மிளிர்கிறார். தமிழ் வரிவடிவ அமைப்பில் எளிமையும், தெளிவும், எழிலும், அச்சுக்கலை வளர்ச்சியால் உருவாயின. மூலையில் முடங்கிக் கிடந்த ஓலைச் சுவடிகளையெல்லாம் தேடித் தொகுத்துக் கல்விசாலைகளில் நிலைபெறச் செய்ய அச்சகங்கள் உறுதுணை புரிந்துள்ளன. புன்னைக்காயலில் சான்தே பெரியாவும், அம்பலக்காட்டில் இக்னேசிய ஐக்கிய மணியும் தமிழ் அச்சு எழுத்துக்களை உருவாக்கித் தந்துள்ளனர். சீகன் பால்க் காலத்தில் அச்செழுத்துக்கள் மேலும் வளம்பெற்றன.

தமிழகத்தை ஒட்டியுள்ள இலங்கைத்தீவில் ஒல்லாந்து வணிகக்குழுவின் ஆட்சியினரால் ஹாலந்துக்கார அச்சுக்கூடம் 1713 இல் கொழும்பில் அமைக்கப்பட்டது. இங்கு ஒல்லாந்து அரசாங்கச் சார்பில் 1742 இல் 4 சுவிசேஷங்கள் தமிழில் அச்சிடப்பட்டன. பிலிப்பு தென் மெல்லோ என்னும் இலங்கைத் தமிழரான பெரிய மதகுருவால் 1 கிரீக்குமொழி மூலத்தின் பொருள் கெடாமலும், அதே நேரத்தில் தமிழ் நன்னூலின் விதிமுறைகள் மீறப்படாமலும் தமிழில் மொழி பெயர்த்துக்கொடுக்கப்பட்ட புதிய ஏற்பாடு 1759 இல் மேற்படி அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியாகியது. பிறகு சென்னையிலும் (1779-1815) நாகர் கோயிலிலும் (1822) பாளையங்கோட்டையிலும் (1830) அச்சகங்கள்

அமைக்கப்பட்டன. 1835 ஆம் ஆண்டு அச்சகத்தடைச்சட்டம் நீக்கப்பட்டபிறகு தமிழ் பேசுவோர் நிலைத்துவாழும் இடங்களில் எல்லாம், தமிழகம், இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், பர்மா, தென்னாப்பிரிக்கா, பிஜி மொரீசியஸ் போன்றவற்றில் தமிழ் அச்சுக்கூடங்கள்முகிழ்க்கத் தொடங்கின.

இத்தாலிய நாட்டுத் தத்துவப் போதகர் இராபர்ட்டு தே நொபிலி (1577-1656) தமிழ் உரைநடை வளப்பமுற வித்தூன்றியவர் எனக்கூறலாம். இவர் மதுரைக்கு 1606 நவம்பர் 15 ஆம் நாள் வந்தார். நாற்பது உரை நடைநூல்களும், மூன்று செய்யுள் ஏடுகளும் தமிழில் இவர் எழுதியுள்ளார். அவற்றுள் ஒரு ஞானோபதேசக் காண்டம், ஆத்தும நிர்ணயம், புனர்சென்ம ஆட்சேபம் தாசனத்திக்காரம், அஞ்ஞானநிவாரணம் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. தத்துவக் கண்ணாடி, ஞானதீபிகை, சேசுநாதர் சரித்திரம் ஆகியவை அக்கால உரை நடைக்குச் சான்றுகளாகும்.

தமிழ்ப்பற்று வாய்த்த மற்றொரு அறிஞர் பதினெட்டாம் நூற்றாண்டில் தமிழகத்துக்கு வருகை தந்த வீரமாமுனிவர் (1680-1747) ஆவார். இவர் உரைநடையில் பைந்தமிழ்ச் சொற்களே பாய்ந்தோடி வருகின்றன. "ஒலி அடிப்படையில் பேசுவதற்கு எளிதாகவும், எழுதுவதற்கு அரிதாகவும் தமிழ் விளங்குகிறது", என இவர் கூறுகின்றார். இவர் எழுதிய நூல்கள் வேதவிளக்கம், வேதியர் ஒழுக்கம், பேத மறுத்தல் ஆகிய உரைநடை நூல்கள். மட்டி, மடையன், பேதை, மிலேச்சன், மூடன் ஆகிய ஐவரைச் சீடராக்கிக் கொண்ட பரமார்த்தகுருவின்கதை வீரமாமுனிவர் வழங்கிய எட்டுச்சிறு கதைகளின் நூலாகும். இந்நூல் 54 மொழிகளில் மொழி பெயர்த்தெழுதப்பட்டுள்ளது. "பாதிரிமார் பெரிதும் வசனத்திலேயே நூல்களை எழுதினார்கள். செய்யுளாக இருந்த நிகண்டுகளுக்குப் பதில் அகராதிகளை இயற்றினார்கள். சூத்திரங்களாக இருந்த இலக்கண நூல்களை வசனமாக எழுதினார்கள்" என்பர் மயிலை சீனி வேங்கடசாமி.

அருஞ்சொற்களுக்குப் பொருள்காண முன்பெல்லாம் திவாகரம், பிங்கலம் ஆகிய நிகண்டுகளை நாட வேண்டும். அவற்றுள் ஒருபொருள் குறித்துப் பல சொற்களும், பல பொருள் குறித்த ஒரு சொல்லும் நூற்பாக்களாக விளங்கும். சிதம்பர இரேவணசித்தர் 1594 இல் அகராதி நிகண்டும் எழுதினார். இவற்றை முழுமையாக அறிந்து பயின்றோரே பயனடைவர், பொருள் உணர்வர். இந்நிலை நோக்கிய வீரமாமுனிவர் எல்லோரும் எளிதாகப் பொருள்அறிய வழிவகுத்தார். பன்னீராயிரத்துக்கு மேற்பட்ட சொற்களை நான்கு நிலைகளில் பெயர் பொருள் தொடை, தொகை எனப் பகுத்துப்பொருள் புலப்படச்செய்த நூலாக்கமே சதுரகராதி (1732) ஆகும். 1679 ஆம் ஆண்டில் அந்தோணி பிரயோன்சா அடிகளார் போர்ச்சுகீசிய தமிழ் அகராதியை உருவாக்கினார். வீரமாமுனிவர், 4,400 சொற்களுடன் தமிழ், இலத்தீன் அகராதியையும், 9000 சொற்களுடன் போர்ச்சுகீசியம்-தமிழ்- இலத்தீன் அகராதியையும் வழங்கியுள்ளார். சீகன்பால்கு நாற்பதாயிரம் சொற்கள் கொண்ட தமிழ்-செருமன் அகராதியை உருவாக்கினார். 1779 இல் பாப்ரீசியர் பேச்சுவழக்குச் சொல்லகராதியை உருவாக்கினார். 1830 இல் இராட்லர் முப்பத்தேழாயிரம் சொற்கள் கொண்ட தமிழ், ஆங்கிலம் அகராதியையும் 1862ல் அமெரிக்கரான வின்சுலோ 30,000 சொற்கள் கொண்ட அகராதியையும் அமெரிக்கரான பீற்றர் பெர்சிவல் ஆங்கில, தமிழ்ப் பேரகராதியையும் தந்துள்ளனர். 1852இல் கூரி அடிகளாரின் தமிழ் -இலத்தின் அகராதியும் பிரெஞ்சுத் துறவியரான மூசே தாபியசு ஆக்கிய

தமிழ்-பிரெஞ்சு அகராதியும் குறிப்பிடத்தக்கவை. 1965 இல் இருபத்து மூவாயிரம் சொற்கள் கொண்ட உருசிய-தமிழ் அகராதி வெளி வந்தது. இவ்வாறு உலக மொழிகளோடு தமிழ்மொழி தொடர்புகொள்ளவும் பிற நாட்டார் தமிழை முழுமையாக அறியவும் அகராதிகள் பெருக்கமும் ஆக்கமும் தந்துள்ளன.

மூன்றுறையரையனார் இயற்றிய "பழமொழிநானூறு" என்னும் நூலுக்குப் பிறகு தமிழகத்தில் வழங்கிய பீற்றர் பெர்சிவல், 1873 பழமொழிகளை ஆங்கில மொழி பெயர்ப்புடன் "தமிழ்ப்பழமொழிகள் திரட்டு" என்னும் பெயரால் 1843 ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளார். மக்கள் பழக்கவழக்கங்களையும், பண்பாட்டையும் புலப்படுத்தவல்ல பழமொழிகளைப் பேணிக் காத்த இலாசரசு ஏறத்தாழப் பத்தாயிரம் பழமொழிகளைத் திரட்டியுள்ளார்.

வீரமாமுனிவர் சிறந்த தமிழ்ப் புலவர்களின் எழுத்தோவியங்களைத் திரட்டி உருவாக்கிய தமிழ்ச் செய்யுள் திரட்டு, போப்பையர் தமிழ்ச் செய்யுள் தொகை என்னும் நூலை அறுநூற்றுப் பன்னிரண்டு பக்கங்களுடன் வழங்கத்துணை புரிந்துள்ளது. பெர்சிவல் அறன் வலியுறுத்தும் பாக்கள் பலவற்றைத் தொகுத்து ஆங்கில மொழி பெயர்ப்புடன் 'நீதிநூல் திரட்டு' தந்துள்ளார். ஸ்காத்துலாந்தவரான காலின் மெக்கன்சி நூற்றுத் தொண்ணூற்று இரண்டு தமிழ்க் கையெழுத்துச் சுவடிகளைத் தேடித்தொகுத்துப் பெருமைக்குரியவராவார்.

பிலிப்பு பல்தே அருளிய தமிழ் இலக்கணம் டச்சு நாட்டவருக்கும், ஆந்தரிக்கசு அடிகளார் எழுதிய தமிழ் இலக்கணம் போர்ச்சுகீசியருக்கும் சீகன் பால்கு தந்த இலக்கணம் செருமானியருக்கும், இரேனியசுபோப்பையர் வரைந்த இலக்கணம் ஆங்கிலேயருக்கும் தமிழ் பயிலத் துணைபுரிந்தன. இத்தாலிய நாட்டு வீரமாமுனிவர் செந்தமிழ் இலக்கணம் என்னும் எட்டுத் தமிழ் இலக்கணத்தையும், கொடுந்தமிழ் இலக்கணம் என்னும் பேச்சுத்தமிழ் இலக்கணத்தையும், திறவுகோல் என்னும் செய்யுள் இலக்கணத்தையும், இலத்தீன் மொழியில் எழுதியுள்ளார்.

"இருள் இராவிடத்து விளங்கிய ஒரு மீன்போலவும், பாலைச் சுரந்து அரிது அலர்ந்த பதுமம் போலவும், ஞானத் திருவிளக்கு எரிப்பித் தெளிந்துணர்ந்து எங்கும் ஒரு விளக்கென நின்றுயர்ந்த" என்று திருக்குறளைப் போற்றிய வீரமாமுனிவர் அறம், பொருள், ஆகியவற்றின் நூற்றெட்டு அதிகாரங்களையும் 1730 ஆம் ஆண்டு இலத்தின் மொழியில் அருளியதோடு விளக்கமும் வழங்கியுள்ளார்; போப்பையர் 1886 ஆம் ஆண்டு ஆங்கிலத்தில் முழுமையாக வழங்கினார். செருமானிய மொழியில் கிரால்லும், பிரெஞ்சு மொழியில் ஏரியல்-இலேமிசர் போன்றோரும், உருசிய மொழியில் இபுராகிமோவும், மேலும் பல மொழிகளில் பல சான்றோரும் மொழி பெயர்த்துள்ளனர். திருக்குறளை உலகறியக் காட்டிய பெருமை வெளிநாட்டார் பணிகளுள் மணிமுடியாகும். போப்பையர் நாலடியார், திருவாசகம், புறநானூறு, ஆகியவற்றை ஆங்கிலத்தில் அருளியுள்ளார்.

பாரிசில் பேராசிரியராகப் பணியாற்றிய சூலியன் வின்சன், ஆனந்தரங்கம் பிள்ளையின் நாட்குறிப்பைப் பிரெஞ்சுமொழியில் 1894 இல் வழங்கியுள்ளார். பேராசிரியர் பில்லியோசா திருமுருகாற்றுப்படையினையும், திருப்பாவையினையும் பிரெஞ்சு மொழியில் தந்துள்ளார்.

தமிலர் எனப்படும் கமில் கவலபில் செக்கு மொழியில் திருக்குறள், சிலப்பதிகாரம், பாரதியார் பாடல்கள் ஆகியவற்றை மொழிபெயர்த்துள்ளார். இவர் தொல்காப்பிய மொழி பெயர்ப்பில் ஈடுபட்டுள்ளார். சிவஞானபோதத்தை ஆங்கிலத்தில் கார்டன் மத்தேயு வழங்கியுள்ளார்.

கைவல்ய நவநீதம், சிவஞான சித்தியார் ஆகிய நூல்களைச் கார்ல்கிரால் செருமானிய மொழியில் மொழி பெயர்த்துள்ளார். தாயுமானவர் பாடல்களை ஆர்னோலேமன் என்பாரும், நன்னூலை கிராபே என்பாரும் செருமானிய மொழியில் பெயர்த்து அருளியுள்ளார்கள். 250 ஆண்டுகளுக்கு முன்னரே உலக நீதி, கொன்றைவேந்தன், நீதிவெண்பா ஆகியவற்றைச் சீகன்பால்கு மொழி பெயர்த்துள்ளார்.

ஹென்ரி ரிச்சர்டு சிவஞானபோதத்தையும், சிவப்பிரகாசத்தையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வழங்கியுள்ளார். பெல்சிய மொழியில் இராமகாதையை வார்து மெசோடோர் அடிகளார் மொழி பெயர்த்துள்ளார்.

தமிழக மருந்துகள் பற்றி செருமானியரான கிரியுண்டவர் எழுதியுள்ளார். வீரமாமுனிவர் வழங்கிய வைத்திய நசகாண்டம் இரணவாகடம், அநுபோக வைத்திய சிகாமணி ஆகிய நூல்கள் சித்த மருத்துவத்தின் விளக்க நூல்களாக அமைந்துள்ளன. யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த சாமுவேல் விசுக்கு கிரீன் மருத்துவத்தின் நூல்களாக மனித உடற்கூறு(1872) அறுவைப் பண்டுவ அறிவியல்(1875) மருத்துவக்கலைச் சொற்கள் ஆகியவற்றைத் தமிழில் உருவாக்கியுள்ளார்.

மேற்கு செருமெனியின் ஆம்பர்க்குப் பல்கலைக் கழகத்தில் எல்கா அண்டோனும், எல்மனும் இணைந்து "மக்கள் தொடர்புக் கருவிகளில் தமிழ் வழக்காறு" பற்றி நூல் நல்கியுள்ளனர். தமிழ் மொழியின் எண்மைச் சிறப்பினையும் நுண்மைக் கூறுகளையும் எடுத்துக் காட்டியவர் அயர்லாந்து நாட்டினர் கால்டுவெலார். தவிர, உருசிய நாட்டைச் சேர்ந்தவர் ஏ.எம். மெர்வார்த், எம். ஆந்திரோ, ஸ்வெத்லானா துருப்ளிக்கோவா, விக்டர்புர்ணிக்கா, அலெக்ஸாண்டர் துமியான்ஸக், ரெங்கோ போன்றவர்களும், பாரிஸில் பணிபுரியும் பிரெஞ்சு நாட்டுத் திருமதி சேதுபதியும் மேற்கு செருமனியைச் சார்ந்த வால்தர், பப்ரிஸியுஸ் பைதான், திருமதி என்போன், டிஹெல்மன் போன்ற அறிஞர்களும், பிரிட்டனைச் சேர்ந்த எச்.எச்.ஆர்டன், எம்.எல். தாம்சன் திரு கார்டன் மேதியூ, டாக்டர் மார், டாக்டர் ஆர்.சு.ஆஷர், டாக்டர் பர்ரோ, டாக்டர் லாஸ், டாக்டர் கார்டன், போன்றவர்களும், அமெரிக்கக் குடியரசைச் சேர்ந்த பேராசிரியர் நார்மன் பிரௌன், டாக்டர் விங்கர், பேராசிரியர் மில்டன் சிங்கர், டாக்டர் எமனோ, டாக்டர் ஜியார்ஜ்ஹார்ட், டாக்டர் ஷிப்மென் போன்றோரும், சீனாவைச் சேர்ந்த வாங் பாஓ ஷி, சாங்வெய்சுன் சாங்சீலின், செங்-லெ-சியான் போன்றவர்களும், ஜப்பான் நாட்டைச்சேர்ந்த சுசுமோ ஓனோ போன்றோரும், தமிழுக்குச்செய்த, செய்துவரும் தொண்டுகளைப் பற்றி அந்நாட்டுத் தமிழ்மொழி வரலாறுகளைப் பற்றி வரையும்போது விளக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தமிழ் மொழியின் மேம்பாட்டிற்காக பாடுபட்ட அயல் நாட்டுத் தமிழ் அறிஞர்களையும் பரந்த மனப்பான்மையுடன், அயல் நாட்டுத் தமிழர்கள் என அழைத்தால் தவறு இல்லை என நினைக்கின்றேன். தமிழ் மகன் எறு சொல்லிக் கொள்ளுவதில் பெருமை கொண்டவர் அறிஞர் ஜி.யு.போப். ஆகையால் மேல் நாட்டுத் தமிழ் மகன்களால் தான் தமிழ்மொழி உலக அரங்கில் நல்ல நிலையில் உள்ளது என்று கூறினால் அது மிகையாகாது.

தமிழர்களுக்கும், அயல்நாட்டினருக்கும் உள்ள சில ஒற்றுமைகள்

மொழி ஒற்றுமை

சூசியன் மொழிக்கும், திராவிட மொழிகளுக்கும் அமைப்பளவில் ஒற்றுமை இருக்கின்றது என்பது கர்ல்டுவெல் கருத்து. ஆப்கானிஸ்தான், ஈரான் மேட்டுப் பகுதி, யூப்ரடீசு, டைகிரீஸ் ஆற்றுச் சமவெளிகள், மெசபொடோமியா பகுதியில் வழங்கப்பட்ட அரியன்(Hurrian), கசித் (Kassit) ஆகிய மொழிகளுக்கும் சுட்டுப் பெயரில் ஒற்றுமை இருக்கின்றது. திராவிடம், பிராகுவி ஆகிய மொழிகளுடன் இப்பகுதியில் வாழ்ந்த இலாமித் (Elamite) ஆகிய மொழிகளின் இடையே ஒற்றுமைகள் இருக்கின்றன என்பது சில அறிஞர்களின் கருத்து. புளோரா சா (Flora Shaw) கருத்துப்படி புலானி (Fulanie) என்ற ஆப்பிரிக்க மொழி இந்தியாவிலிருந்து வந்தது. கி.பி.இரண்டாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட கிரேக்க நாடகத்தில் திராவிட மொழி (கன்னடச் சொற்கள்) இடம் பெற்றுள்ளன.

கார்பெண்டாரியன் எனும் ஆஸ்திரேலியப் பழங்குடியினர் உருவத்தில் முழுவதும் தமிழரையே ஒத்துள்ளனர். தமிழரோடு தொடர்புடையன என எண்ணத்தக்க சில சொற்களையும் அவர்கள் பயன்படுத்துகின்றனர் . அவையாவன.

ஞாம்புல	என்கண்
ஞீங்குபுல	உன்கண்
அம்புல	அவன்கண்
ஞிங்ஙீபுல	அவள்கண்
இஞ்ஞா	இவன்
இனோ	உவன்
ஈடு	அவன்
ஞாரெண்டு	நீயும் நானும்
ஆரெண்டு	அவனும் நானும்
ஞுஞ்ஞா	தாய்
இறைய	தந்தை
இளையரு	இளைஞர்

பஃறுளி	பழங்காலம்
மன்றோ	மன்று
பூய்	போ
கலம்	கட்டுமரம்
உஞ்ஞான்குரு	ஆறுதோன்றும் இடம்
உமிஞ்ஞாங்குரு	ஆறுகடலில் சேரும் இடம்
ஆன்மாறின்னின் இஞ்ஞார நோங்கு	மகிழ்ச்சி உன்னை இங்கே பார்ப்பதில்
யான்வோங்க	யார்சொன்னது.

ஆப்கானிஸ்தான், ஈரான், மெசபொடோமியா (யூப்ரடிஸ், டைக்ரிஸ் கழிமுகம்)வில் பல ஊர்ப் பெயர்கள் திராவிடப் பெயர்களுடன் ஒத்துள்ளனவாகக் கருதப்படுகின்றன. எடுத்துக்காட்டுகள்:

ஊர், ஏலம், ஒரு சில திராவிடச் சொற்கள் இவற்றிலிருந்து தோன்றின. கீழ்க்கண்டவை குறிப்பிடத் தக்கவை.

தமிழ்	சுமேரியம்	எகிப்தியம் :	கிரேக்கம்
ஆறு(எண்)	ஆ	அர், ஆர்	–
அப்பன்	அப்,அப்பா	அப், பப்பா	–
பாதை	பாட், பாத்	பாத்	–
தாக்கு	தாக்	தாக்கு	–
அரிசி	–	–	ஒரிசா(Oryza) ஜெர்மானிய மொழியில் ரிஜ் (riz)
இஞ்சி	–	–	ஜிஞ்சி பேர்
அகில்	–	–	அஹிலம்
தோகை	–	–	துகி.

(மூலம்: இராஜூ காளிதாஸ், இரா.இராசகோபாலன், தமிழர் வரலாறும் பண்பாடும், விஜய் பப்ளிகேஷன்ஸ், திண்டுக்கல், 1977, P 28)

பழக்க வழக்க பண்பாடு ஒற்றுமை:

தமிழர்-மேற்கு ஆசியப் பகுதியினர் கேரளம், தென் கருநாடகம், கன்னியாகுமரி திராவிடத் தாய்வழிச் சமூக அமைப்புப் பழக்கத்தை எலாமிட் (Elamite) இனத்தவர் இடையே பார்க்கலாம். சகாராவில் உள்ள 'பேர்பேர்' (Berbers) என்ற குடியினர், பிரேனியர் பாசுக் (Basques of Pyrens) என்ற குடியினர் மருமக்கள் வழித்தாய முறையினர். திராவிடரிடம் இருந்த நாக வழிபாட்டைப் போல தென் ஈரானில் சிராஸ் (Shiraz) என்ற பகுதிக்கு வடகிழக்கே இருந்த பெஸ்போலிஸ் என்ற பண்டைய பாலஸ்தீனத் தலைநகரில் நாகவழிபாடு வரலாற்றுக்கு முற்பட்ட பழங்காலத்தில் இருந்தது.

ஊர் என்ற சுமேரியப் பகுதியில் வழிபடும்தாய்த் தெய்வம், மலைமகளுக்கும் திங்களஞ் செல்வனுக்கும் ஆண்டுத் திருவிழாவில் திருமணம் செய்விக்கப்படுகிறது. தமிழகத்துச் சிவன் கோயில்களிலும் பார்வதியின் திருக்கல்யாணம் ஆண்டு தோறும் நடத்தப்படுகின்றது. அம்மன் வழிபாட்டு முறையும், தமிழக அம்மன் வழிபாட்டை அப்படியே எதிரொலிக்கின்றன. திராவிடக் கட்டட அமைப்பைப் போல உள்ள ஒரு கோயில் அமைப்பு சுமேரியாவில் நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சியின்போது கண்டுபிடிக்கப்பட்டது. (தென் இந்தியப் பகுதியில் உள்ள கோயில்களில் மடைப்பள்ளி இடம் பெற்றிருக்கும். அதுபோல் சுமேரியாவில் உள்ள கோயில்களிலும் மடைப்பள்ளி இடம் பெற்றிருந்தது. திராவிடக்கோயில்களில் மடைப்பள்ளிப் பிரசாதம் கடவுளுக்குப் படைக்கப்பட்டுப் பகிர்ந்து அளிக்கப்படுவது போல் சுமேரியக் கோயில்களில் மடைப்பள்ளிப் பிரசாதம் பகிர்ந்து அளிக்கப்பட்டது).

விழா நாள்களில் சுமேரியக் கோயில்களில் இறைச்சி கடவுளுக்குப் படைக்கப்படுகின்றது. இதைப் பக்தரும், புரோகிதரும் பகிர்ந்து உண்பார்கள். தமிழகத்துச் சிற்றூர் சிறு தெய்வ வணக்கத்திலும் இவ்வழக்கத்தைக் காணலாம். இப்பழக்கம் நீலகிரி தோடர்களிடம் காணப்படுகிறது. மற்ற நாள்களில் இறைச்சி உண்ணாமல் இருக்கும்தோடர்கள் விழா நாள்களில் கடவுளுக்கு எருமையைப் பலியிட்டு இறைச்சியைப் பூசாரியும் பொதுமக்களும் பகிர்ந்து கொள்கிறார்கள். (ஆண்டவன் இறைவன் என்ற பெயர்கள் தமிழில் அரசனுக்கும் கடவுளுக்கும் பொதுவானவையாகும். கடவுள் வாழ் இடம் 'கோயில்' எனப்படுவது போல, அரசன் உறைவிடமும் கோயில் என வழங்கப்பட்டதைப் பண்டைத் தமிழ் இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. பூசை நாள்களில் கடவுள் படிமத்தை அரசனவை போல் அலங்கரித்து அரசனுக்குரிய ஒற்றைக் குடை விசிறி ஆகியவற்றை அமைத்து அரச உபசாரம் செய்வது தமிழகக் கோயில் மரபாகும். இது போன்ற முறை சுமேரியரிடமும் காணப்படுகிறது).

நடு நிலக் கடல் பகுதியினர்

சுபேணிசைச் சேர்ந்த சைபீரியா முதல் இந்தியா வரை அமைந்துள்ள நாடுகள் அனைத்தும் சமயப் பழக்க வழக்கங்களிலும், கடவுள் சார்ந்த நம்பிக்கைகள், செடிகள், மரங்கள், மலர்கள், கொடிகள், இவற்றின் பெறுபவர்கள் பல்வேறு மொழி ஒற்றுமைகள் ஆகியவற்றில் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர் என்பது இருலாவோரி (Lahovary) என்பாரின் கருத்து ஆகும் (Dravidian Origins and the West, 1963).

ஆப்பிரிக்க நாட்டினரும், தமிழரும்

எகிப்தியர் கலப்பாலேயே தென்னிந்தியாவில் திராவிட இனம் வளர்ந்தது என்பதும் சிலரது கருத்து.

தென்னிந்தியாவில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் நீக்ராய்த் மக்கள் நிரம்பி இருந்தவர் என்பது மானிட இயலார்தம் கருத்து. தென்னிந்தியாவில் காணப்படும் காடர், இருளர், பணியர், ஊராளி, முல்லைக் குறும்பர், வெட்டுக்குறும்பர் ஆகியோரும் நீக்ராய்த் இனத்தினராவர்.

தொல் பழங்காலத்தில் வாழ்ந்த நீக்ரோ இன மக்களே வில்லையும், அரசமர வழிபாட்டையும், மீன், விலங்குகள், செடி கொடிகள் போன்றவற்றைக் குடி குறியீடாகக் கொள்ளுதலையும், முன்னோர் வழிபாட்டையும் இந்தியாவில் அறிமுகப்படுத்தினர்.

பழங்காலத்தில் தென்னிந்தியாவில் கிடைத்த கைக்கோடாரித் தொழில் முறைக்கும் ஆப்பிரிக்கக் கைக்கோடாரித் தொழில் முறைக்கும் இடையே ஒற்றுமைகள் உள்ளன. தென் ஆப்பிரிக்காவிலும் மேற்கு ஆப்பிரிக்காவிலும் கிடைத்த கற்காலக் கருவிகள் தென்னிந்தியாவில் கிடைத்துள்ள கருவிகளின் உருவை ஒத்துள்ளன. "வாள்" எனப்படும் நுட்பம் இரண்டு பகுதிகளிலும் ஒத்துள்ளன.

திராவிடருக்கும், ஆப்பிரிக்கருக்கும் உடலியல் முறைப்படியும் பண்பாட்டியல் படியும் நிரம்ப ஒற்றுமைகள் உள்ளன. இரத்தப் பிரிவும் ஒற்றுமையாகவே உள்ளது. இதே இரத்தப்பிரிவு இந்தோனேசிய மக்களினத்தோடும், மேற்கு ஆப்பிரிக்காவின் ஒரு பகுதி மக்கள் இனத்தோடும் ஒன்றுபட்டுள்ளது. (மது பணிக்கர்)

கி. மு. ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த சிற்பங்கள் ஆப்பிரிக்கப் பீடபூமியான சோச(Jus)வில் கிடைத்துள்ளன. இங்குக் கிடைத்துள்ள சிற்பங்களின் அமைப்பும் அமைதியும் இந்தியச் சிற்பங்களை நினைவுபடுத்துகின்றன. குறிப்பாக இங்குக் கிடைத்துள்ள குரங்குச் சிலை ஒன்று(தலை உடைந்தது) அப்படியே தமிழகக் குரங்குச் சிலையமைப்பை எதிரொலி செய்கின்றது.

சோசு பீடபூமியில் கிடைத்துள்ள வெண்கலப் படிமங்களின் அழகு, அமைதி, தமிழகப்படிம அழகையும் அமைதியையும் எதிரொலிக்கின்றன.

தமிழகத்தின் வெண்கலப் படிமம் செய்யும் முறை புதுமையானது, தொன்று தொட்டு வருவது. தமிழகச் சிற்பிகள் மெழுகினால் முதலில் உருவத்தை அமைத்துக் கொள்வர். பின்னர், மெழுகு உருவத்தின் மேல் ஒருவகைக் களிமண்ணைப் பூசுவர், காயவைப்பர், களிமண் உருவைச் சுடுவர். உள்ளிருக்கும் மெழுகு உருகி வெளிவந்துவிடும். உள்கூடு உடைய களிமண் உரு மட்டும் எஞ்சி நிற்கும். பின்னர், வெள்ளி, பொன், செம்பு, ஈயம் முதலான ஐந்து உலோகங்களைக் கலந்து உருக்கி, உலோகப் பாகை, களிமண் உருவினுள்ளே ஊற்றுவர். மெழுகு வழி அழகாகச் சமைந்துள்ள களிமண் உருவ உள்கூட்டை உலோகத்தால் நிறைப்பர். அதன் பின் ஆறவைப்பர். ஆறிய பின் களிமண்ணை அகற்றுவர். உள்ளே எழிலார்ந்த உலோக உருவம் இருக்கும். இந்த முறையில் படிமம் அமைப்பது

தமிழகத்திற்குரிய சிறப்புத் தொழிற்பண்பாகும். அதனைப் போன்றே படிமம் அமைப்பதை ஆப்பிரிக்க நாடுகளில் காணமுடியும்.

சிங்கத்தலையும் மனித உடலும் உடைய தோற்றத்தை நரசிம்ம அவதாரம் என்பர். இம்மாதிரியான உருவம் மேற்கு ஆப்பிரிக்கப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

யானை மேல் அமர்ந்து மொரோடிக் வேந்தன் ஊர்வலம் வருவது போன்ற படம் மொரோவில் கிடைத்துள்ளது. இப்பழக்கம் பொதுவாக இந்தியாவில் உள்ள பழக்கம் ஆகும்.

ஓடிவரும் நீரைக் குட்டையாகவும், குளமாகவும், ஏரியாகவும் தேக்கி வைத்துப் பயன்படுத்துவதை எகிப்திய பண்டைய நாகரிகம் அறிந்திருக்கவில்லை. ஆனால் திராவிடப் பகுதிகளில் நீர்த் தேக்கங்கள் அமைப்பது அரிய ஒன்றன்று. கரிகாலனின் கல்லணை இன்றும் பண்டைய நீர்த்தேக்க அறிவை நினைவுபடுத்தும். மொரோவில் இது போன்ற நீர்த்தேக்கங்கள் உள்ளன. இவை இந்தியர்களால் அறிமுகப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

திராவிடப் பகுதியில் நாக வணக்கம் செல்வாக்குப் பெற்றிருப்பது போல ஆப்பிரிக்கா எங்கும் இவ்வணக்கம் பரவியுள்ளது. பாம்புகள் முன்னோர் ஆவி புகுந்த உயிர்கள் என்று ஆப்பிரிக்கர் நம்புகின்றனர். அதனால் இறந்த பாம்பைப் புதைக்க பல சடங்குகள் ஆற்றுகின்றனர். பல பாம்பு நம்பிக்கைகள் திராவிட மாநிலங்களில் வழங்கப் பெறும் பாம்பு நம்பிக்கைகளைச் சார்ந்துள்ளன.

முருகனைப் போன்றே 'முருங்கு' (*Marungu*) என்ற கடவுளை ஆப்பிரிக்கர் வணங்குகின்றனர். முருங்கு வாழ் இடம் மலைகள் என்பது அவர்கள் நம்பிக்கை. தமிழக முருகனும் மலைநிலக் கடவுள். ஆப்பிரிக்காவில் உள்ள ஏறத்தாழ 25 பழங்குடியினர் 'முருங்கு' வழிபாட்டினராக இன்றும் உள்ளனர். திராவிடக் கடவுளான கண்ணன் கதை தடம் மாறாமல் பெயர்கள் மட்டும் திரிந்து ஆப்பிரிக்கா நாடுகளில் பழங்கதையாக சொல்லப்படுகிறது. இக்கதையைத் தலை முறை தலைமுறையாக ஆப்பிரிக்கர் செவிவழிக் காப்பாற்றி வருகின்றனர். கதையின் பெயர் சோனி அலி பேர்(*Soni Ali Bers*) கண்ணனின் பெயர் பர்கோ, கம்சன்(சோனிஅலிபேர்) தேவரி (கசே), யசோதை (பணிப்பெண்)

தமிழகத்தில் பல்லாங்குழி, பாண்டி, என்றும், கருநாடகத்தில் சென்னை மனை என்று வழங்கும் இவ்வாட்டதை ஆப்பிரிக்காவில் மூலை முடுக்கு தோறும் காணலாம். எப்படி ஆடுவது என்பது பற்றித் தனி நூலே நைசீரியாவில் வெளியிட்டு விற்கின்றனர்.

அவுசா(*Housa*) மொழியில் 'தாரா' (*DARA*) என்றும் யொருபா (*Yoruba*) மொழியில் அயோ (*Ayo*) என்றும், இபோ (*Ibo*) மொழியில் ஒக்வே (*Okwe*) என்றும், ஈதோ(*Edo*) மொழியில் ஈசே என்றும், ஈபிக்(*Efik*) மொழியில் என்சா(*NSA*) என்றும், செனகால் நாட்டில் வழங்கும் உலாப் (*Wolof*) மொழியிலும், புலார்(*Pulaar*) மொழியிலும் உவரே (*Vuare*) என்னும் இவ்வாட்டம் குறிக்கப்படுகிறது.

தமிழகத்தில் உள்ள கும்மியாட்டங்களைப் போல ஆப்பிரிக்க மக்களிடையே இன்றும் கும்மியாட்டங்களைக் காணமுடியும். இவ்வாட்டம் வேறு பல ஐரோப்பிய இனங்களில் இல்லாதிருப்பதும், ஆப்பிரிக்கரிடையே இருப்பதும் சிந்தனைக்குரியன.

தமிழகத்திலும், கேரளத்திலும், உள்ள கோலாட்டம் ஆடும் முறையை ஆப்பிரிக்க ஊர்ப்புறங்களில் விழா நாள்களில் இன்றும் காணலாம்.

தமிழகத்தில் இருந்த குடியாட்சிக் குடவோலை முறை போல ஆப்பிரிக்க நாடுகளில் பலவேர்(Palaver) எனும் முறை இருந்தது. 'பலவேர்' முறையில் உரியவரைத் தேர்ந்தெடுக்க அல்லது ஒரு கருத்து பற்றி முடிவெடுக்க ஊர்மக்கள் கூட்டப்படுவர். கூட்டப்பெற்று ஒவ்வொருவர் கருத்தும் அறியப்பட்டுப் பலபேர் கருத்தே (majority) முடிவாக மேற்கொள்ளப்படும்.

அரசனும், தலைமை நீதிபதியும் ஆப்பிரிக்காவில் ஒருவரே. தமிழகத்துப் பொற்கைப் பாண்டியன் கதை, கண்ணகி கதை போன்றன அரசனே நீதிபதி என்பதைக் காட்டுவன. தமிழக மன்னரைப் போலவே, ஆப்பிரிக்க மன்னர்களும் கொற்றக்குடை வைத்திருந்தனர். அதனை அரசனுக்கு இணையாகப் போற்றினர்.

இறந்தோரைத் தாழியில் வைத்துப் புதைப்பது பண்டைத் தமிழர் வழக்கம். சங்க இலக்கியங்களும், மணிமேகலையும், அகழ்வாராய்ச்சியும் இந்த உண்மைக்குச் சான்றுபகருகின்றன. இத்தாழிகளைப் போலவே மெசபடோமியாவிலும், நடு நிலக்கடலோர நாடுகளிலும் தாழிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை திராவிடர்களின் உலகளாவிய பரவுதலைக் காட்டும்.

இறந்த சிறந்த மறவர்க்கு, இருக்கும் மறவோர் கல்நாட்டி வழிபட்டனர். கல்லில் மறவர் தம் பெயரையும், பெருமையையும் பொறித்தனர். சில இடங்களில் உருவையும் வரைந்தனர். தொல்காப்பியம், சங்க இலக்கியம், புறப்பொருள், வெண்பாமாலை போன்ற நூல்கள் கல் நடும் முறையைக் குறிப்பாக வடக்குத் திசையை நோக்கி நாட்டப்படுவதை விரிவாகப் பேசுகின்றன. கி. பி. 3, 4 ஆம் நூற்றாண்டிலிருந்து தொடர்ச்சியாக நடுகற்கள் அண்மையில் கண்டு அறியப்பட்டுள்ளன. இவற்றை ஒத்த நடுகற்களை ஆப்பிரிக்கக் கண்டத்தை ஒட்டிய மடகாசுகரிலும், ஆப்பிரிக்கச் சகாராவிலும் நிரம்பக் காண முடியும்.

திராவிட மக்கள் பயன்படுத்தும் படகுகளும், நடுநிலக் கடலோர நாட்டினர் பயன்படுத்தும் படகுகளும் அப்படியே ஒத்துள்ளன. படகின் நீள்வட்ட அமைப்பும், துடுப்பு அமைப்பும் முற்றும் ஒத்துள்ளன. நைல் ஆற்றங்கரை மக்களும், மெசபடோமியா மக்களும், திராவிட மக்களும் ஒரே உருவப் படங்களைச் செய்து பயன்படுத்தினர். திராவிட மக்களும் நடுநிலக் கடலோர மக்களும் மறு பிறப்பில் நம்பிக்கை உடையவர்கள். பாட்டன் பெயரைப் பேரன்கள் வைத்துக்கொள்வர். இருபகுதி மக்களும் அணிந்திருக்கும் நகைகளின் அமைப்பு ஒத்துள்ளது. உலோகக் கனியிலிருந்து நகைகள் செய்யும் போது கடைப்பிடிக்கும் முறைகள் தமிழகத்திலும், மேற்கு ஆப்பிரிக்க நாடுகளிலும் ஒரே போக்கில் உள்ளன. ஆதிச்ச நல்லூரில் கிடைத்துள்ள பழங்காலப் பொன் நகைகளும் உலோகக் காலத்தை ஒட்டி எங்கோமி சைப்ரசு நாடுகளில் கிடைத்துள்ளன. பொன்நகைகளும் ஒரே அழகின, அமைப்பின.

பழங்காலத்தில் தமிழகத்தில் நெய்யப்பட்ட துணிகள், ஆடைகள் பல ஆப்பிரிக்காவில் கண்டறியப்பட்டுள்ளன.

திராவிடப் பழங்குடிகள் திராவிட நாட்டு ஊர்ப் பகுதிகளில் இன்றும் வாழும் தாழ்த்தப்பட்டோர் ஆகியோர் தம் தலை, நெற்றி, கண், புருவம்,காது, மூக்கு அமைப்பும், ஆப்பிரிக்காவில் வாழ் மக்களது(அராபிய இனத்தார் தவிர) உருவ, உறுப்பு அமைப்பும் அப்படியே ஒத்துள்ளன. இரு இனமக்கள் தம் உடல், தலைமுடி, புருவமுடி நிறம்- ஒத்த கறுப்பு நிறமே. திராவிட மக்கள் தம் தலை ஓட்டு அமைப்பு நடுநிலக்கடலோர மக்கள், ஆப்பிரிக்க மக்கள் தம் ஓட்டு அமைப்புடன் ஒத்துள்ளது.

திராவிடப் பழங்குடியினரும் ஆப்பிரிக்கப் பழங்குடியினரும் இறப்போர் ஆவியாக இருப்பர் என நம்பினர். நாகர்கள் இறந்தோர் எலும்புகளைத் தம் தானியக் களஞ்சியத்தில் வைத்துப் காப்பர். இதே பழக்கம் நைசீரிய மக்களிடம் காணப்படுகிறது. இப்படிச் செய்தால் தானியம் நன்கு விளையும், களஞ்சியம் நிரம்பி வழியும் என நம்பினர் 'கூடு விட்டுக்கூடு பாயும் கதைகளையும், நிகழ்ச்சிகளையும் மேற்கு ஆப்பிரிக்கா எங்கும் கேட்கலாம்.

இதழ் சிவக்கத் தமிழர் வெற்றிலை போடுவது போன்றே ஆப்பிரிக்கர் இங்கே கிடைக்கும் கூர்சி (Goorjee) மரப்பூவைக் கொண்டு இதழ் சிவப்பாக்குவர். தமிழகப் பெண்டிர் மருதாணி போடுவது போன்று ஈண்டுள்ள பெண்டிர் இன்றும் மருதாணி அரைத்துத் தம் கை கால்களுக்குப் பூசுவர்.

தமிழர்களும், ஆஸ்திரேலியர்களும்

தென் இந்தியப் பழங்குடி மக்களாகிய மலைவேடர், குரும்பர், சோழர், பழநி மலைப் பகுதியில் வாழும் பறையர் தமிழகம் வாழ் ஆதிதிராவிடர் ஆகியோர் ஆஸ்திரேலிய இனக்கூறுகளை உடையவர்.

ஆஸ்திரேலிய மக்கள் புழங்கிய திராவிட மொழிகளிலும் ஆரிய மொழிகள் கலந்துள்ளன. சான்றாக, கங்கை (ஆறு), தாம்பூலம் (வெற்றிலை), வழுதுணங்காய் (கத்தரிக்காய்), மாதங்கம் (யானை), கஜம் (யானை), பாணம் (அம்பு), இலிங்கம் (கந்து) ஆகியன.

நெல், வெற்றிலை, கரும்பு போன்றவற்றைப் பயிரிடுதல், பருத்தியை நூற்று ஆடை நெய்தல், கரும்பிலிருந்து வெல்லம் செய்தல், யானையைப் பழக்குதல், மஞ்சள், குங்குமம் ஆகியவற்றைப் பயன்படுத்துதல், வெற்றிலை பாக்கு கொடுத்தல், குழந்தைப் பேற்றிற்காக அரசமரத்தைச் சுற்றுதல், கண்ணேறு கழித்தல், தீட்டு விலக்கு, மதியை அடிப்படையாகக் கொண்டு காலம் கணித்தல், இறந்தோரைப் புதைத்தல், தாழியில் இட்டுப் புதைத்தல், முன்னோரை வழிபடல் ஆகியன தமிழரிடம் மட்டுமன்றி ஆங்கிலேயரிடமும் காணப்படும் பழக்கங்களாகும். விலங்குகள் பற்றிய கதைகள், ஜாதகக் கதைகள், பஞ்ச தந்திரக் கதைகள், இதோபதேசக் கதைகள் போன்றவும் இப்பழங்குடியினரிடம் தோன்றியவவாம். நாக வழிபாடு, நாகக் கன்னி, ஆமை, மகர மீன், முதலை, அனுமான் (?) விநாயகர் முதலான விலங்குத் தெய்வ வழிபாடும், சிவலிங்க வழிபாடும், கூர்மாவதாரமும், மச்சாவதாரமும், வராக அவதாரமும் ஆஸ்திரேலியப் பழங்குடியினரிடமிருந்து தோன்றியவை. கம்பர் என்ற கிழக்கு ஆப்பிரிக்க இனக் குழுவினரிடமும் இப்பழக்கம் உள்ளது.

திராவிடரிடம் இன்று காணப்படும் சாதிப்பாகுபாடு போன்ற ஒருவகைப் பாகுபாடு ஆஸ்திரேலியப் பழங்குடிகளிடம் காணப்படுகிறது என்பர்.

சோழர் குலம் சூரியன் குலம் என்று கருதப்படுகிறது. சூரியனைக் குலக் குறியீடாகக் கொள்ளும் பழக்கம் ஆஸ்திரேலியப் பழங்குடியினரிடையே காணப்படுகிறது.

திராவிடச் சமூகம் தாய்வழிச் சமூகமாகும். எனவே தாய் மாமன் மிகுந்த தலைமையுற்றிருப்பான். மேலனேஷியாவைச் சேர்ந்த தரோபிரியண்டர் (Troprinaders) என்ற ஆஸ்திரேலியப் பழங்குடியினரிடம் தாய்மாமனுக்குத் தலைமை கொடுக்கும் வழக்கம் உள்ளது. உடன் பிறந்தாளின் குழந்தைக்குக் கல்வி, கட்டுப்பாடு எல்லாம் தந்து சிறக்கும் தலைமை தாய்மாமனிடமே உள்ளது.

தாயுடன் பிறந்தவரின் மகளையோ, மகனையோ, தந்தையுடன் பிறந்தாளின் மகனையோ, மகளையோ மணந்து கொள்ளும் முறை திராவிடரிடம் உள்ள ஓர் மணமுறையாகும். ஆஸ்திரேலியப் பழங்குடிகளும் இத்தகு மணமுறையையே பின்பற்றுகின்றனர். கரியரா என்ற மேற்கு ஆஸ்திரேலியப் பழங்குடியினரிடம் உள்ள திருமண முறை அப்படியே தமிழரோடு ஒத்துள்ளது.

ஆஸ்திரேலியாவிலும் தென்னிந்தியாவிலும் கிடைத்த கற்கருவிகள் ஒரே மாதிரியாக உள்ளன.

தென் இந்திய மக்களிடமும் ஆஸ்திரேலியப் பழங்குடிகளிடமும் பூமராங் என்ற வளைதடி போர்க் கருவியாகப் பயன்படுத்தப்படுகிறது. இக்கருவி வளைந்த ஒரு மரத் துண்டாகும். தோளில் வைத்துக்கொண்டு எதிரியை நோக்கி வேகமாக வீசுவார்.

நேபாள வழிபாட்டில் உள்ள குமரி, தமிழகத்தின் தென்முனையில் உள்ள குமரி வழிபாட்டின் மறுபதிப்பு ஆகும்.

தமிழரின் தாயகம் பற்றிய பல்வேறு கொள்கைகள் :

1. குமரிக் கண்டத்தினர்.
2. வடஇந்தியாவிலிருந்து வந்தவர்
3. நடு ஆசியாவிலிருந்து வந்தவர்
4. மேற்கு ஆசியப் பகுதியினர்
5. நடுநிலக்கடல் பகுதியினர்
6. ஆப்பிரிக்காவிலிருந்து வந்தவர்
7. ஆஸ்திரேலியப் பழங்குடியினர்
8. கடல் வழியாக வந்தவர்

மூலம்: டாக்டர் க.ப. அறவாணன், தமிழரின் தாயகம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை. ஜூன் 1984.

மேலே குறிப்பிடப்பட்ட ஒற்றுமைகளைப் பற்றிச் சிந்தித்தால் திராவிடர்கள் பண்டைக் காலத்திலிருந்தே பல அயல்நாடுகளுக்குச் சென்று திராவிடப் பண்பாடுகளைப் பரப்பியிருக்கலாம் என்ற எண்ணம் மேலோங்குகின்றது. வருங்கால அகழ்வாராய்ச்சி, வரலாற்று ஆராய்ச்சிகள் மூலம் தான் இம்மாதிரியான கருத்துகளை உறுதிப்படுத்த முடியும்.

ஏனைய இந்தியத் தமிழர்கள்.

இந்தியாவிலுள்ள பிற மாநிலங்களிலும் தமிழர்கள் குடியேறி வாழ்கின்றனர். குறிப்பாக, காரைக்கால், புதுச்சேரி, கேரளா, ஆந்திரப்பிரதேசம், கருநாடகம், மராட்டிய மாநிலம், குஜராத், உத்திரப்பிரதேசம், தில்லி, பஞ்சாப், மேற்கு வங்காளம், அந்தமான் நிக்கோபார் முதலிய மாநிலங்களில் தமிழர்கள் மிகுதியாக வாழ்கின்றனர்.

தமிழ்நாடு-பிற மாநிலங்களின் தொடர்பு-வரலாறு

தமிழ்நாடு பண்டைக் காலத்திலிருந்தே ஒரு சுதந்திர நாடாக விளங்கியது. பண்டைக் காலத்திலிருந்தே பல நூற்றாண்டுகள் தமிழகத்தின் ஒரு பகுதியாகக் கேரளா இருந்தது. கன்னடமும், களிதெலுங்கும், கவின் மலையாளமும், துளுவும், ஈன்றெடுத்து சீர் இளமை சிறிதளவும் குறையாது பொலிந்து, எழில் மேவிடும் தமிழ்த்தாயின் வரலாறு சிறப்பு மிக்கதாக இருக்கிறது. ஆகையால் சேர, சோழ, பல்லவ, பாண்டியர் காலத்தில் தென் இந்தியாவின் பிற பகுதிகளுடன் தமிழ் நாட்டிற்கு நெருங்கிய தொடர்பு, குறிப்பாகப் பண்பாட்டு உறவு, போர்கள் மூலமாகவும், அமைதி வழி மூலமாகவும் தோன்றி வலுவடைந்தது. பிற்காலச் சோழர்களின் ஆட்சியின் போது தென்னிந்தியச் சோழர்களின் ஆட்சியின் கீழ், சிலகாலம் இருந்தது. அது போலவே ஹோய்சோலர் காலத்தில் வட தமிழ்நாடு அவ்வரசின் பகுதியாக சிலகாலம் இருந்தது. மேலும் விசயநகரப் பேரரசின் ஆட்சிக்காலத்தின்போதும் தமிழ்நாடு இப்பேரரசின் ஒரு பகுதியாகச் சிலகாலம் இருந்தது. இதற்குப்பிறகு தமிழ்நாட்டின் சில பகுதிகள் மராட்டியர்களின் ஆட்சியின் கீழ், சிலகாலம் இருந்தன.

வேதகாலம், இராமாயணம், மகாபாரதம், மௌரியப் பேரரசு காலத்தின்போது தமிழ்நாட்டிற்கும், வடநாட்டிற்கும் தொடர்பு இருந்ததாகச் சான்றுகள் இருக்கின்றன. இராமாயணத்திலும், மகாபாரதத்திலும் தமிழ் அரசர்கள், தமிழ் அரசுகள் பற்றிய குறிப்புகள் இருக்கின்றன. மௌரியப் பேரரசு தென்னிந்தியாவின்மேல் படையெடுத்ததாகச் சான்றுகள் உண்டு; வம்ப மோரியர்கள் திருநெல்வேலி வரை படையெடுத்து வந்ததாகச் சங்க இலக்கியத்தில் குறிப்புகள் இருக்கின்றன. புத்த, சமண சமயங்கள் தமிழ் நாட்டில் தழைத்தோங்கும் சூழ்நிலை உருவாகியது.

பண்டைய சேர சோழர்களின் ஆட்சியின்போது சேரன் செங்குட்டுவன் போன்ற அரசர்கள் வடநாடு சென்று வெற்றிவாகை சூடியதாக வரலாறு உண்டு. சேரமன்னன் நெடுஞ்சேரலாதன் ஆரிய மன்னரைச் சிறைப்பிடித்து இமயத்தில் விற்கொடியை ஏற்றி இமயவரம்பன் எனப்பெயர் பெற்றான். கரிகால்சோழன் இமயமலை வரை சென்றான். பாண்டியன் மீன்கொடியுடன் இமயம்வரை சென்ற வரலாறு சிலப்பதிகாரம் மூலம் தெரியவருகிறது. வடநாட்டில் உள்ள வாதாபி (பீஜப்பூர் மாவட்டத்தில்) என்ற இடத்தில் புலிகேசியைத் தோற்கடித்த பெருமை பரஞ்சோதிக்கு உண்டு. பெருநில மன்னனான குலோத்துங்கனைக் கலிங்கன் வென்றான் என்றும் அவன் தளபதி கருணாகரன் என்றும் கூறுவார்கள். இந்தியாவின் எல்லைப்புறத்திலுள்ள 'பெலுச்சியர்' நாட்டில் தமிழ் இனத்தைச் சேர்ந்த மொழியொன்று இன்றளவும் வழங்குகின்றது.

குப்தர்களின் ஆட்சியின் போது சமுத்திரகுப்தர் தென் இந்தியாவின் மீது படையெடுத்தபோது தமிழகத்துடன் தொடர்பு ஏற்பட்டது. ஆனாலும் பண்பாட்டு அடிப்படையில் வட-தென் இந்தியப் பகுதிகளிடையே நெருங்கிய தொடர்பு தோன்றிய போதிலும், அரசியல் அடிப்படையில் இம்மாதிரியான நெருங்கிய தொடர்பு உண்டாகவில்லை. ஏனென்றால் பெரும்பாலும் தமிழ்நாடு ஒரு சுதந்திர நாடாகவே தொடர்ந்து விளங்கியது. முகமது துக்ளக் டெல்லி சுல்தானாக ஆட்சி செய்த காலத்தில் பத்து ஆண்டுகளும், பிற்கால மொகலாயப் பேரரசு வீழ்ச்சியடையும் நேரத்தில் சில ஆண்டுகளும் தமிழகம் தில்லி அரசர்களின் ஆட்சியின் கீழ் இருந்தது.

இவ்வாறாக, பிற மாநிலங்களின் ஆட்சியின் கீழ், சில நேரங்களில் தமிழகம் வந்தபோதும் பொதுவாகப் பெரும்பாலும் சேர,சோழ,பாண்டியர், பல்லவர் ஆட்சியின் கீழ் தமிழகம் சுதந்திரமாகவே செயல்பட்டு வந்தது. தமிழகத்தில் விஜயநகரப் பேரரசின் ஆட்சிக்குப் பிறகு மதுரை, தஞ்சாவூர், வேலூர் போன்ற நாடுகளில் நாயக்கர்கள் ஆட்சி ஏற்படுத்தப்பட்டது. இச்சந்தர்பத்தில் ஆந்திர மாநிலத்தோடு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. தமிழகத்திற்கு வந்து குடியேறி சிலகாலம் ஆட்சி செய்து வந்த நாயக்கர்களும், மராட்டியர்களும், முசுலிம்களும் தமிழ்ப் பண்பாட்டின் பல கூறுகளை ஏற்றுக் கொண்டனர். அவர்கள் வாழ்க்கை முறையைத் தமிழ் நாகரிகம் ஓரளவு பாதித்தது.

இத்தகைய தமிழர் பண்பாட்டைப் பற்றி மறைதிரு தனிநாயகம் அடிகளார் பின்வருமாறு கூறுகின்றார். "தமிழர் பண்பாடு கால அடைவில் மாற்றங்கள் அமைந்துள்ளதா எனும் வினாவிற்கு மாற்றம் அத்துணை அடைந்துவிடவில்லை; ஆனால் வளர்ச்சி அடைந்துள்ளது என்றே கூறல்வேண்டும். வட ஆரியர் தமிழ்நாட்டிற்கு வந்த காலத்திலும், சமணர், ஐரோப்பியர் ஆகிய பிறநாட்டார் செல்வாக்கடைந்த காலத்திலும் தமிழர் பண்பாடு அடிப்படைக் கொள்கைகளில் அவ்வளவு மாற்றம் அடையவில்லை. பிற சமயங்களைப் போதித்த பார்ப்பனரும் சமணரும், புத்தரும், ஐரோப்பியக் கிறித்தவரும், மகமதியரும், தமிழர் பண்பாட்டைத் தழுவ முயன்றனர். இந்து சமயத்தின் வழிபாட்டு முறையும் இலக்கியங்களும் தென்னாட்டுத் தத்துவங்களால் வளம் பெற்றன. வடமொழியில் உள்ள சமய இலக்கியங்கள் பலவற்றில் சங்கரர், இராமானுசர், மத்வர் போன்ற தென்னாட்டவரின் தத்துவங்கள் வடமொழியில் இடம்பெற்றன. சுநீதிகுமார் சட்டர்ஜி இந்தியப் பண்பாட்டின் எழுபத்தைந்து விழுக்காடு - திராவிடப் பண்பாடு என்று குறிப்பிட்டுள்ளார். புத்தரியற்றிய மணிமேகலையையும், வீரமாமுனிவர் இயற்றிய

தேம்பாவணியையும், உமறுபுலவர் இயற்றிய சீறாப்புராணத்'தையும் ஆராயும் காலை, இவர்கள் தமிழ்ச் சமுதாயங்களின் கோட்பாடுகளைக் கூறினாலும், தமிழர்பண்பாட்டை எங்ஙனம் விளக்கியுள்ளார் என்பதும் புலனாகிறது.."

ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள்-தமிழர் குடியேற்றம்

சுமார் 300 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தமிழ் நாட்டு ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் அவர்களை தருமபுரம் சந்நிதானம் காசிக்குச் சென்று அங்கு சைவமும், தமிழும் தழைக்க அருள் தொண்டு செய்து, அறச்செயலில் ஈடுபடுமாறு அனுப்பிவைத்தார். காசி சென்றதும் குமரகுருபரர் துண்டி விநாயகர் மீது பதிகம் பாடினார் காசியில் விசுவநாதர் பெயரில் 'காசிக்கலம்பகம்' பாடினார். குமரகுருபரருக்குக் காசியில் மடம் அமைத்து தமிழ் நாட்டின் அருள் செல்வத்தை அங்குள்ள மக்களுக்கு வழங்க வேண்டும் என்ற ஆவல் பிறந்தது.

அப்போது டில்லியை முகலாயப் பேரரசர்கள் ஆண்ட காலம் எனவே அம்மன்னரைக் கண்டு பேச இந்தி, சமஸ்கிருதம், உருது முதலிய மொழிகளைக் கற்றார். அந்த நாளில் அவர் பாடியதுதான் "சகலகலா வல்லி மாலை" முகலாய மன்னரான பாதுஷாவை நேரில் பார்த்துப் பேசினார். இசுலாமிய மன்னரான பாதுஷா இந்து ஞானியான குமரகுருபரரை ஒரு ஞான புருஷராக ஏற்றுக்கொள்ளவில்லை. அந்த மன்னனின் மனம் மாறுவதற்காக பழுக்கக் காய்ச்சிய இரும்பைத் தழுவுதல், சிங்கம் மீதேறி வருதல் போன்ற சித்துக்களை எல்லாம் செய்து காட்டினார். பாதுஷா குமரகுருபருக்கு மாமிச உணவைப் படைத்து விருந்தளித்தார். குமரகுருபரர் தமது சித்து ஆற்றலால் அந்தப் புலால் உணவை சைவ உணவாகவும் கனிவர்க்கங்களாகவும் மாற்றினார்.

குமரகுருபரரின் அருள் ஆற்றலை அறிந்த மன்னர் அவரையே தனது குருவாக மனத்தில் எண்ணிக்கொண்டார். குமரகுருபரர் விரும்பியபடியே காசியில் மடம் அமைக்க அவருக்கு வேண்டிய இடத்தை மாணியமாக வழங்கினார். குமரகுருபரர் கங்கையாற்றங்கரையில் குமாரசாமி மடத்தை முதலில் அமைத்தார். அத்துடன் அறச்சாலை ஒன்றையும் நிறுவினார். அந்த மடத்தில் இந்தியிலும், தமிழிலும், உருதுவிலும் புராணப் பிரசங்கங்களும் சைவசமயச் சொற்பொழிவுகளும் நிகழ்த்தினார். குமரகுருபரரின் அருள் ததும்பும், பக்தி பொங்கும் கம்பராமாயணப் பிரசங்கத்தை கேட்ட துளசிதாசர் இந்தியில் இராமாயணம் இயற்றி வடநாடு முழுவதும் ராமநாமப் பெருமையை பரப்பினார் என்பது வரலாறு. வடஇந்திய மக்கள் மத்தியில் குமரகுருபரரின் சமயப் பிரசங்கம் ஒரு சமய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியது. குமரகுருபரரை மக்கள் தங்களை உய்விக்க வந்த மகானாகவே எண்ணி அவரை வழிபட ஆரம்பித்தனர்.

காசியில் இருந்து சமய சொற்பொழிவாற்றிக் கொண்டே, ஆன்மீகப் பணி செய்து கொண்டே குமரகுருபரர்-ருத்திராட்சம் விளையும் நேபாளம் சென்றார். அந்தநாட்டில் "முகரங்கிமடம்" என்ற பெயரில் ஒரு சைவ மடத்தை நிறுவி, சமயப்பணி ஆற்றினார். முகரங்கி மடம், காசி மடத்தின் கிளை மடமாக நீண்ட நெடுங்காலமாக இருந்து வந்தது.

நேபாளத்திலிருந்து குமரகுருபரர் சுவாமிகளால் அனுப்பப்பெற்ற ருத்திராட்சங்கள் தான் தமிழகத்தில் பல முருகன் திருக்கோயில்களில் ருத்திராட்ச மண்டபங்களாக விளங்குவதை இன்றும் காணலாம்.

இறுதியில் குமரகுருபரர் தம் மாணவர்களுள் சிறந்தவரான "சொக்கநாத முனிவர்" என்ற அருளாளரிடம் காசி மடத்தின் பொறுப்புகளை ஒப்படைத்துவிட்டு ஒரு வைகாசித் திங்கள் மூன்றாம் நாள் கங்கையுள் இறங்கி சித்தி பெற்றார் என்பது வரலாறு. பொருனையாற்றங்கரையில் பிறந்து, காவேரிக் கரையில் தீட்சைப்பெற்று, கங்கைக் கரையில் மடம் அமைத்து, இமாலயத்தில் நேபாள நாட்டில் வாழ்ந்த குமரகுருபரர் வாழ்வும் தொண்டும் ஜீவநதி போன்றதாகும்.

சொக்கநாத முனிவருக்குப் பின்பல அருளாளர்கள் காசி மடத்தின் தலைவராக இருந்து குமரகுருபரர் விட்டுச் சென்ற அருள் பணியைச் செய்து வந்தனர் அவர்களில் குறிப்பிடத்தக்க அருளாளர் தில்லைநாயக சுவாமிகள் இவர் காசியில் தம் சீடர்கள் ஒருவரிடம் காசி மடத்தின் பொறுப்பை ஒப்படைத்துவிட்டுத் தமிழ் நாட்டுக்கு வந்தார். திருப்பனந்தாளில் " காசிமடம் என்ற பெயரால் ஒரு மடத்தை அமைத்தார். அந்த மடத்தில் தங்கி அருள் தொண்டாற்றிவந்தார். அவருக்குபின் வந்தவர்களால் திருபனந்தாள் தலைமை மடமாகவும் காசி குமாரசாமி மடம் கிளைமடமாகவும் மாற்றம் பெற்றன. குமரகுருபரருக்குப் பின் வந்தோர் காசிலேயே தங்கிச் சைவநெறியைத் தீவிரமாக கடைப்பிடித்துச் சைவ சிந்தாந்தத்தை நிலை நாட்டியிருப்பார்களேயானால் வடநாடு முழுவதும் சைவ சிந்தாந்தம் ஆழமாக பரவியிருக்கும். (நா. மகாலிங்கம் குமரகுருபரர், ஓம்சக்தி மார்ச்சு 1989)

ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் போன்ற சிவத் தமிழர்கள் மொகலாயர்கள் காலத்தில் வடஇந்தியாவுக்கு சென்று குடியேறி வாழ்ந்த போதிலும் கணிசமான அளவில் தமிழர்கள் சென்று குடியேறினர் என நமக்கு உறுதியாக கூறும் சான்றுகள் கிடையா. ஆங்கிலேயர்களின் ஆட்சியின் போதுதான் குறிப்பாக 20-ஆம் நூற்றாண்டில் தான் ஓரளவு கனிசமான அளவில் தமிழர்கள் வடஇந்தியாவுக்குச் சென்று குடியேறிவாழ்ந்தனர் எனக் கூறலாம்.

ஆங்கிலேயர்கள் இந்தியாவைக் கைப்பற்றி ஆட்சி செய்யத் தொடங்கிய பிறகுதான் தமிழ்நாடு முழுவதும் கல்கத்தா, தில்லி (1911 ஆம் ஆண்டிலிருந்து) நேரடி ஆட்சியின் கீழ் வந்தது. ஆனால் புதுச்சேரி, காரைக்கால், பகுதிகள் மட்டும் பிரெஞ்சு ஆட்சியின் கீழ் இருந்தன. ஆங்கிலேயர்களின் ஆட்சியின்போது ஆங்கிலேயர் அரசு தென்னிந்திய மாநிலங்களை இணைத்து சென்னை மாநிலம் (Madras Presidency) என்று அழைத்தது இப்பகுதிகளை ஒரே ஆட்சியின் கீழ் நிர்வகித்தது. ஆங்கிலேயர்கள் ஆட்சியின் போது குறிப்பாக இந்திய சுதந்திரப் போராட்டத்தின் போது தமிழர்களுக்கும் பிற மாநில இந்தியர்களுக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. தமிழர்கள் பலர் பிற இந்தியப் பகுதிகளுக்குச் சென்று குடியேறினர். சுதந்திரத்திற்குப் பிறகு சென்னை மாநிலம் நிர்வாக வசதிக்காக மொழிவாரி மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டது. இந்தியா சுதந்திரமடைந்தவுடன் பிற மாநிலங்களில் குடியேறுபவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கத் தொடங்கியது.

வட இந்தியர்கள் உட்பட, பிற இந்தியர்கள் தமிழ் நாட்டிற்கு வந்து குடியேறத் தொடங்கினர்.

வட இந்தியத் தமிழர்களை முதல் வகையாகப் பிரிக்கும்போது ஆரிய வருகைக்கு உட்பட்ட திராவிடத் தலைமைக் குடியினர் மெல்ல மெல்லக் கரைந்தே விட்டனர். ஆகவே, அவர்களையும் தற்போது வட இந்தியர்களாக அறிவிக்க வேண்டிய நிலைமை ஆகிவிட்டது. அவர்களில்லாமல் தற்போது தமிழ்பேசும் வடமாநிலத் தமிழர்களைப் பற்றிக் கூறுவதாயின் ஒன்று பிழைப்புக்காகச் சென்றவர்கள்; மற்றொன்று வெள்ளையர்களின் ஆசை வார்த்தைக்கு மயங்கி வேலையாட்கள் ஆவதற்கு அழைத்துச் செல்லப்பட்டவர்கள்; மற்றவர்கள் வாணிப நோக்கத்திற்கும் வேலை மாற்றலாகியும் சென்றவர்கள். மேலும் இந்தியா சுதந்திரமடைந்தவுடன் அரசு அலுவலகம், தனியார் நிறுவனங்கள் தொழிற்சாலைகள் முதலியவற்றில் பணிபுரிய பல ஆயிரக்கணக்கான தமிழர்கள் பிற இந்தியப் பகுதிகளுக்கும் சென்று குடியேறினர்.

பணிப்பொறுப்பமைப்பு

தனியார் அரசுத்துறை ஆகியவற்றின் பெரிய பொறுப்புக்களில் உள்ள அதிகாரிகளாகவும் அதற்கு நேர்மாறான வகையில் கூலிகளாகவும் தமிழர்கள் உள்ளனர். பம்பாய், டில்லி போன்ற இடங்களில் அநேகக் கூலியாட்கள், குறிப்பாகச் சேலத்திலிருந்து வந்தவர்கள், கூலிவேலை செய்து சம்பாதிக்கின்றனர். கவுரவம் மிக்க தொழிலாளர்களாகவும் உள்ளனர். தொழிற்கலைஞர்களாகவும் உள்ளனர். சிறந்த விளையாட்டு வீரர்களாகவும் உள்ளனர். இந்திய கால்பந்தாட்டக் குழுவில் இடம்பெற்று புகழ்பெற்ற அருமைநாதன், உலகநாதன், டென்னிஸ் கிருஷ்ணன், அமிருதராஜ், கிரிக்கெட் ஆட்டக்காரர்களான கோபிநாத், ரங்காசாரி, வெங்கட்ராகவன், சிவராமகிருஷ்ணன், இராமன் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவார்கள்.

தமிழ்ப் பண்பாடு

வெளிமாநிலத் தமிழர்கள் தாய்த் தமிழகத்துடன் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொண்டிருக்கின்றனர். உடை, சில சொற்கள் ஆகியவற்றில் சிலமுறைகள் மாறுபட்டு இருப்பதைக் காணலாம். சிலர் தமிழைக்கூட மறந்துவிட்டனர். "கேரளத்தில் உள்ள சிறுபான்மையினரான கொங்கணி, தெலுங்கு, தமிழ் மொழி பேசுவோருள் முதல் இரு வகுப்பினரும் தம் தாய் மொழியைப்பேணிப்பேசி வருகையில் தமிழரோ தமது தாய்மொழி பேசும் இயல்பினை இழந்துவிட்டனர்" என டாக்டர் வி.ஐ.சுப்பிரமணியம் கூறுகிறார். ஆகையால் வீட்டிலே இந்தியிலே பேசும், வங்காள மொழியிலே பேசும், தெலுங்கிலேபேசும், மலையாள மொழியிலே பேசும், பல தமிழர்களும் உண்டு. மெல்ல மெல்லத் தமிழ்ப் பெயர் மாற்றங்களைத் தங்கள் குழந்தைகளுக்குப் பெற்றோர்கள் செய்கின்றனர். ஆனாலும், பெரும்பாலும் இவர்களிடையே தமிழ் மணம் வீசுகிறது.

முக்கியமாக, வெளிமாநிலத் தமிழர்கள் அந்தந்த மாநிலப் பெரும்பான்மை மக்களோடு ஒருங்கிணைந்து வாழ முயலுகின்றனர். பலர் ஒருங்கிணைந்து வாழ்கின்றனர். எடுத்துக்காட்டாக, கன்னட எழுத்துலகின் தந்தை என்று அழைக்கப்படும் மாஸ்தி

வெங்கடேச அய்யங்கார் தமிழர் ஆவார். இவர் இந்திய அரசின் ஞானபீட விருதைப் பெற்றவர். அதே சமயத்தில் தமிழ்ப் பண்பாட்டை இழக்காமல் கண்ணிமைபோல் காத்துவரும் தமிழர்களும் இருக்கின்றனர்.

அண்மையில் 'மண்ணின் மைந்தர்' என்ற கொள்கை பிற மாநிலங்களில் தலைதூக்கியிருக்கின்றது. கருநாடகத்தில் கன்னட சளுவளிகா இயக்கம், பம்பாயில் சிவசேனை என்னும் இயக்கம் சமீபகாலம் வரை வலுவடைந்து இருந்தது. பஞ்சாப், அசாம் போன்ற பகுதிகளில் பெரும்பான்மை மொழிபேசும் மக்கள் சிறுபான்மையினரை நசுக்கிவிடுகின்றனர். மாநில ஆட்சி மொழியினருக்கே வேலைவாய்ப்பு என்ற கொள்கை உருவாகி செயல்படுத்தப்படுகின்றது. கருநாடகத்தில் தொடக்கக் கல்வியைக் கட்டாயமாக மாநில ஆட்சி மொழியில் படித்தாக வேண்டும். ஆகையால் தமிழர்கள் தங்கள் எதிர்காலத்தை நினைத்து அச்சமும் கவலையும் கொள்கின்றனர். பலர் தாய்மொழி பயிலும் வாய்ப்பை ஒழித்து மாநில மொழியில் தமிழ் மாணவர்களைப் பயிலவைக்கின்றனர். ஆகையால், தாய்மொழி பயிலும் வசதி குறைவாகிக் கொண்டு வருகின்றது எனக் கூறலாம். தமிழகத்திற்கு அப்பால் வாழும் ஏறத்தாழ மூன்றுகோடி தமிழர்களின் நிலை இம்மாதிரி சூழ்நிலையில் உள்ளது.

செய்தி பரவல் தொடர்புச் சாதனங்கள்

சில நூறு தமிழர்கள் ஓரிடத்தில் இருந்தால் அங்கே நிச்சயம் தங்களுக்குள் எந்த வகையிலாவது ஓர் அமைப்பை ஏற்படுத்திக் கொள்ளும் பாங்கைப் பெற்றுள்ளனர். தமிழ்த்திரைப்படக் கலைஞர்களின் சுவைஞர்களாகவும், அவர்களுக்கு மன்றங்கள் அமைத்து ஆதரவு தெரிவிப்பவர்களாகவும் உள்ளனர். பெருவாரியான தமிழர்கள் ஓரிடத்தில் வாழ்ந்தால் அவர்கள் தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளுக்குத் தங்கள் ஆதரவினையளித்துப் போட்டி போட்டுத் தமிழ் மக்களுக்குப் பொதுநலத் தொண்டு புரிகிறார்கள். ஒரு சிலரே வேறு பல கட்சிகளை ஆதரிக்கின்றார்கள்.

இலக்கிய நிகழ்ச்சிகள் நடத்தித் தமிழின் சிறப்பை உணரவைத்தும் உணர்த்தியும் தமிழ்த் தொண்டாற்றி வருகின்றனர். தமிழ்ப் பணியைத் தலைப்பணியாகக் கொண்டு செயல்படும் அமைப்புகளில் பம்பாய்த் தமிழ்ச்சங்கம், டில்லித் தமிழ்ச் சங்கம், பெங்களூர்த் தமிழ்ச்சங்கம், கல்கத்தாவிலுள்ள பாரதி தமிழ்ச் சங்கம் ஆகியவற்றின் பணிகள் குறிப்பிடத்தக்கனவாகும். போபால் பிப்பாலினியிலுள்ள தமிழ்ச்சங்கம், ஜெய்ப்பூர் குர்லா மார்க்கில் உள்ள தமிழ்ச்சங்கம், குஜராத்திலுள்ள ஸ்ரீகிருஷ்ணா தமிழ் வித்யாலயம், அசாம் ஜோரப்பாத்தில் உள்ள தமிழ் இலக்கியப் பண்பாட்டுப் பேரவை, பெங்களூரில் அண்ணா தமிழ் இலக்கியக் கழகம், கர்நாடகத் தமிழர் கூட்டுறவுக் கழகம், பம்பாயிலுள்ள தமிழர் பேரவை, கர்நாடக மாநிலத்திலுள்ள கர்நாடகத் தமிழ் கிறித்தவப் பொதுநலச் சங்கம், சிமோகா தமிழ்ச்சங்கம், இன்னும் பல்வேறு இடங்களிலுள்ள தமிழ் அமைப்புகளின் பணி பாராட்டத்தக்கதாகும். மேலும், எண்ணிலடங்காத வகையில் கூட்டுறவு முறையிலும், அமைப்புச் சார்பிலும், தனிப்பட்ட வகையிலும், திருவள்ளுவர், பாரதியார், பேரறிஞர் அண்ணா போன்றவர்களின் பேரிலும் இன்னும் தமிழ்ப் பெரியவர்களின் பெயர்களிலும் நூலகங்களை அமைத்து அதன் மூலமாகத் தமிழ்ப்பணி புரிகின்றனர்.

தங்களுக்கென்று பத்திரிகைகள், புத்தகங்கள், கவிதைகள், கட்டுரைகள், வெளியிடுகின்றனர். பெங்களூரிலிருந்து வெளிவரும் ' தினச்சுடர்', பம்பாயிலிருந்து வெளிவரும் 'மராத்திய முரசு ' போன்ற நாளேடுகள் பரபரப்பான வகையிலே உள்ளூர்த் தமிழ் மக்களைக் கவர்ந்து கொண்டு வருகின்றன. வார ஏடுகளும், வார இதழ்களும், நாவல்களும், கையேட்டுப் பிரதிகளும் வெளிவருகின்றன.

தமிழகத்தின் எழுத்துலகில் பெங்களூர் எழுத்தாளர் சுஜாதா புகழடைந்துள்ளார். தங்களின் கலைத்திறமைகளை வெளிப்படுத்துகின்ற வகையில் நாடகங்களை அரங்கேற்றுகின்றனர். பெங்களூர் நகரில் மட்டும் ஏறத்தாழ அறுபதுக்கும் மேற்பட்ட நாடகக்குழுக்கள் இருக்கின்றன. வெளிமாநிலத் தமிழர்கள் தமிழ்த் திரைப்படத்தைப் பார்ப்பது மூலமே தங்கள் பொழுதைக் கழிக்கின்றனர்.

தமிழ் மக்கள் தொகை

இந்தியாவின் மொத்த மக்கள்தொகையில் தமிழர்கள் 8 விழுக்காடு இருக்கின்றனர். இந்திய மக்கள் தொகையில் இந்தியாவின் எல்லா பகுதியிலும் வாழும் தமிழர் எண்ணிக்கை ஆறு கோடி. தமிழகத்தில் வாழும் தமிழர்கள் 1981 இல் 4.8 கோடி இருந்தனர். தமிழகத்தில் வாழும் பல்வேறு இனமக்களில் 81 விழுக்காடு. எட்டு மாநிலங்களில் வாழும் தமிழர்களின் எண்ணிக்கை (இர. ந. வீரப்பன் அளிக்கும் புள்ளிவிவரங்கள்) கீழே அளிக்கப் பட்டிருக்கின்றன.

பிறமாநிலங்களில்	தமிழர்	பெரும்பான்மையினராக வாழும் இடங்கள்
காரைக்கால், புதுச்சேரி	ஏறத்தாழ 6 இலட்சம்	
மராட்டிய மாநிலம்	சுமார் 5 இலட்சம்	பம்பாய், (தாராவி, மாதுங்கா, பாண்டுப்)
குஜராத் மாநிலம்	1இலட்சம்	அகமதாபாத்
ஆந்திரா	2இலட்சம்	சித்தூர், செகந்திரபாத், ஹைதராபாத், நெல்லூர் மாவட்டம், திருப்பதி.
உத்திரப் பிரதேசம்	3இலட்சம்	காசி, அலகாபாத், ஆக்ரா, லக்னோ, அலிகார்
பஞ்சாப்	1இலட்சம்	பஞ்சாலம், சண்டிகார், பாட்டியாலா
மேற்கு வங்காளம்	1இலட்சம்	கல்கத்தா, அவ்ரா
தில்லி	3இலட்சம்	இருபகுதியிலும், குறிப்பாக இராமகிருஷ்ணாபுரம், புதிய தில்லியில் (கரோல்பாக்)

அந்தமான், நிக்கோபார்	*30,000*
மற்றப் பகுதிகள்	*50,000*

ஆக மொத்தம் இந்தியாவில் மற்றப் பகுதிகளில் வாழும் தமிழர்கள் ஒன்றேகால் கோடி இருக்கிறார்கள். ஆந்திராவில் செகந்தராபாத், ஐதராபாத் மாவட்டங்களில் தமிழர் மட்டும் 40 விழுக்காடாவர். சித்தூர் மாவட்டத்தில் வாழும் மக்களில் 30 விழுக்காடு தமிழர்கள். நெல்லூர் மாவட்டத்தில் 10, 000 தமிழர்கள் உள்ளனர்.

கருநாடகத்தில் 90 இலட்சம் தமிழர்கள் இருக்கின்றார்கள். இவர்கள் கருநாடக மொத்த மக்கள் தொகையில் 32விழுக்காடாகும். என்று இர. ந. வீரப்பன் கூறுகின்றார். கருநாடகத்தில் தமிழர்களைத் தவிர தெலுங்கர்கள், மராட்டியர்கள், உருது பேசும் முசுலிம்கள் ஆகியோர் பரந்து காணப்படுகின்றனர். ஆகையால் தமிழர்கள் மட்டும் 32 விழுக்காடு இருக்கின்றார்கள் எனக் கூறுவது ஐயத்திற்குரியது. பெங்களூர் நகரப்பகுதியில் மட்டும் 32 விழுக்காடு தமிழர்கள் இருக்கின்றார்கள். என்றால் ஏற்றுக்கொள்ளலாம். அதேபோல் கேரளாவின் மொத்த மக்கள் தொகையில் தமிழர்கள் 30 விழுக்காடு இருக்கின்றார்கள் என இர. ந. வீரப்பன் கூறுகின்றார். இப்புள்ளி விவரமும் ஐயத்திற்குரியது. "கேரளாவில் ஏனைய மொழிபேசுவோர் மொத்த எண்ணிக்கை 5 முதல் 7 விழுக்காடு வரையில்தான்" என பேராசிரியர் ஜே. நீதிவாணன் கூறுகிறார். கேரளாவில் தமிழர்கள் மிகுதியாக வாழும் பகுதி திருவனந்தபுரம், இடுக்கி, பாலக்காடு, கோட்டயம், கொல்லம் எர்ணாகுளம், கோழிக்கோடு, பீர்மேடு, மூணாறு, கருநாடகத்தில் தமிழர்கள் மிகுதியாக வாழும் பகுதி பெங்களூர் நகரப்பகுதி, கோலார் தங்கவயல் மைசூர் மாவட்டம்.

தமிழ்ப் பள்ளிகள், கல்லூரிகள்

தமிழகத்துக்கு வெளியே இந்தியாவில் பதினைந்து பல்கலைக் கழகங்களில் தமிழாய்வும், தமிழ்ப்பயிற்சியும் நடைபெறுகின்றன.

மாநிலம்	தமிழ்ப பள்ளிகள், கல்லூரிகளின் விவரம்
அந்தமான், நிக்கோபார்த் தீவுகள்	இளநிலை ஆதாரப் பள்ளிகள் உள்ள இடங்கள்:- *அருது, டேரிபார்ம், பாத்துப்பஸ்தி, சயித்தான்காரி, நமுனாகர், கனாபுரம், சவுன்பே, மாயாபந்தர், இராம்பூர், சுபாஷ்கிராம், மில்லன், கிராம், ரைட்மியோ, விவேகானந்தபுரம், அட்பே, மில்டேரா, சப்னம் நகர், சிடியாடாப்பு* முதுநிலை ஆதாரப் பள்ளிகள் உள்ள இடங்கள்:- *அபர்டீன், காராசாமா, மாயாபந்தர்.* மேல்நிலைப் பள்ளிகள் உள்ள இடங்கள்:- *அருது, இரங்கத், விம்பர்-வினஞ்ச், தமிழில் கல்லூரிக் கல்வியோ, பல்கலைக் கழக வசதியோ அந்தமானில் இல்லை.*

ஆந்திரப்பிரதேசம்

இளங்கலை வகுப்பு சித்தூர் மாவட்டத்தில் நகரி, புத்தூர், சித்தூர். உஸ்மானியா பல்கலைக்கழக மொழித்துறை: 1935இல் இங்குத் தமிழ் மொழித்துறை தொடங்கப்பட்டது. 1961இல் முதுகலை வகுப்புகள் தொடங்கப்பட்டன. அனந்தப்பூரில் ஸ்ரீகிருஷ்ணதேவராயா பல்கலைக் கழகம் இங்குத் தமிழில் சான்றிதழ் வகுப்புகள் உள்ளன. திருப்பதியில் உள்ள ஸ்ரீவேங்கடேசுவரா பல்கலைக் கழகம்: 1955 முதல் பட்ட வகுப்பில் தமிழ் மொழி கற்பிக்கப்படுகிறது. 1970இல் எம். ஏ. தொடங்கப்பட்டது. பின்னர் எம்.பில் டாக்டர்பட்ட ஆய்வுக்கான வாய்ப்பு உருவாயிற்று.

கேரளா

தமிழ் உயர்நிலைப் பள்ளிகள் இருக்கும் இடம்:- திருவனந்தபுரம், இடுக்கி, பாலக்காடு, கோட்டயம், எர்ணாகுளம், கோழிக்கோடு, சித்தூரில் அரசினர் தமிழ் ஆசிரியப் பயிற்சிப் பள்ளி ஒன்று உள்ளது. கேரளப் பல்கலைக்கழகம்:- திருவனந்தபுரம், தமிழ் ஆராய்ச்சித் துறையும் உள்ளன. எம்.ஏ., எம்.பில்., பி.எச்.டி., பட்ட வகுப்புகள் உள்ளன. கோழிக்கோடு பல்கலைக் கழகத்தின் கீழ், சித்தூர் அரசினர் கல்லூரியில் தமிழில் முதுகலைப் பட்டப் படிப்பும், ஆராய்ச்சித் துறையும் உள்ளன. பாலக்காட்டில் உள்ள விக்டோரியா அரசினர் கல்லூரி, திருவனந்தபுரம் பல்கலைக் கழகக் கல்லூரி, திருவனந்தபுரம் அரசு கலைக் கல்லூரி, மகளிர் கல்லூரி, மாஇவானியஸ் கல்லூரி ஆகியவற்றில் தமிழ் இளங்கலை வகுப்பிலும், சிறப்புப் பாடமாகவும் கற்பிக்கப்படுகிறது.

கருநாடகம்

ஏறத்தாழ 25 கல்லூரிகளில் தமிழ் கற்பிக்கப்படுகிறது. முக்கியமானவை பெங்களூரில் உள்ள நிஜலிங்கப்பா கல்லூரி, கிறித்துவக் கல்லூரி, தூய சூசைப்பர் கல்லூரி, மகாராணிக் கல்லூரி. மேலும் தார்வாரில் உள்ள கர்நாடகப் பல்கலைக் கழகம் மைசூரில் உள்ள இந்திய மொழிகளின் மையநிறுவனம் பிற மொழியாளர்களுக்குத் தமிழ் கற்பித்து வருகிறது. தமிழ்ப்பாட நூல்களும் எழுதப்பட்டுள்ளன.

தில்லி

தில்லிப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறை 1959 இல் ஏற்பட்டது. 1978 இப்பல்கலைக்கழகம் தமிழ் முதுகலைப்பட்ட வகுப்பை அமைத்தது. டாக்டர் பட்ட ஆய்வுக்கும் வாய்ப்பு உள்ளது.

தமிழ் கற்பிக்கும் கல்லூரிகள்:- ஸ்ரீவேங்கடேசுவரா கல்லூரி, மிராண்டா (மகளிர்) கல்லூரி, லேடி சீராம் (மகளிர்) கல்லூரி

பஞ்சாப்

சண்டிகார் நகரில் உள்ள பஞ்சாப் பல்கலைக் கழகத்தில் தென்னிந்திய மொழிகளுக்கென, தனித் தமிழ்த் துறை உள்ளது. பி.ஏ. தேர்வு எழுதலாம். பாட்டியாலாவில் உள்ள பஞ்சாபி

பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பகுதி மொழியியல் துறையோடு இணைந்துள்ளது.

மேற்கு வங்காளம்

1941இல் கல்கத்தா நகரில் உருவான பாரதி தமிழ்ச் சங்கம் பிறமொழியினருக்குத் தமிழ் வகுப்புகள், வங்க மொழி வகுப்புகள், கல்லூரிகளின் இரண்டாம் மொழியாகப் பயில்வோருக்குத் தமிழ் வகுப்புகள் நடத்துகின்றது. வங்கத்தமிழர் சங்கம் ஹௌராவில் தமிழ்க் குழந்தைகளுக்காக ஓர் இலவசத் தொடக்கப் பள்ளியை நடத்துகிறது.

கல்கத்தாப் பல்கலைக் கழகத்தில் 1976 ஆம் ஆண்டு தமிழ்த் துறை ஆரம்பிக்கப்பட்டது. எம். ஏ. பயில வாய்ப்புண்டு. கல்லூரிகளில் புகுமுக பட்ட வகுப்புகளில் இரண்டாம் மொழியாக, தமிழ் கற்பிக்கப்படுகிறது.

சாந்திநிகேதனில் உள்ள விசுவபாரதி பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பகுதி இந்தித் துறையுடன் இணைந்துள்ளது. தமிழில், சான்றிதழ், டிப்ளமோ வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

உத்திரப்பிரதேசம்

பல இடங்களில் தென்னிந்திய மொழிப் பள்ளிகள் உண்டு. இவை அனைத்திலும் தமிழ் கற்பிக்கப்படுகிறது. சான்றிதழ், பெருஞ் சான்றிதழ், கோவிந் என்ற நிலைகளில் இப்பள்ளிகளில் நான்கு ஆண்டுக் காலத்தில் தமிழ் கற்பிக்கப்பட்டிருக்கிறது. உதாரணம் லக்னோவில் உள்ள பள்ளி.

அலிகார் முசுலீம் பல்கலைக் கழகம்:- 1969 முதல் தமிழ் கற்பிக்கப்பட்டு வருகிறது. தமிழில் சான்றிதழ், டிப்ளமோ, தேர்வுகள் நடத்தப்படுகின்றன. பி.ஏ. ஆனர்சு நிலையில் தமிழ் பயில வாய்ப்புண்டு. எம்.ஏ. பயிலுவோர் தமிழை விருப்பப் பாடமாக எடுத்துக் கொள்ளலாம்.

அலகபாத் பல்கலைக்கழகம்: இந்தித் துறையில் தமிழ் கற்க வாய்ப்பு உண்டு. தமிழில் சான்றிதழ், டிப்ளமோ வகுப்புகள் உண்டு. எம்.ஏ. இந்தி படிக்கும் மாணவர் தமிழை விருப்பப் பாடமாக எடுத்துக் கொள்ளலாம்.

பனாரஸ் இந்துப் பல்கலைக் கழகம் காசி: தமிழ்த் துறை உண்டு. பி.ஏ., பி.எஸ்.சி., பயிலும் மாணவர்கள் தமிழை ஒரு பாடமாக எடுத்துப்பயிலலாம்.

லக்னோ நகரில் உள்ள பல்கலைக் கழகம்: இந்தித்துறையுடன் தமிழ்ப் பகுதி இணைந்துள்ளது. தமிழில் சான்றிதழ், பெருஞ்சான்றிதழ் வகுப்புகள் நடத்தப்படுகின்றன. பட்ட வகுப்புப் பயிலும் மாணவர் தமிழைக் கற்கலாம். ஆக்ரா பல்கலைக் கழகத்தில் உள்ள கன்னஹையா முன்ஷி இன்ஸ்டியூட்

எனும் இந்தி நிறுவனத்தில் சான்றிதழ் டிப்ளமோ வகுப்பிலும், இந்தி எம், ஏ. வகுப்பிலும் தமிழ் கற்க வாய்ப்புண்டு.

(செய்திகள் மூலம்:- டாக்டர் ந. கடிகாசலம்: தமிழும், தமிழரும் PP. 22-35)

குஜராத் நகரப் பகுதிகளில் 50,000 தமிழ்ப் பிள்ளைகள் கல்வி கற்கின்றனர். 1936இல் அமைந்த ஸ்ரீகிருஷ்ணா தமிழ் வித்தியாசாலை என்ற கோத்ரா (மணிநகர்) ஆரம்ப உயர்நிலைப் பள்ளியில் 5,000 மாணவர்கள் 65 ஆசிரியர்கள் உள்ளனர். மற்றப் பகுதிகளில் 7 தமிழ்ப் பள்ளிகளின் 2500 மாணவர்களுக்கு 82 பேர் படிப்பிக்கிறார்கள். கோத்ரா பள்ளியில் தமிழைக் கல்வி மொழியாகவும் எட்டாம் வகுப்பு வரை உள்ள நிலையைப் பார்க்கலாம்.

தமிழ்ச் சங்கங்கள்: அந்தமான் நிக்கோபார்த் தீவுகள்:

1. அந்தமான் தமிழர் சங்கம், போர்ட் பிளேயர்.
2. தமிழர் சங்கம், மாயாபந்தர், டிக்லிபூர், லிட்டில் அந்தமான்.
3. தமிழ்க் கல்விப் பாதுகாப்புக் குழு, போர்ட் பிளேயர்.
4. அறிகர் தமிழ் எழுத்தாளர் பேரவை, போர்ட் பிளேயர்.
5. கலை இலக்கியப் பெருமன்றம், விவேகானந்தபுரம்.
6. தமிழ் இலக்கிய மன்றம், போர்ட்பிளேயர்.
7. முத்தமிழ் இலக்கிய மன்றம், இரங்கத்

ஆந்திரப் பிரதேசம்

1. திருப்பதி கலாச்சாரச் சங்கம் (1968).
2. சித்தூர் மாவட்டத் தமிழ்ச் சங்கம்.
3. பாகாலாத் தமிழ்ச் சங்கம்.
4. புத்தூர்த் தமிழ்ச் சங்கம்.
5. சித்தூர் மாவட்டத் தமிழாசிரியர் சங்கம்.
6. நாராயணவரம் தமிழ்ச் சங்கம்.
7. ஆந்திர மாநிலச் சிறுபான்மை மொழியினர் (தமிழ்) நலச் சங்கம்.
8. ஆந்திர மாநிலத் தமிழ்ப் பேரவை.

கருநாடகம்

1. பெங்களூர்த் தமிழ்ச் சங்கம் (1950)
2. தமிழ் மன்றம் (BEL)

கேரளம்

1. சைவப் பிரகாச சபை, திருவனந்தபுரம்.
2. சித்தூர்த் தமிழ்ச் சங்கம், சித்தூர்.
3. கொழிஞ்சாம்பாறைத் தமிழ் மன்றம், கொழிஞ்சாம்பாறை.
4. விசுவநாதன் தமிழ்ச் சங்கம், நெம்மாறா.
5. பாலக்காடு தமிழ்ச் சங்கம், பாலக்காடு.

6. ஒலவக் கோட்டுத் தமிழ்ச் சங்கம்.
7. சன்மார்க்க சங்கம், குன்னத்துபாளையம், சித்தூர்
8. தமிழ்ச் சங்கங்கள் உள்ள மற்ற இடங்கள்:- திருவனந்தபுரம், பீர்மேடு, முனாறு, கோழிக்கோடு.

உத்திரப்பிரதேசம்

1. அலிகார் தமிழ்ச் சங்கம் (1976)
2. அலிகார் பல்கலைக் கழகத் தமிழ் மாணவர் கழகம்.

தில்லி

1. தில்லித் தமிழ்ச் சங்கம் (1946): இச்சங்கம் அமைந்துள்ள நெடுஞ்சாலைக்குத் தமிழ்ச் சங்க மார்க் எனப் பெயரிடப்பட்டுள்ளது. இச்சங்க நூலகத்தில் 10,000 தமிழ் நூல்கள் உள்ளன.
2. தில்லித் தமிழ் எழுத்தாளர் சங்கம் (1973)

மேற்கு வங்காளம்

1. பாரதி தமிழ்ச் சங்கம் (1941)
2. கல்கத்தாத் தமிழ் மன்றம் (1953)
3. வங்கத் தமிழர் சங்கம்.
4. திருவள்ளுவர் கலை மன்றம்.

புதுச்சேரி (பாண்டிச்சேரி)

1. தமிழ்க் கழகம்.
2. புதுவைத் தமிழ்ச் சங்கம்.
3. தமிழ்க்காவற்குழு.
4. சுப்பிரதீபக் கவிராயர் மன்றம்.
5. புதுவைத் தமிழ்க் கவிஞர் மன்றம்.
6. தனித் தமிழ்க் கழகம்.
7. தமிழ்த் தளிர்க் கழகம்.
8. கல்விக் கழகம்.

தவிர போபால் நகர், ஜெய்ப்பூர், பம்பாய், திருவனந்தபுரம் ஆகிய பெருநகர்களிலும் தமிழ்ச் சங்கங்கள் இருக்கின்றன. உதாரணம் பம்பாய் பாண்டுப் திருவள்ளுவர் மன்றம்.

வெளிவரும் இதழ்கள்:

1. அந்தமான் முரசு-திங்களிதழ்
2. தினச்சுடர்-நாளிதழ்-பெங்களூர்

3. இளவேனில்-ஆண்டுமலர்-தமிழ்த் துறை, கேரளப் பல்கலைக்கழகம், திருவனந்தபுரம் வெளியிடுகிறது.

4. சுடர்-ஆண்டிதழ்-வெளியிடுவோர் தில்லித் தமிழ்ச் சங்கம்.

பிற செய்திகள்

தில்லி வானொலி நிலையத்தில் தென் கிழக்காசிய இந்தியர்களுக்கான தமிழ் ஒலிபரப்புப் பகுதி உள்ளது. அரசியல் செய்திகள், திரைப்படப் பாடல்கள், இலக்கிய நிகழ்ச்சிகள் ஆகியன ஒலிபரப்பப் பட்டு வருகின்றன.

உதவிய நூல்கள்

1. டாக்டர் ச. அகத்தியலிங்கம், டாக்டர் சு. சக்திவேல்	உலக அரங்கில் தமிழ் வளர்ச்சியும், பயிற்சியும் மொழியியல் தொகுதி-4, ஜுலை, டிசம்பர் எண். 4, 1,2, 1980, பக். 131-60
2. ச.அகத்தியலிங்கம்,	தமிழ்ப் பெண்களின் அறிவுக் கூர்மையைப் பாராட்டும் அறிஞர்கள் (பிரெஞ்சு நாட்டுப் பயணக்கட்டுரை) தினமலர், திருச்சி 25-3-88.
3. கா. அப்பாத்துரையார்,	உலகத்தமிழ் ஆராய்ச்சி இயக்கத்தில் மலேசியாவின் பங்கும் பொறுப்பும், ஆறாம் உலகத்தமிழ் மாநாட்டு மலர், 1987.
4. அரங்க முருகையன்,	அயல்நாட்டுத் தமிழர்க்குத் தமிழ் மொழிக் கல்வித் திட்டம் வகுப்பதிலும் தக்க பாடநூல்கள் எழுதுவதிலும் இவை தொடர்பாக ஏழக்கூடிய முட்டுப்பாடுகள் (அயல்நாட்டுத் தமிழர்க்குத் தமிழ்மொழிக் கல்வித்திட்டம் வகுப்பதிலும் பாடநூல்கள் எழுவதிலும் எழும் பிரச்சினைகள்) தமிழ்ப் பல்கலைக் கழகம், 1988)
5. அரங்க முருகையன்,	பிரித்தானிய நாட்டில் தமிழ், தமிழ்க்கலை, தமிழ் 5, கலை 3,4.
6. க.ப. அறவாணன்,	ஆப்பிரிக்காவில் தமிழ், தமிழ்க்கலை தமிழ் 5, கலை 3, 4.
க.ப. அறவாணன்	தமிழரின்தாயகம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, சூன், 1984.
7. அன்னைகஸ்தூரி சின்னப்பன்,	மோரிசில் தமிழர்கள், ஆறாவது உலகத்தமிழ் மாநாட்டு மலர், 1987.

8. அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்,தோற்றமும் வளர்ச்சியும், ஆறாவது உலகத்தமிழ் மாநாட்டு மலர், 1987.

9. ஆறாம் உலகத்தமிழ் மாநாட்டு மலர், நவம்பர் 15-19, 1987, கோலாலம்பூர், மலேசியா.

10. இந்திய-இலங்கை உடன்பாடு

11. கா. பொ. இரத்தினம்,	தமிழர் கண்ட உலகளாவிய நிறுவனங்கள், வரலாறு, ஆறாவது உலகத்தமிழ் மாநாட்டு மலர், 1987.

12. அ. இராகவன், தமிழக சாவகக் கலைத் தொடர்புகள், சென்னை, 1967.

13. சு. இராசாராம், மொரீசியசில் தமிழ், தமிழ்க்கலை தமிழ் 5, கலை 3, 4.

14. இராமவீரசிங்கம், பிரிட்டனில் தமிழ்மொழிப் போதனை, (அயல் நாட்டுத் தமிழர்க்குத் தமிழ் மொழிக் கல்வித் திட்டம் வகுப்பதிலும் பாடநூல்கள் எழுவதிலும் எழும் பிரச்சனைகள், தமிழ்ப் பல்கலைக் கழகம் 1988)

15. ரெ. ராஜு, மேற்கு மலேசியாவில் தமிழ், தமிழ்க்கலை தமிழ் 5, கலை 3,4.

16. உமறுப்புலவர் தமிழ் மொழி நிலையம், செரன்கான் தெரு, சிங்கப்பூர் 0821 ஆண்டு மலர் 1986.

17. ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு மலர், மதுரை 1981.

18. ந. கடிகாசலம், சீனாவில் தமிழ் வரலாறு, ஆறாவது உலகத் தமிழ் மாநாட்டு மலர், 1987

19. டாக்டர் ந. கடிகாசலம். தமிழும், தமிழரும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சென்னை, செப்டம்பர், 1982.

20. அ. கந்தன், மலேசியாவில் தமிழ்ப் பள்ளியும், தமிழ்க்கல்வியும் தமிழ்க் மேம்பாட்டு இயக்கம், கங்கை கமுன், சனவரி 1979.

21. கி. கருணாகரன், மலேசியாவில் தமிழ், தமிழ்க்கலை 5, கலை 3,4.

22. கார்த்திகேசு குகபாலன், இலங்கையில் தமிழ்ப் பெண்களின் திருமணமும் திருமண வாழ்வும், தமிழ்க்கலை, தமிழ் 3, கலை 3 & 4 , செப்டம்பர் & டிசம்பர் 1985.

23. ஆ. கார்த்திகேயன், தென்னாப்பிரிக்காவில் தமிழ், தமிழ்க்கலை, தமிழ் 5 கலை 3, 4.

24. எம். கிருஷ்ணன் (மலேசியா) மலாய்ப் படைப்பிலக்கியங்களில் தமிழ்ப் பாத்திரப் படைப்புகள் Nov.1987, KvalaLumpury, Malaysia Abstracts of reserach papers-Sixth international Conference op. cit.)

25. கோ. கிருஷ்ணபகவான், மலேசியாவில் தமிழ் மொழி கற்றல் கற்பித்தல் சில பிரச்சினைகள் (அயல்நாட்டுத் தமிழர்களுக்கான பாடத்திட்டம் மற்றும் பாடப்புத்தகங்கள் உருவாக்குவதில் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பான கருத்தரங்கு, தமிழ்ப் பல்கலைக் கழகம் தஞ்சாவூர், 1988)

26. எஸ்.டி. குமார், தமிழகத்திற்கு அப்பால் உள்ள வெளிமாநிலத் தமிழர்கள் சமுதாயம், ஆறாவது உலகத்தமிழ் மாநாட்டு மலர், 1987.

27. பேராசிரியர் பி.குமாரசாமி, ரீயூனியன் வாழ் தமிழர்கள், வரலாறு, ஆறாவது உலகத்தமிழ் மாநாட்டு மலர், 1987.

28. க. சச்சிதானந்தன், சீசெல்சு நாட்டில் தமிழர், தமிழ்க்கலை, தமிழ் 5, கலை 3, 4

29. சப்பான் நாட்டில் மொழி ஆராய்ச்சியை விரிவு படுத்துவதற்காக நடந்த சொல்விடற் குறிப்புகள்-தமிழ்க்கலை தமிழ்-1 கலை-3, செப்டம்பர் 1985, பக்.41-50

30. மா.சு. சம்பந்தன், — அச்சினால் ஏறபட்ட அரும் பயன்கள், வரலாறு ஆறாவது உலகத்தமிழ் மாநாட்டு மலர், 1987.

31. இரா. சிவசந்திரன், — இலங்கையில் பாரம்பரியத் தமிழ்ப் புலத்தின் குடித்தொகைப் பண்புகள், தமிழ்க்கலை, தமிழ் 2, கலை 1, மார்ச்சு 1984.

32. வை. கா. சிவப்பிரகாசம், — இலங்கையில் வைணவம், தமிழ்க் கலை-1, கலை-2, சூன் 1983.

33. செ. து. சுந்தர்வடிவேலு, — உலகத் தமிழ், சென்னை, 1972.

34. சுப்பிரமணியன், ச. வே. — அயல்நாடுகளில் தமிழ் வளர்ச்சி சுடர்மலர், 17, 26, தில்லித் தமிழ்ச்சங்கம் மலர் 23, 1978, புதுடெல்லி.

35. ந. வீ. செயராமன், — விடுதலைக்கு முந்திய மலேசியத் தமிழ் நாவல்கள் *Abstracts of Research papers, Sixth Conference of Cit.*,

36. டத்தோ ச. சாமிவேலு, — பொதுப்பணித்துறை அமைச்சர், மலேசியா, தமிழன்னைக்குப் பரிசளிப்போம் வாரீர், ஆறாம் உலகத்தமிழ் மாநாட்டு மலர், 1987.

37. தனிநாயகம் எல்., — ஒன்றே உலகம், சென்னை 1974.

38. கே. டி. திருநாவுக்கரசு, — இலங்கையில் தமிழ்ப் பண்பாடு.

39. தென்னிந்தியச் சன்மார்க்க ஐக்கிய சங்கம்-நாற்பது வருஷ வரலாறு 1926-1966, சங்கம் சாரதாபிரஸ் பிஜி.

40. ந. நல்லுசாமி, (முன்னாள் அமைச்சர்) — நாடுகள் கண்ட தமிழ் மன்னர்கள்; வரலாறு ஆறாவது உலகத் தமிழ் மாநாட்டு மலர், 1987.

41. க. நவசோதி, டாக்டர் ஆர். நித்யானந்தன், — அயல்நாட்டுத் தமிழர்க்குத் தமிழ் மொழிக் கல்வித் திட்டம் வகுப்பதிலும் பாடநூல்கள் எழுவதிலும் எழும் பிரச்சினைகள் *(Seminar on the Problems in evolving Tamil Language curriculum and writting text books. Tamil University, 1988).*

42. நாகப்பன் ஆறுமுகம், — மலேசியா, மலேசியத் தமிழ்க் கதைகளில் தோட்டப்புறச் சமுதாயம் *Abstracts of Reserach papers 6th Conference op. cit.*

43. எஸ். நாகராஜன், — இந்தோனேசியாவில் தமிழ்ச் சமயத்தின் தாக்கம் (ஆறாவது உலகத்தமிழ் மாநாடு கருத்தரங்கள், மாநாடு கருத்தரங்கள், மலேசியா, 1987)

44. டாடர் எஸ் நாகராஜன், — தமிழ் ஈழம் கொழுந்துவிட்டு எரிகின்றது ஏன்? பண்ணைப் பதிப்பகம், மதுரை-1, ஆகஸ்டு 1981.

45. டாடர் எஸ். நாகராஜன்,	தென்கிழக்காசிய வரலாறு கி.பி. 1800 முதல் 1965 வரை, முதல் பாகம், தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், ஏப்ரல், 1979.
46. எஸ். நாகராஜன்,	பர்மாவில் தமிழ், தமிழ்க்கலை, தமிழ் 5, கலை 3,4.
47. எஸ். நாகராஜன்,	பீஜித்தீவில் தமிழ், தமிழ்க்கலை தமிழ் 5, கலை 3, 4.
48 எம்.ஏ. நுஃமான்,	இலங்கையில் தமிழ்மொழி, தமிழ்க்கலை, தமிழ் 5,கலை 3,4.
49. புனிதம் மகேசன்,	விழித்திடு தமிழா, ஆறாவது உலகத்தமிழ் மாநாட்டு மலர், 1987.
50. பொற்கோ,	பிரிட்டனில் தமிழ், வரலாறு, ஆறாவது உலகத்தமிழ் மாநாட்டு மலர், 1987.
51. பொற்கோ,	உலகில் தமிழும் தமிழரும், உலகத்தமிழராய்ச்சி நிறுவனம் சென்னை 1976.
52. பொற்கோ,	பிரிட்டனில் தமிழ், தமிழ்க்கலை, தமிழ் 5, கலை 3,4.
53. இராம. பெரிய கருப்பன்,	(தமிழண்ணல்), சு. குழந்தைநாதன், பதிப்பாசிரியர்கள், உலகத்தமிழ் ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு,மதுரை காமாராசர் பல்கலைக் கழகம்.
54. அ. மணிசேகரன்,	மலேசியாவில் தமிழ் மேடை நாடகங்கள் ஒரு கண்ணோட்டம், *Abstracts of reserach papers. Sixth Conference op. cit.*
55. மீனாட்சி சுந்தரனார், த.பொ.	தமிழகத்திற்கு அப்பால் தமிழரின் செல்வாக்கு, தில்லித் தமிழ்ச்சங்கம், வெள்ளிவிழா மலர், 33-38 புதுடெல்லி.
56. தெ. பொ. மீனாட்சி சுந்தரனார்,	தாய்லாந்தில் திருவெம்பாவை, திருப்பாவை, சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை, 1978.
57. முகுந்தன்,	தமிழீழ விடுதலை வரலாறு.
58. தி. முருகரத்தினம்,	சிங்கப்பூரில் தமிழ், தமிழ்க்கலை, தமிழ் 5, கலை 3, 4.
59. டாக்டர் தி. முரகரத்தினம்,	தமிழர் வாழும் அண்டை நாடுகளில் தமிழ்க் கல்வி, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், ஜுன், 1986.
60.	முள்ளிக்குளம் ஈ.சசா. மல்லானா,கைநழுவிய கலை, ஆறாவது உலகத்தமிழ் மாநாட்டு மலர், 1987.
61. டாக்டர் மு. வரதராசனார்,	நான் கண்ட இலங்கை, சென்னை, 1971.
62. பா.வளன் அரசு	வெளி நாட்டார் வளர்த்த தமிழ், வரலாறு, ஆறாவது உலகத்தமிழ் மாநாட்டு மலர், 1987.
ஈ.ச. விசுவநாதன்,	இந்தோனேசியாவில் தமிழரும் தமிழ்ப் பண்பாடும் தமிழ்க்கலை, தமிழ் 5, கலை, 3. 4.

64. ஈ.ச. விசுவநாதன்.	கயானாவில் தமிழர்கள், தமிழ்க்கலை தமிழ் 5, கலை 3,4.
65. ஈ.ச. விசுவநாதன்,	சேசல் தமிழர்கள் தமிழ்க்கலை, தமிழ் 5, கலை 3, 4.
66. இர. ந. வீரப்பன்,	உலகத் தமிழர் புரட்சிப் பண்ணை, சேலம், நவம்பர், 1985.
டாக்டர் அ. வீரமணி,	வட சுமத்திராவில் தமிழர்கள், தை, நூலகம், தஞ்சாவூர் 1983.
67. இரா. வேங்கடகிருட்டிணன்	இலிபியாவில் தமிழர்கள், வரலாறு ஆறாவது உலகத்தமிழ் மாநாட்டு மலர், 1987.

1.*Abstract of Research papers* ஆய்வுக் கட்டுரைகளின் சுருக்கங்கள்
th International Conference-Seminar of Tamil studies, Nov. *15-19-1987, Kualalumpur, Malaysia.*

2. *Ajai Mansingh and Dhirendra K-Garg,*	East Indians in Jamaica, Indians in the Caribbean sterling Publishers Private Ltd, 1987. 326-246.

3. *Annual Convention, 1982, T.I.S.I. Sangam Souvenir Golden Jubliee Suva Valibar Sangam Suva 9 to 12 April, 1982.*

4. *S. Arasaratnam,*	Indians in Malaysia and Singapore OUP Kuala Lumpur, 1979. S.Arasaratnam, "Tamil in Southeast Asia and the Far East" in ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு விழாமலர், மதுரை 1981 pp XI-XVI
5. *Auguste Toussaint,*	History of Mauritius, Trans. by W.E.F. Ward, Macmillon Education Ltd., London, 1977.
6. *I.J. Bahadur Singh Ed.,*	Indians in the Caribbean, Streling Publishers Private Ltd., 1987
7. *I.J. Bahadur singh Ed.,*	Indians in South Asia, Sterling Publishers Pvt. Ltd., 1984.
8. *I.J. Bahadur Singh, Ed.,*	Indians in Southeast Asia, Sterling Publishers Pvt. Ltd., New Delhi, 1982.
9. *Balaganapathi, (B.C.Pillai),*	Govinda! Govinda! Purattasi Sani Festival, Nadi, Fiji. Nandi Siva Subramania Swami Kovil Tirunal, Nadi, Fiji.
10. *Bijanraj Chatteriji,*	Indian Cultural Influence in Cambodia, University of Calcutta, 1964.
11. *Coomaraswamy, A.K.,*	History of Indian and Indonesian Art, London, 1927.
12. *Dennis W.M.Z. Bassier,*	Kali Mai Worship in Guyana A quest for a new Identity in Indians in the Caribbean, op.cit ; pp 269-293.
13. *V. Deva Koomarane (France)*	The Development of Tamil Culture in Reunion island(France) Abstracts of Research papers, Sixth Conference, op.cit.

14. George W. Spencer. The Politics of Expansion The Chola conquest of Sri Lanka and Sri Vijaya, (New Era Publications, Madras, 1983).

15. K. Gnanasooriyan, An introduction to Tamil Culture Institute for International Tamil Renaisance, London, September 1979.

16. T.Gondiraan, Sanskrit Texts and Indian Religion in Bali and Imprints of Indian Thought and Culture Abroad, Vivekananda Kendra Prakashen, Madras, 1980 pp 22-33.

17. Himansu Bhusan Sarkar, Some contribution of India to the Ancient Civilization of Indonesia and Malaysia, Punthi pustak, 1970

18. Imprints of Indian Thought and Culture Abraod (Vivekananda Kendra Prakashen, Madras, Feb, 1980.)

19. K. Indrapala, The overseas campaigns of Rajaraja I, Tamil Civilization, Vol. 3; No. 2 & 3 June & Sept. 1985, pp 48-58.

20. Indonesia 1986, An official Handbook, Department of Foreign Affairs, 1986.

21. Jim Wilson, Imprint of Indian Thought and Culture in Fiji in Imprints of Indian Thought and Culture Abroad, op.cit, pp 218-226.

22. Dr. Krishna Marari, Cultural Heritage of Burma (Inter-India Publication, New Delhi, 1985)

23. Laximi Mansingh, East Indians in the Caribbean in Indians in the Caribbean op.cit. 294-325.

24. A. Madhavan (Ambassador of India in Japan) The well-springs of Japanese culture, The Hindu October 7, 1987

25. M.E. Manickavasagam, Dravidian influence in Thai culture, Tamil University, Thanjavur, 1986

26. Malaysia in Brief, Ministry of Foreign Affairs, Malaysia, 1985

27. Meenakshisundaram, The contribution of European Scholars to Tamil, Madras, 1974.

28. *S.Nagarajan,* A paradise that goes sour, The Hindu, June 6, 1987 (Article on Fiji)

29. *S. Nagarajan,* Sri Lanka's Ethnic conflict-A Tamil view point, The Economic times, New Delhi, August 30, 1983.

30. *K. Nambi Arooran,* Indians in South Africa, with special Reference to the Tamils, Tamil University, Thanjavur. 1985.

31. *K.A. Nilakanta Sastri.* South India and Southeast Asia, Geetha Book House, Mysore, 1978

32. *Noorkumar Mahabir,* East Indians in Grenade : A Study in Absorption in Indians in the Caribbean, op.cit, pp 370-405.

33. *K.K. Pillay,* South India and Sri Lanka,

34. *B. Radhakrishna Rao,* The Hindu culture in Sri Lanka in Imprints of Indian Thought and Culture Abroad, op.cit, pp 154-158.

35. *M.D. Raghavan,* Tamil culture in Ceylon

36. *Sahedeo Debiprasad Dowlat Ram Budhram* East indians in the Caribbean, in Indians in the Caribbean op.cit, pp 242-268.

37. *Sandew Hira,* The Evolution of the Social, Economic and Political position of the East Indians in Surinam 1873-1893, Indians in the Caribbean, op.cit, pp 347-369.

38. *Sangam Golden Jubilee,* 1926-1976, Commemoration Volume, Nadi, Fiji 8th, 9th, 10th October, 1976.

39. *A. Sanmugadas (Sri Lanka)* A comparison of Tamil-Japanese quality words in abstracts of research papers, sixth Conference, op.cit.

40. *Shelton V. Kodikara,* Foreign Policy of Sri Lanka-A Third world Perspective, Chanakya Publication, Delhi, 1982.

41. *Singapore, 1985,* Information Division, Ministry of Communication and Information, Singapore.

42. *S. Singaravelu,* The Malay Tamil cultural contacts with special reference to the festival of Mandi safat. Tamil civilization, Vol.2, No.2, June, 1984 , pp 71-80.

43. *S. Singaravelu.* The Thai Coronation ceremony and the Tamil Devotional Hymns Tamil civilization (Tamil University, Thanjavur) vol. 3, No. 1, March 1985, pp 72-75.

44. *S.K.Sitrampalam,*	The Cola Temples of Sri Lanka-A study, Tamil civilization, Vol.3, No. 2&3, June & Sept. 1985, pp 123-132.
45. *C. Sivaramamurtri,*	Royal Conquests and Cultural Migrations in South India and the Deccan, Indian Museum, Calcutta, 1964.
46. *C.Sivaramamutri,*	Studies in the Art and Culture of Java.
	47. Statistical Pocket-Book of the Democratic Socialist Republic of Sri Lanka 1985, Colombo, Sri Lanka.
48. *S.V. Subramanian, V. Veerasami, Ed.,*	Cultural Heritage of the Tamils, International Institute of Tamil Studies, Madras, December 1981.
49. *S.V. Subramanian, P.K.D. Thirunavukarasu, Ed.,*	Historical Heritage of the Tamils, International Institute of Tamil Studies, Madras, December 1983.
50. *Prof. Surendra Bhana,*	History of the Tamil Community in South Africa in Thillayvel Naidoo ed, Kavadi and worship of Muruga, University of Durban, West ville, pp 1-10.
51. *V. Suryanarayanan,*	Singapore, Path to Independence, Koodal Publishers, Madurai 1977.
52. *Susumu Ohno, (Japan)*	Japanese-Tamil Relationship Particle correspondences Between old Japanese and Old Tamil. in Abstracts of research papers Sixth Conference, op.cit.
53. *Susumu Ohno,*	Arunachalam Sanmugadas, Manomani Sanmugadas, World View and Rituals among Japanese and Tamils, Gakushuin University, Tokyo, Japan 1985.
54. *S. Thaninayakam,*	Tamil Studies Abroad, Kuala Lumpur, 1968.
55. *Thillayvel Naidoo,*	Kavadi and Worship of Muruga-papers presented at a symposium held at the University of Durben-West ville, 1987. University of Durban-Westville.
56. *P. Thirumalechetty,*	Developing Tamil Language curriculum and teaching materials in Mauritius (Seminar on the problems in evolving Tamil Language curriculum and writing text books, Tamil University, 1988.)
57. *Venkata Ragotham,*	Rajendra Chola's raid on Srivijaya in A.D. 1025, Tamil civilization, vol. 1, No. 3, Sept. 1983, pp 1-9.
58. *Virachith Keo Manichanh*	India and Laos A Study in Early Cultural Contacts, Books Today, New Delhi, 1979.

பிற்சேர்க்கை

1 *சஞ்சீவி, ந., "மலாய் மொழியில் தமிழ் வழக்குச் சொற்கள்", ஆராய்ச்சிக் கட்டுரைகள் முதல் தொகுதி, பாரி, சென்னை.*

2 *க.த. திருநாவுக்கரசு, தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழ்ப் பண்பாடு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-13, திசம்பர் 1987*

3 *Audhilakshmi Anjaneyalu, Tamil words in the Indonesian Malayan Languages, Tamil Culture Vol. IX, No. 1, Jan, Mar. 1951)*

4 *R.C. Majumdar, Hindu Colonies in the Far East Vol. I, Champa Motilal Banarsidas Lahore, 1927*

5 *R.C. Majumdar History of the Far East Vol. II Kambaja Desa Univ. of Madras, Madras, 1944*

6 *K.A.Nilakanta Sastri, A History of Sri Vijaya Univ. of Madras, 1949*

7 *K.A. Nilakanta Sastri, South Indian Influences in the Far East, Hind, Kitab, Bombay 1949*

8 *Richard Winsteat, The Malayas, A Cultural History, Routledge Keganpaul Ltd., London, 1958*

9 *T.N. Subramaniyan, The Pallavas of Kanchi in Southeast Asia, Swedesamitran Madras, 1967*